41. **பாதகயுக்திகள்:**—(1) **அனுமானப்பிரமாணயுக்தி:**— ஜீவப்பிர்ம்மங்களின் பேதம் உபாதி சம்பந்தமாயிருப்பதால், கடாகாசமகாகாசங்களின் பேதம் போல்மித்தை. எது மித்தையன்றோ அது ஔபாதிகமுமன்று. வியவகாரத்தில் கடபடங்களின் பேதம் ஔபாதிகமாயில்லாததினால் சத்தியமாயிருக்கிறது. ஆனைடாய்எவ்விடத்தில் உபாதி சம்பந்தமிருக்கிறதோ அவ்விடத்தில் பேதமும்மிதை. இது அனுமானப்பிரமாணயுக்தியாம். (2) **உபமானயுக்தி:**— பிம்பப்பிரதிபிம்பங்களின்பேதம் மித்தையாயிருப்பதுபோல் ஜீவப்பிர்ம்மங்களின் பேதமும்மித்தை. (3) **அர்த்தாபத்திப்பிரமாணம்:**— மகாவாக்கியங்களில் ஜீவப்பிர்ம்மங்களின் அபேதஞ்சொல்லப்பட்டிருக்கிறது. தோன்றும்பேதம்உண்மையில் மித்தையாயில்லாததினால் மகாவாக்கியங்களில் அபேதம் பிரதிபாதிக்கப்பட்டிருக்கமாட்டாது. அப்படிப்பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறபடியால் அர்த்தாபத்தியுக்தியால் அபேதஞ்சித்திக்கிறது. (4) **அநுபலப்திப்பிரமாணம்:**— ஜாக்கிரஸ்வப்னங்களில் உபாதியால் ஜீவப்பிர்ம்மங்களின் பேதம்தோன்றுகிறது. ஸுஷுப்தியில் உபாதியில்லாததினால் பேதமும் தோன்றுகிறதில்லை. ஆகையால் ஜீவப்பிர்ம்மங் ளுசகுப்பாரமார்த்திகத்தில் பேதமில்லையென்பது நிச்சயப்படுகிறது. இது அநுபலப்திப்பிரமாணயுக்தி. இந்தயுக்திகளெல்லாம் பேதத்தைப்பாதிக்கின்றன.

42. நிதித்தியாஸனத்துக்கும் சாக்ஷாத்காரத்துக்கும் வித்தியாஸமென்னவெனில் சாக்ஷாத்காரத்தில் பிரம்மாகாரவிர்த்தி ஸ்வபாவமாய் வளர்ந்தமரத்தின் நிழல்போல் பிரயத்தனமன்றியில் இருக்கிறது. நிதித்தியாஸனத்தில் பிர்ம்மாகாரவிர்த்தி பிரயத்தனத்தால் வளர்த்தநிழல்போல் இருக்கிறது. பிரயத்தனம் நீங்கினவுடன் நிழல் நிமிர்ந்து விடுகிறதுபோல் நிதித்தியாசனம் நீங்கினவுடன் பிர்ம்மாகாரவிர்த்தியும் தங்குகிறதில்லை.

படும். நிதித்தியாஸனத்தின் பரிபக்குவ நிலைமைக்குச்சமாதியென்று பெயர். ஆகையால் சமாதி[43] வேறு சாதனமாகவில்லாமல் நிதித்தியாசனத்தில் அந்தர்க்கதமாயிருக்கிறது.

27. சிரவணாதிகளின் பிரயோசனம்:—இந்தசிரவணாதிகள் ஞானத்துக்குச்சாக்ஷாத்சாதனங்களாகவில்லை. ஆனால் புத்திதோஷங்களாகிய அசமபாவனையையும் விபரீதபாவனையையும் இவைகள் நாசம்பண்ணுகின்றன

அசம்பாவனையாவது[44] சமுசயம்.

விபரீதபாவனையாவது[45] விபர்யயம்.

சிரவணத்தின் உபயோகம்:— வேதாந்தவாக்கியம் அத்விதீயபிர்ம்மத்தைப் பிரதிபாதிக்கிறதா வேறர்த்தத்தைப்பிரதிபாதிக்கிறதா என்பது பிரமாணத்திலுண்டாகிற[46] சந்தேகம். அது சிரவணத்தினால் நிவர்த்தியாகிறது.

மனனத்தின் உபயோகம்:—ஜீவப்பிர்ம்மங்களின் அபேதம் சத்தியமா அல்லது பேதம் சத்தியமா என்பது பிரமேயக[47]தசந்தேகம். பிரமேயகதசந்தேகங்கள் அநேகமுள. அவை மனனத்தினால் நிவர்த்தியாகின்றன.

நிதித்தியாசனத்தினுபயோகம்:—தேகாதிகள் சத்தியமென்றும், ஜீவப்பிர்ம்மபேதம் சத்தியமென்றும் நினைப்பது விபரீதபாவனை. அது நிதித்தியாசனத்தினால்[48] நிவர்த்தியாகிறது. இவ்விதமாகச் சிரவணாதிகள் மூன

---

43. சமாதிசப்தத்தால நிர்விகல்பசமாதியென்று அறியத்தக்கது. நிதித்தியாசனசப்தத்தால்தியாதா தியானம் தியேயம் ஆகிறதிரிபுடிகளுடன் கூடிய ஸவிகல்ப சமாதியை அறியத்தக்கது. (623—625) பார்க்க.

44. இது ரஜ்ஜுவா அல்லது சர்ப்பமா? இவ்வித இரண்டு பக்ஷங்களை விஷயமாக்கும் ஞானம் சமுசயம் என்னப்படும்.

45. இது சர்ப்பம் என்னும் அவித்தியாவிர்த்தி விபர்யயம். இதுவே பிராந்திஞானம், விபரீதபாவனை, விபரீதஞானம், ஞானத்தியாஸம். பிரகிருதத்தில் அனாத்மாக்களான தேகாதிகளை ஆத்மரூபமாக அறிவது விபர்யயம்.

46. பிரமாணமாவது உபநிஷத்து வாக்கியங்கள்.

47. பிரமேயமென்றால் மோக்ஷ முதலிய அறியவேண்டிய விஷயங்கள்

48. இவ்விரண்டுவித சமுசயங்கள் நிவர்த்தியானாலும் ஞானமுண்டாவதற்கு முன் அவித்தியாரூபக்காரணமிருப்பதால் "நான் ஜீவன்" "பிர்மத்துக்கும் எனக்கும் பேதமுண்டு" "தேகாதிஜகத்துசத்தியம்" இப்படிப்பட்ட அனேகசமுசயங்கள்மறுபடியும் மறுபடியும் உண்டாகக்கூடும். இவைகளைநிவர்த்திக்க நிதித்தியாசனம் அப்பியசிக்கத்தக்கது.

றும் ஞானத்துக்குப் பிரதிபந்தங்களான அசம்பாவனை விபரீதபாவனைக களை நாசம்பண்ணுகிற மூலமாகஞானத்துக்கு ஹேதுக்களாயிருக்கின்றன வென்சொல்லப்படுகின்றனவே தவிர சாக்ஷாத் ஹேதுக்களாக விருக்க வில்லை.

49

28 ஞானத்துக்குச்சாக்ஷாத்சாதனம்:— ஞானத்துக்குச்சாக்ஷாத்சா தனம் சுரோத்திரசம்பந்தமான வேதாந்தவாக்கியந்தான். இது அவாந்திரவா க்கியமென்றும் மகாவாக்கியமென்று மிருவகைப்படும். பரமாத்மா ஜீவன் இவைகளின் சொரூபங்களைப்பிரதிபாதிப்பது அவாந்திரவாக்கியமென் றும், ஜீவபரமாத்மாக்களின் ஏகத்துவத்தைப்பிரதிபாதிப்பது மகாவாக்கி யமென்றும்சொல்லப்படும். அவாந்திரவாக்கியத்தினல் பரோக்ஷஞானமு ம் மகாவாக்கியத்தினல் அபரோக்ஷஞானமுமுண்டாகும். பிர்ம்மமிருக்கிற தென்பது பரோக்ஷஞானம். பிர்ம்மம் நானாக விருக்கிறேனென்பது அப ரோக்ஷஞானம். நீ பிர்ம்மமென்று குருவினலுச்சரிக்கப்பட்ட வாக்கியம் சுரோதாவின் காதில் சம்பந்தப்பட்டபின்பு நான் பிர்ம்மம் என்கிற அப ரோக்ஷஞானமுண்டாகிறது. அப்படிச்சுரோதாவின் காதில் வாக்கியஞ்ச ம்பந்தப்படாமல் ஞானமுண்டாகிறதில்லை. ஆகையால் சுரோத்திருசம்பந் த மகாவாக்கியமே அபரோக்ஷஞானத்துக்கு ஹேதுவாயும் அவாந்திர வா க்கியம் பரோக்ஷஞானத்துக்கு ஹேதுவாயும் இருக்கின்றன. மகாவாக்கி யத்தினல் எல்லாருக்கும் அபரோக்ஷஞானமுண்டாகிறதேதவிர பரோ க்ஷஞானமுண்டாகிறதில்லை.

50

29. இவ்விஷயத்தில் சிலருடைய ஆக்ஷேபங்கள்:—(1)சிரவணாதிகளும் வாக்கியமுஞ்சேர்ந்து அபரோக்ஷஞானத்தையுண்டுபண்ணுகின்றன. கே வலவாக்கியத்தினல் பரோக்ஷஞானமுண்டாகிறதேதவிர அபரோக்ஷஞா னமுண்டாகிறதில்லை. (2)அப்படியுண்டாகுமென்று சொல்லும் பக்ஷத்தி ல்சிரவண மனன நிதித்தியாசனங்கள் வியர்த்தமாய்ப்போயவிடும் சித்தாந் தத்தில் கேவலவாக்கியத்தால் அபரோக்ஷஞானமுண்டாகிறதென்றும் சி

---

49. கண்ணிற்போட்டமை நேத்திரரோகத்தை நிவிர்த்திப்பது மூலமா ய்ச்சூரியனைப்பார்க்கச்சாதகமாயிருக்கிறதேதவிரச்சாக்ஷாத்தாகத் தான் சூரிய னைப்பார்க்கிறதில்லை. ஆனல்சூரியனைப்பார்க்க நேத்திரந்தான் சாக்ஷாத்சாதனமா யிருக்கிறது. இதுபோல் சிரவணாதிகளும் ஞானத்துக்குப்பிரதி பந்தங்களாகிற சமுசயவிபர்யயரூப ரோகங்களை நிவிர்த்திக்கிறது மூலமாய் ஞானத்துக்குச்சாத னங்களாயிருக்கின்றன. சாக்ஷாத்சாதனம் சுரோத்திரசம்பந்த மகாவாக்கிய மே.

50. பஞ்சதசிப்பிரகரணத்தின் கர்த்தாவாகிய வித்தியாரண்யஸ்வாமிக ள் முதலியவர்கள்.

ரவணைதிகளால் அசம்பாவனை விபரீதபாவனைகள் நாசமாய்விடுகின்றனவென்றும் ஆகையால் சிரவணைதிகள் வியர்த்தமில்லை யென்றுஞ்சொல்லப்பட்டாலும், எந்தவஸ்துவின் அபரோக்ஷஞானமுண்டாகிறதோ அந்த வஸ்து விஷயத்தில் ஒருவருக்கும் அசமபாவனை விபரீதபாவனைகள் உண்டாகமாட்டா. ஆகையால் கேவலவாக்கியத்தினால் அபரோக்ஷஞானமுண்டாகுமென்றும் சொல்லும் சித்தாந்தத்தில் தத்துவமஸிமுதலிய வாக்கியங்களால் பிரம்மத்தின் அபரோக்ஷஞானமுண்டான பின்பு அசம்பாவனை விபரீதபாவனைகள் சம்பவிக்கமாட்டாவாகையால் சிரவணாதி சாதனங்கள வியர்த்தமாய்விடும். நம்முடைய (பூர்வபக்ஷி) மதப்படி கேவலவாக்கியத்தால் பரோக்ஷஞானமும் சிரவணாதிசகிதவாக்கியத்தால் அபரோக்ஷஞானமுமுண்டாகின்றனவென்று சொல்லும்பக்ஷத்தில் சிரவணாதிகள் வியர்த்தமாகவில்லை இதுவுமநேக சித்தக்காரருடைய மதம்.

51
சமாதானங்கள் (30—31)

30. முதல் ஆக்ஷேபந்நுந்து:—மேற்சொல்லியமதம் சரியன்று. எனெனில் சப்தத்துக்கோர் சுபாவமிருக்கிறது, அதாவது தேசத்தினாலுங் காலத்
52
தினாலும் மறைபட்ட பதார்த்தத்துக்கு வியவஹிதமென்றுபெயர். அப்படிமறைபடாதபதார்த்தத்துக்கு அவ்வியவஹிதமென்றுபெயர். எந்தவஸ்துவியவஹிதமாயிருக்கிறதோ அதன் ஞானம் சப்தத்தினால் பரோக்ஷமாகவேயிருக்கிறது எந்தபிரகாரத்தினாலும் வியவஹிதவஸ்துவின் ஞானம் சப்தத்தால் அபரோக்ஷமாகிறதில்லை. வியவஹிதசுவர்க்கம் இந்திராதி தேவதைகள் சாஸ்திரரூபசப்தத்தினால் பரோக்ஷமாகவே அறியப்படுகின்றன. எந்தவஸ்து அவ்வியவஹிதமாக விருக்கிறதோ அதன் ஞானம் சப்தத்தால் அபரோக்ஷமாயும் பரோக்ஷமாயுமுண்டாகும். எப்போது அவ்வியவகித வஸ்துவின்ஞானம் 'இருக்கிறது' என்கிற சப்தத்தினாலுண்டாகிறதோ அப்போது அவ்வியவஹித வஸ்துவின் ஞானம் பரோக்ஷமாகவிருக்கிறது. 'பத்தாவது புருஷன் இருக்கிறான்' என்கிறவிடத்தில் 'இருக்கிறான்' னென்பதால் விளங்குகிற அவ்வியவஹிததசமனுடைய ஞானம் சப்தத்தினால் பரோக்ஷமாகவிருக்கிறது. மேலும்எப்போது அவ்வியவஹித வஸ்துவின் ஞானம்'இதுதான்'என்பதாயச் சப்தத்தினால் லுண்டாகிறதோ அப்போது அந்த ஞானம் அபரோக்ஷமாகவிருக்கிறது பரோக்ஷமாகவில்லை. பத்தாவதுபுருஷன் 'நீதான்

---

51. இது சாரீரக சூத்திரங்களின் கருத்து.

52. தூரதேசத்திலிருப்பது தேசத்தால் மறைபட்டபொருளாகும். சென்றகாலத்திலாவது வருங்காலத்திலாவது இருப்பதுகாலத்தினால் மறைபட்டபொருளாகும்.

ன்'என்கிறவிடத்தில் இந்தச்சப்தத்தாலுண்டாகிற தசமனுடையஞானம் அபரோக்ஷமாகயிருக்கிறது. இதுபோல் பிரம்மம்எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருப்பதால் அத்தியந்தம் அவ்வியவஹிதமாயிருக்கிறது. 'அதுஇருக்கிறது' என்கிறபரோக்ஷஞானத்தை அவாந்திரவாக்கியம் போதிக்கிறது. பத்தாவது புருஷன் நீதான் என்பதுபோல் சுரோதாவே பிரம்மமென்று மகாவாக்கியம் போதிக்கிறது. ஆகையால் மகாவாக்கியத்தினால் அவ்வியவஹிதபிரம்மத்தின் பரோக்ஷஞானமுண்டாகாமல் அபரோக்ஷஞானமேயுண்டாகின்றது.

31. 2வது ஆக்ஷேபத்துக்கு:— அபரோக்ஷஞானமுண்டானவிடத்தில் அசம்பாவனைகள் உண்டாகமாட்டாவென்றும் சிரவணைகள் வியர்த்தமாய்விடுமென்றும் சொன்ன ஆக்ஷேபம் சரியன்று. ஒரு ராஜா பர்ச்சுவென்றும்மந்திரியை நேத்திரத்தாற் பார்த்தும் விபரீதபாவனையால் அவனை யறியாததுபோல் மகாவாக்கியத்தினால் பிரம்மத்தின் அபரோக்ஷஞானமுண்டானாலும் எவனுடைய புத்தியில் அசம்பாவனாதி தோஷங்களிருக்கின்றனவோ அவனுக்கு ஞானம் சித்திக்கிறதில்லை. அந்தத்தோஷ நிவர்த்தியின் பொருட்டுச் சிரவணங்களும் வேண்டும். எவனுடைய புத்தியில் தோஷங்களில்லையோ அவனுக்கு சிரவணைகள் வேண்டியதில்லை. இவ்விதமாக ஞானத்துக்குச் சாதனம் மகாவாக்கியமே தவிரச் சிரவணைகளன்று. ஞானப்பிரதிபந்தங்களாயிருக்கிற தோஷங்களைத்தான்சிரவணைகள் நாசம்

---

53. தசபுமான்கதை:— பத்துப்பெயர்கள் பிரயாணம்போகையில்நடுவில் ஓராற்றைக்கடக்க வேண்டியதாயிற்று. அக்கரைசேர்ந்தபின் எல்லாரும் வந்துவிட்டோமாவென்று பார்க்க ஒவ்வொருவனும் தன்னைவிட்டெண்ணி ஒன்பது பெயர்தானிருக்கிறோமென்றும் ஒருவன் ஆற்றோடு போய்விட்டானென்றும் நினைத்து விசனப்பட்டுக்கொண்டிருந்தான். அப்போது வேறொருபாட்டைசாரி இவர்கள் விசனப்படுவதைக்கண்டு துக்ககாரணத்தையறிந்து பத்தாவதுபுருஷன் இருக்கிறானென்று சொன்னான். அப்போது அவர்களுக்குத்தசமனுடைய பரோக்ஷஞானமுண்டாயிற்று. அப்போது அவர்களிலொருவன் அவன் எங்கே இருக்கிறானென்று கேட்க பாட்டைசாரி அவனைப்பார்த்து நீதான் என்றான். அப்போது அவனுக்குத்தசமனுடைய அபரோக்ஷஞானமுண்டாயிற்று. தசமனைப்பிரத்தியக்ஷமாயறியக்கண்களிருந்தும் வேறொருவன் நீதான் தசமனென்று சொல்லும்வரையில் அபரோக்ஷஞானமுண்டாகிறதில்லை. இங்குநீதான் என்று சொன்னசப்தம் அபரோக்ஷஞானத்துக்குச்சாக்ஷாத்காரணமாயிருக்கிறது. இதுபோல் பிரம்மத்தின் அபரோக்ஷஞானத்துக்குக் குருவினாலுபதேசிக்கப்பட்ட மகாவாக்கியம் சாக்ஷாத்காரணமாயும் சமுசயரகிதசுத்தமனது அதற்குச்சாதகமாயுமிருக்கிறது. தசமனைப்பற்றி 4-வதுதரங்கத்தில் (195—200) விவரிக்கப்படும்.

54. இக்கதை 5-வது தரங்கத்தில் (255—270) விவரிக்கப்பட்டிருக்கிறது.

பண்ணுகின்றன. ஆகையால் சிரவணாதிகள் ஞானத்துக்குச் சாதனங்களாகச் சொல்லப்படுகின்றன. விவேகாதிகள் சிரவணாதிகளுக்குமேலதுவாயிருக்கிறபடியால் ஞானத்துக்குச்சாதனமாகச் சொல்லப்படுகின்றன.

விவேகாதி நாலுசாதனங்களோடு கூடினபுருஷன்தான்[55] அதிகாரி.

32 சம்பந்தம்:[56]—(1)கிரந்தத்துக்கும் விஷயத்துக்கும் பிரதிபாத்தியபிரபாதகபாவசம்பந்தமாம். கிரந்தம் பிரதிபாதகம். விஷயம் பிரதிபாத்தியம். எது விஷயத்தைச் சொல்லுகிறதோ அது பிரதிபாதகம். எதுசொல்லப்படுகிறதோ அதுபிரதிபாத்தியம். (2) கிரந்தத்துக்கும் ஞானத்துக்கும் ஜந்யஜநகபாவசம்பந்தமாம். விசாரமூலமாகக்கிரந்தம் ஞானத்துக்கு ஜநகம் ஞானம் ஜன்யம். எது உற்பத்தி செயகிறதோ அது ஜநகம். எது உற்பத்தி யாகிறதோ அது ஜன்யம். (3) அதிகாரிக்கும்விசாரத்துக்கும கர்த்துருகர்த்தவிய பாவசம்பந்தமாம். அதிகாரிகர்த்தா விசாரம்கர்த்தவியம் செய்கிறவன்கர்த்தா செய்யத்தக்கது கர்த்தவியம். (4) அதிகாரிக்கும் பலத்துக்கும் பிராப்பியபிராபகபாவசம்பந்தமாம். பலம் பிராப்பியம் அதிகாரி பிராபகன். எந்தவஸ்து அடையப்படுகிறதோ அது பிராப்பியம். எவன் அடைகிறானை ,அவன் பிராபகன். இன்னும் வேறுசம்பந்தங்களும்[57] அறியத்தக்கவை.

33. விஷயம்:—[58] இந்தகிரந்தம் ஜீவப்பிர்ம்ம ஐக்கியத்தைப்பிரதிபாதிக்கிறது. சகலவேதங்களும் இதையேபிரதிபாதிக்கின்றன. இது

---

55. இவன்கிரந்தத்துக்கும் கிரந்தவிசாரமூலமாக ஆத்மஞானத்துக்கும் ஆத்மஞானமூலமாக மோக்ஷத்துக்கும் அதிகாரியாகிறான்.

56. சம்பந்தரூபஅனுபந்தத்தைச்சொன்னதற்குப் பிரயோஜனம்:— எந்தவஸ்துவுக்கு எத்துடன் சம்பந்தமிருக்கிறதோ அந்தவஸ்துவுக்கு அதின்விஷயத்திலுபயோகமுண்டு. (உ-ம்) குலாலாதிகளுக்குக்கடத்துடன் சம்பந்தமுண்டு. ஆகையால் இவைகள் கடவிஷயத்தில் உபயோகப்படுகின்றன. எந்தவஸ்துவுக்கு எத்துடன் சம்பந்தமில்லையோ அவ்வஸ்துவுக்கு அதின்விஷயத்தில் உபயோகமுண்டாகிறதில்லை. (உ-ம்) கண்ணுக்குக்காற்றுடனும் ஆகாசத்துடனும் சம்பந்தமில்லை. ஆகையால் கண்காற்றுகாசவிஷயங்களில் உபயோகப்படுகிறதில்லை. இதுபோல் கிரந்தத்துக்கும் பிர்ம்மத்துக்கும் பரஸ்பரசம்பந்த மில்லாதபக்ஷத்தில் பிர்ம்மவிஷயத்தில் கிரந்தம் உபயோகப்படமாட்டாது. அப்படியே கிரந்தவிஷயத்தில் பிர்ம்மத்தினுபயோகம் சித்திக்கமாட்டாது. பரஸ்பர உபயோகத்தை நிச்சயிப்பதற்காக இவைகளின் சம்பந்தம் கற்பிக்கப்பட்டது.

57. வேறு என்பதால் சிரவணாதிகளுக்கும் ஞானத்துக்குமுள்ள சம்பந்தம்ஞானத்துக்கும் மோக்ஷத்துக்குமுள்ள சம்பந்தம் முதலியன அறியத்தக்கன.

58. ஜீவசப்தத்தால் ஜீவபதத்தின் லக்ஷியார்த்தமான கூடஸ்தன் அறியத்தக்கது.

தான் இந்தக்கிரந்தத்துக்கு விஷயம். இதற்கு விரோதமாய்ச்சொல்லபட்டவன் வேதவிரோதி, சடன் அதாவது மூகஸ்துதியாய் எதிரிற்பேசிக்காணதவிடத்தில் தூஷிக்கிறவன்.

பிரயோஜனம் (34—39)

34. பிரயோஜனலக்ஷணம்:— பிரபஞ்சத்துக்குக்காரணமான அஞ்ஞானமும் பிரபஞ்சமும் ஜனமமரணரூபமான துக்கத்துக்குஹேதுவாயிருப்பதினால அனர்த்தமென்று சொல்லப்படுகின்றன. இந்தஅனர்த்தநிவிர்த்தியும் பரமானந்தப்பிராப்தியும் மோக்ஷம் என்றுசொல்லப்படும். மோக்ஷந்தான் கிரந்தத்தின் பரமப்பிரயோஜனமாகும். ஞானம் அவாந்திரப்பிரயோஜனமாகும். எதனிடத்திற் புருஷனுக்கு இச்சையுண்டாகிறதோ அதுதான பரமப்பிரயோஜனமென்றும் புருஷார்த்தமென்றும் சொல்லப்படுகிறது. அதஇச்சை துக்கநிவிர்த்தியின் பொருட்டும் சுகப்பிராப்தியின் பொருட்டும் சகலஜனங்களுக்கு முண்டாகிறது. இவைகள்தான் மோக்ஷத்தின் சொரூபம். ஆகையால்பரமப்பிரயோஜனம் மோக்ஷமேதவிர ஞானமன்று. ஏனெனில் சுகப்பிராப்தி துக்கநிவிர்த்திகளுக்குச்சாதனமாக ஞானமிருக்கிறது. சுகப்பிராப்தி துக்கநிவிர்த்தி ரூபமாகவே ஞானமில்லை. ஆகையால் ஞானம் அவாந்திரப்பிரயோஜனம். எந்தவஸ்துமூலமாகப்பரமப்பிரயோஜனம அடையப்படுகிறதோ அதுஅவாந்திரப்பிரயோஜனமெனப்படும். கிரந்தத்தின் ஞானமூலமாக முக்திரூபப்பரமப்பிரயோஜனமடையப்படுகிறதினால் ஞானம் அவாந்திரப்பிரயோஜனமாகவிருக்கிறது.

35. முதலாதுஷேகூபம் — அனர்த்தநிவிர்த்தியும் பரமானந்தப்பிராப்தியும் கிரந்தத்தின் பரமப்பிரயோஜனமாகச்சொன்னது சரியன்று. ஏனெனில் சர்வவேதங்களும்[59] ஜீவனைப்பரமானந்தச்சொரூபமாக வர்ணித்திருக்கின்றன. நீங்களும் அதையங்கீகாரஞ்செய்கிறீர்கள். அடையாதவஸ்துவையடையக்கூடும். எப்போதும் பிராப்தமாயிருக்கிறவஸ்துவையடைகிறதென்று சொல்வது ஒருக்காலும் சரியன்று. ஆகையால் சதாபரமானந்தச்சொரூபமாகிய ஆத்மாவுக்குப்பரமானந்தப்பிராப்தியுண்டாகுமெனச்சொல்வது எவ்விதத்திலும் அசம்பாவிதமாகவிருக்கிறது.

---

59. உ-ம் "பிரஞ்ஞானம் ஆனந்தம்பிர்ம்ம" என்னும் சுருதியைப்போல் அநேகச் சுருதிகள். இச்சுருதியில் பிரஞ்ஞானமாகிற ஜீவன் ஆனந்தரூபமாகிற பிர்ம்மமாயிருக்கிறனென்று சொல்லப்பட்டிருக்கிறது.

36. சமாதானம் (**36—37**):— இந்த ஆக்ஷேபத்தைக் கேட்டு கிரந்தத்தின் பிரயோஜனத்திற் சிரத்தை யில்லாமற் போகக்கூடாது. ஆத்ம வித்தையை யுபதேசிக்கிற குருவின் கிருபையினால் இந்தச் சந்தேகங்களெல்லாம் கிருஷ்டாந்தத்தினால் நிவிர்த்தியாய்விடும். எப்படி யெனில் ஒருபுருஷன் கையில் போட்டிருக்கிற கங்கணம் காணுமற் போனதாய்ப் பிரமையினால் நினைக்கிறான். அப்போது அன்னிய புருஷனுடைய வார்த்தையினால் கையிலேயே யிருக்கிற கங்கணம் நூதனமாய்க் கிடைத்ததாக ஞான முண்டாகிறது. இவ்விதமாய் ஏற்கனவே யடைந்திருந்த கங்கணமும் புதிதா யடையப் பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதுபோல் பரமானந்தச் சொரூபமான ஆத்மாவினிடத்தில் அவித்தியா பலத்தினால் ஆத்மா பரமானந்தச் சொரூபியல்லவென்றும் பிரமமேமே பரமானந்தச் சொரூபமென்றும் அந்தப் பிரம்மத்துக்கும் தனக்கும் வியோகம் வந்திருப்பதாகவும் உபாசனையினற் பிரம்மதை யடையலாமென்றும் மூட ஜனங்களுக்குப் பிராந்தியுண்டாகிறது. இப்படிச் சொல்லுகிற பண்டிதர்களும் மூடர்கள்தாம். எனெனில் ஜீவப் பிரம்ம வியோகத்தை யங்கீகரிக்கிறவர்மூர்க்கனென்று சொல்லப்படுகிறான். இப்படிப்பட்ட மூடர்களுக்கு உத்தம சம்ஸ்காரத்தினால் பிரம்ம ஞானியாயிருக்கிற ஆசாரியரிடத்தினின்றும் ஒருக்கால் வேதாந்தச் சிரவணம் பிராப்தியானால் அப்போது பரமானந்தம் தங்களுக்குத் திதந்தத்திலும் ஆசாரியருடைய கிருபையினாலும் கிடைத்ததாக எண்ணமுண்டாகிறது. ஆத்மா ஏற்கனவே பரமானந்தச் சொரூபமாயிருக்க அவர்களுக்கு அது விளங்காமையால் பரமானந்தம் பிராப்தமில்லாதது போலிருக்கிறது. ஆசாரியர் மூலமாகக் கிரந்தத்தைக் கேட்பதால் பரமானந்தம் புத்தியில் விளங்குகிறது. அதனால் அது நூதனமாய அடையப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இவ்விதமாக அடைந்திருப்பதையும் அடையக் கூடுமென்று சொல்லலாம். ஆகையால் பரமானந்தப் பிராப்தி இக்கிரந்தத்துக்குப் பயப்பட பிரயோஜனமாகச் சொன்னது யுக்தந்தான்.

37. அப்படியே நித்திய நிவிர்த்தியின் நிவிர்த்தியும் பிரயோஜனமாகச் சொன்னதுசரி. (உ-ம்) ரஜ்ஜு யினிடத்திற் சர்ப்பமித்திய நிவிர்த்தியாகவே யிருக்கிறது. ரஜ்ஜுவென்றறிதமாத்திரத்தில் சர்ப்பம்நிவிர்த்தியாகிறது.

---

60. நிவேதிக்கிற சுருதிவாக்கியங்களாலும் ஞானிகளுடைய அனுபவத்தினாலும் இந்தப் பிரபஞ்சம் வியாவகாரிகத்திலும் பிராதிபாஸிகத்திலும் இருப்பதாகத்தோன்றினாலும் பாரமார்த்திகத்தில் இல்லவே இல்லையென்பது பிரபஞ்சத்தின் நித்திய நிவிர்த்தியாம். சுருதி யுக்தி யனுபவங்களால் பிரபஞ்சத்தின் உண்மையான ஸ்திதியை அறிவதே நித்திய நிவர்த்தியின் நிவர்த்தியாம்.

இது போல் ஆத்மாவினிடத்திற் சமூசாரம் நித்திய நிவிர்த்தியாக யிருக்கிறது. ஆத்ம ஞானத்தினல் சமூசாரம் நிவிர்த்தி யாகிறது. ஆகையால் நித்திய நிவிர்த்தியின் நிவிர்த்தியும் நித்தியப் பிராப்தியின் பிராப்தியும் கிரந்தத்தின் பரமபிரயோஜனங்களாயிருக்கின்றன.

38. 2—வது ஆக்ஷேபம்:—காரண சகித ஜகத்தின நிவிர்த்தியும் பரமானந்தப் பிராப்தியும் கிரந்தத்தின் பிரயோஜனமாகச் சொன்னது சரியன்று. எனெனில் நிவிர்த்தி யென்றல் நாசம். நாசமென்பது அபாவரூபம். மோக்ஷத்தினிடத்தில் அனர்த்த நிவிர்த்தியாகிற அபாவரூபப் பிரதீதியும், பரமானந்தப் பிராப்தி யாகிறபாவரூபப் பிரதீதியும் சேர்ந்திருக்க மாட்டா. ஏனென்னில் பாவரூபமும் அபாவரூபமும் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கின்றன. விரோததர்மங்கள் ஒரே காலத்தில் ஒரு வஸ்துவினிடத்திலிருக்க மாட்டா. ஆகையால் கிரந்தத்துக்குச் சொன்னப் பிரயோஜனம் சம்பவிக்க மாட்டாது.

39. சமாதானம்:— காரணசகித ஜகத்தின் நிவிர்த்தி அதிஷ்டானப் பிர்ம்மரூப மாகவிருக்கிறது. அற்கு வேறுகவில்லை. சர்ப்பநிவிர்த்தி அதிஷ்டானரஜ்ஜு ரூபமாகவிருக்கிறதுபோல் சகல கல்பித வஸ்துக்களுடைய நிவிர்த்தியும் அதிஷ்டானரூபமாகவே யிருக்கிறது. அதற்கு அன்னிய மாகவில்லை. இது பாஷியக் காருடைய சித்தாந்தம். ஆகையால் பிரகிருதத்தில் அனர்த்த நிவிர்த்தி பிர்ம்மரூபமாகவே யிருக்கிறது. ஏனெனில் சர்வ அனர்த்தத்துக்கும், அதிஷ்டானம் பிர்ம்மம். அந்த பிர்ம்மம் பாவரூபமாகவிருக்கிறது. ஆகையால் அனர்த்த நிவிர்த்தியே பாவரூபமாகவிருப்பதால் அதை கிரந்தத்தின் பிரயோசனமாகச் சொன்னது யுக்தந்தான்.

---

61 வீட்டில் புதையல் இருந்தும் தெரியாதவரையில் இல்லாததுபோலிருக்கிறது. மைமுதலியசாதனங்களால் கண்டறியப்பட்டவுடன் அது அடையப்பட்டதாகத்தோன்றுகிறது. இது நித்தியப்பிராப்தியின் பிராப்தியாம். இதுபோல் எதுவும் பிர்ம்மஸ்வரூபமாயிருப்பதால் பரமானந்த ரூபமானபிர்ம்மம் நித்தியப் பிராப்தமாக இருக்கிறது. ஆயினும் அஞ்ஞானத்தால் அப்பிராப்தம்போல் தோற்றுகிறது. நான் பரமானந்தஸ்வரூபப்பிர்ம்மமென்று நிச்சயமாய் சுருதியுக்தியனுபவங்களால் அறிவதே நித்தியப்பிராப்தியின் பிராப்தியாம்.

62. சர்ப்பம் ரஜ்ஜுவில் தோன்றுகிறபடியால் ரஜ்ஜு சர்ப்பத்துக்கு அதிஷ்டானமென்று சொல்லப்படுகிறது. மந்தாந்தகாரமிருக்கும்வரையில் சர்ப்பப் பிரமையிருக்கிறது. வெளிச்சங்கண்டவுடன் ரஜ்ஜுவென்று அறியப்படுகிறது. அக்ஷணத்திலேயே சர்ப்பம் நிவிர்த்தியாய் விடுகிறது. ஆகையால் சர்ப்பநிவிர்த்தியும் அதின் அதிஷ்டானமான ரஜ்ஜுவின் ஞானமும் ஒரேக்ஷணத்திலுண்டாவதால் சர்ப்பநிவிர்த்தியே அதிஷ்டானரஜ்ஜு ரூபமாயிருக்கிறது.

இந்த முதலாவது தரங்கத்தை எந்த ஜிஞ்ஞாசுவானவன் நிரந்தரமாகப்படிக்கிறானே அவனைத்தீனதயாளுவானகாது தூருவானவர் முக்தனாகச்செய்கிறார்.

அணுபந்த சாமான்ய நீரூபணம் என்னும் முதல் தரங்கம்.

முற்றிற்று.

2 - வது தரங்கம்.

அனுபந்த விசேஷ நிரூபணம்.

முதல் தரங்கத்தில் அனுபந்தம் சுருக்கமாகச் சொல்லப்பட்டது.

இரண்டாவது தரங்கத்தில் அது விஸ்தாரமாய ப்பிரதிபாதிக்கப் படுகிறது.

அதிகாரி விஷயமாய் ஆக்ஷேபங்கள். (40—43)

40. துக்கநிவிர்த்தி விஷயமாய் (40-41):— காலு சாதனங்களோடு கூடினவன் அதிகாரி என்று (15) சொலைப்பட்டது. அந்நான்கு சாதனங்களில் முமுக்ஷுத்வமையொன்று. முமுக்ஷுத்வ மென்பது மோக்ஷ இச்சை. காரணசரிதனுகத்தின் நிவிர்த்தியும் பிரம்மப்பிராப்தியும் மோக்ஷமென்று சொல்லப்படுகிறது. இந்த மோக்ஷத்தின் முதலாவது அம்சமான காரணசரிதனுகத்தின் நிவிர்த்திவிஷயத்தில் பூர்வபக்ஷியான ஆக்ஷேபக்காரன் ஆக்ஷேபிக்கிறதாவது:— மூலஅவித்தியாசரிதனுகத்தின் நாசத்தையொருவரும் இச்சிக்கிறதில்லை. ஆனாலோ மூன்றுவிததுக்கங்களின் நாசஞ் செய்ய விவேகியானவன் இச்சிக்கிறான். மூன்றுவிததுக்கங்களாவன:— (1) அத்தியாத்மிகம் (2) அதிபௌதிகம் (3) அதிதைவிகம். ரோகம், தாகம் பசிபோல்வனவாலுண்டாகுந்துக்கம் அத்யாத்மிகமென்னப்படும். திரு

---

1. ஒருவன் வீடுகட்ட ஆரம்பிக்கும்பொழுது வேறொருவன் தடுக்கிறான் அப்போது நியாயஸ்தலத்தில் தன் பாத்தியதையை ஸ்தாபித்துக்கொண்டு மறுபடியும் வீடுகட்டத்தொடங்குகிறான். இதுபோல் கிரந்தகர்த்தா முதல் தரங்கத்தில் அனுபந்த சதுஷ்டயத்தைச்சாதாரணமாய் நிரூபித்துக் கிரந்தத்தை யாரம்பிக்குங்காலத்தில் பூர்வபக்ஷியாகிய ஆக்ஷேபக்காரன் ஆக்ஷேபங்களால் தடைசெய்கிறான். அப்போது கிரந்தகர்த்தாவாகிய் சித்தாந்தியானவர் சுருதியுக்திகளின் பலத்தினால் தன் கக்ஷியை ஸ்தாபித்துக்கொண்டு இக்கிரந்தத்தைத்தொடங்குகிறார்.

2. மூலஅவித்தை.

3. பிச்சைக்காரன் பயத்தினால் சமையல் பண்ணுமலிருக்க ஒருவனும் இச்சிக்காததுபோலும், கறையான் பயத்தினால் தூணியை எறிந்துவிட ஒருவனும் இச்சிக்காததுபோலும், வெட்டுக்கிளி பயத்தினால் நிலத்தை விட்டுவிட ஒருவனும் இச்சிக்காததுபோலும், விவேகியானவன் மூவிததுக்கங்களின் பயத்தினால் ஜகத்தைநாசித்துப்போக வேண்டுமென்று இச்சிக்கிறதில்லை.

4. ஆத்மாவையாச்ரயித்திருக்கும் ஸ்தூல சூக்ஷ்மசரீரம் ஆத்யாத்மமென்னப்படும். இதினுண்டாகும் துக்கம் ஆத்யாத்மிகமாம்.

டன், புளி, சர்ப்பம், போன்றவைகளாலுண்டாகுந்துக்கம் அதிபௌதிகம். யக்ஷராக்ஷஸப்பிரேதக்கிரகாதிகளாலும் சீதவாதஆதபங்களாலும் ஜனிக்குந்துக்கம் அதிதைவிகமெனப்படும். இவ்விதமாக மூன்றுவிததுக்கங்களை நிவிர்த்திக்க எல்லாருமிச்சிக்கிறார்கள். துக்கத்துக்கு அன்னிய மான எதையுந்நிவிர்த்திக்கவிவேகி இச்சிக்கிறதில்லை. ஆகையால் அஞ்ஞானசகித சகலலோகத்தின் நிவிர்த்திவிஷயத்தில் இச்சையொருவருக்குமுண்டாகிறதில்லை.

41. மேலும், "எல்லாரும்துக்க நிவர்த்தியை இச்சித்தாலும் அஞ்ஞானசகித சகல லோகத்தின் நிவிர்த்தியன்றியில் • துக்கநிவிர்த்தியுண்டாகமாட்டாது. ஆகையால், துக்கநிவிர்த்தியின் பொருட்டு அஞ்ஞானசகிதசர்வலோகத்தின் நிவிர்த்தியையும் ஜனங்கள் அபேக்ஷிக்கிறார்கள்". இவ்விதமாகச்சித்தாந்தி சொல்வதுஞ்சரியன்று. ஏனெனில் ஆயுள்வேதத்திற் சொல்லிய ஔஷதங்களால் ரோகஜன்னிய துக்கங்கள் நிவிர்த்தியாகின்றன. போஜனத்தினால் பசியாலுண்டாகிற துக்கம் நிவிர்த்தியாகிறது. இவ்விதமாக அதற்கேற்பட்ட • பரிகாரத்தால் அந்தந்த துக்கம் நிவிர்த்தியாகிறது. ஆகையால் அஞ்ஞானசகிதலோகன்னிவிர்த்தியனறியிலும் துக்கநிவிர்த்தியுண்டாகிறது. துக்கநிவிர்த்தியின் பொருட்டு அஞ்ஞானசகித லோகன்னிவிர்த்தியவசியமில்லை. இவ்விதமாகக் காரணசகித லோகன்னிவிர்த்திரூபமான மோக்ஷத்தின் முதலாவது அம்சத்தில் இச்சையொருவருக்கு முண்டாகிறதில்லை.

42. சுகப்பிராப்திவிஷயமாய்:— பிரம்மப்பிராப்திரூபமான மோக்ஷத்தின் இரண்டாவதம்சத்திலும் இச்சையொருவருக்குமுண்டாகிறதில்லை யென்று பூர்வபக்ஷியடியில் வருமாறு சொல்லுகிறான். எந்தவஸ்துமுன் அனுபவிக்கப்பட்டிருக்கிறதோ அதையடைகிற விஷயத்தில் இச்சையுண்டாகக்கூடும். அறியப்படாத பதார்த்தத்தையடைய வேண்டுமென்கிற இச்சையுண்டாகமாட்டாது. அன்னியதேசங்களில் அனேகபதார்த்தங்கள் அறியப்படாமலிருக்கின்றன. அவைகளை யடைய இச்சையொருவருக்கு முண்டாகாதது போலும். அதிகாரிக்குப்பிரம்மச்சொரூபத்தின் ஞானமில்லை. எவனுக்குப்பிரம்மஞானமிருக்கிறதோ அவன் அதிகாரியன்று.

---

5. சரீரத்துக்கு வேறுயும் இந்திரியங்களுக்கு விஷயமாயுமிருப்பது அதிபூதம். அதினின்றுமுண்டாகும் துக்கம் ஆதிபௌதிகம்.

6. குளிர்காற்று வெயில்.

7. சரீரத்துக்கு வேறுயும் இந்திரியங்களுக்கு விஷயமாகாமலுமிருப்பது அதிதெய்வம். அதினின்றுமுண்டாகும் துக்கம் ஆதிதெய்விகம்.

அவன் முக்கன். அவனுக்குப்பிர்ம்மப்பிராப்தியில் இச்சையுண்டாகமாட்டாது. ஆகையால் வேதாந்தச்சிரவணத்துக்கு முன் அறியப்படாதபிர்ம்மத்தை யடைய இச்சையுண்டாகமாட்டாது. இவ்விதமாக அஞ்ஞானசகித ஜகன்னிவிர்த்தியும் பிர்ம்மப்பிராப்தியுமாகிற மோக்ஷத்தில் இச்சை யொருவருக்கு முண்டாகமாட்டாது. ஆகையால் முமுக்ஷுவாக ஒருவனும் இல்லை.

43. அதிகாரியே இல்லையென்பதைப் பூர்வபக்ஷி வேறு பிரகாரத்தினாற் சொல்லுகிறான். எல்லாரும் விஷயசுகத்தை இச்சிக்கிறார்கள். சகலவிஷயங்களையும் விட்டுத்தவஞ்செய்கிறவர்களும் பரலோகத்தினுத்தமோகங்களை யிச்சித்து[8] அனேகக்கிலேசங்களைப் பொருத்துக்கொள்ளுகிறார்கள். ஆகையால் இகலோக அல்லது பரலோக விஷயசுகத்தை யெல்லாரும் இச்சிக்கிறார்கள். இந்த விஷயசுகம் மோக்ஷத்திலில்லை. ஆகையால் மோக்ஷசாதனத்தை ஒருவரும் இச்சிக்கிறதில்லை. இவ்விதமாக மோக்ஷ இச்சாரூபமுமுக்ஷுத்வத்தை சித்திக்கிறதில்லை. மேலும் எல்லாருக்கும் விஷயசுகத்தில் இச்சையிருப்பதால் வைராக்கியம், சமம், தமம், உபரதி, இவைகளும் ஒருவரிடத்திலும் சித்திக்கிறதில்லை. ஆதலால் சாதனசதுஷ்டயசகித அதிகாரியே யில்லாதபடியால் கிரந்தாரம்பம் நிஷ்பிரயோசனம்

அதிகாரிவிஷயத்திற் சமாதானங்கள்.(44—54)

44. **40—41.**க்குச்சமாதானம்—: ஜகத்துக்கு மூலகாரணமான அஞ்ஞானம், ஜகத்து, இவைகளின் நாசமன்றியில் வேறு உபாயத்தால் மூன்றுவித துக்கங்களின் நாசமுமுண்டாகமாட்டாது. மூலஅவித்தையின் நிவிர்த்தியால் சகலதுக்கங்களும் துக்கங்களுக்குக்காரணமான ரோகாதிகளும், ரோகாதிகளுக்காசிரயமான சரீராதிகளும் நாசமாகின்றன. ஆகையால் மூன்றுவித துக்கநாசத்தின் பொருட்டுக்காரணசகித ஜகன்னிவிர்த்திரூபமான மோக்ஷத்தின் முதலாவதம்சத்தை யெல்லாரும்இச்சிக்கிறார்கள். இதன்தாற்பரிய மென்னவெனில் எவன் சகலஔஷதாதி உபாயங்களைச்செய்யச்சமர்த்தனாக இருக்கிறானே அவனுக்கும் துக்கம் நியமமாக நிவிர்த்தியாகிறதில்லை.சிலருக்கு ரோகாதிகளாலுண்டாகுந்துக்கங்கள் ஔஷதாதி உபாயங்களால் நிவிர்த்தியாகின்றன,சிலருக்கு ஆகிறதில்லை,ஆகையால் ஔஷதாதிஉபாயத்தினல் ரோகாதிகளால் உண்டாகும் துக்கங்கள் நியமமாக நிவிர்த்தியாகும் என்பது கிடையாது. மேலும் எவனுக்கு ஔஷதாதி உபாயத்தால் துக்கம் நிவிர்த்தியாகிறதோ அவனுக்கும் துக்கம் மறுபடியும் உண்டாகிறது. ஆகையால் ஔஷதாதி உபாயங்களால் துக்[9]காதிகளும், ரோகாதிகளுக்காசிரயமான சரீராதிகளும் நாசமாகின்றன. ஆகையால் மூன்றுவித துக்கநாசத்தின் பொருட்டுக்காரணசகித ஜகன்னிவிர்த்திரூபமான மோக்ஷத்தின் முதலாவதம்சத்தை யெல்லாரும்இச்சிக்கிறார்கள். இதன்தாற்பரிய மென்னவெனில் எவன் சகலஔஷதாதி உபாயங்களைச்செய்யச்சமர்த்தனாக இருக்கிறானே அவனுக்கும் துக்கம் நியமமாக நிவிர்த்தியாகிறதில்லை.சிலருக்கு ரோகாதிகளாலுண்டாகுந்துக்கங்கள் ஔஷதாதி உபாயங்களால் நிவிர்த்தியாகின்றன,சிலருக்கு ஆகிறதில்லை,ஆகையால் ஔஷதாதிஉபாயத்தினல் ரோகாதிகளால் உண்டாகும் துக்கங்கள் நியமமாக நிவிர்த்தியாகும் என்பது கிடையாது. மேலும் எவனுக்கு ஔஷதாதி உபாயத்தால் துக்கம் நிவிர்த்தியாகிறதோ அவனுக்கும் துக்கம் மறுபடியும் உண்டாகிறது. ஆகையால் ஔஷதாதி உபாயங்களால் துக்

---

8. துக்கங்கள்.

9. இருப்பிடம்.

கம் அத்தியந்தம் நிவிர்த்தியாகிறதில்லை. எது நிவிர்த்தியாகி மறுபடியும் உண்டாகிறதில்லையோ அது அத்தியந்த நிவிர்த்தியென்னப்படும். ஔஷதாதி உபாயத்தால் துக்கநிவிர்த்தி நியமமாக உண்டாகாதபடியாலும் நிவிர்த்தியான துக்கம் மறுபடியும் உண்டாகிறபடியாலும் மேற்படி உபாயங்களால் துக்கம் அடியோடே நிவிர்த்தியாகிறதில்லை. மேலும் துக்கத்தின் சகலசாதனங்களும் நாசமானால் சகலதுக்கங்களும் நியமமாக நிவிர்த்தியாகும். அச்சாதனங்கள் நாசமடைந்தால் மறுபடியும் துக்கமுண்டாகமாட்டாது. ஆகையால் துக்கநிவிர்த்தியின் பொருட்டுத்துக்கசாதனங்களின் நிவிர்த்தியில் இச்சை யெல்லாருக்கும் உண்டாகிறது. 10

45. அந்தத்துக்க சாதனங்தள் அஞ்ஞானமும், அதன் காரியமான பிரபஞ்சமும் என்று சாந்தோக்கிய உபநிஷத்தில் பூமவித்தியா விஷயத்தில் பிரசித்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்பிரசங்கமாவது:— "ஒரு சமயத்தில் சனத்குமாரரிடத்தில் நாரதர் சென்று சொன்னதாவது:— "சுவாமின், ஆத்மஞானியாயிருக்கிற புருஷனுக்கு துக்கம் இல்லை. நானோ துக்கசாகரமனுயிருப்பதால் அஞ்ஞானியாயிருக்கிறேன். எனக்கு அஞ்ஞானம் நீங்கும்படி உபதேசம் செய்யப் பிரார்த்திக்கிறேன்". அப்போது சனத்குமாரர் நாரதரைப் பார்த்துச் சொல்லுகிறார்:— ஓய் நாரதரே பூமா சோகரகிதமாயும் சுக ரூபமாயும் இருக்கிறது பூமாவுக்கு அன்னியமான சகலமும் துச்சமாயும் துக்கத்துக்குச் சாதனமாயும் இருக்கிறது. பூமா என்றால் பிரம்மம். இவ்விதமாகப் பிரம்மத்துக்குப் பின்னமான எதுவும் சகலதுக்கங்களுக்கும் சாதனமாகச்சொல்லப்படுகிறது. அஞ்ஞானமும் அதின் காரியமானபிரபஞ்சமும் பிரம்மத்துக்கு அன்னியமாக இருப்பதால் துக்கத்துக்குச்சாதனமாயிருக்கின்றன. அவைகள்நிவிர்த்தியாவதால் சகலதுக்கங்களும் நியமமாக அடியோடே நிவிர்த்தியாகின்றன. ஆகையால் சகலதுக்கநிவிர்த்தியின்பொருட்டு அஞ்ஞானசகிதப்பிரபஞ்சநிவிர்த்திரூபமான மோக்ஷதத்தின்முதலாவது அம்சத்தில் இச்சைஉண்டாகிறது. 11

---

10. ஜலவர நிவிர்த்தியை யபேக்ஷிக்கிறவன் சுரத்துக்கு அனுகூலமான பதார்த்தங்களை வைத்தியனிடத்தில் தெரிந்துகொண்டு அவைகளைத்தள்ளுகிறது போல் துக்கநிவிர்த்தியை இச்சிக்கிறவன் அதற்குச் சாதகமான விஷயங்களை குருவினிடத்திலும் சாஸ்திரத்திலும் தெரிந்துகொண்டு அவைகளைத்தள்ளவேண்டியது.

11. ஜகன்னிவிர்த்தி விஷயத்தில் இச்சையுண்டாகுமென்பதிலோர் சங்கை:— முன் அனுபவித்த பதார்த்தத்தில் இச்சையுண்டாகக்கூடும். அனுபவவியாததில் இச்சையுண்டாக மாட்டாது. பிரம்மமாகிற அதிஷ்டான ஞானத்தால் அஞ்ஞானமும் பிரபஞ்சமும் நிவிர்த்தியானதாக முமுக்ஷுவுக்கு அனுபவமில்லை. ஆகையால் அவைகளை நிவிர்த்திக்க இச்சையுண்டாகமாட்டாது. இதற்குச்சமாதானம்:— அனுபவித்தவிலேயே இச்சையுண்டாகுமென்பது நியமமில்லை,

46. 42 க்கு சமாதானம்:— பூர்வபக்ஷி முன் சொன்னதாவது:— எந்தவஸ்து அனுபவிக்கப்பட்டிருக்கிறதோ அதையடைய இச்சை உண்டாகும். பிர்ம்மம் ஒருவராலும் அறியப்படாதகினல் பிர்ம்மப்பிராப்தி ருபமானமோக்ஷத்தின் இரண்டாவது அம்சத்தில் இச்சை ஒருவருக்கும் உண்டாகிறதில்லை. இதற்குச்சமாதானஞ்சொல்லுகிறேன். எல்லாரும் சுகத்தை அனுபவித்திருக்கிறார்கள். ஆகையால் சுகத்தில் இச்சை எல்லாருக்கும் உண்டாகிறது. பிர்ம்மம் நித்திய சுகரூபமென்று சாஸ்திரத்தில் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆகையால் உத்தமமான விவேகியானவன் பிர்ம்மத்தை அடைய இச்சிக்கிறான்.

43 வது பிரவுத்தசமாதானம் (47—54)

47. சகலஜனங்களும் விஷயஜன்ய சுகத்தை இச்சிக்கிறார்கள் அத்தவிஷயஜன்ய சுகம் மோக்ஷத்தில் கிடைக்கிறதில்லை. ஆனல் பிரபஞ்சத்திற் கிடைக்கிறது. ஆகையால் மோக்ஷஇச்சையுள்ள அதிகாரியே சித்திக்காதபடியால் கிரந்தாரம்பம் நிஷ்பிரயோஜனம். இப்படி ஆக்ஷேபிக்கிற பூர்வபக்ஷியைக்கேட்க வேண்டியதென்னவெனில் (1) முமுக்ஷுத்வமும் இல்லையா, (2) அல்லது முமுக்ஷுத்வம் இருந்தும் அவனுக்குக்கிரந்தத்திற் பிரவிர்த்தி உண்டாகிறதில்லையா? முமுக்ஷுத்வமே இல்லை என்பது சரியன்று. எனனில் எல்லாரும் சர்வதுக்கநாசத்தையும் நித்தியசுகப்பிராப்தியையும் இச்சிக்கிறார்கள். துக்கநாசமும் சுகப்பிராப்தியுமே மோக்ஷச் சொரூபம். ஆகையால் எல்லாரும் முமுக்ஷுக்களாகவே இருக்கிறார்கள்.

ஆனல் அனுபவித்ததற்கு ஸஜாதீயமான வஸ்துவில் இச்சையுண்டாகுமென்பது நிச்சயம். உண்டிவிழுங்கின பதார்த்தத்தில் இச்சையுண்டாகிறதில்லை. ஆனல் அதற்கு ஸஜாதீயமான வஸ்துவிலாவது வேறுவஸ்துவிலாவது இச்சையுண்டாகிறது. அஞ்ஞானத்துக்கும் பிரபஞ்சத்துக்கும் பிர்ம்மம் அதிஷ்டானமாயிருப்பதுபோல் கல்பிதஸர்ப்பத்துக்கு ரஜ்ஜு அதிஷ்டானமாயிருக்கிறது. ஆகையால் அதிஷ்டானவிஷயத்தில் பிர்ம்மமும் ரஜ்ஜுவும் பரஸ்பரம் ஸஜாதீயங்களாயிருக்கின்றன. ஸர்ப்பநிவிர்த்தியும் பிரபஞ்சநிவிர்த்தியும் பரஸ்பரம் ஸஜாதீயங்களாயிருக்கின்றன. ரஜ்ஜுஞானத்தால் சர்ப்பம் நிவிர்த்தியாகிறதென்பது அனுபவசித்தமாயிருக்கிறது. ஆனதால் ஸஜாதீயமான பிர்ம்மஞானத்தால் அஞ்ஞான சகிதப்பிரபஞ்ச நிவிர்த்தியாவதில் இச்சையுண்டாகக்கூடும்.

12. அனுபவித்த வஸ்துவில் தான் இச்சையுண்டாகிறதாயிருந்தால் அனுபவித்த ரோகாதிகளிலும் இச்சையுண்டாகக்கூடும். ஆனல் பிரபஞ்சத்தில் அப்படியுண்டாகிறதில்லை. அனுபவித்த அனுகூலவிஷயத்தில்தான் இச்சையுண்டாகிறது. அவைகளிலும் ஸஜாதீயவஸ்துக்களில் அவசியம் இச்சையுண்டாகிறது. சுகானுபவம் எல்லாருக்கும் இருக்கிறபடியால் அதற்கு ஸஜாதீயமான பிர்ம்மசுகத்தில் எல்லாருக்கும் இச்சையுண்டாகக்கூடும்.

48. விஷய ஜன்ய சுகத்தை எல்லாரும் இச்சிக்கிறார்களென்று சொன்னது சரியன்று. ஆனல் சுகமாத்திரத்தை எல்லாரும் இச்சிக்கிறார்கள். அந்த சுகம் விஷயத்தினலும் உண்டாகும். விஷயமன்றியிலும் உண்டாகும். விஷயசுகத்தில் தான் இச்சையுண்டாகிறதென்று சொல்லும் பக்ஷத்தில் சுஷுப்தி சுகத்தில் இச்சையுண்டாகக்கூடாது. சுஷுப்தி சுகம் விஷய ஜன்யமாக இல்லை. ஆகையால் சுகமாத்திரத்தை எல்லாரும் இச்சிக்கிறார்களேன் ஏழிய கேவலம் விஷய ஜன்ய சுகத்தை இச்சிக்கிறதில்லை. அதற்கு எதிரிடையாக ஆத்ம சுகத்தில் இச்சை யுண்டாகிறது. விஷய சுகத்தில் இச்சை யுண்டாகிறதில்லை. எனெனில் எல்லாருக்கும் விஷய சுகம் ஏற்றக்குறைச்சலாக இருக்கிறது. எக்காலத்திலும் நாசமாகாத ஏகரூபமான சுகம் தங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று எல்லாருக்கும் இச்சை உண்டாகிறது. இப்பேர்ப்பட்டசுகம் ஆத்மச்சொரூபமான மோக்ஷமாக இருக்கிறது. ஆகையால் எல்லாரும் முமுக்ஷுக்களாயிருக்கிறார்கள். ஆகையால் முமுக்ஷு ஒருவரும் இல்லையென்று சொன்னது சரியன்று.

49. இரண்டாவது பக்ஷத்தில் அதாவது முமுக்ஷு இருந்தும் சரீரத்தில் பிரவிர்த்தி உண்டாகாதபடியால் சரீராரம்பம் நிஷ்பலம் என்று (47) ஆக்ஷேபிக்கிறவனைக் கேட்கவேண்டியதாவது:—

(1) சரீரம் மோக்ஷசாதனமாக இல்லாதினல் இதில் பிரவிர்த்தி உண்டாகவில்லையா?

(2) இந்தச் சரீரத்தைத் காட்டிலும் வேறு சாதனங்களிருப்பதால் இதில் பிரவிர்த்தி உண்டாகவில்லையா?

(3) எந்தச்சாடம் தமம் முதலிய சாதனங்களிருந்தால் சரீரத்தில் அதிகாரம் உண்டெனச் சொல்லப்பட்டதோ, அப்போர்ப்பட்டச் சமாதிகளோடு கூடிய ஞானத்துக்கு யோக்கியமான அதிகாரி ஒருவனுமில்லாதினல் சரீரத்திற் பிரவிர்த்தி உண்டாகவில்லையா?

முதலாவதாக்ஷேபம்.

அதாவது சரீரம் மோக்ஷசாதனமாக இல்லை என்பது சரியனறு. ஏனெனில் மோக்ஷம் ஞானத்தால் நியமமாய் உண்டாகிறதென்பது வேதாந்த சித்தாந்தம். அந்த ஞானம் சிரவணத்தால் உண்டாகிறது.

அச்சிரவணம் இரண்டு விதம்.

(1) வேதாந்த வாக்கியத்துக்கும் சுரோத்திரேந்திரியத்துக்கும் முள்ளஸ்ம்யோக ரூபச்சிரவணம்.

(2) வேதாந்த வாக்கியத்தின் விசார ரூபச்சிரவணம். இவை

களில் ஞானத்துக்கு ஹேது முதலாவது சிரவணமே தவிர இரண்டாவதன்று. ஏனெனில் சப்த ஜன்ய ஞானத்திற்கு இந்திரியத்தோடு சப்த ஸம்யோகமே எங்கும் ஹேதுவாயிருக்கிறது. ஆகையால் வேதாந்தவாக்கியம் சுரோத்திரம் இவைகளின் ஸம்யோகரூபச்சிரவணமே பிர்ம்ம ஞானத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. அவாந்திர வாக்கியத்தின் சிரவணம் பரோக்ஷ ஞானத்துக்கும் மகாவாக்கியத்தின் சிரவணம் அபரோக்ஷஞானத்துக்கும் ஹேதுவென்று முன் (28) பிரதிபாதிக்கப் பட்டிருக்கிறது. எவனுக்கு ஞானமுண்டானலும் அசம்பாவனா விபரீதபாவனைகள் எவனுக்கு இருக்கின்றனவோ அவன் இரண்டாவது. சிரவணத்தையும் மனன நிதித்தியாசனங்களையுஞ் செய்யவேண்டியது. இந்த வேதாந்த வாக்கியத்தின் விசாரரூபச் சிரவணம் வேதாந்த வாக்கியத்திலுள்ள அசம்பாவனையை அதாவது வேதாந்த வாக்கியம் பிர்ம்மத்தைப் பிரதிபாதிக்கிறதா அல்லது வேறு அர்த்தத்தைப் பிரதிபாதிக்கிறதா என்கிற சமுசயத்தை நிவிர்த்திசெய்கிறது. மனனம் பிரமேயத்தின் அசம்பாவனையை அதாவது ஜீவனும் பிர்ம்மமும் ஏகமென்றுசொல்வது சத்தியமா அல்லது ஜீவப்பிர்ம்மபேதம் சத்தியமா என்கிற சந்தேகத்தை[13] நிவிர்த்திசெய்கிறது. நிதித்தி

---

13. இது ரஜ்ஜுவா அல்லது சர்ப்பமா என்கிற இரண்டுவித ஞானத்துக்கு சம்சயமென்றுபெயர். ஆத்மா அநாத்மா இவ்விரண்டு விஷயங்களில் சம்சயம் உண்டாகக்கூடும். அநாத்மசம்சயங்களை இவ்விடத்தில் கவனிக்கவேண்டியதில்லை. ஆத்மகத சம்சயம் பிரமாணத்திலும் பிரமேயத்திலும் உண்டாகக்கூடும். உபநிஷத்துரூப வேதாந்தவாக்கியங்கள் அவைதத்தை பிரதிபாதிக்கின்றனவா, அல்லது அத்வைதத்தை பிரதிபாதிக்கின்றனவா, அல்லது வேறு அர்த்தத்தை பிரதிபாதிக்கின்றனவா. இது பிரமாணகதசம்சயம். இது சிரவணத்துக்கு முன் உண்டாகிறது. வேதாந்தரூபபிரமாணத்தால் அறியக்கூடிய மோக்ஷம் முதலிய பதார்த்தங்களெல்லாம் பிரமேயமென்னப்படும். இவைகளின் ஸ்வரூபத்தில் உண்டாகும் சம்சயம் பிரமேயகதசம்சயமென்னப்படும். இந்தபிரமேயகத சம்சயம் விஷயபேதத்தால் அனேகவிதம். எப்படியெனில்,

I. மோக்ஷஸ்வரூபசம்சயம்:— சகல அனர்த்த நிவிர்த்தியும் பரமானந்தப்பிராப்தியுமே மோக்ஷமா, அல்லது மூன்று விததுக்கநாசம் மோக்ஷமா (40) அல்லது நியாயமதத்தின்படி 21 துக்கநாசம் மோக்ஷமா(448), அல்லது 5 துக்க (55)நாசம் மோக்ஷமா, அல்லது சுவர்க்க வைகுண்டாதிகளின் சுகலாபமே மோக்ஷமா (519-20), இவ்விதசம்சயங்கள் மோக்ஷஸ்வரூபத்தில் உண்டாகின்றன.

II. மோக்ஷசாதனசம்சயம்:— அனர்த்தநிவிர்த்தியும் பரமானந்தப்பிராப்

யாசனம் விபரீதபாவனையை நிவிர்த்திசெய்கிறது. இவ்விதமாக முதலாவது சிரவணம் ஞானமூலமாக மோக்ஷத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. விசாரரூபச் சிரவணீம், மனனம், நிதித்தியாசனம் இவைகள் அசம்பாவனை விபரீதபாவனைகளை நிவர்த்திசெய்வது மூலமாக மோக்ஷத்துக்கு ஹேதுக்களாயிருக்கின்றன. வேதாந்தமென்றால் உபநிஷத்து. அது இந்தக் கிரந்தத்தைக்காட்டிலும் வேறாக இருந்தாலும் அதன் அர்த்தத்தைத்தான் இந்தப் பாஷாக் கிரந்தமும் சொல்லுகின்றது. இதன் சிரவணத்தினாலும் ஞான முண்டாகுமென்பது இனி (114) பிரதி பாதிக்கப்படும். இவ்விதமாக ஞான மூலமாகக் கிரந்த மோக்ஷத்துக்கு ஹேதுவா யிருக்கிறது.. இந்தக் கிரந்தம் விசாரரூபமாயும் மனன ரூபமாயுமிருப்பதால் அசம்பாவனாதி தோ

தியுமே மோக்ஷமென்று சித்தாந்தி சொல்லும்பக்ஷத்தில் இந்தமோக்ஷத்துக்கு சாக்ஷாத்தானசாதனம் கர்மமா, அல்லது உபாசனையா, அல்லது ஞானமா, (496-535).

III. ஞானசாதனசம்சயம்:— மோக்ஷத்துக்குச்சாதனம் ஞானமென்று சொல்லும் பக்ஷத்தில், அபரோக்ஷஞானத்துக்கு சாக்ஷாத்சாதனம் யஞ்ஞாதிகர்மமா, உபாசனையா,(165) விவேகாதிகள் நான்கா(22)சிரவணாதிகள் மூன்று(24) "தத்த்வம்" பதார்த்தங்களின் சோதனையாகிற அவாந்திரவாக்கியஞானமா (28), அல்லது "தத்துவமஸி" முதலிய மகாவாக்கிய உபதேசமா (30)

IV. ஞானத்துக்கு விஷயமாகிற ஜீவன் (த்வம்பதம்), ஜகத்து, ஈசுவரன் (தத்பதம்) இவைகளின் சந்தேகம்:— ஞானத்துக்கு விஷயமானது பேதப்படுகிறதா அல்லது அபேதப்படுகிறதா. அபேதமானால் ஆத்மாவுக்கும் பிரம்மத்துக்கும் அபேதமா, அல்லது அந்தக்கரணவிசிஷ்டசேதனரூப ஜீவனுக்கும் விராட்ஹிரணியகர்பஅந்தர்யாமிரூப ஈசுவரனுக்கும் அபேதமா (485). ஆத்மா ஸ்தூலதேகத்தைக்காட்டிலும் பின்னமா, அல்லது அபின்னமா (436). பின்னமானால் (439) ஆத்மா ஜடமா(445) அல்லது சேதனமா, அல்லது ஜடசேதனமா (316) சேதனமானால் ஆத்மா கர்த்தா போக்தாவா அல்லது அகர்த்தா அபோக்தாவா (440). ஆத்மா அணுபரிமாணமா (464) மத்தியமபரிமாணமா (462) மஹத்பரிமாணமா (441). ஆத்மாவுக்கும் தத்பதத்தின் வாச்சியார்த்தத்துக்கும் அபேதமா அல்லது ஆத்மாவுக்கும் தத்பதத்தின் லக்ஷியார்த்தத்துக்கும் அபேதமா (495). ஜகத்தின் காரணம் பிரதானாதிகளா அல்லது ஈசுவரனா (437). ஈசுவரனானால் (491) ஈசுவரன் பரிச்சின்னனா அல்லது வியாபகனா(494). ஈசுவரன் ஜகத்தின் உபாதானகாரணமா அல்லது நிமித்தகாரணமா அல்லது அபின்னநிமித்தோபாதான காரணமா (295). ஜீவர்களுடைய கர்மானுசாரமாக ஈசுவரன்சிருஷ்டிக்கிறாரா அல்லது விஷமசிருஷ்டியுடன் சிருஷ்டிக்கிறாரா (297). ஆத்மா பிரம்மத்துக்கு அபின்னமா? அல்லது பின்னமா? அபின்னமானால், எப்போதும் அபின்னமா? அல்லது மோக்ஷகாலத்தில் அபின்னமா? ஆனந்தாதிகளுட

ஷங்களின் நிவிர்த்தி மூலமாக மோக்ஷத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. ஆகையால் கிரந்தத்தினால் மோக்ஷம் உண்டாக மாட்டாதென்று சொன்னது கேவலம் மூடபுத்தியாகும்.

50. "கிரந்தத்தினால் மோக்ஷமுண்டாகும். ஆனால் வேறு சாதனங்களாலும் மோக்ஷமுண்டாகிறபடியால் இந்தக் கிரந்தாரம்பம் நிஷ்பலம்" என்று சொல்லுகிறவனைக் கேட்கவேண்டியதாவது:— மோக்ஷத்தைக் கொடுக்கிற அவ்வேறு சாதனங்கள் எவை? "ஜீவப்பிரம்ம ஐக்கியத்தைப் பிரதிபாதிக்கிற உபநிஷத்து சூத்திரபாஷியங்கள் முதலிய ஸம்ஸ்கிருதக் கிரந்தங்கள் அநேகமிருக்கின்றன. அவைகளின் ஞானத்தினாலும் மோக்ஷம் உண்டாகிறது. ஆகையால் இந்தக் கிரந்தம் நிஷ்பிரயோசனம்" எனச் சொல்வது சத்தியமாயிருந்தாலும் அந்தக்கிரந்தங்களை அறியச்சக்தி யில்லாத முழுமூக்ஷுவுக்கு அவைகளினால் ஞானமுண்டாகமாட்டாது. ஆதலால் அப்போப்பட்ட முழுமூக்ஷுவுக்கு இந்தக்கிரந்தத்திற் பிரவிர்த்தியுண்டாகும்.

51. "கிரந்தம் மோக்ஷத்துக்கு ஹேதுவாக இருக்கிறது. ஸம்ஸ்கிருதக் கிரந்தத்தினால் மந்தபுத்தியுள்ள ஜனங்களுக்குப் போதம் உண்டாகிறதில்லை. முழுமூக்ஷுக்களாக இருந்தும் கிரந்தத்தில் அவர்களுக்குப் பிரவிர்த்தி உண்டாகிறதில்லை. ஏனெனில் அதிகாரிக்குச் சொல்லப்பட்ட விவேக வைராக்கிய சமாதி சாதனங்கள் அவர்களிடத்திற் காணப்படுகிறதில்லை", எனச்சொல்லுகிறவனைக் கேட்கவேண்டியதாவது:— அதிகாரிகள் அநேகரில்லையா? அல்லது ஒருவன்கூட இல்லையா? அதிகாரிகள் அநேகரில்லை என்பதை நாமும் அங்கீகரிக்கிறோம். ஞானத்துக்கு யோக்கியமான அதிகாரி ஒருவரும் இல்லை என்று சொல்வது சரியன்று. ஏனெனில் அந்தக்காரணத்தில் மலம் விக்ஷேபம் சொரூபாவரணமென்கிற மூன்று தோஷங்களிருக்கின்றன. மலம் என்றால் பாபம். விக்ஷேபம் என்றால் சஞ்சலதை. ஆவரணம் என்றால் அஞ்ஞானம். சுபகர்மத்தால் மலமும் உபாசனையினால் விக்ஷேபமும் ஞானத்தால் ஆவரணமும் நிவிர்த்தியாகின்றன. எவனுடைய அந்தக்காரணத்தில் மல விக்ஷேப தோஷங்கள் இருக்கின்றனவோ அவன் அதிகாரி யன்று. ஆனால் இந்த ஜன்மத்திலாவது பூர்வ ஜன்மத்திலாவது செய்த சுபகர்மத்தினாலும் உபாசனையினாலும் எவனுடைய மல விக்ஷேப தோஷங்கள் நிவிர்த்தியாயிருக்

ன் கூடி இருக்கிறாரா இல்லையா? சச்சிதானந்தங்கள் ஆத்மாவின் குணங்களா? அல்லது ஸ்வரூபமா? சச்சிதானந்தங்கள் பரஸ்பரம் பின்னமா அல்லது அபின்னமா (483). இன்னும் வெகு சந்தேகங்களுள். இப்படிப்பட்ட பிரமாணாதிரமேயசந்தசம்சயங்கள் சிரவணத்தினாலும் மனனத்தினாலும் நிவிர்த்தியாகி பிரம்ம சாக்ஷாத்காரமானவுடன் சுத்தமாய் நீங்கிவிடும்.

கின்றனவோ அவனே ஞானத்துக்குயோக்கியமான அதிகாரி. அவனுக்கு இந்த சிரத்தை பிரவிர்த்தி உண்டாகும். (14. பார்க்க.

52. எல்லாரும் விஷய சுகத்தை யிச்சிக்கிறார்கள். நித்திய சுகத்தை ஒருவரும் இச்சிக்கிறதில்லை என்று (43) சொன்னது சரியன்று. ஏனெனில் பாமரன், விஷயீ, ஜிஞ்ஞாசு, முந்தினென புருஷர் நான்கு வகையாம். இவர்களில் இகலோகத்தில் நிஷித்தமாயும் விகிதமாயும் இருக்கிற போகங்களில் ஆசக்தியுள்ளவனையும், சாஸ்திர ஸம்ஸ்காரரகிதனையுமிருக்கிறவன் பாமரன். சாஸ்திராநுசாரமாக விஷய போகங்களை அநுபவித்துக்கொண்டு இக பரலோகங்களின் போகங்களையடையக் காமஞ் செய்கிறவன் விஷயீ.

53 ஜிஞ்ஞாசுலக்ஷணம்:— எந்தப்புருஷன் உத்தம ஸம்ஸ்காரத்தினல் சத்சாஸ்திரங்களைச் சிரவணஞ்செயகிறானே அவனுக்கு அடியிலக்ணடபடி விவேகமுண்டாகிறது.

(1) துக்கம்:— விஷயசுகம் அநித்தியமாயிருக்கிறது. அது உள்ளவரையில் எக்க துக்கமாவது அவசியம் இருந்துக்கொண்டே யிருக்கிறது. முடிவில் சுகம் முடிந்தவுடன் துக்கம் ஜனிக்கிறது. இனிச்சுகம் போய்விடுமென்கிற பயத்தினல் நற்காலத்திலும் சுகம துக்கத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. இவ்விதமாக விஷய சுகம் துக்கத்தினல் கவ்வப்பட்டிருக்கிறது. ஆகையால் துக்கரூபமாகவே யிருக்கிறது. இத்தத்துக்கம் லௌகீக வுபாயத்தினல் நிவிர்த்தியாகிறதில்லை. ஏனெனில் உபாயந்தேடுகிறவனுக்கும் சகல துக்கங்களும் நிவிர்த்தியாகிறதில்லை. நிவிர்த்தி யானலும் மறுபடியும் உண்டாகின்றன.

(2) சரீரம்:— சரீரம் உள்ளவரையில் துக்கநிவிர்த்தியாகிறதுமில்லை. ஏனெனில் சரீரங்களெல்லாம் புண்ணியபாபங்களால் உண்டாகின்றன; மனுஷ்யசரீரம்மிசிரகர்மபலன். தேவசரீரமும்மிசிரகர்மபலந்தான். தேவசரீரமி கேவலம் புண்ணிய பலனென்று சொல்லும் பக்ஷத்தில் தேவதைகளுக்குள் சிலருக்கு இதரதேவதைகளுடைய விசேஷவிபூதிகளைக்கண்டு தாபம் உண்டாகக்கூடாது. எல்லாதேவதைகளிலும் பிரதானமான இந்திரனுக்கும், அனேகஸ்தியதானவர்களுடைய பயத்தினல் துக்கமுண்டாவதாகச் சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. தேவசரீரம் கேவலம் புண்ணியபலனாக இருக்கும் பக்ஷத்தில் தேவதைகளுக்குத்துக்க முண்டாகக்கூடாது. ஆகையால் தேவசரீரமும் புண்ணியபாபங்களின் பலன்தான். மேலும் தேவதைகள் பாபநிதர்களாயிருக்கிறார்களென்று

சுருதியில் சொல்லியிருப்பதற்குத்தாற்பரிய மென்னவெனில் கர்மத்துக்கு அதிகாரம் கேவலமனுஷ்ய சரீரத்தில் இருக்கிற தேதவிர இதரசரீரத்தில் இல்லை. ஆகையால் தேவசரீரத்தி ற் செய்யப்பட்ட சுபாசுபகர்மங்களின் பலன் தேவதைகளுக்கு உண்டாகிறதில்லை. தேவசரீரத்துக்கு முன்னை சரீரத்திற்செ ய்த சுபாசுபகர்மங்களின் பலன் தேவசரீரத்திலும் உண்டா கிறது. இவ்விதமாகத்தேவசரீரம் மிசிரகர்ம பலனுக இருக்கி றது. மேலும் தீர்யக்கு, பசு, பக்ஷிகளின் சரீரங்களும் மிசிரக ர்ம பலன்தான். ஏனெனில் அவைகளின் பிரசித்தமான துக்க ம் பாபபலனுகவும் மைதுனநிசுகம் புண்ணியபலனுகவும் இரு க்கின்றன. ஊரும் ஜந்துக்களைத்திரியக்கென்றும் நாற்கால் பி ராணிகளைப்பசுவென்றும் பக்ஷங்களால் பறக்கிறபிராணிகளைப் பக்ஷியென்றும் சிலர் பசு பக்ஷிகளையும் திரியக்கென்றும் சொல் லுகிறார்கள். இவ்விதமாகச்சரீரங்களெல்லாம் புண்ணியபாப ங்களால் உண்டாயிருக்கின்றன. தேவசரீரம் அதிகபுண்ணியத் தினாலும் சொல்பபாபத்தினாலும் உண்டாகிறது. இந்த அபி ப்பிராயத்தினால் தான் தேவசரீரம் கேவலம் புண்ணியகர்மபல னென்று சாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் விரோதமில்லை. பெரும்பாலும் பிராமணர்களே வசிக்கும் கிரா மத்துக்குப்பிராமண கிராமமென்று சொல்வதுபோல் அதிகபு ண்ணியபலனுக இருப்பதால் தேவசரீரம் கேவலபுண்ணிய ப லனென்று சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையாய்க்கேவ லபுண்ணியபலன் அன்று. திரியக்கு பசு பக்ஷிகளுடைய சரீர ம அதிகபாபத்தினாலும் சொற்பபுண்ணியத்தினாலும் உண்டா கிறது உத்தமமனுஷ்யனுடைய சரீரம் தேவசரீரத்துக்குச்சமா னமாயிருக்கிறது. நீசனுடைய சரீரம் சர்ப்பாதிகளின் சரீர த்துக்குச்சமம். இவ்விதமாக எல்லாச்சரீரங்களும் புண்ணிய பாபங்களாலுண்டாகின்றன. பாபத்தின் பலன் துக்கமான தால் சரீரம் உள்ளவரையில் துக்கம் நிவிர்த்தியாகமாட்டாது.

(3) தர்மாதர்மம்:— இந்தச்சரீரம் தர்மாதர்மங்களின் பலனுக இருக்கிறது. அவைகளின் நிவிர்த்தியன்றியில் சரீரம் நிவிர்த் தியாகிறதில்லை. ஏனெனில் இப்போதுள்ள சரீரம்போலவு ம் புண்ணியபாபங்களால் வேறு சரீரம் உண்டாகிறது. ஆகை யால் புண்ணியபாபங்களின் நிவிர்த்தியன்றியில் சரீரம் நிவிர்த் தியாகமாட்டாது.

(4) ராகத்வேஷம்:—இந்தப்புண்ணியபாபங்கள் ராகத்துவே ஷங்களின் நாசமன்றியில் நிவிர்த்தியாகமாட்டா. ஏனெனில் இப்போதுள்ள புண்ணியபாபங்கள் அனுபவத்தால் நிவிர்த்தி யானாலும் ராகத்து வேஷங்களால் வேறு புண்ணியபாபங்கள்

உண்டாகும். ஆகையால் ராகத்து வேஷ நிவிர்த்தியன்றியில் புண்ணியபாபங்கள் நிவிர்த்தியாகமாட்டா.

(5) அனுகூலப் பிரதிகூல ஞானங்கள்:— இந்த ராகத்துவே ஷங்கள் அனுகூலப்பிரதிகூல ஞானங்களாலுண்டாகின்றன. அனுகூல ஞானமுண்டாகிற இடத்தில் ராகமும் பிரதிகூலஞானமுண்டாகிற இடத்தில் துவேஷமும் முண்டாகின்றன. ஆகையால் அனுகூலப்பிரதிகூல ஞானங்களின் நிவிர்த்தியன்றியில் ராகத்து வேஷங்கள் நிவிர்த்தியாகமாட்டா.

(6) பேதஞானம்:— இந்த அனுகூலப்பிரதிகூல ஞானங்கள் பேதஞானத்தால் உண்டாகின்றன. 'ஏனெனில் எந்தவஸ்துவைத் தன் சொரூபத்துக்கு அன்னியமாக எவன் அறிகிறானே அவனுக்கு அந்தவஸ்து விஷயத்தில் அனுகூலம் அல்லது பிரதிகூல ஞானமுண்டாகிறது. தன் சொரூபத்தில் அனுகூலப்பிரதிகூல ஞானங்களுண்டாகிறதில்லை. சுகத்துக்குச்சாதனமாயிருப்பது அனுகூலமென்றும் துக்கத்துக்குச்சாதனமாயிருப்பது பிரதிகூல்மென்றும் சொல்லப்படும். தன சொரூபம் சுகத்துக்காவது துக்கத்துக்காவது சாதனமாயில்லை, சுகரூபமாயிருந்தாலும் அது சுகத்துக்குச்சாதனமாயிலலை. ஆகையால் சொரூபத்துக்குப்பின்னமாக அறியப்பட்ட வஸ்துவிடத்தில் அனுகூலப்பிரதிகூல ஞானங்களுண்டாகின்றன. இவ்விதமாகப்பதார்த்தங்களிடத்தில் தனக்கு வேறென்கிற யாதொரு பேதஞான முண்டோ அது அனுகூலப்பிரதிகூல ஞானங்களுக்கு வேமதுவாயிருக்கிறது. இந்தப்பேதஞான நிவிர்த்தியன்றியில் அனுகூலப்பிரதிகூல ஞானங்கள் நிவிர்த்தியாகமாட்டா.

(7) அவித்தை:— இந்தப்பேதஞானம் அவித்தையாலுண்டாகிறது. ஏனெனில் சகலப்பிரபஞ்சமும் அதன்ஞானமும் பிரம்மச்சொரூபத்தை அறியாதகாலத்தில் இருக்கின்றன வெனச்சகல வேதசாஸ்திரங்களும் முறையிடுகின்றன. இவ்விதமாக எல்லாதுக்கங்களுக்குங் காரணம் சொரூப அஞ்ஞானந்தான்.

(8) சொரூபஞானம்:— இந்தச்சொரூப அஞ்ஞானம் சொரூபஞானமன்றியில் நிவிர்த்தியாகிறதில்லை. ஏனெனில் எந்தவஸ்துவினிடத்தில் ஒருவனுக்கு அஞ்ஞானம் இருக்கிறதோ, அந்த அஞ்ஞானம் அந்தவஸ்துவை அறிகிறதினால் நிவிர்த்தியாகிறது. ரஜ்ஜுவின் அஞ்ஞானம் ரஜ்ஜுஞானத்தால் நிவிர்த்தியாகிறது போலவும் வேறெதினாலும் நிவிர்த்தியாகாதது போலவுமே. ஆகையால் சொரூபஞானமே அஞ்ஞானத்தின் நிவிர்த்தி

ஆலம்பாகத் துக்க நிவிர்த்திக்கு ஹேதுவா யிருக்கிறது. சொரூபஞானத்தால் பிரம்மம் அடையப்படுகிறது. அந்தப்பிரம்மம் நித்தியமாயும், ஆனந்தச் சொரூபமாயும், துக்க சம்பந்தமன்றியிலும் இருக்கிறது. ஆகையால் சொரூபஞானத்தால் நித்தியமாயும் துக்கசம்பந்தமில்லாமலு மிருக்கிற பிரம்மச்சொரூபத்தின் ஆனந்தம் அடையப்படுகிறது. இவ்விதமாகத் துக்கநிவிர்த்திக்கும் பரமானந்தப்பிராப்திக்கும் காரணஞ்சொரூபஞானந்தான். ஆகையால் சொரூபம் அறியத்தக்கது. இப்படி எவனுக்கு விவேகம் உண்டாகிறதோ அவன் ஜ்ஞானசுவென்று சொல்லப்படுகிறான்.

முக்தலக்ஷணம்:— ஸ்தூலசூக்ஷ்மசரீரங்களுக்குப்பின்னமாயிருக்கிற தன சொரூபத்தைப்பிரம்மரூபமாக அபரோக்ஷமாய அறிகிறவன் முக்தனென்று சொல்லப்படுகிறான்.

54. இவ்விதமாக நான்குவித புருஷர்களுக்குள் பாமரவிஷயிகளுக்கு விஷயசுகத்தில் திருப்தியுண்டாகிறது. கிலவிஷயிகளுக்குப்பரமசுகத்தில் இச்சையுண்டானாலும் அதையடைய எது வழியன்றே அதைவழியாக நினைத்து அவர்கள் அதில் பிரவேசிக்கிறார்கள். ஏனெனில் சத்சங்கமும் சத்சாஸ்திரச்சிரவணமும் பரமசுகத்தையடைய உபாயங்கள். இவைகளைப்பாமரவிஷயிகள் தேடாதபடியால் சுகப்பிராப்தியின் பொருட்டு அவர்களுக்குகநிரந்தத்திற் பிரவிர்த்தி உண்டாகமாட்டாது. துக்கநிவிர்த்தியின் பொருட்டும் அவர்கள் வேறு உபாயங்களில் பிரவிர்த்திக்கிறபடியால் நிரந்தத்திற்பிரவிர்த்தி உண்டாகிறதில்லை. ஆகையால் துக்கநிவிர்த்தி சுகப்பிராப்திகளின் பொருட்டுப் பாமரவிஷயிகளுக்குக் நிரந்தத்திற் பிரவிர்த்தி உண்டாகமாட்டாது. மேலும் முக்தனுக்குங் நிரந்தத்திற் பிரவிர்த்தி யுண்டாகமாட்டாது. ஏனெனில் ஞானவான் முக்தனென்று சொல்லப்படுகிறான். அவன் நிருத நிருத்தியன். அவனுக்குச் செய்யவேண்டியதொன்றுமில்லை. இது இனி (326) ப்பிரதி பாதிக்கப்படும். விளையாட்டாக அவன் பிரவிர்த்திக்காலும் அவனுக்குத்நிரந்தத்தினால் யாதொரு பிரயோஜனமும் சித்திக்கமாட்டாது. ஆகையால் முக்தனை

---

14. அஜ்ஞான தசையில் இகலோக வியவகாரத்தின் பொருட்டு வியவசாயாதிகள்; பரலோகத்தின் பொருட்டு லகாம்கர் மோபாஸனைகள், சித்தசுத்தி ஏகாக்கிறதைகளின் பொருட்டு நிஷ்காம்கர்மோபாஸனைகள் வேதாந்தச்சிரவணத்தின் பொருட்டு விவேகவைராக்கியாதிசாதனங்கள் அபரோக்ஷஞானத்தின் பொருட்டுக் குருபதேசம் சமுசயாதிகளின் நிவிர்த்தியின் பொருட்டுச் சிரவணாதிகள் தத்பதார்த்தத்தில் பரோக்ஷப் பிராந்தியையும் துவம்பதார்த்த விஷயத்தில் பரிச்சின்னப் பிராந்தியையும் நிவிர்த்திக்க ஒதப்புரோதப்பூர்வம் மோக்ஷத்

னை உத்தேசித்தும் கிரந்தம் உண்டாகவில்லை. ஜிஞ்ஞாசுவுக்கு விஷயசுகத்தில் இச்சை உண்டாகிறதில்லை. ஆனால் பரமசுகத்திலும் துக்கத்தின் அத்தியந்த நிவிர்த்தியிலும் இச்சை உண்டாகிறது. இத்தப்பரமசுகப்பிராப்தியும் துக்கத்தின் அத்தியந்தநிவிர்த்தியும் ஞானமன்றியில் உண்டாகமாட்டாவெனச் சத்சங்கத்தால் விவேகமுண்டாகிறவனுக்கு கிரந்தத்திற்பிரவிர்த்தி உண்டாகும். இவ்விதமாக மோக்ஷத்தை யிச்சிக்கிற அதிகாரி சித்திக்கிறான்.

விஷயத்தில் ஆகேஷபங்கள் (55—61)

55. ஜீவப்பிர்ம்மஜக்கியாபாவம்:—முன் (33) "ஜீவப்பிர்ம்மஜக்கியம் இக்கிரந்தத்தின் விஷயம்" என்று சொன்னது சரியன்று. ஏனெனில் பிர்ம்மம் அவித்தை அஸ்மிதை ராகம் துவேஷம் அபினிவேசம் ஆகிய இவ்வைவந்துக்கிலேசங்களன்றியிலும் வியாபகமாயும் ஏகமாயும் ஸஜாதீயமுதின் பொருட்டுத்திடமான அபரோக்ஷஞானம் இவைகளைச்செய்யவேண்டியதும் சம்பாதிக்கவேண்டியதும் கர்த்தவ்யமாம். இவைகளைச்செய்தும் சம்பாதித்துமானவன் கிருதகிருத்தியன்.

15. விசாரித்துப்பார்த்தால் எது இல்லையோ அது அவித்தையென்னப்படும். இது மூலா தூலா வென இருவகைத்து. சுத்தசைதன்னியத்தை மூடிக்கொண்டிருப்பது மூலாவித்தை. மூலாவித்தையும் காரியகாரணபேதத்தால் இருவகைத்து. ஆவரண விக்ஷேபசக்திகளுடன் கூடியும் அணுதியாயு மிருப்பது காரணரூபம். ஒன்று வேறொன்றுகத்தோன்றுவது காரியரூபம். இந்தக்காரிய ரூப அவித்தையும் நாலுவிதம். (1) அநித்தியமான சுவர்காதிலோக விஷயத்தில் நித்தியபுத்தி. (2) அசுசியான சரீரம் ஸ்திரீ புத்திரர்களை முத்தமிடுதல் இவைகளைப்பரிசுத்தமாய் நினைப்பது. (3) துக்கரூபதனுதி போகசாதனங்களைச்சுகரூபமாய் நினைப்பது. (4) அனாத்மாவான தேகாதிகளை ஆத்மாவாக நினைப்பது. இந்நான்குரூபக்காரியாவித்தையும் இவ்விடத்தில் கிரகிக்கத்தக்கன.

16. புத்தியும் ஆத்மாவும் ஒன்றுகத்தோன்றுவது **அஸ்மிதை.**

17. அனுகூலபதார்த்த ஞானத்தால் உண்டாகும் புத்தி **விர்த்திராகம்.**

18. பிரதிகூல பதார்த்த ஞானத்தாலுண்டாகும் புத்தி விர்த்தி **துவேஷம்.**

19. மரணபயத்தால் சரீரத்தை ரக்ஷிக்க வேண்டுமென்கிற புத்திவிர்த்தி **அபினிவேசம்.**

20. பிர்ம்மம் ஸஜாதிய விஜாதிய **ஸ்வகதபேதரகிதமாயிருக்கிறது.** சமானஜாதிக்குள் பேதம் **ஸஜாதீயம்.** (உ-ம்) ஒரு பிராமணனுக்கும் மற்றொரு பிராமணனுக்கும் உள்ளபேதம் போலும். அன்னியஜாதியினின்றும் பேதம் விஜாதீயபேதம். (உ-ம்) பிராமணனுக்கும் க்ஷத்திரனுக்குமுள்ள பேதம் போலும்.

தனிய பேதரகிதமாயும் இருக்கிறது. ஏனெனில் பிரம்மத்துக்கு ஸஜாதீயமான வேறு பிரம்மமில்லை. ஜீவனேனெனில் சர்வக்கிலேசசகிதமாயும் பரிச்சின்னமாயும் அநேகமாயும் இருக்கிறன். ஏனெனில் எத்தனை சரீரங்களுளவோ அத்தனை ஜீவர்களுள. எல்லாசரீரங்களிலும் ஏகஜீவன்

தனைக்கும் தன் அவயவங்களுக்குமுள்ள பேதம் ஸ்வகதபேதம். (உம்) பிராமணனுக்கும் அவனுடைய கைகால் முதலியவைகளுக்குமுள்ள பேதம் போலும். எல்லாம் ஏகபிரம்மஸ்வரூபமாயிருப்பதாலும் ஸஜாதியவேறுபிரம்ம மில்லாததினாலும் பிரம்மம் ஸஜாதியபேதரகிதமானது. பிரம்மத்துக்கு வேறுகத்தோன்றும் பிரபஞ்சம்விஜாதியம். பிரபஞ்சம் சத்தியமானால் பிரம்மம் விஜாதியபேதசகிதமாயிருக்கும். ஆனால் பிரபஞ்சம் சத்தியமன்று. ரஜ்ஜுவிற்கல்பிக்கப்பட்ட சர்ப்பம்போல் மித்தையாயிருக்கிறது. எது மித்தையோ அது அதிஷ்டானத்துக்கு வேறு படுகிறதில்லை. ஆகையால் பிரம்மம் விஜாதிய பேதரகிதமாயிருக்கிறது. பிரம்மம் நிரவயவமானதாயிருக்கின்றது. சச்சிதானந்தங்கள் பிரம்மத்தின் தர்மங்களேதவிர அவயவங்களன்று. புஷ்பத்தினுடைய ஸ்பரிசரூபரஸகந்தங்களாகிற குணங்கள்போல் சச்சிதானந்த தர்மங்கள் பிரம்மத்தின் ஸ்வரூபமேதவிர அதற்கு வேறன்று. ஆகையால் பிரம்மம் ஸ்வகதபேதரகிதமாயிருக்கின்றது.

21. தனித்தனியாய்

22. ஜீவப்பிரம்ம ஐக்கியவிஷயமாய் ஆக்ஷேபசமாதானங்கள்.

I ஆக்ஷேபம்:— எல்லாசரீரங்களிலும் ஒரேஆத்மா இருந்தால் பிரம்மத்துக்கும் ஆத்மாவுக்கும் ஏகத்துவஞ் சொல்லக்கூடும். ஆத்மா அனேகமாயிருப்பதால் ஏகத்துவஞ்சொல்லக்கூடாது.

II சமாதானம்:— ஆத்மா அனேகமென்பதற்கு யாதொரு பிரமாணமுமில்லை. இந்திரியங்களால் அஞ்ஞானிக்குத்தோன்றும் பேதம் சரீரத்தைப் பொறுத்ததாக இருக்கிறதேதவிர ஆத்மாவைப்பொறுத்திருக்கவில்லை. ஏனெனில் ஆத்மா சுருதியத்தவிர வேறு பிரமாணங்களால் அறியத்தக்கதில்லை. ஆகையால் சரீரங்களிலுள்ள ஆத்மா வெவ்வேறன்று. அனேககடங்களிலுள்ள ஆகாசம் ஒன்றுயிருப்பது போல் அனேகசரீரங்களிலுள்ள ஆத்மாவு மொன்றே. இதற்கும் பிரம்மத்துக்கும் ஏகத்துவஞ் சொல்லக்கூடும்.

III ஆக்ஷேபம்:— ஆத்மா அனேகமென்பதில் பிரமாணமில்லையென்று சொன்னதுசரியன்று. ஏனெனில் அனேகமென்பதற்கு அனேகபிரமாணங்களுண்டு. (1) பிரத்தியகூப்பிரமாணம்:— நான் நான் என்கிற பேதமிருக்கிறவரையில் ஆத்மா அனேகமென்பது பிரத்தியகூம். ஒவ்வொரு தேகத்திலும் நான் பிராமணன் நான் சூத்திரன் என்கிற பேதம் விளங்குகிறது. எல்லாதேகங்களிலும் ஆத்மா ஒன்றுஎல் நீ நான் என்கிற வியவகார மில்லாமலிருக்கும். ஆகையால் ஆத்மா அனேகமென்பது பிரத்தியகூமாயிருக்கின்றது. (2) அர்த்

தாபத்திப்பிரமாணம்:— ஆத்மா வெவ்வேறுக இல்லாதபக்ஷத்தில் நீ நான்என்கி ற வியவகாரஞ்சித்திக்கமாட்டாது. வியவகாரமிருப்பதால் பேதத்தை யங்கீக ரிக்கவேண்டியது. இது அர்த்தாபத்திப்பிரமாணம். (3) **அனுமானப்பிரமா ணம்:—** கடங்கள் வெவ்வேறுய்க்காணப்படுவதுபோல் சரீரங்கள் வெவ்வேறு ய்க்காணப்படுவதாலும் ஒவ்வொரு சரீரத்திலும் நான் என்கிற பிரதீதியிருப்ப தாலும் ஆத்மா அனேகம். இது அனுமானப்பிரமாணம். (4) **சுருதிபுராணப்பி ரமாணம்:—** சுருதிகளிலும் புராணங்களிலும் தேவகந்தர்வமனுஷியதானவய க்ஷராக்ஷஸ கின்னர் முதலிய பேதங்களேற்பட்டிருக்கின்றன. ஆகையால் ஆ த்மா அனேகமென்று சித்திக்கின்றது. (5) **யுக்திப்பிரமாணம்:—** ஆத்மா ஒன் ருனல் ஒருவன் சுகதுக்கங்கள் எல்லாருக்கும் உண்டாகவேண்டும். ஒருவ ன் ஞானியானல் எல்லாரும் ஞானியாக வேண்டும். அப்போது விதிநிஷேதசாஸ் திரங்கள் வியர்த்தமாய்விடும். ஆகையால் ஆத்மா அனேகமென்றே சொல்ல வேண்டியது.

IV **சமாதானம்:—** (1) நான் நான் என்கிற பேதம் தோன்றுவதா ல் ஆத்மா அனேகமென்று சொன்னது சரியன்று. ஏனெனில் நான் சிசு நான் கௌமாரன் நான் யுவா நான் விர்த்தன் என்று சொல்லுமிடத்தில் சிசு முதலிய அவஸ்தாபேதத்தால் நான் என்கிறபாலும் வேறுபட்டாலும் ஆத்மா ஒன்றுகவே இருக்கிறது. கௌமாரவஸ்தையில் நான் சிசுவாயிருக்கிறேன் என்று தோன் றுகிறதில்லை. இரண்டு அவஸ்தைகளிலும் உள்ள நான் என்கிற பதத்தின் அர்த்தமாகிய ஆத்மா ஒன்றுகவேயிருக்கிறது. மேலும்ஆத்மா. பேதப்பு ம்பகூத்தில் பாலியாவஸ்தை முதல் விர்த்தாவஸ்தை வரையில் செய்யு ம் காரியங்கள் ஞாபகத்துக்கு வரக்கூடாது. ஆகையால் பிரத்தியகஷ ப்பிரமாணஞ் சித்திக்கவில்லை. (2) ஒரேசரீரத்தில் அவயவபேதத்தால் தலை கை கால் முதலிய வியவகாரங்கள் சித்திக்கின்றன. இந்த வியவகாரசித் தியின், பொருட்டுச்சரீரம எப்படி வெவ்வேறுக இருக்கவேண்டியதில்லை யோ அப்படி நீ நான் என்கிற வியவகாரசித்தியின் பொருட்டும் சரீரங்களிலு ள்ள ஆத்மா வெவ்வேறுக இருக்கவேண்டியதில்லை. ஆகையால் அர்த்தாபத்தி ப்பிரமாணஞ்சித்திக்கிறதில்லை. (3) ஒவ்வொருசரீரமும் ரூபத்தில் பேதப்படு வதாலும் நான் என்கிற பாவம் வேறு படுவதாலும் அனுமானப்பிரமாணம் சித் திறதென்று சொன்னதுசரியன்று. ஏனெனில் ஸ்தூலசூக்மகாரணதேகங்களு ம் ஜாக்கிரஸ்வப்ன தேகங்களும் பேதப்பட்டாலும் நான் என்கிற பதத்துக்கு அர்த்தமாகிய ஆத்மாபேதப்படுகிறதில்லை. (4) எல்லாசரீரங்களிலும் உள்ள சைதன்னியம் ஒன்றுகவேயிருப்பதால் சுருதிபுராணங்களிற் சொல்லியபேதம் ஆத்மாவைப்பொறுத்ததன்று. ஆனல் ஆத்மாவுக்கு உபாதியாகிய தேகத்தைப் பொறுத்ததாயிருக்கிறது. (5) சுகதுக்காதிகள் பிராரப்தத்தை யனுசரித்திருக்கின் றன. ஒரேசரீரத்தில் கர்ம்மபேதத்தால் சுகாதிகள் விசித்திரமாய்க்காணப்படுகி ன்றன. புண்ணியபாபங்களினுலும் சிதாபாஸசகித அந்தக்காரணரூபபோத்தா பேதத்தினுலும் சுகதுக்கங்கள் பேதப்படுகின்றன. ஆத்மா எக்காலத்திலும் எல்லாவற்றையும் அறிந்தாலும் அந்தந்தபுத்தியை யனுசரித்தன்றோ ஆத்மா அ றிகிறது. தேகபேதத்தால் புத்தியும் பேதப்படுகிறது. ஆகையால் ஞாதாவும் பேதப்படுகிறது. புத்திவிர்த்திசம்பந்தப்படும் வஸ்துத்தான் விளங்குகிறது. வேறென்றும் விளங்குகிறதில்லை. ஆகையால் எல்லாருக்கும் சர்வஞ்ஞதை சித்

இருப்பதாய்ச் சொல்லும்பக்ஷத்தில் ஒரு சரீரத்திலிருக்கிற சுகதுக்கங்கள் எல்லாசரீரத்திலும் உண்டாகவேண்டும்.

சாக்ஷி பிர்ம்ம ஐக்கியா பாவம் (56—61)

56. "சுகம்முதலியவை அந்தக்கரணதர்மங்கள். இந்த அந்தக்கரணம் அனேகம். ஆகையால் ஒருவனுக்குச்சுகதுக்கங்கள் உண்டாகிறதினால் எல்லாருக்கும் அவை உண்டாகிறதில்லை. சாக்ஷிசுகதுக்காகிதமாயும் ஏகமாயும் சர்வக்கிலேசாகிதமாயும் இருக்கிறது. அதற்கும் பிர்ம்மத்துக்கும் ஏகத்துவஞ் சொல்லக்கூடும்." இப்படி வேதாந்திசொல்வது சரியன்று. ஏனெனில் கர்த்தா போக்தாவாயிருக்கிற ஜீவனுக்கு வேறுகச் சாக்ஷி இருக்கிறனென்பது மலடிமகனிருக்கிறனென்பதை ஒக்கும்.

57. சாக்ஷியை அங்கீகாரம் பண்ணும் பக்ஷத்திலும் அதை ஒன்றெனச்சொல்லக்கூடாது. அநேகமென்றே சொல்லவேண்டும.

58. ஏனெனில் வேதாந்த சித்தாந்தம் என்னவெனில் அந்தக்கரணமும் சுகதுக்கமுதலிய அந்தக்கரணதர்மங்களும இந்திரியங்களுக்கும் அந்தக்கரணத்துக்கும் விஷயமாகஇல்லை, ஆனல் சாக்ஷிக்கு விஷயமாயிருக்கின்றன. ஏனெனில் இந்திரியங்கள் பஞ்சீகிருத பூதங்களை(306-308) விஷயமாக்குகின்றன. இதிலும் அடியில்கண்டபேதம் இருக்கிறது:— நேத்திரேந்திரியம் ரூபத்தோடுகூடிய வஸ்துவின் ரூபத்தையும் ரூபத்துக்காசிரயமான வஸ்துவையும் இரண்டையும் விஷயமாக்குகிறது. நீலபீதாதிவர்ணங்களுடன் கூடிய கடத்தின் ரூபத்தையும் ரூபத்துக்காசிரயமானகடத்தையும்நேத்திரேந்திரியம் விஷயமாக்குகிறதுபோலும். துவக்கிந்திரியமும் ஸ்பரிசத்தையும் அதன் ஆசிரயத்தையும் இரண்டையும் விஷயமாக்குகிறது. ரசனை ஆக்கிராணம் சிரவணம் ஆகிய மூன்றுஇந்திரியங்களும் ரஸகந்தசப்தங்களைமாத்திரம் விஷயமாக்குகின்றன. அவைகளின் ஆசிரயங்

திக்கிறதில்லை. சப்தத்தைத்தரும் ஆகாசம் எங்கும் வியாபித்திருக்கிறது. மிருதங்கம் முதலியவைகளுடன் ஆகாசம் சம்பந்தப்பட்டிருந்தாலும் கையாலடிக்கும்போது தான் அதில் சப்தம் உண்டாகிறது. மற்றிடங்களிலுண்டாகிறதில்லை. இதுபோல் ஏகமாயும் பரிபூர்ணமாயுமிருக்கிற ஆத்மாவுக்கும், எப்போது புத்திவிர்த்திக்கும் பதார்த்தத்துக்கும் சம்பந்தமுண்டாகிறதோ அப்போது ஞானோதயமுண்டாகிறது. மற்ற இடங்களில் உண்டாகிறதில்லை. ஆகையால் புத்திவிர்த்தி அனேகமாயிருப்பதால் எல்லாருக்கும் சர்வஞ்ஞதை சித்திக்கிறதில்லை. அல்பஞ்ஞர்களை யுத்தேசித்துப் பிரவிர்த்தி நிவிர்த்திகளுக்குக்காரணமாவதால் விதி நிஷேத் சாஸ்திரங்களும் வியர்த்தமன்று. ஆத்மஸ்வரூபத்தையறிகிறவன் தான் முக்தனாகிறன். மேற்சொன்ன ஆக்ஷேபங்கள் சித்திக்காததினால் ஜீவ பிர்ம்மஐக்கியம் சித்திக்கிறது.

க்ஷ விஷயமாக்குகிறதில்லை.[23] ஆகையால் இம்மூன்று இந்திரியங்களாலும் அந்தக்கரண ஞானமுண்டாகிறதில்லை. அப்படியே நேத்திரத்தினாலும் துவக்கினாலும் அந்தக்கரண ஞானமுண்டாகிறதில்லை. ஏனெனில் பஞ்சீகிருதபூதமாவது, பஞ்சீகிருதபூதத்தின் காரியமான ரூபஸ்பரிசங்களோடு கூடிய வஸ்துவாவது நேத்திரத்துக்கும் துவக்குக்கும் விஷயமாகிறது. அந்தக்கரணம அபஞ்சீகிருதபூத காரியமாயிருப்பதால் (300) நேத்திரத்துக்கும் துவக்குக்கும் விஷயமாகிறதில்லை இதேகாரணத்தினால் அபஞ்சீகிருதபூத காரியமான நேத்திரேந்திரியமும் நேத்திரத்துக்கு விஷயமாகிறதில்லை. பாஷியவஸ்துக்கள் இந்திரியங்களுக்கு விஷயமாகின்றன. அந்தக்கரணம் இந்திரியங்களையபேக்ஷித்து ஆந்தரமாக இருக்கிறது. ஆனையாலும் அந்தக்கரணம் இந்திரியத்துக்கு விஷயமாகிறதில்லை.

59. மேலும அந்தக்கரணம் தன்விர்த்திக்கும் விஷயமாகிறதில்லை. ஏனெனில் அந்தக்கரணம் விர்த்திக்கு ஆசிரயமாயிருக்கிறது. ஆகையால் அந்தக்கரணம் தன் விர்த்திக்கு விஷயமாகயாட்டாது. அக்கினியானது தாஹகத்துக்கு ஆசிரயமாக இருக்கிறதேதவிர அதற்கு விஷயமாகிறதில்லை. ஆனல் அக்கினிக்கு வேறான காஷ்டாதி வஸ்துக்களை இந்தத் தாஹகம் விஷயமாக்குகிறது. இதுபோல அந்தக்கரணத்துக்கு அன்னியமான வஸ்துக்கள் அந்தக்கரண ஜன்ய விர்த்திக்கு விஷயமாகின்றன. அந்தக்கரணம் தன் விர்த்திக்கே விஷயமாகிறதில்லை.[24]

60. இப்படியே அந்தக்கரணதர்மங்களும் அந்தக்கரணவிர்த்திக்கு விஷயமாகிறதில்லை. ஏனெனில் அந்தக்கரண விர்த்தி அந்தக்கரணத்தை விஷயமாக்கும் பக்ஷத்தில் அதன் தர்மங்களாகிற சுகாதிகளையும் விஷயமாக்கக்கூடும். அந்தக்கரணத்தை விஷயமாக்குகிற விர்த்தி அந்த

---

23. ஏனெனில் ஆசிரயங்கள் நேத்திரேந்திரியத்துக்காவது ஸ்பரிசேந்திரியத்துக்காவது விஷயமாகின்றன. (உ-ம்) கற்கண்டை நாச்சில்லைவைத்தால் கற்கண்டின் குணமாகிய தித்திப்பை ரஸநேந்திரியம் கிரகிக்கிறது. அந்தத்தித்திப்பு குணத்துக்கு ஆசிரயமான கற்கண்டு ஸ்பரிசேந்திரியத்துக்கு விஷயமாகிறது. வீடு இருளால் மறைபடுதலால் அது இருட்டுக்கு விஷயமாகிறதென்னக்காண்க:—

24. வீட்டின் ஒருபாகம் இருட்டுக்கு ஆசிரயம் அதாவது இருப்பிடமாயும் விஷயமாயுமிருக்கிறது. சேதனம் அஞ்ஞானத்துக்கு ஆசிரயமாயும் விஷயமாயுமிருக்கிறது (290). இதுபோல் அந்தக்கரணம் விர்த்திக்கு ஆசிரயமாயும் விஷயமாயும்ஏன் இருக்கக்கூடாது? இதற்குச்சமாதானம்:—வீட்டினோர்பாகம் இருட்டு இவைபோல் எப்போது ஆசிரயமும் ஆசிருதனும் பேதப்படுகின்றனவோ அப்போது ஒரேவஸ்து ஆசிரயமாயும் விஷயமாகவும் இருக்கும். எப்போது ஒ

க்கரணத்துக்கு ஸர்முகமாகிறதில்லை, ஆகலால் அந்தக்கரண தர்மங்களும் அந்தக்கரண வித்திக்கு விஷயமாகிறதில்லை. மேலும் அடியில் வருமாறு ஒரு நியமமுண்டு:— வித்தியின் ஆசிரயத்துக்குக்கொஞ்சம் தூரத்திலிருக்கிற வஸ்துவே வித்திக்கு விஷயமாயிருக்கிறதே தவிர அதிசமீபத்திலிருக்கிற வஸ்து வித்திக்கு விஷயமாகிறதில்லை. நேத்திரவித்திக்கு ஆசிரயமான நேத்திரத்துக்கு அதிசமீபத்திலிருக்கிற அஞ்சனம் நேத்திர வித்திக்கு விஷயமாகாததுபோல் அந்தக்கரணவித்திக்கு அதிசமீபத்திலுள்ளசுகம் முதலிய தர்மங்கள் அந்தக்கரண வித்திக்கு விஷயமாகிறதில்லை. இவ்விதமாக அந்தக்கரணமும் அதின் தர்மங்களும் இந்திரியங்களுக்கும் அந்தக்கரணத்துக்கும் விஷயமாகிறதில்லை, ஆனால் சாக்ஷிக்குத்தான் விஷயமாகின்றன. —

61. இந்தச்சாக்ஷி ஒன்றேனச்சொல்லும் பக்ஷத்தில் ஒரு அந்தக்கரணத்தின் சுகதுக்கங்கள் சாக்ஷியால் விளங்குவதுபோல் எல்லாருக்கும் சுகதுக்கங்கள் விளங்கவேண்டும். அப்படி விளங்காமையால் சாக்ஷீயனேகமெனச்சொல்லவேண்டும். அனேக சாக்ஷிகளை யங்கீகரித்தால் தோஷமில்லை, எனெனில் எந்தச்சாக்ஷிக்கு எந்த அந்தக்கரணம் உபாதியாயிருக்கிறதோ அந்தச்சாக்ஷியால் அந்தவுபாதிதர்மங்கள் விளங்குகின்றனவே தவிர எல்லாருக்கும் சுகதுக்கங்கள் விளங்குகிறதிலலை. இவ்விதமாகச் சாக்ஷியனேகமாக இருக்கிறது. அனேகமான சாக்ஷிக்கும் ஏகமான பிரம்மத்துக்கும் ஏகத்துவஞ் சொல்லக்கூடாது.

விஷயத்தில் சமாதானங்கள் (62—66).

62. சாக்ஷிக்தோஷம்— "ஜீவன் ராகாதிக்கிலேச சகிதமாயிருக்கிறான், பிரம்மம் கிலேசரகிதமாயிருக்கிறது. ஆகையால் ஜீவப்பிரம்ம ஐக்கியம் கிரந்தத்தின் விஷயமாகச் சொன்னது சரியன்று," என்று முன் (55) சொன்னது சத்தியமாயிருந்தாலும் ராகத்துவேஷ ரகிதமான சாக்ஷிக்கும் பிரம்மத்துக்கும் ஏகத்துவஞ் சொல்லக்கூடும். முன் (56) கர்த்தாபோக்தாவுக்கு வேறான சாக்ஷியிருக்கிறானென்பது மலடிமகனுக்குச்சமானமென்று சொன்னது சரியன்று. "எனெனில் கர்த்தாபோக்தாவாகிய சமுசாரியின் விசேஷ பாகத்துக்குச் சாக்ஷியென்று பெயர். சாக்ஷியை நிஷேதிக்கும் பக்ஷத்தில் சமுசாரியின் விசேஷபாகத்தை நிஷேதிக்கும்படி நேரிடுவதால் கர்த்தா போக்தாவாகிய சமுசாரியையும் நிஷேதிக்கு

ரூப்பும் அதின் தாரதம்சக்தியும் போல் ஆசிரயமும் ஆசிருதமும் பேதப்படவில்லையோ அப்போலவே ஆசிரயமும் விஷயமும் ஒன்றுகமாட்டா. அந்தக்கரணமும் வித்தியும் பேதப்படுதலால் அந்தக்கரணம் வித்திக்கு ஆசிரயமாயிருக்கிற

ம்படி நேரிடும். ஒரே சைதன்னியத்தில் சாக்ஷீபர்வதத்துக்கு அந்தக் கரணம் உபாதியாயும், கர்த்ரு போக்த்ருபாவங்களுக்கு விசேஷணமாயுமிருக்கிறது. விசேஷணத்துடன் கூடியது விசிஷ்ட மென்றும் உபாதியுடன் கூடியது உபஹித மென்றுஞ் சொல்லப்படும். எந்த வஸ்து எந்த இடத்தில் தானிருந்துக்கொண்டு அந்த இடத்திலிருக்கிற வேறொரு வஸ்துவை விளங்கும்படிச் செய்து தான் சம்பந்தப்படாமலிருக்கிறதோ அது உபாதியென்று சொல்லப்படும். நியாயமதத்தில் கர்ணகோளகத்திலிருக்கிற ஆகாசத்துக்குச் சுரோத்திரமென்று பெயர். அக்கர்ணகோளகம் சுரோத்திரத்துக்கு உபாதியாக இருக்கிறது. ஏனெனில் அக்கர்ண கோளகம் எந்த இடத்திலிருக்கிறதோ அந்த இடத்திலிருக்கிற ஆகாசத்தைச் சுரோத்திரமாக அறியும்படிச்செய்து தான் சம்பந்தப்படாமல் இருக்கிறது. ஆகையால் கர்ணகோளகம் சுரோத்திரத்துக்கு உபாதியாக இருக்கிறது. இப்படியே அந்தக்கரணமும் எந்த விடத்திலிருக்கிறதோ அந்த இடத்திலிருக்கிற சைதன்னியத்தைச் சாக்ஷியென்று அறியும்படிச்செய்து தான் சம்பந்தப்படாமலிருக்கிறது. ஆகையால் அந்தக்கரணம் சாக்ஷிக்கு உபாதியாக இருக்கிறது. இதனல் அந்தக்கரணத்திலிருக்கிற சேதனமாத்திரத்துக்குச் சாக்ஷியென்று பெயர் ஏற்படுகிறது.

63. ஜீவஸ்வரூபம்:—தன் சகிதமாக வஸ்துவை அறியும்படிச்செய்கிறது விசேஷணமென்று சொல்லப்படுகிறது குண்டலத்தையுடைய புருஷன் வந்தானென்று சொல்லுமிடத்தில் புருஷனுக்குக்குண்டலம் விசேஷணமாக இருக்கிறது. ஏனெனில் தன் சகிதமாகப் புருஷன் வந்தானென்று அறியும்படிக்குண்டலஞ் செய்கிறது. நீலவர்ணமுள்ள கடத்தை நான் பார்த்தேனென்னுமிடத்திலும் நீலவர்ணம் கடத்துக்கு விசேஷணமாக இருக்கிறது. இப்படியே அந்தக்கரணமும் கர்த்தா போக்தாவாயிருக்கிற ஜீவனசைதன்னியத்துக்கு விசேஷணமாக இருக்கிறது. ஏனெனில் அந்தக்கரண சகிதசைதன்னியத்தைக் கர்த்தாபோக்தாவாக அறியும்படி அந்தக்கரணஞ் செய்கிறது. ஆகையால் சமூசாரிக்கு அந்தக்கரணம் விசேஷணம். இதனல் அந்தக்கரணத்திலிருக்கிற சேதனமும் அந்தக்கரணமும் சேர்ந்து சமூசாரி என்று ஏற்படுகிறது. இந்த விஷயம் இனி (226—228) விவரிக்கப்படும்.

64. ஐக்கிய நிரூபணம்:—ராகத்துவேஷாதி கிலேசங்கள் சமூசாரியிடத்திலிருக்கின்றன, சாக்ஷியிடத்தில் இல்லை. சமூசாரி இடத்திலும் விசேஷணபாகமான அந்தக்கரணத்தில் அவை இருக்கின்றன, விசேஷியபாகமான சேதனத்திலில்லை. சமூசாரியின் விசேஷியபாகமான சேதனத்துக்கும் சாக்ஷிக்கும் பேதமில்லை. ஏனெனில் ஒரே சைதன்னியம் அந்தக்கரண சகிதமானல் சமூசாரி என்றும் அந்தக்கரண ரகிதமானல் சாக்ஷி என்

றும் சொல்லப்படுகிறது. ஆகையால் சாக்ஷி சமூசாரிகளின் விசேஷிய பாகத்தில் பேதமில்லை. விசேஷிய பாகத்தில் கிலேசத்தை யங்கீகரிக்கும் பக்ஷத்தில் சாக்ஷியிலும் கிலேசத்தை யங்கீகரிக்கவேண்டும். ஆனல் சாக்ஷி யாதொரு கிலேசமுமில்லாதது என்பது வேதாந்த சித்தாந்தம். ஆகையால் சமூசாரியின் விசேஷிய பாகத்தில் கிலேசமில்லை, ஆனல் விசேஷண மான அந்தக்கரணத்தில் மட்டில் கிலேசமிருக்கிறது. இந்த அபிப்பிராயத்தால் தான் ராகத்துவேஷங்கள் புத்தி[25] தர்மங்களென்றும் ஜீவதர்மங்களல்லவென்றும், சொல்லப்படுகின்றன. இவ்விதமாக அந்தக்கரணவிசிஷ்ட ஜீவனுக்கும் பிரம்மத்துக்கும் ஏகத்துவஞ்சொல்லக் கூடாவிட்டாலும் அந்தக்கரண உபஹித சாக்ஷிக்கும் பிரம்மத்துக்கும் ஏகத்துவஞ் சொல்லக்கூடும்.

65. முன் (61) "சாக்ஷீ அநேகம் பிரம்மம் ஏகம் ஆகையால் நாநா சாக்ஷிக்கும் ஏக பிரம்மத்துக்கும் ஏகத்துவஞ் சொல்லக்கூடாது. வியாபகமான ஏக பிரம்மத்துக்கும் சாக்ஷிக்கும பேதம் இல்லையென்று சொல்லும் பக்ஷத்தில் சாக்ஷியும் எல்லாச் சரீரங்களிலும் விபுவாபகமாயும் ஏகமாயும் ஆய்விடும். இதனல் சர்வசரீரங்களுக்கும் சுகதுக்கங்கள் ஓரேகாலத்தில் ஓரேவிதமாய் விளங்கவேண்டும்," என்று செய்த ஆக்ஷேபம் சரியன்று. ஏனெனில் சகுவரசாக்ஷீ ஒன்றுக இருக்கிறது. ஜீவசாக்ஷீ அனேகமாயும் பரிச்சின்னமாயு மிருக்கிறது, ஆயினும் வியாபகப்பிரம்மத்துக்கு வேறுக இல்லை. கடாகாசம் நானுவாயும் பரிச்சின்னமாயும் இருந்தாலும் மகாகாசத்துக்கு வேறுகாமலும் மகாகாச ரூபமாகவே யிருக்கிறதுபோல நானுவாயும் பரிச்சின்னமாயுமிருக்கிற சாக்ஷியும் பிரம்மத்துக்கு வேறுகாமல் பிரம்ம ரூபமாகவேயிருக்கிறது.

66. சுகதுக்கங்கள் அந்தகரண விர்த்திக்கு விஷயங்கள் ஆகிறதில்லை என்று முன் (60) சொன்னது சரியன்று. ஏனெனில் சுகதுக்கங்கள் சாக்ஷியால் விளங்குவனவாயிருந்தாலும், அந்தச்சாக்ஷீ நானுவாக இருந்தாலும், எப்போது அந்தக்கரணத்தின் பரிணமம் சுகதுக்கரூபமாக ஆகிறதோ அப்போது அந்தக்கரணத்தின் ஞானரூபவிர்த்தி சுகதுக்கங்களை விஷயமாக்குகிறது. அந்த விர்த்தியி லாரூடமான சாக்ஷீ அவைகளைப்பிரகாசிப்பிக்கிறது. இந்த ரீதியாகக் கிரந்தக்காரரால் சுகதுக்கங்கள் சாக்ஷிக்கு விஷயங்கள் ஆகின்றனவென்றும் விர்த்தியன்றியில் கேவல சாக்ஷிக்கு விஷயங்களாகிறதில்லை என்றும் சொல்லப்படுகிறது. இதில் ஒரு இரகசியம் இருக்கிறது. ஆகாசத்தில் கடாகாசமென்கிற பெயரும் ஜலத்

---

25. 4வது தரங்கத்தின் (57) வதுகுறிப்பைப்பார்க்க.

தைக் கொண்டுவருகிற காரியமும் கடரூப உபாதி திர்ஷ்டியால் தோன்று கின்றன. அந்தத் திர்ஷ்டி யன்றியில் அவைகள் பிரதீதியாகிறதில்லை. ஆனல் ஆகாசமாத்திரமே பிரதீதியாகிறது. ஆகையால் கடாகாசம் மகா

26

காச ரூபமாகவே யிருக்கிறது. இதுபோல் சேதனத்தில் சாக்ஷீயென்கி ற பெயரும் தர்மசகித அந்தக்காரணத்தின் பிரகாசரூப காரியமும் அந்தக் காரணரூப உபாதிதிர்ஷ்டியால் விளங்குகின்றன. அந்தத் திருஷ்டிய ன்றியில் அவைகள் பிரதீதியாகிறதில்லை. ஆனல் சைதன்னியமாத்தி ரமான பிம்பமே விளங்குகிறது. ஆகையால் சாக்ஷீ பிம்ப ரூபமாக இருக்கிறது. இந்த அபிப்பிராயத்தால் சாக்ஷீ ஏகமென்று சொல்லப்ப டுகிறது. ஏனெனில் உபாதிதிர்ஷ்டியன்றியில் சாக்ஷியில் அநேகத்துவ மும் பரிச்சின்னத்துவமும்பிரதீதியாகிறதில்லை. இந்தச் சாக்ஷீஜீவப தத்தின் லக்ஷியார்த்தம். இதுஇனி விவரிக்கப்படும். இவ்விதமாக ஜீவ ப்பிரம்ம ஐக்கியம் கிரந்தத்துக்குவிஷயமாக ச்சொன்னது சரிதான்.

பிரயோஜனத்தில் ஆக்ஷேபங்கள். (67—83)

ஞானத்தால் பந்தம் நிவிர்த்தியாகமாட்டாது. (67—73)

67. பந்தம் சத்தியம்:— அகங்காரம் முதலிய அனைத்தும் வஸ்துக் கள் பந்தமென்று சொல்லப்படுகின்றன. அந்தப்பந்தம் அத்தியாஸரூப மாக இருக்கும்பக்ஷத்தில ஞானத்தால் நிவிர்த்தியாகும். அத்தியாஸரூப மாக இல்லாதபக்ஷத்தில் ஞானத்தினல் நிவிர்த்தியாகமாட்டாது. ஏனெனில் ஞானத்தின் சுபாவமென்னவெனில் எந்த வஸ்து அறியப்படுகிற தோ அதனிடத்திலிருக்கிற அத்தியாசத்தையும் அஞ்ஞானத்தையும் அவ் வஸ்துவின் ஞானம் நிவிர்த்தியாக்குகிறது. ரஜ்ஜு-வின் ஞானம் ரஜ்ஜு-வி லுள்ள சர்ப்பாத்தியாசத்தையும் ரஜ்ஜு-வின் அஞ்ஞானத்தையும் நிவிர் த்திசெய்கிறதுபோலும். பிராந்திஞானத்துக்கு விஷயமான மித்தியாவஸ் துவும் பிராந்திஞானமும் அத்தியாசமென்னப்படும். எதினிடத்தில் வந்த

27

---

26. வெள்ளைக்காகிதத்தில் கறுப்புக்கோடுகளால் அக்ஷரங்கள் விளங் குகின்றன. அக்ஷரங்களுக்கும் காகிதத்துக்கும் சொல்மாத்திரத்தில் பே தம். எப்படியையாகிற உபாதிதிர்ஷ்டியன்றியில் அக்ஷரங்கள் ஏற்படுகிறதில்லையோ காகிதமட்டும் இருக்குமோ அதுபோல் அந்தக்காரணமாகிற உபாதிதிர் ஷ்டியன்றியில் சாக்ஷீயென்கிற பெயர் ஏற்படுகிறதில்லை. சுத்தசைதன்யமான இருக்கிறது.

27. உண்மையில் ஒருவஸ்து இல்லாமலிருக்க வேறொரு வஸ்துவில் ஆ கத் தோன்றுதலும் அவ்வஸ்துவும் அத்தியாஸமென்னப்படும். (உ-ம்) ரஜ்ஜு-வில் ச ர்ப்பம் உண்மையில் இல்லை. ஆனல் பிராதிபாஸிகமாய்த் தோன்றுகிறது. இ

ஏ

வஸ்து மித்தையாகவில்லையோ சத்தியமாகவிருக்கிறதோ அதற்கு ஞானத்தினல் நிவிர்த்தியில்லை. இதுபோல ஆத்மாவினிடத்தில் அகங்காராதி பந்தங்கள் பொய்யாயிருக்கும்பக்ஷத்தில் ஞானத்தால் அவை நிவிர்த்தியாகும். ஆத்மாவினிடத்தில் பந்தம் மித்தையென்று சொல்லுவதற்கு சாமக்கிரீகள் இல்லாதினலும் பந்தம் பிரதீதியாகிறதினலும் பந்தம் சத்தியமாகவேயிருக்கிறது. அந்தச்சத்தியபந்தம் ஞானத்தால் நிவிர்த்தியாகும் என்பது வீணுரை.

68. அத்தியாசஸாமக்கிரிகள்[28]:—(1) சத்தியவஸ்துவின் ஞானத்தாலுண்டாகிற சம்ஸ்காரம் (2) பிரமாதாவின்[29] தோஷம் (3) பிரமாணத்தின்[30] தோஷம் (4) பிரமேயத்தின்[31] தோஷம் (5)அதிஷ்டானத்தின் விசேஷஅஞ்ஞானம் சாமானிய ஞானம் இவைகள்தாம் அத்தியாசஸாமக்கிரிகள். இவைகளனறியில் அத்தியாசம் உண்டாகிறதில்லை. கிளிஞ்சிலில் வெள்ளியும் ரஜ்ஜுவில் சர்ப்பமும் அத்தியாசங்களாயிருப்பதுபோலும். எவன் உண்மையான வெள்ளியையும் சர்ப்பத்தையும் பார்த்ததில்லையோ அவனுக்கு அவைகளின் அத்தியாசமுண்டாகிறதில்லை; பார்த்திருக்கிறவனுக்குத்தான் அத்தியாஸமுண்டாகிறது. ஆகையால் சத்தியவஸ்துவின் ஞானஸம்ஸ்காரம் அதத்தியாஸத்துக்குஹேதுவாயிருக்கிறது. கிளிஞ்சிலில் சர்ப்பாத்தியாசமும் ரஜ்ஜுவில் வெள்ளியின் அத்தியாசமுமுண்டாகாததினல் பிரமேயத்தின்[32] சாதிருசிய

ச்சர்ப்பமும் சர்ப்பஞானமும அத்தியாஸமென்னப்படும். இவ்வத்தியாஸம் ஞாணத்தியாஸம் அர்த்தாத்தியாஸம் என இருவகைத்து. பிராந்திஞ்ஞானத்திற்கு விஷயமானமித்தியாசர்ப்பம் அர்த்தாத்தியாஸமாம். சர்ப்பஞ்ஞானம் ஞாணத்தியாசம். பரோக்ஷ அபரோக்ஷ பேதங்களால் இது இருவகை. ஞாணத்தியாஸத்துக்கு மித்தியாஞானமென்றும் பிராந்திஞானமென்றும் பெயர். அர்த்தாத்தியாஸம் ஸ்வரூபஅத்தியாஸஸம்சர்க்கஅத்தியாஸபேதங்களால் இருவகை. அஞ்ஞாணிகளுக்குச் சேதனத்தினிடத்தில் ஸ்வரூப அத்தியாஸமாம். ஆனந்தாதிதர்மங்களுடன் கூடிபசேதனத்துக்கு அஞ்ஞாணிகளில் ஸம்ஸர்க்காத்தியாசமாம்.

28. சாமக்கிரி சப்தத்தால் காரணங்களின் சமுதாயமெனக் கொள்க. சமையலுக்கு அடுப்புவிரகு ஜலமுதலியவை சாமக்கிரிகளாயிருப்பதுபோலும்.

29. பிரமாதா என்றால் ஜீவன்.

30. பிரமாணம்—இந்திரியம்.

31. பிரமேயம்=விஷயம்.

32. சர்ப்பம் போல் ரஜ்ஜு வளைந்தும்நீண்டுமிருப்பது சாதிரிசிய தோஷம்.

தோஷம் அத்தியாசத்துக்குஹேதுவாயிருக்கிறது. இவ்விதமாகப்பிரமாதாவின் லோபபயாதி தோஷங்களும் நேத்திரமுதலிய பிரமாணங்களின்மஞ்சட்காமாலைமுதலிய தோஷங்களும் அத்தியாசத்துகுஹேதுவாயிருக்கின்றன. கிளிஞ்சிலில் அத்தியாசமுண்டாகும்போது "இது" என்கிற 33 சாமானியஞானமுண்டாகிறது, "இதுகிளிஞ்சில்" என்கிறவிசேஷ ஞானமுண்டாகிறதில்லை. அத்தியாசமுண்டாகாதகாலத்தில் "கிளிஞ்சிலிருக்கிறது" என்கிறவிசேஷஞானமுண்டாகிறது. சாமானிய ஞானமுண்டாகாத இடத்தில் அத்தியாசமுண்டாகிறதில்லை. ஆகையால் அதிஷ்டானத்தின் விசேஷ அஞ்ஞானமும் சாமானியஞானமும் அத்தியாசத்துக்குஹேதுவாயிருக்கின்றன. இந்த ஐந்து சாமக்கிரிகளில் எதாவதொன்று குறைந்தாலும் அத்தியாசமுண்டாகிறதில்லை. கடத்துக்குக்குலாலன், சக்கரம், தண்டம், மண், சாமக்கிரிகளாக இருக்கின்றன. இவைகளில் எது குறைந்தாலும் கடமுண்டாகாததுபோல் அத்தியாசமும அதன்சாமக்கிரிகளில் எதாவதொன்றுகுறைந்தாலும் உண்டாகிறதில்லை; மேற்கண்ட ஐந்துசாமக்கிரிகளாலுந்தான் உணடாகின்றது.

69. முதல்சாமக்கிரி அபாவத்தால் பந்தம் சத்தியம்:—பந்த அத்தியாசத்தில்ஏதுகாரணமுமில்லை. பந்தம்எப்போதாவது சத்தியமாகவிருந்தால் அதின்ஞானத்தாலுண்டாகும் ஸம்ஸ்காரத்தினால் ஆத்மாவினிடத்தில்பொய்யான பந்தம் பிரதீதியாகும். ஆனல் சித்தாந்தத்தில் ஆத்மாவுக்கு வேறுன சத்தியவஸ்து யாதொன்றுமில்லை. ஆகையால் சத்தியபந்தத்தின் ஞானஜன்யஸம்ஸ்காரமில்லாதபடியால் ஆத்மாவினிடத்தில் பந்தாத்தியாஸஞ் சொல்லக்கூடாது.

70 2வது. 3வது.சாமக்கிரிகளின் அபாவம்:— பிரமாதாவின் தோஷமும் பிரமாணத்தின் தோஷமுமிருக்கவில்லை. எனெனில் பிரமாதாமுதலிய சர்வப்பிரபஞ்சமும் அத்தியாசரூபமாயிருக்கின்றது. இதுவேபந்தம். இதுவேதாந்தசித்தாந்தம். பந்தஅத்தியாசத்துக்குமுன் பிரமாத்ருப்பிரமாணங்களின் சொரூபங்களேற்படாததினால் அவைகளின் தோஷங்களும் ஏற்படுகிறதில்லை. ஆகையால் பந்தாத்தியாசஞ்சொல்லக்கூடாது.

---

33. எது பிராந்தி காலத்தில் தோன்றுகிறதோ எதுவன்றியில் பிராந்தியுண்டாகிறதில்லையோ அதற்குச்சாமானிய அம்சமென்றும் ஆதாரமென்றும் பெயர். 159 பார்க்க.

34. எது பிராந்திகாலத்தில் தோன்றுகிறதில்லையோ எது தோன்றுகிறதினால் பிராந்தி நிவிர்த்தியாகிறதோ அது விசேஷாம்சமென்றும் அதிஷ்டானம் என்றும் சொல்லப்படும்.

35. பிர்ம்மசைதன்னியத்துக்கு வேறுன அஞ்ஞானம் அதின் காரியமாஸ்தூலசூக்ஷமப்பிரபஞ்சம் இவைகளெல்லாம் சேதனத்தில் அத்தியாஸங்களாம்

71. 4வது சாமக்கிரி அபாவம்:—ஆத்மாவுக்கும் பந்தத்துக்கும் சாதி ருசியமுமில்லை. ஆனல் இருட்டும் பிரகாசமும்போல் அவைகள் விபரீத சுபாவமுள்ளவை. ஆத்மா பிரத்தியக்ஷ, அதாவது, ஆந்தரமாயும், பந்தம் பாஹ்ய, அதாவது, பாஹ்யமாயுமிருக்கின்றன. மேலும் ஆத்மாவிஷயீ, அதாவது, பிரகாசிப்பிக்கிறதாயும், பந்தம் விஷயம், அதாவது, பிரகாசிப்பிக்கப் படுகிறதாயும் இருக்கின்றன. பிரத்தியக்ஷிடத்தில் பராக்குக்கும், பராக்கிடத்தில் பிரத்தியக்குக்கும் அத்தியாசமுண்டாகமாட்டாது. புத்திராதிகளுபுத்தேசித்துத் தேகம் பிரத்தியக்காக இருக்கிறது. தேகத்தில் புத்திராதிகளுக்கும் புத்திராதிகளிடத்தில் தேகத்துக்கும் அத்தியாசமுண்டாகிறதில்லை. அப்படியே விஷயத்தில் விஷயீக்கும், விஷயீ இடத்தில் விஷயத்துக்கும் அத்தியாசமுண்டாகிறதில்லை. விஷயமாகிற கடாதிகளிடத்தில் விஷயீயாகிறதீபத்துக்கும், தீபத்தில் கடாதிகளுக்கும் அத்தியாசமுண்டாகாததுபோல் சாதிருசியமில்லாததினல் பிரத்தியக்காயும் விஷயீயாயும் இருக்கிற ஆத்மாவிடத்தில் பராக்காயும் விஷயமாயும் இருக்கிறபந்தத்திற்கு அத்தியாசமுண்டாகமாட்டாது. பிரத்தியக்குக்கும் பராக்குக்கும் விரோதம். அப்படியே விஷயத்துக்கும் விஷயீக்கும் விரோதம். இவைகளுக்குள் சாதிருசியமில்லாததினல் ஆத்மாவிடத்தில் பந்தஅத்தியாசம் சொல்லக்கூடாது.

72. 5வது சாமக்கிரி அபாவம்(72-73):—அதிஷ்டானத்தின் விசேஷ அஞ்ஞானமுஞ்சொல்லக்கூடாது. ஏனெனில் பந்தத்துக்கு அதிஷ்டானமான பிம்மம் சுயம்பிரகாசஞானரூபமாயிருக்கிறது. இப்படிப்பட்டபிம்மத்தில் சூரியனிடத்தில் இருட்டுப்போல் அஞ்ஞானம் இருக்கமாட்டாது பிரகாசமான சூரியனுக்கும் இருட்டுக்கும் விரோதமிருக்கிறதுபோல் சேதனப்பிரகாசமான பிம்மத்துக்கும் தமோரூபமான அஞ்ஞானத்துக்கும் பரஸ்பரம் விரோதம். ஆகையால் இவ்விரண்டுஞ்சேரமாட்டா.

73. மேலும் அதிஷ்டானத்தின் அஞ்ஞானத்தையங்கீகரித்தாலும் பந்தாத்தியாசமுண்டாகமாட்டாது. ஏனெனில் சுத்தமாயறியாதஇடத்திலும் செம்மையாயறிந்த இடத்திலும் அத்தியாசம் உண்டாகமாட்டாது. ஆனல் விசேஷமாயறியாத இடத்திலும் சாமானியமாயறிந்த இடத்திலும் அத்தியாசமுண்டாகும். பிம்மம் சாமானியவிசேஷபாவங்களன்றியிலும் நிர்விசேஷமாயும் இருக்கிறதாகச் சித்தாந்தம். ஆகையால் பிம்மம் விசே

ருக்கின்றன. அந்தக்காரண ரூபப்பிரமாதாவும் இந்திரியரூபப்பிரமாணமும் வ
களில் அடங்கியிருப்பதால் இவைகளும் அத்தியவஸ்தங்களே. அத்தியாவஸ்துக்கு முன் இவைகள்சித்திக்கிறதில்லை இது உபநிஷத்துச்சித்தாந்தம்.

ஷமாயறியப்படவில்லையென்றும் சாமானியமாயறியப்பட்டிருக்கிறதென்றும்சொல்வது சரியன்று. மேலும் அத்தியாசத்தை அவசியம் அங்கீகரிக்கவேண்டுமென்கிற ஆசையால் பிர்ம்மத்தினிடத்தில் சாமானியவிசேஷபாவங்களையங்கீகரித்தால் சித்தாந்தத்தைத்தள்ளிவிடும்படி நேரிடும். இவ்விதமாக நிர்விசேஷமான பிரகாசரூபப்பிர்ம்மத்தினிடத்தில் விசேஷ அஞ்ஞானமும் சாமானியஞானமுமில்லாதபடியால் அதனிடத்தில் அத்தியாசம் உண்டாகாது. ஆகையால் பிர்ம்மத்தினிடத்தில் பந்தம் அத்தியாசரூபமெனக்கூடாது. ஆனல் பந்தம் சத்தியமே. இந்த ஸத்தியபந்தம் ஞானத்தால் நிவிர்த்தியாகமாட்டாது. ஆகையால் இந்தசித்தாந்தத்துக்கு ஞானமூலமாக மோக்ஷரூபப்பிரயோஜனம் சொன்னது சரியன்று. ஞானத்தினல் மோக்ஷம் நிடைக்குமென்று சொன்ன சித்தாந்தம் சரியன்று.

74 கர்மத்தின் ஆவசியகம்:— முன் (73) ஞானத்தால்மோக்ஷம் சித்திக்கமாட்டாதெனச் சொல்லப்பட்டது. ஏகபவிக வாதிகளின்ரீதிப்படி க்கர்மத்தால் மோக்ஷம் சித்திக்குமென்பதை இனிச்சொல்லுகிறார். சத்திய பந்தம் ஞானத்தினல் நிவிர்த்தியாகுமெனபது மேற்கண்டபடி யுக்திக்கு விருத்தமாயிருக்கிறது. ஆகையால்மோக்ஷத்தையடைய இச்சிக்கிறவன் எப்போதும் கர்மத்தைச்செய்ய வேண்டியது.

75 கர்மவிவாம் (75-76):— கர்மம் விதிதம்நிஷித்தமென இருவகையாம் புருஷனுடைய பிரவிர்த்திநிமித்தமாய் எக்கருமங்களை வேதம்விதித்திருக்கிறதோ அவைவிதிதகர்மங்களாம். எக்கருமங்களை வேதம்நிஷேதித்திருக்கிறதோ அவைநிஷித்தகர்மங்களாம் சுபாவசித்தமாய்ச்செய்யப்பட்டகிரியைகள் கர்மங்கள்அன்று. ஏனெனில்வேதத்தால் பிரவிர்த்திநிவிர்த்திகளின்பொருட்டுச் சொல்லப்பட்டிருக்கிறகிரியைகளே கர்மங்களெனப்பட்டும். உதாசீனக்கிரியைகள் கர்மங்களன்று. ஆகையால் கர்மம் இருவகையேதவிர மூன்றுவகையன்று.

[36]

76. விகிதவிவாம்:—விகிதகர்மம் நான்குவகைப்படும். (1) நித்தியம் (2)நைமித்தியகம் (3)காமியம் (4) பிராயச்சித்தம். பாபநாசத்தின் பொருட்டு விதிக்கப்பட்டகர்மம் பிராயச்சித்தமாம். பிரமாதத்தினல் ஒரு சந்நியாசி

[37]

---

36. வேதத்தில் விதிக்கப்படாமலும், அல்லது நிஷேதிக்கப்படாமலும் ராகத்துவேஷங்களன்றியில் செய்யப்படும் ஸ்வாபாவிகமான நடை சௌசம் முதலியகர்மங்கள் உதாசீனங்களாம்.

37. அவசியம் செய்யவேண்டியகாரியத்தை மறந்து விடுதல் அல்லது இச்சையிருந்தும் செய்யாமலிருத்தல் பிரமாதமென்னப்படும்.

திரவியத்தைக்கிரகித்துப் பாபத்தைச் சம்பாதிக்கிறான்; அந்தப் பாபபரி காரநிமித்தம் திரவியத்தைத்தியாகம்பண்ணி மூன்றுநாள உபவாச மாயிருக்கிறான். இது பிராயச்சித்தகர்மம். பலத்தின்பொருட்டு விதிக் கப்பட்டகர்மம் காமியம். மழையை இச்சிக்கிறவன் செய்கிறகாரீரியாகமும் சுவர்க்கத்தை இச்சிக்கிறவன் செய்கிற அக்கினிஹோத்திரம் சோமயாகம் முதலியவை காமியங்கள். எந்தக்கர்மத்தைச்செய்யாததினால் பாபமுண்டா கிறதோ எதைச் செய்கிறதினால் புண்ணியபாபரூபபலன்கள் உண்டாகிற தில்லையோ, எது எப்போதும் விதிக்கப்படுகிறதில்லையோ, ஆனால் சிலநி மித்தங்களின் பொருட்டு விதிக்கப்பட்டிருக்கிறதோ அது நைமித்திகம். கிரகணகாலத்தில் செய்யும் சிராத்தங்கள் நைமித்திககர்மங்கள். வயோவி ர்த்தன், சாதிவிர்த்தன், ஆசிரமவிர்த்தன், வித்தியாவிர்த்தன், கர்மவிர்த்த ன், ஞானவிர்த்தன், இவர்கள் வருங்காலத்தில் செய்யப்பட்ட உத்தானரூ பகர்மங்கள் நைமித்திகங்கள். வித்தியாசப்தத்தினால் சாஸ்திரஞானமும் ஞானசப்தத்தால் அபரோக்ஷஞானமும் கொள்ளத்தக்கன. மேற்சொன் னவிர்த்தர்களில் வரிசைக்கிரமப்படி பின்சொல்லப்பட்டவர்முன் சொல்ல ப்பட்டவருக்கு உத்தமர். எது செய்யாததினால் பாபமுண்டாகிறதோ, செய்கிறதினால் புண்ணியமில்லையோ, மேலும் எது எப்போது விதிக்கப்பட்டிருக்கிறதோ அது நித்தியகர்மம். ஸ்நாநசந்தியாவந்தனாதிக ள்போலும். இவ்விதமாக நான்குவித விதிதகர்மங்களும் நிஷித்தகர்மமும் சேர்ந்து கர்மம் ஐந்துவகையாம்.

மோக்ஷ இச்சையுள்ளவன் செய்யவேண்டியகர்மம்(77—82)

77. மோக்ஷத்தை யிச்சிக்கிறவன் காமியநிஷித்தகர்மங்களைச்செ ய்யக்கூடாது. ஏனெனில் காமியகர்மத்தால் உத்தமலோகமும் நிஷித்தக ர்மத்தால் நீசலோகமும் அடையப்படுகின்றன. ஆகையால் இவைகளைத் தியாகஞ்செய்து நித்தியகர்மங்களை எப்போதும், நைமித்திகர்மங்களில் நி மித்தங்கள் நேரிடும்போதும் மோக்ஷ இச்சை உள்ளவன் செய்யவேண்டும். ஏனெனில் நித்தியநைமித்திகர்மங்களைச்செய்யாவிட்டால் பாபங்கள் உ ண்டாகின்றன. அவைகளால் நீசயோனி அடையப்படுகிறது. ஆகையா ல் பாபத்தைப் போக்குவதற்காக நித்தியநைமித்திக கர்மங்களைச்செய்யவே ண்டும். இவைகளைச் செய்யாததினாலுண்டாகும் பாபங்கள் செய்கிறதி னாலுண்டாகாமலிருப்பதே இவைகளுக்குப்பலனே தவிர வேறுபலனில்லை. ஆகையால் முமுக்ஷுவானவன நித்தியநைமித்திக கர்மங்களை அவசியம் செய்யவேண்டும்.

78. ஒருக்கால் எவனுவது பிரமாதத்தினால் நிஷித்தகர்மத்தைச் செய்தால் அந்த தோஷத்தை நிவிர்த்திசெய்வதற்காகப் பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டும். ஒருவன் இந்த ஜன்மத்தில் நிஷித்தகர்மத்தைச் செய்யா மலிருந்தாலும் ஜன்மாந்தரத்தில் செய்தபாபத்தைப் போக்குவதற்காகப்

பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டும். பிராயசித்தம் இருவகை. (1) அசாதாரணம் (2) சாதாரணம். குறிப்பிட்டபாபத்தை நிவிர்த்திக்கச் சாஸ்திரத்தினால் விதிக்கப்பட்ட பிராயச்சித்தம் அசாதாரணமாம். முன்(76)ச் சொல்லப்பட்ட உபவாசாதிகள்போலும். சர்வபாபங்களையும் நிவிர்த்திக்க சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட பிராயச்சிததம் சாதாரணமாம். கங்காஸ்நானம், ஈசுவரநாமோச்சாரணம் முதலியவைபோலும். இவ்விதமாக இரண்டுவிதப்பிராயச்சித்தங்களுள. பாபமறியப்பட்டிருந்தால் அதைப்போக்குவதற்காகச் சாஸ்திரத்திற்சொல்லிய அசாதாரணப்பிராயச்சித்தத்தை செய்யவேண்டியது. ஜன்மாந்தரத்திற்செய்யப்பட்டதும் இப்போது அறியப்படாததுமான பாவத்தைப்போக்கச் சாதாரணப்பிராயச்சித்தத்தைச்செய்யவேண்டியது. ஏனெனில் அசாதாரணப்பிராயச்சித்தத்தின் சுபாவமென்னவெனில், எந்தப்பாவதத்தைப்போக்க அது ஏற்பட்டிருக்கிறதோ அதைத்தவிர வேறொன்றையும் அது போக்கமாட்டாது. ஜன்மாந்தரத்தின் பாபமின்னதென்று தெரியாதபடியால் அதை நிவிர்த்திக்கச் சாதாரணபிராயச்சித்தந்தான் செய்யவேண்டியது.

79. சாதாரணப்பிராயச்சித்தத்தினால் சர்வபாவங்களும் நிவிர்த்தியாகின்றன. கங்காஸ்நானம் முதலிய சாதாரணப்பிராயச்சித்தங்கள் கேவலப்பிராயச்சித்தங்களன்று. ஆனல் காமியரூபமாயும் பிராயச்சித்தரூபமாயுமிருக்கின்றன. ஏனெனில் கங்காஸ்நானத்தினாலும் ஈசுவரநாமோச்சாரணத்தினாலும் உத்தமலோகம் அடையப்படுவதாய்ச் சாஸ்திரத்திற்சொல்லியிருக்கிறபடியால் இவைகள் காமியரூபமாயிருக்கின்றன; பாவத்தைப்போக்குவதால் பிராயச்சித்தரூபமாயுமிருக்கின்றன. அசுவமேதயாகம் பிரமஹத்தியாதி பாபங்களை நிவிர்த்திக்கிறது, சுவர்க்கப்பிராப்திரூபபலத்தையுங்கொடுக்கிறது. இதுபோல், கங்காஸ்நானாதிகளும்கேவலப்பிராயச்சித்தரூபமாக இல்லாதபடியால் உத்தமலோகத்தைக்கொடுக்கின்றன. இதை முழுமுக்ஷுவானவன் இச்சிக்கிறதில்லை. ஆனலும் உத்தமலோகத்தில் இச்சையுள்ளவனுக்குக் கங்காஸ்நானாதிகள் பாபத்தைப்போக்கி அதைக்கொடுக்கின்றன. இச்சையில்லாதவனுக்குக் கேவலம் பாபத்தைப்போக்குகின்றன. ஆகையால் இச்சையுடன்செய்கிற பிராயச்சித்தம் காமியரூபமாயும், இச்சையன்றியில் செய்யப்படுகிற பிராயச்சித்தம் கேவலப்பிராயச்சித்தரூபமாயுமிருக்கிறது. வேதாந்தமதத்தில் சகலகர்மங்களும் ஸகாமபுருஷனுக்கு ஸம்ஸாரத்துக்குஹேதுக்களாயும் நிஷ்காமபுருஷனுக்கு அந்தக்கரணசுத்தியால் மோக்ஷத்துக்குஹேதுவாயும் இருப்பதுபோல, ஓரேகங்காஸ்நானமும் அப்படியே ஈசுவரநாமஉச்சாரணமும் ஸகாமனுக்குக்காமியபிராயச்சித்தரூபமாயும் நிஷ்காமனுக்குக் கேவலப்பிராயச்சித்தரூபமாயுமிருக்கின்றன. ஆகையால் முமுக்ஷு சாதாரணப்பிராயச்சித்தத்தைச்செய்யவேண்டும். இவ்விதமாக ஜன்மாந்திரத்தின் பாபங்களெல்லாம் ஞானமன்றியிலேயே நிவிர்த்தியாகின்றன.

80. அப்படியே ஜன்மாந்திரத்தின் காமியகர்மமும் முழுமுக்தி
க்கு மலடிபோலப்பலன்தராது. ஏனெனில் வேதாந்த சித்தாந்தத்தில் கர்
மானுஷ்டான காலத்தில் பலத்தில் இச்சையுண்டானால் அது சுவர்க்காதி
லோகப்பிராப்திக்குஹேதுவாயும் பலத்தில் இச்சையில்லாவிட்டால் சுவர்
க்காதிப்பிராப்திக்கு ஹேதுவாகாமலும் இருப்பதுபோல நமமுடைய ஏக
பஷிகவாத சித்தாந்தத்தில கர்மசித்தியின் பிறகும் புருஷனுடைய இச்சைப
லத்துக்குஹேதுவாயிருக்கிறது. புருஷனுக்கு மோக்ஷ இச்சையுண்டான
காலத்தில் முன் இச்சை பலனுக்கு ஹேதுவாகிறதில்லை. ஆகையால் ஜன்
மாந்திரத்தின் காமியகர்மமும் பலனுக்குஹேதுவாகிறதில்லை. ஒருவன்
தனத்தையுடைய வேண்டுமென்கிற இச்சையால் ஒரு தனிகனை ஆராதிக்கி
றான். அப்படியாராதித்த பிறகு அவனுக்குச்சில ஹேதுக்களால் தன
திலிச்சை விட்டுப்போகிறது. அப்போது தனப்பிராப்தி ரூபபலன் உண்
டாகிறதில்லை. இதுபோல ஜன்மாந்திரத்தின் காமியகர்மபலன்களிலும்
முமுக்ஷுவுக்கு இச்சையுண்டாகாதபடியால் பலன் உண்டாகிறதில்லை.
ஆகையால் கேவலம் கர்மத்தினால் மோக்ஷமுண்டாகும்.

81. வர்த்தமான ஜன்மத்தில் காமியகர்மமும் நிஷித்தகர்மமுஞ்செ
ய்யப்படாததினால் ஊர்த்துவ அதோ லோகங்களடையப் படுகிறதில்லை.
ஜன்மாந்தரத்தின் பிராப்தமான நிஷித்த காமியகர்மங்கள் போகத்தால் நா
சமாகின்றன. நித்திய நைமித்திககர்மங்களைச் செய்யாததினாலுண்டாகும்
பாபம் அவைகளைச் செய்வதினால் முமுக்ஷுவுக்குச்சம்பவிக்
கிறதில்லை. ஜன்மாந்தரத்தின் சஞ்சிதநிஷித்தகர்மங்கள் சாதாரணப் பிரா
யச்சித்தத்தால் நிவிர்த்தியாகின்றன. ஜன்மாந்தரத்தின் சஞ்சித காமியகர்ம
ங்கள் முமுக்ஷுவுக்கு இச்சை யில்லாதபடியால் பலனைக் கொடுக்
கிறதில்லை. ஆகையால் முமுக்ஷு நித்தியநைமித்திக சாதாரணப்பிராயச்
சித்த ரூபகர்மங்களைச் செய்யவேண்டியது. வர்த்தமான ஜன்மத்தின் அ
றியப்பட்ட நிஷித்தகர்மங்களைப்போக்க அசாதாரணப்பிராயச்சித்தஞ்
செய்யவேண்டியது.

82. **பிராயச்சித்தமும் அனுவசியமும்:**—முமுக்ஷுவானவன் நித்தியநை
மித்திகங்களைமட்டுஞ்செய்து பிராயச்சித்தத்தைவிட்டுவிடலாம். ஏனெ
னில்(1)சஞ்சிதநிஷித்தகாமியகர்மங்கள் முமுக்ஷுவுக்கு நிஷ்பலனாகின்றன.
வேதாந்தமதத்தில் ஞானிக்குச்சஞ்சிதகர்மங்கள் நாசமாகிறதாய்ச்சொல்லி
யிருப்பதுபோல், நிஷித்தகர்மியங்களை விட்டு நித்தியநைமித்திகங்களைச்

---

38. சாதாரண அசாதாரணப் பிராயச்சித்தங்களைச் செய்வதில் வெகு சிரமத்தைக்கண்டு முமுக்ஷுவானவன் பூர்வபக்ஷியின் மதத்தில் பிரியப்படமாட்டானென்று நினைத்து பூர்வபக்ஷி இந்த உபாயத்தைச்சொல்லுகிறான்.

செய்கிற முழுமுதற்கடவுளுக்கு நம்முடைய மதப்படிச்சஞ்சிதகர்மங்கள் நாசமாகின்றன. (2) அல்லது, சஞ்சிதமான காமியநிஷித்தகர்மங்கள் எல்லாஞ்சேர்ந்து முழுமுதற்கடவுளுக்கு இனி ஒரு ஜன்மத்தைக் கொடுக்கும். ஆகையால் முழுமுதற்கடவுளுக்கு வேறு ஒருஜன்மமுண்டாகும். (3) அல்லது முழுமுதற்கடவனாவன், யோகி அநேக சரீரங்களின் போகங்களை ஒரேசரீரத்தில் ஒரேகாலத்தில் அனுபவிக்கக்கூடியதுபோல், வரும் ஜன்மத்தில் பூர்வஜன்மங்களின் சஞ்சிதமானஎல்லாக்கருமங்களின்பலன்களையும்அனுபவிக்கக்கூடும்.

(4) அல்லது நித்தியநைமித்திகங்களைச் செய்கிறதினுண்டாகுங்கிலேசம் ஜன்மாந்திரத்தின் சஞ்சித நிஷித்தகர்மங்களின் பலனுகிறது. ஆகையால் ஜன்மாந்திரத்தின் சஞ்சிதநிஷித்தகர்மங்கள் நூதனஜன்மத்தைக்கொடுக்க வேறுதவாகா. சஞ்சிதகாமியகர்மங்களும் பலன, இனிக்கிடைக்கும் அந்த ஒரு ஜன்மத்திலேயே முழுதுங்கொடுத்துவிடுகின்றன. அச்சென்மத்தில் முழுமுதற்கடவுளுக்குத்துக்கலேசமுமில்லை: கேவலம்சுகம்மட்டுந்தானிருக்கிறது. ஏனெனில் ஜன்மாந்திரத்தின் சஞ்சிதவிதிதகர்மம மேற்சொல்லிய ஒரு ஜன்மத்தைக்கொடுக்கிறது. சஞ்சிதநிஷித்தம் நித்தியநைமித்திககர்மானுஷ்டானக்கிலேசத்தினல் பிரதிரூதஜன்மத்திலேயே நாசமடைகிறது. இவ்விதமாகப்பிராயச்சித்தமன்றியிலேயேநித்தியநைமித்திகர்மங்கள்மோக்ஷத்தைக்கொடுக்கின்றன. ஆகையால் நித்தியகர்மங்களை எப்போதும் நைமித்திகர்மங்களை நிமித்தியம நேரிடும்போதும் அனுஷ்டிக்கவேண்டியது. இந்தமதத்துக்குச் சாஸ்திரத்தில் ஏகபவிகவாதமென்று பெயர்.

---

39. செய்த சுபாசுபகர்மங்களை அனுபவிக்காமல் அவைகள் நசிப்பதமாட்டா என்று சொல்லும் சாஸ்திரத்துக்கு விரோதம் வருவதால் அதை நிவிர்த்திக்கப்பூர்வபக்ஷி இந்த உபாயத்தைச் சொல்லுகிறார்.

40. அநேக விலக்ஷணமான ஜன்மங்களுக்குக்காரணமான அநேககர்மங்கள் ஒருஜன்மத்தைக்கொடுக்கக்கூடுமென்பதற்குத் திருஷ்டாந்தத்தைச்சொல்லுகிறார்.

41. அநேக கர்மங்களின் பலன் ஒரேகாலத்தில் உண்டாகிறதாயிருந்தால் சுகம்போல் துக்கமுண்டாகவேண்டும். அப்போது முழுமுதற்கடவுளுக்கு இம்மதத்தில் பிரவிர்த்தியுண்டாகமாட்டாது. அப்படியுண்டாவதற்காக இந்தப்பக்ஷஞ்சொல்லப்படுகிறது.

42. ஏகபவிகமென்றால் ஏகஜன்மம் அல்லது மோக்ஷத்துக்குச்சாதனமானகர்மம் மாத்திரந்தான். வாதம் என்றால் சொல்லுதல் ஆகையால் கர்மத்தை மோக்ஷசாதனமாகச் சொல்லும்பக்ஷத்துக்குச் சாஸ்திரத்தில் ஏகபவிகவாதமென்று பெயர்.

83. ஆகையாலும் இந்தக்கிரந்தம் ஞானமூலமாகப் பந்தத்தைநிவிர்த்திக்குமென்று சொன்னசித்தாந்தம் சரியன்று. எனெனில், ரூபஞானம் நேத்திரமன்றியில் வேறெதினாலுமுண்டாகாததுபோலவும், ஆகையால் ரூபஞானமே நேத்திரத்தின் முக்கியப்பிரயோஜனமாயிருப்பதுபோலவும், எந்தப்பிரயோசனம் எதினாலுண்டாகிறதோ வேறெதினாலுமுண்டாகமாட்டாதோ, அது அதின் முக்கியப்பிரயோசனமென்று சொல்லப்படுகிறது. பந்தநிவிர்த்தியானது கிரந்தஞானமன்றியில் கர்மத்தினாலுண்டாவதால் அது கிரந்தத்தின்பிரயோசனமன்று.

பிரயோஜனத்தில் சமாதானங்கள் (84—107)

பந்தம்மித்தை அதுஞானத்தால் நிவிர்த்தியாகும் (67-73)ல்செய்த ஆக்ஷேபங்களுக்குச்சமாதானங்கள்(84-98)

84. பந்தம் மித்தை:—பந்தம் சத்தியம். அது ஞானத்தால் நிவிர்த்தியாகுமென்று (67)ல்செய்த ஆக்ஷேபம் சரியன்று. எனெனில் பந்தம்மித்தை, அது ஞானத்தால் நிவிர்த்தியாகும்.

85. (69)துக்சமாதானம்(85—93):—சத்தியவஸ்துவின்ஞானம் சம்ஸ்காரமூலமாக அத்தியாசத்துக்கு ஹேதுவாகிறது. சத்தியமான சர்ப்பத்தின் ஞானம் சம்ஸ்காரமூலமாய் சர்ப்பாத்தியாசத்துக்கு ஹேதுவாயிருப்பதுபோல, பந்தம் சத்தியமானால் சத்தியபந்தத்தின் ஞானமுண்டாகும். சித்தாந்தத்திலோ அநாத்மவஸ்துக்கள் யாதொன்றும் சத்தியமன்று. ஆகையால் சம்ஸ்காரமூலமாக அத்தியாசத்துக்கு சாமக்கிரியாகிற சத்தியவஸ்துவின் ஞானம் சித்திக்காதபடியால் பந்தம் அத்தியாசமன்று. ஆனால் சத்தியமே. இப்படி முன (69) செய்த ஆக்ஷேபம் சரியன்று. எனெனில் அத்தியாசவிஷயத்தில் ஸம்ஸ்காரமூலமாகச் சத்தியவஸ்துவின் ஞானம் ஹேதுவாக இருக்கிறதுஎன்பது கூடாது. ஆனால் வஸ்துஞானம் ஹேதுவாயிருக்கிறது. அந்த வஸ்து சத்தியமாகவாவதுமித்தையாகவாவது இருக்கக்கூடும். சத்தியவஸ்துஞானமே அத்தியாசத்துக்கு ஹேதுவாயிருக்கும்பக்ஷத்தில், ஒருபுருஷன் உண்மையான மாமரத்தைப்பார்த்ததில்லை. ஆனால் வித்தையாடியாற் காண்பிக்கப்பட்ட பொய்மாமரத்தைப்பலதடவைபார்த்தும் அது நான்மாமரமென்று அவனிடத்திலிருந்து கேட்டுமிருக்கிறான். அந்தப்புருஷன் இலுப்பைமரத்தை ஒருகாலத்திலும்பார்த்ததுமில்லை. அதைப்பற்றிக்கேள்விப்பட்டதுமில்லை. அந்த இலுப்பைமரத்தைக்கண்டவுடன் அதனிடத்தில் மாமரஅத்தியாசமுண்டாகிறது. பூர்வபக்ஷியின் மதப்படி இந்த அத்தியாசமுண்டாகக்கூடாது. எனெனில் உண்மையான மாமரத்தின் ஞானம் அவனுக்கு ஏற்கனவேயில்லை. நம்முடைய மதப்படியோ வித்தையாடியால் காண்பிக்கப்பட்ட பொய்மாமரத்தின் ஞானமிருப்பதால் இலுப்பைமரத்தில் மாமரஅத்தியாசமு

ண்டாகக்கூடும். ஆகையால் ஸஜாதீயவஸ்துஜ்ஞான ஜன்யஸம்ஸ்காரமே அத்தியாஸத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. இந்த ஸம்ஸ்காரத்தையுண்டுபண்ணுகிற ஞானமும் அதன்விஷயமும் மித்யாதயாகவாவது சத்தியமாகவாவது இருக்கக்கூடும். ஸம்ஸ்காரமூலமாக ஞானம் ஹேதுவாயிருக்கிறதென்பதற்கும் ஞானஜன்யஸம்ஸ்காரம் ஹேதுவாயிருக்கிறதென்பதற்கும் அர்த்தமொன்றுதான். அதாவது, ஞானம் ஸம்ஸ்காரத்துக்குஹேது; ஸம்ஸ்காரம் அத்தியாசத்துக்கு ஹேது. ஆகையால் ஸம்ஸ்காரமூலமாக ஞானம் ஹேதுவென்று சொன்னதிலும ஞானஜன்யஸம்ஸ்காரமே அத்தியாஸத்துக்கு ஹேதுவென்று சித்திக்கிறது.

86. கேவல வஸ்துஞானமே அத்தியாசத்துக்கு ஹேதுவென்று சொல்லக்கூடாது. ஏனெனில் எது காரணமோ அது காரியத்துக்கு அவ்வியவஹித பூர்வகாலத்தில் இருக்கவேண்டுமென்பது நியாயம். கடத்துக்கு ஹேதுவான தண்டசக்கராதிகள் கடத்துக்கு அவ்வியவஹித பூர்வகாலத்திலிருப்பதுபோல அத்தியாசத்துக்கு ஞானம். ஹேதுவாயிருக்கும் பக்ஷத்தில் அதுவும் அத்தியாசத்துக்கு அவ்வியவஹித பூர்வகாலத்தில் இருக்கவேண்டும். ஆனல் அனுபவத்தில் அப்படியில்லை. ஏனெனில் எவனுக்குச்சர்ப்பஞானமுண்டாயிக்கிறதோ அவனுககு ஞானமுண்டாகி

43

ஒருமாசத்துக்குப்பின்னும் ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாசமுண்டாகிறது. மேல் சொன்ன நியாயப்படி இந்த அத்தியாசமுண்டாகக்கூடாது. ஏனெனில் ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாசத்துக்குக்காரணமான சர்ப்பஞானம் முந்தியே நாசமாய் விட்டது. ஆகையால் அது அத்தியாசத்துக்கு அவ்வியவஹித பூர்வகாலத்திலில்லை; வியவஹித பூர்வகாலத்திலிருந்தாலும் அவ்வியவஹித பூர்வகாலத்தில் இல்லை. ஆகையால் கேவலம் வஸ்துஞானம் அத்தியாஸத்துக்குஹேதுவன்று. அவ்வியவஹிதமாயிருக்கிறதுதான் ஹேது. அவ்வியவஹிதமென்றால் இடைவெளியில்லாதது: வியவஹிதமென்றால் இடைவெளி யுள்ளது

87. இதற்கு ஆக்ஷேபம்:—காரியத்துக்கு முந்தினகாலத்தில் காரணமிருக்கவேண்டியது. அந்த முந்தின காலம் வியவஹிதமாயாவது அவ்வியவஹிதமாயாவது இருக்கக்கூடும். காரியத்துக்கு அவ்வியவஹித பூர்வகாலத்திலேயே காரணமிருக்கவேண்டுமென்கிற நியாயமிருக்கும்பக்ஷத்தில் விஹிதகர்மம் சுவர்க்கப்பிராப்திக்கும் நிஷித்தகர்மம் நரகப்பிராப்திக்கும் ஹேதுவென்று சொல்லியசாஸ்திரவசனம் அப்பிரமாணமாய்விடும்.

43: ஒருமாதம் என்பதால் வெகு நாளைக்குப் பிறகும் என்று அறியத்தக்கது.

ஏனெனில் காயிக, வாசிக, மானஸிகக்கிரியைகளுக்குப் பெயர் கர்மங்களாம். அக்கிரியைகள் அனுஷ்டானமானவுடன் நாசமடைகின்றன. சுவர்க்க நரகங்கள் காலாந்தரத்தில் உண்டாகின்றன. ஆகையால் சுவர்க்க நரகப்பிராப்திக்கு அவ்வியவஹித பூர்வகாலத்தில் விஹிதநிஷித்த காமங்களில்லை. வியவஹித பூர்வகாலத்தின் சுபாசுபகர்மங்கள் சுவர்க்க நரகப்பிராப்திக்கு முறையே ஹேதுக்களாவதுபோல் வியவஹித பூர்வகாலத்தின் சர்ப்பஜ்ஞானமும் ரஜ்ஜுவில் உண்டாகிற சர்ப்பாத்தியாசத்துக்கு ஹேதுவாயிருக்கும்.

88 மேற்செய்த ஆக்ஷேபஞ்சரியன்று. ஏனெனில் நஷ்டஜ்ஞானமும் நஷ்டகர்மமும் முறையே அத்தியாசத்துக்கும் சுவர்க்க நரகப்பிராப்திக்கும் ஹேதுவாகும் பக்ஷத்தில் இறந்து போன குசவனுலும் நஷ்டமாய்ப்போன தண்ட சக்கராதிகளாலுங்கூட கடம் உண்டாகக்கூடும். ஏனெனில் ரஜ்ஜுவில் உண்டாகிற சர்ப்ப அத்தியாசத்துக்கு வியவஹித பூர்வகாலத்தில் சர்ப்பஜ்ஞானம் இருந்தது போலும், சுவர்க்க நரகப்பிராப்திக்கு வியவஹித பூர்வகாலத்தில் சுபாசுப கர்மங்கள் இருந்தனபோலும், கடத்துக்கு வியவஹித பூர்வகாலத்தில் இப்போதில்லாத குசவனும் தண்டசக்கராதிகளும் இருந்தன. இவைகளாலுங்கூட கடம் உண்டாகக்கூடும். ஆனல் அனுபவத்தில் அப்படி யுண்டாகிறதில்லை. ஆகையால் வியவஹித பூர்வகாலத்தில் இருந்தது ஹேதுவாகிறதில்லை ஆனல் அவ்வியவஹித பூர்வகாலத்திலுள்ள காரணமே காரியத்துக்கு ஹேதுவாகிறது.

89. சுபாசுப கர்மங்களும் காலாந்தரத்தில் வரப்போகிற சுவர்க்க நரகப்பிராப்திக்கு ஹேதுக்களாகிறதில்லை. ஆனல் சுபகர்மம் தனக்கடுத்த உத்தரக்ஷணத்தில் தர்மத்தை உற்பத்திசெயகிறது. இந்த தர்மாதர்மங்கள் அந்தக்காரணத்தில் தங்குகின்றன. இவைகளால் காலாந்தரத்தில் சுவர்க்க நரகங்கள் அடையப்படுகின்றன. பிறகு தர்மாதர்மங்கள் நாசமடைகின்றன. இந்த அபிப்பிராயத்திலேயே சாஸ்திரத்தில் சுபாசுபகர்மங்கள் அபூர்வ மூலமாகப் பலத்துக்கு ஹேதுக்களென்றும் சாக்ஷாத்து ஹேதுக்களல்லவென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தர்மாதர்மங்களுக்கே அபூர்வமென்றும் அதிர்ஷ்டமென்றும் புண்ணிய பாபமென்றும் பெயர். தர்மாதர்மங்களை யுண்டுபண்ணுகிற சுபாசுபகர்மங்களையுங்கூட தர்மாதர்மங்களென்று சிலர் சொல்லுகிறார்கள். பிரபஞ்சத்தில் சுபக்கிரியை செய்கிறவனை இவன் தர்மம் செயகிறனென்றும், அசுபக்கிரியை செய்கிறவனை இவன் அதர்மஞ்செய்கிறனென்றும் ஜனங்கள் சொல்லுகிறது வழக்கம். இந்தச்சுபாசுபக்கிரியைகளுக்குத் தர்மாதர்மங்களென்று பெயர் இல்லை. ஆனல் அக்கிரியைகள் தர்மாதர்மங்களை

யுண்டுபண்ணுகின்றன. ஆகையால் கிரியைகளுக்குச் சுத்தாசுத்தமென்று பெயரிட்டிருக்கிறார்கள். ஆயுளைவிர்த்தி செய்கிற நெடுக்குச்சாஸ்திரத்தில் ஆயுசென்று சொல்லையிருப்பது போலும்.

90. ரஜ்ஜுவிலுண்டாகிற சர்ப்பாத்தியாசத்துக்கு அவ்வியவகித பூர்வகாலத்தில் சர்ப்பஞானமில்லை. ஆகையால் சர்ப்பஞானம் ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாசத்துக்கு ஹேதுவாகிறதில்லை. ஆனால்சர்ப்பஞானத்தினுலுண்டாகிற ஸம்ஸ்காரமே ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாசத்துக்கு ஹேதுவாயிருக்கிறது.

91. இதுபோல் கிளிஞ்சிலில் வெள்ளியத்தியாசத்துக்கு ஹேது வெள்ளிஞானத்தால் உண்டாகிற ஸம்ஸ்காரமே. இவ்விதமாகச் சம்ஸ்காரங்களே அத்தியாசங்களுக்கு ஹேதுக்களாகின்றன. மேலும் வஸ்துஞானம் ஸம்ஸ்காரத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. சுபாசுபகர்மங்களால் உண்டாகிற தர்மாதர்மங்கள் அந்தக்கரணத்தில் தங்குவதுபோல் வஸ்துஞானத்தாலுண்டாகும் ஸம்ஸ்காரமும் அந்தக்கரணத்தில் தங்குகிறது. எவனுக்கு முன் சர்ப்பஞானமிருந்திருக்கவில்லையோ அவனுக்கு வேறுவஸ்துக்களின் ஞானத்தாலுண்டாகிய ஸம்ஸ்காரமிருந்தபோதிலும ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாசம் உண்டாகமாட்டாது. எந்தவஸ்துவில் அதியாசமுண்டாகிறதோ அதற்கு ஸஜாதீயமான வஸ்துவில் ஞானத்தாலுண்டாகும் ஸம்ஸ்காரம் அத்தியாசத்துக்கு ஹேதுவாகிறது, விஜாதீயவஸ்துவின் ஞானஜன்யஸம்ஸ்காரம ஹேதுவாகிறதில்லை. சர்ப்பத்துக்கு ஸஜாதீயம் சர்ப்பமேயொழிய வேறில்லை. சர்ப்பஞானமில்லாதவனுக்கு வேறுவஸ்துக்களின் ஞானமிருக்கக்கூடும். ஆயினும் ஸஜாதீயவஸ்துஞானஜன்யஸம்ஸ்காரம் இல்லாதபடியால் ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாசம் அவனுக்குண்டாகிறதில்லை. ஸம்ஸ்காரமென்றால் சூக்ஷ்மாவஸ்தை. இவ்விதமாக அத்தியாசத்துக்குமுன்னிருந்த ஸஜாதீயவஸ்துஞானஜன்யஸம்ஸ்காரமே அத்தியாசாத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. சத்தியவஸ்துஞானஜன்யஸம்ஸ்காரமே அத்தியாசத்துக்கு ஹேதுவெனவும், மித்தியாவஸ்துஞானஜன்யசம்ஸ்காரம் ஹேதுவில்லையெனவும் முன் (85) பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் மித்தியாவஸ்துவின் ஞானஜன்யஸம்ஸ்காரமும் அத்தியாசத்துக்கு ஹேதுவாயிருக்கிறது.

92. அந்தஸம்ஸ்காரம் பந்தாத்தியாச விஷயத்திலும் சித்திக்கிறது. ஏனெனில் அகங்காராதி அனாத்மவஸ்துக்களும் அவைகளின் ஞானமும் பந்தமெனப்படும். இந்த அனாத்மவஸ்துக்கள் ரஜ்ஜுவில் சர்ப்பம்போல் பிரதீதியாகுங்காலத்தில் இருக்கின்றன; பிரதீதியில்லாதகாலத்தில் இருக்கவில்லையென்பது வேதாந்தசித்தாந்தம். இந்தக்காரணத்தினுலேயே சுஷுப்தியில் சகலப்பிரபஞ்சமுமில்லையென்று பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

சுஷுப்தியில் எந்தபதார்த்தமும் பிரதீதியாகிறதில்லை. ஆகையால் சகல ப்பிரபஞ்சமும் சுஷுப்தியில் லயமடைகின்றது. இதற்குச்சாஸ்திரத்தில் தீர்ஷ்டி சிருஷ்டிவாத மென்றுபெயர். இதன்விவரம் பின்னல் (417) பிரதி பாதிக்கப்படும். இவ்விதமாக அனந்த அகங்காராதிகளும் அவைகளின் ஞானமும் உற்பத்தியாய்க்கொண்டும் லயமடைந்துகொண்டுமிருக்கின்றன. அகங்காராதிகளின் பிரதீதியுண்டாகுங்காலத்தில் இவைகளுண்டாகியும் இந்தப்பிரதீதியில்லாதகாலத்தில் இவைகள் லயமடைந்தும வருகின்றன. அகங்காராதிகளும் அவைகளின் ஞானமும் அத்தியாசமென்று அநிர்வசனீயக்கியாதியின் பிரஸ்தாபத்திற் சொல்லப்படும் (145). அகங்காரம், சாக்ஷியால் விளங்குகிறதென்று விஷயப்பிரஸ்தாபத்தில் (60) சொல்லப்பட்டிருக்கிறபடியால் அகங்காரத்தின் பிரதீதி சாக்ஷிரூபமாகவே யிருக்கிறது. அதற்கு உற்பத்தி லயங்கள் சொல்லக்கூடாது. ஆயினும் அகங்காரத்தையும் சாக்ஷீ விர்த்திமூலமாகப்பிரகாசிப்பிக்கிறதேதவிர ச்சாக்ஷாத்தாகப்பிரகாசிப்பிக்கிறதில்லை. இந்தவிர்த்திக்கு உற்பத்திலயங்களிருப்பதால் அகங்காரப்பிரதீதிக்கும் உற்பத்திலயங்களைச் சொல்லக்கூடும். இவ்விதமாக உத்தரோத்தர அகங்காராதிகளுடையவும் அவைகளின் ஞானத்தினுடையவும் உற்பத்திக்கு பூர்வபூர்வமித்தியா அகங்காராதிகளுடைய ஞானஜன்ய ஸம்ஸ்காரம் ஹேதுவாயிருக்கிறது.

93. ஆக்ஷேபம்:— உத்தரோத்தர அகங்காராதிகளின் அத்தியாசத்துக்கு ப்பூர்வபூர்வ அத்தியாஸஸம்ஸ்காரம் ஹேதுவாக இருந்தாலும் முதலில் உண்டான அகங்காரத்துக்கும் அதன் ஞானத்துக்கும் ஹேதுவான ஸம்ஸ்காரம் யாதொன்றுமில்லை. ஏனெனில் அந்த முதல் அகங்காரத்துக்குமுன் வேறு அகங்கார மிருந்திருக்கும் பக்ஷத்தில் அதின் ஞானத்தால் ஸம்ஸ்காரமுண்டாகக் கூடும். ஆனல் அந்த முதல் அகங்காரத்துக்குமுன் வேறு அகங்காரம் இருக்கவில்லை. ஆகையால் சகல வஸ்துக்களுடையவும் முதல் அத்தியாசத்துக்கு ஹேதுவான ஸம்ஸ்காரம் சித்திக்கவில்லை.

சமாதானம்:— இந்த ஆக்ஷேபம் சித்தாந்தத்தை தெரிந்துகொள்ளாமல் செய்யப்பட்டது. ஏனெனில் வேதாந்த சித்தாந்தமென்னவெனில்.

(1) பிர்ம்மம் (2) ஈசுவரன் (3) ஜீவன் (4) அவித்தை (5) அவித்தைக்கும் சைதன்னியத்துக்குமுள்ள சம்பந்தம் (6) அனதிவஸ்துக்களின் பேதம், இவ்வாறும் சொரூபத்திலும் அனதியாகவிருக்கின்றன. உற்பத்தியில்லாதவஸ்து சொ

---

44. பிர்ம்மம் அவித்தைக்கு அதிஷ்டானமாயிருப்பதால் அது இதினின்றும் உண்டாகிறதில்லை. ஈஸ்வராதிகள் பிர்ம்மமன்றியில் சித்திக்காதபடியால்

ரூபத்தால் அனுகி யென்று சொல்லப்படுகிறது. மேற்கண்ட ஆறவஸ்துக்களும் உற்பத்தி ரகிதங்களாயிருப்பதால் அவைகள் சொரூபத்தால் அனுதியாயிருக்கின்றன. மேலும் அகங்காராதிகளுக்குச்சுருதியில் உற்பத்தியுண்டெனச்சொலலி யிருப்பதால் சொரூபத்தினல் அவைகள் அனுதியாகாவிட்டாலும்பிரவாகரூபத்தால் சகலவஸ்துக்களும் அனுதியாயிருக்கின்றன. சகலவஸ்துக்களுக்கும் பிரவாகமில்லாமலிருக்கவில்லை. அனுதிகாலத்தில் ஒருக்காலும் கடமில்லை யென்கிற காலமில்லை. ஆகையால் கடத்தின் பிரவாகம் அனுதியாக இருக்கிறது. இவ்விதமாய்ச் சகலவஸ்துக்களின் பிரவாகமும் அனுதியாயிருக்கிறது. பிரளயகாலத்திலும் சுஷுப்தியிற் போல சகலவஸ்துக்களும் ஸம்ஸ்காரரூபமாயிருக்கின்றன. ஆகையால் பிரபஞ்சத்தின் பிரவாஹமும் அனுதியாயிருப்பதால் பிரபஞ்சம் அனுதியென்று சொல்லப்படுகிறது. இந்த ஞானமில்லாதவனுக்கு முதல் அத்தியாசத்துக்கு ஹேதுவான ஸம்ஸ்காரம் இல்லையென்கிற மேற்சொல்லிய சங்கதகம் ஜனிக்கிறது. சிதாநந்தத்தில் எந்த அகங்காராதி வஸ்துக்களின் அத்தியாசமும் மற்றவைகளுக்கு முந்தினதாக இல்லை. ஆனல் பூர்வபூர்வ அத்தி

ர்ம்மம் இவைகளினின்றும் உண்டாகிறதில்லை. ஆகையால் பிர்ம்மம் அனுதி 2) பிர்ம்மம் நிர்விகாரமாயிருப்பதால் பிர்ம்மத்தினின்றும் அவித்தையுண்டாகிறதில்லை. ஆகையால் அவித்தை அனுதி. (3) ஜீவேஸ்வரர்கள் கேவலம் பிர்ம்மத்திலிருந்தாவது கேவலம் மாயையிலிருந்தாவது உண்டாகிறதில்லை. ஜீவன் ஈஸ்வரனிடத்திலிருந்தாவது ஈஸ்வரன் ஜீவனிடத்திலிருந்தாவது உண்டாகிறதில்லை. அவித்தியாசேதனசம்பந்தத்தால் ஜீவேஸ்வரபாவங்கள் சித்திக்கின்றன. பிர்ம்மம் அனுதியாயிருப்பதாலும் அவித்தையும் அப்படியே இருப்பதாலும் இவைகளின் சம்பந்தமும் அனுதியாயிருக்கிறது. ஆகையால் இச்சம்பந்தத்தாலுண்டாகும்ஜீவேஸ்வரபாவங்களும் அனுதியே. (4) அனுதியான பிர்ம்மம் அவித்தை இவைகளின் தாதாத்மியசம்பந்தமும் அனுதியாயிருக்கிறது. (5) இந்தான்கு வஸ்துக்களின் பேதமும் அனுதியே. ஆகையால் அனுதிவஸ்துக்கள் ஆறென்று சித்திக்கின்றது. இவைகளில் பிர்ம்மம் மூன்றுகாலங்களிலும் பாதிக்கப்படாதபடியால் அனுதியாயும் அனந்தமாயுமிருக்கிறது. மற்றவை ஞானத்தால் பாதிக்கப்படுவதால் அனுதியாயும் அந்தத்தோடுகூடியுமிருக்கின்றன.

45. பிரபஞ்சம் அனுதியாயிருப்பதால் சத்தியமாயிருக்க வேண்டுமே யென்கிற சங்கைக்குச்சமாதானம்:— ரஜ்ஜுவில் சர்ப்பப்பிராந்தியுண்டாகி ஒரு நாழிகை அல்லது இரண்டு நாழிகை அல்லது நாலு நாழிகை வரையில் இருந்துக் கொண்டிருக்கிறது. ரஜ்ஜு அறியப்பட்டபின் சர்ப்பம் மூன்றுகாலத்திலும் இல்லையென்கிற நிச்சயரூபஞானம் உண்டாகிறது. ஆகையால் சர்ப்பஞானம் மித்தையாயிருக்கிறது. இதுபோல் பிரபஞ்சமும் ஆரோபதசையில் அனுதியாயிருப்பதாகதோன்றுகின்றது. அதிஷ்டானம் அறியப்பட்டவுடன் பிரபஞ்சம் மூன்றுகாலத்திலும் இல்லையென்கிற நிச்சயமுண்டாகிறது. ஆகையால் பிரபஞ்சம் மித்தை.

யோசனங்களுக்கு மற்றவை உத்தரோத்தர அத்தியாஸங்களாயிருக்கின்றன. ஆகையால் ஆக்ஷேபம்சரியன்று. இவ்விதமாக ஸஜாதீயவஸ்துவின் ஞானஜன்யஸம்ஸ்காரத்தால் அகங்காராதி பர்ந்தத்தின் அத்தியாசம் சம்பவிக்கி

94. (70-வீதுத்சமாதானம்) 94—95 பிரமாத்ருதோஷம்:— மூன்று. விதமான தோஷங்கள் அத்தியாசத்துக்கு ஹேதுக்களென்றும் பந்தஅத்தியாஸத்தில் யாதொருதோஷமும் காணப்படாதபடியால் பந்தம் சத்தியமென்றும் முன் (70—71) செய்த ஆக்ஷேபம் சரியன்று. ஏனெனில் தோஷமின்றியில் அத்தியாசம் உண்டாகாதபக்ஷத்தில் அத்தியாசத்துக்குத்தோஷம் ஹேதுவாகும். வஸ்திரமுண்டாவதற்கு நூல், நாடா, தரி, இவைகள் ஹேதுக்களாயிருக்கின்றன. அவைகள் இருந்தால் வஸ்திரமுண்டாகும். அவைகள் இல்லாவிட்டால் வஸ்திரமுண்டாகாது. இதுபோல் தோஷம் அத்தியாசத்துக்கு ஹேதுவானால் தோஷமில்லாத இடத்தில் அத்தியாசம் உண்டாகக்கூடாது. ஆனல் அனுபவத்தில் தோஷம் அத்தியாசத்துக்கு ஹேதுவாகக்காணப்படவில்லை. எனெனில் பிரமாதாவின் லோபபயாதி தோஷங்கள் அத்தியாசத்துக்கு ஹேதுக்களாகிறதில்லை. எனெனில் லோபமில்லாத வைராக்கிய புருஷனுக்கும் கிளிஞ்சிலில் வெள்ளி அத்தியாசமுண்டாகிறது. பூர்வபக்ஷியின் மதப்படித் தோஷமில்லாததினல் அத்தியாச முண்டாகக்கூடாது. ஆகையால் பிரமாதாவின் தோஷம் அத்தியாசத்துக்கு ஹேதுவாகவில்லை.

95. பிரமாணதோஷத்துக்குசமாதானம்:— பிரமாணதோஷமும் அத்தியாசத்துக்கு ஹேதுவாகிறதில்லை. எனெனில் எல்லாருக்கும் ரூபமில்லாத ஆகாசத்தில் நீலவர்ணமும் சட்டி கூடாரம் இவைகளின் உருவமும் தோன்றுகின்றன. ஆகையால் எல்லாருக்கும் ஆகாயத்தில் நீலவர்ணம், சட்டி, கூடாரம், இவைகளின் அத்தியாசமுண்டாகிறது. எல்லாருக்கும் நேத்திரேந்திரியமாகிற பிரமாணத்தில் பித்தம் முதலிய தோஷமிருப்பதாகச்சொல்வது சரியன்று. ஆகையால் பிரமாணதோஷமும் அத்தியாசத்துக்கு ஹேதுவாகவில்லை. ஞானத்துக்குச்சாதனமான இந்திரியம் பிரமாணம் எனப்படும்.

96. ப்ரமேயதோஷத்து (71) க்குசமாதானம்:— சாதிரிஷிய தோஷமன்றியில் ஆத்மாவினிடத்தில் ஜாதி அத்தியாசமுண்டாகிறது. பிராமணஜாதி ஸ்தூலசரீரதர்மமாயிருக்கின்றது. ஆத்மா, சூக்ஷ்மசரீரம், இவைகளின் தர்மமாகவில்லை. எனெனில் மூன்சரீரத்திலிருந்த ஆத்மாவும் சூக்ஷ்மசரீரமும் வேறு சரீரம் அடையும்போதும் இருக்கின்றன. ஆனல் ஜாதிமட்டும் வித்தியாசப்படுகிறது. மூன்சரீரத்திலிருந்த ஜாதியே பின் சரீரத்துக்கும் இருக்கவேண்டுமென்பதவசியமில்லை. ஆத்மாவின்

அல்லது சூக்ஷ்மசரீரத்தின் தர்மமாக ஜாதி இருக்கும் பக்ஷத்தில் பின்சரீரத்தில் வேறு ஜாதி தோன்றக்கூடாது. ஆனால் இப்படியுந்தோன்றுவதால், ஜாதியானது ஆத்மா சூக்ஷ்மசரீரம் இவைகளின தர்மமாகமாட்டாது. ஆனல் ஸ்தூலசரீரத்தின் தர்மமாகவிருந்திறது. மேலும் நான் துஷிஜன் என்பதில் பிராமண க்ஷத்திரிய வைசிய ஜாதிபாவங்கள் தோன்றுகின்றன. ஆகையால் ஆத்மாவினிடத்தில் ஜாதியின் அத்தியாசமுண்டாகிறது. கயிற்றில் சர்ப்பம் பாரமார்த்திகடமாகவில்லாமலிருந்தும் தோன்றுவதினல் அதில் சர்ப்பாத்தியாச முண்டாவது போல் ஆத்மாவினிடத்தில் ஜாதி பாரமார்த்திகமாகவில்லாமலிருந்தும் தோன்றுவதினல் ஆத்மாவினிடத்தில் ஜாதியத்தியாசமுண்டாகிறது. மேலும் ஆத்மாவுக்கும் ஜாதிக்கும் சாதிரிசியமில்லை. எனனில் ஆத்மாவியாபகமாயும் நித்தியக்காயும் விஷயியாயும் ஜாதிபரிச்சின்னமாயும் பராக்காயும் விஷயமாயும் இருக்கிறது நிச்சயமாக ஆத்மாவினிடத்தில் அதற்கு விரோதமான ஜாதியினுடைய அத்தியாசமுண்டாகிறது. ஆத்மாவினிடத்தில் சாதிரிசியமன்றியில் ஜாதியத்தியாச முண்டாகிறதுபோல் சாதிரிசியமன்றியில் அகங்காராதி பந்துக்களிடமும் அத்தியாசமுண்டாகிறது. சாதிரிசியமேகாரணம் அத்தியாசத்துக்கு வேறு துவன்று. அப்படியிருந்தும்பக்ஷத்தில் ஆத்மாவினிடத்தில் ஜாதியத்தியாச முண்டாகக்கூடாது. ஆனல் மேற்காட்டியபடி அத்தியாசமுண்டாவதால் சாதிரிசியமேகாரணம் அத்தியாசத்துக்கு வேறதுவன்று. மேலும் சங்கில் மஞ்சள்திறஅத்தியாசமுண்டாகக்கூடாது. சக்கரையில் கசப்பு அத்தியாச முண்டாகக்கூடாது. எனனில் வெண்மைக்கும் மஞ்சிறத்துக்கும் விரோதமின்மையால் சாதிரிசியமில்லை.

---

46. நியாயமதத்தில் நித்தியமாயும் ஏகமாயும் அநேக பதார்த்தங்களில் சேர்ந்துமிருப்பதாய ஜாதியென்று சொல்லப்படும். அதற்கும் தர்மாவுக்கும் சாதிரிசியமாகிற பிரமேயமேதோஷம் இருக்கிறது. ஆகையால் ஆத்மாவினிடத்தில் ஜாதிஅத்தியாசமுண்டாகிறது. இப்படிப் பிரமேயதோஷம் அத்தியாஸத்துக்கு வேறதுவாயிருக்கிறதென்று ஒருவன் சொல்லக்கூடுமென்பதை மனதில் வைத்துக் கொண்டு சங்கில் மஞ்சள்திறஅத்தியாஸத்திற்கிடமுண்டாகாதென்று சொல்லுகிறார்.

47. சங்கில் மஞ்சள்அத்தியாசமில்லை. ஏனென்றால் மனுஷ்யனுக்கு ஏதேதுள்ள நேத்திரத்திலிருக்கிற மஞ்சள்வர்ணம் சங்கில் தோட்டுகிறது. ஆகையால் சங்கு மஞ்சளாய்த்தோன்றுகின்றது. இந்தச்சங்கைக்குச்சமீபமாகானல் தொல்லுகிறேன். கடத்தில் பதிக்கப்பட்ட இரத்தினம்பதித்தவனுக்கும் மன்னியருக்கும்தெரிகிறதுபோல் சங்கிலுள்ள பீதவர்ணம் காமாலையுள்ளவனுக்குமட்டும் தெரிகிறதேதவிற மற்றவனுக்குத்தெரிகிறதில்லை. ஆகையால் அந்தவர்ணம் நேத்திரத்தினின்றும் வெளியேபோய்ச்சங்கிலொட்டவில்லை. அது பிரமைரூபமாயிருக்கிறது. (ஆ—ம்)ஆகாசத்தில் பறக்கிறபக்ஷீ எவனுடைய நேத்திரத்துக்குச்சமீபத்திலிருந்துபோகிறதோ அவனுக்குமட்டும் அது வெகுதூரம்போயறவனரயில். தெரியும்

அப்படியேதிந்திப் புக்குமகயப்புக்கும் விரோதமேதவிரச்சாதிரிசியமில்லை. அனுபவத்தில் இலவளின் அந்தியாசமுண்டானதால் அதிஷ்டானத்தில் மித்தியாவஸ்துவின்சாதிசயமேதானும் அந்தியாசத்துக்கு வேறதுவாகவில்லை. ஆகாசத்தில், லோபபயாதிகளில்லாதவனுக்கும் நேத்திரத்தில் தோஷமில்லாமலிருந்தும், ஆகாசத்துக்கும் நீலவாணம், சட்டி, கூடாரம், இலைகளுக்கும் சாதிரிசியமில்லாமலிருந்தும், அந்தியாசமுண்டாகிறது போல, ஆத்மாவினிடத்திலும் பந்தாத்தியாசம் தோஷங்களன்றியில் உண்டாகிறது. ஆகையால் தோஷங்களில்லாவிட்டால் பந்தம் அந்தியாசமாகமாட்டாதென்று பூர்வபக்ஷிசொல்லுவது சரியன்று. எனெனில் சகல தோஷங்களில்லாமலிருந்துங்கூட ஆகாசத்தில் நீலவர்ணாதிகளின் அந்தியாசமுண்டாகிறது. இவ்விதமாக தோஷமும் அந்தியாசத்துக்கு வேறதுவன்று. ஆகையால் பந்தாத்தியாசத்தில் தோஷந்தான் அபேக்ஷையில்லை. [48] சம்கேபசாரீரகத்தில் பந்தாத்தியாசத்தைப்பற்றிச்சொல்லுமிடத்தில் [49] தோ

மற்றவனுக்குத்தெரிகிறதில்லை. இதுபோல் எவன் கண்ணிலிருந்து மஞ்சள்வர்ணம் சங்கில் சென்றிருக்கிறதோ அவனுக்குமட்டும் அது தெரிகிறதேதவிர மற்றவனுக்குத்தெரிகிறதில்லை. (உ-ம்) ஆகாயத்தில் பரக்கிறபகூடி எவன் கண்ணுக்குச் சமீபத்திலிருந்துபோகிறதோ அவன் வேறொருவனுக்கு விரலினால் அதைக்காட்டினால் அது அவனுக்கும் தெரியும். இது போல் சங்கிலுள்ளபீதவர்ணம் விரலினற்காட்டப்பட்டாலும் வேறொருவனுக்கும் தெரிகிறதில்லை. ஆகையால் மஞ்சள்வர்ணம் சத்தியமன்று, பிரமைமாத்திரமே. இவ்விதமாகச்சங்கில் மஞ்சள்அந்தியாஸம் சாதிரிசியமன்றியில் உண்டாகுமாட்டாது. தோஷமன்றியில் பிரமை யுண்டாகமாட்டாதென்று மதுசூதனஸ்வாமிகள் அத்வைதசித்தியென்னுங்கிரந்தத்திற் சொல்லியிருக்கிறார். இவ்விடத்தில் யாதொரு தோஷமுமன்றியில் அந்தியாஸமுண்டாவதாகச்சொல்வது பிரொடவாதமே. அதாவது தன்னுடைய உத்கிருஷ்டத்தைச்சொல்வதாகும்.

48. தோஷம் அந்தியாஸத்துக்கு வேறதுவல்லவென்று சொன்னதற்கு அபிப்பிராயமென்னவெனில்:—சகலதோஷங்களுமிருந்தால்தான் அந்தியாஸமுண்டாகுமென்பது நியமமில்லை. ஆனல் எதாவது ஒரு தோஷமிருந்தாலும் அந்தியாஸமுண்டாகும். ஆகாசத்தில் அந்தியாஸமுண்டாவதற்கு மூன்று விததோஷங்களுமில்லை யென்று மேலே சொல்லப்பட்டிருந்தாலும் அவிசுத்தையாகிற ஒரு தோஷமிருக்கிறது. யாதொரு தோஷமுமில்லாவிட்டால் அந்தியாஸமே யுண்டாகமாட்டாது. தோஷமன்றியில் பிரமை யுண்டாகமாட்டாதென்று மதுசூதனஸ்வாமிகள் அத்வைதசித்தியென்னுங்கிரந்தத்திற் சொல்லியிருக்கிறார். இவ்விடத்தில் யாதொரு தோஷமுமன்றியில் அந்தியாஸமுண்டாவதாகச்சொல்வது பிரொடவாதமே. அதாவது தன்னுடைய உத்கிருஷ்டத்தைச்சொல்வதாகும்.

49. அந்தக்கரணத்திலுள்ள அஞ்ஞானத்தின் விக்ஷேபத்துக்கு வேதவான சக்தியிலுள்ள சுபாசுபகர்மங்களின் ஸம்ஸ்காரரூப அதிர்ஷ்டம் பிரமாணதோஷம். சேதனத்தில் வேறு பிரமாதா இல்லாததினால் தன்சொரூபமே பிரமாதா. அதிலிருக்கிற அவித்தையாகிய தோஷம். சேதனத்தில் நிரபேக்ஷ

ஷங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. கிரந்தம் விரியுமென்கிற பயத்தினால் நாமெழுதவில்லை. தோஷம் அத்தியாசத்துக்குரூபதுவாகும் பக்ஷத்தில் அதை யெடுத்துச்சொல்லவேண்டியது. அப்படி ரூபதுவாகாதபக்ஷத்தில் அதைப்பற்றி இங்கே பிரஸ்தாபிக்கவில்லை.

50
காரண அத்தியாச நிரூபணம் (97—98):—(72—73)க்குச்சமாதானம்.

97. 72 க்குச்சமாதானம்:—விசேஷமாக அறியப்படாதவஸ்துவில் அத்தியாசமுண்டாகும். சுயம்பிரகாசமான ஆத்மாவுடன் அஞ்ஞானம் சேர்மாட்டாது. ஏனெனில் இருட்டும் வெளிச்சமும் பரஸ்பரம் விரோதமாயிருக்கின்றன. விசேஷவெளிச்சத்தில் ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாசமுண்டாகாததுபோல் சுயம்பிரகாசமான ஆத்மாவில் பந்தாத்தியாசம் உண்டாகமாட்டாது. இப்படிச்செய்த ஆக்ஷேபம் தரியன்று. ஏனெனில் ஆத்மா பிரகாசரூபமாயிருந்தாலும் அதின் சொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்துக்கு விரோதமாயில்லை. ஆத்மச்சொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்துக்கு விரோதமாகும் பக்ஷத்தில் சுஷுப்தியில் பிரகாசரூப ஆத்மாவின்னிடத்தில் அஞ்ஞானந்தோன்றக்கூடாது. ஆனால் அநுபவத்தில் நல்ல நித்திரையிட்டெழுந்தவன் "நான் சுகமாய்த்தூங்கினேன், பின்தான்றும் அறியவில்லை" என்று அறிகிறான். இந்த ஞானத்துக்குக்காரணமும் அஞ்ஞானமும் விஷயங்களாயிருக்கின்றன. இந்த ஞானம் லௌகிக காலத்தில் பிரத்தியக்ஷமாயில்லை. ஏனெனில் ஞானத்துக்கு விஷயம் எதிரிலிருக்குபோது ஞானம் பிரத்தியக்ஷரூபமாயிருக்கிறது ஆனால் லௌகிக காலத்தில் சுகமும்

ஆந்தரானந்தமிருக்கிறது.:—பிரபஞ்சத்தில் சாபேக்ஷ ஆந்தரானந்தமிருக்கிறது. சேதனம் பாரமார்த்திக வஸ்துவாயிருக்கிறது. பிரபஞ்சம் அநிர்வசனீய வஸ்துவாயிருக்கிறது. ஆந்தரவஸ்து பாயங்களால் சேதனத்துக்கும் பிரபஞ்சத்துக்கும் சாதிரிசியம் சித்திக்கிறது. இதுபிரமேயதோஷம் இந்ததோஷங்கள் ஸம்சேதபரிஹாரத்தைச் சொல்லப்பட்டிருக்கின்றன.

50. பிரபஞ்சத்துக்குக்காரணம் அதிஷ்டானத்தின் விசேஷஜ்ஞானம். இதின்அத்தியாஸம் காரண அத்தியாஸமென்னப்படும் பிரபஞ்சஅத்தியாஸத்துக்குக்காரணம் அஞ்ஞானம். அஞ்ஞான அத்தியாஸத்துக்குக்காரணம் யாதொன்றுமில்லை. ஆகையால் அஞ்ஞானத்துக்கு அத்தியாஸம்சொல்லக்கூடாதென்று ஒருவன் ஆக்ஷேபிக்கும் பக்ஷத்தில் அதற்குச்சமாதானம் என்னவெனில் தீபம்தானும் விளங்கிமற்றபதார்த்தங்களையும் விளக்குவிக்கிறதுபோல அஞ்ஞானம் தன்அத்தியாஸத்துக்கும் பிரபஞ்ச அத்தியாஸத்துக்கும் காரணமாயிருக்கிறது.

அஞ்ஞானமுமில்லாதபடியால் இவைகள் பிரத்தியக்ஷரூபமாகவில்லாமல் ஸ்மரணரூபமாயிருக்கின்றன. இந்தஸ்மரணை அறியப்படாத வஸ்துவிஷயத்திலுண்டாகமாட்டாது, ஆனல் அறியப்பட்டிருக்கிற வஸ்துவிஷயத்திலுண்டாகும். ஆகையால் சுஷுப்தியில் சுகம அஞ்ஞானமிவைகளின் ஞானமிருக்கிறது. இந்தச்சுஷுப்திஞானம் அந்தக்காரணம் இந்திரியமிவைகளாலுண்டாகிறதில்லை. ஏனெனில் சுஷுப்தியில் அந்தக்காரணமுமிந்திரியங்களும் அபாவமாயிருக்கின்றன. ஆகையால் சுஷுப்தியில் ஆத்மச்சொரூபமே ஞானமாக விளங்குகிறது. ஞானமென்றால் பிரகாசம். இவ்விதமாகச்சுஷுப்தியில் பிரகாசரூபமான ஆத்மாவினிடத்தில் சொரூபச்சுகமும் அஞ்ஞானமும் விளங்குகின்றன. ஆத்மச்சொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்துக்கு விரோதமாகும பக்ஷத்தில் சுஷுப்தியில் அஞ்ஞானம்தோன்றக்கூடாது. அப்படித்தோன்றுவதால் ஆத்மாபிரகாசரூபமாயிருந்தும் அதன்சொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்துக்கு விரோதமில்லை. ஆனலோ ஆத்மாவின் சொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்துக்குச்சாதகமாயிருக்கிறது. இவ்வபிப்பிராயத்தினல் தான் வேதாந்தசாஸ்திரத்தில் சாமானிய சைதன்னியம் அஞ்ஞானத்துக்கு விரோதமில்லை யென்றும் விசேஷ சைதன்னிய மே அஞ்ஞானத்துக்கு விரோதமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எங்கும் வியாபித்திருக்கிற சைதன்னியம் சாமானியமென்றும் விர்த்தியிலிருக்கிற சைதன்னியம் விசேஷமென்றும் சொல்லப்படும். கட்டையிலிருப்பது சாமானிய அக்கினி. அது இருட்டுக்கு விரோதமாகவில்லை, கட்டையைக்கடைவதாலுண்டாகும் விசேஷ அக்கினி நிரியிலேற்றப்பட்டு இருட்டுக்கு விரோதமாகிறது. இதுபோல வியாபகசைதன்னியம் அஞ்ஞானத்துக்கு விரோதமாயில்லாவிடினும் வேதாந்த விசாரத்தால் எந்த அந்தக்கரண விர்த்தி பிர்ம்மாகாரமாகிறதோ அதிலிருக்கிற சைதன்னியம் அஞ்ஞானத்துக்கு விரோதமாயிருக்கிறது. இவ்விதமாகக்கேவலசைதன்னியம் அஞ்ஞானத்துக்கு விரோதமாயில்லை: ஆனல் விர்த்திசஹிதசைதன்னியம் அல்லது சைதன்னியசஹிதவிர்த்தி அஞ்ஞானத்துக்கு விரோதமாயிருக்கிறது. முதல் பக்ஷத்தில் அஞ்ஞானநாசத்துக்குச் சைதன்னியம் ஹேதுவாயும் விர்த்தி சாதகமாயும் இருக்கின்றன. இரண்டாவது பக்ஷத்தில் அஞ்ஞானநாசத்துக்கு விர்த்தி ஹேதுவாயும் சைதன்னியம் சாதகமாயுமிருக்கின்றன. இது அவச்சேதவாதத்தின் ரீதியாம். ஆபாச (227) வாதத்திலோ சாமானியசைதன்னியம்போல் விசேஷசைதன்னியமும அஞ்ஞானத்

51. அவச்சேதவாதத்தில் விர்த்திசஹிதசைதன்னியம் அல்லதுசைதன்னியசஹிதவிர்த்தி விசேஷசைதன்னியமென்று சொல்லப்படுகிறது. இது அஞ்ஞானத்துக்கு விரோதியாயிருக்கிறது. ஆவரணத்தைப்போக்கவிர்த்திகாரணமாயிருப்பதால் இரண்டாவதுபக்ஷமே உத்தமம்.

தக்கு விரோதமாகவில்லை. ஆனல் விர்த்திசகித ஆபாசம் அல்லது ஆபாச சகித விர்த்தி அஞ்ஞானத்துக்கு விரோதமாயிருக்கிறது. இவ்விதமாகப் பிரகாசரூபச்சைதன்னியம் அஞ்ஞானத்துக்கு விரோதமாயில்லை. ஆகையால் அஞ்ஞானமைதன்னியத்தை பாசிரயித்துக்கொண்டிருக்கிறது. இந்த அஞ்ஞானத்தால் சூழப்பட்ட ஆத்மாவினிடத்தில் பந்தாத்தியாசமென்னை பரிசரியே.

98. 73 ந்தசீசமாதானம்:— சாமானிய ரூபமாய் அறியப்பட்டும். விசேஷ ரூபமாய அறியப்படாமலுமிருக்கிற வஸ்துவில் அத்தியாசமுண்டாகும். ஆத்மாவில் சாமானிய விசேஷபாவங்களில்லாதகினால் நிர்விசேஷமான ஆத்மா அறியப்பட்டும் அறியப்படாமலும் இருக்கிறதாகச்சொல்லக்கூடாது. அதனிடத்தில் அத்தியாசம் உண்டாகமாட்டாது. இந்த ஆக்ஷேபம் சரியன்று. எனெனில் ஆத்மா இருக்கிறது என்று எல்லாருக்கும் விளங்குகிறது. ஆத்மா என்றால் தன் சொரூபம். தான் இல்லை என்பதாய் ஒருவனுக்கும் தோன்றுகிறதில்லை. ஆனல் தான் இருக்கிறதா யெல்லாருக்கும் தோன்றுகிறது. ஆகையால் ஆத்மா இருக்கிறதென்பதாக எல்லாருக்கும் விளங்குகிறது. ஆனல் சைதன்னியமாயும் ஆனந்தமாயும் வியாபகமாயும் நித்தியசுத்தமாயும் நித்தியமுக்தமாயும் ஆத்மா இருப்பதாக எல்லாருக்கும் விளங்குகிறதில்லை. ஆகையால் சைதன்னியாதி லக்ஷணங்களோடே கூடியதாக ஆத்மா அறியப்படவில்லை. ஆனல் இருக்கிறதாகமட்டும் அறியப்படுகிறது. இது அனுபோகசித்தம். இந்த அனுபோகசித்த வார்த்தையுக்தியால் தள்ளப்படமாட்டாது. எல்லாருக்கும் விளங்குகிற ஆத்மாவின் சத்ரூபம் சாமானிய ரூபமாம். கேவலம் ஞானிகளுக்கு விளங்குகிற ஆத்மாவின் சைதன்னிய ஆனந்தாதிரூபம் விசேஷரூபமாம். அதிக காலத்திலும் அதிக தேசத்திலுமுள்ளது சாமானியமென்றும், சொல்பகாலத்திலும் சொல்பதேசத்திலுமுளளது விசேஷரூபமென்றும் சொல்லப்படும். ஆத்மாவின் சொரூபமே சேதன ஆனந்தாதிகளாயிருப்பதால் சத்ரூபம்போல் சேதன ஆனந்தாதிகளும் எங்கும் வியாபித்திருக்கின்றன. சத்தையபேக்ஷித்துச் சேதன ஆனந்தங்கள் சொல்பதேசத்திலும், இவைகளையபேக்ஷித்துச் சத்ரூபம் அதிகதேசத்திலும் இருப்பதாகச்சொல்லக்கூடாது. ஆகையால் சத்ரூபம் ஆத்மாவின் சாமானிய அம்சமென்றும் சேதனாதிகள் விசேஷாம்சமென்றும் சொல்வதுஞ் சரியன்று. ஆயி

---

52. சூரியனிடத்தில் அந்தகாரம் சேர்த்திராததுபோல் ஸ்வயம்பிரகாசமான ஆத்மாவினிடத்தில் அஞ்ஞானம் எப்படிச்சேரக்கூடும். இந்தஆக்ஷேபம் சரியன்று. ஏனெனில் சூரியாதிஜோதிசள் மகாதேஜஸின் விசேஷரூபங்கள், சாமானியரூபங்களன்று. ஆத்மாவின் ஸ்வரூபம் சாமானியபிரகாசமானது. ஆகையால் அது அஞ்ஞானத்துக்கு விரோதமன்று. ஆகையால் சூரிய திர்ஷ்டாந்தம் சரியன்று.

னும்சத்தின் பிரதி எல்லாருக்கும் அவித்தியாகாலத்திலும் உண்டாகும்
து. ஆத்மாசேதனானந்தாதி ரூபமென்கிற பிரதி எல்லாருக்கும் அவித்தியா
காலத்தினுண்டாகிறதில்லை. கேவலம் ஞானிக்குமட்டும் உண்டாகிறது.
அவித்தியாகாலத்தில் சேதனானந்தாதிகளிருந்தாலுங்கூட அவைகள் பிரதி
தியாகிறதில்லை. ஆனபடியால் இவைகள் அனுபவிக்கப்படாதவைபோலி
ருக்கின்றன. இந்த அபிப்பிராயத்தால் சைதன்னியாதிகள் சொல்பகா
லத்திலிருப்பனவாகவும் சத்ரூபம் அதிககாலத்திலிருக்கிறதாகவும் சொல்ல
ப்படுகின்றன. இவ்விதமாகச்சத்ரூபத்துக்கும் சேதனைகளுக்கும் சாமானி
ய விசேஷ பாவங்களில்லாவிடினும் சொல்பகாலத்திலும் அதிககாலத்தி
லும் தோன்றுவதால் சாமானியவிசேஷபாவங்கள் போல் இவைகளிருக்கி
ன்றன. இக்காரணத்தினால் ஆத்மாவுக்குச்சத்ரூபம் சாமானிய அம்சமென்
றும் சேதனைகள் விசேஷ அம்சமென்றும் சொல்லப்படுகின்றன.

ஆத்மா நிர்விசேஷமென்கிற சித்தாந்தத்துக்கும் ஹானியில்லை
ஆத்மாவில் சாமானிய விசேஷபாவங்களை அங்கீகரிக்கும் பக்ஷத்தில் ஆத்
மா நிர்விசேஷமென்கிற சித்தாந்தத்துக்கு ஹானியுண்டாகும். ஆனால் இந்.
தச்சாமானிய விசேஷபாவங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. அவித்தையா
ல் சாமானிய விசேஷபாவங்கள் போல் பிரதியுண்டாகிறது. ஆகையா
ல்சாமானிய விசேஷபாவங்கள் சொல்லப்படுகின்றன. இவ்விதமாகச்சத்
ரூபத்தால் அறியப்பட்டும், சேதன, ஆனந்த, நித்தியசுத்த, நித்தியமுக்த
நிர்மலரூபமாய் அறியப்படாமலுமிருக்கிற ஆத்மாவினிடத்தில் பந்தாதி
யாசமுண்டாகும். அத்தியாரோபபதத்துக்கு ஞானத்தால் நிவிர்த்தியும
ண்டாகும். ஆகையால் கிரந்தத்தில் பிரயோஜனம் சித்திக்கிறது.

கர்மத்தால் மோக்ஷம் சித்திக்காமாட்டாது. (99—106)

99. 77—82பிரிவுகளின் ஆக்ஷேபசாருக்யம்:— நிஷித்தகாம்யகர்ம
ங்களைத்தியாகஞ்செய்து நித்தியநைமித்திகப் பிராயச்சித்த கர்மங்களைச்செ
ய்யவேண்டியது. நிஷித்தகர்மம் இல்லாததினால் நீசலோகமும் காம்யக
ர்மம் இல்லாததினால் உத்தமலோகமும் அடையப்படமாட்டா. நித்திய
நைமித்திக கர்மங்களைச்செய்யாததினாலுண்டாகும் பாபம் இவைகளைச்செ
ய்கிறதினாலுண்டாகிறதில்லை. இந்த ஜன்மத்திலாவது முன் ஜன்மங்க
ளிலாவது செய்தபாபங்கள் சாதாரண அசாதாரணப் பிராயச்சித்தங்களால்
நிவிர்த்தியாகின்றன. முன்செய்த காம்யகர்மங்களின் பலன்களில் இச்சை
யிப்போதில்லாததினால் முமுக்ஷுவுக்கு அவைகள் பலன் கொடுக்கிறதில்
லை. ஆகையால் முமுக்ஷுவுக்கு ஞானமன்றியிலும் ஜன்மாபாவரூபமான
மோக்ஷம் சித்திக்கும்.

100. 77க்குத் சமாதானம்:—மேற்சொன்ன ஆக்ஷேபம் சரியன்று
னெனில் நித்தியநைமித்திக கர்மங்களுக்கும் சுவர்க்கரூப பலனுண்டு.

இதுபாவியக்காரரால் யுக்தியினலும் பிரமாணத்தினலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நித்தியனைமித்திக கர்மங்களால் உத்பத்தியோகம அடையப்படுகிறதேதவிர ஜன்மாபாவம் சித்திக்கமாட்டாது. மேலும் நித்திய கர்மங்களின் பலத்தை அங்கீகரிக்காதபக்ஷத்தில் இவைகளைப் போதிக்கிறவேதம் நிஷ்பலமாய்விடும். ஏனெனில் நித்தியனைமித்திக கர்மங்களைச் செய்யாததினல் பாபமுண்டாகும் பக்ஷத்தில் அவைகளைச் செய்யுதினல் பாபமுண்டாகாமலிருப்பதே அவைகளின்பலனாகும். ஆனல் நித்தியனைமித்திகங்களைச் செய்யாததினல் பாபமுண்டாகிறதில்லை. ஏனெனில் அவைகளைச் செய்யாமலிருப்பது அபாவரூபம், பாபம பாவரூபம். அபாவத்திலிருந்து பாவமுண்டாகமாட்டாது. ஆகையால் நித்தியனைமித்திககர்மங்களைச் செய்யாததினல் பாபமுண்டாகுமென்று சொன்னது சரியன்று. அப்படிப்பாபமுண்டாகும் பக்ஷத்தில் "அபாவத்திலிருந்து பாவமுண்டாகமாட்டாது" என்ற நியமயின் 2வது அத்தியாயத்தில்[54] பாவான் சொன்ன வார்த்தைக்கு விரோதமாகும். ஆகையால் நித்தியனைமித்திகர்மங்களின் அபாவத்தால் பாவரூப பாபமுண்டாகமாட்டாது. இவ்விதமாக நித்தியனைமித்திக கர்மங்களுக்குப் பாபமுண்டாகாமலிருப்பதே பலன் அன்று. ஆனல் அவைகளன்றியிலும் பாபமுண்டாகாமலிருக்கும். ஆகையால் நித்திய னைமித்திக கர்மங்களின் சுவர்க்கரூபபலனை அங்கீகரிக்காதபக்ஷத்தில் கர்மம் நிஷ்பலமாய்விடும். நிஷ்பலகர்மத்தைப் போதிக்கிறவேதமும் நிஷ்பலமாய்விடும். ஆகையால் நித்தியனைமித்திக கர்மங்களாலுண்டாகும் சுவர்க்கபலனுண்டாகிறது.

101. 78—79 க்குச் சமாதானம்:— பிராயச்சித்தத்தினல் சகலமான அசுபகர்மங்களும் நாசமாய்விடுமென்று சொன்னது சரியன்று. ஏனெனில் அனேக கல்பங்களிற் செய்த அசுபகர்மங்கள் ஒரு ஜன்மத்தில் பிராயச்சித்தத்தால் நிவிர்த்தியாகமாட்டா. சர்வபாபங்களையும் நாசம்பண்ணுகிறகங்காஸ்நானம் சுவரகாமோச்சாரணம் முதலிய சாதாரணப்பிராயச்சித்தங்களும் ஞானத்துக்கே சாதனமாயிருக்கின்றன. ஆகையால் அவைகள் சகலபாபங்களையும் நாசஞ் செய்வதாகச் சொல்லப்படுகின்றன. ஆகையால் ஞானத்தினலேயே சகல பாபங்களுக்கும் நாசமுண்டாகிறது.

102. 80-க்குச் சமாதானம்:— ஜன்மாந்திரத்தின் காமியகர்மபலத்தில் இச்சையில்லாததினல் அநுதக்கர்மம் பல்னைகொடுக்கமாட்டாதென்ற

53. ஸ்ரீ சங்கராசாரியர்.

54. பகவத்கீதையின் 2-வது அத்தியாயத்தின் 16-வது சுலோகத்தைப் பார்க்க.

சொன்னது சரியன்று. ஏனெனில் கர்மரூபமான வினையினின்று இரண்டு முளைகளுண்டாகின்றன. ஒன்று வாசனை மற்றொன்று அதிஷ்டம். கர்மாகர்மங்களுக்கு அதிஷ்டமென்று பெயர். சுபகர்மத்திலிருந்து சுபவாசனையும் கர்மரூபமுளைபுறுண்டாகின்றன. அசுபகர்மத்திலிருந்து அசுபவாசனையும் அதன்மரூபமுளையுமுண்டாகின்றன. சுபவாசனையால் சுபகர்மத்தில் பிரவிர்த்தியுண்டாகிறது. கர்மத்தால் சுகபோகமுண்டாகிறது. இப்படியே அசுபவாசனையால் அசுபகர்மத்திற் பிரவிர்த்தியும் அதர்மத்தால் துக்கானுபோகமுமுண்டாகின்றன. இவ்விதமாக வாசனைரூபமாயும் அதிஷ்டரூபமாயும் இருக்கப்பட்டமுளைகள் கர்மரூபவித்தினின்று முண்டாகின்றன. இவைகளில் வாசனைரூபமுளை உபாயத்தால் நாசமடைகிறது. அதிஷ்டரூபமுளை பலத்தைக்கொடுக்காமல் யாதொரு உபாயத்தாலும் நாசமடைகிறதில்லை. இது சாஸ்திரசித்தாந்தம். அசுபகர்மத்தினின்றும் உண்டாகிற அசுபவாசனைரூபமுளை சத்சங்காதியுபாயங்களால் நாசமடைகிறது. சுபகர்மத்தினின்று முண்டாகிற சுபவாசனைரூபமுளை துற்சங்கத்தால் நாசமடைகிறது. போகத்துக்கு ஹேதுவான அதிஷ்டம் நாசமடைகிறதில்லை. ஆகையால் பலத்தைக்கொடுக்காமல் கர்மம் நிவிர்த்தியாகிறதில்லையென்று சாஸ்திரத்திற் சொல்லியதற்கு விரோதமில்லை. இவ்விதமாக அஞ்ஞானிக்குப்போகமன்றியில் கர்மம் நிவிர்த்தியாகமாட்டாது. ஞானிக்கோ போகமன்றியிலும் கர்மம் நிவிர்த்தியாகிறது. ஏனெனில் கர்மம், கர்த்தா, பலன், இம்மூன்றும் பாரமார்த்திகமாயில்லை: ஆனல் அவித்தையால் கல்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அவித்தைக்கு ஞானம் விரோதம். ஆகையால் அவித்தியா கல்பிதகர்மங்களும் ஞானத்தால் நாசமாகின்றன. சொப்பனத்தில் நித்திரையில் தோன்றும் பதார்த்தம் ஜாக்கிரத்காலத்தில் நித்திரையில்லாதினல் தோன்றுதுபோல, அவித்தியாரூபநித்திரையில் தோன்றும் கர்மம் கர்த்தா பலன் மூன்றும் ஞானரூப ஜாக்கிரத்காலத்தில் அவித்தியா நிவிர்த்தியால் அபாவமாயிருக்கின்றன. ஞானமன்றியில் இவைகளுக்கு நாசமில்லை. மேலும் இச்சையில்லாதினல் கர்மபலத்தின் போகமுண்டாகமாட்டாதென்று சொல்லும் பக்ஷத்தில் சுவரசங்கல்பம் மித்தையாய்ப்போய்விடும. எனெனில் பலபோகமன்றியில் அஞ்ஞானிக்குக் கர்மம் நிவிர்த்தியாகமாட்டாதென்பது சுவர சங்கற்பம். இச்சையில்லாதினல் கர்மம் பலிக்காத பக்ஷத்தில் சுவர சங்கல்பம் பொய்யாய்விடும். சுவரன் சத்தியசங்கற்பனுயிருக்குமென்பது விஷயம் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இச்சையில்லாதினல் முன்செய்த காமியகர்மம்பலிக்காதென்பது விருத்தம். இச்சையில்லாதினலேயே காமியகர்மம் பலிக்காதபக்ஷத்தில் அசுபகர்மத்தின் பலன் ஒருவருக்குமுண்டாகக்கூடாது. ஏனெனில் அசுபகர்மத்

தின் பலனுகிற துக்கத்தில் ஒருவனுக்குமிச்சையுண்டாகிறதில்லை. ஞானத்தால் ஞானம் இல்லாவிட்டால் கர்மபலன் உண்டாகாமற்போகாது. கர்மம் பலத்தைக்கொடுத்தேதீரும்.

103. கர்மானுஷ்டான காலத்தில் இச்சையில்லாதவனுக்குக்கர்மம் பலிக்காதென்று வேதாந்தத்திற் சொல்லியிருப்பதுபோல் கர்மானுஷ்டானத்துக்குப்பிறகும் இச்சையில்லாதவனுக்குக்கர்மபலன் உண்டாகயாட்டாதென்று முன் (82) சொன்னது வேதாந்தசித்தாந்தத்தைத்தெரிந்து கொள்ளாமற் சொன்னதுதான. ஏனெனில் பலத்தில் இச்சையுடன் கர்மம் செய்தவனுக்கும இச்சையில்லாமற் கர்மம் செயதவனுக்கும் கர்மம் பலத்தை நிச்சயமாயக்கொடுத்தேதீரும். ஆனல் இச்சையில்லாத காமத்தினல் அந்தக்காரணம் சுத்தமாகிறது. இச்சாசகிதகர்மஞ்செய்கிறவனுக்குக்கேவலம் போகமுண்டாகிறதேதவிர அந்தக்காரணம் சுத்தமாகிறதில்லை. இச்சையில்லாமற் கர்மத்தைச்செய்கிறதினல் அந்தக்காரணஞ்சுத்தமாகிச்சிரவணத்தினல் ஞானமுண்டானவனுக்குக்கர்மத்தின் பலனுண்டாகயாட்டாது. மேலும் பலாபேக்ஷையன்றியில் கர்மம் செய்தும் சிரவணமில்லாதநிலாவது அல்லது வேறு காரணத்தினலாவது ஞானமுண்டாகாதவனுக்கு இச்சையில்லாத கர்மபலத்தின் போகமும் நிவிர்த்தியாகயாட்டாது. இது வேதாந்தசித்தாந்தம். ஆகையால் ஞானமில்லாவிட்டால் கர்மபலபோகம் நிவிர்த்தியாகயாட்டாது.

104. 82-ம்சூத்ரமாதானம்:— நித்தியநைமித்திக கர்மங்களைச்செய்கிறதினல் உண்டாகும் கிலேசம் பூர்வசஞ்சித நிஷித்தகர்மங்களின் பலனைக்கழிருப்பதால் இவைகளுக்கு வேறு பலனில்லையென்று சொன்னது சரியன்று. ஏனெனில் சஞ்சித நிஷித்தகர்மங்கள் பலவிதமாயிருப்பதால் அவைகளின் பலனுகிற துக்கமும் பலவிதமாயிருக்கிறது. கர்மானுஷ்டானத்தாலுண்டாகிற கேவலங்கிலேசத்தையே அவைகளின் பலனுகச்சொல்லக்கூடாது.

105. மேலும் சகலமானசஞ்சித காமியகர்மங்களால் ஒருசரீரமுண்டாகுமென்று முன் (82) சொன்னதும் சரியன்று. ஏனெனில் சஞ்சித காமியகர்மங்கள் அநேகம். அவைகளின் பலன்களை ஒரு ஜன்மத்தில் அனுபவிக்கமுடியாது. மேலும் அனேகசரீரங்களிலுண்டாகும் போகங்களை ஒருவன் ஏகாலத்தில் அனுபவிக்கலாமென்று சொன்னவியமும் சித்தயோகிக்குப்பொருந்துமேயன்றி மற்றவர்கட்குப்பொருந்தாது. சித்தயோகிக்குங்கூட எல்லாச்சாமர்த்தியங்களுமிருந்தாலும் ஞானமல்லியில் மோக்ஷம் லபிக்காதென்பது வேதாந்தசித்தாந்தம்.

106. முடிவு:— இவ்விதமாகக்காமியகர்மங்களையும் நிஷித்தகர்மங்களையும் விட்டுக்கேவலம் நித்தியநைமித்திக கர்மங்களைச்செய்கிற அஞ்

ஞானிக்கு நித்தியநைமித்திக கர்மங்களின் பலனையனுபவிக்கிறதற்கும் முன் செய்தசுபாசுபகர்மங்களின் பலனை அனுபவிக்கிறதற்கும் அசோகசரீரங்கள் உண்டாகுமேதவிர மோகமுமுண்டாகிறதில்லை. ஆகையால் ஞானமூலமாசப்பந்தம் நிவிர்த்தியாவதே கிரந்தத்தின் யிரயோஜனமென்று சொன்னது சரிதான். சொப்பனத்தில் தோன்றுகிற பொய்ப்பொருள் ஜாக்கிரதமன்றியில் நிவிர்த்தியாகாததுபோல அஞ்ஞானத்தில் தோன்றுகிற பொய்யான பந்தமும் ஞானரூபஜாக்கிரதமன்றியில் நிவிர்த்தியாகமாட்டாது.

சம்பந்தவிஷயமாயும் ஆக்ஷேபம்.

107. அதிகாரி முதலியவை சித்திக்காததினால் சம்பந்தமும் சித்திக்கவில்லை. ஏனெனில் (1) விஷயம் சித்திக்காததினால் கிரந்தத்துக்கும் விஷயத்துக்குமுள்ள பிரதிபாத்தியப்பிரதிபாதகபாவசம்பந்தம் சித்திக்கவில்லை. (2) கிரந்தத்துக்கும் ஞானத்துக்கும் ஜன்யஜனகபாவசம்பந்தம், ஞானம் நிஷ்பலமாய்ப்போவதால், சித்திக்கவில்லை. ஸபலமானவஸ்து ஜனிக்கக்கூடும். முன் சொன்னபடி ஞானம் ஸபலமன்று. மேலும் ஞானத்துக்குச்சொரூபமில்லாமையாலும் ஞானத்துக்கும் கிரந்தத்துக்கும் சம்பந்தமுண்டாகமாட்டாது. ஏனெனில் ஜீவப்பிரம்மங்களின் அபேதநிச்சயத்துக்குச் சித்தாந்தத்தில் ஞானமென்றுபெயர். ஜீவப்பிரம்மங்களின் அபேதம் இல்லாததினால் அந்தநிச்சயம் பிசகென்று விஷயப்பிரஸ்தாபத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அபேதநிச்சயரூபமான ஞானம் சித்திக்கிறதில்லை. (3) அதிகாரி சித்திக்காததினால் அதிகாரிக்கும் விசாரத்துக்குமுள்ள கர்த்ருகர்த்தவ்யபாவசம்பந்தஞ்சித்திக்கவில்லை. (4) அதிகாரியும் பலனுமில்லாமையால் இவைகளுக்குள்ள பிராப்பியப்பிராபகபாவசம்பந்தஞ்சித்திக்கவில்லை. இவ்விதமாக அதிகாரிமுதலிய அனுபந்தசதுஷ்டயம் சித்திக்காததினால் கிரந்தாரம்பம் நிஷ்பிரயோஜனம்.

108. 107-க்குச் சமாதானம்:— மேற்சொல்லியபடி, கிரந்தத்துக்கு அதிகாரி, விஷயம், பிரயோஜனம், இவைகள் சம்பவிக்கிறபடியால் இவைகளின் சம்பந்தமும் சம்பவிக்கிறது. ஆகையால் கிரந்தம் ஆரம்பிக்கத்தக்கது.

அனுபந்தவிசேஷநிரூபணமென்னும்

2-வது தாரம்.

முற்றும்.

விசாரசாகரம்.

3-வது தரங்கம்.

குருசிஷ்ய இலக்ஷணம்.

கிரந்தத்தை ஆரம்பிக்கிறதாக பிரதிஜ்ஞை.

109. அனுபந்த சதுஷ்டயத்தை நன்றாய்அறிந்து ஞானத்துடன் கூடிய குருவிடத்தில் எவன் கிரந்தத்தைப் படிக்கிறானே அல்லது சுவணமாய்க் கேட்கிறானே அவன் மோக்ஷத்துக்குமாக்கமான ஞானத்தையடைவான்.

குருசிஷ்யஸம்வாதத்தால் அர்த்தநிரூபணம் பண்ணுவதால் கேட்போருக்குப்போதஞ்சுலபமாயுண்டாகும். இந்தகாரணத்தால் குருசிஷ்ய விஷயமாகக்கிரந்தமெழுதப்படுகிறது.

குருலக்ஷணம்.

110. வேதாத்தியயனஞ்செய்து அதன் பொருளை யறிந்தும் ஜீவப்பிர்ம்மஐக்கியநிச்சயத்தால் ஆத்மஞானியாயிருக்கப்பட்டவரே குருவாம்.[1] வேதாத்தியயனமட்டுஞ்செய்து ஆத்மஞானமடையாதவர் குருவாகார். ஆத்மஞானமடைந்தும் வேதாத்தியயனமில்லாதவர் தான் முக்தாயினும் பிறருக்கு உபதேசஞ்செய்பதக்க குருவாகார். ஏனெனில் ஜிஞ்ஞாசுவின் சந்தேகங்களைப்போக்க இவருக்கு யுக்திகள் தோன்றுகிறதிலலை. சந்தேகமற்ற உத்தம ஸமஸ்காரதத்துடன் கூடிய ஜிஞ்ஞாசுவை யுபதேசிக்க இவர் சமர்த்தராணலும் எல்லாருக்கு முபதேசிக்கச்சக்தராகாமையால் இவர ஆசாரியராசமாட்டார். ஆகையால் வேதாத்தியயனம் பண்ணினவரும் ஆத்மஞானமுள்ளடையவருமே ஆசாரியரென்று சொல்லப்படுவார். அவர் சிஷ்யனுடைய புத்தியில் தோன்றுகிற ஐந்துவிதப்பேதங்களையும் நாணுவித யுக்திகளால்[2] போக்கடிப்பதிற்

---

1. வழிதெரிந்தவன் வழியைக்காண்பிக்கக்கூடும். அப்படியே பிர்ம்ம ஸ்வரூபத்தை யறிந்தவன் உபதேசிக்கத்தக்கவன்.

2. ஐந்து பேதங்களைக் கண்டிக்கும் யுக்திகள்:- (1) தடாஸ்ய

சமர்த்தாவார். அப்பேதங்களாவன:— [1] ஜீவாசுவரபேதம். [2] ஜீவர்களுர் பரஸ்பரபேதம். [3] ஜீவஜடபேதம். [4] ஈசுவரஜடபேதம். [5] ஜடஜடபேதம். இப்பேதங்களை அவர் கண்டிக்கக் கூடியவர். ஏனெனில் பேதம் பயத்துக்குக் காரணம். ஆகையால் பேதத்தை யவசியம் போக்கவேண்டியது. இப்படிச்செய்வதினல் அத்வையமாயும் அவிக்தியமாயும் மலரகிதமாயும் இருக்கப்பட்டப்பிரம்மமே தானென்று சிஷ்யன் சாக்ஷாத்காரமாய் அறியும்படிச்செயகிறார். சகலசமுசாரத்தையும் பொய்யென்று அறியும்படிச்செய்கிறார். இப்பேர்ப்பட்ட அற்புதமான உபதேசத்தைச்செய்யப்பட்டவர் ஆசாரியரென்று சொல்லப்படுகிறார். ஞானமன்றியில் தன் தலையை மொட்டையடித்துக்கொண்டுமை சிஷ்யனையுமிப்படிச்செய்வித்தும் வேறு சம்பிரதாயப்படி வேறு சின்னங்களைத்தரிக்கும்படிச் செய்தும் வரப்பட்டவர் ஆசாரியராகார். சமூசாரமாகிற முதலையாயினின்றும் விடுவிக்கிறவராயும் சுத்தஞ் போதனைசெய்கிறவராயும் மிருக்கிறவரே குருவென்றும் வேதாந்தி குருவென்றும் அறிந்தார்கள் சொல்வார்கள்.

111. **சிஷ்யலக்ஷணம்:**— நிரந்தரநிற்பிரவிர்த்தியுண்டாவதற்காக முந்தின தரங்கங்களில் அதிகாரிக்குச் சொல்லப்பட்டிருக்கிற சாதனங்களுடன் கூடியவனே சிஷ்யனுவான்.

112. **குருபக்திபலன்:**— குருவினிடத்தில் ஈசுவரனிடத்தில் வைப்பதைவிட அதிக பக்தி வைக்கவேண்டியது. ஏனெனில் சகல சாஸ்திரங்களையும் அறிந்தவனுங்கூட குருவுபதேசமன்றியில் ஞானமடைகிறதில்லை. இது அடியிற் கண்ட திருஷ்டாந்தத்தால்விளங்கும்:—

113. வேதரூபமான சமுத்திரங்குருவன்றியில் கூரமாயிருக்கிறது. கூர சமுத்திரத்தில் விழுந்தவன் அந்தஜலத்தைப் பானஞ்செய்துதிகவலந் துக்கத்தை யனுபவிக்கிறது போல் குருவன்றியில் வேதாந்தத்தை விசாரிக்கிறவன் வேதரூபமான கூரதத்தை யனுபவித்து ஜனன

டாசாசங்களின் பேதம்போல் ஜீவேசுவரர்களின் பேதம் அவித்தியாமாயாரூப உபாதிகளாலுண்டாவதால் கல்பிதம். (2)அநேகஜடாகாசங்களுடைய பேதம் போல ஜீவர்களுடைய பரஸ்பரபேதம் ஆபாஸசித அந்தக்கரணரூப உபாதிகளாலுண்டாவதால் கல்பிதம். (3)ஜீவஜடங்களின் பேதம் ஸாபாஸ அந்தக்கரண நிராபாஸநாமரூபஉபாதிகளாலுண்டாவதால் கல்பிதம். (4) ஈசுவரஜடபேதம் ஸ்பாஸமாயை நாமரூப உபாதிகளாலுண்டாவதால் கல்பிதம். (5) ரத்தூலில் கல்பித சர்ப்பதண்டாதிகளின் பேதம்போல் ஜடஜடங்களின் பேதம் நாமரூப உபாதியாலுண்டாவதால் கல்பிதம்.

3. ஜனனமரணரூபபயம்.

மரணரூபமான துக்கத்தை யடைகிறான். இக்காரணத்தினல் ஜோமான ஜ்ரீ மந்துவாசாரியர்முதலிய அனேகர் வேதார்த்தத்தை விசாரித்தும் குருமுக மாக விசாரிக்காததினல் வேதவிஷயத்தில் நிச்சயத்தை யடைந்து ஜாதம ரணரூபமான துக்கத்தை யடைகிறார்கள்; முக்தரூபமான ஆனந்தத்தை யடைகிறதில்லை. ராமானுஜாதிகள் வேதத்தைத்தாங்கள் குருமுகமாய் விசாரித்து வியாக்கியானங்களைச்செய்திருந்தாலும் எவர்கள் மூலமாய் விசாரித்தார்களோ அவர்கள் குருவாகார்கள். ஏனெனில் ஜீவப்பிரம்ம ஐக்கியத்தை யுபதேசிக்கிறவனே குருவென்று முன் குருலக்ஷண (110)த்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு உபதேசித்தவர்கள் ஜீவப்பிர ம வேதத்தை யுபதேசித்திருப்பதால் அவர்கள் விஷயத்தில் ப்ரயோகிக்கும் குருசப்தம் ஜயிஸ்தர்கள் தங்கள் ஆசாரியர்விஷயத்தில் ப்ரயோகிக்கும் குரு சப்தம் போலாம். ஜயிஸ்தர்கள் போல் வேதவாதிகளின் சிஷ்யர்களும் தங் களுக்கு வேதோபதேசஞ் செய்கிறவர்களை குருவென்று சொல்லுகிறார்க ள். ஆனல் அவர்கள் குருமாராகார். ஆகையால் ராமானுஜாதி வேத வாதிகள் குருமுகமாக விசாரித்தவர்களாகார். இக்காரணத்தால் வேதத் தில் அபிமானம் வைத்து ஜனனமரணரூபதுக்கத்தை யடைகிறார்கள். இ ப்படியே முன் சொல்லிய லக்ஷணங்களுடன் கூடிய குருவண்டியில் சுவய மாக வேதார்த்தத்தை விசாரிக்கிறவர்களும், வேதவாதிகளிடத்தில் விசாரி க்கிறவர்களும் வேதாந்தத்தை யநுபவித்து ஜனனமரணரூபதுக்க த்தை யநுபவிக்கிறார்கள். வேதம் பிரம்மவித்தாயிருக்கிற குருவினிடத் தில் விசாரிக்கிறபோதன்றி துக்கநிவர்த்தியைக் காட்டிலும் அதிக ஆனந்தத்தை க்கொடுக்க வேறு நாதம் இல்லாதிருக்கிறது. இயல்பாயுப்பாயிருக்கிற சமுத்திரஜலம் பாத்திரங்களில் நிரப்பப்பட்டால் உப்பாயும் வேதங்க ளால் நிரூபிக்கப்பட்டு வர்ணிக்கப்பட்டால் பதரபாயுபிருப்பாதுபோல் வேதார்த்தமும் குருவண்டியில் விசாரிக்கப்பட்டால் ஜனனமரணதுக்கத் துக்குஹேதுவாயும் பிரம்மஞானிபினிடத்திலிருந்து நிரூபிக்கப்பட்டால் ஆனந்தத்துக்கு ஹேதுவாயும் இருக்கிறது. ஆகையால் உண்மையான கு ருவினிடத்தில்தான் வேதார்த்தத்தைக்கேட்கவேண்டியது.

114. பாஷாக்கிரந்தத்தினலும் ஜ்ஞானமுண்டாகாதும்:— ஆக்ஷேபம்:— ஞா னியினிடத்திலிருந்து வேதத்தைக் கற்க வேண்டுமென்று மேற் பிரிவிற் சொன்னதினல், வேதவாக்கியங்களுக்கு ஜீவப்பிரம்மைக்யங்களின் சொரூ பத்தை விசாரிக்கிறதினல் ஞானமுண்டாகுமேயொழிய வேறு ஸம்ஸ்கிருத க்ரந்தங்களாலாவது இதர பாஷாக்ரந்தங்களாலாவது ஞானமுண்டாக மாட்டாது என்று சந்தேகம் ஜனிக்கிறது. ஆகையால் இது இதர பாஷா க்ரந்தங்களிலொன்றுகையால் இதை யாரம்பிப்பது நிஷ்ப்ரயோஜனம்.

இதற்குச் சமாதானம்:—பிரம்மத்தை யறிந்தவனே பிரம்மரூபமென்

---

4. பாஷாக்கிரந்தத்தால் ஞானமுண்டாகாதென்று சொல்லுகிறவனுக்கு ஒரு கேள்வி:—பாஷாக்கிரந்தம் வேதானுசாரமாயில்லை. ஆகையால் அதிலுள்

து வேதத்திற் பிரசித்தமாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அ வனுடைய வாக்கு வேதரூபமாயிருக்கிறது. அந்த வாக்கு ஸம்ஸ்கிருத மாயாவது இதர பாஷையாயாவது இருக்கக்கூடும். அது எப்போதும் பேதபிரமையைப் போக்கிவிக்கிறது. வேதவசன மாத்தியில் ஞானம் உ ண்டாகமாட்டாதென்பது நியமமில்லை. ஆயுள்வேதத்திற் சொல்லிய ரோகங்கள் அவைகளின் ஸ்தானங்கள் ஔஷதங்கள் இவைகளின் ஞானம் இதர ஸம்ஸ்கிருதகிரந்தங்களாலும் இதரபாஷாக்கிரந்தங்களாலும் உ ண்டாவதுபோல எல்லாவற்றிற்கும் ஆத்மாவாகிய பிரம்மத்தின் ஞான மும் பாஷாக்கிரந்தங்களாலுமுண்டாகும். சர்வஜ்ஞர்களான முனிக ளும் மகரிஷிகளும் ஸ்மிருதி புராண இதிஹாசங்களிலும் பிரம்மவித்தை யைப்பற்றி விவரித்திருக்கிறார்கள் வேதமாத்தியில் ஞானமுண்டாகாதபக்ஷத்தில் ஸ்மிருதியாதிகளில் அவைகள் சொன்னதெல்லாம் வியர்த்தமாய்ப்போம். ஆகையால் ஆத்மாவின் சொரூபத்தைப் பிரதிபாதிக்கிறவாக்கிய

ஞானமுண்டாகவில்லை யென்கிறாயா!(2) அல்லது பாஷாரூபமாயிருப்பதால் ஞா னமுண்டாகமாட்டாதென்கிறாயா! (3) அவதாரபுருஷனால் செய்யப்படாமை யால் ஞானமுண்டாகமாட்டாதென்கிறாயா! (4) அசுத்தமாயிருக்கிறதினால் ஞா னமுண்டாகமாட்டாதென்கிறாயா! வேதத்தை யனுசரிக்கவில்லை யென்று சொல் லும்பக்ஷத்தில் வேதவசனத்தை யனுசரிக்கவில்லையா! அல்லது வேதஅர்த்தத்தை யனுசரிக்கவில்லையா. வேதவசனத்தை யனுசரிக்கவில்லையென்று சொல்லும்ப க்ஷத்தில் இதர ஸம்ஸ்கிருதக்கிரந்தங்களும் இப்படியே யிருப்பதால் இவைகளா லும் ஞானமுண்டாகக்கூடாது. வேதார்த்தத்தை யனுசரிக்கவில்லை யென்று சொல்லும்பக்ஷத்தில் அது சரியன்று. ஏனெனில் எப்படிச்சில ஸம்ஸ்கிருதக்கி ரந்தங்கள் வேதார்த்தத்தை யனுசரித்திருக்கின்றனவோ அப்படிச் சில பிராக்கிரு தக்கிரந்தங்களும் வேதார்த்தத்தை யனுசரித்திருக்கின்றன. ஆகையால் ஆயுள்வே தத்தை யனுசரித்த இதர ஸம்ஸ்கிருத பிராக்கிருதக்கிரந்தங்களால் ஔஷதாதி களின் ஞானமுண்டாவதுபோல் வேதார்த்தத்தையனுசரித்த ஸம்ஸ்கிருதப்பிரா கிருதக் கிரந்தங்களாலும் ஞானமுண்டாகும். பாஷாக்கிரந்தம் பாஷாரூமாயிருப் பதால் ஞானமுண்டாகமாட்டாதென்று சொல்லும்பக்ஷத்தில் எப்படி ஸம்ஸ்கிரு தம் தேவபாஷையோ அப்படிப்பிராக்கிருதம் மனுஷ்யபாஷை. பாஷை இரண் டுக்கும் பொதுவாயிருக்கிறது. பாஷாக்கிரந்தம் அவதாரபுருஷனற் செய்யப் படாததினால் ஞானமுண்டாகாதென்று சொல்லும்பக்ஷத்தில் சில ஸம்ஸ்கிருதக் கிரந்தங்கள் அவதாரபுருஷர்களாற் செய்யப்படவில்லை. ஆகையால் அவைக ளாலும் ஞானமுண்டாகக்கூடாது. பாஷாக்கிரந்தம் அசுத்தமென்று சொல்லும் பக்ஷத்தில் எப்படிப் பாஷாக்கிரந்தத்தில் லகுஸ்தானத்தில் குருவும் குருஸ்தான த்தில் லகுவும் உபயோகப்படுத்தப்படுகின்றனவோ அப்படியே ஸம்ஸ்கிருதத்தி லும் அசுத்தங்களிருக்கின்றன. அசுத்தம் இரண்டுக்கும் பொது. இவ்விதமாக ப்பாஷாக்கிரந்தத்தால் ஞானமுண்டாகமாட்டாதென்று சொல்வது மூடமாத்தி ரந்தான். இந்த அபிப்பிராயத்தால் ஏகநாதசுவாமி முதலிய மகான்கள் அநேகப் பிராக்கிருதக்கிரந்தங்களை பரோபகாரார்த்தம் செய்திருக்கிறார்கள்

த்தினுல்ஞானமுண்டாகும். அந்தவாக்கியம்வேதமானலும்இதர பாஷை யானலும் சரிதான். இதனல் பாஷாக்கிரந்தத்தினலும் ஞான முண்டாகு மென்று சித்திக்கிறது.

115. குருசேவை:— எந்தப்பிர்ம்மவித்தின் வாக்கு வேதவ சனத்துக்குச்சமானமாயிருக்கிறதோ அந்தப்பிர்ம்மவித்தாகிற ஆசாரியனை ஜிஞ்ஞாசுவானவன் சேவிக்கவேண்டியது. ஏனெனில் சேவையினல் குருவானவர் பிரஸன்னராகும்போது ஜிஞ்ஞாசுவானவன் தன்னிஜ ரூபத்தை யறிந்துகொள்ளுகிறன். இதனல் அறியத்தக்கதென்னவெனில் குருசேவை ஈசுவராசேவையைவிட விசேஷமென்பதே. ஏனெனில் ஈசுவர சேவை அதிர்ஷ்டபலத்துக்குமட்டில் ஹேதுவாயிருக்கிறது. குருசே வையோ அதிர்ஷ்ட திர்ஷ்ட பலங்களுக்கும் ஹேதுவாயிருக்கிறது. தர் மாதர்மங்களை உற்பத்திசெய்வதின்மூலமாகப்பலத்துக்கு ஹேதுவா யிருப்பது, அதிர்ஷ்ட பலத்துக்கு ஹேதுவென்றும், தர்மாதர்மங்களை யுற்பத்தி செய்யாமலே சாக்ஷாத்தாய்ப்பலத்துக்கு ஹேதுவாயிருப்பது திர்ஷ்ட பலத்துக்கு ஹேதுவென்றும் சொல்லப்படும். ஈசுவரசேவை தர்மத்தை யுற்பத்தி செய்வதின்மூலமாக அந்தக்காரணத்தின் சுத்தியாகிற பலத்துக்கு ஹேதுவாகிறது. ஆகையால் ஈசுவரசேவை அதிர்ஷ்ட பலத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. குருசேவை தர்மாபேக்ஷையன்றி யில் ஆசாரியருடைய பிரசன்னதையால உபதேசரூபபலத்துக்கு ஹேது வாயிருக்கிறது. ஆகையால் திர்ஷ்டபலத்துக்கு ஹேதுவாயிருக்கிறது மேலும் குருசேவை தர்மத்தை யுண்டுபண்ணுகிறதுமூலமாக அந்தக்க ரணசுத்தியாகிற பலத்துக்கும் ஹேதுவாகிறது. இதனல் அதிர்ஷ்ட பலத்துக்கும் ஹேதுவாகிறது. இவ்விதமாக ஆசாரியசேவை ஈசுவர சேவையைவிட உத்தமமாயிருக்கிறது. ஆனதினல் ஜிஞ்ஞாசுவானவன் எவ்விதத்திலும் பிர்ம்மவித்தான குருவைச்சேவிக்கவேண்டியது.

116. குருகிடைத்தவளவில் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து அவ ருடைய மேன்மையான பாதாரவிந்தங்களின் தூளியைச்சிரசில் தரிக்க வேண்டியது. குருவினிடத்திலிருந்துகொண்டு பந்தத்தை நீக்க விரும்பு கிறவன் தன் சரீரம் மனது தனம் வாக்குஇவைகளைக்குருவுக்கர்ப்பணஞ் செய்யவேண்டியது.

---

5. இரண்டுபாதங்கள் இரண்டுதொடைகள் இரண்டுகைகள் மார்பு தலை இந்த எட்டு அங்கங்களும் தரையில் படும்படித்தண்டம் போல் நிர்க்க நமஸ்கா ரஞ்செய்வது சாஷ்டாங்க நமஸ்காரமாம்.

117. சரீரார்ப்பணம்:— சரீரத்தினல் குருவுக்கு வேண்டிய பலவிதச்சேவைகளைச்செய்வதும் அவருடைய கட்டளைகளைக்கொஞ்சங் கூட்டிமிறுயல் நடப்பதும் சரீர அர்ப்பணமாம.

118. மனோர்ப்பணம்:— மனதிற் ஸ்ரீ ராமனைக்குருவை யெண்ணியும் அவரிடத்திற் பக்திவைத்தும் தன்னிடத்தில் அவருக்குச் சந்தோஷமுண்டாகும்படிச்செய்வித்தும் சொப்பனத்திலும் அவரிடத்தில் தோஷதிர்ஷ்டி வைக்காமலும், அரியரம்பிரமா, கங்கை சூரியன், இவர்களைப் பாவிப்பதுபோல் அவரையும் பூஜ்ஜியராகப்பாவித்து வருதலுமே மனோர்ப்பணமாம.

119. தனோர்ப்பணம்:— பத்தினி, புத்திரன், பூமி, பசு, தாசி, தாசன், திரவியம், நிதம், தானியம், இவைகளுக்குந் தனமென்று பெயர். இவைகளை யெல்லாம ஒழித்துக் குருவைச் சரணடை அடைவதுதான் தனஅர்ப்பணமாம். ஏனெனில் குரு சர்வ பரித்தியாகம பண்ணியிருந்தால் அவர் ஒன்றையும அங்கீகரிக்கிறதில்லை. ஒவ்வொரு யாடைதற்காக இவைகளினை தானதயுந் தியாகஞ் செய்யவேண்டியிருதாயிருப்பதால் இந்தத் தியாகம் குருவின்பாருட்டுத் தனர்ப்பணடாகிறது. குரு நிரகஸ்தாச்சிரமத்திலிருந்தால் அவருடைய யெல்லாவற்றையும் அர்ப்பணந் தெய்ய வேண்டியது. இது ஒருவித தனர்ப்பணம். பிர்ம்மதிதான குரு நிரகஸ்தாச்சிரமத்தில் இருக்கமாட்டாரென்று சொல்வது சரியன்று. ஏனெனில் யாஞ்ஞவல்கியர், உத்தாலகர் முதலிய குருமார்கள் நிரகஸ்தாச்சிரமத்திலிருந்ததாக வரலாற்றில் விளங்குகிறது. ஆகையால் நிரகஸ்தாச்சிரமத்திலிருப்போரும் குருவாகக்கூடும்.

---

6. பக்தி ஒன்பதுவிதம்:— (1) சிரவணம் (2) கீர்த்தனம் (3) ஸ்மரணம் (4) பாதசேவனம் (5) அர்ச்சித்தல் (6) வந்தனம் (7) தாஸபாவம் (8) ஸகாபாவம் (9) ஆத்மநிவேதனம் அதாவது தேகாதி யாவற்றையும் சமர்ப்பித்தல்.

7. குரு சிஷனிடத்தில் அன்புடனிருக்கும்போது அவரை விஷ்ணுரூபமாயும், கோபித்துக்கொண்டிருக்கும்போது சிவரூபமாயும், ராஜஸீகியவசாரத்தில் இருக்கிறபோது பிர்ம்மன் ரூபமாயும், சாந்தமாயிருக்கும்போது கங்காதேவிரூபமாயும், வசனமாகிற கிரணங்களால் பிர்மை சந்தேகங்களுடன் கூடிய அஞ்ஞானத்தை நிவிர்த்திக்கும்போது சூரியரூபமாயும், அறியவேண்டும். இவ்விதமாகப் பிர்ம்மவேத்தாவான குருவினிடத்தில் சிஷன் எப்போதும் ஈசுவரபாவத்தைத்தரிக்கவேண்டியது. சொப்பனத்திலும் தோஷதிர்ஷ்டியை வைக்கக்கூடாது. ஞானத்தைக்குமுன் ஞானத்தை அடைவதற்காக க்குருவை சேவிக்கவேண்டியது. ஞானமடைந்தபின் நன்றியறியாமை யென்னும் தோஷத்தை நிவிர்த்திக்க க்குருவை ச்சேவிக்கவேண்டியது.

120 வாக்கர்ப்பணம்.— குருவின வாக்குக் குணமுள்ளதென நம்பி அதைச் சிலாகித்து அதில் நேரங்கம் பார்க்காமலிருப்பதே வாக்குவர்ப்பணமாம.

121. குருவையடைந்தபின்—சிஷ்ஷன்—நடந்துக்கொள்ளவேண்டிய விதம் — தன தேகஷேமத்தை யிச்சிக்கிறவன் முன் சொன்னபடி சரீராதிகளை யர்ப்பணஞ் செயது குரு விருக்குமிடத்திலாவது அல்லது சமீபத்திலாயது வெகுகாலம் வாசஞ்செய்து பிரைகூவாங்கிவர்து காலுண்ணுமல் குருவினிடத்தில் வைத்துவிட்டுப் பேசாமலிருக்கவேண்டியது. மறுபடி அதேதனத்தில் பிரைகூக்குப்போகக்கூடாது. குரு தயவு செய்து கொடுத்தால் சாப்பிடவேண்டியது. சிஷ்ஷனுடைய பக்தியைப் பரீகூதித்தறியுமபொருட்டுக் குரு கொடாவிட்டால் உபவாசமாயிருந்து வழக்கமபோல் மறுநாள் பிரைகூக்குப்போகவேண்டியது. இதில் யாதொரு மனவேறுபாடையுமடையக்கூடாது. இப்படி யிருதுக்கொண்டு வருங்காலத்தில் எப்போது குருவானவர் சாவகாசமாயும பிரசன்னமாயுமிருக்கிறாரோ அப்போது தனையைக் கூப்பிக் கொண்டு அவரைத் துதிசெயது வணகதுடன் நேரியப்படுத்திக்கொளளவேண்டியதாவது:— சுவாமின் "அடியேன் கேட்க விரும்புகிறேன்" எனச்சொல்லவேண்டியது. அதன்மேலு தாரவுகொடுத்தால் கேட்கவேண்டியது. ஜன்மாந்தர உத்தம கர்மத்திலுல் குருவானவர் திருவுளசெயது சிஷ்ஷனுக்குத்தணிகியர்ப்பணமன்றியில் உபதேசஞ்செயதால் அந்த உத்தம அதிகாரிக்கு தோஷமுண்டாகும். எனெனில் குருசேவைக்குப பலனிரண்டு. ஒனறு பிரசன்னத்தை மற்றொன்று அநதகரணசுத்தியாம. இவவுக்கு இரண்டும் சித்தித்திருக்கின்றன.

எவன் குருவைவாக்காயங்களா யர்ப்பணஞ்செய்து குருசேவை செயகிறானே அவன் பரமபதரூபமு கதியை அடைகிறான். தாதுவானவர் எப்போதும் அவருக்கு சகாயமாயிருப்பர்.

---

8. பிரமசாரியை யுத்தேசித்து இது சொல்லப்பட்டது. கிரகஸ்தனை யுத்தேசித்தன்று.

விசாரசாகரம்.

4-வது தரங்கம்.

உத்தமாதிகாரிக்குஉபதேசம்.

I. பூர்வபீடிகை:—

122. இப்போது குருசிஷ்யனுவிடையாக ஒரு புதிய[1] கதையைச் சொல்லுகிறேன். அதைக்கேட்பதினல் ஜிஞ்ஞாசுவானவன் ஆத்மவிசாரணையிற் சமர்த்தனுகிருன்:—

II. சுபசந்ததிராஜாவின்கதை

123. **சுபசந்ததி** யென்னு மோரரசன் பூமி சுவர்க்க பாதாள மென்கிற மூன்று லோகங்களையும் ஆண்டுகொண்டிருந்தான். அவனுக்கு மூன்று குமாரர்களிருந்தாகள். அவர்கள் **தத்துவதிர்ஷ்டி, அதிர்ஷ்டி, தர்க்கதிர்ஷ்டி**, யெனப்பெயரிடப்பட்டிருந்தார்கள். அவர்கள் நான்கு சாஸ்திரங்களுங்கற்று மூவுலகங்களிலும் பிரசித்தி பெற்றிருந்தார்கள். சுபசந்ததியரசன் தன் பாக்கியத்தை விளையாட்டிலும் யெல்லைத்த ஸ்திரீலோலத்திலும் செலுத்தி அனேக போகங்களையனுபவித்துக்கொண்டு தன்னுடைய புஜபலபராக்கிரமத்தால் மூவுலகங்களையும் நீதி

---

1. வேதத்திற் சொல்லிய ஜநகர் யாஞ்ஞவல்கியர் இவர்களுடைய கதைகள்போல் இந்த குருசிஷ்யஸம்வாதரூபகதை சொல்லப்படுகிறது. இது புராணுதிகளிற் சொல்லப்படவில்லை. ஸ்வபுத்தியால் கல்பிக்கப்பட்டிருப்பதால் "புதிய" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

2. இம்மூன்று குமார்களும் முறையே 4-வது தரங்கத்தின் உத்தமாதிகாரியாயும், 5-வது தரங்கத்தின் மத்தியமாதிகாரியாயும், 6-வது தரங்கத்தின் கனிஷ்டாதிகாரியாயுமிருக்கிறார்கள்.

யுடன் ஆண்டுவந்தான். ஒருகாலத்தில் அவன்மனதில் ஆத்மா உற்பத்தி நாசமுமாயும் சுகச்சொரூபமாயு மிருப்பதாயும் அதற்கு வேறுனவெல்லா ன் அக்கரூபமென்றும் ஒரு விவேகமுண்டாயிற்று. உடனே, தான் ஆத் மவிசாரனை செய்யும்பொருட்டுத்தன் ராஜ்யத்தைப்பிள்ளைகளிடத்தில் ஒப் பிவிக்கக்கருதி மந்திரியைக்கொண்டு அவர்களைத்தனக்குச்சமீபத்தில் வரவ ழைத்து இரகசியமாய்த்தனக்குண்டான வைராக்கியத்தை அவர்களுடன் சொல்லி ராச்சியத்தை ஒப்புக்கொள்ளும்படிக்கட்டளையிட்டார். ஒருவ னுக்குப்பாதாளலோகத்தையும் ஒருவனுக்குச்சுவர்க்கலோகத்தையும் மற் றொருவனுக்குப்பூலோகத்தையுங்கொடுத்தார். பூலோகத்தில், எவனுடை தேசத்தால் அந்தியகாலத்தில் மோக்ஷமடையப்படுகிறதோ அப்படிப் பட்ட சர்வாந்தரியாமியாயும் திரிபுராரியாயுமிருக்கிற பரமசிவனுல் பரி பாலிக்கப்பட்டும், உத்தரவாகினியாயும் அகாதமாயுமிருக்கிற கங்கைநதி க்கரையிலிருப்பதுமான காசிபட்டணத்தில் இருந்துகொண்டு ராச்சிய பாரம் பண்ணுமபடி ஆஞ்ஞாபித்தார். புத்திரர்களுக்கு ராஜ்யத்தைப்பர கித்துக்கொடாவிட்டால் ஜனங்களுக்குத்துக்கம் நேரிடுமெனக்கருதி இ வ்விதமாயுபபிரித்துக்கொடுத்தார். மறுபடியும் குமாரனைப்பார்த்துச்சொ ல்லுகிறதாவது, இந்த அபார சமுசாரம் துக்கரூபமாயிருக்கிறது. பாம ரர்கள் இதைச்சுகமெனக்கருதி தனக்கழியே மேலாகப்பாவித்து ஆத்மவி சாரஞ்செய்யாமலிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஜனங்களின் சகவாசத் தைவிட்டு நிஜமான சுகந்தையடைய விரும்புகிறேன். பிதாவின் இவ்வி தமான வார்த்தைகளைக்கேட்டு நல்லயுக்தி புத்திகளுடன் கூடிய மூன்று பிள்ளைகளுங்கூடியேகாந்தமாயோசிக்கிறதாவது, பாருங்கள், நம்முடைய பிதாவானவர் துக்கமான சமுசாரசாகரத்தில் நம்மைத்தள்ளி தான்மாத்தி ரம் பிரம்மானந்தமடைய இச்சிக்கிறார். இதனுல் ஆத்மவிசாரத்தில் ஆசக் தியுள்ளவர்கள் அபாரமான துக்கரூப ராஜ்யத்தை விட விரும்புகிறார்கள். ஆனதால் நாங்களும் இந்த துக்கரூபமான ராஜ்யத்தை விட்டுவிடவேண் டுமென்று தீர்மானித்து மோக்ஷ இச்சையுள்ளவர்களாய், சுபசந்தி யென்னும் பிதாவின் பெயரை அர்த்தவத்தாக்கிச்சற்குருவைத்தேட அரண் மனையை விட்டுப்புறப்பட்டார்கள். அனேக தேசங்கள் போய்த்தேடிக்க டைசியாய்க்கங்காதீரத்துக்குவர, அவ்விடத்திலோரேகாந்தமான ஸ்தல

---

3. முன்செய்த புண்ணியவிசேஷத்தால் தற்செயலாய்.

4. காசியில் மரணம்டைந்தால் மோக்ஷம் கிடைக்கும், என்ற சிவ அபிப்பிராயம் இவ்விடத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

5. திருபுராசுரனை சம்காரம் செய்தவர்.

6. ஸமுத்திரணக்கூடாத.

த்தில் வெகு பெரிதாயும் நெருக்கமான கிளை கொம்பு கழைகளையுமுடைய
ஆலமரத்தடியில் சின்முத்திரைகளோடு கூடி ஜீவப்பிரம்ம ஐக்கியத்தை
நிச்சயிதாஷர்களாயும் எகாக்கிர சித்தர்களாயும் இருக்கிற அனேக சிஷ்யர்
களுக்கு உபதேசஞ்செய்கிற திரிகுணாகிதரான குருவைக்கண்டார்கள்.
அப்போது கைலாசத்தில் ஸனகாதிகளுக்குபதேசித்த பரமசிவனைப்போல
அவரைப்பாவித்துச் சாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ்செயது மோகூடிச்சையு
டன் விதிப்படி ஆறுமாதம் அவரைச்சேவை செய்தார்கள். பிறகு குருவா
னவர் பிரசன்னராகி அமிர்தவசனத்துடன், நீங்கள்யார், எந்தஊர், வந்
தகாரியமென்ன என்றுகேட்டார். அப்போது தத்துவநிர்ஷ்டியான
வன் தமபிமார்களைப்பார்த்து அவர்கள் அபிப்பிராயத்தையறிந்து, மகசூ
ப்பி நின்று சொல்லுகிறதாவது, சுவாமின், நாங்கள் சுபசந்தநிராஜாவின்
குமாரர்கள். வொரு தினர்களாயும் அஞ்ஞர்களாயுமிருந்திறோம். சொரூ
பஞானத்தை யடையவிரும்புகிறோம். நீங்கள் கிருபைக்கடலாயும் கல்ப
கதருவுக்குச்சமானமாயும் விளங்குகிறீர்கள். நாங்கள் துக்காதினர்களா
யிருக்கிறோம். உத்தரவு கொடுத்தால் எங்கள் கோரிக்கைகளை தெரிய
ப்படுத்திக்கொள்ளுகிறோம்

குருஉத்தரம்:— சீஷரே என்வாக்கைகேளும். அகனல்
ஜன்னிருதயத்திலுள்ள சந்தேகங்கள் நிவர்த்தியாகிப்பரமானந்தமட
வாய்.

III. தத்துவநிர்ஷ்டியின்கேள்வி:—

124. குருவின் கருணையக்கண்டு இருதயத்திலானந்தங்கொ
ண்டு தன் காரியம் நித்தியாப்விட்டதாக வெண்ணி வணக்கத்துடன் கேட்
கத்தொடங்கினன். சுவாமின, நீங்கள் கிருபாநிதியாகவும் சதாசிவனுக்

---

7. பெருவிரலையும் அதற்கடுத்த விரலையும் சேர்த்தணைத்துக்கொள்வது. இதற்கு லோபாமுத்திரை தர்க்கமுத்திரை ஞானமுத்திரை எனப்பெயர்களாம்.

8. நிருட்டி, ஜீவஹிம்சை, கற்பழிவு, இம்மூன்றும் சரீர தோஷங்க
ளாம். பொய்மொழிதல், பிறர் நிந்தை, கடுஞ்சொல், வீண்பேச்சு, இந்த
கும் வாக்கின் தோஷங்களாம். இச்சை, சிந்தை, மந்தபுத்தி இம்மூனறும் மன
தின் தோஷங்களாம். நிருசும்மதாபனீய உபநிஷத்தைப்பார்க்க.

9. மூன்றுவகை தாபத்தில் சொல்லியபடி.

10. பரிதாபிக்கப்பட்டவர்கள்.

சுச்சமானமான சர்வஜ்ஞராயுமிருக்கிறீர்கள். நாங்கள் ஜனனமரணாதி க்கரூபச்சமுசாரத்திலிற் பயப்படுகிறோம். அதன் நிவிர்த்திக்கும் பரமா னந்தப்பிராப்திக்கும் உபாயத்தைச்சொல்லியருளவேண்டும். அனேக வுபாசனைகளையுங் கர்மங்களையுஞ் செய்தும் நாங்கள் இச்சிக்கும் பலனைய டையவில்லை. ஆனாலோ சமுசாரபந்தம் பலப்படுகிறது. ஆகையால் எ ந்த வேறுபாயத்தால் நாங்கள் கிருதார்த்தர்களாவோமோ அவ்வுபாயத் தைச்சொல்லியருள்க.

IV. மகாவாக்கிய உபதேசம். (125—165)

125. குரு உத்தரம்:-துக்கநிவிர்த்திக்கும் பரமானந்தப்பிராப் திக்கும் மோக்ஷமென்று பெயர். சிஷ்யனுடைய இருதயத்தில் மோக்ஷ இச் சை யிருப்பதைக்கண்டு அதற்குச்சாதனமான வேதோக்த ஞானத்தை யுபதேசிக்கிறார். ஞானத்தின் சொரூபம் அநேகசாஸ்திரங்களில் அநேக விதமாய் வர்ணிக்கப்பட்டிருந்தபோதிலும் ஜீவபிரம்மபேதத்தை நிவர்த் திக்கிறஞானமே மோக்ஷசாதனமென வேதத்திற் சொல்லியிருப்பதால் அந்த ஞானத்தையே உபதேசிக்கிறார்.

சிஷ்னே பரமானந்தப்பிராப்திக்கும் ஜனன மரணாதி துக்கரூபச் சமுசார நிவிர்த்திக்கும் உனக்குண்டான இச்சை பிராந்தியிலேதான் என்று அறி. நீ இயற்கையாகவிலையே பரமானந்தச்சொரூப (476—482) மாயிருக்கிறாய். ஆனதால அவ்விதமுடைய நீ இச்சிப்பது சரியன்று. எது கிடைக்கவில்லையோ அவ்விதமுடைய இச்சிக்கக்கூடும். உன்னுடைய சொ ரூபமோ எப்போதும் பிராப்தமாகவே யிருக்கிறது. அவ்விதமுடைய வேண்டுமென்று உன்னுடைய இச்சை பிராந்தியன்றியிலுண்டாகிறதில்லை. மேலும் ஜனனமரணாதிச் சமுசாரம் எப்போதாவது உனக்கு இருக்கும்பக்ஷத்தில் அதை நிவிர்த்திக்க இச்சையுண்டாகலாம். ஆனால் அந்தச்சமுசாரம் கொஞ்சங்கூட உன்னிடத்தில் இல்லை. ஆனதால் அனுபவிக்கப்படாத துக்க த்தை நிவிர்த்திக்க உண்டாகுமிச்சைபிராந்தியன்றியிலுண்டாகாது. சிஷ் னே ஜனனமரணமற்றச்சுதனாகையால் பிரம்மமேநீ. ஆனதால் உன்னிரு தயத்தில் ஜன்மாதியுக்கதுன்பத்தை விடவேண்டாம்.

சுகவிஷயமாய்விஞவிடை (126—129)

126 கேள்வி:— சுவாமின், என்னுடைய ஆத்மா ஆனந்தரூப மாயிருக்கும்பக்ஷத்தில் விஷயசம்பந்தத்தால் ஆனந்தம் ஆத்மாவினிடத்தில்

---

11. சகாம கர்மங்கள்.

தோன்றக்கூடாது. ஆனால் அனுபவத்தில் விஷயசம்பந்தத்தால் ஆத்மாவினிடத்தில் ஆனந்தமுண்டாகிறது. ஆதலால் ஆத்மாவே ஆனந்தரூபமன்று.

127 குருஉத்காரம்:— சிஷ்யனே, எவன்புத்தி ஆத்மச்சொரூபத்தையறியவில்லையோ அவனுக்கு விஷயத்தினிச்சை யுண்டாகிறது. போகசாதனமே விஷயமென்னப்படும். தனபுத்திராதிகளும் விஷயங்கள்தாம். விஷயத்தினிச்சையுண்டாகும்போது புத்திசஞ்சலிக்கிறது. இச்சஞ்சலபுத்தியில் ஆத்மச்சொரூபானந்தத்தின் பிரதிபிம்பம் விளங்குகிறதில்லை. இச்சித்தவிஷயம்கிடைத்தவுடன் க்ஷணமாத்திரம் புத்திஸ்திரப்பட்டு அதன்விர்த்தி அந்தர்முகமாகின்றது. இந்த அந்தர்முகவிர்த்தியில் ஆத்மாவின் சொரூபானந்தம் பிரதிபிம்பிக்கிறது. இந்த ஆனந்தபிரதிபிம்பத்தையறிவதற்கு புருஷனுக்கு விஷயத்தாலானந்த முண்டானதாகப்பிராந்தியுண்டாகிறது. ஆனால் உண்மையில் விஷயத்திலானந்தமில்லை. மேலும் ஒருக்கால் விஷயத்திலானந்த முண்டாகும்பக்ஷத்தில் ஒருவிஷயத்திலானந்தமடைந்தவனுக்கு மற்றொருவிஷயத்தில் இச்சையுண்டாகும்போதும், முன்னியஆனந்தம் இருந்துக்கொண்டே யிருக்கவேண்டும். ஆனால அனுபவத்தில் அப்படியில்லை. நம்முடையபரீக்ஷப்படி இரண்டாவதுவிஷயத்தினிச்சையால் புத்தி சஞ்சலப்படுவதால் அச்சஞ்சலபுத்தியில் சொரூபானந்தத்தின் பிரதிபிம்பம் விளங்குகிறதில்லை.

இதுவுமன்றி, விஷயத்தினாலானந்தம் உண்டாகும்பக்ஷத்தில் ஒருவனுடைய பிரியமான புத்திரன் வெகுகாலம் தேசாந்திரம் போயிருந்துவந்தவுடன் அவனைப்பார்ப்பதாலுண்டாகும் ஆனந்தம்மாறுமல் நீடித்திரு

---

12. ஆத்மாஸ்வபாவமாக ஆனந்தஸ்வரூபம். மலைவியாகுலத்தினால் சமீபத்திலிருக்கிற பதார்த்தங்களும் கண்ணுக்குத்தெரியாமல் போவதுபோல் சஞ்சலிக்கிற ராஜஸவிர்த்தி இருக்கும் வரையில் ஆனந்தாம்சம் விளங்குகிறதில்லை. சஞ்சலிக்கிற கண்ணாடியில் பிரதிபிம்பம் தோன்றினும் பிம்பஸ்வரூபம் விளங்காததுபோல் ராஜஸவிர்த்தியால் சஞ்சலிக்கும் புத்தியில் ஆத்மாவின் சத்சித்அம்சங்களின் பிரதிபிம்பங்கள் தோன்றினும் ஆனந்தாம்சத்தின் பிரதிபிம்பம் தோன்றுகிறதில்லை. இச்சித்தபொருள் கிடைக்கும்போது இச்சையாகிற சஞ்சலமான ராஜஸவிர்த்தி நிவிர்த்தியாகி அடையப்பட்டபொருளின் ஞானரூபஸாத்விகவிர்த்தியால் விஷய உபஹிதசைதன்யத்தின் ஸ்வரூபமாகிய ஆனந்தம் விளங்குகிறது. இந்த விர்த்தி விஷயரூபநிமித்தத்தினுண்டாவதால் விஷயானந்தமென்று சொல்லப்படுகிறது அல்லது இச்சித்த பொருளின் ஞானத்தாலும் இச்சாரூபவிர்த்தி நிவிர்த்தியாகிறது. இக்காரணத்தால் வேறு அந்தர்முகவிர்த்தியுண்டாகிறது. இதனால் அந்தக்கரணஉபஹிதானந்தம் விளங்குகிறது. இந்த அந்தர்முகவிர்த்தி அல்லது விர்த்தியிலுள்ள ஸ்வரூபானந்தத்தின் பிரதிபிம்பம் விஷயானந்த மென்றும பிரதிபிம்பானந்தமென்றும் லேசானந்தமென்றுஞ்சொல்லப்படும்.

கவேண்டும். எனெனில் இந்த ஆனந்தத்துக்குக்காரணமான புத்திரன் சமீபத்திலேயே இருக்கிறான். ஆனல் அனுபவத்தில் அப்படியிருக்கவில்லை. கம்முடைய நிகிப்படியோ புத்திரனைக்கண்டவுடன ஆனந்தமுண்டாகி விர்த்திஸ்திரப்படுகிறது. இது நிடிக்கிருக்கிறதில்லை. மறுபடியும் விர்த்தி வேறுவிஷயத்திற் செல்லும்போது சஞ்சலப்படுவதால் முந்திய ஆனந்தம் விளங்குகிறதில்லை. ஆகையால் பரமார்த்தத்திலானந்தமில்லை.

மேலும், விஷயத்தினுலேயே ஆனந்தமுண்டாகுமி பக்ஷத்தில் சுஷுப்திபிலானந்தம் விளங்கக்கூடாது. சமாதியிலுண்டாகிற யோகானந்தமுமே விளங்கக்கூடாது. ஏனெனில் சுஷுப்திபிலும் சமாதியிலும் விஷயசம்பந்தமேயில்லை. ஆகையால்விஷயத்திலானந்தமேயில்லை.. ஆனல் ஆத்மச்சொரூபானந்தம்தான் எல்லாருக்குமவிளங்குகிறது. இத்தச் சொரூபாநந்தத்தைக்கிரகித்துக்கொண்டு எல்லாம் ஆனந்தரூபமாகவினங்குகிறதென்று வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

சீஷனே, ஆனந்தச்சொரூபமே ஆத்மாவென்றறி. விஷயசம்பந்தத்தினல் அதுபிரகடமாகிறது. நீ கேட்டகேள்விக்குப் பதில்சொன்னேன். இதில்லுனக்குச்சந்தேகம் இருக்கும்பக்ஷத்தில் அதைதனில்லைவக்காமல் எனக்குத்தெரிவி. நான் அதற்குப்பதில் சொல்லுகிறேன்.

128. **சத்துவதிர்ஷ்டியின்கேள்வி:—** பரமகுருவே நீங்கள் முன் விஷயசம்பந்தத்தால் ஆனந்தமுண்டாவதாகச்சொன்னது அஞ்ஞானிக்கே யொழிய ஞானிக்கன்று. ஏனெனில் எவன் புத்தி ஆத்மச்சொரூபத்தையறியவில்லையோ அவனைப்பற்றி நீங்கள் பிரஸ்தாபித்திருக்கிறீர்கள். இப்படிப்பட்டவன் அஞ்ஞானியே யொழிய ஞானியன்று. ஆகையால் இப்போது, ஞானிக்கு விஷயத்தில் இச்சை, விஷயசம்பந்தத்தால் முன் சொன்னபடி சுகத்தின் விளக்கம் இவைகள் உண்டா இல்லையா வென்பதைச்சொல்லியருள்க.

129. **குருஉத்தரர்:—** சிஷ்யனே, நீ நான் சொல்வதைக்கவனமாய்க்கேள். முன்னே, எவன் புத்தி ஆத்மச்சொரூபத்தையறியவில்லையோ என்று சொன்னதிலுல் அஞ்ஞானியையமட்டுமுத்தேசித்துச்சொன்னதன்று. அது ஞானிக்கும் பொருந்தும். ஞானியினுடைய புத்தியும

---

13. சித்தத்தின் ஏகாக்ரதையாகிய யோகத்தினுல் விளங்கப்படக்கூடிய ஆனந்தம்.

வியவகாரத்தில் பிரவர்த்திக்கும்போது அவன் தத்துவத்தை மறந்து அஞ் ஞானியைப்போல் விளங்குகிறான். ஞானியின் புத்தி எப்போதும் ஆத்மா காரமாயிருக்கும் பக்ஷத்தில் அவனுக்குப்போஜனாதி வியவகாரஞ்சம்பவிக் கமாட்டாது. ஆனதால், ஆத்மவிழுகபுத்தி இருவருக்கும் சகஜமே. அ ஞ்ஞானியின் புத்தி யெப்போதும் ஆத்மவிழுகமாயிருக்கிறது. ஞானியி ன் புத்தி ஆத்மவிழுகமாகும்போது, விஷயத்திஷ்டசை, விஷயசம்பந்தத்தா ல் ஆத்மச்சொரூபானந்தத்தின் விளக்கம் இவைகள் அஞ்ஞானிக்குண் டாவதுபோல் ஞானிக்குமுண்டாகின்றன. ஆனல் பேதமென்னவெனில் விஷயசம்பந்தத்தால் விளங்குமானந்தம் தன் சொரூபானந்தத்துக்கு வேற ல்லவென்றும் அயன் ஆபாசந்தான் என்றும் ஞானி அறிகிறான். இதன ல் விஷயபோகத்திலும் ஞானிக்குச்சமாதி சித்திக்கிறது. அஞ்ஞானியோ தன் சொரூபமே ஆனந்தமென்றறிகிறதில்லை. உண்மையில் இருவருடை யசொரூபமும் ஆனந்தந்தான். விஷயத்தில் கேவலம் அஞ்ஞானிக்குமட்டு ம் பிராந்தியுண்டாகிறது.

துக்கவிஷயமாய் வினவினை (130—165)

130. கேள்வி:— சுவாமின், தான் பரமானந்தச்சொரூபமென் று தாங்கள் முன் சொன்னதை (125) நான் நன்முக அறிந்தேன். ஆன ல் ஜனனமரணாதி சமூசாரரூப துக்கம் என்னிடத்திலில்லாமையால் அதை நிவர்த்திக்க இச்சிக்கலாகாதென்று (125) தாங்கள் சொன்ன விஷயத்தில்

---

14. ஜாக்கிரதாகார விர்த்தி யுண்டாகும்போது ஸ்வப்னகார விர்த்தி யுண்டாகிறதில்லை. ஸ்வப்னகார விர்த்தி யுண்டாகும்போது ஜாக்கிரதாகார வி ர்த்தி யுண்டாகிறதில்லை. இதுபோல் ஞானியின் புத்தியும் ஆத்மாகாரமாகும்போ து அனாத்மாகாரமாகிறதில்லை அனாத்மாகாரமாகும்போது ஆத்மாகாரமாகிறதி ல்லை. ஒரேஅந்தக்கரணத்தில் ஒரேகாலத்தில் ஸாமானியவிசேஷரூப இரண்டு வி ர்த்திகளுண்டாகுமாட்டா. இதை யால் பெட்டியில் பணத்தை வைத்துக்கொண்டிருக்கும் புருஷன் இதரவியவகார ங்களில் பணத்தை மறந்து அவை முடிந்தவுடன் பணநினைவு கொள்வதுபோல் ஞானியின் புத்தியும் வியவகாரத்தில் தத்துவத்தை மறந்து வியவகாரம் முடிந்த வுடன் தத்துவத்தின் நினைவைக்கொள்ளுகிறது. இக்காரணத்தினல் பாஷ்யக் காரர் பிரம்மசூத்திரபாஷியத்தில் முதல் சூத்தியபாஷ்யத்தின் முதல் பாதத்தில் "விபேகாரத்தில் ஞானியும் அவிவேகிபோல வியவகரிக்கிறான்" என்று சொல்லி யிருக்கிறார்.

15. ஸ்வரூபானந்தத்தின் அனுசந்தானரூபச்சமாதிக்குச்சமானமாயிரு ப்பதால் இந்தப்புருஷன் சிங்கம் என்பதுபோல் விஷயபோகத்திற் சொல்லிய சமாதி உபசாரமாத்திரமே.

ஒரு சந்தேகம் ஜனிக்கிறது:— ஜன்மாதி துக்கம் என்னிடத்தில்லாதபக்ஷத்தில் என்னைவிட வேறொன்றை அது ஆசிரயித்துக்கொண்டிருக்கிறதென்பதைத்தாங்கள் தயவுசெய்து சொல்லவேண்டும். அதைத்தெரிந்துகொள்வதினால் என்னிடத்தில் சமுசாரமில்லையென்பதை நான் நம்புவேன்.

131. குருஉத்தரம்:— சிஷ்யனே, என் வார்த்தையைக்கேள். உன் சந்தேகங்களெல்லாம் நிவிர்த்தியாகும். இந்த ஜகத்துச்சுத்தமாய் உன்னிடத்திலாவது எவரிடத்திலாவது இல்லவேயில்லை.[16]

132. கேள்வி:— ஐயா, ஜன்மாதி சமுசார துக்கம் என்னிடத்திலாவது எவரிடத்திலாவது இல்லாதபக்ஷத்தில் என் பிரத்தியக்ஷமாய்த்தோன்றுகிறது. இல்லாத வஸ்து தோன்றக்கூடாது. மலடிமகனும் ஆகாசபுஷ்பமும் தோன்றுபோல் சமுசாரமுமில்லாதபக்ஷத்தில் தோன்றக்கூடாது. ஆனால் சமுசாரம் இருக்கிறதாகத்தோன்றுவதால் ஜன்மாதி சமுசாரரூப துக்கம் இல்லை யென்று சொன்னது சரியன்று.

133. குருஉத்தரம்:— ஜன்மாதி ஜகத்து பாரமார்த்திகமாக இலலை. ஆயினும் ஆத்மா பிர்ம்மச்சொரூப மென்று அறியாததினால் ஜகத்தின் பொய்த்தோற்றம் உண்டாகிறது. சொப்பனபதார்த்தம் ஆகாசத்தில் நீலவர்ணம், ரஜ்ஜுவிற் சர்ப்பம், இவைகள் பாரமார்த்திகமாக இல்லாமலிருந்தாலும் இவைகளின் பொய்த்தோற்றம் உண்டாகிறதுபோலும்.

134. ரஜ்ஜுவில் சர்ப்பம் பொய்யாகவிருப்பதுபோல் ஆத்மாவில் சமுசாரதுக்கம் பொய்யென்று சொல்லப்பட்டது. திர்ஷ்டாந்த ஞானமின்றியில் தார்ஷ்டாந்த ஞானமுண்டாகமாட்டாது. ஆகையால் ரஜ்ஜுவில் சர்ப்பம் எப்படித்தோன்றுகிறது. ரஜ்ஜுவில் சர்ப்பம், கிளிஞ்சிலில் வெள்ளி முதலியவை வெறும் பிரமையாயிருக்கின்றன. இவ்விஷயத்தில் நான்கு மதங்களைக்கேள்விப்பட்டிருக்கிறேன். (1) **சூனியவாதி அசத்கியாதி** யென்றும், (2) **கூணிக்விஞ்ஞானவாதி அத்மக்கியாதி** யென்றும், (3) **நியாயவைசேஷித மதவஸ்தர்கள் அன்னியதாக்கியாதி** யென்றும், (4) **சாங்கியப்பிரபாகரர்கள் அசத்கியாதி** யென்றும், இதைச்சொல்லுகிறார்கள்.

135. **அசத்கியாதி**;— சூனியவாதியின் அபிப்பிராயமென்னவெனில் ரஜ்ஜுவில் சர்ப்பம் அத்தியந்தம் அசத்தாக இருக்கிறது. அப்படியே வேறிடத்திலும் அத்தியந்தம் அசத்தாகஇருக்கிறது. இப்படி

---

16. ரஜ்ஜுவில் கல்பித சர்ப்பம் எப்படி இல்லவே இல்லையோ அப்படி பிர்ம்மத்தில் கல்பித ஜகத்து இல்லவே இல்லை.

அத்தியந்தம் அசத்தாயிருக்கிற சர்ப்பத்துக்கு ரஜ்ஜுவில் பிரதீதியுண்டாகிறது. இதற்கு அசத்கியாதி யென்றுபெயர். அத்தியந்தம் அசத்தாயிருக்கிற சர்ப்பத்தின் கியாதி அதாவது விளக்கமும் கதனமும் அசத்கியாதி என்னப்படும்.

136 **ஆத்மக்கியாதி**:—விஞ்ஞானவாதியின் அபிப்பிராயம்:—ரஜ்ஜுவிடத்திலும் அப்படியேவேறிடத்திலும் புத்திக்குவெளியில்யாதொருசார்ப்பமுமில்லை. யாதொருபதார்த்தமும் புத்திக்குவெளியிலில்லை. சகலபதார்த்தங்களின் ஆகாரத்தையும் புத்தி தரிக்கிறது. அந்தப்புத்தி க்ஷணிகவிஞ்ஞானரூபமாக இருக்கிறது. க்ஷணிகங்தோறும் உற்பத்தி நாசங்களையடைகிறபுத்தி ஒருக்ஷணத்தில் சர்ப்பரூபமாகப் பிரதீதியாகிறது. இதற்கு ஆத்மக்கியாதியென்றுபெயர் ஆத்மா என்றால் க்ஷணிகவிஞ்ஞானரூப புத்தி அதன்கியாதி யென்றால்தோற்றமும் கதனமுமே.

அன்னியதாக்கியாதி:—நையாயிகவைசேஷிகமதம்:—

137 புற்றுமுதலிய இடங்களில் மெய்யான சர்ப்பம்இருக்கிறது. அதுநேத்திரத்தினால் பார்க்கப்படுகிறது. நேத்திர்தோஷபலத்தினால் சர்ப்பம் சமீபத்தில் எதிரில்தோற்றுகிறது. மெய்யானசர்ப்பத்துக்கும் நேத்திரத்துக்கும் மத்தியில்சுவர்முதலிய மறைவுகளிருந்தபோதிலும் தோஷசகித நேத்திரத்தினால்மறைமட்ட சர்ப்பமும் பார்க்கப்படுகிறது. இதிலோர்சங்கை:—(1) தோஷத்தினால் சாமர்த்தியம் குறைகிறதேதவிர வித்தியாகிறதில்லை. ஜாடராக்கினியின் ஜீர்ணஞ்செய்யுஞ்சாமர்த்தியம் வாதபித்தகபதோஷங்களால் குறைவதுபோல நேத்திரத்தின் சாமர்த்தியமும் இருட்டுமுதலிய தோஷங்களால் குறையவேண்டியது. (2) புற்றுமுதலிய இடங்களிலுள்ள சர்ப்பம் தோஷசகித நேத்திரத்தால் அறியப்பட்டால் சுத்தநேத்திரத்திற்கு மறைவிலிருக்கிற பொருளின் பிரத்தியக்ஷஞான முண்டாகமாட்டாது. ஆனால்தோஷசகித நேத்திரத்திற்கு உண்டாகும். ஆகையால்[17] தோஷமுள்ள நேத்திரத்துக்குச்சாமர்த்தியம் அதிகமாயிருக்கிறது என்று நினைப்பதற்குத் திர்ஷ்டாந்தமில்லை. இந்தச்சங்கை சரியன்று. ஏனெனில், சிலருக்குப்பித்ததோஷத்தினால் ஓர்விதரோக முண்டாகும்போதுநான்கு மடங்குண்டாலும் திருப்தியாகிறதில்லை. பித்ததோஷத்தினால் ஜாடராக்கினியின்ஜீர்ணிக்கும் சக்திஅதிகப்படுகிறதுபோல் இருள்முதலியதோஷங்களால் மறைவிலிருக்கும் சர்ப்பத்தின் பிரத்தியக்ஷஞான

---

17. மறைவிலிருக்கும் பொருள் சுத்தநேத்திரத்திற்கே விளங்காமலிருக்க தோஷமுள்ள நேத்திரத்திற்கு விளங்குவதாகச்சொல்லுவது உலகவிருத்தம்.

முண்டாகத்தக்கதாய் நேத்திரத்தின் சக்தியும் விர்த்தியாகிறது. இவ்விதமாகப் புற்றுமுதலிய ஸ்தலங்களில் இருக்கப்பட்ட சர்ப்பம் அன்னியதா அதாவது வேறுபிரகாரமாய் எதிரிலிருக்கிற ரஜ்ஜுவில் தோற்றுதல் அன்னியதாக்கியாதி[18] என்னப்படும்.

138 சிந்தாமணிக்காரர்மதம்:—தோஷமுள்ள நேத்திரத்தினல் புற்றிலுள்ள பாம்புபார்க்கப்படும்பக்ஷத்தில் மத்தியிலுள்ள வேறு பதார்த்தங்களும் பார்க்கப்படக்கூடும். ஆயால்மறைவிலிருக்கிற பொருள் நேத்திரத்தினல் அறியப்படமாட்டாது. ஆனல்தோஷமுள்ள நேத்திரத்துக்கு ரஜ்ஜுவானது தன்சொரூபத்தோடு விளங்குகிறதில்லை; சர்ப்பரூபமாக விளங்குகிறது. ஆகையால் ரஜ்ஜு அன்னியதா[19] அதாவது வேறுவிதமாய் சர்ப்பரூபமாக விளங்குவது **அன்னியதாக்கியாதி** யெனப்படும்.

139 மேற்படிமதங்களின்கண்டனம்:— (1) **அசத்கியாதிமதப்படி** அசத்தின் தோற்ற முண்டாகும்பக்ஷத்தில் மலடிமகன் முயற்கொம்பு இவைகளும் தோன்றவேண்டும். அப்படித் தோன்றுமையால் **அசத்கியாதிமதம்** சரியன்று. (2) **க்ஷணிகவிஞ்ஞானவாதியின்** மதப்படி க்ஷணிகந்தோறும் மாறும்புத்தி சர்ப்பாகாரத்தைத்தரிக்கும்பக்ஷத்தில் க்ஷணத்துக்குமேல் அச்சர்ப்பந் தோன்றக்கூடாது. ஆனல் அனுபவத்தில் பிரமையுள்ளவரையில் அச்சர்ப்பந் தோன்றுகிறது. ஆகையால் **ஆத்மக்கியாதிமதம்** ஏற்றுக்கொளளத்தக்கதன்று. (3) **நையாயிகவைசேஷிக** மதஸ்தர்களின் **அன்னியதாக்கியாதி** மதம் சிந்தாமணிக்காரருடைய அன்னியதாக்கியாதி மதத்தினுங் கண்டிக்கப்படுகிறது. (4) **சிந்தாமணிக்காரருடையமதமும்** ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. ஏனெனில் ஞானம் எப்போதும் ஞேயானுசாரமா யிருக்கிறது. இவ்விடத்தில் ஞேயமோ ரஜ்ஜு, ஞானமோ சர்ப்பம். இவ்விரண்டும் வெவவேறு யிருப்பதால் சிந்தாமணிக்காரருடைய அன்னியதாக்கியாதி மதமும்அங்கீகரிக்கதக்கதன்று.

---

18. இந்தமதத்தில் ஓரிடத்திலிருக்கிறவஸ்து வேறொரு இடத்தில் தோன்றுவதே பிராந்தி என்று சொல்லப்படுகிறது. சித்தாந்தத்திற் சொல்லிய அர்த்தாதியாஸ ரூபத்தியாஸ ரூப பிராந்தி இம்மதத்தில் அங்கீகரிக்கப்படவில்லை.

19. சிந்தாமணிக்காரருடைய மதத்தில் ஒரு வஸ்து வேறு ரூபமாய்த் தோன்றுகிறதே பிராந்தி என்று சொல்லப்படுகிறது. இது ரூபத்தியாஸம்.

140 அக்கியாதிலக்ஷணம்:— சாங்கியப்பிரபாகரர்களின் அபிப்பிராய மென்னவெனில், ரஜ்ஜுவிற்சர்ப்பப்பிரமை யுண்டாகும்போது நேத்திரம் தன்விர்த்திமூலமாக ரஜ்ஜுவுடன் சம்பந்தப்பட்டு, 'இது' என்கிற ரஜ்ஜுவின் சாமானிய ஞானமுண்டாகிறது. சர்ப்பத்தின் ஸ்மரணையு முண்டாகிறது, "இதுசர்ப்பம்" என்பதில் இரண்டு ஞானங்களுளன. ஒன்று "இது" என்னும் சாமானியப் பிரத்திய க்ஷஞானம். மற்றொன்று சர்ப்பத்தின் ஸ்மரணரூபஞானம். இவ்விதமாக "இது சர்ப்பம்" என்பதில் இரண்டு ஞானங்களிருந்தாலும் பிரமாணாவின் பயத்தாலும் பிரமாணத்தின் இருள்தோஷம் இவைகளின் பலத்தினல் இவ்விரண்டு ஞானங்களுமுண்டானதாக விவேகமுண்டாகிறதில்லை. "இது" என்கிறரஜ்ஜுவின் சாமானியஞானம் யதார்த்தமாயிருந்தாலும் முன்பார்த்த சர்ப்பத்தின் ஸ்மரணரூபஞானமு முண்மையாயிருந்தாலும், "எனக்கிரண்டு ஞானங்களுண்டாயின, அவைகளில் ரஜ்ஜுவின் சாமானியப் பிரத்தியக்ஷ ஞானமொன்று, சர்ப்பத்தின் ஸ்மரணரூபஞானமொன்று" என்கிறஇவ்விவேகமுண்டாகிறதில்லை. இவ்விரண்டுஞானங்களின் அவிவேகத்துக்குச சாங்கியப்பிரபாகர மதத்தில் பிரமையென்று பெயர். பிரமையுண்டாகிற இடங்களிலெல்லாம் இப்படியே அறியத்தக்கது.

சுவாமின், ரஜ்ஜு முதலியவைகளில் சர்ப்பாதிப் பிரமையுண்டாகிறவிஷயத்தில் நான்கு[20] மதங்களைக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவைகளில் உத்தமமானதைச் சொன்னல் நான் அதை அறிந்துகொள்ளுகிறேன்.

---

20. மேற்சொல்லிய நான்கு மதங்களைத்தவிர சத்கியாதி என்று பூர்வ பக்ஷிகனின் ஐந்தாவது மதமுண்டு. இது வைஷ்ணவரது. இம்மதப்படி சுத்தியினுடைய அவயவங்களோடு இரஜதத்தின அயவமும் எப்போதுமிருக்கின்றது. சுத்தியின் அவயவம் சத்தியமாயிருப்பதுபோல் இரஜதத்தின் அவயவமும் சத்தியம் மித்தையன்று. தோஷத்தோடுகூடிய நேத்திரசம்பந்தத்தால் சித்தாந்தத்தில் அவித்தையில் பரிணமமாக அநிர்வசனீய இராஜதம் உண்டாவதுபோல் தோஷத்தோடுகூடிய நேத்திர சம்பந்தத்தால் இரஜதாவயத்தினின்று சத்தியரஜதமும் உண்டாகின்றது. சித்தாந்தத்தில அதிஷ்டான ஞானத்தால் அநிர்வசனீயஇராஜதம் நிவிர்த்தியாவதுபோல் சுக்திஞானததால் சத்திய இரஜதமும் தனது அவயவத்திற் லெம்சமாகிறது. இம்மதமும் தள்ளத்தக்கது. ஏனெனில் சுகதி இரஜத திருஷ்டாந்தத்திலுல் பிரபஞ்சம் மித்தை என்றும் அனுமதி உண்டாகின்றது. சத்கியாதிவாதத்தில் சுக்தியில் இரஜதம் சத்தியமாம். இதைத் திருஷ்டாந்தமாக வைத்துக்கொண்டு பிரபஞ்சத்தில் மித்தியாத்வ சித்திபெருவது முடியாது. இன்னும் இந்த மதத்தில் அநேக தோஷங்களுளன. கண்டிக்கும யுக்திகள் கடினமாகையால் இவ்விடத்தில் எழுதப்படவில்லை.

141 குருஉத்தரம் :—அக்கியாதிகண்டனம் :— சிஷனே, இந்தநான்கு மதங்களுக்கும் வேறுக அநிர்வசனீயக்கியாதி யென்னும் ஐந்தாவது மதமுண்டு. முதற்சொன்ன அசத்கியாதி முதலிய மூன்றுமதங்களும் எப்படி நிராகரிக்கப்பட்டனவோ (139) அப்படியே அக்கியாதிமதமும் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. ஏனெனில் அக்கியாதிவாதிகளின் மதப்படி "இதுசர்ப்பம்" என்று ஞானமுண்டாகுமிடத்தில் "இது" என்பதுசாமானியப்பிரத்தியக்ஷ ஞானம். சர்ப்பமென்பது முன் பார்த்த சர்ப்பத்தின் ஸ்மரணரூப ஞானம். இப்போது முனபார்த்த சர்ப்பத்தின் ஸ்மரணையை அங்கீகரித்து எதிரிலிருக்கும் ரஜ்ஜுவில் சர்ப்ப ஞானமில்லை யெனச்சொல்லும்பக்ஷத்தில் (1) எதிரிலிருக்கும் ரஜ்ஜுவைக் கண்டு புருஷன்பயப்பட்டுஓடக்கூடாது. ஆனல்அனுபவத்தில் பயந்தோடுகிறான். ஆகையால் எதிரிலிருக்கும் ரஜ்ஜுவில்சர்ப்பம் தோன்றுகிறதே தவிர முன்பார்த்த சர்ப்பத்தின் ஸ்மரணையுண்டாகிறதில்லை. (2) இதுவுந் தவிர, ரஜ்ஜுவின் யதார்த்தஞான முண்டானபிறகு "என்னக்குரஜ்ஜுவினிடத்தில் மித்தியாசர்ப்பம் தோன்றிற்று" என்றுபுருஷனுக்கு ஞானமுண்டாவதால் ரஜ்ஜுவினிடத்தில் சர்ப்பம் பிரதீதியாகிறதே தவிரமுன்பார்த்த சர்ப்பத்தின் ஸ்மரணையுண்டாகிறதில்லை. (3) மேலும் "இதுசர்ப்பம்" என்னுமிடத்தில் ஒரேஞானமுண்டாகிறதே யொழிய இரண்டு ஞானங்களுண்டாகிறதில்லை. ஒரேகாலத்தில் அந்தக்கரணத்தில் ஸ்மரணரூப ஞானமும் பிரத்தியக்ஷரூபஞானமும் உண்டாகமாட்டா. ஆகையால்அக்கியாதிமதமும் ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. இந்நான்கு மதங்களின்லக்ஷணங்களும் கண்டனமும் **விவரணம்விவாராஜ்யசித்தி** முதலிய கிரந்தங்களில் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. யுக்திகள் கடினமா யிருப்பதால் ஜிஞ்ஞாசுவுக்குச் சுருக்கமாகச் சொன்னேன் விரிவா யெழுதவில்லை.

அநிர்வசனீயக்கியாதிலக்ஷணம் (142—156):—

142. சித்தாந்தத்தில் அநிர்வசனீயக்கியாதி லக்ஷணமென்ன வெனில், அந்தக்கரணத்தின் விர்த்தி நேத்திராதிகள் மூலமாக வெளியே சென்று விஷயாகாரமாகிறது. அப்போது விஷயத்தின் ஆவரணம் நீங்கி விஷயந்தோன்றுகிறது. அதற்குப்பிரகாசமும் சாதகமாயிருக்கிறது. பிரகாசமன்றியில் பதார்த்தம் விளங்குகிறதில்லை. ரஜ்ஜுவினிடத்தில் சர்ப்பப்பிரமை யுண்டாகும்போது அந்தக்கரணத்தின் விர்த்தி நேத்திராதிமூலமாக வெளியே சென்று ரஜ்ஜுவுடன் சம்பந்தப்பட்டும் இருட்டு[21]

---

21. இருள் சப்தத்தால் மந்தாந்தகாரத்தைத் திரிக்கத்தக்கது. ஏனெனில் நல்ல வெளிச்சத்தில் ரஜ்ஜு தெரியாமற் போகாது. நல்ல இருட்டில்

முதலிய தோஷங்களின் பிரதிபந்தத்தால் விர்த்தி ரஜ்ஜு-வாகாரமாகிறதில்லை. ஆகையால் ரஜ்ஜு-வின் ஆவரணம் நீங்குகிறதில்லை. இவ்விதமாக ஆவரணம் நீங்கும்பொருட்டு விர்த்தி சம்பந்தப்பட்டும் ரஜ்ஜு-வின் ஆவரணம் நீங்காதபோது ரஜ்ஜு-ஸாதன்னியத்திலிருக்கப்பட்ட அவித்தையில் ஓர்க்ஷோபம்அதாவது கலக்கமுண்டாகி அவ்வவித்தைச் சர்ப்பாகாரப்பரிணமத்தை யடைகிறது. அந்த அவித்தியா காரியமான சர்ப்பம் சத்தா இருக்கும்பக்ஷத்தில் அதுரஜ்ஜு-ஞானத்தினால் நிவிர்த்தியாகக்கூடாது; ஆனால் அனுபவத்தில் நிவிர்த்தியாகிறது. ஆகையால் சர்ப்பம் சத்தன்று. மேலும் அச்சர்ப்பம் அசத்தாக இருக்கும்பக்ஷத்தில் மலடிமகன்போல்தோன்றக்கூடாது. ஆனால் அனுபவத்தில் தோன்றுகிறது. ஆகையால் அது

23

அசத்துமன்று; ஆனாலோசதசத்துக்கு விலக்ஷணமான அநிர்வசனீயமாயிருக்கிறது. இவ்விதமாகவே கிளிஞ்சில் முதலியவைகளில் வெள்ளிமுதலியவைகளும் அநிர்வசனீயமாய்த் தோன்றுகின்றன. இந்தஅநிர்வசனீயத்தின் கியாதி அதாவது பிரதீதியும்வர்ணனையும் அநிர்வசனீயக்கியாதியென்னப்படும்.

143. சர்ப்பஞானமும் அவித்தியாபரிணமம்:—எப்படிச்சர்ப்பம் அவித்தியாபரிணம (142) மாகவிருக்கிறதோ அப்படியே சர்ப்பத்தின் ஞானரூபவிர்த்தியும் அவித்தியாபரிணமமாக விருக்கிறது, அந்தக்கரணத்தின் பரிணமமாகவில்லை. ஏனெனில், ரஜ்ஜு-ஞானத்தால் சர்ப்ப

அதிஷ்டானத்தின் "இது" என்கிற சாமானிய ஞானமன்றியிலும் விசேஷ அஞ்ஞானமன்றியிலும் அத்தியாஸ முண்டாகமாட்டாதென்று இரண்டாவது தரங்கத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. மந்தாந்தகாரத்தில் இவ்விரண்டும் இருப்பதால் மந்தாந்தகாரமே கிரகிக்கத்தக்கது.

22. முதலிய சப்தத்தால் நேத்திரங்களின் மந்தாதிதோஷங்கள் கிரகிக்கத்தக்கன.

23. சத்தைக்காட்டிலும் விலக்ஷணமானது அசத்து. ஆனதால் சத்துக்கு விலக்ஷணம் அனிர்வசனீய மென்று சொல்வது விரோதம். அசத்துகு விலக்ஷணம் சத்தாயிருக்க அநிர்வசனீய மென்று சொல்லுதல் விரோதம். சதசத்துக்கு வேறுன் மூன்றுவது பதார்த்தமில்லாததினால் அநிர்வசனீய சப்தம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இதற்குசமாதானம்:— மூன்று காலத்திலும் பாதிக்கப்படாதது சத்தெனப்படும். இதற்கு விலக்ஷணமென்பதால் பாதிக்கத்தக்கதென்று ஏற்படுகிறது. ஸ்வரூபமில்லாத மலடிமகன் முதலியவை அசத்தெனப்படும். இதற்கு விலக்ஷணமென்றால் ஸ்வரூபமுண்டென்று ஏற்படுகிறது. ஆகையால் பாதிக்கப்படத்தக்கதாயும் ஸ்வரூபமுள்ளதாயு மிருக்கிற பதார்த்தம் அநிர்வசனீய மென்னப்படும்.

ம் பாதிக்கப்படுவதுபோல் சர்ப்பஞானமும் பாதிக்கப்படுகிறது. அந்தக் கரணத்தின் பரிணாமமாயிருக்கும்பக்ஷத்தில் சர்ப்பஞானம் பாதிக்கப்படக் கூடாது. ஆகையால் சர்ப்பம்போல் சர்ப்பஞானமும் அவித்தியாகாரிய மாயும் சத்து அசத்து இவைகளுக்கு விலட்சணமான அநிர்வசனீயமாயும் இருக்கிறது. ஆனல் சர்ப்பம் ரஜ்ஜு—உபஹித சேதனத்திலிருக்கப்பட்ட அவித்தையின் தமோகுணத்தின் பரிணாமமாக இருக்கிறது. விர்த்திஞானம் சாக்ஷிசேதனத்திலிருக்கப்பட்ட அவித்தையின் சத்துவகுணபரிணாமமாக விருக்கிறது. எப்போது ரஜ்ஜு—உபஹித சேதனத்தின் அவித்தை சர்ப்பாகாரமாக ஆகிறதோ அப்போது சாக்ஷியை ஆசிரயித்த அவித்தை ஞானகாரமாகிறது. எனெனில் எக்காரணத்தினல் ரஜ்ஜு—உபஹிதசேதனத்தை யாசிரயித்த அவித்தையில் கலக்கமுண்டாய்[24] பிற்றோ அக்காரணத்தினலேயே சாக்ஷியை யாசிரயித்த அவித்தையிலுங்கலக்கமுண்டாகிறது. ஆகையால் பிரமையுண்டாகும்போது சர்ப்பாதி விஷயங்களும் அவைகளின் ஞானமும் ஒரேசமயத்திலுண்டாகின்றன. மேலும் ரஜ்ஜு—முதலிய அதிஷ்டானங்களின் ஞானத்தினல் ஒரேசமயத்தில் அவை லயமாகின்றன. இவ்விதமாகச்சர்ப்பாதிப்பிரமையில் வெளியிலிருக்கும் அவித்தியாம்சம் சர்ப்பாதி விஷயங்களுக்கு[25] உபாதான காரணமாயிருக்கிறது. சாக்ஷிசேதனத்தை யாசிரயித்து உள்ளே யிருக்கும் அவித்தியாம்சம் சர்ப்பாதி விஷயங்களின் ஞானரூப விர்த்திக்கு உபாதான காரணமாயிருக்கிறது.

144. சர்ப்பம் சாக்ஷிபாவியம்:— சொப்பனத்தில் சாக்ஷியை யாசிரயித்த அவித்தையின் தமோகுணம்சம் விஷயரூப பரிணாமத்தையும் சத்துவகுணம்சம் ஞானரூப பரிணாமத்தையும் அடைகின்றன. ஆகையால் சொப்பனத்தில் உளளே யிருக்கும் அவித்தையே விஷயத்துக்கும் ஞானத்துக்கும் உபாதானகாரணமாயிருக்கிறது. இக்காரணத்தினல் வெளியே யிருக்கும் ரஜ்ஜு—சர்ப்பாதிகளும் உள்ளேயிருக்கும் சொப்பன பதார்த்தங்களும் சாக்ஷிபாஸியங்களென்று சொல்லப்படுகின்றன. அவித்தையின் விர்த்திமூலமாக எதைச்சாக்ஷி பிரகாசிப்பிக்கிறதோ அது **சாக்ஷிபாவிய** மென்று சொல்லப்படும்.

145. **விவர்த்தபரிணாமங்களின்லக்ஷணம்:**— ரஜ்ஜு—முதலியவைகளில் அநிர்வசனீய சர்ப்பாதிகளும் அவைகளின் ஞானமும்

---

24. உபாதானம் காரியாதி—ரூபமாகுதல் சேஷாபம் எனப்படும்.

25. உதாரணம்:— கடத்துக்கு மண் உபாதான காரணம். குயவன் நிமித்தகாரணம்.

பிரமையென்றும் அத்தியாஸமென்றும் சொல்லப்படும். இந்தப்பிரமை அவித்தையின் பரிணாமமாயும் சேதனத்தின் விவர்த்தமாயும் இருக்கிறது. உபாதானகாரணத்துக்குச்சமானமான சுபாவத்துடனும் வேறு சொரூபத்துடனுங்கூடியது **பரிணாம** மெனப்படும். அதிஷ்டானத்துக்கு விபரீதமான சுபாவத்துடனும் வேறு சொரூபத்துடனுங்கூடியது **விவர்த்த** மென்னப்படும். உபாதானகாரணம் அவித்தை. இது அநிர்வசனீயம். இப்படியே ரஜ்ஜுவில் சர்ப்பமும் அதின் ஞானமும் அநிர்வசனீயமாயிருக்கின்றன. ஆகையால் ரஜ்ஜுவில் சர்ப்பமும் அதன் ஞானமும் அவித்தைக்குச்சமானமான சுபாவத்துடனும், வேறு சொரூபம் அதாவது அவித்தைக்கு வேறான ஆகாரத்துடனுங்கூடியிருப்பதால் இவை அவித்தையின் பரிணாமமாயிருக்கின்றன. மேலும் ரஜ்ஜுவவச்சின்ன அதிஷ்டானசேதனம் சத்சொரூபமாக இருக்கிறது. சர்ப்பமும் அதின் ஞானமும் சத்துக்கு விலக்ஷணமாயிருக்கின்றன. ஆகையால் ரஜ்ஜுவில் சர்ப்பமும் அதின் ஞானமும் அதிஷ்டானசேதனத்துக்கு விபரீதச்சுபாவத்துடன் கூடியிருக்கின்றன; சேதனத்துக்கு வேறான ஆகாரத்துடனுங்கூடியிருக்கின்றன. ஆகையால் ரஜ்ஜுவில் தோன்றும் சர்ப்பமும் அதின் ஞானமும் அவித்தியாபரிணாமமாயும் சேதன விவர்த்தமாயுமிருக்கின்றன.[26]

---

26 ரஜ்ஜுவில் சர்ப்பப்பிராந்தி உண்டாகும் போது, (I) முதலில் சர்ப்பாதி சம்ஸ்காரசகித புருஷனுடைய திமிராதிதோஷசகித நேத்திரத்துக்கும் ரஜ்ஜுவுக்கும் சம்பந்தமுண்டாகிறது. அப்போது ரஜ்ஜு விளங்குகிறதில்லை. (2) பிறகு, நேத்திர மூலமாக ரஜ்ஜுவை அடைந்த அந்தக்கரணம் "இது" என்னும் பரிணமத்தை அடைகிறது. (3) பிறகு இதமாகாரவிருத்தியிலுள்ள சேனத்திலிருக்கிற அவித்தையில் க்ஷோபம் உண்டாகிறது. உபாதானம் காரியாபிமுக மாகுதலே க்ஷோபமாம். (4) பிறகு அவித்தையின் தமோகுணம்சம் சர்ப்பாகார பரிணமத்தையும் சத்வகுணக்சம் சர்ப்பஞானாகார பரிணமத்தையுமடைகின்றன. சர்ப்பமும் ஞானமும் அவித்தையின் பரிணமமாயும் சேதனத்தின் விவர்த்தமாயுமிருக்கின்றன. ஒரே புருஷன் தகப்பனை அபேக்ஷித்து பிள்ளையாகவும், பாட்டனை அபேக்ஷித்து பேரனாகவுமிருப்பதுபோல் ஒரே சர்ப்பம் அவித்தையை அபேக்ஷித்து பரிணமமாகவும், சேதனத்தை அபேக்ஷித்து விவர்த்தமாகவுமிருக்கிறது. பாலும் தயிரும் வியாவகாரிகமாகிற (277) ஒரேசத்தை. இவைகளின் சுவபாவங்கள் வெவ்வேறு. பால் இத்திப்பு தயிர் புளிப்பு. ஆகையால் தயிர் பாலின் பரிணமம். இதுபோல் சர்ப்பமும் அவித்தையும் பிராதிபாஸிக (278) அல்லது வியாவகாரிக சத்தையாக இருக்கின்றன. அவித்தைக்கு ரூபமில்லை. சர்ப்பத்துக்கு ஸ்வரூபமிருக்கிறது. ஆகையால் சர்ப்பம் அவித்தையின் பரிணமமாகிறது. சத்தையும் ஸ்வரூபமும் பேதப்படும்போது விவர்த்தமென்னப்படும். சேதனம் பாரமார்த்திகசத்தை (279), சர்ப்பம் அப்படியல்ல. ஆகையால் இரண்டுக்கும் சத்தாபேதம் சித்திக்கிறது. சேதனம் பாதிக்கப்படாதசத்தை, சர்ப்பம் பாதிக்கப்படும் சத்தை. ஆகையால் இரண்டின் ஸ்பாவங்களும் வெவ்வேறு. ஆகையால் சர்ப்பம் சேதனத்தின் விவர்த்தமாகிறது.

146. இவைகளின் அநிஷ்டானம்:— நிவிர்த்தி:— மித்தியா சர்ப்பத்துக்கு அதிஷ்டானம் ரஜ்ஜுவுபஹித சேதனமேதவிர ரஜ்ஜுவன்று. ஏனெனில் சர்ப்பம்போல ரஜ்ஜுவும் கல்பிதமாயிருக்கிறது. ஒருகல்பிதவஸ்து வேறொர் கல்பிதவஸ்துவுக்கு அதிஷ்டானமாட்டாது. ஆகையால் ரஜ்ஜுவுபஹித சேதனமே அதிஷ்டானமேதவிர ரஜ்ஜுவன்று. மேலும் ரஜ்ஜுவிசிஷ்டசேதனத்தை அதிஷ்டானமாகச்சொல்லும்பக்ஷத்தில் ரஜ்ஜு, சேதனம் இவ்விரண்டும் அதிஷ்டானமாகும் ரஜ்ஜு அதிஷ்டானமாகா தென்று மேலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ரஜ்ஜுவுபஹித சேதனமே அதிஷ்டானமேதவிர ரஜ்ஜுவிசிஷ்டசேதனம் அதிஷ்டானமன்று. இப்படியே சர்ப்பஜ்ஞானத்துக்கும் சாக்ஷீசேதனம் அதிஷ்டானமாயிருக்கிறது. இவ்விதமாகப் பிரமையுண்டாகிற இடத்தில் விஷயத்துக்கும் அதின்ஞானத்துக்கும் உபாதிபேதத்தால் அதிஷ்டானம் வேறுபடுகிறது, ஒன்றுக இருக்கிறதில்லை. ரஜ்ஜுவென்றறியாமையே, அவித்யைதயிற்கலக்கமுண்டாவது மூலமாக சர்ப்பத்துக்கும் அதின் ஞானத்துக்கும் காரணமாயிருப்பதுபோல, ரஜ்ஜுவின் ஞானம் அவைகளின் நிவிர்த்திக்குக் காரணமாயிருக்கிறது.

147 ஆக்ஷேபம்:—ரஜ்ஜுஞானத்தால் சர்ப்பம் நிவிர்த்தியாகமாட்டாது. ஏனெனில் மித்தியாவஸ்துவுக்கு எது அதிஷ்டானமோ, அதஅதிஷ்டானத்தின் ஞானத்தினல் மித்தை நிவிர்த்தியாகு மென்பது அத்துவைதவாதிகளின் சித்தாந்தம். மித்தியாசர்ப்பத்துக்கு அதிஷ்டானம் ரஜ்ஜுவுபஹித சேதனமே தவிர ரஜ்ஜுவன்றென மூந்தின பிரிவிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ரஜ்ஜுஞானத்தால் சர்ப்பம் நிவிர்த்தியாகமாட்டாது.

148. சமாதானம்:— ரஜ்ஜுமுதலிய ஜடபதார்த்தங்களின் ஞானம் அந்தக்காரணத்தின் விர்த்திரூபமாக இருக்கிறது. விர்த்தியின் பிரயோஜனம் ஆவரணத்தை நீக்குவதே. இந்த ஆவரணம் அஞ்ஞானத்தின் சக்தியாயிருக்கிறது. ஆகையால் ஆவரணம் ஜடத்தை யாசிரயிக்காமல் ஜடத்துக்கு அதிஷ்டானமான சேதனத்தை யாசிரயித்திருக்கிறது. ஆகையால் அந்தக்காரணத்தின் விர்த்தி ரஜ்ஜுவுக்குச்சமான ஆகாரத்தை வகிக்கிறதினல் ரஜ்ஜுஅவச்சின்னசேதனத்தின் ஆவரணமே நீங்குகிறது. விர்த்தியிலுள்ள சிதாபாசன் ரஜ்ஜுவைப் பிரகாசிப்பிக்கிறது. சேதனம் சுயம்பிரகாசமாயிருக்கிறது. அது பிரகாசிக்க ஆபாசனுடைய உதவி வேண்டியதில்லை. இந்த விஷயம் விவரமாக இத்தாங்கத்தில் பின்னல் (205-ம் முதல்) சொல்லப்படும். இவ்விதமாகச் சிதாபாசனுடன் கூடிய அந்தக்

காணத்தின் விர்த்திரூப ஞானத்திலிருக்கிற விர்த்திபாகம் சேதனத்தின் ஆவரணத்தை நீக்குகிறது; சிதாபாஸபாகம் ரஜ்ஜுவைப் பிரகாசிப்பிக்கிறது. ஆகையால் விர்த்திஞானம் கேவலம் ஜடமான ரஜ்ஜுவை விஷயமாக்குகிறதில்லை. ஆனல் அதிஷ்டானசேதனத்துடன் கூடிய ரஜ்ஜு ஆபாசனுடன் கூடிய விர்த்திக்குவிஷயமாகிறது. இக்காரணத்தால் சித்தாந்த க்கிரந்தத்தில் "அந்தக்காரண ஜன்யவிர்த்திஞானம் பிர்ம்மத்தை விஷய் மாக்குகிறது" என்றெழுதப்பட்டிருக்கிறது. இந்தப்பிரகாரமாக ரஜ்ஜு ஞானத்தால் ஆவரணம்நீங்கிச்சர்ப்பத்துக்கு அதிஷ்டானமான ரஜ்ஜு அவச்சின்னசேதனமும் தன்பிரகாசத்துடன் விளங்குகிறது. ஆகையால் ரஜ்ஜுவின் ஞானமே சர்ப்பத்தின் அதிஷ்டான ஞானமா யிருக்கிறது. ஆனதால் ரஜ்ஜுஞானத்தால் சர்ப்பம் நிவிர்த்தியாகும்.

149. ஆக்ஷேபம்:—மேற்சொல்லியபடி ரஜ்ஜுஞானத்தினுல் சர்ப்பம் நிவிர்த்தியானலும் சர்ப்பஞானம் நிவிர்த்தி யாகமாட்டாது. ஏனெனில் சர்ப்பத்துக்கு அதிஷ்டானம் ரஜ்ஜு அவச்சின்ன சேதனம் (146). சர்ப்பஞானத்துக்கு அதிஷ்டானம் சாக்ஷீசேதனம். முன்சொன்ன படி ரஜ்ஜுஞானத்தால் ரஜ்ஜு அவச்சின்ன சேதனமே விளங்குகிறதேத விர சாக்ஷீசேதனம் விளங்குகிறதில்லை. ஆனதால் ரஜ்ஜுஞான முண்டானலுங்கூடச் சர்ப்பஞானத்துக்கு அதிஷ்டானமான சாக்ஷீசேதனம் அறியப்படாமலிருக்கிறது. அதிஷ்டானம் அறியப்படாமலிருக்கும் போது கல்பிதம் நிவிர்த்தியாகமாட்டாது. அதிஷ்டானத்தை அறிவதினல் தான் கல்பிதம் நிவிர்த்தியாகும். ஆகையால் ரஜ்ஜுஞானத்தால் சர்ப்ப ஞானம் நிவிர்த்தியாகமாட்டாது.

150 சமாதானம்:—ஞானம் விஷயத்துக்காதீனமாயிருக்கிறது. விஷயமாகிற சர்ப்பம் நிவிர்த்தியாகிறதினல் சர்ப்பஞானத்துக்கு விஷயமில்லாமற்போகிறது. ஆதலால் சர்ப்பஞானமும் ரஜ்ஜுஞானத்தால் நிவிர்த்தியாய்விடுகிறது.

151 ஆக்ஷேபம்:—அதிஷ்டானஞானமன்றியில் கல்பிதம் நிவிர்த்தியாகமாட்டாது. சர்ப்பத்தின் ஞானமுங்கல்பிதம். அதற்கு அதிஷ்டானம்சாக்ஷீசேதனம். அந்த அதிஷ்டானஞானமன்றியில் கல்பிதசர்ப்பத்தின் ஞானம்நிவிர்த்தியாகமாட்டாது.

152 சமாதானம் (152—154):— நிவிர்த்தி இருவகையாம். ஒன்று அத்தியந்தநிவர்த்தி, மற்றொன்று காரணத்தில் லயமாகுதல்.

---

27. கடம் உடைந்து மண்ணுகப்போகுதல் ஒருவித நிவிர்த்தி. வஸ்திரம் தனக்குக்காரணமான நூலுடன் எரிந்துபோகுதல் மற்றொருவிதமான அத்தியந்த நிவிர்த்தி.

காரணத்துடன் காரியமும் நிவிர்த்தியாகுதல் அத்தியந்த நிவிர்த்தி யென் ண்ப்படும். எல்லா கல்பிதவஸ்துக்களுக்குங்காரணம் அதிஷ்டானத்தை ஆசிரயித்துக் கொண்டிருக்கிற அஞ்ஞானமாயிருக்கிறது (290). அதிஷ் டானஞானத்தினல் அஞ்ஞானமும் கல்பிதகாரியங்களும் நிவிர்த்தியாகின் றன. ஆனல் காரணத்தில் லயமாகிற நிவிர்த்தி அதிஷ்டானஞானமன்றி யிலும் உண்டாகும். சுஷுப்தியிலும் பிரளயத்திலும் சகல பதார்த்தங் களும் அதிஷ்டானஞானமன்றியில் அஞ்ஞானத்தில் லயமடைகின்றன. அப்போது சர்வபதார்த்தங்களின் லயத்துக்குக்காரணம் போகத்துக்குக் காரணமான கர்மாபாவமாயிருக்கிறது. இதுபோல் அதிஷ்டானசாக்ஷி யின் ஞானமன்றியிலும் சர்ப்பஞானம் நிவிர்த்தியாகிறது. அப்போது சர்ப்பஞானத்துக்கு விஷயமான சர்ப்பத்தின அபாவமே சர்ப்பஞானத்தி ன் நிவிர்த்திக்குக் காரணமாயிருக்கிறது. இவ்விதமாகரஜ்ஜு—ஞானத்தா ல்சர்ப்ப நிவிர்த்தியும் சர்ப்பஞானத்துக்கு விஷயமான சர்ப்பாபாவத்தால் சர்ப்பஞானமும் நிவிர்த்தியாகின்றன.

153 அல்லது, சர்ப்பமும் அதின்ஞானமும் இரண்டும் ரஜ்ஜு—ஞானத்தினலேயே நிவிர்த்தியாகும். எப்படியெனில், ரஜ்ஜு—பிரத்தியக்ஷமாக அறியப்படும்போது அந்தக்காணத்தின் விர்த்தி நேத்திரமூலமாக வெளியே சென்று ரஜ்ஜு—வை யடைந்து அதற்குச்சமானமான ஆகாரத் தைத்தரிக்கிறது. ஆனதால் ரஜ்ஜு—பிரத்தியக்ஷமாக அறியப்படும்போ து விர்த்தியுபஹிதசேதனமும் ரஜ்ஜு—உபஹிதசேதனமும் இரண்டும் ஒன் றுய்ப் போகின்றன, பேதப்படுகிறதில்லை. இதற்குக் காரணம்:—"சொ ரூபத்தினல் சேதனத்துக்கு யாதொருபேதமுமில்லை. ஆனல் உபாதிபே தத்தால் சேதனத்துக்குப் பேதமுண்டாகிறது. விர்த்தியுபஹிதசேதன த்துக்கும் ரஜ்ஜு—உபஹிதசேதனத்துக்கும் பேதத்தை யுண்டு பண்ணுகிற உபாதிகள் விர்த்தியும் ரஜ்ஜு—வுமே. இந்தவிர்த்தியும் ரஜ்ஜு—வும் வெவ் வேறிடங்களிலிருக்கும்போது உபாதியுடன்கூடிய சேதனத்துக்குப்பேத முண்டாகிறது. இரண்டுஉபாதிகளும்ஒரேயிடத்தி லிருக்கும்போது உபஹிதசேதனத்துக்குப்பேத முண்டாகிறதில்லை." இப்படி வேதா ந்த பரிபாஷாநிக் கிரந்தங்களில் எழுதபட்டிருக்கிறது. வெவ்வேறிடங் களி லிருக்கிறஉபாதிகளாலேயே உபஹிதசேதனத்துக்குப்பேதமுண்டா கிறது. ஒரே யிடத்தில் இரண்டு உபாதிகளுமிருந்தாலும் அவைகளா லுபஹிதமானசேதனம் ஒன்றுகவே யிருக்கிறது. இவ்விதமாக ரஜ்ஜு— பிரத்தியக்ஷமாக அறியப்படுங் காலத்தில்ரஜ்ஜு—உபஹிதசேதனமும் விர்த் தியுபஹிதசேதனமும் ஒன்றுயிருக்கின்றன. அப்போது சாக்ஷீசேதனை மே விர்த்தியுபஹித சேதனமாயிருக்கிறது. ஏனெனில் அக்தக்காணத்தி லும் அதன்விர்த்தியிலும் இருக்கவிகாண்டு அவைகளைப் பிரகாசிப்பி

கிற சேதனமாத்திரத்துக்குச்சாக்ஷியென்றுபெயர். இவ்விதமாக ரஜ்ஜுவின் பிரத்தியக்ஷஞானசமயத்தில் சாக்ஷிசேதனமும் ரஜ்ஜுஉபஹித சேதனமும் ஒன்றாய்விடுகின்றன ரஜ்ஜுஉபஹிதசேதனம் ரஜ்ஜுஞானத்தால்விளங்குகிறது. ரஜ்ஜுஉபஹிதசேதனத்துக்கு வேறாகாத சாக்ஷி சேதனமும்ரஜ்ஜுஞானத்தால் விளங்குகிறது. இவ்விதமாக ரஜ்ஜுஞானசமயத்தில். அதிஷ்டானசாக்ஷிவிளங்குகிறதினால் கல்பித சர்ப்பஞானமும் நிவிர்த்தியாகும்.

154 இதுவுமன்றி, **கூடவஸ்தீபிகையில்வித்தியாரண்யஸ்வாமிகள்** சொல்லியிருக்கிறதாவது:— ஆபாஸஸஹித அந்தக்காரணத்தின் விர்த்தி இந்திரியமூலமாக வெளியே சென்று கடாதி விஷயங்களைப் பிரகாசிப்பிக்கிறது. கடாதிவிஷயம், ஆபாஸசகித விர்த்திரூப விஷயத்தின் ஞானம், ஆபாஸஸஹித அந்தக்காரணரூப ஞாதா, இம்மூன்றையுஞ் சாக்ஷி பிரகாசிப்பிக்கிறது. இதற்கர்த்தமென்னவெனில் "இதுகடம்" என்கிறவாக்கியத்தில் ஆபாஸசகித விர்த்தியால்கடம்மாத்திரம பிரகாசமாகிறது. "நான்கடத்தை அறிகிறேன்" என்கிற வாக்கியத்தில் நான் என்கிற சப்தத்துக்கு அர்த்தமாகிற ஞாதா, ஞேயமாகிற கடம், இதின்ஞானம் இம்மூன்றையும் சாக்ஷி பிரகாசிப்பிக்கிறது. (ஞாதா, ஞானம், ஞேயம், மூன்றும் திரிபுடிஎன்னப்படும்) இவ்விதமாகச் சகலத்திரிபுடிகளையும் சாக்ஷி பிரகாசிப்பிக்கிறது. சாக்ஷி தான் அஞ்ஞாதமாயிருந்தால் திரிபுடியின் ஞானம் சாக்ஷியாலுண்டாகமாட்டாது. ஆகலால் சகல திரிபுடிஞானகாலத்திலும் சாக்ஷியின் ஞானம் இருந்துக்கொண்டே யிருக்கிறது. இந்தச் சாக்ஷிஞானத்தால் சர்ப்பஞானம் நிவிர்த்தியாகிறது.

155 146-வது பிரிவில் சர்ப்பத்துக்கும் அதன்ஞானத்துக்கும் அதிஷ்டானங்கள் வெவ்வேறுகச்சொன்னதில் இவ்வளவு ஆக்ஷேப சமாதானங்கள் உண்டாயின. இன்னும் வேறுஅனேகங்களுமுள. ஆகையால் சர்ப்பத்துக்கும் அதின் ஞானத்துக்கும் அதிஷ்டானம் ஒன்றுதானென்னும் பக்ஷம் இனிக்கூறப்படும். வெளியேயிருக்கும் ரஜ்ஜுசேதனம் சர்ப்பத்துக்கும் அதின்ஞானத்துக்கும் அதிஷ்டானம் என்று சொல்லக்கூடாது. ஏனெனில் எவ்வளவு ஞானம் உண்டாகிறதோ அவ்வளவும் பிரமாணம் அல்லது சாக்ஷியை ஆசிரயித்துக் கொண்டிருக்கிறது. ஞானம் வெளியேயுள்ள ரஜ்ஜுசேதனத்தை ஆசிரயிக்கமாட்டாது. இதுபோல் சர்ப்பம் சர்ப்பஞானம் இவைகளுக்கதிஷ்டானம் அந்தக்காரணஉபஹிதசாக்ஷி சேதனமென்று சொல்லும்பக்ஷத்தில் சரீரத்துக்குள் அந்தக்காரணத்தினிடத்தில் சர்ப்பம் தோன்றவேண்டும். வெளியேயுள்ள ரஜ்ஜுவினிடத்தில் சர்ப்பம் தோன்றக்கூடாது. ஆனால் அனுபவத்தில் ரஜ்ஜுவினிடத்தில்

தான் தோன்றுகின்றது. உள்ளேதோன்றும் சர்ப்பம் மாயாபலத்தால் வெளியே தோன்றுவதாகச் சொல்லுமபக்ஷத்தில் ஆத்மக்கியாதிமதம் சித்திக்கும். (ஆனல் இந்தமதம் 139-வதுபிரிவில் கண்டிக்கப்பட்டிருக்கிறது). இவ்விதமாக, ரஜ்ஜுஉபஹிதசேதனம் ஞானத்துக்கு அதிஷ்டானமன்று. அந்தக்காணஉபஹிதசேதனம் சர்ப்பத்துக்கு அதிஷ்டான்மன்று; ஆதலால்சர்ப்பம் அதின்ஞானம் இவைகளுக்கதிஷ்டானம் ஒன்றுகாவிட்டாலும் ரஜ்ஜுவை யடைந்த அந்தக்காணத்தின் "இது" என்கிற ஆகாரத்துடன் கூடிய விர்த்தியிலுள்ள சேதனத்தை யாசிரயித்துக்கொண்டிருக்கிற அவித்தை சர்ப்பாகாரஞானகார பரிணமங்களை யடைகிறது. உபஹிதசேதனத்தினிருக்கிற அவித்தையின் தமோகுணம்சம் சர்ப்பத்துக்கும் சத்துவகுணம்சம் சர்ப்பஞானத்துக்கும் உபாதானகாரணங்களாயிருக்கின்றனால் சர்ப்பம் சர்ப்பஞானம் இவைகளுக்கு விர்த்தியுபஹிதசேதனம அதிஷ்டானமாயிருக்கிறது. விர்த்தி வெளியே ரஜ்ஜுவினிடத்தில் செல்லுவதால் விர்த்தியுபஹிதசேதனமும் வெளியே இருக்கிறது. ஆதலால் அது சர்ப்பத்துக்கு ஆசிரயமாக இருக்கிறது. அந்தக்காரணச் சொரூபம் எவ்வளவோ அவ்வளவு தான் சாக்ஷீ சொரூபம். சரீரத்துக்குள்ளிருக்கிற அந்தக்காரணமே விர்த்திஸ்வரூப பரிணமத்தை யடைகிறது. ஆகையால் விர்த்தியுபஹித சேதனம் சாக்ஷியாயிருக்கிறது. ஆனதால் ஞானத்துக்கு ஆசிரயமாயிருக்கிறது. ரஜ்ஜு பிரத்தியக்ஷமாகும்போது ரஜ்ஜு சேதனமும் விர்த்தி சேதனமும் இரண்டும் ஏன்றுவதால் ரஜ்ஜு ஞானத்தினுல் சர்ப்பமும் அதின் ஞானமும் நிவர்த்தியாகக்கூடும்.

156. ஏரே ரஜ்ஜுவினிடத்தில் பத்துப் பேர்களுக்குள் சிலருக்கு சர்ப்பம் சிலருக்குத்தடி, சிலருக்குப் பூமாலை, சிலருக்குப் பூமியின் வெடிப்பு, சிலருக்கு நீர்த்தாரை, இவ்விதமாக வெவ்வேறான பிரமை தோன்றுகிறதுண்டு. அல்லது எல்லாருக்கும் சர்ப்பமே தோன்றுவதுண்டு. ரஜ்ஜுவின் சாக்ஷாத்கார ஞானமுண்டானவுடன் அவரவர்களுக்கு விர்த்திசேதனத்திலுண்டாயிருந்த பிரமை நீங்கி விடுகிறது. எவனுக்கு ரஜ்ஜுஞானமுண்டாக வில்லையோ அவனுக்குப் பிரம்ம நீங்குகிறதில்லை. ஆகையால் விர்த்திசேதனமே கல்பிதபிரமைக்கு அதிஷ்டானமாயிருக்கிறதே தவிர ரஜ்ஜு முதலிய விஷய உபஹித சேதனம் அதிஷ்டானமாகவில்லை. ரஜ்ஜு உபஹித சேதனத்தையே சர்ப்ப தண்டாதிகளுக்கு அதிஷ்டானமாகச் சொல்லும் பக்ஷத்தில் பத்துப்பேர்களுக்கும் தோன்றும் பொருள் ஒன்றுகவேயிருக்கவேண்டும். ஆகல் அப்படி அனுபவத்திலிருப்பதாய் நியமங்காணும். ஆனபடியால் எவனுடைய விர்த்திசேதனத்தில் எந்தப்பொருள் கல்பிதமாகிறதோ அது அவனுக்கு மட்டும் தோன்றுகிறதே தவிர வேறொருவருக்குத் தோன்றுகிறதில்லை. இவ்விதமாக வெளியிலுள்ள

சர்ப்பாதிகளுக்கும் அவைகளின்ஞானத்துக்கும் விர்த்தியுபஹிதசாக்ஷி அதிஷ்டானமாயிருக்கிறது. சொப்பனபதார்த்தங்களுக்கும் அவைகளின் ஞானத்துக்குங்கூட அந்தக்காணஉபஹிதசாக்ஷியே அதிஷ்டானமாயிருக்கிறது. இவ்விதமாக சதசத்துகளுக்குவிலக்ஷணமாயும் அநிர்வசனீயமாயு மிருக்கிற அவித்தையின்பரிணாமமான அநிர்வசனீய சர்ப்பாதிகளின் கியாதி அதாவது பிரதீதியும் கதனமும் அநிர்வசனீயக்கியாதியென்று சொல்லப்படும்.

157. கேள்வி:— சுவாமின், மித்தையாகத்தோன்றுகிற இந்த அபாரமான ஜகத்துக்கு ஆதாரமென்ன? அதைச்சொல்லியருள்க.

158. உத்தரம்:— சிஷனே, உன்னுடைய உண்மையான பிர்ம்மஸ்வரூபத்தை நீயறியாததினால் உனக்கு மித்தையான ஜகத்துத்தோன்றுகிறது. ஆனதால் ஜகத்துக்காதாரமும் அதிஷ்டானமும் நீயே. ரஜ்ஜுவை யறியாமையால் மித்தையான சர்ப்பம் தோன்றுகிற விடத்தில் மித்தையான சர்ப்பத்துக்கு ரஜ்ஜு ஆதாரமாயும் அதிஷ்டானமாயுமிருக்கிறது. மித்தியாசர்ப்பத்துக்கு அதிஷ்டானம் சித்தாந்தமாகிற இரண்டாவது பாகத்தில் விர்த்தியுபஹிதசேதனமாயும் பிரதமபாகத்தில் ரஜ்ஜு உபஹிதசேதனமாயும் இருந்தாலும் எந்தப்பாகத்திலும் ரஜ்ஜு அதிஷ்டானமாகாவிட்டாலும் பிரதமபாகத்தில் அதிஷ்டானசேதனத்துக்கு ரஜ்ஜு உபாதியாயிருப்பதால் ஸ்தூலதிர்ஷ்டிக்கு ரஜ்ஜுவே யதிஷ்டானமாகச்சொல்லப்படுகிறது. மித்தியாசர்ப்பத்துக்கு ரஜ்ஜு அதிஷ்டானமும் ஆதாரமுமாயிருப்பதுபோல் மித்தியாஜகத்துக்கும் நீயே அதிஷ்டானமும் ஆதாரமுமாயிருக்கிறாய்.

159. ஆதார அதிஷ்டான விவரம்:— இவ்விடத்தில் ஒரு ரகசியமிருக்கிறது. ரஜ்ஜுவுக்கு இரண்டு ஸ்வரூபங்களுள. ஒன்று "இது" என்கிற சாமானியஸ்வரூபம். மற்றொன்று ரஜ்ஜுவென்கிற விசேஷஸ்வரூபம். "இது சர்ப்பம்" என்று மித்தியாசர்ப்பந்தோன்றுகிற பிராந்தி காலத்திலும் விளங்குகிற "இது" என்கிற ரூபம் சாமானிரூபம். பிராந்திகாலத்தில் எந்தஸ்வரூபம் விளங்கவில்லையோ ஆனால் எது விளங்குகிறதினால் பிராந்தி நீங்குகிறதோ அது ரஜ்ஜுவின் விசேஷஸ்வரூபம். இதுபோல ஆத்மாவுக்கும் இரண்டு ஸ்வரூபங்களுண்டு. ஒன்று சாமானியம் ஒன்று விசேஷம். சத்ரூபம் சாமானியம். அசங்கதை, கூடஸ்ததை, நித்தியமுக்த்தை, பூதலியவிசேஷரூபம். எனெனில் ஸ்தூலசூக்ஷ்மசரீரம் "இருக்கிறது" என்பதில் ஸ்தூலசூக்ஷ்மசரீரத்

தின் பிராந்திசமயத்திலும் மித்தையான சரீரத்துக்கு வேறுகாட்டல் சத்ரூபம் விளங்குகிறது. ஆகையால் ஆத்மாவின் சத்ரூபம் சாமானியரூபமாயிருக்கிறது. ஸ்தூலசூக்ஷ்மசரீரத்தின் பிராந்திசமயத்தில் ஆத்மாவின் அசங்க, கூடஸ்த, நித்தியமுக்தஸ்வரூபங்கள் தோன்றுகிறதில்லை. ஆனால் அசங்காதிஸ்வரூபங்கள் ஆத்மாவினிடத்தில் தோன்றுகிறதினால் சரீரப்பிராந்தி நிவிர்த்தியாகிறது. ஆகையால் அசங்காதிகள் விசேஷரூபங்களாம். எல்லாப்பிராந்திகளிலும் சாமானியரூபம் ஆதாரமென்றும் விசேஷரூபம் அதிஷ்டானமென்றும் சொல்லப்படும். சர்ப்பத்துக்கு ஆசிரயமான ரஜ்ஜுவின் "இது" என்கிற சாமானியரூபம் சர்ப்பத்துக்கு ஆதாரமாயும் ரஜ்ஜு என்கிற விசேஷரூபம் அதிஷ்டானமாயுமிருப்பதுபோல் மித்தியாபிரபஞ்சத்தின் ஆசிரயமான ஆத்மாவின் சாமானியமான சத்ரூபம் பிரபஞ்சத்துக்கு ஆதாரமாயும் அசங்காதி விசேஷரூபங்கள் அதிஷ்டானமாயுமிருக்கின்றன. இவ்விதமாக ஆதார அதிஷ்டானங்களின் பேதம் **பூரீசங்கராசாரியா**ருடைய பவுத்திரசிஷ்யரான **சர்வஞாத்மா** என்னும் முனியால் சொல்லப்பட்டிருக்கிறது.

160. **கேள்வி:**— சுவாமின், பொய்யான ஜகத்துக்குத்திர்ஷ்டா ஆர்? எவன் அதிஷ்டானமாயும் ஆதாரமாயுமிருக்கிறானே அவனே திர்ஷ்டாவாகமாட்டான். ஜகத்துக்கு ஆதாரமும் அதிஷ்டானமும் ஆத்மாவானதினால், ஆத்மாவைவிட வேறான திர்ஷ்டாவைச்சொல்லவேண்டும். சர்ப்பத்துக்கு அதிஷ்டானமாயும் ஆதாரமாயுமிருக்கப்பட்ட ரஜ்ஜுவைக்காட்டிலும் வேறுயிருக்கிற புருஷன் சர்ப்பத்துக்குத்திர்ஷ்டாவாயிருக்கிறதுபோல ஜகத்துக்குத்திர்ஷ்டா ஆர்?

161. **உத்தரம்:**— ஜகத்தில்எந்த வஸ்து மித்தையோ அது அதிஷ்டானத்தில் கல்பிதமாயிருக்கிறது. அதிஷ்டானம் இருவகைத்து. ஒன்று சேதனம் மற்றொன்று ஜடம். அதிஷ்டானம் ஜடமாயிருக்கும்போது அதிஷ்டானத்தைக்காட்டிலும் திர்ஷ்டா வேறாகஇருக்கிறான். சேதனம் அதிஷ்டானமாயிருக்கும்போது அதிஷ்டானமே திர்ஷ்டா, வேறில்லை. சொப்பனத்துக்கு அதிஷ்டானம் சாக்ஷீசேதனம். அது அந்தச் சொப்பனத்துக்குத்திர்ஷ்டாவாயுமிருக்கிறது. இப்படியே ஜகத்துக்கு ஆத்மா அதிஷ்டானமாயும் திர்ஷ்டாவாயுமிருக்கிறது; ஸ்தூலதிர்ஷ்டிக்குச் சர்ப்பம் அதிஷ்டானமென்று சொல்லுமிடத்தில் இந்தச்சங்கை சமாதானங்கள் சம்பவிக்கின்றன; சித்தாந்தத்திலோ சர்ப்பத்துக்கு அதிஷ்டானம் சாக்ஷீசேதனம். அதுவே திர்ஷ்டா. ஆனதால் சகல கல்பிதங்களுக்கும் அதிஷ்டானமே திர்ஷ்டாவாயிருக்கிறது. சங்கைசமாதானங்களுக்கு இடமில்லை.

162. சிஷ்யனே, இவ்விதமாகச்சமுசாரரூபதுக்கம் பிராந்தியால் உன்னிடத்தில் தோன்றுகிறது. இந்தமித்தையை நிவிர்த்திசெய்ய இச்சிக்கக்கூடாது. உதாரணம்:— ஒரு மந்திரவாதி ஒருவனுக்குப்பொய்யான சத்துருவை மந்திரபலத்தினால் காண்பிக்கிறான். இச்சத்துருவைக்கொல்ல ஒருவரும் பிரயத்தனப்படுகிறதில்லை. இதுபோல மித்தியா சமுசாரத்தை நிவிர்த்திக்க இச்சிக்கலாகாது.

163. கேள்வி:— சுவாமின், ஜகத்து என்னிடத்தில் மித்தையாக விருக்கிறது சத்தியமாகவில்லையென்று நீங்கள் சொன்னது சத்தியமாகவிருந்தாலும் எந்த வுபாயத்தினால் பொய்யான ஜனனமரணாதி சமுசாரம் என்னிடத்தில் தோன்றமாட்டாதோ அந்த வுபாயத்தைத் தேவரீர் சொல்லியருளவேண்டும். பொய்யை நிவர்த்தி செய்யச்சாதனந்தேடக்கூடாதென்று தேவரீர் சொன்னது சத்தியமாக விருந்தாலும் எவனுக்கு மித்தியாபதார்த்தம் துக்கத்துக்கு ஹேதுவாயிருக்கிறதோ அவனுக்கு அந்த மித்தியாபதார்த்தம் சாதனத்தினால் தள்ளத்தக்கது. ஒருவனுக்குத் தினந்தோறும் பயங்கரமான சொப்பனமுண்டாகிறது. அது பொய்யாக விருந்தாலும் அது நீங்குவதற்காக ஜபம் பாதப்பிரக்ஷாளனம் முதலிய அனேகவுபாயங்களை அவன் தேடுகிறான். இதுபோல் இந்தச்சமுசாரம் பொய்யாகவிருந்தாலும் ஜன்மாதி துக்கத்துக்கு ஹேதுவாக எனக்குத்தோற்றுகிறது. ஆகையால் சமுசாரத்தை நிவர்த்திசெய்ய இச்சிக்கிறேன். தயவுசெய்து உபாயத்தைச்சொல்லவேண்டும்.

164. குருஉத்தரம்(164—165):— சிஷ்யனே, ஜகத்துரூபமான துக்கத்தை நிவர்த்திசெய்ய எந்தச்சாதனத்தைக்கேட்டாயோ அதை நானுனக்கு முன்னமேயே (125) சொல்லியிருக்கிறேன். அதையுருதியாய் நம்பு. அதினால் ஜகத்ரூபதுக்கம் உன்னிடத்தில் தங்கமாட்டாது. சிஷ்யனே, உன்னுடைய ஆத்மச்சொரூபத்தை நீயறியாததினால் ஜகத்ரூபதுக்கம் உனக்குத்தோன்றுகிறது. அது ஆத்மஞானத்தால் நிவர்த்தியாகிறது. எந்தவஸ்து எதின் அஞ்ஞானத்தினால் விளங்குகிறதோ அந்தவஸ்து அதின் ஞானத்தினால் நீங்குகிறது. ரஜ்ஜுவையறியாததினால் சர்ப்பம் தோன்றுகிறது. ரஜ்ஜுவென்று தெரிந்தமாத்திரத்தில் சர்ப்பம் நிவர்த்தியாகிறது. இதுபோல ஆத்மாவையறியாததினால் ஜகத்துத்தோன்றுகிறது. ஆத்மாவை யறிந்தமாத்திரத்தில் ஜகத்து நிவர்த்தியாகிறது. இந்த ஆத்மஞானத்தை நானுனக்கு உபதேசிக்கிறேன். "ஜகத்து என்னிடத்தில் மூன்றுகாலத்திலுமிருக்கவில்லை. ஏனெனில் அது பொய்யாகவிருக்கிறது. எது பொய்யோ அது அதிஷ்டானத்துக்கு எவ்விதஹானியையுஞ்செய்கிறதில்லை. கானல்ஜலம் பூமியை நனைக்கிறதில்லை. இதுபோல ஜகத்து விளங்குகிறது. ஆதலால் பொய்யாக இருக்கிறது. எனக்கு ஹானியுண்

டாங்க அது கொஞ்சங்கூடச்சமர்த்தமாகிறதில்லை. நான் சச்சிதானந்தரூப்பிரம்மஸ்வரூபியாயிருக்கிறேன்." இப்பேர்ப்பட்ட நிச்சயந்தான் ஞான மென்று சொல்லப்படுகிறது. இதுதான் மோக்ஷத்துக்குச்சாதனம். வேறில்லை. இந்த ஞானத்தைத்தான் உனக்கு முன்னமேயே உபதேசித்திருக்கிறேன்.

165 சிஷ்யனே, ஜகத்தின் உபாதானகாரணம் அஞ்ஞானம் (295) இந்த அஞ்ஞானநாசத்தால் ஜகத்து காரணதேஹ நாசமடைகிறது. எனெனில் உபாதானம் நசித்தபின்பு காரியமிருக்கிறதில்லை. அந்த அஞ்ஞானத்தின் நாசம்கேவலம் ஞானத்தினால் உண்டாகிறதேதவிரக் **கர்மத்தினாலும் உபாசனையுனாலும்** உண்டாகிறதில்லை. எனெனில் அஞ்ஞானத்துக்கு விரோதம் ஞானமேதவிரக்கர்மஉபாசனைகளன்று. வீட்டிக்குள்ளிருக்கும் இருள் எத்தனையகாலும் நீங்காமல் கேவலம் பிரகாசத்தால்தான்நிறைதல்போல் அஞ்ஞானரூபமான இருட்டு ஞானரூபமான பிரகாசத்தால்மட்டும் நிவிர்த்தியாகுவேதவிர வேறெந்தச்சாதனங்களாலும் நிவிர்த்தியாகமாட்டாது. சிஷ்யனே, ஜகத்து நிவிர்த்தியாகும்படியான உபதேசத்தை உனக்குப் பூர்ணமாகப் பண்ணினேனன். இனிநீ மனதில்கொண்டு சம்மையாய் விசாரித்துச் சமுசயங்களேதவும் உண்டானால்கேட்பாயாக.

உபதேசவிஷயங்களில்

ஆக்ஷேபசமாதானங்கள் (166—250)

ஜீவப்பிரம்ம ஐக்கியபதம் (166—192)

தத்துவதிர்க்கடி-கேள்வி (166—169)

166. **உபதேசச்சுருக்கம்:**—சுவாமின், நீங்கள்சொன்னபடி "ஜகத்துக்குக் காரணம் அஞ்ஞானம். இந்த அஞ்ஞானத்தை ஞானம் போக்கி ஜகத்தையும் நிவிர்த்திக்கிறது" என்பதையும், "ஜகத்துமித்தை ஜீவன் ஆனந்தஸ்வரூபம். அவன் பிரம்மத்துக்கு வேறன்று, பிரம்மரூபமே. இந்த நிச்சயத்துக்கு ஞானமென்று பெயர். உன்னிடத்தில் ஜகத்துமித்தையாகவிளங்குகிறது. ஜீவன் ஆனந்தஸ்வரூபனாக விருக்கிறான்," என்கிற ஞானஸ்வரூபத்தையும் நான் சத்தியமாக அறிந்தேன். ஆனால் ஜீவனும் பிரம்மமும் ஒன்றென்பதையறியவில்லை. எனெனில் ஜீவபிரம்மங்களின் பேதங்களைக்காட்டுகிற சங்கை என் மனதில் தோன்றுகிறது.

167. **ஸ்வரூபசங்கை:**— சுவாமின், நான் புண்ணியபாப

ங்களைச் செய்கிறேன். அவைகளின் பலனாகிற மரணம், ஜன்மம், சுக்ம், துக்கம், இவைகளையனுபவிக்கிறேன். அநேகவிதமாக ஜகத்து என்னிடத்தில் விளங்குகிறது. ஜகத்துக்குக்காரணமான அஞ்ஞானத்தை விசாரித்திக்க நான் இச்சிக்கிறேன். பிரம்மத்தினிடத்திலோ புண்ணியமில்லை, பாபமில்லை, ஜன்மம் இல்லை, மரணமில்லை, சுகமில்லை, துக்கமில்லை, வேறெவ்விதக்கிலேசமுமில்லை ஞான இச்சையுமில்லை. ஆகையால் பிர்ம்மத்தினுடையவும் என்னுடையவும் ஸ்வரூபங்கள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கின்றன. ஆகையால் இரண்டுக்கும் ஏகத்துவஞ்சொல்லக்கூடாது. என்னிடத்திலுங்கூட ஜன்மாதி சமுசாரம் பாரமார்த்திகமா யில்லாமலிருந்தாலும் பொய்யான ஜன்மாதிகள் எனக்குப்பிராந்தியால் தோன்றுகின்றன. பிர்ம்மத்தினிடத்தில் தோன்றுகிறதில்லை. ஜீவனுக்கும் பிர்ம்மத்துக்கும இவ்வளவு பேதகங்களிருப்பதால் ஏகத்துவஞ் சொல்லக்கூடாது.

168. **பிரமாண சம்சயம் (168—169):**— சுவாமின், எனக்கு வேறொரு சமுசயம் உண்டு. வேதத்தில் அடியில் வருமாறு பார்த்திருக்கிறேன். புத்திரூபமான ஒரு விருக்ஷத்தில் இரண்டு பக்ஷிகளுண்டு. அவைகளிரண்டும் சமானமானவைகள். அவைகளிலொன்று கர்மபல போக்தாவாயிருக்கிறது. மற்றொன்று சுத்தமாயும் போக ரகிதமாயும் அசங்கமாயும் கர்மபலபோகதாவைப் பிரகாசிப்பித்துக்கொண்டுமிருக்கிறது. இவைகளில் கர்மபலபோக்தாவா யிருக்கிறது ஜீவனென்றும், மற்றொன்று பரமாத்மா வென்றும் தோன்றுகிறதினால் இவைகளுக்கு ஏகத்துவஞ் சொல்லக்கூடாது.

169. மேலும் வேதத்தில் கர்மமும் உபாசனையும் வெகுப் பிரகாசமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஜீவனும் பிர்ம்மமும் ஒன்றென்கிற விஷயத்தில் கர்மஉபாசனைகள்வியர்த்தமாகும். எனெனில் நீங்கள் ஜீவனும் பிர்ம்மமும் ஏகமென்று சொல்லும்பக்ஷத்தில் பிர்ம்மத்தினிடத்தில் ஜீவஸ்வரூபம் அந்தர்பாவமாயிருக்கிறதா அல்லது ஜீவனிடத்தில் பிர்ம்ம ஸ்வரூபம் அந்தர்பாவமாயிருக்கிறதா? ஒருக்கால் பிர்ம்மத்தினிடத்தில் ஜீவ ஸ்வரூபம் அந்தர்ப்பாவமாயிருக்கிறதாகச் சொல்லும்பக்ஷத்தில் ஜீவனே பிர்ம்மரூபமாகிறதினால் அதிகாரியே இல்லாமற்போவான். அதினால் கர்மஉபாசனைகள் நிஷ்ப்பலமாய்விடும். ஜீவனிடத்தில் பிர்ம்மஸ்வரூபம் அந்தர்பாவமென்று சொல்லும்பக்ஷத்தில் பிர்ம்மம் ஜீவரூபமாகிறதினால் எதையுபாசிக்கவேண்டுமோ அந்த வுபாசியமே இல்லாமற் போகிறது. அதினால் உபாசனை நிஷ்பலனாய்விடும். மேலும் கர்மபலத்தைக் கெடுக்கிறபரமா

ாத்மவே இல்லாமற்போவதால் கர்மம் நிஷ்பலமாய்விடும். மேலும் மீமாம்ஸகர்கள் சொல்லுகிற "கர்மமோக்ஷமான் அதனுலேயே பலனுண்டாகிறது" என்கிற கோட்பாடு சரியன்று. ஏனெனில் கர்மம்ஜடம். பலத்தைக் கொடுக்கச் சாமர்த்தியம் அதற்குண்டெனச்சொல்லக்கூடாது. ஆகையால் கர்மபலத்தை ஈசுவரனே கொடுக்கிறார். இப்படி யிருப்பதால் பரமாத்மாவும் ஜீவனும் ஒன்றெனச்சொல்வது சரியன்று.

170. 167-க்குச்சமாதானம்:— **(170—189)**. சிஷ்யனே உனக்குண்டாகிற சந்தேகத்தைநிவர்த்திக்கிறவிசாரத்தைச்சொல்லுகிறேன் கேள். ஒரு ஆகாசத்தில் (1) **கடாகாசம்** (2) **ஜலாகாசம்** (3) **மேகாகாசம்** (4) **மகாகாசம்** என்று நான்குபேதங்கள் இருப்பதுபோல் ஒரேசேதனத்தில் (1) கூடஸ்த (2) ஜீவ (3) ஈசுவர (4) பிரம்மமென்கிற நான்கு பேதங்கள் இருக்கின்றன. சிஷ்யனே, எப்போது இந்தஸ்வரூபங்களை நன்றாகக் கேட்டுத்தெரிந்து கொள்ளுகிறாயோ அப்போது உன்னுடைய சங்கைக்குச் சமாதானம் உனக்கேவிளங்கும். ஆகையால் நான் உனக்கு இந்தச்சொரூபங்களைச் சொல்லுகிறேன். இவைகளைக் கேட்கிறதில் சந்தேகமற்றுநான்முனக்குண்டாகி ஜன்மாதி துக்கங்களும் நாசமடைவிடும்.

171 **கடாகாசம்**:— சிஷ்யனே, ஜலத்தில் நிறைந்திருக்கிற கடத்துக்கு ஆகாசம் எவ்வளவு அவகாசம் கொடுக்கிறதோ அவ்வளவு
28
காசத்துக்கும் கற்றோர் **கடாகாச** மென்று சொல்வார்கள்.

172 **ஜலாகாசம்**:—சிஷ்யனே, ஜலம்நிறைந்த கடத்தில் நட்சத்
29
திராதிசந்த ஆகாசம் பிரதிபிம்பிக்கிறது. இந்த ஆகாசப்பிரதிபிம்பமும்

---

28. சங்கை:— கடத்துக்கு வெளியே இருக்கிற ஆகாசம் மகாகாசமென்றும் உள்ளேயிருக்கிற ஆகாசம் கடாகாசமென்றும் ஏன் சொல்லக்கூடாது. சமாதானம் — இப்படிச்சொல்லும்பக்ஷத்தில் கடமிருக்கிற ஆகாசத்துக்கு க்கபால ஆகாசமென்று சொல்லவேண்டும். இந்த ஐந்தாவது ஆகாசம் சாஸ்திரத்தில் ஏற்றுக்கொள்ளப்படாதபடியால் இந்த ஆக்ஷேபத்திற் சொல்லிய கடாகாசலக்ஷணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதில்லை.

29. ஜலத்தில் நிறைந்த கடத்தில் உண்டாகிற ஆகாசத்தின் பிரதிபிம்பம் கடத்துக்குள்ளிருக்கிற கடாகாசத்தின் பிரதிபிம்பமென்று சொல்லப்படும் இச்சங்கையை நிவிர்த்திக்க நக்ஷத்திராதிகளுடன் ஆகாசம் பிரதிபிம்பிக்கிறதாகச்சொல்லப்பட்டிருக்கிறது. நக்ஷத்திரப் பிரதிபிம்ப முண்டாவதால் வெளியே இருக்கும் மகாகாசத்தின் பிரதிபிம்ப முண்டாகிறது. மேலும் அல்பகடத்திலுள்

டாகாசமும் இரண்டும் சேர்ந்து ஜலாகாசமென்று சொல்லப்படும்.

173 இதிலோர்ச்சங்கை:—ஆகாசத்தின்பிரதிபிம்ப முண்டாக மாட்டாது. ஆனலோகேவலம் நக்ஷத்திராதிகளின் பிரதிபிம்பமட்டுமு ண்டாகும் ஏனெனில் ஆகாசம் ரூபமில்லாதது, ரூபமுள்ள பதார்த் தங்களுக்குத்தான் பிரதிபிம்பமுண்டாகும். ஆகலால் ஆகாசத்துக்குப் பிரதிபிம்பம் உண்டெனச் சொல்லக்கூடாது.

174 இதற்குசமாதானம்:—ஜலத்தில் ஆகாசப்பிரதிபிம்ப முண் டாகாதபக்ஷத்தில் சொற்ப ஜலத்தில் வெகு பெரிய பதார்த்தம் தோன் றக்கூடாது. ஆனல் அப்படித் தோன்றுவதால் ஆகாசத்தின் பிரதிபிம்ப த்தை ஒப்புக்கொள்ளவேண்டியது. மேலும் ரூபமில்லாத பதார்த்தத் துக்குப் பிரதிபிம்ப முண்டாகமாட்டாதென்கிற நியமமில்லை. ஏனெனில் ரூபமில்லாத சத்தத்துக்குப்பிரதித்வனி யுண்டாகிறது. அந்தப் பிர தித்வனி சத்தத்தின் பிரதிபிம்பம், அதைபோல் ரூபரஹித ஆகாசத்துக் கும் பிரதிபிம்ப முண்டாகக்கூடும்.[30]

175 மேகாகாசம்:—மேகத்துக்கு ஆகாசம் எவ்வளவு அவகாசங் கொடுக்கிறதோ அவ்வளவு ஆகாசமும் மேகஜலத்திலுண்டாகும ஆகாசப் பிரதிபிம்பமும் இரண்டுஞ்சேர்ந்தது மேகாகாசமென்று சொல்லப்படும்.

176 இதிலோர்ஙகை:—மேகம் ஆகாசத்தில் இருக்கிறது. அலை ல்அதில் ஜலமும் ஆகாசப்பிரதிபிம்பமும் இருப்பதாக அவைகளைப் பார் க்காமல் எப்படி யறியக்கூடும்.

177 சமாதானம்:— மேகத்தில் ஜலமும் ஆகாசப்பிரதிபிம்பமும் பிரத்தியக்ஷமாக வில்லாவிட்டாலும் அனுமானத்தினல் அறியத்தக்கவை. மேகத்திலிருந்து ஜலவிருஷ்டி யுண்டாவதால் மேகத்தில் ஜலமிருப்பதாக

ள ஜலத்தில் பெரிய ஆகாரம் தோன்றுகிறது. இது கடத்துக்குள்ளிருக்கும் ஆ காசத்தில் இல்லை, ஆனல் வெளி ஆகாசத்தி லிருக்கிறது. ஆகையால் மகாகாச த்தின் பிரதிபிம்பம்தான் திரகிக்கத்தக்கது.

30. குணம் குணத்தை ஆசிரயிக்கிறதில்லை, ஆனல்ஆகாசாதி திரவிய த்தையாசிரயிக்கிறது. இந்த நியாயப்படி நீலபீதாதி வர்ணங்கள் ரூபகுணத்தை ஆசிரயிக்காத படியால் ரூபரஹிதமா யிருக்கின்றன. இந்த ரூபரஹிதமான வர்ண த்துக்குக்கண்ணாடியில் பிரதிபிம்பமுண்டாகிறது. இதுபோல் ரூபரஹித ஆகாசத் துக்கும் ரூபரஹித சேதனத்துக்கும் பிரதிபிம்பமுணடாகிறது.

அனுமானமுண்டாகிறது. மேகத்தில் ஜலமில்லாத பாகத்தில், ஜலவிரு ஷ்டி மேகத்தினின்று முண்டாகமாட்டாது. மேலும் மேகத்திலுள்ள ஜலம் ஆகாசப்பிரதிபிம்ப சகிதமாயிருக்கிறது. எனென்றால் எவ்விடத்தில் ஜலமிருக்கிறதோ அவ்விடத்தில் ஆகாசப்பிரதிபிம்ப மில்லாமலிருக்கமாட் டாது. ஆகையால் மேகத்திலுள்ள ஜலமும் ஆகாசப்பிரதிபிமபத்துட னிருக்கிறது. இவ்விதமாக மேகத்தில் ஜலமும் ஆகாசப்பிரதிபிம்பமும் அனுமானிக்கப்படுகின்றன.

178 மகாகாசம்:—பிரம்மாண்டத்துக்கு உள்ளும் புறமும் ஒரே விதமாயும் வியாபகமாயும் இருக்கிற ஆகாசஸ்வரூபத்துக்கு வித்துவான்கள் மகாகாசமென்று சொல்வார்கள்.

179 சிஷ்யனே, காலவித ஆகாசலக்ஷணங்களையும் சொன்னேன். இனிநான்[31] குவிதமாய் விளங்குஞ்சேதனத்தின் லக்ஷணத்தைச் சொல்லுகி றேன். அதைக்கேட்பதினால் விசாரத்தின் பலனிற ஞானம் அடைய ப்படும்.

180 கூடஸ்தவர்ணனை:—புத்தி அல்லது வியஷ்டி அஞ்ஞானத்தின் அதிஷ்டானசேதனத்துக்குக் கூடஸ்தனென்று பெயர். எந்தப்பக்ஷத் தில் புத்திசகிதசேதனம் ஜீவனுகிறதோ அந்தப்பக்ஷத்தில் புத்திக்கதிஷ் டானசேதனம் கூடஸ்தனென்று சொல்லப்படுகிறது. எந்தப்பக்ஷத்தில் வியஷ்டி-அஞ்ஞானசகிதசேதனம் ஜீவனென்று சொல்லப்படுகிறதோ அந் தப்பக்ஷத்தில் வியஷ்டிஅஞ்ஞானத்துக்கு அதிஷ்டானசேதனம் கூடஸ்த னென்று சொல்லப்படுகிறது. இதனல் என்ன சித்திக்கிறதெனில் ஜீவத்

---

31. சில அத்வைதக்கிரந்தங்களில் ஜீவ ஈஸ்வர பிரம்ம என்கிற மூன் று சேதனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அனுதியான ஆறு பதார்த்தங்களி ல் இம்மூன்றே (93) எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. கூடஸ்த சேதனத் தை விட்டதினல் யாதொரு தோஷமுமில்லை. ஏனெனில் கூடஸ்தனுக்கும் பிரம் மத்துக்கும் நாமமாத்திரத்தில் பேதமேதவிர வேறெவ்வித பேதமுமில்லை. இதுவு மன்றியில் வித்தியாரண்யஸ்வாமிகள் திருக்திரிசியமென்னுங்கிரந்தத்தில் கூடஸ் தன் பாரமார்த்திக ஜீவனென்றும் ஜாக்கிரத்காலத்திலுள்ள அந்தக்கரணப்பிரதி பிம்பன் வியாவகாரிக ஜீவனென்றும், சொப்பனத்திலுள்ளவன் பிராதிபாஸிக ஜீவனென்றும் சொல்லியிருக்கிறார். இவ்விதமாகக்கூடஸ்தன் ஜீவனிடத்தில் அந்தர்ப்பாவமாயிருக்கிறன்.

32. ஜீவஸ்வரூபம் (181ல்) புத்திப்பிரதிபிம்பமாகவும் (186ல்) அவித்தி யா பிரதிபிம்பமாகவும் இரண்டுவிதமாக இனி வர்ணிக்கப்படுவதால் இவ்விடத்தி ல் இரண்டு பக்ஷங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன.

தவத்துக்கு எதுவிசேஷணமோ அதின் அதிஷ்டானத்துக்குக் கூடஸ்தனென்று பெயராகும். இந்தக்கூடஸ்தன உற்பத்தியற்றவன். அதாவது, பிர்ம்மத்துக்கு வேறுக எப்படிச் சிதாபாஸன் உண்டாகிறானே அப்படிக் கூடஸ்தனுண்டாகிறதில்லை. ஆனல் பிர்ம்மரூபமாகவே யிருக்கிறன் கடாகாசம் மகாகாசத்துக்கு வேறுகாமல் மகாகாசரூபமாகவே யிருப்பது போலும். இந்தக்கூடஸ்தன் ஆத்மபதத்தின் லக்ஷியார்த்தம். கூடஸ்தனுக்கே பிரத்தியக் கென்றுநிஜரூப னென்றும் ஜீவசாக்ஷி யென்றும் பெயர். கூடஸ்தன் கடாகாசத்துக்குச் சமானன்.

181 ஜீவஸ்ரூணை(181-186) புத்திப்பிரதிபிம்பமாக(181-185):- அனேக காமகர்மங்களுடன் கூடிய புத்தியில் உண்டாகிற சேதனப்பிரதிபிம்பத்துக்கு வித்துவான்கள் ஜீவனென்று பெயரிட்டிருக்கிறார்கள். கேவலம்பிரதிபிம்பத்தை மாத்திரம் ஜீவனென்று அவர்கள சொல்லுகிறதில்லை. ஆனல் கடாகாச சகித ஆகாசப்பிரதிபிம்பத்தை ஜலாகாசமென்று சொல்வதுபோல, கூடஸ்தசஹித சிதாபாசனை ஜீவனென்று சொல்லுகிறார்கள் ஆகையால் புத்தியிலுள்ள சிதாபாஸனும் புத்தியின் அதிஷ்டான சேதனமும் இரண்டுஞ்சேர்ந்து [33] ஜீவனென்று சித்திக்கிறது.

---

33. அந்தக்கரணம், அதிஷ்டானசேதனம், அந்தக்கரணபிரதிபிம்பசைதன்னியம், இம்மூன்றும் கூடி ஜீவன் என்று சொல்லப்படும். (1) கேவலம் அந்தக்கரணத்தைமட்டும் ஜீவன் என்று சொல்லும் பட்சத்தில் கடத்துக்கும் ஜீவத்துவம் சொல்லவெண்டும். கடம் ஸ்வச்சமாயில்லாததினல் அதற்கு சொல்லக்கூடாதென்னும் பட்சத்தில் சொச்சமான கன்னுடிக்குஜீவத்துவம் சொல்லக்கூடும். கன்னுடி பாஷயமானதினல் அதற்கு ஜீவத்துவம் சொல்லக்கூடாதென்னும் பட்சத்தில் அந்தரமான இந்திரியங்களுக்கு ஜீவத்துவம் சொல்லக்கூடும். இந்திரிபங்களைப்பார்க்கிலும் அந்தக்கரணம் அந்தரம் ஆனதால் அதற்கே சொல்லவேண்டுமெனில், அந்தக்கரணத்துக்கும் அந்தரமான அஞ்ஞானத்துக்கு ஜீவத்துவம் சொல்லவேண்டும். அப்படிக்கூடாதபடியால் அந்தக்கரணத்திற்கு ஜீவத்துவம் சொல்லக்கூடாது. மேலும் ஜீவன் சேதனமானதினல் அசேதனமான அந்தக்கரணத்திற்கு ஜீவத்துவம் கூடாது. (2) கேவலம் பிரதிபிம்பத்திற்கு ஜீவத்துவம் சொல்லுவது சரியன்று. ஏனெனில் அந்தக்காணமில்லாமல் பிரதிபிம்பமுண்டாகமாட்டாது. (3) அதிஷ்டான சேதனத்திற்கு ஜீவத்துவம் சொல்லுவது சரியன்று. ஏனெனில் அந்தசைதன்னியம் நிர்விகாரமானது. அதற்கு விகாரரூபமான ஜீவத்துவம் கூடாது. (4) அந்தக்காணமும் பிரதிபிம்பமும் கூடினது ஜீவனென்று சொல்லும் பட்சத்தில் இவ்விரண்டும் கற்பிதமானதினல் ஜீவனுக்கு நித்தியத்துவம் சித்தியாமலும் முக்தானவர்கள் இல்லாமலும் போகவேண்டும். மேலும் பாகத்தியாகலக்ஷணை சம்பவிக்காமல் சகல வாச்சியபாகங்களுக்கும் சம்பந்தமுள்ளதாகிய ஜகல்லக்ஷணை சம்பவிக்கும். இது ஆசாரியருடைய மதத்துக்கு. விருத்தமாகும் (519). மேலும் அதிஷ்டானத்துக்கு வேறுகாமல் அதி

182. ஆபாஸலக்ஷணம்:— பிரதிபிம்பம் கூடஸ்தசைதன்னியத்தினுடையது, வெளியேயுள்ள பிர்ம்மசைதன்னியத்தினுடையதன்று. மிகவுஞ்சிவந்த புஷ்பத்தின் பேரில் வைக்கப்பட்ட ஸ்வச்சமான ஸ்படிகத்தில் அந்தப்புஷ்பத்தின் சிவப்பு வர்ணத்தின் காந்தியடிக்கிறது. அது அந்தச் சிவப்புப்புஷ்பத்தின் பிரதிபிம்பமாக இருக்கிறது. இதுபோல, கூடஸ்த னையாசிரயித்த புத்தியில் உண்டாகுங்கூடஸ்தனுடைய பிரகாசம் சிதா பாஸனென்று[34] சொல்லப்படுகிறது. ஸ்படிகம் மிகவும் சுத்தமாயிருக்கி றதுபோல் புத்தியும் மிக்கச்சுதமாயிருக்கிறது. ஏனெனில் புத்தி சத்து வகுணத்தின் காரியம் (300). ஆகையால் கூடஸ்தனுடைய பிரகாசத்துக்கு ப்பிரதிபிம்பமென்று பெயர். அல்லது[35], பிர்ம்மசைதன்னியத்தின் பிரதி பிம்பமு முண்டாகக்கூடும். கடத்திலுள்ள ஜலத்தில் மகாகாசத்தின் பிர திபிம்பமுண்டாகிறதே தவிர கடத்துக்குள் இருக்கும் ஆகாசத்தின் பிரதி பிம்பமுண்டாகிறதில்லை. ஏனெனில், எவ்வளவு விஸ்தாரம் ஜலத்தில் காணப்படுகிறதோ அவ்வளவு விஸ்தாரம் கடத்திலுள்ள ஆகாசத்தில் இல் லை. இந்த விஸ்தீர்ணதை ஆகாசத்தின் பிரதிபிம்பமாக இருக்கிறது. ஆகையால் அது வெளியாகாசத்தின் பிரதிபிம்பமென்று சித்திக்கிறது. வியாபகசைதன்னியத்தின் பிரதிபிம்பமுண்டாகமாட்டாதென்று ஒருவ ன் சொல்லும்பக்ஷத்தில் ஆகாசதிர்ஷ்டாந்தத்தால் அச்சங்கை நிவர்த்தியா

ஷ்டானத்தை மறைப்பது ஆரோப்பியமென்னப்படும். அதிஷ்டானத்துக்கு வே றாகி ஆரோப்பியம் எங்கும் தோன்றுகிறதில்லை. இந்த அனுமானத்தாலும் அது (புத்திசகிதசிதாபாஸன் = ஜீவன்) விருத்தமாயிருக்கிறது. (5) அதிஷ்டானசே தனமும் பிரதிபிம்பசேதனமும் கூடினது ஜீவனென்று சொன்னால் கேவலம் சை தன்னியம் மாத்திரம் நிர்விகாரமானபடியால் கர்த்தருத்துவபோக்த்தருத்துவாதி விகாரலக்ஷணமான ஜீவத்துவம் சொல்லக்கூடாது. (6) அதிஷ்டானசேதனமு ம் அந்தக்கரணமும் சேர்ந்தது ஜீவன் என்றுசொன்னால் தர்ப்பணமும் தர்ப்பண அதிஷ்டானமுங்கூடிஜ்ஜீவனாகவேண்டும். இவைகளுக்கு ஜீவத்துவம் இல்லை. ஆத லால் அந்தக்கரணம் அதிலுண்டாகும் அதிஷ்டான சேதனத்தின் பிரதிபிம்பம் அதிஷ்டானசேதனம் இம்மூன்றும் சேர்ந்தே சீவனும். கூடஸ்தனுக்குச்சம் சாரம் சம்பவிக்காதபடியால் ஜீவனே சமுசாரியாக எடுத்துக்கொள்ளவேண்டிய தாயிருக்கிறது.

34. வஸ்திரலக்ஷணமன்றியில் வஸ்திம்போல் காணப்படுவது வஸ்தி ராபாஸமென்பதுபோல் சேதனலக்ஷணமன்றியில் சேதனம்போல் காணப்படுகி றது சிதாபாஸமென்னப்படும்.

35. முன், பிரதிபிம்பம் கூடஸ்தனுடையது என்று சொல்லப்பட்டது. இப்போது பிர்ம்மசைதனனியத்தினதாக சொல்லப்படுகிறது.

றது. எப்படியெனில், ஆகாசம் வியாபகமாயிருந்தும் அதற்குப்பிரதி பிம்பமுண்டாகிறதுபோல் வியாபகனைசதன்னியத்துக்கும் பிரதிபிம்பமுண்டாகக்கூடும். மேலும், ரூபத்துடன் கூடிய பதார்த்தத்துக்கு ரூபத்துடன் கூடிய பதார்த்தத்தில் பிரதிபிம்ப முண்டாகவேண்டுமென்கிற நியமம் இல்லை. ஏனெனில் ரூபமில்லாத சப்தத்துக்கு ரூபமில்லாத ஆகாசத்தில் பிரதிபிம்ப முண்டாகிறதென்று முன்னமே (174) சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் பிரம்மனைசதன்னியத்துக்கும் பிரதிபிம்பமுண்டாகக்கூடும்.

183. இவ்விதமாக, புத்தியிலுள்ள ஆபாஸனும் புத்தியின் அதிஷ்டானசைதன்யமும் இரண்டுஞ்சேர்ந்து ஜீவனென்று சொல்லப்படுகிறது. இந்த ஜீவன் துவம்பதத்தின் வாச்சியார்த்தம். ஜீவனிடத்திலுள்ள சிதாபாஸனைத்தள்ளி மிச்சப்படுங்கேவலங்கூடஸ்தன் துவம்பதத்தின் லக்ஷியார்த்தம். அஹம் (நான்) சப்தத்துக்கும் ஜீவனே வாச்சியார்த்தம், கூடஸ்தனே லக்ஷியார்த்தமாம்.

184. சிதாபாஸன் கூடஸ்தன் இரண்டும் சேர்ந்தது ஜீவனைஅம் ஜீவத்துவத்தினுடைய சகல தர்மங்களும் ஆபாஸனிடத்திலிருக்கின்றன. புண்ணியம் பாபம் இவைகளின பலனுகிற சுகம், துக்கம், லோகாந்தரம் போதல், இந்தலோகத்துக்கு வருதல், முதலிய வெல்லாம் ஆபாஸசிதது புத்தியைச்சேர்ந்தவை கூடஸ்தனைச்சேர்ந்தவையல்ல. ஆனல் கூடஸ்தனிடத்தில் கேவலம் பிராந்தியால் தோற்றுகின்றன. இந்தப்பிராந்திக்தோற்றமும், புத்திசதித ஆபாசனுக்குண்டாகிறது, கூடஸ்தனுக்குண்டாகிறதில்லை. ஏனெனில், கூடம்என்றால் கொல்லனுடைய பட்டடை. இதுபோல் நிர்விகாரமாயிருப்பது கூடஸ்தனென்று சொல்லப்படுகிறது. அல்லது மிந்தகையாகிற புத்திசிதாபாஸன் இவைகளுக்குக்கூடமென்றுபெயர். இவைகளிடத்தில் பற்றில்லாமலிருப்பது கூடஸ்தன் எனச்சொல்லப்படுகிறது. ஆகையால் கூடஸ்தனிடத்தில் பிராந்தியாதிகள் சம்பவிக்கமாட்டா, ஆனல் சிதாபாஸனிடத்தில் சம்பவிக்கின்றன.

185. சம்மையாய் விசாரித்துப்பார்த்தால் புண்ணியபாபங்கள் சுகதுக்கங்கள் லோகாந்தரப்போக்குவரவு இவைகள் கேவலம் புத்தியைச்சேர்ந்தவையேயொழிய ஆபாஸனைச்சேர்ந்தவையன்றென விளங்கும்.

---

36. ஜலத்தின் சீதளம் அச்சலத்தில் பிரதிபிம்பித்த சூரியனை எப்படி ஸ்பரிசிக்கவில்லையோ அப்படி அந்தக்கரணவிகாரங்கள் அந்த அந்தகரணத்திற் பிரதிபிம்பித்த சிதாபாசனை ஸ்பரிசிக்கவில்லை. அவ்வந்தக்கரணத்திற்கு அதிஷ்டானமான பிரத்தியகாத்மாவை ஸ்பரிசிக்கமாட்டாதென்பதில் சந்தேகமென்ன.

புத்திசம்பந்தத்தால் ஆபாஸனிடத்தில் தோன்றுகின்றன. ஜலசக்திதகடம் கோணலானாலும் நேரானாலும் ஒருவனால் கொண்டுபோகப்பட்டாலும் கொண்டுவரப்பட்டாலும், கடசம்பந்தத்தினால் ஆகாசத்தினுபாசமும் அவ்வாறே செய்கிறது. தான் சுதந்தரமாக ஒன்றும் செய்கிறதில்லை. இதுபோல், காமகர்மரூபமான ஜலத்தால் நிறைந்த புத்திரூபமான கடம் புண்ணியமுதலிய சகல விகாரங்களையும் தரிக்கிறது. புத்திசம்பந்தத்தால் சிதாபாஸன் அவைகளைத்தரிக்கிறான். கூடஸ்தன் யாதொரு விகாரமும் இல்லாதவன். ஜலம் நிறைந்த கடத்தின் விகாரங்களில்லாத கடாகாசம் போலக்கூடஸ்தனுமென்றறி. ஆகையால் ஜீவதர்மங்கள் சிதாபாஸனிடத்தில் விளங்குகின்றன. ஆயினுங்கூடஸ்தனிடத்தில் அஞ்ஞானத்தால் தோன்றுகின்றன. ஆகையால் புத்தியினிடத்துள்ள கூடஸ்தசக்திசிதாபாசனுக்கு ஜீவனென்று பெயரிடப்பட்டது.

186 ஜீவஸ்வரூபம் மற்றொருவிதம்:—மேற்சொல்லிய ஜீவஸ்வரூபத்தில் பிராஞ்ஞனுந்து ஹானியுண்டாகிறது. ஏனெனில் சுஷுப்திக்கு அபிமானியாகிற ஜீவனுக்குப்பிராஞ்ஞனென்று (342) பெயர். சுஷுப்தியில் புத்தி அபாவமாயிருப்பதால் புத்தியிலுள்ள ஆபாஸனும் இல்லை. இதனால் பிராஞ்ஞனுடைய சொரூபத்தைத்தப்பிரதிபாதிக்கிற சாஸ்திரத்துக்குஹானி தோஷம் சம்பவிக்கிறது. ஆகையால் ஜீவஸ்வரூபம் வேறுவிதமாகச் சொல்லப்படுகிறது.

பிருதிவீ விகாரங்களும் பிருதிவியின் காரிய விகாரங்களும் பிருதிவீக்காதாரபூதமான ஆகாசத்தை எப்படி ஸ்பரிசிக்கவில்லையோ அப்படிப்போல அஞ்ஞானமும் அஞ்ஞானகாரியமான தேகேந்திரியாதி பிரபஞ்சதர்மங்களும் அஞ்ஞானத்திற்கும் அஞ்ஞானகாரியங்களுக்கும் ஆதாரபூதமான பிரத்தியகாத்மாவை ஸ்பரிசிக்கவில்லை. அஞ்ஞானத்தால் கூடஸ்தனை ஸ்பரிசிக்கிறதாக பிராந்தி உண்டாகிறது.

37. சந்திரன் எப்போதுமிருந்தாலும் பக்ஷத்தினாலும் திதியினாலும் சந்திரகலை விருத்தி அல்லது க்ஷயத்தை அடைகிறது. விருக்ஷம் எப்போதுமிருந்தாலும் அதின் பலன் ஜன்மாதிஷட்விகாரபரிணாமத்தை அடைகிறது. இவைகள்போலகூடஸ்தன் நிர்விகாரனாயிருந்தாலும் தேகாதிகளுக்கு ஜன்மாதிஷட்விகாரரூபபரிணாமங்களுண்டாகின்றன. கூடஸ்தனே பரிணாமத்தை அடைந்தால் கூடஸ்தன் ஜடமாவான். பரிணாமம்=விகாரம். ஆகையால் கூடஸ்தனுக்கு விகாரமிருப்பதாகச்சொல்லக்கூடாது.

அஞ்ஞானத்தின் அம்சத்துக்கு வியஷ்டியஞ்ஞான மென்றுபெயர். சம்பூர்ண அஞ்ஞானத்துக்கு ஸமஷ்டி அஞ்ஞான மென்று பெயர். அஞ் ஞான அம்சத்திலுள்ள சேதனத்தின் ஆபாஸமும் அஞ்ஞான அம்சத்துக்கு அனிஷ்டானமான கூடஸ்தனும் சேர்ந்தது ஜீவனென்றுசொல்லப்படும். இந்தஜீவஸ்வரூபத்தில் பிராஞ்ஞனுக்கு அபாவமில்லை. ஏனெனில் சுஷு ப்தியில் அஞ்ஞான மிருக்கிறது. சுஷுப்தியிலுள்ள சைதன்னியத்தின் பிரதிபிம்பசகித அஞ்ஞானம்சம் புத்திரூபத்தை யடைகிறது, சேதனப் பிரதிபிம்பத்துடனும் கூடியிருக்கிறது. இந்தச்சிதாபாஸசகித புத்தி யில் புண்ணியாதி சமூசாரம் தோன்றுகிறது. இந்த அபிப்பிராயத்தால் சிலசாஸ்திரங்களில் புத்தி ஜீவனுடைய உபாதியென்று சொல்லப்பட்டி ருக்கிறது. விசாரதிருஷ்டியால் பார்க்குமளவில் ஜீவனுக்கு உபாதி அஞ் ஞானமாயிருக்கிறது.

38

ஈசுவரவர்ணனை:—

38. ஈசுவரஸ்வரூபம் பலமதங்களில் பலவிதமாக வர்ணிக்கப்பட்டிருக் கிறது. (1) யோகமதத்தை அனுசரித்தவர்கள் சைதன்னியத்தின் சமீபத்திலிரு க்கிற பிரகிருதியை பிரேரணை செய்யும் ஜீவனல்லாத புருஷனே ஈசுவரன் என்கி ரூர்கள். இந்த ஈசுவரன் கிலேசம் கர்மம், இதின்பலம் இவைகளன்றியிலும் ஜீவ னைப்போல அசங்கசேதனமாயுமிருக்கிறார். ஜீவனுக்கும் கிலேசாதிகளில்லாவி ட்டாலும் அவிவேகத்தினால் இவைகள் இருப்பதாகத்தோன்றுகின்றன. இதுவே ஜீவேசுவரர்களின்பேதம். (2) நியாயமதத்தை அனுசரித்தவர்கள் அசங்கலுயி ருக்கிற ஈசுவரனுக்கு நியாமகத்துவம் கூடாதென்று ஆக்ஷேபித்து ஈசுவரனு டைய ஞானம் பிரயத்தினம் இச்சைரூபகுணங்கள் நித்தியமென்றும், ஆனதா ல்தான் ஜீவனைக்காட்டிலும் ஈசுவரன் வேறு என்றும் சொல்லுகிறார்கள். (3) ஈசுவரனுடைய ஞானாதிகள் நித்தியமானால் சிருஷ்டியின் ஆரம்பகாலத்தில் ஈசுவரனுடைய ஞானாதிகளுண்டாயின என்று சொல்லிய சுருதிக்கு விரோதமு ண்டாகும். சிருஷ்டியும் எப்போதுமுண்டாயிக்கொண்டிருக்கவேணும். ஆகை யால் சைய்யாயிகமதம் பிசகு என்றும் ஹிரணியகர்பனே ஈசுவரன் என்றும் ஹிரணியகர்ப உபாசகர்கள் சொல்லுகிறார்கள். ஹிரணியகர்பனுக்கு லிங்கசரீ ரமிருந்தாலும் அவித்தை காமகர்மாதிகளில்லாதபடியால், ஹிரணியகர்பன் ஜீவனாகிறதில்லை. (4) ஸ்தூலதேகமன்றியில் லிங்கதேகம் எங்கும் காணப்ப டாதபடியால் விராட்உபாசகர்கள் விராட்புருஷனே ஈசுவரன் என்கிறார்கள். (5) ஹஸ்தபாதாதிகளுடன் கூடினவன் ஈசுவரனாலல் புழுமுதல் எல்லாவற்றி ற்கும் ஈசுவரத்துவம் சித்திக்கும். ஆகையால் ஹிரணியகர்பஉபாசகருடைய மதம் பிசகு என்றும் சதுர்முகபிர்ம்மாவே ஈசுவரன் என்றும் பிரஜையை இச் சிக்கிறவர்கள் சொல்லுகிறார்கள். (6) வைஷ்ணவர்கள் விஷ்ணுவின் நாபிகமல த்தினின்றும் பிர்ம்மா உண்டானவராலதால், விஷ்ணுவே ஈசுவரனென்கிறார்க ள். (7) சைவர்கள், சிவனுடைய பாதத்தை கண்டுபிடிக்க விஷ்ணுவால் முடி

187 மாயையினிடத்திலுள்ள சேதனத்தின் ஆபாஸம், மாயையின் அதிஷ்டானசேதனம் இரண்டுஞ் சேர்ந்தது ஈசுவரனும். இந்த ஈசுவரன் மேகாகாசத்துக்குச்சமானமாயிருக்கிறான். இவன் அந்தரியாமியாயிருக்கிறான். எனெனில் எல்லாருடைய உள்ளிலுமிருந்துப்பிரேரணைசெய்கிறான். இவன் சதாமுக்தனுயிருக்கிறான். எனெனில் இவனுக்குத்தன் ஸ்வரூபத்தில் ஆவரணமில்லை. ஆனதால் இவனுகக்கு ஜன்மமரணாதி பந்தம் தோன்றுகிறதில்லை. இக்காரணத்தால் ஈசுவரன் நித்தியமுக்தனென்று சொல்லப்படுகிறான். மேலும் ஈசுவரன்சர்வஞ்ஞன், சகலபதார்த்தங்களையும் அறியப்பட்டவன். எனெனில்மாயையினிடத்தில் சுத்தசத்துவகுணமுண்டு. தமோகுண் ரஜோகுணங்களால் மறைபடாமல் அனைகளை மறைக்கிறசத்துவகுணம் சுத்தசத்துவகுணமென்னப்படும். சத்துவகுணத்தினின்றும் ஞானமுற்பத்தியாகின்றது. ஆகையால் சத்துவகுணம் பிரகாசஸ்வபாவமுள்ளது. இப்பேர்ப்பட்ட

யாமல் போயிவிட்டபடியால், சிவனே ஈசுவரன் என்கிறார்கள். (8) கணபதி உபாசகர்கள், திருபுராசுரனை ஜெயிக்க கணபதியை சிவன் பூஜித்தபடியால் கணபதியே ஈசுவரன் என்கிறார்கள். (9) பைரவ மைராலாதி உபாசகர்கள், மாரண, உச்சாடன, வசிகரணாதி சித்திகளுக்கு ஹேதுவான பைரவாதிகளின் மந்திரங்களையும், அவைகளின் ஸ்தோத்திரங்களையும், இம்மந்திர தந்திரங்களை பற்றிச்சொல்லிய கிரந்தங்களையும் பிரமாணமாகக்கொண்டு பைரவாதிதேவதைகளை ஈசுவரனாக வர்ணிக்கிறார்கள். இவ்விதமாக மேற்சொல்லிய மதங்களெல்லாம் ஒன்றுக்கொன்று விரோதமாசப்படுகின்றன. சகலமதங்களுக்கும் அவிருத்தமானது கிரந்தத்திற் சொல்லிய ஈசுரஸ்வரூபமே.

39. மாயையிலுள்ள புத்திவாசனையில் உண்டாகும் சேதனப்பிரதிபிம்பம் ஈசுவரனென்று வித்தியாரண்யஸ்வாமிகள் பஞ்சதசிப்பிரகரணத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஈசுவரன் மேகாகாசத்துக்குச்சமானமென்பதில் மேகத்துக்குச்சமானம் மாயை, மேகஜலத்துக்குச்சமானம் புத்திவாசனை, அச்சலத்திலுள்ள ஆகாசபிரதிபிம்பத்துக்குச்சமானம் சிதாபாலன், புத்திவாசனையில் உண்டாகிற பிரதிபிம்பத்துக்கு ஈஸ்வரனென்று சொன்னதினால் யாதொருதோஷமுமில்லை. எனெனில் மாயாரூப அஞ்ஞானமே ஈஸ்வரபாவத்துக்கு உபாதியாயிருந்தாலும் புத்திவாசனை அஞ்ஞானத்தில் அந்தர்க்கதமாயிருக்கின்றது. சர்வஞ்ஞத்துவத்துக்குக்காரணம் அஞ்ஞானத்தின் சத்துவகுணம். இது ஞானரூபஸ்கலபுத்திக்கும் உபாதானகாரணமாக இருக்கிறது. ஆனதால் சுஷுப்தியில் சகலபுத்தியும் தனக்குபாதானமான அம்சத்தில் லயமாகி உபாதானரூபமாகவே இருக்கிறது. உபாதானரூபமாயிருப்பதே சூக்ஷுமசம்ஸ்காரமென்னப்படும். இச்சம்ஸ்காரமே வாசனையென்னப்படும். இவ்விதமாக அஞ்ஞானத்திலுள்ள சத்துவாம்சத்துக்கு வேறாக வாசனை இல்லை. ஆகையால் புத்திவாசனைசப்தத்தால் அஞ்ஞானத்திலுள்ள சத்துவாம்சமே கிரகிக்கத்தக்கது.

சத்துவகுணத்தோடேகூடிய மாயையினிடத்திலிருக்கிற சேதனுபாலத்துக்குத்தன் ஸ்வரூபத்தினிடத்திலாவது வேறு பதார்த்தத்தினிடத்திலாவது ஆவரணம் சம்பவிக்கிறதில்லை. ஆகையால் ஈசுவரன் முக்தன் சர்வஞ்ஞன்.

ஜீவேஸ்வரர்களிடத்திலுள்ள அதிஷ்டான சைதன்னியம் பந்த மோக்ஷ பேதங்களன்றியில் இருக்கிறது. ஆகாசம்போல் ஏகரே தன்மையாயிருக்கிறது. ஆனல் ஆபாஸனிடத்தில் பந்தமோக்ஷங்களிருக்கின்றன. அதிஷ்டானத்தினிடத்தில் ஆபாஸனுக்குப்பிராந்தியால் அனவகள் தோன்றுகின்றன. ஆகையால் கேவலம் ஆபாஸனிடத்தில் பந்தமோக்ஷங்களிருக்கின்றன. இதிலும் இவ்வளவு பேதமிருக்கிறது. எந்த ஆபாஸனிடத்தில் ஆவரண மிருக்கிறதோ அவனிடத்தில் பந்த மிருக்கிறது. எவனிடத்தில் சொரூபாவரணமில்லையோ அவன் முக்தனயிருக்கிறன். ஈசுவரனிடத்தில் ஆவரணமில்லாமையால் ஈசுவரன் சதா முக்தனயிருக்கிறன். ஜீவனிடத்தில் ஆவரணமிருப்பதால் ஜீவன்பாரூன். ஏனெனில் எந்த அவித்தியாம்சத்தில் உண்டாகிற சைதன்னியத்திரூபாஸத்துக்கு ஜீவனென்று பெயரோ அந்த அவித்தைக்கு ஆவரணம் பண்ணல் சுபாவமாயிருக்கிறது. அவித்தை அஞ்ஞானம் மாயை இவைகள் ஒரே வஸ்துவுக்குப் பெயராயினும், சுத்தசத்துவகுணப்பிரதானத்தால் மாயை யென்றும் மலினசத்துவகுணப்பிரதானத்தால் அஞ்ஞானம் அவித்தை யென்றும் சொல்லப்படும். ரஜோகுண தமோகுணங்களுக்குச்சுவாதீனமான சத்துவகுணம் மலினசத்துவகுணமெனப்படும். அவித்தையில் ரஜோகுணதமோகுணங்கள் அதிகமாயிருப்பதால் அவித்தையிலுள்ள ஜீவனுடைய ஆபாஸாம்சத்துக்கு அவித்தையானது சொரூபாவரணஞ்செய்கிறது. ஆனபடியால் ஜீவனிடத்தில் பந்தம் இருக்கிறது, ஈசுவரனிடத்திலில்லை. அதிஷ்டானசேதன சகிதமான மாயையிலுள்ள ஆபாசரூப ஈசுவரன் தத்பதத்தின் வாச்சியார்த்தம். கேவலம் அதிஷ்டானசேதனம் தத்பதத்தின் லக்ஷியார்த்தம். ஈசுவரன் ஜகத்தி னுற்பத்தி பரிபாலனம் சம்ஹாரம் இவைகளைச் செய்கிறரென்று சாஸ்திரத்திற்சொல்லியதற்கு அபிப்பிராய மென்னவெனில், சேதனாம்சம் ஆகாசம்போல் அசங்கமாயிருக்கிறது. ஆபாசாம்சம் ஜகத்தின் உற்பத்தி முதலியவைகளைச்செய்கிறது. அதனிடத்திலேயே சர்வஜ்ஞத்துவமிருக்கிறது. பக்தர்களை யனுக்கிரகிப்பதும் ஆபாசாம்சமே. இன்னும்மற்ற ஐசுவரியங்களும் கேவலம் ஆபாசனிடத்திலிருக்கின்றன. சேதனாம்சம் ஏகரேவிதமாயிருக்கிறது. அதனிடத்தில் ஸத்தாஸ்பூர்த்தி[40] கொடுக்கிறதைத் தவிர வே

40. இருத்தல் விளங்குதல்.

ஆஜசுவரியமில்லை.

188. பிர்ம்மஸ்வரூபவர்ணனை:— பிர்ம்மாண்டத்துக்கு உள்ளும் புறமும் மகாகாசம்போல நிறைந்திருக்கிற சேதனம் பிரம்மமென்று சொல்லப்படும். இந்தப் பிர்ம்மம் தூரத்திலும் இல்லை சமீபத்திலும் இல்லை. எனெனில் எந்த வஸ்து தனக்குப்பின்னமாகவும் தேசரூபஉபாதியோடே கூடியுமிருக்கிறதோ அது சமீபத்திலும் தூரத்திலும் இருக்கிறதாகச்சொல்லப்படும். பிரம்மம் பின்னமன்று ஆனல் எல்லா வஸ்துக்களுக்கும் ஆத்மாவாயும் தேசாதிசர்வ உபாதிரகிதமாயுமிருக்கிறது. ஆகையால் அது தூரத்திலும சமீபத்திலு மிருப்பதாகச்சொல்லக்கூடாது. பிர்ம்மசப்தத்தின் வாச்சியம் ஸோபாதிகமாயிருக்கிறது. எனெனில் வியாபக வஸ்துவுக்குப் பிர்ம்மமென்று பெயர். இந்த வியாபகத்துவம் ஆபேக்ஷிக வியாபக மென்றும் நிரபேக்ஷிகவியாபகமென்றும் இருவகையாம். எந்த வஸ்து எந்தப்பதார்த்தத்தை யபேக்ஷித்து வியாபகமாக இருக்கிறதோ எதை யபேக்ஷித்து வியாபகமாக இல்லையோ அவ்வஸ்து வினிடத்தில் ஆபேக்ஷிகவியாபகத்துவஞ்சொல்லப்படுகிறது. உதாரணம்:— பிருதிவியாதிகளை யபேக்ஷித்து மாயைவியாபகமாயிருக்கிறது. சேதனத்தை யபேக்ஷித்து அப்படியிருக்கவில்லை. ஆகையால் மாயையினிடத்தில் ஆபேக்ஷிகவியாபகத்துவ மிருக்கிறது. எந்தவஸ்து எல்லாவற்றையு மபேக்ஷித்து வியாபகமாயிருக்கிறதோ அவ்வஸ்துவினிடத்திலுள்ள வியாபகத்துவம் நிரபேக்ஷிகவியாபகத்துவமென்று சொல்லப்படும். இந்தநிரபேக்ஷிகவியாபகத்துவம் சேதனத்திலிருக்கிறது. ஏனெனில் சேதனத்துக்குச்சமானமாகவாவது அதிகமாகவாவது வேறு யாதொன்றும் வியாபகமாகவில்லை. ஆனல் சைதன்னியமே எல்லாவற்றிற்கும் அதிகவியாபகமுள்ளது. ஆகையால் சேதனத்தினிடத்தில் நிரபேக்ஷிக வியாபகத்துவ மிருக்கிறது. இந்தஇரண்டு விதவியாபகத்துவங்களுக்கு கூடிய வஸ்து பிர்ம்மசப்தத்தின்வாச்சியார்த்தமாயாகிறது. இதனாலே மாயையினிடத்தில் இவ்விருவகை வியாபகத்துவங்களு மிருக்கின்றன. ஏனெனில் மாயையினிடத்தில் ஆபேக்ஷிகவியாபகத்துவமும் சேதனத்தினிடத்திலு நிரபேக்ஷிகவியாபகத்துவமும் இருக்கின்றன. சேதனத்தின் ஏகதேசத்தில் மாயையிருப்பதாலும் மாயாவிசிஷ்ட சேதனத்தைவிடச் சுத்தசேதனம் அதிகவியாபகமுள்ளதாகையாலும் சுத்தசேதனத்தினிடத்தில் நிரபேக்ஷிகவியாபகத்துவம் இருக்கிறதேதவிர மாயாவிசிஷ்டசேதனத்

41: கடந்தை உண்டாக்கும்பயிரான சக்தி எந்தமண்ணிலுமில்லை. களிமண்ணில் மட்டுமிருக்கிறது. இதைப்போல் மாயையும் பிரம்மத்தின் ஏகதேசத்திலிருக்கிறது.

தினிடத்தில் நிரபேக்ஷிக வியாபகத்துவம் சொல்லக்கூடாது. ஆயினும் மாயாவிசிஷ்டசேதனம் பாரமார்த்திகத்தில் சுத்தசைதன்னியத்துக்கு வேறுகாமல் அதாகவே இருக்கிறது. ஆகையால் மாயாவிசிஷ்டத்திலுள்ள சேதனும்சத்துக்கு நிரபேக்ஷிக வியாபகத்துவமிருக்கிறது. இவ்விதமாகமாயாவிசிஷ்டமே பிர்மம் சப்தத்தின்வாச்சியமாகச்சொன்னதுசரியே. சுத்தசேதனம் பிர்மசப்தத்துக்குலக்ஷியார்த்தம். ஆகையால் ஈசுவர பிர்மசப்தங்களுக்கு ஒரே அர்த்தம் பிரதீதியாகிறது. வெவ்வேறு அர்த்தங்கள் பிரதீதியாகிறதில்லை. ஆயினும் பிர்மசப்தத்துக்குச் சுபாவமென்னவெனில் அனேகவிடங்களில் லக்ஷியார்த்தத்தையும் சிலவிடங்களில் வாச்சியார்த்தத்தையும் தருதலே. ஈசுவரசப்தத்துக்குச்சுபாவமென்னவெனில் பலவிடங்களில் வாச்சியார்த்தத்தையும் சிலவிடங்களில் லக்ஷியார்த்தத்தையும் தருதலே. இவ்விதபேதமிருப்பதால் பிர்மசப்தத்துக்கு அர்த்தம் தனியாயெழுதப்பட்டது.

189 சிஷ்யனே, நான்குவிதச்சேதனங்களையும் சொன்னேன். இவைகளில் ஜீவனுடையஸ்வரூபத்திலுள்ள மித்தியாஆபாஸாம்சம் புண்ணியபாபங்களைச்செய்து அவைகளின் பலன்களை யனுபவிக்கிறது. கூடஸ்தனுகிற சேதனம் கலியாணரூபமாக இருக்கிறது.

190 168—169-ம்பிரிவுசுருந்துஉத்தரம்—190—192:—ஆகையால், புத்திரூபவிருக்ஷத்தில் பரமாத்மா ஜீவன் என்கிற இரண்டு பக்ஷிகளிருப்பதாக முதலில் நீ யாதொருசங்கை கொண்டாயோ அதற்கு உத்தரம் என்னவெனில் பரமாத்மாவும் ஜீவனும் வெவ்வேறுயிருக்கிறதாக நினைக்கத்தக்கதல்ல. ஆனல் கூடஸ்தன் பிரகாசிப்பிக்கிறுன் ஆபாஸன் போகிக்கிறுன் என அறியத்தக்கது.

191 ஜீவஸ்வரூபத்திலுள்ள சேதனத்தின் சாயையாகிற ஆபாஸாம்சம் கர்மத்தைச் செய்கிறது. இப்படிக் கர்மஞ் செய்கிற ஆபாஸாம்சத்துக்கு ஈசுவரனுடைய ஆபாஸாம் சம்பலனைக் கொடுக்கிறது. இரேழியிலிருக்கிற தீபமானது அதற்கு முன்பக்கம் பின்பக்கங்களைப் பிரகாசிப்பிக்கிறதினல் அவைகளுடன் சம்பந்தப்படுகிறதுபோல் சேதனத்தின்சாயையும் ஈசுவரனிடத்திலும் மற்றிடங்களிலும் சம்பந்தப்படுகிறது. ஆபாஸனே கர்மீ ஆபாஸனை பலதாதா. இதனல் என்ன சித்தியாகிறதெனில் ஜீவஸ்வரூபத்திலுள்ள ஆபாஸாம்சம் புண்ணியபாபங்களைச்செய்து அவைகளின் பலன்களை யனுபவிக்கிறது. ஈசுவரனிடத்திலுள்ள ஆபாசாம்சம் கர்மபலத்தைக்கொடுக்கிறது. இவ்விருவர்களின் சேதனும்சத்தில் யாதொருபேச்சுக்குமிடமில்லை. தெளிவாய்ச்சொல்லின், ஜீவனைசதன்னியத்

தினிடத்தில் கர்மம் கர்மபலபோகம் இவைகளின் சம்பந்தமில்லை. ஈசுவர் சேதனத்தினிடத்தில் பலத்தைக் கொடுக்கிற சம்பந்தமில்லை. இச்சேதன த்தினிடத்தில் இவைகள் இருப்பதாகச் சொல்லுகிறவன் மூடன். ஏனெனில் சேதனம் இரண்டிடங்களிலும் அசங்கமாயும் ஏகரூபமாயும் இருக்கி றது. அதிஷ்டானத்தில் யாதொரு பேதமுமில்லை. ஜீவசேதனத்தை ஈசு வரசேதனத்துக்கு வேறுகவும் ஈசுவரசேதனத்தை ஜீவசேதனத்துக்கு வே றுகவும் நினைக்கிறவன் நிந்திக்கத்தக்கவன். இப்படிச்சொல்வதினால் "ஜீ வனும் பரமாத்மாவும் ஒன்றென வங்கீகரிக்கும் பக்ஷத்தில் கர்மோபாஸ னைகளோப்பிரதிபாதிக்கும் வேதம் நிஷ்பிரயோஜனமாகுமே" என நீ கொ ண்ட இரண்டாவது சங்கைக்குச்சமாதானஞ் சொல்லப்பட்டது. ஜீவே ஸ்வரர்களுடைய சேதனபாகம் அபேதமாயும், ஆபாஸபாகம் பேதமாயு மிருக்கின்றன. ஆகையால் இரண்டுவசனங்களுஞ்சரியே.

192 சீஷனே, உன்னுடைய கேள்வியில் கண்டஇரண்டுபக்ஷிக ளும் கூடஸ்தனும் புத்தியிலுள்ள ஆபாஸனுமே. இவைகள்கடாகாசம் ஆகாசபிம்பம்போல்பின்னப்படுகின்றன. உன்னுடைய மற்றொரு கே ள்வியில் கண்ட கர்மியும் பலதாதாவும் முறையே ஜீவேஸ்வரர்களன்று. ஆனல் ஜீவனுடைய ஆபாஸாம்சம் கர்மத்தைச்செய்கிறது. ஈசுவரனு டையஆபாசாம்சம் பலத்தைக் கொடுக்கிறது. ஜீவேசுவரர்களுடைய சே தனாம்சம் கடாகாசம் மகாகாசம்போல் பேதமற்றது. இவ்விதமாக ஜீவப் பிர்ம்மங்களின் ஏகத்துவஞ் சித்திக்கிறது. ஆகையால், சீஷனே, "நான் பிர்ம்மம்"என்று நீ அறிவாயாக. இதில் நான் என்பதினல் கூடஸ்தனை யும் பிர்ம்மமென்பதினல் மகாகாசமபோல் பிர்ம்மத்தின லக்ஷியார்த்த த்தையும் அறிந்து கொள்ளவேண்டியது. நான்சப்தத்துக்கும பிர்ம்மசப்த த்துக்கும் வாசியார்த்தம் அபேதமாக இல்லை. லக்ஷியார்த்தம் அபேதமா யிருக்கிறது. சீஷனே, எதுவரையில் நான்பிர்மமம்என்று நீ அறியவில் லையோ அதுவரையில் நீ தீனன் துக்கியென்று நினைத்துக்கொள். பர மாத்மாவை உனக்கு வேறுக நினைப்பது உன் பயத்துக்கு ஹேதுவாகும்.[42] ஆகையால் "நான் பிர்ம்ம"மென்று நீ யறி.

(2) நான் பிர்ம்மமென்கிற ஞானம்

யாருக்குண்டாகிறது (193—203)

193. கேள்வி:— சுவாமின் "நான் பிரம்மம்" என்கிற ஞானம்

---

42. ஜனமரணருப சம்சாரபயம்.

யோருக்குண்டாகிறது. இதைத் தேவரீர் தயவுசெய்து சொல்லியருளவேண்டும். நீங்கள் சொல்லாவிடின் நான் எதார்த்தத்தை அறிந்துகொள்ளமாட்டேன். இக்கேள்வியால் சீஷனுடைய மனதிலுள்ள அபிப்பிராயம் வருமாறு:— நான் பிர்ம்ம மென்கிற ஞானம் கூடஸ்தனுக்குண்டாகிறதா அல்லது ஆபாஸ ஸகிதபுத்திக்குண்டாகிறதா?. கூடஸ்தனுக்குண்டாகிறதாகச் சொல்லும்பக்ஷத்தில் கூடஸ்தன் விகாரியாவான். ஆபாஸ ஸகிதபுத்திக்குண்டாகிறதாகச் சொல்லும்பக்ஷத்தில் நான் பிர்ம்ம மென்கிற ஞானம் பிராந்திரூபமாகும். ஏனெனில் கூடஸ்தனும் பிர்ம்மமும் மொன்றே ஆபாஸன் வேறு என்று நீங்கள் முன்னமேயே (180) சொல்லியிருக்கிறீர்கள். ஆனதால் பிர்ம்மத்துக்கு வேறான ஆபாஸனை பிர்ம்மரூபமாக அறிதல் பிராந்தியேயாகும். சீப்பத்துக்கு வேறான ரஜ்ஜுவை சீப்பரூபமாயறிதல் பிராந்தியாவதுபோலும். ஆனதால் ஆபாஸசகிதபுத்திக்கு "நான் பிர்ம்ம" மென்கிற ஞானம் யதார்த்தமன்று பிராந்திதான். ஒருக்கால் 'நான் பிர்ம்மம்' என்னும் ஞானத்தைப் பிராந்திரூபமாகவே யங்கீகரித்தாலும் இந்த ஞானத்தால் மித்தியாஜகத்து நிவர்த்தியாகமாட்டாது. ஆனால் யதார்த்த ஞானகதால் மித்தியை நிவர்த்தியாகும். ரஜ்ஜுவின் யதார்த்த ஞானத்தால் மித்தியாசர்ப்பம் நிவர்த்தியாகிறதுபோலும். இவ்விதமாக 'நான் பிர்ம்மம்' என்கிற ஞானம் ஆபாஸ ஸகித புத்திக்குண்டாகிறதாகச் சொல்லக்கூடாது.

194 சூருஉத்தாம்(194—201):— சீஷனே, இப்போது ஆபாஸனுடைய ஏழு அவஸ்தைகளையுஞ் சொல்லுகிறேன் கேள். இவ்வேழில் யாதொன்றும் சேதனமாகிற கூடஸ்தனுக்குண்டாகிறதில்லை. நான் பிர்ம்மமென்கிற ஞானம் இவ்வேழிலொன்றாகதிருக்கிறது.

195 அவ்வேழவஸ்தைகளாவன:— (1) அஞ்ஞானம் (2) ஆவாணம் (3) பிராந்தி (4) பரோக்ஷஞானம் (5) அபரோக்ஷஞானம் (6) சோகநாசம் (7) அதிஹர்ஷம்

196 அஞ்ஞான ஆவாணஸ்வரூபங்கள்:— சீஷனே "நான்பிர்ம்மத்தையறியவில்லை, என்கிறவியவஹாரத்துக்குக்காரணம் அஞ்ஞானம். பிர்ம்மமில்லை விளங்கவுமில்லை, இந்தவியவஹாரத்துக்குகாரணம் ஆவரணம். ஆவரணத்தால் இருவகைவியவஹாரங்களுண்டாகின்றன. ஏனெனில், அஞ்ஞானத்தின்சக்திகள் இரண்டு. ஒன்று அஸத்வாபாதகம் மற்றொன்று அபானபாதகம். இவ்விரண்டிற்கும் ஆவரணமென்று பெயர். வஸ்து இல்லையென்று தோன்றும்படிச்செய்யுஞ் சக்தி அஸத்வாபாதகமெனப்படும் வஸ்து விளங்கவில்லை யென்று தோன்றும்படிச் செய்யும் அஞ்ஞானத்தி

ன் சக்தி அபாணபாதகமென்னப்படும். ஆகையால் 'பிர்ம்மமில்லை' என்கி ற வியவஹாரத்துக்குக்காரணம் அஞ்ஞானத்தின் அஸத்வாபாதகசக்தியா ம். பிரம்மம் விளங்கவில்லை யென்கிற வியவஹாரதுக்குக் காரணம் அஞ் ஞானத்தின் அபாணபாதகசக்தியாம். இவ்விரண்டுக்கும் ஆவரணமென்று பெயராம்.

197. பிராந்திஸ்வரூபம்:— கூடஸ்தனிடத்தில் தோன்றுகிற ஜன் மாதிசமூசாரம் வேதத்தில் பிராந்தியெனச்சொல்லப்படுகிறது[43]. இதற்கே சோகமென்று பெயராகும்.

198. பரோக்ஷாபரோக்ஷ ஞானங்கள்:— 'பிர்ம்ம மில்லை' என்னு ம் ஆவரணம்சத்தைப் "பிர்ம்மமிருக்கிறது" என்கிற பரோக்ஷஞானம் நாச ஞ்செய்கிறது. ஏனெனில் "பிரம்மம் சத்திய ஞான அனந்த ரூபமாயிருக்கி றது" என்கிற ஞானத்துக்குப் பரோக்ஷ ஞானமென்று பெயர். இந்தப்ப ரோக்ஷஞானம் "பிர்ம்மமில்லை" என்னும்பிரதீதிக்கு விரோதமா யிருக்கிற துவேயிருன்றுக்கும் விரோதமில்லை. 'நான் பிரம்ம' மென்னும் அபரோக்ஷ ஞானம் சுகல அவித்தியாசமூகத்துக்கும் விரோதியாயிருக்கிறது. இக்கா ரணத்தால் 'பிர்ம்மத்தை நான் அறியவில்லை' என்கிற அஞ்ஞானம் "பிர்ம்ம மில்லை விளங்கவில்லை" என்கிற ஆவரணம் நான் பிர்ம்மமன்று அனுல் பு ண்ணிய பாபங்களை ச்செய்து சுக துக்கங்களை யனுபவிக்கிறஜீவன்" என்கி ற பிராந்தி, இந்த அவித்தியா சமூகத்தை அபரோக்ஷஞானம் நாசம்பண் ணுகிறது.

199 பிராந்திநாசவர்ணனை:— என்னிடத்தில்ஜன்மமில்லைமரணமி ல்லை சுகதுக்காதிகளின் லேசமுமில்லை சமூசாரத்தின் யாதொரு தர்மமும் என்னிடத்தில் இல்லை. ஆனல் நான்ஞானமிலலாத கூடஸ்தனையிருக்கிறே ன். சீவனே இவ்விதமாகச்சர்வஅனர்த்தங்களையும் நிஷேதித்தலே பிராந் திநாசத்தின் ஸ்வரூபமென்று சொல்லப்படுகின்றது. இவ்விடத்தில் கூட ஸ்தனிடத்தில் ஜனனத்தை நிஷேதித்ததினல் ஸர்வஅனர்த்தங்களையும் நி ஷேதித்ததாகக் கொள்ளவேண்டியது. ஏனெனில் ஜனனத்துக்குமுன்பிறகு தான் அனர்த்தங்கள்பிரதீதியாகின்றன ஜனனத்தை நிஷேதிக்கிறதினல் சகலஅனர்த்தங்களும் நிஷேதிக்கப்படுகின்றன. இந்தப்பிராந்திநாசத்துக்கு ச் சோகநாச மென்றும் பெயர்.

---

43. இதற்கே அத்தியாசமென்றும், விக்ஷேபமென்றும் பெயர்.

200 ஹர்ஷஸ்வரூபம்:— சீஷனே நான் அத்வயப்பிர்ம்மஸ்வரூப்ம் என்று உனக்குச்சமுசய மில்லாதஉன்ஸ்வரூபஞானமும் எப்பொது உண் டாகிறதோ அப்போது உனக்குண்டாகும்ஆனந்தத்துக்கு ஹர்ஷமென்று[44] பெயர்.

201. நான்இப்போது உனக்குஏழவஸ்தைலக்ஷணங்களையும் விவ ரமாய்ச் சொன்னேன். இவைகளெல்லாம் ஆபாஸனுக்கேயிருக்கின்றன இ வைகளில், நான் பிர்ம்மம், என்கிறஞானமும்ஆபாஸனுக்கே யுரியது. ஞா னம் யாருக்குண்டாகிறது என்கிறகேள்விக்குத்தரஞ்சொன்னேன். இன் னும் ஏதாவது கேட்கவிரும்பினல் கேள்.

202. கேள்வி:— முன் [193] சீஷன் கேள்விகேட்டகாலத்தில் மனதிற் கொண்டிருந்த அபிப்பிராயத்தை இபோது வெளியிடுகிறன். சு வாமின் கூடஸ்தனும் பிர்ம்மமும் ஒன்றென்றும் ஆபாஸன் பிர்ம்மத்துக்கு வேறென்றும் தேவரீர் முன் சொல்லியிருக்கிறீர்கள். இப்படிப்பிர்ம்மத் துக்கு வேறுயிருக்கிற ஆபாஸனுக்கு நான் பிர்ம்மம், என்கிற பிர்ம்மரூபஞா னம் உண்டாகமாட்டாது ஆனல் தனக்கு அதிஷ்டானமாகிய கூடஸ்தன் பிர்ம்மரூபமாயிருக்கிறன் என்று ஆபாஸனுக்கு ஞானமுண்டானல் அது யதார்த்தஞானமாயிருக்கும். நான் பிர்ம்மம் என்கிற ஆபாஸனுடைய ஞா னம் யதார்த்தஞானமன்று. ஏனெனில் நான் என்றல் தன்ஸ்வரூபம். ஆபா ஸன் மித்தியாஸ்வரூபன், ஆனதால் பிர்மமத்துக்கு வேறுயிருக்கிறன். இப்படிப் பிர்மமத்துக்கு வேறுயிருக்கிற ஆபாஸஸ்வரூபத்தைப் பிர்ம்மஸ்வ

---

44. இந்த ஆனந்தத்துக்கு வித்தியாரண்யசுவாமிகள் பஞ்சதசிப்ரகர ணத்தில் "நிரங்குச திருப்தி" என்று பெயரிட்டிருக்கிறார். விஷயாநந்தம் மே ல் மேல் ஆனந்தத்தை இச்சிக்கிறபடியால் அது சாங்குசமாயிருக்கிறது. பிர்ம் மாநந்தத்துக்கு மேலான ஆனந்தமில்லாதபடியால் அது நிரங்குசமாயிருக்கிற து. தசமனுடையகதையில் தசமன் தன்னைவிட்டு மற்றொன்பதுபேர்களை யெ ண்ணித் தான் தசமனென்று அறியாமலிருப்பது அஞ்ஞானம். தசமன் இல்லை விளங்கவில்லை யென்பது ஆவரணம். தசமன் இறந்துபோய்விட்டானென்று நினைத்து அழுதல் சோகம். இதுவே பிராந்தி அல்லது விக்ஷேபம் என்னப்படு ம். தசமன் இறந்துபோகவில்லை இருக்கிறன் என்கிறதை இஷ்டனுடைய வார் த்தையால் அறிவது பரோக்ஷஞானம். நீயேதசமனென்று காண்பிக்கப்பட்டு த்தன்னை யறிவது அபரோக்ஷஞானம். இப்படி யறிந்தபின் அழுகையை நிறுத் தல் பிராந்தி நாசம். தான் தசமனென்று அறிந்ததினலுண்டாகும் சந்தோஷ ம் அதிஹர்ஷம். இவ்விதமாகத்திர்ஷ்டாந்தத்திற் காட்டிய் தசமனுடைய ஏழ வஸ்தைகளும் சிதாபாசவிஷயத்தில் கிரந்தத்திற் சொல்லியபடிக்காணப்படுகி

ரூபமாக அறிவது மித்தியாஞானமாகும். சர்ப்பத்துக்கு வேறான ரஜ்ஜுவைச் சர்ப்பரூபமாக அறியும் ஞானம் மித்தையாவதுபோலும். மித்தையென்றால் பிராந்தி. இந்தப் பிர்ம்ம ஞானத்தைப் பிராந்திரூபமாகச் சொல்வதுசரியன்று.

203. குரு உத்தரம்:— நான் என்னும் சப்தத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறேன் கேள். அதனால் உன்னிருதயத்திலுள்ள சங்கையாகிற களங்கம் நிவிர்த்தியாய்விடும். சிஷ்யனே, 'நான் பிர்ம்ம' மென்கிற ஞானம் புத்திஸஹித ஆபாஸனுக்குண்டானாலும் கூடஸ்தனுக்குண்டாகாவிட்டாலும் ஆபாஸன் கூடஸ்தனையும் தன் ஸ்வரூபத்தையும் சுன்னத்மாவாக அதாவது தானுகவே அறிகிறான். இந்த 'நான்' சப்தத்தில் விளங்குகிற கூடஸ்தனுக்குப் பிர்ம்மத்துடன் எப்போதும் அபேதமிருக்கிறது. கடாகாசத்துக்கும் மகாகாசத்துக்கும் எப்போதும் அபேதமிருப்பதுபோலும். இக் காரணத்தினால் கூடஸ்தனுக்குப் பிர்ம்மத்துடன் முக்கியஸமானாதிகரணம்[45] வேதாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த வஸ்துவுக்கு எந்த வஸ்துவுடன் சங்கம் எப்போதும் அபேதமாயிருக்கிறதோ அவ்வஸ்துவுக்கு அதனுடன் சங்கம் முக்கியஸமானாதி காரணமென்று சொல்லப்படுகிறது. கடாகாசத்துக்கு மகாகாசத்துடன் சங்கம் எப்போதும் அபேதமாயிருக்கிறது. ஆகையால் கடாகாசம் மகாகாசமாயிருக்கிறது. ஆகையால் கடாகாசத்துக்கு மகாகாசத்துடன் சங்கம் முக்கியஸமானாதிகரணம். இவ்விதமாகக்கூடஸ்தனுக்குப் பிர்ம்மத்துடன் சங்கமும் முக்கியஸமானாதி காரணமே. ஏனெனில் கூடஸ்தனுக்கும் பிர்ம்மத்துக்கும் எப்போதும் அபேதம். ஆகையால் "நான்" என்கிற சப்தத்தில் விளங்குகிற கூடஸ்தனுக்குப்பிர்ம்மத்துடன் சங்கம் எப்போதும் அபேதமாயிருக்கிறது.

ன்றன. கூடஸ்தன் அனங்கனையும் நிர்விகாரமாயுமிருப்பதால் இவ்வவஸ்தைகள் சிதாபாஸனுக்கே யேற்படுகின்றன. இவ்வேழவஸ்தைகளில் அஞ்ஞானம், ஆவரணம், விக்ஷேபம் இம்மூன்றும் பந்தத்துக்குக்காரணங்களாயிருக்கின்றன மற்ற நான்கும் மோக்ஷத்துக்குச்சாதனங்களாயிருக்கின்றன.

45. வெவ்வேறு அர்த்தங்களோடு கூடியும் வாக்கியத்தில் ஒரேவேற்றுமைபலத்தால் ஒரே லக்ஷ்யார்த்தத்தைக்கொடுக்கிறவையாயுமிருக்கிற இரண்டுபதங்கள் சமானாதிகரணமென்னப்படும். இப்பதங்களின் சம்பந்தம் சாமானாதிகரண்ய மென்னப்படும். இது முக்கியசாமானாதிகரண்யமென்றும், பாதாசாமானாதிகரண்யமென்றும் இருவகை. ஜீவபிர்ம்மலக்ஷியங்களைப்போதிக்கிற மகாவாக்கியங்களில் சாமானாதிகரண்யத்தை யறியத்தக்கது. 6-வதுதாரங்கம் 104வது குறிப்பைப்பார்க்க.

மேலும், "நான்" சப்தத்தில் விளங்குகிற ஆபாஸனுக்குத்தன் ஸ்வரூபம் பாதிக்கப்பட்டுப்பிர்ம்மத்துடன் அபேதம் சித்திக்கிறது. முகத்தின் பிரதிபிம்பத்துக்குப் பிம்பமாகிற முகத்துடன் சங்கம பிரதிபிம்பம பாதிக்கப்பட்டு அபேதப்படுகிறதுபோலும். திக்காணத்தினால் வேதாந்தத்தில் ஆபாஸனுக்குப்பிர்ம்மத்துடன் சங்கம பாத ஸமாநாதிகரணமென்று சொல்லப்படுகிறது. எந்த வஸ்து பாதிக்கப்பட்டு எத்துடன சங்கம் அபேதப்படுகிறதோ அந்த வஸ்துவுக்கு அதனுடன் சங்கம் பாத ஸமாநாதி கரணமென்று சொல்லப்படுகிறது. முகதின் பிரதிபிம்பம் பாதிக்கப்பட்டு முகத்துடன் அபேதப்படுகிறதினால் பிரதிபிமபம முகமா யிருக்கிறதே தவிர வேறுயில்லை. இது பாதஸமாநாதி கரணமாம். இவை ஐம் ஒருதாகரணம்— கட்டையில் புருஷர் பிரமையுண்டாகிற கட்டை யெனத் தெறிந்த பிறகு புருஷன் கட்டைஎன்பதில் புருஷனுக்குக் கட் டையுடன் பாதஸமாநாதிகரணம் சித்திக்கிறது. இதுபோல ஆபாஸன் பாதிக்கப்பட்டுப் பிர்ம்மத்துடன் அபேதபடுகிறது.ஆகையால் நான்ச ப்தத்தில் விளங்குகிற ஆபாஸன் பிர்மமத்துதரு வேறுகஇல்லை. சிஷ் னே, இவ்விதமாக "நான்" சப்தத்தில் விளங்குநீ கூடஸ்தனுக்கு முக்கிய அபேதமும் ஆபாஸனுக்குபாதையால் அபேதமும சித்திகின்றன.

(3) கூடஸ்தாபாஸரீகளாதோன்றுங்காலம். (204—232).

204. கேள்வி:— ஸ்வாமின், அஹம (நான்) விர்த்தியில் சா க்ஷியும் ஆபாஸனும் விளங்குகின்றன வெனத் தேவரீர சொன்ன விஷ யத்தில் நான் ஒரு சங்கதி தெறிதது கொள்ளவில்லை. அதாவது, இவை கள், ஒரே காலத்தில் விளங்குகின்றனவா அல்லது வெவ்வேறு காலத்தி லா. இதைத்தேவரீர் எனக்கு விவரமாய்ச சொல்லவேணடும.

205. குரு உத்தரம்:— (205—232)— சிஷ்யனே, உன் கே ள்விக்கு நான் சாரமான உத்தரஞ்சொல்லுகிறேன். நீ சாவதானமாயக் கேள். இதைக்கேட்பதினல் ஞானரூபமான சூரியப்பிரகாசமுண்டாகி அஞ்ஞானரூபமான தமஸு நாசமடையும். சிஷ்னே, ஒரேசமயத்தில் சா க்ஷியும் ஆபாஸனும் அஹம விர்த்தியில் விளங்குகின்றன. எல்லாப்பிர காணங்களிலும் ஆபாஸசப்தத்தால் அந்தக்காணசகித ஆபாஸன் என்று கிரகிக்கவேண்டியது. அந்தக்காரணஸகித ஆபாஸன் சேதனமாகிற சாக்ஷி க்கு விஷயமாகி விளங்குகிறான். சாக்ஷி ஸ்வயம்பிரகாசத்தால் விளங்குகி றது. அந்தக்காணத்தின் ஆபாஸசகித விர்த்திக்குச்சாக்ஷி விஷயமாகிறதி ல்லை.

206. கடாதி வெளியிலுள்ள பதார்த்தங்களின் ஞானமுண்டாதும் ரீதி:— . இந்திரியத்துக்கும் கடத்துக்கும் சம்பந்தமுண்டாகும்போது இந்திரியமூலமாக அந்தக்காணத்தின் விர்த்தி வெளியிற் சென்று கடத்தி

ன் ஸமாநகாரத்தை அடைகிறது. இரும்பிலாவது மண்ணிலாவது செய்த கருவில் உருக்கிவிடப்பட்ட தாம்பிரம் அக்கருவின் சமாநகாரத்தை யடைவதுபோல அந்தக்காணவிர்த்தியும் கடத்துக்குச்சமானமான ஆகார த்தை யடைகிறது. இந்த விர்த்தி ஆபாஸனன்றியிலுண்டாகிறதில்லை. ஆபாஸசகிதமாகவேயுண்டாகிறது. ஏனெனில் விர்த்தி அந்தக்காரணத்தின் பரிணாமமாயிருக்கிறது. அந்தக்காரணத்தின் பரிணாமத்துக்கு விர்த்தி யென்று பெயர். அந்தக்காரணம் சத்துவகுணகாரியமாகையால் ஸ்வச்சமாயிருக்கிறது, ஆகையால் அந்தக்காரணத்தில் சேதனத்தின் ஆபாசமுண்டாகிறது. இதுபோல விர்த்தியும் ஸ்வச்சமான அந்தக்காரணத்தின் காரியமானதால் விர்த்தியில் சேதனத்தின் ஆபாஸ்முண்டாகிறது. அந்தக்காரணத்தினின்றும் ஆபாஸசகிதமாக விர்த்தியுண்டாகிறது. இக்காரணத்தினாலும் விர்த்தி ஆபாஸசகிதமாயிருக்கிறது. மேலும் விஷயமாகிற கடம் தமோகுணகாரியமாயிருக்கிறது. ஆகையால் அது ஸ்வரூபத்திலில் ஜட மும். அதனிடத்தில் அஞ்ஞானமும் ஆவரணமுமிருக்கின்றன.

207. **சங்கை:**— அஞ்ஞானமும் ஆவரணமும் விசாரிக்கையில் சேதனத்திலிருக்கின்றனவேதவிரக்கடத்திலில்லை. ஏனெனில் அஞ்ஞானம் சேதனத்தை யாசிரயித்து அதையே விஷயமாக்குகிறதென்பது. வேதாந்தசித்தாந்தம். முன் ஸப்தாவஸ்தைப் பிரசங்கத்தில் அஞ்ஞானத்துக்காசிரயம் அந்தக்காணஸகித ஆபாஸனென்று சொல்லப்பட்டது இது அஞ்ஞானத்தின் அபிமான ஆசிரயம். "நான் அஞ்ஞானியாயிருக்கிறேன்" என்னும் அபிமானம் அந்தக்காணசகித ஆபாஸனுக்குண்டாகிறது. ஆகையால் ஆபாஸன் அஞ்ஞானத்துக்காசிரயமாகச்சொல்லப்படுகிறது. முக்கிய ஆசிரயம் சேதனமேதவிர ஆபாஸசகித அந்தக்காணமன்று. ஏனெனில், ஆபாஸசகித அந்தக்காணம் அஞ்ஞானத்தின் காரியமாயிருக்கிறது. எது எதின் காரியமோ அந்தக்காரியத்தைக்காரணம் ஆசிரயிக்கமாட்டாது. ஆகையால் அஞ்ஞானத்துக்குச்சேதனமே அதிஷ்டானரூப ஆசிரயமாயிருக்கிறது. சேதனத்தையே அஞ்ஞானம் விஷயமாக்குகிறது. ஸ்வரூபம் தெரியாமல் மறைபடுவதே அஞ்ஞானத்துக்கு விஷயமாதலாம். இந்த அஞ்ஞானகிருத ஆவரணம் ஜடவஸ்து விஷயத்தில் சொல்லக்கூடாது. ஏனெனில், ஜடவஸ்து ஸ்வரூபத்திலேயே ஆவிருதமாயிருக்கிறது. அதனிடத்தில் அஞ்ஞானகிருத ஆவரணத்துக்கு யாதொரு

46

---

46. பணத்துக்கு முக்கியாசிரயம் பெட்டி, நான் தனிகன் என்னுமிடத்தில் நான் என்பது அபிமானாசிரயம். இதுபோல் அஞ்ஞானத்துக்கு முக்கிய ஆசிரயம் சேதனம். ஆபாஸகனிதஅந்தக்காணம் அபிமானிரூப ஆசிரயம்.

ரு பிரயோஜனமுமில்லை. இவ்விதமாக அஞ்ஞானத்துக்கு ஆசிரயமும் விஷயமும் சைதன்னியமே. வீட்டுக்குள்ளிருக்கும் இருள் வீட்டையே மறைப்பது போலும். ஆகையால் அஞ்ஞானமும் ஆவரணமும் கடத்தி விருப்பதாகச்சொல்லக்கூடாது.

208, **சமாதானம்:—** சேதனத்தின் ஸ்வரூபத்துக்கு வேறுகவும் சதசத்துக்கு விலக்ஷணமாயும் இருக்கிற அஞ்ஞானம் சேதனத்தை யாசிரயித்துக்கொண்டிருக்கிறது. அந்த அஞ்ஞானத்தால் சேதனம் ஆவிருதமாயிருக்கிறது. இதுபோல, கடத்தின் ஸ்வரூபத்துக்கு வேறான அஞ்ஞானம் கடத்தை யாசிரயிக்காவிட்டாலும் அஞ்ஞானத்தால் கடாதிகள் ஸ்வரூபத்தில் பிரகாசமில்லாத ஜடஸ்வரூபங்களாகச்செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால் கடாதிகள் எப்போதும் இருளால் மூடப்பட்டவைபோல் ஆவிருதமாயிருக்கின்றன. இந்த ஆவிருதஸ்வபாவம் கடாதிகளுக்கு அஞ்ஞானத்தால் உண்டாயிற்று. ஏனெனில் தமோகுணப்பிரதான அஞ்ஞானத்தின்றும் பூதங்களுடைய உற்பத்திமூலமாகக்கடாதிகள் உண்டாகின்றன. அத்தமோகுணம் ஆவரணஸ்வபாவத்தோடு கூடினது. ஆகையால் கடாதிகள் பிரகாசமில்லாத இருட்டாகவேயிருக்கின்றன. இவ்விதமாக இருள்ரூபமான ஆவரணம் கடாதிகளில் ஸ்பாவசித்தமாயிருக்கிறது. கடாதிகளுடைய அதிஷ்டானசேதனத்தை யாசிரயித்துக்கொண்டிருக்கிற அஞ்ஞானம் சைதன்னியத்தை மறைத்து, ஸ்பாவத்தாலேயே மறைபட்ட கடாதிகளையும் மறைக்கிறது. ஸ்வபாவமாகவே மறைபட்ட பதார்த்தங்களை மறுபடியும் மறைப்பதில் பிரயோஜனமில்லாவிட்டாலும் மூடும்பதார்த்தம் பிரயோஜனத்தின் அபேக்ஷையன்றியிலேயே மூடப்படாத பதார்த்தம்போல் மூடியிருக்கும் பதார்த்தத்தையும் மறுபடியும் மறைக்கிறது. இது உலகத்தில் பிரசித்தமாயிருக்கிறது. இந்த அஞ்ஞானத்தால் ஆவிருதமான கடத்தையடைந்த அந்தக்காரணத்தின் ஆபாஸஸஹித கடாகாரவிர்த்தியிலுள்ள விர்த்திபாகம் கடத்திலுள்ளதைப் போக்குகிறது; ஆபாஸபாகம் கடத்தைப்பிரகாசிப்பிக்கிறது. இவ்விதமாக வெளியிலுள்ள பதார்த்தவிஷயங்களில் விர்த்தியும் ஆபாஸமுமுபயோகப்படுகின்றன.

209. இதற்குத்திர்ஷ்டாந்தஞ் சொல்லுகிறேன். இருட்டில் மண்பாத்திரத்தால் மண் அல்லது இரும்பினாற்செய்த ஒரு வஸ்து மூடப்பட்டிருக்கிறது. தடியால் அந்த மண்பாத்திரத்தை யுடைத்தாலும் தீபமில்லாமல் உள்ளேயிருக்கும் பொருள் பிரகாசிக்கிறதில்லை. ஆனால் தீபத்தினால்தான் அது பிரகாசிக்கிறது! இதுபோல, அஞ்ஞானத்தால் ஆவிருதமான கடத்தின் ஆவரணத்தை விர்த்தியானது நாசஞ்செய்தாலும் கடம் பிரகாசிக்கிறதில்லை. ஏனெனில் கடம் ஸ்வரூபத்தினால் ஜட

ம். விர்த்தியும் ஐடம். ஆவரணத்தைப்போக்கமட்டும் அதிறைக்கூடும். அதிறைற் பிரகாசமுண்டாகிறதில்லை. ஆகையால் கடத்தைப்பிரகாசிப்பி க்கிறது ஆபாஸந்தான்.

210. பிரத்தியகூஞான லகூணம்:— "நேத்திரத்துக்கு விஷயமான வஸ்துவின் பிரத்தியகூஞானம் மேற் சொல்லியபடி யுண்டா கிறது. சிரவணாதிகளுக்கு விஷயமான பதார்த்தங்களின் பிரத்தியகூ ஞானமும் இப்படியே யுண்டாகிறதாக அறியத்தக்கது. விர்த்தியும் கட மும் ஒரேயிடத்திலிருப்பதால் கடத்தின் ஞானம் பிரத்தியகூமென்று சொல்லப்படுகிறது. அந்தக்காரணத்தின் விர்த்தி கடாகாரமாகி ஆனால் கடத்துடன் சம்பந்தப்படாமல் விர்த்தி உள்ளேயே இருக்கும்போது, உ ண்டாகும் கடத்தின் ஞானம் பரோகூ ஞானமென்று சொல்லப்படும். (இது கட) மென்பது அபரோகூ ஞானத்திலுதாரம். (கடமிருக்கிறது) அல் லது (அந்தக்கடமிருக்கிறது) என்பது பரோகூ ஞானத்திலுதாரம். ஸ்மிரு தி ஞானமும் பரோகூ ஞானமாகவே யிருந்தாலும் அது ஸம்ஸ்கார ஜன் யமாயிருக்கிறது. அனுமிதி முதலிய பரோகூ ஞானம் பிரமாண ஜன்ய மாயிருக்கிறது. பிரமாணப்பிரசங்கம் நேரிட்டபடியால் பிரமாணங்களை

---

47. சுரோத்திரேந்திரியம் சப்தத்தைப் பிரத்தியகூமாயறியும்போது அந்தக்காரணத்தின் ஆபாஸ சகித விர்த்தி சுரோத்திரமூலமாக வெளியேசென்று சப்தாகாரத்துக்கு ச்சமானமான ஆகாரத்தை யடைகிறது. விர்த்திபாகம் சப்த த்தின் ஆவரணத்தை நீக்குகிறது. ஆபாஸபாகம் சப்தத்தை ப்பிரகாசிப் பிக்கிற து. (2) தவக்கிந்திரியத்தால் ஸ்பரிசகுணமும் அதற்காசிரயமான கடாதிகளும் பிரத்தியகூமாகும்போது விர்த்தி சரீரமாகிற கோளகத்தை விட்டு வெளியே போ கிறதில்லை. ஆனால் சரீரமாகிற கோளகத்துடன் சம்பந்த ப்பட்ட கடாதிவிஷ யங்களையும் அவைகளையாசிரயித்த கடிணாதி ரூபஸ்பரிச குணத்தையும் சரீர ரூபக் கோளகத்திலேயே இருக்கிற ஆபாஸசகித அந்தக்காணவிர்த்தி விஷயமாக்குகிற து. விர்த்தி கடாதி விஷயம் ஸ்பரிசம் இவைகளின் ஆவரணத்தைப்போக்குகிற து. சிதாபாஸன் இவைகளைப் பிரகாசிப்பிக்கிறது. (3) ரசனேந்திரியத்தால் வி ஷயம் பிரத்தியகூமாகும்போதும் விர்த்தி ஜிஹ்வையாகிற கோளகத்தை விட்டு வெளியே போகிறதில்லை ஆனால் நாக்குடன் பதார்த்தம் சம்பந்தப்படும் போது நாக்கின் நுனியிலிருக்கிற ரஸனேந்திரியத்திலுள்ள ஆபாஸ சகித விர்த்தி பதார் த்தத்தையறிகிறது. விர்த்திரஸத்தின் ஆவரணத்தைநீக்குகிறது. சிதாபாஸன் மதுரம்முதலிய ரஸங்களைப்பிரகாசிப்பிக்கிறது. (4) கிராணேந்திரியத்தால் கந்த ம் பிரத்தியகூமாகும்போது மூக்காகிறகோளகத்துடன் புஷ்பாதிகளின் கந்தம் சம்பந்தப்படும்போது மூக்கின் நுனியிலிருக்கிற கிராணேந்திரியத்திலுள்ள ஸாபா ஸ அந்தக்காரணவிர்த்தி கந்தத்தை கிரகிக்கிறது விர்த்தி பாகம் கந்தத்தின் ஆவ ரணத்தை நீக்குகின்றது. சிதாபாஸன் கந்தத்தைப்பிரகாசிப்பிக்கிற்து. இவ்வி தமாக இந்திரியங்களுக்குப்பிரத்தியகூஞானமுண்டாகின்றது.

னிரூபணஞ்செய்கிறேன். சார்வாக[48] மதஸ்தர்கள் பிரத்தியகூப் பிரமாணத்தை மட்டும் அங்கீகரிக்கிறார்கள்.

211. அனுமானப்பிரமாணம்:- கணாத சுகதமதங்களை யனுசரிக்கிறவர்கள் அனுமானப்பிரமாணத்தையும் அங்கீகரிக்கிறார்கள், எனெனில் ஒரு பிரத்தியகூப் பிரமாணத்தை மட்டும் அங்கீகாரஞ் செய்யும் பக்ஷத்தில் திருப்தியை இச்சிக்கும புருஷனுக்கும் போஜனத்தில் பிரவிர்த்தி யுண்டாகமாட்டாது. ஏனெனில் சாப்பிடாத பதார்த்த விஷயத்தில் திருப்தி யுண்டாகுமென்பதற்குப் பிரத்தியகூப் பிரமானத்தால் யாதொரு பிரத்தியக்ஷஞானமுமில்லை. ஆகையால் சாப்பிட்ட போஜனத்திலுண்டான திருப்தியின் அனுபவம் சாப்பிடாத போஜனத்தில அனுமானத்தாலுண்டாகுமென அறியப்பட்டுத திருப்தியானபொருட்டுப்போஜனத்தில் பிரவிர்த்தி யுண்டாகிறது. ஆகையால் அனுமானப்பிரமானத்தையும் அங்கீகாரஞ்செய்யவேண்டியது யுக்தமே. இவ்விதமாக கணாத, சுகத மதானுசாரிகள் பிரத்தியக்ஷ அனுமானப் பிரமாணங்களை யங்கீகரிக்கிறார்கள்.

212. சப்தப்பிரமாணம்:— சாங்கிய சாஸ்திரத்தின் கர்த்தாவாகிய கபிலர் மதத்தை யனுசரித்தவர்கள் மூன்றுவதான சப்தப்பிரமாணத்தையு மங்கீகரிக்கிறாகள். ஏனெனில், பிரத்தியக்ஷ அனுமானங்களாகிற இரண்டு பிரமாணங்களைமட்டில் அங்கீகரிக்கும் பக்ஷத்தில், அன்னிய தேசத்தில் ஒருவன் தகப்பன் இறந்துபோகிறான், அச்செய்தியை ஒருவன் வந்து சொல்லுகிறான். அப்போது கேட்கிறவனுக்குத் தகப்பன் இறந்து போய்விட்டானென்கிற நிச்சய முண்டாகக்கூடாது. ஏனென்னில், தேசாந்தரத்திலிருந்த தகப்பனுடைய சாவின ஞானம் பிரத்தியக்ஷப்பிரமாணத்தாலும் அனுமானப்பிரமாணத்தாலும் முனைடாகவில்லை. ஆகையால் கபிலர் மதத்தை யனுசரித்தவர்கள் பிரத்தியக்ஷம் அனுமானம், சப்தம், இம்மூன்று பிரமாணங்களையும் அங்கீகரிக்கிறார்கள்.

---

48. ஐந்து பூதங்களையும் அங்கீகரித்துத் தேகத்தை யாத்மா வென்று சொல்லுகிறவன் லோகாயதன். ஆகாசமன்றியில் மற்றநான்கு பூதங்களைமட்டும் அங்கீகரித்து தத்தேகத்தை யாத்மா வென்று சொல்லுகிறவன் சார்வாகன்.

49. வைசேஷிகசாஸ்திரத்தின் கர்த்தா இவருக்கு கணாதன் என்றும் பெயர்.

50. பௌத்த மதம்.

213. **உபமானப்பிரமாணம்**:— நியாய சாஸ்திர கர்த்தாவான கௌதமருடைய மதத்தை யனுசரித்தவர்கள் உபமான மென்னும் நான்காம் பிரமாணத்தையுமங்கீகரிக்கிறார்கள். ஏனெனில் பிரத்தியக்ஷாதி மூன்று பிரமாணங்களை மட்டில் அங்கீகரிக்கும் பக்ஷத்தில், ஒருவன் கவயமென்னுமிருகத்தைப் பார்த்ததில்லை. காட்டுமனிதனிடத்தினின்றும் கவயமிருகம் பசுமாடுபோன்றது, எனக்கேள்விப்படுகிறான். அவன் காட்டுக்குப்போய்க்கவயத்தைப் பார்க்கும்போது காட்டுமனிதன் சொன்னது ஞாபகத்தில் வருகிறது. இந்தஸ்மரணைக்குப் பின் இது கவயமென்று அவனுக்கு ஞானமுண்டாகிறது. உபமானப்பிரமாணத்தையங்கீகரிக்காவிட்டால் இந்த ஞானமுண்டாகக்கூடாது. ஆகையால் இப்பேர்ப்பட்ட விலக்ஷண ஞானத்துக்கு ஹேதுவான உபமானப் பிரமாணத்தையுமங்கீகரிக்கிறார்கள்.

214. **அர்த்தாபத்திப்பிரமாணம்**:— பூர்வமீமாம்சகர்களில் ஒருவரான பட்டருடைய சிஷ்யரான **பிரபாகரர்** அர்த்தாபத்தியென்னும் ஐந்தாம் பிரமாணத்தையு மங்கீகரிக்கிறார். பகலில் போஜனஞ் செய்யாத புருஷன் ஸ்தூலமாயிருப்பதைக் கண்டு, இவன் இரவில் சாப்பிடுகிறான் என்கிற ஞானமுண்டாகிறது. ஏனெனில் இராச்சாப்பாடுமில்லாமல் பகலிலும் சாப்பாடில்லாதபக்ஷத்தில் ஸ்தூலதை யுண்டாகமாட்டாது. ஆகையால் இராச்சாப்பாடே ஸ்தூலதையைக்கொடுக்கிறது. இந்தக்காரியமான ஸ்தூலதைக்கு இராபோஜனம் காரணமாயிருக்கிறது இக்காரணமான இராபோஜனத்தின் ஞானத்துக்கு ஹேதுவான ஸ்தூலதையின் ஞானம் அர்த்தாபத்திப் பிரமாண மெனப்படுகிறது.

215. **அனுபலப்திப்பிரமாணம்**:— பூர்வமீமாம்சகரான பட்டர் அனுபலப்தியென்னும் ஆறுவது பிரமாணத்தையுமங்கீகரிக்கிறார். வேதாந்த சாஸ்திரத்திலும் ஆறு பிரமாணங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. அனுபலப்திப்பிரமாணத்தின் பிரயோஜன மென்னவெனில் வீடு முதலியவைகளில் கடாதிகளில்லை யென்கிற ஞானமுண்டாகிறது. அப்போது எந்தப் பதார்த்தம் பிரதீதியாக வில்லையோ அதின் அபாவஞானமுண்டாகிறது. இந்த அப்பிரதீதிக்கு அனுபலப்தி யென்று பெயர். கடம் விளங்காததினால் கடமில்லையென்பது நிச்சயமாகிறது. இப்படிப் பதார்த்தத்தின் அபாவநிச்சயத்துக்குக் காரணமான அப்பிரதீதிக்கு அனுபலப்திப் பிரமாணமென்று பெயர்.

216. **பிரமாலட்சணம்**:— (216—219) பிரமாஞானத்துக்கு எதுகரணமோ (218) அது பிரமாணமென்று சொல்லப்படும். ஸ்மிருதிக்கு வேறுயும் பாதிக்கப்படாத பொருளை விஷயமாக்குகிறதாயு

மிருக்கிற ஞானம் பிரமா வென்னப்படும். ஸ்மிருதி ஞானம் பிரமா வன்று. எனெனில் பிரமா ஞானம் பிரமாதாவை யாசிரயித்தது. ஸ்மிருதி பிரமாதாவை யாசிரயித்ததன்று; ஆனல் சாகூஷியை யாசிரயித்ததாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. பிராந்தி ஞானமும் சமுசயமும் சாகூஷியையுயாசிரயித்திருக்கிறதாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஸ்மிருதி பிராந்தி சமுசயம் இம்மூன்றும் ஆபாஸஸஹித அவித்தையின் விர்த்திரூபங்களாயிருக்கின்றன; அந்தக்காரணத்தின் விர்த்திரூபங்களாயிருக்கவில்லை. ஆகையால் அவைகள் பிரமாதாவின் ஆசிரதங்களன்று; ஆனல் சாகூஷியின் ஆசிரதங்களே. எது அந்தக்காரணத்தின் விர்த்திரூப ஞானமோ அது பிரமாதாவின் ஆசிரதமாகும். அதுவே பிரமாவென்று சொல்லப்படும். ஸ்மிருதிஞானம் அந்தக்காரணத்தின் விர்த்தியாகாதகால் பிரமாதாவை யாசிரயிக்கவில்லை; பிரமாவுமன்று. ஆகையால் பிரமாலக்ஷணையில் ஸ்மிருதியை விலக்கவேண்டும். பாதிக்கப்படாத பொருளை விஷயமாக்கும் ஞானம் ஸ்மிருதிஞானமாயுமிருக்கக்கூடும். ஆனல் ஸ்மிருதிஞானம் ஸ்மிருதிக்கு வேறன்று, ஸ்மிருதி ரூபமாகவே இருக்கிறது. ஆகையால் பாதிக்கப்படாத பொருளை விஷ்யமாக்கிக்கொண்டும் ஸ்மிருதிக்கு வேறுயுமிருக்கிற ஞானமே பிரமா[51] வென்று சொல்லப்படும். இதில் யாதொரு தோஷமுமில்லை.

217. வேறு சிலர் ஸ்மிருதிஞானத்தையும் பிரமாரூபமாகப்பாவிக்கிறார்கள். அவர்களுடைய மதத்தின்படி பிரமாலக்ஷணத்தில் ஸ்மிருதி விலக்கப்படவில்லை. ஆனல் பாதிக்கப்படாத பொருளை விஷயமாக்குகிற ஞானம் பிரமாவென்று சொல்லப்படுகிறது. பிராந்திஞானம் பாதிக்கப்பட்டாதபொருளை விஷயமாக்கிவில்லை. ஆனல் பாதிக்கப்படுகிறபொருளை விஷயமாக்குகிறது. ஆகையால் பிரமாவின் லக்ஷணம் பிராந்திஞானத்திற் காணப்படவில்லை. ஸ்மிருதிஞானத்தையும் பிரமாவாகச்சொல்லும் மதத்தில் ஸ்மிருதிஞானம் அந்தக்காரணவிர்த்தியாயிருக்கிறது, அவித்தியாவிர்த்தியாயில்லை. மேலும் சாகூஷியை யாசிரயித்து மில்லை, பிரமாதாவை யாசிரயித்திருக்கிறது. ஏனெனில் அந்தக்காரணவிர்த்தியினுடைய பிரமாதாவேதவிரச்சாகூஷியன்று.

---

51. பிரமாவென்பது யதார்த்த அனுபவம். இந்தப்பிரமாலக்ஷணம் ஸ்மரணையை வேறுபடுத்துகிறது. 217-வதுபிரிவில் பிரமாவென்பது யதார்த்த ஞானம். இந்தப்பிரமாலக்ஷணம் ஸ்மரணையையும் அடக்கிக்கொண்டிருக்கிறது

218. சித்தாந்தம்:— இவ்விதமாகவ்ஸ்மிருதி ஞானம் அந்தக்காரணவிர்த்தியாயிருப்பதால் பிரமா ரூபமாயிருக்கிறது; வேறு சிலர் முதத்தில் அவித்தியாவிர்த்தியாயிருப்பதால் பிரமாரூபமாகவில்லை. பிராங்கி ஞானமும் சமூசயஞானமும் எல்லாருடைய மதத்திலும் அவித்தியாவிர்த்தியாகவும் சாக்ஷியை யாசிரயித்துக் கொண்டுமிருக்கின்றன. இதில் யாதொரு விவாதமுமில்லை. விசாரித்துப் பார்க்குமளவில் ஸ்மிருதிஞானமும் அவித்தியா விர்த்தியாகவும் சாக்ஷியை யாசிரயித்துக் கொண்டுமிருக்கிறது, பிரமா ரூபமாகவில்லை. ஏனெனில் வேதாந்த சம்பிரதாயத்தை யறிந்தவர்கள் பிரமாஞானத்தை ஆறு விதமாக வகுத்திருக்கிறார்கள்: அவைகளில் ஸ்மிருதிஞான ஞ்சேராமையால் அது பிரமாவன்று. மதுசூதனஸ்வாமிகள் ஸ்மிருதிஞானம் சாக்ஷியை யாசிரயித்திருக்கிறதாகவே சொல்லியிருக்கிறார்கள.

219. ஷட்பிரமாக்கள்:— இப்போது அவ்வாறு விதப்பிரமாக்களைச் சொல்லுகிறேன். அவைகளாவன:— (1) பிரத்தியக்ஷப்பிரமா 2) அனுமிதிப் பிரமா (3) உபமிதிப் பிரமா (4) சாப்தீப்பிரமா (5) அர்த்தாபத்திப்பிரமா (6) அபாவப்பிரமா.

220. காரணலக்ஷணம்:— முன் சொன்ன பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்கள் இவைகளுக்கு முறையே காரணங்களாயிருக்கின்றன. பிரத்தியக்ஷப்பிரமாவின் காரணம் பிரத்தியக்ஷ ப்பிரமாணமென்று சொல்லப்படும். அசாதாரணகாரணமே காரணமென்னப்படும். சகல காரியங்களுக்கும் காரணமாயிருப்பது சாதாரண காரணமென்னப்படும். தர்மாதர்ம

---

52. பிரமைரூபமான அனுபவத்தின் சம்ஸகாரம்தாலுண்டாகும் ஸ்மிருதி பாதிக்கப்படும் அர்த்தத்தை விஷயமாக்குவதால் யதார்த்தமில்லாமலிருக்கிறது. ஆனதால் அது அவித்தியாவிர்த்தியாயிருக்கின்றது, அந்தக்காரணவிர்த்தியாயில்லை; மேலும் சாக்ஷியை ஆசிரயித்துக்கொண்டிருக்கிறது பிரமாதியையாசிரயிக்கில்லை. யதார்த்த அனுபவத்தின் ஸம்ஸ்காரத்தாலுண்டாகும் ஸ்மிருதிஞானம் பாதிக்கப்படாத அர்த்தத்தை விஷயமாக்குகிறதினால் அதுயதார்த்த ஞானமாயிருக்கிறது, மேலும் அந்தக்காரண விர்த்தியாயிருக்கிறது, அவித்தியா விர்த்தியாகவில்லை. பிரமாவை யாசிரயிக்கிறது; சாக்ஷியை யாசிரயிக்க வில்லை. ஆதலால் முன்னோர்கள் ஸ்மிருதி ஞானத்தைப் பிரமாவாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆகையால் இரண்டுவித ஸ்மிருதிகளும் அப்பிரமாக்களே. இவைகளின் அயதார்த்தஸ்மிருதி அயதார்த்த அப்பிரமா. யதார்த்த ஸ்மிருதி யதார்த்த அப்பிரமா

ங்கள் சகல காரியங்களுக்குங் காரணமாகையால் சாதாரண காரணங்களா கின்றன. சகலகாரியங்களுக்கும் காரணமாகாமல் சிலகாரியங்களுக்கு மட் டில் காரணமாயிருப்பது அசாதாரண காரணமென்னப்படும். தண்ட ம் மகலகாரியங்களுக்குங்காரணமாயில்லை, ஆனல் கடாதிகாரிய விசேஷ ங்களுக்குக்காரணமாயிருக்கிறது. ஆனதால் தண்டம் கடத்துக்கு அசா தாரண காரண மென்றும் காரணமென்றுஞ் சொல்லப்படுகிறது. இது போல் பிரத்தியகூப் பிரமாவுக்கு ஈசுவரனும் ஈசுவரனுடைய இச்சைமு தலியவைகளும் சாதாரண காரணங்களாயிருக்கின்றன. ஏனெனில் ஈசு வரன்முதலியவை சகல காரியங்களுக்கும் காரணங்களா யிருக்கின்றன. அவைகளன்றியில் யாதொரு காரியமும் முண்டாகிறதில்லை. ஆகையால் ஈ சுவராதிகள் சாதாரண காரணங்களாயிருக்கின்றன. நேத்திரமுதலிய இ ந்திரியங்கள் பிரத்தியகூப்பிரமாவுக்கு அசாதாரண காரணங்களா யிருக்கி ன்றன. ஆகையால் விஷயங்கள் பிரத்தியகூப் பிரமாவின் காரணங்களாம். இவ்விதமாக நேத்திராதி இந்திரியங்கள்ப் பிரத்தியகூப்பிரமாணங் களாக ச்சொல்லப் படுகின்றன.

221. வேதாந்தசித்தாந்தத்தில் இந்திரியத்தை ப்பிரமாஞானத் துக்குக்காரணமாகச் சொல்லுவது சரியன்று. ஏனெனில் சேதனத்தில் நான்கு பேதங்களுண்டு. (1)பிரமாதாசேதனம் (2)பிரமாணசேதனம்(3) பிரமிதி அல்லது பிரமாசேதனம் (4) பிரமேய அல்லது விஷயசேதனம். இவ்விதமாக ப்பிரமா சேதனசம்பந்தமாயிருக்கிறது. அச்சேதனம் நித் தியம். இந்திரியஜன்யமன்று. ஆகையால் இந்திரியம் அதற்குக்காரண மாகிறதில்லை. ஆயினும் சேதனத்தில் பிரமாவியவகாரத்துக்கு காரண மான விர்த்திக்கும் பிரமாவென்று பேயர். அவ்விர்த்திக்கு இந்திரியங்கா ரணமாயிருக்கிறது.

222. பிரமாத்ருசேதன்னம்:— தேகத்தின் மத்தியிலுள்ள அந்தக்காரணத்தால் அவச்சின்னமான சேதனம் பிரமாதா எனப்படும்.

223. பிரமாணசேதனம்:— இந்த அந்தக்காரணம் நேத்தி ராதி இந்திரியங்கள் மூலமாக வெளியே சென்று கடாதிவிஷயங்கள் இரு

---

53. முதலிய சப்தத்தால் ஈசுவரனுடைய ஞானம், ஈசுவரனுடைய பிரயத்தினம், காலம், திக்கு, அதிர்ஷ்டம், பிராகபாவம், பிரதிபக்தகாபா வம், இவ்வேழும் அறியத்தக்கவை.

ப்பிடம் வரையில் நீண்டு கடாதிகளுடன் சேர்ந்து அவைகளின் உருவத்தையடைகிறது. உதாரணம்:— குளத்திலுள்ள ஜலம் மடைவழியாய்ப்புரப்பட்டு வாய்க்கால்வழியாய்ச்சென்று வாய்க்காலுருவமாகி வயலிற் பாய்ந்து வயலாகாரத்தையடைகிறது. இதுபோல அந்தக்கரணமும் இந்திரியமாகிற துவாரத்தின்வழியாய் வெளியேசென்று விஷயரூபமான வயலை யடைகிறது. அப்போது சரீரம்முதல் கடாதிவிஷயம் வரையில் அந்தக்கரணத்தின் யாதொரு நீண்டபரிணமமுண்டாகிறதோ அதற்கு வித்தி ஞானமென்று பெயர். அதினால் அவச்சின்னமான சேதனத்துக்குப்பிரமாணசேதனமென்று பெயர். வித்திஞானரூப அந்தக்கரணபரிணமத்துக்குப்பிரமாணமென்றுபெயர்.

224. பிரமாசேதனம்:— வயலிற் பாய்ந்த ஜலம் வயலாகாரமாகிறதுபோல் கடாதிவிஷயத்தில் வித்திசென்று கடாதிகளின் சமானாகாரத்தை யடைகிறது. இச்சமானாகாரத்தால் அவச்சின்னமான சேதனத்துக்குப்பிரமாசேதனமென்று பெயர்.

225. பிரமேயசேதனம்:— ஞானத்துக்கு விஷயமான கடாதிகளால் அவச்சின்னமான சேதனத்துக்கு விஷயசேதனம் அல்லது பிரமேயசேதனமென்று பெயர். இவைகள் வேதார்த்தமறிந்த ஆசாரியர்களுடைய பரிபாஷைகளாம்.

226. அவச்சேதவாதப்படிப்பிரமாத்ருலக்ஷணம்:— அவச்சேதவாதிகளின் மதத்தில் அந்தக்கரண விசிஷ்டசேதனம் **பிரமாதா**. அதுவே கர்த்தா, போக்தா. அந்தக்கரண உபஹித சேதனம் சாக்ஷி. ஓரே அந்தக்கரணம் பிரமாதாவுக்கு விசேஷணமாயும் சாக்ஷிக்கு உபாதியாயுமிருக்கிறது.

விசேஷணலக்ஷணம்:— சொரூபத்தில் எதற்குப்பிரவேசமுண்டோ அந்த வியாவர்த்தக வஸ்துவுக்கு விசேஷணமென்று பெயர். மற்றபதார்த்தங்களினின்றும் வேறுபடுத்தி வஸ்துஸ்வரூபத்தை யறியும்படி எது செய்கிறதோ அது வியாவர்த்தகமென்னப்படும். எது வேறுபடுத்தப்பட்டு அறியப்படுகிறதோ அது வியாவர்த்தியமென்று சொல்லப்படும். நீலகடமென்பதில் கடத்துக்கு நீலவர்ணம் விசேஷணம். எனெனி

---

54. காரியத்துடன் சம்பந்தம் பிரவேசமென்னப்படும்.

ல் நீலகடத்தில் நீலவர்ணம் பிரவேசித்திருக்கிறது. மேலும் மஞ்சள் வெ ள்ளைமுதலிய வர்ணங்களுடன் கூடிய கடங்களினின்றும் வேறுபடுத்தி இந்நீலகடத்தை யறியும்படிச்செய்கிறது. ஆகையால் நீலவர்ணம் வியாவர்த்தகம், அதனால் விசேஷணமாகிறது. கடம் பரிச்சேத்தியமாயிருக்கிறது. எனெனில், மஞ்சள் முதலிய வர்ணங்களுடன் கூடின கடங்களினின்றும் வேறுபடுத்தப்பட்டு இந்நீலகடம் அறியப்படுகிறது. வேறுபடுத்தப்பட்டு அறியப்படும் பதார்த்தம் பரிச்சேத்திய மென்றும் வியாவர்த்தியமென்றும் விசேஷ்யமென்றும் சொல்லப்படும். தண்டபுருஷனென்பதிலும் புருஷனுக்குத்தண்டம் விசேஷணமாயிருக்கிறது. இவ்விதமாகப்பிரமாதாவின் ஸ்வரூபத்தில் அந்தக்கரணஞ்சேர்வதால் பிரமாதாவுக்கு அந்தக்கரணம் விசேஷணமாகிறது.

உபாதிலக்ஷணம்:— பிரமேயசேதனத்தினின்றும் பின்னப்படுத்திப் பிரமாதாவின் ஸ்வரூபத்தையறியும்படிச் செய்கிறதினால் அந்தக்கரணம் வியாவர்த்தகமாயிருக்கிறது. எந்தவஸ்து, ஸ்வரூபத்தில் பிரவேசியாமல் வியாவர்த்தகமாயிருக்கிறதோ அது உபாதியென்று சொல்லப்படும். உதாரணம்:— நையாயிக மதத்தில் கர்ண கோளகத்தால் வளைபட்ட ஆகாசம் சுரோத்திரமென்று சொல்லப்படும். இவ்விடத்தில் கர்ணகோளகம் சுரோத்திரத்துக்கு உபாதியாயிருக்கிறது. ஏனெனில், சுரோத்திரஸ்வரூபத்திற் கர்ணகோளகம் பிரவேசியாமல் வெளியிலுள்ள ஆகாசத்தினின்றும் வேறுபடுத்தி சுரோத்திரத்தை யறியும்படிச்செய்கிறது. ஆகையால் கோளகம் வியாவர்த்தகமாகிறது. கடாகாசத்தில், ஆகாசத்திற்குக்கடம் உபாதியாயிருக்கிறது. ஏனெனில் அவகாசரூபமான ஆகாசஸ்வரூபத்தில் கடம் பிரவேசியாமல் மகாகாசத்தினின்றும் வேறுபடுத்தி கடாகாசத்தை யறியும்படிச்செய்கிறது. ஆகையால் கடம் ஆகாசத்துக்கு உபாதியாயிருக்கிறது. இதுபோல அந்தக்கரணஉபஹித சேதனம் சாக்ஷியென்னுமிடத்தில் அந்தக்கரணம் சாக்ஷிக்குஉபாதியாயிருக்கிறது. ஏனெனில் சாக்ஷிஸ்வரூபத்தில் அந்தக்கரணம் பிரவேசிக்கிறதில்லை. பிரமேயசேதனத்தினின்றும் சாக்ஷியை வேறுபடுத்தி அதையறியும்படி அந்தக்கரணஞ் செய்கிறது. ஆகையால் ஒரே அந்தக்கரணம் சாக்ஷிக்கு உபாதியாயும் பிரமாதாவுக்கு விசேஷணமாயுமிருக்கிறது. இவ்விதமாக அந்தக்கரணஉபஹிதசேதனம் சாக்ஷியாகவும் அந்தக்கரண விசிஷ்டசேதனம் பிரமாதாவாகவுமிருக்கின்றன. உபாதியுடன் கூடியது உபஹிதமென்றும் விசேஷணத்துடன் கூடியது விசிஷ்டமென்றுஞ் சொல்லப்படும். அந்தக்கரணவிசிஷ்டபிரமாதா கர்த்தாபோக்தாவாயும் கர்மியாயும் ஞாநியாயும் சமூசாரியாயும் ஜீவனையும் இருக்கிறன். இது அவச்சேதவாதப்படிப் பிரமாதாவின் லக்ஷணமாம்.

227. ஆபாவலவாதப்படிப் பிரமாதிருலசுஷ்ணம் :— ஆபாஸவாதத்தில் ஆபாஸ்ஸஹித அந்தக்காரணம் ஜீவனுக்கு விசேஷணமாயும் சாக்ஷிக்கு உபாதியாயுமிருக்கிறது. ஆகையால் ஆபாஸஸஹித அந்தக்காரண விசிஷ்டசேதனமே ஜீவன். ஆபாஸஸஹித அந்தக்காரண உபஹிதசேதனமே சாக்ஷீ.

228. இருவிதவாதங்களின் சாதிரிசியம் பேதம்:— மேற்சொன்ன இருவிதப்பக்ஷங்களிலும் விசேஷணசகிதசேதனம் ஜீவனும் சமூசாரியாயுமிருந்தாலும் விசேஷியபாகமான சேதனத்தினிடத்தில் ஜனனமரணமுதலிய சமூசாரம் சம்பவிக்கிறதில்லை. ஆகையால் விசேஷணமாத்திரத்தில் தான் சமூசாரம் சம்பவிக்கிறது. அதுவே விசிஷ்டசேதனத்தில் பிரதீதியாகிறது. சிலவிடங்களில் விசேஷணத்தின் தர்மங்கள் விசிஷ்டத்திலும் சிலவிடங்களில் விசேஷியதர்மங்கள் விசிஷ்டத்திலும் சிலவிடங்களில் விசேஷண விசேஷியதர்மங்கள் விசிஷ்டத்திலும் தோன்றுகின்றன. உதாரணம்:— (1) தடியால் கடாகாசம் நசிக்கிறது என்னுமிடத்தில் விசேஷணமான கடம் தடியால் நாசமடைகிறது. விசேஷியமான ஆகாசம் நசிக்கிறதில்லை. ஆயினும் விசிஷ்டமான கடாகாசம் நசித்துப்போகிறதாகப் பிரதீதியாகிறது. (2) குண்டலீடாருஷன் தூங்குகிறான் என்னுமிடத்தில் குண்டலம் விசேஷணம் புருஷன் விசேஷியம். விசேஷணமான குண்டலம் தூங்குவதாகச் சொலவது சரியன்று. குண்டல விசிஷ்டன் தூங்குகிறான் என்று விசிஷ்டத்தில் வியவஹாரமுண்டாகிறது. (3) ஆயுதபாணியான புருஷன் யுத்தத்துக்குப் போயிருக்கிறான் என்னுமிடத்தில் விசேஷணமான ஆயுதமும் விசேஷியமான புருஷனும் யுத்தத்துக்குப் போயிருப்பதால் இவ்விரண்டின் தர்மங்களும் விசிஷ்டத்திற் காணப்படுகின்றன. பிரகிருதத்தில் அவச்சேதவாதத்தில் அந்தக்காரணம் விசேஷணமாயும் ஆபாஸவாதத்தில் ஆபாஸசகித அந்தக்காரணம் விசேஷணமாயுமிருக்கின்றன. இரண்டு பக்ஷங்களிலும் சேதனம் விசேஷியம், அதனிடத்தில் ஜன்மாதிசமூசாரஞ் சம்பவிக்கிறதில்லை. ஆனால் விசேஷணமான அந்தக்காரணத்தின் அல்லது ஆபாஸசகித அந்தக்காரணத்தின் தர்மமாகிற ஜன்மாதி சமூசாரம் விசிஷ்டசேதனத்தில் வியவகரிக்கப்படுகிறது. இதுவே ஆபாஸ அவச்சேதவாதங்களின் பேதமாம் வியவகாரம் என்றால் தோற்றமுங்கதனமுமாம்.

229. ஆபாவலவாதத்தின்சிரேஷ்டதை:— ஆபாஸவாதத்தில் அந்தக்காரணம் ஆபாஸஸஹிதமாயும் அவச்சேதவாதத்தில் அந்தக்காரணம் ஆபாஸரகிதமாயும் இருக்கிறது. இவ்விரண்டில் ஆபாஸஸஹிதம்

சிரேஷ்டம். ஏனெனில் **பாஷியக்காரரால்** ஆபாஸவாதம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அவச்சேதவாதத்தில் **வித்தியாரண்யஸ்வாமிகள்** தோஷமுஞ்சொல்லியிருக்கிறார்கள். எப்படியெனில், ஆபாஸாகிதமான அந்தக்காரண அவச்சின்ன சேதனத்தைப்பிரமாதாவாக நிஜைக்கும் பக்ஷத்தில் கடாவச்சின்ன சேதனமும் பிரமாதாவாகக்கூடும். ஏனெனில், எப்படி அந்தக்காரணம் பூதங்களின் காரியமோ அப்படியே கடமும் பூதங்களின் காரியமே. மேலும் எப்படி அந்தக்காரணம் சேதனத்துக்கு அவச்சேதகமோ அதாவது வியாவர்த்தகமோ அப்படிக்கடமும் சைதன்னியத்துக்கும் அவச்சேதகமாயிருக்கிறது. ஆனதால், அந்தக்காரணவிசிஷ்டம்போல் கடவிசிஷ்டத்தையும் பிரமாதாவாகச்சொல்லக்கூடும். அந்தக்காரணத்தில் ஆபாஸனை யங்கீகரிக்கும்பக்ஷத்தில் இந்தத்தோஷம் சம்பவிக்காது. ஏனென்னில் அந்தக்காரணம் பூதங்களின் சத்துவகுணகாரியம், ஆனதால், ஸ்வச்சம். கடாதிகள் பூதங்களின் தமோகுணகாரியம், ஆனதால் ஸ்வச்சமன்று. எது ஸ்வச்சமாயிருக்கிறதோ அதில் ஆபாஸம் அல்லது பிரதிபிம்பம் உண்டாகும். மலினபதார்த்தற்ற பிரதிபிம்பமுண்டாகமாட்டாது. கண்ணாடியும் அதின் மூடியும் மண்ணாலானவையானாலும் கண்ணாடி ஸ்வச்சமாயிருப்பதால் அதில் முகத்தின் பிரதிபிம்பமுண்டாகிறது. மூடி ஸ்வச்சமில்லாததால் அதில் பிரதிபிம்பமுண்டாகிறதில்லை. இதுபோல அந்தக்காரணம் சத்துவகுணகாரியமானதால் ஸ்வச்சமாயிருக்கிறது. அதில் சேதனத்தினாபாசமுண்டாகிறது. சரீரம் கடம் முதலியவை தமோகுணகாரியமானதால் ஸ்வச்சமாயில்லை. அவைகளில் சேதனத்தின் ஆபாஸமுமுண்டாகிறதில்லை.

230. இவ்விதமாக அந்தக்காரணத்தில் இரண்டுவிதப்பிரகாசங்களுள. ஒன்று வியாபகசேதனத்தின் பிரகாசம். மற்றொன்று ஆபாஸத்தின் பிரகாசம். சரீரங் கடம் முதலியவைகளில் வியாபகசேதனத்தின் பிரகாசம் இருக்கிறது, ஆபாஸத்தின் பிரகாசமில்லை. ஆகையால் இருவிதப்பிரகாசங்களோடு கூடிய அந்தக்காரணவிசிஷ்டசேதனமே பிரமாதாவென்று சொல்லப்படுகிறது. ஒரு பிரகாசசகித கடாதிகளுடன் கூடிய சேதனம் பிரமாதாவன்று. யாருடைய மதத்தில் அந்தக்காரணத்தில் ஆபாஸனில்லையோ அவர்கள் மதத்தில் கடாதிகளிற்போல் அந்தக்காரணத்திலும் ஆபாஸத்தின் இரண்டாவது பிரகாசமில்லை. வியாபகசேதனத்தி

ஒருப் பிரகாசம் அந்தக்கரணத்திலிருப்பதுபோல் கடத்திலு மிருக்கிறது. ஆகையால் அந்தக்கரணவிசிஷ்டம்போல் கடவிசிஷ்ட சரீரவிசிஷ்ட சுவர்விசிஷ்ட சேதனத்தையும் பிரமாதாவாகச் சொல்லவேண்டும். இவ்விதமாகக் கடசரீராதிகளைக் காட்டிலும் அந்தக்கரணத்தில் ஒருவிலக்ஷணத்தைக்காணப்படுகிறது. அந்தக்காணம் சத்துவகுணகாரியமானதால் சுத்தமாயிருக்கிறது. ஆகையால் அது சேதனத்தின் ஆபாஸத்தைத் க்ரஹிக்கயோக்கியமாயிருக்கிறது. அந்தியபதார்த்தங்கள் ஸ்வச்சமாயிராமையால் ஆபாஸத்தைக் க்ரஹிக்கயோக்கியமில்லை. ஆபாஸத்தைக் க்ரஹிக்கயோக்கியமான அந்தக்கரணத்துடன் கூடிய சேதனம் பிரமாதாவென்று சொல்லப்படுகிறது. கடசரீராதிகள் ஆபாஸனைக் க்ரஹிக்கயோக்கியமில்லாமையால் அவைகளுடன் கூடின சேதனம் பிரமாதாவன்று. இவ்விதமாக ஆபாஸவாதமே சிரேஷ்டமாயிருக்கிறது. அவச்சேதவாதம சிரேஷ்டமன்று.

231. பிரமாதாமுதலிய சேதனங்களின் ஸ்வரூபம்:—

அந்தக்காணம் ஆபாஸஸஹ்தமாயிருப்பது போல் அந்தக்காணவிர்த்தியும் ஆபாஸஸஹ்தமாகவே யிருக்கிறது. ஆபாஸஸஹ்த விர்த்திவிசிஷ்ட சேதனம்பிரமாண சேதனமென்னப்படும். கடாதிவிஷயாகாரமாகிற அந்தக்காணத்தின் விர்த்தியில் ஆரூடமான சேதனம் பிரமா அல்லது யதார்த்தஞானமென்று சொல்லப்படும். அதற்குச் சாதனமான இந்திரியம் பிரமாணமென்று சொல்லப்படும். ஏனெனில் விஷயாகார விர்த்தியில் ஆரூடமான சேதனம் பிரமா வென்றுசொல்லப்படுகிறது. அப்போது சேதனம் ஸ்வரூபத்தில் நிச்சியமாயிருப்பதால் இந்திரியஜன்யமாயில்லை. ஆனதால் பிரமாசேதனத்துக்கு இந்திரியம் சாதனமன்று. ஆயினும் உபாதியில்லாத சேதனத்தில் பிரமா வியவகார மில்லை. ஆனல் விஷயாகார விர்த்தியுபஹித சேதனத்தில் பிரமா வியவகார முண்டாகிறது. ஆகையால் சேதனத்தினிடத்திற் பிரமா சப்தம் உபயோகிக்கப்படுவதற்கு விஷயாகாரவிர்த்தி உபாதியாயிருக்கிறது. இந்த விஷயாகார விர்த்தி இந்திரியஜன்யமாயிருக்கிறது. இந்திரியம் அதற்கு சாதனமாயிருக்கிறது. பிரமாபாவத்துக்கு உபாதியாகிய விர்த்தி இந்திரியஜன்யமாயிருப்பதால் உபஹிதமான பிரமாவும் இந்திரிய ஜன்யமென்று சொல்லப்படுகிறது. ஆகையால் இந்திரியம் பிரமாவுக்கு சாதனமென்று சொல்லப்படுகிறது. ஆனல் அந்தக்காரணத்தின் சகல பரிணமங்களையும் பிரமா வென்று சொல்லக்கூடாது. சரீரத்துக்குள்ளிருக்கிற அந்தக்காரணம் விஷயமாகிற கடாதிகளுடன் சேரும்போது உண்டாகும் அந்தக்காணத்தின் பரிணமம் பிரமாணமென்றும் விஷயத்துடன் சேர்ந்து விஷயாகாரமாகும் அந்தக்காணத்தின் பரிணமம் பிரமா வென்றுஞ் சொல்லப்படும். சரீரத்துக்குள்ளிருக்கிற அந்தக்காணமுதல் கடாதிவிஷயம் வரையில் நீண்டிருக்கிற அந்தக்காணத்தின் பரி

ணமே பிரமாணரூபத்தைத் தரிக்கிறது. ஆதலால் பிரமாவுக்கும் பிரமாண ரூப அந்தக்கரண வித்திக்கும் அதிக பேதமில்லை.

232. இவ்விதமாக வெளியிலுள்ள பதார்த்தங்களின் பிரத்திய க்ஷஞானமுண்டாகும்போது அந்தக்கரணவித்தி வெளியேசென்று விஷ யமாகிற கடாதிகளுக்குச்சமானமான ஆகாரத்தைத்தரிக்கிறது. சரீரத் துக்குள்ளிருக்கிற ஆத்மாவின் பிரத்தியக்ஷஞான முண்டாகும்போது அந்தக் கரணவித்தி வெளியே போகாமல் சரீரத்துக்குள்ளேயே ஆத்மாகாரமாகி றது. அந்த வித்தியால் ஆத்மாவை யாசிரயித்த ஆவரணம் நீங்குகிறது. ஆத்மா தன்பிரகாசத்தால் வித்தியில் பிரகாசிக்கிறது. இக்காரணத் தால் ஆத்மா வித்திக்கு விஷயமாகச்சொல்லப்படுகிறது. வித்தியிலுள் ள சிதாபாஸரூபபலத்துக்கு ஆத்மா விஷயமாகிறதில்லை. இந்தப்பிரகா ரமாகச்சாக்ஷியாகிற ஆத்மாஸ்வயம்பிரகாசரூபமாய் விளங்குகிறதென்பது சித்திக்கிறது.

(4) பிர்ம்மத்தின் பிரத்தியக்ஷஞானம் (233—250)

தத்துவதிர்ஷ்டியின்கேள்வி:— (233—244)

233. பிர்ம்மத்தின் அபரோக்ஷஞானத்தால் சகல அவித்தியா சமூகங்களும் நாசமாகின்றன வெனவும் பரோக்ஷஞானத்தால் ஆகாவென வும் முன் (198) சொல்லப்பட்டது. இந்தவிஷயத்தில் நான் சங்கிக்கிற தாவது:— பிர்ம்மத்தின் ஞானம் பிரத்தியக்ஷமாக வுண்டாகமாட்டாது. ஏனெனில், இந்திரியஜன்யஞானம் பிரத்தியக்ஷமாகும். பிர்ம்மத்தின் ஞானம் இந்திரியஜன்யமன்று.

234. ஏனென்றால், நேத்திரேந்திரியத்தால் ரூபவர்ணங்களோ டுகூடிய பதார்த்தங்களின் ஞானமுண்டாகிறது. பிர்ம்மம் இப்படிப்பட் ட பதார்த்தமாக இல்லாதபடியால் நேத்திரேந்திரியத்தால் பிர்ம்மத்தின் ஞானமுண்டாகமாட்டாது. ராமகிர்ஷ்ணதிகளுடைய மனுஷியா காரங்களான மூர்த்திகள் ரூபங்களோடுகூடியிருந்காலும் அந்த மூர்த்திக ள் மாயையாலுண்டுபண்ணப்பட்டு மித்தையாக விருக்கின்றன. அம்மூர் த்திகள் பிர்ம்மமன்று, புராணங்களில் ராமகிர்ஷ்ணதிகளுக்குப்பிர்ம்மரூ பஞ்சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சரீரரூபமூர்த்தியே பிர்ம் மமென்கிற அபிப்பிராயத்தாற் சொன்னதல்ல. ஆனல் அவர்களுடைய சரீரங்களுக்கு அதிஷ்டானமான சேதனம் பிர்ம்மமென்று புராணங்களி ன் அபிப்பிராயம்.

235. ஆக்ஷேபம்:— இதில் ஒரு சங்கை. எல்லாச்சரீரங்க

ளுக்கும் அதிஷ்டானசேதனம் பிர்ம்மம். ஆகையால், அதிஷ்டானசேதன அபிப்பிராயத்தால் ராமகிர்ஷ்ணதிகளுக்குப்பிர்ம்மத்துவம் சொல்லும்பக்ஷத்தில், எல்லாச்சரீரங்களுக்கும் அதிஷ்டானசேதனம் பிர்ம்மமாயிருப்பதால் மனுஷ்ய, பசு, பக்ஷி, முதலிய சகலமும் பிர்ம்மரூபமாகும். அவைகளுக்குச்சமானமாக ராமகிர்ஷ்ணதிகளுமாய்விடுவார்கள். ஆகையால் ராமகிர்ஷ்ணதிகளின் அதிஷ்டானசேதனம் "பிர்ம்மம்" என்கிற அபிப்பிராயத்தால் பிர்ம்மத்துவஞ்சொல்லப்படவில்லை. ஆனால் மற்றஜீவர்களுடைய ரூபத்தைக்காட்டிலும் அவர்களுடைய ரூபம் விசேஷமாயிருப்பதால் அவர்களுடைய சரீரமே பிர்ம்மமென்று நினைக்கத்தக்கது.

236. **சமாதானம்**:— இச்சங்கைசரியன்று. கைகால முதலிய அவயவங்களோடேகூடியதும் ரூபத்தோடுங் கிரியையோடுங் கூடியதுமான சரீரத்துக்கும் அவயவரூபக்கிரியைகளில்லாத பிர்ம்மத்துக்கும் அபேதஞ்சொல்வது சரியன்று. ஆகையால் சரீரம் பாதிக்கப்பட்டுத்தான் பிர்ம்மரூபஞ்சித்திக்கிறதாகச்சொல்லவேண்டும். இப்படி யெல்லாச்சரீரங்களும் பாதிக்கப்பட்டால் எல்லாஜீவர்களும் பிர்ம்மரூபமாவார்களே யென்றால் ராமகிர்ஷ்ணதிகளுக்கும் மற்ற ஜீவர்களுக்கும் அடியிற் கண்ட பேதமிருப்பதால் மற்ற ஜீவர்களெல்லாம் பிர்ம்மரூபமாகார்கள்.

237. **அந்தப்பேதங்களாவன**:— ஜீவர்களுடைய சரீரம் (1) புண்ணியபாபங்களுக்கு ஆதீனமாயும் (2) பூதகாரியமாயுமிருக்கின்றன. (3) ஜீவர்களுக்குத்தேகாதி அனாத்மபதார்த்தவிஷயத்தில் அவித்தியாபலத்தினால் நான் என்னுடையது என்கிற அத்தியாஸமுண்டாகிறது ஆசாரியருடைய உபதேசத்தால் அந்த அத்தியாஸம் நிவிர்த்தியாகிறது ராமகிர்ஷ்ணதிகளுடைய சரீரங்கள் அவர்களுடைய புண்ணியபாபங்களாலுண்டாகவில்லை, பூதகாரியங்களாகவுமில்லை.

238. **புண்ணியபாபாதீனபாவம்**:— எப்படியெனில், சிருஷ்டிக்கு முன் பிராணிகளுடைய கர்மபோகங்களைக்கொடுக்க ஈசுவரன் சித்தமாயிருந்தபோது ஆப்தகாமரான அவரிடத்திலும் பிராணிகளுடைய கர்மானுசாரமாக "நான் ஜகத்தை யுண்டுபண்ணுகிறேன்" என்கிற சங்கல்பமுண்டாகிறது. அச்சங்கல்பத்தினின்றும் ஜகத்தினுற்பத்திரூபச்சிருஷ்டியுண்டாகிறது. அப்படியே சிருஷ்டிக்குப்பிறகும் "நான் ஜகத்தைப்பாலனம் பண்ணுகிறேன்" என்கிற சங்கற்பம் ஈசுவரனுக்குண்டாகிறது. அந்தச்சங்கற்பத்தால் ஜகத்து ரக்ஷிக்கப்படுகிறது. கர்மானுசாரமான சுகதுக்கத்தின் சம்பந்தம் பாலனமென்று சொல்லப்படும். அப்பாலன சங்கற்பத்துக்கு மத்தியில் உபாஸகபுருஷர்களுடைய உபாஸனை

பலத்தினல் "ராமகிர்ஷ்ணதிநாமசகித மூர்த்திகள் எல்லாருக்கும் பிரதிஷ்டியாகட்டும" என்கிற சங்கற்பம் ஈசுவரனுக்குண்டாகிறது. அந்த ஈசுவரசங்கற்பத்தினல் விசேஷநாமரூபங்களில்லாத ஈசுவரனிடத்தில் ராமகிருஷ்ணதிநாமங்களையும் பீதாம்பரத்தையுந்தரித்துகொண்டும், சுந்தரமானரூபங்களைத்தரித்துக்கொண்டுமிருக்கிற விக்கிரகங்களுற்பத்தியாகின்றன. அவ்விக்கிரகங்கள் கர்மாதீனமன்று. ராமகிருஷ்ணதி விக்கிரகங்களால் சாதுக்களுக்குந்துஷ்டர்களுக்கும் முறையே சுகமும் துக்கமும் உண்டாகின்றன. எது எவனுடைய சுகதுக்கங்களுக்கு ஏதுவாயிருக்கிறதோ அது அவனுடைய புண்ணியபாபங்களாலுண்டாகிறது. ஆகையால், அது புண்ணியபாபங்களுக்கு ஆதீனமாகச்சொல்லப்படுகிறது. இவ்விதமாக அவதாரபுருஷர்களுடைய சரீரங்கள் சாதுக்களுடைய சுகத்துக்கு ஹேதுவாகிறதினல் சாதுக்களுடைய புண்ணியத்தினலும் அசுராதி துஷ்டர்களுடைய துக்கத்துக்கு ஹேதுவாகிறதினல் அவர்களுடைய பாபத்தினலுமுண்டாகின்றன. ஆகையால் அவதாரபுருஷர்களின் சரீரங்கள் புண்ணியபாபங்களுக்கு ஆதீனமன்று, என்று சொல்வது சரியன்று. ஆயினும், ஜீவனுல் பூர்வசரீரத்திற் செய்யப்பட்ட புண்ணியபாபகர்மத்தின் பலன் உத்தரசரீரத்தில் அந்த ஜீவனுக்குச்சுக துக்கமாகி விடுகிறது. அப்போது சரீராபிமானத்துடன் கூடிய ஜீவனுடைய முன் சரீரத்தின் புண்ணியபாபத்துக்கு ஆதீனமாகப்பிந்தியசரீரஞ்சொல்லப்படுகிறது. அதுபோல் ராமகிருஷ்ணதிகளின் சரீரங்கள் சாதுதுஷ்டர்களின் புண்ணியபாபங்களுக்கு ஆதீனமாயிருந்தாலும் இவர்களுடைய சுகதுக்கங்களுக்கு ஹேதுவானாலும் ராமகிருஷ்ணதிகளின் புண்ணியபாபங்களால் அவர்களுடைய சரீரங்களுண்டாகவில்லை. அவர்களுடைய சரீரங்களால் அவர்களுக்குச்சுகதுக்கபோகமுண்டாகிறதில்லை. ஆகையால் ராமகிருஷ்ணதிகளின் சரீரங்கள் அவர்களுடைய புண்ணியபாபங்களுக்கு ஆதீனமன்று.

239. பூதகாரியாபாவம்:—அப்படியே ராமகிருஷ்ணதிகளுடைய சரீரங்களும் பூதபரிணாமங்களன்று. ஆனல் சேதனத்தையாகிரயித்த மாயாபரிணாமங்களாம். பஞ்சீகிருத பூதங்களுடைய பரிணாமமாக இருக்கும்பக்ஷத்தில் கிருஷ்ணனுடையசரீரம் கயிற்றினற் கட்டப்பட்டும் கட்டுக்குட்படவில்லையென்று சாஸ்திரத்திற் சொன்னது அசங்கதமாய்விடும். பஞ்சபூதங்களாற் செய்யப்பட்ட சித்தயோகியின் சரீரத்திலும் கட்டுகள் பலிக்காவிட்டாலும், யோகிசரீரம் முதலில் கட்டுக்குட்படுகிறது. மறுபடி யோகாப்பியாசனுபபுருஷார்த்தத்தால் அக்கட்டுகள் பலிக்கிறதில்லை. கிருஷ்ணதிகளுடைய சரீரங்கள் யோகிசரீரம்போல் யோகாப்பியாசத்தால் கட்டுகளுக்குட்படாதவையல்ல. ஆனல் அவர்களின் சரீ

ரங்கள் ஈபாவத்திலேயே கட்டுக்குட்படாதவை. ஆகையால் அவர்களு டைய சரீரங்கள் பூதபரிணமங்களல்ல, மேலும் மாண்டேக்கிய வுபனிஷத் தின் ஸ்ரீசங்கராசாரியருடைய பாஷியத்தின் மூகையில் ராமாதிகளுடை ய சரீரங்கள் பூதபரிணமங்கள் என்று ஆனந்தகிரி சொல்லியிருக்கிறு ர். அப்படிச்சொன்னது ஸ்தூலதிர்ஷ்டிக்கு மற்றச்சரீரங்களுக்குச்சமா னமாக இவர்களுடைய சரீரங்களுங்காணப்படுகின்றன, என்கிற அபிப்பி ராயத்தால்தான். எனெனில், கீதாபாஷியத்தில் பாஷியக்காரர் சொ ல்லியிருக்கிறதாவது, ஜீவர்களுக்கனுக்கிரகம் பண்ணுவதற்காகச்சரீரத்தை த்தரிக்கிறது போல் மாயையின் பலத்தினல் பரமாத்மாவானவர் கிருஷ்ணை ருபமாக விளங்குகிறார். அவர் ஜன்மாதிகளில்லாதவர். அவருக்கு வசு தேவர் மூலமாகத்தேவகியிடத்தில் ஜன்மம் மாயையாற் பிரதியாகிறது. இவ்விதமாகப்பாஷியக்காரர் கிருஷ்ணசரீரத்தை மாயாகாரியமாகச்சொல் லியிருக்கிறார். ஆகையால் பூதங்களினின்றும் அவதாரசரீரம் உண்டா

55

---

55. ஈசுவரனுடைய அவதார விஷயத்தில் சாதாரணமான அபிப்பிராய மென்ன வெனில் ஈசுவரன் சரீரத்தில் பிரவேசித்த இராம கிருஷ்ணதி நாமங் களைத்தரித்தார் என்பதாம். இதில் சிலர் வேறு விதமாய் அபிப்பிராயப்படுகி றார்கள். எப்படி யெனில். எங்கும் வியாபித்தும் நித்தியமாயும் பிரளய கால த்திலும் மன்வந்திரங்களிலும் எக்காலத்திலும் அசங்கமாயு மிருப்பது பரப்பிர ம்மம். இதற்கு யாதொரு கிரியையும் ஏற்படவில்லை. மன்வந்திரத்தின் ஆரம்ப த்தில் பிரம்மத்தினிடத்தில் நின்றும் ஒரு அம்சம் வெளிப்படுகிறது. இதற்கு ப்பெயர் ஈசுவரன், பிரத்தியகாத்மா சப்தப்பிரம்மம். இது சைதன்னிய ஸ்வரூ பம். இப்போது ஒவ்வொரு மனுவிய சரீரத்திலுங்காணப்படுகிற சைதன்னியா ம்சம் இந்த ஈசுவரனுகிற சூரியனுடைய கிரணமே. இந்த அம்சம் மூலஸ்தான மாகிய ஈசுவரனுடன் சேருவதே முக்தி யெனப்படும். அவதார விஷயத்தில் சைதன்னியாம்சத்துடன் கூடிய சரீரமும் ஈசுவரனும் சம்பந்தப்படவேண்டிய து. இச்சம்பந்தம் ஈசுவரன் தன் அம்சத்துடன் சேருவதால் உண்டாகக்கூடும் அல்லது வியஷ்டி சைதன்னியாம்சம் அந்தக்கரண சுத்திபலத்தால் ஈசுவரனுட ன் சேருவதால் உண்டாகக்கூடும். இரண்டாவது பக்ஷத்தில் ஜீவன்முக்தர்கள் தங்களுடைய பிரயத்தனத்தால் ஈசுவரனுடன் ஐக்கியப்டாவதால் அவர்கள் எல் லாரும் அவதார புருஷர்களாக வேண்டும். ஆனல் அவதாரங்கள் பத்துத்தா னென்று சாஸ்திரத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் ஜீவன் முக்தர்களெல் லாரும் அவதாரங்களன்று. ஆகையால் ஈச்வரன் சரீரத்திலுள்ள சைதன்னி யாம்சத்துடன் சேருவதே அவதாரமென்று சொல்ல வேண்டியது. இப் படிச்சேரவேண்டியதற்குக்காரணம் ஈசுவரனுக்கே தெரியும். தான் சுவீரிக த்தசரீரம் மூலமாக தன் காரியத்தை அவர் நிறைவேற்றுகிறார். ஈசுவரன் சரீரத்

கவில்லை. ஆனால் அந்தச்சரீரத்தின் உபாதானகாரணம் சாகூடாத்துமா யையே.

240. உபதேசம் அனவசியம்:—மற்றஜீவர்களுக்குத் தேகாதிகளிடத்தில் நான் என்கிற பிராந்தி யிருக்கிறது. ருமகிர்ஷ்ணதிகளுக்கு அப்படி யில்லை. ஏனெனில் ஜீவனுடைய வுபாதி மனை சத்துவகுணத்தோடு கூடிய அவித்தையாம். ருமகிர்ஷ்ணதிகளுடைய வுபாதி சுத்த சத்துவ குணத்தோடு கூடிய மாயையாம். ஆகையால் ஜீவனுக்கு அவித்தையாலுண்டான பிராந்தியும் ருமகிர்ஷ்ணதிகளுக்கு மாயையாலுண்டான சர்வஞ்ஞதையுமிருக்கின்றன: ஜீவனுக்கு அஞ்ஞானத்தாற் செய்யப்பட்ட

திலிருக்கிறவறையில் சரீரம் மூலமாகச் செய்யப்படுங் காரியமெல்லாம் ஈசுவரனுடையதே தவிர சாதாரண சைதன்னியத்தினதன்று. கோறின காரியம் முடிந்த பிறகு ஈசுவரின் சரீரத்தை விட்டுதன் ஸ்தானத்திற்குப்போய் விடுகிறார். இதுவே அவதார இரகஸியம். அவதாரத்தை இவ்விதமாய் அறியாதபக்ஷத்தில் மகாபாரதத்திற் சொல்லிய இரண்டுவிஷயங்கள் விருத்தமாய் விளங்கும். எப்படியெனில், பாரதத்தில் லோகபாலசபையை வர்ணிக்குமிடத்தில்யமுனுடைய சபையில் மற்ற அரசர்களுடன் தசரதருமனுமிருந்ததாக நாரதர் சொல்லியிருக்கிறார். இராமாவதாரம்மேற்சொல்லியபடி ஈசுவரன், சைதன்னியாம்சம், சரீரம் இம்மூன்றும் சேராமல் ஈசுவரனும் சரீரமும் சேர்ந்ததாக இருக்கும் பக்ஷத்தில் இராமாவதாரம் முடிந்த பிறகு ஈசுவரன் தன் ஸ்தானத்திற்குபோய்விட்டபடியால் யமனுடைய சபையில் இராமனிருக்க வேதுவில்லை. ஆகையால் இதர ஜனங்களைப்போலவே இராமனும் ஜனித்தாரென்றும், சிலகாரணங்களால் அவருடைய சரீரம் ஈசுவரனுக்கு உபயோகப்பட்ட தென்றும், ஈசுவரன் பிரிந்துபோன பிறகுமற்ற அரசர்களைப்போலவே இராமனும் இருந்துவிட்டாரென்றும் அறியவேண்டியது. மேலும், பாரதத்தில் மௌசலாபர்வதத்தில் கிருஷ்ணனுடைய மரணத்தைப் பற்றிச் சொல்லுமிடத்தில் வியாசர் சொல்வதாவது:— கிருஷ்ணன் சுவர்க்கத்துக்குப்போய்விட்டார். அவிடத்திலுள்ள சகல தேவதைகளும் மரியாதை செய்தார்கள். பிறகு அங்கிருந்து நாராயணன் (ஈசுவரனுக்கே பிறதிநாமம்) தன் லோகத்துக்குப்போய்விட்டார். தர்மராஜன் சுவர்க்கத்துக்குப்போனபோதும் அவ்விடத்தில் கிருஷ்ணனைக்கண்டார். இவ்விரண்டு வசனங்களையும் (அதாவது நாராயணன்போனதையும் கிருஷ்ணனிருந்ததையும்) எவ்விதமாய் சமரசப்படுத்தி யறியக்கூடும். மகாவிஷ்ணுவே ஒரு பிரயோஜனத்தின் (துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனத்தின்) பொருட்டு சிலகாலம் கிருஷ்ணன் என்னும்புருஷன் மூலமாக வியவகரித்தார் என்று நாம் அறியாதவரையில் மேற்சொல்லிய வசனங்களின் விருத்தங்கள் நீங்கமாட்டா. ஆகையால் அந்தக்கரண சுத்தியாலும் இருஜு யோகபலத்தாலும் புரிபக்குவமடைந்தபுருஷனுடன் ஈசுவரன் சம்பந்தப்படுவதே அவதார இரகஸியம்.

ஆவரணமும் பிராந்திஞாசத்தின் பொருட்டு ஆசாரியர்மூலமாக மகாவாக்கிய உபதேசத்தால் உண்டாகும் ஞானபேக்ஷையுமிருக்கின்றன. அப்படி ராமகிருஷ்ணாதிகளுக்கு ஆவரணமும் பிராந்தியுமில்லாதபடியால் உபதேசத்தாலுண்டாகக் கூடிய ஞானபேக்ஷையில்லை. ஜீவனுக்கு அந்தக்கரணவிர்த்திரூபஞானம்போல் ஈசுவரனுக்கு மாயாவிர்த்திரூப ஆத்மஞானம் உபதேசாதிகளன்றியிலுமுண்டாகிறது. ஆனல் அந்த ஞானத்தால் யாதொரு பிரயோஜனமும் ஈசுவரனுக்குச்சித்திக்கிறதில்லை. ஏனெனில் ஜீவனுக்குக்கடாதிகளின் ஞானத்தால் ஆவரணம் நீங்கி விஷயமாகிற கடாதிகளின் பிரகாசமுண்டாகிறது. மேலும் ஜீவனுக்கு "நான் பிர்ம்மம்" என்னும் ஆத்மஞானமுண்டாகுமிடத்தில் ஞானத்துக்கு விஷயமான ஆத்மாவின் ஆவரணம் ஞானத்தால் நீங்குகிறது. ஆத்மாவாகிற விஷயம் ஸ்வயம் பிரகாசமாயிருக்கிறது. ஆகையால் ஆத்மஞானத்தால் பிர்ம்மமாகிற விஷயம் பிரகாசிக்கிறதில்லை. அப்படியே ஈசுவரனுடைய மாயாவிர்த்திரூபமான "நான் பிர்ம்மம்" என்கிற ஞானத்துக்கு விஷயமான ஈசுவரனுடைய ஆத்மா ஆவரணரகிதமாயும் ஸ்வயம்பிரகாசமாயுமிருக்கிறது. ஆகையால் ஆவரணநாசமும் விஷயப்பிரகாசமும் ஈசுவரஞானத்துக்குப்பிரயோஜனமன்று. ஜீவன் முக்தவித்துவானுக்கு, ஆவரணமில்லாத ஆத்மாவை விஷயமாக்குகிற அந்தக்காணத்தின் "நான் பிர்ம்மம்" என்கிற விர்த்தியானது ஆவரணபங்காதிப்பிரயோஜனமன்றியில் இருக்கிற்துபோல், ஈசுவரனுக்கும் ஆவரணபங்காதிப்பிரயோஜனமன்றியிலேயே மாயாவிர்த்திரூபமான "நான் பிர்ம்மம்" என்கிற ஞானம் உபதேசாதிகளன்றியிலுண்டாகிறது.

241. முடிவு:— இவ்விதமாக ராமகிருஷ்ணாதிகளுக்கு ஜீவர்களைக்காட்டிலும் விலக்ஷணமான ஈசுவரத்தன்மையிருக்கிறது. அப்போதும் அவர்களுடைய சரீரம் மாயையாலுண்டானதால் பிர்ம்மமன்று, மித்தை. மாயையிலுண்டுபண்ணப்பட்ட அவதாரசரீரம் கைகால் முதலிய அவயவசகிதமாயும் ரூபசகிதமாயும் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் அந்தச்சரீரம் நேத்திரேந்திரியத்துக்கு விஷயமாகிறது. நேத்திரேந்திரியம் பிர்ம்மத்தை விஷயமாக்குகிறதில்லை.

242. அப்படியே துவக்கிந்திரியமும் ஸ்பரிசத்தையும் ஸ்பரிசத்துக்கு ஆசிரயமான பதார்த்தத்தையும் விஷயமாக்குகிறது. பிர்ம்மம் ஸ்பரிசத்துக்காசிரயமன்று. ஸ்பரிசமுமன்று. ஆகையால் பிர்ம்மம் துவக்கிந்திரியத்துக்கு விஷயமாகிறதில்லை.

243. ரஸனேந்திரியத்தால் ரஸஞானம் கிராணேந்திரியத்தால்

கந்தஞானம் சுரோத்திரத்தால் சப்தஞானம் உண்டாகின்றன. ரஸ, கந்த, சப்தங்களைகாட்டிலும் பிரம்மம் விலக்ஷணமாயிருப்பதால் ரஸனாதி இந்திரியங்களால் பிரம்மத்தின் ஞானமுண்டாகிறதில்லை.

244. கர்மேந்திரியம் ஞானத்துக்குச்சாதனமன்று. ஆனல் அது வசனாதிக்கிரியைகளுக்குச் சாதனமாயிருக்கிறது. ஆகையால் கர்மேந்திரியங்களால் யாதொரு ஞானமுமுண்டாகிறதில்லை. இவ்விதமாக எந்த இந்திரியத்தாலும் பிரம்மத்தின் ஞானமுண்டாகிறதில்லை. இந்திரியத்தினாலுண்டாகும் ஞானம் பிரத்தியக்ஷமென்றும் அபரோக்ஷமென்றுஞ்சொல்லப்படுகிறது. இவ்விதமாகப்பிரம்மத்தின் அபரோக்ஷஞான முண்டாகிறதில்லை. ஆனல் சப்தத்தால் பிரம்மஞானமுண்டாகிறது. சப்தத்தாலுண்டாகும் ஞானம் பரோக்ஷமே. ஆகையால் பிரம்மத்தின் ஞானமும் பரோக்ஷமாகவேயிருக்கிறது.

245. குருஉத்தரம்:— (245—250) இந்திரியசம்பந்தமன்றியில் பிரத்தியக்ஷஞான முண்டாகமாட்டாதென்கிறது நியமமில்லை. ஏனெனில் சுகதுக்கங்களின் ஞானம் எந்த இந்திரியத்தினாலுமுண்டாகிறதில்லை. சுகதுக்கங்களின் ஞானமும் பிரத்தியக்ஷமாயிருக்கிறது. ஆகையால் இந்திரியசம்பந்தத்தாலுண்டாகும் ஞானமே பிரத்தியக்ஷஞானமாகுமென்பது நியமமில்லை. ஆனல் விஷயதோஷ விர்த்தி சம்பந்தப்பட்டு விர்த்தி விஷயாகாரமாகும்போது பிரத்தியக்ஷஞானமுண்டாகிறதாகச்சொல்லப்படுகி

56

56. விஷயசேதனமும் விர்த்திசேதனமும் அபேதப்படும்போது பிரத்தியக்ஷஞானமுண்டாகிறது. இந்த அபேதம் சிலவிடங்களில் இந்திரியங்கள் மூலமாகவும் சிலவிடங்களில் சப்தத்தினாலும் சிலவிடங்களில் சரீரத்துக்குள்ளேயே யுண்டாகும் விர்த்திமூலமாகவும் உண்டாகும். சேதனத்துக்கு ஸ்வரூபத்திலோ யாதொரு பேதமும் இல்லை. ஆனல் விஷயம் விர்த்தி இவைகளாகிற உபாதிகளால் உண்டாகும் பேதம் இருக்கிறது. இந்த உபாதிகள் வெவ்வேறிடங்களில் இருக்கும் போது சேதனம் பேதப்படுகிறது. விர்த்திவிஷயாகாரமாகும்போது இரண்டு உபாதிகளும் ஓரிடத்திற்சேர்ந்து பிரத்தியக்ஷஞானத்தைக்கொடுக்கின்றன. இந்தப்பிரத்தியக்ஷஞானத்துக்கு அபரோக்ஷஞானமென்றும் சாக்ஷாத்காரமென்றும் பெயர். இந்தப்பிரத்தியக்ஷஞானலக்ஷணம் இந்திரியங்களாலுண்டாகும் பாஹ்ய கடாதிகளின் பிரத்தியக்ஷஞானத்திலும் மகாவாக்கியங்களாலுண்டாகும் பிரம்மத்தின் பிரத்தியக்ஷஞானத்திலும் பாஹ்யநிமித்தங்களன்றியில் உள்ளேயே யுண்டாகும் சுகதுக்கங்களின் பிரத்தியக்ஷஞானத்திலும் மாயையின் விர்த்தியாகிய ஈசுவரஞானத்திலும் அவித்தியா விர்த்தியாகிய ரஜ்ஜு சர்ப்பாதிகளின் ஞானத்திலுங்காணப்படுகின்றது.

கிறது. அப்படிப்பட்ட சம்பந்தம் சிலவிடங்களில் இந்திரியமூலமாகவும் சிலவிடங்களில் சப்தத்திலுமுண்டாகிறது, "நீ தசமன்" என்கிற சப்தத்தால் தசமனுகிற தன்னுடன் அந்தக்காணவிர்த்தி சம்பந்தப்பட்டுத்தச மனுகாரமாகிறது. ஆகையால் சப்த ஜன்யமான தசமனுடைய ஞானமு
57
ம் பிரத்தியக்ஷமாயிருக்கிறது. இதுபோல, பிரமாதாவினிடத்தில் சுக துக்கமுண்டாகும்போது அந்தக்காணத்தின் விர்த்தி சுகாகாரமாயும் துக் காகாரமாயு மிருக்கிறது. அந்தவிர்த்தியுடன் சுக துக்கங்களின் சம்பந் தமுண்டாகிறது. ஆனதால் சுக துக்கங்களின் ஞானம் பிரத்தியக்ஷமென் று சொல்லப்படுகிறது. முன்னுண்டான சுக துக்கங்கள் நஷ்டமான பின் மறுபடியும் அவைகள் ஒருவன் ஞாபகத்துக்கு வரும்போது அந்தக் காணவிர்த்தி சுகாகாரமாயும் துக்காகாரமாயும் ஆகிறது. ஆனல் விர் த்தி சுக துக்கங்களுடன் சம்பந்தப்படுகிறதில்லை. ஆகையால் அந்த ஞா னம் ஸ்மிருதி ரூபமாக இருக்கிறதே தவிர பிரத்தியக்ஷமாயில்லை.

58
246. அந்தக்காரணத்தின் தர்மங்களாகிற சுகதுக்கங்கள் சாக்ஷீ பாஸியங்களாயிருந்தாலும் (60), சுகாகாரமாயும் துக்காகாரமாயுமிரு க்கிற அந்தக்காரணத்தின் விர்த்தி மூலமாகச சாக்ஷீ சுக துக்கங்களைப் பிர காசிப்பிக்கிறது [66]. சாக்ஷீபாஸியபதார்த்தத்தையும் சாக்ஷீ விர்த்தி யபேக்ஷையுடன் பிரகாசிப்பிக்கிறது. உதாரணம்:— திளிஞ்சிலில் வெ

---

57. "நான் தசம" னென்கிற தசமனுடைய ஸ்வரூபத்தின் அபரோக்ஷ ஞானம் "நீ தசமன்" என்கிற சப்தப்பிரமாணத்தாலுண்டாகிறது, இந்திரியத் தினலாவது மனதினலாவது உண்டாகிறதில்லை. ஏனெனில் சரீரரூபமானதசம ன் இந்திரியத்தால் அறியும்படியாயிருந்தால் நேத்திரேந்திரியத்துக்குத்தான் வி ஷயமாகவேண்டும். நேத்திரேந்திரியத்தால் சரீரத்தில் தசமனுடைய ஞானமு ண்டாகும்பக்ஷத்தில் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறவனுக்குத் தசமனுடைய ஞா னமுண்டாகக்கூடாது. ஆனல்அவனுக்கும் உண்டாகிறது. ஆகையால் தசமனு டைய ஞானம் நேத்திரேந்திரியத்தாலுண்டாகவில்லை. மனதுக்கு நேரில் பாஹ்ய பதார்த்தங்களையறியமுடியாது. ஆனல் ஆந்தரபதார்த்தங்களையறியமுடியும். நேவதத்தன் யஜ்ஞதத்தன் எனகிறபெயர்கள் சூக்ஷுமத்தோடு கூடிய ஸ்தூலசரீ ரத்துக்கு ஏற்பட்டிருக்கின்றன. நீ நான் என்கிற வியவகாரமும் ஸ்தூலதேகத் தில் காணப்படுகின்றது. இந்த ஸ்தூலதேகத்தின் ஞானம் மனதுக்கு நேரிலுண் டாகவில்லை. இவ்விதமாகத்தசமனுடைய ஞானம் சப்தப்பிரமாணத்தாலுண்டா கிறது. அதற்கு நேத்திரமும் மனதும் சாதகமாயிருக்கின்றன.

58. சுகதுக்கங்கள் புத்தியைச்சேர்ந்தவை, ஆத்மாவைச்சேர்ந்தவை யல்ல. ஏனெனில் புத்தி இருக்கும்போது இவைகளிருக்கின்றன. சுஷுப்தியில் புத்தி இல்லை, இவைகளும் தோன்றுகிறதில்லை.

ள்ளி சாக்ஷீபாஸியமாயிருக்கிறது. இவ்விடத்தில் அவித்தியாவிர்த்தி மூலமாகச் சாக்ஷீ வெள்ளியைப்பிரகாசிப்பிக்கிறது. ஆனல் சுகதுக்கங்கள் பிரகாசிப்பதற்கு அந்தக்கரண விர்த்தி சாக்ஷிக்கு உதவியாயிருக்கிறது. மித்தையான வெள்ளி முதலியவை பிரகாசிப்பதற்கு அவித்தியாவிர்த்தி சாக்ஷிக்கு உதவியாயிருக்கிறது. இவ்விதமாகச்சாக்ஷீபாஸிய பதார்த்தத்தின் ஞானத்திலும் விர்த்தி வேண்டியதாயிருக்கிறது. இந்த விர்த்தி இந்திரியாதி வெளி சாதனங்களாலுண்டாகும்போது இதன் விஷயம் சாக்ஷீபாஸியமல்லவென்று சொல்லப்படுகிறது. சுகதுக்கங்களை விஷயமாக்குகிற விர்த்திக்கு வெளியிலுள்ள இந்திரியாதிகள் எதுக்களாகிறதில்லை. ஆனல் சுகாதிகளுண்டாகும்போது வேறு சாதனங்களின் அபேக்ஷையின்றியில் அந்தக்கரணவிர்த்தி சுகதுக்காகாரங்களாக ஆகின்றது. அவ்விர்த்தியிலாரூடமான சாக்ஷீ சுகதுக்கங்களைப்பிரகாசிப்பிக்கிறது. ஆனதால் சுகதுக்கங்கள் சாக்ஷீபாஸியமென்று சொல்லப்படுகின்றன. கடாதிகளுடன் அந்தக்கரணவிர்த்தியின் சம்பந்தம் நேந்திராதி இந்திரியங்களாலுண்டாகிறது. ஆகையால் கடாதிகள் சாக்ஷீபாஸியமல்ல.

247. அந்தக்கரணவிர்த்தி பிரம்மாகாரமாகும்போது விர்த்தி வெளியிற்போகாமல் சரீரத்துக்குள்ளேயே யிருக்கிறது. அந்த விர்த்தியுடன் பிரம்மம் சம்பந்தப்படுகிறது. அதினல் பிரம்மஞானமும் சுகதுக்கங்களின் ஞானம்போல பிரத்தியக்ஷரூபமாயிருக்கிறது. ஆனல் சுகாகார துக்காகார விர்த்திகளில் வெளிச்சாதனங்களின் அபேக்ஷையில்லை. ஆனதால் சுகதுக்கங்கள் சாக்ஷீபாஸியமாயிருக்கின்றன. பிரம்மாகாரமான அந்தக்கரணவிர்த்தியில ருருமூலமாகக் கேட்கப்பட்ட வேதவாசனத்தின் சுரோத்திரத்துடன் சம்பந்தம பாஹிய சாத

---

59. நேத்திரத்துக்கும் சூரியனுக்கும் பேதமுண்டு. கண்மறைபட்டால் பிரம்மாண்டத்திலுள்ள சூரியனுடைய பிரகாசம் பார்க்கப்படுகிறதில்லை. மறைவு நீங்கினல் கண்ணிலுள்ள அந்தக்கரணவிர்த்தியால் சூரியனுடைய பிரகாசம் காணப்படுகிறது. இதுபோல் சாக்ஷியாத்மாவுக்கும் பிரம்மத்துக்கும் பேதமில்லை. அந்தக்கரணத்திலுள்ள அஞ்ஞானமாகிற ஆவரணத்தினல் மறைவுண்டாகும்போது எங்கும் பரிபூர்ணமாயிருக்கும் பிரம்மம் பிரத்தியக்ஷமாய் விளங்குகிறதில்லை. விர்த்தி பிரம்மாகாரமாகும்போது பிரம்மம் தன் பிரகாசத்தினல் விளங்குவதாகத்தெரிகிறது.

னமாகச்சொல்லக்கூடும். ஆகையால் பிர்ம்மம் சாகூஷீபாஸியமன்று. இவ்விதமாக விஷயத்துடன் விர்த்தி சம்பந்தப்படும்போது பிரத்தியகூஷஞான முண்டாகிறதாய்ச்சொல்லப்படுகிறது. நான் பிர்ம்மமென்கிற விர்த்திக்கு விஷயமாகிற பிர்ம்மத்துடன் அவ்விர்த்தி சம்பந்தப்படுவதால் பிர்ம்மத்தின் ஞானம் பிரத்தியகூஷமாயிருக்கிறது.

248. புகையைப்பார்க்கிறதிலால் நெருப்பின் ஞான முண்டாகும்போது புகையின் ஞானம் பிரத்தியகூஷமாயிருகிறது. நெருப்பின் ஞானம் பிரத்தியகூஷமாயில்லை. எனெனில் நேத்திரமூலமாக அந்தக் காணவிர்த்தி புகையுடன் சம்பந்தப்படுகிறது. ஆகையால் புகையின் ஞானம் பிரத்தியகூஷமென்று சொல்லப்படுகிறது. அனுமானத்தினால் அக்காணவிர்த்தி சரீரத்துக்குள் நெருப்பின் ஆகாரத்தைத் தரிக்கிறது. ஆலால் நெருப்புடன் விர்த்தி சம்பந்தப்படுகிறதில்லை. ஆகையால் நெருப்பின்ஞானம் பிரத்தியகூஷமாயில்லை.

249. இவ்விதமாக விர்த்தியுடன் விஷயயம் சம்பந்தப்படும்போது பிரத்தியகூஷஞானமுண்டாவதாகச் சொல்லப்படுகிறது. விர்த்தியுடன் விஷயம் சம்பந்தப்படாதபோது விஷயம் தூரத்திலாவது சென்றகாலத்திலாவது வருங்காலத்திலாவது இருக்கக்கூடும். அல்லது அனுமானத்திலாவது சப்தத்திலாவது விஷயமாகாவிர்த்தி சரீரத்துக்குள்உண்டாகக்கூடும். அப்போதுண்டாகும் ஞானம் பரோகூஷமென்று சொல்லப்படுகிறது. இந்திரியஜன்னியஞானமே பிரத்தியகூஷமாகு மென்பது நியமமில்லை. சுகதுக்கங்களின் ஞானம் இந்திரியஜன்யமாகாவிட்டாலும் பிரத்தியகூஷமாயிருக்கிறதுபோல் தசமபுருஷனுடைய ஞானம் சப்தஜன்யமாயிருந்தும் பிரத்தியகூஷமாயிருக்கிறது. இவ்விதமாகக்குரு மூலமாக சிரவணம் பண்ணி மகாவாக்கியரூப வேதசப்தத்தினால் உண்டாகிற பிர்ம்மஞானமும் பிரத்தியகூஷமாகவே யிருக்கிறது.

250 குருவினிடத்தில் இப்பேர்ப்பட்ட உபதேசத்தைக் கேட்டுப் புத்திமானை தத்துவதிர்ஷ்டி தன்னுத்மாவைப்பிர்ம்மரூபமாக அறிந்து பேதப்பிரமையைப்போக்கிணன். ஆவரணம் நீங்கின அந்தக்காணவிர்த்தி "நான் பிர்ம்மம்" என்கிறதாய்ப் பரிணமிக்கிறது. இதை யன்புள்ள குருவே நான் இப்போதுஅறிந்தேன்.

உத்தமாதிகாரியின் உபதேசநிரூபணமென்னும் நான்காவது தரங்கம் முற்றிற்று.

---

60. எவனுடைய அந்தக்கரணம் அத்தியந்தம் சுத்தமாயிருக்கிறதோ எவனுக்கு மகாவாக்கியரூப சப்தத்தால் திடஞானமுண்டாகிறதோ அப்படி உண்டானபிறகு சமூசயாதிகளை நிவிர்த்திக்க சிரவணாதிகள் வேண்டியதில்லையோ அவன் உத்தமாதிகாரி. எவன் அந்தக்கரணம் அத்தியந்தம் சுத்தமாயில்லையோ ஆனல் கொஞ்சம் மலவிக்ஷேபதோஷங்களுடன் கூடியிருக்கிறதோ அவன் மத்தியம அல்லது கனிஷ்டாதிகாரி. மகாவாக்கியரூப சப்தத்தால் அபரோக்ஷஞானமுண்டானபிறகும் சமூசயாதிகளை நிவிர்த்திக்க இவன் சிரவணாதிகளைச்செய்ய வேண்டியதாக இருக்கிறது.

விசாரசாகரம்.

5-வது தரங்கம்.

மத்தியமாதிகாரி உபதேசநிரூபணம்.

வேதம்குருவியாவஹாரிக

சத்தைகள் (251—282)

251. **அதிருஷ்டி-யின்கேள்வி:—** குருமுகமாகக்கேட்கப் பட்ட வேதவாக்கியத்தால் அத்துவைதபிரம்மத்தின் சாக்ஷாத்கார ஞான முண்டாகிறதென்று முந்திய தரங்கத்தில் 249-வது பிரிவில் சொல்லப் பட்டது. இதைக்கேட்டு அதிருஷ்டி யென்னும் 2-வது சிஷ்யன் சங்கித்து தாவது:— வேதம் குரு இவைகள் சத்தியமானால் அத்துவைதத்திற்கு ஹானியுண்டாகி, துவைதம் சித்தியாகும். சங்காமதம் அசுத்தமெனக்கண்டு மத்துவாதிப்பிரபுத்தர்கள் அதைத்தியாகம் பண்ணுவார்கள். வேதம் குரு இவைகள் அசத்தியமானால் சமுசாரதுக்கம் நிவிர்த்தியாகமாட்டாது, புருஷார்த்தமுங்கிடைக்கமாட்டாது. மித்தையான கானல் ஜலத்தால் தாகசமனமாகமாட்டாதுபோலும். இவ்விதமாக இரண்டுவிதங்களினாலும் அத்துவைதஞானம் உண்டாகமாட்டாது. சுவாமின், இந்தச் சங்கை யெனக்குண்டாயிருக்கிறது. இதைத்தேவரீர் தயவுசெய்து நிவிர்த்திக்கவேண்டும்.

குருஉத்தரம் (252—273)

பிரமாண அப்பிரமாணமதங்கள் (252—254)

252. **வியாவஹாரசனம்:—** சிஷ்யனுடைய வார்த்தையைக்கேட்டுக் குரு சொல்லுகிறதாவது:— **சங்கரமதமே** பிரமாணம், மற்றவை அப்பிரமாணம். இவைகள் வேதவிருத்தமாயிருக்கின்றன. **வாயு கூர்ம** புராணாதிகளில் **பரீவியாவஸர்** சொல்லியிருப்பதாவது:- **சங்கர**மதமே பிரமாணம். கலிகாலத்தில் வேதார்த்தத்தைப்பலர் பலவிதமாய்க்விரகிப்பார்கள். அப்போது பரமசிவன் சங்கரரூபமாயவதரித்துப்பக்தர்களுடைய ஹிதத்தின் பொருட்டுச்சகலமதங்களையுங்கண்டித்து ஜயினபவுத்த மதங்களை நிர்மூலமாக்கி விடுவார். சூரியப்பிரகாசத்தால் ஜகத்திலுள்ள இருள் நீங்கிச்சகலசிருஷ்டிகளும் அவரவர்களுடைய சொரூபத்துடன் விளங்குவதுபோலவும், சர்வசமுசயங்களும் விபரீதபாவங்களும்

நீங்குவதுபோலவும், வேதார்த்தவிஷயத்திலுள்ள அஞ்ஞானத்தை ஸ்ரீசங்கரவியாக்கியானம் போக்கிசசமூசயபிராந்திகளை நிவர்த்தித்துப் பூர்ணமான யதார்த்த வுபதேசஞ்செய்யும். வேதார்த்தத்தை வேறுவிதமாய்ச்செய்கிற மற்றவாதிகள் மூடர்களே. அவர்கள் வீண்சிரமப்படுகிறார்கள். மத்துவாதிகளுடைய மதம் அப்பிரமாணம். இதை நான் வியாஸவசனத்தால் அறிகிறேன்.

253. **வால்மீகிவசனம்**:— சீஷ.சே., நான் வேறு பிரமாணஞ்சொல்லுகிறேன் கேள். **வால்மீகிரிஷி** யென்னும் ஆதிகவி **வாலிவ்ஷ்ட** மென்னுங்கிரந்தத்திலும் **உத்தராமாயண**த்திலும் அத்வைதமதமே பிரமாணமென்று சொல்லியிருக்கிறார். அத்வைதமதத்தில் பிரதானமான **திருஷ்டிசிருஷ்டிவாத**த்தை அனேக இதிஹாசங்களால் பிரதிபாதித்திருக்கிறார். ஆகையால் வால்மீகியின் வசனப்படிக்கு **மத்வாதி**களுடைய பேதமதம அப்பிரமாணம். **உபநிஷத்துகள் கீதை பிர்ம்மசூத்திரம்** மூன்றுஞ்சேர்ந்து வேதாந்தத்தின் **பிரஸ்தானத்திரய** மென்று சொல்லப்படும். இந்தப்பிரஸ்தானத்திரயத்துக்கு மத்வாதிகள் தங்கள் மதானுசாரப்படி வியாகியானஞ்செய்திருந்தாலும் **வியாஸவசனத்தினால் ஸ்ரீசங்காசாரியா**ருடைய வியாக்கியான மே யதார்த்தம். வால்மீகியினுடைய வசனத்தினாலும் அத்வைதமதமேயே பிரமாணம். பேதவாதம் அப்பிரமாணம. யுக்திகளும் பேதவாதம் விருத்தமாயிருக்கிறது. இது **ஸ்ரீஹர்ஷமிச்ராசாரியா**ருடைய **கண்டனகண்டகண்டனங்களில்** பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. பேதமதத்தைக் கண்டிக்கும் யுக்திகள் கடினமாயிருப்பதால் அவைகளை இவ்விடத்தில் எழுதவில்லை. மேலும் **ஜயின** மதம்போல் ரிஷிமுனிவசனங்களுக்கு விருத்தமான பேதமதத்தை அப்பிரமாணமாய்க்கொண்ட ஆஸ்திகாதிகாரியாகிய உனக்கு அந்தப்பேதமதம் யுக்தியால் கண்டிக்கப்படவேண்டுமென்பது அவசியமில்லை.

254. **வேதவசனம்**:— சீஷனே, பேதமதம் வேதவசனத்துக்கும் விருத்தமென்பதைச்சொல்லுகிறேன் கேள். **கடவல்லியுபநிஷத்தில் யமதர்ம**ராஜா பேதப்பிரதிதி பெருந்துக்கத்தைக்கொடுக்கத்தக்கதென்று சொல்லியிருக்கிறார். ஆகையால் பேதவாதத்தை மனதினின்றொழித்து அத்வைதத்தையே கைக்கொள்ளவேண்டியது. அந்தக் கடவல்லியுபநிஷத்தில் சொல்லியசுருதிகளாவன:—

"ஸெஷாஸ்யேதி ஸம்ஶயமநுஸம்ஶிஷ்டஸ்ஸ்ருஜ்ய। த்விதீயாவெ
ஹயம்ஹவஜி...ஸெஷாஸாவஸெஷஹஜ்ஞாஜி। நஸுவெதயமாவஸுஸொவஸுதெ
வாஸாம்"

இவைகளின் பொருள்:— எவன் பரமாத்மாவினிடத்தில் அனேகத்தைப்பார்க்கிறானே அவன் மிருத்தியுவினல் மிருத்தியுவையடைகிறான். துவைதத்தை மனதிற் கொண்டவனுக்குப்பயமுண்டென வேதஞ்சொல்லுகிறது. நேயத்தியேயங்களைத்தனக்கு வேறாகநினைப்பவன் பசுவுக்கொப்பாவான், என வேதங்கோஷிக்கிறது.

255. பேததிரஸ்காரம்:— சிஷ்னே, ஆகையால் துக்கத்தைக்கொடுக்கிற மத்வாதிகளுடைய வசனங்களைக் கேட்டவுடன் மறக்கவேண்டும். எதுவரையில் துவைதவசனம் உன்னிருதயத்தில் தங்குகிறதோ, அதுவரையில் அத்வைத சாக்ஷாத்காரமுனக்குக்கிடைக்தமாட்டாது. எப்போது துவைதவசனத்தில் ஸ்மராணையுண்டாகிறதோ அப்போது அதின் எதிரிடையாயிருக்கிற அத்வைதசாக்ஷாத்காரத்தின் ஸ்மரணை விட்டுப்போகும். இதை விளக்குகிற ஒருகதையைக்கேள்.

256. பர்ச்சுகதை:— ஓராசனுக்குப் பரீக்ஷு வென்று மோர் முக்கிய மந்திரியிருந்தான். அவன் சகலராச்சிய காரியங்களையும் தன் விசாரணையில் வைத்திருந்தான். இதைக்கண்டு பற்ற உத்தியோகஸ்தர்கள் பொறுமையடைந்தார்கள். ஆனல் பர்ச்சுவினிடத்தில் அரசன் வைத்திருந்த அன்பின் மிகுதியால் அவர்கள் அவனுக்கு யாதொரு தீங்கும் செய்யமுடியவில்லை. இப்படியிருக்கையில் அவர்களெல்லாரு மாலோசித்து ஒரு யுக்திசெய்தார்கள். அதெனனவெனில் அவ்வூரில் பகைவரால் உபத்திரவமுண்டாகும்படிச்செயவிததார்கள். உடனே அரசன் சபைகூட்டிச் சத்துருவைத் துரத்தியடிக்கும்படி முக்கிய உத்தியோகஸ்தர்களுக்குக்கட்டளை யிட்டான். அப்போது அவர்கள் அரசனைப்பார்த்து, ஆண்டவனே, பர்ச்சுவையே தேவீர் எப்போதுங் கொண்டாடுகிறீர்கள். ஆனல் ஆபத்துக்காலத்தில் எங்களை ஏன் அனுப்புகிறீர்கள். இதைக்கேட்டுப் பர்ச்சு, ராஜாவைப் பார்த்து, சுவாமின், அஞ்ஞாபித்தால் இக்கணமே சத்துருக்களை ஜயித்தோட்டி விடுகிறேனென்றன். அப்போது அரசன் உடனே அப்படிச் செய்யுமென்று உத்தரவளித்தனன். பர்ச்சுவும் அவ்வாறே சென்று அச்சத்துருக்களை அடித்துத்துரத்தி அனைவருக்கும் க்ஷேமம் விளைவித்தனன். பர்ச்சுவின் காரிய மிவ்வாறிருக்க, மற்ற உத்தியோகஸ்தர்கள் அரசனிடஞ் சென்று பர்ச்சு யிறந்தான் எனச் சாதித்தார்கள். இவர்கள் பொய்வசனத்தை நம்பி அரசன் பர்ச்சுஸ்தானத்தில் இவர்களில் ஒருவனை நியமித்து அவனுக்குப் பல்லக்குச்சத்திர சாமரங்களைக் கொடுத்தான். இப்புதிய மந்திரி அரசனுக்குப் பர்ச்சு ஞாபகமே சொப்பனத்திலும் வராமலிருக்கும்படி யேற்பாடு பண்ணினன்.

257. பர்ச்சுவின் சந்நியாஸம்:— இவ்வர்த்தமானங்களை

யெல்லாம் பர்ச்சு விசாரித்தறிந்து சந்நியாஸம் பூண்டு தன் மனதில் இவ் வாறு யோஜிக்கிறான்:— அரசனிடம் செல்ல என்னால் இப்போது முடி யாது. ஏனெனில் அரண்மனை வாயிலிற் போனால் அவ்வாயில் காப்போர் என்னை கொல்வார்கள். இதுவரையில் சகல போகங்களையும் அனுப விக்கிறேன். ரோகமில்லாத தேகேந்திரியங்கள் ரமணீயமான வீடு மோகி க்கத்தக்க ஸ்திரீ முதலியவைகளை யுடைத்தாயிருக்கிறேன.

258. **ஸ்திரீஸ்துதி:**— சமுத்திரமானது கங்கையை விடா தது போல் காமியான நான் ஸ்திரீயினிடத்திற் பிரீதி வைத்திருந்தேன். பிரமன் அவளைத் திலோத்தமைக்குச்சமானமான அழகுடன் சிருஷ்டித தான். அவளை நான் ஒருக்ஷணங்கூடப் பிரிந்திருக்கிறதில்லை.

259. **ஸ்திரீநிந்தனை:**— இப்படிப் போகங்களையும் போக சாதனங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்குமபோதே இவ்வாபத்து சம்பவித்தது. ஜகத்தில் என்னைப்போல் மூடன் யாரிருக்கிறான். இது வரையில் ஸ்திரீயின் அல்குலிலாசக்தனையிருந்தேன். அது மலமூத்தி ரங்களாலெப்போது மீரமாயிருக்கிறது. சரீரத்தினின்றும் இர்தகம்பெ ருகி அதன் வழியாய் வருகிறது. தோலால் மூடப்பட்டும் மாமிசமயமா யும் அசுத்த மயிர்களோடுங்கூடியதுமானதில் அழகென்ன யிருக்கிறது. ஆனல் அவ்விகாரம் அறிவதுக்கத்துக்கிருப்பிடமானது. ஸ்திரீயின் தொ டைகள் எப்போதும் அதிமலினமாயிருந்தும் வாழை மரத்துக்கும் யானை யின் தும்பிக்கைக்கும் சமானமாயச் சொல்லப்படுகின்றன. இருதொ டைகளுக்கும் மத்தியில் மூத்திரச் சாக்கடை யிருக்கிறது. இரத்தம் மா மிசம் தோல் எலும்பு முதலியவை நிறைந்த அவளுடைய பெரிதான நிதம் பத்தில் மலினமான குதமிருக்கிறது. அதில் துர்க்கந்தம்தவிர வேறென் றுமில்லை. இப்படி யிருக்கும் நிதம்பத்தில் ஆசை வைப்பவன் அந்தகன். ஸ்திரீகளின் உதடுகளினின்றும் உமிழ்நீர் வருகிறது. சுத்தாசுத்தவிவேக மில்லாதவன் அவளைப்பார்த்து மதர்த்து அவளிடத்திற் கொஞ்சமும் வெ றுப்பின்றி அவள்முகத்தில் முத்தமிடுகிறான். அவள் அதிசுந்தரலாவ ண்ணியமுள்ளவளென்று நினைக்கிறான். இப்போது நான் நன்றாய் வி சாரித்து இவைகளை யெல்லா மொழிப்பேன்.

260. **பர்ச்சுவின்வைராக்கியம்:**— போஜனத்துக்குபயோ கமான நானவிதமான பக்ஷணங்களையும் மற்றப்பதார்த்தங்களையும் இது வரையில் நாக்குச்சுவைதிருப்தும் இன்னும் திருப்தியடையவில்லை. ஆ கையால் வீணைப் இனியதைப்போஷிக்கமாட்டேன். காட்டிலுள்ள கந்த மூலங்களையுண்டுப்பசிதீர்ப்பேன். ஒருவஸ்துக்குமுப்படமாட்டேன். சூன்ய யே வீடு, வனமே தோட்டம், தரையே படுக்கை, கையே தலையணை, நிர்

மலஜலங்குடிக்கக் கையே பாத்திரம். இப்படியிருக்க என் ராஜசேவை செய்யவேண்டும். இவ்விதமாக ஏகாந்தத்தில் ஆலோசித்துப் பார்ச்சு பரமானந்தத்தையடைந்தான். ஏகாந்தமன்றியில், சமுத்திரம் வரையில் பூமி கிடைத்தாலும் பரமானந்தங்கிடைக்கமாட்டாது.

261 தைத்திரீயவுபநிஷத்தின்கருத்து:—பூமியின் ராச்சியாதிபத்தியம் ரோகமற்ற யௌவனம் திடகாத்திரம் வித்தியாதிசப்த குணங்கள் முதலியவை ஒருவனுக்கிருந்தாலும் மனுஷியசுகத்துக்கு மூடிவுண்டு. மானிடக்கந்தர்வர்[1] களென்று சொல்லப்பட்டவர்கள் ராஜாக்களைக்காட்டிலும் ஏழுமடங்குள்ளசுகத்தை யடைகிறார்கள். தேவகந்தர்வர்கள்[2] இவர்களைவிட நூறுமடங்கு சுகமுள்ளவர்கள். இவர்களைவிட பிதிர்க்கள்[3] நூறுமடங்கான சுகமனுபவிப்பவர்கள். பிதிர்க்களைப்பார்க்கிலும் அஜானதேவர்கள்[4] நூறுமடங்குசுகிகள். கர்மதேவர்கள்[5] இவர்களைவிட நூறுமடங்குசுகிகள். முக்கியதேவர்களுடைய[6] சுகம் இவர்களுக்கு நூறுமடங்கதிம். இந்திரன்சுகம் இவர்களிலும் நூறுமடங்கு. சகலதேவகுருவானபிரகஸ்பதியின் சுகம் இந்திரனுக்கும் நூறுமடங்கு. பிரஜாபதியின் சுகம்

1. இந்த கல்பத்தில் மனுஷ்யனாகி புண்ணியவிசேஷத்தால் கந்தர்வபதவியை அடைந்தவன் மனுஷ்யகந்தர்வன்.

2. முன்கல்பத்தில் செய்த புண்ணியத்தால் இந்த கல்பத்தின் ஆதியிலேயே கந்தர்வபாவத்தை அடைந்தவன் தேவகந்தர்வன்.

3. தங்களுடைய லோகங்களில் வெகுகாலம் வரையில் வசிக்கும் அக்னிஷ்வத்த முதலியபிதிர்கள்.

4. கல்பத்தின் ஆதியிலேயே தேவபாவத்தை அடைந்தவர்கள் அஜானதேவர்கள்.

5. இந்தகல்பத்தில் அசுவமேதாதிகர்மங்களைச்செய்து வெகு ஜாக்ரதையாக அடைந்து அஜான தேவர்களால் சேவிக்கப்பட்டிருப்பவர்கள் கர்மதேவர்கள்.

6. யமன், அக்னி, வாயு, சூரியன், சந்திரன், ருத்திரன் முதலிய பிரதான தேவதைகள் முக்கிய தேவர்களாம். சிலர் யமன் முதல் பிரம்மா பரியந்தமுள்ள தேவதைகளையும், சிலர் 8 வசுக்கள், 12 ஆதித்தியர்கள், 11 ருத்திரர்கள் ஆகிய 31 தேவர்களையும் முக்கிய தேவர்களாகச் சொல்லுகிறார்கள்.

குருவுக்குநூறுமடங்கு. பிரம்மத்தின்சுகம் இவருக்கும் நூறுமடங்குள்ளது பிரம்மத்துக்குத் தக்கம்ஒருக்காலுமில்லை. இவ்விதமாகச் சுகத்தின் கிரமம் தைத்தீரிய வுபநிஷத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. ராஜன்முதல் பிரம்மம்வரையிலுள்ள சுகத்தை ஏகாந்தவாசியாயும் இருதயத்திற் காமனை யெரித்தவனுயு மிருக்கிறவன் எப்போதும் அடைவான். ஏகாந்தமே சுகத்தைக் கொடுக்கத்தக்கது. ஸ்திரீ புத்திரன் தனம் இவைகள் துக்கத்தையே கொடுப்பவை.

262 துர்க்குணஸ்திரீயால்வருந்துங்கம்:—எவனுடைய ஸ்திரீ குரூபியாயும் துர்ப்பாஷிணியாயு மிருக்கிறளோ அவன் மனதில் எப்போதும் துக்கமே குடிகொண்டிருக்கும். ஸ்வாமின், இந்த ஸ்திரீ மலமூத்திராதிகள்நிறைந்த பாண்டம். எந்தப் பாவத்தினலோ எனக்கிவள் தண்டனை ரூபமாய் அமைந்திருக்கிறுள். எருமைக்கடாவுக்கு எருமைக்கடாரியும் ஆண்பிசாசுக்குப் பெண்பிசாசும் ஆணெட்டகத்துக்குப் பெண்ணெட்ட கழும் பிரியம். பெண்கழுதையின் சப்தத்தைக்கேட்டு ஆண்கழுதை மோகிக்கிறது. ராத்திரியில் பெண்ணரியின் சப்தத்தைக்கேட்டு ஆண்ணரி ஊளையிடுகிறது. வியபசாராதி யபராதத்தாலாவது வைராக்கியத்தாலாவது ஸ்திரீயைத் தள்ளவேண்டியது. இவளுடைய குரூபமும் துர்ப்பாஷணையும் என்னுடைய பூர்வகர்மானுசாரத்தினல் கிடைத்திருக்கின்றன, இந்தஜன்மத்தில் அவைகள் அபராதங்களாகா. ஆகையால் நிரபராதியாகிய அவளை வைராக்கியமன்றியில் தள்ளுதல் பாவத்துக்கே காரணமாகும். முன்செய்த பாவத்தின் பலன் இவள் ரூபமாகக் கிடைத்திருக்கின்றது. குரூபத்தைப் பார்ப்பதினலும் துர்ப்பாஷணையைக் கேட்பதினலும் புருஷனுக் கெப்போதும் துக்கமே சம்பவிக்கிறது.

263 நபவதியால்நேரிடுங்கேடுதி:—ஸ்திரீயானவள் அழகுள்ளவளாயும் மதுரமான வசனத்துடன்கூடினவளாயு மிருந்தால் குரூபமானஸ்திரீயினும் அதிகதுக்கத்துக்கு ஹேதுவாகிறுள். சுவர்ணம்போல் தோலுடைய ஸ்திரீயிட்டத்தில் பிரியம்வைத்த புருஷனுக்கு தர்மார்த்தமோக்ஷங்களெல்லாம் போய்விடுகின்றன.

264 தனநாசம்:—அவளுடைய இனியவார்த்தைகள் விஷத்தன்மையுள்ளவை. அவளால் கொடுக்கப்படும் உணவுகளை யுண்டு காமாந்தகன் சொப்பனத்திலும் அவளைத்தவிர வேறொன்றையும் பார்க்கிறதில்லை. வீட்டிலாவது வெளியிலாவது அகப்படும் தனம் வஸ்திரம் பூஷணம் முதலியனைத்தெல்லாம் அவளுடைய சரீரவுபயோகத்துக்காகவே சமர்ப்பிக்கப்படுகின்றன. குருதாய்தந்தையர்களின் ஞாபகமேவருகிறதில்லை. பக்தர்கள் ஈசுவரனிடத்தில் பக்தியைச் சமர்ப்பிக்கிறதுபோல் ஸ்திரீயி

னிடத்திற் பாயஸாதிபதார்த்தங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. மூக்கணாங் கயிறுபோட்ட காளை மனுஷனைவிட்டுத் தப்பிப்போகமாட்டாததுபோல் ஸ்திரீயின் வலையிலகப்பட்டவன் அவளைவிட்டுத் தப்பமாட்டான்.

265 தர்மநாசம்:—கூட்டிலடைபட்ட கிளி சுத்தாசுத்தவசனங்களைக் கற்றுக்கொடுத்தபடிச் சொல்வதுபோல் ஸ்திரீ சொல்லிக்கொடுத்தபடி தாய்தந்தையரிடத்திற் பேசுகிறான். ஆண்மயில் பெட்டையின் முன்பாக ஆடியதைச் சந்தோஷப்படுத்துவதுபோல் காமுகன் ஸ்திரீ சொன்னபடியாடி அவளைச்சந்தோஷிப்பிக்கிறான். இருவர்களுடைய மனதிலுங் காமவிகாரமுண்டாகும்போது மிகவுமுன்மத்தர்களாய் அமங்களமான பிரேதம்போன்ற ரூபத்தைத் தரித்து ஆடுகள்போல் அடிக்கடி ஒரு மனதுடன் ரமிக்கிறார்கள். மத்தியபானம் பண்ணினவன் தூர்க்கந்தத்தை யறியாமல் புத்திகெட்டுப் புரளுவதுபோல் ஸ்திரீபுருஷர்கள் காமமதத்தால் விவேகங்கெட்டு அதிமலினசரீரத்தைக் கட்டிக்கொண்டு புரளுகிறார்கள். காமமதம் மனதைப் பிரமிக்கும்படிசெய்வதை யறிந்து காமத்தையென்றவர்கள் இவர்களுடைய செய்கையைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். காமமதத்தால் புருஷனுடைய புத்தி நாசமடைகிறது. "தன்னுடையது பிறருடையது உயர்ந்தது தாழ்ந்தது என ஸ்திரீவித்தியாசந் தெரிகிறதில்லை. காமியானஸ்திரீயும் துக்கத்துக்குட்படுகிறாள். காமவிகாரம் பலப்படும்போது பிராமணஸ்திரீ நீசபுருஷனுடனும் ரமிக்கிறாள். இப்படி ஸ்திரீபுருஷர்கள் காமவிகாரத்தால் அநேகவித அனர்த்தங்களைச்செய்கிறார்கள். காமவிகாரத்தில் தோஷம்பார்க்காதவன் சுந்தரமானஸ்திரீயையடைந்து விஷத்துக்குச் சமானமானதுக்கத்தை யடைகிறான் என்று வெகுமுனிகள் சொல்லியிருக்கிறார்கள்.

266. பித்துநாசம்:— புஜிக்கப்பட்ட நாலுவித பதார்த்தங்களின் ரஸத்தினின்றும் பித்து உற்பத்தியாகிறது. ஜீவன் பித்துக்காதீனமாயிருக்கிறது. பித்து மனதின் துக்கத்தைப்போக்குகிறது. மனது மூர்னப்பட்டால் துக்கம் ஜனிக்கிறது. மனம் இரத்தமிகுதியால் சஞ்சலப்பட்டாலும் பித்துவின் அருமையறிந்து ஸ்திரப்படுகிறது. மறுபடியும் தான் பலிஷ்டனென்றறிந்து பிரஸன்னஞ்சுபகாரியத்திற் பிரவேசிக்கிறான். பித்து ஜாஸ்தியானால் ரூபலாவண்யம் ஜாஸ்திப்படுகிறது. பித்து இல்லாமற்போனால் பிரேதம்போல் சரீரங்காணப்படுகிறது. எவன் பித்து ஒருக்காலும் நாசமடைகிறதில்லையோ அவன் சரீரத்திற்றளர்ச்சியுண்டாகிறதில்லை. பித்து சம்மாகூடினையால் கேசரி முத்தினரையை அப்பியாஸிக்கிறயோகி சிரேஷ்டத்துவமடைகிறான். அஷ்டமாசித்திகளும் அவனுக்குச்சித்திக்கின்றன. ஜகத்தில் மிகவும் உத்தமம்மாயிருக்கிற இத்தப்பித்து

வை ஸ்திரீயானவள் தன் அல்குலில் நிரகித்துக்கொள்ளுகிறாள். யந்திரத்திற் கொடுக்கப்பட்ட கரும்பூலம் பிழியப்பட்டுச் சக்கையாவதுபோல் ஸ்திரீயானவள் புருஷனைத்தன் புஜங்களால் ஆலிங்கனஞ்செய்து அவன் வீரியத்தையபகரித்துத்தன் யோனியில் நிறப்புகிறாள். புருஷன் வீறிய மெல்லாமொழியும் வரையில் இவ்வாறு பிரதிதினஞ்செய்கிறாள். ஸ்திரீ புருஷனுடைய சரீரத்தை யசாரமாக்கிவிடுகிறாள். வாசனையிழந்த பூசக் கையாக எறியப்படுவதுபோல் புருஷன் பிந்துவற்றுப்போனால் ஸ்திரீ யின் கடுஞ்சொற்களாகிற கொள்ளிக்கட்டையாற் சுடப்படுகிறான். யௌவனம், பலம், தனம் மிகுதியாயிருக்கிற புருஷனை ஸ்திரீ யாராதிக்கிறாள். இவை யொழிந்தவுடன் நீயாரென்கிறாள். மூடன் மதுபடியும் அவளிடத்தில் ரமிக்கவிரும்புகிறான். அவன் தொட்டவுடன் அற்ப்பாஷையாய் பேசுகிறாள். கோபத்திறற் சிவந்தகணைணச்சுழற்றுகிறாள். பிறகு புருஷன் சமீபத்திற்போகிறதில்லை. கோடிவச்சிரங்களின் சாரஞ்சேர்ந்தால் எவ்வளவு கடினமாயிருக்குமோ அதைவிட அதிகக்கடினமானது ஸ்திரீ இருதயமென்று ரிஷிகள் சொல்லியிருக்கிறார்கள். அனுகரவுசெய்கிற ஸ்திரீயையும் புருஷன் சாகும்வரையில் கைவிடுகிறதில்லை. சுருதி ஸ்மிருதி புராணேதிகளைப்படித்து அதிபுத்திசாலியானவனையுங்கூட ஸ்திரீ ஸ்வாதீனஞ்செய்துவிடுகிறாள. பழக்கின மிருகம சொன்னபடி யாடுவதுபோல் ஸ்திரீயின் இஷ்டபடி புருஷனடுகிறான. காமத்தில் மூழ்கின பண்டிதனும் யுக்திமுதலியவைகளை மறந்துவிடுகிறான். எப்பொழுதாவது வேதாதிகளின் ஞாபகம்வந்தால் ஸ்திரீயினிடத்தில் வெறுப்பையடைந்து அவளைவிட விரும்பி அவள்கண்ணிற் படாமலிருக்கிறான். அவளிடத்தில் வைராக்கியம்போனவன் மறுபடியும் அவளிடத்தில் பிரியப்படுகிறான். அரசன் சேவகரைக்கட்டளையிடுவதுபோல் ஸ்திரீ புருஷனுக்கு வேலையிடுகிறாள். எவன் ஸ்திரீயின் கண்ணகிற பாணத்தால் அடிபடுகிறானே அவன் பரமார்த்தத்தையடையப்பாத்திரமாகான். தாசிகளும் பரஸ்திரீகளும் மிகவும் நிந்திக்கத்தக்கவர்கள். ஸ்வஸ்திரீயோடாகசாமக்கிரியே, சந்தேகமில்லை. விவேகியானவன் இம்மூவர்களின் சினேகத்தையும் விட்டு விடுகிறான். இவர்களுடன் சினேகஞ்செய்கிற மூடன் நாசத்தையேயடைகிறான். தர்மார்த்தமோக்ஷங்களின் ஸ்திரீ மூழுமையும் நாசஞ்செய்கிறாள். அவன் சகலஅனர்த்தங்களுக்குங்காரணமென்றறிந்து சுகத்தையடையும்பொருட்டு அவளைத்தள்ளத்தக்கது.

267. புத்திரசங்கதுக்கம்:— புத்திரனும் அப்படியே துக்கத்துக்குக்காரணமாகிறான். புத்திரன் இல்லாவிட்டால் இல்லையென்கிற துக்கம் மாத்திரமே. புத்திரன் உண்டானால் கர்ப்பத்தில் துக்கம். ஜீவித்திருப்பதில் அதிகதுக்கம். இறப்பதிலோ மிக்கத்துக்கம். ஸ்திரீ கர்ப்பிணியாகாவிட்டால் ஸ்திரீ புருடர் இருவருக்கும் பெருந்தீங்குமுண்டாகிறது. கர்ப்பமுண்டானால் அது நாசமடையாமலிருக்கவேண்டுமே யென்று விசாரப்படுகிறார்கள். பிறகு பிறப்பது பெண்ணே ஆணே வென்று சிந்திக்கிறார்கள். அரைகுறையான மாஸங்களில் சிசு ஜனிக்காமலிருக்கவேண்டுமே யென்று கவலைப்படுகிறார்கள். ஒன்பதுமாதமானபின் வெகுவருத்தப்பட்டுப்பிரசவிக்கிறாள். நவக்கிரகங்களில் சிலவிருத்தமாயிருப்பதைக்கண்டு தம்பதிகள் அகோராத்திரம் மனம் வருந்துகிறார்கள். சிசு ஸ்தன்னியபானஞ்செய்யாவிட்டால் தாய்தந்தையர்கண்ணீர்விட்டழுகிறார்கள். இவ்விதச்சிந்தையிற் சிலநாட்கழிந்தபின் பல் முளைக்கும்போது வெகு குழந்தைகள் மரணமடைவதைக்கண்டு விசனப்படுகிறார்கள். வியாதியாற் குழந்தை இளைத்துப்போனால் அதன் சவுக்கியத்தின் பொருட்டு பள்ளன் பறையன் சக்கிலியன் துலுக்கன் முதலியவயித்தியர்களையுந்தேடுகிறார்கள். எவர்களை மதிக்கத்தகாதோ அவர்களையும் சினேகிக்கிறார்கள். பைரவாதி யஞ்ஞதேவதைகளைப்பிரார்த்தித்துக்கொள்ளுகிறார்கள். மயானத்தில் பலி கொடுக்கிறார்கள். குழந்தை கழுத்தில் மந்திரங்களெழுதிய தாழ்த்துகளைக்கட்டுகிறார்கள். ஒரே நாராயணனைப்பஜித்தும் கனவிலும் இதரதேவதைகளை ஸ்மரிக்காதவர்களும் குழந்தை நிமித்தம் வியபசாரிபோல் பலதேவதைகளைத்தேடுகிறார்கள். ஊரில் வைசூரிகண்டால் தாய்தந்தையர் தஞ்சிக்கிறார்கள். எண்ணெய்முழுக்கையும் நிறுத்துகிறார்கள். கழுதையைத் தெய்வமெனக் கொண்டாடுகிறார்கள். தாயே உன் வாகனமான கழுதையை ஊரைச்சுற்றிக்கொண்டுவருகிறேன், அதற்குத்தீனிபோடுகிறேன் என்று கட்லையை மடியில் போட்டுக்கொண்டுபோய் கழுதைக்குப்போட்டுப்பிரார்த்திக்கிறார்கள். இவ்விதமாக வெகுவருத்தப்பட்டுக்குழந்தைகளைக்காப்பாற்றுகிறார்கள். குழந்தை டெங்கு வணபின்பு அனேகவுபாயங்கள் தேடியும் ஆயுள் குறைவால் இறந்துபோனால், தாய்தந்தையர் தலையிலடித்துக்கொண்டு தங்களை வெகுதீனர்களாகப்பாவித்து இரவும் பகலுமாழுத்துயராமடைகிறார்கள். ஜன்மம் வியர்த்தமாகிவிட்டதாய் நினைத்துத்திக்காரஞ்செய்கிறார்கள். புத்திரசோகத்தையடைந்தவர்களை இந்தத்துக்கத்தின் தன்மையையறிவார்கள். புத்திரன் பிழைத்துப்பெரியவனானல் அவன் தன் ஸ்திரீயின் சுகத்தையே தேடுகிறான். வெகுபாடுபட்டு வளர்த்த தாய்தந்தையருக்கு வெகுசீக்கிரத்தில் வருத்தமுண்டாகும்படி ஸ்திரீ செய்கிறாள். மாமன் மாமியான் தன்

னை வருத்துவதாக ராத்திரியில் புருஷனைடஞ்சொல்லுகிறாள். சற்புத்திரன் காலையில் பெற்றோரைத்தூரத்திலிருந்து நமஸ்கரித்து அவர்கள் நெருங்கினவும் முகமலர்ச்சியுடன் பார்க்கிறதில்லை. அசற்புத்திரன் காலையில் நாய்நன்னையரைத்துர்ப்பாஷையாய்ப்பேசி வீட்டிலுள்ள பொருளையெடுத்துக்கொண்டு வேறிடத்தில் குடிப்போகிறான். தாயைழைத்து அவர்களுக்கொன்றும் சம்பாதித்துப்போடுகிறதில்லை. இரவும் பகலும் ஸ்திரீயின் போஷணையிலேயே காலஞ்செலுத்துகிறதையும் தங்களை யலக்ஷியஞ்செய்வதையுங்கண்டு பெற்றோர்கள் மிகவும் வருத்தப்படுகிறார்கள். இவ்விதமாகப்புத்திரன் துக்கத்தையே விளைவிப்பவனென்று விசாரிக்குமளவில் நன்றாய் விளங்குகிறது. எவன் புத்திரனால் சுகம்பெறலாமென்று கருதுகிறானே அவன் மூடசிரோமணி.

268. **தனசங்கதுக்கம்**:— ஜாதிகுலதர்மங்களை விட்டுத்தனத்தை விரும்புவோர்கள் வாயில் மண்விழும். தனம், சம்பாதிப்பதிலும் செலவிடுதலிலும் காப்பாற்றுவதிலும் இழந்துபோவதிலும் துக்கத்தையேதருகிறது. தனத்தைச்சேர்க்க இச்சிக்கிறவன் ஜாதிகுலதர்மங்களை விட்டு அனேகதுன்பங்களுக்குட்படவேண்டியிருக்கிறது. அப்படியுட்பட்டும் அதிர்ஷ்டமின்றியில் தனங்கிடைக்கிறதில்லை. கிடைத்தால் அதைக்காப்பாற்றுவதில் விசாரமுண்டாகிறது. செலவிட்டால் குறையுமேயென்கிற விசாரம்வருகிறது. முழுதும் செலவானால் அபாரமான துக்கம். இவ்விதமாகத்தனம் மனதிற்குத்துக்கத்தையே விளைவிக்கிறது. இதையிச்சிப்போன் இகழத்தக்கவனாவான்.

---

7. ஸ்ரீமத்பாகவதத்தில் பதினோராவது ஸ்கந்தத்தில் 23-வது அத்தியாயத்திற் சொல்லியிருக்கிறதாவது:— அர்த்தத்தைச் சம்பாதிப்பதிலும் சம்பாதித்த அர்த்தத்தைக்காப்பாற்றுவதிலும் அதை விர்த்தி செய்வதிலும் அது செலவாகிறதிலும் நாசமாகிறதிலும் அனுபவிக்கப்படுவதிலும் மனுஷனுக்குத் துக்கம் பயம் சிந்தை பிரமை இவைகளுண்டாகின்றன. சம்பாதிக்கிறதிலும் விர்த்திசெய்வதிலும் துக்கமும் காப்பாற்றுவதில் பயமும் செலவிலும் அனுபவிப்பதிலும் சிந்தையும் நாசத்திற் பிரமையு முண்டாகின்றன. அர்த்தத்தை அடையும்பொருட்டு (1) திருட்டு (2) ஹிம்சை (3) பொய் மொழிதல் (4) டம்பம் (5) இச்சை (6) குரோதம் இவ்வாறு அனர்த்தங்களிருக்கின்றன. அடைந்த அர்த்த விஷயத்தில் (1) கர்வம் (2) அபிமானம் (3) ஸ்நேகத்தியாகம் (4) வைரம் (5) அவிசுவாசம் (6) அசூயை (7) ஸ்திரீ (8) மத்தியம் (9) சூதாடல் இம்மூன்றுகளாலுண்டாகுந்துக்கம் இவ்வொன்பது அனர்த்தங்களும் இருக்கின்றன. ஆகையால் ஓர்த்தம் 15 அனர்த்தங்களுக்கு மூலகாரணமாயிருக்கிறது.

269 பர்ச்சுகாட்டுக்குத்தபோதுதல்:—இவ்விதமாக ஸ்திரீ புத்திரன் தனம் இவைகள் துக்ககரமானவை யெனத் தெரிந்து அவைகளில் அபிமானத்தை யொழித்துப் பர்ச்சு தனிமையாகக் காட்டுக்குப்போய் அவ்விடத்தில் சித்தசாந்தியை யடைந்தான்.

270 ராஜாபர்ச்சுவைசந்தித்தல்:—பர்ச்சுஸ்தானத்தில் மந்திரியாய் நியமிக்கப்பட்டவன் இந்த விருத்தாந்தங்களை யெல்லாங்கேள்விப்பட்டுப் பர்ச்சு ஜீவித்திருக்கிறனென்று ராஜா கேள்விப்பட்டாலாவது நேரில் சந்தித்தாலாவது நாமெல்லோரும் பொய்யராய்விடுவோம், அரசன் நம்பான் தண்டிப்பான், என்று புதுமந்திரி மனதில் நினைத்து உத்தியோகஸ்தர்களுடன் ஆலோசித்து ராஜாவிடம் எல்லாரும் போய், பர்ச்சு பிசாசாய்க்காட்டிற் சஞ்சரிப்பதாயும் உடம்பெல்லாம் சாம்பற்பூசிக் கொண்டிருப்பதாயும் அவனைச்சந்தித்துப்பேசுகிறவர்களை யவன் அடிக்கிறதாயும் அவனைக்கண்டவுடன் ஓடுவோர்மட்டும் தப்புகிற்தாயும் தெரியப் படுத்திக்கொண்டனர். இதன் உண்மையை விசாரிக்காமலே அரசன் பர்ச்சு பிசாசாய்விட்டானென்று நிச்சயித்துவிட்டான். பிறகு ராஜா ஒரு நாள் வேட்டையாடக்காட்டுக்குச்சென்றான். பர்வதங்களும் நெருக்கமான விருக்ஷங்களும் சிங்கம் புலி முதலிய துஷ்டமிருகங்களிருக்குமிடத்திற் பிரவேசித்து ஒருமரத்தடியிற் பர்ச்சு தவஞ்செய்வதைக்கண்டு இவன் பிசாசு என்கிற பயத்தினால் அரசன் ஓடினான்.

271. திர்ஷ்டாந்தத்தைதத் தார்ஷ்டாந்தத்திற் பூரித்தல்:— பர்ச்சு இறந்து பிசாசானனென்கிற பொய்வசனத்தை நிசமாக நம்பி தன் கண்ணால் ஜீவித்திருக்கும் பர்ச்சுவைப்பார்த்தும் பிசாசென்கிற நினைவால் அரசன் ஓடினதுபோல் துவைதவாதிகளின் வசனத்தைக்கேட்டு அஞ்ஞானி அதில் விசுவாசம் வைத்து அந்தக்காரணத்தில் பிரம்மம் அத்வைதமென்கிற ஞானமுண்டாவதும் பேதவசனவிசுவாசத்தால் எப்போதும் துக்கத்தையேயடைகிறான். ஒருக்காலும் அவனுக்குப்பிரம்மத்தின் சாக்ஷாத்காரஞானமுண்டாகிறதில்லை. பேதவசனத்தையசத்தியமாக அறிகிறவனுக்குப்பிரம்மஞானம் மகாவாக்கியத்தாலுண்டாகும். சிஷ்யனே, பேதவசனத்தை நீ கேட்பாயானால் அதைப்பொய்யாகவும் நரகசாதகமாகவும் அதைப்பிரதிபாதிக்கப்பட்டவரெல்லாம் பொய்யரென்றும் அவர்கள் ஒருகாலத்திலும் புருஷார்த்தத்தை யடையமாட்டார்களென்றும் அறி. அவர்களிடத்தில் ஒருக்காலத்திலுஞ்சேரக்கூடாது. சேர்ந்தாலும் அவர்களுடைய பேதவசனத்தைக்கேட்கக்கூடாது. கேட்டாலும் கேட்டவுடனே அதைத்தள்ளவேண்டியது. அவ்வசனத்தை மிலேச்சன்வசனமாக நினைக்கவேண்டியது.

272. வேதமும் குருவும் மித்தையானல் சமூசாரதுக்கத்தை யெப்படி நிவிர்த்திக்கக்கூடுமென்று நீ கேட்டகேள்விக்கு (251) உத்தரஞ் சொல்லுகிறேன் கேள். பொய்யானதுக்கம் பொய்யான உபாயத்தால்தான் நிவிர்த்தியாகும். வேதமும் குருவும் பொய்யாயில்லாவிட்டால் பொய்யான ஜகத்தின் துக்கம் நிவிர்த்தியாகமாட்டாது. இதற்கோர்திர்ஷ்டாந்தஞ்சொல்லுகிறேன் கேள். அதினல் சந்தேகங்கள் நிவிர்த்தியாய்விடும். தேவர்களுடைய அரசனான இந்திரன்போல் வெகுபிரதாபமுள்ள அரசன் ஒருவனிருந்தான். அவனிடத்தில் பிமனுக்குச்சமானமான அனேக வீரர்களிருந்துகொண்டு வாயிலில் காத்துவந்தார்கள். அவனுடைய அந்தப்புறத்திலும் உருவின கத்தியுடன் அனேகர் காத்துவந்தார்கள். மேல்மாடியில் சயனிக்கு மறையில் புஷ்பங்கள் பரப்பின மெத்தையில் அரசன் தூங்கிக்கொண்டிருந்தான். ஒரு ஈயும் அவ்விடத்திற் பிரவேசிக்க முடியாதிருக்க, வேறெதுதான் அங்கேபோகக்கூடும். அரசன் அப்போது ஒரு கனவுகண்டான். அதென்னவெனில் ஒரு நரி அவன் காலைப்பிடித்துக்கொண்டது. அதையுதறித்தள்ள அவனல் முடியவில்லை. சகாயத்துக்காகக்கூக்கரலிட்டும் வாயிலில் இருந்தவர்கள் சகாயத்துக்கு வரவில்லை. பிறகு ஒரு தடியை யெடுத்துக்கொண்டு அந்தபடித்தபின் அது ஓடிவிட்டது. கடித்தவிடத்தில் வெகு வலியுண்டாயிற்று. தடிசகாயத்தால் கொண்டிக்கொண்டு ஒரு வைத்தியன்வீட்டுக்குப்போய் ரணத்தையாற்றும்படிக்கு மருந்துகேட்டான். வைத்தியன் தன் கையில் மருந்தில்லையென்றும் பணங்கொடுத்தால் பண்ணிக்கொடுக்கிறதாயுஞ்சொன்னான். இதைக்கேட்டு அரசன் கையில் காசில்லாமையால் பின்வாங்கி வெகுவருத்தத்துடன் திரும்பி மனதில் ஆலோசித்தான்:— நான் தனிகனுயிருந்தால் இந்த வைத்தியன் வீட்டுக்கு ஓடிவருவான். நான் ஏழையென்றும் என்னுற் பிரயோசனமில்லையென்றும் நினைத்து, கைவிடப்பட்ட ரோகியென, என்னைக்கைவிட்டுவிட்டான். ஆனல் அவனிடத்திற் பிசகில்லை. பிரதிபிரயோசனமன்றியில் ஒருவனும் ஒருகாரியமும் செய்யமாட்டான். தாய்தந்தை ஸ்திரீ பிள்ளை பந்துக்களெல்லாம் தங்களுடைய பிரயோசனத்தின்பொருட்டே ஒருவனிடத்தில் அன்புபாராட்டுகிறார்கள். பிரயோஜனமில்லாவிடில் இவர்கள் திரும்பிப்பார்க்கக்கூடமாட்டார்கள். எவன் இல்லாதனை ஏருநொடிக்கூடச்சகிக்கமாட்டார்களோ, எவன் கொஞ்சம் பிரிந்துபோனலும் அதிகதுக்கப்படுகிறார்களோ, அவன் வீட்டுவாயிலில் வந்தவுடன் அவனைக்கட்டிக்கொள்ள எல்லாரும் கூடுகிறார்கள். தரித்ர்ஷ்டத்தினல் அவன் குஷ்டரோகியாகி அவன் விரல்கள் குறைந்துபோய் அவைகளினிருந்து ஜலம் பெருக்கிகொண்டும் சக்கிளால் உபத்திரவப்பட்டுக்கொண்டுமிருந்தால் இவனல் என்னப்பிரயோசனமென்று நினைத்து முன் பிரியமாயிருந்தவர்கள் இப்போது அடா, பாவிப்பயலே, ஏன் இன்னும் ஜீவித்துக்கொண்டிருக்கிறாய், பிராணனை விடு என்று கடிந்து பேசு

கிறார்கள். வாந்தியுச்சிஷ்டம்போல் அவனை வெறுக்கிறார்கள். பிரிய முள்ள ஸ்திரீயானவள் சற்றுவிலகியிருந்துக்கொண்டு முகத்திலுள்ள ரக் கனை யோட்டுகிறாள். இவனை மடியில் வைத்து வளர்த்த தாய்தந்தையர் இவனுக்கு வேண்டியதைக்கொடுத்து விலகிவிடுகிறார்கள். பந்துக்கள் மறைவில் நின்றுகொண்டுபேசுகிறார்கள். இவ்விதமாக, சர்வஜகத்தும் தம்தம் சொந்தப்பிரயோசனதையே நாடுகிறது. சொந்தப்பிரயோசன த்தை நாடாமல் யார்தான் ஒருவனிடத்தில் அன்பு பாராட்டுவார். நான் தனிகனுயில்லாமையால் எனக்கு மருந்து கொடுக்கவில்லை. இப்படி நினை த்துக்கொண்டு போகும்போது அரசன் ஒரு சந்நியாசியைச்சந்திக்கிறான். அவன் ஒரு ஔஷதங் கொடுத்தவுடன் வலி சுத்தமாய் நீங்கிவிடுகிறது. அரசன் நித்திரையினின்று விழித்துக்கொண்டவுடன் கடி, துக்கம், சந்நி யாசி இவைஒன்றையும் காணவில்லை. சீஷனே, இந்தந்திர்ஷ்டாந்தம் உனக்குச்சொன்னேன். இதனல் பொய்யால்தான் பொய் நிவிர்த்தியாகு ம் என்று அறி. ராஜாவுக்குப்பொய்யான துக்கமுண்டானகாலத்தில் நிஜமானவை யாதொன்றுமுபயோகப்படவில்லை.

273. மேற்சொன்னதற்கு அபிப்பிராயமென்னவெனில் சமுசா ரரூபதுக்கம் பொய்யாக இருக்கிறது. ஆகையால் அதை நிவிர்த்திக்கச்சா தனங்களான வேதமுங்குருவும் பொய்யாகவேயிருக்கவேண்டும். பொய் யை நாசஞ்செய்ய நிஜமான சாதனங்கள் வேண்டியதில்லை. சத்தியசாத னங்களால் பொய் நாசமாகமாட்டாது. மேற்காட்டிய உதாரணத்தில் அரசன் சமீபத்திற்பொய்யான ரி நிஜமான வாயில்காப்போரால் தடுக்க ப்படாமல் வந்து அரசனிடத்தில் அனேக நிஜமான ஆயுதங்களிருந்தபோ திலும் பொய்யானதடியால் அடிக்கப்பட்டு ஓடிவிட்டது. ராஜாவுக்குப் பொயயான புண் உண்டாயிற்று. நிஜமான வயித்தியன் ஒருவனும் வர வில்லை. பொய்யான வயித்தியனிடத்திற் போய், அரசனுக்கு வெகு ஆஸ்தி யிருந்தும் ஒருபைசாவு'மில்லாமல் போனதால் மருந்து பெறக்கூ டாமல், பொய்யான சந்நியாசியாற் கொடுக்கப்பட்ட பொய்யானமருந் தால் பொய்யான புண் ஆறிப்போய்விட்டது. ஒருவிதமான சத்தியசாதன மும் அரசனுடைய துக்கநிவிர்த்திக்கு உபயோகப்படவில்லை. இவ்வித மான சொப்பனம் எல்லாருக்கும் அனுபவசித்தமாயிருக்கிறது. ஜாக்கிர தபதார்த்தங்கள் எப்போதும் எவனுக்கும் சொப்பனத்திலுபயோகப்படு கிறதில்லை. இதுபோல் பொய்யான சமுசாரதுக்கம் பொய்யான வேதங் குரு இவைகளால் நாசமடைகிறது. சத்தியமான வேதங்குரு இவைகளைய பேக்ஷிக்கிறதில்லை.

274. கேள்வி:— மித்தையான கானலஜலத்தினுல தாகசா ந்தியாகாததுபோல் மித்தையான வேதங்குரு இவைகளால் சமுசார துக்க

ம் நிவிர்த்தியாகமாட்டாது. அப்படி நிவிர்த்தியாகுமென்று சொல்லும்ப க்ஷத்தில் கானல் ஜலத்தினலும் தாகசாந்தியாகக்கூடும்.

275. சமாதானம்:— பொய்யான கானல்ஜலத்தினல் எவருக்கும் தாகசாந்தியாகாவிட்டாலும் பொய்யான வேதங்குரு இலவகளால் சமுசார துக்கம் நிவிர்த்தியாகும். சமுசார துக்கம் நிவிர்த்தியாவதுபோல் தாகமும் கானல்ஜலத்தால் நிவிர்த்தியாகக்கூடுமே, ஆனல் நிவிர்த்தியாக வில்லையே யெனில் உன் திருஷ்டாந்தம் விஷமமாயிருக்கிறது. ஏனெனில் கானல் ஜலத்திலும் தாகத்திலும் ஸத்தை பேதப்படுகிறது. இதைப் பார்ப்பாயாக.

276. ஸத்தைபேதங்கள்:— சமுசார துக்கமும் குருவேதம் இவைகளும் ஒரேஸத்தையாக இருக்கின்றன. ஆகையால் குருவேதங்களால் சமுசார துக்கம் நிவிர்த்தியாகும். ஏந்தபதார்த்தங்களுக்கு அவை களுக்குள் சமஸத்தை யிருக்கிறதோ அவைகளுக்கு அவைகளுக்குள்ளே

---

8. இதிலோர் சங்கை:— சமஸத்தையுள்ள பதார்த்தங்களே சாதக பாதகங்களாகவிருப்பதாக நியமமில்லை. ஆனல் விஷமஸத்தையுள்ள பதார்த்தங்களும் சில இடங்களில் சாதக பாதகங்களாயிருக்கக்கூடும். எப்படியெனில் அதிஷ்டானத்தைக்காட்டிலும் ஆரோபத்தின் ஸத்தை விஷமம். ஆரோபத்துக்கு அதிஷ்டானம் சாதகமாயிருக்கிறது. கல்பித வெள்ளிக்கு அதிஷ்டானம் கிளிஞ்சில் கிளிஞ்சில் வியாவஹாரிக ஸத்தை, வெள்ளி பிராதிபாஸிக ஸத்தை. வெள்ளிக்கு ச்சாதகம் அதாவது காரணம் கிளிஞ்சிலில் காணப்படுகின்றது. இதுவுமன்றி ஜகத்துக்கு அதிஷ்டானம் பிர்ம்மம். பிர்ம்மம் பாரமார்த்திக ஸத்தை, ஜகத்து வியாவகாரிக ஸத்தை. ஆகையால் விஷமஸத்தையும் சாதகமாயிருக்கிறது. மேலும் கிளிஞ்சிலின் ஞானத்தால் வெள்ளியும் வெள்ளியின் ஞானமும் பாதிக்கப்படுகின்றன. வெள்ளியின் ஞானமும் வெள்ளியும் பிராதிபாஸிகஸத்தை கிளிஞ்சிலின் ஞானம் வியாவகாரிகஸத்தை. இவ்விதமாக விஷமஸத்தை பாதகமாயிருக்கிறது. ஆகையால் சமஸத்தையுள்ள பதார்த்தங்களே சாதகபாதகங்களாயிருக்க வேண்டுமென்கிற நியமமில்லை. இதற்குச்சமாதானம்:— கேவலம் கிளிஞ்சிலாவது பிர்ம்மமாவது வெள்ளிக்கு அல்லது ஜகத்துக்கு அதிஷ்டானமாக இல்லை. ஆனல் தூலாவித்தையுடன் கூடிய கிளிஞ்சில் வெள்ளிக்கும் மூலாவித்தையுடன் கூடிய பிர்ம்மசேதனம் ஜகத்துக்கும் அதிஷ்டானங்களாயிருக்கின்றன. சில இடங்களில் விசேஷணத்தின் தர்மங்கள் விசிஷ்டத்தில் வியவகரிக்கப்படுகின்றன. இந்த நியமத்தால் பிராதிபாஸிக தூலாவித்தையுடன்கூடியசுத்தி (அதாவது கிளிஞ்சில்) அல்லது சுத்திஅவச்சின்னசேதனம் பிராதிபாஸிகமென்று சொல்லப்படுகிறது. வியாவகாரிக மூலாவித்தையவச்சின்னபிர்ம்மசேதனம் வியாவகாரிக மென்று சொல்லப்படுகிறது அவித்தை உபாதியாபிருந்தாலும் விசேஷணமாயில்லாவிட்டாலும் மூவிவேகிகளுடைய நிர்ஷ்டிக்கு விசேஷணம்போல க்காணப்படுவதால் இவ்விடத்தில் விசேஷணமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த அவித்தையின் பிராதிபாஸிக வியாவகாரிக

யே சாதகபாதகங்களிருக்கின்றன.

உதாரணம்:— மண்ணுக்குங் கடத்துக்கும் ஸமஸத்தையிருக்கிறது. ஆகையால் மண் கடத்துக்குச்சாதகமாயிருக்கிறது. நெருப்புக்கும் கட்டைக்கும் சமஸத்தையிருப்பதால் நெருப்பு கட்டைக்குப்பாதகமாயிருக்கிறது. சாதகமெனில் காரணம், பாதகமென்றால் நாசஞ்செய்தல். கானல் ஜலத்துக்கும் தாகத்துக்கும் சமஸத்தையில்லாதபடியால் கானல் ஜலம் தாகத்துக்குப்பாதகமாயில்லை. அதாவது, தாகத்தை நிவர்த்திக்கிறதில்லை. இந்த இடத்தில் ஓரிரகசியமிருக்கிறது:— சேதனத்தினிடத்திற் **பாரமார்த்திகஸத்தை** இருக்கிறது. சேதனத்துக்கு வேறான மித்தையான பதார்த்தங்களில் **வியாவஹாரிக** ஸத்தையெனவும் **பிராதிபாஸிக** ஸத்தை எனவும் இருவித ஸத்தைகளுள.

277. **வியாவஹாரிகஸத்தை:—** எந்தப்பதார்த்தம் பிர்ம்மஞானமன்றியில் பாதிக்கப்படவில்லையோ ஆனல் பிர்ம்மஞானத்தினலே யே பாதிக்கப்படுகிறதோ அந்தப்பதார்த்தத்தில் **வியாவஹாரிகஸத்தை** இருப்பதாகச்சொல்லப்படுகிறது. இந்த வியாவஹாரிகஸத்தை ஈஸ்வர சிர்ஷ்டியிலிருக்கிறது. ஏனெனில், தேகம், இந்திரியம் முதலிய பிரபஞ்சமாகிற ஈஸ்வரசிர்ஷ்டி பிர்ம்மஞானமன்றியில் பாதிக்கப்படுகிறதில்லை பிர்ம்மஞானத்தினலேயே பாதிக்கப்படுகிறது. ஈஸ்வரசிர்ஷ்டியின பதார்த்தங்கள் பிர்ம்மஞானமன்றியில் நாசமடைந்தாலும் பிர்ம்மஞானமன்றியில் பாதிக்கப்படுகிறதில்லை. பொய்யென்கிற சாக்ஷாத்தான நிச்சயத்துக்குப்பாதை யென்றுபெயர். இந்தநிச்சயம ஈஸ்வரசிர்ஷ்டிபதார்த்தத்தில் பிர்ம்மஞானத்துக்குமுன் ஒருவனுக்குமுண்டாகிறதில்லை. பிர்ம்மஞானத்துக்குப்பிறகுண்டாகிறது. ஆகையால், மூலஅவித்தியாகாரியமாகிற ஜாக்கிரதபதார்த்தங்களாகிற ஈஸ்வரசிர்ஷ்டியில் வியாவகாரிகஸத்தை இருக்கிறது. ஜன்மம், மரணம், பந்தம், மோக்ஷம் முதலிய வியவகாரங்கள்

தர்மங்கள் அவைகளின் ஆசிரயமான விள்ளுஞ்சிலும்! பிர்ம்மத்திலும் வியவகரிக்கப்படுகின்றன. ஆகையால் இவ்விடத்தில் விஷமஸத்தையுடன் கூடினது சாதகமாக இல்லை. ஆனல் சமஸத்தையுடன் கூடினதே சாதகமாயிருக்கிறது. மெலும், பஞ்சபாதிகாகாரருடைய ரீதிப்படி மூலாவித்தைக்கு வேருகத்தூலாவித்தையில்லை. ஆகையால் அதின் நிவிர்த்தி விள்ளுஞ்சில்ஞானத்தால் உண்டாகிறதில்லை. பிர்ம்மஞானத்தினல் தான் உண்டாகிறது. ஆனல் வியாவகாரிக அந்தக்கரணத்தின்விர்த்தியாகிய சுத்தியின் யதார்த்தஞானத்தால் சுத்தியிலுள்ள தூலாவித்தை பாதிக்கப்படுகிறது. ஆகையால் அதின் காரியங்களான வெள்ளியும் அதின்ஞானமும் பாதிக்கப்படுகின்றன. ஆகையால் விஷமஸத்தையுடன் கூடினது பாதகமாயில்லை.

சித்திக்கும்படிச்செய்வது வியாவகாரிகஸத்தையாம்.

278. பிராதிபாவிகவஸத்தை:— பிர்ம்மஞானமன்றியில் பாதிக்கப்படும் பதார்த்தம் பிராதிபாஸிகஸத்தை என்னப்படும்.

உதாரணம்:— பிர்ம்மஞானமன்றியிலேயே கினிஞ்சில் கயிறு கானல்ஜலம் முதலியவைகளின் ஞானத்தினல் முறையே வெள்ளி, சர்ப்பம், ஜலம் முதலியவை பாதிக்கப்படுகின்றன. கினிஞ்சில் முதலியவைகளில் பிராதிபாஸிகஸத்தையிருக்கிறது. பிராதிபாஸிகமென்றல் பிரதீதிமாத்திரம். ஸத்தையென்றல் இருக்குதல். பிரதீதிமட்டும் இருப்பதற்குப்பிராதிபாஸிகஸத்தை யென்றுபெயர். தூலாவித்தையின் காரியமான வெள்ளி முதலியவைகளில் பிரதீதிமட்டுமிருக்கிறபடியால் அவைகளுக்குமபிராதிபாஸிகஸத்தை சொல்லப்படுகிறது.

279. பாரமார்த்திகவஸத்தை:— எது முக்காலங்களிலும் பாதிக்கப்படுகிறதில்லையோ அது பாரமார்த்திகஸத்தையென்று சொல்லப்படுகிறது. சேதனம் ஒருக்காலும் பாதிக்கப்படுகிறதில்லை. ஆகையால் அது பாரமார்த்திகஸத்தையாம்.

280. இவ்விதமாக வேதம் குரு சமூசாரதுக்கம் இவைகள் ஒரே வியாவகாரிகஸத்தையாயிருப்பதால் இவைகளுக்குள் ஸமஸத்தையிருக்கிறது. ஆகையால் பொய்யான வேதங்குரு இவைகளால் பொய்யான சமூசாரதுக்கம் நிவிர்த்தியாகக்கூடும். மேலும் பசிதாகம் பிராணனுடைய தர்மங்கள். பிராணனும் அதினுடைய தர்மங்களும் பிர்ம்மஞானமன்றியில் நிவர்த்தியாகமாட்டா. ஆகையால் தாகம் வியாவஹாரிகஸத்தை, கானல்ஜலம் பிர்ம்மஞானமன்றியிலேயே அதின் ஞானத்தினல் பாதிக்கப்படுவதால் அது பிராதிபாஸிகஸத்தை. ஆகையால் தாகத்துக்கும் கானல் ஜலத்துக்கும் ஸமஸத்தையில்லை. ஆனதால் கானல் ஜலத்தால் தாகசாந்தியுண்டாகிறதில்லை. இவ்விதமாகத்தார்ஷ்டாந்தத்தில் பாதிக்கிறவேதங்குரு இவைகளுக்கும் பாதிக்கப்படுகிற சமூசாரதுக்கத்துக்கும் ஒரேஸத்தையிருக்கிறது. திர்ஷ்டாந்தத்தில் ஜலத்துக்கும் தாகத்துக்கும் ஸத்தைப்பேதப்படுகிறது. ஆகையால் திர்ஷ்டாந்தம் விஷமமாயிருக்கிறது அதாவது தார்ஷ்டாந்தத்துக்குச்சமானமாயில்லை.

பிராந்திநிவிர்த்தியில் பேதம்:—

281. கேள்வி:— ஸ்வாமின், பிர்ம்மத்துக்கு வேறுனவையெல்லாம் பொய்யென்று முன் சொன்னீர்கள். இந்தப்பொய்யான பதார்த்தங்களில் சுக்தியில் வெள்ளி ரஜ்ஜு-வில் சர்ப்பம் கானல்ஜலம் முதலியவை பிர்ம்மஞானமன்றியில் பாதிக்கப்படுமென்றும் சமூசாரதுக்கம் பிர்ம்

ஞானத்தினல் பாதிக்கப்படுமென்றும் சொன்னபேதத்துக்குக்காரணமென்ன?

282. உத்தரம்:— சிஷனே பிர்ம்மத்துக்கு வேறுனதெல்லாம் அவித்தியாகாரியமானதால் பொய் இதில் யாதொன்றும் சத்தியமில்லை. ஆனல் எதின் அஞ்ஞானத்தினல் எது உண்டாகிறதோ அதின்ஞானதினல் அது பாதிக்கப்படுகிறது. கிளிஞ்சில்ரஜ்ஜு- கானல்ஜலம் முதலியவைகளை யறியாததினல் வெள்ளி சர்ப்பம் ஜலம் முதலியவைகளுண்டாகின்றன. கிளிஞ்சில் முதலியவைகளை யறிவதால் வெள்ளி முதலியவை பாதிக்கப்படுகின்றன. பிர்ம்மத்தையறியாததினலுண்டாகிற ஜனனமரணஞ்சி சமுசாரதுக்கம் பிர்ம்மத்தையறிவதால் பாதிக்கப்படுகிறது.

2. சமுசாரவிஷயமாய் (283—322)

283. கேள்வி:— ஸ்வாமின், பிரமமத்தை யறியாததினலுண்டாகிற சமுசாரம் எந்தக்கிரமமாயுண்டாகிறது. இதைச்சொல்லியருளவேண்டும்.

284. உத்தரம்:— ஸ்வப்பனம் கிரமமன்றியிலுண்டாகிறதுபோல் பிரமையினல் பொய்யான ஜகத்து விளங்குகிறது. இதின் கிரமத்தையறிய இச்சிக்கிறவன் கானல் ஜலத்தில் வஸ்திரத்தை நனைக்க இச்சிக்கக்கூடும். உபநிஷத்துகளில் ஜகத்துற்பத்தி யனேகப்பிரகாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. சாந்தோக்கிய வுபநிஷத்தில் சத்ரூபப்பிர்மத்தினின்றும் அக்கினி ஜலம் பிருதிவீ இவைகள் கிரமமாக உண்டானதாகச்சொல்லப்பட்டிருக்கிறது. தைத்திரீய வுபநிஷத்தில் ஆகாசம் வாயு அக்கினி ஜலம் பிருதிவீ இவ்வைந்து பூதங்களும் கிரமப்படியுண்டானதாகச்சொல்லப்பட்டிருக்கிறது. சிலவிடங்களில் எல்லாவற்றையும் பரமேசுவரன் உண்டுபண்ணுகிறனென்று கிரமமன்றியிலுமுற்பத்தி சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக ஜகத்துற்பத்தி வேதத்தில் பலவிதமாகச்சொன்னதற்குத்தாற்பரியமென்னவெனில் ஜகத்து பொய். அது ஒரு பதார்த்தமாக இருக்கும் பக்ஷத்தில் அதினுற்பத்தியையனேகவிதமாக வேதஞ்சொல்லியிருக்கமாட்டாது. அநேகப்பிரகாரமாகச்சொல்லியிருக்கிறபடியால் உற்பத்திக்கிரமத்தைச்சொல்வதில் வேதத்துக்கு அபிப்பிராயமில்லை. ஆனல் அத்வைதப்பிர்ம்மத்தை யறியவேண்டியதற்காக ஜகத்தை நிஷேதிக்கவேண்டியதாயிருப்பதால் இந்தப்பொய்யான ஜகத்தை எவ்விதத்திலாவது ஆரோபஞ்செய்யவேண்டுமென்பது வேதத்தின் கருத்து.

உதாரணம்:— வேடிக்கைக்காக ஒரு காகிதத்தாற் செய்யப்பட்ட யானை ஆகாசத்திற் பறக்கவிடப்படுகிறது. அதின்காதும் வாலும் மடங்கிப்போனதை அதைச்சரிப்படுத்த ஒருவனும் பிரயத்தனப்படுகிறதில்லை. இதுபோல் அந்வைதஞானத்தின்பொருட்டுப்பிரபஞ்சத்தை நிஷேதிப்பதற்காகப்பிரபஞ்சமாரோபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் பிரபஞ்சத்தினுற்பத்திக்கிரமத்தை ஒரேவிதமாகச்சொல்ல வேதத்தில் பிரயத்தனஞ் செய்யப்படவில்லை. இப்படியிருப்பதால் வேதத்தின் அபிப்பிராயமானது பிரபஞ்சத்தை நிஷேதிப்பதிலிருக்கிறதேதவிர, கிரமஉற்பத்தியைசொல்வதில் இல்லையென்றறியவேண்டியது.

285. சூத்திர்க்காரரும் பாஷியக்காரரும் 2-வது அத்தியாயத்தில் உற்பத்தியைச் சொல்லுஞ் சுருதி வசனங்களின் விரோதங்களைத் தள்ளி தைத்தீரிய சுருதியின் அனுசாரமாகச் சொல்லப்பட்ட உற்பத்திக்கிரமமே எல்லாவுபநிஷத்துகளின் கருத்தென்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிச்சொன்னது மந்த ஜிஞ்ஞாசுவை உத்தேசித்துத்தான். முன் (283) சொல்லிய் சுருதி அபிப்பிராயத்தையறியாத மந்த ஜிஞ்ஞாசு உபநிஷத்துகளில் விரோதமிருப்பதாக நினைத்துப் பிராந்தியை யடைவான். இதை நிவிர்த்திசெய்வதற்காக எல்லாவுபநிஷத்துகளிலும் ஒரேவிதமாக ஜகத்துற்பத்தி பிரதிபாதிக்கப்பட்டதாக சொல்லியிருக்கிறார்கள். மேலும் பிர்ம்மவிசாரத்தால் யதார்த்த ஞானமுண்டாகாதவனுக்கு லயசிந்தனையின்பொருட்டும் உற்பத்திக்கிரமம் சொல்லப்பட்டிருக்கிறது. எந்தக்கிரமத்தினுலுற்பத்தி சொல்லப்படுகிறதோ அதற்கு விபரீதக்கிரமத்தினல் லயசிந்தனை செய்யவேண்டியது. இந்த லயசிந்தனையால் அத்வைதப் பிர்ம்மத்தினிடத்தில் புத்தி ஸ்திரப்படுகிறது. இந்த லயசிந்தனைப்பிரகாரம் பஞ்சீகரணக்கிரந்தத்தில், வார்த்திகக்காரரான சுரேஸ்வராசாரியரால் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக்கிரந்தம் உத்தமஜிஞ்ஞாசுவின் பொருட்டு ஏற்பட்டிருப்பதாலும் சமுத்திரம்போல் விரிவாயிருப்பதாலும் ஜகத்தினுற்பத்தி லயக்கிரமங்களைச்சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்.

286. மாயை (286—292):— சுத்தப்பிர்ம்மத்தினின்றும் ஜகத்துற்பத்தியாகிறதில்லை. ஏனெனில், சுத்தப்பிர்ம்மம் அசங்கமாயும் கிரி

---

9. சூத்திர சப்தத்தால் பிர்ம்மசூத்திரமென்றும், பாஷியகாரர் ஸ்ரீசங்கராசாரியரென்றும் அறியத்தக்கது. இரண்டாவது அத்தியாயம் பிர்ம்மசூத்திரத்தினது.

யையற்றதாயுமிருக்கிறது. ஆனல் மாயாவிசிஷ்டனுகிற ஈசுவரனிடத்தினின்றும் ஜகத்துற்பத்தியாகிறது. ஆகையால் மாயை ஈசுவரன், இவர்களின் சொரூபங்களைப்பிரதிபாதிக்கிறேன். ஜீவேஸ்வராபேதற்களில்லாத சுத்தசேதனத்தை யாசிரயித்துக்கொண்டிருப்பது மாயை. இது அனுதி. அதாவது, உற்பத்தியற்றது. மாயையினுற்பத்தியை யங்கீகரிக்கும்பக்ஷத்தில் புத்திரனிடத்தினின்றும் பிதாவினுற்பத்தி சொல்லத்தகாதது போல் மாயாகாரியமான பிரபஞ்சத்தினின்றும் மாயையினுற்பத்தி சொல்லத்தகாது. ஆகையால் சேதனத்தினின்றே மாயை யுற்பத்தியானதாகப் பூர்வபக்ஷி சொல்லக்கூடும். இது சரியன்று. ஏனெனில் ஜீவேஸ்வரர்கள் மாயையின் காரியங்களாயிருக்கிறார்கள். மாயையன்றியில் அவர்களின் சொரூபங்கள் சித்திக்கிறதில்லை. ஆகையால் ஜீவசேதனத்திலிருந்தாவது ஈஸ்வராசேதனத்திலிருந்தாவது மாயை யுற்பத்தியாவதாகச்சொல்லக்கூடாது. சுத்தசேதனம் அஸங்கமாயும் கிரியாரகிதமாயும் நிர்விகாரமாயுமிருப்பதால் அதனிடத்தில் மாயை யுற்பத்தியாகிறதாகச்சொல்லும்பக்ஷத்தில் அது விகாரியாய்விடும். மேலும் சுத்தசேதனத்தினின்று மாயையுண்டாகும்பக்ஷத்தில் மோக்ஷதசையில் மாயை மறுபடியும் உண்டாகுமானதால் மோக்ஷத்தின்பொருட்டு ஏற்பட்ட சாதனங்கள் பயனற்றுப்போம். ஆகையால் சேதனத்தினின்றும் மாயை யுற்பத்தியாகிறதில்லை. இவ்விதமாக உற்பத்தியில்லாத மாயை யனுதியென்று சொல்லப்படுகிறது. மேலும் அது ஏகமாயும் ஞானத்தால் முடிவு (நாசம்) அடைவதாயிருப்பதால் வியாத்தமாயும் சதசத்துக்கு விலக்ஷணமாயுமிருக்கிறது. முக்காலத்திலும் பாதிக்கப்படாதது சத்தென்று சொல்லப்படும். சேதனம் சத்து. மாயை ஞானத்தால் பாதிக்கப்படுவதால் சத்துக்கு விலக்ஷணமாயிருக்கிறது. முக்காலத்திலும் விளங்காதது முயற்கொம்பு மலடி மகன் ஆகாசபுஷ்பம் இவைகள்போல் அசத்தாயிருக்கிறது. ஞானத்துக்குமுன் மாயையும் அதின் காரியமும் பிரதீதியாகின்றன. ஜாக்கிரதகாலத்தில் "நான் அஞ்ஞானி," "நிர்ம்மத்தை யறியவில்லை' என்கிற அனுபவத்தால் மாயை விளங்குகிறது. சொப்பனத்தில் தோன்றும் பலவிதப்பதார்த்தங்களுக்கு மாயை யுபாதானகாரணமாயிருக்கிறது. சுஷுப்திக்குப்பிறகு "நான் சுகமாய்த்தூங்கினேன், ஒன்றுமறியவில்லை" என்கிறனுபகம் வருகிறது. அறியப்படாத வஸ்துவிஷயத்தில் ஞாபகம் வரமாட்டாது. ஆகையால் சுஷுப்தியில் அஞ்ஞானம் விளங்

குகிறது. இந்த அஞ்ஞானமும் மாயையுமொன்றே, இவைகளுக்குப்பேத மில்லை. இவ்விதமாக மூன்று அவஸ்தைகளிலும் மாயை விளங்குவதால் அது அஸத்துக்கு விலக்ஷணமாயிருக்கிறது. இப்படி சதசத்துக்கு விலக்ஷணமான மாயையின் காரியமும் சதசத்துக்கு விலக்ஷணமாயிருக்கிறது. சதசத்துக்கு விலக்ஷணமானது அத்வைதமதத்தில் மித்தை யென்றும் அநிர்வசனீயமென்றும் சொல்லப்படும். மாயை அதின்காரியம் இவைகளினின்றும் துவைதம் சித்திக்கமாட்டாது. ஏனெனில் சேதனம் ஸத்ரூபமாயிருப்பதுபோல் மாயையும் அதின் காரியமும் ஸத்ரூபமாயிருந்தால் துவைதம் சித்திக்கும். மாயையும் அதின் காரியமும் சதசத்துக்கு விலக்ஷணமாயிருப்பதால் மித்தையாயிருக்கின்றன. மித்தியாபதார்த்தத்தினின்றும் துவைதம் உண்டாகிறதில்லை. சொப்பனத்தின் மித்தியாபதார்த்தத்தினால் துவைதம் உண்டாகாததுபோலும்.

287. **மாயையின் ஆசிரயம் விஷயம்:—** மாயை ஜீவேசுவர பேதமில்லாத சுத்தப்பிர்ம்மத்தை யாசிரயித்து அதையே மறைத்துக் கொண்டுமிருக்கிறது. வீட்டை யாசிரயித்த இருள் வீட்டையே மறைப்பதுபோலும். இதற்கு ஸ்வாசிரயஸ்வ விஷயபக்ஷமென்று பெயர். ஸ்வளன்றால் சுத்தப்பிர்ம்மம். அதையே யாசிரயித்தல் ஸ்வாசிரயம். அதையே விஷயமாக்குதல் அதாவது மாயையால் மூடுதல் ஸ்வவிஷயமாகும்.

லம்கேஷபசாரீரகம், விவரணம், வேதாந்த முக்தாவளி, அத்வைதசித்தி அத்வைததீபிகை முதலிய கிரந்தங்களில் அஞ்ஞானத்தை ஸ்வாசிரயஸ்வ விஷயமாகச்சொல்லப்பட்டிருக்கிறது.[10]

288. **வாசஸ்பதிமதம்:—** அஞ்ஞானம் ஜீவனை யாசிரயித்துக்கொண்டு பிர்ம்மத்தை விஷயமாக்குகிறது. 'நான் அஞ்ஞானி, பிர்ம்மத்தை யறியவில்லை' என்பதில் நான் 'என்பது ஜீவன். ஜீவன் தான் அஞ்ஞானியென்று சொல்வதினால் அஞ்ஞானத்துக் காசிரயம் ஜீவனென்று விளங்குகிறது. பிரம்மத்தை யறியவில்லை யென்று சொல்வதினால் அஞ்ஞானத்துக்கு விஷயம் பிர்ம்மமென்று விளங்குகிறது. இவ்விதமாக அஞ்ஞானம் ஜீவனையாசிரயித்துப் பிர்ம்மத்தை விஷயமாக்குகிறது; அதாவது மறைக்கிறது. இந்த அஞ்ஞானம் ஒன்றல்ல அனேகம், ஏனெனில் அஞ்ஞானமொன்றென நினைக்கும் பக்ஷத்தில் ஒருவனுடைய அஞ்ஞானம் நிவர்த்தியாகிறதினால் மற்றவர்களுக்கு அஞ்ஞானமும் அதன் காரியமான சமுசாரமும் விளங்கக்கூடாது. இதுவரையிலும் ஒருவனும் ஞானியாகவில்லை

---

10. 7-வது காண்டத்தில் 668-வது பிரிவின் குறிப்பை பார்க்க.

யென்று சொன்னால் இனிமேலும் ஒருவனும் ஞானியாகமாட்டான். ஆகையால் சிரவணாதி சாதனங்கள் பிரயோசனமில்லாமற்போம். ஆனதால் அனந்த ஜீவர்களை யாசிரயித்த அஞ்ஞானமும் அனந்தமாயிருக்கிறது. அனந்த ஜீவர்களுடைய அனந்த அஞ்ஞானத்தினால் கற்பிக்கப்படுகிற ஈசுவரனும் பிரம்மாண்டமும் அனந்தமாயிருக்கின்றன. எந்த ஜீவனுக்கு ஞானமுண்டாகிறதோ அதற்கு அஞ்ஞானம் ஈசுவரன் பிரம்மாண்டம் இவைகள் நிவிர்த்தியாகின்றன. எவனுக்கு ஞானமுண்டாகவில்லையோ அவனுக்குப்பந்தமிருக்கிறது. இது வாசஸ்பதிமதம்.

289. இது மதம் சரியன்று. ஏனெனில் "ஈசுவரன் ஜீவனுடைய அஞ்ஞானத்தினால் கல்பிக்கப்பட்டவன்" என்று சொல்வது சுருதிஸ்மிருதி புராணங்களுக்கு விருத்தமாயிருக்கிறது. "ஈசுவரன் அனந்தம், ஜீவர்களுக்குள்ளே சிருஷ்டி பேதப்படுகிறது" என்று சொல்வதும் விருத்தம்தான். ஆகையால் அஞ்ஞானம் அனேகமென்று நினைப்பது அஸங்கதமாயிருக்கிறது. மேலும் அஞ்ஞானத்தையனேகமாய்ப்பாவித்து ஈசுவரனையும் சிருஷ்டியையும் ஒன்றனைப்பாவித்தலும் சரியில்லை. ஏனெனில் ஜீவேஸ்வராப்பிரபஞ்சங்கள் அஞ்ஞானகல்பிதங்கள், அஞ்ஞானம் அனந்தமானால் ஒவ்வொரு அஞ்ஞானத்திலும் கல்பிதமாகிற ஜீவன்போல் ஈஸ்வரனும் பிரபஞ்சமும் அனந்தமாகவேண்டும். ஆனதால் வாசஸ்பதியானவர் அனந்த ஈசுவரனையும் அனந்த சிருஷ்டியையும் சொல்லியிருக்கிறார். ஆகையால் அஞ்ஞான மொன்றென்னும் மதமே சரியானது.

290. இந்த ஒரே அஞ்ஞானமும் ஜீவனையாசிரயிக்கவில்லை. ஆனால் சுத்தப்பிரம்மத்தை யாசிரயித்திருக்கிறது. ஏனெனில் ஜீவபாவம் அஞ்ஞானத்தின் காரியம். அந்த அஞ்ஞானம் ஒருக்காலும் சுதந்தரமாயிருக்கிறதில்லை. ஆகையால் ஆசிரயமில்லாத அஞ்ஞானத்தினின்றும் ஜீவபாவம் சித்திக்கமாட்டாது. முதலில் அஞ்ஞானம் ஏதாவதொன்றையாசிரயித்துக்கொண்டிருந்தால் பிறகு அதின்காரியமான ஜீவபாவம் சித்திக்கும். ஜீவன்போல ஈசுவரனும் அஞ்ஞானகாரியமாயிருப்பதால் அஞ்ஞானம் ஈஸ்வரனையுமாசிரயித்திருக்கவில்லை. ஆனால் இந்த அனாதியான அஞ்ஞானம் சுத்தப்பிரம்மத்தை யாசிரயித்துக்கொண்டிருக்கிறது. அனாதிசேதன அஞ்ஞானங்களின் சம்பந்தமுமனாதியே. அனாதிசம்பந்தத்தாலுண்டாகும் ஜீவேஸ்வரபாவங்களும் அனாதியே. ஆனால் ஜீவேஸ்வரபாவங்கள் அஞ்ஞானத்துக்கு ஆதீனமாகையால் அஞ்ஞானத்தின் காரியங்களாகச்சொல்லப்படுகின்றன. "நான் அஞ்ஞானி" என்று சொல்வதினால் ஜீவனை யாசிரயித்ததாக அஞ்ஞானம் விளங்கினாலும் வாஸ்தவத்தில் சுத்தப்பிரம்மத்தையே யாசிரயித்துக்கொண்டிருப்பதால் ஜீவனுக்கு நான் அஞ்ஞானி யென்கிற அபிமானமுண்டாகிறது. ஜீவன் அஞ்ஞான

காரியமாயிருப்பதால் ஜீவன் அஞ்ஞானத்துக்கு அதிஷ்டானரூப ஆசிரய மாகமாட்டான். ஆனல் சுத்தப்பிரம்மமே அஞ்ஞானத்துக்கு அதிஷ்டா னரூப ஆசிரயமாக இருக்கிறது. சுத்தப்பிரம்மமாகிற அதிஷ்டானத்தை யாசிரயித்துக்கொண்டிருக்கிற அஞ்ஞானம அதப்பிரம்மத்தையே மறை கிறது. அதன் பிறகு ஜீவன் நான் அஞ்ஞானி யென்பதில்ல அஞ்ஞா[11]னத்துக்கு அபிமானிரூப ஆசிரயமாயிருக்கிறன். இவ்விதமாக அஞ்ஞா னம் ஸ்வாசிரயவ்ருத்திவிஷயமாயிருக்கிறது.

291. இந்த அஞ்ஞானம் ஒன்றாக இருக்கிறது, ஞானத்தினல் நிவிர்த்தியாகிறது. ஆயினும் எந்த அந்தக்கரணத்தில் அஞ்ஞானமிருக்கி றதோ அந்த அந்தக்கரண அவச்சின்ன சேதனத்திலிருக்கப்பட்ட அஞ் ஞானம்சம் ஞானத்தால் நிவிர்த்தியாகிறது. இவனை முக்தனகிறன். எந்த அந்தக்கரணத்தில் ஞானமுண்டாகவில்லையோ அவ்விடத்தில் அஞ் ஞானம்சமும் பந்தமும் தங்குகின்றன. இவ்விதமாக அஞ்ஞான[12]மொன் று என்னும்பக்ஷத்தில் பந்தமோக்ஷவியவகாரங்கள் சித்திக்கின்றன. வா சஸ்பதிமதப்படி அஞ்ஞானம் அனேகமென்று சிலர் புத்தியிற்படுவதும் அத்வைதஞானத்துக்கு உபாயந்தான். அதைக்கண்டிப்பதில் யாதொரு கட்டாயமுமில்லை. எவ்விதமாக அத்வைதப்போதமுண்டாகுமோ[13] அவ்

---

11. நான் அஞ்ஞானியாயிருக்கிறேன், என்கிற அனுபவத்தால் அஞ்ஞா னம் ஜீவனேயாசிரயித்ததாக வாசஸ்பதி சொன்னது முழுமூக்ஷு-வின் புத்தியில் இல குவாய்ப் படும்பொருட்டுத் தான். வாசஸ்பதிமிசிரருடைய அந்தரங்கக்கருத்து என்ன வெனில் 'நான்' என்கிற சப்தத்துக்கு வாச்சியார்த்தம் அந்தக்கரண விசிஷ் டசேதன ரூபஜீவன். இதின்விசேஷியபாகமாகிற சாக்ஷிசேதனமே பிரம்மம். இது அஞ்ஞானத்துக்கு ஆசிரயமாயிருக்கிறது. விசேஷியத்தின் தர்ம்மம் விசிஷ் டத்தில் வியவகரிக்கப்படுகிறது.

12. இருள் என்பது ஒன்று. அதினுடைய அம்சங்கள் அனேகம். இவைக ள் வீட்டுக்குவீடு இருக்கின்றன. எந்தவீட்டில் தீபம் இருக்கிறதோ அந்த வீட்டி லுள்ளஇருளின் அம்சம் நாசமாகிறது. இதுபோல் அஞ்ஞான மென்பது ஒன்று. இது ன் அம்சங்கள் அனேகம். இவைகள் அனேக அந்தக்கரணங்களிலுள்ள சாக்ஷியினி டத்திலிருக்கின்றன. எந்த அந்தக்கரணத்தில் ஞானமுண்டாகிறதோ அவ்விடத் திலுள்ள அஞ்ஞானம்சம் நசித்துப் போகிறது. ஆனதால் ஒருவனுக்கு ஞானமு ண்டாவதால் எல்லாருக்கும் அஞ்ஞானமழிந்து முக்தி பிராப்தியாகிறதில்லை. இவ் விதமாக அஞ்ஞானத்தை ஒன்றாக அங்கீகரித்தாலும் பந்தமோக்ஷங்கள் சித்திக்கி ன்றன.

13. எந்த எந்த உபாயத்தால் பிரத்தியகாத்மவிஷயத்தில் ஒருவனுக்குப் போதமுண்டாகுமோ அந்தந்த உபாயமெல்லாம் வேதாந்த சித்தாந்தத்தில் சிரே ஷ்டமென்று கைக்கார்யிய சித்சுக்காசார் சொல்லியிருக்கிறார்.

விதமாகப்புருஷனை ஸ்திரப்படுத்தவேண்டியது.

292. மாயையின் நாமபேதங்கள்:— சுத்தப்பிரம்மத்தை யாச்சரயித்துக்கொண்டிருக்கும மாயைக்கு அவித்தையென்றும் அஞ்ஞானமென்றும பெயர். சிந்திக்கமுடியாத சக்தியுளளதாயும் யுகத்தில் அடங்காததாயுமிருப்பது மாயை யென்று சொல்லப்படும். விதனையால் நாசமடைவதால அவித்தை யென்று சொல்லப்படும். "ஸ்வரூபத்தை மறைப்பதால் அஞ்ஞானமென்று சொல்லப்படும். மாண்டயர்ச்சி ரயிக்கிற சேதனம சாமானியசேதனம். அது மாயைக்கு விரோதமில்லை, சாதகமாயிருகிறது. சத்தாஸ்டரணங்களைக்கொடுகிறது. வித்தியில இருக்கிற சேதனம அலலது சேதனசுத்தவித்தி (98) மாயைக்கு விரோதமென அறியவேணடியது. இவ்விதமாக அநாதியாயும் ஏகமாயும் ஸாதமாயும சதசதுக்கு விலக்ஷணமாயும் அவிதனை அஞ்ஞானச் சொரூபங்களாகவும சாமானியசேதனத்துக்கு விரோதமில்லாமலும வித்தியசேதனத்துக்கு விரோதமாயுமிருகிற மாயை வாணிக்கப்பட்டது.

293. ஈஸ்வர ஸ்வரூபம் (293—295) :— சுத்த சத்துவகுணஸஹிதமான மாயை மாயையின் அதிஷ்டானமான சேதனம் மாயையில் ஆபாஸம இம்மூன்றும் சேர்ந்தது ஈஸ்வரனென்று சொல்லப்படும. இந்த ஈஸ்வரன் சாவஞ்ஞன் (492). ஈஸ்வரனே ஜகத்துக்குக்காரணம.

294. காரணம் இருவகைத்து — (1)உபாதான காரணம் (2) நிமித்த காரணம. எது காரியத்தின் ஸ்வரூபத்தில் பிரவேசிக்கிறதோ எது அன்றியில் காரியம சித்திக்கிறதிலலையோ அது உபாதானகாரணமென்னப்படும். உதாரணம.— மண கடத்துககு உபாதானகாரணம. கடஸ்வரூபத்தில் மண் பிரவேசிக்கிறது. மண் அன்றியில் கடம் உண்டாகிறதில்லை. எது ஸ்வரூபத்தில் பிரவேசிக்கிறதில்லையோ ஆனல் காரியத்துக்கு வேறுக இருதுக் கொண்டு காரியத்தைச் செய்கிறதோ எதின் நாசத்தினல் காரியம் நாசமடைகிறதில்லையோ அது நிமித்தகாரணமென்று சொல்லப்படுமம. (உ—ம்) கடத்துக்குக் குயவன் தண்டம சககரம் முத

---

14. காரியத்தின் உற்பத்தி ஸ்திதி லயங்களுக்குக் காரணம் உபாதானகாரணமென்னப்படும.

15. காரியத்தின் உற்பத்திக்குமட்டும் காரணம் நிமித்த காரணமென்னப்ப

வியவை நிமித்தகாரணங்கள். கடவுளுடம்பில் இவ்வுலகங்கள் பிரவேசிக்கிற தில்லை. கடத்துக்கு வேறுயிருந்துகொண்டு கடத்தை யுற்பத்திசெய்கின்றனை. உற்பத்தியானபின் குயவன் தண்டாதி காசத்தில் கடம் காசமுடையதல்லை. இவ்விதமாகக் காரணம் உபாதான நிமித்தமுமாய இருவகையாம்.

16

295. ஈசுவரனே ஜகத்துக்குபாதான காரணமாயும் நிமித்தகாரணமாயுமிருக்கிறான். ஒரேசிலந்திப்பூச்சி தன்வலைக்கு உபாதானகாரணமாயும் நிமித்தகாரணமாயும் இருப்பதுபோலும். இந்தப்பூச்சியின் ஜடசரீரம் இதின் வலைக்கு உபாதானகாரணமாயும இதின் சேதனபாகம் நிமித்தகாரணமாயும் இருக்கின்றன. இதுபோல் ஒரே ஈசுவரன் தன் சரீரமான ஜடமாயையால் ஜகத்துக்கு உபாதானகாரணமாயும் தன் சேதனபாகத்தால் நிமித்தகாரணமாயுமிருக்கிறான். ஒரேவஸ்து இருவிதகாரணமாயுமிருப்பதற்குச் சில்பியன்றியிலும் சொப்பனம முக்கிய திருஷ்டாந்தமாயிருக்கிறது. எந்தச்சமயத்தில் ஜீவனுக்கு க்காமபலன் கொடுக்க ஈசுவரன் சன்முகமாகிறதில்லையோ அப்போது பிரளயமும், ஸன்முகமாகுமபோது

---

16. ஜகத்தற்பத்தி விஷயத்தில் ஆரம்ப பரிணம விவாத்த வாதங்களில் விவர்த்தவாதந்தான் சித்திக்கின்றது. எப்படியெனில் 1) அவயவங்களுடன் கூடிய பலகாரணங்களால் அவயவதத்துடன் கூடிய ஒருகாரிய முண்டாவது ஆரம்ப வாதம். (உ—ம்) அனேக நூல்களால் ஒருவஸ்திர முண்டாவது ஆரம்பவாதம். இதில் காரணகாரியங்களின் வியவஹாரங்கள இருக்கின்றன. ஜகத்தற்பத்தியில் ஆரம்பவாதம் ஒவ்வாது. ஏனெனில் பிர்ம்மம் அத்துவிதியமாயும் நிரவயவமாயு மிருப்பதால் அதினின்றும் ஸாவயவமான ஜகத்துண்டாகுமாட்டாது. (2) பரிணமவாதமும் ஒவ்வாது. ஏனெனில் ஒருவஸ்து தன் அவஸ்தையைவிட்டுவேறு அவஸ்தையை யடைவது பரிணமமென்னப்படும். கடம் மண்ணின் பரிணமமாயிருப்பதுபோல் ஜகத்து பிரகிருதியின் பரிணமமென்று சாங்கியமதஸ்தர்களும்பிரம்மத்தின் பரிணமமென்று சில உபாஸகர்களும் சொல்லுகிறார்கள். சாங்கியமதம் சூத்திரபாஷியக்காரரால் கண்டிக்கப்பட்டிருக்கிறது. சேதனம் நிரவயவமாயிருப்பதால் உபாஸகருடைய மதமும்பிசகாம். இவ்விதமாகப் பரிணமவாதமும்ஒவ்வாது. (3) மேற்காட்டிய தோஷங்கள் விவர்த்தவாதத்தில்லில்லை. எப்படியெனில் தன்சொரூபத்தை விடாமல் வேறுசொரூபதத்தைக் காண்பித்தல் விவர்த்தவாதம். கினிஞ்சிலில் வெள்ளி தோன்றுவது விவர்த்தவாதமாம். இதுதான் வேதாந்தத்தில் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. ஜகத்துக்கு விவர்த்த உபாதானரூப அதிஷ்டானம் மாயாவுபஹித சேதனமே தவிர மாயாவிஷ்டசேதனமன்று. ஆயினும் மாயாவிஷ்டத்தினின்றும் ஜகத்துண்டானதாகச் சொல்லுவது அவிவேகியின்'நிச்சயத்தை அனுசரித்தத்தான் விவேகியின் நிச்சயத்துக்கு ஜகத்தின் பரிணமியுபாதானம் வேலம்மாயையிலும் விவர்த்தவுபாதானம் மாயாவுபஹித

சிருஷ்டியுமுண்டாகின்றன. இவ்விதமாகச் சிருஷ்டி ஜீவனுடைய கர்மாதீனமாயிருக்கிறது. ஆகையால் ஜீவஸ்வரூபத்தைச் சொல்லுகிறேன்.

296. ஜீவஸ்வரூபம்:— ரஜோகுணதமோகுணங்களை அமுக்கி விடுவது சுத்தசத்துவகுணமென்றும் இவைகளால் அமுக்கப்படுவது மலினசத்துவகுணமென்றும் சொல்லப்படும். இந்த மலினசத்துவகுணசகித அஞ்ஞானமும்சக்தில் உண்டாகும் சேதனத்தின் ஆபாசம், அஞ்ஞானம், அஞ்ஞானத்துக்கு அதிஷ்டானமான கூடஸ்தன் இம்மூன்றும் சேர்ந்தது ஜீவனென்று சொல்லப்படும். இந்த ஜீவன் கர்மத்தைச்செய்கிறான், பலத்தைஇச்சிக்கிறான்.

297. ஜகத்துசிருஷ்டி:— (291—309) இந்த ஜீவனுடைய கர்மானுசாரமாக உயர்ந்த அல்லது தாழ்ந்த போகங்களை யனுபவிக்கும்பொருட்டு ஈஸ்வரன் சிருஷ்டிபண்ணுகிறார். ஆகையால் ஈஸ்வரனிடத்தில் விஷமசிருஷ்டியும் குரூரதையும் இல்லை எல்லாவற்றிற்கும் முதலான சிருஷ்டியில் முந்தினகர்மமில்லை. இந்தப்பிரதமசிருஷ்டியிலும் உயர்ந்த தாழ்ந்த சரீரங்கள் போகங்கள் முதலியவை ஈஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஈஸ்வரனுக்கு விஷமசிருஷ்டியுண்டென்று ஒருவன் சொல்லும்பக்ஷத்தில் அது சரியன்று. ஏனெனில், சமுசாரம் அனாதி. உத்தரோத்தரசிருஷ்டிக்குப்பூர்வபூர்வ சிருஷ்டியின் கர்மம் காரணமாயிருக்கிறது. எல்லாவற்றிற்கும் முதலாகயாதொரு சிருஷ்டியுமில்லை. ஆகையால் ஈஸ்வரனிடத்தில் தோஷமில்லை.

298. ஜீவனுக்குக்கர்மபோகங்கொடுக்க ஈஸ்வரன் உதாசீனமாயிருக்கும்போது பிரளயமுண்டாகிறது. பிரளயத்தில் சகலபதார்த்தங்களின் சம்ஸ்காரமும் மாயையில் தங்கியிருக்கிறது. ஆகையால் ஜீவனுடைய சேஷமான கர்மமும் சூக்ஷ்மமாக மாயையில் தங்கியிருக்கிறது. கர்மபோகத்தைக்கொடுக்க ஈஸ்வரன் சன்முகமாகும்போது "ஜீவனுடைய போகனிமித்தமாக ஜகத்தை யுண்டுபண்ணுகிறேன்" என்று ஈஸ்வரனுக்கு இச்சையுண்டாகிறது.[17]

சேதனத்திலுமிருக்கின்றன. அவிவேகிக்கு இவ்விரண்டும் மாயாவிசிஷ்டசேதன்த்திற்பிரசாந்தியாற் காணப்படுகின்றன. ஆகையால் மாயாவிசிஷ்டஈசுவரனிடத்தினின்றும் ஜகத்துண்டானதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

17. தக்கம் அல்லது தக்கசாதனங்களை நிவிர்த்திக்கும் பொருட்டாவது சுகம்அல்லது சுகசாதனங்களையடையும்பொருட்டாவது இச்சையுண்டாகுமேதவிர வேறுவஸ்துவிஷயத்தில் இச்சையுண்டாகமாட்டாதென்பது நியமம். ஈஸ்வரனுக்குத்தக்கம்முதலியவை இல்லாதபடியால் அவைகளின் நிவிர்த்திக்கு இச்சையுண்டாகமாட்டாது. ஈஸ்வரன் பூர்ணகாமனானதால் சுகம் முதலியவைகளையடைய அவருக்கு இச்சையுண்டாகுமென்று சொல்லுதல் சரியன்று. தமந்

சூக்குமசிருஷ்டிநிரூபணம் (299—304)

299. பஞ்சபூதஉற்பத்தி:— இந்த ஈஸ்வரனுடைய இச்சை யால்மூலப்பிரகிருதியானதமோகுணப்பிரதானமாகிறது. இந்தத்தமோகுணப்பிரதான மாயையிலிருந்து ஆகாசம் வாயு தேயு ஜலம் பூமி இவ்வைந்து பூதங்களுண்டாகின்றன. இந்தப்பூதங்களில் கிரமமாகசப்தஸ்பரிச ரூபரஸகந்தங்களாகிற ஐந்து குணங்களிருக்கின்றன. மாயையினிருந்து சப்தஸஹித ஆகாசமுண்டாகிறது. ஆகாசத்தினின்றும் வாயு உற்பத்தி யாகிறது. வாயு ஆகாசகாரியமானதால ஆகாசத்தின் சப்தகுணம் வாயு விலிருக்கிறது. தன் குணமாகிய ஸ்பரிசமுமிருக்கிறது. வாயுவினிருந் து தேஜஸ் உண்டாகிறது. தேஜஸில் ஆகாசத்தின் சப்தம் வாயுவின் ஸ் பரிசம் தன்னுடைய ரூபம் இவைகளிருக்கின்றன. தேஜஸினின்றும் ஜலமுற்பத்தியாகிறது. ஜலத்தில் ஆகாசத்தின் சப்தம வாயுவின ஸ்பரி சம தேஜஸின் ரூபம் தன் ரஸம் இவைகளிருக்கின்றன. ஜலத்தினின்று ம் பிருதிவி யுற்பத்தியாகிறது. பிருதிவியில ஆகாசத்தின சப்தம வாயு வின் ஸ்பரிசம தேஜஸின் ரூபம் ஜலத்தின ரஸம தன் கந்தம இவைகளிரு க்கின்றன. ஆகாசத்தில் பிரதிதானிருந்த சப்தம இருக்கிறது. வாயுவி ல் ஸ்பரிசமும் உஷ்ணம சீதம கடினம இவைகளுக்கு விலக்ஷணமான ஸ்பரிசமுமிருக்கின்றன. அக்கினிரூபமான தேஜஸில புகபுக சப்தம உஷ்ண மான ஸ்பரிசம பிரகாசரூபம் இவைகளிருக்கின்றன. ஜலத்தில சிலுசிலு சப்தம சீதமான ஸ்பரிசம சுகில ரூபம மதுரமான ரஸம இவைகளிருக்கி ன்றன. உப்பு கசப்பு முதலிய ரஸிகள் பிருதிவிசம்பந்தத்தால ஜலத்தில் தோன்றுகின்றன. சுபாவத்தில் ஜலத்தின ரஸம மதுரமே. இந்த மா துரியம் நெல்லிக்காய தினறு நீரைக்குடித்தால விளங்கும. பிருதிவியில க

தைகளுக்கு விளையாடுவதில் இச்சையுண்டாவது போல ஈசுவரனுக்கும யாதொ ரு நிமித்தமுமறியில் ஜகத்தை யுண்டுபண்ணவேண்டுமெனகிற இசசையுண்டா வதாகச்சொல்வதுஞ் சரியன்று. ஏனெனில் குழந்தைகளுகளுக்கு விளையாடலில் சுத்தையுடையவேண்டுமென்கிற இச்சையிருக்கிறது. பூரணகாமனான ஈஸ்வர னுக்குயாதொரு இச்சையுமில்லை. இந்த ஆக்ஷேபங்களுகளுக்குச் சமாதானமு என்ன வெனில், கல்பகவிருக்ஷமானது இதரஜனங்களுடைய சங்கல்பமாகிற நிமித்த த்தினல் இச்சித்த பலத்தைத்தான் சுபாவத்தினல் கொடுப்பதுபோல் பலத்தை க்கொடுக்க வேண்டுமென்கிற ஈஸ்வரனும் ஜீவர்களுடைய அதிஷ்டமாகிற நிமித த்தினல இச்சை ஞானம் பிரயத்தனம் இவைகளோத்தான சுபாவத்தினல் சிருஷ்டியாரம்பகாலத்தில் உண்டுபண்ணுகிறார். பிரளயம் வரையில் இவைக ளிருப்பதால் நித்தியமென்று கொள்ளப்படுகின்றன.

10. தன யுருவத்துடையய சகலமானபுஜனத்தை நிர்த்தன அசேத நிமித

உகடசப்தம், உஷ்ணஸ்பரிசங்களுக்கு விலக்ஷணமான கடினஸ்பரிசம், வெளுப்பு கறுப்பு மஞ்சள் சிவப்பு பச்சை முதலிய ரூபங்கள், திக்திப்பு புளிப்பு உவர்ப்பு உறைப்பு கசப்பு துவர்ப்பு என்னும் ரஸங்கள், சுகந்தம் துர்க்கந்தம் என்னும் இருவிதக்கந்தங்கள், இவைகளெல்லாம் பிருதிவியிலிருக்கின்றன. இவ்விதமாக ஆகாசத்தில் ஒன்று, வாயுவிலிரண்டு, தேயுவில் மூன்று, ஜலத்தில் நான்கு, பிருதிவியில் ஐந்து குணங்கள் இருக்கின்றன. இவைகளில் ஒன்று தன்குணமாகவும் மற்றவை காரணத்தின் குணங்களாகவு மிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மூலகாரணம்ஈஸ்வரன். ஈஸ்வரனிடத்தில் மாயை சேதனம் என இரண்டு பாகங்களிருக்கின்றன. எல்லாபூதங்களிடத்திலும் மித்தியாபாகம் மாயையினுடையது ஸத்தாஸ்பூர்த்திபாகம் சேதனத்தினுடையது.

300. அந்தக்கரணம்:— பஞ்சபூதங்களின், சத்துவகுணம்சங்கள் சேர்ந்து அந்தக்கரணத்தை யுண்டுபண்ணுகின்றன. அந்தக்கரணம் ஞானத்துக்கு வேறுவாயிருக்கிறது; ஞானத்தினுற்பத்தி சத்துவகுணத்தினின்றுமுண்டாகிறது. ஆதலால் அந்தக்கரணம் பூதங்களின் சத்துவகுணகாரியமாயிருக்கிறது. பஞ்சபூதங்களின் காரியமான ஐந்து ஞானேந்திரியங்களுக்கும் சாதகமாயிருகிறது. ஆகையால் பஞ்சபூதங்களுஞ்சேர்ந்து தங்களுடைய சத்துவகுணங்களால் அந்தக்கரணத்தை யுண்டுபண்ணுகின்றன. தேகத்துக்கு அந்நவேறு அதாவது உள்ளிலும் கரணம் அதாவது ஞானத்துக்குச் சாதகமாயும் இருப்பது அந்தக்கரணமென்னப்படும். பூதங்களின் சத்துவகுணகாரியமானதால் அந்தக்கரணத்துக்கு சத்துவமென்றும்பெயர். அந்தக்கரணத்தின் பரிணமத்துக்கு விர்த்தி யென்றும்பெயர்.

ளோடுகூடிய புத்திரனுகிற கர்ப்பத்தைத் தரிக்கிற கர்ப்பிணிஸ்திரீ பிரசவத்துக்குமுன் சந்ததியுண்டாகுமென்கிற நோக்கத்தால் எப்போதும் பிரசன்னமாயிருக்கிறாள். ஆகையால் சத்துவகுணப் பிரதானமான மாயையபோலிருக்கிறாள். பிரசவகாலத்தில் பிரசவவேதனையாகிற காரணத்தினால் பிரசன்னத்தை மறைபட்டுத்தமோகுணப் பிரதானம் போல் சித்தஞ் சூனியமாயிருக்கிறது. சிருஷ்டிக்குமுன் பிரம்மத்தின் பிரதிபிம்பமாகிற ஜகத்தின் காரணத்தைச் சுத்தசத்துவப் பிரதானமான மாயை தன்கர்ப்பத்தில் தரிக்கிறது. சிருஷ்டியின் ஆரம்பத்தில் சுத்த சத்துவப் பிரதானஸ்வரூபம் மறைபட்டுச் சிருஷ்டிக்கு யோக்கியமான தமோகுணப் பிரதானமான பிரகிருதி ரூபமுண்டாகிறது

19. ஸத் என்றால் இருத்தல். ஸ்பூர்த்தி என்றால்விளங்குதல்

இச்சவிர்த்தி காமவிதம். பதார்த்தத்தின் சொரூபத்தை நிச்சயம்பண்ணுகிற விர்த்தி புத்தி யென்றும், சங்கல்ப விகல்பாத்மக விர்த்தி மனமென்றும், திசாவிர்த்தி சித்தமென்றும் நான் என்கிற அபிமானவிர்த்தி அகங்காரமென்றுஞ்சொல்லப்படும்.

301. **பஞ்சப்பிராணன்**— பஞ்சபூதங்களின் சேர்க்கையான ரஜோகுணம்சத்தினின்றும் **பிராண**ஞ்உற்பத்தியாகிறது. இந்தப்பிராணன் கிரியாபேதத்தினாலும் ஸ்தானபேதத்தினாலும் ஐந்துவிதமாயிருக்கிறது. எதற்கு இருதயம் ஸ்தானமோ பரிதாகம கிரியையோ அதற்குப் **பிராண**னென்று பெயர். எதற்குக் குதம ஸ்தானமோ மூத்திர விஸர்ஜனம் கீழ்நோக்கம் கிரியையோ அதற்கு **அபானன்** என்று பெயர். எதற்கு நாபிஸ்தானமோ எது அன்னபானாதிகள பசனமாகுமபடி சமப்படுத்துகிறதோ அது **சமானன்**. எதற்குக்கண்டம ஸ்தானமோ சுவாசங்கிரியையோ அது **உதானன்**. எதற்கு சாவசரீரமும் ஸ்தானமோ அன்னபானாதிகளின் ரஸத்தைத் சகலநாடிகளிலும் இழுத்துக்கொண்டுபோகுதல கிரியையோ அதற்கு **வியான**னென்று பெயர்.

சிலர் அபிப்பிராய மெனனவெனில் **நாகன்**, **கூர்மன்**, **கிரகரன்**, **தேவதத்தன்**, **தனஞ்சயன்** என ஐந்து உபவாயுக்கள உண்டு. இவைகளில் வாந்தி வருமபடிச் செயவது நாகன், விக்கல், ஏபபம், இமைப்புகளைச்செய்விப்பது துமமல் வரும்படி ச்செயவது கிரகரன, கொட்டாவி விடச்செய்வது தேவதத்தன், வீங்கச்செய்வது தனஞ்சயன், இவ்வைந்து உபவாயுக்களும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம, இவைகளின் ரஜோகுணமசத்தினின்றும் முறையே உணடாகினறன. அபானன, சமானன், பிராணன, உதானன், வியானன் இவைகள தனித்தனியே பிருதிவியாதிகளின் ரஜோகுணம்சத்தினின்றும் முறையே யுணடாகின்றன, பஞ்சபூதங்களுடைய சேர்க்கையான ரஜோகுணம்சதினினறும் உணடாகிறதில்லை.

ஆனல் அத்வைத சித்தாந்தத்தில் இப்படி சொல்லப்படவில்லை. எனெனில், **வித்தியாரண்யஸ்வாமிகளும்** பஞ்சீகரணக்கிரந்தத்தில் **வார்த்திகக்காரரும்** சூக்ஷ்மசரீரத்திலும் பஞ்ச கோசங்களிலும் நாககூர்மாதிகளை யெடுக்கவில்லை. மேலும் அபாணதிபஞ்சப்பிராணன்கள் பூதங்களின் சேர்க்கையான ரஜோகுணம்சத்தினின்றும் உண்டான தாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் ஒவ்வொருபூதத்தின் ரஜோகுணத்தினின்றும் ஒவ்வொரு பிராணனும் உண்டானதாகச் சொல்வதுசரியன்று. சூக்ஷ்மசரீரத்தில் நாககூர்மாதிகளைக் கிரகிக்கக்கூடாது. பஞ்சப்பிராணன்களையே கிரகிக்கவேண்டியது. பிராணின் விகேஷரூபமாயிருக்கிறது. விகேஷ ஸ்வபாவம் ரஜோகுணத்தினது. ஆகையால்

பூதங்களின் ரஜோகுணம்சத்தினின்றும் பிராணனுடைய உற்பத்தி சொல்லப்பட்டது.

302. ஞானேந்திரியம்:— ஒவ்வொரு பூதத்தினுடைய சத்துவகுணம்சத்தினின்றும் பஞ்சஞானேந்திரியங்களுமுண்டாகின்றன. ஆகாசத்தின் சத்துவகுணத்தினின்றும் சுரோத்திரம், வாயுவின் சத்துவகுணத்தினின்றும் துவக்கு, தேயுவின் சத்துவகுணத்தினின்றும் நேத்திரம், அப்புவின் சத்துவகுணத்தினின்றும் ரஸனை, பிருதிவியின் சத்துவகுணத்தினின்றும் கிராணமும் உண்டாகின்றன. இவ்வைந்தும் ஞானத்துக்குச்சாதனமாயிருப்பதால் ஞானேந்திரியங்களென்னப்படும். ஞானம் சத்துவகுணத்தாலுண்டாவதால் இவ்வைந்தும் பூதங்களுடைய சத்துவகுணதினாலுண்டாவதாகச்சொல்லப்படும். சுரோத்திரேந்திரியம் ஆகாசத்தின் குணத்தையறிவதால் ஆகாசத்தினின்றும் உண்டானதாகச்சொல்லப்படுகிறது. இதுபோல எந்தஎந்த பூதத்தின் குணத்தை எந்தஎந்த இந்திரியம் அறிகிறதோ அந்தஅந்தப்பூதத்தினின்றும் அந்தஅந்தஇந்திரியம் உண்டானதாகச்சொல்லப்படும்.

303. கர்மேந்திரியம்:— ஒவ்வொரு பூதத்தின் ரஜோகுணம்சத்தினின்றும் ஒவ்வொரு கர்மேந்திரியமுண்டாகின்றது. ஆகாசத்தின் ரஜோகுணத்தினின்றும் வாக்கும், வாயுவின் ரஜோகுணத்தினின்றும் பாணியும், அக்கினியின் ரஜோகுணத்தினின்றும் பாதமும், அப்புவின் ரஜோகுணத்தினின்றும் உபஸ்தமும், பிருதிவியின் ரஜோகுணத்தினின்றும் குதமும் உண்டாகின்றன. ஸ்திரீயின் யோனியிலும் புருஷனுடைய மாணியிலும உள்ள விஷயாநந்தத்துக்குச்சாதனமான இந்திரியத்துக்கு உபஸ்தமென்று பெயர். கர்மம் என்றால் கிரியை. இந்தப்பஞ்சேந்திரியங்களும் கிரியைகளுக்குச்சாதனமாயிருப்பதால் கர்மேந்திரியங்களென்று சொல்லப்படும். கிரியை ரஜோகுணத்தாலுண்டாவதால் பூதங்களுடைய ரஜோகுணத்தினின்றும் கர்மேந்திரியங்களுடைய உற்பத்திசொல்லப்பட்டது.

304. சூக்ஷுமசிருஷ்டி:— அபஞ்சீகிருத பூதங்கள் இவைகளின் காரியங்களான அந்தக்கரணம், பிராணன், கர்மேந்திரியம், ஞானேந்திரியம் இவைகள் சேர்ந்தது சூக்ஷுமசிருஷ்டியென்று சொல்லப்படும்.

305. இந்திரியங்கள் சூக்ஷுமசிருஷ்டியையறியமாட்டா. கண்மூக்கு முதலிய கோளகங்கள் இந்திரியங்களுக்கு விஷயமானாலும் அக்கோளகங்களிலுள்ள இந்திரியங்கள் எந்த இந்திரியத்துக்கும் விஷயமாகிறதில்லை. சூக்ஷுமசிருஷ்டியிலுற்பத்தியின் பிறகு ஈஸ்வரேச்சையால் ஸ்தூ

லசிருஷ்டியின்பொருட்டு பூதங்களுடைய பஞ்சீகரணமுண்டாயிற்று.

306. பஞ்சீகரணம் முதல்விதம்:— ஓவ்வோருபூதத்தின் தமோகுணமும் இரண்டிரண்டாகி ஐந்துபூதங்களின் முதற்பாதியில் ஓவ்வொன்றும் கால்காகி இரண்டாம்பாதி ஐந்தில் தன்னம்சம் விட்டு மற்றநான்கு பூதங்களுடனும் அவைக்கால் மாத்திரையாகச் சேர்ந்து பஞ்சீகரணமாயிற்று. எப்படியெனில் ஆகாசம் தன்பாதியை விட்டு பிருதிவியாதிநான்கு பூதங்களுடன்சேர்ந்தது. இப்படியே வாயு தன்பாதியைவிட்டு ஆகாசாதிநான்குபூதங்களுடன் சேர்ந்தது. இவ்விதமாகச்சகல பூதங்களும் தங்கள் தங்கள் பாதியைவிட்டு மற்றப்பூதங்களுடன் சேர்ந்தன. இதனல் தன்பாதியும் மற்ற ஓவ்வொரு பூதத்தின் அரைக்காலுஞ்சேர்ந்து மறுபடியும் பூரணமாகி ஓவ்வொன்றிலேயே பஞ்சபூதங்களும் சேர்ந்தமையால்பஞ்சீகரணமாயிற்று. எந்த பூதம் பஞ்சீகரணஞ்செய்யப்படுகிறதோ அதற்குப்பஞ்சீகிருதமென்று பெயர்.

307. இரண்டாம்விதம்:— ஓவ்வொருபூதத்தையும் 25பாகமாக்கி 21 பாகங்களை யொருகூறுகவும் நாலுபாகங்களை ஒருகூறுகவும் வைத்து இந்நான்கு பாகங்களில் ஓவ்வொன்றையும் தன் பெருங்கூறைவிட்டு மற்றப்பூதங்களின் பெருங்கூருடன் தனித்தனியே சேர்க்கின் பஞ்சீகரணமாகும்.

308. இந்தப்பஞ்சீகரணத்தின் முதல் விதப்படி எல்லாப்பூதங்களிலும் பாதிபாகம் தங்கள் ஸ்வாம்சமாகவும் மற்றப்பாதி மற்றப்பூதங்களுடைய அம்சமாகவும் இருப்பதால் ஸ்வாம்சம் மறைபட்டு ஆகாசாதிபூதங்கள் வெவ்வேறுக விளங்காமல் போகக்கூடுமென்று சில முழுமூடர்களுடைய மனதில் சங்கை ஜனிக்கக்கூடும். இதை நிவிர்த்திப்பதற்காக இரண்டாவதுவிதப்பஞ்சீகரணஞ்சீசால்லப்பட்டது. இதில் ஸ்வாம்சம் 21 பாகமாகவும் மற்றப்பூதங்களின் அம்சம் நான்கு பாகமாகவுமிருப்பதால் ஓவ்வொரு பூதமும் தனித்தனியே விளங்குகிறது.

309. வ்ஸ்தூலப்பிர்ம்மாண்டம்:— இந்தப்பஞ்சீகிருதபூதங்களால் இந்திரியங்களுக்கு விஷயமான வ்ஸ்தூலப்பிர்மாண்டமுண்டாகிறது. இந்தப்பிர்ம்மாண்டத்தில் பூலோகம், புவர்லோகம், சுவர்க்கலோகம், மகர்லோகம், ஜனலோகம், தபோலோகம் சத்தியலோகமென ஏழு மேல்லோகங்களும், அதல, சுதல, ப்ராதாள, விதல, ரஸாதல, தலாதல, மகாதல என்னும் ஏழு கீழ்லோகங்களுமிருக்கின்றன. இந்த 14 லோகங்களில் ஜீவனுடைய போகத்துக்கு யோக்கியமான அன்னதிகளும் போகத்துக்கு ஸ்தானமான தேவ

மனுஷ்ய பசு முதலிய ஸ்தூலசரீரங்களுமுண்டாகின்றன. இப்படி ஸம் சேஷபமாகச்சிருஷ்டி நிரூபிக்கப்பட்டது. மாயையினுடைய காரியத்தை விஸ்தாரமாக நிரூபிப்பதில் கோடிபிர்ம்மாக்களுடைய ஆயுசு போதாது. இதை வால்மீகர் வாசிஷ்டத்தில் அனேக இதிஹாஸங்களால் நிரூபித்திருக்கிறார்.

அத்மவிவேகம்பஞ்சகோசவிவேகம் (310—321)

310. **பஞ்சகோசங்கள்:—** மாயை, மாயையின் காரியம் இவைகளில் மூன்று சரீரங்களும் ஐந்துகோசங்களும் இருக்கின்றன. சுத்தசத்துவகுணசக்திகமாயை ஈஸ்வரனுடைய காரணசரீரமாம்.

---

20. இவைகள் **ஸ்தூல** சூக்ஷ்ம காரணங்களாம். **ஸ்தூலசரீரம் அல்லது தேகம்:—** ஜீர்ணித்துப் போகிறபடியால் சரீரமெனவும், தகிக்கப்படுவதால் தேகமெனவும் பெயர். மயிர் தோல் நரம்பு தசை எலும்பு கொழுப்பு இவ்வாறும் ஸ்தம்பம்போல் பிரத்தியக்ஷத்தில் தோற்றுகிறபடியால் ஸ்தூலதேகமெனப்பெயர் வந்தது. இந்த **ஸ்தூல**தேகம் 25 தத்துவங்களாலுண்டாயிருக்கிறது. அவைகள் அடியிற்கண்ட பதகத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

முக்கியதத் துவங்கள்	இவைகளின் அம்சங்கள்.				
	பிருதிவி	அப்பு	தேயு	வாயு	ஆகாசம்
பிருதிவி	எலும்பு	மாமிசம்	நரம்பு	தோல்	மயிர்.
அப்பு	இரத்தம்	சுக்கிலம்	மூத்திரம்	வியர்வை	வாய்நீர்
தேயு	ஆலஸ்யம்	காந்தி	பசி	நாகம்	நித்திரை
வாயு	சுருங்கல்	நடத்தல்	இருத்தல்	ஓடல்	விரிதல்
ஆகாசம்	பயம்	மோகம்	குரோதம்	காமம்	சோகம்
	ஸ்லேஷ்மகபித்தம்	,, உதரம்	,, இருதயம்	,, கண்டம்	,, சிரஸ்

மேற்கண்ட பதகத்தில் பிருதிவியில் பிருதிவியம்சம் எலும்பு. பிருதிவியம்சமும் ஜலஅம்சமும் சேர்ந்ததுமாமிசம். பிருதிவியம்சமும் தேயு அம்சமும் சேர்ந்தது நரம்பு. பிருதிவியம்சமும் வாயு அம்சமும் சேர்ந்தது தோல். பிருதிவியம்சமும் ஆகாசமும் சேர்ந்தது மயிர். இவ்வாறே மற்ற

தூதங்களிலும் அறியத்தக்கது. மேற்சொல்லிய 25 தத்துவங்களின் பஞ்சபூத லக்ஷணமும் அடியில் வருமாறு.

I. ஆகாசத்தில். (1) பயம் உண்டாகும்போது பிருதிவியைப் போல் சரீரம் ஜடாமகிறபடியால் பயம் பிருதிவீரூபம். (2) புத்திராதிகளிடத்தில் ஜலம் போல பிரசரிக்கிறபடியால் மோகம் ஜலரூபம். (3) அக்கினி போல் தகிக்கிறபடியால் குரோதம அக்கினி ரூபம். (4) காமனுரூபவிர்த்தி வாயுபோல்சலிக்கிறதினால் காமம் வாயுரூபம். (5) சோகம் உண்டாகும் போது ஆகாசம்போல் தேகம் சூன்னியமாயிருக்கிறபடியால் சோகம் ஆகாச ரூபம். II வாயுவில். (6) பிருதிவிபோல் சங்கோசமடைவதால் சுருங்கல் பிருதினி அம்சம். (7) ஜலம்போல்சலிக்கிறபடியால் நடத்தல் ஜலாம்சம். (8) தேஜஸைப்போல் உலர்த்துகிறபடியால் அல்லது பிரகாசிக்கிறபடியால் வலனம் (இருத்தல்) அக்கினி அம்சம். (9) வாயு ஓடுவதுபோலிருப்பதால் ஓடல் வாயு அம்சம். (10) ஆகாசம்போல் பிரசரிக்கிறபடியால் விரிதல் ஆகாசாம்சம். III தேயுவில். (11) ஜடஸ்வபாவத்தால் ஆலஸ்யம் பிருதிவி அம்சம். (12) ஜலமும் புகையோடு கூடியிருப்பதால் காந்திஜலாம்சம். (13) சாப்பிட்டதை பஸ்மமாக்குவதால், பசி தேயு அம்சம். (14) சாத்து சிரியதனியை சோஷிக்கிறதுபோல், கண்டத்தை சோஷிக்கிறபடியால், நாகம் வாயு அம்சம். (15) நித்திரைவரும்போது ஆகாசம்போல் சரீரம் சூன்னியமாயிருப்பதால் நித்திரை ஆகாசாம்சம். IV அப்புவில். (16) சிலபூக்களைப்போல் இரக்தவர்ணமுள்ளபடியால், இரக்தம் பிருதிவியம்சம். (17) கர்ப்பத்துக்குரோதுவானது ஜலம் போலிருப்பதால் சுக்கிலம் ஜலாம்சம். (18) தேஜஸ் போல் ஷ்ண மாயிருப்பதால், மூத்திரம் தேஜஸின் அம்சம். (19) வேர்வை இரக்தைகளுடைய சிரமத்தாலுண்டாவதுபோல் வியர்வையும் சிரமத்தாலுண்டாவதால் வாயுவின் அம்சம். (20) ஆகாசம்போல் கீழும் மேலும் போவதால் வாய் நீர் ஆகாசாம்சம (V) பிருதிவியில். (21) கடினமாயிருப்பதால் எலும்பு பிருதிவீ அம்சம். (22) ஈரமிருப்பதால் மாம்சம் ஜலாம்சம். (23) சரம்பில் நின்றும் தாபமுண்டாவதால், சரம்பு தேயு அம்சம். (24) தோஷ்ணங்களால் தோல் வாயு அம்சம். (25) மயிர் எடுத்தால், ஆகாசம்போல் பீடிக்காமல் சூன்னியமாயிருக்கிறது. ஆகையால் மயிர் ஆகாசாம்சம.

முன் சொல்லிய பயம் முதலியவை சூக்ஷமதேகத்தின் முக்கியதர்மங்களாயிருக்கின்றன. ஜலத்தின் குளிர்ச்சி கடத்தில் தோன்றுவதுபோல் இவைகளும் ஸ்தூலதேகத்தில் தோன்றுவதால் ஸ்தூலதேகத்தின் குணதர்மங்களாயிருக்கின்றன. ஆகையால் ஸ்தூலதேகத்தின் தத்துவங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த 25 தத்துவங்களின் சமுதாயத்துக்கு ஸ்தூலதேகமென்று பெயர். காமம், ஜாதி, ஆசிரமம், வர்ணம் (நிறம்) ஆகாரம் (உருவம்) ஜனனம்

மனோசத்துவகுணசகித அவித்தியாம்சம் ஜீவனுடைய காரணசரீரமாம்.[21] பஞ்சசூக்ஷ்மபூதங்கள், மனம புத்தி சித்தம் அகங்காரம், பஞ்சப்பிராண மரணம் முதலியவை வ்ஞானதேசத்தின் தர்மங்களாம். அன்னத்தின் வ்ஞான பாகத்தால் மலமும் மத்தியபாகத்தால் மாமிசமும் சூக்ஷ்மபாகத்தால் மனதும் உண்டாகின்றன. ஜலத்தின் வ்ஞானபாகத்தால் மூத்திரமும் மத்தியபாகத்தால் இரத்தமும் சூக்ஷ்மபாகத்தால் பிராணனுமுண்டாகின்றன. உண்ணப்படும் தேஜபதார்த்தங்களின் வ்ஞான பாகத்தால் எலும்பும் மத்தியபாகத்தால் மேதை (வெள்ளைமாமிசம்) யும் சூக்ஷ்மபாகத்தால் வாக்குமுண்டாகின்றன. தாயினுடைய இரத்தத்தினின்றும் இரத்தம் மாமிசம் தோலுண்டாகின்றன. பிதாவினுடைய வீரியத்தினின்றும் எலும்பு நரம்பு மஜ்ஜை இவைகளுண்டாகின்றன. வ்ஞான சரீரம் நான்கு விதம். [1] அண்டஜம். [2] ஜராயுஜம். [3] வ்ஸ்வேதஜம். [4] உத்பிஜம். கருப்பையிலிருந்துண்டாகும் மனுஷியன் மிருகங்கள் ஜராயுஜங்களாம். முட்டையிலிருந்துண்டாகும் பக்ஷி பாம்பு முதலியவைகள் அண்டஜங்களாம். வியர்வையாலுண்டாகும் பேன் புழு முதலியவை வ்ஸ்வேத ஜங்களாம். வித்தினின்று பூமியைப் பிளந்து புறப்படும் மரஞ்செடி முதலியவை உத்பிஜங்களாம்.

சூக்ஷ்மசரீரம்:— அபஞ்சீகிருதமான 17 தத்துவங்களோடு கூடியது என்று ஆத்மபோதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன:— பிராணன்கள் 5 கர்மேந்திரியங்கள் 5. ஞானேந்திரியங்கள் 5. மனம் 1. புத்தி 1. ஆக 17. இதற்கு லிங்கசரீரமென்றும் பெயராம். சுபாசுபக்கிரியைகளைச் செய்தல் சுகதுக்க போகங்களைப் புஜித்தல் இகலோகம் வருதல், இராகத்துவேஷாதிகள் சமதமாதிகள் அந்தமந்தாதி குணங்கள் இவைகளெல்லாம் லிங்கசரீரத்தின் தர்மங்களாம். வ்ஞான சரீரம்போல் வ்ஞானமாய்த் தோன்றுதபடியால் சூக்ஷ்ம சரீரமெனவும், ஸ்தூலாதி விஷயங்களையறியப் பண்ணுகிறபடியினாலும் ஆத்மாவை லக்ஷணத்தினால் அறியப்பண்ணுகிற படியினாலும் லிங்கதேகமெனவும் பெயருண்டாயிற்று.

காரணசரீரம்:— இதுவே அஞ்ஞானம். வ்ஞானலிங்கதேகங்களுக்கு அஞ்ஞானம் காரணமாயிருப்பதால் அதுவே காரண சரீரமென்று சொல்லப்படுகிறது. அஞ்ஞானத்தின் சொரூபம் முன் (196) சொல்லப்பட்டிருக்கிறது தத்துவத்தால் தெரிக்கப்படுவதால் காரணதேகமென்று பெயர்.

21. **ஈஸ்வரனுடைய சரீரங்களுந்தோசங்களும்:—** சமஷ்டி அஞ்ஞானரூபமாயை ஈஸ்வரனுடைய காரணசரீரம். இதுவே ஈஸ்வரனுடைய ஆனந்தமயகோசம். ஜீவர்களுடைய சூக்ஷ்மசரீரங்களின் சமஷ்டியாகிய ஹிரண்ய

ன் பஞ்சகர்மேந்திரியங்கள் பஞ்சஞானேந்திரியங்கள் இவைகள் சேர்ந்து ஜீவனுடைய சூக்ஷ்மசரீரமாகிறது. சகலஜீவர்களின் சூக்ஷ்மசரீரங்களுஞ்சேர்ந்து ஈஸ்வரனுடை சூக்ஷ்மசரீரமாகிறது. ஸ்தூலப்பிர்ம்மாண்டமெல்லாம் ஈஸ்வரனுடைய ஸ்தூல சரீரமாகிறது. ஜீவனுடைய வியஷ்டி ஸ்தூல சரீரம் பிரசித்தமாயிருக்கிறது. இந்த மூன்றுசரீரங்களிலேயே பஞ்சகோசங்களும் இருக்கின்றன. காரணசரீரத்துக்கு ஆனந்தமய கோசமென்றுபெயர். சூக்ஷ்மசரீரத்தில் விஞ்ஞானமய கோசம் மனோமயகோசம் பிராணமயகோசம இம்மூன்றுகோசங்களிருக்கின்றன. பஞ்சஞானேந்திரியங்களும் நிச்சயரூபமான அந்தக்கரணத்தின் விர்த்தியான புத்தியும் சேர்ந்து விஞ்ஞானமயகோசமென்னப்படும். பஞ்சஞானேந்திரியங்களும் சங்கல்பவிகல்பாத்மகமான அந்தக்கரணவிர்த்தியாகிய மனதும் சேர்ந்து மனோமயகோசமென்னப்படும். பஞ்சப்பிராணனும் பஞ்சகர்மேந்திரியங்களுஞ்சேர்ந்து பிராணமயகோசமென்னப்படும். 'ஸ்தூலசரீரத்துக்கு அன்னமயகோசமென்றுபெயர்.

இவ்விதமாக மூன்று சரீரங்களிலேயே ஐந்து கோசங்களுமிருக்கின்றன.[22]

கர்ப்பம் ஈஸ்வரனுடைய சூக்ஷ்மசரீரமாம். இதில் விஞ்ஞானமய மனோமய பிராணமயங்களாகிற மூன்றுகோசங்களிருக்கின்றன. இவைகளில் திக்பாலர்கள் வாயு சூரியன் வருணன் அஸ்வினீ குமாரர்கள் இவைகளாகிற ஈஸ்வரனுடைய பஞ்சஞானேந்திரியங்களும் சமஷ்டிபுத்திமயமான மகதத்துவமாகிற ஈஸ்வரனுடைய புத்தியும் சேர்ந்து ஈஸ்வரனுடைய விஞ்ஞானமயகோசமாகின்றன. மேற்சொல்லிய ஞானேந்திரியங்களும் சமஷ்டிமனமாகிற ஈஸ்வரனுடைய அகங்காரதத்துவமாகிற மனமுஞ்சேர்ந்து ஈஸ்வரனுடைய மனோமயகோசமாகின்றன. அக்கினி இந்திரன் உபேந்திரன் பிரஜாபதி யமன் ஆகிற ஐந்து ஈஸ்வரனுடைய கர்மேந்திரியங்களும் சமஷ்டிப்பிராணனாகிய ஈஸ்வரனுடைய பிராணனுஞ்சேர்ந்து ஈஸ்வரனுடைய பிராணமயகோசமாகின்றன. சமஷ்டிஸ்தூலசரீரமாகிய விராட் ஈஸ்வரனுடைய ஸ்தூலசரீரம். இது ஈஸ்வரனுடைய அன்னமயகோசம்

22. பஞ்சகோசங்கள்:— தாய்தந்தையரால் உண்ணப்படும் அன்னத்தினின்று உண்டாகும் தாயினுடைய இரத்தத்தினின்றும் பிதாவினுடைய வீரியத்தினின்றும் தாயினுடைய உதரத்தில் உற்பன்னமாகி ஜனனத்துக்குப்பிறகு பால்முதலிய அன்னங்களால் வளர்க்கப்பட்டு மரணத்துக்குப்பிறகு அன்னரூபமான பிருதிவியில் லயமடைகிற தேகம் அன்னமயகோசமென்னப்படும். பிராணமயகோசம் கேவலம் ரஜோகுணத்தின் அவஸ்தை. பிராணாதி வாயுக்கள் சரீரத்தில் பூரித்து சரீரத்துக்குப்பலத்தைக்கொடுத்து இந்திரியங்களை அவைகளின் காரியத்தில் பிரவிர்த்திக்கும்படிச்செய்கின்றன. கர்மேந்திரியங்களால் வியவகாரஞ் செய்வதிலுமும் இச்சைமுதலிய ரஜோகுணவிர்த்திகளுடன் கூடியிருப்பதாலும் மனோமயம்சத்துவ ரஜோகுணங்களின் அவஸ்தையாம். விஞ்ஞானமயம் கேவலம்

ஈஸ்வரசரீரத்தில் ஈஸ்வராகோசமும் ஜீவசரீரத்தில் ஜீவகோசமும் இருக்கின்றன. கோசமென்றால் உறை. உறைபோல் பஞ்சகோசங்கள் ஆத்மாவின் ஸ்வரூபத்தை மறைக்கிறபடியால் அன்னமயாதிகள் கோசங்களென்று சொல்லப்படுகின்றன. அனேக மந்தபுத்தியுள்ளவர்கள் அந்தமாக்களான பஞ்சகோசங்களில் ஒன்றை ஆத்மாவாக நினைத்து முக்கியமான சாக்ஷியாகிற ஆத்மஸ்வரூபத்தை யறிகிறதில்லை. ஆனதால் அன்னமயாதிகள் ஆத்மஸ்வரூபத்தை மறைக்கின்றன.

311. **அன்னமயகோசமே ஆத்மா**:— சிலபாமர ஜனங்கள் **விரோசன** மதத்தை யனுசரித்து ஸ்தூலசரீரரூபமான அன்னமயகோசத்தையே ஆத்மாவென்கிறார்கள். அவர்களுடைய சித்தாந்தத்துக்கு அடியில் வருமாறு யுக்திசொல்லுகிறார்கள்:— எதில் நான் என்னும் புத்தி யுண்டாகிறதோ அது ஆத்மா. இந்த நான் என்னும்புத்தி ஸ்தூலசரீரத்திலுண்டாகிறது. 'நான் மனுஷன், 'நான் பிராமணன்' இப்பெயர்ப்பட்ட பிரதீதிகள் எல்லாருக்கும் உண்டாகின்றன. மனுஷ்யத்வம் பிராமணத்வம் ஸ்தூலசரீரத்தில்தான் இருக்கின்றன. ஆகையால் ஸ்தூலசரீரம் நான் என்னும்புத்திக்கு விஷயமாயிருக்கிறது. ஆனதால் ஸ்தூலசரீரமே ஆத்மா மேலும் எதில்முக்கியமான பிரீதியுண்டாகிறதோ அது ஆத்மா. ஸ்திரீபுத்திரன் தனம் பசு முதலியவைகள் ஸ்தூலசரீரத்துக்கு உபயோகப்படுமாதலில் இவைகளில் பிரீதி யுண்டாகிறது. உபயோகப்படாவிட்டால் பிரீதியுண்டாகிறதில்லை. எதின் நிமித்தமாக அன்னியபதார்த்தங்களில் பிரீதியுண்டாகிறதோ அந்த ஸ்தூலசரீரத்திலேயே முக்கியமான பிரீதியிருக்கிறது. ஆகையால் ஸ்தூலசரீரமே ஆத்மா. அதற்கு

சத்துவகுணத்தின் அவஸ்தையாம். இவ்விதமாக அவஸ்தாபேதத்தால் ஒரே சூக்ஷ்மசரீரத்தில் மூன்றுகோசங்கள் சொல்லப்படுகின்றன. ஆத்மாவின் ஸ்வரூபம் ஆனந்தம். இதினுடைய பிரதிபிம்பத்துடன் கூடியும் பிரியமோதப்பிரமோதங்களாகிற விர்த்திகளுடைய லயத்துக்கு ஸ்தானமாயும் இருக்கிறது அவித்தையாகிறகாரணதேகம். இதுவே ஆனந்தமயகோசம். இஷ்டவிஷயத்தைப் பார்க்கிறதினாலுண்டாகும் விர்த்தி பிரியமென்னப்படும். அதையடைவதாலுண்டாகும் விர்த்தி மோதமென்னப்படும். அதையனுபவிப்பதாலுண்டாகும் விர்த்தி பிரமோதமென்னப்படும். இவ்விருத்திகள் ஜாக்கிரஸ்வப்னங்களில் புண்ணியகர்மத்தின் பலனுகிற சுகானுபவத்திலுண்டாகின்றன. சுஷுப்தியில் இவ்விர்த்திகள் தங்களுக்குக்காரணமான அஞ்ஞானத்தில் லயமாகின்றன. இந்த அஞ்ஞானம் ஆனந்தமயகோசமென்று சொல்லப்படுகின்றது. அன்னமயகோசம் போகஸ்தானம். சூக்ஷ்மசரீரம் போகசாதனம். பிராணமயகோசம் கிரியாசக்தியுள்ளகாரியரூபம். மனோமயம் இச்சாசக்தியுள்ள காரணரூபம். விஞ்ஞானமயம் ஞானசக்தியுள்ள கர்த்தாரூபம். ஆனந்தமயகோசம் போக்தாரூபம்.

வஸ்திரம் பூஷணம் அஞ்சனம் மஞ்சனம் நானவிதபோஜனங்கள முதலிய வைகளால் உபசரிப்பதே பரமபுருஷார்த்தம். இது அசுரஸ்வாமியாகிய விரோசனருடைய சித்தாந்தம்.

23

---

23. தேகாத்மவாதிமதம்:— சார்வாகமதத்தை யனுசரித்தவர்கள் வாயு முதலிய நான்கு பூதங்களின் சங்காதமாகிற தேகத்தை ஆத்மாவாகப்பாவித்து அடியிற்கண்ட யுக்திகளைச்சொல்லுகிறார்கள். [1] நான் என்கிற புத்திக்கு விஷயமானது ஆத்மா. நான் மனுஷியன்; ஸ்தூலமாயிருக்கிறேன். மெலிந்திருக்கிறேன், நான் பிராமணன் இவ்விதம் அனுபவத்தினால் மனுஷியமுதலிய தர்மங்களோடுகூடிய ஸ்தூலதேகத்திலேயே நான் என்கிற புத்தியுண்டாவதால் தேகமே ஆத்மா. [2] பராமப்பிரீதிக்கு விஷயமானது தேகம். அதையுத்தேசித்துத்தான் ஸ்திரீ புத்திரதனாதிகளிற் பிரீதியுண்டாகிறது. பரமப்பிரீதிக்கு விஷயமாகிறதினால் தேகமே ஆத்மா. [3] அந்தத்தேகத்தையலங்காரித்தல போஷித்தல முதலியன பரமபுருஷார்த்தங்களாம். [4] மரணமே மோக்ஷம். [5] பிரத்தியக்ஷமே பிரமாணம் மற்றவை அப்பிரமாணம். இந்தமதம் அடியில் வருமாறு கண்டிக்கப்படுகிறது. [1] நான் பார்க்கிறேன், கேட்கிறேன் பேசுகிறேன் என்பதில் இந்திரியமும் நான் என்பதற்கு விஷயமாயிருக்கிறது. [2] என்னுடைய தேகமென்பதில் மமதை தோன்றுகிறது. மமதைக்கு விஷயமானது அகந்தைக்கு விஷயமாகமாட்டாது. ஆகையால் தேகம் ஆத்மாவன்று. [3] ஸ்திரீ முதலியவைகளைக்காட்டிலும் தேகத்தில் அதிகப்பிரீதி தோன்றுவதுபோல் தேகத்தைக்காட்டிலும் இந்திரியங்களில் அதிகப்பிரீதி இருக்கிறது. ஆகையால் ஸ்தூலதேகத்தில்தானே அதிகப்பிரீதி இருக்கிறதாகச்சொன்னது சரியன்று. ஆகையால் தேகம் ஆத்மாவன்று. [4] சேதனமே ஆத்மா. ஜடமான பூதங்களுடைய சங்காதத்தில் சேதனமில்லாதபடியால் தேகம் ஆத்மாவன்று. [5] பாக்கு சுண்ணாம்பு இலைகளுடன்கூடிய தாம்பூலத்தில் சிவப்பு வர்ணங்கொடுக்குஞ்சக்தியிருப்பதுபோல் பூதசமுதாயமான தேகத்தில் ஞானசக்தியிருக்கிறதாகச் சொல்லுவது சரியன்று. ஏனெனில் பூதசமுதாயமான தேகத்தில் சேதனமிருந்தால் பூதசமுதாயமான கடத்திலும் சேதனமிருக்கக்கூடும். [6] சுஷுப்தி, மூர்ச்சை, மரணம் முதலிய அவஸ்தைகளில் கடம்போல் தேகமும் ஜடமாயிருக்கிறது. இது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. ஆகையால் ஜடதேகம் ஆத்மாவன்று. [7] தேகமே ஆத்மாவானால் பாலகசரீரத்துக்குப்பின்னமான யௌவனசரீரத்தில் 'அவனே நான்' என்று உண்டாகும் ஞானமுண்டாகக்கூடாது. அப்படியுண்டாவதால் தேகம் ஆத்மாவன்று. (8) சரீரத்துக்கு ஜன்ம மரணங்களுண்டு. ஆகையால் ஜன்மத்துக்கு முன்னும் மரணத்துக்குப் பின்னும் சரீர

312. இந்திரியமே ஆத்மா:— வேறுசிலர், சொல்லுகிறதாவது, ஸ்தூலசரீரம் ஆத்மாவன்று. ஆனல் ஸ்தூலசரீரத்தில் எது இருப்பதினல் ஜீவிக்கிற வியவகாரமேற்படுகிறதோ எது இல்லாவிட்டால் இறந்துபோன வியவகாரமேற்படுகிறதோ அதுவே ஆத்மா. அது ஸ்தூலசரீரத்துக்கு வேறுகவிருக்கிறது. ஜீவிப்பதும் மரிப்பதும் இந்திரியத்துக்காதீனமாயிருக்கின்றன. சரீரத்தில் இந்திரியமுள்ளவரையில் ஜீவிப்புண்டு. இந்திரியங்களில் ஏதாவதொன்று இல்லாவிட்டால் மரணமென்று சொல்லப்படுகிறது. நான் பார்க்கிறேன் பேசுகிறேன் கேட்கிறேன் என்பவைகளில் நான் என்கிற புத்தி இந்திரியத்திலிருக்கிறது.[24] ஆகையால் இந்திரியமே ஆத்மா.

313. பிராணனே ஆத்மா:— ஹிரண்யகர்ப்பவுபாஸகர்கள் பிராணனே ஆத்மாவென்று சொல்லுகிறார்கள். அவர்கள் யுக்தி வருமாறு:— மரணசமயத்தில் மூர்ச்சையுண்டானல் சமீபத்திலிருக்கப்பட்ட புத்திராதிகள் பிராணனிருந்தால் ஜீவித்திருப்பதாயும் பிராணனில்லாவிட்டால் இறந்துபோய்விட்டதாயும் அறிகிறார்கள். பின்னும் சரீரத்தில் நேத்திரேந்திரியம் இல்லாவிட்டால் சரீரத்துக்கு அந்தகத்துவம் சித்திக்கிறது. இப்படியே சுரோத்திரேந்திரியமில்லாவிட்டால் செவிடாயும், வாக்கில்லாமற்போனல ஊமையாயும் இவைபோல் இல்லாத இந்திரியங்களி

மில்லை. ஆனல் ஆத்மா இருக்கிறது. அப்படி யில்லாவிட்டால் கிருதநாசம் அகிருத அப்பியாகமங்களாகிற தோஷங்கள் நேரிடும். ஆகையால் தேகமே ஆத்மாவல்ல. [9] தேகத்தை யலங்கரித்தல் போஷித்தல் முதலிய போகங்களே புருஷார்த்தமென்று சொன்னது சரியன்று. ஏனெனில் இச்சைக்கு விஷயமானது புருஷார்த்தம். சுகப்பிராப்தியிலும் துக்கநிவிர்த்தியிலும் எல்லாருக்கும் இச்சையிருப்பதால் அவைகள்தாம் புருஷார்த்தங்கள். எல்லாசுகங்களையும்விட அதிகசுகமும அத்தியந்த துக்கநிவிர்த்தியும் பரமபுருஷார்த்தமென்னப்படும். இவை மோக்ஷத்திலிருக்கின்றன. போகங்களில் தோஷங்களிருப்பதால் அவை புருஷார்த்தங்கள் அல்ல. [10] தேகமே ஆத்மாவானல் மரணத்துக்குப் பிறகு தேகம் தகிக்கப்பட்டுப்போவதால் ஒன்றும்மிச்சப்படுகிறதில்லை. ஆகையால்மோக்ஷத்துக்கு ஆஸ்பதமில்லை. பிரலாபமட்டுந்தான் மிஞ்சுகிறது. [11] அனுமான சாப்தமுதலிய பிரமாணங்கள் அனுபவசித்தமாயிருப்பதால் பிரத்தியக்ஷத்தைத்தவிர வேறு பிரமாணங்களில்லையென்று சொன்னது ஹடமே.

24. இந்திரியாத்மவாதிகள் லோகாயதர்கள் இவர்களுடைய மதமும் சரியன்று. ஏனெனில் (I) எது இல்லாவிடடால் சரீரமிருக்கமாட்டாதோ அது ஆத்மா. கண் முதலியவைகள் இல்லாவிட்டாலும் சரீரமிருக்கிறது. ஆ

ன் வியாபாரமன்றியிலும் சரீரமட்டும் இருந்துக்கொண்டேயிருக்கிறது. பிராணன் இல்லாமற்போனல் தேகம் அந்தக்ஷணமே மயானம்போல அமங்களமாயும் பயங்கரமாயுமிருக்கிறது. மேலும் நான் பார்க்கிறேன் கேட்கிறேன் என்பதாலும் இந்திரியங்களுக்கு வேறுப் ஆத்மா இருப்பதா கச்சித்திக்கிறது. ஏனெனில் நேத்திரஸ்வரூபமான நான் பார்க்கிறேன் சிரவணரூபமான நான் கேட்கிறேன் என்று பிரதீதியுண்டானல் இந்திரியமே ஆத்மாவாகக்கூடும். ஆனல் நேத்திரத்தோடுகூடின நான் பார்க்கிறேன், காதுடன் கூடின நான் கேட்கிறேன் என்று பிரதீதியாகிறபடியால் இந்திரியத்துக்கு வேறுகவே ஆத்மா இருக்கிறது. மேலும் சுஷுப்தியில் யாதொரு இந்திரியமும் இல்லாமலிருக்கும்போதும் பிராணனிருப்பதால் ஜீவக்கிறான் என்கிற வியவகாரம் சித்திக்கிறது. ஆகையால் ஜீவிப்பதும் மரிப்பதும் இந்திரியங்களுக்காதீனமல்ல. ஸ்தூலசரீரத்துக்கும்

கையால் இந்திரியம்ஆத்மாவன்று. [2] நான் பார்க்கிறேன் கேட்கிறேன், இவ்விதமாக நான் என்பதற்கு இந்திரியம் விஷயமாயிருப்பதால் இந்திரியமே ஆத்மா என்று சொல்வது சரியன்று. ஏனெனில் நேத்திரத்துடன் கூடிய நான் பார்க்கிறேன் என்பது அபிப்பிராயமேதவிர நேத்திரமாகிய நான் பார்க்கிறேன் என்பது அபிப்பிராயமன்று. ஆகையால் நான் என்பதறகு விஷயம் இந்திரியத்தைச்காட்டிலும் வேறுனதென்று சித்திக்கிறது. மேலும் என்பார்வை மந்தமாயிருக்கிறதென்பதால் இந்திரியம் மமதைக்கு விஷயமாகிறது. ஆகையால் இந்திரியம் ஆத்மாவன்று. [3] எவன் எதையறிகிறுனே அவன் அதற்கு வேறுயிருக்கிறுன். கடத்தைப்பார்க்கிறவன் கடத்துக்கு வேறுயிருப்பதுபோலும். இந்திரியத்தினுடைய மந்ததீக்ஷணகுணங்களை யறிகிற ஆத்மா இந்திரியத்துக்கு வேறுகவே இருக்கவேண்டும். [4] மனது வியாகுலப்பட்டிருக்கும்போது ஒன்றும் பார்க்கப்படுகிறதில்லை, கேட்கப்படுகிறதில்லை. ஆகையால் ஜடமென்பது அனுபவசித்தம். ஜடமாவதால் இந்திரியம் ஆத்மாவன்று. [5] ஜடமாய் இந்திரியமே சேதனம் என்று சொல்லுகிறவனைக்கேட்கவேண்டியதாவது ஒரேயொரு இந்திரியம் சேதனமா, இந்திரியங்களெல்லாஞ்சேர்ந்தது சேதனமா, அல்லது ஒவ்வொரு இந்திரியமும் தனித்தனியே சேதனமா? முதற்பக்ஷம் ஒவ்வாது. ஏனெனில் எந்த இந்திரியத்தைச்சேதனமாகச்சொல்லுகிறுமோ அது இல்லாவிடினும் ஞானமும் ஜீவனும் காணப்படுகின்றன. ஆகையால் இந்திரியம் சேதனமன்று. இரண்டாவதுபக்ஷத்தில் ஒரிந்திரியம் நஷ்டமானல் சமுதாயத்துக்கு ஹானி வந்துவிடுகிறது. ஆகையால் சேதனம், ஞானம், ஜீவன் ஒன்றும் இருக்கமாட்டாது. அனுபவத்தில் இப்படி இல்லாததினல் சமுதாயம் சேதனமன்று. மூன்றுவது பக்ஷமும் சரியன்று. ஒவ்வோரிந்திரியமும் தனித்தனியே ஆத்மாவானல் ஒரு சரீரத்தில் பத்து ஆத்மாக்களிருக்கவேண்டும். ஒவ்வொன்

பிராணனுக்குமுண்டாகிறவியோகமேமரணம். ஆகையால் ஜீவனமரணங்
ள் பிராணதீனமாயிருக்கின்றன. இந்தப்பிராணனே ஆத்மா.

314. மனமேஆத்மா:— வேறுசிலர் சொல்வதாவது, பிரா
ணன் ஜடம்; ஆகையால் கடம்போல அது அனாத்மா. பந்தமோக்ஷங்கள்
மனதுக்காதீனமாயிருக்கின்றன. விஷயத்தில் ஆஸக்தியையடைந்த மனம்

நின் இச்சை வெவ்வேறுக இருக்கக்கூடுமானதால் ஒருவாழைமரத்திற் கட்டப்
பட்ட பத்துயாணைகளால் அந்த வாழை பங்கப்படுவதுபோல் தேகம் பங்கமாய்
விடும். ஆகையால் ஒவ்வோரிந்திரியமும் தனித்தனியே சேதனமன்று. இவ்வி
தமாக இந்திரியம் அசேதனமாகிறதினால் ஆத்மாவன்று. [6] சுருதியிற்சொல்லி
ய இந்திரியஸம்வாதம் இந்திரியஅபிமானிதேவதைகளுடையது. ஸம்வாதத்தா
ல் இந்திரியம் சேதனமென்று ஏற்படவில்லை. இவ்விதமாக இந்திரியமே ஆத்மா
வென்று சொல்லுகிறவர்களின் மதம் பிசகாயிருக்கிறது.

25. பிராணத்மவாதிமதகண்டனை:— சமஷ்டிபிராணனையுபாஸிக்கிற
வைரண்யகர்ப்பர்களுடைய மதமும் சரியன்று. ஏனெனில், [1] பாஹ்லியவா
யுபோல் பிராணனும் வாயுவாயிருப்பதால் பிராணனே ஆத்மாவல்ல. [2] பிரா
ணன் பார்க்கப்படாததினால் மரணம் நியமமாகச்சம்பவிக்கிறதில்லை. விருக்ஷங்
களில் பிராணன் பார்க்கப்படாவிட்டாலும் அவைகள் ஜீவிக்கிறது நன்முய்த்தெ
ரிகிறது. மனுஷன் மூர்ச்சையடையும்போது பிராணனிருக்கிறதாகத்தெரிகிறதி
ல்லை. அதனால் அவன் இறந்துபோய்விட்டானென்று சொல்லப்படுகிறதில்லை.
அவன் ஜீவித்துக்கொண்டேயிருக்கிறான். ஆகையால் பிராணன் ஆத்மாவன்று.
[3] தூங்கிக்கொண்டிருக்கும்போது பிராணன் இருந்தும் ஒருவன் ஒருவஸ்து
வை யெடுத்துக்கொண்டுபோனால் அவனைத்தடுக்கிறதில்லை. ஆகையால பிராண
ன் ஜடம். அது ஆத்மாவன்று. [4] பிராணன் வெளியேபோகிறதினால் தேக
ம்மரிக்கிறது. ஆகையால் பிராணனே ஆத்மாவென்று சொல்வது அசங்கதம்.
ஏனெனில் ஜாடராக்கினி வெளியே போவதினாலும் தேகம் மரிக்கிறது. மரணத்
துக்குப்பிராணன் வெளியேபோவதே காரணமன்று. சுருதியில் பிராணனைச்சி
ரேஷ்டமாகச்சொன்னது பிராணஉபாஸனையிற் பிரவிர்த்தியுண்டாகும்பொருட்
டேயாம். (5) சுருதியில் பிராணமயாதிகோசங்களை ஆதமாவென்று சொனன
தற்குத்தாற்பரியம் என்னவெனில் ஸ்தூலாருந்ததி நியாயத்தால் அதிஷ்டான
மான பிரத்தியகபின்னபரமாத்மாவை யறியும்பொருட்டுத்தான். (6) சுருதியி
ல் பிராணன் இந்திரியங்களுடன் சம்வாதஞ்செய்ததாகவும் தேகத்தில் பிரவேசி
த்ததாகவும் சொன்னது பிராணஅபிமானிதேவதையை யுத்தேசித்துச்சொன்ன
தேதவிரக்கேவலம் பிராணனை யுத்தேசித்துச்சொன்னதன்று. (7) பசியால்
என் பிராணன் போகிறது, போஜனத்தால் என் பிராணன் திருப்தியடைகிற
து; இவ்விதமாகப்பிராணன் மமதைக்கு விஷயமாவதால் அகந்தைக்கு விஷய
மாகிறதில்லை. (8) தன்பிராணன் வெளியேபோகிறதும் உள்ளே வருவதும் அ
னுபவசித்தமாயிருப்பதால் பிராணனையறிகிற ஆத்மா பிராணனுக்கு வேறுகவே
இருக்கிறான்.

பந்தத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. விஷயவாசனையற்ற மனம் மோக்ஷத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. மனச்சம்பந்தத்தினால்தான் இந்திரியம் ஞானத்துக்கு ஹேதுவாகிறது. மனச்சம்பந்தமன்றியில் இந்திரியத்தால் ஞானமுண்டாகிறதில்லை. ஆகையால் சகலவியவகாரங்களுக்கும் மனதே ஹேதுவாயிருக்கிறது. இதுவே ஆத்மா. 16

315. புத்தியேஆத்மா:— க்ஷணிகவிஞ்ஞானவாதிகளான பௌத்தர் சொல்வதாவது, மனதின் வியாபாரம் புத்திக்காதீனமாயிருக்கிறது. ஏனெனில் புத்தியின் ஆகாரமே மனது. ஆனதால் க்ஷணிகவிஞ்ஞானரூபபுத்தியே ஆத்மா. மனது ஆத்மாவன்று. அவர்களுடைய அபிப்பிராயமென்னவெனில் சகலபதார்த்தங்களும் விஞ்ஞான ஆகாரமாயிருக்கின்றன. அந்த விஞ்ஞானம் பிரகாசரூபம். ஒவ்வொருக்ஷணத்திலும் விஞ்ஞானமுண்டாகி நாசமடைகிறது. முந்திய விஞ்ஞானதத்துக்கு ச்சமானமாய் வேறு விஞ்ஞானமுண்டாகிறதினால் முந்தியவிஞ்ஞானம் நாசமடைகிறது.. இப்படியே மூன்றுவது விஞ்ஞானத்தின் உற்பத்தி இரண்டாவது விஞ்ஞானத்தின் நாசம் நான்காவதினுற்பத்தி மூன்றுவதின் நாசம் இவ்விதமாக நதியின் பிரவாகம்போல் விஞ்ஞானத்தின் தாரை தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. இந்த விஞ்ஞானதாரை இருவகை. ஒன்று ஆலயவிஞ்ஞானதாரை, மற்றொன்று பிரவிர்த்திவிஞ்ஞானதாரை. நான் நான் என்கிற விஞ்ஞானதாரைக்கு ஆலயவிஞ்ஞானதாரையென்றும் புத்தியென்றும் பெயர். இது கட்டம் இது சரீரம் என்கிற விஞ்ஞானதாரைக்குப்பிரவிர்த்திவிஞ்ஞானதாரை என்று பெயர். ஆலயவிஞ்ஞானதாரையினின்றும் பிரவிர்த்திவிஞ்ஞானதாரை உற்பத்தியாகிறது. மன

---

26. மனஆத்மவாதிமதகண்டனம்:— நாரதபஞ்சராத்திரத்தை யனுசரித்தவர்கள் மனமே ஆத்மாவென்று சொல்லுகிறார்கள். இது சரியன்று. ஏனெனில் (1) வாய்ச்சி, உளி. இவைகள்போல் மனது கரணமாயிருப்பதால் அது ஆத்மாவன்று. (2) சுஷுப்தியில் சாமானியசேதனம் இருக்கிறது. மனமிருந்தால் சேதனமிருக்கிறது, மனமில்லாவிட்டால் சேதனமில்லையென்பது இல்லை. மனது ஜடம். ஆகையால் அது ஆத்மாவன்று. (3) என்மனது வேறிடத்திற் போயிருந்தது என்றும் இப்போது வந்துவிட்டது என்றும் சொல்வதினால் மனது மமதைக்கு விஷயமாகிறதேதவிர அகந்தைக்கு விஷயமாகிறதில்லை. (4) மனதினஸ்திரதையையும் அஸ்திரதையையும் அறிகிற ஆத்மா மனதுக்கு வேறாயிருக்கிறது. (5) ஆபாஸத்துடன்கூடியிருப்பதினால் மனது போக்தாவாயிருக்கிறது. தான்மட்டும் போக்தாவாயில்லை. ஆகையால் அது ஆத்மாவன்று. (6) "மனிதனுடைய பந்தமோக்ஷங்களுக்குக்காரணம் மனதே. விஷயத்தில் ஆஸக்தியடைந்த மனது பந்தத்தையும் வாஸனாரகிதமனது மோக்ஷத்தையுங்கொடுக்கின்றது." இச்சுருதி ஞானப்பிராப்திமூலமாகவே மோக்ஷத்துக்கும் அந்தியா

தின் ஸ்வரூபமும் பிரவிர்த்திவிஞ்ஞானதாரையிலிருக்கிறது. ஆனதால் ஆலயவிஞ்ஞானதாரைரூப புத்தியின் காரியமாயிருக்கிறது. இத்தப்புத்தி யே ஆத்மா. ஆலயவிஞ்ஞானதாரையில் பிரவிர்த்திவிஞ்ஞானதாரை லய ப்படுவதினால் நிர்விசேஷ க்ஷணிகவிஞ்ஞானதாரையின் ஸ்திதியே இவர்க ள் மதத்தில் மோக்ஷமாம். இவ்விதமாக விஞ்ஞானவாதிகள் புத்தியை க்ஷணிகரூபமாயும் ஸ்வயம் பிரகாசரூபமாயும். பாவித்து அனைதயே ஆத்மா வாகச்சொல்லுகிறார்கள்.

ஆனந்தமயகோசமே ஆத்மா (316—319)

316. பட்டர்மதம்:— பூர்வமீமாம்ஸகர்களில் ஒருவரான **வார்த்திகக்காரபட்டர்** சொல்லுகிறதாவது:— மின்னல் கொடிபோல ஆத்மா க்ஷணிகரூபமன்று. ஆனல் ஸ்திர ஸ்வரூபமான ஆத்மா ஜடரூப மாயும் சேதனரூபமாயும் இருக்கிறது. பட்டருடைய, அபிப்பிராயமென்ன னவெனில் சுஷுப்தியிலிருந்து விழித்துக்கொண்டவன் நான் ஜடமாகத் தாங்கினேனென்று சொல்லுகிறான். இதினல் ஆத்மா ஜடரூபமென்று சித்திக்கிறது. விழித்தவனுக்கு ஸ்மரணையுண்டாகிறது. அறியப்படாத பதார்த்தத்தின் ஸ்மரணையுண்டாகமாட்டாது. சுஷுப்தியில் ஆத்மஸ்வ ரூபந்தவிர வேறு யாதொரு ஞானசாதனமிருக்கவில்லை. ஆகையால் ஸ்ம ரணைக்குக்காரணமாயிருக்கிறது சுஷுப்தியிலுள்ள ஞானமே. இது ஆத் மாவின் ஸ்வரூபம். இவ்விதமாக ஆத்மா ஆகாசவெளிச்சம்போல் பிரகா சரூபமாயும் அப்பிரகாசரூபமாயுமிருக்கிறது. ஞானரூபமாயிருப்பதா ல் பிரகாசரூபமாயும் ஜடமாயிருப்பதால் அப்பிரகாசரூபமாயுமிருக்கிற து. ஆனந்தமயகோசம் பிரகாசரூபமாயும் அப்பிரகாசரூபமாயுமிருக்கிற து. ஏனெனில் சுஷுப்தியில் சேதனத்தின் ஆபாஸசகித அஞ்ஞானம் ஆனந்தமயகோசமென்று சொல்லப்படுகிறது. ஆபாஸம் பிரகாசரூபமா யும் அஞ்ஞானம் அப்பிரகாசரூபமாயும் இருக்கின்றன. இவ்விதமாக ஆ

ஸமூலமாகப்பந்தத்துக்கும் மனது காரணமாயிருக்கிறதென்று சொல்லுகிற தேதவிர மனதே ஆத்மாவென்று சொல்லவில்லை. (7) மனோமயகோசமே ஆத மாவென்று சொல்லும் சுருதிக்குத்தாற்பரியம் முந்தினடிப்பணியிற் சொல்லப் பட்டிருக்கிறது.

27. விஞ்ஞானவாதிமதம்:— இது புத்தனுடைய சிஷ்யனுகிய **யோகாசா** ரியென்னும் நாஸ்திகனுடைய மதம். இதுவும் சரியல்ல. ஏனெனில் (1) ரூபா தி ஞானரூபகாரியத்துக்கு நேத்திராதி இந்திரியம் காரண (சாதன) மாக இரு ப்பதுபோல் நிச்சயரூபகாரியத்துக்குக்காரணமாக இருப்பதால் புத்தி ஆத்மாவா கமாட்டாது. ஆனல் எல்லாபதார்த்தங்களையும் நிச்சயஞ்செய்கிற புத்தியை அறிகிறதுதான் ஆத்மா. (2) அந்த ஆத்மா பிரகாசஸ்வரூபத்தால் எப்போதும்

க்மாவும் ஆனந்தமயகோசமும் பிரகாசரூபமாயும் அப்பிரகாசரூபம்மாயுமி
ருப்பதால் பட்டரையுடைய மதத்தில்[28] ஆனந்தம்யகோசமே ஆத்மாவென்று
சித்திக்கிறது.

317. மாத்தியமிகபௌத்தமதம்:— இவர்கள் சொல்லுகி
றதாவது:— ஆத்மா நிரம்சம், ஆனதால் ஒரே ஆத்மாவுக்குப்பிரகாசரூப
மும் அப்பிரகாசரூபமும்மிருப்பதாகச்சொல்வது சரியன்று. ஆகாசவெளி
ச்சத்தின் ஓரம்சம் பிரகாசமாயும் ஓரம்சம் அப்பிரகாசரூபமாயுமிருப்பது
போல் அம்சமில்லாத ஆத்மாவினிடத்தில் இரண்டுரூபங்களைச்சொல்லு
வது அயுக்தம். ஆனதால் இரண்டுரூபங்களைச்சொல்லவேண்டுமேயானா
ல் ஆத்மாவுக்கு அம்சங்களிருப்பதாக நினைக்கவேண்டும். அம்சத்தோடு
கூடியு கடாதிபதார்த்தங்கள் உற்பத்திநாசங்களுடன் கூடியிருக்கின்றன.
மேலவகள்போல் ஆத்மாவும் அம்சசகிதமானல் ஆத்மாவையும் உற்பத்தி

பிரகாசிக்கிறது. பாஸியபாஸகபேதம்போல் பாஸியமான புத்திக்குப்பாஸக
மான ஆத்மா வேறுபடுகிறது. தீபாதிப்பிரகாசம் கடாதிகளுடன் சேர்ந்து அ
ந்த ஆகாரத்தையடைந்து மிசிரபாவத்தால் பிரகாசித்தாலும் வாஸ்தவந்தில்
வேறுயிருப்பதுபோல் ஞானஸ்வரூபமான ஆத்மா புத்திவிர்த்தியுடன் சேர்ந்து
அதின் ஆகாரத்தையடைந்து பிரகாசித்தாலும் உண்மையில் வேறுகவும் சுத்த
மாசவுமிருக்கிறது. (3) அபஞ்சிகிருதபூதகாரியமான அந்தக்கரண நிச்சயவிர்த்
தியால் புத்தியென்றும், சங்கல்பவிகல்பங்களால் மனது என்றும சொல்லப்ப
டுகிறது. புத்தி காரியமாயிருப்பதால் தேகம் இந்திரியம் மனது இவைகள்
போல் புத்தியும் அனாத்மா. (4) கடவல்லி யுபநிஷத்தில் ஆத்மாவை ரதிகளுயு
ம் தேகத்தை ரதமாயும் புத்தியைச்சாரதியாயும் சொல்லப்பட்டிருக்கிறது. ரத
கனைவிடச்சாரதி வேறுனதால் புத்தி ஆத்மாவன்று. (5) என் புத்தி மந்தமாயி
ருக்கிறது, தீவிரமாயிருக்கிறது, என்பதில் மமதைக்கு விஷயமாயிருகிறது.
(6) ஆகையால் புத்தி அகந்தைக்கு விஷயமாகமாட்டாது. (7) ஆத்மா க்ஷணிக
ரூபமென்று சொல்வதுஞ்சரியன்று. ஏனெனில் (1) ஆத்மா க்ஷணிகமானல்
முதல்வருஷத்தில் கடன்கொடுத்தவன் மறுவருஷத்தில் அதைக்கேட்கக்கூடா
து. முதல்க்ஷணத்தில் போஜனஞ்செய்தவன் மறுக்ஷணத்தில் இல்லாதபடியா
ல் போஜனத்தின் முடிவில் நான் திருப்தியடைந்தேனென்று சொல்லக்கூடா
து. ஆனல் அப்படிச்சொல்வதால் ஆத்மா க்ஷணிகரூபமன்று. (2) ஆத்மா க்ஷ
ணிகரூபமானல் மோக்ஷநிமித்த சாதனங்கள் வியர்த்தமாய்விடும்.

28. ஆத்மாவை ஜடசேதனரூபமாகச்சொல்லுவது சரியன்று. ஏனே
னில் ஒரே இடத்தில் இருட்டும் வெளிச்சமும் சேராததுபோல ஒரேஆத்மாவிட
த்தில் ஜடசேதனங்கள் சேரா. இரண்டு அம்சங்களில் ஒன்று கோசரமாயும் ம
ற்றொன்று அகோசரமாயுமிருப்பதாக சொல்லுவது சரியன்று. தண்டத்தையும்
புருஷனையும் பார்த்தாலொழிய தண்டிவந்தான் என்கிற ஞானமும் உண்டாகிறதி
ல்லை. ஆகையால் ஒரு ஜடாம்சத்தினல்மட்டும் இரண்டு அம்சங்களும் அறிய

கோசங்களுடன் கூடின்தாக நினைக்கவேண்டும். உற்பத்திநாசங்களுடன் கூடினபதார்த்தம் உற்பத்திக்குமுன்னும் நாசத்துக்குப்பின்னும் அசத்தாயிருக்கிறது. ஆதியந்தங்களில் அசத்தாயிருக்கும் பதார்த்தம் மத்தியில் சத்தாயிருக்கமாட்டாது. ஆனல் மத்தியிலும் அசத்தாகவேயிருக்கிறது. ஆகையால் ஆத்மா அசத்ரூபம். இப்படியே ஆத்மாவுக்கு வேறான சகல பதார்த்தங்களும் உற்பத்திநாசங்களுடன் கூடியிருப்பதால் அசத்ரூபங்களாயிருக்கின்றன. இவ்விதமாக ஆத்மாவும் அனாத்மாக்களான சகலவஸ்துக்களும் அசத்ரூபங்களாகிறதினல் சூனியமே பரமதத்துவம். இது சூன்னியவாதியாகிய மாத்தியமிகபௌத்தனுடைய மதம்.

இவர்களும் அஞ்ஞானரூப ஆனந்தமயகோசத்தைப்பிரதிபாதிக்கிறார்கள். ஏனெனில் அஞ்ஞானம் மூன்றுவிதமாய் விளங்குகிறது. (1) அத்வைதசாஸ்திரஸம்ஸ்காரமில்லாத மூடனுக்கு ஜகத்ரூபபரிணமத்தையடைந்த அஞ்ஞானம் சத்தியமாய்த்தோன்றுகிறது. (2) அத்வைதசாஸ்திராநுசாரமான யுக்தியில் நிபுணனயிருக்கிற பண்டிதனுக்கு அஞ்ஞானமும் அதன்காரியமான ஜகத்தும் சதசத்துக்கு விலக்ஷணமான அநிர்வசனீயரூபமாய் விளங்குகின்றன. (3) ஞானநிஷ்டையையடைந்த ஜீவன்முக்தவித்துவானுக்குக்காரியசகிதமான அஞ்ஞானம் துச்சமாகத்தோன்றுகிறது; துச்சம், அசத்து, சூன்யம் இம்மூன்றும் ஒரே அர்த்தத்தைத்தருகின்றன. இவ்விதமாக ஜீவன்முக்தனுக்குத்துச்சமாகத்தோன்றும் அஞ்ஞானத்தில் மோகமடைந்து சூன்யவாதி பரமபுருஷார்த்தத்தையடைகிறதில்லை. ஆனல் ஆத்மா அசத்ரூபமாயிருப்பதாலும் ஆனந்தமயகோசம் அஞ்ஞானரூபமாய் அதாவது அசத்ரூபமாயிருப்பதாலும் ஆனந்தமயகோசத்தையே ஆத்மாவாகச் சூன்யவாதி சொல்லுகிறான்.

ப்படமாட்டா. மேலும் ஹடமாய் இரண்டுஅம்சங்களையும் அங்கீகரிக்கும்பக்ஷத்தில் இரண்டுக்கும் சம்பந்தம் சம்யோகமா? தாதாத்மியமா? விஷயவிஷயீபாவமா? முதல்பக்ஷத்தில் இரண்டுதிரவியங்களுக்குத்தான் சமவாயசம்பந்தமிருக்கக்கூடுமானதால் ஆத்மா அநித்தியமாகும்: இரண்டாவது பக்ஷத்தில் சித் ஜட அம்சங்கள் ஒருஸ்வரூபத்தில் இருப்பதால் சித் ஜடமாகும், ஜடம் சித்தாகும். மூன்றுவது பக்ஷத்தில் கடம்போல் இரண்டு அம்சங்களும் அனாத்மாவாகும். சுருதியில் ஆத்மா விஞ்ஞானகனமென்று சொல்லியிருப்பதற்கு ஒருபாகம் ஜடம் என்பது விருத்தம். சுஷுப்தியினின்றும் எழுந்திருந்தவனுடைய ஸ்மரணை ஆத்மாவின் ஜடதையை விஷயமாக்கவில்லை, ஆனல் சுஷுப்தியிலுள்ள அஞ்ஞானம்சத்தை விஷயமாக்குகிறது.

29. சூன்யவாதிமதம்:— எல்லாம் சூன்யம். சூன்யமே பரமதத்துவம். சுஷுப்தியிலுள்ள அஞ்ஞானரூப ஆனந்தமயகோசமே ஆத்மா. இந்தமதம் சரியன்று. ஏனெனில் சூன்யம் சாக்ஷிசகிதமாயிருக்கிறதா? அல்லது சா

318. பிரபாகரனையாயிகமதம்:— பூர்வமீமாம்சகர்களைச் சேர்ந்த பிரபாகரனையாயிகர்கள் சொல்லுகிறதாவது:— ஆத்மா சூன்யரூபமன்று. ஏனெனில் ஆத்மாவைச்சூன்யரூபமாகச்சொல்லுகிற வனைக்கேட்கவேண்டியதென்னவெனில் சூன்யரூபத்தை நீ அனுபவித்திருக்கிறாயா இல்லையா? அனுபவிக்கவில்லையென்று சொல்லும்பக்ஷத்தில் சூன்யமில்லையென்று சித்திக்கிறது. அனுபவித்ததாகச்சொல்லும்பக்ஷத்தில் எதினால் சூன்யம் அனுபவிக்கப்படுகிறதோ அதுவே ஆத்மா. அது சூன்யத்துக்கு விலக்ஷணமென்று சித்திக்கிறது. சூன்யத்துக்கு விலக்ஷணமான ஆத்மாவினிடத்தில் மனதின் ஸம்யோகத்தினால் ஞானமுண்டாகிறது. ஞானகுணத்தால் ஆத்மா சேதனமென்று சொல்லப்படுகிறது. ஸ்வபாவத்தில் ஆத்மா ஜடம். சுகம் துக்கம் இச்சை, துவேஷம், பிரயத்தனம், தர்மம், அதர்மம் முதலிய குணங்கள் ஆத்மாவினிடத்திலிருக்கின்றன.

இவர்களுடைய மதத்திலும் ஆனந்தமயகோசமே ஆத்மாவென்றும் விஞ்ஞானமயகோசத்திலுள்ள புத்தி ஆத்மாவின் ஞானகுணமென்றும் சொல்லப்படுகின்றன. ஏனெனில் ஆனந்தமயகோசத்தில் சேதனம் கூடமாயிருக்கிறது, விவேகமில்லாதவனுக்குத்தோன்றுகிறதில்லை. பிரபாகரனையாயிகர்கள் சுஷுப்தியில் ஆத்மாவுக்கு ஞானமில்லாததாக நினைத்து ஸ்வரூபத்தில் அது ஜடமென்று சொல்லுகிறார்கள். ஆகையால் கூட சேதனத்துடன் கூடிய ஆனந்தமயகோசத்திலேயே அவர்களுக்கு ஆத்மப்பிராந்தியுண்டாகிறது. மேலும் ஆத்மஸ்வரூபமான நித்தியஞானம் ஜீவனிடத்தில்லையென்றும் ஆனால் அநித்தியஞானமிருக்கிறதென்றும் நினைக்கிறார்கள். இந்த அநித்தியஞானம் சித்தாந்தத்தில் அந்தக்கரணத்தின்

க்ஷணிகமாயிருக்கிறதா? அல்லது ஸ்வப்பிரகாசமா. சாக்ஷி இருந்தால் சூன்யத்துக்கு வேறுண சாக்ஷியே ஆத்மா. சாக்ஷிரஹிதமாயிருந்தால் சூன்யமே அசித்தம். சூன்யம் ஸ்வப்பிரகாசமென்றுசொன்னால் நம்முடைய பிர்ம்மத்துக்கு அது வேறு ஒரு பெயராகும். சூன்யமில்லாமற்போகும். "அஸதாஸீத்" என்கிற சுருதிக்குச்சூன்யமிருந்ததாக அபிப்பிராயமன்று. ஆனால் நையாயிகர் முதலியவர்கள் ஜகத்துக்குப்பிராகபாவம் காரணமென்று சொல்லுகிறார்கள். இப்படி விபரீதமாய்க்கிரகிப்பதை நிவிர்த்திக்கத்தான் சுருதி பிறந்திருக்கிறது. பௌத்தர்களில் 4 விதம்:— (1) மாத்தியமிகசூன்னியவாதி (2) க்ஷணிகவிஞ்ஞானவாதியாகியயோகாசாரியன் (3) பாஹ்யபதார்த்தத்தை அனுமானத்தால் அறியப்பட்டவனான சௌத்திராந்திகன் (4) பாஹ்யபதார்த்தத்தை பிரத்யக்ஷமாய் அறிகிறவனான வைபாஷிகன்.

வர்த்தியாகிய புத்திரூபமாயிருக்கிறது. இவ்விதமாக பிரபாகரனையாயிகமதத்தில் ஆனந்தமயகோசம் ஆத்மாவாயும் புத்தி அதன்குணமாயுமிருக்கின்றன.

319. இந்தமதத்தின் கண்டனம்:— மேற்சொல்லிய மதமும் சரியன்று. ஏனெனில் ஞானத்துக்குவேறான ஜடவஸ்துக்களாகிற கடாதிகள் அநித்தியமாயிருக்கின்றன. ஆத்மாவும் ஞானஸ்வரூபமாகாவிட்டால் கடாதிகள் போல் ஜடமாகிறதினால் அநித்தியமாய்விடும். ஆத்மா அநித்தியமானால் மோக்ஷநிமித்தியமாயேற்பட்ட சாதனங்கள் நிஷ்பிரயோசனமாய்விடும். இவ்விதமாக வேதாந்தவாக்கியத்தில் விசுவாசமில்லாத அனேகப்பகிர்முகபுருஷர்கள் பஞ்சகோசங்களிலேயே ஒன்றை ஆத்மாவாகநினைத்து முக்கியமான ஆத்மஸ்வரூபமான சாக்ஷியை அறிகிறதில்லை. ஆனதால் அன்னமயாதி கோசங்கள் ஆத்மாவை மறைப்பதால் கோசங்களென்று சொல்லப்படுகின்றன.

320. ஜீவனுடைய பஞ்சகோசங்கள் ஜீவனுண்டைய யதார்த்தஸ்வரூபமான சாக்ஷியை மறைக்கிறது போல் ஈஸ்வரனுடைய பஞ்சகோசங்களும் ஈஸ்வரனுடைய யதார்த்த ஸ்வரூபத்தை மறைக்கின்றன; ஏனெனில் ஈஸ்வரனுடைய யதார்த்தஸ்வரூபம் தத்பதலக்ஷியம். இதைவிட்டு மாயாரூபமான ஆனந்தமய கோசத்துடன் கூடிய அந்தரியாமியாகிற தத்பதவாச்சியத்தை பரமதத்துவமாகச் சிலர் சொல்லுகிறார்கள். இப்படியெனில் ஹிரண்யகர்ப்பன், வைசுவாநரன், விஷ்ணு, பிரமன், சிவன், கணேசன், தேவி, சூரியன்முதல் அஸி, பதை, முள்ளிலவை, எருக்கு, மூங்கில்வரை யிலுள்ள பதார்த்தங்களிலும் பரமாத்ம பிராந்தியை யடைகிறார்கள். சகலபதார்த்தங்களிலுமுள்ள லக்ஷியபாகம் பரமாத்மாவுக்கு வேறுகாவிட்

---

30. நையாயிகமதம்:— ஆத்மாஜடம். ஏனெனில் சுஷுப்தியில் ஞானமில்லாமலிருப்பதால் ஆத்மா ஜடந்தான். இது சரியன்று. ஏனெனில் "நான் சுகமாய்த்தூங்கினேன், ஒன்றும் அறியவில்லை" என்கிற அனுபவத்தால் முன் சொன்னது பாதிக்கப்பட்டுப்போகிறது. ஆத்மா ஜடமானால் சுஷுப்தியிலுள்ள ஆனந்தத்தின் ஸ்மரணையுண்டாகக்கூடாது. உண்டாகிறபடியால் ஆத்மா ஜடமன்று.

31. ஜீவனுடைய கோசங்கள் ஜீவனுடைய நிஜரூபமான பிரத்தியகாத்மாவை ஜீவனுடைய திர்ஷ்டிக்கு மறைப்பதுபோல் ஈஸ்வரனுடைய கோசங்கள் ஈஸ்வரனுடைய நிஜரூபத்தை ஈஸ்வரதிர்ஷ்டிக்கு மறைக்கிறதில்லை. ஏனெனில் ஈஸ்வரன் ஜ்ஞானரூபன். ஆகையால் சமஷ்டி பஞ்சகோசங்களினின்றும் பிரம்மஸ்வரூபத்தை ஜீவனே விவேசனம்பண்ணவேண்டியது.

டானும் உபாதியுடன் கூடினதைப்பரமாத்மாவாக நினைக்கிறவனுக்குப்பி ராந்தியுண்டாகிறது. பஞ்சகோசங்களால் மூடப்பட்ட ஜீவன்ஸ்வரர்க ளுடைய பரமாத்மஸ்வரூபத்தையறியாமல் தேகாதிகளிடத்தில் ஆத்மபுத்தி ராந்தியடைந்து புண்ணியபாவங்களைச்செயகிறார்கள். அந்தரியாமி முத ல்மூன்றில்லாதரையிலுள்ளவைகளை சுகவரரூபமாக நினைத்து ஆராதனையால் சுகத்தையடைய இருசிக்கிறார்கள். உபாதியின் ஆராதனைக்குத்தக்கபடி ப்பலன் சித்திக்கிறது. எனெனில் காரணசூக்ஷமஸ்தூலப்பிரபஞ்சங்க ளெல்லாம் ஈஸ்வரனுடைய சரீரத்தில் அந்தர்ப்பூதமாயிருக்கின்றன. அ வைகளின் உபாஸனைக்குத்தக்கபடிப்பலனும் எல்லாருக்குமுண்டாகிறது. ஆனால் பிரம்மஞானமன்றியில் மோக்ஷமுண்டாகிறதில்லை. மோக்ஷத்தை யிச்சிக்கிறவன் விவேகத்தினால் ஜீவன்ஸ்வரஸ்வரூபங்களைப்பஞ்சகோசங்க ளினின்றும் வேறுபடுத்தவேண்டியது. முஞ்சிப்புல்லினின்று அதின் மத்தியிலுள்ள இஷிகையென்னும்பொருளை யுக்தியால் வேறுபடுத்துவது போலும்.

321. **விவேசனவிதம்:—** சொப்பனஸ்வஸ்தையில் ஸ்தூல தேகம் விளங்குகிறதில்லை. ஆனால் ஆத்மா விளங்குகிறது. இப்படியே

---

32. ஆத்மாவுக்குச்சத்து, சித்து, ஆனந்தம், அத்வயம் இந்நான்கும் வி சேஷணங்களாம். தேகாதிகளுக்கு அசத்து, ஜடம், துக்கம், த்வயம் விசே ஷணங்களாம். இவைகளில் ஆத்மாவின் சச்சித்ரூபங்கள் தேகாதிகளின் அசத் ஜடரூபங்களை மறைக்கின்றன. ஆகையால் தேகாதிகள் சத்சித்ரூபங்கள்போல் பிரதீதியாகின்றன. தேகாதிகளின் துக்கத்வயரூபங்கள் ஆத்மாவின் ஆனந்த ரூபத்தையும் அத்வயரூபத்தையும் மறைக்கின்றன. அதினால் ஆத்மா சச்சி யாயும் த்வயமாயும் பிரதீதியாகிறது. இவ்விதமாக ஆத்மாவுக்கும் பஞ்சகோ சங்களுக்கும் பரஸ்பரஅத்தியாசமிருக்கிறது. ஆகையால் மும்முக்ஷுவானவன் பஞ்சகோசவிவேசனம் அவசியஞ்செய்யவேண்டியது.

33. ஸ்தூலதேஹவிவேசனம்:— ஸ்தூலதேகம் ஜனிப்பதற்கு முன்னும் மரிப்பதற்குப்பின்னும் ஏகமாய் ஆத்மா இருப்பதினால் கடத்தைக்காட்டிலும் ஆகாசம் வேறுயிருப்பதுபோல் ஆத்மா ஸ்தூலதேகத்தைக்காட்டிலும் வேறுயி ருக்கிறது, அவ்வியபசாரியாயுமிருக்கிறது. கடம்போல் தேகம் உற்பத்திக்கு முன்னும் மரணத்துக்குப்பின்னும் இல்லாதினாலும் அநேகமாயிருப்பதாலும் ஆத்மாவைக்காட்டிலும் தேகம் வேறுயிருக்கிறது, வியபசாரியாயுமிருக்கிறது. எது அதிகதேசத்திலும் அதிககாலத்திலும் இருக்கிறதோ அது அவ்வியபசாரி யென்னப்படும். எல்லாசரீரங்களிலுமுள்ள ஆத்மா ஒன்றுசவிருப்பதினால் ஆ காசம்போல் வியாபகமாயிருக்கிறது. ஆகையால் எல்லாவிடங்களிலும் அது இருக்கிறது. மேலும் தேகங்களினுற்பத்திக்கு முன்னும் மரணத்துக்குப்பின்னு

சுஷுப்தியவஸ்தையில் சூக்ஷ்மசரீரம் அறியப்படுகிறதில்லை. ஆனல் சுக ஸ்வரூபமான ஆத்மா ஸ்வயமபிரகாசத்தால் விளங்குகிறது. சுஷுப்தி யில் சுகஞானமில்லாத பக்ஷத்தில் நான் சுகமாய்த்தூங்கினேனென்னும் ஸ்மரணை விழித்தபின் உண்டாகக்கூடாது. அப்படியுண்டாவதால் சு ஷுப்தியில் சுகத்தின் ஞானம் இருந்துக்கொண்டே யிருக்கிறது. இந்த ச்சுஷுப்திசுகம் விஷயத்தாலுண்டானதன்று. அது ஆத்மச்சொரூபமே. இந்த ஆத்மா ஸ்வயம் பிரகாசமாயிருக்கிறது. ஆகையால் சுகஸ்வரூபமா ன ஆத்மா ஸ்வயம் பிரகாசரூபத்தால் சுஷுப்தியில் விளங்குகிறது. மே லும் நித்தியானந்தத்தின் பலனுகிற நிர்விகல்பசமாதியவஸ்தையில் அந்ஞானத்தால் செய்யப்பட்ட ஆவரணமன்றியில் ஆத்மாவிளங்குகிறது. காரணசரீரமாகிற அஞ்ஞானம் விளங்குகிறதில்லை. இப்படி மூன்று தே கங்களும் வியபசரிக்கின்றன; ஓரவஸ்தையை விட்டு வேறோரவஸ்தையில் விளங்குகிறதில்லை. ஆத்மா அணுவாகவிருந்து சகல அவஸ்தைகளிலு ம் விளங்குகிறது, ஆகையால் வியாபகமாயிருக்கிறது. இந்த விவேகத் தால் மூன்று சரீரங்களுக்கும் வேறுக ஆத்மாவை யறியவேண்டியது. ஸ்தூலசரீரம் அன்னமயகோசம். காரணசரீரம் ஆனந்தமயகோசம். சூ க்ஷ்மசரீரத்தில் பிராணமயம், மனோமயம் விஞ்ஞானமயம் என்னும் மூன் று கோசங்களிருக்கின்றன. ஆகையால் மூன்று சரீரங்களின் விவேகத் தால் பஞ்சகோசங்களின் விவேகமுமுண்டாகிறது. ஜீவனுடைய ஸ்வரூ பம் பஞ்சகோசங்களுக்கும் வேறுயிருப்பதுபோல் ஈஸ்வரனுடைய ஸ்வரூ பமும் சமஷ்டிப் பஞ்சகோசங்களுக்கும் வேறுகயிருக்கிறது. நான்காவது தாங்கத்தில் நாலுவித ஆகாசத்திர்ஷ்டாந்தத்தால் ஜீவேஸ்வரர்களுடைய லக்ஷ்யஸ்வரூபம் விஸ்தாரமாக வியவகரிக்கப்பட்டிருக்கிறது. மேலேவரு

ம் ஆத்மா இருப்பதால் அது முக்காலங்களிலும் பாதிக்கப்படாமலிருக்கிறது. ஆகையால் சர்வகாலமும் அது இருக்கிறது. சர்வதேசகாலங்களிலுமிருப்பதா ல் ஆத்மா அவ்வியபசாரி. எந்த வஸ்து சொற்பதேசத்திலும் சொற்பகாலத்தி லும் இருக்கிறதோ அது வியபசாரியென்னப்படும். கடம்போல் தேகமும் பரி ச்சின்னமாய்ச்சொற்பவிடத்திலிருக்கிறது. உற்பத்திநாசங்களோடுகூடியிருப் பதால் அது சர்வகாலமுமில்லாமல் சொற்பகாலமிருக்கிறது. சொற்பதேசத் திலும் காலத்திலுமிருப்பதால் தேகம் வியபசாரி. ஆத்மாவும் தேகமும் முறை யே அவ்வியபசாரியாயும் வியபசாரியாயுமிருப்பதால் இரண்டுக்கும் பேதஞ்சித் திக்கிறது. ஆகையால் நான் ஸ்தூலதேகமன்று, தேகம் என்னுடையதன்று, ஆனல் பஞ்சமகாபூதங்களுடையது. நான் ஸ்தூலதேசமில்லாதபடியால் ஸ்தூல தேகத்துக்குச்சொல்லப்பட்ட நாமம், ஜாதி, ஆசிரமம், நிறம், ஆகாரம் முதலி ய தர்மங்கள் நான் அன்று. அவைகளும் என்னுடையவையல்ல. இது ஸ்தூ லதேகவிவேசனமாம்.

ம் ஆனந்தமயகோசஸ்வரூப அஸ்தி பாதி பிரியரூப நிரூபணையிலும மகாவாக் கியார்த்த நிரூபணையிலும் ஆத்மாவின் பரமார்த்தஸ்வரூபம பிரதிபாதிக்க ப்படும். ஆனதால் இவ்விடத்தில் சுருக்கமாக ஆத்மவிவேசனம் செய்யப் பட்டது.

III மகாவாக்கியார்த்தஉபதேசம் (321—368)

322. இவ்விதமாகப் பஞ்சகோசங்களினின்றும் ஆத்மாவைவேறு க அறிந்தும் கிருதகிர்த்தியனாகச் சிலனாகவில்லை. ஆகையால் ஜீவப்பிர்ம ங்களுடைய அபேதத்தை நிச்சயிப்பதற்காக மறுபடியும் விசாரஞ்செய்ய வேண்டியது.' ஆகையால் கிருதகிர்த்தியத்தின் சித்தியின் பொருட்டு ம காவாக்கியார்த்தத்தை யுபதேசிக்கிறேன்.

உபதேசம்:— பஞ்சகோசங்களாக்காட்டிலும் ஆத்மா வேறு. அது பி ர்ம்மஸ்வரூபமென்றறி. கேட்டது பார்த்த தெல்லாம் மித்தையென்றறி. மித்தையான வஸ்து அதிஷ்டானத்துக்கு வேறுகிறதில்லை. சொப்பன த்தில் பிச்சைவாங்கும் ராஜா தரித்திரனகான். சகலத்துக்கும் கர்த்தா வாயினும் அகர்த்தாவே. இப்பெயர்பட்ட உன்னுடைய ஆச்சரியமான ஓப்பில்லாத பிரம்மஸ்வரூபத்தையறிவாயாக.

323. கேள்வி:— பஞ்சகோசங்களுக்கு வேறுகவும் பிர்ம்மஸ்வ ரூபமாகவும் ஆத்மா இருப்பதாக அறிவதிலொருசங்கை. ஆத்மா புண்ணி யபாபங்களைச்செய்து ஸ்வர்க்க நரக பூலோகங்களில் அநேகவிதச் சுகதுக் கங்களை யனுபவிக்கிறது. ஆத்மாவுக்கும் பிர்ம்மத்துக்கும் ஏகத்துவஞ் சொ ல்வது சரியன்று.

சூக்ஷமதேகவிவேசனம்:— மரணம் மூர்ச்சை சுஷுப்திபிரளயம் ஞா னம் இவ்வைவந்து அவஸ்தைகளில் லிங்கதேகம் அதின் காரணமான அஞ்ஞா னத்தில் லயமாகிறது. ஆகையால் வியபசரிக்கிறது. ஆதலால் அசத்தாயிரு க்கின்றது. ஆத்மா சர்வகாலங்களிலும் பிரகாசித்துக்கொண்டிருப்பதால அவ் வியபசாரியாயிருக்கிறது. ஆகையால் சத்ரூபமாயிருக்கிறது. ஆத்மாசத்ரூப மாயிருப்பதால் அது லிங்க தேகமன்று. லிங்கதேகமும் ஆத்மாவினதன்று. அது அபஞ்சிகிருத பஞ்சமகா பூதங்களின் காரியம். நான் லிங்கதேகம் அல்லா தனிஜல்கர்த்ருத்வம் போக்த்ருத்வம் சுகம் துக்கம் முதலிய லிங்கதேகத்தின் தர் மங்கள் நான் அன்று. அவைகளும் என்னுடையவையல்ல. இவைகளெல்லா ம் அறியப்பட்ட நான் இவைகளுக்கு வேறுயிருக்கிறேன்.

காரணதேகவிவேசனம்:— காரணதேகம் அஞ்ஞானம். இது நான் அன்று. என்னுடையதுமன்று காரணசரீரத்தின் தர்மங்களாகிய ஆவரண வி சேபங்களும் நான் அன்று. அவைகளும் என்னுடையவையல்ல. இவைக ளை யறியப்பட்ட நான் இவைகளுக்கு வேறுக இருக்கிறேன்.

324. உத்தரம்:—பிரம்மரூப ஆத்மாவுக்கு வேறாகச் சாஸ்திரத்தில் காணப்படுவனவும் கேட்கப்படுவனவுமான ஸ்வர்க்காதிக புண்ணிய பாபாதிகளெல்லாம் மித்தியாப்பிரமை யென்றறி. மித்தியாவஸ்து அதிஷ்டானத்தை வேற்றுமைப்படுத்துநிறகில்லை. சோபனத்தில் பிசாசவாங்கும் அரசன் தரித்திரனாகிறதில்லை. கானல்ஜலத்தினால் பூமிகனகிறதில்லை. பொய்யான சர்ப்பத்தால் ரஜ்ஜு விஷசுகிதமாகிறதில்லை. ஆனதால் சமஸ்தப்பொயயாகிற சுபாசுப கர்மங்களைச்செய்கிறவனுடைய கர்த்தாவன்று. இப்பெயர்ப்பட்ட உன்னுடைய ஆச்சரியமான ஓப்பில்லாத ஸ்வரூபத்தையறி. இதறகு பாவமென்னவெனில் பிரம்மத்துக்குவேறுயிராத உன்னுடைய ஸ்வரூபத்தில் ஸ்தூலசூக்ஷம சரீரங்கள் இவைகளின் பலதாகிற ஜன்மம் மரணம் ஸ்வர்க்கம் நரகம் சுகம் துக்கம இவைகளெல்லாம் அஜித்தைதபால் கல்பிக்கப்படுகின்றன. உன்னுடைய பிரம்மபாவம் இந்தக்கல்பித பதார்த்தங்களால் வேறுபடுகிறதில்லை. ஞானத்துக்கு முன்னும் ஆத்மா பிரம்மரூபமாகவே யிருந்திறது. ஆத்மாவினிடத்தில் மூன்று காலங்களிலும் சரீரம் சரீரத்தின் தர்மம இவைகளின் சம்பந்தமில்லை; ஆனல் ஆத்மா எப்போதும் நித்தியமுக்தனயிருக்கிறது. இதற்கும் பிரம்மத்துக்கும் ஒருக்காலும் பேதமில்லை.

325. சிரவணபலன்:— ஆத்மா எப்போதும் நித்தியமுக்தப் பிரம்மஸ்வரூபமாயிருக்கும்பக்ஷத்தில் ஞானசாதனங்களாகிற சிரவணாதிகள் வீணுதுமென்று செய்யும் ஆக்ஷேபத்துக்குச் சமாதானம். ஜீவன்முக்த வித்துவானுடைய திர்ஷ்டியில் அந்நானமும் அதின்காரியமும் துச்சமாயிருக்கின்றன. ஜீவன்முக்தனுடைய நிச்சயத்தைச் சொல்லுகிறேன். சிஷனே, இந்தப் பிரபஞ்சம் ஆகாசபுஷ்பம்போல் இருக்கவில்லை. ஆன

ஜாக்கிராவஸ்தை:— அவஸ்தை யென்றால் காலம். ஸ்வப்பன சுஷுப்தியவஸ்தைகளுக்கு வேறாயும் இந்திரியஜன்ய ஞானத்துக்கும் அதின் வியவகாரத்துக்கும் ஆதாரமாயு மிருங்குங்காலம் ஜாக்கிராவஸ்தை யென்னப்படும். இதில் 14 திரிபுடிகளால் (346) வியவகாரஞ் சித்திக்கிறது. இந்த அவஸ்தையின் சாமக்கிரிகளாவன:— (1) சிதாபாசரூப ஜீவனுக்கு நேத்திரம் ஸ்தானம். சரீரம் முழுமையும் ஜீவன் வியாபித்திருந்தாலும் நேத்திரம் முக்கியமான ஸ்தானமாயிருப்பதால் அதுவே ஸ்தானமென்று சொல்லப்படுகிறது. (2) கிரியா சக்தி. (3) வைகரி வாணி. (4) போகம் ஸ்தூலம். (5) குணம் சத்துவம. (6) பெயர் விசுவன். சொப்பன சுஷுப்தியவஸ்தைகளில் ஜாக்கிரதாவஸ்தை யில்லை. இவைகளுக்குச் சாக்ஷியான ஆத்மா மூன்றவஸ்தைகளிலுமிருக்கிறது., ஆகையால் ஆத்மா ஜாக்கிராவஸ்தையைக் காட்டிலும் வேறாயிருக்கிறது.

தால் அதன் கர்த்தாவாய சுவ்வரனும் இருக்கவில்லை. சாகூதிக்கு விஷய மான ஞானநிள் சாகூதியமென்று சொல்லப்படுகின்றன. சாகூியமில்லாதநிறல் சாகூியமில்லை. தரிசியத்தைப் பிரகாசிப்பிக்கிறது தருக்கென்னப்படும். பிரகாசிப்பிக்கப்படுகிற தேகாதிகள் தரிசியமென்னப்படும். தேகாதி தரிசியமில்லாதநிறல் தருக்குமில்லை. கேவலம் கூடஸ்தசேதனத்தைச் சாகூியென்றும் தருக்கென்றும் சொன்னதும், இவைகளைத் தள்ளக்கூடாவிட்டாலும் சாகூிபத்தையபேகூித்துச் சாகூி யென்கிற பெயரும் தரிசியத்தையபேகூித்துத் தருக்கென்கிறபெயரும விளங்குகின்றன. ஆகையால் சாகூி தருக்கென்னும்பெயர்கள நிஷேதிக்கப்பட்டாலும் ஸ்வரூபம் நிஷேதிக்கப்படமாட்டாது. பந்தமிருக்கும்பகூதத்தில் பந்த நிவிர்த்தி ரூபமான மோகூமிருக்கக்கூடும். பந்தமுமில்லை மோகூமுமில்லை. அஞ்ஞான மிருக்கும்பகூதத்தில் அது ஞானத்தால் நாசமாகக்கூடும். அஞ்ஞானமில்லாதநிறல் அதை நாசஞ்செய்கிற ஞானமுமில்லை. இவைகளை யறிந்து கர்த்தவ்வியத்தை விடவேண்டியது, அதாவது நான் இதைச் செய்யவேண்டும், என்கிற புதநிலை விடவேண்டியது. எனெனில் இந்த லோகமு அப்படியே பரலோகம் இவைகள் தூச்சமாயிருக்கின்றன. இவைகளின்பொருட்டுச் செய்யவேண்டியது யாதொன்றுமில்லை. ஆதலினிடத்தில் பந்தமில்லை. ஆகையால் மோகூத்தின்பொருட்டும் செய்யவேண்டியதொன்றுமில்லை. இவ்விதமாக ஆத்மாவை நிதித்யாழுக்தப் பிர்ம்மரூபமாக அறிந்து நிச்சலமாகி எப்போது செய்யவேண்டியவையெல்லாம் விடுவாயோ அப்போது அக்கிரியப்பிர்ம்மஸ்வரூபமாகிற விதேகமோகூத்தை அடைவாய். இதற்கு அபிப்பிராயமென்னவெனில் ஞானத்துக்குமுன் ஆத்மா நித்திய முக்தப்பிர்ம்மஸ்வரூபமாகவேயிருந்தாலும, ஞானத்துக்குமுன் ஆத்மாவைக் கர்த்தாபோக்தாவாக நினைத்துச் சுகப்பிராப்தி துக்கநிவர்த்தியின்பொருட்டு ஒருவன அனேக சாதனங்களைத்தேடுகிறான், அவைகளால் துக்கத்தையுமடைகிறான். உத்தமமான ஆசாரியரை யடையும்போது யேதாந்தவாக்கியவுபதேசத்தைப் பெற்று அவ்வாக்கியத்தைக் கேட்கிறநிறல், நான் கர்த்தா போக்தாவன்று' நான் பிர்ம்ம

சொப்பனவஸ்தை:— மந்த அவஸ்தையில் இந்திரியங்களின் சகாயமின்றியில் மறைதாவென்னும் நாடியில்தங்கியிருக்கிற ஜாக்கிரஸம்ஸ்காரத்தால் விஷயங்கள் சிறியப்படுகின்றனவோ அது சொப்பனவஸ்தையாம். சொப்பனவஸ்தையில் நிதாபாலரூபதீவண்டுக்கு (1). ஸ்தானம் கண்டம். (2) சக்நிஞானம் (3) மத்தியமா வாணி. (4) போகம் சூக்ஷமம். (5) குணம் ராஜஸம் (6) பெயர் தைஜஸன். இவைகள் சொப்பன சாமக்கிரிகளாம். ஜாக்கிரகூடப்தியவஸ்தைகளில் சொப்பன மில்லை. ஆத்மா மூன்று அவஸ்தைகளுக்

ன்வரூபம், ஆனகால் நான் யாதொன்றும் செய்யவேண்டியதில்லை" இப்படிப்பட்ட ஞானமுண்டாகிறது. இப்படி யறிவதே சிரவணத்தின் பலன். பிர்ம்மத்தையடைவது வேதாந்தச்சிரவணத்தின் பலனன்று. ஏனெனில் பிர்ம்மம் தன்ஸ்வரூபமானதால் எப்போதும் அடையப்பட்டேயிருக்கிறது.

326. ஞானி அஞ்ஞானிகளின் சின்னம்:— எவன் கர்த்தவ்வியமிருக்கிறதாக நினைக்கிறானோ அவன் அஞ்ஞானி. எவன் வேறுரூபமாவதற்கு இச்சிக்கவில்லையோ அவன்ஞானி.

327. இரகசியதத்துவஉபதேசம்:— ஏகமாயும் அகண்டமாயும் அசங்கமாயும ஜனனமன்றியிலும் அதிசியமாயும் நாமரூபங்களன்றியிருமிருப்பது பிர்ம்மம். அதனிடத்தில் பூலஅஞ்ஞானமில்லை, சூக்ஷ்மஸ்தூலங்களில்லை, சமஷ்டிவியஷ்டிகளில்லை, ஈனில்லை, சூந்யனில்லை, விராட்டில்லை பிராஞ்ஞயனில்லை, தைஜஸனில்லை, விசுவனில்லை, போகமில்லை, யோகமில்லை, பந்தமில்லை, மோக்ஷமில்லை, ஒன்றும் அதனிடத்திலில்லை. எல்லாம் தன்னிடத்திலுண்டு. ஜாக்கிறதவஸ்தையில் விளங்குகிற பிரபஞ்சமெல்லாம் புத்தியால் விளங்குகிறது. சொப்பனத்தில், அனுபவிக்கும்படியான போகங்களிலலாடலிருந்தும் புத்தியால் விசித்திரமாய்க் கல்பிக்கப்படுகின்றன. இந்தப்புத்தி சுஷுப்தியில் லயமடைந்து பேதங்களற்று ஏகரசின்மாத்திரையாகவிளங்குகிறது. புத்தியால்கல்பிக்கப்படுவதெல்லாம் மனதிலேயேயிருக்கிறது. பிர்ம்மம் புத்தியைப்பிரகாசிப்பிக்கிறது. எவனுடைய இருதயத்தில் ஞானப்பிரகாசமுண்டாகிறதோ அவன் இருதயத்தைவிட்டு அஞ்ஞானமென்னுமிருள் சுத்தமாய்ப்போய்விடுகிறது. அவன் எப்போதும் அசங்கமாயும் ஏகரஸமாயும

சும் சாக்ஷியாயிருப்பதால் ஆத்மா சொப்பனத்தைக்காட்டிலும் வேறுகயிருக்கிறது.

சுஷுப்தியவஸ்வதை:— எந்த அவஸ்தையில் கேவலம் சுகமும் அஞ்ஞானமு மூளவோ அது சுஷுப்தி யவஸ்தையாம். இதின் சாமக்கிரிகளாவன:— (I) இருதயம் ஸ்தானம். (2) சக்தி திரவிய ரூபம். கிரியாரூபஞானரூப வியவகாரங்களில்லாமல் கேவலம் அஞ்ஞான ரூப திரவிய மிருப்பதால் இதுவே திரவிய சக்தி யென்று சொல்லப்படுகிறது. (3) பசியந்தி வாணி. (4) ஆனந்தம் போகம். (5) தமோகுணம். (6) அபிமானியின் பெயர் பிராஞ்ஞன். ஜாக்கிர சொப்பனங்களில் சுஷுப்தி இல்லை. ஆத்மா மூன்றவஸ்தைகளுக்குஞ் சாக்ஷியாயிருப்பதால் அது சுஷுப்தியைக்காட்டிலும் வேறுகயிருக்கிறது.

சுயம்பிரகாசமாயுமிருக்கிற பிர்ம்மஸ்வரூபமாகிற ஆத்மாவாக இருக்கி
ருன். ஒன் ஒன்றும் உண்டாகவில்லை. பின்னும் ஒன்றும் உண்டாக
ப்போகிறதில்லை. ஜகத்தெல்லாம் மனதினுல் கல்பிக்கப்பட்டது. அ
தையடையவாவது, நிவிர்த்திசெய்யவாவது ஞானி இச்சிகிறதில்லை.
ஞானிக்கு யாதொரு ஆசையுமில்லை. பார்க்கும்போது ஞானி பார்க்
கிறதிலவில. கேட்கும்போது கேட்கிறதில்லை. சகலரஸங்களையும் ருசி
த்தும் ருசிக்காதவன். துவக்கால் தொட்டும் தொடாதவன். கல்ல
வாசனையை மோந்தும் மோக்காதவன். பேசியும் பேசாதவன். கிரகி
த்தும் கிரகிக்காதவன். மலமோசனஞ்செய்துஞ் செய்யாதவன். நட

---

34. மேலே சொல்லியபடி பதார்த்தத்தைப் பார்க்கிறதில்லை. கேட்பதை
க்கேட்கிறதில்லை. இவ்விஷயங்களைப் பகவத்கீதையின் 5-வது அத்தியாயத்தில்
7. 8. 9. வது சுலோகங்களில் சொல்லியிருப்பதை இவ்விடத்தில் முழு
வதும் தெரிந்துகொள்ளும்பொருட்டு எழுதப்பட்டது.

(7) "யோகயுக்தோ விசுத்தாத்மா விஜிதாத்மா ஜிதேந்திரிய: |
சர்வ பூதாத்ம பூதாத்மா குர்வன்னபி நலிப்யதே | .

இ—ள்:— கர்ம யோகத்துடனுவது அல்லது பிர்ம்ம நிஷ்டாரூபச்
சின்யாலயோகத்துடனுவது கூடினவனுயும், இதினுல் ராகத்துவேஷாதிகளில்
லாத பரிசுத்தமான மனதையுடையவனுயும் அதினுல் விஷயங்களுக்கு விமுக
மான இந்திரியங்களை யுடையவனுயும் அதினுல் பாஹிய வாஸனுரூபஸ்வ
பாவத்தை ஜயித்தவனுயும் பிர்ம்மாதிஸ்தம்ப பரியந்தமுள்ள சகல பூதங்களி
லுமுள்ள ஆத்மா தன்னுத்மாவுக்கு வேறல்லவென்று அறிந்தவனுயுமிருக்கிற
பிர்ம்மவித்தானவன் சரீரசம்ரக்ஷணையின் பொருட்டு விதியை யனுசரித்தா
வது அனுசரிக்காமலாவது எந்தகர்மத்தைச்செய்தாலும் அதின் பலத்தை யடை
கிறதில்லை. அதாவது, கர்மத்தில் அகர்மபுத்தியால் யாதொரு சம்பந்தத்தை
யுமடைகிறதில்லை.

(8) நைவகிஞ்சித் கரோமீதி யுக்தோமன்யேத தத்வவித் | பச்யன்
ஸ்ருண்வன் ஸ்பிருசன் ஜிக்ரன் அச்நன் கச்சன் ஸ்வபன் சுவஸன்.

(9) பிரலபன் விசிருஜன் க்ருண்ணன் உன்மிஷன் நிமிஷன்னபி | இந்
திரியாணீந்திரியார்த்தேஷு வர்த்தந்த இதி தாரயன் |

இ—ள். ஆத்ம ஸ்வரூப பாவத்தை யறிந்த பிர்ம்மவித்தானவன்
தன்னுடைய கூடஸ்தத்தை அவஸ்தைகளை உள்ளும் புறமும் கிரகித்திருத்தல் இவை
களை யறிந்தவனுய் பார்த்தாலும் கேட்டாலும் தொட்டாலும் மோந்தாலும்
புஜித்தாலும் நடந்தாலும் ஸங்கிரஹமும் சுவாசம் விட்டாலும். பேசினாலும்

ந்தும் நடக்காதவன். யெனவன ஸ்திரீயையனுபவித்தும் நித்தியசன் னியாசி. சிஷனே இந்த ஆசசரியத்தை ந் அறிவாயாக. இனுவகளுக்கு அபிப்பிராயமென்னவெனில் இந்திரியங்கள் விஷயங்களில் பிரவேசிக் கின்றன. இவைகளிலெனக்குப்பற்றுதலில்லை. நான் இந்திரியமன்று. எனக்கு இந்திரியமில்லை. நான் சாகூஷீ கூடஸ்தன், அசங்கன். இந்தி ரியம் விஷயத்தைத்தியாகளுசெய்தாலும் அனுபவித்தாலும் எனக்கு

மல ஜலங்களை விஸர்ஜனஞ்செய்தாலும் கைகளாற் கொடுக்கல்வாங்கல் செய் தாலும் கண்களை மூடினாலும் திறந்தாலும் அவன் இவைகளுக்குக் கர்த்தாவன்று சப்தாதி விஷயங்களில் இந்திரியங்கள் தான் பிரவர்த்திக்கின்றன. இந்த நிச் சயத்தை பிரம்மவித்து எப்போதுந் தரிக்கிறான். இந்திரியங்கள் அவ்வவற்றி ன் காரியங்களைச் செய்கின்றன. ஞானி அக்கிரியனுயிருப்பதால் யாதொன்மறு செய்கிறதில்லை. சகல கிரியைகளுக்கும் சாகூஷியாயிருக்கிறான். தேகேந்திரி யாதி வியாபாரங்களில் தான் தனது என்கிற பாவங்களை விட்டு வித்வான் ஒன் றிலும் சம்பந்தப்படாமலிருக்கிறான்.

'நான் அசங்கமாயும் அக்கிரியமாயுமிருக்கிற பிரம்மசைதனம்', என் கிற நிச்சயம் ஞானிக்கிருப்பதால் அவன் வாஸ்தவத்தில் யாதொருகிரியையு ந் செய்கிறதில்லை. பிராரப்த பலத்தால் ஞானிக்குத் தேகேந்திரியாதிகளுடை ய தரிசனாதி வியாபாரரூபக் கிரியைகள இருக்கின்றன. அவைகள் பிராரப் தபலத்தின் போகங்களாம். ஆனல் அந்த போகத்திலுள்ள திடமான இச்சை இந்திரியத்தாலுண்டானதல்ல. ஏனெனில் இந்திரியங்களுக்குத் தரிசனாதி வி யாபாரங்கள்மட்டுந்தான் ஏற்பட்டிருக்கின்றன. மேலும் அந்த இச்சை ஆத் மாவினுடையது மன்று. ஏனெனில் ஆத்மா எப்போதும் நிர்விகாரம். பரிசே ஷத்தில் விஷயங்களின் குணதோஷங்களை விசாரிக்கிறமனதிற்கு அனுகூல ஞானத்தால் இச்சையுண்டாகிறது. இந்த இச்சை ஞானியினுடைய அந்தக்கர ணத்திலுண்டாகிறதில்லை. ஏனெனில் ஞானியின் அந்தக்காணம் அந்தர்முகமா யிருக்கிறது. இச்சை கொஞ்சங்கூட இல்லாதபடியால் போஜனாதி சரீரத்து க்கு வேண்டிய வியாபாரங்களிலும் பிரவிர்த்தியுண்டாகாமற்போவதினல் ஞா னிக்குப் பிராரப்த போகமும் உண்டாகமாட்டாது. ஈஸ்வரசங்கல்பமும் வியர்த்தமாய்ப் போகமாட்டாது. ஆயினும் பிராரப்தத்தாலுண்டாகும் இச் சை ஞானிக்குத் திடமாயிருக்கிறதில்லை. ஆனல் அவனுடைய திடமில்லாத இச்சை அஜ்ஞானமாயிருப்பதினல் வறுத்தவித்தபோல் தர்ப்பலமாயிருக்கின் றது, அதினல் தேகதாரணைக்குக் காரணமான சாஸ்திரவிதித போக்கத் தக்கு ஹேதுவாயிருக்கிறது, விபசனத்தை யுண்டுபண்ணுகிறபோக்கத்தக்கு ஹேதுவாயிருக்கிறதில்லை. மேலும் விஷயம் சத்தியமென்கிற பிராந்தி ஞா னமில்லாதபடியினலும் மித்தியாபுத்தியால் திடமானவராக்கியமுண்டாகி

யாதொரு சம்பந்தமுமில்லை. இது ஞானியினுடைய நிச்சயம். ஞான் காரியங்களைச்செயகிறதாகக்காணப்பட்டாலும் அவன் அகம்த்தா.

328. இவ்விதமாக ஆசாரியர் சீஷனுக்கு ரஹசியமான தத்துவத்
35
தையுபதேசித்தும் சீஷன்முகம் நன்றாய்ப்பிரசன்னமாகாததைக்கண்டு ஆ சாரியர் அறிந்ததாவது சீஷன் கிருதார்த்தனுகவில்லை. கிருதார்த்தனாயி ருந்தால் அவன் முகம் பிரசன்னமாயிருக்கும். ஆகையால் மறுபடியும்
36
ஸ்தூலரீதியாக உபதேசிக்க லயசிந்தனையைச்சொல்லுகிறேன். மண்கா ரியமான கடம் உள்ளும்புறமும் மண்ணுகவேயிருக்கிறது. ஆனதால் ம ண்காரியங்களெல்லாம் மண்ஸ்வரூபமாகவேயிருக்கின்றன. நூலை முத லிய ஜலகாரியங்களெல்லாம் ஜலஸ்வரூபமாகவேயிருக்கின்றன. இப்படி யே எது எதின்காரியமோ அது அதக்காரணஸ்வரூபத்துக்கு வேறுகிற தில்லை. காரியம் காரணஸ்வரூபமாகவேயிருக்கிறது. சகலப்பிரபஞ்சத் துக்கும் மூலகாரணம் ஈசுவரன். ஆனதால சகலகாரியப்பிரபஞ்சமும் ஈஸ்வரஸ்வரூபத்துக்கு வேறில்லை. சகலப்பிரபஞ்சத்தின் ஸ்வரூபமும் ஈசு வரனே. அந்த ஈஸ்வரன் நான். இந்தப்பிரகாரம் லயசிந்தனையறிந
து நீ சிந்தனைசெய்.

329. **லயசிந்தனையின் சுருக்கமானகிரமம்:—** ஸ்தூலப் பிரம்மாண்டமெல்லாம் பஞ்சீகிருதபூதகாரியம். எது பிருதிவியின் காரிய மோ, அது பிருதிவிஸ்வரூபமாயிருக்கிறது. ஜலத்தின் காரியம் ஜலஸ்வ ரூபம். இவ்விதமாக எந்தப்பூதத்தின் காரியமெதுவோ அது அதன் ஸ்வ ரூபமாகவேயிருக்கிறது. இவ்விதமாக ஸ்தூலப்பிரம்மாண்டமெல்லாம பஞ்சீகிருதபூதஸ்வரூபம்.

றபடியினாலும் ஞானிக்குத் திடமான இச்சையுண்டாகிறதில்லை. கயிற்றின்பே ரில் ஏறி விளையாடும் வித்தையாட்டியின் சித்தம் கயிற்றில் பதிந்திருப்பதுபோ ல் ஸ்வரூபத்தில் லயமடைந்த சித்தத்தையுடைய ஞானிக்கு விஷயபோகத்தில் திடஇச்சை உண்டாகாது. ஒருக்கால் மனது விகேஷபத்தை யடைந்தாலும் விவேகத்தால் மனது சாந்தியை அடைகிறது.

35. இச்சித்த பதார்த்தம் கிடைத்தால் முகம் பிரசன்னமாகிறது. பி ரகிருதத்தில் ஞானமூலமாக அவித்தியாநிவிர்த்தியும், பரமானந்தப் பிராப் தியும் சித்தித்திருந்தால் சீஷனுடைய முகம் பிரசன்னமாயிருக்கும். அப்படி யில்லாதபடியால் ஸ்வரூபானந்தத்தின் பிரதிபிம்பமுண்டாகவில்லை.

36. காரியத்தைக் காரணரூபமாக அறிந்து சிந்தனைசெய்தல் லயசிந்
தனையாம்.

330. பஞ்சீகிருதபூதம் அபஞ்சீகிருதபூதகாரியம். ஆனதால் அது அபஞ்சீகிருதஸ்வரூபமாகவேயிருக்கிறது, வேறில்லை. அந்தக்கரணம் முதலிய சூக்ஷ்மசிருஷ்டியும் அபஞ்சீகிருதபூதகாரியமாயிருப்பதால் அபஞ்சீகிருதபூதஸ்வரூபமாகவேயிருக்கிறது. அந்தக்கரணம் சகலபூதங்களின் சத்துவகுணகாரியமானதால் சத்துவகுணஸ்வரூபமாயிருக்கிறது. பூதங்களின் ரஜோகுணம்சத்தின் காரியமானபிராணன் ரஜோகுணஸ்வரூபமாயிருக்கிறது. குதேந்திரியம் பிருதிவியின் ரஜோகுணம்சத்தின் காரியமானதால் அது பிருதிவியின் ரஜோகுணஸ்வரூபமாயிருக்கிறது. கிராணேந்திரியம் பிருதிவியின் சத்துவகுணகாரியமானதால் அது சத்துவகுணஸ்வரூபம். இப்படியேரஸனேந்திரியமும் உபஸ்தேந்திரியமும் ஜலத்தின் சத்துவகுணரஜோகுணஸ்வரூபங்கள். நேத்திரமும் பாதமும் தேஜஸின் சத்துவகுணரஜோகுணஸ்வரூபங்கள். துவக்கும் பாணியும் வாயுவின் சத்துவகுணரஜோகுணஸ்வரூபங்கள். சுரோத்திரமும் வாக்கும் ஆகாசத்தின் சத்துவகுணரஜோகுணஸ்வரூபங்கள். இவ்விதமாகச்சூக்ஷ்மசிருஷ்டியெல்லாம் அபஞ்சீகிருதபூதஸ்வரூபமாக இருக்கிறது.

331 இப்படிச் சிந்தனைசெய்து அபஞ்சீகிருதபூதங்களுடையவும் லயசிந்தனை செய்யவேண்டியது. பிருதிவி ஜலத்தின் காரியமானதால் ஜலஸ்வரூபமாயிருக்கிறது. தேஜஸின் காரியமான ஜலம் தேஜஸ்ஸ்வரூபம். தேஜஸ் வாயுவின் காரியமானதால் வாயுஸ்வரூபம். ஆகாசத்தின் காரியமான வாயு ஆகாசஸ்வரூபம். தமோகுணப்பிரதானமான பிரகிருதியின் காரியமாகிற ஆகாசம் பிரகிருதிஸ்வரூபம்.

332. பிரகிருதிமாயையின் அவஸ்தாவிசேஷம். ஆகையால் பிரகிருதிமாயாஸ்வரூபம். ஓரேவஸ்துவுக்குப் **பிரதானம் பிரகிருதி மாயை அவித்தை அஞ்ஞானம்** என்னும் நாமபேதங்களுண்டு. இவைகளில் சகலகாரியங்களையும் தன்னிடத்தில் லயப்படுத்திப் பிரளயகாலத்தில் இருக்கிற உதாசீனஸ்வரூபத்துக்குப் பிரதானமென்று பெயர். சிருஷ்டியின் உபாதான காரணமான, தமோகுணப் பிரதானஸ்வரூபத்துக்குப் **பிரகிருதி**[37] யென்று பெயர். தேசகாலாதி சாமக்கிரிகளன்றியில் இந்திரஜாலத்தால் தர்க்கடபதார்த்தங்களுண்டாகின்றன. இதுபோல அசங்க அத்துவிதீயப் பிரம்மத்தில் இச்சாதிகள் தர்க்கடமாயிருக்கின்றன. அவைகளிருப்பதாகச் செய்வதால் **மாயை** யென்றுசொல்லப்படும். ஸ்வரூபத்தை மறைப்பதால் **அஞ்ஞான** மென்று சொல்லப்ப

---

37. 'ப்ர' என்றால் சத்துவகுணம். 'க்ரு' என்றால் ரஜோகுணம். 'தி' யென்றால் தமோகுணம். ஆகையால் சத்துவகுண ரஜோகுணங்களுடன் கூடிய தமோகுணப் பிரதான ஸ்வரூபம் பிரகிருதியாம்.

டும். பிரம்மஷித்தியால் நாசமடைவதால் அவித்தை யென்று சொல்லப்படும். சுதந்திரமாகவுருகாலத்திலும் மில்லாமல் சேதனத்தை யாசிரயித்துக் கொண்டே யிருப்பதால் சக்தி யென்றுஞ் சொல்லப்படும். இவ்விதமாகப் பிரகிருதி மூதலியவைகள் பிரதானத்தின் பேதங்களானதால் பிரதான ஸ்வரூபமாகவே யிருக்கின்றன.

333. இந்தபிரதானம் பிர்ம்மசேதனத்தின் சக்தியாயிருக்கிறது. புருஷனிடத்திலுள்ள சாமர்த்தியரூப சக்தி புருஷனை விட்டு வேறுயிராததுபோல் சேதனத்திலுள்ள பிரதானரூபசக்தி பிர்ம்மசேதனத்தை விட்டு[38] வேறுக இல்லை. இவ்விதமாகப்பிர்ம்மத்தினிடத்தில் சகல அனர்த்தபதார்த்தங்களின ல்யசிந்தனைசெய்து, "அந்த அத்துவயப் பிர்ம்மமே நான்" என்று சிந்தனைசெய். மகாவாக்கியவிசாரத்தாலுங்கூட எவனுக்குப் புத்தியின் மந்தாதிப் பிரதிபந்தங்களால்[39] அபரோகஷ ஞான முண்டாகிறதில்லையோ அவனுக்கு இந்த லயசிந்தனரூபத்தியானஞ் சொல்லப்பட்டது.

---

38. பிர்ம்மத்தின் சக்தி பிர்ம்மத்துக்கு வேறுயிருக்கும் பக்ஷத்தில் அத்துவைதச் சுருதிக்கு விருத்தமாகும். அபேதமென்றுசொல்லும்பக்ஷத்தில் சக்தி பிர்ம்மரூபமாகவே யாகிறதினால் பிர்ம்மத்துக்கு வேறான சக்தியென்னும் பெயர் வியர்த்தமாகும். ஆகையால் சக்திக்குப் பேதாபேதங்கள் இரண்டுஞ் சொல்லவேண்டும். இருட்டும வெளிச்சமும் போல் அவ்விரண்டு மோரிடத்திலிரா. ஆகையால் ரஜ்ஜுவினிடத்தில் சர்ப்பத்தின் சம்பந்தம் போல் பிர்ம்மத்தினிடத்தில் கல்பிதபேதமும் வாஸ்தவ அபேதமுமான அநிர்வசனீய தாதாத்மிய சம்பந்தம் இருக்கிறது. கல்பித சாப்பம் உண்மையில் அதிஷ்டான ரஜ்ஜுரூபமாகவே யிருப்பதுபோல் சக்தி உண்மையில் பிர்ம்மரூபமாகவே யிருக்கிறது. பிரளய காலத்தில் பிர்ம்மத்தினிடத்தில் வேறொன்று மில்லாவிடினும் மாயாசக்தி இருப்பதால் பிர்ம்மம் அத்துவிதியமென்று சொல்லகூடாது.

இதற்குச்சமாதானம்:— சுஷுப்திகாலத்தில் ஆத்மாவினிடத்தில் அவித்தை யிருக்கிறது. அது தன் நிர்ஷ்டிக்காவது வேறொருவன் நிர்ஷ்டிக்காவது எந்த பிரமாணத்தாலும் ஆத்மாவுக்கு வேறுக தோன்றுகிறதில்லை. ஆகையால் ஆத்மா அத்துவிதியமாயிருக்கிறது. இதுபோல் பிரளயகாலத்திலும் மித்தையான மாயாசக்தி வேறுகப் பிரதிதியாகிறதில்லை. ஆகையால் அந்தக்காலத்தில் பிர்ம்மம் அத்துவிதிய மாயிருக்கிறது. சிருஷ்டிக்குப் பிறகும் ஜகத்து பிர்மத்தில்ர்ஷாரோபிதமாயிருப்பதால் பிர்ம்மம் எப்போதும் அத்துவயம். மாயை தமோகுணப்பிரதானமான கிரியாசக்தியுடனும் சத்துவகுணபிரதானமான ஞானசக்தியுடனும் ரஜோகுணபிரதானமான இச்சாசக்தியுடனும் கூடியிருக்கின்றது.

39. இந்தப் பிரதிபந்தங்கள் பஞ்சதசிபிரகரணத்தின் தியான திபிகையின் 38 முதல் 53 வரைசுலோகங்களில் வித்தியாரண்ய சுவாமிகளால சொல்லப்பட்டிருக்கின்றன. இவை மூத பிரதிபந்தம், வர்த்தமான பிரதிபந்தம், ஆ

334. தியானத்துக்கும் ஞானத்துக்கும்பேதம்:—ஞானம் பிரமாணத்துக்கும் பிரமேயத்துக்கும் ஆதீனமாயிருக்கிறது, விதிக்கும் புருஷனுடைய இசனைக்கும் ஆதீனமாயில்லை. தியானமானது விதி புருஷனுடைய இச்சை விசுவாசம் ஹடம் இவைகளுக்கு ஆதீனமாயிருக்கிறது. பிரத்தியகூஞானத்தில் பிரமாணம் நேத்திரம், பிரமேயம் கடாதிகள். நேத்திரத்துக்கும் கடத்துக்கும் சம்பந்தமுண்டாகிறதினால் புருஷனுடைய இச்சையன்றியிலும் கடத்தின் பிரத்தியகூஞான முண்டாகிறது. பிள்ளையார்சதுர்த்தி தினம் சந்திரனைப்பார்க்கக்கூடாதென்கிற விதிதமுண்டு, விதியில்லை. ஏருவனுக்கு அன்றைதினம் சந்திரனைப் பார்க்கக்கூடாதென்று இச்சையுண்டானாலும் எவ்விதத்திலாவது நேத்திரத்துக்கும்

காமி பிரதிபந்தம் என மூவ்வகையாம். இவற்றுள். (I) தன புத்திராதிபிரியவஸ்துக்களின் நாசத்தின் பிறகும் அவைகளை வ்மரித்துக்கொண்டிருத்தல் பூதப்பிரதிபந்தமாம். (2) சமஸ்த விஷயங்களிலும் ரூடமான ஆசத்தியாகிற விஷயசக்தி, ஒருவன் சொன்ன அர்த்தம் புத்தியிற்பதியாமலிருக்கிற பிரஞ்ஞாமந்தம், ஆசாரியர் சொன்ன அர்த்தத்துக்கு விபரீத அர்த்தஞ்சொல்லும் குதர்க்கம், நான் பண்டிதன், நான் விருத்தன், நான் சன்னியாசி, இவ்விதமான தேகேந்திரியாதிகளிடத்தில் ஆத்மபுத்திபண்ணுகிற விபரீத தாரணம்; இக்நான்குமே வர்த்தமான பிரதிபந்தங்களாம். [3] பிர்ம்மலோகஇச்சை வரப்போகிற ஜன்மங்களுக்கு ஹேதுவான பிராரப்த சேஷங்கள், இவை ஆகாமிப்பிரதி பந்தங்களாம்.

40. ஞானம் மூன்று விதம்- [1] பிரத்தியஞானம். [2] ஸ்மிருதிஞானம். [3] பிரமாஞானம். இவைகளில் பிரத்தியஞானம் கேவலம் வஸ்துவுக்காதீனமாயிருக்கிறது. ஸ்மிருதிஞானம் முன்பார்த்த வஸ்துவினுடைய மறைமய ஆகாரத்துக்காதீனமாயிருக்கிறது. பிரமாஞானத்துக்கு அந்தர்கதமாயிருக்கிற சுகாதிகளின் ஞானம் நியாயிமதத்திலும் வாசஸ்பதிமதத்திலும் மனரூபமான பிரமாணத்துக்கும் சுகாதிரூபமான பிரமேயத்துக்கும் ஆதீனமாயிருக்கிறது. சித்தாந்தத்தில் அதற்கு மனது பிரமாணமாக அங்கீகாரம் பண்ணப்படாததினால் சுகாதிகளின் ஞானம் கேவலம் பிரமேயமாகிற சுகாதிரூபவஸ்துவுக்கு ஆதீனமாயிருக்கிறது. மற்றபிரமாஞானங்கள் இந்திரியம் அனுமானம் முதலியபிரமாணங்களுக்கும் பிரமேய ரூபவஸ்துக்களுக்குமுள்ள சம்பந்தத்துக்காதீனமாயிருக்கிறது. இவைகளில் சப்தப்பிரமாணத்தாலுண்டாகிற பிர்ம்மஞ்ஞானரூப சாப்தி பிரமா மகாவாக்கியரூப சப்தப்பிரமாணத்துக்கும் பிரத்தியகபின்ன பிர்ம்மரூபப் பிரமேயத்துக்குமுள்ள லக்ஷணவிர்த்திரூபப் பரம்பராசம்பந்த ஞானத்துக்காதீனமாயிருக்கின்றது. இதரபதார்த்தங்களின் சாப்தி பிரமாரூபஞானம் சிலவிடங்களில் சக்தி விர்த்திரூப சம்பந்தத்தின் ஞானத்துக்கும், சிலவிடங்களில் லக்ஷணவிர்த்திரூப சம்பந்தஞானத்துக்கும் ஆதீனமாயிருக்கின்றது. இவ்விதமாகச்சில ஞானம் ரூபயுரூபமான வஸ்துமாத்திரத்துக்கும்

சந்திரனுக்குஞ்சம்பந்தமுண்டானால் சந்திரனுடைய பிரத்தியகூஞானம் அவனுக்குண்டாகும். இவ்விதமாக ஞானம் பிரமாணப்பிரமேயங்களின் ஆதீனமாயிருக்கிறது, விதி இச்சைகளுக்கு ஆதீனமாயில்லை. மேலும் சாலிக்கிராமம் விஷ்ணுரூபமென்று தியானஞ்செய்கிறவனுக்கு உத்தமபலனுண்டாகிறது. சாலக்கிராமபிரமாணத்தினால் விஷ்ணுவைச்சதுர்ப்புஜமூர்த்தியாகவும் சங்கசக்கிரகதா பத்ம லக்ஷ்மி சகிதமாயும் அறிகிறான். நேத்திரப் பிரமாணத்தால் சாலிக்கிராமத்தைச் சிலேயாக அறிகிறான். ஆயினும் விதிவிசுவாச இச்சைகளால் சாலிக்கிராமம் விஷ்ணுவென்று தியானமுண்டாகிறது.

335. தியானபேதங்கள்:—ஆனால் இதுதத்தியானம் அனேகவிதமாயிருக்கிறது. (1) சாலிக்கிராமத்தை விஷ்ணுரூபமாகத்தியானிப்பதுபோல் அன்னியவஸ்துவை அன்னியரூபமாகத் தியானிப்பது பிரதீகத்தியானமென்னப்படும். (2) வைகுண்டலோகத்தில் வசிகிறவிஷ்ணுவைச் சங்கசக்கிராதிசகிதமாயும் சதுர்ப்புஜ மூர்த்தியாயும் தியானிக்கும்போது அன்னியவஸ்து அன்னியரூபமாகத்தியானஞ் செய்யப்படவில்லை. ஆனால் தியானம் திவ்யேயாணு சாரமாக இருக்கிறது. வைகுண்டத்தில் வசிக்கிற விஷ்ணுவின் ஸ்வரூபம் பிரத்தியகூஷமாயில்லை, கேவலம் சாஸ்திரத்தினால் அறியப்பட்டிருக்கிறது. சாஸ்திரத்தில் சங்கசக்கிராதி சகிதமாகவே விஷ்ணுவின் ஸ்வரூபஞ்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தத்தியானம் திவ்யேயஸ்வரூபத்தை யனுசரித்தேயிருக்கிறது. விதி விசுவாச இச்சைகளன்றியில் தியானமுண்டாகிறதில்லை. 'இந்த உபாசனை செய்' என்று ஒருவனைப்பிரவர்த்திக்கும்படிச்செய்கிறவசனம் விதியென்று சொல்லப்படும். அந்தவசனத்திலுள்ள சிரத்தைக்கு விசுவாச மென்று பெயர். அந்தக்காரணத்தின் இச்சாரூபமான ராஜோகுணவிர்த்திக்கு இச்சை யென்று பெயர். இம்மூன்றும் தியானத்துக்கு ஹேதுக்களாயிருக்கின்ற

சில பிரமாணப் பிரமேயரூபவஸ்துவின் சம்பந்தத்துக்கும் ஆதீனமாயிருக்கின்றன. இவ்விதமாக ஞானம் வஸ்துவுக்காதீனமாயிருக்கிறது.

41 பிர்ம்மத்தின் பிரத்தியகூஞ் ஞானவிஷயத்தில் பிரத்தியக் அபின்ன பிரம்மமே பிரமேயம். மகாவாக்கியம் பிரமாணம். குருமுகமூலமாய் சிஷ்யன் சிரவணம் செய்வதினால், பிரமாணம் பிரமேயத்தை விஷயமாக்கி சாகூஷாத்கார ஞானத்தை கொடுக்கிறது. இதில் விதி முதலியவைகளின் அபேகூஷையில்லை. மகாவாக்கியரூபபிரமாண மன்றியில் ஜீவ்ஞாசுவின் கேவலம் இச்சையாலாவது, மூடத்தினாலாவது, குருவினிடத்தில் விசுவாசத்தினாலாவது ஞானம் உதயமாகமாட்டாது. உபாசனை விதி முதலியவைகளை அபேகூஷிக்கிறது. ஏனெனில் சாஸ்திரவிதியை அனுசரித்துச்செய்யப்படும் உபாஸனைதான்

ன. ஞானத்துக்கு ஹேதுக்களன்று; மேலும் தியானம் ஹடத்திலுண்டாகும். ஞானத்தில் ஹடத்தின் அபேக்ஷையில்லை. ஏனெனில் நிரந்தரமான தியேயாகாரமான சித்தவிர்த்திக்குத்தியானமென்று பெயர் விர்த்தியில் விக்ஷேபமுண்டானால் பலவந்தமாக விர்த்தியைஸ்திரப்படுத்த வேண்டும். ஞானரூப அந்தக்கரண விர்த்தியால் ஆவரணபங்கமுடனே. யுண்டாவதால் விர்த்தியை ஸ்திரப்படுத்த வேண்டிய அவசியமில்லை. னதால் ஹடத்தின் அபேக்ஷையில்லை.

336. அகங்கிரகத்தியானம்— வைகுண்டவாசியான ர்ப்புஜ விஷ்ணுவை த்தியானிப்பதுபோல் 'நான் பிரமமம்'என்று தியானி ப்பதும் தியேயாணு சாரமாக இருக்கிறது,பிரதீகமாயில்லை. ஆனால் இது அகங்கிரகத்தியானமாயிருக்கிறது. தியேயஸ்வரூபத்தைத் தனக்கு அபே தமாகச்சிந்தித்தல் அகங்கிரகத்தியானமென்னப்படும். எவனுக்கு அபரோ க்ஷஞானமுண்டாகிறதில்லையோ வேதத்தின் ஆஞ்ஞாரூபவிதியில் விசுவா சம்வைத்துப் பலவந்தமாக இடைவிடாமல் 'நான் பிரமம' மென்று எவன் அகங்கிரகத்தியானஞ்செயகிறானே அவனுக்கும் ஞானமுண்டாகி மோக்ஷ முங்கிடைக்கும்.

பிரணவஉபாஸனை (337—367)

337. பிரணவத்தின் அகங்கிரகத்தியானம்:— வேறுவி தமாய் அகங்கிரக உபாஸனையைச சொல்லுகிறேன். சிஷ்யனே, பிரணவ ரூபமாகிற ஓங்காரஸ்வரூபத்தின் அகங்கிரகதியானம் மாண்டூக்கியா திசுருதிகளை யனுசரித்துச் சுரேஸ்வராசாரியரால் சொல்லப்பட்டி ருக்கிறது. அதை நீ யனுசரி. சுருக்கமாய் அதன் பிரகாரத்தைச்சொல் லுகிறேன். "பிரணவாக்ஷரம் பிர்ம்மஸ்வரூபம். அந்தப்பிரண வரூபப்பிர்ம்மம் நான்" என்று ஒருக்ஷணங்கூட விடாமல் புத்தி விர்த்தியைத்தரி. இதறகுச்சமானமான வேறு தியானமில்லை. இந்தத் தியானத்தின் விவரம் சுரேஸ்வராசாரியருடையபஞ்சீகரணக்கி

பலனைக்கொடுக்கிறது. விதியன்றியில் மனதில் தோன்றினபடி செய்யும் உபா சனை பலனைக்கொடுக்கிறதில்லை. ஆகையால் உபாசனை விதி முதலியவைகளு க்கு ஆதினமாயிருக்கிறது.

42. முதலிய சப்தத்தால் உத்தரதாபனிய மிச்சை கடவுள்ளி உடனிலை த்தல்கள் கிரகிக்கத்தக்கவை.

ரகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வுபாஸனையைச்செய்பவன் அபாகசமுசாரத்தை யொழிக்கிறான்.

338. பிரணவவுபாஸனை அனேக உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டிருந்தாலும் மாண்டூக்கிய வுபநிஷத்தில் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. பாஷியக்காரரும் ஆனந்தகிரியும் அந்த உபநிஷத்தின் வியாக்கியானத்தில் உபாஸனையின் விவரத்தைத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார்கள். அதவிவரம் வார்த்திகக்காராால பஞ்சீகரணக் கிரந்தத்திலெழுதப்பட்டிருக்கிறது. ஆயினும் இந்தக்கிரந்தங்களைப்பார்க்க எவன்புத்தி சமர்த்தமாயில்லையோ அவனுக்காகப் பிரணவ உபாஸனையின் விவரம் நாம் எழுதியிருக்கிறோம். உபநிஷத்தில் பிரணவவுபாஸனை இருவகையாய்ச்சொல்லபபட்டிருக்கிறது. ஒன்று பரப்பிர்மமரூபமாகப்பிரணவத்தைச்சிந்திதல். மறறொன்று அபரப்பிர்ம்மரூபமாகச்சிந்திதல். நிர்க்குணப் பிரமமத்துக்குப்பரப்பிர்மமமென்றும் ஸகுணப்பிர்மமத்துக்கு அபரபிரமமமென்றுமபெயர். பரப்பிர்ம்மரூபமாகப்பிரணவத்தைசிந்திக்கிறவன் மோக்ஷத்தையடைகிறான். அபரபிர்ம்மமாகப் பிரணவத்தைச் சிந்தனை செய்கிறவன் பிர்ம்மலோகத்தையடைகிறான். இவ்விதமாக நிர்க்குண ஸகுண பேதங்களால் பிரணவ உபாஸனை இர

339. நிர்க்குணஉபாஸனையின் விவரத்தையெழுதுகிறேன். ஸகுணஉபாஸனை விவரம எழுதவிலலை. ஏனெனில் பிர்மமலோகஇச்சையுள்ளவனுக்கு நிர்க்குணஉபாஸனையிலும இசசாரூபப்பிரதிபந்தத்தால் ஞானமூலமாக உடனே மோக்ஷமுண்டாகிறதிலலை. ஆனல் பிரம்ம லோகமடையப்படுகிறது. அவ்விடத்தில ஹிரண்யகர்ப்பனுடைய போகங்களுக்குச் சமானமான போகங்களை யனுபவித்து ஞானத்தைப் பெற்று மோக்ஷத்தை யடைகிறான். பிர்மமலோகஇச்சையில்லாதவனுக்கு இந்த லோகத்திலேயே ஞானமுண்டாகி மோக்ஷம சித்திக்கிறது. இவ்விதமாக ஸகுணஉபாஸனையின் பலனும் நிர்க்குணஉபாஸனையில் அந்தர்கதமாயிருக்கிறது. ஆகையால் நிர்க்குணஉபாஸனையின் விவரஞ்சொல்லுகிறோம்.

340. எது காரணகாரியவஸ்துவோ அது ஓங்காரஸ்வரூபமாயிருக்கிறது. ஆனதால் சகலரூபங்களும் ஓங்காரந்தான். சகலபதார்த்தங்களிலும் நாமம் ரூபம் என இரண்டு அம்சங்களுண்டு. அவைகளில் ரூபபாகம் அவ்வவற்றின் நாமபாகத்தை விட்டு வேறுக இருக்கிறதில்லை. ஆனல் நாமவ்வரூபமே ரூபபாகமாயிருக்கிறது. ஏனெனில் பதார்த்தத்தினுடைய ரூபம் அதாவது ஆகாரத்தின்பெயரால் அந்தப்பதார்த்தம்

கரஹிக்கப்படுகிறது அல்லது தள்ளப்படுகிறது. பெயர் அறியப்படாமல் கேவலம் ஆகாரத்தால் வியவகாரம் சித்திக்கிறதில்லை. ஆனதால் பெயரே முக்கியமானது. ஆகாரமழிந்தாலும் பெயர் நிற்கிறது. "கடம் நாசமடைந்தாலும் மண் மீர்கிறது. கடம் மண்ணைக்காட்டிலும் வேறன்று, மண்ஸ்வரூபமாகவேயிருக்கிறது. இதுபோல் ஆகாரம் நாசமடைந்தாலும் மண்போல் மிஞ்சுகிற நாமத்தைக்காட்டிலும் ஆகாரம் வேறுகாமல் நாமஸ்வரூபமாகவேயிருக்கிறது. மேலும் கடம் சட்டி பானை முதலியவைகளில் மண் அனுகதமாயிருக்கிறது. கடாதிகள் பரஸ்பரம் வியபசரிக்கிறபடியால் கடாதிகள் பொய். அவைகளில் அனுகதமான மண் சத்தியம். இதுபோல் கடத்தின் ஆகாரம் அனேகம். அவைகளுக்கெல்லாம் "கடம்" என்கிற மூன்றெழுத்துகளுடன் கூடிய பெயர் ஒன்றுயிருக்கிறது ஒருகட்டத்தின் ஆகாரம் மற்றொன்றுக்கில்லாதபடியால் ஆகாரங்கள் வியபசரிக்கின்றன. எல்லாகடங்களிலுகாரத்திலும் ஒரே பெயர் அனுகதமாயிருக்கிறது. ஆனதால் பொய்யான ஆகாரம் சத்தியமான பெயரைவிட்டு வேறுகவில்லை. இவ்விதமாகசகலபதார்த்தங்களிலுகாரமும் அவ்வற்றினுமத்தை விட்டு வேறுக இல்லை. நாமஸ்வரூபமாகவே ஆகாரமிருக்கிறது. நாமங்களெல்லாம் ஓங்காரத்தைவிட வேறன்று. ஓங்காரஸ்வரூபமே நாமம். ஏனெனில் வாசகசப்தத்துக்கு நாமமென்றுபெயர். உலகத்தில் வழங்குகிற சப்தங்களெல்லாம் ஓங்காரத்தினின்றுண்டாயினவெனச்சுருதியில் பிரசித்தமாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது. காரியமெல்லாம் காரணஸ்வரூபமாகவேயிருக்கிறது. ஆனதால் ஓங்காரத்தின் காரியமான வாசகசப்தரூபநாமம் ஓங்காரஸ்வரூபமாயிருக்கிறது. இவ்விதமாக ரூபமாகமாகிற பதார்த்தத்திலுகாரம் நாமஸ்வரூபமாயிருக்கிறது. நாமங்களெல்லாம் ஓங்காரஸ்வரூபம். ஆனதால் எல்லாஸ்வரூபமும் ஓங்காரமே.

341. எலலாஸ்வரூபமும் ஓங்காரமாயிருப்பதுபோல் எல்லாஸ்வரூபமும் பிர்ம்மமாயிருக்கிறது. ஆனதால் ஓங்காரம் பிர்ம்மரூபம். மேலும் ஓங்காரம் பிர்ம்மத்தின் வாசகம் பிர்ம்மம் வாச்சியம். வாசகத்துக்கும் வாச்சியத்துகும் அபேதமிருப்பதாலும் ஓங்காரம் பிர்ம்மரூபம். மேலும் விசாரித்துப்பார்த்தால் பிரமமத்தில் அஞ்ஞானம் அத்தியஸ்தமாயிருக்கிறது. அதற்குப்பிர்ம்மம் அதிஷ்டானமாயிருக்கிறது. அத்தியஸ்தத்தின் ஸ்வரூபம் அதிஷ்டானத்துக்கு வேறன்று. ஆகையாலும் ஓங்காரம் பிர்ம்மஸ்வரூபமாயிருக்கிறது. ஆனதால் ஓங்காரத்தைப்பிர்ம்மரூபமாகச்சிந்தனைசெய்யவேண்டியது.

342. பிர்ம்மரூப ஓங்காரம் ஆத்மாவுக்கு வேறன்றெனச்சிந்தனை செய். ஏனெனில், ஆத்மாவுக்கும் பிர்ம்மத்துக்கும் பேதமில்லை. பிர்ம்மத்துக்கு நாலுபாதங்களுண்டு. அப்படியே ஆத்மாவுக்கும் நாலுபாதங்களு

ண்டு. பாதமென்றால் பாகம் அல்லது அம்சம். விராட்டு[43], ஹிரண்யகர்ப்பன், ஈஸ்வரன்[44], தத்பதலக்ஷியமான ஈஸ்வரசாக்ஷீ இந்நான்கும் பிரம்மத்தின்பாதங்கள். விசுவன்[45], தைஜஸன்[46], பிராஞ்ஞன்[47], அவம் பதலக்ஷியமான ஜீவசாக்ஷீ இந்நான்கும் ஆத்மாவின் பாதங்களாம். ஜீவசாக்ஷிக்கேதுரியமென்றும் பெயர்.

343. விராட்டு விசுவங்களின் அபேதம்:— சமஷ்டி (186) ஸ்தூலப்பிரபஞ்சசகித சேதனத்துக்கு விராட்டென்று பெயர். வியஷ்டி (186) ஸ்தூலஅபிமானிக்கு விசுவனென்று பெயர். விராட்டுக்கும் விசுவனுக்கும் உபாதி ஸ்தூலமாயிருப்பதால் விசுவன் விராட்ரூபமே, விராட்டுக்கு வேறன்று.

344. ஏழங்கங்கள்:— விராட்ரூபவிசுவனுக்கு ஏழங்கங்களுண்டு. (1) சுவர்க்கலோகம் சிரசு (2) சூரியன் நேத்திரம் (3) வாயு பிராணன் (4) ஆகாசம் மார்பு (5) சமுத்திராதிரூபஜலம் மூத்திரவ்ஸ்தானம் (6) பிருதிவீ பாதம் (7) ஹோமம்பண்ணப்படுகிற அக்கினி முகம். இவ்வேழும் விசுவனுடைய அங்கங்கள். மாண்டூக்கிய உபநிஷத்தில் சுவர்க்கலோகாதிகள் விசுவனுடைய அங்கங்களல்லவென்று சொல்லியிருந்தாலும் விராட்டின் அங்கங்களாயிருப்பதாலும் விராட்டு விசுவங்களுக்குப்பேதமில்லாததினாலும் விசுவனுடைய அங்கங்களாகச் சொல்லப்பட்டன.

345. 19 முகங்கள்:— விராட்டுவிசுவங்களின் 19 முகங்க

---

43. சகல பிராணிகளின் சரீரத்தில் "நான்" என்கிற அபிமானத்தை தரிக்கிறதினால் ஈசுவரன் "வைசுவானரன்" என்று சொல்லப்படுகிறான். இந்த வைசுவானரன் அநேக விதமாய் பிரகாசிக்கிறபடியால் "விராட்டு" என்று சொல்லப்படுகிறான்.

44. சகல ஜீவர்களுக்கும் கர்மானுசாரமாய் பலத்தைக்கொடுப்பதால் ஈஸ்வரன் என்று பெயர்வந்தது.

45. சூக்ஷ்மதேகத்தின் அபிமானத்தை விடாமல் ஸ்தூலதேகத்தில் "நான்" என்னும் அபிமானத்தை யுடைத்தாயிருக்கிற, ஜாகிருதாபிமானியான ஜீவனுக்கு விசுவன் என்றுபெயர்.

46. தேஜ சப்தத்தின் வாச்சியமான அந்தக்கரணத்தை விடாமல் பிராணேந்திரியங்களுடன் கூடி இருக்கிற ஸ்வப்னாபிமானியான ஜீவனுக்கு தைஜஸன் என்று பெயர்.

47. பிராஞ்ஞன = பிர + அஞ்ஞன். சுஷுப்தியில் ஸ்வப்பிரகாசமான ஆத்மாநந்தத்துடன் அஞ்ஞான விர்த்தி சேர்ந்திருப்பதால் சுஷுப்தி அபிமானிஜீவனுக்கு பிராஞ்ஞன் என்றுபெயர்.

ளாவன:— பிராணன்கள் 5 கர்மேந்திரியங்கள்-5 ஞானேந்திரியங்கள் 5 அந்தக்காணம் 4 இந்தப்பத்தொன்பதும முகங்கள்போல் போகத்துக்குச் சாதனமாயிருப்பதால் முகங்களென்று சொல்லப்படுகின்றன. ஜாக்கிராவஸ்தையில் இந்தப்பத்தொன்பது முகங்கள்மூலமாக ஸ்தூலசப்தாதிகள் பாஹ்யயஷிர்த்தியால் கிரகிக்கப்படுகின்றன. ஆனதால் விராட்ரூப விசுவன் ஸ்தூலபோக்தாவென்றும் பாஹ்யயஷிர்த்தி அதாவது பஹிர்ப்பிரஞ்ஞன் என்றும் ஜாக்கிராவஸ்தையுடன் கூடினவனென்றுஞ்சொல்லப்படுகிறான்.

346. 14 திரிபுடிகள்:— போகசாதனங்களான பிராணாதி 19 முகங்களில் சுரோததிராதிபத்து இந்திரியங்களும் அந்தக்காணம்நான்கும் கூடிய பதிணன்கும் தங்கள் தங்கள் விஷயங்களையும் தங்கள் தங்கள் தேவதைகளின் சகாயத்தையும் அபேக்ஷிக்கின்றன. தேவதை, விஷயம் இவைகளின் சகாயமன்றியில் கேவலம் இந்த 14 முகங்களால்மட்டும் போகமுண்டாகிறதில்லை. ஆனதால் பஞ்சப்பிராணன்களும் 14 திரிபுடிகளும் விராட்ரூபவிசுவனுடைய முகங்களாகச்சொல்லப்படுகின்றன. முகம தேவதை விஷயம் இம்மூன்றின் சமுதாயத்துக்குத்திரிபுடியென்று பெயர். இந்தத்திரிபுடியைச்சொல்லுகிறேன். சுரோத்திரேந்திரியம் அத்தியாத்மம். அதின் விஷயமாகிற சப்தம் அதிபூதம். திசையின் அபிமானிதேவதை அதிதெய்வம். இவ்விடத்தில் கிரியாசக்தியுடனும் ஞானசக்தியுடனுங்கூடின இந்திரியமும் அதற்கரணமும் அத்தியாத்மமென்றும் இவைகளின் விஷயம் அதிபூதமென்றும் இவைகளுக்குச்சகாயமான தேவதை அதிதெய்வமென்றுஞ்சொல்லப்படும். இந்தத்திரிபுடிகள் அடியிற்கண்ட பதகத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

	இந்திரியம் அத்தியாத்மம்	விஷயம் அதிபூதம்	தேவதை அதிதேவதை
1	சுரோத்திரம்	சப்தம்	திக்கு அபிமானி தேவதை
2	தவக்கு	ஸ்பரிசம்	வாயு அபிமானி தேவதை
3	நேத்திரம்	ரூபம்	சூரியன்
4	ஜிஹ்வை	ரஸம்	வருணன்
5	கிராணம்	கந்தம்	அச்வினீகுமாரர்கள்

வார்த்திகக்காரசுரேஸ்வராசாரியார் பிருஹி யியின் அபிமானி தேவதையைக்கிராணத் தின் அதிதெய்வமாகச்சொல்லியிருக்கிறார். அதுவும் சரியே. ஏனெனில் பிருதிவியினி ன்றுப் கிராணம் உற்பத்தியாகிறது. ஆ லகயால் பிருதிவி அதிதெய்வமாகச்சொல் லப்பட்டது. மேலும் சூரியனுடைய குதி ரையின் மூக்கினின்றும் அச்வினிகுமாரர் களின் உற்பத்தி சொல்லப்பட்டிருப்பதா ல் மூக்கின் தேவதை அச்வினீகுமாரனென் று சிலர் சொல்லுகிறார்கள்.

6	வாக்கு	வக்தவ்வியம்	அக்கினிதேவதை
7	பாணி	பதார்த்தங்களைகிர கிக்தல்	இந்திரன்
8	பாதம்	கடை	விஷ்ணு
9	குதம்	மலவிஸர்ஜனம்	யமன்
10	உபஸ்தம்	மைதுனக்கிரியாரூ பசுதர்மத்தின்சுகம்	பிரஜாபதி
11	மனசு	மனதின் விஷயம்	சந்திரன்
12	புத்தி	புத்திக்குவிஷயம் அதாவது, ஞானத் தீக்கு விஷயம்	பிரகஸ்பதி
13	அகங்காரம்	அகங்காரத்தின்விஷ யம்	ருத்திரன்
14	சித்தம்	சிந்தனைக்குவிஷயம்	க்ஷேத்திரஞ்ஞ கிற சாக்ஷி

இந்தப்பதினன்கு திருபுடிகளும் ஐந்து பிராணன்களும் சேர்ந்து பத்தொன்பதும் விராட்ரூபவிசுவனுடைய முகங்களாம். **விசுவன்வி ராட்டு அகாரம்இவைகளின் அபேதசிந்தனை.** விராட்டுக்கும் விசுவனுக்கும் பேதமில்லாததுபோல் ஓங்காரத்தின் முதல்மாத்திரை யாகிய அகாரத்துக்கும் விராட்ரூபவிசுவத்துக்கும் பேதமில்லை. ஏனெனில் பிர்ம்மத்தின் காலுபாதங்களில் முதற்பாதம் விராட்டு. ஆத்மா

வின் நாலுபாதங்களில் முதலாவது விசுவன், ஓங்காரத்தின் நான்குமாத்திரைகளாகிற பாதங்களில் முதற்பாதம் அகாரம். ஆகையால் முதலாவதாயிருத்தல் இவைகளுக்குச் சமானதர்மமாயிருப்பதால் விசுவன் விராட்டு அகாரம் இம்மூன்றையும் அபேதமாய்ச் சிந்திக்கவேண்டும்.

348. விசுவஸ்தைஜஸபேதாபேதம்:— விசுவனுக்குச் சொல்லப்பட்ட ஏழு அங்கங்களும் பத்தொன்பது முகங்களும் தைஜஸனுக்கும் இருப்பதாக அறியவேண்டியது. ஆனால் பேதமென்னவெனில் விசுவனுடைய அங்கங்களும் முகங்களும் ஈசுவரனால் செய்யப்பட்டிருக்கின்றன. தைஜஸனுடைய இந்திரிய தேவதைகளையருபத் திரிபுடிகளும் சிரசுமுதலிய அங்கங்களும் பருமையமாயிருக்கின்றன. தைஜஸனுடைய போகம் சூக்ஷமம். போகமென்றால் சுகதுக்கங்களின் ஞானம். அதினிடத்தில் ஸ்தூலசூக்ஷமத்தன்மைகள் சொல்வதுசரியன்று. ஆயினும் பாஹ்யசப்தாதிகளின் சம்பந்தத்தால் சாக்ஷாத்தாக உண்டாகிற சுகதுக்கம் ஸ்தூலமென்றும் மானஸிகசப்தாதிகளின் சம்பந்ததாலுண்டாகும் சுகதுக்கம் சூக்ஷ்மமென்றுந் சொல்லப்படும். இந்தக்காரணத்தால் விசுவன் ஸ்தூலத்தின்போக்தாவென்றும தைஜஸன் சூக்ஷ்மத்தின் போக்தாவென்றும் சுருதியிற்சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில் தைஜஸனுடைய போகத்துக்கு யோக்கியமான சப்தாதிகள் மானஸிகமாயிருப்பதால் சூக்ஷ்மமாயிருக்கின்றன. இவைகளையபேக்ஷித்து விசுவனுடையபோகத்துக்கு யோக்கியமான பாஹ்யசப்தாதிகள் ஸ்தூலமாயிருக்கின்றன. மேலும் விசுவன் பகிர்ப்பிரஞ்ஞன். தைஜஸன் அந்தர்ப்பிரஞ்ஞன். ஏனெனில் விசுவனுடைய அந்தக்கரணத்தின் விர்த்திரூபப்பிரஞ்ஞை வெளியேபோகிறது. தைஜஸனுடைய பிரஞ்ஞை போகிறதில்லை.

349. தைஜஸஹிரண்யகர்ப்பஉகாரங்களின் அபேதசிந்தனை:—விசுவனுக்கும் விராட்டுக்குஞ்அபேதமிருப்பதுபோல்தைஜஸனையும் ஹிரண்யகர்ப்பரூபமாயறி. ஏனெனில், தைஜஸனுடைய உபாதி சூக்ஷ்மம். ஹிரண்யகர்ப்பனுடைய உபாதியும் அப்படியே. ஆகையால் இவ்விரண்டையும் ஒன்றாக அறி. தைஜஸஹிரண்யகர்ப்பங்கள் ஒன்றென அறிந்து ஓங்காரத்தின் இரண்டாவது மாத்திரையான உகாரத்துக்கும் இவைகளுக்கும் பேதமில்லையென்று சிந்தனைசெய். ஏனெனில் ஆத்மாவின் நாலுபாதங்களில் இரண்டாவது பாதம் தைஜஸன். பிர்ம்மத்தின் இரண்டாவது பாதம் ஹிரண்யகர்ப்பன். ஓங்காரத்தின் மாத்திரைகளில் இரண்டாவது மாத்திரை உகாரம். இரண்டாவதாக இருப்பது மூன்றுக்கும் சமானதர்மமாயிருக்கிறது. ஆகையால் மூன்றையும் ஒன்றாகச்சிந்தனைசெய்.

350. பிராஞ்ஞஈஸ்வராமகாரங்களின் அபேதம்:--பிராஞ்ஞனே ஈசுவரரூபமாக அறி. ஏனெனில் பிராஞ்ஞனுடைய உபாதி காரணம், ஈசுவரனுடைய உபாதியும் காரணமே. ஈசுவரனும் பிராஞ்ஞனும் மூன்றுவது பாதங்கள். ஓங்காரத்தின் மூன்றுவது மாத்திரை மகாரம். இம்மூன்றிலும் மூனைருவதாயிருப்பது சமானதர்மமாயிருப்பதால் இம்மூன்றையும் ஒன்றுக அறி.

351. இந்தப்பிராஞ்ஞன் **பிரஞ்ஞானகன**மாயிருக்கிறன். ஏனெனில் ஜாக்கிரஸ்வப்பனங்களிலிருக்கிற ஞானம், சுஷுப்தியில் கனம் அதாவது ஒரேஅவித்தியாரூபமாக ஆய்விடுகிறது. ஆகையால் பிரஞ்ஞானகனமென்று சொல்லப்படுகிறது. மேலும் இந்தப்பிராஞ்ஞன் ஆனந்தபுக்கென்றும் சுருதியிற்சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில் அவித்தையினலாவிருதமான ஆனந்தத்தையிந்தப்பிராஞ்ஞன் புஜிக்கிறன். ஆகையால் ஆனந்தபுக்கென்று சொல்லப்படுகிறன்.

352. ஸ்தஜஸன் விசுவன் இவைகளுடையபோகம் திரிபுடியாலுண்டாகிறதுபோல் பிராஞ்ஞனுடைய போகத்துக்கும் திரிபுடியுண்டெனச்சொல்லப்படுகிறது. சேதனத்தின் பிரதிபிம்பசகிதமான அவித்தியாவிர்த்தி அத்தியாத்மம். அஞ்ஞானத்தாலாவிருதமான ஸ்வரூபானந்தம் அதிபூதம். ஈசுவரன் அதிதெய்வம். இவ்விதமாக **விசுவன் பகிர்ப்பிரஞ்ஞனை**யிருக்கிறன். தைஜஸன் **அந்தர்ப்பிரஞ்ஞனை**யிருக்கிறன். **பிராஞ்ஞன் பிரஞ்ஞானகனனை**யிருக்கிறன்.

353. இவ்விதமாக விசுவாதிமூன்றுக்கும் சொன்ன பேதம் உபாதியால் உண்டாகிறது. விசுவனுக்கு ஸ்தூலசூக்ஷும அஞ்ஞானங்களாகிற மூன்று உபாதிகள். தைஜஸனுக்கு சூக்ஷும அஞ்ஞானங்களாகிற இரண்டு உபாதிகள். பிராஞ்ஞனுக்கு அஞ்ஞானமாகிற ஒரே உபாதியாம். உபாதிகளின் ஏற்றக்குறைவால் மூன்றுக்கும் பேதமுண்டாகிற தேதவிர உண்மையில் ஸ்வரூபத்தால் பேதமில்லை.

354. விசுவன் தைஜஸன் பிராஞ்ஞன் இவைகளில் அனுகதமான சேதனம் பாரமார்த்திகத்தில் மூன்றுஉபாதிகளின் சம்பந்தமுமன்றியிருக்கிறது மூன்று உபாதிகளின் அதிஷ்டானம் துரியம். இதுபகிர்ப்பிரஞ்ஞனன்று, அந்தர்ப் பிரஞ்ஞனன்று, பிரஞ்ஞானகனமுமன்று, கர்மேந்திரியத்துக்கும் ஞானேந்திரியத்துக்கும் விஷயமன்று, புத்திக்கு விஷயமன்று, எந்தச்சப்தத்துக்கும் விஷயமன்று, இப்படியிருக்கிற துரியத்தைப் பரமாத்மாவின் நான்காவது பாதமாகிற ஈசுவரசாக்ஷியாகிய சுத்தப் பிரம்மரூபமாக அறி.

355. இவ்விதமாக ஆத்மாவுக்கு இரண்டுவித ஸ்வரூபங்கள் சொல்லப்பட்டன. ஒன்று பாமார்த்தரூபம். மற்றொன்று அபாமார்த்தரூபம். மூன்று பாதங்கள் அபரமார்த்தரூபம். ஒருபாதமாகிய துரியம் பரமார்த்தரூபம். ஆத்மாவுக்கு இரண்டு ஸ்வரூபங்கள் இருப்பதுபோல் ஓங்காரத்துக்கும் இரண்டு ஸ்வரூபங்களுண்டு. அகார உகார மகாரங்களாகிய மூன்று மாத்திராரூப அக்ஷரங்கள் அபரமார்த்தரூபம். மூன்று மாத்திரைகளில் வியாபித்திருக்கிற அஸ்தி பாதி ப்ரியரூப அநிஷ்டானசேதனம் பரமார்த்தரூபம். ஓங்காரத்தின் பரமார்த்தரூபம் சுருதியில் அமாத்திரை சப்தத்தால் சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில் பரமார்த்தஸ்வரூபத்தில் மாத்திரைகளின் வியாபகமில்லை, ஆனதால் அமாத்திரையென்று சொல்லப்படுகிறது. இவ்விதமாக இரண்டுஸ்வரூபங்களுடன் கூடிய ஓங்காரத்துக்கும் இரண்டுஸ்வரூபங்களுடன் கூடிய ஆத்மாவுக்கும் உள்ள அபேதத்தையறி.

356. வியஷ்டி சமஷ்டி ஸ்தூலப் பிரபஞ்சத்துடன் கூடிய விசுவன் விராட்டு இவைகளுக்கும் அகாரத்துக்கு முள்ள அபேதத்தை யறி. ஆத்மாவினுடைய பாதங்களில் விசுவன் முதலாவது. ஓங்காரத்தின் மாத்திரைகளில் அகாரம் முதலாவது. ஆனதால் இரண்டையும் ஒன்றாக அறி. சூக்ஷமப்பிரபஞ்சசகிதமான ஹிரண்யகர்ப்பரூபத்தைஜஸனை உகாரரூபமாக அறி. தைஜஸன் ஆத்மாவின் பாதங்களில் இரண்டாவது. ஓங்காரதத்தின் மாத்திரைகளில் உகாரம் இரண்டாவது. ஆனதால் இரண்டையும் ஒன்றாக அறி. காரண உபாதிசகிதமான ஈசுவரரூபப் பிராஞ்ஞனை மகாரரூபமாக அறி. ஈஸ்வரரூபப் பிராஞ்ஞன் மூன்றுவதாக இருப்பதுபோல் மகாரமும் மூன்றுவதாக இருப்பதால் இரண்டையும் ஒன்றாக அறி. இவைகளில் அணுகதமான பரமார்த்தரூபமாகிய துரியத்தை ஓங்காரத்தின் மூன்றுமாத்திரைகளில் அணுகதமான ஓங்காரத்தின் பரமார்த்தரூபமாகிய அமாத்திரைக்கு வேறுகாததாக அறி. விசுவாதிகளில் துரியம் அணுகதமாயிருப்பதுபோல் அகாராதி மூன்று மாத்திரைகளில் அமாத்திரை அணுகதமாயிருக்கிறது. ஆனதால் ஓங்காரத்தின் அமாத்திரை ரூபத்தையும் துரியத்தையும் ஒன்றாக அறி. இவ்விதமாக ஆத்மாவின் பாதத்தையும் ஓங்காரத்தின் மாத்திரையையும் ஒன்றாக அறிந்து லயசிந்தனை செய்.

357. லயசிந்தனை. இந்த லயசிந்தனையைச் சொல்லுகிறேன்.

விசுவரூப அகாரம் தைஜஸரூப உகாரத்துக்கு வேறுகாமல் உகாரரூப மாகவேயிருக்கிறது. இப்படிச் சிந்தனைசெய்தல் இவ்விடத்தில் லய மென்றுசொல்லப்படுகின்றது. இப்படியே மற்ற மாத்திரைகளிலும் அ றியவேண்டியது. எந்த உகாரத்தில் அகாரம் லயமாகிறதோ அந்தத் தைஜஸரூப உகாரத்தைப் பிராஞ்ஞரூப மகாரத்தில் லயஞ் செய்யவே ண்டும். இந்த பிராஞ்ஞரூப மகாரத்தைத் துரியரூபமான ஓங்காரத் தின் பரமார்த்தரூபமாகிய அமாத்திரையில் லயஞ் செய்யவேண்டும். ஏனெனில் ஸ்தூலத்தின் உற்பத்தியும் லயமும் சூக்ஷமத்தில் உண்டா கின்றன. ஆகையால் விசுவரூப அகாரம் தைஜஸரூப உகாரதில் ல யமாகக் கூடும். சூக்ஷமத்தின் உற்பத்தியும் லயமும காரணத்திலுண் டாகின்றன. ஆனதால் தைதஜஸரூட உகாரம் அதின் காரணமாகிற பி ராஞ்ஞரூப மகாரத்தில் லயமாகக்கூடும். இந்த விடத்தில் விசுவாதி களால் சமஷ்டியாகிய விராட்டாதிகளையும் விசுவாதிகளின் திரிபுடிக ளையும் விராட்டாதிகளின் திரிபுடிகளையும் அறியவேண்டியது. எந்த ப் பிராஞ்ஞரூப மகாரத்தில் உகாரம் லயஞ்செய்யப்பட்டதோ அந்த மகாரத்தைத் துரியரூப ஓங்காரத்தின் பரமார்த்தரூப அமாதிரையில் லயப்படுத்துக. ஏனெனில் ஓங்காரத்தின் பரமார்த்தஸ்வரூபத்துக்கும் துரியத்துக்கும் பேதமில்லை. இந்தத் துரியம் பிர்ம்மரூபம். சுத்தபிர்ம்ம த்தினிடத்தில் ஈஸ்வரனும் பிராஞ்ஞனுங் கல்பிக்கப்பட்டிருக்கின்றன. எதுஎதில் கல்பிக்கப்படுகிறதோ அது அதின் ஸ்வரூபமாக இருக்கிறது. ஆனதால் ஈஸ்வர சகிதப் பிராஞ்ஞரூப மகாரம் லயமாகக்கூடும். இ வ்விதமாக எந்த ஓங்காரத்தின் பரமார்த்தஸ்வரூபமாகிற அமாத்தி ரையில் எல்லாம் லயப்படுத்தப்படுகின்றனவோ அதுவே நான் என்று வகாக்கிரசித்தத்துடன் சிந்தனை செய். ஸ்தாவர ஜங்கம ரூபமாயும் அ சங்கமாயும் அத்துவயமாயும் அசம்ஸாரியாயும் நித்தியமுக்தமாயும் நி ர்ப்பயமாயுமிருக்கிற பிர்ம்மரூபமாகிற ஓங்காரத்தின் பரமார்த்தஸ்வரூ பமே நான் யென்று சிந்தனைசெய்கிறதினால் ஞானமுண்டாகிறது. இ ந்த ஓங்காரத்தின் நிர்குணஉபாஸனை ஞானமூலமாக முக்திரூப பலத் தைக் கொடுக்கிறது. இது எல்லாவற்றிலும் உத்தமமானது.

358. ஓங்காரச்சிந்தனைக்கதிகாரி:— முன் சொன்னப்பிரகாரம் எ வன் ஓங்காரஸ்வரூபத்தை யறிகிறானோ அவன் முனி. அறியாதவன் மு னியன்று. ஏனெனில் முனியென்றால் மனனஞ்செய்கிறவன். இந்த

ஓங்காரத்தின் சிந்தனை மனன ரூபமாயிருக்கிறது. ஓங்காரத்தின் சிந்தனைரூப மனனமில்லாதவன் முனியன்று. மாண்டூக்கிய உபநிஷத்தை யனுசரித்துச் சுருக்கமாக ஓங்காரசிந்தனை சொல்லப்பட்டது. நிருசிம்ம தாபினீ முதலிய உபநிஷத்துகளிலும் இது விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஓங்கார சிந்தனை பரமஹம்ஸனுடைய கோப்பிய தனம். பகிர்முக புருஷனுக்கு இதில் அதிகாரமில்லை. அத்தியந்தம் அந்தர்முகியாயிருக்கிறவனே அதிகாரி. கிரகஸ்தனுக்கு இதில் அதிகாரமில்லை. ஸ்திரீதன புத்திரசம்பந்தமில்லாத பரமஹம்ஸனே அதிகாரி

359. **ஓங்காரத்தியானபலன் (359—360) :—** முன்சொன்னபடி ஓங்காரத்தைப் பிர்ம்மரூபமாகத் தியானஞ்செய்கிறதினால் ஞானமூலமாகமோக்ஷஞ்சித்திக்கிறது. ஆனல் எவனுக்கு இந்தலோகபோகத்திலாவது பிர்ம்மலோகபோகத்திலாவது இச்சையிருக்கிறதோ, ஆனல் எவன் தீவிரமான வைராக்கியமில்லாமல் பலவந்தமாக இச்சையைத் தகைந்து தனபுத்திராதிகளைத்தியாகஞ்செய்து பரமஹம்ஸகுரு உபதேசத்தால் ஓங்காரரூபப்பிர்ம்மத்தைத் தியானஞ்செய்கிறானே அவனுக்குப்போகஇச்சை ஞானத்திற் பிரதிபந்தகமாயிருக்கிறது. ஆகையால் அவனுக்கு ஞானமுண்டாகிறதில்லை. ஆனல் தியானஞ் செய்கிறதினல் இந்தச்சரீரமழிந்தபின் வேறு சரீரங்கிடைக்கிறது. இந்தலோகபோகங்களின் இச்சையைத் தகைந்துத் தியானஞ் செய்ததினல் இந்தலோகத்தில் வெகுசெல்வத்துடன்கூடிய பரிசுத்தமான சற்குலத்திற் பிறக்கிறான். அப்போது முன்ஜன்மத்தின் இச்சைகளெல்லாம் நிறைவேறி முன்ஜன்மத்தின் தியானசம்ஸ்காரத்தால் மறுபடியும் விசாரத்திலாவது தியானத்திலாவது பிரவிர்த்தியுண்டாகிறது. இதனல் ஞானமுண்டாகிமோக்ஷங்கிடைக்கிறது.

360 பிர்ம்மலோகத்தின் போகங்களில் இச்சையைத்தகைந்து ஓங்காரரூபப் பிர்ம்மத்தின் தியானத்திற் பிரவிர்த்திக்கிறவன் சரீரத்தை விட்டுப் பிர்ம்மலோகத்துக்குப் போகிறான். அவ்விடத்தில் மனுஷர்களுக்கும் பிதிர்க்களுக்கும் தேவதைகளுக்குங் கிடைக்காதச் சுதந்திரத்தின் ஆனந்தத்தையும் ஹிரண்யகர்ப்பனுடையசத்தியசங்கல்பாதிசகல ஐசுவரியங்களையுமடைகிறான்.

361. **பிர்ம்மலோகமாக்கம்:—** பிர்ம்மலோகம் போகும்மார்க்கம் அடியில் வருமாறு;—பிர்ம்மோபாஸனையில் தத்பரனையிருக்கிற பு

ருஷன் சாகுங்கால்லத்தில் இந்திரியங்களும் அந்தக்கரணமும் மூர்ச்சையடைந்து[48] ஒன்றையுமறியச் சமர்த்தமாகாவிட்டாலும் யமதூதர்கள் அவனுடையலிங்கசரீரத்தைக்கொண்டுபோக அவனருகில் வருகிறதில்லை. ஆனால் அக்கினியபிமானிதேவதை அவன்மரணசமயத்தில் அவனுடைய லிங்கசரீரத்தை யெடுத்துக்கொண்டுதன்லோகத்துக்குக் கொண்டு போகிறது. அக்கினிலோகத்திலிருந்து தினஅபிமானிதேவதை தன்லோகத்துக்குக் கொண்டுபோகிறது. அங்கிருந்து சுக்கிலபக்ஷஅபிமானி தேவதைதன்லோகத்துக்குக்கொண்டுபோகிறது. அங்கிருந்து உத்தராயணகால அபிமானிதேவதை தன்லோகத்துக்கும் அங்கிருந்து வம்வத்ஸர அபிமானிதேவதை தன்லோகத்துக்கும் அங்கிருந்து தேவலோகஅபிமானிதேவதை தன்லோகத்துக்கும் அங்கிருந்து வாயுஅபிமானிதேவதைதன்லோகத்துக்கும் அங்கிருந்து சூரியதேவதைதன்லோகத்துக்கும் அங்கிருந்துசந்திரதேவதைதன்லோகத்துக்கும் அங்கிருந்து மின்னல்அபிமானிதேவதை தன்லோகத்துக்கும் இந்தலிங்கசரீரத்தைக் கொண்டுபோகின்றன. இந்த மின்னல் அபிமானிதேவதையின் லோகத்தில் ஹிரண்யகர்ப்பனுடைய உத்திரவின்படி ஹிரண்யகர்ப்பலோகத்தில் வசிக்கிறவனும் ஹிரண்யகர்ப்பனுக்குச்சமானமானரூபத்தையுடையவனுமான ஒரு திவ்விய புருஷன் இந்த உபாஸகனைக் கொண்டுபோக இவனிடத்தில் வந்துசேருகிறான். இந்தமின்னல் அபிமானிதேவதையின் லோகத்திலிருந்து வருணலோகத்துக்கு அவன்அந்த உபாஸகனைக்கொண்டுபோகிறான். பின்பு வருணலோகத்திலிருந்து இந்திரலோகம் வரையில் வருணதேவதையுடனும் ஹிரண்யகர்ப்பலோகவாசியுடனும் உபாசகன்போகிறான் இந்திரலோக முதல்பிரஜாபதிலோகம்வரையில் இந்திரனுடனும்ஹிண்யகர்ப்பனுவாசியுடனும்போகிறான். அங்கிருந்து பிரஜாபதி பிர்ம்மலோகம்வரையில் அவ்விருவர்களுடன் போகச்சமர்த்தனுகாதபடியால் உபாஸகன்மட்டும் ஹிரண்யகர்ப்பவாசியுடன் பிர்ம்மலோகத்துக்குப்போகிறான். பிர்ம்

---

48. மரணசமயத்தில் ஸ்தூல சரீரத்தினின்றும் லிங்க சரீரம் பிரிகிறதினால் சேதன மில்லாமற் போகிறது. ஆனதினால் உபாஸகனுடைய பிராணேந்திரியங்கள் மூர்ச்சை யடைகின்றன. ஆகையால் யாதொன்றும் செய்ய அவைகள் சமர்த்தமாகிறதில்லை. கிரியாசக்தியுள்ளபிராணன்ஸ்வரூபத்தில் ஜடமாயிருப்பதால் அதற்கு இச்சையில்லை. ஆதலால்அதுஎங்கும்போக சமர்த்தமாகிறதில்லை.

மலோகத்தின் அதிபதிஹிரண்யகர்ப்பன். சூக்ஷ்மசமஷ்டியின் அபிமானி சேதனத்துக்கு ஹிரண்யகர்ப்பமென்றும் காரியப்பிரம்மமென்றும் பெயர். காரியப்பிரம்மத்தின் இருப்பிடத்துக்கும் பிரம்மலோகமென்று பெயர்.

362. சாயுஜ்யமோக்ஷம்:—மேற்சொன்னபடி ஓங்காரத்தைச் சுத்தபிரம்மரூபமாகப் பாவித்து உபாஸனைசெய்கிறவனுக்குச் சுத்தப்பிரம்மம்கிடைக்கவேண்டியதவசியமானாலும் சுத்தப்பிரம்மம் ஞானத்தினாலேயே அடையப்படும். இச்சைரூபப்பிரதிபந்தத்தால் ஞானமுண்டாகாதவனுக்குக் காரியப்பிரம்மத்தின் சாயுஜ்யரூபமோக்ஷங்கிடைக்கிறது. பிரம்மலோகத்தை யடைந்த உபாஸகனுக்கு ஹிரண்யகர்ப்பனுடைய விபூதிகளுக்குச்சமானமான விபூதிகள்கிடைக்கின்றன. அவன் சத்தியசங்கல்பனாகிறான். இச்சிக்கிற சரீரம் உண்டாகிறது. இச்சிக்கும் போகங்களெல்லாம் சங்கல்பத்தினாலேயே கிடைக்கின்றன. ஒருசமயத்தில் ஆயிரம் சரீரங்களால் அவ்வவற்றின் போகங்களைத் தனித்தனியே புஜிக்கவேண்டுமென்று இச்சையுண்டானாலும் ஏவ்வொரு போகத்துக்கும் வேண்டிய சாமக்கிரிகளுமுண்டாகின்றன. அதிகமாய்ச் சொல்வானேன். எந்தச்சங்கல்பஞ் செய்தாலும் சித்தியாகிறது. ஆனால் ஜகத்தின் சிருஷ்டிஸ்திதிஸம்ஹாரம் மூன்றுந்தவிர இஸ்வரனுண்டைய மற்றவிபூதிகளெல்லாங்கிடைக்கின்றன. இதற்குத்தான் **சாயுஜ்யமோக்ஷ**மென்று பெயர். இப்படி ஹிரண்யகர்ப்பனுக்குச் சமானமாகிறவன் வெகுகாலஞ்சத்தியசங்கல்பனுகித்திவ்வியமான பதார்த்தங்களைப் புஜித்துப் பிரளயகாலத்தில் ஹிரண்யகர்ப்பலோகத்துக்குநாசம் வரும்போது ஞானமடைந்து விதேகமோக்ஷத்தையடைகிறான்.

363 ஓங்காரரூபப் பிரம்மத்தை யுபாசிக்கிறவனுக்குப் பிரம்மலோகப்பிராப்திமூலமாக மோக்ஷங்கிடைப்பதுபோல்வேறுஉபநிஷத்துகளிற் சொல்லிய பிரம்மஉபாஸனையினாலும் இதேபலன் உண்டாகிறது. ஆனால் அகங்கிரகஉபாஸனையன்றியில் வேறு உபாஸனையால் பிரம்மலோக மடையப்படமாட்டாதென்று சூத்திரக்காரரும் பாஷியக்காரரும் நாலாவது[49] அத்தியாயத்திற் சொல்லியிருக்கிறார்கள். நர்மதையின் பாணங்களைச் சிவரூபமாகவும் சாளிக்கிராமங்களை விஷ்ணுரூபமாகவும்

---

49. பிரம்மசூத்திரத்தில் (இந்தபக்கத்தில்)

தியானஞ்செய்தல் பிரதீகத்தியானமேதவிர அகங்கிரகத்தியானமன்று. அப்படியே மனதைப் பிர்ம்மரூபமாகவும் சூரியனைப் பிர்ம்மரூபமாகவும் தியானஞ்செய்தல் பிரதீகத்தியானமேதவிர அகங்கிரகத்தியானமன்று. இவைகளாற் பிர்ம்மலோகம் அடையப்படமாட்டாது. சகுணம் அல்லது நிர்க்குணமாயிருக்கிற பிர்ம்மத்தைத்தனக்கு அபேதமாகச் சிந்தனைசெய்தல் அகங்கிரகத்தியானமென்னப்படும். இதனல்தான் பிர்ம்மலோகங்கிடைக்கும்.

364. முன் சொன்னமார்க்கம் உத்தராயணமார்க்கம் அல்லது தேவமார்க்கமென்னப்படும். இந்தத்தேவமார்க்கத்தால் பிர்ம்மலோகத்துக்குப்போன உபாஸகனுக்கு மறுபடியும் சமுசாரமுண்டாகிறதில்லை. ஆனல் அவனுக்கு ஞானமுண்டாகி அவன் விதேகமுக்தியையடைகிறான். அவ்விடத்தில் ஞானசாதனங்களான குரு உபதேசாதிகள் வேண்டியதில்லை. ஆனல் பிர்ம்மலோகத்தில் குரு உபதேசாதி சாதனங்களன்றியிலேயே ஞானமுண்டாகிறது. ஏனெனில் பிர்ம்மலோகத்தில் தமோகுணரஜோகுணங்களின் லேசமுமில்லை. அந்தலோகம் கேவலம் சத்துவகுணப்பிரதானமானது. தமோகுணமில்லாததினல் ஜடத்துவம் ஆலஸியம் முதலியவைகள் இல்லை. ரஜோகுணமில்லாததினல் காமக்குரோதாதிரூப ரஜோகுணத்தின் காரியமான விக்ஷேபமில்லை. கேவலம் சத்துவகுணமிருப்பதால் அதின் காரியமான ஞானரூபப்பிரகாசம் அந்தலோகத்தில் முக்கியமாயிருக்கிறது.

365. ஓங்காரத்தைப்பிர்ம்மரூபமாக முதலில் உபாசிக்கிறவன் ஓங்காரத்தின் மாத்திரைகளின் அர்த்தத்தை அடியில் சொல்லுமாறு சிந்தனை செய்யவேண்டியது. ஸ்தூலஉபாதிசகிதமான விராட்டு விசுவன் இவைகளின் சேதனம் **அகாரத்தின்வாச்சியம்.** சூக்ஷ்மஉபாதிசகித ஹிரண்யகர்ப்பன் தைஜஸன் இவைகளின் சேதனம் **உகாரத்தின்** வாச்சியம். காரணஉபாதிசகித ஈசுவரன் பிராஞ்ஞன் இவைகளின் சேதனம் **மகாரத்தின்** வாச்சியம். இப்படி அர்த்தத்தைச்சிந்திக்கிறவனுக்குப்பிர்ம்மலோகத்தில் ஸ்மரணையுண்டாகிறது. சத்துவகுணப்பிரதானத்தால் அடியில் கண்டபடி விவேசனமுண்டாகிறது. ஸ்தூலோபாதியால் சேதனத்தில் விராட்விசுவங்கள் பிரதீதியாகின்றன. ஸ்தூல சமஷ்டி திர்ஷ்டியால் விராட்டென்றும் ஸ்தூலவியஷ்டி திர்ஷ்டியால் வி

சுவனென்றும் தோன்றுகின்றன. சமஷ்டி வியஷ்டி ஸ்தூலதிர்ஷ்டியன் றியில் விராட் விசுவபாவங்கள் தோன்றுகிறதில்லை. ஆனல் சேதனமட் டும் விளங்குகிறது. அப்படியே சூக்ஷ்மஉபாதிசகித ஹிரண்யகர்ப்ப தைஜஸசேதனம் உகாரத்தின் வாச்சியமென்றவிடத்தில் சமஷ்டிசூக்ஷ்ம உபாதி திர்ஷ்டியால் சேதனத்தில் ஹிரண்யகர்ப்பனும் வியஷ்டிசூக்ஷ்மஉ பாதி திர்ஷ்டியால் தைஜஸனும் விளங்குகிறார்கள். சூக்ஷ்மஉபாதி திர்ஷ் டியன்றியில் ஹிரண்யகர்ப்ப தைஜஸபாவங்கள் தோன்றுகிறதில்லை. அப் படியே மகாரத்தின் வாச்சியம் ஈஸ்வரன் பிராஞ்ஞனென்றவிடத்தில் சமஷ்டியஞ்ஞான உபாதிதிர்ஷ்டியால் சேதனத்தில் ஈஸ்வரனும் வியஷ்டி யஞ்ஞான உபாதிதிர்ஷ்டியால் பிராஞ்ஞனும் தோன்றுகிறார்கள். அஞ் ஞான உபாதிதிர்ஷ்டியன்றியில் ஈஸ்வரப்பிராஞ்ஞபாவங்கள் தோன்றுகி றதில்லை. எந்த வஸ்து எதினிடத்தில் வேறுதிர்ஷ்டியால் பிரதீதியாகிற தோ அது அதினிடத்தில் பாரமார்த்திகத்தில் இருக்கிறதில்லை. எதின் எந்தரூபம் வேறுதிர்ஷ்டியன்றியில் பிரதீதியாகிறதோ அது அதின் பா ரமார்த்திகரூபமாயிருக்கிறது.

உதாரணம்:— ஓரேபுருஷனிடத்தில் பிதாதிர்ஷ்டியால புத்திர பாவமும், பாட்டன் திர்ஷ்டியால் பவுத்திரபாவமும் விளங்குகின்றன. இந்தப்பாவங்கள் பாரமார்த்திகத்தில் இல்லை. புருஷனுடைய பிண்ட மே பாரமார்த்திகத்திலிருக்கிறது. இதுபோல் ஸ்தூலசூக்ஷ்மகாரண உபாதிதிர்ஷ்டியால் விராட்விசுவாதிகள் தோன்றுகின்றன. இவைகள் மித்தை. சேதனமட்டும் சத்தியம். இந்தச்சேதனம் யாதொரு பேதமு மில்லாதது. ஏனெனில் விராட்டுக்கும் விசுவனுக்குமிருக்கிற பேதம் உபாதியாலுண்டாயிருக்கிறது. இரண்டுக்கும் உபாதி ஸ்தூலமாயிருந் தாலும் விராட்டுக்கு உபாதி சமஷ்டிஸ்தூலமாயும் விசுவனுக்கு உபாதி வியஷ்டிஸ்தூலமாயுமிருப்பதால் சமஷ்டி, வியஷ்டி உபாதியால் இவைக ளுக்குப்பேதமேதவிர ஸ்வரூபத்தில் பேதமில்லை. இப்படியே தைஜஸ னுக்கும் ஹிரண்யகர்ப்பனுக்கும் சமஷ்டி வியஷ்டி உபாதியால் பேதமே தவிர ஸ்வரூபத்திலில்லை. ஈசுவரனுக்கும் பிராஞ்ஞனுக்கும் சமஷ்டி விய ஷ்டி உபாதியால் பேதமேதவிர ஸ்வரூபத்திலில்லை. இவ்விதமாகப்பி ராஞ்ஞனுக்கும் ஈசுவரனுக்கும் அபேதம், தைஜஸனுக்கும் ஹிரண்யக ர்ப்பனுக்கும் அபேதம், விசுவனுக்கும் விராட்டுக்கும் அபேதமேற்படுகி றது. இவ்விதமாகூ ஸ்தூலோபாதியுடன்கூடினவனுக்கும் சூக்ஷ்மோபா தியுடன்கூடினவனுக்கும் காரணஉபாதியுடன்கூடினவனுக்கும் பேதமி

ல்லை. ஏனெனில் ஸ்தூலசூக்ஷ்மகாரண உபாதிநிர்ஷ்டியை விட்டுவிட்டால் சேதனஸ்வரூபத்தில் எவ்விதபேதமும் தோன்றுகிறதில்லை. மேலும் சேதனத்துக்கும் அனாத்மாவுக்குங்கூடப்பேதமில்லை. ஏனெனில் அனாத்மதேகாதிகள் அவித்தியாகாலத்தில் தோன்றுகின்றன. பரமார்த்தத்தில் தோன்றுகிறதில்லை. ஆகையால் அவைகளுக்கும் சேதனத்துக்கும் பேதம் சொல்வது சரியன்று. இவ்விதமாகச்சர்வபேதரகிதமாயும் அசங்கமாயும் நிர்விகாரமாயும் நித்தியமுக்தமாயும் பிர்ம்மரூபமாயும் இருக்கிற ஆத்மா ஓங்காரத்துக்கு லக்ஷ்யமாயும் ஸ்வயம்பிரகாசரூபமாயும் இந்த உபாக்கியானத்துக்கு விளங்குகிறது. ஆனதால் ஹிரண்யகர்ப்பலோகத்தில் வசிக்கிறனுக்குச்சமுசாரமுண்டாகிறதில்லை.

366. மகாவாக்கிய விவேகமன்றியில் ஞானமுண்டாகாவிட்டாலும் ஓங்காரத்தின் ஞானமே மகாவாக்கியத்தின் ஞானமாயிருக்கிறது. ஸ்தூலோபாதிசகிதசேதனம் அகாரத்தின் வாச்சியம். ஸ்தூலோபாதிரகிதசேதனம் அகாரத்தின் லக்ஷ்யம். சூக்ஷ்மோபாதிசகிதசேதனம் உகாரத்தின் வாச்சியம். சூக்ஷ்மோபாதிரகித சேவலசேதனம் உகாரத்தின் லக்ஷ்யம். காரணஉபாதிசகிதசேதனம் மகாரத்தின் வாச்சியம். காரண உபாதிரகிதகேவலசேதனம் மகாரத்தின் லக்ஷ்யம். இவ்விதமாக உபாதிசகிதவிசுவாதிகள் அகாராதிமாத்திரைகளின் வாச்சியங்களாம். உபாதிரகிதசேதனம் எல்லாமாத்திரைகளுக்கும் லக்ஷ்யமாம். அப்படியே காமரூபசகல உபாதிசகிதசேதனமும் ஓங்காரத்தின் வாச்சியம். காமரூபலகல உபாதிரகிதசேதனமும் ஓங்காரத்தின் லக்ஷ்யம். இவ்விதமாக ஓங்காரத்துக்கும் மகாவாக்கியத்துக்கும் அர்த்தம் ஒன்றுகவேயிருக்கிறது. ஆனதால் ஓங்காரவிவேகத்தால் அத்வைதஞானமுண்டாகிறது. இவ்விதமாக ஆசாரியர்வாக்கினின்றும் சிரவணஞ்செய்து அதிர்ஷ்டியாகிற மத்தியமசிஷ்யன் உபாஸனையில் பிரவர்த்தித்து ஞானமூலமாகப்பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தையடைந்தான்.

367. நிர்க்குணஉபாஸனையில் அதிகாரமில்லாதவன் செய்யவே

---

50. வேதாந்தச் சிரவணமனனரூப விசாரத்திற் பிரவர்த்தித்த ஜிஞ்ஞாசு இதர சாதனங்களை தேடவேண்டியதில்லை. இவைகளைவிட்டு வேறுசாதனங்களைத் தேடுகிறவன் ஆருடபதித்தகிறான். ஆகையால் நிடஞானமுண்

ண்டியதென்னவெனில், ஸ்குணஈசுவரனை மனதில் தரிக்கவேண்டியது. சகுண உபாஸனை செய்யாவிட்டால் நிஷ்காமகர்மஞ்செய்து ராமநினப்பஜிக்கவேண்டியது. நிஷ்காமகர்மஞ்செய்யாவிட்டால் ஸகாமசுபகர்மஞ் செய்யவேண்டியது. அதுவுஞ்செய்யாத சடன் அடிக்கடி ஜனனமரணத்தையடைவான்.

368. ஓங்கார அர்த்தத்தையறிந்து அதிர்ஷ்டியானவன் கிருதார்த்தனனன். இத்தரங்கத்தைதப்படிக்கிறவனைச்சுதிர்ஷ்டியாகக்குருசெய்கிறார்.

ஐந்தாவதுதரங்கம் முற்றிற்று.

ஹரி:ஓம்

டாகிற வரையில் அவன் விசாரந்தான் செய்யவேண்டியது. விசாரத்திற் பிரவிர்த்திக்காதவன் நிர்க்குண உபாஸனை செய்யவேண்டியது. இதுவும் செய்யாதவன் ஸகுண உசாஸனைசெய்யவேண்டியது.

51. மாயாவிசிஷ்ட சேதனரூப காரணப் பிர்ம்மம் அல்லது ஹிரண்யகர்ப்ப வைசுவாநராஹரி ஹரகௌரீகணேச சூரியாதிரூப காரியப் பிர்ம்மம் அல்லது பிரதிமாதிரூபப் பிரதிநிதிகள் இவைகள் ஸகுண ஈஸ்வரசப்தத்தால் நிரூபிக்கத்தக்கவை.

52. பலாபேக்ஷையன்றியில்

விசாரசாகாம்

6-வது தரங்கம்.

I. ஜாகிருதவ்வப்நங்கள் சமானம் (369—419)

369. பூர்வபீடிகை:— நான்காவது தரங்கத்தில் உத்தமாதிகாரி[1] யின் உபதேசப்பிரகாரஞ் சொல்லப்பட்டது. ஐந்தாவது தரங்கத்தில் மத்தியமாதிகாரியின் உபதேசப்பிரகாரஞ் சொல்லப்பட்டது. இந்தத் தரங்கத்தில் கனிஷ்டாதிகாரியின் உபதேசப்பிரகாரத்தைச் சொல்லுகிறேன். எவனுக்குச் சந்தேகங்கள் விசேஷமாய் ஜனிக்கின்றனவோ அவன் புத்தி தீவிரமாயிருந்தாலும் அவன் கனிஷ்டாதிகாரியென்று சொல்லப்படுகிறான். இந்தத் தரங்கம் யுக்திப்பிரதானமானதால் கேட்ட அர்த்தத்தில் குதர்க்கங்தோன்றுகிறவனுக்கு இந்தத்தரங்கமுபயோகப்படும். குதர்க்கத்தால் தூஷிக்கப்பட்ட புத்தியையுடையவன் கனிஷ்டாதிகாரி. இவனுடைய உபதேசப்பிரகாரம். இந்தத்தரங்கத்திற் சொல்லப்படும். ஐந்தாவது தரங்கத்திற் பிரணவோபாஸனை ஜகத்துற்பத்தி இவைகளின் நிரூபணத்துக்குமுன் (281—284) 'சேதனத்துக்கு வேறான அஞ்ஞானமும் அதின் காரியமும் அனுத்மாவென்றும், அனுத்மபதார்த்தங்களெல்லாம் சொப்பனம் போல மித்தையென்றும்' சொன்னதை தர்க்கதிருஷ்டி கேட்டு, இரண்டு தமையன்மார்களுங் கேள்விகேட்காமல் மவுனமாயிருந்ததைப்பார்த்து தர்க்கதிர்ஷ்டி கேட்கிறான்.

370. கேள்வி (370—371):— மூன் சுத்தமாயறியப்படாத பதார்த்தத்தின் ஞானம் சொப்பனத்தில் உண்டாகிறதில்லை. ஆனால் ஜாக்கிரதத்தில் எதின் அனுபவஞானமிருக்கிறதோ அதின் ஸ்மரணை சொப்பனத்திலுமுண்டாகிறது.[3] ஆகையால் ஸ்மிருதிஞானத்துக்கு விஷயமான ஜாக்கிரதபதார்த்தங்கள் சத்தியமாயிருப்பதால் சொப்பனத்திலுண்டாகிற அவைகளின் ஸ்மிருதிரூபஞானமும் சத்தியமே. ஆகையால் சொப்பனதிருஷ்டாந்தத்தால் ஜாக்கிரதபதார்த்தங்கள் பொய்யென்று சொன்னது சரியன்று.

1- 2. 4-வது தரங்கத்தின் 60-வது குறிப்பைப்பார்க்க.

3. இது நையாயிகமதம்.

371. சொப்பனஞானத்திற்கு விஷயமான பதார்த்தம் சத்திய மேதகிர மித்தையல்லவென்பதை வேறுயிதமாய்ப் பிரதிபாதிக்கிறேன். எப்படியெனில், சொப்பனவஸ்தையில் ஸ்தூலசரீரத்தை விட்டு லிங்கசரீரம் வெளியே சென்று சத்தியமான பர்வதம் சமுத்திரம் முதலியவைகளைப் பார்க்கிறது. ஆனதால் சொப்பனம் பொய்யன்று.

372. தருஉத்தாம் (372—419):— பூர்வகாலத்துடன் சம்பந்தப்பட்ட பதார்த்தத்தின் ஞானம் ஸ்மரணையென்னப்படும். முன் பார்த்த யானையைக்குறித்துண்டாகும் 'அந்த யானை' எனுமிற ஞானம் ஸ்மரணரூபம். எதிரில் நிற்கும யானையைக்கண்டு 'இது யானை' என்று உண்டாகும ஞானம் ஸ்மரணையன்று, இது பிரத்தியகூம். சொப்பனத்தில் 'இதை யானை எதிரில் நிற்கிறது' 'இது நதி' 'இது மலை' என்று ஞானமுண்டாகிறது. ஆகையால் ஜாக்கிரத்திற்பார்த்த பதார்த்தங்களின் ஸ்மரணை சொப்பனத்தில் உண்டாகிறதில்லை. ஆனல் யானை முதலானவைகளின் பிரத்தியகூஞானம் உண்டாகிறது.

373, "ஜாக்கிரதகாலத்தில் அறியப்பட்ட பதார்த்தங்கள்தான் சொப்பனத்தில் அறியப்படுகின்றன. அறியப்படாத பதார்த்தத்தின் ஞானமுண்டாகிறதில்லை. ஆகையால் ஜாக்கிரதபதார்த்தத்தின் ஞானசம்ஸ்காரத்தால் சொப்பனத்தில் ஞானமுண்டாகிறது. சம்ஸ்காரஜன்யஞானம் ஸ்மிருதியென்னப்படும. ஆனதால் சொப்பனத்திலுண்டாகும் ஞானம் ஸ்மிருதிரூபம்". இப்படி ஒருவன் செயயும் ஆசேஷபம் சரியன்று. ஏனெனில், பிரத்தியகூஞானமிருவகை. ஒன்று அபிஞ்ஞாதபப்பிரத்தியகூம். மற்றொன்று பிரத்தியபிஞ்ஞாதபிரத்தியகூம். கேவலம் இந்திரிய சம்பந்தத்தாலுண்டாகும் ஞானம் அபிஞ்ஞாப்பிரத்தியகூமென்னப்படும். 'இது யானை' என்று நேத்திரசம்பந்தத்தாலுண்டாகும் யானையின் ஞானம் அபிஞ்ஞாப்பிரத்தியகூம். முந்திய ஞானத்தின் சம்ஸ்காரத்தினாலும் இந்திரியசம்பந்தத்தினாலும் உண்டாகும் ஞானம் பிரத்தியபிஞ்ஞாப்பிரத்தியகூம். முன் பார்த்த யானை யெதிரில் காணப்படும்போது அந்த யானை இது தான் என்று உண்டாகும் ஞானம் பிரத்தியபிஞ்ஞாபிரத்தியகூம். இவ்விடத்தில் முன் பார்த்த யானையின் ஞானசம்ஸ்காரமும் யானையுடனை நேத்திரசம்பந்தமும் பிரத்தியபிஞ்ஞாபிரத்தியகூத்துக்கு ஹேதுக்களாயிருக்கின்றன. ஆனதால் சம்ஸ்காரஜன்யஞானமே ஸ்மிருதிரூபமாயிருக்கிறதென்கிற நியமமில்லை. பிரத்தியபிஞ்ஞாப்பிரத்தியகூஞானமும் சம்ஸ்காரஜன்யமாயிருக்கிறது. இந்திரியசம்பந்தமன்றியில்

---

4. சூட்சுமசரீரம்.

கேவலம் சம்ஸ்காரஜன்யஞானம் ஸ்மிருதிஞானமென்னப்படும். சொப்பனத்தில் யானை முதலானவைகளின் ஞானம் கேவலம் சம்ஸ்காரஜன்யமன்று. ஆனல் அது நித்திரைரூபதோஷஜன்யமாகிறது. யானை முதலானவைகள்போல் சொப்பனத்தில் கல்பிக்கப்பட்ட இந்திரியங்களுமிருக்கின்றன. ஆகையால் அவைகளின் ஞானம் இந்திரியஜன்யமாயிருக்கிறது. சொப்பனபதார்த்தம் (144) ஸாக்ஷீபாஸியமாயிருந்தாலும் இந்திரியஜன்யஞானத்துக்கு விஷயமாகாவிட்டாலும் அவிவேகதிர்ஷ்டியால சொப்பனஞானம் இந்தியஜன்யமென்று சொல்லப்படுகிறது. இவ்விதமாகச் சொப்பனத்திலுண்டாகும் ஞானம் ஜாக்கிரதபதார்த்தத்தின் ஸ்மரணையன்று.

374. நித்திரைவிட்டு விழித்துக்கொண்ட புருஷன் 'நான் சொப்பனத்தில் யானைமுதலியவைகளைப் பார்த்தேன்' என்று சொல்லுகிறான். சொப்பனத்தில் யானைமுதலியவைகளின் ஸ்மரணை யிருக்கும்பக்ஷத்தில் 'எனக்குச்' சொப்பனத்தில் யானைமுதலியவைகளின் ஸ்மரணை யிருக்கிறது, என விழித்துக்கொண்டவன் சொல்லக்கூடும். ஆனல் இப்படி ஒருவரும் சொல்வாரில்லை. ஆகையால் ஜாக்கிரதபதார்த்தங்களின் ஸ்மரணை சொப்பனத்திலுண்டாகிறதில்லை.

375. ஜாக்கிரதகாலத்தில் பார்த்த கேட்ட பதார்த்தத்தின் ஞானம்தான் சொப்பனத்திலுண்டாகிற தென்கிற நியமமில்லை, ஜாக்கிரதகாலத்தில் அறியப்படாத பதார்த்தத்தின் ஞானமும் சொப்பனத்திலுண்டாகிறது. ஜன்மம் முழுமையிலும் பார்க்காததும் கேட்காததுமான ஒரு விலக்ஷணபதார்த்தம் சொப்பனத்தில் தோன்றுகிறது. இதின் ஞானம் ஸ்மரணையன்று.

"இந்த ஜன்மத்தின் பதார்த்தஞானசம்ஸ்காரந்தான் ஸ்மரணைக்கு ஹேது வென்கிற நியமமில்லை. ஜன்மாந்தர ஞான சம்ஸ்காரத்தாலும் ஸ்மரணை யுண்டாகக்கூடும். ஏனெனில் அனுகூல ஞானததால் பிரவிர்த்தியுண்டாகிறது. அனுகூலஞானமன்றியில் பிரவிர்த்தி யுண்கிறதில்லை. ஆகையால் ஸ்தன்னிய பானத்தில் பாலர்களுக்குண்டாகிற

---

5. ஸம்ஸ்காரஜன்யஞானத்தை ஸ்மிருதி என்று சொல்லும்பக்ஷத்தில் பிரத்தியபிஞ்ஞா பிரத்தியக்ஷஞானத்திலும் ஸம்ஸ்காரஜன்யஞானமிருப்பதால் அதிவியாப்திதோஷமுண்டாகும். இதை நீக்குவதற்காக கேவலம் ஸம்ஸ்காரஜன்யஞானம் ஸ்மிருதி என்றும் இந்திரிய ஜன்யஞானசஹித ஸம்ஸ்காரஜன்யஞானம் பிரத்தியபிஞ்ஞாபிரத்தியக்ஷமென்றும் சொல்லப்படுகின்றன.

மூதற் பிரவிர்த்திக்குக் காரணம் வேறு ஜன்மத்திற் செய்த அனுகூலமான அனுபவத்தின் சம்ஸ்காரந்தான். இந்த ஸம்ஸ்காரத்தால் பாலர்களுக்கு அனுகூலத்தின் ஸ்மரணையுண்டாகிறது. ஆனதால் ஜன்மாந்திர ஞானஸ்ம்ஸ்காரத்தாலும் ஸ்மிருதியுண்டாகக்கூடும். அப்படியே இந்த ஜன்மத்தில் அறியப்படாத பதார்த்தத்தின் ஞானம் ஜன்மாந்திரத்தின் ஞான்ஸம்ஸ்காரத்தால் சொப்பனத்தில் ஸ்மிருதிரூபமாயிருக்கக்கூடும்". ஆயினும் ஜாக்கிரத காலத்தில் எந்த ஜன்மத்திலும் இருக்கத்தகாதபதார்த்தம் சொப்பனத்தில் பிரதீதியாகிறது. தன் தலையை வெட்டுவதை தன் கண்ணால் பார்ப்பதுபோலும். தன் தலையை வெட்டுவதை எவனும் எந்த ஜாக்கிரதாவஸ்தையிலும் பார்க்கிறதில்லை. ஆகையால் ஜாக்கிரதபதார்த்தத்தின் ஞானஸம்ஸ்காரத்தால் சொப்பனத்தில் ஸ்மிருதியுண்டாகிறதில்லை. சொப்பனம் ஸ்மிருதிரூபமென்பதைக் கண்டனை செய்வதில் அனேக யுக்திகளைக் கிரந்தக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள். சொப்பனத்தை ஸ்முருதிரூபமாக நினைப்பதில் மூன் செய்த ஆக்ஷேபம் அதிகப்பிரபலமாயிருக்கிறது. ஸ்மிருதிஞானத்தின் விஷயம் எதிரில் பிரதீதியாகிறதில்லை. சொப்பனத்தின் யானை முதலியவைகள் சொப்பனகாலத்தில் எதிரில் தோன்றுகின்றன. ஆகையால் யானை முதலியவைகளின் ஸ்மரண ஸ்வப்பனத்தியுண்டாகிறதில்லை.

376. 371ல் கண்ட ஆக்ஷேபத்துக்கு உத்தரம் (376—81) — லிங்கசரீரம் வெளியே சென்று சத்தியசமுத்திராதிகளைப் பார்க்கிறதென்று சொன்ன ஆக்ஷேபத்துக்குச் சமாதானம். ஸ்தூல சரீரத்திலிருந்து வெளியே சென்று லிங்கசரீரம் சமுத்திராதிகளைப் பார்க்கும் பக்ஷத்தில் அதுவெளியே போவதால் மரணவஸ்தையில் சரீரம் பயங்காரமாய்த் தோன்றுவதுபோல் சொப்பனவஸ்தையிலும் லிங்கசரீரம் இல்லாதபடியால் ஸ்தூல சரீரம் பயங்கரமாயும் பிராணனில்லாத பிணம்போலவும் தோன்றவேண்டும். ஆனல் சொப்பனவஸ்தையில் அப்படியில்லை. சொப்பனவஸ்தையில் ஸ்தூலசரீரம், பிராணசகிதமாயும் ஜாக்கிரதத்திற்போல மங்களரூபமாயுமிருக்கிறது. ஆகையால் ஸ்தூல சரீரத்தை விட்டு வெளியே லிங்கசரீரம் சொப்பனவஸ்தையிற் போகிறதில்லை.

377. ஆக்ஷேபம்:— சொப்பனவஸ்தையில் பிராணன் வெளியே போகிறதில்லை. ஆனல் அந்தக்கரணமும் இந்திரியமும் வெளியிலுள்ளபர்வதாதிகளுக்குப் போய் அவைகளைப்பார்க்கின்றன. பிராணன் வெளியேபோகாமையினுல் ஸ்தூல சரீரம் மரணவஸ்தையிற்போல் பயங்கரமாயிருக்கிறதில்லை. மேலும் பிராணன் வெளியே போகிறதினும் யாதொரு பிரயோஜனமுமில்லை. ஏனெனில் பிராணனிடத்தில் ஞானசக்தியில்லை, கிரியாசக்திதானிருக்கிறது. ஆகையால் வெளியேயுள்ள

பதார்த்தங்களையறியச் சமர்த்தமானதுதான் வெளியேபோகிறது. ஞானசக்தி அந்தக்கரணத்திலும் இந்தியத்திலுமிருக்கிறது. பிராணனிற்போல. கர்மேந்திரியத்திலும் ஞானசக்தியில்லை. கிரியாசக்தி தானிருக்கிறது. ஆகையால் பிராணனும் கர்மேந்திரியமும் சரீரத்தில் தங்குகின்றன; அந்தக்கரணமும இந்திரியமும் வெளியே போய்ச் சத்தியபர்வதாதிகளைப் பார்த்து பிராணைகர்மேந்திரியங்களிடத்தில் வந்துசேருகின்றன.

378. இந்த ஆக்ஷேபம் சரியன்று. ஏனெனில் ஸ்தூலசூக்ஷ்மங்களுடன் கூடிய சரீரத்தில் பிராணன் பிரதானம். பிராணனன்றியில் சரீரமிருப்பதைப் பார்த்து அதை யொருக்ஷணங்கூட வைத்துக்கொள்ளுகிறதில்லை. வெளியேகொண்டுபோய்த் தகனம் செய்கிறார்கள். தொட்டால் முழுகுகிறார்கள். ஆகையால் ஸ்தூல சரீரத்துக்குப் பிரதானமானது பிராணன். அப்படியே சூக்ஷ்மசரீரத்திலும பிரதானமானது பிராணனே.

பிராணனும் இந்திரியாதிகளும் தங்களுக்குள் யார் சிரேஷ்டமென்று ஒன்றுக்கொன்று விவாதப்பட்டு பிரஜாபதியினிடத்தில் போய்க்கேட்டதாவது — ஸ்வாமின் எங்களுக்குள் யார்சிரேஷ்டன்? அப்போது பிரஜாபதி சொன்னதாவது:— நீங்கள் எல்லாரும் ஸ்தூல சரீரத்திற் பிரவேசித்து ஏவ்வொருவராக வெளியே வாருங்கள். எவன் வெளியேவருகிறதினால் ஸ்தூல சரீரம் அமங்களமாகி விழுந்து போகிறதோ அவன்தான் உங்களுக்குள் சிரேஷ்டன். பிரஜாபதியின் வார்த்தையைக்கேட்டு எல்லாரும் ஸ்தூலசரீரத்திற் பிரவேசித்தார்கள். நேத்திராதி இந்திரியங்கள் ஓவ்வொன்றும் வெளியே வருவதினால் சரீரம் அவ்வவ்விந்திரியரஹிதமாய்க் காணப்பட்டது. பிராணன் வெளியே போகப்பிரயத்தனப்பட்டவுடன் சரீரம் விழுந்துபோயிற்று. அப்போது எல்லாருக்கும் ஸ்வாமி பிராணன் தான் என்று எல்லாரும் நிச்சயித்துக்கொண்டார்கள். இந்தக்காரணத்தால் பிராணன் இருக்கிற சரீரத்தில் இந்திரியாதிகளிருக்கின்றன. பிராணன் வெளியே போவதுடன் இந்திரியங்களும் வெளியே போகின்றன. ஆகையால் சூக்ஷ்ம சரீரத்துக்கு அரசன் போல் பிராணனே பிரதானம். பிராணன் போகாமல் அந்தக்கரணமும் இந்திரியங்களும் வெளியே போகிறதில்லை.

379. மேலும் அந்தக்கரணமும் (300) ஞானேந்திரியமும்(302) பூதங்களின் சத்துவகுணகாரியங்கள். அவைகளில் ஞானசக்தி யிருக்கிறதேதவிரக் கிரியாசக்தியில்லை. பிராணனிடத்தில் கிரியாசக்தி யிருக்கிறது. இதின் பலத்தினால் மரணசமயத்தில் லிங்கசரீரம் இந்த ஸ்தூலசரீரத்தைவிட்டு லோகாந்திரத்துக்குப் போகிறது. மேலும் பிராணனுடை

யபலத்தினால்தான் இந்திரியங்கள் மூலமாக அந்தக்காரணத்தின் விர்த்தி வெளியிலுள்ள கடாதிகளின்சமீபத்திற் சொல்லுகிறது. பிராணவுடைய சகாயமன்றியில் அந்தக்காரணவிர்த்தி வெளியிற் செல்லமாட்டாது. இந்தக்காரணத்தால் யோகசாஸ்திரத்தில் பிராணநிரோதமன்றியில் மனநிரோதமாகிறதில்லை யென்றும் பிராணன் சஞ்சரிப்பதால் மனதுஞ்சஞ்சரிக்கிறதென்றும் பிராணநிரோதத்தால் மனதும் அடங்குகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் மனதை யடக்குகிறதாகிய ராஜயோகத்தில் இச்சையுள்ளவன் பிராணநிரோதரூப ஹடயோகத்தையவஷ்டிக்கவேண்டியது. ஆகையாலும் அந்தக்காரணத்தின் கமனம் பிராணதீனமாயிருக்கிறது. பிராணன் வெளியே போகாமல் அந்தக்காரணமும் ஞானேந்திரியமும் வெளியே போகிறதில்லை. சொப்பனாவஸ்தையில் ஸ்தூலசரீரம் பிராணசுந்நிதமாய்க் காணப்படுகிறது. ஆகையால் அந்தக்காரணம் சொப்பனத்தில் வெளியேசென்று சத்தியபதார்த்தங்களை யறிகிறது, என்று சொன்னது சரியன்று.

380. மேலும் ஒருவன் சொப்பனத்தில் தன் சம்பந்தியுடன் கூடிச் சிலவியவகாரங்களைச் செய்கிறான். விழித்துக்கொண்டபின் அந்தச் சம்பந்தியைச் சந்தித்தபோது நாம் இருவரும் இராத்திரி இன்னவியவகாரத்தைச் செய்தோமென்று சொல்லுகிறதில்லை. பூர்வபக்ஷரீதியாய் அவன் வெளியே சென்று சம்பந்தியைச் சந்தித்து வியவகாரஞ்செய்திருக்கிறான். அப்படிச்சந்தித்தும் வியவகரித்ததும் சம்பந்திக்கும் தெரிந்திருக்கவேண்டும். சமபந்தியும் இவனைக்கண்டதும அப்படியே சொல்லவேண்டும். ஆனால அனுபவத்தில் அப்படியில்லை. சித்தாந்தத்திலோ சம்பந்தியும்சந்தித்ததும் எல்லாடி உள்ளே கல்பிதங்களாம்.

381. மேலும் வெளியேசென்று சத்தியபதார்த்தங்களைப் பார்க்கும்பக்ஷத்தில் ராத்திரியில் தூங்குகிறவன் தஞ்சாவூர்பட்டணத்தில் மத்தியான்ன சூரியன் பிரகாசிக்கிறதாகவும் தஞ்சாவூர் காவேரிக்கு வடக்கிலிருக்கிறதாகவும் ஸ்வாமிமலை தஞ்சாவூருக்கு மேறகிலிருக்கிறதாகவும் சொப்பனத்திற்பார்க்கிறான். இப்போது, இராத்திரியில் சூரியன் பிரகாசிக்கிறதில்லை. காவேரிக்கு வடக்கில் தஞ்சவூர் இல்லை. தஞ்சாவூருக்கு மேற்கில் ஸ்வாமிமலை இலலை. ஆகையாலும் சத்தியபதார்த்தங்கள் சொப்பனத்திற் காணப்படுகிறதில்லை. ஜாக்கிரதத்தின் ஸ்மரணையுண்டாகிறதில்லை. ஈஸ்வரனல் சிர்ஷ்டிக்கப்பட்ட பார்வதாதிசனின் ஞானமுமுண்டாகிறதில்லை. இவ்விதமாக இரண்டு சங்கைகளுக்கும் உத்தரஞ் சொல்லப்பட்டது.

சித்தாந்தம்:— ஜாக்கிரத்தும சொப்பனமும் சமம் (382—(419)

382. சொப்பனத்திலும் திரிபுடித் தோற்றமுண்டு **(382—387)** ;— ஜாக்கிரதபதார்த்தத்தின் ஸ்மரணையும், லிங்கசரீரம் வெளியேபோகுதலும் சம்பவிக்காவிட்டாலும் ஜாக்கிரதத்திற்போல்சொப்பனத்திலும் ஞாதா ஞானம் ஞேயம் என்கிற திரிபுடி தோன்றுகிறது. ஆனதால் கழுத்தின் காடிக்குள் இலைகளெல்லாமுண்டாகின்றனவென்ச்சகலபிரமாணங்களுக்கும் பிரதானமானவேதஞ்சொல்லுகிறது. மாண்டூக்கிய உபநிஷத்தில் சொல்லியிருக்கிறதாவது, "ஜாக்கிரதகாலத்தின் பதார்த்தங்கள் சொப்பனத்தில் தோன்றுகிறதில்லை. ஆனல் ரதம், ரதிகன், குதிரைகள், மார்க்கம் இலைகளெல்லாம் சொப்பனத்தில் புதிதாயுண்டாகின்றன". ஆனதால் மலை சமுத்திரம் நதிவனம் கிராமம் பட்டணம் சூரியன் சந்திரன் முதலிய சொப்பனத்திற் பார்க்கப்படும் பதார்த்தங்களெல்லாம் புதிதாயுண்டாகின்றன. சொப்பனத்திற் பர்வதாதிகள் உண்டாகாதபக்ஷத்தில் அவைகளின்பித்தியக்ஷ ஞானமுண்டாகக் கூடாது. ஏனெனில் விஷயத்துக்கும் இந்திரியத்துக்கும் அந்தக்கரணவிருத்திக்குமுண்டாகிற சம்பந்தம் பிரத்தியக்ஷஞானத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. ஆகையால் பர்வதாதி விஷயங்கன் இலைகளின் ஞானத்துக்குச் சாதனமான அந்தக்காணம இந்திரியங்கள் இலைகளெல்லாம் உள்ளே யுண்டாகின்றன.

383. சொப்பனபதார்த்தம் கிளிஞ்சிலில் வெள்ளிபோல் சாக்ஷீ பாஸியமாயிருக்கிறது. சொப்பனஞானத்தில் அந்தக்கரண இந்திரியங்களின் உபயோகமில்லை. ஆகையால் ஞேயமான பர்வதாதிகள் சொப்பனத்தில் உண்டாகிறதாக நினைப்பது யுக்தம். ஞாதா ஞானம் இந்திரியங்கள் இலைகள் சொப்பனத்திலுண்டாவதாக நினைப்பது யுக்தமன்று. ஆயினும் எப்படிச்சொப்பனத்திற் பர்வதாதிகள் தோன்றுகின்றனவோ அப்படி இந்திரியம் அந்தக்கரணம் பிராணசகிதஸ்தூலசரீரம் இலைகளும் தோன்றுகின்றன. ஆனதால் இலைகளும் உண்டாகிறதாக நினைப்பது யுக்தமே.

384. அன்றியும் சொப்பனபதார்த்தங்கள்தேத்திராதிகளுக்கு விஷயங்களாக விளங்குகின்றன. சொப்பனத்தின் பிராதிபாஸிகபதார்த்தங்கள் வியாவகாரிகதேத்திராதிகளுக்கும் விஷயங்களாகமாட்டா. ஏனெனில் சமசத்தையுடைய பதார்த்தங்களோ தங்களுக்குள் சாதகபாதகங்களாயிருக்கின்றனவென 5-வது தரங்கத்தில் (276) பிரதிபாதிக்கப்பட்டி

ருக்கிறது. ஆனால் வியாவகாரிக கேத்திராதிகள் சரீரத்திலிருந்தாலும் அவைகளுக்கும் சொப்பனபதார்த்தங்களுக்கும் விஷயசத்தையிருப்பதால் அவைகளின் ஞானத்துக்குச்சொப்பனபதார்த்தங்கள் விஷயமாகமாட்டா.

385. அன்றியும வியாவகாரிக இந்திரியங்கள் தங்கள் தங்கள் கோளகங்களை விட்டுக்காரியஞ்செய்வதில் சமர்த்தமாகா. சொப்பனாவஸ்தையில் கைகால்வாக்கு இவைகளின் கோளகங்கள் சலனமில்லாமல் அன்னியனுக்குக்காணப்படுகின்றன. சொப்பனங்காண்கிறவன் கையில் ஆயுதத்தை யெடுத்துக்கொண்டு சொப்பனத்திலோடுகிறான். ஆனால் சொப்பனத்தில் இந்திரியங்களினுற்பத்தியை, அவசியம் அங்கீகரிக்கவேண்டியது.

386. அப்படியே சுகம் துக்கம் இவைகளின் ஞானம் இதனாலதனுக்காசிரயமான பிரமாதா இவைகள் சொப்பனத்தில் தோன்றுகின்றன. இல்லாத பதார்த்தத்தின் தோற்றம் உண்டாகமாட்டாது. ஆனால் சகலதிரிபுடிகளும் சொப்பனத்திலுண்டாகின்றன.

387. அநிர்வசனீயக்கியாதியின்றீதி:— எவ்வளவு பிரமைஞான முண்டோ அவ்வளவு அதின் விஷயங்களெல்லாம அநிர்வசனீயமாக உண்டாகின்றன. விஷயமன்றியில் யாதொரு ஞானமுமுண்டாகமாட்டாதென்பது சித்தாந்தம். [6]வேறு சாஸ்திரத்தில் ஒரு பதார்த்தம் வேறு ஒரு ரூபமாகத்தோன்கிறது பிரமையென்று சொல்லப்படுகிறது. சித்தாந்தத்தில் எப்படிப்பதார்த்தம் இருக்கிறதோ அப்படியே ஞானமுமுண்டாகிறது. ஆகையால் பிரமைஸ்தலத்திலும் விஷயம் அவசியமுண்டாகிறது. விஷயமன்றியில் ஞானமுண்டாகிறதில்லை. இவ்விதமாகச்சொப்பனத்தில் திரிபுடிதோன்றுவதால் எல்லாம் உற்பன்னமாகின்றன.

388. சொப்பனசித்தி (388—89):— இதில் ஒரு சங்கை. சொப்பனத்தில் தோன்றும் பதார்த்தத்தின் உற்பத்தியை அங்கீகரிக்கும்பக்ஷத்தில் சொப்பனநிர்ஷ்டாந்தத்தால் ஜாக்கிரதபதார்த்தங்கள் பொய்யென்று சித்தாந்தத்திற் சொல்லப்படுவதுபோல் சொப்பனபதார்த்தங்களும் ஜாக்கிரதபதார்த்தங்கள்போல் உற்பத்தியாகிறபடியால் சத்தியமென்றே சொல்லவேண்டும். சொப்பனபதார்த்தங்களினுற்பத்தியை ஒப்பாவிட்டால் இந்தத்தோஷமில்லை. ஏனெனில் ஜாக்கிரதபதார்த்தங்

---

6. இது சிந்தாமணி என்கிற கையாயிகனுடைய மதம். சுவதந்தரத்தின் 19-வது குறிப்பைப்பார்க்க.

கள் உற்பத்தியாகித்தோன்றுகின்றன. சொப்பனபதார்த்தங்கள் இல்லாமலே தோன்றுகின்றன. ஆகையால் சொப்பனத்தில் இல்லாதபதார்த்தத்தின் ஞானம் பிரமமநுபமாயிருக்கிறது. அது உற்பத்தியாவதாகனிணப்பது அயுக்தம.

389. இதற்குச்சமாதானம்:— எந்தவஸ்துவின் உற்பத்தியில் எவ்வளவு தேசகாலாதி சாமக்கிரிகளாகிற காரணம் வேண்டுமோ அவ்வளவு சாமக்கிரியன்றியில் உற்பன்னமாகிற வஸ்துபொய்யென்று சொல்லப்படுகிறது. சொப்பனத்தில் யானைமுதலானவைகளின் உற்பத்திக்குவேண்டிய தேசகாலங்களில்லை. நீடித்தகாலத்திலும் விஸ்தாரமான இடத்திலும் உண்டாகக்கூடிய யானைமுதலியவை க்ஷணமாத்திரத்தில் சூக்ஷ்மமானகண்டப்பிரதேசத்திலுண்டாவதால் மித்தையாயிருக்கின்றன. சொப்பனவஸ்துவில் நீடித்தகாலமும் விஸ்தாரதேசமும் தோன்றினாலும் அன்னியபதார்த்தம்போல் சொப்பனத்தில் மிகுதியான தேசகாலங்கள் அநிர்வசனீயப்பிராதிபாஸிகமாக உற்பத்தியாகின்றன. ஏனெனில் விசாரமன்றியில் பிரத்தியக்ஷஞானம் உண்டாகிறதில்லை. சொப்பனத்தில் மிகுதியான தேசகாலங்களின் ஞானமுண்டாகிறது. வியாவகாரிகதேசகாலங்கள் சொற்பமாயிருகின்றன, ஆனதால் பிராதிபுாஸிகமாயுண்டாகின்றன. ஆனால் சாப்பனவஸ்துவில் உண்டாகிறபிராதிபாஸிகதேசகாலங்கள் சொப்பனவஸ்துவின் யானைமுதலியவைகளுக்குக்காரணமாகிறதில்லை. ஏனெனில் எது காரணமோ அது முதலிலும் எது காரியமோ அது பிறகும் உண்டாகவேண்டும். சொப்பனத்தின் தேசகாலங்களும் யானைமுதலியவைகளும் ஏகதேசமயத்திலுண்டாகின்றன. ஆகையால் இவைகளுக்குக்காரணகாரியபாவஞ்சொல்லக்கூடாது. மேலும் வியாவகாரிகதேசகாலங்கள் சொல்பமாயிருக்கின்றன. ஆகையால் யானைமுதலியவைகளுக்கு அவைகள் போதாதவை. ஆனதால் தேசகாலரூபச்சாமக்கிரிகளன்றியில் அவைகளுண்டாவதால் சொப்பனபதார்த்தங்கள் பொய்யாம். மேலும் சொப்பனத்தில் யானைக்குத்தாய்முதலிய சாமக்கிரிக்ருமில்லை. சொப்பனத்தில் பிராணிகளின் மாதாபிதாக்கள் தோன்றினாலும். சொப்பனமாதாபிதாக்கள் புத்திரனுடைய உற்பத்திக்குக்காரணமாகிறதில்லை. ஏனெனில் மாதாபிதா புத்திரன் மூவரும் ஒரேகாலத்திலுண்டாகிறார்கள். ஆகையால் அவர்களுக்குக்காரணகாரியபாவமில்லை. எந்தநித்திரைசகிதமான அவித்தையினின்றும் சொப்பன்பதார்த்தங்களுண்டாகின்றனவோ அந்த அவித்தையே அந்தப்பதார்த்தங்களில் மாதிர்ப்பிதிர்ப்புத்திரபாவங்களை யுண்டுபண்ணுகிறது. இவ்விதமாகச்சொப்பனபதார்த்த உற்பத்தியில் நித்திரைதோஷசகித அவித்தையே காரணமாயிருக்கிறதேதவிர வேறுகாரணங்களொன்றுமில்லை.

தோஷசகித அவித்தையாலுண்டாகும் வஸ்து கிளிஞ்சிலில் வெள்ளிபோல் மித்தையாயிருக்கிறது. ஆகையால் சொப்பனபதார்த்தம் சத்தியமன்று, மித்தையே. இதின் உபாதானகாரணம் அந்தக்கரணம் அல்லது சாக்ஷாத்து அவித்தையேயாம். முதற்பக்ஷத்தில் சாக்ஷீசேதனமும் இரண்டாவது பக்ஷத்தில் பிர்ம்மசேதனமும் சொப்பனத்துக்கு அதிஷ்டானங்களாம். இவ்விதமாகச்சொப்பனம் அந்தக்கரணம் அல்லது அவித்தையின் பரிணமமாயும் சேதனத்தின் விவர்த்தமாயுமிருக்கிறது.

390. **இதிலோர்சங்கை:—** இரண்டாவது பக்ஷத்தில் பிர்ம்மசேதனம் சொப்பனத்தின் அதிஷ்டானமாயும் அவித்தை உபாதானகாரணமாயும் சொல்லப்பட்டது. அதிஷ்டான ஞானத்திலல் கல்பிதம் நிவிர்த்தியாகிறது (147). சொப்பனத்துக்கு அதிஷ்டானம் பிர்ம்மமானதால் பிர்ம்மஞானமன்றியில் அஞ்ஞானிக்கு ஜாக்கிராவஸ்தையில் சொப்பனம் நிவிர்த்தியாகக்கூடாது.

391. **வேறோர்சங்கை:—** சொப்பனத்துக்கு அதிஷ்டானம் பிர்ம்மமாயும் உபாதானகாரணம் அவித்தையாயும் இருப்பதுபோல், வேதாந்தசித்தாந்தத்தில் ஜாக்கிராவஸ்தையின் வியாவகாரிகபதார்த்தங்களுக்கும் அதிஷ்டானம் பிர்ம்மம், உபாதானகாரணம் அவித்தை. ஆனதால் ஜாக்கிரதபதார்த்தங்களை வியாவகாரிகமென்றும் சொப்பனபதார்த்தங்களைப்பிராதிபாஸிகமென்றும் சொல்லும்பேதம் இருக்கக்கூடாது. எனெனில் இரண்டுக்கும் அதிஷ்டானம் பிர்ம்மம், உபாதானகாரணம் அவித்தை. ஆகையால் ஜாக்கிரம் சொப்பனம் இரண்டும் வியாவகாரிகமாகவேண்டும், அல்லது பிராதிபாஸிகமாகவேண்டும்.

392. இவ்விரண்டு சங்கைகளுஞ் சரியன்று. 390ல் கண்ட முதல் சங்கைக்குச் சமாதானம் அடியில் வருமாறு:— நிவிர்த்தி இருவகையென 4-வது தரங்கத்தில் (152) கியாதிநிரூபணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. காரண சகித காரியத்தின் விநாச ரூபமான சொப்பனத்தின் அத்தியந்த நிவிர்த்தி ஜாக்கிரதத்தில் பிர்ம்ம ஞானமன்றியில் சம்பவிக்கமாட்டாது. ஆனல் தடியாலடிப்பதால் எப்படிக் கடம் மண்ணில் லயமாகிறதோ அப்படிச் சொப்பனத்துக்குக் காரணமான நித்திராதோஷநாசத்தினலும் சொப்பனத்துக்கு விரோதமான ஜாக்கிரத்தினுற்பத்தியாலும் அவித்தையில்லயரூபமான நிவிர்த்தி சொப்பனத்துக்குப் பிர்ம்ம ஞானமன்றியில் சம்பவிக்கும்.

393. 391ல் கண்ட ஜாக்கிர சொப்பனங்கள் சமமென்று சொன்னதுஞ் சரியன்று. ஏனெனில் ஜாக்கிரத்தின் தோஷாதிபதார்த்தங்களினுற்பத்தியில் வேறுதோஷமில்லாத கேவலம் அனுதியான அவித்

தையே உபாதானகாரணமாயிருக்கிறது. சொப்பன பதார்த்தங்களிலோ ஆகியுடன் கூடிய நித்திராதோஷமும் அவித்தைக்குச் சகாயமாயிருக்கிறது. ஆகையால் அன்னியதோஷமில்லாத கேவலம் அவித்தியாஜன்யம் வியாவகாரிகமென்றும் ஸாதிதோஷஸஹித அவித்தியாஜன்யம் பிராதிபாஸிகமென்றுஞ் சொல்லப்படும். சொப்பன பதார்த்தம் நித்திராதோஷசஹித அவித்தியாஜன்யமாயிருப்பதால் பிராதிபாஸிகமாயிருக்கிறது. ஜாக்கிரதபதார்த்தம் அன்னிய தோஷ ரஹித அவித்தியாஜன்யமாயிருப்பதால் வியாவகாரிகமாயிருக்கிறது. இவ்விதமாகச் சொப்பனபதார்த்தத்துக்கும் ஜாக்கிரத பதார்த்தத்துக்கும் விலக்ஷணதைதோற்றுகிறது. ஆனல் இவைகள் யெல்லாம் மூன்றுவிதச் சத்தைதகளிருப்பதாக நினைத்து ஸ்தூல திர்ஷ்டியாற் சொல்லப்பட்டன. விசார திர்ஷ்டியிலாற் பார்க்கின் மூன்றுவிதச்சத்தைதகளுமில்லை. ஜாக்கிரசொப்பனங்களில் பரஸ்பர விலக்ஷணதையுமில்லை.

394. வேதாந்த பரிபாஷாதிகிரந்தங்களில் முன்சொல்லியபடி வியாவகாரிகபிராதிபாஸிகபதார்த்தங்களின் பேதம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் மூன்று சத்தைதகளும் அங்கிகரிக்கப் ப்ட்டிருக்கின்றன. அப்படியே வித்தியாரண்யஸ்வாமிகளும் சொல்லியிருக்கிறார்கள். எப்படியெனில், தேகாதிபதார்த்தங்களிருவகையாம். ஒன்று ஈஸ்வரசிருஷ்டி. இது பாவியம். மற்றொன்று ஜீவசங்கல்பத்தால் உண்டாகிறது. இதுமனோமயமாயும் அந்தரமாயுமிருக்கிறது. இவ்விரண்டில் ஜீவசங்கல்பத்தாலுண்டாகிறஅந்தரமான மனோமயசிருஷ்டி சாக்ஷிபாஸியமாயிருக்கிறது. பாஹ்யமான ஈஸ்வரசிருஷ்டி பிரமாதாபிரமாணங்களுக்கு விஷயமாயிருக்கிறது. அந்தரமனோமயதேகாதிகளே ஜீவனுடைய சுகதுக்கங்களுக்குக் காரணமாயிருக்கின்றன. பாஹ்யமாஸ்வரசிருஷ்டி சுகதுக்கங்களுக்குக் காரணமாகிறதில்லை. ஆனதால மனோமயபதார்த்தங்களின் நிவிர்த்தி முமுக்ஷுவுக்கு வேண்டியதேயொழியச் சுகதுக்கங்களுக்குக் காரணமாகாத பாஹ்யப்பிரபஞ்சத்தின்நிவிர்த்தி வேண்டியதில்லை. உதாரணம் :— இருவர்களின் இரண்டு புத்திரர்கள் தேசாந்திரம் போயிருந்தார்கள். அவர்களில் ஒருவன் இறந்துபோனன். மற்றவன் ஜீவித்திருந்தான். ஜீவித்திருந்த புத்திரன் வெகு திரவியஞ் சம்பாதித்து ஒரு மனிதன் மூலமாகத் தனக்குத் தனங் கிடைத்ததென்று தன்தகப்பனுக்கும் மற்றொருவனிறந்தானென்று அவன்தகப்பனுக்கும் சொல்லியனுப்பினன். இதைக் கேட்டவன் தான் பொல்லாதவனுகாமல் ஜீவித்திருக்கும் பிள்ளையின் தந்தையினிடத்தில் அவன் மகன் மரித்தானென்றும் இறந்தபிள்ளையின் பிதாவிடத்தில் அவன் மகன் ஜீவித்திருக்கிறனென்றும் வெகு பணம் சம்பாதித்திருக்கிறனென்றும்சீக்கிரத்தில் யானையின்மேல் ஆட்டத்துடன் வருவானென்றுஞ் சொன்னன். இந்தக் கபடவார்த்தையைக் கேட்டு ஜீவித புத்திரனு

டைய தகப்பன் வெகு துயரப்பட்டான். இறந்த புத்திரன்தகப்பன் வெகு சந்தோஷப்பட்டான். இவ்விதமாக ஈஸ்வராசிதபுத்திரன் ஜீவித்திருந்தும் மரணமடைந்துபோய்விட்டபடியால் துக்கமுண்டாயிற்றேயொழியச் சுகமுண்டாகவில்லை. அப்படியே இரண்டாவதான ஈஸ்வராசிதபுத்திரன் இறந்துபோயும் துக்கமுண்டாகவில்லை. புத்திரன் மரணமடைந்ததுடன் கூடியிருப்பதால் சுகமுண்டாகிறது. ஆகையால் ஜீவசிருஷ்டிதான் சுகதுக்கங்களுக்குக்காரணமேயொழிய ஈஸ்வரசிருஷ்டி காரணமன்று. இவ்விதமாக வித்தியாரண்யஸ்வாமிகள் (பஞ்சதசிப்பிரகரணத்தின் த்வைத விவேகப்பிரகரணத்தைப்பார்க்க) ஜீவசிருஷ்டியையும் ஈஸ்வரசிருஷ்டியையும் சொல்லியிருக்கிறார்கள். ஜீவசிருஷ்டி பிராதிபாஸிகம். ஈஸ்வரசிருஷ்டி வியாவகாரிகம். இப்படியே வேறுசிலகிரந்தக்காரர்களும் சத்தையை மூன்றுவிதமாய்ச்சொல்லியிருக்கிறார்கள். சேதனத்தின் சத்தை பாரமார்த்திகம். சேதனத்துக்குவேறான ஜடபதார்த்தங்களின் சத்தையிருவகைத்து. ஒன்று வியாவகாரிகம். மற்றொன்று பிராதிபாஸிகம். சிருஷ்டியின் தொடக்கத்தில் ஈஸ்வரசங்கல்பத்தாலுண்டான கேவலம் அவித்தையின் காரியமான பஞ்சபூதங்களும் அவைகளின் காரியங்களும் வியாவகாரிகசத்தைகள். தோஷசகித அவித்தியாகாரியங்களான சொப்பனம் கிளிஞ்சிலில் வெள்ளி முதலியவைகள் பிராதிபாஸிகசத்தைகள். இவ்விதமாக ஜாக்கிரதபதார்த்தங்களுக்கு வியாவகாரிகசத்தையும் சொப்பனபதார்த்தங்களுக்குப் பிராதிபாஸிகசத்தையும் சொல்லப்படுகின்றன.

395. ஆயினும் அனுத்தமபதார்த்தங்களெல்லாம் பிராதிபாஸிகங்களாயிருக்கின்றன. ஆகையால் சத்தை இருவகைத்தே. சேதனம் பாரமார்த்திகசத்தை, சேதனத்துக்கு வேறான சகல அனுத்தமாக்களும் பிராதிபாஸிகசத்தையாம்.

396. ஜாக்கிரதசொப்பனபதார்த்தங்களுக்குக் கொஞ்சங்கூட விலக்ஷணதையில்லையென்னும் உத்தமசித்தாந்தத்தைப் பிரதிபாதிக்கிறேன். தேசகாலசாமக்கிரியன்றியில் சொப்பனத்தின் யானைமலைமுதலியபதார்த்தங்கள் உண்டாகின்றன. ஆகையால் அவைகள் மித்தையென்று சொல்லப்படுகின்றன. அப்படியே ஆகாசாதிப்பிரபஞ்சத்தின் சிருஷ்டி பிரம்மத்தினின்றும் உண்டாகிறது. அந்தப் பிரம்மத்தினிடத்தில் தேசகாலங்களின் லேசமுமில்லை. சொப்பனத்தில் யானை மலை முதலியவைகளுக்கு வேண்டிய தேசகாலங்களில்லாவிட்டாலும் அற்பதேசகாலங்களிருக்கின்றன. ஆகாசாதிகளின், சிருஷ்டியில் அற்பதேசகால்ங்கள்கூட இல்லை. எனெனில் தேசகாலாதிதபரமாத்மாவினின்றும் ஆகாசாதிகளின் சிருஷ்டி சொல்லப்பட்டிருக்கிறதே. தைத்திரீயஉபநிஷத்தில் ஆகாசாதிகளின் சிருஷ்டி க்ரமமாகச் சொல்லப்பட்டிருக்கிறது, தேசகாலங்களின் சிருஷ்டி சொல்ல

அதிஷ்டானமாயிருப்பதால் சர்வ பிரபஞ்சத்திலும் காரணதை தோன்றவேண்டும். சிலதிற் காரணதை சிலதிற் காரியதை யெனப்பேதமேற் படகூடாது.

402. 3-வது சங்கை:— தேசகாலங்களில் காரணதை யில்லையென்றும் பிரம்மத்தில் காரணதை யிருக்கிறதென்றும் இந்த காரணதை தேசகாலங்களில் தோன்றுகிறதென்றும சொல்லுகிறதினல் அன்னியதாக்கியாதி (138) யின் அங்கீகாரமாகும். ஏனெனில் அன்னியவஸ்து அன்னியரூபமாகத் தோம்றல் அன்னியதாக்கியாதியென்று சொல்லப்படும். தேசகாலங்கள் காரணமன்று. ஆனதால் தேசகாலங்கள் காரணத்துக்கு அன்னியமான அகாரணம்மாயிருக்கின்றன. அகாரணம் அன்னியரூபமாக அதாவது காரணரூபமாகத் தோற்றுவதில் அன்னியதாக்கியாதி அங்கீகரிக்கப்படுகிறது. சித்தாந்தத்தில் அன்னியதாக்கியாதி அங்கீகரிக்கப்படவில்லை. இந்தவிடத்தில் அன்னியதாக்கியாதியை யங்கீகரித்தால் கிளிஞ்சிலில் அசீர்வசனீய ;வெள்ளியினுற்பத்தியைச சித்தாந்தத்தில் ஒப்பினது நிஷ்பலமாய்விடும்! ஏனெனில் அன்னியதாக்கியாதிமதம் இருவகைத்து. (1) ஒரு தேசத்திலிருக்கிற பதார்த்தம் அன்னியதேசத்தில் தோன்றுவது (137) அன்னியதாக்கியாதியாம். ஸ்திரீயின் கையிலிருக்கிற வெள்ளி எதிரிலிருக்கிற கிளிஞ்சிலில் தோன்றுவதுபோலும். (2) ஒரு பொருள் அன்னியரூபமாகத்தோன்றுவது(138)அன்னியதாக்கியாதி. கிளிஞ்சிலே வெள்ளிரூபமாகத்தோன்றுவதுபோலும். இப்படிச சகல பிரமைஸ்தலங்களிலும் அன்னியதாக்கியாதிமதமே ஒவ்வும். அசீர்வசனீயக்கியாதிமதம் ஒவ்வாமற்போம்.

403. 4-வது ஆக்ஷேபம்:—விஷயத்தை யனுசரித்து ஞான முண்டாகிறது. ஒருவஸ்துவின் ஞானம் வேறுரூபத்தாலுண்டாகமாட்டாது. ஆகையால் ரஜதாகாரமான ஞானத்துக்கு விஷயமான அனிர்வசனீயரஜதமும உற்பத்தியாகிறது. இந்த அத்துவைத சித்தாந்தத்தில் காரணத்துகன்னியமான தேசகாலங்களில் பிரம்மத்தின் காரணதையின் ஞானமுண்டாகமாட்டாது. ஏனெனில் தேசகாலங்களில் பிரதியாகுங்காரணதை இல்லாமலாவது அல்லது பிரம்மத்திலிருந்துகொண்டாவது விளங்கமாட்டாது. தேசகாலங்களிலேயே காரணதையிருந்துகொண்டு விளங்குகிறது, இவ்விதமாக ஆகாசாதிப்பிரபஞ்சத்துக்குத் தேசகாலங்கள் காரணமல்லவென்று சொன்னது அசங்கதம்.

404. 400-த்தசங்காசமாதானம்:— இந்தசங்கை சரியன்று ஏனெனில் பிரம்மத்தின் காரணரூபதை தேசகாலங்களில் பிரதியாகிறதை. செம்பிராகம் பூவுடன் கூடிய ஸ்படிகத்தில் அப்பூவின் சிவப்புவர்ணம்

தோன்றுவதுபோலும். அதிஷ்டானத்தின் சத்தியதை சொப்பனகாலத்தில் மித்தையான யானை பர்வதம் முதலியவைகளில் பிரதீதியாகிறது. ஸ்படிகத்தில் அனிர்வசனீயமான சிவப்புவர்ணத்திற்பத்தி அங்கீகரிக்கப்படவில்லை. ஆனல் புஷ்பத்தின் சிவப்புவர்ணம் ஸ்படிகத்தில் தோன்றுகிறது. ஆனதால் வெண்மையான ஸ்படிகம் சிவப்பு ரூபமாய்த் தோன்றுகிறதினல் சிவப்பின் ஞானத்தில் அன்னியதாக்கியாதி தான் அங்கீகரிக்கப்படவேண்டும். அப்படிச் சொப்பனத்தின் மித்தியாபதார்த்தத்தில் சத்தியதைதோன்றுமிடத்தில் அனிர்வசனீயசத்தியதை அந்தப்பொருளில் இருக்கிறதாகச்சொல்வது மெய் பொய்யாயிருக்கிறதென்னும்வசனம்போலாகும். இல்லாதது பிரதீதியாகமாட்டாது. ஆனல் சொப்பனத்தின் அதிஷ்டான சேதனத்தின் சத்தியதை மித்தியாபதார்த்தத்தின் பிரதீதியாகிறது. இப்படி மித்தியாபதார்த்தம் சத்தியரூபமாய்த்தோன்றுகிறதினல் சத்தியத்தின் ஞானத்தில் அந்நியதாக்கியாதியைத்தான் அங்கீகரிக்கவேண்டியது. இப்படியே அதிஷ்டானபிர்ம்மத்தின் காரணதை தேசகாலங்களில் அன்னியதாக்கியாதியாகப்பிரதீதியாகின்றது.

405. இந்த விடத்தில் அன்னியதாக்கியாதியை ஒப்பினல் எல்லாப்பிரமமஸ்தலங்களிலும் அன்னியதாக்கியாதியையே ஒப்பவேண்டுமெனனும் சங்கை (402) சரியன்று. ஏனெனில் கினிஞ்சிலில் வெள்ளிதோன்றுகிறவிடத்தில் அன்னியதாக்கியாதியை அங்கீகரிப்பதில் விஷயத்துக்கு விலக்ஷணமான ஞானம் உண்டாகமாட்டாது என்கிறதோஷமிருக்கிறது. சுக்தி வெள்ளிரூபத்தினல் அறியப்படமாட்டாது. ஏனெனில் சுக்தி தேசத்தில் அனிர்வசனீயமாயும் வியாவகாரிகமாயுமிருக்கிற வெள்ளி அன்னியமதத்தில் இல்லை. ஆனல் சுக்தியே இருக்கிறது. இந்தச் சுக்தி சம்பந்தத்தால் அந்தக்காணவிர்த்தி சுக்தியின் சமாணகாரத்லதயடையவேண்டுமே தவிர ரஜதாகாரத்தையடையக்கூடாது. ஆனல் அப்படியில்லாதபடியால் அவித்தையின் பரிணமமாயும் சேதனத்தின் விவர்த்தமாயுமிருக்கிற அனிர்வசனீய வெள்ளியும் அதன் ஞானமு முண்டாகின்றன. ஸ்படிகத்தில் சிவப்பு வர்ணத்தின் ஞானமுண்டாகும்போது சிவப்பு புஷ்பம் ஸ்படிகத்துடன் சம்பந்தப்படுகிறது. அதினல் அந்தப்புஷ்பத்தின் சிவப்பு வர்ணம் ஸ்படிகத்தில் பிரதீதியாகிறது. ஏனெனில் அந்தக்காரணத்தின் விர்த்தி, சிவப்புப்புஷ்பாகாரமாகும்போது அந்த விர்த்திக்கு விஷயம் சிவப்பு புஷ்பத்துடன் சம்பந்தப்பட்டஸ்படிகம். அதினல் புஷ்

பத்தின் சிவப்புவர்ணம் ஸ்படிகத்தில் பிரதிநியாகிறது. அப்போது அந் தக்கரணவிர்த்தி ஸ்படிகத்துடனும் சிவப்பு புஷ்பத்துடனும் சம்பந்தப்ப டுகிறது. சிவப்புப் புஷ்ப சம்பந்தத்தால் விர்த்தி சிவப்பாகாரமாகிறது. அவ்விர்த்தி ஸ்படிகத்துடனும் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஸ்படிகத்தில் சிவப்பின் சாயை யிருக்கிறது. ஆனதால் புஷ்பத்தின் தர்மமாகிற சிவப் புவர்ணம் ஸ்படிகத்தில் அவ்விர்த்திக்கே விஷயமாகிறது. இவ்விதமாக இரண்டுபதார்த்தங்களுடன் சம்பந்தமிருக்கும்போது ஒன்றின் தர்ம்மம் மற்றொன்றில் பிரதிநியாகிறது. அப்போது அந்நியதாக்கியாதியே அங்கீ கரிக்கப்படவேண்டியது. எப்போது இரண்டுபதார்த்தங்களுடன் சம்ப ந்தமில்லையோ அப்போது அன்னியதாக்கியாதி இல்லை; அநிர்வசனீயக்கி யாதியே ஒப்புக்கொள்ளத்தக்கது. புஷ்பத்துடன் சம்பந்தப்பட்டஸ்படி கத்தில் புஷ்பத்தின் சிவப்புவர்ணம் பிரதிநியாகிறதுபோல் சொப்பனத் தின் யானைமலை முதலியவைகள் அதிஷ்டான சேதனத்துடன் சம்பந்தப் பட்டிருக்கின்றன; ஆனதால் சேதனத்தின் தர்மமாகிய சத்தியதையும் சேதனத்துடன் சம்பந்தப்பட்ட யானை மலை முதலியவைகளிற் பிறதீதி யாகிறது, , இது அன்னியதாக்கியாதி. இப்படியே அதிஷ்டான சேதன த்தின் தர்மமாகிய காரணதை அதிஷ்டானசேதனத்துடன் சம்பந்தப்ப ட்ட தேசகாலங்களில் பிரதிநியாகிறது.

406. அதிஷ்டானசேதனம் சகலப்பிரபஞ்சத்துடனும் சம்பந்த ப்படுகிறது. அச்சேதனத்தின் தர்மம் அன்னியதாக்கியாதிரீதியாய் வேறி டத்திற் பிரதிநியானால் சேதனத்தின் காரணதை சகலப்பிரபஞ்சத்திலு ம் பிரதிநியாகவேண்டுமென்று (401)செய்த ஆக்ஷேபம் சரியன்று. ஏ னெனில் சொப்பனத்தில் இரண்டு சரீரங்கள் ஒன்று பிதாரூபமாயும் ஒன்று புத்திரன் ரூபமாயும் தோன்றுகின்றன. அப்போது இரண்டுச ரீரங்களுக்கும் சொப்பனத்தின் அதிஷ்டானசேதனத்துடன் சம்பந்தம் இருந்தாலும் பிதாசரீரத்தில் அதிஷ்டானசேதனத்தின் காரணதை பிரதி நியாகிறது. புத்திரசரீரத்தில் காரணதை பிரதிநியாகாமல் பிதாஜன்ய புத்திரனென்னும் காரியதை பிரதிநியாகிறது. இவ்விதமாக அதிஷ்டா னசேதனத்தின் சம்பந்தம் எங்குமிருந்தாலும் தேசகாலங்களில் சேதனதர் மமாகிற காரணதையும் மற்றவிடங்களில் காரியதையுந் தோன்றுகின்ற ன.

407. அல்லது அதிஷ்டானசேதனம் அசங்கமாயிருக்கிறது. அது னதற்கும் யோகமார்த்திகத்தில் காரணமாகிறதில்லை. மாயையிலுள்ள ஆ

பாஸன் காரணமாயிருந்தாலும் ஆபாஸனுடைய சொரூபம் மித்தை; எ
து தானே மித்தையாக இருக்கிறதோ அது வேறொன்றுக்குக் காரணமா
கமாட்டாது. ஆகையால் பரமாத்மாவினிடத்தில் பிரபஞ்சத்தின் காரண
ஸை யிருக்கும்பக்ஷத்தில் அது தேசகாலங்களில் பிரமையாற் பிரதீதியாகக்
கூடும். பரமாத்மாவிடத்தில் காரணதையில்லை. பரமாத்மாகாரணதைமுத
லியதர்மங்களன்றியில் அசங்கமாயிருக்கிறது. அதின் காரணதை தேசகா
லங்களில் தோன்றுவதாகச் சொல்வது சரியன்று. ஆனால் மாயையாலுண்
டான அநிர்வசனீய தேசகாலங்கள் அநிர்வசனீயகாரணத்துடன்கூடினதா
க விளங்குகின்றன. பாரமார்த்திகத்தில் தேசகாலங்கள் காரணங்களல்ல.
புத்திரனில்லாதவன் சொப்பனத்தில் புத்திரனையும் பேரனையும்பார்க்கி
றன். அப்போது புத்திரபௌத்திரசரீரங்கள் அநிர்வசனீயமாயிருக்கின்ற
ன. புத்திரசரீரத்தில் பௌத்திரசரீரத்தின் அநிர்வசனீயகாரணதையி
ருக்கிறது. பாரமார்த்திகத்தில் புத்திரபௌத்திரசரீரங்களுக்குப் பரஸ்ப
ரம் காரணகாரியபாவங்களில்லை. இதுபோல் தேசகாலங்கள் அநிர்வச
னீயகாரணங்களாகப் பிரதியாகின்றன. பாரமார்த்திகத்தில் தேசகால
ங்களுக்கும் ஆகாசாதிப்பிரபஞ்சதுக்கும் காரணகார்யபாவங்களில்லை

408. இவ்விதமாகத் தேசகாலசாமக்ரிகளன்றியில் ஜாக்ரதப்
பிரபஞ்சமுண்டாகிறது. ஆனதால் சொப்பனம்போல் ஜாக்ரதமும்
மித்தை. சொப்பனத்தின் ஸ்திரீபுத்திராதிகள் சொப்பனத்திலேயே சுக
துக்காதிகளுக்குஹேதுக்களாயிருக்கின்றன. ஜாக்ரதத்தில் அவைகளில்
லை, அப்படியே ஜாக்ரதபதார்த்தங்களும் சொப்பனத்திலில்லை, ஆகை
யால் ஜாக்ரதசொப்பனங்கள் சமம்.

409. ஆக்ஷேபம்;—ஜாக்ரதத்தின்பிறகு சொப்பனமுண்டாகி ம
றுபடியும் ஜாக்ரதமுண்டாகும்போது முதல் ஜாக்ரதத்தின் பதார்த்
தம் சொப்பனவியவஹிதரண்டாவது ஜாக்ரதத்திலிருக்கிறது. ஆனால்
முதல்சொப்பனத்தின் பதார்த்தம் இரண்டாவது சொப்பனத்திலிருக்கி
றதில்லை. ஆகையால் சொப்பனபதார்த்தங்களுக்கும் ஜாக்ரதபதார்த்த
ங்களுக்கும்பேதமுண்டு.

410. இந்தச்சங்கை சித்தாந்தத்தையறியாதவனுக்கு மூடதிர்ஷ்
டியாலுண்டாகிறது. ஏனெனில் மூர்க்கனுடைய திர்ஷ்டியாவது:—
சமுசாரப்பிரவாகம் அனாதி. அதில் ஜீவனுக்கு ஜாக்ரஸ்வப்பனசுஷு—
ப்திகளிருக்கின்றன. ஜாக்ரதகாலத்தில் சொப்பனமும் சுஷுப்தியும்
கஷ்டமாகின்றன. சொப்பனகாலத்தில் ஜாக்ரதமும் சுஷுப்தியும் கஷ்
டமாகின்றன. சுஷுப்தியில் ஜாக்ரஸ்வப்னங்கள் கஷ்டமாகின்றன.
ஆனால் ஸ்வப்னசுஷுப்திகளுண்டாகும்போது ஜாக்ரதகாலத்தின் ஸ்திரீ
புத்திரபசுதனதிகள் நீங்காமல் இருந்துக்கொண்டேயிருக்கின்றன. அ
வைகளின் ஞானந்தான் நீங்குகிறது. மறுபடியும் ஜாக்ரதமுண்டாகு

ம்போது முதல் ஜாக்கிரத்திலிருந்த பதார்த்தங்களின் ஞானமுண்டாகிறது. இது அஞ்ஞானியின் திருஷ்டி.

411. சித்தாந்தமென்னவெனில் பதார்த்தங்களெல்லாம் சேதனத்தின் விவர்த்தமாயும் அவித்தையின் பரிணாமமாயும் இருக்கின்றன. ஆனதால் கிளிஞ்சிலில் வெள்ளிபோல் எந்தக்காலத்தில் எந்தப்பதார்த்தம் பிரதீதியாகிறதோ அந்தக்காலத்தில் அதிஷ்டானசேதனத்தை யாசிரயித்த அவித்தை இருவிதப்பரிணாமங்களையடைகிறது. அவித்தையின் தமோகுணம்சம் கடாதி விஷயரூபமாகப்பரிணமிக்கிறது. அவித்தையின் சத்துவகுணம்சம் ஞானரூபமாகப்பரிணமிக்கிறது. சேதனத்தையே ஞானமாகச்சொல்லுவதால் சத்துவகுணத்தின் பரிணாமம் ஞானமென்று சொல்லுவது சரியன்றென ஆக்ஷேபிக்கும்பக்ஷத்தில் அதற்குச்சமாதானமென்னவெனில், வியாபகசேதனமெல்லாம் ஞானமன்று, ஆனால் ஆபாஸசித விர்த்தியிலாரூடமான சேதனத்தை ஞானமென்று சொல்லுகிறார்கள். ஆகையால் சேதனத்தில் ஞானவியவகாரத்தைக்கொடுப்பது விர்த்தியே. சேதனத்திலுள்ள ஞானத்துக்கு உபாதி விர்த்தியே. அதினிடத்திலும் ஞானசப்தம் உபயோகப்படுத்தப்படுகின்றது. கடத்தின் ஞானமுண்டாயிற்றென்றும் படத்தின் ஞானம் நஷ்டமாயிற்றென்றும் உலகத்திற் சொல்லுகிறார்கள். அப்போது விர்த்தியிலாரூடமான சேதனத்துக்கு உற்பத்தி நாசங்கள் சம்பவிக்கிறதில்லை. விர்த்திக்குத்தான் உற்பத்தி நாசங்களுண்டாகின்றன. ஞானத்துக்கு உற்பத்திநாசங்கள் சொல்லப்படுவதால் விர்த்தியிலும் ஞானசப்தம் உபயோகப்படுத்தப்படுகிறது. இந்த விர்த்திரூபஞானம் சத்துவகுணப்பரிணாமம். அந்த விர்த்திரூபப்பரிணாமத்தில் சேதனத்தின் ஆபாஸம் உண்டாகிறது. கடாதிவிஷயரூபபரிணாமத்தில் சேதனத்தின் ஆபாஸமுண்டாகிறதில்லை. ஏனெனில் விஷயமும் விர்த்தியும் இரண்டும் அவித்தையின் பரிணாமங்களாயிருந்தாலும் கடாதிவிஷயம் அவித்தையின் தமோகுணப்பரிணாமமாயிருப்பதால் மலினமாயிருக்கிறது. அதில் ஆபாஸன் உண்டாகிறதில்லை. விர்த்தி சத்து

---

8. சப்தம் உண்டாவதற்குக்காரணம் ஆகாசம். இது எங்கும் வியாபகமாயிருக்கிறது. இது நகாராமிருதங்கம் முதலிய வாத்தியங்களுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆயினும் எப்போது ஒருதடியால் வாத்தியம் அடிக்கப்படுகிறதோ அப்போதுதான் சப்தம் உற்பத்தியாகிறது. மற்றஇடங்களினின்றும் சப்தம் உண்டாகிறதில்லை. இதுபோல புத்திவிருத்தியில் ஆரூடமான சேதனத்துக்கு ஞானம் உண்டாகிறதே தவிர மற்றஇடங்களில் ஞானம் உண்டாகிறதில்லை.

வகுணப்பரிணாமமாயிருப்பதால் சுத்தமாயிருக்கிறது. அதில் ஆபாஸமுண்டாகிறது. இவ்விதமாக விர்த்தி சேதனத்தின் ஆபாஸத்தைத்தரிக்கத்தகுந்ததாயிருப்பதால் விர்த்தியவச்சின்னசேதனம் ஞானமென்றும் சாக்ஷியென்றும் சொல்லப்படுகிறது. கடாதிவிஷயங்கள் ஆபாஸத்தைத்தரிக்கயோக்கியமில்லாமையால் ஞானமென்றும் சாக்ஷியென்றும் சொல்லப்படவில்லை. இவ்விதமாக ஜாக்கிரதத்தின் பதார்த்தங்களும் அவைகளின் ஞானமுஞ்சேர்ந்தேயுண்டாகின்றன, சேர்ந்தே நஷ்டமாகின்றன. இது வேதத்தின் சித்தாந்தம். ஆகையால் ஒரு ஜாக்கிரதத்தின் பதார்த்தம் இரண்டாவது ஜாக்கிரதத்தில் இருப்பதாகச்சொன்னது சரியுன்று.

412. ஆக்ஷேபம்:— சொப்பனத்தினின்றும் விழித்துக்கொண்டவனுக்கு "முன்னே யாதொரு பதார்த்தமிருந்ததோ அதுதான் இது". என்கிற ஞானமுண்டாவதால் ஜாக்கிரதபதார்த்தங்களும் அவைகளின் ஞானமும் ஒரேகாலத்தில் உற்பத்தி நாசங்களை யடைகிறதில்லை. ஆனால் ஞானத்துக்குமுன் பதார்த்தம் இருந்திருக்கிறது. ஞானநாசத்துக்குப்பின்னும் பதார்த்தமிருக்கிறது.

413. சமாதானம்:— ஆயினும் சொப்பன பதார்த்தம் தக்ஷணமே புண்டாகிறது. நான் பிறப்பதற்குமுன்முதல் இந்த மலைசமுத்திராதிகளிருக்கின்றனவெனத் தோன்றுமிடத்தில் தக்ஷணத்திலுண்டான பதார்த்தத்தில் வெகுகாலமாயிருப்பதாகப் பிராந்தியுண்டாகிறது. ஆனதால் எந்த அவித்தையால் மித்தையான மலைசமுத்திரம் முதலியவைகளுண்டாயினவோ அதேயவித்தையால் வெகுகாலஸ்திரத்தன்மையும் ஸ்திரத்தன்மையின் பிரதியும் அநிர்வசனீயமாயுண்டாகின்றன. சொப்பனத்தின் பதார்த்தங்கள் இப்படியிருப்பதுபோல் ஜாக்கிரதபதார்த்தங்களும் வெகுகாலமாய் ஸ்திரமாயில்லாவிட்டாலும் அவித்தியாபலத்தினல் மித்தையான ஸ்திரத்தன்மையும் அந்தப்பதார்த்தங்களுடன் உற்பத்தியாகிப் பிரதியாகிறது.

414. ஆக்ஷேபம்:— சொப்பனபதார்த்தம் சாக்ஷாத்து அவித்தையின் பரிணமம். ஜாக்கிரதபதார்த்தம் சாக்ஷாத்து அவித்தையின் பரிணமமன்று. ஆனல் கடத்தினுற்பத்தி தண்டம் சக்கரம் குலாலன் இவைகளாலுண்டாவதுபோல் சகலபதார்த்தங்களினுற்பத்தியும் அவ்வவற்றின் காரணத்தாலுண்டாகிறதேதவிரச் சாக்ஷாத்து அவித்தையாலுண்டாகவில்லை. அப்படிச் சாக்ஷாத்து அவித்தையின் பரிணமமாயிருக்

கும்பகூடத்தில் ஆகாசாதிப்பஞ்சபூதங்களின் கிரமஉற்பத்தி பஞ்சீகரணம், இதினின்றும் பிரம்மாண்டத்தினுற்பத்தி சுருதியிற் சொல்லிய இவைகளெல்லாம் அசங்கதமாய்விடும். ஆகையால் ஈஸ்வர சிருஷ்டியாகிற ஜாக்கிரதபதார்த்தங்கள் தம் தம் உபாதானத்தின் பரிணமங்களேதவிர, சாகூடாத்து அவித்தியா பரிணமங்களன்று. சொப்பனத்தின் சகலபதார்த்தங்களும் அவித்தியா பரிணமங்களாயிருக்கின்றன. அனைகளுக்கு ஒரே அவித்தை உபாதானமாகிறதினால் அந்தப்பதார்த்தங்களுக்கும் அவைகளின் ஞானத்துக்கும் ஒரேயவித்தையினின்றும் ஒரேகாலத்தில் உற்பத்தியுண்டாகக்கூடும். ஜாக்கிரதபதார்த்தங்கள் வெவ்வேறு காரணங்களாலுண்டாகின்றன. காரியத்துக்குமுன் காரணமிருக்கிறது, காரணத்தில் காரியம் லயமாகிறது. ஆனதால் கடஉற்பத்திக்குமுன்னும் கடநாசத்துக்குப்பின்னும் மிருத்பிண்டமிருக்கிறது. இவ்விதமாகச் சில பதார்த்தங்கள் அற்பகாலம் ஸ்திரமாயும் சில அதிககாலம் ஸ்திரமாயும் காரியகாரணங்களாயுமிருக்கின்றன. சொப்பனபதார்த்தங்கள் இப்படியில்லை.

415. **சமாதானம்:**— இந்தச் சங்கை சரியன்று. ஏனெனில் ஜாக்கிரதபதார்த்தங்களிற்போல் சொப்பனபதார்த்தங்களிலும் காரியகாரணபாவம் தோன்றுகின்றது. ஒருவனுக்குத் தன் மாடு கன்றுபோட்டதுபோலவும் அல்லது தன் ஸ்திரீக்குப் பிள்ளைபிறந்ததுபோலவும் சொப்பனமுண்டாகிறது. அப்போது மாட்டினிடத்திலும் ஸ்திரீயினிடத்திலும் காரணதையும் வெகுகாலஸ்திரதையும் பிரதீதியாகின்றன. கன்றினிடத்திலும் பிள்ளையினிடத்திலும் காரியதையும் அற்பகாலஸ்திரதையும் பிரதீதியாகின்றன. எல்லாம் ஒரேகாலத்திலுண்டாகின்றன. ஒன்று மற்றொன்றுக்குக் காரணமாயில்லை. மாடு, கன்று, ஸ்திரீ, பிள்ளைமுதலியவைகளுக்கு அவித்தையே உபாதானமாயிருக்கிறது. இதுபோல் ஜாக்கிரதத்திலும் சிலது வெகுகாலஸ்தாயீயாகவும் காரணரூபமாகவும் சிலது சொற்பகாலஸ்தாயீயாகவும் காரியரூபமாகவும் சொப்பனத்தில் போலத் தோன்றுகின்றன. எதுவும் எதற்கும் பரஸ்பரம் காரியகாரணமாயில்லை. ஆனல் எல்லாம் சாகூடாத்து அவித்தையின் காரியங்களே.

416. சுருதியில் சொல்லிய கிரமசிருஷ்டிக்குச் சுருதியின் அபிப்பிராயம் சிருஷ்டியைப் பிரதிபாதிக்க வேண்டுமென்பதன்று. அத்தை

வைதப் போதமே யதின் அபிப்பிராயம். எல்லாப்பதார்த்தங்களும் பரமாத்மாவினின்றுமுண்டாகின்றன. ஆனகையால் அவைகள் அதின் விவர்த்தங்களாயிருக்கின்றன. எது எதின் விவர்த்தமாயிருக்கிறதோ அது அதின் சொரூபமாகவே யிருக்கிறது. ஆகையால் சகலநாமரூபங்களும் பிரம்மத்துக்கு வேறுகாமல் பிரம்மமாகவே யிருக்கின்றன. இந்த அர்த்தத்தைப் போதிக்கிறதற்காக சிருஷ்டி சொல்லப்பட்டது. சிருஷ்டிக்கு வேறு பிரயோசனமில்லை. கிரமசிருஷ்டி சொன்னது ஸ்தூலதிர்ஷ்டியுடையவர்கள் விபரீதக்கிரமமாக லயசிந்தனை செய்யும்பொருட்டுத் தான். அதற்கும் அத்துவைதபோதமே யபிப்பிராயமானதால் கிரமமாகச்சொல்லுதில் அபிப்பிராயமில்லை. சிருஷ்டியில் கிரமமில்லை. எல்லாம் அவித்தையினின்றும் உண்டாகின்றன. அவைகளுடைய பரஸ்பரகாரியகாரணபாவங்களும் பூர்வ உத்தரபாவங்களும் அவித்தைபால் உண்டாகும் சொப்பனம்போல் மித்தையாகத் தோன்றுகின்றன. சுருதியில் சொல்லிய அவைகளின் காரியகாரணதையும் பூர்வஉத்தரதையும் லயசிந்தனையின் பொருட்டுத்தான்

417. எப்படிச் சொரூபமோ அப்படியே தியானமென்கிற நியமமில்லை. ஆகையால் ஜாக்கிரத பதார்த்தங்களுக்கு அவைகளுக்குள் காரணகாரியபாவமில்லை. சகலபதார்த்தங்களும் சாக்ஷாத்து அவித்தையின் காரியங்களாயிருக்கின்றன. கிளிஞ்சிலில் வெள்ளிபோலவும் சொப்பனம் போலவும் அவித்தியாவிர்த்தி உபஹிதசாக்ஷியினல் அவைகள் பிரகாசிக்கின்றன. ஆனதால் சகலபதார்த்தங்களுஞ் சாக்ஷிபாஸியங்களாயிருக்கின்றன. ஒரேகாலத்தில் அவிதனை ஞானகாரமாயும் ஜ்ஞேயாகாரமாயும் பரிணமிக்கிறது. இந்தப்பரிணமங்கள் ஒரேகாலத்தில் நஷ்டமாகின்றன. ஆகையால் எப்போது பதார்த்தம் தென்றுகிறதோ அப்போது தோற்றத்துக்கு விஷயமாகிற பதார்த்தம் உண்டாகிறது. இதரகாலத்தில் பதார்த்தமுண்டாகிறதில்லை. இதற்கே திருஷ்டிசிருஷ்டி[9] வாதமென்று பெயர்.

---

9. திருஷ்டியென்றால் அவித்தியாவிர்த்திரூபஜ்ஞானம். இது உண்டாகும் போது சிருஷ்டி அதாவது பிரபஞ்சமுண்டாவதாகச்சொல்வது திருஷ்டி சிருஷ்டிவாதமென்னப்படும். இதற்கு அஜ்ஞாதவாதமென்றும்பெயர். இது பிரஹதாரணியஉபநிஷத்தின் சங்கரபாஷியத்திலும் மாண்டூக்கியஉபநிஷத்தின்காரிகையிலும் வாசிஷ்டத்திலும் வேதாந்தமுக்தாவளியிலும் ஆத்மபுராணத்திலும் அத்வைதசித்திமுதலிய கிரந்தங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. விஸ்தரத்தின் பொருட்டுமட்டும் இந்தக்கிரந்தங்களைப்பார்க்கலாம். விஷயம் பூர்ணமாய் விசாரசாகரத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

418. இந்தப்பக்ஷத்தில் பதார்த்தங்களின் அஞ்ஞாதசத்தையில்லை, ஞாதசத்தைதான் இருக்கிறது. அத்துவைதவாதத்தில் இது சித்தாந்தபக்ஷம். இந்தப்பக்ஷத்தில் இரண்டு சத்தைகளிருக்கின்றனவேதவிர மூன்றில்லை. ஏனெனில் அனைத்மபதார்த்தங்க ளெல்லாம் சொப்பனம்போல் பிராதிபாஸிகமாயிருக்கின்றன. தோன்றுங்காலத்தவிர வேறு காலத்தில் அனைத்மாவுக்குச் சத்தை யில்லை. ஆகையால் மூன்றுவிதான வியாவகாரிகசத்தையில்லை. இந்தப்பக்ஷத்தில் அனைத்மபதார்த்தங்களெல்லாம் சாக்ஷீபாஸியமாயிருக்கின்றன. பிரமாதா பிரமாணங்களுக்கு விஷயமாகயாதொன்றும் இல்லை. ஏனெனில் அந்தக்கரணம் இந்திரியங்கள் கடாதிகள் ஆகிய சகலதிரிபுடிகளும் ஞானமும் சொப்பனம்போல் ஒரேகாலத்தில் உண்டாகின்றன, அவைகளுக்கு விஷயவிஷயீபாவம் சொல்லத்தகாது. கடாதிவிஷயம் நேத்திராதி இந்திரியங்கள் அந்தக்கரணம் இவைகள் ஞானத்துக்குமுன் இருக்கும்பக்ஷத்தில் நேத்திராதிமூலமாக அந்தக்கரணத்தின் விர்த்திரூபஞானம் பிரமாணஜன்யமாகக்கூடும். ஆனால் அந்த அந்தக்கரணம் இந்திரியம் விஷயம் இம்மூன்றும் ஞானத்துக்குமுன்னில்லை. ஆனால் சொப்பனம்போல் ஞானமும் திரிபுடிகளும் ஒரேகாலத்திலுண்டாகின்றன. ஆனதால் திரிபுடியினின்றுமுண்டாகிற ஞானம் யாதொன்றுமில்லை. ஆயினும் சொப்பனம்போல் ஞானம் திரிபுடிஜன்யமாக்தோன்றுகிறது. ஆகையால் ஜாக்கிரதபதார்த்தங்கள் சாக்ஷீடாஸியமாயிருக்கின்றன. பிரமாணஜன்யஞானத்துக்கு விஷயமாகிறதில்லை. ஆகையாலும் ஜாக்கிரதபதார்த்தம் சொப்பனத்துக்குச்சமானமாக மித்தையாயிருக்கிறது.

419. அன்றியும் ஜாக்கிரதத்தில் சிலபதார்த்தங்கள் மித்தியாரூபமாக அறியப்படுகின்றன. சில சத்தியமாக அறியப்படுகின்றன. அனுதிகாலமாய்ச்சில பொருள்களிருக்கின்றன. அவைகளிற் சில நஷ்டமாகின்றன. அவைகளுக்குச் சமானமாய்ச் சில வுண்டாகின்றன. இவ்விதமாகப் பிரபஞ்சதாரை ஒருகாலத்திலும் நாசமடைகிறதில்லை. ஞானமுண்டானவனுக்குப் பிரபஞ்சம் தோன்றுகிறதில்லை. மற்றவனுக்குப் பிரபஞ்சம் தோன்றுகிறது. இந்த ஞானத்துக்கு வேதமுங் குருவும் சாதனங்கள் இவைகளால் பரமசத்தியமடையப்படுகிறது. இவ்விதத்தோற்றம் ஜாக்கிரதத்திலுண்டாகிறது. அப்போது சிலபதார்த்தங்களின் மித்தியதை, சிலவற்றின் நாசம், சிலவற்றினுற்பத்தி வேதகுருக்களால் பரமபுருஷார்த்தப் பிராப்தி இவைகளெல்லாம் அவித்தையாலுண்டாகிற சொப்பனம்போல் மித்தையாயிருக்கின்றன. வாஸிஷ்டத்தில் கூடணமாத்திரச்சொப்பனத்தில் வெகுகாலத்தோற்றமும் ஜாக்கிரம்போல்ஸ்திரமான பதார்த்தங்களின் தோற்றமும் அவைகளால் வெகுகாலதோபாகமும் உண்டாகிறதாக அனேக இதிஹாஸங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதை

லோஜாக்கிரதபதார்த்தங்களுக்கும் சொப்பனபதார்த்தங்களுக்கும்கொஞ்
சங்கூட விலக்ஷணதையில்லை. ஆத்மாவுக்கு வேறுனதெல்லாம் மித்தை

420. தர்க்கதிருஷ்டியின் 3–வது கேள்வி:— ஈஸ்வரசிருஷ்டி அனந்த
கல்பமாய் அனுதியாயிருக்கிறது. அதில் ஞானிமுக்தனகிறான், அஞ்ஞா
னி பந்தத்தில் இருக்கிறான். ஜாக்கிரம் சொப்பனசமானமாகும்பக்ஷத்
தில் சொப்பனம்ஒருக்ஷணம் அல்லது ஒருநாழிகை அல்லது ஒருசாமம்
இருக்கிறதுபோல் சமுசாரமும் ஒருக்ஷணம் அல்லது ஒருநாழிகை அல்ல
து ஒருசாமம் அல்லது கொஞ்சம் அதிககாலம் இருக்கவேண்டும். சொப்
பனம்போல் சமுசாரம்சொல்பகாலமிருக்கிறதாக இருந்தால் அனுதிகால
மாயிருக்கிற பந்தமிருக்கக்கூடாது. பந்தநிவிர்த்திரூபமான மோக்ஷத்தின்

10 10(a)

10. இந்தத்தரங்கத்தின் கடினப்பிரசங்கங்களை அறிய அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கிற சுருக்கம் உபயோகமாகயிருக்கும்.

10 (a) கல்பகால நிர்ணயம்:—

15	சண்ணிமை பொழுதுகொண்டது		காஷ்டை 1
30	காஷ்டை	...	கலை 1
30	கலை	...	முகூர்த்தம் 1
30	முகூர்த்தம்	...	இராப்பகலுள்ள நாள் 1
15	நாள்	...	பக்ஷம் 1
2	பக்ஷம்	...	மாதம் 1
2	மாதம்	...	இருது 1
3	இருது	...	அயனம் 1
2	அயனம்	...	வருஷம் 1
1,728,000	வருஷம்	...	கிருதயுகம் 1
1,296,000	...	...	திரேதாயுகம் 1
864000	...	...	துவாபரயுகம் 1
432000	...	...	கலியுகம் 1
4,320,000	...	அல்லது 4 யுகம் சேர்ந்தது	மகாயுகம் 1
306,720,000	...	... 71 மகாயுகம் ...	ஒருமனுவின்காலம்
4,294,080,000	...	... 994	14 மனுக்களின்காலம்
25,920,000	...	... 6	சந்திகள் 2
4,320,000,000	...	... 1000	கல்பம் அல்லது பிர்ம்மாவின் பகல்.
8,640,000,000	ஆயு	கொண்டது	பிர்ம்மாவின் நாள் 1
3,110,400.000,000	ஆயு	... ...	ஆயு 1
311,040,000,000,000	ஆயு	...	பிர்ம்மாவின் ஆயுசு அல்லது மஹா கல்பம்.

பொருட்டு எற்பட்டிருக்கிற சிரவணாதி சாதனங்களும் நிஷ்பலமாய்விடும்.

421. முன்சொன்ன சித்தாந்தத்தில் பந்தம் மோக்ஷம் வேதம் குரு இவைகள் அங்கீகரிக்கப்படவில்லை. சேதனம் நித்தியமுக்தமாயிருக்கிறது. அவித்தையின் பரிணமங்களும் சேதனத்தில் அனேக விவர்த்தங்களுமுண்டாகின்றன. அவைகளால் ஆத்மாவுக்குக்கொஞ்சங்கூட ஹானியில்லை. ஆத்மா எப்போதும் அசங்கமாயும் ஏகரஸமாயுமிருக்கிறது. இதுவரையில் ஒருவனும் முக்தனாதில்லை; இனிமேலும் ஆகப்போகிறதில்லை. சேதனம் எப்போதும் முக்தமாகவேயிருக்கிறது. அவித்தைக்கும் அதின் பரிணமத்துக்கும் சேதனத்துடன் எந்தக்காலத்திலும் சம்பந்தமில்லை ஆனதால் பந்தம் வேதம் குரு சிரவணைகள் சமாதி மோக்ஷம் முதலியவைகளின் பிரதிதியும் சொப்பனம்போல் அவித்தியா ஜன்யமாயிருக்கிறது, ஆகையால் மித்தையாயிருக்கிறது. இப்பிரதிதியின் வெகுகால ஸ்திரதையும் அவித்தியாஜன்யமே. ஆயினும் இந்தச்சித்தாந்தத்தை யறியாமல் ஸ்தூலதிர்ஷ்டியால் இக்கேள்வி கேட்கப்பட்டது.

422. தருஉத்தரம் (422—660):— சீஷனே, நித்திராதோஷத்தினல் சொப்பனத்தில் அத்தியயனம் சொல்லுகிறவன், அத்தியயனம், வேதம், சாஸ்திரம், புராணம், தர்மசாஸ்திரம், அத்தியயனம்பண்ணுகிறவன், கர்மம் அதின்பலம் முதலியவைகள் பிரதியாகின்றன. அவ்வெல்லாபதார்த்தங்களிலும் சத்தியமென்கிற பிராந்தியுண்டாகிறது. ஆயினும் சொப்பனத்தின் பதார்த்தங்களெல்லாம் மித்தையாயிருக்கின்றன. இதுபோல ஜாக்கிரதபதார்த்தங்கள் எல்லாம் சத்தியமாகத்தோன்றுவது பிரமையே. உனக்கு நான் குருவாகத்தோன்றுகிறேன். பந்தத்தை நாசஞ்செய்கிற என்னுடைய வேதார்த்தவுபதேசமும் உனக்கு மித்தையாகவே பிரதீதியாகிறது. எப்படி அக்கிரததேவனுக்குச்சொப்பனத்தில் மித்தியாப்பிரதிதிக்கு விஷயங்களான குருவேதாதிகள் அனிர்வசனீயமாயுண்டாயினவோ அப்படி உனக்கு நான்முதலிய சகல அனிர்வசனீயங்களும் மித்தையாய்த்தோன்றுகின்றன.

423. அக்கிரததேவனுக்கு அடியில்கண்டபடிச்சொப்பனமுண்டாயிற்று. அக்கிரததேவன் என்பவன் அனதிகாலமாய்த்தூங்கிக்கொண்

II. கிருதா இச்சை. தேவன் சுத்தசேதனம். அக்கிரததேவன் இச்சையற்ற சுத்தசேதனம்.

யிருந்தான். அப்போது ஒரு சொப்பனங்கண்டான்.[12] அதாவது:—
நான் சண்டாளன்,[13] மிகவும் துக்கி, என்னுடைய தேகம், எலும்பு, மஜ்ஜை, இரத்தம், தோல், மாமிசம், மேதஸ்வீரியம் என்னும் ஏழு தாதுக்களால் நிறைந்திருக்கிறது. மகாகோரமாயும் பயங்காரமாயும் பாம்பு, தேரை[14] முதலியவைகளால் நிறைந்துமிருக்கிற வனத்தில் நான் திரிகிறேன். அப்படித் திரிகிற நான் அவ்வனத்தில் வெகு இடங்களைப் பார்க்கிறேன். சில விடங்களில்[15] அனேகபயங்காரமான பிராணிகள் என்னைப்பக்ஷிக்க எதிரில் ஓடிவருகின்றன. சிலவிடங்களில் இரத்தம்நிறைந்த தொட்டிகளில் விழுந்த பிராணிகள் ஹாஹாகாரசப்தங்களைச் செய்கின்றன. சிலவிடங்களில் தெருப்பில் காய்ச்சப்பட்ட இருப்புத்தூண்களிற் கட்டப்பட்டுச் சிலர் அலறுகிறார்கள். சிலவிடங்களில் சுடுமணல் வழியாய்க் காலில் ஏன்றுமில்லாமல் சிலர் போகிறார்கள். அவர்களை ராஜசேவகர்கள் இருப்புத்தடியால் அடிக்கிறார்கள். இவ்விதமான அனேக பயங்காரமான இடங்களை அவன் பார்த்தான். ஒருகாலத்தில் தானும் அபராதஞ் செய்திருந்த படியால் சொப்பனத்தில் துக்கத்தையடைகிறான்.

சிலவிடங்களில்[16] திவ்வியமான ஸ்தலங்களைப் பார்க்கிறான். அவ்விடங்களிலுத்தமமான தேவதைகள்[17] இருக்கிறார்கள். அவர்கள் திவ்விய போகத்தை யனுபவிக்கிறார்கள். அமிர்தத்தைப் பார்த்தமாத்திரத்தில் அவர்களுக்குத்திருப்தி யுண்டாகிறது. அவர்களுக்குப் பசி தாகங்களால் பீடையுண்டாகிறதில்லை. மல மூத்திரங்களற்று அவர்கள் சரீரம் பிரகாசமாயிருக்கிறது. உத்தமமான விமானத்திலிருந்துகொண்டு சிலர் ரமிக்கிறார்கள். அந்த விமானங்கள் அவர்களிஷ்டப்படிப் போகின்றன. சிலவிடங்களில் அரம்பை ஊர்வசி முதலிய அப்ஸரஸ்திரீகள் நாட்டியமாடுகிறார்கள். அவர்கள் சரீரத்தில் யாதொரு தோஷமுமில்லை. ஸ்திரீகளால்

---

12. சமுசாரம்.

13. ஸ்தூலசூட்சும தேகங்களின் அபிமானியான ஜீவன்.

14. ஜகத்து சமுசாரம்.

15. நரகவர்ணனை.

16. சுவர்க்கவர்ணனை.

17. வசு ருத்திர ஆதித்தியகணங்கள்.

லாம் சகலகுணங்களுடனுங் கூடியிருக்கிறார்கள். அவர்கள் சரீரத்தினின்றும் காமத்தைப்பிரகாசிப்பிக்கிற உத்தமமான சுகந்தம் வருகிறது. சிலவிடங்களில் அவர்களுடன் சிலதேவதைகள் ரமிக்கிறார்கள். அக்கிரதேவனும் ஒருக்கால் தேவபாவத்தை யடைந்து அவர்களுடன் வெகுகாலம் திவ்வியஸ்தானங்களில் ரமிக்கிறான். [19]தற்செயலாய் இரத்தம் மலம் இவைளால் நிறைந்த தொட்டியில் முழுகிப்போகிறான்.

ஏரிடத்தில் எல்லாருக்கும் அதிபதியான [20]புருஷனிருக்கிறான். அவன் உத்தரவின்படி [21]நடக்கிறவர்கள் அவன்முன்பாக நிற்கிறார்கள். [22]சிலருக்கு அந்த அதிபதியும் அவன் சேவகர்களும் சாந்தரூபமாய்த் தோன்றுகிறார்கள். [23]சிலருக்கு மகாபயங்கரரூபமாய்த் தோன்றுகிறார்கள் அவ்வனத்திலிருக்கிறவர்களுக்கு கர்மானுசாரமாய்ப் பலனைக் கொடுக்கிறார்கள். இவ்விதமாக அக்கிரததேவன் சொப்பனத்தில் அனேக இடங்களைப்பார்க்கிறான். வேறுசில விடங்களில் பிராமணர்கள் வேதபாராயணஞ்செய்கிறார்கள். [24]சிலவிடங்களில் யாகசாலைகளில் உத்தமமான கர்மஞ் செய்கிறார்கள். சில்விடங்களில் உத்தமமான நதி ஓடுகிறது. அதில் புண்ணியத்தின் பொருட்டு ஜனங்கள் ஸ்நானம்பண்ணுகிறார்கள். சிலவிடங்களில் ஞானியான ஆசாரியர் சீஷனுக்குப் பிர்ம்மவித்தையை யுபதேசிக்கிறார். அந்தபிர்ம்மவித்தைக்கற்றுக்கொண்டு வனத்தினின்றும் அவர்கள் வெளியேபோகிறார்கள்.

---

18. காவியஅலங்காராதி கிரந்தங்களில் சொல்லப்பட்ட ஸ்திரீகளின் 32 லக்ஷணங்கள்.

19. புண்ணியம்நசித்த உடன்.

20. யமதர்மராஜன்.

21. யமதூதர்கள்.

22. புண்ணியபுருஷர்களுக்கு.

23. பாபபுருஷர்களுக்கு.

24. பூலோகவர்ணனை.

இவ்விதமாகச்சொப்பனத்தில் அக்கிரத தேவன் சுவணமாத்திரத்தில் அனேக ஆச்சரியமான பதார்த்தங்களைப்பார்க்கிறான். அவனுக்குச் சொப்பனத்தில் மறுபடியும் தோன்றினதாவது, வெகுகாலமாய் நான் இந்தவனத்திலிருக்கிறேன். இந்த வனத்திற்கு ஒருக்காலும் நாசம் வருகிறதில்லை. ஒருக்கால்[25] ஈஸ்வரனுடைய நான்குமுகங்களினின்றும் அனேக பீஜங்கள் வெளியேவந்து அவ்வனம் அவரால் சிருஷ்டிக்கப்படுகிறது. ஜலம்[26] பாச்சுவதால் அவ்வனம் பரிபாலிக்கப்படுகிறது. ஒருக்கால் அவருடைய கோரமான ஹாஸியத்தால் அவர் முகத்தினின்றும் அக்கினி புறப்பட்டு அவ்வனத்தைத்[27] தகிக்கிறது. வனத்தின் உற்பத்தியுடன் நானும் உண்டாகிறேன். வனம் தகிக்கப்படும்போது நானும் தகிக்கப்படுகிறேன். வனம் முழுவதையும்தகித்து ஈசுவரன் மாத்திரமிருக்கிறார். அவர் சரீரத்தில் வனத்தின் பீஜம் தங்குகிறது. இவ்விதமாகச் சொப்பனத்திலேயே அக்கிரத தேவனுக்குவேதச்சிரவணமூலமாய்த் தெரிந்தது.

424. தருவைச்சந்தித்தல்:— தனக்கு அடிக்கடி ஜனனமரணங்களுண்டாவதைக் கேட்டு அக்கிரததேவன் விசாரிக்கிறான். எவ்விதமாக நான் இவ்வனத்தைவிட்டு வெளிப்படுவேன். அப்படி வெளிப்படாவிட்டாலும் இச்சண்டாளத்துவம்[28] எப்போது போய்த் தேவபாவம்[29] எப்படிக் கிடைக்கும். வனத்துக்கு வெளியேபோக வேறுஉபாயமில்லை.பிர்ம்மவித்தையையுபதேசிக்கிற ஆசாரியர்[30] தன் சீஷர்களை வனத்துக்கு வெளியே கொண்டுபோகிறார். இப்படி விசாரபூர்வகமாயறிந்து அக்கிரத

---

25. பிர்ம்மா விஷ்ணு சிவரூபங்களால் ஜகத்தின் உற்பத்தி ஸ்திதி சங்காரங்களின் கர்த்தாவாகிற ஈசுவரன்.

26. கர்மானுசாரமாக சுகதுக்கங்களின் அனுபவமாகிற போகத்தைக் கொடுப்பதினால்.

27. பிரளயம் சம்பவிக்கிறது

28. ஜீவபாவம்.

29. பிர்ம்மபாவம்.

30. எவன் சாஸ்திரார்த்தத்தை அறிந்து சாஸ்திரத்திற்செல்லிய ஆசாரங்களைத் தானும் அனுசரித்து மனங்களையும் அனுசரிக்கும்படிச்செய்கிறவனே அவன் ஆசாரியனுவான்.

தேவன் சொப்பனத்திலேயே ஆசாரியனை யடைந்தான். அப்படி விதி பூர்வமாய் அடையப்பட்ட சீஷனை ஆசாரியர் தேவவாக்குரூபமான மித்தியா திரந்தத்தையுபதேசிக்கிறார்.

425. மங்களாசரணம்;—மித்தியாசாரியரால் மித்தியாசீஷனுக்கு உபதேசிக்கப்பட்ட சமஸ்திருதக்கிரந்தம் மொழிபெயர்க்கப்படுகிறது. சம்ஸ்கிருதக்கிரந்தத்தை மொழிபெயர்ப்பதில் முதலில் மங்களாசரணம் சொல்லுகிறார். ஏனெனில் மங்களத்தினால் கிரந்தமுடிவுக்குப் பிரதிபந்தங்களாயிருக்கிற விக்கினங்கள் நாசமாகின்றன விக்கினம் என்றால் பாவம். பாவத்தினால் சுபகாரியம் முடிவுபெறுகிறதில்லை. பாவங்கள் மங்களத்தால் நாசமாகின்றன. பாவமற்றவனும் கிரந்தாரம்பத்தில் மங்களம் அவசியம் சொல்லவேண்டும். ஏனெனில் கிரந்தாரம்பத்தில் மங்களஞ்சொல்லாவிட்டால் கிரந்தக்காரனிடத்தில் ஜனங்களுக்கு நாஸ்திகப்பிராந்தியுண்டாகிக்கிரந்தத்திற் பிரவிர்த்தியுண்டாகமாட்டாது.

426. மங்களபேதங்கள்:— மங்களம் மூவகைத்து. (1) வஸ்துநிர்த்தேசரூபம் (2) நமஸ்காரரூபம் (3) ஆசீர்வாதரூபம். சகுணமல்லது நிர்க்குணமான பரமாத்மா வஸ்து என்னப்படும். அதின் நிர்த்தனமே வஸ்துநிராத்தேசரூபமங்களமென்னப்படும். தன்னுடைய அல்லது சீஷனுடைய வாஞ்சிதவஸ்துவைப் பிரார்த்திப்பது ஆசீர்வாதரூபமங்களமென்னப்படும்.

427. புராணத்தில் கணேசன் தேவீ இலைகளின் சுருவரைதைப் பிரசித்தமாயிருக்கிறது. ஆகையால் அனீஸ்வரத்தின் சிந்தனையில்லை. புராணத்தில் கணேசனுக்குச் சொல்லப்பட்ட ஜன்மம் ஜீவர்களதுபோல்கர்மபலனல்ல; ஆனால் ராமகிருஷ்ணர்களைப்போல் பக்தர்களை யனுக்கிரகிக்கப் பரமாத்மாவின் ஆவிர்ப்பாவமென்று வியாஸபகவானுடைய முக்கிய அபிப்பிராயம. இந்தவிடத்தில் ஒரு இரகசியமிருகிறது. பாரமார்த்திகத்தில் ஜீவனும் பரமாத்மாவுக்கு வேறன்று. ஆனால் ஆத்மாவிடத்திலிருக்கப்பட்ட ஜனனமரணதிப்பந்தங்களின் அத்தியாஸம் ஜீவனுடைய ஜீவத்தன்மையாம். அந்த ஜன்மாதிப்பந்தம் கணேசாதிகளுக்குத் தங்களிடத்திற் பிரதீதியாகிறதில்லை. ஆகையால் அவர்கள் ஜீவர்களன்று. கணேசாதிகளுக்கு ஈஸ்வரனை யுண்டு. ஆகையால் நிர

---

31. குறிப்பான யாதொரு கிரந்தமும் கிரஹிக்கத்தக்கதில்லை. இந்த (விசாரசாகர)கிரந்தத்திற்கு மூலஆதாரமான அனேக சம்ஸ்கிருத கிரந்தங்கள் கிரஹிக்கத்தக்கன.

ந்தாரம்பத்தில் அவர்களின் சிந்தனை யுக்தமே. ஈஸ்வரன் நாலுரூபமா யிருக்கிறதாகச் சொன்னது எல்லாருக்கும் ஈஸ்வரானை யுண்டெனக்கா ண்பிப்பதற்குத்தான். ஈஸ்வரபக்தியும் குருபக்தியும் வித்தியாப்பிராப்தி க்கு முக்கிய சாதனங்களாயிருக்கின்றன. இந்த அர்த்தத்தையும் ஈஸ்வ ரனுடைய நாலுரூபத்துவம் காண்பிக்கிறது.

428. நிர்க்குணவஸ்துநிர்த்தேசரூபமங்களம்:— வியாபகமாயும் சத் தியமாயுமிருக்கிற எதின் பிரகாசத்தால் சூரியன் சந்திரன் பிரகாசிக்கி றார்களோ அதாகவும் புத்திக்குச் சாக்ஷியாகவும் சுத்தஸ்வரூபமாகவும் பூ ர்ணானந்தரூபமாகவும் இருக்கிற வஸ்துவே நான்.

429. சகுணவஸ்துநிர்த்தேசமங்களம்:— கணபதியின் பெயர் வி க்கினங்களை ஸமூலமாக நாசம்பண்ணுகிறது. அவரைச்சிந்திக்காவிடின் தேவதைகளுடைய இச்சைகளுஞ் சித்திக்கிறதில்லை, திரிப்ரவதத்தில் இந்த விஷயம் பிரசித்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

430. நமஸ்காரரூபமங்களம்;— அசுரர்களைச் சங்காரிக்கிறவர்களா யும் பக்தர்களை யெப்போதும் பரிபாலிக்கிறவர்களாயுமிருக்கிற லக்ஷ்மீ பதியான மகாவிஷ்ணுவையும் பார்வதிபதியான பரமசிவனையும் நமஸ்கரி க்கிறேன்.

431. தான் கருதியதைப்பெறும் ஆசீர்வாதரூபமங்களம்:— எந்தச் சக் தியின் பலத்தால் ஈசுவரன் சிருஷ்டிக்கிறாரோ அந்தச் சக்தி இந்தகரு த்தம் முடியும்பொருட்டு என் வாக்கிலிருக்கப் பிரார்த்திக்கிறேன்.

432. தீஷன் கருதியபொருளைப்பெறும் பிரார்த்தனை ரூபமங்களம்:— பந்தத்தை நீக்கிச் சுகத்தைத்தரும் தீனதயாளுவான தாதுகுரு இந்தக் கிரந்தத்தைச் சிரவணபடனங்கள் செய்கிறவனுடைய ஜன்மாதிதுக்க த்தை நிவிர்த்திப் பாராக.

433. வேதாந்த[32] சாஸ்திரகர்த்தாவாகியஸ்ரீவேதவியாஸரை நமஸ்கரித்தல்[33] (433-435):— வனத்தில் காற்றடித்து மரங்களை யசைத்து ஆலைகளின்

---

32. வேதாந்தமென்றால் உபநிஷத்துக்கள். இவைகளின் தாற்பரியத் தை நிச்சயம் செய்வது பிரம்மசூத்திரம். இதின் கர்த்தா வேதவியாசர்.

33. மனதினாலும் வாக்கினாலும் சரீரத்தினாலும் தன்னைத்தாழ்த்திப்பிற

முட்களினிறைத்துமறைக்கியமான தாமரைப்பூவைப்பறித்து முட்களிற் போடுகிறது. அந்த புஷ்பத்தைப் பார்த்து அவ்வழியேபோகுமொருவன் இது இங்கிருக்கத்தகாதென்றும் உத்தமமான இடத்திலிருக்கவேண்டு மென்றும் நினைத்து அதைக்கையில் எடுத்துக் கொள்ளுகிறான். மறுப டியும் அவன் யோசிக்கிறதாவது:— இவ்வாயு மறுபடியும் பூக்களை முட் களிற் போடும். ஆனதால் பூக்கள் முட்களில் விழாமலிருக்கும்படி யோ ரூபாயஞ் செய்யவேண்டுமெனக்கருதிச் சூத்திரங்களால் ஒருவலைசெய்து முண்மாத்தைப் பிரித்துவிடுகிறான். அவ்வலையால் புஷ்பங்கள் முட்களி ல் விழுகிறதில்லை.

434. இதுபோல், பேதவாதியாகிய [34]ஆசாரியரூபவாயு வேத ரூபவனத்தில் [35]அர்த்தவாதரூப முட்கள்சகித விருக்ஷத்தினின்றும் ஸகாம கர்மரூபமுட்களைப் பிடுங்கிக் கபடமில்லாமலும் ராகாதிதோஷங் கள் ரகிதனுயுமிருக்கிற சிஷ்யரூப தாமரைப்பூவை சமாதிரூப அதின் ஸ்தா னத்தினின்றும் பிடுங்கி ஸகாம கர்ம ரூபமுள்ள வனத்திற் போடுகிறது. அவ்வழியேபோகிறவனுக்குச் சமானமான எங்கும் வியாபித்திருக்கிற ஸ்ரீமகாவிஷ்ணு இவன் இவ்விடத்திலிருக்கத்தகாதவனென்றும் தன் ஸ்வரூ பத்தையடையத் தகுந்தவனென்றும் நினைத்து வியாஸ ரூபங்கரித்து அச் சிஷ்யனை உபதேசரூபஸ்தானத்தில் வைத்தார். ஒருவன் கையிலிருக்கிற புஷ் பத்தைப் பிடுங்கக்காற்று சமாத்தமாகாததுபோல் நிர்மமிஷ்ட ஆசா ரியருடைய உபதேசத்தில் இருக்கிறவனைப் பேதவாதி பிரமிக்கும்படி ச்செய்யச் சமர்த்தனுகிறதில்லை. ஆகையால் உபதேசமே புஷ்பத்தி ன் ஆசிரய ரூப இடம். மறுபடியும் வியாஸபகவான் விசாரிக்கிறதாவது; இந்தப் பேதவாதி இதரஜனங்களையும் ஸகாமகர்ம ரூப முட்களில் போ டுவான். ஆகையால் சிஷ்யர்கள் பிரமிக்காமலிருக்கும்படிச் ஸ்ருதி ரூபமா ன வலையினல் வேதவாக்கியரூப விருக்ஷங்களை விபாகித்தார்.

ரைப்புகழ்ந்து ததித்தலும் சிந்தித்தலும் நமஸ்காரமென்னபபடும். இம்மூ வித நமஸ்காரங்களும் உத்தம மத்தியம அதமங்களாயிருக்கின்றன. இவைகளி ல் மனேநமஸ்காரம் விதை. வாக்குநமஸ்காரம் முளை. சரீரநமஸ்காரம் மர மும். குருவின் பிரசன்னதை பலன்.

34. பேதவாதியை ஆசாரியரைச் சொன்னது ஒருவனைச் சிங்கமென் பதுபோல உபசாரமாகத்தோன்றும்.

35, [illegible] ஸ்ருதிவசனம், 1 வது தாக்கம் 39 வது குறிப் பைப்பார்க்க.

435. வனத்திலிருக்கும் முல்மாங்களும் முள்ளில்லாமரங்களும் வலியால் பரிக்கப்பட்டால் பூக்கள் முள்ளில் விழமாட்டா. இதுபோல் வேதத்திலிருவித வாக்கியங்களுண்டு. ஒன்று கர்மத்தைத்துதித்துப் பிர் முகனைக் கர்மத்திற் பிரவேசிக்கும்படிச்செய்கிறது. மற்றொன்று கர்மபலத்தின் அநித்தியதையைப் போதித்துப் புருஷனை நிவிர்த்தியில் திருப்புகிறது. இவ்வாக்கியாதிகளை வியாஸர் பிரித்துச் சூத்திரத்திலும் போதிக்கிறதாவது, சகல வாக்கியங்களுக்கும் நிவிர்த்தியில் தாற்பரியமே தவிரப் பிரவிர்த்தியில் ஒருவாக்கியத்துக்கும் தாற்பரியமில்லை. பிரவிர்த்தியைப் போதிக்கிறவாக்கியத்துக்கும் தாற்பரியமென்னவெனில், ஸ்வாபாவிகமாயும் நிஷித்தமாயும் இருக்கிற பிரவிர்த்தியிலிருந்து புருஷனைத் திருப்பி விஹிதத்திற் புகச்செய்து அந்தக்காரணத்தைச் சுத்தமாக்கிப் புருஷனை ஞான நிஷ்டையில் வைப்பதேயாம். இவ்விதமாகப் பிரவிர்த்திக்கும் நிவிர்த்தியிலேயே தாற்பரியம். அர்த்தவாத வாக்கியங்களால் கர்மபலன் போதிக்கப்பட்டது குளாஜிந்நை நியாயத்தினல் தான். பலத்தில் தாற்பரியமில்லை யென்னும் அர்த்தத்தைச் சூத்திரத்தினல் வியாஸர் போதிக்கிறார். சூத்திரங்களால் இந்த அர்த்தத்தைப் புருஷன் அறிந்து ஸகாம கர்மத்தில் பிரவிர்த்திக்கக் கூடாது. நாஸ்திலை புஷ்பத்தை முள்ளினின்றும் தடுப்பதுபோல் வியாஸருடைய சூத்திரம் ஸகாம கர்மத்தினின்றும் தடுப்பதால் வலைக்குச் சமானமாயிருக்கிறது. நிச்சலதாஸரஸ்வதியான நான் ஸ்ரீ வியாஸனை நமஸ்கரிக்கிறேன்.

436. அக்கிரததேவனுடையமுதற்கேள்வி:— ஸ்வாமின், நான் யார் தேகஸ்வரூபமா, தேகத்துக்கு வேறா? நான் மனுஷ்யனாயிருக்கிறேன். எனக்குச் சரீர மிருக்கிறது. இவ்விரண்டு பிரதீதிகளால் எனக்குச் சந்தேகம் ஜனித்திருக்கின்றது. தேகத்துக்கு வேறென்று தாங்கள் சொல்லும்பக்ஷத்தில் நான் கர்த்தா போக்தாவா அல்லவா? கர்த்தா போக்தா ஆகாவிட்டாலும் நான் சகலசரீரங்களிலும் ஏகமா அநேகமா?

---

36. ஒரு தாய் தன்குழந்தைக்குக் கசப்பான மருந்தைக் கொடுக்க இச்சித்து வெல்லத்தைக்கொடுத்து மருந்தும் இதிக்குமென்று நம்பச்செய்து மருந்தைச் செலுத்திவிடுகிறாள். இதுகுளாஜிந்நை நியாயமெனப்படும். இதுபோல் சுருதியாகிற வேதம் பாமரஜனங்களாகிற குழந்தைகளுக்குக் கர்மபலத்தைத் துதிக்கும் வசனங்களாகிற வெல்லத்தைக் கொடுத்து ஸ்வர்க்காதிகளைடையப்படுமென்று போதித்துக் கர்மத்திற்பிரவிர்த்தியுண்டாகும்படிச் செய்கிறது. எப்படித் தாய்க்கு ரோகநிவிர்த்தியிற் கருத்தோ வெல்லம் சாப்பிடுவதிற் கருத்திலலையோ அப்படியே வேதமாகிற தாய்க்குப் பாலநிவிர்த்திமூலம்மாகச் சித்தசுத்தியில் தாற்பரியமேதவிர ஸ்வர்க்காதிபலத்தில் தாற்பரியமில்லை.

437. உவதுகேள்வி இந்த சமுசாரத்தின் கர்த்தா யார்? இதற்கு யாராவது கர்த்தா வுண்டோ? அல்லது இது தானுகவே யுண்டாயிருக்கிறதா? கர்த்தா யிருக்கும்பக்ஷத்தில் கர்த்தா ஜீவனு ஈசுவரனு? ஈஸ்வரனுல் ஈன்வதன் ஓரிடத்திலிருக்கிறூரா? அல்லது எங்கும் வியாபித்திருக்கிறூரா? வியாபகமானுல் வியாபகமான ஆகாசத்துக்கும் ஜீவனுக்கும் பேதமிருக்கிறதுபோல் ஈஸ்வரனும் ஜீவனும் பின்னமா அபின்னமா.

438. 3-வது கேள்வி:— முக்திக்குக் காரணம் ஞானமா, கர்மமா உபாஸனையா அல்லது இரண்டா? இரண்டெனும்பக்ஷத்தில் ஞானகர்மங்களா ஞானஉபாஸனைகளா? அல்லது கர்மஉபாஸனைகளா?

439. முதற்கேள்விக்குத்தரம் (439—490):— சிஷனே உன் முதற் கேள்விக்கு உத்தரஞ் சொல்லுகிறேன். நீசத்சித்ஆனந்தஸ்வரூபமாயிருக்கிறாய். இப்படிச் சொல்லுகிறதினுல் நீ தேகத்துக்கு வேறென்று சொல்

---

37. உபாசனை மானசிக கர்மமானதால் "இரண்டா" வென்று கேழ்க்கப்பட்டது.

38. நீ தேகமன்று. ஏனெனில் தேகம் ஜடமாயும் உன்னுல் பார்க்கப்பட்டும் அமங்களமாயும் அநித்தியமாயும் விகாரத்தோடுகூடியதாயுமிருக்கிறது நீ சச்சிதானந்த ஸ்வரூபி. (1) தேகத்தின் சுகதுக்கங்கள் உன்னை பாதிக்கிறபடியால் நீயே தேகம் என்று சொல்லும்பக்ஷத்தில் அது சரியன்று. ஏனெனில் தேகதாதாத்மியத்தினுல் தேகத்தின் சுகதுக்கங்கள் உன்னுடைய சுகதுக்கங்கள் போல் தோணுகின்றன. தனம் கிடைத்தால் சுகம் உண்டாகிறது. தனம் நஷ்டமானுல் துக்கமுண்டாகிறது. லாபநஷ்ட தாதாத்மியத்தினுல் சுகதுக்கங்கள் தோணுவதுபோல் தேகதாதாத்மியத்தினுல் அவைகள் தோன்றுகின்றன. எப்படி தனம் நீ அன்றே தனத்துக்கு வேறுயிருக்கிறுயோ அப்படி தேகத்தைக்காட்டிலும் நீ வேறு. நீ தேகமன்று. (2) தேகம் விர்த்தி அடைவதால் நீ தேகமென்று சொல்லும்பக்ஷத்தில் ஜடமான மண்தின்னையும் சத்தை குப்பை சேருவதினுல் விர்த்தியடைவதுபோல் அன்னமயசரீரத்தில் பிரதினம் அன்னம் சேருவதினுல் தேகம் விர்த்தியடைகிறது. விர்த்தியடைவதினுல் மட்டும் தின்னை சேதனமாகாததுபோல தேகமும் சேதனமாகமாட்டாது. ஆகையால் சேதனமானீ தேகமன்று. (3) ஜன்மகாலம் முதல்தேகம் அமங்களமாயிருப்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. (4) என்சரீரம்ஸ்தூலமாயிருக்கிறது, கிருசமாயிருக்கிறது என்றுசொல்லுவதினுல் உன்னைக்காட்டிலும் சரீரம்வேறுஎன்பதும் அதை நீபார்க்கிறவனுயிருக்கிறுய் என்பதும் பிரத்தியக்ஷமாயிருக்கிறது. பார்க்கப்படும் பதார்த்தத்துக்கு பார்க்கிறவன் வேறுனதால் நீ தேகமன்று. (5) ஜனனமரு

லப பட்டது. ஏனெனில் தேகம் அசத்ருடமாயு ஜடரூபமாயும் துக்க ரூபமாயுமிருக்கிறது.

440. நீ கர்த்தாபோக்தா வன்று. ஏனெனில் எவனிடத்தில் துக்கமிருக்கிறதோ அவன் துக்கநிவர்த்தியின்பெருட்டும் சுகப்பிராப்தி

ணங்களுடன் கூடியிருப்பதால் தேகம் அனித்தியம். (6) பாலியயௌவனகௌமாராதி அவஸ்தைகளுடன் கூடியிருப்பதால் தேகம் விகாரமாயிருக்கிறது. நீ அவிகாரீ பாலியத்தில் கிரீடாசக்தனுயும் யௌவனத்தில் விஷயாசக்தனுயும் வார்த்திகத்தில் சிந்தாயுக்தனுயுமிருப்பதாலும் இவ்வவஸ்தைகளோநீ அநுபவிப்பதாலும் இவைகளுடன் கூடினதேகம் நீயல்லவென்பதும் தேகம்விகாரத்தொடுகூடினதென்பதும் அநித்தியமாயிருக்கிறதென்பதும் நன்ருய்தெரிகிறது. நீ சேதனவஸ்துரூபம் சாகூநீ. தேகம்நீயில்லாததினுல்நாமரூபஜாதிவர்ணுசிரமாதிகளும்நீ அல்ல, மேலும் தேகம் நீயல்லவென்பதினுல் இந்திரியம் மனது புத்தி பிராணன் இவைகளும் நீயல்லவென்றுஅறியத்தக்கது. (1) இந்திரியங்கள் இருக்குங்காலத்தில் நீபார்க்கிறதினுலும் கேழ்க்கிறதினுலும் நீயே இந்திரியம் என்று சொல்லுவது பிசகு. ஏனெனில் இந்திரியம் ஜடம், பூதகாரியம். இந்திரியம் ஆத்மாவையும் அறியமாட்டாது, வேறுயாதொன்றையும் அறியமாட்டாது. சுரோத்திரேந்திரியமே நீ எங்கே இருக்கிறுய் என்று கேட்டால் நான் இவ்விடத்தில் இருக்கிறேன்என்று சொல்ல அதற்குச் சாமர்த்தியமில்லை. இப்படியே ஒவ்வொறுஇந்திரியமும் அசமர்த்தமாயிருப்பதால் இந்திரியங்கள் ஜடங்கள். இவைகள் பூதகாரியமென்பது முன்னமேயே மூலத்தில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் நீஇந்திரியமல்ல. (2) மனது தெளிவாயிருக்கும்போது பார்க்கிறதினுலும் கேழ்கிறதினுலும் மனதுசஞ்சலப்பட்டிருக்கும்போது இவ்வியாபாரங்களில்லாதபடியாலும் நீயே மனது என்று சொல்லும்பக்ஷத்தில் அதுவும் பிசகு. ஏனெனில் என்மனது இப்போது ஸ்திரமாயில்லை என்று சொல்லுவதினுல் மனதுவேறுஎன்பது வெளியாகிறது. (3) புத்தியும் அத்தக்காரணபேதமானதால் புத்தியும் நீயல்ல. (4) பிராணனிருக்குங்காலத்தில் வியாபாரங்கள் நடக்கிறபடியால் பிராணனே நீ என்று சொலலுவது சரியன்று. ஏனெனில் பிராணன் ஜடம். எப்படி எனில் இரவில்தூங்குங்காலத்தில் திருடன்பொருளை எடுத்துக்கொண்டுபோனுல் பிராணன் இருந்தும் அறிகிறதில்லை. ஆகையால் பிராணன் ஜடம். அப்படியானுல் தேகத்தில் சேஷ்டை உண்டாகும்படி எப்படி பிராணன் செய்யக்கூடுமெனில் ஜடமான காத்து ஒருவிடத்திலுள்ள பதார்த்தத்தை மற்றொருவிடத்தில் கொண்டுபோய் போடுவதுபோல் ஜடமான பிராணனும் சேஷ்டைசெய்யக்கூடும். ஆகையால் பிராணனும் நீ அன்று. இவ்விதமாக தேகம், பிராணன், இந்திரியம், மனது, புத்தி, இவைகளில் யாதொன்றுமாகாமல் நீ சச்சிதானந்த ஸ்வரூபியாயிருக்கிறுய்.

யின்பொருட்டும் கிரியையைச் செய்கிறான். அவன் கர்த்தாவென்னப் படுகிறான். உன்னிடத்தில் துக்கமில்லாததினால் (125) துக்கநிவிர்த்தியின் பொருட்டுக் கிரியையைச் செய்கிறவனல்ல, நீ ஆனந்தஸ்வரூபமாயிருக்கிறாய் (125). ஆனதால் சுகப்பிராப்தியின் பொருட்டும் நீ கிரியையின் கர்த்தாவாகிறதில்லை. எவன்[39] கர்த்தாவாகிறானோ அவனே போக்தாவாகிறான். நீ கர்த்தாவன்று ஆகையால் போக்தாவு மன்று. புண்ணியபாவங்களேவா யுண்டுபண்ணுகிற கர்மத்தின் கர்த்தாவும் சுகதுக்கங்களின் போக்தாவும் ஸ்தூலசூக்ஷ்மங்களுடன் கூடிய தேகமே நீ யன்று. நீ தேகசாக்ஷீ.

441.* ஆனதால் ஆத்மா ஏகம் நாநாவன்று. ஆத்மா கர்த்தாபோக்தாவாகும்பக்ஷத்தில் அனேகமாயிருக்கக்கூடும். ஏனெனில் ஒருவன் சுகியாயிருக்கிறான். ஒருவன் துக்கியாயிருக்கிறான். கர்த்தாபோக்தாவாக ஒருவனேஇருக்கும்பக்ஷத்தில் ஒருவனுக்குச் சுகம் அல்லது துக்கம் உண்டாகிறதினால் எல்லாருக்கும் சுகம் அல்லது துக்கம் உண்டாகவேண்டும். அனுபவத்தில் இப்படியில்லாததினால் போக்தா அனேகம், ஆத்மா போக்தாவாகாததினால்(440) ஆத்மாஒன்றே.

442 சாங்கியமதம்(442—43) சாங்கியமதத்தில் ஆத்மா கர்த்தாபோக்தாவாக அங்கீகரிக்கப்படாமல் அகேகமென்று அங்கீகரிப்பது நிறம்பவும் விருத்தமாயிருக்கிறது. ஏனெனில் சாங்கியசித்தாந்தம் அடியில் வருமாறு. சத்துவராஜஸ்தமோகுணங்களின் சமானஅவஸ்தைக்குப் பிரதான மென்று பெயர். இந்தப்பிரதானம் பிரகிருதி யாயிருக்கிறது, விகிருதி யன்று. விகிருதியென்றால் காரியம், பிரகிருதி என்றால் உபாதானகாரணம். இந்தப் பிரதானம் மஹத்தத்துவத்தின் உபாதானகாரணமாயிருப்பதால் பிரகிருதியாயிருக்கிறது. அநாதியாயிருப்பதால் இதுவிகிருதியன்று. மஹத்தத்துவம்[40] அஹங்காரம்* பஞ்சதன்மாத்திரைகள் இவ்வேழுபிரகிருதிகளும் விகிருதிகளாயிருக்கின்றன. முன்னிற்பது பின்னிற்பதற்குப் பிரகிருதியாயும் பின்னிற்பது முன்னிற்பதற்கு விகிருதியாயுமிருக்கின்றன. தன்மாத்திரைகளும் பஞ்சபூதங்களுக்குப் பிரகிருதிகளாயிருக்கின்

---

39. எது கர்த்தாவோ அதுவே போக்தாவென்பது உலகத்தில் பிரசித்தமாயிருக்கிறது. அந்தக்காரணம் கர்மத்தின் கர்த்தா. ஆகையால் அதுவே கர்மபலமாகிற தன் பரிணாமமான சுகதுக்கங்களின் போக்தாவாயுமிருக்கிறது.

40. மாயையின்றும் சமஷ்டி புத்தி ரூபம் மகத்தத்துவம். இதினின்றும் சாத்வீகராஜஸதாமஸபேதங்களோடுகூடிய அகங்காரதத்வம் உண்டாகிறது. இதினின்றும் பஞ்சதன்மாத்திரையுண்டாகிறது.

மன. இவ்விதமாக ஏழுபிரகிருதிகளும் விகிருதிகளாயிருக்கின்றன. பஞ்ச பூதங்கள் தசேந்திரியங்கள் மன இந்தப்பதினாறும் விகிருதிகளாம்பிரகிருதிகளன்று. புருஷன் பிரகிருதிவிகிருதிகள் இரண்டுமன்று. ஏனெனில் ஒன்று ஒருபதார்த்தத்துக்குக் காரணமாலல் அது பிரகிருதியாகும். காரியமாலல் அதுவிகிருதியாகும். புருஷன் ஒன்றுக்கும் காரணமாகாததினால் பிரகிருதியில்லை. காரியமாகாததினால் அவன் விகிருதியுமன்று. ஆகையால் புருஷன் அசங்கன். இவ்விதமாகச் சாங்கியமதத்தில் 25 தத்துவங்களிருக்கின்றன. தத்துவமென்றால் பதார்த்தம்.

41

443. சாங்கியமதத்தில் ஈசுவரன் அங்கீகரிக்கப்படவில்லை. அதந்திரமான பிரகிருதியே ஜகத்துக்குக் காரணமாயிருக்கிறது. புருஷனுடைய போகமோக்ஷங்களின் பொருட்டுப் பிரகிருதியே பிரவிர்த்திக்கிறது. புருஷன் பிரவிர்த்திக்கிறதில்லை. பிரகிருதியின் விஷயரூபபரிணாமத்தால் புருஷனுக்குப் போகமுண்டாகிறது. புத்திமூலமாக விவேகரூபப்பிரகிருதியின் பரிணாமத்தால் மோக்ஷமுண்டாகிறது. புருஷன் அசங்கனாயிருப்பதால் அவனிடத்திற் போகமோக்ஷங்கள் பொருந்தா. ஆயினும் ஞானம் சுகம் துக்கம் ராகம் துவேஷம் முதலியவைகள் புத்தியின் பரிணாமமாயிருக்கின்றன. இந்தப் புத்திக்கு ஆத்மவிவேகமில்லை. அவிவேகமிருக்கிறது. ஆனதால் ஆத்மாவினிடத்தில் பந்தமோக்ஷங்கள் ஆரோபிக்கப்பட்டிருக்கின்றனவே தவிரப் பாரமார்த்திகத்திலில்லை. அவிவேகத்தால் சித்திக்கிறபோகத்தால் சாங்கியமதத்தில் ஆத்மா அகர்த்தாவெனச் சொல்லப்படுகிறது. பாரமார்த்திகத்தில் ஆத்மா போக்தாவன்று. புத்தியே போக்தா, புத்தி ஆத்மாவுக்கு வேறு. இந்தஞானத்துக்கு விவேகமென்றுபெயர். இதின் அபாவத்துக்கு அவிவேகமென்று

---

41. சாங்கியம்ஸேசுவரம் நிரீசுவரமென்று இருவகையாம். கர்த்தமருடையவும் தேவஹூதியினுடையவும் புத்திரரானகபிலர்ஸேசுவரசாங்கியர். வேறொருகபிலர் இருந்தார். இவர் நிரீசுவரசாங்கியர். இவருடையமதத்தில் ஈஸ்வரன் அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால் பிரகிருதியை ஜகத்காரணமாகவும் புருஷனுடையபோகமோக்ஷங்களுக்குஹேதுவாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தமதம் சரியன்று. ஏனெனில் பிரளயகாலத்தில் சத்துவாதிகுணங்களுடைய சேர்க்கைக்குப்பிரதானம் அல்லது பிரகிருதியென்றுபெயர். சிருஷ்டிகாலத்தில் இந்த அவஸ்தை விடுபட்டு ஜகத்துண்டாகிறது. அந்தப்பிரதானம் ஜடமாயிருப்பதால் அந்த அவஸ்தையைவிட்டுவிட ஸ்வயம் சமர்த்தமாகிறதில்லை. புருஷன் இவருடைய மதப்படிக்கும் அசங்கனாயிருப்பதால் அவனுக்கும் பிரதானத்துக்கும் சம்பந்தமில்லை. சேதனசம்பந்தமன்றியில் ஜடத்திலுல் யாதொருகாரியமும் நடக்கிறதில்லை. ஆகையால் ஈசுவரனே ஜகத்காரத்தாவென்று கிரகிக்கவேண்டியது.

பெயர். இவ்விதமாகச் சாங்கியமதத்தில் ஆத்மா அசங்கமாயிருக்கிறது. சுகாதிகள் புத்தியின் பரிணமங்களாம். ஆதலால் புத்தியின் தர்மங்களாம். ஆத்மாவும் அரோகம்.

444. மேற்சொல்லியது மிகவும் விருத்தமாயிருக்கிறது. சுகதுக்கங்கள் ஆத்மாவின் தர்மங்களாஅல் அவைகள் ஒவ்வொரு சரீரத்திலும் பேதப்படுவதால் ஆத்மா பேதப்படக்கூடும். சுகதுக்கங்கள் ஆத்மாவின் தர்மங்களாகாமல் புத்தியின் தர்மங்களாவதால் அவைகளின் பேதத்தால் புத்தியின் பேதம் சித்திக்கிறதேதவிர ஆத்மாவின் பேதம் சித்திக்கவில்லை. ஒரே வியாபகஆகாசத்தில் அனேக வுபாதிகளின் தர்மங்கள் உபாதி ஆகாசமிவைகளின் அவிவேகத்தினால்தான்றுவதுபோல் ஒரேவியாபக ஆத்மாவில் அனேக புத்திகளின் தர்மங்கள் அவிவேகத்தினால்தோன்றுகின்றன. சாங்கியமதத்தில் இப்படியங்கீகரிப்பது உசிதமாயிருக்கும். ஆத்மாவை அசங்கமாகப் பாவித்து மறுபடியும் அதை யேமாகச் சொல்வது நிஷ்பிரயோசனம்.

சில ஆத்மாக்கள் முக்தர்களாயும் சிலருக்குப் பந்தமிருப்பதாயும் பாவித்துப் பந்தமோக்ஷங்களின் பேதத்தால் ஆத்மா பேதப்படுவதாகச் சொல்வதுஞ் சரியன்று. ஏனெனில் பந்தமோக்ஷங்கள் ஆத்மாவினிடத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தால் அவைகளின் பேதத்தால் ஆத்மாவின் பேதம் சித்திக்கும். சாங்கியமதத்தில் அசங்கமான ஆத்மாவினிடத்தில் பந்தமோக்ஷங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால் புத்தியின் அவிவேகத்தால் பந்தமும் புத்தியின் விவேகத்தால் பந்தத்துக்குமோக்ஷமும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. எது அவிவேகத்தாலுண்டாகிறதோ அது விவேகத்தால் நிவர்த்தியாகிறது. ரஜ்ஜுசர்ப்பம்போல் அது மித்தை: ஆத்மாவினிடத்தில் புத்தியின் அவிவேகத்தால் பந்தமிருக்கிறது. விவேகத்தால் அது நிவர்த்தியாகிறது. ஆகையால் பந்தம் மித்தை. எப்படி பந்தம் மித்தையோ அப்படி ஆத்மாவின் மோக்ஷமும் மித்தை. எதில் பந்தம் சத்தியமாயிருக்கிறதோ அதற்கே மோக்ஷம் சத்தியமாகும். ஆத்மாவில் பந்தம் மித்தையானதால் மோக்ஷமும் மித்தையே. இவ்விதமாக மித்தையான பந்தமோட்சங்கள் ஆகாசம்போல் ஒரே ஆத்மாவினிடத்திற் பொருந்தும். அவைகளின் பேதத்தால் ஆத்மாவின் பேதம் சித்திக்கவில்லை. ஆகையால் சாங்கியமதத்திற்சொல்லிய ஆத்மாவின்பேதம் அசங்கதம்.[42]

---

42 சாங்கிய மதத்தில் ஆத்மா காரணாவாயிருப்பதால் லஜாதீய சம்பந்தமும் பிரகிருதி நித்தியமாயிருப்பதால் விஜாதீய சம்பந்தமும் இடைக்கின்றன.

மூன்றுவித நியாயமதங்களும் அவைகளின் கண்டனமும் (445—467)

445. ஆத்மாவியாபகம் (445—456) :— நியாயமதத்திலும் சாங்கியமதத்திற்போலவே ஆத்மாவின் பேதம் அசங்கதமாயிருக்கிறது. எனெனில் நியாயசித்தாந்தம் அடியில் வருமாறு:—சுகம் துக்கம் ஞானம் இச்சை துவேஷம் பிரயத்தனம் தர்மம் அதர்மம் ஞானசமுஸ்காரம் சங்கியை பரிமாணம் பிரதக்கு ஸம்யோகம் விபாகம் இப்பதினான்கு குணங்களும் ஜீவரூப ஆத்மாவினிடத்திலிருக்கின்றன. சங்கியைபரிமாணம் பிரதக்கு ஸம்யோகம விபாகம் ஞானம் இச்சை பிரயத்தனம் இவ்வெண் குணங்களும் ஈஸ்வரனிடதிலிருக்கின்றன. பேதம் என்னவெனில் ஈஸ்வரனுடைய ஞானம் இச்சை பிரயத்தனம் நித்தியமாயும் ஜீவனுடைய ஞானாதிகள் மூன்றும் அநித்தியமாயுமிருக்கின்றன. ஈஸ்வரன் வியாபகமாயும் நித்தியமாயுமிருக்கிறான். ஜீவன் அநேகமாயும் எங்கும் வியாபகமாயும நித்தியமாயும் இருக்கிறான். ஜீவனுடைய ஞானம் அநித்தியமாயிருப்பதால் ஞானகுணமிருக்குங்காலத்தில் ஜீவன் சேதனமாயும் இல்லாதகாலத்தில் ஜடமாயுமிருக்கிறான்.[43]

446. நித்தியபதார்த்தங்கள்:— ஜீவேஸ்வரர்கள்போல் ஆகாசம், காலம், திக்கு, மனது இவைகளும் பிருதிவீ, ஜலம், தேயு, வாயு இவைகளின் பரமாணுக்களும் நித்தியமாயிருக்கின்றன. ஜன்னலின் வழியாய் வருங்கிரணத்தில் காணப்படுகிற சூக்ஷ்மமான தூளியின் ஆறிலொருபாகத்துக்குப் பரமாணுவென்றுபெயர். இதப்பரமாணு ஆத்மாடோலநித்தி

மறுபடியும் ஆத்மா அசங்கமென்று சொல்வது பூர்வோத்தர விரோதமாயிருக்கிறது. ஆத்மா ஒன்றென அங்கிகரித்து அந்தக்காரணபேதத்தால் போகாதிகள் பேதப்படுகின்றன வென நிஷேப்பதில் யாதொரு தோஷமுமில்லை. மேலும் ஆத்மா அநேகமென்று சொல்வது சுருதி விருத்தமாயிருக்கிறது. அதுவுமன்றியில் ஆத்மாக்களுக்குள் பேதமிருப்பதாகச்சொல்லுகிறவனுக்கு ஒரு கேள்வி:— அதாவது இந்தப்பேதம் பேதசஹித ஆத்மாவினிடத்திலிருக்கிறதா அல்லது பேதரஹித ஆத்மாவினிடத்திலிருக்கிறதா? இரண்டாவது பக்ஷத்தில் பூர்வோத்தரவிருத்தம் சம்பவிக்கிறது. முதல் பக்ஷத்தில் ஆத்மாசிரயாதிதோஷங்கள் சம்பவிக்கும். ஆகையால் ஆத்மாவினிடத்தில் பேதஞ்சொன்னது சரியன்று பந்த மோக்ஷங்களிலுலாவது கர்த்தருத்வ போக்தருத்வங்களிலுலாவது ஆத்மாவுக்கு அநேகத்துவங்கிடைக்கவேண்டும். இவைகளில்லாதபோது அநேகத்துவம் எப்படி சித்திக்கும்.

43. ஆத்மாஜடம் என்பது (472—475)ல் கண்டிக்கப்பட்டிருக்கிறது.

யமாயிருக்கிறது. ஜாதி[44] முதலிய வேறுசில பதார்த்தங்களும் நியாயமதத்தில் சித்தியமாயிருக்கின்றன. லௌகத்துக்கு விருத்தமான சித்தாந்தங்களை வெகுவாயெழுதுவதால் ஜிஞ்ஞாசுவுக்கு உபயோகமில்லை. ஆனதால் அவைகளை யெழுதவில்லை.

447. பிராந்தி சம்சாரஹேது:— நான் மனுஷன் பிராமணன் என்று தேகத்தினிட்டத்தில் ஆத்மப்பிராந்தியுண்டாகிறது. அதனல் ராகத்து வேஷங்களுண்டாகின்றன. இவைகளால் தர்மாதர்மங்களின்பொருட்டுப்பிரவிர்த்தியுண்டாகிறது. இது சரீரத்துடன் சம்பந்தப்படுவது மூலமாகச்சுகதுக்கங்களுண்டாகின்றன. இவ்விதமாக நியாயமதத்தில் பிராந்திஞானம் ஆத்மாவின் சமுசாரத்துக்கு ஹேதுவாயிருக்கிறது.

448. பிராந்திநிவிர்த்தி:— இந்தப்பிராந்திஞானம் தத்துவஞானத்தால் நிவிர்த்தியாகிறது. சரீரம் முதலிய சகலபதார்த்தங்களைக்காட்டிலும் ஆத்மா வேறுஎன்கிற நிச்சயத்துக்குத் தத்துவஞானமென்றுபெயர். இந்தத்தத்துவஞான்த்தால் "நான் மனுஷன் பிராமணன்" என்கிற பிராந்தி நிவிர்த்தியாகிறது. பிராந்திநாசத்தினல் ராகத்துவேஷாதிகளில்லாமற்போகின்றன. இவைகளின் அபாவத்தால் தர்மாதர்மங்களின்பொருட்டுப்பிரவிர்த்தியுண்டாகிறதில்லை. பிரவிர்த்தியின் அபாவத்தால் சரீரசம்பந்தரூபமான ஜன்மமில்லாமற்போகிறது. பிராரப்தம் போகத்தினல நாசமடைகிறது. சரீரசம்பந்தத்தின் அபாவத்தால் 21 துக்கங்கள் நாசமுறுகின்றன. இதுத்துக்கநாசரூபமே நியாயமதத்தில் மோக்ஷமென்று சொல்லப்படுகிறது. அந்த 21 துக்கங்களாவன:— சரீரம், சுரோத்திரம், நுவக்கு, நேத்திரம், ரஸனை, கிராணம், மனம், என்னும் ஆறு இந்திரியங்கள், இவைகளின் விஷயங்கள், இந்திரியங்களாறின் ஞானம், சுகதுக்கங்கள், என்பனவாம். சரீராதிகளும் துக்கத்தையுண்டுபண்ணுகிறபடியால் துக்கமென்றே சொல்லப்படுகின்றன. சுயர்க்காதிகளின் சுகமும் நாசமாகுமென்கிற பயத்தினல் துக்கத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. ஆகையால் அச்சுகமும் துக்கமென்று சொல்லப்படுகிறது.

449. மனம் அணித்தியம்:— நியாயமதத்தில் சுரோத்திரமும்[45]

---

44. இரண்டாவது தரங்கத்தின் 46-வதுகுறிப்பைப்பார்க்க.

45. நியாயமதத்தில் சுரோத்திரம் ஆகாசரூபமாகப் பாவிக்கப்பட்டு நித்தியமானவென்னப்பட்டிருக்கிறது. இதுசருதிவிரோதம். ஆத்மாவினிடத்தினின்

மனஸும்[46](446) நித்தியமானதால் அவைகளின் நாசம் சொல்லக்கூடாவிட்டா லும் எந்தரூபங்களால் அவைகள் துக்கத்துக்கு ஹேதுக்களாகின்றனவோ அந்தரூபங்கள் நாசமாகின்றன. பதார்த்தஞானத்தை உண்டுபண்ணுகி ற்தினால் அவைகள் துக்கத்துக்கு ஹேதுக்களாகின்றன. அந்த ஞானத் தை மோக்ஷகாலத்தில் சுரோத்திரமும் மனதுங்கொடுக்கிறதில்லை. ஏனெ னில் கர்ணகோளகத்திலிருக்கிற ஆகாசம் சுரோத்திரமென்னப்படும். இ க்கர்ணகோளகம் மோக்ஷகாலத்தில் இருக்கிறதில்லை. ஆகையால் ஆகா சரூபமான சுரோத்திரேந்திரியமிருந்தாலும் கோளகமில்லாதபடியால் ஞானமுண்டாகிறதில்லை. இவ்விதமாக ஞானத்தைக்கொடுக்கிற சுரோ த்திரேந்திரியத்தின் ஸ்வரூபமே துக்கமாயிருக்கிறது. அதற்கோநாசமு ண்டாகிறது.

450. ஆத்மாவின்[47] ஞானம் (450—452).— ஆத்மாவுடன் மனது சேர்வதால் ஞானமுண்டாகிறது. இந்த மனதின் சேர்க்கை நியாயசித் தாந்தத்தில் ஒன்றின் கிரியையாலாவது அல்லது இரண்டின் கிரியை களாலாவது உண்டாகிறது. பக்ஷிக்கு விருக்ஷத்துடன் சம்பந்தம் பக்ஷியின்கிரியையாலாகிறது. இரண்டு ஆட்டுக்கடாக்கள், ஒன்றோ டொன்று முட்டிக்கொள்ளுதல் இரண்டின் கிரியைகளாலுமுண்டாகி றது. இதுபோல் வியாபக ஆத்மாவினிடத்தில் கிரியை ஒருக்காலுமி ல்லை; மோக்ஷகாலத்தில் மனதிலும் கிரியையில்லை, ஆகையால் ஸம் யோகிக்கக்கூடிய மனதே மோக்ஷகாலத்தில் இல்லாமற்போகிறது.

றும் ஆகாசமுண்டாயிற்று. ஆகாசத்தினின்றும் நேத்திராதிகள் போல்சுரோத் திரமுண்டாயிற்று எதற்குஉற்பத்தியுண்டோ அதற்குநாசமுமுண்டு. ஆகையால் சுரோத்திரம் அநித்தியம்.

46. நியாயமதத்தில் மனது நித்தியமென்று சொன்னதும் பிசகு. ஏனெனில் மனது நித்தியமாலும் சுவாப்தியிலும் மனதின் வியாபாரங்கள் தோன்றவேண்டும. ஆலும் அனுபவத்தில் மனது அஞ்ஞானத்தில் லயப்பட்டுப் பொகிறது மறுபடியும் ஜாக்கிறகாலத்தில் வெளிப்படுகிறது. இவ்விதமாக உற்பத்திநாசங்களுடன் கூடிய மனதை நித்தியமாகச்சொல்வது மூடமாத்தி ரந்தான.

47. ஆத்மா மனதுஞ் சேர்வதினால் ஞானம் உண்டாகிறதாகச் சொல் லும்பக்ஷத்தில் சுவாப்தியில் மனது இல்லாததினால் சுகானுபவமுமிருக்கக் கூ டாது- ஆலும் நித்திரையினின்று விழித்துக்கொண்டவனுக்குத் தான் சுகமாய் தூங்கினதாக ஞாபகம் வருவதாலும் அறியப்படாத பதார்த்தத்தின் ஞாபகம் உண்டாகமாட்டாதப்டியாலும் சுவாப்தியில் மனதில்லாமலிருந்தும் சுக ஞா ன மிருப்பது அனுபவசித்தமாயிருக்கிறது. ஆகையால் மனசம்பந்தத்தால் ஆத்

451. வேறு சிலர் துவக்கும் மனதும் சேர்க்கிறதினால் ஞான முண்டாகிற தென்று சொல்லுகிறார்கள். ஆத்மாவின் ஸம்யோகம் ஞானத்துக்கு ஹேதுவல்ல. சுஷுப்தியில் பூரிதம் என்னும் நாடியில் மன தபிரவேசிக்கிறது. அப்போது துவக்குடன் மனது சம்பந்தப்படுகிற தில்லை. இவர்களுடைய மதத்தில் துவக்குடன் சம்பந்தப்படக்கூடி யமனதே ஞானமூலமாகத்துக்கத்துக்கு ஹேதுவாகிறதினால் துக்கமா யிருக்கிறது. கேவலம் மனங் துக்கமன்று. மோக்ஷகாலத்தில் துவக் குநாசமடைவதால் அத்துடன் சம்பந்தமில்லை. ஆகையால் ஞானமு ண்டாகிறதில்லை. மோக்ஷகாலத்தில் மனது இருந்தும் துக்கத்துக்கு ஹேதுவானதும் ஞானத்தை யுண்டுபண்ணுகிறதும் துவக்குடன் சம் பந்தப்படக்கூடியதுமான மனதின் சம்யோக நாசத்தால் மனது நாசம டைகிறது.

452. இவ்விதமாக மொக்ஷகாலத்தில் பரமாத்மாவுக்கும் பின்ன மாகவே துக்காதிதமாகியாபக ஆத்மா ஜடரூபமாக யிருக்கிறது. ஏனெ னில் ஞானகுணத்தினால் ஆத்மா பிரகாசிக்கிறது. ஜீவனுடைய ஞான மெல்லாம் இந்திரிய ஜன்யமாகவேயிருக்கிறது, நித்தியமன்று. இந்திரியஜ ன்ய ஞானம் மோக்ஷகாலத்தில் நாசமடைகிறது. ஆனதால் பிரகாசமில் லாமலும் ஜட ரூபமாயும் ஆத்மா மோக்ஷகாலத்திலிருக்கிறது. இது நி யாய சித்தாந்தம்.

453. நியாயமதத்தில் முன் சொன்னப்பிரகாரம் சுகதுக்கங்க ளும் பந்த மோக்ஷங்களும் ஆத்மாவுக்கிருக்கிறபடியால் ஆத்மா அநேகம்.

454. மேலும் ஆகமா எங்கும் வியாபகமாயிருக்கிறது. சகல அற்ப பதார்த்தங்களுடனும் ஸம்யோகமே நியாயமதத்தில் வியாபகத்தின்

மாவுக்கு ஞானமுண்டாவதாகச்சொல்வது அயுக்தம். ஆத்மாவின் ஸ்வரூபமே ஞானம். இது நித்தியம்.

48. நியாயமதத்தில் துவக்கும் மனதுஞ்சேர்ந்து ஞானமுண்டாகிற தென்று சொல்வதிலும் யாதொரு சுருதிப்பிரமாணமும் இல்லை. சுஷுப்தி யனுபவத்தாலும் ஆத்மாவின் ஸ்வரூபமே ஞானமென்று சித்திக்கிறது.

49. ஆத்மா ஜடமானது அநேக சுருதிகளுக்கு விரோதமாயிருக்கிறது (472—475)ல் கிரந்தக்காரரே சைதன்னிய ரூபத்தை யுக்தியால் ஸ்தாபிக்கி றார்.

லக்ஷணம், ஸஜாதீய விஜாதீயஸ்வகதபேதகங்களின் அபாவம் வியாபகல் க்ஷணமன்று- ஏனெனில் நியாயமதத்தில் ஆத்மா நிரவயவமானதாலைகயால் ஸ்வகதபேதம் ஆத்மாவினிடத்தில் இல்லாமலிருந்தாலும் ஸஜாதீய விஜாதீய பேதங்களில்லாமலிருக்கவில்லை. ஸஜாதியமான இரண்டாவது ஆத்மாவு மிருக்கிறபடியால் ஆத்மாவில் பேதம் சித்திக்கிறது. விஜாதீய கடாதிகளுக்கும ஆத்மாவுக்கும் பேதமிருக்கிறது. ஆகையால் ஸஜாதீய விஜாதீய ஸ்வகதபேதங்களின் அபாவம் வியாபகத்தின் லக்ஷணமன்று. ஆனல் சகல அல்பபதார்த்தங்களுடனும் ஸம்யோகமே வியாபகலக்ஷணம்

455. இதிலொருசங்கை. நியாயமதத்தில் ஆத்மாபோல ஆகாசம் காலம் திக்கு இவைகளும் வியாபகமாயிருக்கின்றன. பரமாணு (நு க்ஷ்மமாயும் நிரவயவமாயும இருக்கிறது. இத்துடன் சகலவியாபகபதார்த்தங்களின் ஸம்யோகஞ்சம்பவிக்காது. ஏனெனில் பரமாணு ஸாவயவமானல் எந்த இடத்திலாவது ஆத்மாவுக்கு சம்யோகஞ்சித்திக்கும். மற்றவியாபகபதார்த்தங்களுக்கும் ஒவ்வோரிடத்தில் ஸம்யோகஞ்சம்பவிக்கும். பரமாணு ஸாவயவமாயில்லாமல் நிரவயவமாயிருக்கின்றது. அதிசூக்ஷ்மமாயுமிருக்கிறது. ஒரே இடத்தில் இத்துடன் சகல வியாபக பதார்த்தங்களின் ஸம்யோகமுஞ்சம்பவிக்கமாட்டாது. ஏனெனில் ஒன்றின் ஸம்யோகத்தால் அவ்விடம் மறைபட்டுப் போகிறது. அவ்விடத்தில் வேறு பதார்த்தத்தின் சம்யோகஞ்சம்பவிக்காது. ஆகையால் அனேகபதார்த்தங்களுக்கு வியாபகத்துவங்கூறுவது சரியன்று. ஏதேனும் ஒன்றிற்கே வியாபகத்துவம் சித்திக்கும்:

456. இந்தச்சங்கை சரியன்று. ஏனெனில் ஸாவயவவஸ்துவின் ஸம்யோகமிருந்தால் அன்னியவஸ்துவின் ஸம்யோகம் விருத்தப்படும். பூமியில் கையைவைத்த இடத்தில் காலைவைக்கமுடியாததுபோலும். நிரவயவஸ்துவின் ஸம்யோகம் இடத்தை மறைக்கிறதில்லை. ஆகையால் வேறுவஸ்துவின் ஸம்யோகத்துக்கு விரோதமில்லை. இது அனுபவசித்தம். எந்த இடத்தில் கடத்துக்கும் ஆகாசத்துக்கும் சம்பந்தமிருக்கிறதோ அந்த இடத்திலேயே காலத்துக்குந்திக்குக்குங்கூட ஸம்யோகமிருக்கிறது.

---

50. நியாய மதத்தின் வியாபகலக்ஷணம் "ஏகமேவாத்விதியம் பிர்ம்ம" என்றும் சுருதியில் சொல்லிய ஸஜாதீய விஜாதீய ஸ்வகதபேத ரஹிதம் என்னும் லக்ஷணத்துக்கு விரோதமாயிருக்கிறது; அப்படியே யுக்தி அனுபவங்களுக்கும் விரோதமாயிருக்கிறது.

காலமெதாருகடமிருக்குமிடம் ஆகாசகாலதிக்குகளுக்கு வெளியே யிருக்கு
ம்பக்ஷத்தில் அந்த இடத்தில் ஆகாசகால திக்குகளுக்கு ஸம்யோகமில்
லாமலிருக்கக்கூடும். ஆனல் இவைகளுக்கு வெளியே யாதொரு தேசமு
மில்லை. சகலபதார்த்தங்களுடைய இருப்பிடங்களும் ஆகாசகாலதிக்குக
ளுக்குள்ளேயே இருக்கின்றன. ஆகையால் சகலபதார்த்தங்களின் இரு
ப்பிடங்களிலும் ஆகாசாதிகளுக்கு ஸம்யோகமிருக்கிறது. இவ்விதமாக
ப்பிரமாணவிஷயதகிலும ஒரே இடத்தில் அனேக நிரவயவ வியாபகப
தார்த்தங்களுக்கு ஸம்யோகமுண்டாகக்கூடும். யாதொரு தோஷமுமில்
லை. ஆகையால் ஆத்மா அநேகமாயும் எங்கும் வியாபகமாயுமிருக்கிறது.

457. (445—456)கண்டனம்:—(457-458):—சர்வஆத்மாக்களுக்கும் சகலபதார்த்தங்களுடனும் ஸம்யோகம் இருக்கிறதென்பது நியாயசித்தாந்தம். இது சரியன்று. ஏனெனில் வியாபகமான ஆத்மா அனேகமென்று அங்கீகரிக்கும்பக்ஷத்தில் எல்லாசரீரங்களிலும் எல்லா ஆத்மாக்களுக்கும் சம்பந்தத்தை யங்கீகரிக்கவேண்டும் அப்போது இன்ன சரீரம் இன்ன ஆத்மாவினுடையதென்கிற நிச்சயமில்லாமற்போம். ஒவ்வொரு ஆத்மாவுக்கும் எல்லாசரீரங்களுமிருக்கக்கூடும்.

458 (1)எனன் கருமத்தினல் எந்தச்சரீரமுண்டாயிற்றோ அந்த ஆத்மாவுக்கு அதுதான்சரீரமென்று ஒருவன் சொல்லும்பக்ஷத்தில் அது சரியன்று. ஏனெனில் எந்தச் சரீரத்தாற் கர்மம் செய்யப்பட்டதோ அந்தக் கருமத்தைச் செய்தவனுடைய மூன்சரீரத்திலும் சகல ஆத்மாக்களுக்கும் சம்பந்தமுண்டு. ஆகையால் கர்மமும் சகல ஆத்மாக்களுடையதாகவே யாகுமேதவிர ஓராத்மாவினதாக ஆகமாட்டாது. (2) எந்த ஆத்மாவுக்குச் சரீரம் மனதுடன் கூடியிருக்கிறதோ அந்த ஆத்மாவுக்கு அதுதான் சரீரமென்று செல்லுவதுஞ் சரியன்று. ஏனெனில் சரீரம்போல் மனதுடனும் சகல ஆத்மாக்களுக்கும் சம்பந்தமிருப்பதால் இன்னமனது இன்ன ஆத்மாவினதென்கிற நிச்சயம் இல்லை. எல்லா ஆத்மாக்களுக்கும் எல்லாமனதுமிருக்கக்கூடும் (3) அப்படியே இந்திரியம் எல்லா ஆத்மாக்களுக்குமிருக்கக்கூடும் (4)வெளிபதார்த்தவிஷயத்தில் இது என்னுடையது, இது வேறொருவனது என்கிற வியவகாரம் சரீரத்தைப் பொறுத்ததாயிருக்கிறது. எல்லா ஆத்மாக்களுக்கும் எல்லா சரீரங்களுமிருப்பதால் வெளிபதார்த்தங்களும் எல்லாஆத்மாக்களுடையதுமாகவேயிருக்கும்.

459. மேலும் எந்த ஆத்மாவுக்கு எந்தச்சரீரத்தில் நான் என்னுடையது என்கிறபுத்தியிருக்கிறதோ அந்தச்சரீரமே அந்த ஆத்மாவினது. நான் என்னுடையதென்கிற புத்தி ஒவ்வோராத்மாவுக்குந் தனித்தனியே இருக்குமேதவிர எல்லாஆத்மாக்களுக்கும் பொதுவல்ல. ஒரு தர்மம் ஒரே தர்மியிடத்திலிருக்கும். ஆனால் ஆத்மாவுக்குச்சரீரம் ஒன்

றே எந்த ஆத்மாவுக்கு எந்தச் சரீரமிருக்கிறதோ அந்தச் சரீரத்துடன் சம்பந்தப்பட்ட மனது இந்திரியம் வெளிபதார்த்தங்களும் அந்த ஆத்மாவுச் சேர்ந்தவையாம். ஆகையால் வியாபகமான அனேகஆத்மாக்களை யங்கீகரிப்பதில் யாதொருதோஷமுமில்லை.

மேற்சொல்லியதும் சரியன்று. எனெனில் நான் என்னும் புத்தி ஒருதேகத்தில் ஒரே ஆத்மாவுக்கிருந்தாலும் நியாயமதத்தில் அது ஒவ்வாது. எல்லாஆத்மாக்களுக்கும் ஒரு சரீரத்தில் நான் என்னும் புத்தியுண்டாகவேண்டியது. எனெனில் நியாயமதத்தில் புத்தியென்றுல் ஞானம். இந்த ஞானம் ஆத்மா மனது இவைகளின் சம்யோகத்தினாலுண்டாகிறது. மனதுடன் ஸம்யோகம் எல்லாஆத்மாக்களுக்கும் இருக்கிறது. ஆனதால் மனதின் ஸம்யோகத்தினால் ஒருசரீரத்தில் ஓராத்மாவுக் ஞான் என்னும்புத்தி யுண்டாகிறதுபோல் ஒருசரீரத்தில் எல்லாஆத்மாக்களுக்கும் நானென்னும் புத்தியுண்டாகவேண்டும். மனதின் ஸம்யோகம் எல்லாஆத்மாக்களுடனுமிருந்தாலும் எந்தஆத்மாவில் ஞானத்தைக் கொடுக்கும் அதிஷ்டமிருக்கிறதோ அந்த ஆத்மாவுக்கே நானென்னும் புத்தியிருக்கிறது. இப்படி ஒருவன் சொன்னால் எல்லாருக்குமே ஞானமுண்டாகவேண்டும். எனெனில் ஆத்மாவை வியாபகமாயும் அநேகமாயுமங்கீகரித்தால் ஒரு சரீரத்தின் சுபாசுபக்கிரியைகளால் ஒரு சரீரத்திலிருக்கும் எல்லாஆத்மாக்களுக்கும் அதிர்ஷ்டம் உண்டாகவேண்டியது. இது முன் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆனதால் ஆத்மாவை வியாபகமாயும் அனேகமாயும் அங்கீகரித்தால் ஒரு தேகத்தில் எல்லாஆத்மாக்களுக்கும் சுகதுக்கங்களின் போகமுண்டாகவேண்டியது. அவ்விபவத்தில் அப்படியில்லாதமையால் ஆத்மா வியாபகமாயும் அனேகமாயும் இருக்கிறதென்பது நியாயசித்தாந்தம் சரியன்று.[51]

460. சித்தாந்தம் (460—461) :— கம்முடைய சித்தாந்தத்தில் கர்த்தாபோக்தா அந்தக்கரணம். இந்த அந்தக்கரணம் அனேகம். இது வியாபகமுமன்று அணுவுமன்று. இதின் பரிமாணம் சரீரத்துக்குச்சமனம். தீபப்பிரகாசம்போல் பெரியசரீரத்தை யடையும்போது அந்தக்கரணம் விகசிக்கிறது. சின்னசரீரத்தில் அநுசங்கோசம்படுகிறது. இவ்விஷயம் சித்தாந்தபிந்துவின் வியாக்கியானத்தில் மதுசூதனஸ்வாமிகளால் பிரதிபாதிக்கப் பட்டிருக்கிறது. எந்த அந்தக்கரணம் எந்தச்சரீரத்திற்சமம்

---

51. எப்படி அனேக இடங்களுக்கு வியாபகத்தவற்சொல்வது பிரயோஜனமற்றதோ அப்படிப் பிரதி சரீரத்திலும் கர்த்தா போக்தாவான பிரதியாத்மாவுக்கும் வியாபகத்தவற்சொல்வது நிஷ்பிரயோசனம்.

ந்தப்படுகிறதோ அந்த அந்தக்காரணத்துக்கு அந்தசரீரத்தாற் போகமுண்டாகிறது.

461. அந்தக்காரணத்தை வியாபகமாக அங்கீகரிக்கும்பக்ஷத்தில் எல்லாசரீரங்களும் எல்லாருக்குமிருக்கும், போகமும் எல்லாருக்குமுண்டாகும். அந்தக்காரணம் வியாபகமாயில்லாததால் தோஷமில்லை. அந்தக்காரணத்தையணுவாக அங்கிகரித்தால் சரீரத்தின் ஓரிடத்தில் அது இருக்கவேண்டுமென்று அங்கீகரிக்கும்படி நேரிடும். இது சரியன்று. ஏனெனில் ஒரேகாலத்தில் காலிலும் தலையிலும் முள் குத்தினால் இரண்டிடங்களிலும் ஒரேகாலத்தில் வேதனையுண்டாகிறது. இது உண்டாகக்கூடாது. ஏனெனில் அந்தக்காரணம் அணுவானால் ஒரேஸ்தானத்தில் ஒருகாலத்திலிருக்கும். எவ்விடத்தில் அந்தக்காரணமிருக்கிறதோ அவ்விடத்தில்தான் வேதனையுண்டாகவேண்டியது. இரண்டிடத்திலுமுண்டாகக்கூடாது. அனுபவத்தில் அப்படியுண்டாவதால் அந்தக்காரணம் அணுவன்று. அது வியாபகமுமன்று. ஆனாலோ சரீரத்துக்குச்சமானமாயிருக்கிறது. ஆகையால் இதற்கு யாதொரு தோஷமுமில்லை. அணுவாயும் வியாபகமாயுமில்லாதது மத்தியமபரிமாணமென்னப்படும்.

462. 2-வது நியாயமதம்:— நியாயமதத்தில் சில நவீனர்கள்[52] அங்கீகரிப்பதாவது:— ஆத்மா அனேகம், கர்த்தா போக்தா, வியாபகமன்று. ஆனதால் போகமும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே ஏற்படுகிறது. அணுவுமன்று. ஆனதால் இரண்டிடங்களிலும் முள்குத்தினவேதனையுண்டாகாதென்பதில்லை. ஆனால் வேதாந்தமதத்தில் அந்தக்காரணம் மத்தியமபரிமாணமாகச் சொல்லப்பட்டிருப்பதுபோல் ஆத்மாவும் மத்தியமபரிமாணமாயிருக்கிறது. அதினிடத்தில் 14 (445) குணங்களிருக்கின்றன.

463. 462-ன்கண்டனம்:— மேற்சொல்லியமதமுஞ்சரியன்று. ஏனெனில் ஆத்மாவுக்குச்சங்கோசமும் விகாஸமுமங்கீகரிக்கப்படும் பக்ஷத்தில் தீபப்பிரகாசம்போல் ஆத்மா விகாரியாயும் காசமுள்ளதாகவும ஆகும். அதினால் மோக்ஷத்தைப்பிரதிபாதிக்கிற சாஸ்திரமும் சாதனங்களும் பிரயோஜனமற்றனவாம். மத்தியமபரிமாணத்தை யங்கீகரித்துச்சங்கோசவிகாசங்களை யங்கிகரிக்காவிட்டால் இன்னசரீரத்துக்குச்சமானமாய் ஆத்மா இருக்கிறதென்கிற நிச்சயமுண்டாகமாட்டாது. மனுஷியசரீரத்

---

52. திகம்பரர்கள் ஆத்மாவை மத்தியம பரிமாணமாய்ச் சொல்லுகிறார்கள்.

துக்குச்சமானமென்று சொல்லும்பக்ஷத்தில் ஆத்மா யானையின் சரீரத்தை அடையும்போது முழுதேகத்திலும் ஆத்மா இல்லாமற்போகும். அப்போது எந்தஇடத்திலே யானையின் ஆத்மாவில்லையோ அந்தவிடத்தில் வேதனையுமுண்டாகமாட்டாது. யானைசரீரத்துக்குச்சமானமாய் ஆத்மா வையங்கீகரிக்கும்பக்ஷத்தில் யானையைக்காட்டிலும் பெரியசரீரத்தின் ஒரிடத்தில் முன் சொல்லியபடி வேதனையுண்டாகாமற்போகும். எல்லாசரீரங்களுக்கும் பொதுவாகஆத்மாவின் ஆகாரத்துக்குச்சமானமாய் யாதொரு சரீரமுமில்லை. எல்லாசரீரங்களையும் விடப்பெரிதான விராட்சரீரத்துக்குச்சமானமாய் ஆத்மாவைச்சொல்லும்பக்ஷத்தில் விராட்டுசரீரத்துக்குள் சகலசரீரங்களும் அடங்கியிருப்பதால் எல்லாஆத்மாக்களுக்கும் எல்லாசரீரங்களோடும் சம்பந்தமுண்டாகும். அப்போது முன்சொன்ன தோஷமும் சம்பவிக்கும். மத்தியபரிமாணமாயிருக்கும் வஸ்துசரீரம்போல் அநித்தியமாகும். ஆகையால் ஆத்மாவும் மத்தியமபரிமாணமாயல் அநித்தியமாகும். நம்முடைய மதப்படி அந்தக்கரணம் ஞானத்தினால நாசமடைகிறது; ஆகையால அநித்தியமாயிருக்கிறது. அந்தக்கரணத்தை மத்தியமபரிமாணமாக அங்கீகரிப்பதினால் யாதொருதோஷமுமில்லை. இவ்விதமாக நயினதார்க்கீகர்களுடையமதமும் அங்கீகரிக்கத்தக்கதன்று

464. ஆத்மாஅணுபரிமாணம்:— வியாயமதத்தின் வேறொரு கொள்கை:— ஆத்மா அனேகமென்றும அணுவென்றும் சிலநயாயிகர்கள் சொல்வதுஞ்சரியன்று. ஏனெனில் ஆத்மாவைக்கர்த்தாபோக்தாவாயங்கீகரிக்கும்பக்ஷத்தில் அந்தக்கரணத்தையணுவென்று சொன்னவிடத்து (461) ஏற்பட்ட தோஷஞ்சித்திக்கும். ஆத்மாவைக்கர்த்தாபோக்தாவென்று அங்கீகரிக்காவிடின் ஆத்மா அனேகமென்பது நிஷ்பலமாய்விடும். வியாபகமான ஏராத்மாவையே எல்லாசரீரங்களிலுமிருப்பதாக அங்கீகரிப்பது யுக்தமாயிருக்கும். மேலும் கர்த்தாபோக்தாவையங்கீகரிக்காதபக்ஷத்தில் இந்த நையாயிகனுடைய சித்தாந்தத்தையும் தள்ளும்படி நேரிடும். ஏனெனில் அணுவாதியின் சித்தாந்தமென்னவெனில் ஞானம் சுகம் துக்கம் முதலியனவு ஆத்மாவின் தர்மங்களென்பதாம். ஆகலால் ஆத்மாவை யணுவாக அங்கீகரிக்கும்பக்ஷத்தில் சரீரத்தில் எந்தவிடத்தில் ஆத்மா இல்லையோ அந்த இடம் மிருதசமானம். அவ்விடத்தில் வேதனை முதலியனவுண்டாகக்கூடாது.

465. ஆக்ஷேபம்:— ஆத்மா சரீரத்தில் ஓரிடத்திலிருக்கிறது. ஆனல் கஸ்தூரியின் வாஸனைபோல் அதின் ஞானம் முழுசரீரத்திலும் வியாபிக்கிறது. அதனல் சரீர முழுவதிலும் அனுகூல பிரதிகூல ஞானமுண்டாகிறது.

466. உத்தரம்;— இதுவுஞ் சரியன்று. ஏனெனில் எந்தவிடத்தில் குணசம்பந்தமான வஸ்து இருக்கிறதோ அதற்கு வெளியில் குணமிருப்பதில்லை. கடாதிகளின் ரூபம் அவைகளுக்கு வெளியிலிராததுபோல் ஆத்மாவுக்கு வெளியில் ஞானமிருப்பதாகச்சொல்வது சரியன்று. மேலும் கஸ்தூரியின் சூக்ஷுமபாகம் எவ்வளவிடத்தில் வியாபிக்கிறதோ அவ்வளவிடத்திலேயே கந்தம் வியாபிக்கிறது. ஆனதால் கஸ்தூரியின் திர்ஷ்டாந்தமும் சரியன்று. ஆகலால் அணுவென்னும் பக்ஷமும் சரியன்று.

467. சுருதிசந்தது:— சில சுருதிகளில் ஆத்மா அணுவுக்கும் அணுவென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆத்மாவை யறிவது கஷ்டமாகையால் அப்படிச்சொல்லப்பட்டது. அத்தியந்தம் அணுவாயிருக்கும் வஸ்துவின் ஞானம் மந்தபுத்தியுள்ளவர்களுக்கு உண்டாகாததுபோல் பகிர்முகபுருஷனுக்கும் ஆத்மாவின் ஞானமுண்டாகமாட்டாது. ஆகலால் ஆத்மாவுக்குச்சமானமென்பதே சுருதியின் அபிப்பிராயமே தவிர ஆத்மாவே அணுரூபமாயிருக்கிறதென்கிற அபிப்பிராயமில்லை. எனெனில் அநேக இடங்களில் ஆத்மா வியாபகரூபமென்று வேதம் பிரதிபாதித்திருக்கிறது. ஆகையால் ஆத்மா அணுவன்று. இவ்விதமாக ஆத்மா வியாபகமாயும் காகாவாயும் அல்லது மத்தியம பரிமாணமாயும் காகாவாயும் அல்லது அணுவாயும் காகாவாயுமிருப்பதாக நையாயிகர்களின் மூவிதமான கொள்கைகளும் அசம்பாவிதங்களாயிருக்கின்றன.

468. மூடிவானதிர்மானம் (468—70):— இது என்னவெனில் ஆத்மா ஏகமாயும் வியாபகமாயுமிருக்கிறது. அதனிடத்தில் கர்மாதர்மங்களின் சுகதுக்கங்கள் பந்த மோக்ஷங்கள் இவைகளை யங்கீகரிக்கும் பக்ஷத்தில் சிலருக்குச்சுகம் சிலருக்குதுக்கம் சிலருக்குபந்தம் சிலருக்குமோக்ஷம் உண்டாகிறதென்கிற வியவகாரம் ஏற்படக்கூடாது. அப்படியேற்படுவதால் தர்மாதிகள் புத்தியின் தர்மங்களாயிருக்கின்றன. புத்தி ஜடமாயிருப்[53]பதால் அதனிடத்திலும் சுகாதிகள் இருக்கக்கூடாதெனினும் ஆத்மாவுக்குச்சுகதுக்கங்களில்லை யென்கிற அபிப்பிராயத்தால் புத்தியிருக்கிறதாகச் சொல்லப்பட்டதே தவிரப் புத்திக்கே யுண்மையாய் அந்தத்தர்மாதிகளிரு

---

53. இத்தாங்கத்தின் 38-வது குறிப்பைப் பார்க்க.

ப்பதாக அபிப்பிராயமன்று. புத்தியும் சுகாதிகளும் ஆத்மாவினிடத்தில் அத்தியஸ்தங்களாயிருக்கின்றன. எது எதில் அத்தியஸ்தமாயிருக்கிறதோ அது அதில் பாரமார்த்திகத்திலில்லை. ரஜ்ஜுவில் அத்தியஸ்தமான சர்ப்பம் பாரமார்த்திகத்தில் ரஜ்ஜுவில் இல்லாதது போல் புத்தியும் சுகாதிகளும் ஆத்மாவினிடத்திலில்லை. அத்தியஸ்தவஸ்துவும் எதற்கும் ஆசிரய மாகிறதில்லை. ஆனதால் புத்தியும் சுகாதிகளும் ஆசிரயங்களாகா. ஆயுல் அஞ்ஞானம் சுத்தசைதன்யத்தில் அத்தியஸ்தமாயிருக்கிறது. அந்தக்காரணம் அஞ்ஞானஉபாதித்தில் அத்தியஸ்தமாயிருக்கிறது. அந்தக்காரணஉபாதித்தில் தர்மாதர்மங்கள் சுகதுக்கங்கள் பந்த மோக்ஷங்கள் அத்தியஸ்தமாயிருக்கின்றன. இவ்விதமாக ஆத்மாவிடத்திலுள்ள தர்மாதிகளின் அதிஷ்டானத்துக்கு அந்தக்காரணம உபாதியாயிருக்கிறது. ஆனகயால் தர்மம் அந்தக்காரணத்துக்குச் சார்த்தாகச் சொல்லப்படுகிறது.

469. அந்தக்காரண விசிஷ்டத்தில் தர்மாதிகள் அத்தியஸ்தமாயிருக்கின்றன வெனச்சொல்லக்கூடாது. ஏனெனில் விசேஷணத்துடன் கூடியது விசிஷ்டமாம். தர்மாதிகளின் அத்தியாஸத்துக்கு அதிஷ்டானமான ஆத்மாவுக்கு அந்தக்காரணத்தை விசேஷணமாக அங்கீகரித்தால் அந்தக்காரணமும் தர்மாதிகளுக்கு அதிஷ்டானமாகக்கூடும். ஆனல் இதுசரியன்று. ஏனெனில் பித்தியாவஸ்து அதிஷ்டானமாகமாட்டாது. ஆகையால் ஆத்மாவினிடத்தில் தர்மாதிகளின் அத்தியாஸத்துக்கு அந்தக்காரணம் விசேஷணமன்று. ஆனல் உபாதியாகவேயிருக்கிறது. உபாதியின் சுபாவமென்னவெனில் தான் சம்பந்தப்படாமலிருந்துகொண்டு தானிருக்குமிடத்திலுள்ள வஸ்துவை யறிந்து கொள்ளும்படிச் செய்வதாம். விசேஷணத்தின் சுபாவமென்னவெனில், தானிருக்கும் இடத்திலுள்ள வஸ்துவைத்தன்னுடன் அறியும்படிச் செய்வதாம், விசேஷணத்துடன்கூடியது விசிஷ்டமென்றும் உபாதியுடன்கூடியது உபஹிதமென்றுஞ் சொல்லப்படும். இந்தப்பிரகாரம் அந்தக்காரணவிசிஷ்டத்தில் தர்மாதிகளை யத்தியஸ்தமாகச் சொல்லும்பக்ஷத்தில் எவ்வளவிடத்தில் அந்தக்காரணமிருக்கிறதோ அவ்வளவிடத்திலுள்ள சைதன்பாகமும் அந்தக்காரணமும் இரண்டும் அதிஷ்டானமாகும். இந்த அந்தக்காரணம் தானும்அத்தியஸ்தமாயிருப்பதால் அதிஷ்டானமாகாது, இந்த அபிப்பிராயத்தால் அந்த

க்காணவுபநிதத்தில் தர்மாதிகள் அத்தியஸ்தமெனச் சொல்லப்பட்டன. ஆகையால் எவ்வளவிடத்தில் அந்தக்காரணமிருக்கிறதோ அவ்வளவிட தனிலுள்ள. சேதனபாகமட்டும் அதிஷ்டானமென்றும் அந்தக்காரணம் அ திஷ்டானமல்லவென்றும் சொல்வது யுக்தமே.

470. இப்படியே அந்தக்காரணமும் அஞ்ஞானவுபநிதத்தில் அ த்தியஸ்தமாயிருக்கிறதே தவிர அஞ்ஞானவிசிஷ்டத்தில் அத்தியஸ்தமாயி ல்லை. இவ்விதமாக அத்தியஸ்தமானதர்மாதிகளுக்கு ஆத்மா அதிஷ்டான ம். அத்தியாலத்தின் அதிஷ்டானத்துக்கு அந்தக்காரணமுபாதியாயிருக் கிறது. ஆகையால் சுகதுக்காதிகள் புத்தியின் தர்மங்களாய்ச்சொல்லப்ப ட்டன. அவிவேகத்தினல் அந்தக்காரணம் ஆத்மா இவ்விரண்டிலும் அ வைகள் பிரதியாகின்றன, அதினல் அந்தக்காரணவிசிஷ்டப்பிரமா தாவின் தர்மங்களாகச்சொல்லப்படுகின்றன. தர்மாதிகள் அந்தக்காரணத்தி ன் தர்மங்களாகவுமாகக்கூடும் அல்லது அந்தக்காரணவிசிஷ்டப்பிரமா தாவின் தர்மங்களாகவும் ஆகக்கூடும்; அல்லது, ரஜ்ஜுசர்ப்பம்போலவு ம் சொப்பனபதார்த்தம்போலவும் கந்தர்வபட்டணம்போலவும் ஆகாசத் தின் நீலவர்ணம்போலவும் ஒன்றினுடைய தர்மமுமாகாமலிருக்கவுங்கூடி ம்; எவ்விதத்திலும் ஆத்மாவின் தர்மங்களாகா. ஆத்மாவினிடத்தில் அ த்தியஸ்தமாகவும் எந்த வஸ்து எதினிடத்தில் அத்தியஸ்தமாயிருக்கிற தோ அது அதினிடத்தில் பாரமார்த்திகத்திலில்லை. அத்தியஸ்தமென்ற ல் கல்பிதம். ஆகையால் ராகத்துவேஷங்கள் பந்தமோகூஷங்கள் தர்மாதி ர்மங்கள் இவைகளில்லாமலும் ஏகமாயும் வியாபகமாயும் ஆத்மா இருக கின்றது.

471. ஆத்மாசத்து:— இந்த ஆத்மா சத்தாயிருக்கிறது. எந்தவ ஸ்து ஞானத்தினல் இல்லாமற்போகிறதோ அது அஸத்தென்று சொல் லப்படுகிறது. எந்தக்காலத்திலும் எது இல்லாமற்போகவில்லையோ அது சத்தென்று சொல்லப்படும். சகலபதார்த்தங்களுக்கும் அவைகளின் நிவி ர்த்திக்கும் ஆத்மா அதிஷ்டானமாயிருக்கிறது. ஆத்மாவுக்கே நிவிர்த்தியு ண்டானல் அதற்கு வேறு அதிஷ்டானஞ்சொல்லவேண்டும். ஏனெனி ல் சூனியத்தில் நிவிர்த்தியுண்டாகமாட்டாது. ஆத்மாவுக்கும் அதின் நிவி ர்த்திக்கும் வேறு அதிஷ்டானம் அங்கீகரிக்கும்பக்ஷத்தில் இதற்கும் வே று அதிஷ்டானம் அங்கீகரிக்கவேண்டும். இவ்விதமாக அனவஸ்தாதோ ஷம் சம்பவிக்கும். மேலும் ஆத்மாவின் நிவிர்த்தியை அங்கீகரிக்கிறவனுக்

ரு ஒருகேள்வி:— இந்த ஆத்மாவின் நிவிர்த்தியை எவனுவது அனுபவித்திருக்கிறானை இல்லையா? அனுபவித்திருக்கிறானென்று சொன்னால் அது ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. எனெனில் எவன் அனுபவித்திருக்கிறானே அவனே ஆத்மா. ஆத்மாவே தன்ஸ்வரூபம். அதின் நிவிர்த்தியாகிற அனுபவம் தன் தலையை வெட்டினவன் அனுபவிப்பதற்குச்சமானமாகும். ஆகையால் ஆத்மாவின் நிவிர்த்தியின் அனுபவம் ஒவ்வாது. ஆத்மாவுக்கு நிவிர்த்தியுண்டாகிறது. ஆனால் அந்நிவிர்த்தியின் அனுபவம் ஒருவருக்குமில்லையென்னும்படபக்கத்தில் ஆத்மாவுக்கு நிவிர்த்தியே இல்லையென்று சித்திக்கும். எனெனில் பந்தவஸ்து எவனாலும் அனுபவிக்கப்படவில்லையோ அது மலடிமகனுக்குச்சமானமாகும். ஆகையால் ஆத்மாவுக்கு நிவிர்த்தியில்லை. ஆகையால் ஆத்மா சத்தாயிருக்கிறது.

472. ஆத்மாசித்து (172—175), ஆத்மா சித்தாக இருக்கிறது. பிரகாசரூபமான ஞானம் சித்தெனப்படும். ஆத்மாவை அப்பிரகாசரூபமாக அங்கீகரிக்கும்படபக்கத்தில் அனைத்தைஉடவஸ்துக்களின் பிரகாசம் ஒருக்காலுமுண்டாகமாட்டாது. அந்தக்காரணம் இந்திரியங்கள் இலைகளால் பதார்த்தங்களின் பிரகாசமுண்டாகிறதாகச் சொல்வது சரியன்று. எனெனில் அந்தக்காரணமும் இந்திரியங்களும் பரிச்சின்னமாயிருக்கின்றன. ஆகையால் அவைகள் காரியங்களையும் வந்து பரிச்சின்னமாயிருக்கிறதேதான் அது கடம்போல் காரியமாயிருக்கிறது. அந்தக்காரணமும் இந்திரியங்களும் பரிச்சின்னமாயிருப்பதால் காரியங்களாகின்றன. தேசகாலங்களால் எதற்கு முடிவுண்டோ, அது பரிச்சின்னமென்னப்படும். எது காரியமோ அது ஜடம். அந்தக்காரணமும் இந்திரியங்களும ஜடமாயிருக்கின்றன. இவைகளால் எந்த வஸ்துவும் பிரகாசிக்கமாட்டாது. ஆகையால் எல்லாவற்றையும் பிரகாசிப்பிக்கிற ஆத்மா பிரகாசரூபமாயிருக்கிறது.

473. ஆத்மா பிரகாசரூபமன்று. அது ஜடம். அதினிடத்தில் ஞானகுணமுண்டு. இந்த ஞானத்தால் ஆத்மாவும் அனாத்மாவும் பிரகாசிக்கின்றன. இப்படிச்சொல்லுகிறவனைக்கேட்கவேண்டியதாவது:— ஆத்மாவின் ஞானகுணம் நித்தியமா அநித்தியமா? (1) நித்தியமென்றுசொல்லும் பக்ஷத்தில் ஆத்மாவின் ஸ்வரூபமே ஞானமென்று சித்திக்கும். ஆத்மா சத்து நித்தியம். ஆத்மாவுக்கு வேறானதெல்லாம் அநித்தியம். ஆகையால் ஞானத்தை ஆத்மாவுக்கு வேறாகச்சொல்லும் பக்ஷத்தில் ஞானம் அநித்தியமாகும். ஞானம் நித்தியமென்றும் முதலில்

அங்கீகரிக்கப்பட்டிருக்கிறபடியால் ஞானத்தை ஆத்மாவுக்கு வேறுகச்சொல்வது நித்தியம் அநித்தியமென்பதற்கொப்பாகும். ஆகையால் ஞானம் ஆத்மாவுக்கு வேறுகமாட்டாது. இந்த நித்திய ஞானமே ஆத்மஸ்வரூபம். ஞானம் அநித்தியமாயின் ஆத்மாவினிடத்தில் ஒருகாலத்திலிருக்கக் கூடும். ஒருகாலத்தில் இல்லாமலிருக்கக்கூடும். இதனால் ஆத்மாவுக்கு வேறுகவே ஞானமிருக்கக்கூடும். ஞானம் நித்தியமாக அங்கீகரிப்பதினால் ஒருகாலதநிலும் ஆத்மாவைவிட்டுப் பிரியமாட்டாது. மேலும் எது குணமோ அது குணியினிடத்தில் ஒருக்காலிருக்கும் ஒருக்கால் இல்லாமலிருக்கும். வஸ்திரத்தின் நீல மஞ்சள் குணங்கள் ஒருக்கால் வஸ்திரத்திலிருக்கக்கூடும், ஒருக்கால் இல்லாமலுமிருக்கக்கூடும். ஆனதால் எது குணமோ அது (ஆகமாபாயி) வந்துபோய்க்கொண்டிருக்கிறது. ஞானம நித்தியமானதால் ஆகமாபாயியன்று. ஆகையால் ஆத்மஸ்வரூபமே ஞானம்.

474. (2) மேலும் ஞானத்தை அநித்தியமென்று சொல்லும்பக்ஷத்தில் இந்திரியங்களாலாவது அந்தக்கரணத்தினாலாவது ஞானம் உற்பத்தியாகுமென்று சொல்லும்படி நேரிடும். இது சரியன்று. ஏனெனில் சுஷுப்தியில் இந்திரியங்களும் அந்தக்கரணமுமில்லை. சுகத்தின் ஞானமிருக்கிறது. இது இருக்கக்கூடாது. சுஷுப்தியில் சுக ஞானமங்கீகரிக்கப்படாவிடின் விழித்துக்கொண்டவனுக்கு நான் சுகமாய்த்தூங்கினேனென்று அனுபவத்தினுண்டாகும் சுஷுப்திசுகத்தின் ஸ்மரணையுண்டாகக்கூடாது. எந்தவஸ்து முன்னறியப்பட்டிருக்கிறதோ அதின் ஸ்மரணையுண்டாகும். அறியப்படாத வஸ்துவின் ஸ்மரணையுண்டாகமாட்டாது. சுஷுப்திசுகத்தின் ஸ்மரணை விழித்துக்கொண்டவனுக்குண்டாவதால் சுஷுப்தியில் சுகத்தின் ஞானமுண்டு. இந்தஞானத்தையுண்டுபண்ணுகிற இந்திரியாதிகள் சுஷுப்தியிலில்லை. ஆனதால் ஞானம் நித்தியம். ஞானத்தைவிட்டு ஆத்மா ஒருக்காலுமிருக்கிறதில்லை. ஆகையால் ஞானம் ஆத்மாவின் சொரூபம். எப்படி யுஷ்ணத்தை விட்டு அக்கினி ஒருக்காலுமிராதோ ஆகையால் எப்படி யுஷ்ணம் அக்கினியின் சொரூபமாயிருக்கிறதோ அப்படி ஞானமும் ஆத்மாவின் சொரூபமாயிருக்கிறது. எது ஆகமாபாயியோ அது குணமாகும். உஷ்ணமும் ஞானமும் ஆகமாபாயிகளன்று. ஆகையால் அவைகள் முறையே அக்கினியினுடையவும் ஆத்மாவினுடையவும் சொரூபங்களாம். எந்தவஸ்து ஒருகாலத்திலிருந்து ஒருகாலத்தில் இல்லாமலிருக்கிறதோ அது ஆகமாபாயியென்னப்படும்.

475. உற்பத்தியும் விநாசமும் அந்தக்கரணவிர்த்திக்கிருக்கின்றன, ஞானத்துக்கில்லை. ஆத்மஸ்வரூபமான ஞானம் விசேஷமியலகா

ரத்துக்கேதுவன்று. ஆனல்ஞானசந்தமிர்த்தி அல்லது விர்த்தியிலாரூ டமான ஞானம் வியவகாரத்துக்கேதுவாயிருக்கிறது. இது வெய்சே வாதத்தின் ரீதி. ஆபாஸவாதத்தில் ஆபாஸரூபவிர்த்தியால யிருண்டாகிறது. ஆபாஸமூலமாய அல்லது வாக்ஷாதது விர்த்திமூலமாய் ஆத்மஸ்வரூபஞானத்தினல் சர்வ வியவகாரமுஞ் சித்திக்கிறது. இவை களில்லாவிடின் ஒருவியவகாரமுஞ் சித்திக்கிறதில்லை. இவ்விதமாக எ ல்லாவற்றையும் பிரகாசிப்பிக்கிறது ஞானஸ்வரூபஆத்மாவே. அது சி த்து.

476. ஆத்மாஆனந்தரூபம் **(476-482)**:— ஆத்மா ஆனந்தரூபமா யிருக்கிறது. அப்படி இல்லாத பக்ஷத்தில் விஷய சம்பந்தத்தினல் தோ ன்றும் சொரூபானந்தந்தான்றக்கூடாது. விஷயத்தில் ஆனந்தமில்லை யென்பதை முன் 4-வது காண்டத்தில் (127) சொல்லப்பட்டிருக்கிறது. விஷயத்தில் ஆனந்தமிருந்தும பக்ஷத்தில், எந்த விஷயத்தினல் ஒருவனு கருச் சுகமுண்டாகிறதோ அதினலேயே வெறொருவனுக்குத் துக்கமு ண்டாகிறது. நெருப்பைத்தீண்டுவதினல் அக்னிகீட்டத்துக்கும் சர்ப்பத் தைப் பார்க்கிறதினல் சர்ப்பிணிக்கும் ஆண்சிங்கத்தைப் பார்க்கிறதினல் பெண் சிங்கத்துக்கும் ஆனந்தமுண்டாகிறது. ஆனல் மனுஷனுக்குத்

54

துக்கமுண்டாகிறது. இது உண்டாகக்கூடாது. சித்தாந்தத்தில் அக்னி னி கீடத்துக்கு நெருப்பைத்தீண்டுவதில் இச்சை இருக்கிறது. அப்போ து சஞ்சல புத்தியில் சொரூபானந்தந்தோன்றுகிறதில்லை. அக்னி சமபந்தத்தால் கூணாத்திரம இச்சை விலகி நிச்சலபுத்தியிற் சொரூ பானந்தம் விளங்குகிறது. புருஷனுக்கு அக்னி சம்பந்தத்தின் இச் சை யுண்டாகிறதில்லை. ஆனல் இதரபதார்த்தசம்பனினிச்சை இருக்கி றது. அவைகளின் இச்சை அக்னி சம்பந்தத்தால் நிவிர்த்தியாகிறதில் லை. ஆகையால் சஞ்சலமான அந்தக்கரணத்தில அக்னி சம்பந்தத்தா ல் ஆனந்தமுண்டாகிறதில்லை.

54: ஒரே விஷயம் சிலதுக்குச் சுகமாயும் சிலதுக்குத் துக்கமாயுமிருக் கிறபடியால் அந்த விஷயம் நியமமாக எல்லாருக்கும் இச்சையிருந்தாலும் இல் லாவிட்டாலும் சுகத்துக்கே காரணமாகிறதில்லை. ஆனல் விஷயவிசையுள்ள புருஷனுக்கு விஷயம் அடையப்படுவதால் இச்சை தடைபட்டு விர்த்தி அந்தர்மு கமாகி அதில் ஆத்மஸ்வரூபானந்தத்தின் பிரதிபிம்பத்துக்கு விஷயங்காரணமா யிருக்கிறது. ஆகையால் விஷயம் நியமமாய் ஆனந்தத்துக்குக்காரணமாயிருக்க வில்லை. மேலும் விஷயப்பிராப்தியினலாவது ஏகாந்தத்திலிருக்கிறதினலாவது இச்சையில்லாமற் போவது பிரதிபிம்பசுகத்துக்கு நியமமாய்க் காரணமாயிரு க்கிறது. ஆத்மா ஆனந்தரூபமாயில்லாதபக்ஷத்தில் அந்தர்முகவிர்த்தியில் ஆனந் தமுண்டாகக்கூடாது. ஆகையால் ஆத்மா ஆனந்தரூபம்.

477. இதிலொரு சங்கை:— அந்தக்கரணத்தின் இச்சாரூபவிர்த்தி விஷயப்பிராப்தியால் நாசமடைகின்றது. வேறு விர்த்திக்கு யாதொரு நிமித்தமுமில்லை. ஆகையால் அது உற்பத்தியாகமாட்டாது. ஸாத்தியன்றியில் சொரூபானந்தம் தோன்றமாட்டாது. ஆகையால் விஷயத்திலேயே ஆனந்தமிருக்கிறது.

478. இந்தசங்கை சரியன்று:— ஏனெனில் இச்சாரூபமான அந்தக்கரணவிர்த்தி இருக்கவில்லை. அது இருந்தாலும் அதில் ஆனந்தப்பிரகாசமுண்டாகமாட்டாது. ஏனெனில் இச்சாரூபவிர்த்தி ராஜஸம். ஆனந்தப்பிரகாசம் ஸாத்வீகவிர்த்தியில் உண்டாகிறது. ஆயினும், இச்சித்த பதார்த்த மடையப்பட்டால் அதின் சொரூபத்தை விஷயமாக்குகிற அந்தக்கரணத்தின் ஞானரூபவிர்த்தி சாத்வீகமாயிருக்கிறது. ஏனெனில் சத்துவகுணத்தினின்றும் ஞான முண்டாகிறதென்கிறநியமமுண்டு. இந்த ஸாத்வீக விர்த்தியில் ஆனந்தம் விளங்குகிறது. ஆனால் இந்த ஞானரூபவிர்த்தி பகிர்முகமாயிருக்கிறது. அதற்குப் பிருஷ்டபாகத்திலிருக்கிற அந்தக்கரணவுபஹித சேதனஸ்வரூபானந்தம் இந்த விர்த்தியால் அடையப்படுகிறதில்லை. ஆனதால விஷய உபஹித சேதனரூப ஆனந்தம் விளங்குகிறது. இந்த விஷய உபஹிதசேதனம் ஆத்மாவுக்கு அப்னிய மன்று. ஆகையால் ஆத்மானந்தமே விஷயத்தில் தோன்றுவதாகச்சொல்லப்படுகிறது. இந்த ஞானரூபவிர்த்திக்கு விஷயத்துடன் சேர்த்திராதிகளின் சம்பந்தம் காரணமாயிருக்கிறது.

479. அல்லது ஞானரூப பகிர்முக விர்த்தியைக்காட்டிலும் வேறு அந்தர்முக விர்த்தியுண்டாகிறது. அதனிடத்தில் அந்தக்கரண உபஹித சேதனரூப ஆனந்தமே விளங்குகிறது. இது உத்தமசித்தாந்தம். இந்தவிர்த்தியினுற்பத்திக்கு இச்சாதிகளின் அபாவமே காரணமாகும். இச்சையற்று ஏகாந்தத்திலிருக்கிற உதாஸீன புருஷனுக்குப்பகிர்முக ஞானரூப விர்த்தி யாதொன்றும் உண்டாகிறதில்லை. ஆனந்தம் விளங்குகிறது. ஆகையால் இச்சாதிகளின் அபாவரூப காரணத்தினால் அந்தர்முகவிர்த்தி ஆனந்தத்தைக் கிரகிக்கிறது. இச்சித்தபதார்த்தம் கிடைத்தபடியால் இச்சாதிகளில்லாமற் போகின்றன. அதினால் அந்தக்கரண உபஹித ஆனந்தங்கிரகிக்கப்படுகிறது. இந்தஸ்வரூபானந்தக் கிரகணமும் விஷய ஞானமும் அத்தியந்தம் அவ்வியவஹிதமாயிருக்கின்றன. அதினால் "நான் விஷயத்தில் ஆனந்தம் அனுபவிக்கிறேன்"[55] னென்கிற பிராந்தி மனுஷனுக்குண்டாகிறது.

---

55. நாய் ஒரு எலும்பைக் கடிக்கும்போது அதின் வாயிலிருந்த இர

480. 478-வது பிரிவில் சொல்லப்பட்டதை விட 479ல் சொன்னது உத்தமமாயிருக்கிறது. ஏனெனில் விஷயத்தின் ஞானரூபவிசித்தியினின்றும் அந்தக்கரண உபாதி ஆனந்தம் விளங்குவதாகச்சொல்வது சரியன்று. ஆனதால் விஷய வுபாதி ஆனந்தம் விளங்குகிறதாக ஆகும். அப்போது மார்க்கத்திலுள்ள மரத்தின ஞானரூப விசித்தியும் சாத்வீகமாயிருக்கிறது. அதினாலும் விருத்தி உபாதி சேதனஸ்வரூபானந்தம் விளங்கவேண்டும். அப்படியே சர்வ ஞானத்திலும் வேறு உபாதி சேதனரூப ஆனந்தம் விளங்கவேண்டும். ஆகையால் அனைத்ம வஸ்துவின் ஞானரூப பரிபூர்ண விசித்தியினின்றும் வேறு உபாதி சேதனஸ்வரூபானந்தம் கிரகிக்கப்படுகிறதில்லை. இவ்விதமாக விஷய சம்பந்தத்தால் ஆத்மஸ்வரூபானந்தம் விளங்குகிறது. ஆத்மா ஆனந்த ரூபமாகாத பக்ஷத்தில் விஷய சம்பந்தத்தால் ஆனந்தம் விளங்கமாட்டாது. ஆகையால் ஆத்மா ஆனந்த ரூபமாயிருக்கிறது.

481. ஆத்மாவுடன் சம்பந்தப்பட்ட வஸ்துக்களில் பிரிய முண்டாகிறது. அவைகளிலும் சரீரத்திலிருப்பவைகளில் அதிகப் பிரியமுண்டாகிறது. இவ்விதமாகப் புறம்பேயுள்ள பதார்த்தங்களையபேக்ஷித்

த்தம் வருகிறது. அந்த இரத்தத்தைச் சாப்பிட்டுத்தான் கடிக்கும் எலும்பினின்றும் அது வருவதாக காய் நிரூபிக்கிறது. இதுபோல் இச்சிதசுபதார்த்தம் அடையப்படுவதால் இச்சை நிவிர்த்தியாகி அந்தர்முகவிர்த்தியில் சொரூபானந்தம் பிரதிபிம்பிக்கிறது. இதையறுபவிக்கிற புருஷன் விஷயானந்தத்தையறுபவிக்கிறதாக அவிவேகத்தினால் நினைக்கிறான். இந்தப்பிராந்தியால் மேன்மேலும் விஷயத்தையறுபவிப்பதற்காக அவன் பிரயத்தனஞ்செய்கிறான். விவேகிக்கு இந்தப் பிராந்தியில்லாதபடியால் அவன் நிருபாதியான ஆனந்தப் பிராப்தியின்பொருட்டு வேதாந்த விசாரத்தில் பிரயத்தனஞ்செய்கிறான். விஷயத்தில் தோன்றும் ஆனந்தம் சொரூபானந்தமாகவிருந்தாலும் அது கிரகிக்கத்தக்கதல்ல. விஷயமன்றியில் விசாரத்தாலுண்டாகும் ஆனந்தம் கிரகிக்கத்தக்கது.

56. பாஹ்யபதார்த்தங்களைப் பார்க்கும்பொதெல்லாம் அந்தக்கரண விருத்தியின் ஞானரூபசாத்வீக விர்த்தியிருந்தும் ஆனந்தம் தோன்றுகிறதில்லை. இது அனுபவசித்தம். ஆகையால் ஆத்மாநந்தாறுபவத்துக்கு அந்தர்முகவிர்த்தி முக்கியமாய் வேண்டியது.

57. ஏனெனில் விஷயம் ஆநந்தத்துக்குக் காரணமல்லவென்பது 4வது தாங்கத்தில் 127 வது பிரிவில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் விஷய சம்பந்தத்தால் விளங்கும் ஆநந்தத்துக்கு விஷயத்தைத்தவிர வேறு காரணம் இருக்கவேண்டும். இது ஆத்மாவே.

ளை உள்ளே யுள்ளபதார்த்தங்களில் அதிகப் பிரீதி யுண்டாகிறது. பரம்பரையாக, ஆத்மாவுக்குச் சமீபத்தமான புத்தியிலுடைய மித்திரனிடத்தில் பிரீதியுண்டாகிறது. புத்திரனுடைய மித்திரனைபபேகூடித்துப் புத்திரனிடத்தில் அதிக பிரீதியுண்டாகிறது. புத்திரனிடத்திற்காட்டிலும் ஸ்தூல சூக்ஷும சரீரத்தில் அதிகப் பிரீதி யிருக்கிறது. இதிலும் ஸ்தூலத்திற்காட்டிலும் சூக்ஷுமத்தில் அதிகப்பிரீதி யிருக்கிறது. முன் முன் சொல்லப்பட்டனவைகளைவிடப் பின பின் சொல்லப்பட்டனவை ஆத்மாவுக்கு அதிக சமீபமானவை. ஆத்மாவின் ஆபாஸம் சூக்ஷுமத்திலிருக்கிறதே தவிர வேறொன்றிலுமில்லை. ஆகையால் ஆபாஸன் மூலமாக ஆத்மாவுக்குச் சூக்ஷுமசரீரத்திற் சம்பந்தமிருக்கிறதேதவிர வேறொன்றிலுமில்லை. ஸ்தூலசரீரத்துக்குஞ் சூக்ஷுமசரீரத்துக்குஞ் சம்பந்தமிருக்கிறபடியால் சூக்ஷுமம் மூலமாக ஸ்தூலத்துடன் சம்பந்தமிருக்கிறது. ஸ்தூலசரீரமூலமாகப் புத்திரனுடன் சம்பந்தமிருக்கிறது. புத்திரன்மூலமாக அவனுடைய மித்திரனுடன் சம்பந்தமுண்டாகிறது. இவ்விதமாக ஆத்மாவுக்கு ஒதுங்கியிருப்பவைகளில்விட ஒட்டியிருப்பவைகளில் அதிகப் பிரீதியுண்டாகிறது. எந்த ஆத்மசம்பந்தத்தினால் பதார்த்தங்களில் பிரீதியுண்டாகிறதோ அந்த ஆத்மாவிலேயே முக்கியமாய் பிரீதியுண்டாகிறது, பதார்த்தங்களிலுண்டாகிறதில்லை. எப்படிப்புத்திரனுடைய மித்திரனிடத்தில் புத்திரன்மூலமாகப்பிரீதியுண்டாகிறதோ ஆகையால் புத்திரனிடத்திலேயே பிரீதி இருக்கிறதோ மித்திரனிடத்தில் இல்லையோ அப்படி ஆத்மாவுக்கு அதிகசமீபத்திலுள்ளவைகளில் அதிகப்பிரீதியுண்டாகிறது. ஆத்மாவினிடத்திலேயே எல்லாவற்றிற்கும் பிரீதியிருக்கிறது. இந்தப் பிரீதி ஆனந்தத்திலும் துக்கஅபாவத்திலும் இருக்கிறது. வேறொன்றிலுமில்லை. மற்றப் பதார்த்தங்களில் உண்டாகிற பிரீதி ஆனந்தத்தின் பொருட்டும் துக்கஅபாவத்தின் பொருட்டுமிருக்கிறது. ஆகையால் ஆனந்தம் துக்கஅபாவம் இவைகளில் தவிர வேறொன்றிலும் பிரீதியுண்டாகிறதில்லை. ஆகையால் எல்லாருடைய பிரீதிக்ஷயம் விஷயமாகிற ஆத்மா ஆனந்தரூபமாயும் துக்கத்தின் அபாவரூபமாயும் இருக்கிறது. கல்பிதத்தின் அபாவம் அதிஷ்டானரூபமாயிருப்பதேயாம். சர்ப்பத்தின் அபாவம் ரஜ்ஜுரூபமாயிருக்கிறதுபோலும். இவ்விதமாகக் கல்பிதமான துக்கத்தின் அபாவமும் ஆத்மரூபமே. இவ்விதமாக ஆத்மா ஆனந்தரூபமாயிருக்கிறது.

482. நியாயமதத்தில் ஆத்மாவுக்கு ஆனந்தங்குணமாகச்சொன்னது சரியன்று. ஏனெனில் ஆனந்தகுணத்தை நித்தியமாக அங்கீகரித்தால் அது ஆகமாபாயியாகமாட்டாது. ஆத்மாவின் சொரூபமே ஆனந்தமென்று சித்திக்கும். நியாயமதத்தில் நித்தியானந்தமில்லை. அநித்திய

மென்று சொல்லும்பக்ஷத்தில் அநுகூலவிஷயங்களும் இந்திரியங்களும் சம்பந்தப்படுவதினால் ஆனந்தமுண்டாவதாக அங்கீகரிக்கும்படி நேரிடும். அப்போது சுஷுப்தியில ஆனந்தமுண்டாகக்கூடாது. ஏனெனில் சுஷுப்தியில விஷயத்துக்கும் இந்திரியத்துக்கும் சம்பந்தமில்லை. ஆகையால் ஆனந்தம் ஆத்மாவின குணமன்று. ஆனல் ஆத்மா ஆனந்தஸ்வரூபமாயிருக்கின்றது. இவ்விதமாக ஆத்மா சச்சிதானந்தஸ்வரூபமாயிருக்கிறது.

483. இந்தச்சச்சித் ஆனந்தங்கள் பரஸ்பரம் வெவ்வேறன்று. ஆனல் ஒன்றாகவேயிருக்கின்றன. ஆத்மாவின் குணமாலல் பரஸ்பரம் வெவ்வேறாகவுமிருக்கக்கூடும். ஆத்மஸ்வரூபமாகவேயிருப்பதால் பின்னப்படுகிறதில்லை. ஒரே ஆத்மா நிவர்த்தி இல்லாதநிலல சத்தென்றும், ஜடத்துக்கு விலக்ஷணமான பிரகாசரூபமாயிருப்பதால் சித்தென்றும், துக்கத்துக்கு யிலக்ஷணமான முக்கியப்பயனிலிருந்து விலக்ஷணமாயிருப்பதால் ஆனந்தமென்றும் சொல்லப்படுகிறது. உண்மையாயும் பிரகாசரூபமாயும் இருக்கிற அக்னிபோல், ஆத்மா சச்சிதானந்தரூபமாயிருக்கிறது.

484. இந்தச்சச்சிதானந்தஸ்வரூபமே சாஸ்திரத்தில் பிரம்மமென்றுசொல்லப்படுகிறது. ஆகையால் ஆத்மா பிரம்மஸ்வரூபம். வியாபகமாயிருப்பது பிரம்மமென்று சொல்லப்படும். தேசத்தாலெதற்கு முடிவில்லையோ அது வியாபகமெனப்படுகின்றது. ஆத்மா பிரம்மத்துக்கு அன்னியமாலல் அது தேசத்தினலல் அந்தத்தோடுகூடினதாயாகும். எதற்குத்தேசத்தினலல முடிவுண்டோ அதற்குக்காலத்தினலும் முடிவுண்டு என்பது நியமம். ஆகையால் அது அநந்தியமாகும். எதற்குக்காலத்தினலல் முடிவுண்டோ அது அநந்தமெனப்படும். ஆகையால் ஆத்மா பிரம்மஸ்வரூபமாயிருக்கிறது. ஆத்மாவுக்குப்பின்னமாய்ப்பிரம்மமிருக்கும்பக்ஷத்தில் அது அநந்தமாகாது. அநந்தமகடாதிகள் ஜடமாயிருக்கின்றன. ஆகையால் ஆத்மாவுக்கு வெறான பிரம்மமும் ஜடமாகும். ஆகையால் பிரம்மம் ஆத்மாவுக்கு வேறன்று. பிரம்மஸ்வரூபமே ஆத்மா.

---

58. சச்சிதானந்தத்தில் சப்தபேதம் அர்த்தபேதமுண்டாயிருந்தாலும் அது பேதமல்ல. அக்னியினிடத்தில் சுவப்பு உஷ்ணம் பிரகாசமிருக்கின்றன. இம்மூவிதமான சப்தபேதமும் அர்த்தபேதமும் தோற்றினாலும் ஹவ்சகாபாவணி சப்தத்தைப்போற்புனியான நாமசப்தமாகாமல் ஏகார்த்தமாய் விளங்குவது போல சச்சிதானந்தமும ஏகார்த்தமாகிய ஆத்மசொரூபத்தை விளக்கிவைக்கிறது.

சத்தென்னும்பெயர் வியவகாரத்தின்பொருட்டுக் கல்பிக்கப்பட்டிருக்கிறது. சச்சிதானந்தங்கள் சத்வஸ்துவின் அவயவங்களல்ல, சொரூபமேயாம்.

பாதி பிரியமென்னும் மூன்று அம்சங்கள் சச்சிதானந்தரூபமாயிருக்கின்றன. ஆகையால் அவைகள் ஆத்மஸ்வரூபம். இவ்விதமாகச் சச்சிதானந்தரூப ஆத்மாவினிடத்தில் நாம ரூபப் பிரபஞ்ச முழுமையும் கல்பிதமாயிருக்கிறது. கல்பித பதார்த்தம் யாதொன்றும் ஆத்மாவின் ஜன்மத்துக்கு ஹேதுவாகமாட்டாது. ஆகையால் ஆத்மா ஜன்மமில்லாதது.

489. எந்த வஸ்துவுக்கு ஜன்மமிருக்கிறதோ அதற்கே சத்தை விர்த்தி பரிணமம் அபக்ஷயம் விநாசமாகிற ஐந்துவித வேறுவிகாரங்களுண்டாகின்றன. ஆத்மாவுக்கு ஜனனமில்லாதபடியினால் மேற்சொல்லிய ஐந்துவித விகாரங்களும் ஆத்மாவுக்கில்லை. இவ்விதமாக ஆத்மா ஜன்மாதி ஆறுவித விகாரங்களற்றதாயிருக்கின்றது. 69

490. ஆத்மா அசங்கன்:— ஆத்மா அசங்கமாயிருக்கிறது. சங்கமென்றால் சம்பந்தம். இந்தச்சம்பந்தம் ஸஜாதீய விஜாதீய ஸ்வகதபதார்த்தங்களுடனுண்டாகிறது. கடத்துக்கு கடத்துடன் சம்பந்தம் ஸஜாதீயசம்பந்தம். கடத்துக்கு படத்துடன் சம்பந்தம் விஜாதீயசம்பந்தம். ஸ்வகதமென்றால் அவயவ சம்பந்தம். படத்துக்கு நூலுடன்சம்பந்தம் ஸ்வகதசம்பந்தம். ஆத்மா இரண்டு அல்லது அனேகமாயிருக்கும்பக்ஷத்தில் ஸஜாதீயத்துடன் ஆத்மாவுக்குச் சம்பந்தமுண்டாகும். ஆத்மா ஏகமாயிருப்பதால் ஸஜாதீயஆத்மாவுடன் ஆத்மாவுக்குச் சம்பந்தமில்லை. ஆத்மாவுக்கு விஜாதீயம் அனாத்மா. இது கானல்ஜலம்போல் ஆத்மாவில் கல்பிதமாயிருக்கிறது. கல்பிதத்துடன் ஆத்மாவுக்குச்சம்பந்தமொவ்வாது. கானல்ஜலம் பூமியுடன் சம்பந்தப்படுகிறதில்லை. அப்படிச் சம்பந்தமுண்டானால் ஊஷரபூமியின் ஜலத்திலல் பூமிநனையவேண்டும். கானல்ஜலத்தோடு ஊஷரபூமி சம்பந்தப்படாததுபோல் ஆத்மாவில் கல்பிதமான விஜாதீய அனாத்மாவுடன் ஆத்மாவுக்குச் சம்பந்தமுண்டாகமாட்டாது. ஆத்மாவுக்கு அவயவமிருக்கும்பக்ஷத்தில் அதற்கு ஸ்வகதசம்பந்தமுண்டாகக்கூடும். ஆத்மா நிரவயவமாயிருக்கிறது. அதற்கு ஸ்வகதசம்பந்தமொவ்வாது. ஆகையால் ஆத்மா அசங்கன். சிஷ்யனே இவ்விதமாகச் சச்சிதானந்தப்பிரம்மரூபமாயும் ஜன்மாதிவிகாரரஹிதமாயும் அசங்கமாயுமிருக்கிற ஆத்மாவே நீ. இது 436-வது பிரிவில்கேட்ட கேள்விக்கு உத்தரமாம்.

---

59. "கடம் உண்டாகிறது" என்பது ஜாதவிகாரம். "கடம் இருக்கிறது" என்பது கடத்தின் சத்ருபவிகாரம். குழந்தை ஜனித்தல், இருத்தல், வளருதல், பாலியாதி அவஸ்தைகளில் ஒன்றைவிட்டு ஒன்றையடைதல், சோகாதிகளால் க்ஷயத்தையடைதல், மரித்தல், இவ்வாறும் ஷட்விகாரங்களாம்.

491. சமூசாரகர்த்தாயாரென்று 437-வது பிரிவிற்கேட்ட 2-வ துகேள்விக்கு உத்தரம் (491—495):—வியாபகமாயிருக்கிற சேதனத் தை யாசிரயித்துக்கொண்டும் அதை (287—90) யே விஷயமாக்கிக்கொ ணடுமிருக்கிற மாயை அதாவது சதசத்துக்கு விலக்ஷணமான அற்புதசக் திரூபமான அஞ்ஞானகதினின்றும் ஜகத்திஷற்பத்தி நாசங்களுண்டாகி ன்றன. உற்பத்திநாசங்களைச் சொன்னதிஷல் ஜகத்தின் ஸ்திதியும் சொ ன்னதாகும். ஆகையால் எந்தஅர்த்தம் சித்திக்கிறதெனில் மாயையோ டுகூடின சேதனம் ஈஸ்வரனென்று சொல்லப்படுகிறது. இந்த ஈஸ்வரன் ஜகத்திஷற்பத்திநாசங்களுக்கு ஹேதுவாயிருக்கிறான். இப்படிச் சொல் வதினால் ஜகத்தைச் சிருஷ்டித்தது யார் அல்லது ஜகத்துக்காரணமே யுண் டாயிற்று என்னுங் கேள்விக்கு உத்தரமாயிற்று. ஜகத்துக்குக் கர்த்தா ஜீவனை ஈஸ்வரனை என்பதற்கும் உத்தரஞ்சொல்லப்பட்டது.

492 ஜகத்கர்த்தா ஈஸ்வரன். ஜகத்துக்காரணமே யுண்டாசவி ல்லை. கர்த்தாவன்றியில் ஜகத்துண்டாயிருக்கும்பக்ஷத்தில் குசவனன்றி யில் கடமுண்டாகக்கூடும். அப்படி யில்லாததினால் ஜகத்துக்கு யா ரானதுகர்த்தா இருக்கவேண்டும். இந்தக் கர்த்தா சர்வஞ்ஞன். ஏனெ னில் எவன் காரியத்துக்குக் கர்த்தாவாகிறானே அவன் காரியத்தையும் அதின் உபாதானத்தையும் அறிந்து செய்கிறான். ஆகையால் ஜகத்தி ன் கர்த்தாவும், ஜகத்தையும் அதினுபாதானத்தையும் அறிந்து, ஜகத்தை யுண்டுபண்ணுகிறான். இப்படி யறிந்து செய்கிறதினால் சர்வஞ்ஞன்.

---

60. (1) அசத்காரணவாதிகள் ஜகத்துக்குக்காரணமில்லை யென்றும் (2) சிலர் ஜகத்துக்குக்காரணம் அபாவமென்றும் (3) சிலர் சூனியமென்றும் (4) நையாயிகர்கள் பரமாணுவென்றும் (5) சிலர் காலமென்றும் (6) சார்வாகர் கள் ஸ்வபாவமென்றும். (7) மீமாம்ஸகர்கள் அதிர்ஷ்டமென்றும். (8) பிரத்தி யக்ஷவாதிகள் யதிர்ச்சையென்றும் (9) பிரத்தியக்ஷப்பிரமாணவாதிகள் பிரு திவீமுதலியபஞ்சபூதங்களென்றும் (10) சாங்கியமதஸ்தர்கள் பிரகிருதியென் றும் (11) யோகிகள் ஹிரண்யகர்ப்பாதிரூப அசங்கபுருஷனென்றும் (12) சி லர் காலாதிசம்யோகமென்றும் (13) சிலர் பரிணமபுருஷஜீவனென்றும் (14) சிலர் பிர்ம்மமென்றும் இவ்விதமாக ஜகத்துக்குக்காரணத்தைப்பலர் பலவிதமா ய்ச்சொல்லுகின்றனர். இவைகள் ஒவ்வொன்றிலும் தோஷமுண்டு. எப்படியெ னில் (1) ஜகத்துக்குக்காரணமில்லாவிட்டால் கடமும் காரணமில்லாமல் உண் டாகக்கூடும். ஆகையால் அகாரணத்தில் பிரத்தியக்ஷவிரோதரூபதோஷமிருக்கி றது. (2) அபாவம் காரணமானால் அபாவத்திலிருந்து பாவம் உண்டாகுதல் பிரத்தியக்ஷவிரோதரூபதோஷம். (3) சூனியம் காரணமானால் விரையன்றியி ல் தானியமுண்டாகக்கூடும். அதையால் இதில் அசம்பவரூபதோஷம். (4) நி ரவயவமாயும் ஜடமாயுமிருக்கிற பரமாணுக்களின் சம்யோகம் அசம்பாவிதம் (5) காலம் எப்போதுமிருந்தும் சகலகாரியங்களும் எப்போதுமுண்டாகாதப

அவன் சர்வவல்லமையுள்ளவன். ஏனெனில் அல்பசக்தியுள்ள ஜீவனால் இந்த ஜகத்து உண்டாகக் கூடுமென்று மனதினாலும் நினைக்கத்தகாத ஆகையால் அற்புதஜகத்தின் கர்த்தா அற்புதசக்திமானாயிருக்கவேண்டும். இவ்விதமாகஜகத்தின் கர்த்தா சர்வவல்லமையுள்ளவன்.

மேலும் அவன் சுதந்திரன். ஏனெனில் ஸ்வல்பசக்தியுள்ளவன் பராதீனனுவான். ஸர்வசக்தியுள்ளவவன் பராதீனனுகான். ஆகையால் அவன் சுதந்திரன். இவ்விமாக ஜகத்கர்த்தா சாவஞ்ஞனும் சர்வசக்தனும் சுதந்திரனுமிருக்கிறான். இவன் ஈஸ்வரனென்னப்படுகிறான்.

493. அல்பஞ்ஞனும் அல்பசக்தியுள்ளவனும் பராதீனனும் இருக்கிறவன் ஜீவனென்னப்படுகிறான். அல்பஞானாதிகள் ஜீவனிடத்திலும் பாரமார்த்திகத்தில் இல்லாவிட்டாலும் அவித்தையாலுண்டாகும் மித்தையான அல்பஞானாதிகள் ஜீவனிடத்தில் தோன்றுகின்றன. ஆகையால் அவைகள் ஜீவனிடத்திலிருப்பதாகச் சொல்லப்படுகின்றன. அவித்தையாலுண்டாகும் அல்பஞானாதிகளின் பிராந்தியே ஜீவத்தன்மையாம். இந்தப்பிராந்தி ஈஸ்வரனிடத்தில் இல்லை. ஆனால் ஈஸ்வரனிடத்தில் மாயையாலுண்டாகும் சர்வஞ்ஞாதிகளிருக்கின்றன. இதுபின்னால் விஸ்தாரமாய் பிரதிபாதிக்கப்படும். இவ்விதமாக ஜகத்தின் கர்தா ஜீவனன்று ஈஸ்வரனே.

494. இந்த ஈஸ்வரன் ஓரிடத்திலில்லாமல் எங்கும் வியாபகமாயிருக்கிறான். ஓரிடத்திலிருக்கிறதாகச்சொல்லும்பக்ஷத்தில் எந்தவஸ்துவுக்குத் தேசத்தால் அந்தமுண்டோ அதற்குக் காலத்தாலும் அந்தமுண்

டியால் அகாரணரூபதோஷம் சம்பவிக்கிறது. (6) மலடியிடத்தில் வீரியம் சேர்ந்தும் கர்ப்பத்தை உண்டாக்கும் அதின் ஸ்வபாவம் காணப்படாததினால் ஸ்வபாவம் காரணமன்று. (7) அதிர்ஷ்டம் காரணமானால் இன்னகாரணத்தால் இன்னகாரியம்தான் ஆகும் என்கிற நிச்சயமில்லாமல்போம். (8) எதிர்ச்சை காரணமானால், பிருதிவியாதிபூதங்களன்றில் ஜகத்து உற்பத்தியாவது அசம்பாவிதம். (9) ஜடபிருதிவியாதி பூதங்களே காரணத்தை அபேக்ஷிப்பதால், ஸ்வயம்காரணங்களாகா. (10) ஜடமான பிரகிருதி ஸ்வயம் பிரவிர்த்திக்கமாட்டாது. (11) புருஷன் அசங்கனானால் எப்படிகாரணமாவான். (12) காலாதிகளே ஜடமானதால் அவைகள் காரணமாகா. (13) ஜீவன் காரணமாகான் என்பது மூலத்திலேயேசொல்லப்பட்டிருக்கிறது. (14) நிர்விகாரமான பிர்ம்மம் காரணமாகமாட்டாது. இவ்விதமாக மேல்கண்ட 14 மதங்களிலும் தோஷமிருக்கிறது. மாயாவிசிஷ்ட பிர்ம்மம் காரணமென்று சொல்லுவதில் யாதொரு தோஷமில்லை.

டு. ஆகையால் அது அநித்தியமாகும். எது அநித்தியமோ அது கர்த்தாவினிடத்தினின்றும் ஜனிக்கவேண்டும். ஆகையால் ஈஸ்வரனுக்குங் கர்த்தாவை யங்கீகரிக்கும்படி நேரிடும், ஆனால் ஈஸ்வரனுக்குக்கர்த்தாவுண்டென்ச் சொல்லத்தகாது. ஏனெனில் தான் தனக்கே கர்த்தாவாமாட்டான். அப்படியானால் ஆத்மாசிரயதோஷமுண்டாகும். தானே கிரியைக்குக்கர்த்தாவாயும் தானே கிரியைக்குக்கர்மமாயுமிருப்பது ஆத்மாசிரயம். குயவன் கிரியைக்குக்கர்த்தா. கடம் கர்மம. இதுபோல் கிரியைக்குக்கர்த்தாவும் கர்மமும் வெவ்வேறாயிருக்கின்றனவேதவிர ஒன்றாகா. ஆகையால் ஈசுவரன் தனக்கே கர்த்தாவானால் ஆத்மாசிரயதோஷமிருக்கிறது. காரியத்துக்குப்பெயர் கர்மம். காரியத்தின் விரோதிக்குப்பெயர் தோஷம். ஆத்மாசிரயம் காரியத்துக்கு விரோதமானசையால் தோஷமென்னப்படுகிறது. ஆகையால் ஈஸ்வரனுக்குக்கர்த்தாவாக வேறொன்றை யங்கீகரிக்கும்படிநேரிடும். இந்த வேறுகர்த்தாவும் முதற்கர்த்தாவைப்போல கர்த்தாவிலுணடாகவேண்டும். அந்தக்கர்த்தாவையும் முதற்கர்த்தாவைபோல் இரண்டாங்கர்த்தாவுச்சுப்பின்னமாகச்சொல்லவேண்டும். பிரதமகர்த்தாவான ஈஸ்வரன் துவிதீயகர்த்தாவுக்குக்கர்த்தாவாக அங்கீகரிக்கப்பட்டால் அன்னியோன்னியாசிரயதோஷமுண்டாகும். ஆகையால் வேறு மூன்றுவது கர்த்தாவை யங்கீகரிக்கும்படி நேரிடும். இம்மூன்றுவதற்கு இரண்டாவது கர்த்தாவானல் அன்னியோன்னியாசிரயதோஷமுண்டாகும். முதலாவதானல் சக்கிரிகாதோஷமுண்டாகும். சக்கரத்தின் சுற்றல்போல் முதற்கர்த்தா இரண்டாவதாலும் இரண்டாங்கர்த்தா மூன்றுவதாலும் மூன்றுங்கர்த்தாமுதலாவதாலும் மறுபடியும் முதற்கர்த்தா இரண்டாவதாலுமுண்டாய்க்கொண்டேவரும். இவ்விதமாகக்காரியகாரணபாவங்கள் சுற்றிக்கொண்டேயிருக்கும். சக்கிரிகாஸ்தானத்தில் யாதொன்றுஞ்சித்திக்கிறதில்லை. எல்லாம் பரஸ்பராபேக்ஷையுள்ளவைகளாயிருக்கின்றன. அன்னியோன்னியாசிரயத்தில் இரண்டுக்கும்பரஸ்பராபேக்ஷையுண்டு. ஒன்று சித்திக்காமல் மற்றொன்று சித்திக்கிறதில்லை. ஆகையால் எப்படிக்குயவன் தனக்குக்கர்த்தாவாகிறதில்லையோ ஆனல் வேறொருவனுக்குப் பிதாவாயிருக்கிறானே அப்படி முதல் கர்த்தாவுக்கு வேறுகர்த்தா இருக்கவேண்டும். குயவனுடைய பிதா தன் புத்திரனிடத்தினின்றும் ஜனிக்கிறதில்லை. வேறு பிதாவினிடத்தினின்றும் ஜனிக்கிறான். இதுபோல் இரண்டாவதுகர்த்தா முதற்கர்த்தாவினின்றும் உண்டாகாமல் வேறொருகர்த்தாவினின்றுமுண்டாவதாகச்சொல்லவேண்டும். குயவனுடைய பாட்டன் பிதாவினிடத்தினின்றும் ஜனிக்காமல் பூட்டனிடத்தினின்றும் ஜனிக்கிறான். இதுபோல் மூன்றுவது கர்த்தாவும் முதலாவது இரண்டாவது கர்த்தாக்களினின்றுமுண்டாகமாட்டான். ஆகையால் நான்காவதான வேறொருகர்த்

தானை யங்கீகரிக்கவேண்டும். இந்த நான்காவதுக்கும் ஐந்தாவதான ஒரு கர்த்தா வேண்டும். இதினால் அனவஸ்தாதோஷமுண்டாகும். அனவஸ்தையென்றால் தாரை யதாவது தொடர்ச்சி. கர்த்தாவின் தாரையை அங்கீகரித்தால் இன்னகர்த்தா ஜகத்தையுண்டுபண்ணினனென்கிற நிச்சயமில்லாமற்போம். எவனேயாவது கர்த்தாவாய் நினைப்பதற்கு யாதொருயுக்தியுமில்லை. இந்தயுக்தி அபாவத்துக்கு வினகமனவிரகமென்று பெயர். மேலும் சிலர் தாரைக்கு முடிவுண்டெனச்சொல்லும்பக்ஷத்தில் எந்தக்கர்த்தாவில் தாரைக்கு முடிவுண்டாகிறதோ அந்தக்கர்த்தாவையே ஜகத்கர்த்தாவாக நினைப்பது யுக்தமாகும். மற்றவைகளெல்லாம் விரோகும். இதற்குப்பெயர் பிராக்லோபம் அல்லது பூர்வாபாவம். இவ்விதமாக ஈஸ்வரனுக்குத்தேசத்தால் முடிவுண்டெனச்சொல்லும்பக்ஷத்தில் உற்பத்தியை அங்கீகரிக்கவேண்டும். உற்பத்தியை அங்கீகரித்தால் ஆத்மாசிரயாதி ஆறுதோஷங்களுண்டாகின்றன. ஆகையால் ஈசுவரனுக்குத் தேசத்தால் அந்தம் இல்லை. ஈஸ்வரன் வியாபகன் நித்தியன்.

495. இந்தவியாபக ஈஸ்வரனுக்கும் ஜீவனுக்கும் சொரூபத்தில் பேதமில்லை. உபாதியால்தான் பேதமுண்டு. எனெனில் அவச்சேதவாதத்தில் மாயாவிசிஷ்டசேதனம் ஈஸ்வரனென்றும் அவித்தியாவிசிஷ்டசேதனம் ஜீவனென்றுஞ்சொல்லப்படும். ஆபாஸவாதத்தில் மாயை ஆபாஸன் இவைகளுடன் கூடின சேதனம் ஈஸ்வரனென்றும் அவித்தை ஆபாஸன் இவைகளுடன் கூடின சேதனம் ஜீவனென்றுஞ்சொல்லப்படும். ஆபாஸவாதத்தில் ஆபாஸசகித அவித்தைக்கும் ஆபாஸசகிதமாயைக்கும் பேதமுண்டு. சேதனங்களுக்குப்பேதமில்லை. அப்படியே அவச்சேதவாதத்திலும் அவித்தைக்கும் மாயைக்கும் பேதமுண்டு. சொரூபத்தில் சேதனத்துக்குப்பேதமில்லை. அஞ்ஞானத்திலுள்ள சேதனப்பிரதிபிம்பம் ஜீவனும். பிம்பம் ஈஸ்வரன். இந்தப்பக்ஷத்திலும் சேதனத்துக்குச் சொரூபத்தில் பேதமில்லை. ஒரேசேதனத்தில் ஜீவேஸ்வரத்தன்மைகள் கல்பிக்கப்பட்டிருக்கின்றன. இது இனி (581—587) ச்சொல்லப்படும். இவ்விதமாக ஜகத்தின் கர்த்தா சர்வஞ்ஞனையும் சர்வசக்தனையும் சுதந்திரனையுமிருக்கிற ஈஸ்வரனே. இந்த ஈஸ்வரன் வியாபகன். ஈஸ்வரனுக்கும் ஜீவனுக்கும் விசேஷணத்தில்மட்டும் பேதமேதவிர ஸ்வரூபத்தில் பேதமில்லை. இது இரண்டாவதுகேள்விக்கு உத்தரமாம்.

438-ல் கேட்டகேள்விக்கு உத்தரம் (496—539)

496. மோக்ஷத்துக்குச்சாதனம் ஞானமா? அல்லது கர்மமா? அல்லது உபாஸனையா? அல்லது இரண்டா? இக்கேள்விக்கு உத்தரஞ்சொல்லுகிறேன். மோக்ஷத்துக்குஞானம் கர்மமுமன்று, நியாளம் அதாவது உபாஸ

னையுமன்று, ஆனல் ஞானந்தான் காரணமாயிருக்கிறது. ஏனெனில் ஆத்மாவினிடத்தில் பந்தம சத்தியமாயிருந்தால அதின் நிவிர்த்திரூப மோக்ஷம் ஞானத்தினலுண்டாகாமல் கர்மம் அல்லது உபாஸனையாலுண்டாகும். இந்தப்பந்தம் ஆத்மாவினிடத்தில் சத்தியமன்று. ஆனல் ரஜ்ஜுசர்ப்பம்போல் இது மித்தையாயிருக்கிறது. இந்தமித்தை அதிஷ்டானஞானத்தினல்தான் நிவிர்த்தியாகக்கூடும், கர்மம் அல்லது உபாஸனையால் நிவிர்த்தியாகமாட்டாது. ரஜ்ஜுவில் சர்ப்பம் எந்தக்கிரியையாலும் நிவிர்த்தியாகாமல் கேவலம் ரஜ்ஜுஞானத்தினல் நிவிர்த்தியாகிறதுபோல் ஆத்மாவின் அஞ்ஞானத்தினல் தோற்றும் பந்தமும் அஞ்ஞானமும் ஆத்மாவின் ஞானத்தினல்தான் நிவிர்த்தியாகும்.

497. கர்மமும் உபாஸனையும் சாதனங்கள் அல்ல (497—506):— கர்மத்தின் பலன் மோக்ஷமாகுல் மோக்ஷம் அனித்தியமாகும். ஏனெனில் கிருஷியாதிகர்மங்களின் பலன் அன்னதிகள். இவை அனித்தியம். யஞ்ஞாதிகளின் பலனுகிற சுவர்க்காதிசுகமும் அனித்தியம். இவ்வாறு நியமமிருக்க மோக்ஷமுங் கர்மபலனுக அங்கீகரிக்கப்பட்டால் அது அனித்தியமாகும். ஆகையால் கர்மத்தின் பலன் மோக்ஷமன்று. உபாஸனையின் பலனுக அங்கீகரிக்கும்பக்ஷத்திலும் மோக்ஷம் அனித்தியமாகும். ஏனெனில் உபாஸனையும் மானஸீககர்மந்தான். கர்மபலன் அனித்தியமாயிருப்பதால் உபாஸனைரூப கர்மபலனும் மோக்ஷமன்று.

498. கர்மத்தைச்செய்கிறவனுக்குக்கர்மத்தினல் ஐந்துவித உபயோகங்கள் உண்டாகின்றன. [1] பதார்த்தத்தினுற்பத்தி. [2] பதார்த்தநாசம். [3] பதார்த்தப்பிராப்தி. [4] பதார்த்தத்தின் விகாரம். [5] சமுஸ்காரம் என்பனவாம். அன்னியரூபத்தையடைதலே விகாரமென்னப்படும். மலத்தின் நிவிர்த்தி என்றும் குணத்தின் உற்பத்தி என்றும் சமுஸ்காரம் இருவகைத்து. இவ்வைந்துவித உபயோகங்களும் கர்மத்தினின்றும் உண்டாகின்றன. இவைகளில் யாதொன்றும் முமுக்ஷுவுக்குத்தேவையில்லை. ஆனதால் முமுக்ஷு ஞானத்துக்குச் சாதனமான சிரவணுதிகளில் பிரவர்த்திக்கிறன்; கர்மத்தில் பிரவர்த்திக்கிறதில்லை.

499. குலாலனுடைய கர்மத்தினல் குலாலனுக்குக்கடமுண்டாகிற உபயோகம் இருக்கிறதுபோல் முமுக்ஷுவுக்குக்கர்மத்தினல் மோக்ஷ உற்பத்திரூப உப்யோகமில்லை. ஏனெனில் அனர்த்தநிவிர்த்தி பரமான

க்தப்பிராப்திரூபமே மோக்ஷம். இந்த அனர்த்தத்தின் நிவிர்த்தி ஆத்மாவினிடத்தில் நித்தியசித்தமாயிருக்கிறது. ரஜ்ஜுவினிடத்தில் சர்ப்பநிவிர்த்தி நித்தியசித்தமாயிருப்பதுபோலும்.[61] ஆத்மா பரமானந்தஸ்வரூபியாயிருப்பதால் பரமானந்தப்பிராப்தியும் நித்தியசித்தமே.[62] இவ்விதமாகவல்லாவுசித்தமானமோக்ஷம் கர்மத்தாலுண்டாவதாகச்சொல்வதுசரியன்று எந்தவஸ்துமுன்னிருக்கவில்லையோ அது கர்மத்தாலுண்டாகக்கூடும். இருக்கிறவஸ்துவுக்கு உற்பத்தியுண்டாகமாட்டாது.

500. வேதாந்தசிரவணமும் மோக்ஷத்தினுற்பத்தியின் பொருட்டுச்சொல்லப்பட்டதல்ல. "ஆத்மா நித்தியமுக்தன். செய்யவேண்டியது கொஞ்சங்கூட ஒன்றுங்கிடையாது" இதையறிவதற்காகச்சிரவணமேற்பட்டிருக்கிறது. இதையறிவதினால், செய்யவேண்டும் என்கிறபிராந்தி நிவர்த்தியாய்விடும். வேதாந்தசிரவணத்துக்குப்பிறகும் ஒருகாரியஞ்செய்யவேண்டுமென்று எவனுக்குத்தோற்றுகிறதோ அவன் தத்துவமறிந்தவனல்ல. இக்காரணத்தினல் நித்தியநிவிர்த்தியான அனர்த்தத்தின் நிவிர்த்தியும் நித்தியப்பிராப்தமான ஆனந்தத்தின் பிராப்தியும் வேதாந்தச்சிரவணத்தின் பலன்களென்று தேவகுருவாகிய சுரேஸ்வராசாரியரால் நைஷ்கர்ம்யசித்தியிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் மோக்ஷத்தினுற்பத்திரூப கர்மத்தினுபயோகம் முமுக்ஷுவுக்கில்லை.

501. எப்படித்தடியாலடித்தல்ரூபமான செய்கைக்குக் கடநாசரூப உபயோகமிருக்கிறதோ அப்படி முமுக்ஷுவுக்குக்கர்மத்தினல் எந்தப்பதார்த்தத்தின் நாசரூபஉபயோகமும் இருக்கிறதாகச்சொல்லக்கூடாது. ஏனெனில் அன்னியபதார்த்தங்களின் நாசம் முமுக்ஷுவால் இச்சிக்கப்படமாட்டாது. பந்தநாசமே கர்மத்தினுபயோகமாகச்சொல்லவேண்டும். இந்தப்பந்தம் ஆத்மாவினிடத்தில் இல்லை. ஆனல் மித்தையாகத்தோற்றுகிறது. இந்தமித்தியாப்பிரதிதி கர்மத்தினல் நாசமாகமாட்டாது. ஆத்மாவின் யதார்த்தஞானத்தினல் மித்தியாப்பிரதிதி நாசமாகும். ஆகையால் முமுக்ஷுவுக்குப்பதார்த்தத்தின் நாசரூபஉபயோகமும் கர்மத்தினல் உண்டாகமாட்டாது.

---

61. ரஜ்ஜுவினிடத்தில் சர்ப்பம் எப்போதுமில்லையென்பதுபோல் ஆத்மாவினிடத்தில் அஞ்ஞானரூப அனர்த்தம் எப்போதுமில்லையென்பது நித்தியசித்தமாயிருக்கிறது.

62. வீட்டிலுள்ள புதையல் நித்தியசித்தமாயிருப்பதுபோல் ஆத்மாவின் நிஜரூபமான பரமானந்தமும் நித்தியசித்தமாயிருக்கிறது.

502. கமனரூபகர்மத்தினால் ஹிராமம் அடைமுப்படுவதுபோல் மோக்ஷப்பிராப்திரூப உபயோகம் கர்மத்தினால் உண்டாகிறதில்லை. ஏனெனில் நித்தியமுக்தனான ஆத்மாவுக்கு மோக்ஷப்பிராப்தி சொல்வதுசரியன்று. பந்தமிருக்கிறவனுக்கு மோக்ஷப்பிராப்தி சொல்லலாகும். ஆத்மாவினிடத்தில் பந்தமில்லாததினால் மோக்ஷபிராப்திரூபமான கர்மத்தினுபயோகம் முமுக்ஷுவுக்கில்லை.

503. சமையல்ரூபகர்மத்தினால் அன்னத்தின் விகாரரூப[63] உபயோகம் சமயல்காரனுக்கு உண்டாகிறதுபோல் முமுக்ஷுவுக்குக் கர்மத்தினால் விகாரரூபஉபயோகமுமில்லை. ஏனெனில் ஆத்மாவினிடத்தில்பங்கத்தை யங்கீகரித்து மோக்ஷதசையில் சதுர்ப்புஜாதிவிலக்ஷணரூபங்கள் அடையப்படுவதாக அங்கீகரிக்கும் பக்ஷத்தில் அன்னியரூபத்தின் பிராப்திரூபவிகாரம் முமுக்ஷுவுக்குக் கர்மத்தினுபயோகமாகும். ஆத்மாவினிடத்திலோ அன்னியரூபப்பிராப்தி அங்கீகரிக்கப்படவில்லை. முமுட்சுவிஷயத்தில் விகாரஞ் சொல்லவேண்டுமானால் ஆத்மவிகாரந்தான் சொல்லவேண்டும். ஆனால் ஆத்மாவுக்கு அன்னியரூபமடைதலாகிய விகாரம் யாதொன்றுமில்லை. ஆகையால் முமுட்சுவுக்குக் கர்மத்தினுண்டாகும் விகாரரூபஉபயோகம் யாதொன்றுமில்லை.

504. எப்படி வஸ்திரத்தைத் தோய்த்தல்ரூபமான கர்மத்துக்கு அழுக்குப்போதல்ரூபமான சமஸ்காரமுண்டோ அப்படி மலநிவிர்த்தி ரூப சமஸ்காரமும் முமுக்ஷுவுக்குக்கர்மத்தினால் உபயோகப்படுகிறதில்லை. ஏனெனில் வேறொன்றின் மலநிவிர்த்தியை முமுக்ஷு இச்சிக்கமாட்டான். ஆத்மாவின் மலநிவிர்த்தியேசொல்லவேண்டும். இந்த ஆத்மா நித்தியசுத்தன், ஆத்மாவினிடத்தில்மலமில்லை. ஆகையால் மலநிவிர்த்திரூபசமஸ்காரஞ் சித்திக்கவில்லை. அந்தக்காரணத்தின் பாபரூபமலம் நிவிர்த்தியாவதே கர்மத்தினுபயோகமென்று சொல்லும் பக்ஷத்தில் இது சத்தியமே. ஆனால் சுத்த அந்தக்காரணத்துடன்கூடிய முமுட்சுவின் அந்தக்காரணத்தில் பாபமில்லை. பாபரூபமலநிவிர்த்தியாகிற சமஸ்காரமும் முமுட்சுவுக்குக் கர்மத்தினால்உண்டாகிறதில்லை. அஞ்ஞானத்தை மலமாகச் சொல்லும்பக்ஷத்தில் அஞ்ஞானம் ஆத்மாவிலிருந்தாலும் அது கர்மத்தினால் நிவிர்த்தியாகமாட்டாது. ஏனெனில் அஞ்ஞானத்துக்கு விரோதமானது ஞானமேதவிரக கர்மமன்று. ஆகையால் முமுட்சுவுக்கு மலநிவர்த்திரூபசமஸ்காரமுண்டாகமாட்டாது.

---

63. முன்ரூபத்தைவிட்டு வேறு ரூபத்தை அடைவது விகாரமெனப்படும்.

505. ஏப்படி வஸ்திரத்தைக் காவிஜலத்தில் நனைக்கிறதினல் அ தற்குச் சிவப்புவர்ணமுண்டாகிறதோ அப்படி முமுக்ஷுவுக்கு எந்தக்கர் மத்தினலும் குணத்தையுண்டுபண்ணுகிறதாமான உபயோகம் உண்டா கிறதில்லை. ஏனெனில் வேறெந்தவிஷயத்திலும் குணஉற்பத்தி சொல் லக்கூடாது, ஆத்ம விஷயத்தில்தான் சொல்லும்படி நேரிடும். இந்த ஆ த்மா நிர்க்குணம், அதனிடத்தில் குணேற்பத்தியேற்படமாட்டாது. ஆ கையால் முமுட்சுவுக்கு குணஉற்பத்திரூபஉபயோகங் கர்மத்தினலுண் டாகமாட்டாது. உபயோகமென்றால் பலன்.

இவ்வைந்து பலன்களைத்தவிர வேறுபலன்கள் கர்மத்துக்கில்லை. இவ்விதகர்ம்பலன்களும் முமுட்சுவுக்கு உபயோகமில்லை. ஆகையால் முமுட்சுவானவன் கர்மத்தைவிட்டு ஞானத்துக்குச்சாதனமான சிரவண த்திலேயே பிரவர்த்திக்கிறன்.

506. உபாஸனையும் மானஸீககர்மமானதினல் அதைக்கண்டிப் பதில் வேறுயுக்தி சொல்லப்படவில்லை. இவ்விதமாகக்கேவலகர்மமா வது உபாஸனையாவது மோக்ஷத்துக்கு ஹேதுவன்று. கேவலஞானமே மோக்ஷத்துக்கு ஹேதுவாம்.

507. ஆக்ஷேபம் (507—510):— சிலர்[64] கர்மஉபாஸனசகித ஞானத்தை மோக்ஷத்துக்கு ஹேதுவாக அங்கீகரிக்கிறார்கள். அவ்விஷ யத்தில் யுக்திநிர்ஷ்டாந்தங்களுஞ்சொல்லுகிறார்கள். ஆகாசத்தில் ஓரி ரக்கையால் பக்ஷிகளால் பறக்கமுடியாது. ஆனல் இரண்டு இரக்கைக ளால்தான் முடியும். இதுபோல் மோக்ஷலோகத்துக்கும் ஞானரூப ஓ ருபக்ஷத்தால் போகமுடியாது. உபாஸனசகிதகர்மம் ஒருபக்ஷம். ஞா னம் இரண்டாவது பக்ஷம். உபாஸனையும் மானஸீககர்மமே. ஆகை

---

64. பிர்ம்ம சூத்திரத்தின் மீகையின் கர்த்தாவாகிய **பர்தருஹரி** என் னும் பிராசினவிர்த்திகாரர். இவர் சமுச்சயத்தை ஆதரிக்கிறார். சமுச்சயமென் றல் சேர்க்கை. சமசமுச்சயம் விரமசமுச்சயமென அது இருவகையாம். ஞான த்துக்குச் சாதனமான சிரவணாதிகளையும் கர்மத்துக்குச் சாதனமான அக்னி ஹோத்திராதிகளையும் ஒரேகாலத்தில் அனுஷ்டித்தல் சமசமுச்சயமாம். அந்த க்காரண சுத்தியின்பொருட்டுப் பிர்ம்மஞானத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்கி ற இச்சையுண்டாகிற பரியந்தம் கர்மத்தைச் செய்தல், பிறகு கர்மவிதிகளையா தரிக்காமல் ஞானத்துக்குச்சாதனமான சிரவணாதிகள் மூலமாக ஞானத்தைச் சம்பாதித்தல் விரமசமுச்சயமாம். இருவகை சமுச்சயங்களில் சமசமுச்சயந்த ள்ளப்பட்டுக் விரமசமுச்சயம் விரகிக்கத்தக்கதென வேதத்தினீ தாற்பரியமாம். சமசமுச்சயங்கண்டிக்கப்படுகிறதேதவிர விரமசமுச்சயங்கண்டிக்கப்பட்டில்லை.

யால் கர்மமும் உபாஸனையும் ஒருபக்ஷமாகச்சொல்லப்பட்டன. இவ்விரண்டுபக்ஷங்களால்தான் மோக்ஷலோகத்துக்குப்போகமுடியும்.

508. வேறொருதிர்ஷ்டாந்தம்:— சேதுதரிசனத்தால் பாபநிவாரணமாகிறது. இச்சேதுதரிசனம் பிரத்தியக்ஷமான ஞானம். சித்தாபக்ஷியுடன் போகவேண்டிய நியமத்தை இது அபேக்ஷிக்கிறது. சிரத்தாதிகளில்லாதவனுக்குச்சேதுதரிசனத்தினல் பலனுண்டாகிறதில்லை. பல உற்பத்தி விஷயத்தில் சேதுவின் பிரத்தியக்ஷஞானம் சிரத்தாதியமங்களை யபேக்ஷிக்கிறதுபோல் பிரம்மஞானமும் மோக்ஷரூபபலஉற்பத்தியில் கர்மஉபாஸனைகளை யபேக்ஷிக்கிறது.

509. கேவலஞானத்தினல் மோக்ஷமுண்டாகுமென்று அங்கீகரிக்கிறவனும் கர்மஉபாஸனைகளை ஞானத்துக்கு ஹேதுவாகநினைக்கிறான். சுத்தமாயும் நிச்சலமாயுமுள்ள அந்தக்கரணத்தில் ஞானமுண்டாகிறது. இந்த அந்தக்கரணம் சுபகர்மத்தினல் சுத்தமாகிறது. உபாஸனையால் நிச்சலமாகிறது. இவ்விதமாக அந்தக்கரணத்தின் சுத்தி நிச்சலதைதன்மை இவைகள்மூலமாகக் கர்மமும் உபாஸனையும் ஞானத்துக்கு ஹேதுவாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

எப்படி ஞானத்துக்கு ஹேதுவாகக்கர்ம உபாஸனைகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனவோ அப்படி ஞானத்தின் பலனுகிற மோக்ஷத்துக்கும் ஹேதுவாக அங்கீகரிக்கப்படுவது யுக்தம். ஜலம் விதைவிருக்ஷவிர்த்திக்கும் விருக்ஷத்தின் பலோற்பத்திக்கும் ஹேதுவாகிறது. காட்டிலுள்ள மரங்களின் பலன்கள் ஜலம் விடாமலே யுண்டாகின்றனவென்சொல்லும்பக்ஷத்தில், அப்போதும் விருக்ஷத்தின் மூலத்தில் பூமியிலுள்ள ஜலத்தின் சம்பந்தமிருக்கிறது. அதினல் பலனுண்டாகிறது. ஜலசம்பந்தமேயில்லாவிடின் விருக்ஷம் படிப்போம், பலனுமுண்டாகமாட்டாது. இதுபோல் கர்மஉபாஸனைகள் ஞானோற்பத்திக்கும் ஞானத்தின்பலனுகிற மோக்ஷத்துக்கும் ஹேதுவாயிருக்கின்றன. இவ்விதமாகக்கர்மம் உபாஸனை ஞானம் இம்மூன்றும் மோக்ஷத்துக்கு ஹேதுக்களாயிருக்கின்றன. ஆகையால் ஞானியுங் கர்மஞ்செய்யவேண்டியது.

510. அல்லது, கர்மஉபாஸனைகள் ஞானத்தைக்காப்பாற்றுவதற்கு ஹேதுக்களாயிருக்கின்றன. ஏனெனில் கர்மோபாஸனைகளை ஞானியானவன் விட்டுவிடும்பக்ஷத்தில் உண்டானஞானமும் ஜலமன்றியின

---

65. முதல்தரங்கம் 27-வது குறிப்பைப்பார்க்க.

ருக்கிற மரம்போல் நஷ்டமாய்விடும். ஏனெனில் சுத்தமான அந்தக்கரணத்தில் ஞானமுண்டாகிறது. சுபகர்மத்தைச்செய்யாவிடின் ஞானிக்குப்பாபமுண்டாகும். உபாஸனையைவிடுவதால் அந்தக்கரணம் மறுபடியும் சஞ்சலப்படும். இப்படி மலினமாயும் சஞ்சலமாயுமிருக்கிற அந்தக்கரணத்தில் ஞானம் தங்கமாட்டாது. சுஷ்கபூமியிலுண்டாகும் விருக்ஷம்நிலைத்திருக்காததுபோலும்.

வேறொருநிர்ஷ்டாந்தம்:— சமுஸ்காரத்தால் சுத்தம் பண்ணப்பட்ட இடத்தில் வேதாத்தியயனம் செய்யும் பிரமசாரி வசிக்கிறான். எக்காரணத்தினாலாவது அவ்விடம் அசுத்தமாம்படிக்கு அவன் அவ்விடத்தை விட்டுவிடுகிறான். இதுபோல் கர்மத்தை விடுவதினால் மலினமாயும் உபாஸனையை விடுவதினால் சஞ்சலமாயுமிருக்கிற அந்தக்கரணத்தில் ஞானம் தங்கமாட்டாது. ஆகையால் கர்மமும் உபாஸனையும் ஞானத்தைக்காப்பாற்றுவதற்கு ஹேதுக்களாகின்றன. இவ்விதமாகக்கர்மம் உபாஸனை ஞானம் இம்மூன்றையும் மோக்ஷத்துக்கு ஹேதுவாக அங்கீகரித்தாலும், அல்லது கேவலம் ஞானத்தை மோக்ஷத்துக்கு ஹேதுவாயும் கர்மோபாஸனைகளை ஞானரக்ஷணைக்கு ஹேதுவாயும் அங்கீகரித்தாலும், இவ்விருபக்ஷங்களிலும் ஞானி கர்மோபாஸனைகளை யனுஷ்டிக்கவேண்டியது. இது சமுச்சயவாதமென்று சொல்லப்படும்.

511. சமாதானம்(**511—534**):—இந்த சமுச்சயவாதம் சரியன்று. ஏனெனில் தேகத்துக்கு வேறாக ஆத்மாவை யறியாதவனுக்குக்கர்மம் ஏற்படுகிறதில்லை. ஏனெனில் ஜன்மாந்திரத்தின் போகத்தின்பொருட்டுக் கர்மத்தைச்செய்கிறான் தேகம் அக்கினியில் தஹிக்கப்பட்டுப்போகிறது. அதினால் ஜன்மாந்தரபோகமுண்டாகமாட்டாது. ஆனதால் சரீரத்துக்கு வேறான ஆத்ம ஞானமே கர்மத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. அப்படிச் சரீரத்துக்கு வேறாயிருக்கிற ஆத்மாவே கர்த்தாபோக்தாவாயிருக்கிறானென்னும் ஞானம் கர்மத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. நான் புண்ணியபாபங்களைச் செய்கிறேன், அவைகளின் பலன் எனக்குண்டாகிறது, என எவனுக்கு ஞானம் ஜனிக்கிறதோ அவன் கர்மத்தைச்செய்கிறான். ஞானியோ ஆத்மாவை இப்படி யறிகிறதில்லை. ஆனால் புண்ணியபாபங்கள் சுகதுக்கங்கள் இவைகள் அன்றியிலும் அசங்கமான பிரம்மரூபமாயும் ஆத்மா இருக்கிறது என்கிற ஞானம் வேதாந்தவாக்கியத்தாலுண்டாகிறது. இந்த ஞானம் கர்மத்துக்கு ஹேதுவன்று ஆனால் விரோதமாயிருக்கிறது. ஆகையால் ஞானி கர்மத்தைச் செய்யமாட்டான்.

512. மேலும் கர்த்தா கர்மம் பலன் இவைகளின் பேதஞானம் கர்மத்துக்கு ஹேதுவாம். இந்தக் கர்த்தா கர்மபலன்கள் ஆத்மாவுக்கு

வேறுக ஞானிக்குத் தோற்றுகிறதில்லை. எல்லாம் ஆத்மஸ்வரூபமாகவே தோற்றுகின்றன. ஆகையாலும ஞானி கர்மத்தைச் செய்யமாட்டான்.

513. ஞானிக்குக் கர்மம் இல்லை யென்பதைப் பாஷியக்காரர் அனேகவிதமாகப் பிரதிபாதித்திருக்கிறார்.

514. கர்மத்துக்கும் ஞானத்துக்கும் பலத்தில் விரோதமுண்டு. ஆகையாலும் ஞானகர்மங்களின் சமுச்சயம் கூடாது. கர்மத்தின் பலன் அனித்தியசமுசாரம். ஞானத்தின் பலன் நித்தியமோக்ஷம்.

515. ஆத்மாவில [66] ஜாதி [67] ஆசிரமம் [68] அவஸ்தை இவைகளின் அத்தியாஸம் கர்மத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. எனெனில் அந்தந்த ஜாதி முதலியவைகளுக்குத் தகுந்தபடி வெவ்வேறு விதகர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஜாதி முதலியவைகளில் அத்தியாஸம் கர்மத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. ஜாதி முதலியவைகள் தேகதர்மங்கள். கர்மிக்குத்தேகத்தில் ஆத்மபுத்தி இல்லை. ஆனல் கர்மி ஆத்மாவை தேகத்துக்கு வேறுன கர்த்தாவாக அறிகிறுன். இது முன் (511) சொல்லப்பட்டிருக்கிறது. ஆனதால் ஆத்மாவினிடத்தில் ஜாதி ஆசிரமஅவஸ்தைகளின் தோற்றம் கர்மிக்குமுண்டாவதாகச் சொல்லக்கூடாது. ஆயினும் கர்மிக்குத்தேகத்துக்கு வேறுன ஆத்மாவின் அபரோக்ஷஞானமில்லை. ஆனல் சாஸ்திரத்தினல் பரோக்ஷஞானமட்டுமிருக்கிறது. தேகத்தில் ஆத்மஞானம் அபரோக்ஷமாயிருக்கிறது. தேகத்துக்கு வேறுன ஆத்மாவின் அபரோக்ஷஞானமிருக்கும்பக்ஷத்தில் அது தேகத்தில் அபரோக்ஷ ஆத்மஞானத்துக்கு விரோதமாகும. பரோக்ஷஞானத்துக்கும் அபரோக்ஷஞானத்துக்கும்விரோதமில்லை. ஆகையால் தேகத்துக்குவேறுன கர்த்தா என்னும் ஆத்மஞானமும் தேகத்தில் ஆத்மபுத்தியும் இரண்டும ஒருவனுக்கு இருக்கக்கூடும். தாத்பர்யம்:— மூர்த்தியில் ஈஸ்வரஞானம் சாஸ்திரத்தினல் பரோக்ஷமாயிருக்கிறது. பாஷாணபுத்தி அபரோக்ஷமாயிருக்கிறது. இது அதற்கு விரோதமன்று. இரண்டும் ஒருவனுக்கேயுண்டாகின்றன. ராஜாவில் எவனுக்குச்சார்ப்பத்தைக்காட்டிலும் அபரோக்ஷபேதஞானமி

---

66. ஜாதிகளாவன:— பிர்ம்மசூத்திரியவைசியசூத்திரர்.

67. ஆசிரமங்களாவன:— பிரமசாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன் சந்நியாசி.

68. அவஸ்தைகளாவன:— வாலிப, கௌமார, யௌவன, வார்த்தி காதி.

ருக்கிறதே அவனுக்கு அபரோக்ஷ சர்ப்பப்பிராந்தி நிவர்த்தியாகிறது ஆகையால் அபரோக்ஷப்பிராந்தி அபரோக்ஷஞானத்துக்கு விரோதமென்றும் பரோக்ஷத்துக்கு விரோதமல்லவென்றும் நியமம் சித்திக்கிறது. ஆகையால் தேகத்துக்குப்பின்னமான ஆத்மாவின் பரோக்ஷஞானமும் தேகத்தில் அபரோக்ஷஞானமும் சேர்ந்திருக்கக்கூடும். இவ்விரண்டும் கர்மத்துக்கு ஹேதுக்களாயிருக்கின்றன. ஆத்மா தேகத்துக்குவேறுன கர்த்தாவென்கிற ஞானம் கர்மத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. இது பிராந்திரூபமாயிருக்கிறது. விக்துவானுக்குப்பிராந்தி இல்லை. ஆகையால் விக்துவானுக்குக்கர்மாதிகாரமில்லை. தேகத்தில் அபரோக்ஷஆத்மபுத்தி இருக்கும்பக்ஷத்தில் தேகத்தின் தர்மங்களாகிற ஜாதி ஆசிரமஅவஸ்தைகள் பிரதீதியாகும். தேகத்தில் ஆத்மபுத்தியும் விக்துவானுக்கில்லை. ஆனல் ஆத்மா பிர்ம்மரூபமென்கிற அபரோக்ஷ ஞானமிருக்கின்றது. ஆகையால் ஜாதி முதலியவைகளின் பிராந்தி இல்லாததினுலும் விக்துவானுக்குக்கர்மாதிகாரமில்லை.

516. நான் உபாஸகன், தெய்வம் உபாஸிக்கத்தக்கது என்னும் புத்தியால் உபாஸனை சித்திக்கிறது. விக்துவானுக்கு உபாஸியஉபாஸகபாவங்கள் தோற்றுகிறதில்லை. என்னுடைய தேகாதிகளும் தெய்வத்தின் தேகாதிகளும் சொப்பனம்போல் கல்பிதங்கள் சேதனமொன்றேகிலையானது. இது விக்துவானுடைய நிச்சயம். ஆகையால் ஞானத்துக்கும் உபாஸனைக்கும் விரோதமுண்டு.

517. பகூஷியின் திர்ஷ்டாந்தமுஞ் சரியன்று. ஏனெனில் பகூஷியின் இரண்டிரக்ஷைகளுமொரேகாலத்திலிருக்கின்றன. இவைகளுக்குப் பரஸ்பரம் விரோதமில்லை. ஞானத்துக்குங் கர்மோபாஸனைகளுக்கும் விரோதமுண்டு. ஒரேகாலத்தில் இவைகள் சேர்ந்திருக்கமாட்டா.

518. மோகூத்தில்கர்மோபாஸனைகளின் அபேக்ஷையில்லை..(518-520) சேதுஞான திர்ஷ்டாந்தமும் ஒவ்வாது. ஏனெனில் சேதுதரிசனம் திருஷ்டபலத்துக்கு ஹேதுவன்று ஆனல் அதிருஷ்டபலத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. பிரத்தியகூமாய்க் காணப்படும் பலம் திருஷ்டபல மென்ப்படும். சாப்பாட்டின் பலனுகிற திருப்தி பிரத்தியகூமாயிருப்பதால் போஜனம் திருஷ்டபலத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. இப்படிச் சேதுதரிசனத்தால் பிரத்திகூபலன் பிரதீதியாகிறதில்லை. பாபத்தின் நாசரூபபலன் சாஸ்திரத்தினுல் அறியப்பட்டிருக்கின்றது. சாஸ்திரத்தினுல் அறியப்படும் பிரத்தியகூமாய்ப் பிரதீதியாகாத பலன் அதிர்ஷ்டபலனை

ன்னப்படும். ஆனகயால்யஞ்ஞாதிகர்மம ஸ்வர்காதி அதிருஷ்டபலத்துக்கு ஹேதுவாயிருப்பதுபோல சேதுதரிசனமும பாபநாசருப அதிருஷ்டப லத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. எது அதிருஷ்டபலத்துக்கு ஹேது வாயிருக்கிறதோ அது ஏந்தபலோற்பத்தியில் எந்தச் சாதனத்தை யபே க்ஷிக்கிறதாகச் சாஸ்திரத்தில் செல்லப்பட்டிருக்கிறதோ அச்சாதனசகி தமாய்ப் பலத்துக்கு ஹேதுவாகிறதேதவிரக் கேவலந் தான்மட்டும் ஹே துவாகிறதில்லை. ஆனதால்சிரத்தை நியாமாதிகளுடன் கூடியசேதுதரிச னம் பாபநாசருப பலத்துக்குஹேதுவாகிறது. சிரத்தாதிகளில்லாத சேதுதரிசனம் பாபநாசத்துக்கு ஹேதுவாகிறதில்லை. எனனில் சேதுதரி சனத்தினல் பிரத்தியக்ஷமாய் யாதொருபலனும் பிரதிஜ்ஞாதிறதில்லை. கேவலம் சாஸ்திரத்தினல் பயன் அறியப்பட்டிருக்கிறது. இந்தச் சாஸ் திரம் சிரத்தாதி சகித சேதுதரிசனத்தில் பலனுண்டாகிறதாகச் சொல்லி யிருக்கிறது. கேவலதரிசனத்தினல் பலோற்பத்திக்கு யாதொரு பிரமா ணமும் இல்லை. ஆனகயால் பலோற்பத்தியில் சேதுதரிசனம் சிரத்தை பக்தி முடமாதிகளை அபேக்ஷிக்கிறது.

519. பிர்ம்மவித்தை தன் பலோற்பத்தியில் கர்மோபாஸனைகளை யபேக்ஷிக்கிறதில்லை. எனனில் பிர்ம்மவித்தையின் பலனும் சுவர்க்க ம்போல் அதிருஷ்டமான லோகவிசேஷமாகும்பக்ஷத்தில் இந்த லோக விசேஷமும் கேவலம் பிர்ம்மவித்தையால் கிடைப்பதாகச் சாஸ்திரத்தினை ற் பிரதிபாதிக்கப்பட்டிருக்கமாட்டாது. ஆனல் கர்மோபாஸனசகித பி ர்ம்மவித்தையால் அது கிடைப்பதாகப் பிரதிபாதிக்கப்பட்டிருக்கும். அ ப்போது பிர்ம்மவித்தையும் சேதுதரிசனம்போல் பலோற்பத்தியிற் கர் மோபாஸனைகளை யபேக்ஷிக்கும். இந்தப் பிர்ம்மவித்தையின் பலனுகிற மோக்ஷம் சுவர்க்கம்போல் அதிருஷ்டமான லோகவிசேஷருபமாயில்லை. ஆனல் மோக்ஷம் நித்தியப்பிராப்தமாயிருக்கின்றது. பிராந்தியால் பந் தம் பிரதிஜ்ஞாதமாகிறது. இந்தப் பிராந்தி நிவிர்த்தியே பிர்ம்மவித்தையின் பலன். இது கேவலம் பிர்ம்மவித்தையால் பிர்ம்மவேதாவாகிய ஞானி க்குப் பிரத்தியக்ஷமாயிருக்கிறது. ரஜ்ஜு ஞானத்தால் சர்ப்பப் பிராந் தியின் நிவிர்த்தி எல்லாருக்கும் பிரத்தியக்ஷமாயிருக்கிறது. ஆனதால் பிராந்திநிவிர்த்தி அதிஷ்டானஞானத்தின் நிருஷ்டப்பலன். நிருஷ்டப லோற்பத்தி எந்தச் சாமக்கிரிகளால் பிரத்தியக்ஷமாய்ப் பிரதிஜ்ஞாதமாகி றதோ அச்சாமக்கிரிகள் திருஷ்டபலத்துக்கு ஹேதுக்களாகச் சொல்லப்ப டுகின்றன. துரீ[69] தந்து[70] வேமங்களால் படத்தினுற்பத்தி[71] பிரத்தியக்ஷமா

---

69. தறி.
70. நூல் படத்தின் உபாதானகாரணம்.
71. நாடா நூலைவைக்குழ் குழாய்.

யிருக்கிறது. ஆகையால் தரீதக்துவேமன்கள் படத்துக்கு ஹேதுக்க ளாகிறார்கள். கேவலம் போஜனத்தினால் திருப்திருபபலன் பிரத்தியக்ஷ மாய்ப்பிரதீதியாகிறது. ஆகையால் கேவலம் போஜனம் திருப்திக்கு ஹேதுவாயிருக்கிறது. இதுபோல் கேவலம் அதிஷ்டானஞானத்தினால் பிராந்திநிவிர்த்தி பிரத்தியக்ஷமாய்ப்பிரதீதியாகிறது. ஆனதால் கேவலம் அதிஷ்டானஞானமே பிராந்திநிவிர்த்திக்கு ஹேதுவாயிருக்கிறது. ராஜ்ஜுஞானமும் பிராந்திநிவிர்த்தியால் வேறொன்றையும் அபேக்ஷிக்காதது போல் பந்தப்பிராந்திக்கு அதிஷ்டானமான நித்தியமுக்த ஆத்மாவின் ஞானமும பந்தப்பிராந்தி நிவிர்த்தியில் கர்மோபாஸனைகளை அபேக்ஷிக்கிறதில்லை.

520. ஞானம்பலமாகிற மோக்ஷத்தை ஸ்வர்க்கம்போல் அநித்ய மான லோகவிசேஷமாக அங்கீகரிப்பது வேதவாக்கியத்துக்கு விரு தம். ஏனெனில் ஞானியின் பிராணன் எந்தலோகத்துக்கும் போகிற தில்லையென்று பிருகத்தில சொல்லியிருக்கிறது. மேலும் லோகவிசே ஷத்தை அங்கீகரிப்பதினால் ஸ்வர்க்கம்போல் மோட்சமும் அநித்தியமாகு ம். ஆனதால் மோட்சம லோகவிசேஷரூபமன்று. மோட்சத்தை லோ கவிசேஷமாக அங்கீகரிக்கிறவைகளும் கேவலம் ஞானத்தினாலேயே மோ ட்சலோகம் அடையப்படுமென்று அங்கீகரிக்கத்தக்கது. ஏனெனில் "சா ஸ்திரத்தினால் பிரதிபாதிக்கப்பட்ட அர்த்தம் சாஸ்திரானுசாரமாகவே அ ங்கீகரிக்கத்தக்கது. சாஸ்திரம் மோட்சம் கேவலம் ஞானத்தினாலுண்டா வதாகச்சொல்லுகிறது. ஆகையால் கேவலம் ஞானம் மோட்சத்துக்கு ஹேதுவேதவிரக்கர்மம் உபாஸனை ஞானம் மூன்றுமல்ல.

521. மேலும் விருட்சதிருஷ்டாந்தமும் சரியன்று. ஏனெனில் ஜலம் விடுதல் விருட்சோற்பத்திக்கும் ரட்சணைக்கும் ஹேதுவாயிருந்தா லும் விருட்சத்தின் பலோற்பத்திக்குக்காரணமன்று. வயதானமரத்து க்கு விடப்பட்ட ஜலம் விருட்சத்தின் ரட்சணைக்கு நிமித்தமாகிறதேதவி ரப்பலனுக்காகிறதில்லை. ஜலபுஷ்டியுள்ள விருட்சமே பலத்துக்குஹே துவாயிருக்கிறது; ஜலம் விடுதல் ஹேதுவாயில்லை. இதுபோல் கர்மோ பாஸனைகளும் ஞானோற்பத்திக்கு உபயோகப்படுகின்றனவேதவிர மோ ட்சத்துக்கு உபயோகப்படுகிறதில்லை. ஆகையால் ஞானோற்பத்திக்கு முன்னேயே அந்தக்காரணத்தின் சுத்தியின் பொருட்டும் நிச்சலனதையின் பொருட்டும் கர்மோபாஸனைகளை யனுஷ்டிக்கவேண்டியது. ஞானமுண் டானபின் மோட்சத்தின் பொருட்டு இவைகளை யனுஷ்டிக்கவேண்டியதில்லை.

ஞானேற்பத்திக்கு முன்னும் எதுவரையில் அந்தக்கரணத்தில் மலவிட்சேபங்கள் இருக்கின்றனவோ அதுவரையிலுதான் கர்மோபாஸனையை யனுஷ்டிக்கவேண்டியது. எவனுடைய அந்தக்கரணம் சுத்தமாயும் நிச்சலமாயுமாகிறதோ அந்த ஜிஞ்ஞாசுவானவன் சிரவணத்துக்கு விரோதமான கர்மோபாஸனைகளைத்தள்ளவேண்டியது. மலமென்றால் பாவம். இது அசுபவாஸனைக்கு வேறுபெயராயிருக்கிறது. எது வரையில் மலமிருக்கிறதோ அதுவரையில் அசுபவாசனையிருக்கிறது. அசுப வாசனையற்றுப்போனால் மலமற்றதென்பதும் நிச்சயம். அந்தக்கரணத்தின் சஞ்சலத்தையும் ஏகாக்ரத்தையும் அனுபோகத்தையிருக்கின்றனவாகையால் உத்தமஜிஞ்ஞாசுவுக்கும் மித்துவாலுக்கும் கர்மோபாஸனைகள் நிஷ்பிரயோசனமாயிருக்கின்றன.

522. ஞானத்தைக்காப்பாற்றும் பொருட்டுக்கர்மோபாசனைகளைச்செய்யவேண்டும். லோகத்திலால் உண்டாகும் விருத்தம் லோகத்திலால் ரக்ஷிக்கப்படுகிறது. லோகசம்பந்தமில்லாமற்போனால் வயதான மரமும் பட்டுப்போகிறது. இதுபோல் கர்மோபாஸனைகளாலுண்டாகும் ஞானமும் கர்மோபாஸனைகளாலிரக்ஷிக்கப்படுகிறது. ஞானி கர்மோபாஸனைகளை யனுஷ்டிக்காவிட்டால் அந்தக்கரணம் மறுபடியும் மலினமாயும் சஞ்சலமாயும் போகும். இந்தமலினசஞ்சல அந்தக்கரணத்தில், நீரில்லாநிலத்தின் மரம்போல், எற்கனவே உண்டாயிருந்த ஞானமும் நஷ்டமாய்விடும். ஆகையால் ஞானியும் கர்மோபாஸனைகளைச்செய்யவேண்டும். இவ்விதமாக முன் (510) செய்த ஆக்ஷேபம் சரியன்று. ஏனெனில் ஆபாஸரூபமான அல்லது சேதனரூபமான நான் அசங்கப்பிரம்மம் என்னும் அந்தக்கரணவிர்த்தி வேதாந்தத்தின் பலரூப ஞானமாயிருக்கிறது. அது கர்மோபாஸனைகளன்றியில் நாசமாகும். ஏனெனில் ஒருசரமுண்டாகிற அந்தக்கரணத்தின் பிரம்மாகாரவிர்த்தியால் அஞ்ஞானம் பிராந்தி இவைகளின் நாசரூபபலன் அதேசமயத்தில் சித்திக்கிறது. அஞ்ஞானப்பிராந்திகளின் நாசத்துக்குப் பிறகு மற்றபடியும் விர்த்தியை ரக்ஷிக்கவேண்டியதவசியமில்லை. மேலும கர்மோபாஸனைகளால் அந்தக்கரணவிர்த்தியும் இரக்ஷிக்கப்படமாட்டாது. ஏனெனில் கர்மோபாஸனைகளையநுஷ்டித்தால் அவைகளின் சாமக்கிரிகளின் விர்த்திரூபஞானமே உண்டாகும். பிரம்மஞானமுண்டாகமாட்டாது. வேறுவிர்த்தியுண்டாவதால் முதல் விர்த்தி நஷ்டமாட்டாது. ஆனதால் கர்மோபாஸனைகள் ஞானேற்பத்திக்குப் பரம்பறையாய் ஹேதுக்களாயிருக்கின்றன, உண்டான விர்த்திக்கு விரோதிகளாகின்றன. ஆனதால் கர்மோபாஸனைகளால் ஞானமிரக்ஷிக்கப்படமாட்டாது.

523. ஞானிக்குக் கர்மத்தை விடுவதினல் பாபமுண்டாகிறது என்று முன் (510) சொன்னது சரியன்று. ஏனெனில் சுபகர்மத்தைவிடுதல் பாபத்துக்கு ஹேதுவாகமாட்டாது[72]. நிஷித்தகர்மத்தையனுஷ்டித்தலே பாபத்துக்கு ஹேதுவாகும். இதை பாஷியக்காரர் வெகுவிதமாய்ப்பிரதிபாதித்திருக்கிறார். ஆகையால் கர்மத்தியாகத்தால் பாபமுண்டாகிறதில்லை. ஞானிக்கோ எவ்விதத்திலும் பாபமுண்டாகமாட்டாது. ஏனெனில் புண்ணியபாபங்கள் இவைகளுக்காசிரயமான அந்தக்கரணம் இவைகள் பாரமார்த்திகத்திலில்லை. அவித்தையால் மித்தையாய் பிரதீதியாகின்றன. இந்த அவித்தையும் மித்தியாப்பிரதீதியும் ஞானவானுக்கில்லை. ஆகையால் சுபகர்மத்தை விடுவதினலும் அசுபகர்மத்தைச் செய்கிறதினலும் ஞானிக்குப் பாபமுண்டாகிறதில்லை.

524. இவ்விடத்திலோர் சித்தாந்தம்:— ஞானம் மந்தம் திடம் என இருவகைத்து. சமுசயாதிசகிதஞானம் மந்தமென்னப்படும். சமுசயாதிரகித ஞானம் திடமென்னப்படும். திடஞானமுள்ளவனுக்குச்செய்யவேண்டியதொன்றுமில்லை. ஒருதடவையுண்டாகிய சமுசயமில்லாத அந்தக்கரணத்தின் விர்த்திரூபஞானமே அவித்தையை நாசஞ்செய்துவிடுகிறது. இந்த (விர்த்திரூப) ஞானம் நாசமானலும் நன்றுயறியப்பட்ட ஆத்மாவில் மறுபடியும் பிராந்தியுண்டாகிறதில்லை. ஏனெனில் பிராந்திக்குக் காரணமான அவித்தை ஒருதடவையுண்டானஞானத்தால் நஷ்டமாய்விடுகிறது. பிராந்தியும் அவித்தையுமில்லாததினல் மறுபடியும் விபரீதஞானமுண்டாவதிற் பிரபோசனமில்லை. ஜீவன்முக்தியின் ஆனந்தத்தின் பொருட்டு ஒருவன் விர்த்தியிறவர்த்தியையபேக்ஷித்தால் அடிக்கடி அவன் வேதாந்த அர்த்தத்தைச் சிந்தனைசெய்யவேண்டியது. அப்படிச் செய்வதிதினலேயே அடிக்கடிப் பிரம்மாகாரவிர்த்தியுண்டாகிறது. கர்மோபாஸனைகளால் பிரம்மாகாரவிர்த்தியுண்டாகிறதில்லை. ஏனெனில் கர்மோபாஸனைகளந்தக்கரணத்தின் சுத்திநிச்சலதைமூலமாக ஞானத்திற்குபயோகப்படுகின்றன. வேறுவிதமாக அவைகளுபயோகப்படுகிறதில்லை. வித்துவானுடைய அந்தக்கரணத்தில் பாபமும் சஞ்சலதையுமில்லை. அவித்தை ராகத்துவேஷங்கள் மூலமாகப் பாபத்துக்குஞ் சஞ்சலதைக்குங் காரணமாகிறது. இந்த அவித்தை ஞானத்தால் நாசமாகிறது. ஆகையால் வித்துவானுக்குப் பாபமும் சஞ்சலதையுமில்லாதபடியால் கர்மோபாஸனைகளின் உபயோகமில்லை.

•

---

72. ஏனெனில் அபாவத்திலிருந்து பாவம்உண்டாகமாட்டாது. 100-வது பிரிவைப்பார்க்க.

525, ஆக்ஷேபம்:—ராகத்துவேஷாதிகள் அந்தக்கரணத்தின் சஹஜதர்மங்கள். எதுவரையில் அந்தக்கரணமிருக்கிறதோ அதுவரையில் ராகத்துவேஷங்கள் ஞானிக்கும் எவ்விதத்திலும் நாசமாகமாட்டா. இந்தராகத்துவேஷங்களால் ஞானியின் அந்தக்கரணமும் சஞ்சலப்படும். ஆனதால் சஞ்சலத்தைப்போக்க ஞானியும் உபாஸனையையனுஷ்டிக்கவேண்டியது. அந்தக்கரணத்தின் சஞ்சலத்தையால் ஞானிக்கு விதேகமோக்ஷத்தில் ஹானியில்லாவிடினும் சஞ்சலமான அந்தக்கரணத்தில் சொரூபானந்தம் விளங்கமாட்டாது. ஆகையால் சஞ்சலத ஜீவன்முக்திக்கு விரோதமாயிருக்கிறது. ஆகையால்ஜீவன்முக்தியின் பொருட்டுச் சஞ்சலத்தைப்போக்க உபாஸனையையனுஷ்டிக்கவேண்டியது.

526. இந்த ஆக்ஷேபஞ்சரியன்று. ஏனெனில் நிடபோதம் எவன் அந்தக்கரணத்திலுண்டாயிருக்கிறதோ அவனுக்குச் சமாதியும் விக்ஷேபமுமொன்றே. ஆகையால் அந்தக்கரணம் நிச்சலமாயிருக்கும்பொருட்டு வித்துவான் யாதொரு பிரயத்தினமுஞ் செய்யவேண்டியதில்லை. ஆயினும் வித்துவானுடைய பிரவிர்த்திநிவிர்த்திகள் பிராரப்தத்துக்கு ஆதீனங்களாயிருக்கின்றன. பிராரப்தகர்மம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமாயிருக்கிறது. ஜனகாதிகள் போல் சிலவித்துவான்களுகுப் பிராரப்தம் போகத்துக்கு ஹேதுவாகிறது. சுகதேவர் வாமதேவர் போலச்சிலருக்குப் பிராரப்தம் நிவிர்த்திக்கு ஹேதுவாகிறது. எவன் பிராரப்தம் போகத்துக்கு ஹேதுவாகிறதோ அவனுக்குப் பிராரப்தத்தால் போகஇச்சையும் போகசாதனத்தின் பொருட்டு யத்தனமுமுண்டாகின்றன. எவன்பிராரப்தம் நிவிர்த்திக்குஹேதுவாயிருக்கிறதோ அவனுக்கு ஜீவன்முக்தி ஆனந்தஇச்சையுண்டாகிறது, போகத்தில் துக்கமுண்டாகிறது. ஜீவன்முக்தி ஆனந்தஇச்சையுள்ளவன் பிரம்மாகாரவிர்த்தி அடிக்கடியுண்டாகும் பொருட்டு வேதாந்த அர்த்தத்தைச் சிந்தனைசெய்யவேண்டியதேதவிர உபாஸனையை அனுஷ்டிக்கக்கூடாது. ஏனெனில் அந்தக்கரணம் நிச்சலமாயிருப்பதால்மட்டும் பிரம்மானந்தம்விசேஷமாய்விளங்கமாட்டாது, பிரம்மாகாரவிர்த்தியால்தான் விளங்கும். இந்தப் பிரம்மாகாரவிர்த்தி வேதாந்தச்சிந்தனையால்தானுண்டாகுமே தவிர உபாஸனையாலுண்டாகமாட்டாது. அந்தக்கரணத்தின் சஞ்சலத்தையும் வித்துவானுக்கு வேதாந்தச்சிந்தனையினாலேயே நீங்கிப்போய்விடும். ஆகையால் அந்தக்கரணத்தின் நிச்சலத்தைபின் பொருட்டும் உபாஸனையில் பிரவிர்த்தியுண்டாகமாட்டாது.|| இவ்விதமாக எவனுக்குத் நிடபோதமுண்டாயிருக்குறதோ அவனுக்குக் கர்மோபாஸனைகளில் பிரவிர்த்தியுண்டாகிறதில்லை.

527. எவனுக்கு மந்தபோதமிருக்கிறதோ அவனும் மனனநிதித்தியாஸனங்களையே யனுஷ்டிக்கவேண்டியதே தவிரக் கர்மோபாஸனைகளை யனுஷ்டிக்கவேண்டியதில்லை. ஏனெனில் எவனுக்கு மந்தபோதமுண்டாகிறதோ அவன் உத்தமஜிஞ்ஞாசு. இவனுக்கு மனனநிதித்தியாஸனங்களைத்தவிர வேறொன்றுஞ் செய்யவேண்டியதில்லை. இது சாரீரகத்தில் சூத்திரக்காராலும் பாஷியக்காராலும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. விக்ஷேபவாஸனைக்கு மனனநிதித்தியாஸங்களும் மனுஷ்டிக்கவேண்டியதில்லை. ஜீவன்முக்தியின் ஆனந்தத்தின் பொருட்டு மனனநிதித்தியாஸனங்களில் பிரவிர்த்திக்கிற விக்ஷேபவாஸனும் தன் இசசையாற் பிரவிர்த்திக்கிறான். "நான் வேதாஞ்ஞைப்படி நடக்காதபக்ஷத்தில் எனக்கு ஜ்ஞானமாணாதி சமுசாரமுண்டாகும்" என்கிற புத்தியால் செய்யப்படுங் கர்மம் கர்த்தவ்யமென்று சொல்லப்படும். ஜன்மாதிகளின் புத்தி விக்ஷேபவான்களுக்குண்டாகிறதில்லை. ஆகையால் தன்னிச்சையால் விக்ஷேபவானலனுஷ்டிக்கப்படும் மனனநிதித்தியாஸனங்கள் கர்த்தவ்யமன்று. இவ்விதமாக மந்தபோதம் அல்லது தீவ்ரபோதமுண்டானவனுக்குக் கர்மோபாஸனைகள் கர்த்தவ்யமன்று.

528. எவனுக்குப்போதமுண்டாகவில்லையோ ஆனல் ஆத்மதரிசனத்தை அறியவேண்டுமென்கிற தீவ்ரமான இச்சையிருக்கிறதோ போகத்தில் இச்சையில்லையோ அவனுடைய அந்தக்காரணம் சுத்தமாயிருக்கிறது. ஆகையால் அவனும் உத்தமஜிஞ்ஞாசுதான். போதத்தின் பொருட்டு அவனும் சிரவணாதிகளை அனுஷ்டிக்கவேண்டியதே தவிரக் கர்மோபாஸனைகளை யனுஷ்டிக்கக்கூடாது. எனெனில் கர்மோபாஸனைகளின் பலன் அவனுக்கு முன்னமேயே சித்தித்திருக்கிறது.

529. ஞானத்தின் சாமான்ய இச்சையால் எவன் சிரவணத்திற் பிரவர்த்திக்கிறானோ மேலும் எவன் அந்தக்காரணம் போகத்தில் ஆசக்தியுள்ளதாயிருக்கிறதோ அவன் மந்தஜிஞ்ஞாசு. அவனும் சிரவணத்தை விட்டு மறுபடியும் கர்மோபாஸனைகளில் பிரவிர்த்திக்கவேண்டியதில்லை. கர்மோபாஸனைகளின் பலன்களாகிய அந்தக்காரணத்தின் சுத்தியும் நிச்சலனதையும் அவனுக்குச்சிரவணத்தினாலேயே உண்டாகும். சிரவணத்தின் ஆவர்த்தியால் அந்தக்காரணத்தின் தோஷம் நீங்கி இந்த ஜன்மத்திலாவது

---

73. தத்துவத்தையறியார்தவன் சிரவணஞ் செய்யவேண்டியது. சமுசயமுள்ளவன் மனனஞ் செய்யவேண்டியது. விபர்யயமடைந்தவன் நிதித்தியாஸனஞ் செய்யவேண்டும். சமுசயவிபர்யயங்களன்றியில் தத்துவத்தையறிந்த விக்ஷேபவான் செய்யவேண்டியது யாதொன்றுமில்லை.

அல்லது வேறு ஜன்மத்திலாவது அல்லது பிர்ம்மலோகத்திலாவது ஞானமுண்டாகும். கிரவணத்தை விட்டும கர்மோபாஸனைகளில் பிரவிர்த்திக்கிறவன் ஆருட்டபதிதன் என்னப்படுகிறான். இவ்விதமாக ஞானிக்கும் உத்தமஜிஞ்ஞாசுவுக்கும் கர்மோபாஸனைகளில் அதிகாரமில்லை. வேதாந்தச்சிரவணத்தில் பிரவிர்த்திக்கத மந்தஜிஞ்ஞாசுவுக்கும் அதிகாரமில்லை.

530. எவனுக்குஞானத்தின் இச்சையிருக்கிறதோ, ஆலல் போகத்தில் புத்திபதிந்திருக்கிறதோ, ஆனதாற் சிரவணத்தில் எவன் பிரவிர்த்திக்கிறதில்லையோ, அந்த மந்தஜிஞ்ஞாசுவுக்கு நிஷ்காமகர்மத்திலும் உபாஸனையிலும் அதிகாரமுண்டு.

531. போகத்தில் எவனுக்கு ஆசையிருக்கிறதோ ஞானத்தில் இச்சையில்லையோ அவன் பகிர்முகன். அவனுக்கு ஸகாமகர்மத்தில் அதிகாரமுண்டு. ஆனதால் ஞானிக்குக் கர்மோபாஸனைகளில அதிகாரமில்லை. கர்மோபாஸனைகளுக்கு ஞானம் விரோதமாயிருக்கிறது. கர்மோபாஸனைகளும் அந்தக்கரணத்தின் சுத்தி நிச்சலனதை இவைகள் மூலமாக ஞானோற்பத்திக்கு ஹேதுக்களாயிருந்தாலும் ஞானோற்பத்திக்குப் பிறகு க்கர்மோபாஸனைகளையநுஷ்டித்தால் ஞானமும் நஷ்டமாய்விடும். ஆனகயால் அவைகள் ஞானத்துக்குவிரோதிகளாயிருக்கின்றன, இச்சைக்கு ஹேதுக்களாயிருக்கிறதில்லை. ஏனெனில் "நான் கர்த்தா யஞ்ஞாதிகளை நான் செய்யவேண்டியது, யஞ்ஞாதிகளுக்குப்பலன் சுவர்க்காதிகள்' இந்தப்பேதபுத்தியால் கர்மஞ்செய்யப்படுகிறது. 'நான் உபாஸகன் 'தெய்வமுபாஸியம்' இந்தப்பேதபுத்தியால் உபாஸனை சித்திக்கிறது. இவ்விரண்டு புத்திகளும் 'எல்லாம் பிர்ம்மமயம்' என்கிற புத்தியை நீக்கிச்சித்திக்கின்றன. ஆகையால் கர்மோபாஸனைகள் ஞானத்துக்கு விரோதிகள்.

532. ஞானி ஆத்மாவை அசங்கதை அறிந்தாலும் தேகத்தின் போஜனதிவியவகாரங்கள் அல்லது, ஜனகாதிகளின்வியவகாரங்கள்போல், அதிகாராஜ்யபாலனதிவியவகாரங்கள் இவைகளுக்கு ஞானம் விரோதமன்று. வியவகாரமும் ஞானத்துக்கு விரோதமன்று. ஏனெனில் எந்த ஆத்மஸ்வரூபம் ஞானத்தால் அசங்கம் என்று அறியப்படுகிறதோ அந்தஆத்மாவினிடத்தில் வியவகாரம் பிரதீதியாலல் வியவகாரத்துக்கு ஞானமும் ஞானத்துக்கு வியவகாரமும் விரோதமாகும். வித்துவானை

---

74. மோக்ஷத்துக்குப்போகும் ஏணியிலேறி அங்கிருந்து கீழே விழுவோன் ஆருடபதிதனுவான்.

க்கு ஆத்மாவினிடத்தில் வியவகாரம் பிரதியாகிறதில்லை[75]. எல்லாவிய வகாரமும் தேகாதிகளையாசிரயித்துக்கொண்டிருக்கின்றது. ஆத்மாவி னிடத்தில் வியவகாரசகித தேகாதிகளின் சம்பந்தமேயில்லை. இந்தப்பு தியுடன் ஞானி சகல வியவகாரங்களையுஞ் செய்கிறான். இக்காரணத் தால் வித்துவானுடையபிரவிர்த்தியும் நிவிர்த்திதானென்று சொல்லப்ப டுகிறது.

533. வேறு வியவகாரங்கள் ஞானத்துக்கு விரோதமாகாதது போல் கர்போபாஸனைகளையும் அன்னிய பகிர்முகபுருஷர்கள் அனுஷ்டி-ககவேண்டியதற்காக ஆத்மாவையசங்கமாயும் நிரியைகள், தேகம் வாக்கு அந்தக்கரணம் இவைகளையாசிரயித்ததாயும் அறிந்து கர்மோபாஸனைக ளையனுஷ்டிக்கிறவனுடைய ஞானத்துக்கு அவைகள் விரோதமாகா. ஏ னெனில் வித்துவானால் அசங்கமாயறியப்பட்ட ஆத்மாவைக் கர்த்தாவா க அறிந்து எவன் கர்மோபாஸனைகளை யனுஷ்டிக்கிறானே அவனுடைய ஞானத்துக்கு அவைகள் விரோதமாகும். ஆத்மா அசங்கமென்கிற நிட நிச்சயம் கர்மோபாஸனைகனால் வித்துவானுக்கு நீங்குகிறதில்லை. ஆகை யால்[76] ஆபாஸரூபமான கர்மோபாஸனைகள் நிடஞானத்துக்கு விரோதமா கா. இக்காரணத்தால் ஜனகாதிகளால் ஆபாஸரூடகர்மஞ் செய்யப்படு கிறது. ஆத்மாவை யசங்கமாக அறிந்து மற்ற வியவகாரங்கள்போல் தேகாதிகளின் தர்மங்களையுமறிந்து வித்துவான் செய்யுஞ் சுபகிரியைகள் ஆபாஸரூபகர்மங்களென்னப்படும். இதற்கும் ஞானத்துக்கும் விரோத மில்லை. ஆத்மா கர்த்தாவென்னுப் புத்தியால் எவன் கர்மோபாஸனைசெ ய்கிறானே அவன் விஷத்தில் தான் கர்மோபாஸனைகளுக்கும் ஞானத்துக் கும் விரோதமென்று பாஷியக்காரரால் பொதுவாய்ச்சொல்லப்பட்ட கர்மோபாஸனைகளுக்கும் ஞானத்துக்கும் விரோதமென்னும் வசனத்தை யறியவேண்டியது. ஆபாஸரூபகர்மோபாஸனைகளுக்கும் ஞானத்துக்கு ம் விரோதமில்லை.

---

75. ஜகத்து சத்தியமென்கிற ஞானத்தையும் போகத்தையுங்கொடுக்கி ற பிராரப்தம் ஞானத்துக்கு விரோதமாகும. போகமாத்திரத்தால் விஷயம் சத்தியமாகமாட்டாது. ஞானி சகலபதார்த்தங்களையும் மித்தையாக அறிகிறான். ஆனல் அவைகளின் சொரூபத்தை நாசஞ் செய்கிறதில்லை. ஞானியினுடைய ஞா னத்துக்கும் பிராரப்தத்தாலுண்டாகும் வியவகாரத்துக்கும் விரோதமில்லை.

76. ஆத்மாவை அசங்கமாயறிந்தும் நிரியைகள் மனைவாகுக்காயங்க ளையடுத்தனவென்றுமறிந்தும் செய்யப்படும் கர்போபாஸனைகள் ஆபாஸரூபங்க ளாம்.

534. ஆயினும் மந்தபோதத்துக்கு ஆபஸ்ரூபகர்மோபாஸனைகள் விரோதிகளாயிருக்கின்றன. எனெனில் சமுசயாதிசந்த போதம் மந்தபோதமென்னப்படும். எவன் அந்தக்காரணத்தில் 'ஆத்மா அசங்கன் அல்லது அசங்கனன்று' என்கிற சந்தேகமொருக்கால் ஜனிக்கிறதோ அவன் அடிக்கடி 'ஆத்மா அசங்கன், எனக்குச் செய்யவேண்டியதொன்றுமில்லை' என்கிற பாவத்தைச் சிந்தனைசெய்யவேண்டியது. அப்போது சமுசயம் நீங்கித் திடபோதமுண்டாகும். அப்படிச் செய்யாமற் கர்மோபாஸனைகளைச் செய்தால் உண்டானமந்தபோதமும் நீங்கி நான் கர்த்தா போக்தா என்னும் விபரீத நிச்சயமுண்டாகும் ஆகையால் மந்தபோதமுண்டாவதற்குமுன்னேயே கர்மோபாஸனைகளைச் செய்யவேண்டியதேதவிரப் பிறகு அவைகளைச் செய்யத்தக்கதில்லை. மந்தபோதமுள்ளவன் கர்மோபாஸனைகளைச் செய்தால் உண்டான போதமும் நஷ்டமாய்விடும். திர்ஷ்டாந்தம்:—பக்ஷிதன் முட்டைகளை இரக்ஷைமுளைக்குமுன்அவயங்காக்கிறது. இரக்ஷைமுளைத்தபின் காக்கிறதில்லை. அப்படிக் காத்தால் முட்டையிலுள்ள ஜலத்தினால் மிருதுவான இரக்ஷைகள் உதிர்ந்துவிடுகின்றன. இதுபோல்ஞானோற்பத்திக்குமுன்னேயே கர்மோபாஸனைகளை யநுஷ்டிக்கவேண்டியது. ஞானோற்பத்திக்குப்பின் அநுஷ்டிக்கக்கூடாது. அப்படியநுஷ்டித்தால் குஞ்சு நஷ்டமாவதுபோல் மந்தஞானமும் நஷ்டமாய்விடும். தாய்ப்பக்ஷி முட்டைசம்பந்தத்தினால் நஷ்டமாகாததுபோல் திடபோதம் நஷ்டமாகமாட்டாது. தாய்ப்பக்ஷிக்குமுட்டை பிரயோஜனப்படாததுபோல் திடபோதத்துக்கும் கர்மோபாஸனைகளால் பிரயோஜனமில்லை. இவ்விதமாக மோக்ஷத்தின்பொருட்டு ஞானிக்குச் செய்யவேண்டியது யாதொன்றுமில்லை.

535. சிஷ்யனுக்கு ஆசாரியரால் உபதேசிக்கப்பட்டவிஷயம் வேதானுசாரமாயிருக்கிறது. ஆகையால் இதுயதார்த்தம். சிஷ்யனே இதை நீ நம்புவாயாக. இதையுணர்வதினால் சிரமமன்றியில் அபாரமான ஜனனமரணரூப சமுசாரம் நாசமாய்விடும்.

536: உபதேசித்த அர்த்தத்தின் சுருக்கம்(536—541):—ஜகத்கர்தாவான ஈஸ்வரன்உனக்குவேறன்று. நீ சச்சிதானந்தரூபப்பிரம்மம். இப்படி ஆசாரியர்முன்(439—495)னுபதேசித்ததைமறுபடியும் தயவுடன்சிஷ்யனுக்குச் சொல்றுகிறார். சிஷ்யனே தீனத்தன்மையை விட்டு உன்ஸ்வரூபத்தைப்பார். நீ ஜனனமரணமில்லாத சுத்தப்பிரம்மம். பார்க்கப்பட்டவைகளையெல்லாம் பிரகாசிப்பிக்கிறாய். உன் அஞ்ஞானத்தால் ஜகத்தையெல்லாம் நீ சிருஷ்டிக்கிறாய். மறுபடியும் எல்லாவற்றையும் நாசஞ்செய்து நீ நாசமற்றவனாயிருக்கிறாய். மித்தியாப்பிரபஞ்சத்தைப் பார்

த்துக் கொஞ்சங்கூட மனவருத்தத்தை நீ யடைகிறதில்லை. நீ தேவர்க ளுக்கெல்லாம் தேவனையிருக்கிறாய். நீ சுகப்புஞ்சமாயிருக்கிறாய். மா னையயினல் உன்னிடத்தில் ஜீவன் முகத்து ஈஸ்வரன் மூன்றும் விளங்குகி ன்றன. ரஜ்ஜுவினிடத்திலும் கிளிஞ்சலிடத்திலும் சர்ப்பமும் வெள்ளி யும் விளங்குவதுபோலும்.

537. ஞானாதனத்தைச் சொல்லுகிறேன். சிஷ்னே ராகமாகிற பதார்த்தத்திலுள்ள நிடமான ஆசக்தியைத் தகித்துவிடு. லோபத்தை யொழித்துவிடு. துவேஷத்தைக் கொன்றுவிடு. காமத்தைச்சுட்டெரிடு! ராகம் லோபம் துவேஷம் காமம் இவைகளைச் சொன்னதினல் சகலமான ராஜஸதாமஸவிர்த்திகளுங்கிரகிக்கப்படுகின்றன. ஆனதால் சகலமான ரா ஜஸதாமஸவிர்த்திகளை நாசஞ்செய்யவேண்டியதென்று அர்த்தம் சித்திக் கிறது. இந்த விர்த்திகள் ஞானத்துக்கே விரோதிகளாயிருக்கின்றன. இ வைகளை நாசஞ்செய்யாமல் ஞானமுண்டாகிறதில்லை. ஆகையால் அவை களின் நிவிர்த்தி[78] ஜிஞ்ஞாசுவுக்கு அவசியம் வேண்டியது. விவேகம் வைராக்கியம் சமாதிஷட்சசம்பத்தி முமுக்ஷுத்த இந்நான்கும் ஞானசா தனங்களாயிருக்கின்றன. இவைகளில் விவேகம் முக்கியமானது. ஏ னெனில் விவேகத்தினல் வைராக்கியாதிகளுண்டாகின்றன. ஆகையா ல் ஆசாரியர் இப்போது விவேகத்தையுபதேசிக்கிறார். சிஷ்னே சமுசா ரத்தைக் கானல்ஜலத்துக்குச் சமானமாக மித்தையென்று நீ யடிக்கடி அ றிவாயாக. சமுசாரம் மித்தையென்று சொன்னதினல் ஆத்மா மித்தைய ன்று சத்தியமென விளங்குகிறது. உதாரணம்:— வித்தையாடி பண்ணும் ஜாலவித்தைகளைப் பார்க்குபோது மகனைப்பார்த்துத் தகப்பன் 'மகனே வித்தையாடியாற்காண்பிக்கப்பட்ட மாமரம் முழுமையும் பொய்' என் றான். இப்படிச் சொன்னதினல் வித்தையாடி பொய்யனென மகன் நி னைக்கிறதில்லை. ஆனல் அவனைச்சத்தியமாகவே அறிகிறான். இதுபோல் ஜகத்து மித்தையென்று சொன்னதினல் ஆத்மா சத்தியமென்று அறியப் படவேண்டியது. இந்த அபிப்பிராயங்கொண்டு ஆசாரியர் சமுசாரத்

---

77. விஷயத்தில் தோஷதிர்ஷ்டியில் ராகமும் அர்த்தத்தில் அனர்த்ததி ர்ஷ்டியால் லோபமும் நாசமாகின்றன. காமாபாவத்தால் குரோதமுண்டாகி றதில்லை. பதார்த்தங்களைச் சிந்திக்காவிடில் இச்சையாகிற காமமுண்டாகிறதி ல்லை. பாகவதத்தில் 11-வது ஸ்கந்தத்தில் 13-வது அத்தியாயத்தில் ராஜஸதா மஸ விர்த்திகள் நாசமாகும் விதஞ்சொல்லப்பட்டிருக்கிறது.

78. முதலாவது தரங்கம் 15-வது பிரிவிற் சொல்லிய மலவிக்ஷேபதோ ஷாதித சுத்தாந்தக்காரணம்.

தை மித்தையாகச்சொன்னார். இவ்விதமாக ஜகத்து மித்தை ஆத்மா சத்தி யமென்று குரு விவேகத்தையுபதேசித்தார். இந்த விவேகத்தினல் இதர சாதனங்கள் தாமாகவேயுண்டாகின்றன. ஆகையால் விவேகத்தின் உபதேசத்தால் மற்ற சாதனங்களும் உபதேசிக்கப்பட்டதாக அறியத்தக்கவை. இவை ஞானத்தின் பஹிரங்கசாதனங்கள். இனி அந்தரங்கசாதனங்களைச் சொல்லுகிறேன். அந்தரங்கசாதனம் சிரவணம். சிஷ்யனே ஞானரூபசூரியனைச் சிரவணத்தினல் சம்பாதித்து அஞ்ஞானரூப இருளை நாசஞ்செய். இருள் உபமானம் அஜ்ஞானம் உபமேயம்.

538. சிஷ்யனே அறியத்தக்க தேகாதிகள் நீயன்று. அறியாத பிர்ம்மமே நீ. விருக்ஷரூபசம்சாரம் மித்தை.[79] ஆகாசத்தில் நீலவர்ணமுங் கூடாரரூபமும் உண்மையில்லாமல் மித்தையாகப் பிரதீதியாவதுபோல் சமுசாரமும் ஆத்மாவினிடத்தில் இல்லாமல் மித்தையாகப் பிரதீதியாகிறது. சுருதிஸ்மிருதிகளில் சமுசாரத்தை விருக்ஷரூபமாகச்சொல்லியிருக்கிறபடியால் இவ்விடத்திலும் விருக்ஷசப்தம் சமுசாரத்துக்கு உபயோகப்படுத்தப்பட்டது.

539. சிஷ்யனே, தேகாபிமானியாயிருக்கிற அஜ்ஞானியும் ஞானியும் பந்தமோக்ஷங்களுக்கு இருப்பிடங்களாம். அஜ்ஞானி பந்தத்துக்கிருப்பிடம். ஞானி மோக்ஷத்துக்கிருப்பிடம். ராகமும் விராகமும இவைகளின் கொடிமரங்கள். அப்படிக் கொடிமரம் ராஜாவின் பட்டணத்துக்கு அடையாளமாயிருக்கிறதோ அப்படி[80] அஜ்ஞானிக்கு ராகமும் ஞானிக்கு விராகமும் அடையாளங்களாயிருக்கின்றன.

540. அஜ்ஞானியினிடத்திலும் விராகமுண்டாகக்கூடும். ஆனல் ஞானியினுடைய விராகத்துக்கும் அஜ்ஞானியினுடைய ராகத்துக்குமுள்ள பேதத்தைச் சொல்லுகிறேன். சிஷ்யனே, சப்தாதிவிஷயங்களி

79, சமுசாரரூபவிருக்ஷத்துக்கு மாயாவிசிஷ்ட பரப்பிர்ம்மம் மூலம். மகத்தத்துவம் அங்குரம். அகங்காரதத்துவம் தண்டு. பஞ்சதன்மாத்திரைகள் கிளைகள். வேதம் முதலிய சாஸ்திரங்கள் இலைகள். நான்கு புருஷார்த்தங்களும் ரஸம். தர்மாதர்மங்கள் புஷ்பங்கள். ஜன்மமரணாதி துக்கங்கள் பலன். அஜ்ஞான ஜீவனுகிற பக்ஷி போக்தா. வைராக்கியத்தால் தீக்ஷ்ணமாயிருக்கும் ஞானம் அம்மரத்தைப்பிளக்கும் கோடரி. இவ்விதமாகச்சம்ஸாரமாகிற விருக்ஷம் சாஸ்திரத்தில் அனேகவிதமாய் வர்ணிக்கப்பட்டிருக்கினறது.

80. புகையால் நெருப்பு அனுமானிக்கப்படுவதுபோல, ராகவிராகங்களால் அஜ்ஞானி ஞானிகள் அறியப்படுகிறார்கள்.

ல் சத்தியமென்கிற பிராந்தியும் ரஜ்ஜு-சர்ப்பம்போல் பிரமையென்கிற நிச்சயபுத்தியும் காற்று கொடியை யாட்டுகிறதுபோல் ராகவிராகங்களை யாட்டுவிக்கின்றன, அதாவது சஞ்சலப்படுத்துகின்றன. ஆனல் அவைகளை முற்றிலுமொழிக்கிறதில்லை. விஷயத்தில் சத்தியபுத்தியால் ராகம் ஸ்திரப்படுகிறது. விஷயத்தில் பிரமை புத்தியால் விகாரம் ஸ்திரப்படுகிறது. விஷயம் அசத்தியம், ஆகையால் அதில் சத்தியபுத்தி பிராந்தி ரூபம். பிராந்திஞானமும் அதற்கு விஷயமான மித்தியாவஸ்துவும் இரண்டும் பிரமையென்னப்படும். அஞ்ஞானியின் விராகத்துக்கும் ஞானியின் விராகத்துக்கும் பேதம் எப்படியெனில், அஞ்ஞானியின் விராகம் விஷயத்தில் மித்தியாபுத்தியாலுண்டானதனறு. ஆகையால் அது மந்தமாயிருக்கிற்து. விஷயம் மித்தை யென்கிறபுத்தி அஞ்ஞானிக்குண்டாகிறதில்லை. சாஸ்திரத்தினுலும யுக்தியினுலும் விஷயம் மித்தையென்று அஞ்ஞானி அறிந்திருந்தாலும் விஷயம் மித்தையென்கிற அபரோக்ஷபுத்தி ஞானிக்கேயுண்டாகிறதே தவிர அஞ்ஞானிக்குண்டாகிறதில்லை. ஆனதால் அஞ்ஞானிக்கு விஷயத்திலுள்ள பரோக்ஷமான மித்தியாபுத்தியால் அபரோக்ஷமான சத்தியபிராந்தி நிவிர்த்தியாகிறதில்லை. இவ்விதமாக அஞ்ஞானிக்கு விஷயத்தில் விராகமுண்டாகும்போது பரோக்ஷமித்தியாபுத்தியிருக்கிறது. ஆனல் அதைவிட அபரோக்ஷசத்தியபுத்தி பிரபலமாயிருக்கிறது. ஆகையால் அஞ்ஞானிக்குப் பரோக்ஷமித்தியாபுத்தி விராகத்துக்கு ஹேதுவன்று. ஆனல் பிரபலமான சத்தியபுத்தியால் விஷயத்தில் ராகமுண்டாகிறது. விராகமுண்டாகும்போது அதற்கு மித்தியாபுத்தி காரணமன்று. விஷயத்தில் தோஷதிருஷ்டியால் விராகமுண்டாகிறது. ஞானி சர்வப்பிரபஞ்சத்தையும் அபரோக்ஷமாய் மித்தையாக அறிகிறான். அபரோக்ஷமித்தியாபுத்தியால் அபரோக்ஷசத்தியபுத்திநிவிர்த்தியாய்விடுகிறது. ஆகையால் ராகத்துக்கு ஹேதுவான விஷயத்திலுள்ள சத்தியபுத்தி ஞானிக்கிருக்கவில்லை. விராகத்துக்குஹேதுவான விஷயத்தில் மித்தியாபுத்தி ஞானிக்கிருக்கிறது. ஞானிக்கு விஷயத்தில் சத்தியபுத்தி மறுபடியும் உண்டானல் ராகமும் மறுபடியுமுண்டாகி விராகம் நிவிர்த்தியாய்விடும். அபரோக்ஷமாய் மித்தையென்றறிந்தபதார்த்தத்தில் மறுபடியும் சத்தியபுத்தியுண்டாகிறதிலலை. அபரோக்ஷமாய் மித்தையென்றறிந்த ரஜ்ஜுவிலுள்ள சர்ப்பத்தினிடத்தில் சத்தியபுத்தி மறுபடியும் உண்டாகாததுபோல் ஞானிக்கு மறுபடியும் சத்தியபுத்தியுண்டாகிறதில்லை. இவ்விதமாக ஞானிக்கு ராகஉற்பத்தியும் விராகநிவிர்த்தியும் உண்டாகிறதில்லை. ஆனதால் ஞானியின் விராகம் திடமாயிருக்கிறது. தோஷதிருஷ்டியால் அஞ்ஞானிக்குண்டாகும் விராகம் நிவிர்த்தியாயவிடும். ஏனெனில் எந்தப்பதார்த்தத்தில் தோஷதிருஷ்டியுண்டாகிறதோ அந்தப்பதார்த்தத்திலேயே இதரகாலங்களில் நல்லபுத்தியுமுண்டாகிறது. எல்லாபுருஷர்களுக்கும் பசுதர்மத்தின் முடிவில் ஸ்திரீ

யினிடத்தில் தோஷதிருஷ்டியுண்டாகிக் காலாந்தரத்தில் மறுபடியும் கல்லடுத்தியுண்டாவதுபோலும். இவ்விதமாகத் தோஷதிருஷ்டி நீங்கும் போது அஞ்ஞானியின் விராகமும் நீங்கிப்போம். ஆனதால் அஞ்ஞானிக்குத்திடமான விராகமுண்டாகிறதில்லை. இவ்விதமாக ராகமும் விராகமும அஞ்ஞானிக்கும் ஞானிக்கும்சின்னங்களாய்ச்சொல்லப்பட்டன.

541. வேறு சின்னங்களையும் சொல்லுகிறேன். சிஷ்யனே, வீட்டின்பேரில் யானைமுதலியவைகளின் மூர்த்திகள் இருப்பதுபோல் பந்தமோக்ஷங்களுக்கு இருப்பிடங்களாகிற அஞ்ஞானி ஞானிகளின் அந்தக்கரணங்களில் சாயக்ஷயசாக்ஷீயென்னும் மூர்த்திகள் இருக்கின்றன. அஞ்ஞானியின் அந்தக்கரணத்தில் சாக்ஷ்யரூபமூர்த்தியும் ஞானியின் அந்தக்கரணத்தில சாக்ஷீரூபமூர்த்தியும் இருக்கின்றன. சாக்ஷிக்கு விஷயமான பிரபஞ்சத்துக்குச் சாக்ஷ்யமென்று பெயர். சாக்ஷ்யரூபமூர்த்தி மலினமாயும் சாக்ஷீரூபமூர்த்தி சுத்தமாயுமிருக்கின்றன. 'இவைகளை யுணர்ந்தறிந்து பார்த்தவன் பூர்ணானந்தத்தை யடைகிறான்.' சஞ்சலப்பிரமையை நிஜமென்னெண்ணுகிறவன் துக்கமாகிற கிணற்றில் முழுகுகிறான் அசலப்பிர்ம்மத்தின் நிஜஸ்வரூபத்தை யறிகிறவன் ஆனந்தஸ்வரூபத்தை யடைகிறான்.

மகாவாக்கியாநுசாரஞானம் (542—596)

542. ஞானஸ்வரூபம் இதர சாஸ்திரங்களில் அநேகப்பிரகாரமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனதால் மகாவாக்கியாநுசாரமாக ஞானஸ்வரூபத்தைச் சொல்லுகிறேன். சிஷ்யனே, ஜீவேஸ்வரர்களிடத்திலுள்ள அவித்தை மாயை இப்பாகங்களை விட்டு அவைகளின் பேதப்பிரதீதியை நீக்கிவிடு. ஜீவேஸ்வரர்களிடத்திலுள்ள சேதனபாகம் பேதமற்றதென்றறி. இதனால மகாவாக்கியத்தில் பாகத்தியாகலக்ஷணையால் ஜீவேஸ்வரர்களைன்றென அறியத்தக்கதென்று சித்திக்கிறது.

543. பாகத்தியாகலக்ஷணங்களை மேல் பிரஸ்தாபித்திருக்கிறபடியால் அவைகளின் முழுவரலாறும் தெரியும்பொருட்டு லக்ஷணைகளின் பேதங்களைச் சொல்லுகிறேன். புத்திமானான பண்டிதன் மூன்றுவிதமா

---

81. சாங்கிய நையாயிக முதலிய.

ன லக்ஷணங்களை யறிகிறான். அவைகளாவன ஜஹர்லக்ஷணை, அஜஹர்ல க்ஷணை, ஜஹாஜஹர்லக்ஷணைகளாம். மகாவக்கியத்தில் முதலிரண்டு லக்ஷ ணைகளும் பொருந்தமாட்டா. பாகத்தியாகலக்ஷணையால் நிஜரூபமான பிரம்மஸ்வரூபம் பார்க்கப்படும்.

544. சீஷனுடைய கேள்வி:— சாமானியஞானத்துக்குப்பிறகு விசேஷஞானமுண்டாகும். சாமானியமாய்ப் பிராமணனென்றறிந்தபி றகு அவனுடைய விசேஷஞானமுண்டாவதுபோல் லக்ஷணையின் சா மானியஞானத்துக்குப்பின் ஜஹர் முதலியவைகளின் விசேஷஞானமுண் டாகும். சாமானியஞானமன்றியில் விசேஷஞானமுண்டாகமாட்டாது. ஸ்வாமின், லக்ஷணமென்பது யாது? இதை அடியேன் அறியவில்லை. ஆ னதால் லக்ஷணையின் சாமானியரூபத்தைக் காண்பித்துப் பிறகு ஜஹர் முதலியவைகளின் பேதத்தைச் சொன்னால் விசேஷமாயிருக்கும். ஆகை யால் தனித்தனியேச் சொல்லியருள்க.

545. குருஉத்தரம்:—சீஷனே, ஏகாக்கிரசித்தத்துடன் நான் சொ ல்வதைக் கேள். லக்ஷணைகளையும் அவற்றின் பேதங்களையும் அறிவாய். பதத்துக்கும் அர்த்தத்துக்குமுள்ள சம்பந்தம் வித்தியெனப்படும். இ

---

82. தமிழன், தெலுங்கன், வைஷ்ணவன் என.

83. கன்றுக்கும் பசுவுக்கும் சம்பந்தமிருக்கிறது, அனேக பசுக்களின் மத்தியிலிருக்கிற தன் தாயைப்பகுத்தறிகிறது. சம்பந்தமன்றியில் சன்றுகுட் டி பகுத்தறியமாட்டாது. ஆகையால் மாட்டுக்கும் கன்றுக்கும் ஜன்யஜனகபா வசம்பந்தமிருக்கிறதாக அறியத்தக்கது. இந்த ஜன்யஜனகபாவரூபமான ஞா னத்துக்கு ஹேதுவாயிருக்கிற கன்றுகுட்டியின் பிரவிர்த்தியும் சமபந்தமென்ன ப்படும். இதுபோல் சப்தத்துக்குத்தன் அர்த்தத்தில் யாதொரு பிரவிர்த்தியுண் டோ அதுவும் யாதொரு சம்பந்தமுமன்றியிலுண்டாகமாட்டாது. ஆகையால் சப்தத்துக்குத்தன் வாச்சியார்த்தத்துடன் வாச்சியவாசகபாவசம்பந்தமும் ல க்ஷியார்த்தத்துடன் லக்ஷியலக்ஷணைபாவசம்பந்தமும் இருக்கின்றன. இந்தச்சம் பந்தத்தின் அர்த்தத்திற் பிரவிர்த்தியும் சம்பந்தமெனப்படும். இந்தச் சம்பந்தம் சப்தத்தின் வித்தியென்று சொல்லப்படும். இந்த வித்திரூப சம்பந்தம் சில விடங்களில் சக்திரூபமாயும் சில்விடங்களில் லக்ஷணரூபமாயுமிருக்கிறது. வி ர்த்தி சப்தத்துக்கு அநேக அர்த்தங்கள் ஏற்பட்டிருந்தாலும் இந்தப் பிரகரணத் தில் சப்தத்துக்கும் அதின் அர்த்தத்துக்குமுள்ள சம்பந்தமே அறியத்தக்கது.

து இருவகைத்து. ஒன்று சக்திவிர்த்தி[84] மற்றொன்று லக்ஷணவிர்த்தி[85]. இவைகளின் அர்த்தங்களை விவேகத்துடன் கேட்பாயாக.

---

84. சப்தத்திலுள்ள அர்த்தத்தையறியும்படிச்செய்யும் சாமர்த்தியம் சப்தத்தின் சக்தி யென்னப்படும். இந்தச்சக்தி விர்த்திகாரிய காரணங்களின் மதியிலிருக்கும் சமவாய சம்பந்தம் அல்லது தாதாத்மிய சம்பந்தம்போல் சப்தத்துக்கும் அர்த்தத்துக்கும் இரண்டுக்கும் மத்தியிலிருக்கிறது. ஆகையால் இந்த சக்தி சப்தத்துக்கும் சப்தார்த்தத்துக்குமுள்ள சாக்ஷாத் சம்பந்தமாகச்சொல்லப்படுகிறது. இந்த ஸாக்ஷாத் சம்பந்தரூப சக்திவிர்த்தி யோகரூட யோகரூட வென மூவகையாம். (I) அந்த சப்தத்தில் தன் அவயவங்களுடைய சம்பந்தத்திலல் அர்த்தஞானமுண்டாகும்படிச் செய்ய சாமர்த்தியமிருக்கிறதோ அந்தச்சப்தத்துக்குத் தன் அர்த்தத்துடன் யோக சக்திரூப சம்பந்தமிருக்கின்றது. (உ—ம்) பாதரக்ஷையென்னும்பதத்தில் பாதம் ரக்ஷை யென்கிற இரண்டு அவயவங்களுண்டு. இவைகளின் சேர்க்கையால் முட்களினின்றும் காப்பாற்றுகிறதான செருப்பு, ஜோடு, கட்டையாகிற அர்த்தஞானமுண்டாகிறது. ஆகையால் பாதரக்ஷையென்னும் சப்தத்துக்கும் அதின் அர்த்தத்துக்கும் யோகசக்தி ரூப சம்பந்தமிருக்கிறது. (2) எந்தபதத்தின் அவயவங்களால் அர்த்தஞானமுண்டாகிறதில்லையோ ஆனால் அதற்கு இதுதான் அர்த்தமென்று யாதொரு சங்கேதமிருக்கிறதோ அந்தப்பதத்துக்கு அர்த்தத்துடன் ரூடிசக்திரூப சம்பந்தமிருக்கிறது. இதுவே சப்தத்தின ரூடிவிர்த்தி என்று சொல்லப்படுகிறது. (உ—ம்) குல்லாயென்கிறபததில் அதின் அவயவத்தினின்றும் யாதொரு அர்த்தஞானமுண்டாகிறதில்லை. ஆனால குல்லாயென்கிற பதத்திலல் தலையைமறைக்கிறரூபமான அர்த்தம் உலகத்தில் சங்கேதத்தால் விளங்குகிறது. இந்தக்குல்லாய் சப்தத்துக்கு அர்த்தத்துடன் ரூடிசக்திரூப சம்பந்தம் இருக்கிறது. (3) எந்தப்பதத்தின் அவயவத்தாலும் அர்த்தமுண்டாகிச்சங்கேதத்தாலும் அர்த்தம் உண்டாகிறதோ அந்தப்பதத்துக்கு அர்த்தத்துடன் யோகரூடி சக்திரூபசம்பந்தமிருக்கின்றது. (உ—ம்) அங்கரகாபதத்தில் அங்கம் ரக்ஷா வென இரண்டு அவயவங்கள இருக்கின்றன. இவைகளின் சேர்க்கையால் சட்டை என்னும் அர்த்தம் விளங்குகிறது. பாதரக்ஷை சரீரத்தின் ஓரங்கத்தை ரக்ஷித்தாலும் அங்கரகா என்று சொல்லப்படுகிறதில்லை. ஆகையால் அங்கரகா என்னும் பதத்தில் இரண்டு சக்திசம்பந்தமுமிருக்கிறது. இவ்விதமாகச்சப்தத்தின் சக்தி விர்த்தி மூன்றுவிதமாயிருக்கிறது. இதற்கேமுக்கியாவிர்த்தியென்றும்பெயர்.

85, லக்ஷணவிர்த்தி:— சப்தத்தின் சக்திவிர்த்திரூபசம்பந்தத்தால் அறியப்படுகிறசப்தத்தின் சாக்ஷாத்சம்பந்தமான அர்த்தம் சக்தியார்த்தம் என்னப்படும். இந்தச்சக்தியார்த்தத்துக்குச்சம்பந்தமாயும் வக்தாவினுடைய தாற்பரியத்துக்கு விஷயமாயுமிருக்கிற வேறு அர்த்தத்தில் சப்தத்துக்குயாதொரு பரம்பராசம்பந்தமுண்டோ அது சப்தத்தின் லக்ஷணவிர்த்தி என்னப்படும். இந்தலக்ஷணவிர்த்தியால் அறியக்கூடிய அர்த்தம் லக்ஷியார்த்தமென்னப்படும், சக்தியார்த்தமூலமாகவுண்டாகும் சம்பந்தம் பரம்பராசம்பந்தம் என்னப்படும்.

546. நையாயிகரீதிப்படி சக்தி லக்ஷணம்:— (கட) பதத்தைக் கேட்கு மளவினால் (கலசரூப) ஒரு பொருள் எலலாருக்கும் விளங்குகிறது. இது :ஸ்வர இச்சை. நியாய சாஸ்த்திரத்தில் இந்த இச்சைக்கு சக்தி யென்று பெயர்.

547. சித்தாந்தப்படிசக்திலக்ஷணம்:— கட பதத்தைக் கேட்கிற வனுக்குக் கலச ரூபப் பொருளின் ஞானமுண்டாகும்படிச் செய்யும் சாமர்த்தியமே கடபதத்தின் சக்தி. இதுபோல் படபதத்தைக் கேட்கிற வனுக்கு வஸ்திரரூபப் பொருளின் ஞானமுண்டாகுமபடிச் செய்யும்சாமர்த்தியமே படபதத்திலுள்ள சக்திவிர்த்தி. இப்படியே எல்லாபதங்களிலும் அறியவேண்டியது. உதாரணம்:— நெருப்பில் அதனுடன் சேரும் பதார்த்தத்தைத் தகிக்கும் சாமர்த்திய ரூபசக்தி இருக்கிறதுபோல், சுரோதாவின் கர்ணேந்திரியத்துடன் சேரும் வஸ்துவின் ஞானத்தைக் கொடுக்கும் பதத்திலுள்ள சாமர்த்தியம் சக்தியெனப்படும். சாமர்த்தியம் பலம் ஜோர் இவைகள் பரியாயபதங்கள். அக்கினியில் தகிக்கிற சக்தி இருக்கிறதுபோல் ஜலத்தில் நனைக்கிற சாமர்த்தியமும் தாகத்தைத்தணிக்கும் சாமர்த்தியம் ஒன்றைப் ஒட்டுவிக்கும் சாமர்த்தியமும் உள. இச்சாமர்த்தியமே சக்தியெனப்படும். இவ்விதமாக எல்லா பதார்த்தங்களிலும் அதன் அதன் காரியத்தைச்செய்யும் சாமர்த்தியமிருக்கிறது. இதுவே சக்தி. இதுவேதத்தின் சித்தாந்தம். இதை நிச்சயமாய் மனதிற் கொள்ளுவாயாக. நியாய சித்தாந்தம் தள்ளத்தக்கது.

548. ஆக்ஷேபம்:— அக்கினியில் அதன் சொரூபத்துக்கு வேறுகயாதொரு சக்தியுங்காணப்படவில்லை. தகிப்பதற்கேதுவான அக்கினியிலுள்ள சாமர்த்தியமே அக்கினியின் சக்தியென்று முன் (547) சொன்னது சரியன்று. ஏனெனில் தஹிக்குங் காரணம் கேவலம் அக்கினியில் தானிருக்கிறது. பிரசித்தமாயிராத சாமர்த்தியம் அக்கினியில் இருக்கிறதாகப் பாவித்து அதனிடத்தில் காரணதையைக் கல்பிப்பதிலும், பிரசித்தமான அக்கினியிலுள்ள் காரணதையைத் தியாகம் செய்வதிலும் யாதொரு பிரயோஜனமில்லை. எப்படித் திர்ஷ்டாந்தத்தில் சக்தி சம்பவிக்கவில்லையோ அப்படிப் பதத்தினிடத்திலும் அக்ஷர சமுதாயமாகிற பதத்தின் ஸ்வரூபத்துக்கு வேறுகச் சக்தி விளங்குகிறதில்லை. அச்சக்திக்குப் பிரயோஜனமுமில்லை. ஆகையால் ஈசுவர இச்சாரூபமான நியாயமதத்திற் சொல்லிய சக்தியே.என் புத்திக்கு ஒத்திருக்கிறது.

549. சமாதானம் (**549—51**):— நண்பனே, பிரதிபந்தங்களிருந்தால் நெருப்பு எரிக்கிறதில்லை. உத்தேஜகங்கள் சமீபத்தில் இருந்

தால் நெருப்புடன் சம்பந்தப்படும் பதார்த்தம் பிரதிபந்தமிருந்தாலும் எரிக்கப்படுகிறது. சக்தியன்றியில் கேவலம் அக்கினியே தகிக்குங் காரணமானால் எப்போதும் அதாவது உத்தேஜகங்கள் சகித பிரதிபந்தங்களிருக்கும்போதும், பிரதிபந்தமில்லாதகாலத்தில் போல உத்தேஜகங்கள் ரகிதப் பிரதிபந்தங்களிருக்கும்போதும், நெருப்பு எரிக்கவேண்டும். ஏனெனில் எரிக்குங்காரணமான கேவலம் அக்கினி அக்காலத்திலும் இருக்கிறது. நம்முடைய மதத்தில் இந்த தோஷமில்லை. ஏனெனில் நம்முடைய மதத்தில் அக்கினியின் சக்தி அல்லது சக்தி சகித அக்கினி எரிக்க ஹேதுவாயிருக்கிறது: கேவலம் அக்கினிமட்டும் ஹேதுவாயில்லை. பிரதிபந்தமிருக்கும்போது பிரதிபந்தத்தால் அக்கினி நாசமாகாவிட்டாலும் அல்லது மறைபடாவிட்டாலும் அக்கினியின் சக்தி நாசமாகிறது, அல்லது மறைபடுகிறது. ஆனதால் எரிப்பதற்கேதுவான சக்தி அல்லது சக்திசகித அக்கினி இல்லாததினால் பதார்த்தமெரிக்கப்படுகிறதில்லை. எவ்விடத்தில் பிரதிபந்தத்துக்குச் சமீபத்தில் உத்தேஜகமிருக்கிறதோ அவ்விடத்தில் பிரதிபந்ததத்தால் அக்கினியின் சக்தி நாசமடைந்தாலும் அல்லது மறைபட்டாலும் உத்தேஜகத்தால் மறுபடியும் உண்டாகிறது அல்லது வெளிப்படுகிறது. ஆனதால் பிரதிபந்தங்களிருந்தாலும் உத்தேஜகங்களுடைய மகிமையால் எரிக்குஞ் சக்தி அல்லது சக்திசகித அகக்கினி விளங்குகிறது. அதனால் பதார்த்தம் எரிக்கப்படுகிறது. இவ்விதமாகப் பிரதிபந்தத்தால் நாசமடைவதும் உத்தேஜகத்தாலுண்டாவதுமான அக்கினியின் சக்தி எரிப்பதற்கு ஏதுவாயிருக்கிறது; காரியத்துக்கு விரோதமாயிருப்பது பிரதிபந்தமென்னப்படும். பிரதிபந்தமிருந்தும் காரியத்துக்குச் சாதகமாயிருப்பது உத்தேஜகமென்னப்படும். அக்கினிவிஷயத்தில் மணிமந்திரௌஷதங்கள் பிரதிபந்தங்களையும் உத்தேஜகங்களாயுமிருக்கின்றன. மணியாவது மந்திரமாவது ஔஷதமாவது சமீபத்தில் இருந்தால் பதார்த்தம் எரிக்கப்படுகிறதில்லை. இவை பிரதிபந்தங்களாம். எந்த மணிமந்திரௌஷதங்களின் சன்னிதானத்தில் பிரதிபந்தங்களிருந்தும் பதார்த்தம் எரிசகப்படுகிறதோ அவைகள் உத்தேஜகங்களாம்.

550. சிஷ்யனே அக்கினியிற்போல் ஜலமுதலியசகலபதார்த்தங்களிலுமுள்ள சக்தியை நீ யறி. சக்தியன்றியில் எந்த ஹேதுவினாலும் எந்தக்காரியமுமாகிறதில்லை. இவ்விதமாகச் சக்தியின் பிரயோஜனஞ் சொல்லப்பட்டது.

551. சக்தியின் அனுபவம்:— அக்கினிக்கு வேறுகச் சக்திகாணப்படவில்லை யென்று முன் (548) சிஷ்யன் கேட்டகேள்விக்குச் சமாதானஞ் சொல்லுவதற்காகச் சக்தியின் அனுபவத்தைக் காண்பிக்கிறேன்: 'இப்

போது இதிற் சக்தியில்லை' 'மறுபடியுஞ் சக்தி யுண்டாயிற்று' என அனுபவம் பிரத்தியக்ஷமாயிருக்கிறது. சித்தாந்தரீதிப்படிச் சக்தியின் சொரூபமும் பிரமாணமும் நிரூபணஞ்செய்யப்பட்டன. இனி இதரமதங்களைக் கண்டிக்கிறேன்.

86

552. நியாயமதகண்டனம்:— பதசக்தி ஈஸ்வரேச்சாரூபமென்று சொன்னது சரியன்று. ஏனெனில் ஈஸ்வரனுடைய இச்சை ஈஸ்வரனுடைய தர்மமாயிருக்கிறது. ஆனதால் அது ஈஸ்வரனிடத்திலிருக்கிறது. ஆகையால் ஈஸ்வரேச்சையே பதசக்தியென்று சொல்வது சரியனன்று. சக்தி பதத்தின் தர்மமனால் பதத்தின் சக்தியென்று சொல்லக்கூடும். ஆனதால் பதத்தின் சாமர்த்தியரூபமே பதசக்தியாம். ஈஸ்வரனுடைய இச்சை பதத்தின் சமீபத்திலில்லாததினால் அதைப் பதசக்தியெனச் சொல்வது சரியன்று.

553. வையாகர்ண ரீதிப்படிச் சக்திலக்ஷணம்:— பதத்தினிடத்திலுள்ள அர்த்தத்தின் யோக்கியதை அதாவது பதார்த்தஞானமுண்டாகும்படிச் செய்யும் ஹேதுவே பதத்தின் சக்தியாம். கடபதத்தில் கலசரூப அர்த்தஞானமுண்டாகும்படியான யோக்கியதையிருக்கிறது. இதுவே சக்தி. இது ஹரிபண்டிதராற் செய்யப்பட்டிருக்கிற வையாகர்ணபூஷணக்கிரந்தத்திலுள்ள செய்யுள்களிற் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

554. வையாகர்ணமதகண்டனம்:— சீஷனே வையாகர்ண மதத்தில் ஒருபிரபலமான தோஷமிருக்கிறதைக்கேள். அர்த்தஞானமுண்டாகும்படிச் செய்யும் யோக்கியதைக்குச் சக்தியென்று சொல்லும் வையாகர்ணிக்கோர்கேள்வி:— உன்னுடைய மதத்தில் பதத்திற் சாமர்த்தியமிருக்கிறதா இல்லையா? சாமர்த்தியமிருக்கிறதென்று சொல்லும்பக்ஷத்தில் நம்முடைய மதத்தின் ரீதிப்படி சக்திபலத்தால் அது சித்திக்கிறது. வையாகர்ணி பதத்தில் சாமர்த்தியமிருக்கிறதாகச் சொல்லும்பக்ஷத்தில் இந்தலோகப்பிரசித்த சாமர்த்தியரூபசக்தியே பதசக்தியாகக் கொள்ளவேண்டியதேதவிரப் பதத்தில் அர்த்தஞானத்தையுண்டுபண்ணும்படியான யோக்கியதையையே சக்தியாகக்கொள்ளத்தகாது. இதன் கருத்தென்னவெனில் எவன் பதத்திற் சாமர்த்தியத்தை யங்கீகரிக்கிறானே அச்சாமர்த்திய

---

86. கடத்தைச்செய்யவேண்டுமென்கிற குயவனுடைய இச்சை குயவன் தர்மமேதவிரக்கடத்தின் தர்மமன்று, இதுபோல் பதத்தினுடைய அர்த்தம் விளங்கும்படியான ஈஸ்வரேச்சை ஈஸ்வரனுடைய தர்மம், ஆகையால் அது ஈஸ்வரனுடைய சக்தியாயிருக்கின்றது, பதத்தினுடைய தர்மமன்று, ஆகையால் அதின் சக்தியுமன்று.

த்திற்கு வேறுகச் சக்தியைக் கொள்வது யுக்தமன்று. சாமர்த்தியரூப மே சக்தியெனக் கொள்வது யுக்தம். ஏனெனில் சாமர்த்தியம் பலம் ஜோர் சக்தி இந்நான்கும் ஒரேவஸ்துவுக்கும் பெயர்களாயிருப்பது லோகப்பிரசித்தம். ஜோரில்லாதவனைப் பலமில்லாதவனென்றும் அல்லது சாமர்த்தியமில்லாதவன் என்றும் அல்லது சக்தியில்லாதவனென்றும் சொல்லுகிறார்கள். மேலும் வரைக்கப்பட்ட வினையைப் பார்த்து இதனிடத்தில் முளைக்கும்படியான சாமர்த்தியமில்லை, பலமில்லை, சக்தியில்லை, அல்லது ஜோரில்லை யென்று சொல்லுகிறார்கள். இவ்விதமாகச் சாமர்த்தியமும் சக்தியுமொன்றென்பதுலோகப்பிரசித்தமாயிருக்கின்றது. அக்கினியினிடத்திலும் சாமார்த்தியரூபமே சக்தியென்பதில் நிச்சயம் ஆகையல் பதத்திற் சாமர்த்தியரூபமே சக்தியென நிரூபிப்பது யுக்தம். பதத்தில் சாமர்த்தியத்தை யங்கரித்து அதற்கு வேறான யோக்கியதையைச் சக்தியாகக் கொள்வது உலகவழக்குக்கு விரோதமேதவிர வேறு பயனில்லை. கேவலம் உலகவழக்குக்கு விரோதமாகிறதே பயனாகும்.

555. சாமர்த்தியத்தையே யோக்கியதையாக வையாகர்ணிசொல்லும்பக்ஷத்தில் நம்முடைய மதமேசித்திக்கிறது.

556. சாமர்த்தியத்தை யங்கரித்தாற் சாமர்த்தியரூபசக்தி பதத்திலிருக்கக்கூடும். இச்சாமர்த்தியத்தை நாம் அங்கரிக்கவில்லை. ஆனதால் அர்த்தஞானத்தை யுண்டுபண்ணக்கூடிய யோக்கியதையே பதத்தின் சக்தியென்று வையாகர்ணிசொல்லும்பக்ஷத்தில் அவரைக் கேட்கவேண்டியதாவது:—சாமர்த்தியம் கேவலம் பதத்திலில்லையா அல்லது ஒருப்புமுதலிய சகலபதார்த்தங்களிலுமில்லையா. இரண்டாவது பக்ஷத்தில் ஒருப்பு முதலியபதார்த்தங்களில் சாமர்த்தியரூப சக்தி யிருப்பதாகப் பிரதிபாதித்தவிடத்தில் (545) சொன்னயுக்தியால் இந்த ஆக்ஷேபம் கண்டிக்கப்படுகிறது. பதத்திற் சாமர்த்தியமங்கரிக்கப்படாதபக்ஷத்தில் அசமர்த்தபதம் அர்த்தஞானத்தைக் கொடுக்கயோக்கியமுள்ளதென்று நிச்சயமாகும். இது அசங்கதம். ஏனெனில் பதம் அசமர்த்தமென்றும் அர்த்தஞானத்தைக்கொடுக்கத்தக்கதென்றும் சொல்வது நபும்சகஸ்த்ரீ அமோகவீரியமிருக்கிறதாகச் சொல்லுதுபோல் விருத்தமாயிருக்கும். சாமர்த்தியத்தோடுகூடியது சமர்த்தம் எனவும் சாமர்த்தியமில்லாதது அசமர்த்தமெனவும் சொல்லப்படுமே. அசமர்த்தத்தால் யாதொரு காரியமும் ஆகிறதில்லை யென்பது உலகப்பிரசித்தமாயிருக்கிறது. ஆனதால் அசமர்த்தபதத்தால் அர்த்தஞானரூபகாரியமுண்டாகமாட்டாது. ஆகையால் பதத்தில் சாமர்த்தியத்தை ஒப்புக்கொள்ளத்தக்கது. சாமர்த்தியத்தை யொப்புக்கொண்டால் சக்தியும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். இவ்விதமாக அர்த்தஞானத்தை யுண்டுபண்ணுகிறயோக்கியதை

பதமுக்தியென்று, சாமர்த்தியரூபமே சக்தி. வையாகரணமதத்தில் வேறு தோஷங்களைப் பார்க்கவேண்டுமாலால் தர்ப்பணக்கிரந்தத்தைச் சோதிக்க வேண்டியது. கண்டனம் கடினமாயிருப்பதால் அக்கிரந்தத்தின்று இதிலெடுத்து எழுதப்படவில்லை.

557. பட்டர்மதப்படிச்சக்திலக்ஷணம் (557—61):— பதத்துக்கு அர்த்தத்துடனுள்ள தாதாத்மியசம்பந்தம் சக்தியென்று பட்டர்மதத்தை

---

87. சங்கராதிக்விஜயத்தில் குமாரிலபட்டரென்றும் பட்டபாதரென்றும் சொல்லப்பட்டவரும் மண்டனமிசிரருடையவும் பிரபாகரருடையவும் குருவாயிருப்பவருமே இவ்விடத்தில் பட்டரென்பதால் கிரகிக்கத்தக்கது.

88. அபாவம், சாதிருசியம், இவைகளுக்கு வேருயும் பிரதியோகியை அபேக்ஷித்துக்கொண்டும், ஞாதைத்துக்கு விஷயமாயிருப்பது சம்பந்தம் என்று சொல்லப்படும். எதினிடத்தில் எது சேருகிறதோ அப்படிச்சேர்ந்த வஸ்து சம்பந்தத்துக்கு அனுயோகி என்றும் சேரும் வஸ்துசம்பந்தத்துக்குப்பிரதியோகி என்றும் சொல்லப்படும். இந்த சம்பந்தம் அநேகவிதமாயினும முக்கியமாய் (1) சம்யோகம். (2) சமவாயம். (3) தாதாத்மியம். என மூன்று சம்பந்தங்கள் சொல்லப்படுகின்றன.

I. இரண்டு திரவியங்களின் சம்பந்தம் சம்யோகசம்பந்தமாம். இது மூவகைத்து. (1) கர்மஜசம்யோகம். (2) சம்யோகஜசம்யோகம். (3) சஹஜசம்யோகம். எதின் உற்பத்தியில் கிரியை அசமவாயி (நிமித்த) காரணமாயிருக்கிறதோ அது கர்மஜசம்யோகம். இது இருவகை. (1) அன்னியதரகர்மஜம். (2) உபயதரகர்மஜம். ஒன்றின் கிரியையால் உண்டாவது அன்னியதரகர்மஜம். பக்ஷிபராக்கிறதினால் பக்ஷிக்கும் விருக்ஷத்துக்கும் உண்டாகும் சம்பந்தம் போலும். இரண்டு ஆடுகள் சேருவது உபயதரகர்மஜம். சம்யோகரூப அசமவாயிகாரணத்தால் உண்டாவது சம்யோகஜசம்யோகம். கையைமரத்தில்வைப்பதினால் சரீரத்துக்கும் மரத்துக்கும் உண்டாகும் சம்பந்தம் சம்யோகஜசம்யோகமாம். ஜன்மத்திலேயே இருக்கும் சம்பந்தம் சஹஜசம்யோகம். தங்கத்தில் பார்த்திவ பாகத்துக்கும் தைசஸபாகத்துக்குமுள்ள சம்பந்தம் சஹஜசம்யோகமாம்.

II. நித்தியசம்பந்தத்துக்கு சமவாயசம்பந்தம் என்று பெயர். நியாயமதத்தில் குணகுணிக்கும், ஜாதிவியக்திக்கும், கிரியை கிரியாவானுக்கும், காரணகாரியத்துக்கும் உள்ள சம்பந்தம் சமவாயமாம்.

III. நியாயமதத்தில் ஸ்வரூபசம்பந்தத்துக்குப்பெயர் தாதாத்மியம். பூர்வமீமாம்சத்தின் வார்த்திகக்காரரான பட்டருடையமதத்தில் ஸ்வல்பபேதத்தோடுகூடின அபேதத்துக்கு தாதாத்மியமென்றுபெயர். வேதாந்தசித்தாந்தத்தில்பேதாபேதங்களுக்கு விலக்ஷணமான சம்பந்தம் தாதாத்மியமாம். இதற்கே அனிர்வசனீயதாதாத்மியம் என்றும் பெயர். பேதத்துக்கு விலக்ஷணமென்றமையால் வா

யலுசரித்தவர்கள் சொல்லுகிறார்கள். இதை நீ அறி. இத்தாதாத்மிய சம்பந்தம் பேதாபேதரூபமென்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய

ஸ்தவியத்தில் அபேதமும், அபேதத்துக்கு விலக்ஷணமென்றமையால் கல்பித பேதமும் ஸாதிக்கப்படுகின்றன. ஆகையால் சித்தாந்தத்தில் கல்பிதபேதத் தோடுகூடிய வாஸ்தவிய அபேதத்துக்கு தாதாத்மியசம்பந்தம் என்றுபெயர். குணகுணீ ஆதிகளில் நியாயமதத்தில் சமவாயசம்பந்தம் சொல்லியிருக்க பட்ட ருடையமதத்திலும் வேதாந்தத்திலும் தாதாத்மியசம்பந்தம் சொல்லப்படுகி றது. தாதாத்மியசம்பந்தம் மூன்று வகைத்து, (1) சகஜதாதாத்மியம் (2) கர்மஜதாதாத்மியம் (3) ப்ராப்திஜதாதாத்மியம். (1) சித்து அகங்காரத்தில் ப்ரதிபிம்பித்து அந்த ப்ரதிபிம்பமும் அகங்காரமும் கூடித்தாயப்பிண்டம் போல் ஏகரூபமாய் அந்தச்சித்தைப்போலவேதோற்றும். அந்த சித் ப்ரதிபிம் பத்துடன் கூடிக்கொண்டிருக்கும் அகங்காரத்திற்கே சகஜதாதாத்மியமென்று பெயர். பிறக்கும்போதே இரண்டும் கூடிப்பிறந்தபடியினால் இவ்விரண்டின் தாதாத்மியமே சகஜதாதாத்மியமென்று சொல்லப்படுகிறது. (2) சித்ப்ரதிபிம் பத்துடன் கூடிக்கொண்டு இத்தைப்போலவே தோற்றப்பட்ட அகங்காரத்திற்கு ஸ்தூலசரீரத்துடன் சம்பந்தம் வந்தபோது கர்மஜதாதாத்மியம் என்று சொல் லப்படும். சாக்ஷாத்போகப்ரதானமானகர்மம் பிறந்தபோது அந்த கர்மஜதா தாத்மியம் பிறக்கின்றது, அந்தக்கர்மம் நசித்தால் அந்தக்கர்மஜதாதாத்மியமு ம் நசித்துப்போகின்றது, கர்மமுண்டானால் கர்மஜதாதாத்மியமுண்டு, கர்மமில் லாவிட்டால் கர்மஜதாதாத்மியமில்லை. சாக்ஷாத்ஸாக்ஷாத்கரிக்கப்பார்க்க. (3) நான் ப்ராமணன் க்ஷத்ரியன் ப்ரம்மசாரி சன்னியாசி என்கிற சித்தவிர்த்தியுடன் கூடியிருக்கிற அகங்காரத்திற்கு அகஞ்சப்தார்த்தமான சாட்சியுடன்கூடியதா தாத்மியம் ப்ராப்திஜதாதாத்மியமாம். சர்வாபீஷ்டமான ஆத்மச்சொரூபத் தை நானென்று அறியாமல் இப்படி ப்ராப்தியால் வந்தபடியால்இதற்கு ப்ராப்தி ஜதாதாத்மியமென்றுபெயர்வந்தது. நியாயமதத்தில்குணகுணியாதிகளிடங்களில் சமவாயசம்பந்தஞ்சொல்லப்படும்போது வேதாந்தத்திலும்பட்டர்மதத்திலும்தா தாத்மியம்சொல்லப்படுகிறது. ஆகையால்இவ்விரண்டு தாதாத்மியங்களுக்கும் பேதமு ண்டு. கேவலபேதம் இருக்கும்போது தாதாத்மியஞ்சொல்வது சரியன்று. ஏ னெனில் அபேதப்ப்ரதிதிக்கு விஷயமானது தாதாத்மியமென்னப்படும். கே வலபேதமிருக்குமிடத்தில் அபேதப்ரதிதி சம்பவிக்கமாட்டாது. ஆகையால் தாதாத்மியசம்பந்தத்தில் அபேதம் வேண்டியதாயிருக்கிறது. மேலும் கேவ லம் அபேதமிருந்தால் சம்பந்தமே சித்திக்காது. இரண்டு பதார்த்தங்களுக்கு ச்சம்பந்தஞ்சம்பவிக்கும். தன் சொரூபத்துடன் தனக்குச்சம்பந்தம் சம்பவிக்க

அபிப்பிராயமென்னவெனில் அக்கினியென்னும் பதத்துக்கும் அங்கார 89
மென்னும் அர்த்தத்துக்கும் அத்தியந்தம் பேதமில்லை. அப்படியிருந்தா
ல் எப்படி அக்கினிபதத்தால் அத்தியந்தம் பின்னமானஜலம் முதலியவை
கள் பிரதீதியாகவில்லையோ அப்படி அக்கினிபதத்தால் அங்காரரூப அர்
த்தமும் பிரதீதியாகக்கூடாது. பதத்துக்கு அத்தியந்தம் பின்னமான அ
ர்த்தம் பிரதீதியாகிறதில்லை. பதத்துக்குத்தன்னர்த்தத்துடன் அத்தியந்
தம் பேதம் இல்லாததுபோல் அத்தியந்தம் அபேதமுமில்லை. அத்திய
ந்த அபேதம் வாச்சியவாசகங்களுக்கிருந்தால் அக்கினிபதத்தின் வாச்சிய
மான அங்காரத்தால் முகம் சுடப்படுகிறதுபோல் அங்காரத்தின் வாசக
மான அக்கினிபதத்தை யுச்சரிப்பதனாலும் முகம் சுடப்படவேண்டும்.
ஆனால் பதத்தை யுச்சரிப்பதினால் முகம் சுடப்படுகிறதில்லை. ஆகையால்
அத்தியந்தம் அபேதமுமில்லை. ஆனால் அக்கினிபதத்துக்கு அங்காரரூப
அர்த்தத்துடன் பேதசகித அபேதமிருக்கிறது. பேதமிருப்பதால் முகம்
சுடப்படுகிறதில்லை. அபேதமிருப்பதால் அக்கினிபதத்தால் ஜலமுதலிய
வைகள்போல் அங்காரத்தின் பிரதீதியுண்டாகாமலிருக்கிறதில்லை. எ
ப்படி அக்கினிபதத்துக்கு அங்காரரூப அர்த்தத்துடன் பேதசகித அபே
தமிருக்கிறதோ அப்படி உதகம், தகம், ஜீவனம், இந்தப்பதங்களுக்கு
ஜலரூப அர்த்தத்துடன் பேதசகித அபேதமிருக்கிறது. அத்தியந்தம்
பேதம் இருந்தால் எப்படி உதகமுதலிய பதங்களுக்கு அத்தியந்தம் பின்
னமான அக்கினிமுதலியவைகள் உதகம் முதலியபதங்களால் பிரதீதியாக
வில்லையோ அப்படி ஜலரூப அர்த்தமும் உதகம் முதலியபதங்களால் பிர

6

மாட்டாது. ஆகையால் சம்பந்தமிருக்குமிடங்களில் எல்லாம் பேதமும் வேண்
டியதாயிருக்கிறது. ஆகையால் தாதாத்மியசம்பந்தத்தில் பேதமும் வேண்டிய
தாயிருக்கிறது. இவ்விதமாகப்பேதாபேதங்களிரண்டுமன்றியில் தாதாத்மியசம்
பந்தம் ஒவ்வாது. பேதாபேதங்கள் ஒரேயிடத்திலிருப்பதும் விருத்தம். ஆ
யினும் மேற்சொல்லியபடி கல்பிதபேதசகித வாஸ்தவ அபேதமாகிற தாதாத்மி
யசம்பந்தம் ஒரேயிடத்தில் சித்திக்கும். இதுவே அநிர்வசனீயதாதாத்மியசம்
பந்தம் என்னப்படும்.

நிதியாகக்கூடாது. பிரதிதியாகிறதினால் அத்தியந்தம் பேதமில்லை. மேலும் அத்தியந்தம் அபேதமுமில்லை. அப்படியிருந்தால் ஜலத்தால் முகத்தில் குளிர்ச்சியுண்டாகிறதுபோல் உதகம் முதலிய பதங்களுச்சரிப்பதனாலும் முகத்தில் குளிர்ச்சியுண்டாகவேண்டும். ஆனால் பதத்தினால் குளிர்ச்சியுண்டாகிறதில்லை. ஆகையால் அத்தியந்த அபேதமில்லை. பேதசகித அபேதமிருப்பதால் இரண்டுதோஷங்களுமில்லை; இவ்விதமாக எங்கும் தன்வாச்சியத்துடன் வாசகபதத்துக்குப்பேதசகித அபேதமிருக்கிறது. இந்தப்பேதசகித அபேதத்தைப்பட்டரையனுசரித்தவர்கள் தாதாத்மியசம்பந்தமென்று சொல்லுகிறார்கள்; பேதாபேதமென்னும் சொல்வார்கள். இந்தப்பேதாபேதரூபதாதாத்மிய சம்பந்தமே சகலபதங்களிலுமுள்ள அநேகதன் அர்த்தத்தைக்கொடுக்குஞ்சக்தியாம். தாதாத்மிய சம்பந்தத்துக்கு வேறுகச்சாமர்த்தியரூபசக்தி இல்லை. பேதாபேதத்திலே யுக்தி சொல்லப்பட்டது.

558. இனிப்பிரமாணஞ்சொல்லுகிறேன்:— மாண்டூக்கியம் முதலிய வேதவாக்கியங்களில் ஓம் அக்ஷரம் பிரம்மமென்று சொல்லப்பட்டிருக்கிறது. வியாகரணரீதிப்படிப்பிரகாசனாடாமாயும் எல்லாவற்றையுங்காப்பாற்றுவதாயுமிருக்கிறது ஓம் அக்ஷரத்தின் அர்த்தம். 'பிரம்மமிப்படியிருக்கிறது. ஆகையால் ஓம் அக்ஷரம் பிரம்மத்தின் வாசகம். பிரம்மம் வாச்சியம். வாசியவாசகங்களுக்குத் தம்முக்குள் அத்தியந்தம் பேதம் இருந்தால் வாசக ஓம் அக்ஷரத்துக்கும் வாச்சியப் பிரம்மத்துக்கும் மாண்டூக்கியாதி உபநிஷத்துக்களில் அபேதஞ் சொல்லப்பட்டிராது. ஆனால் ஓம் அக்ஷரம் பிரம்மமென்று அபேதஞ் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் வாச்சிய வாசகங்களின் அபேதத்தில் வேதவசனம் பிரமாணம.

559. மேலும் உலகவழக்கிலும் வாச்சியவாசகங்களின் பேதஞ் சித்திக்கிறது. எப்படியெனில் அக்கினி முதலியபதங்கள் வாக்கினிருக்கின்றன. அங்காராதி இலைவகளின் அர்த்தங்கள் வாக்குக்கு வெளியில் அடுப்பு முதலியவிடங்களில் இருக்கின்றன. இதுபோல் ஓமென்னும் அக்ஷரரூபபதம் வாக்கிலிருக்கிறது. அதின் அர்த்தமாகிற பிரம்மம் வாக்கில்லாமல் வாக்குக்கு வெளியில் அதாவது தன் மகிமையிலிருக்கிறது. பிரம்மம் வியாபகமாயிருப்பதால் வாக்கிற் பிரம்மாபாவமில்லாவிட்டாலும் பிரம்மத்தில் வாக்கிருக்கிறதேதவிர வாக்கிற் பிரம்மமில்லை.[90] இவ்விதமாகப்பதம் வாக்கிலும் அர்த்தம் வாக்குக்கு வெளியிலும் எல்லாருக்

---

90. சொல்பதேசத்திலிருப்பது வியாப்பியமெனப்படும். அதிதேசத்

கும் விளங்குகின்றன. ஆனையால் பதத்துக்கும் அர்த்தத்துக்கும் பே தம் லோகப்பிரசித்தமாயிருக்கிறது. இவ்விதமாக வாச்சியவாசகங்களி ன் பேதத்தில் சர்வலோகானுபவமும் பிரமாணமாயிருக்கிறது. அவை களின் அபேதத்தில் வேதவசனம் பிரமாணமாயிருக்கிறது. ஆதலால் பதத்துக்கு அர்த்தத்துடன் பேதாபேதரூபதாதாத்மிய சம்பந்தம் அப் பிரமாணமன்று. ஆனல் பிரமாணசித்தமாயிருக்கிறது.

560. பிரசங்கத்துக்கு அன்னியஸ்தானங்களிலும் பேதாபேத தாதாத்மியசம்பந்தத்தை காண்பிக்கிறார். ரூபம் ரஸம் கந்தம் முதலியவை குணங்களாம்.[91] இவ்வகளின் ஆசிரயம் குணியென்னப்படும்.[92] ரூபாதிக ளின் ஆசிரயமான பூமி குணியாயிருப்பதுபோலும், அவைகளிலிருக் கிற ஏகோதாடம் ஜாதியென்னப்படும்.

உதாரணம்:— எல்லாப்பிராமணசரீரங்களிலும் ஒரு பிராமண த்துவமிருக்கிறது. எல்லாச்சூத்திரர்களிடத்திலும சூத்திரத்துவமிருக் கிறது. எல்லா ஜீவர்களிடத்திலும் ஜீவத்துவமிருக்கிறது. புருஷர்க ளிடத்தில் புருஷத்துவம் இருக்கிறது. எல்லாக்கடங்களிலும் கடத்துவ மிருக்கிறது. உலகத்திலெதற்குப்பிராமணத்துவம் சூத்திரத்துவம் மு தலியவைகளைச்சொல்லுகிறார்களோ அதற்கே பிராமணர் சூத்திரர் முத லியஜாதிகளென்றுபெயர். ஜாதிக்கு ஆசிரயமான பிராமணன் முதலிய வனியக்தியென்னப்படுவான். மற்றவைகட்கும் இவ்வாறு கொள்க. போதல் வருதல் முதலியவை கிரியைகளென்னப்படும். இவைகளையு ஸ்டயலன் கிரியாவான் அதாவது கிரியைக்காசிரயமானவன். இவ்வளவு பதார்த்தங்களுக்கும் தாதாத்மியசம்பந்தமிருக்கிறதென்பதை நீயறிவா யாக.

---

f

தலிருப்பது வியாபகமென்னப்படும். கடம் வியாப்பியம். ஆகாசம் வியாபக ம். வியாப்பியம் வியாபகத்துக்குள்ளும வியாபகம் வியாப்பியத்துக்கு வெளி யிலுமிருக்கின்றன. கடாகாசங்கள் போலும். வாக்கு பிரம்மத்தைக்காட்டிலும் கொல்லதேசத்திலிருப்பதால் வியாப்பியமாயும் பிரம்மத்துக்குள்ளுமிருக்கிற து. பிரம்மம் வாக்கைக்காட்டிலும் அதிகதேசத்திலிருப்பதால் வியாபகமாயும் வாக்குக்கவியாபியுமிருக்கிறது.

91. முதலிய சப்தத்தால் நியாயமதத்திற் சொல்லிய ரூபாதிகந்தங்க ள் தவிர பாக்கியான 2 குணங்களையும் இங்கிதக்கத்தக்கன.

92 நிரவியம்

561. குணத்துக்கும் குணிக்கும் ஜாதிக்கும் வியக்திக்கும் கிரியைக்கும் கிரியாவானுக்கும் தாதாத்மியசம்பந்தமிருப்பதுபோல் காரணத்துக்கும் காரியத்துக்கும் தாதாத்மியசம்பந்தமிருக்கிறது. தாதாத்மியமென்றால் பேதசகிதஅபேதமாம். நிமித்தகாரணத்துக்கும் காரியத்துக்கும் பேதாபேதரூபத்தாதாத்மியமில்லாமல் அத்தியந்தம் பேதமிருந்தாலும் உபாதானகாரணத்துக்கும் காரியத்துக்கும் பேதாபேதரூபத்தாதாத்மியசம்பந்தமிருக்கிறது. கடத்துக்கு நிமித்தகாரணம் குலாலன் தண்டம் முதலியன. இவைகளுக்கும் கடரூபகாரியத்துக்கு அத்தியந்தபேதமிருக்கிறது. ஆனால் உபாதானகாரணமான மண்ணுக்கும் கடமாகிற காரியத்துக்கும் பேதசகிதஅபேதமிருக்கிறது. மண்ணினின்றும் கடம் அத்தியந்தம் வேறுபட்டால் மண்ணினின்றும் அத்தியந்தம் பின்னமான தலை முண்டாகாததுபோல் கடமுண்டாகக்கூடாது. உபாதானகாரணத்துக்கும் காரியத்துக்கும் அத்தியந்தம் அபேதமிருக்கும்பக்ஷத்திலும் மண்ணினின்றும் கடமுற்பத்தியாகமாட்டாது. ஏனெனில் தன்ஸ்வரூபத்தினின்று தன்னுற்பத்தியுண்டாகமாட்டாது. ஆனதால் உபாதானகாரணத்துக்கும் காரியத்துக்கும் பேதசகிதஅபேதமிருக்கிறது. ஆகையால் அத்தியந்தம் பேதபக்ஷத்துக்குத் தோஷமில்லை. பேதமிருந்தாலும் அபேதபக்ஷத்துக்குத் தோஷமில்லை. இவ்விதமாக் உபாதானகாரணத்துக்குங்காரியத்துக்கும் பேதாபேதம் யுக்தியாற் சித்திக்கின்றது.

பிரதீதியாலும் உபாதானகாரணத்துக்கும் காரியத்துக்கும் பேதாபேதஞ்சித்திக்கின்றது. இதுமண் இது கடம் எனப் பின்னப்பிரதீதியால் பேதஞ்சித்திக்கிறது. விசாரித்துப்பார்க்குமளவில் கடத்துக்குள்ளும்புறமும் மண்ணைவிட வேறொன்றும் பிரதீதியாகவில்லை. ஆனால் மண்ணை பிரதீதியாகிறது. ஆகையால் அபேதஞ் சித்திக்கிறது. இவ்விதமாக உபாதனகாரணத்துக்கும் காரியத்துக்கும் பேதாபேதரூபத் தாதாத்மியசம்பந்தமிருக்கின்றது.

இதுபோல குணத்துக்கும் குணிக்கும் பேதாபேதமிருக்கிறது. கடத்தின் ரூபத்துக்கும் கடத்துக்கும் அத்தியந்தம் பேதமிருந்தால் எப்படிக் கடத்துக்கும் படத்துக்கும் அத்தியந்தம் பேதமிருக்கிறதோ இந்தப்படம் கடத்தையாசிரயிக்காமல் சுதந்திரமாயிருக்கிறதோ அப்படிக் கடத்தின் ரூபமும் கடத்தை யாசிரயிக்காமல் இருக்கவேண்டும். குணத்துக்கும் குணிக்கும் அத்தியந்தம் அபேதமிருந்தாலுங்கூடக் கடத்தின் ரூபம் கடத்தையாசிரயிக்காமலிருக்கவேண்டும். ஏனெனில் தான்தனக்கேயாசிரயமாயிருக்கமாட்டது. ஆகையால் குணகுணிகளுக்குப்பேதாபேதரூபத்தாதாத்மியசம்பந்தமிருக்கிறது. ஜாதிக்கும் வியக்திக்கும் அப்படியே கிரியைக்கும் கிரியாவானுக்குமுள்ள பேதாபேதரூபத் தாதாத்

மியசம்பந்தமும் இவ்விதயுந்தியால் அறியத்தக்கது. இதைக் கண்டிக்கிற மதவிஷயமாய் அனேக யுந்திகளுண்டு. அவைகளைச்சொல்வதிற் பயனில்லாமையால் இங்கே எடுத்துக் கூறவில்லை.

562. பட்டாமதக்கண்டனம்(562—70):— 557க்கு உத்தரம்:— ஒருவஸ்துவுக்கு ஓரேயிடத்தில் பேதா பேதமிருப்பது விரோதமென்று யுந்திமான்கள் கண்டு இதைப்பிசகென்று நினைக்கிறார்கள். இதற்குக் கருத்தென்னவெனில், ஒருகடத்தினிடத்தில் தன்னபேதமும் பிறவஸ்துக்களின் பேதமுமிருந்தாலும் எதின் அபேதமிருக்கிறதோ அதின் பேதமில்லை, எதின் பேதமிருக்கிறதோ அதின் அபேதமில்லை. ஆகையால் ஓரேயிடத்தில் பேதாபேதஞ் சொல்வது விரோதமாயிருக்கிறது. பேதா பேதங்கள் தங்களுக்குள் விரோதிகளாயிருக்கின்றன. ஒரு வஸ்துவினிடத்தில் எதற்கு பேதமிருக்கிறதோ அதற்கு அபேதமும் எதற்கு அபேதமிருக்கிறதோ அதற்கு பேதமும் விரோதப்படுவதால வாச்சியவாசகங்கள் குணகுணிகள் ஜாதிவியக்தி கிரியை கிரியாவான் உபாதானகாரணம் கார்யம் இவைகளின் பேதாபேத ரூபத்தாதாத்மிய சம்பந்தம் அசுத்தமாகும்.

563. வாக்கில் வாசகமும் வெளியில் வாச்சியமும் இருப்பதால் பேதமும், சுருதியில் ஓம் அக்ஷரம் பிர்ம்மமென்று சொல்லியிருப்பதால் அபேதமும், முன் (558—559) வாச்சியவாசகங்களின் பேதாபேதத்தில் பிரமாணமாகச்சொல்லப்பட்டன. அதற்குச்சமாதானம் இங்கே சொல்லுகிறோம். பிரணவமாகிய ஓம் அக்ஷரத்துக்கும் பிர்மமத்துக்கும் வேதத்தில் அபேதஞ்சொல்லப்பட்டிருக்கிறது. வேதவசனத்துக்கு வாச்சிய வாசகங்களின் அபேதத்தில் கருத்தில்லை. ஆனால் அதில் வேறொரிரகசியமான அபிப்பிராயமிருக்கிறது. அந்தஅபிப்பிராயம் பட்டராற்சொல்லப்படவில்லை. ஓம் அக்ஷரம் பிர்ம்மமென்று சொன்னபோது ஓம் அக்ஷரத்துக்கும் பிர்ம்மத்துக்கும் பேதமில்லையென்று அல்வாக்கியத்தின் தாற்பரியமன்று. ஆனாலோ ஓம் அக்ஷரத்தைப்பிர்ம்மரூபமாக உபாஸனை செய்யவேண்டியதெனத்தாற்பரியம். எதின் உபாஸனை விதிக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே உபாஸியத்தின் சொரூபமுமிருக்கவேண்டியதென்பதுநியமமில்லை. ஆனால் வஸ்துவின் சொரூபம் விடப்பட்டு வேறுஸ்வரூபமும் அதனிடத்திலுபாஸிக்கப்படக்கூடும். திர்ஷ்டாந்தம்:— சாளக்கிராமத்தையும் பாணத்தையும் விஷ்ணுரூபமாயும் சிவரூபமாயும் உபாஸிக்கும்படிச்சொல்லப்பட்டிருக்கிறது. சங்குசக்காராதிகளுடன் கூடிய சதுர்ப்புஜமூர்த்தி சாளக்கிராமத்திலில்லை. கங்காதரனும், ஜடாதரனும், டமரு, தோல், கபாலசுகதனும், பத்திராமுத்திரையால் சரணாக

தியடைந்தவர்களுக்குத்திரிகுணரஹிதமான ஆத்மோபதேசம் பண்ணுகி றவருயுமிருக்கிற மூர்த்தி பாணத்திலில்லை. ஆதல் சாளக்கிராமமும் பாணமும் சிலாரூபங்களாயிருக்கின்றன. சாஸ்திரத்தின் ஆஞ்ஞையால் இவைகளின் சிலாரூபதிர்ஷ்டியை விட்டுச்சாளக்கிராமபாணங்களில் வி ஷ்ணுரூபத்தையும் சிவரூபத்தையும் உபாசிக்கிறார்கள். ஆனதால் உபா ஸனை உபாஸியத்தின் ஸ்வரூபத்துக்காதீனமாகிறதில்லை, ஆனல் விதிக் காதீனமாயிருக்கிறது. சாஸ்திரவசனம் விதிக்கிறதுபோல் உபாஸனை செய்யவேண்டியது. சாந்தோக்கியஉபநிஷத்தில் பஞ்சாக்கினிவித்தியா ப்பிரகரணத்தில் சுவர்க்கலோகம் மேகம் பூமி புருஷன் ஸ்திரீ இவ்வை ந்து பதார்த்தங்களையும் அக்கினிரூபமாக வுபாஸிக்கும்படிச்சொல்லியிரு க்கிறது. மேலும் சிரத்தை சோமம் மழை அன்னம் வீரியம் இவ்வைந் து பதார்த்தங்களையும் பஞ்சாக்கினிகளின் ஆகுதிகள் ரூபமாக வுபாஸிக் கும்படிச்சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்விடத்தில் ஸ்வர்க்காதிகள் அக்கினியன்று. சிரத்தாதிகளும் ஆகுதியன்று. ஆயினும் வேதாஞ் ஞையால் ஸ்வர்க்காதிகளை அக்கினிரூபமாயும் சிரத்தாதிகளை ஆகுதிரூப மாயும் பாவித்து உபாஸிக்கிறார்கள். இவ்விதமாக ஓம் அக்ஷரத்தைப் பிரம்மரூபமாக உபாஸிக்கத்தக்கதெனச்சொல்லப்படுகிறது. ஓம் அக்ஷ ரமே பிரம்மரூபமன்று. ஆயினும் பிரம்மரூபமாய்ப்பாவிக்கப்பட்டு உபா ஸனை சித்திக்கிறது. உபாஸனைவாக்கியத்தில் வஸ்துவின் அபேதம் அவ சியமில்லை. ஆனல் பின்னவஸ்துவினுடையும் அபின்னரூபத்தால் உ பாஸனைசித்திக்கும்.

564. விசாரித்துப்பார்க்குமளவில் பிரம்மத்தின்வா சகமான ஓம் அக்ஷரத்துக்கும் வாச்சியமான பிரம்மத்துக்கும் அபேதம் ஒவ்வும். கடாதி அன்னியபதங்களுக்கும் அவைகளின் ஜடரூப அர்த்த ங்களுக்கும் அபேதம் ஒவ்வாது. ஏனெனில் நாமரூபங்களெல்லாம் பிர ம்மத்திற் கல்பிக்கப்பட்டிருக்கின்றன. பிரம்மம் அதிஷ்டானமாயிருக்கி றது. ஓம் அக்ஷரமும் பிரம்மத்தின் நாமமாயிருப்பதால் பிரம்மத்திற் க ல்பிதமாயிருக்கிறது. கல்பிதவஸ்து அதிஷ்டானத்துக்கு வேறுகாமல் அ திஷ்டானரூபமாகவே இருக்கிறது. ஆகையால் ஓம்அக்ஷரம் பிரம்மரூப மாயிருக்கிறது. கடாதிபதங்களுக்கு ஜடரூபஅர்த்தங்கள் அதிஷ்டான ங்களன்று. ஆனல் வாச்சியசிதகடாதிபதங்கள் பிரம்மத்திற் கல்பிதமா யிருக்கின்றன. பிரம்மம் அவைகளின் அதிஷ்டானம். ஆகையால் பிரம் மத்துக்கும் மற்றெல்லாவற்றிற்கும் அபேதமிருக்கக்கூடும். ஆனல் கடா திபதங்களுக்கும் அவைகளின் ஜடரூபவாச்சியார்த்தங்களுக்கும் அபேத ம் எவ்விதத்திலும் சித்திக்காது. ஆனதால் பட்டர்மதத்தில் வாச்சியவா சகங்களுக்கு அபேதஞ் சொன்னது அசங்கதம்.

565. வாச்சியவாசகங்களுக்குக் கேவலம் பேதம் அங்கீகரிப்பதில் அடியில் கண்டதோஷம் பட்டராற் சொல்லப்பட்டிருக்கிறது:—கடபதத்தின் வாச்சியம் கடபதத்தைக்காட்டிலும் அத்தியந்தம் பினனமாயிருந்தால் கடபதத்தால் அத்தியந்தம் பின்னமான வஸ்திரரூபஅர்த்தம் பிரதீதியாகாததுபோல் கடபதத்துக்கு அத்தியந்தம் பின்னமான கலசரூபஅர்த்தமும் பிரதீதியாகக்கூடாது. மேலும் கடபதத்தைக்காட்டிலும் பின்னமர்கவாச்சியத்தைப் பாவித்துக் கடபதத்தால் அது பிரதீதியாகிறதாக நினைக்கும்பக்ஷத்தில் எப்படிக் கடபதத்துக்கு அத்தியந்தம் பின்னமான கலசரூபஅர்த்தம் கடபதத்தால் விளங்குகிறதோ அப்படி அத்தியந்தம் பின்னமான வஸ்திரமும் கடபதத்தால் பிரதீதியாகக்கூடும். இந்தத்தோஷம் சக்தியை அங்கீகரிக்காதமதத்திலிருக்கிறது. சக்தியை யங்கீகரிக்கிற மதத்திலில்லை. ஏனெனில் கடபதத்தின் வாச்சியம் கலசம், அதின் அவாச்சியம் வஸ்திராதிகள், இவ்விரண்டும் கடபதத்துக்கு வேறுயிருக்கின்றன. ஆனல் கடபதத்தில் கலசரூபஅர்த்தஞானத்தைகொடுக்கும்படியான சக்தி யிருக்கிறது. வேறு அர்த்தஞானத்தைக் கொடுக்கும்படியான சக்தியில்லை. ஆனதால் கடபதத்தால் கலசரூப அர்த்தத்துக்கு வேறான அர்த்தம் பிரதீதியாகிறதில்லை. இவ்விதமாக எந்தபதத்தில் எந்தஅர்த்தத்தின் சக்தி யிருக்கிறதோ அதேயர்த்தம் அப்பதத்தால் பிரதீதியாகிறது. வேறுஅர்த்தம் பிரதீதியாகிறதில்லை. ஆகையால் வாச்சியவாசகங்களின் அத்தியந்தபேதத்தில் தோஷமில்லை. அவைகளின் பேதசகிதஅபேதரூபத்தாதாத்மியசம்பந்தம்சரியன்று. பேதமும்அபேதமும்ஒன்றுக்கொன்றுவிரோதமாயிருக்கின்றன.

566. இப்படியே உபாதான காரணத்துக்கும் காரியத்துக்கும் பேதசகித அபேதமில்லை. கேவலம் பேதமிருக்கிறது. கேவலம் பேதத்திற் சொன்ன தோஷம் நையாயிகமதத்திலும் சக்திவாதியின்[93] மதத்திலும் இல்லை. ஏனெனில் காரண காரியங்களின் அத்தியந்த பேதத்தில் அடியிற் கண்ட தோஷமிருக்கிறது:— மண்ணினின்று அத்தியந்தம் பின்னமான கடமுற்பத்தியாலல் அத்தியந்தம் பின்னமான எதலமும் மண்ணினின்று உற்பத்தியாகக்கூடும். அத்தியந்தம் பின்னமான எதலமுற்பத்தியாகாதபக்ஷத்தில் அத்தியந்தம் பின்னமானகடமும் மண்ணினின்று உற்பத்தியாகக் கூடாது. இந்தத் தோஷம் நையாயிகமதத்திலில்லை. ஏனெனில் சகல வஸ்துக்களினுற்பத்தியில் நையாயிகன்[94] பிராகபாவத்

---

93. சித்தாந்தி.
94. முன்இல்லாமை.

னைக் காரணமாகப்பாவிக்கிறான். கடத்தினுற்பத்தியில் தண்டம் சக்கரம் குலாலன் காரணமாயிருப்பதுபோல் கடத்தின் பிராகபாவமும் கடத்துக்குக் காரணமாயிருக்கிறது. இப்படியே சகலபதார்த்தங்களின் பிராகபாவமும் சகல பதார்த்தங்களினுற்பத்திக்குக் காரணமாயிருக்கிறது. கடத்தின் பிராகபாவம் கடத்தினுபாதான காரணமான மண்ணினிருந்தே தவிர வேறொன்றினுமில்லை. எண்ணெயின் பிராகபாவம் எள்ளிலிருந்தேதவிர வேறொன்றினுமில்லை. இவ்விதமாகச் சகலகாரியங்களின் பிராகபாவமும் அவைகளின் உபாதானகாரணத்திலிருக்கிறது. எந்தப் பதார்த்தத்தில் எதின் பிராகபாவமிருக்கிறதோ அந்தப் பதார்த்தத்திலிருந்து அது காரணற்பத்தியாகிறதேதவிர் வேறொன்றுமாகிறதில்லை. உதாரணம்:— மண்ணில் கடத்தின் பிராகபாவமிருக்கிறதினால் மண்ணினின்று கடமுற்பத்தியாகிறதேதவிர தலமுற்பத்தியாகிறதில்லை. எண்ணெயின் பிராகபாவம் எள்ளிலிருப்பதால் எள்ளினின்று எண்ணெயுண்டாகிறதேதவிர கடமுண்டாகிறதில்லை. இப்படிச்சகல காரியங்களிலும் பிராகபாவங்காரணமாயிருக்கிறது. ஆனதால் காரணகாரியங்களுக்கு அத்தியந்தம் பேதமிருப்பதால் நையாயிகமதத்தில் தோஷமில்லை.

567. மேலும் சாமர்த்தியரூபசக்திவாதியின் மதத்திலுந் தோஷமில்லை. எனெனில் மண்ணில் கடத்தின் சாமர்த்தியரூபசக்தியிருக்கிறதேதவிரத் தலத்தின் சக்தியில்லை. எள்ளில் எண்ணெயின் சாமர்த்தியரூபசக்தியிருகிறதேதவிரக் கடத்தின் சாமர்த்தியரூபசக்தியில்லை. ஆனதால் மண்ணில் கடமேயுண்டாகிறதேதவிரத் தலமுண்டாகிறதில்லை. இப்படியே எள்ளால் எண்ணெயேயுண்டாகிறதேதவிரக் கடமுண்டாகிறதில்லை. இவ்விதமாக உபாதானகாரணத்துக்கும் காரியத்துக்கும் அத்தியந்தம் பேதமிருப்பதாக நினைப்பதில் தோஷமிலலை. பேதாபேதம் அசங்கதமாயிருக்கிறது.

568. பேதத்திலும்அபேதத்திலும்பட்டாராற்சொல்லப்பட்டதோஷங்கள்பட்டர்மதத்தில்நிச்சியமாயுண்டு.எப்படியெனில் பட்டர் பேதசகிதஅபேதத்தையங்கரித்திருக்கிறபடியால்காரணகாரியங்களுக்குப்பேதமாயிருக்கிறதென்றும்அபேதமிருக்கிறதென்றும்சித்திக்கிறது.பேதமிருப்பதால் பேதபக்ஷத்திற் சொன்னதோஷமுண்டு. அபேதமிருப்பதால் அபேதபக்ஷத்திற்சொன்னதோஷமுண்டு. ஆகையாலபேதாபேதம் அசங்கதமாயிருக்கிறது.

569. திருடனுக்குத் திருட்டுதோஷமும் சூதாடிக்குச் சூதாட்டதோஷமும் உள். இவ்விரண்டையும அனுஷ்டிக்கிறவனுக்கு இவ்விரு தோஷங்களுஞ் சம்பவிக்கின்றன. இதுபோல் குணகுணிமுதலியனைக

னின் பேதாபேதங்களை யொப்புக்கொள்ளுவதில் பேதபக்ஷத்திலும் அபேதபக்ஷத்திலுஞ் சொன்ன இரண்டுதோஷங்களுமுண்டாகின்றன. சக்திவாதியின் மதத்தில் கேவலம் பேதத்தை யங்கீகரிப்பதால் தோஷமில்லை. ஏனெனில் குணியினிடத்தில் குணத்தைத்தரிக்கும் சக்தியிருக்கிறதென்ற விரவேறில்லை. ஆனதால் பேதபக்ஷத்திற் சொன்ன தோஷம் அதாவது:—கடத்தின் ரூபாதிகள் கடத்துக்குப் பின்னமாயிருப்பதுபோல் கடாதிகளும் கடத்துக்குப் பின்னமாயிருக்கின்றன. ரூபாதிகள்போல் படாதிகளும் கடத்திலிருக்கக்கூடும். அல்லது படாதிகளைபோல் ரூபாதிகளும் இராமலிருக்கக்கூடும். இந்தத் தோஷம் சக்தியை யங்கீகரிக்காதவன் மதத்திலுண்டு. சக்திவாதியின் மதத்தில் கேவலம் பேதத்தை யொப்புக்கொள்வதிலுஞ் தோஷமில்லை. பட்டர்மதத்தில் பேதாபேதங்களை யொப்புக்கொள்வதினால் இரண்டுபக்ஷங்களின் தோஷங்களும் மேற்சொன்ன திருஷ்டாந்தங்களாற் சித்திக்கின்றன. மேலும் பேதமும் அபேதமும் விரோததர்மங்களானதால் அஸம்பவதோஷம் சித்திக்கிறது. இப்படியே ஜாதிஷியக்திகளுக்கும் கிரியாகிரியாவான்களுக்கும் கேவலம்பேதமிருக்கிறது. ஆயினும் வியக்தியில் ஜாதியைத் தரிக்கும் சக்தியிருக்கிறது. கிரியாவானிடத்தில் கிரியையைத் தரிக்கும் சக்தியிருக்கிறது. வேறொன்றைத் தரிக்கும் சக்தியில்லை. இவ்விதமாக உபாதானகாரணத்துக்கும் காரியத்துக்கும் குணகுணீமுதலியவைகளுக்கும் பேதாபேதரூபத் தாதாத்மியசம்பந்தம்அஸங்கதமாயிருக்கிறது. எல்லாவற்றிலும் பேதவிஷயத்தில் பட்டராற்சொலலப்பட்ட தோஷத்தைச் சக்தி விழுங்கிவிடுகிறது.

570. வேதாந்தசித்தாந்தத்திலும்காரியம்குணம்ஜாதிகிரியையிவைகளுக்கும்உபாதானகாரணம்குணீஷியக்திகிரியாவான் இவைகளுக்கும்முறையேஅத்தியந்தம்பேதமில்லாமல்தாதாத்மியசம்பந்மேயங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் வேதாந்தமதத்தில் பேதாபேதரூபத்தாதாத்மியசம்பந்தமில்லை. ஆனல் பேதாபேதங்களுக்கு விலக்ஷணமான அநிர்வசனீய தாதாத்மியசம்பந்தமிருக்கிறது. பேதத்துக்கு விலக்ஷணமாயிருப்பதால் அபேதபக்ஷத்துக்கு தோஷமில்லை. அபேதத்துக்கு விலக்ஷணமாயிருப்பதால் பேதபக்ஷத்துக்குத் தோஷமில்லை. இவ்விதமாகப் பேதாபேதங்களுக்கு விலக்ஷணமான அநிர்வனீயதாதாத்மியசம்பந்தமிருக்கிறது.[95] பேதாபேதரூபத்தாதாத்மியசம்பந்தம்அசங்கதம். ஆகையால்வாச்சியவாசகங்களின் பேதாபேதரூபதாதாத்மியரூபசம்பந்தமே சக்தியென்று சொன்ன பட்டரைச் சார்ந்தவர்களின் மதம் சரியன்று. ஆனல் பதத்தைக் கேட்கிற

---

95. இத்தாங்கத்தின் 88-வது குறிப்பைப்பார்க்க.

தினல் அர்த்தஞானமுண்டுபண்ணுகிற பதத்திலுள்ள சாமர்த்தியமே பதத்தின்சக்தியாம். இவ்விதமாகச் சக்தி நிரூபிக்கப்பட்டது.

571, சக்கியலகூஷணம்:— லகூஷணையின்ஞானத்தில் சக்கியத்தின் ஞானம் உபயோகமாயிருக்கிறது. ஏனெனில் சக்கியசம்பந்தம் லகூஷணையின் ஸ்வரூபம். சக்கியத்தை யறியாமல் சக்கியசம்பந்தரூபலகூஷணையை அறியமுடியாது. ஆகையால் சக்கியத்தின் லகூஷணத்தைச் சொல்லுகிறேன். எந்தப் பதத்தில் எந்த அர்த்தத்தின் சக்கியிருக்கிறதோ அந்தப்பதத்துக்கு அந்தஅர்த்தம் சக்கியமென்று அறியத்தக்கது. சக்கியார்த்தத்தையே வாச்சியார்த்தமென்று[96] சொல்லுகிறார்கள். உதாரணம்:—அக்கினிபதத்தில் அங்காரரூபஅர்த்தத்தின் சக்தி இருக்கிறது. ஆனதால் அக்கினிபதத்துக்கு அங்காரம் சக்கியார்த்தம் அல்லது வாச்சியார்த்தமென்று சொல்லப்படுகிறது. வாச்சியார்த்தத்தைப் போதிக்கிற பதம் வாசகமென்று சொல்லப்படும்.

572. வாச்சியார்த்தத்தின் சம்பந்தம் லகூஷணையின் ஸ்வரூபமாம். எந்த அர்த்தம் பதத்தின் சக்தியால் அறியப்படவில்லையோ ஆனல் லகூஷணையால் அறியப்படுகிறதோ அது பதத்தின் லகூஷியார்த்தம்[97] என்னப்படுமம.

573. ஜகர்லகூஷண:— வாச்சியார்த்தம் முழுமையும் விடப்பட்டும் அதனுடைய சம்பந்தம் பிரதீதியாகும்போது ஜகர்லகூஷண சொல்லப்படுகிறது. கங்கையில் கிராமமிருக்கிறதென்று சொல்லுகிறவிடத்தில் கங்கையென்னும் பதத்துக்குக்கரையில் ஜஹற்லகூஷண சித்திக்கிறது. ஏனெனில் கங்கையென்னும் பதத்துககு வாச்சியார்த்தம் கங்காநதியின் பிரவாகம். பிரவாகத்தில் கிராமமிருப்பது அசம்பாவிதம். ஆகையால் வாச்சியார்த்தம் முழுமையும் விடப்பட்டுக்கரையில் கங்கையென்னும் பதத்துக்கு ஜகர்லகூஷண சித்திக்கிறது. வாச்சியத்தின் சம்பந்தத்துக்கு லகூஷணையென்றுபெயர். "கங்கையில் கிராமம்" என்கிறவிடத்தில் கங்காபதத்தின் வாச்சியமான பிரவாகத்துக்குக்கரையுடன் ஸம்யோகசம்பந்தமிருக்கிறது. ஆகையால் கங்காபதத்தின் வாச்சியத்துக்குக்கரையுடன் சம்பந்தம் லகூஷணையாம். வாச்சியம் முற்றிலும் விடப்பட்டிருக்கிறது. ஆகையால்[98] ஜகர்லகூஷண சொல்லப்பட்டது.

---

96. இதற்கே அபிதேய அர்த்தமென்றும், முக்கிய அர்த்தமென்றும் பெயர்களாம்.

97. இத்தர்ங்சத்தின் 85-வது குறிப்பைப்பார்க்க.

98. ஜகர்லகூஷணைக்கோர், உதாரணம்:— ஒருவனுடைய தகப்பன் ஊரி

574. **அஜகர்லக்ஷணை**:— வாச்சியார்த்தசகிதமாய் வாச்சியத்தின் சம்பந்தம் எந்தப்பதத்தினின்றும் அறியப்படுகிறதோ அந்தப்பதத்தில் அஜகர்லக்ஷணை இருக்கிறது. "சிவப்பு ஓடுகிறது" என்னுமிடத்தில் சிவப்பு என்னும் பதத்துக்குச்சிவப்பு வர்ணத்துடன் கூடிய குதிரையில் அஜகர்லக்ஷணை சித்திக்கிறது. ஏனெனில் சிவப்பு என்பது வர்ணம். இது வாச்சியம். கேவலம் வர்ணம் ஓடுகிறது என்பது அசம்பாவிதம். ஆகையால் சிவப்பு என்னும் பதத்தின் வாச்சியமான சிவப்பு வர்ணத்துடன்கூடிய குதிரையில் சிவப்பு என்னும் பதத்துக்கு அஜகர்லக்ஷணை சித்திக்கின்றது. குணத்துக்கும் குணிக்கும் தாதாத்மியசமபந்தம் சொல்லப்படுகிறது. சிவப்பும் ரூபத்தின் பேதமாகிறதினால் குணமாகிறது. ஆனதால் சிவப்பு என்னும் பதத்தின் வாச்சியமான சிவப்பாகிற குணத்துக்குணியாகிற குதிரையுடன் இருக்கிற தாதாத்மியசம்பந்தம் லக்ஷணையாம். வாச்சியம் விடுபடாமல் அதிகம் கிரகிக்கப்படுகிறது. ஆகையால் அஜகாலக்ஷணை சித்திக்கிறது.

575. **பாகத்தியாகலக்ஷணை**:— பதத்தின் வாச்சியார்த்தத்தில் ஒருபாகம் விடப்பட்டு ஒருபாகம் கிரகிக்கப்படும்போது பாகத்தியாகலக்ஷணை சொல்லப்படுகிறது. இதற்கு ஜகதல்லக்ஷணை யென்றும்பெயர்.

உதாரணம்:— முன் பார்த்த பொருளையே வேறிடத்தில் பார்த்து அது இதுதான் என்று ஒருவன் சொல்லுமிடத்துப்பாகத்தியாகலக்ஷணை

ல் இல்லாதகாலத்தில் அவனுக்குக்கல்லியாணம் நடந்தது. அப்போது வஸ்திரங்கள் கொடுத்து மரியாதைசெய்யுங்காலத்தில் மாப்பிள்ளையின் தகப்பனுக்கு முதலிற்கொடுக்கும்படி ஒருவன் சொல்லுகிறான. மாப்பிள்ளையின் சிற்றப்பன் மட்டும் அங்கிருந்தான். ததப்பன் என்னும் சப்தத்தின் சக்தியார்த்தமான மாப்பிள்ளையைப் பெற்றவன் ஆகாதிருந்தால் பெற்றவனுக்கு வஸ்திரங்கொடுப்பது அசம்பாவிதம். ஆகையால் பெற்றவனைத்தள்ளி அவனுடன் சம்பந்தப்பட்ட சிற்றப்பன் தகப்பன் சப்தத்தால் கிரகிக்கப்படுகிறான். சகோதர சம்பந்தம் லக்ஷணை. இந்தலக்ஷணையால் அறியப்பட்டசிற்றப்பன் தகப்பனென்னும் பதத்தின் லக்ஷியார்த்தம்.

99. **அஜகர்லக்ஷணைக்கோருதாரணம்**:— வாயிலில் நெல்காயவைத்திருந்த காலத்தில் தாய் பிள்ளையைப்பார்த்து நெல்லை மாடுதின்காமல் பார்த்துக்கொள் என்கிறாள். தாயின் கருத்து நெல்லைத்தின்கும்படியான எந்தமிருகமென மாடுயென்னும்பதத்தால் கிரகிக்கத்தக்கது. மாடும்மாடுதவிர இதரமிருகங்களுஞ் சேர்ந்திருப்பதால் அஜகர் லக்ஷணை.

னை சித்திக்கிறது. எவ்வெனில் சென்றகாலத்திலும் வேறிடத்திலும் இருந்த பொருள் அது என்னப்படும். ஆகையால் சென்றகாலத்துடனும் வேறிடத்துடனுங்கூடின பொருள் அது என்னும் பதத்தின்வாச்சியார்த்தம். நிகழ்காலத்திலும் சமீபஇடத்திலுமிருக்கிற பொருள் இது என்னப்படும். ஆகையால் நிகழ்காலத்துடனும் சமீபதேசத்துடனுங்கூடின வஸ்து இது என்னும் பதத்தின் வாச்சியார்த்தம். சென்றகாலத்துடனும் வேறிடத்துடனுங்கூடின பொருளே நிகழ்காலத்துடனும் சமீபதேசத்துடனுங்கூடியிருக்கிறது. இது "அதுவே இது" என்னும் வாக்கியத்தின் வாசியார்த்தம். இது சம்பவிக்கமாட்டாது. ஏனெனில் சென்றகாலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் விரோதமிருக்கிறது. இப்படியே அன்னியதேசத்துக்கும் சமீபதேசத்துக்கும் விரோதமுண்டு. ஆகையால் இரண்டு பதங்களிலும் தேசகாலங்களாகிற வாச்சியபாகங்கள் விடப்பட்டு வஸ்து மாத்திரத்தில் இரண்டு பதங்களுக்கும் பாகத்தியாகலக்ஷணை சித்திக்கிறது.

576. **தத்பதவாச்சியார்த்தம்:—** தத்துவம்ஸி என்னும் மகாவாக்கியத்தில் லக்ஷணைபெக்காண்பிப்பதற்காக **தத்-துவம்** இப்பதங்களின் வாச்சியார்த்தங்களை வர்ணிக்கிறேன். சர்வசக்திமானையும் சர்வஞ்ஞனையும் விபுவாயும் ஈசனையும் சுதந்திரனையும் பரோக்ஷனையும் மாயியாயும் பந்தமோக்ஷாதிகளையும் இருக்கிறவனே தத்பதத்தின் வாச்சியார்த்தம். சர்வசக்திமானென்றால் சர்வசாமர்த்தியங்களையுமுடையவன். சர்வஞ்ஞனென்றால் எல்லாவஸ்துக்களையுமறிகிறவன். விபுவென்றால் வியாபகன். ஈசனென்றால் எல்லாவற்றையும் ஏவுகிறவன். சுதந்திரனென்றால் கர்மத்துக்காதீனமாகாதவன். பரோக்ஷனென்றால் ஜீவனுடைய பிரத்தியக்ஷஞானத்துக்கு விஷயமாகாதவன். மாயீயெனில் மாயையைத்தன் வசத்திலுடையவன். எவனுக்குப்பந்தமுண்டோ அவனுக்கு மோக்ஷமுண்டு. ஈஸ்வரன் பந்தரகிதனையால் அவனுக்கு மோக்ஷமுமில்லை. மேற்சொல்லிய தர்மங்களுடன்கூடின ஈஸ்வரசேதனம் தத்பதத்தின் வாச்சியார்த்தம்.

577. **துவம்பதவாச்சியார்த்தம்:—** ஈஸ்வரதர்மங்களுக்கு விபரீதமான தர்மங்கள் எதினிடத்திலிருக்கின்றனவோ அந்த ஜீவசேதனத்தை த்துவம்பதத்தின் வாச்சியமாக அறி. இதற்குக் கருத்தென்னவெனில் ஜீவன் அற்பசக்திமான். அல்பஞ்ஞன். பரிச்சின்னன். அணீசன், கர்மாதீனன் அவித்தியாமோகிதன். பந்தமோக்ஷசகிதன். பிரத்தியக்ஷன். ஏனெனில் தன்ஸ்வரூபம் ஒருவனுக்கும் பரோக்ஷமாயில்லை பிரத்தியக்ஷமாகவேயிருக்கின்றது. ஈஸ்வரனுடைய ஸ்வரூபம் ஈஸ்வரனுக்குப் பிரத்தியக்ஷமாயிருந்தாலும் ஜீவர்களுக்குப் பிரத்தியக்ஷமாயில்லாத

படியால் பரோக்ஷமென்று சொல்லப்படுகிறது. ஜீவனுடைய ஸ்வரூபத்தை ஜீவனும் ஈஸ்வரனும் இருவரும் அறிகிறபடியல் பிரத்தியக்ஷமென்றுசொல்லப்படுகிறது. மேற்சொல்லிய தர்மங்களுட்கூடின ஜீவசேதனம் தத்பதத்தின் வாச்சியமென்று சொல்லப்படுகிறது.[100]

578. வாமவேதத்தின் சாந்தோக்கிய உபநிஷத்தில் உத்தாலகமுனி தன் புத்திரனுகிய ஸ்வேதகேதுவுக்கு ஜகத்தை யுண்டுபண்ணுகிறவன் ஈஸ்வரனென்று குறிப்பிட்டுத் தத்துவமஸி யென்றுசொன்னர். இதின் வாச்சியார்த்தமென்னவெனில் தத்என்றால் அவன் அதாவது ஜகத்தை யுண்டுபண்ணுகிறவனையும் சர்வசக்திமானையும் சர்வஞ்ஞாதிதர்மசைதன்யமிருக்கிற ஈஸ்வரன், துவம் என்றால் நீ அதாவது அற்பசக்திமானையும் அல்பஞ்ஞாதிதர்மசைதன்யமிருக்கிற ஜீவன் அஸி யென்றால் இருக்கிறாய். அவன் நீயாயிருக்கிறாயென்று சொல்லுகிறதினால் ஈஸ்வரனும் ஜீவனும் ஒன்றென்பது வாச்சியார்த்தத்தால் விளங்குகிறது. இது சரியன்று. எனெனில் சர்வசக்திமான் அல்பசக்திமான் சர்வஞ்ஞன் அல்பஞ்ஞன் வியாபகன் பரிச்சின்னன் சுதந்திரன் கர்மாதீனன் பரோக்ஷன் பிரத்தியக்ஷன் மாயையை ஸ்வாதீனத்தில் வைத்திருப்பவன் அவித்தியாமோகிதன் இவ்விருவரும் ஒன்றெனச்சொல்வதுமெருப்பு குளிர்ந்திருக்கிறதென்பதற்குச் சமானமாகும். ஆகையால் லக்ஷணையால் லக்ஷியார்த்தத்தை நல்ல புத்தியுள்ளவனே நீயறி. வாச்சியார்த்தத்தில் விரோதமிருக்கிறது. என் அன்பனே மகாவாக்கியத்தில் ஜகர்லக்ஷணையும். அஜகர்லக்ஷணையு மமையா. ஆகையால் பாகத்தியாகலக்ஷணையைத்தான் அறியவேண்டியது. அதினல் விரோதம் பரிகாரமாகும்.

579. சகலவேதாந்தத்தாலும் அறியத்தக்கவை சாக்ஷிசேதனமும் பிர்ம்மசேதனமுமே. இச்சாக்ஷிசேதனமும் பிர்ம்மசேதனமும் துவம்பததத் பதங்களின் வாச்சியார்த்தங்களில் பிரவேசிக்கின்றன. ஜகர்லக்ஷணையிருக்கிற விடத்தில் வாச்சியம் முழுமையும் விடப்பட்டு வாச்சியத்தின் சம்பந்தமான வேறொன்று அறியப்படுகிறது. ஆனதால் மகாவாக்கியத்தில் ஜகர்லக்ஷணையை ஒப்பிறல் வாச்சியத்திலிருக்கும் சேதனத்தைவிடவேறு புதிதான ஒன்றை அறியவேண்டியதாகும். சேனத்துக்கு வேறுனது

---

100. ஜீவன் தன்னுடைய நிஜரூபமான கூடஸ்தனை மட்டும் அறியாமலிருந்தாலும் அகம்பதத்தின் வாச்சியமான அந்தக்கரண விசிஷ்டசேதனம் அல்லது ஸ்தூலசூக்ஷம சங்காத விசிஷ்டசேதனம் தான் என்று அறிகிறன். ஆகையால் விவேகத்துக்கு முன்னும் தான் விசிஷ்ட சேதனமென்று பிரத்தியக்ஷமாயறிகிறன்.

அசத்ஜடதுக்கரூபம் அதையதிகிறதினால் புருஷார்த்தம் சித்திக்கிறதில்லை. ஆனதால் மகாவாக்கியத்தில் ஜகர்லக்ஷணை யொவ்வவில்லை.

580. அன்பனே ஜகர்லசக்ஷணை யிருக்கும் இடத்தில்வாச்சியார்த்தம் முழுமையும் வைத்துக்கொண்டு அதற் கதிகமாகக் கிரகிக்கவேண்டியது. மகாவாக்கியத்தில் அஜகர்லக்ஷணையை யங்கீகரித்தால் வாச்சியார்த்தம் முழுமையும் வைத்துக்கொள்ளவேண்டும். வாச்சியார்த்தம் மகாவாக்கியத்தில் விரோதசகிதமாயிருக்கிறது. விரோதத்தை நீக்குவதற்காக லக்ஷணையை அங்கீகரிக்கவேண்டியது. அஜகர்லக்ஷணையை யங்கீகரிப்பதால் மகாவாக்கியத்தில் விரோதம் நீங்கவில்லை. ஆகையால் அஜகர்லக்ஷணையுங் கூடாது.

581. **ஆபாஸவாதம்**:—அன்பனே, தத்பதத்தின் வாச்சியம் ஈஸ்வரன், துவம்பதத்தின் வாச்சியம் ஜீவன். இவைகளுக்குள்ளிருக்கிற விரோததர்மங்களை விட்டுச் சுத்தமாயும் அசங்கமாயுமிருக்கிற சேதனத்தை லக்ஷணையால் அறிவதே பாகத்தியாகலக்ஷணை. இவ்விடத்தில் அடியில் கண்ட வொரு சந்தாந்தமுண்டு. ஜீவேஸ்வரர்களுடைய ஸ்வரூபங்களை அனேகவிதமாக அத்வைதக்கிரந்தங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. விவரணக்கிரந்தத்தில் அஞ்ஞானத்திற் பிரதிபிம்பம் ஜீவனென்றும் பிம்பம்ஈஸ்வரனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. **வித்தியாரண்யஸ்வாமிகள்** மதத்தில் சுத்தசத்துவகுணஸஹித மாயையில் ஆபாஸம் ஈஸ்வரனென்றும் மலினசத்துவகுணசகிதஅந்தக்கரணத்தின் உபாதான காரணமான அவித்தியாம்சத்தில் ஆபாஸம் ஜீவனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சதசிப்பிரகரணத்தில் வித்தியாரண்யஸ்வாமிகள் அந்தக்கரணத்தில் ஆபாஸனை ஜீவனென்று சொல்லியிருந்தாலும் அந்தக்கரணத்தின் ஆபாஸனை ஜீவனென்று நினைக்கும் பக்ஷத்தில் சுஷுப்தியில் அந்தக்கரணமில்லாததினால் சுஷுப்தியில் ஜீவனில்லாமற் போகவேண்டியது. பிராஞ்ஞனுபஜீவன் சுஷுப்தியிலிருப்பதால் வித்தியாரண்யஸ்வாமிகளுடைய அபிப்பிராயமென்னவெனில் அந்தக்கரணரூபபரிணாமத்தையடைகிற அவித்தியாம்சத்திலுள்ள ஆபாஸன் ஜீவன், இந்த அவித்தியாம்சம் சுஷுப்தியிலுமிருக்கிறது. ஆகையால் பிராஞ்ஞனுக்கு அபாவமில்லை. கேவலம் ஆபாஸங்களே ஜீவேஸ்வரர்கள் அன்று. ஆனால் மாயையின் அதிஷ்டானசேதனமும் மாயாசகித ஆபாஸனும் ஈஸ்வரனும். அவித்தியாம்சத்தின் அதிஷ்டானசேதனமும் அவித்தியாம்ச சகித ஆபாஸனும் ஜீ

---

101. 4-வது தரங்கத்தின் 33-வது குறிப்பைப்பார்க்க.

வனும். ஈஸ்வரவுபாதியில் சுத்தசத்துவகுணமுண்டு. ஆனதால் ஈஸ்வரனிடத்தில் சர்வசக்திசர்வஞ்ஞாதிதர்மங்கள் இருக்கின்றன. ஜீவனுடைய உபாதியில் மலினசத்துவகுணமுண்டு. ஆனதால் ஜீவனிடத்தில் அல்பசக்தி அல்பஞ்ஞாதி தர்மங்களிருக்கின்றன. இதை ஆபாஸவாதம் என்பாகள்.

582. **பிரதிபிம்பவாதம்:—** விவரணமதத்தில் ஜீவேஸ்வரர்களுக்கு உபாதி ஒரே அஞ்ஞானம். ஆனதால் இவ்விருவரும் அல்பஞ்ஞர்களாயிருக்கவேண்டும். அயினும் எந்த உபாதியில் பிரதிபிம்பமுண்டாகிறதோ அதின் சுபாவமென்னவெனில் பிரதிபிம்பத்தில் கண் தோஷத்தை யுண்டுபண்ணுகிறது. பிம்பத்திலுண்டாகுகிறதில்லை. திர்ஷ்டாந்தம்:— கண்ணாடியாகிற வுபாதியில் முகத்தின் பிரதிபிம்பமுண்டாகிறது. கழுத்தின்பேரிலிருக்கிற முகம் பிம்பம். இப்போது கண்ணாடியாகிற வுபாதியின் பொன்மை கருமை சிருமை முதலிய பலதோஷங்கள் பிரதிபிம்பத்தில் தோன்றுகின்றனவே தவிர கழுத்தின்பேரிலிருக்கிற முகத்தில் தோன்றுகிறதில்லை. இதுபோல் கண்ணாடியாகானத்திலிருக்கிற அஞ்ஞானத்திலுள்ள பிரதிபிம்பரூபமான ஜீவனிடத்தில் அஞ்ஞானத்தாலுண்டான அல்பஞ்ஞதை முதலிய தோஷங்கள் இருக்கின்றன. பிம்பரூப ஈஸ்வரனிடத்தில் தோஷங்களில்லை. ஆகையால் ஈஸ்வரனிடத்தில் சர்வஞ்ஞதை முதலியவைகளும் ஜீவனிடத்தில் அல்பஞ்ஞதை முதலியவைகளும் இருக்கின்றன.

583. **ஆபாலவாதத்துக்கும் பிரதிபிம்பவாதத்துக்கும் பேதம்:—** ஆபாஸபக்ஷத்தில் ஆபாஸன் மித்தை. பிரதிபிம்பபக்ஷத்தில் பிரதிபிம்பம் மித்தையன்று, சத்தியம். எனெனில் பிரதிபிம்பவாதியின் சித்தாந்தமென்னவெனில் கண்ணாடியில் தோன்றும் முகத்தின் பிரதிபிம்பம் முகத்தின் சாயையன்று. எனெனில் சாயையின் சுபாவமென்னவெனில் எந்தத்திக்கில் சாயையுடையவன் முகமும் பின்புறமும் இருக்கின்றனவோ அந்தத்திக்கிலேயே சாயையின் முகமும் பின்புறமும் இருக்கின்றன. ஆனல் கண்ணாடியில் பிரதிபிம்பத்தின் முகமும் பின்புறமும் பிம்பத்துக்கு எதிரிடையாயிருக்கின்றன. ஆனதால் கண்ணாடியில் சாயாரூபப்பிரதிபிம்பமில்லை. ஆனல் கண்ணாடியை விஷயமாக்குவதற்காக நேத்திரமூலமாகப்புறப்பட்ட அந்தக்கரணத்தின் விர்த்தி கண்ணாடியை விஷயமாக்கி அதேக்ஷணத்தில் கண்ணாடியினின்று திரும்பிக்கழுத்திலிருக்கிற முகத்தைவிஷயமாக்குகிறது. சுற்றும் வேகத்தில் கொள்ளிக்கட்டையின்சக்காராகாரந்தோன்றுகிறதுபோலவும், கண்ணாடியையும்முகத்தையும்விஷயமாக்குவதில்விர்த்தியின்வேகத்தால் முகம் கண்ணாடியிலிருக்கிறதாகத்தோன்றுகிறது. ஆனலுண்மையில் முகம்கழுத்தின்

பேரிலேயே இருக்கிறதேதவிரக்கண்ணுடியிலில்லை. மேலும் சாயையு மில்லை. விர்த்திவேகத்தால் கண்ணுடியில தோன்றுப் முகம் பிரதிபிம் பம். இவ்விதமாகக்கண்ணுடியாகிற வுபாதிசம்பந்தத்தால் கழுத்தின் பேரி லிருக்கிற முகமே பிம்பரூபமாயும் தோன்றுகிறது. விசாரித்துப்பார்க்கு ளவில் பிம்பப்பிரதிபிம்பபாவங்களில்லை. இதுபோல் அந்தக்கரணரூ ப உபாதிசம்பந்தத்தால் அசங்மான சேதனத்தில் பிம்பமாகிற ஈஸ்வர பாவமும் பிரதிபிம்பமாகிற ஜீவபாவமும் பிரதீதியாகின்றன. விசாரித் துப்பார்க்குமளவில் ஈஸ்வரத்தன்மையும் ஜீவத்தன்மையுமில்லை. அஞ் ஞானத்தால் சேதனத்தில் தோன்றும் ஜீவபாவமே அஞ்ஞானத்திலுள் ள பிரதிபிம்பமென்று சொல்லப்படுகிறது. ஆனதால் பிம்பபாவமும் பிரதிபிம்பபாவமும் மித்தையாயிருக்கின்றன. ஸ்வரூபத்தில் பிம்பப்பிர திபிம்பங்கள் சத்தியம். எனெனில் பிம்பப்பிரதிபிம்பங்களின் ஸ்வரூபம் தர்ஷ்டாந்தத்தில் முகம், தார்ஷ்டாந்தத்தில் சேதனம். இந்த முகமும் சேதனமும் சத்தியம். இவ்விதமாகப்பிரதிபிம்பம் ஸ்வரூபத்தில் சத்தி யமாயிருப்பதால் சத்தியமென்று சொல்லப்படுகிறது. ஆபாஸத்தின் ஸ்வரூபமும் சாயையாயிருப்பதால் மித்தை. இதுதான் ஆபாஸப்பிரதிபிம் பவாதங்களின் பேதம் 101(a)

584. **அவச்சேதவாதம்:—** சிலதிரத்தங்களில் சுத்தசத்து வகுணசகித மாயாவிசிஷ்டசேதனம் ஈஸ்வரனென்றும் மலினசத்துவகு ணசகித அந்தக்கரணத்துக்கு உபாதானமான அவித்தியாப்சவிசிஷ்டசே தனம் ஜீவனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதை அவச்சேதவா தமென்கிறோம். 102

585. **பாகத்தியாகந்தான் ஒப்புக்கொள்ளத்தக்கது:—**

---

101. (a) இவ்விரண்டுபக்ஷங்களில் ஆபாஸவாதம்தான் சரேஷ்டம் எனெனில், பிரதிபிம்பபாவத்தில் மோக்ஷத்தின்பிரயத்தனஞ் செய்கிற ஜீவ ன் மோக்ஷதசையில் இல்லாமல் போவதால், தனத்தை விர்த்திசெய்ய இச்சி க்கும்வியாபாரி மூலதனத்தை இழந்துபோகிறதுபோல், ஜீவன்ஸ்வரூபத்துக்கே ஹானிவருகிறது. இந்த அர்த்தத்தைஅறிந்தமுமுக்ஷுவுக்கு இந்தமதத்தில் பி ரவிர்த்தியுண்டாகமாட்டாது. ஆகையால் பிரதிபிம்பபக்ஷம் சரியன்று.

102. இந்த அவச்சேதவாதம் ஸ்ரீகிருஷ்ணதத்தரல்ல வென்று 1-வது தர ங்கம் 229-வது பிரிவில் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

வேதாந்தத்தின் பிரக்கிரியைகளெல்லாம் அத்வைத ஆத்மாவை யறியும் பொருட்டே ஏற்பட்டிருக்கின்றன. ஆனதால் எந்தப்பிரக்கிரியையால் ஜிஞ்ஞாசுவுக்குப் பேதமுண்டாகுமோ அந்தப்பிரக்கிரியையே அவனுல் அங்கீகரிக்கத்தக்கது. ஆயினும் வாக்கியவிர்த்தியிலும் உபதேச லக்ஷணம் என்னுங்கிரந்தத்திலும் பாஷியகாரரால் ஆபாஸவாதமே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது (229). ஆகையால் ஆபாஸவாதந்தான் முக்கியம். இதன்படி மாயை மாயையிலுள்ள ஆபாஸன் மாயையின் அதிஷ்டானசேதனம் இம்மூன்றுஞ்சேர்ந்து சர்வசக்தி சர்வஞ்ஞதை முதலிய தர்மங்களுடன்கூடிய ஈஸ்வரன் என்னப்படும். இதுவே தத்பதத்தின் வாச்சியம். வியஷ்டி அவித்தை அதில் ஆபாஸம அதின் அதிஷ்டானசேதனம் இம்மூன்றுஞ்சேர்ந்து அல்பசக்தி அல்பஞ்ஞதை முதலிய தர்மங்களுடன்கூடிய ஜீவன் என்னப்படும். இதுவே தத்பதத்தின் வாச்சியம் வியஷ்டி அவித்தை அதில் ஆபாஸம் அதின் அதிஷ்டானசேதனம் இம்மூன்றுஞ்சேர்ந்து அல்பசக்தி அல்பஞ்ஞதை முதலியதர்மங்களுடன் கூடிய ஜீவன் என்னப்படும். இது துவம்பதத்தின் வாச்சியம். தத்து வமஸி வாக்கியத்தால் இவ்விரண்டும் ஒன்றெனச்சொல்வதுசரியன்று. ஆகையால் ஆபாஸசகித மாயை மாயையாலுண்டான சர்வசக்தி சர்வஞ் ஞதை முதலியதர்மங்கள் இவ்வாச்சியபாகங்கள் தள்ளப்பட்டுச்சேதன பாகத்தில் பாகத்தியாகலக்ஷணை சித்திக்கிறது. இப்படியேஆபாஸுச கித அவித்தியாம்சம் அவித்தையாலுண்டான அல்பசக்தி அல்பஞ்ஞதை முதலியதர்மங்கள் இவ்வாச்சியபாகங்கள் தள்ளப்படுச்சேதனபாகத்தில் பாகத்தியாகலக்ஷணை சித்திக்கிறது. இவ்விதமாகப்பாகத்தியாகல க்ஷணையால் ஈஸ்வரன் ஜீவன் இவர்களுடைய ஸ்வரூபத்திலுள்ளலக்ஷ்ய யமான சேதனபாகம் ஒன்றெனத்தத்துவமஸி என்னும் மகாவாக்கியம் போதிக்கிறது.

103, எல்லாம் என்கிற பதத்தால் (1) காரியசாரண உபாதிவாதம் (2) அவச்சின்ன அனவச்சின்னவாதம் (3) திருஷ்டிசிருஷ்டிவாதம் முதலிய வை கிரகிக்கத்தக்கவை. அப்பயீயதீக்ஷிதருடைய "சித்தாந்தலேசம்" என்னும் கிரந்தத்திலும் "விர்த்திப்பிரபாகர" என்னும் கிரந்தத்திலும் இவைகள் பிரதி பாதிக்கப்பட்டிருக்கின்றன.

104. இந்த "தத்துவமஸி" என்னும் வாக்கியம் சம்பந்தத்திரயத்தால் அகண்டார்த்தத்தை போதிக்கிறது. சம்பந்தத்திரயமாவது:— (1) பதங்களு டைய சாமாநாதிகரணியம். (2) பதார்த்தங்களுடைய விசேஷண விசேஷ்ய பாவம். (3) பிரத்தியகாத்மபரமாத்மாக்களின் லக்ஷ்யலக்ஷணபாவம். (1)

சமாணதிகரணிய சம்பந்தமெப்படியெனில்:— அந்த தேவதத்தன் தான் இவன் என்னும் வாக்கியத்தில், அந்த காலத்துடன் கூடின தேவதத்தனைக் குறிப்பிடும் "அந்த" என்னும பதமும், இந்தக்காலத்துடன் கூடின தேவதத்தனைக் குறிப்பிடும் "இந்த" என்னும்பதமும் ஒரே தேவதத்த சரீரத்தில் தாத்பரியப்படுவதால் இரண்டுக்கும் சாமாணதிகரணியம் (அதாவது வெவ்வேறு அர்த்தங்களோடுகூடிய இரண்டு சப்தங்கள் ஒரேபொருளைக்குறிப்பிடுதல்) சம்பந்தம் சித்திக்கிறது. இதுபோல் "தத்துவமஸி" வாக்கியத்தில் பரோக்ஷத்தவாதிகளுடனகூடிய சைதன்னியத்தைக்குறிப்பிடும் "தத்" பதமும், அபரோக்ஷத்துவாதிகளுடன் கூடிய சைதன்னியத்தைக்குறிப்பிடும் "த்வம்" பதமும் ஒரே சைதன்னியத்தில் தாத்பரியப்படுவதால், இரண்டுக்கும் சாமாணதிகரணியசம்மந்தம் சித்திக்கிறது. (2) விசேஷண விசேஷ்யபாவசம்பந்தம் எப்படியெனில்:— பிரித்தறிக்காண்பிப்பது விசேஷணம், பிரிக்கப்பட்டுக்காணப்படுதல் விசேஷ்யம். "அவன் தான் இவன் (தேவதத்தன்)" என்னும் வாக்கியத்தில் "இவன்" சப்தத்தால் விளங்குகிற இந்த காலதேசங்களோடுகூடின தேவதத்தனை இவன் அவன்' சப்தத்தால் விளங்குகிற அந்ததேசகாலங்களோடுகூடின தேவதத்தனைக்காட்டிலும் வேறல்லவென்று எப்போது பிரதீதியாகிறதோ, அப்போது இவன் என்னும் சப்தத்தின் வாக்கியார்த்தத்திலுள்ள பேதத்தை "அவன்" என்னும் சப்தத்தின் அர்த்தம் வேறுபடுத்துவதால், "அவன்" என்பது விசேஷணம். "இவன்" சப்தத்தின் அர்த்தம்வேறுபடுத்தப்படுவதால் "இவன்" என்பது விசேஷ்யம், அப்படியே "இவன் தான் அவன் என்னும் வாக்கியததிலும் "இவன்" விசேஷணம், "அவன்" விசேஷ்யம். இவ்விதமாக "அவன் தான் இவன்", "இவன் தான் அவன்" என்கிற வாக்கியங்களில் "அவன", "இவன்" பதங்கள் பரஸ்பரம் விசேஷணை விசேஷ்யங்களாயிருப்பதால், விசேஷண விசேஷ்ய பாவரூப சம்பந்தம் சித்திக்கிறது. இந்த திருஷ்டாந்தத்தில் சொல்லியதுபோல் "தத்துவமஸி" என்னும்வாக்கியத்தில் தூவம்பதவாச்சியமான அபரோக்ஷத்வ கிஞ்சிஞ்ஞத்வாதிகளுடன் கூடியசைதன்னியம் "தத்" பதவாச்சியமான சர்வஞ்ஞத்வாதிகளுடன்கூடிய சைதன்னியத்தைக்காட்டிலும் வேறல்லவென்று எப்போது பிரதீதியாகிறதோ, அப்போது, "த்வம்" பதார்த்தத்திலுள்ள பேதத்தைதத்சப்தார்த்தம் வேறுபடுத்துவதால், தத்சப்தம் விசேஷணம். த்வம் பதார்த்தம் வேறுபடுத்தப்படுவதால் விசேஷ்யம். அப்படியே "த்வம்ததசி" என்னும் வாக்கியத்தில் "த்வம்" விசேஷணம், "தத்" விசேஷ்யம். இவ்விதமாக "தத்த்வமசி", "த்வம்ததசி" இந்த வாக்கியங்களில் "தத்" "த்வம்" பரஸ்பரம் விசேஷண விசேஷ்யங்களாக இருப்பதால், விசேஷண விசேஷ்யபாவரூப சம்பந்தம் சித்திக்கிறது. (3) லக்ஷ்யலக்ஷணபாவசம்பந்தமெப்படியெனில்:— அசாதாரண தர்மத்தை பிரதிபாதிக்கும் வாக்கியம் லக்ஷணம்; அதினால் பிரதிபாதிக்கப்படுவது லக்ஷ்யம். "அவன்தான் இவன் (தேவதத்தன்)" என்னும் வாக்கியத்தில் "அவன்" "இவன்" என்னும் சப்தங்களுடைய விருத்த தர்மங்க

105

586. மற்ற மூன்று மகாவாக்கியங்களிலும் பாகத்தியாகலகூ
னை:—'**அயம் ஆத்மா பிர்மமம்**' என்னும், மகாவாக்கியத்தில் ஆத்ம
பதத்துக்கு **ஜீவன்** வாச்சியம பிர்ம்மபதத்துக்கு ஈஸ்வரன் வாச்சியம். பி
ர்ம்மபதத்துக்குச் சுத்தம் வாச்சியம் அல்லவென்றும் ஈஸ்வரனே வாச்சி
யமென்றும் காலாவது தரங்கத்தில்(188)பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.
முன்சொன்னதுபோல் இரண்டுபதங்களுக்கும் லக்ஷணை இருக்கிறது. ல
க்ஷியார்த்தம் பரோக்ஷமல்ல வென்பதை அறிவதற்காக **அய**மென்றும்ப
தம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. எல்லாருக்கும் பிரத்தியக்ஷமா
ன ஆத்மாவே பிர்ம்மமென்பது வாக்கியார்த்தம். '**அஹம்பிர்ம்மாஸ்
மி**' என்னும் மகாவாக்கியத்தில் **அஹம்** பதத்துக்கு ஜீவன் வாச்சியம்.
பிர்ம்மபதத்துக்கு ஈஸ்வரன்வாச்சியம். இவ்விரண்டுபதங்களுக்கும்
சேதனபாகத்தில் லக்ஷணையுண்டு. நான்பிர்ம்மம் என்பது வாக்கியார்த்
தம். **பிரஞ்ஞானம் ஆனந்தம்பிர்மம்** என்னும் மகாவாக்கியத்
தில் பிரஞ்ஞானபதத்துக்கு ஜீவன் வாச்சியம். பிர்ம்மபதத்துக்கு ஈஸ்
வரன் வாச்சியம் லக்ஷணையும் முன்போலவே. லக்ஷியமான பிர்ம்மாத்
மா ஆனந்தகுணமுடையவனன்று ஆனந்தரூபமே. இதை யறியும்பொ
ருட்டு ஆனந்தம் என்னும் பதம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.
ஆத்மாவுக்கு அபின்னமான பிர்ம்மம் ஆனந்தரூபமென்றுவாக்கியார்த்தம்

587. மகாவாக்கியத்தில் பாகத்தியாகலக்ஷணை இருப்பதுபோல்
அன்னியவாக்கியத்திலும் **சத்தியம் ஞானம் ஆனந்தம்** என்னும்ப
தங்கள் சுத்தப்பிர்ம்மத்தைப் பாகத்தியாகலக்ஷணையால் போதிக்கின்றவே
தவிரச் சக்தியால் போதிக்கவில்லை. அபின்னமில் சுத்தப்பிர்ம்மம் எந்தப்

ளாகிற அந்த தேசகாலங்கள், இந்த தேசகாலங்கள் இவைகளுடன் கூடியிருப்
பவைகளைத் தள்ளுவதால், தேவதத்தனுடன் கூடின தேவதத்தபின்டத்தோடு
தேவதத்தத்துவத்துடன்கூடிய தேவதத்தவாசகசப்தத்துக்கு லக்ஷ்யலக்ஷணைபா
வசம்பந்தம் சித்திக்கிறது. இதுபோல்,"தத்த்வமசி" வாக்கியத்திலும்,"தத்"" "த்வ
ம்" பதங்களின் விருத்தமான பரோக்ஷத்வ அபரோக்ஷத்வாதிகளுடன் கூடிய
தர்மங்களை தள்ளுவதினால், அவிருத்தமான சைதன்னியத்துடன் தத்துவம்பதங்
ளுக்கு லக்ஷ்யலக்ஷணைபாவரூப சாமாநாதிகரணியம் சித்திக்கிறது. ஆகையால்
தத்த்வம் பதங்களுக்கும் அவைகளின் அர்த்தங்களுக்கும், விடப்பட்டவிருத்தா
தசபாகங்களில் லக்ஷணையும், அகண்ட சைதன்னியத்தில் லக்ஷ்யமும் சித்திக்
ம்ன்றன.

105. "தத்துவமசி" என்னும் வாக்கியம் உபதேசவாக்கியமாம். மற்ற
மூன்றும் அனுபவவாக்கியங்களாம். இவைகளின் விசேஷார்த்தம் பஞ்சதசிப்
பிரகரணத்தில் சொல்லியபடி வருமாறு:— (1) **தத்துவமஸி**என்பது காமவே

பதத்துக்கும் வாச்சியமன்று, என்பதுசித்தாந்தம். ஆனதால் பதங்களெல்லாம் விசிஷ்டைக்திற்கு வாசகங்களாயும் சுத்தத்திற்கு லக்ஷியமாயும் இருக்கின்றன. மாயையினை ஆபேக்ஷிகசத்தியதையும் சேதனத்தின் நிரபேக்ஷிகசத்தியதையும் சேர்த்து சத்தியமென்றும் பதத்தின் வாச்சியமாகிறது. நிரபேக்ஷிகசத்தியம் லக்ஷியம். புத்திபிரதிபலனையும் ஸ்

தந்தின் சாந்தோக்கிய உபநிஷத்தின் வாக்கியம். சத் என்பதிலை சிர்வ்டிக்கு முன் ஏகமாயும் அத்துவியதீயமாயும் நாமருபரகிதமாயும் சிருஷ்டிக்குப்பின்னும் விசாரதிர்ஷ்டிக்கு இப்படியேயிருக்கும் சத்யென்று அறியத்தக்கது. சவம்பதத்தால் தேகேந்திரியாதிகளுக்கு அதிகமாயும் இவைகளுக்குச் சாக்ஷியாயிருப்பதினால் இவைகளுக்கு விலக்ஷணமாயுமிருக்கிற சுத்தரூபஆத்மா கிரகிக்கத்தக்கது. அஸிபதத்தால் தத்-துவம்பதங்களின் சாமாநாதிகரண்யத்தால் அடையப்பட்ட பிரம்மஆத்மாக்களின் ஏகத்துவம் அறியத்தக்கது. (2) அதர்வணவேதத்தின் மாண்டூக்கிய உபநிஷத்தின் "அயமாத்மா பிரம்மம்" என்னும் வாக்கியத்தில் அயமென்னும் பதத்தால் ஸ்வப்பிரகாசமாயும் அபரோக்ஷமாயுமிருக்கிற ஆத்மா என்று கிரகிக்கத்தக்கது. ஆத்மா என்னும் பதத்தால் அகங்காராதி தேகபரியந்தமுள்ள சங்காதத்துக்கு அதிஷ்டானமாயும் சாக்ஷியாயும் இருப்பதினால் பிரத்தியகமாயிருக்கிற சேதனங்கிரகிக்கத்தக்கது. பிரம்மசப்தத்தால் நிரதியமாயிருப்பதால் மித்தையாயிருக்கிற சகல ஆகாசாதி ஜகத்தின் தத்துவம் அதாவது அதிஷ்டானமாயிருப்பதால் இந்த ஜகத்தைப்பாதித்துப் பாரமார்த்திக சச்சிதாநந்தலக்ஷணங்களுடன் கூடிய வொருபமென்று கிரகிக்கத்தக்கது. மேற்சொன்ன லக்ஷணங்களுடன் கூடிய பிரம்மம் ஆத்மா (தன்) வுவருபம். (3) யஜுர்வேதத்தின் பிரதாண்யகவுடநிஷத்தில் அகம்பிரம்மாஸ்மி என்னும் வாக்கியத்தில் அகமென்னும் பதத்தால் தேசகாலவஸ்துக்களாற் பரிச்சின்னமாகாத பரிபூர்ணமான பரமாத்மாவாயும் சாமாநிகரணங்களாகூடிப் பிரம்மவிருத்தியைச் சம்பாதிக்க வொக்கியனையும் புத்திக்குச் சாக்ஷியாயுமிருக்கிற ஆத்மா கிரகிக்கத்தக்கது. பிரம்மசப்தத்தால் வ்யவபாவத்தில் தேசகாலாதிபரிச்சின்னமில்லாத பரிபூர்ணமான பரப்பிரம்மம் கிரகிக்கத்தக்கது. அஸ்மியென்னும பதத்தால் சாமாநாதிகரண்யத்தால் ஜீவப்பிரம்மங்களின் ஏகத்துவம் ஞாபகப்படுத்தப்படுகிறது. (4) இருக்குவேதத்தின் ஐதரேய உபநிஷத்தின் பிரஜ்ஞானம் பிரம்மமென்னும் வாக்கியத்தில் பிரஜ்ஞானமென்னும் பதத்தால் எந்தச் சைதன்யத்தால் புருஷன் ரூபாதிகளைப்பார்க்கிறானே சப்தங்களைக்கேட்கிறானே கந்தத்தையறிகிறானே சப்தத்தைவசனிக்கிறானே ரஸத்தையறிகிறானே அந்தச் சைதன்னியமென்று அறியத்தக்கது. பிரம்மசப்தத்தால் உத்தமமான தேவாதிகளிலும் மத்தியமமான மனுஷ்யர்களிலும் அதமமான மிருகங்களிலும் ஆகாசாதி பூதங்களிலும் உளள சைதன்னியம் கிரகிக்கத்தக்கது. ஆகையால் தன்னிடத்திலுமிருக்கிற பிரஜ்ஞானம் பிரம்மமே.

வயம்பிரகாசஞானமும் இரண்டுஞ் சேர்ந்தது ஞானபதத்தின் வாச்சியம், ஸ்வயம்பிரகாசபாகம் லக்ஷியம். விஷயசம்பந்தத்தாலுண்டாகிற சுகாகாரமான சாத்விக அந்தக்கரணவிர்த்தியும் பரமப்பிரேமைக்கிடமான ஸ்வரூபசுகமும் இரண்டுஞ் சேர்ந்தது ஆனந்தபதத்தின் வாச்சியம். விர்த்திபாகத்தை விட்டு ஸ்வரூபபாகம் லக்ஷியம். இவ்விதமாகச் சகலபதங்களுக்கும் சுத்தப்பிரம்மத்தில் லக்ஷணையுண்டென்று சம்க்ஷேபசாரீரகத்தில் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

583. சொன்ன அர்த்தத்தை மறுபடியும் சங்கிரகமாய்ச் சொல்லுகிறேன். கங்கையில் கிராமமென்னும் இடத்தில் ஜகல்லக்ஷணா சித்திக்கிறது. சிவப்பு ஓடுகிறது என்னுமிடத்தில் அஜகல்லக்ஷணையை அறி. அதுவே இது என்னுமிடத்தில் பாகத்தியாகலக்ஷணா சித்திக்கிறது. இதற்கு ஜகதஜகல்லக்ஷணையென்றும் பெயர். தத்த்வமஸியாதி மகாவாக்கியங்களில் ஜகல்லக்ஷணையையும் அஜகல்லக்ஷணையையும் தள்ளிப் பாகத்தியாகலக்ஷணையை அறியவேண்டியதென்று நான் சொல்லியிருக்கிறேன். பிரம்மம் எந்தப் பதத்துக்கும் வாச்சியமல்லவென்று வேதஞ்சொல்லுகிறது. ஆகையால்எல்லாப்பதங்களிலும் நீ இப்படியே அறியவேண்டியது. மாயையின் ஆபேக்ஷிகசத்தும் சைதன்னியத்தின் நிரபேக்ஷிகசத்தும் சேர்ந்தது பதபதத்தின் வாச்சியமாகிறது. இவைகளில் நிரபேக்ஷிகசத்து லக்ஷியம். ஸ்வயம் பிரகாசஞானமும் புத்திவிர்த்திஞானமுஞ் சேர்ந்தது ஞானபதத்தின் வாச்சியமென்று அறி இவைகளில் ஸ்வயம்பிரகாசஞானம் லக்ஷியம், விஷயசம்பந்தத்தாலுண்டாகும் சுகாகாரமான சாத்வீக அந்தக்கரணத்தின் விர்த்தியும் பரமப்பிரேமாஸ்பதமான ஸ்வரூபஸ்திதியும் சேர்ந்தது ஆனந்தபதத்தின் வாச்சியம். இவைகளில் விர்த்திபாகத்தை விட்டுப் பரமப்பிரேமாஸ்பதத்தை ஆனந்தபதத்தின் லக்ஷியமாக அறி. இப்படியே எல்லாப்பதங்களிலும் அறி. சுத்தாம்சமே லக்ஷியம். பாகத்தியாகலக்ஷணையால் எல்லாருக்கும் சம்மதமான பிரமாணஞ் சொல்லப்பட்டது.

589. கேள்வி:— இரண்டு பதங்களிலும் லக்ஷணா நிஷ்பிரயோஜனம்:— மகாவாக்கியத்தில் விரோதத்தைத் தள்ளுவதற்காக இரண்டுபதங்களிலும் லக்ஷணா அங்கீகரிக்கப்பட்டிருப்பதில் ஒருபதத்தில் லக்ஷணையை அங்கீகரிப்பதினாலேயே விரோதம் நிவிர்த்தியாய்விடுமென்றும் இரண்டு பதங்களிலும் லக்ஷணையை அங்கீகரிப்பது நிஷ்பிரயோஜனமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இதற்குப்பாவம்:— சர்வஞ்ஞதை முதலியவைகளுடன் கூடியதற்கு அல்பஞ்ஞதை முதலியவைகளோடு கூடினதுடன ஏகத்துவம் பொருந்தாவிட்டாலும் ஒருபதத்தின் லக்ஷியமாயிறசுத்

தத்துக்கு விசிஷ்டத்துடன் ஏகத்துவம் பொருந்தும். உதாரணம்:—'சூக்கிரமனுஷன் பிராமணன்' என்னுமிடத்தில் சூக்கிரத்துவதர்மத்துடன் கூடின மனுஷனுக்குப் பிராமணத்துவதர்மங்களோடு கூடினவனுடன் ஏகத்துவஞ்சொல்வது விருத்தமாயிருக்கிறது. மனுஷன் பிராமணன் என்னுமிடத்தில் சூக்கிரத்துவதர்மரகிதமான சுத்தமனுஷனை பிராமணத்துவதர்மசகிதமாயிருப்பதாகச் சொல்வதில் விரோதமில்லை. இதுபோல் அல்பஞ்ஞதை முதலியதர்மங்களுடன்கூடிய சேதனத்துக்கும் சர்வஞ்ஞதைமுதலியதர்மங்களுடன்கூடின சேதனத்துக்கும் ஏகத்துவம் விருத்தமாயிருக்கிறது. ஆனால் ஜீவேஸ்வரவாசகபதங்களின் சேதனத்தில் லக்ஷணையால் சேதனமாத்திரத்துக்குச் சர்வஞ்ஞதை முதலியதர்மங்களோடுகூடினதுபோலவது அல்பஞ்ஞதைமுதலியதர்மங்களுடன் கூடினதுபோலவது ஏகத்துவஞ் சொல்வதில் விரோதமில்லை. ஆகையால் இரண்டுபக்ஷங்களிலும் லக்ஷணையை அங்கீகரிப்பதில் யாதொரு யுக்தியுமில்லை.

590. சமாதானம்:— ஒருபதத்தில்லக்ஷணையை அங்கீகரிக்கிறவனுக்கு ஒரு கேள்வி — இரண்டு பதங்களில் எந்தப்பதத்தில் லக்ஷணையிருக்கிறது. நான்கு மகாவாக்கியங்களிலும் முதல் பதத்தில் லக்ஷணையுண்டென்றும் இரண்டாவதில் இல்லையென்றுஞ் சொல்லுகிறாயா? அல்லது இரண்டாவது பதத்தில் லக்ஷணையுண்டென்றும் முதல்பதத்தில் இல்லையென்றுஞ்சொல்லுகிறாயா? சிவதேன அவனைப்பார்த்து அடியில்வருமாறுசொல்வாயாக. முடனே முதற்பதத்திலாவது இரண்டாம்பதத்திலாவதுபயமமாக லக்ஷணை இருக்கிறதாக நினைக்கும பக்ஷத்தில் வாக்கியங்கள் பரஸ்பரம் விரோதமாகும். ஏனெனில் "அஹம்பிரம்மாஸ்மி" "பிரஞ்ஞானமானந்தம்பிரம்ம" "அயமாத்மாபிரம்ம" இம்மூன்று வாக்கியங்களிலும் முதலாவது பதம் ஜீவவாசகம். "தத்துவமஸி" வாக்கியத்தில் மூதற்பதம் ஈசுவர வாசகம். முதற்பதத்தில் எல்லாவாக்கியங்களிலும் லக்ஷணையை அங்கீகரித்தால் சேதனம் சர்வஞ்ஞதை முதலியவைகளுடன் கூடின ஈசுவரனையிருக்கிறதென்று முதல் மூன்றுவாக்கியங்களுக்கும் அர்த்தமாகும். சேதனம் அல்பஞ்ஞதை முதலியவைகளுடன் கூடின சமுசாரியாகிய ஜீவரூபமென்று தத்துவமஸி என்னும் வாக்கியத்துக்கு அர்த்தமாகும். ஏனெனில் மூன்று வாக்கியங்களிலும் முதற்பதம் ஜீவவாசகம். அதற்குச்சேதனபாகத்தில் லக்ஷணையுண்டு. இரண்டாவதாகிய ஈசுவர வாசகபதத்துக்கு வாச்சியம் கிறகிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாகலக்ஷணையை நியமமாக அங்கீகரித்தால் வாக்கியங்க

ணுக்குப் பரஸ்பரம் விரோதமுண்டாகிறது. இப்படியே எல்லாவாக்கி யங்களிலும் இரண்டாவது பதத்தில் லக்ஷணையை யங்கீகரிக்கும் பக்ஷத் தில் மூன்று வாக்கியங்களிலும் முதலாவதாகிய ஜீவபதத்தில் வாச்சியத் தையும் இரண்டாவதாகிய சுவர பதத்துக்குச் சேதனபாகத்தில் லக்ஷ் ணையையும் இரண்டாவதாகிய சுவர பதத்துக்குச் சேதனபாகத்தில் லக்ஷ் ணையையும் அல்பஞ்ஞதை முதலியவைகளுடன் கூடினது சேதனமென்று மூன்றுவாக்கியங்களுக்கும் அர்த்தமாகும். தத்துவ மஸி வாக்கியத்தில் முதலாவதாகிய சுவரபதத்தின் வாச்சியத்தையும் இரண்டாவதாகிய ஜீவ பதத்துக்குச் சேதனபாகத்தில் லக்ஷணையையும் அங்கீகரிக்கிறதினால் சர்வஞ்ஞதை முதலிய தர்மங்களுடன் கூடினது சேத னமென்று தத்துவமஸி வாக்கியத்துக்கும் அர்த்தமாகும். இதனால் பர ஸ்பரம் விரோதமேயுண்டாகும். இவ்விதமாக முதற் பதத்திலாவது இரண்டாவதுபதத்தில்லாவது லக்ஷணையை நியமமாய் அங்கீகரிப்பது சரி யன்று. ஆனதால் ஆசாரியர்கள் இரண்டு பதங்களிலும் லக்ஷணையை ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

591. ஆக்ஷேபம்:— சுவர வாசக பதத்தில் லக்ஷணை.— முத ற்பதத்திலாவது இரண்டாவது பதத்திலாவது லக்ஷணையை நியமமாய் அங்கீகரிக்கவேண்டியதில்லை. ஆனால் எல்லா வாக்கியங்களிலும் சுவர வாசகபதத்தில் லக்ஷணையை நியமமாய் அங்கீகரிக்கவேண்டியது. அந்த சுவர வாசகபதம் முதலாவதாகவாவது இரண்டாவதாகவாவது இருக்க க்கூடும். அதினால் வாக்கியங்களுக்குப் பரஸ்பரவிரோதமில்லை.

592. சமாதானம்:— சுவரவாசக பதத்துக்கே லக்ஷணைசொ ல்லும்பக்ஷத்தில் சர்வ அனர்த்தங்கள் அல்பஞ்ஞதபராதீனதை ஜன னமரணங்கள் முதலிய துக்கசாதனங்கள் இவைகளுக்கிருப்பிடமாகிய சமுசாரியாகிய ஜீவன் சுருதிவாக்கியங்களில் ஞேயமாயிருப்பதால் மோ க்ஷத்துக்கு ஹானியுண்டாகும். இதற்குப்பாவமென்னவெனில், சுஸ்வ ர வாசகபதத்திலேயே லக்ஷணையை அங்கீகரிப்பதினால் மகாவாக்கியத் துக்கு என்ன அர்த்தமாகுமெனில், தத்பதத்துக்கு லக்ஷ்யமான அத்வய மாயும் அசங்கமாயும் மாயா மலரகிதமாயும் இருக்கிற சேதனமே காம கர்ம அவித்தை இவைகளுக்கு ஆதீனமாயும், அல்பஞ்ஞதை அல்பசக்தி பரிச்சின்னதை, புண்ணியபாவங்கள், சுக துக்கங்கள், ஜனனமரணங் கள், கமனாகமனங்கள் முதலிய அனந்த அனர்த்தங்களுக்குப் பாத்திர

மாயும் ஆய்விடும். மகாவாக்கியத்துக்கு இப்படி அர்த்தமானால் ஜிஞ்ஞாசுவானவன் இந்த அர்த்தத்தில் புத்தியஸ்திரப்படுத்தும்படி நேரிடும். எதில் புத்தி ஸ்திரப்படுகிறதோ அதுவே பிராணவியோகத்துக்குப் பிறகும் அடையப்படுகிறது. ஆனதால் வேதவாக்கிய விசாரத்தால் மூலாஜ்ஞானத்துக்கு அனர்த்தமே பிராப்தமாகும் ஆனந்தம் அடையப்படமாட்டாது. ஆனதால் ஈசுவர வாசக பதத்தில் லக்ஷணை இருக்கிறதென்றும் ஜீவவாசக பதத்தில் லக்ஷணை இல்லையென்றும் சொல்லும் நியமம் அசங்கதமாயிருக்கிறது.

593. **ஆக்ஷேபம்**:—ஜீவவாசகபதத்தில் லக்ஷணை:—எல்லா வாக்கியங்களிலும் ஜீவவாசகபதத்தில் லக்ஷணையுண்டு. ஈஸ்வரவாசகத்தில் இல்லை. ஆனதால் புருஷார்த்தத்துக்கு ஹானியில்லை. ஏனெனில் ஜீவவாசகபதத்தில் லக்ஷணையை ஒப்புக்கொள்ளுவதினால் பதத்தின் லக்ஷியமான சேதனபாகம் சர்வசக்திமானையும் சர்வஜ்ஞனையும் சுதந்திரனையும் ஜன்மாதிபந்தாதிகளையுமிருக்கிற ஈஸ்வரரூபமென்றும் மகாவாக்கியத்துக்கு அர்த்தமாகும். இந்த அர்த்தத்தில் புத்தியை ஸ்திரப்படுத்துவதினால் ஜிஞ்ஞாஸுவுக்கு அதியுத்தமமான ஈஸ்வரபாவமே பிராப்தமாகும். ஆனதால் ஜீவவாசகபதத்தில் லக்ஷணையை நியமமாய் அங்கீகரிக்கவேண்டும்.

594. **சமாதானம்**:—துவம் பதத்தின் லக்ஷியமாகிற சாக்ஷீ என்பதிலிருந்து ஈஸ்வரரூபமாகுமென்பதைச் சொல். துவம்பதத்தின் லக்ஷியத்தை ஈஸ்வரரூபமாகச் சொல்வது சரியன்று. ஆனதால் யதீஸ்வரோத்தமர்கள் இரண்டு பதங்களிலும் லக்ஷணையைஒப்புக்கொள்ளுகிறார்கள். இதற்குப் பாவமென்னவெனில் ஜீவவாசகபதத்தில் லக்ஷணையை ஒப்புக்கொண்டு ஈஸ்வரவாசகத்தில் லக்ஷணையை ஒப்புக்கொள்ளாதவனுக்கு ஒருகேள்வி, துவம்பதத்தின் லக்ஷணை வியாபகசேதனத்திலிருக்கிறதா அல்லது எவ்வளவிடத்தில் ஜீவனுடைய உபாதி இருக்கிறதோ அவ்வளவிடத்திலுள்ள சாக்ஷீசேதனத்திலிருக்கிறதா? வியாபகசேதனத்தில் துவம்பதத்தின் லக்ஷணையைச் சொல்வதுசரியன்று. ஏனெனில் வாச்சியார்த்தத்தில் எது பிரவேசிக்கிறதோ அதில் பாகத்தியாகலக்ஷணை சம்பவிக்கிறது. வாச்சியத்தில் வியாபகசேதனம் பிரவேசிக்கிறதில்லை. ஆனால் ஜீவனுடைய உபாதியிலிருக்கிற சாக்ஷீசேதனம் வாச்சியத்தில் பிரவேசிக்கிறது. ஆனதால் சாக்ஷீசேதனத்திலேயே துவம்பதத்தின் லக்ஷணை இருக்கிறது. வியாபக

சேதனத்தில் இலலை. இந்தச் சாக்ஷீசேதனத்தில் எல்லாருடைய இருதய ங்களையும் பி ர பிஞ்சல் சர்வப்பிரபஞ்சத்திலும் வியாபித்திருத்தல் மு தலான ஈஸ்வரதர்மங்கள் சம்பவிக்கமாட்டா. சாக்ஷீ எப்போதும் அப ரோக்ஷமாயிருக்கிறது. அதனிடத்தில் பரோக்ஷதை முதலிய ஈஸ்வரத ர்மங்கள் சுத்தமாயிருக்கமாட்டா. மேலும் மாயாரஹிதமாயிருப்பதை மா யாவிசிஷ்டமாய்ச் சொல்வது சரியன்று. உதாரணம்:—தண்டமில்லாத வனைத் தண்டி என்று சொல்வதும் சம்ஸ்காரரஹித துவிஜபாலகனைச் சம் ஸ்காரவிசிஷ்டனைச் சொல்வதுஞ்சரியன்று. ஆனதால் சாக்ஷீசேதனத் துக்கும் ஈஸ்வரனுக்கும் அபேதஞ்சொல்லும்பக்ஷத்தில் மகாவாக்கியம் அ ஸம்பவார்த்தத்தைப் பிரதிபாதிக்கிறதாக ஆகும்.

595. இரண்டு பதங்களிலும்லக்ஷணையை ஒப்புக்கொள்ளும் பக்ஷ த்தில் தோஷமில்லை. எனெனில் இரண்டு பதங்களிலுமுள்ள விருத்த த ர்மங்களைத்தள்ளுவதால் மிச்சப்படுவது பிரகாசரூபசேதனம். எனெனில உபாதியாலும் அதினாலுண்டாகிற தர்மங்களாலும் சேதனத்துக்குப் பேதமிருக்கிறதே தவிர ஸ்வரூபத்தில் இல்லை. உபாதியையும் அதன லுண்டாகும் தர்மங்களையும் விட்டுவிடுகிறதினால் இரண்டுபதங்களுக்கும் லக்ஷியமான சேதனம் ஒன்றெனவே சித்திக்கிறது. உதாரணம்:—கட ாகாசத்தில் கடதிருஷ்டியை விட்டு மட விசிஷ்ட ஆகாசத்துடன் ஏகத்துவ ஞ் சம்பவிக்கிறதில்லை, மடதிருஷ்டியையும் விடுகிறதினால் ஏகத்துவஞ் சித்திக்கிறது.

596. ஓதப்புரோதபாவம்:— எல்லா வாக்கியங்களிலும் "தத்துவ ம்", "துவம்தத்" என்கிற ரீதியாய் ஓதப்புரோதபாவத்தின் ரீதியை அறி. இதினால் வாக்கியத்தின் அர்த்தத்தில் பரோக்ஷபரிச்சின்னப் பிராந்தி கள் நிவிர்த்தியாய்விடும். "தத்துவம்" என்று சொல்வதினால் தத்பதத்

---

106. அபேதஞானம் உபதேசிக்கப்பட்டிருந்தாலும் ஒரு காலத்தில் தீக்ஷ ணமான அபேதஞான அபாவத்தாலும் மாயை அவித்தை இவைகளின் பலத்தாலு ம் சிஷ்யனுடைய இருதயத்தில் தத்பதார்ததவிஷயத்தில் பரோக்ஷபிராந்தியும் த்வம்பதார்த்தவிஷயத்தில் பரிச்சின்னப் பிராந்தியும் உண்டாகக்கூடும். இதை நிவிர்த்திசெய்வதற்காக ஓதப்புரோதபாவம் சொல்லப்பட்டது

தின் அர்த்தத்துக்கு நுவம்பத அர்த்தத்துடன் அபேதஞ்சொல்லப்பட்டது. நுவம்பதத்தின் அர்த்தமாகிற சாக்ஷீ நித்தியம் அபரோக்ஷமாயிருக்கிறது. ஆனதால் பரோக்ஷத்தின் பிராந்தி நிவிர்த்தியாகிறது. "ச்வேம்தத்" என்பதினால் தயம்பதத்தின் அர்த்தத்துக்கு தத் பதார்த்தத்துடன் அபேதஞ் சொல்லப்படுகிறது. தத்பதத்தின் அர்த்தம் வியாபகம். ஆனதால் பரிச்சின்னத்தின் பிராந்தி நிவிர்த்தியாகிறது. இதுபோல் "அகம்பிர்ம்ம", பிர்ஞ்ஞானம்பிர்ம்ம", ஆத்மாபிர்ம்ம", இவ்வாக்கியங்களாலும் பரிச்சின்னதை நிவிர்த்தியாகிறது. "பிர்ம்ம அகம்", பிர்ம்ம பிரஞ்ஞானம், பிர்ம்ம ஆத்மா, இவைகளாற் பரோக்ஷதை நிவிர்த்தியாகிறது.

597. சுவேதகேது, ஹ்ருதயாதிர்ம்மங்களின் ஏகத்துவத்தைச் சகல வேதங்களும் ஸ்மிருதிகளுஞ் சொல்லுகின்றன. இவ்விஷயத்திற் பாகத்தியாகத்தையே யதார்த்தமாயறி. இவ்விதமான குருபதேசத்தைக்கேட்டுச் சீஷனுடனே கிருதநிருத்தியனானான். இதின் யதார்த்தத்தை விசாரிக்கிறவனுடைய துக்கமெல்லாம் நசித்துப்போம். மித்தையான குருவினல் சமுஸ்கிருத பாஷையில் இக்ரந்தமுபதேசிக்கப்பட்டு இதைக்கேட்கிறதினல் அஞ்ஞானம் நிவிர்த்தியாய் விடுகிறது. அக்கிருதத்தின் மொழிபெயர்ப்புச் சரியாய்ச் செய்யப்பட்டது. அக்கிருதனேவன் சொற்பனத்தில் இவ்வுபதேசத்தைப்பெற்றும் அவன் துக்கம் மூற்றிலும் நிவிர்த்தியாகவில்லை. அப்போது அக்கிருதனேவன் கேட்பான்.

598. ஸ்வாமின் நீங்கள் சொல்லிய ரஹஸ்யத்தை நான் அர்த்தத்துடன் கேட்டேன். ஆனல் துக்கத்துக்குக்காரணமான வனம் எனக்கின்னும் விளங்கிக்கொண்டிருக்கிறதி. எந்த உபாயத்தால் அது நசித்துப்போகுமோ அதைச்சொல்லியருள்க.

599. குரு உத்தரம்:— சீஷன் வார்த்தையைக்கேட்டுக் குரு சொல்லுகிறதாவது; சீஷனேவனம் நசிக்கும்படியான உபாயத்தைக்கேள். இதைத்தவிர வேறுபாயமில்லை. மகாவாக்கியத்தின் அர்த்தத்தைக்கேட்டு நான் அக்கிருதன் என்று உரத்துச்சொல்லென்றார். சீஷன் அப்படியே வாக்கியத்தை விசாரித்து "நான் அக்கிருதன்" என்று உரத்துச்சொன்னன். உடனே நித்திரையொழிந்து கண்விழித்துக்கொண்டான். அக்கணமே வனம் நிரந்தம் குரு எல்லாம் மறைந்துவிட்டன. வனதுக்

கத்தை மறக்கு தான் அக்கிருதன் என்று தெரிந்துகொண்டு அக்கிருதன் சுகியாளுன்.

600. அக்கிருததேவனுக்கு நித்திரையால் எவ்விதமாய் வனதுக்கமுண்டாயிற்றே, அப்படியே ஆத்மாவின் அஞ்ஞானத்தால் ஜகத்துக்கம் பிரதியாகிறது. எப்படி மித்தையான குருவினுலும் கிரந்தத்தினுலும் மித்தையான வனம் நசித்ததோ அப்படி மித்தையான குருவினுலும் வேதத்தினுலும் மித்தையான ஜகத்துக்கம் நசித்துப்போகிறது. வாக்கியங்களின் லக்ஷியார்த்தத்தை யறிந்து ஜிஞ்ஞாசு பூர்ணகிருதகிருத்தியனுகிறன். தீனதயாளுவாயும் நிராவரணமாயுமிருக்கிற தாகுவே நான.

6-வது சர்க்கம் முற்றும்.

ஸமாப்தம்

விசாரசாகரம்

7-வது தரங்கம்.

ஜீவன்முக்திவிதேகமுக்திவர்ணனை (601—47).—

601. பூர்வபீடிகை:—உத்தமமதியமகனிஷ்டாதிகாரிகளான மூவரும் குருபதேசத்தைக் கேட்டு யாதொரு சம்சயமன்றியில் ஆத்மாவே பிரம்மமென்னும் உத்தமமான ஞானத்தை யடைந்தார்கள். குரு மூவருக்கும் ஒரேகாலத்திலுபதேசஞ் செய்திருந்தாலும் உத்தமமான பிரம்மசாக்ஷாத்காரஞானம் கத்துவதிற்பேதமுண்டாயிற்று.

602. ஞானிந்த வியவகாரத்தில் நியமமில்லை:-மரத்தின் காய்ந்த சருகுகள் காற்றினால் அங்குமிங்கும் பறந்து ஒடுகிறதுபோல் பிராரப்த விசேஷத்தால் ஞானிகிரியைகளைச்செய்கிறதாகக் காணப்படுகிறான். ஒருகாலத்தில் குதிரைவண்டியிலேறித் தோட்ட முதலியவைகளைப்பார்க்கிறான். ஒருக்கால் காலில் ஒன்றுமில்லாமல் நடக்கிறான் அவன் படுக்கையோ அனேகவிதம். போகபோஜனாதிகள் ஒருகாலத்திலுத்தமமாயிருக்கின்றன. ஒருக்கால் போஜனமன்றியில் மலையின் குகையிலிருந்துகொண்டு கற்றரையிற் படுத்துக்கொண்டு இரவைப்போக்குகிறான். ஒருக்கால் இவனை ஆயிரம் பெயர்கள் நமஸ்கரிக்கிறார்கள். ஒருகாலத்தில் இவன் உபயலோகப்பிரஷ்டன் என்று கர்மியால் நிந்திக்கப்படுகிறான். எவன் இவனைப் பூஜிக்கிறானோ அவன் சுகிருதத்தையடைகிறான். தோஷதிருஷ்டியுடன் இவனைப்பார்க்கிறவன் பாவத்தையடைகிறான். இவ்விதமாக ஞானியின் வியவகாரம் நியமமன்றியிலிருக்கிறது. தத்துவத்தைப் பூர்ணமாயறிந்தவனுக்குப் பிரமையும் சந்தேகமுமுண்டாகமாட்டா. அவனுக்குச் செய்யவேண்டியது யாதொன்றுமில்லை. அவனுடைய பேதப்பிரமைகளெல்லாம் நசித்துப்போயின. வேதப்பிரமாணத்தால் ஸ்வயம் பிரகாசமான அத்துவயப் பிரம்மத்தின் ஞானம் உண்டாயிருக்கிறது.

---

1. பிரஞ்சப் பிரதிதியுடன் அத்வைதப்பிரம்ம ஸ்வரூபமாயிருத்தல் ஜீவன்முக்தியாம்.

2. பிரபஞ்சப் பிரதிதியன்றியில் அத்வைதப் பிரம்மஸ்வரூபமாயிருத்தல்விதேக முக்தியாம்.

603. **ஆகேஷபங்கள்** (603—639):— ஞானிக்கு வியவகார விஷயத்தில் நியமமுண்டென்று சிலர் சொல்லுகிறார்கள். துக்கத்துக்குகாரணமான திரிபுடியைத்தள்ளிச் சமாதி விஷயத்தில் ஞானி பிரயத்தனஞ்செய்கிறான். சொற்பவியவகாரமிருக்குமேயானல் அது பரிதாகங்களைத் தீர்க்கும்பொருட்டாயிருக்கும். சமாதிக்கு அதிகமான சுகம் யாதொன்றுமில்லை. திரிபுடியால் துக்கந்தான் ஜனிக்கிறது. இக்காரணத்தால் ஞானி சமாதிக்குப் பிரயத்தனம் அடிக்கடி பண்ணுகிறான். சமாதி சுகத்தைவிட்டுப் பிரமிக்கிறவன் நாய்க்கொப்பாவான். **கவுடபாதாசாரியாருடைய காரிகையில்** சமாதிப் பிரகாரம் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதமாய ஞானியானவன் விகேஷபத்தைப் போக்கிச் சகல சுகத்தையும் அடைகிறான். சமாதிசுகம் அவடாங்கமன்றியிண்டாகிறதில்லை. அவைகளைச் சொல்லுகிறேனே கேள். இயமநியமாதிகள் பத்து ஆஸனாங்கள் அநேகம். பிராணயாமம் அநேகவிதம். பிரத்தியாகாரம், தாரணை, தியானம், ஸவிகல்பசமாதிஇவ்வஷ்டாங்கசாதனங்களால் நிர்விகல்பசமாதி அனுஷ்டிக்கத்தக்கது.

604. இவ்வாறு சமாதியை அனுஷ்டிக்க வேண்டுமென்பதைக் கேட்டு, இவர்கள் பேய்பிடித்தவர்களைனப் பிதற்றுகிறார்கள் என்று நினைத்துத் தத்துவநிஷ்டியானவன் ஒன்றும் பேசாமல் சிரித்தான்.

605. **சித்தாந்தம்:**— ஞானிக்குச சரீர வியவகாரநியமமில்லை. எனெனில் ஞானியின் வியவகாரத்தில் அந்ஞானம் அதின் காரியமான ராகத்துவேஷங்கள் இலைகளில்லை. ஆலல் ஞானிக்குப் பிராரப்தகர்மத்தின் சேஷமிருக்கிறது. இதுவே அவனுடைய வியவகாரத்துக்குக்காரணமாயிருக்கிறது. இப்பிராரப்தகர்மம ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு விதமாயிருக்கிறது. ஆனதால் ஞானிக்கு பிராரப்தகர்மம் ஜன்யவிய வகாரத்தில் நியமமில்லை. இது சித்தாந்த பக்ஷம்.

606. **ஆகேஷபம்:**— சிலர் சொல்லுகிறதாவது:— ஞானிக்கு வியவகாரத்தில் யாதொருகர்மத்தின் நியமமுமில்லை. ஆனல் ஞானிக்கு நிவிர்த்தியின்பொருட்டு நியமமுண்டு. பிரவிர்த்தியுண்டானல் தேகஸ்திதியின் பொருட்டுப் போஜனத்துக்காகப் பிசைகையிலும் மானங்காக்கக் கௌபீனக் கிரகணத்திலுந்தான் பிரவிர்த்தியுண்டாகிறது. எனெனில் ஞானமுண்டாவதற்குமுன் ஜிஞ்ஞாஸாகாலத்தில் விஷயத்தில் தோஷதிர்ஷ்டியால் வைராக்கிய முண்டாகிறது. இந்த வைராக்கியம்

---

3. ஜன்மம், மிருத்யு, ஜரை, வியாதி, இவைகளில் துக்கத்தையும்தோஷத்தையும்பற்றி சாஸ்திரத்திலுமும், தன் அனுபவத்திலுமும் ஆலோசித்தல் தோஷதிர்ஷ்டியாம்.

ஞானமுண்டான பிரகும தோஷ திர்ஷ்டியாலும விஷயத்தின் மித்தியாபு தியாலு மிருந்துகொண்டிருக்கிறது. அபரோக்ஷமாய்ப் பொய்யென்ற றிந்து பதார்த்தத்தில் சத்திய புத்தி யுண்டாகிறதில்லை. தோஷ திர்ஷ் டியால் ராகமுண்டாகிறதில்லை. பிரவிர்த்தி ராகத்தாலுண்டாகிறது. ஞானிக்கு ராகமில்லாதபடியால பிரவிர்த்தி யுண்டாகிறதில்லை. சரீரபோ ஷணயின்பொருட்டுப் போஜனாதிகளிற் பிரவிர்த்தி ராகமன்றியில் பிராரப்த கர்மத்தாலுண்டாகிறது.

607. **கர்மம்:—** கர்மம் மூன்றுவிதம். (1) **சஞ்சிதம்.** (2) **ஆகாமியம்.** (3) **பிராரப்தம்.** இவைகளில் முன் சரீரத்தில் செ ய்யப்பட்டுப் பலனுக்கு வராமலிருப்பது சஞ்சிதமாம். எதிர்காலத்துக் கர்மம் ஆகாமியாம். முன்சரீரத்தில் செய்யப்பட்டு வர்த்தமானசரீரத் துக்கு ஏதுவாயிருக்குங் கர்மம் பிராரப்தமாம். இவைகளில் சஞ்சிதகர்மம ஞானத்தால் நசித்துப்போகிறது. ஞானிக்கு ஆத்மாவினிடத்தில் கர்த் திருத்துவப்பிராந்தி இல்லை. ஆனதால் அவனுக்கு ஆகாமி கர்ம்மமில்லை. எந்தப் பிராரப்தகர்மத்தால் ஞானியின் சரீரமுண்டாயிற்றோ அந்தப் பி ராரப்தகர்மம் சரீரஸ்திதிக்குக் காரணமான பிணகூழுதலியவைகளிற் பிரீவிர்த்தியுண்டாகும்படிச் செய்கிறது. பிராரப்தகர்ம்ம போகமன்றி யில் நாசமடையாது.

---

4. ஒரு குடித்தனக்காரன் தனக்குக்கல்லிழுலான நெல்லில் பிதுதி யைச்சேர்க்கட்டிவைத்துக்கொஞ்சம் சாப்பாட்டுக்காகக்குதிரில் போட்டுக்கொ ள்ளுகிறான். இந்த நெல்லைச்சாப்பிட்டுக்கொண்டே மறுபடியும் சாகுபடி செய் யத்தொடங்குகிறான். விளைகிற நெல்லை மறுபடியுஞ்சேருடன் சேர்க்கிறான். இது போல் ஜன்மாந்தரத்திற் செய்த கர்மங்கள் அந்தக்கரணஉபாதி சாக்ஷியினி டத்திலுள்ள அஞ்ஞானத்தின் ஆவரணசக்தியாகிற சேரிலிருக்கின்றன. இக்கர் மங்கள் சஞ்சிதங்கள் என்னப்படும். இவைகளினின்றும் சிலகர்மங்கள் பரிப க்குவமாகி வர்த்தமான சரீரத்தைக்கொடுக்கிறவையாயும் சுகதுக்கபலன்களைத் தருகிறவையாயும் அஞ்ஞானத்தின் விக்ஷேபசக்தியை ஆசிரயித்துக்கொண்டுமிரு க்கின்றன. இவைகள் பிராரப்தகர்மங்களாம். வர்த்தமான சரீரத்திற் செய்ய ப்பட்டு இனி பலனுக்கு வரக்கூடிய கர்மங்கள் ஆகாமிகளாம்.

5. ஏனெனில், "நான் அசங்கன், அகர்த்தா, அபோக்தா" என்கிற நிச் சயபலம் ஞானிக்குஉண்டு. ஆகையால் இந்த பலத்தால் செய்யப்படும் கர்ம மே அவனை ஒட்டமாட்டாது. இவைகளின் பலனை இச்சிக்கிறவனுக்குந்தான் போகங்களுண்டாகும்.

608. அபரோக்ஷானுபூதி விவேகசூடாமணி முதலிய கிரந்தங்களில் சொல்லியிருக்கிறதாவது:— சஞ்சித ஆகாமி கர்மங்கள் போல் ஞானிக்குப் பிராரப்தகர்மமும் இல்லை. ஆனதால் போஜனமுதலிய பிரவிர்த்திகளும் ஞானிக்குச் சம்பவிக்கமாட்டா. இதற்குக் காரணமென்னவெனில் ஞானியின் திர்ஷ்டிக்கு ஆத்மாவினிடத்தில் கர்மம் அதின் பலன் இவைகளின் சம்பந்தமில்லை. ஆனதால் ஆத்மாவினிடத்தில் எல்லாக்கர்மங்களும் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றன வென்கிற அபிப்பிராயத்தால் பிராரப்தம் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. ஞானத்துக்குமுன் செய்த பிராரப்தத்துக்கு ஞானியின் சரீரத்தில் போகமுண்டாகமாட்டா தென்கிற அபிப்பிராயத்தால் பிராரப்தம நிஷேதிக்கப்படவில்லை. எனனில் ஞானியின் சஞ்சிதகர்மம் ஞானத்தால் நாசமடைகிறது என்றும், ஆகாமியின் சம்பந்தமில்லை யென்றும், பிராரப்தம் போகத்தால் நசித்துப்போகிறதென்றும் சூத்திரக்காரர் சொல்லியிருக்கிறார். ஆனதால் பிராரப்தபலத்தால் சரீரபோஷணை சம்பந்தமான கிரியைகள் மாத்திரம் ஞானியினிடத்தி லிருக்கின்றனவேதவிர அதிகமாயில்லை.

609. கர்மம் அனேகவிதம். ஒருகர்மம் அனேக சரீரங்களை யுண்டுபண்ணக்கூடும். இப்பெயர்ப்பட்ட கர்மத்தாலுண்டான முதல்சரீரத்தி லொருவனுக்கு ஞானமுண்டானால் அந்தஞானிக்கு வேறு சரீரங்களும் பிராரப்தமாகும். ஏனெனில் எது பலத்தைக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறதோ அது பிராரப்தமென்னப்படும். அது போகமன்றியில் நசித்துப்போகிறதில்லை. அநேக சரீரங்களுக்கு ஹேதுவான கர்மம் ஒன்றுக இருக்கிறது. அதனாலுண்டான முதற்சரீரத்திலேயே ஞானமுண்டாகிறது. ஞானத்துக்குப் பிறகும் அந்தக் கர்மத்துக்குப் பலனிற அனேக சரீரங்களுண்டாகவேண்டியதா யிருக்கின்றன. ஆகையால் ஞானிக்கும் வேறுசரீரங்கள் உண்டாக வேண்டியதுதான். மேலும் பிராரப்தகர்மத்தின் பலனுக்காக எத்தனை சரீரங்க ளுண்டாகவேண்டுமோ அத்தனைசரீரங்களும் ஞானிக் குண்டாகின்றன. பிராரப்தபோகத்துக்கு அதிகமாக வுண்டாகிறதில்லை. ஆனதால் ஞானமும் ஸபலமாகிறது என்று ஒருவன் சொல்லக்கூடும்.

610. இது சரியன்று, ஏனெனில் வேதசித்தாந்தமென்னவெனில் ஞானியின் பிராணன் வேறு லோகத்திலாவது இவ்வுலகத்தில் வேறுசரீரத்திலாவது போகிறதில்லை என்பதாம். ஆனால் அவ்விடத்திலே யே அந்தக்கரணமும் இந்திரியங்களும் லீனமாய்விடுகின்றன. பிராணன் போகாமல் வேறு சரீரம் அடையப்படுகிறதில்லை. ஆனதால் ஞானிக்கு பிராரப்தசேஷத்தால் வேறு சரீர முண்டாகு மென்று சொல்வது சரியன்று. முன் அநேஷபத்துக்கு (609) ச்சமாதானம் என்னவென்றால்,

ஒருகர்மத்தால் அனேக சரீரங்களுண்டாகும்படியாயிருந்தால் கடைசி யான சரீரத்தில்தான் ஞானமுண்டாகுமேதபிர முன் சரீரங்களி லுண் டாகமாட்டாது. எனெனில் அனேக சரீரங்களை யுண்டுபண்ணுகிற பிராரப்தமே ஞானத்துக்குப் பிரதிபந்தகமாயிருக்கிறது. விதியத்தில் ஆசத்தி மந்தபுத்தி பேதவாதிவசனத்தில் விசுவாசம், இவைகள் ஞானத் துக்குப் பிரதிபந்தங்களாயிருப்பதுபோல் விலக்ஷணப்பிராரப்தமும் ஞா னத்துக்குப் பிரதிபந்தகமாயிருக்கிறது. ஞானத்தின் பிரதிபந்தங்களிரு க்க ஞானசாதனங்களான சிரவணாதிகளிருக்கும்போது பிரதிபந்தம் நிவி ர்த்தியாகிறதினால் முதல் ஜன்மத்தில் செய்த சிரவணாதிகளாலேயே வே றுசரீரத்தில் ஞானமுண்டாகிறது. உதாரணம்:— வாமதேவர் பூர்வ ஜன்மத்தில் சிரவணாதிகளைச் செய்தார். பிராரப்தத்தின் பலமாகிய ஒரு சரீரம் பாக்கியாயிருந்தபடியால் ஞான முண்டாகவில்லை. வர்த்தமான சரீரம் போய் வேறு சரீரம் அடையப்பட்டு முன்ஜன்மத்தில் செய்த சிர வணாதிகளினாலேயே அவருக்குக் கர்ப்பத்தில் ஞானமுண்டாயிற்று. ஆ னையால் ஞானத்துக்குப் பிறகு வேறு சரீரத்தின் சம்பந்த முண்டாகமா ட்டாது. வர்த்தமான சரீரத்தின் கேஷ்டைகள் பிராரப்தத்தால் உண் டாகின்றன. அப்போதும் சரீரபோஷணைக்கு எவ்வளவு கிரியைகள் வே ண்டுமோ அவ்வளவே உண்டாகின்றன. ராகத்தால் அதிகச் சேஷ்டை களுண்டாகிறதில்லை. ஆனையால் ஞானி யாதொரு பிரவிர்த்தியும் இல் லாமலிருக்கிறான்.

---

6. சிலகர்மங்கள் அனேக ஜன்மங்களுக்கு நேதுக்களாகின்றன. பிர ம்மஹத்தி யென்னுங்கர்மம் நரகத்துக்கானுபவத்தைக்கொடுப்பதாகிய பாப சம்பந்தம் முத லிய பத்து ஜன்மங்களைக்கொடுக்கிறது. கார்த்திகைமாஸத்தில் பௌர்ணமியி ல் ஸ்வாமிதரிசனஞ்செய்தல் முறுதி சம்பந்தத்துக்குடன் கூடிய ஏழுபிராமண ஜன்மங்களைக்கொடுக்கிறது. இவ்விதமாக அநேக ஜன்மங்களுக்குக்காரணமான ஓரேகர்மம் பிராரப்தரூபத்திலே பலத்தைக்கொடுத்து ஆகாமிப்பிரதிபந்தமாயி ருக்கிறது. சிரவணாதி விசாரரூப ஞானசாதனங்களில் பிரவிர்த்தித்த புருஷனு க்கும் இந்தப்பிரதிபந்தமிருக்கும்வரையில் ஞான முண்டாகிறதில்லை. ஆகையா ல் இந்தக்கர்மத்தின் பலனாகிய கடைசியான ஜன்மத்தில்தான் ஞானமுண்டாகி றதென்று நிஷ்கர்ஷிக்கத்தக்கது. ஏனெனில் பிராப்தகர்மம் போகமன்றியில் நா சமாகிறதில்லை. ஞானத்தின் பிறகு வேறு ஜன்மங்களுமுண்டாகிறதில்லை. ஆகை யால் கடைசியான ஜன்மத்தில்தான் ஞானமுண்டாகிறது. நிஷ்காம்யகர்மங்களிற் செய்த விசாரம் வியர்த்தமாய்ப்போகிறதில்லை. பாதனாடை பிராரப்தம் மூன் று ஜன்மங்களைக்கொடுத்தது. சாதனசாமக்கிரிகளிருந்தும் அவருக்கு ஞானமு ண்டாகவில்லை. மூன்றுவது ஜன்மத்திலுபதேசமன்றியில் முன்செய்த விசாரத் தால் அவருக்கு ஞான முண்டாயிற்று.

7. ஜன்மாந்திரத்துக்கு ஹேதுவான பிராரப்தசேஷம்.

611. இவ்விதமாக நிஷிர்த்திப் பிரதானமாகவே ஞானியின் வியவகாரமிருக்கிறது. இதிலோர்சங்கை:— மனதின் சுபாவம் அதிசஞ்சலமானது. ஒன்றையும் பிடித்துக்கொள்ளாமல் மனது ஸ்திரமாகிறதில்லை. எதையாவது பிடித்துக்கொள்ளுகிறதினல் மனது ஸ்திரப்படுகிறது. ஆகையால் மனது எதையாவது பிடித்துக்கொள்ளும் பொருட்டு ஞானிக்குப் பிரவிர்த்தியுண்டாகும்.

612. சமாதானம்:— சமாதியில்லாத புருஷனுக்கு மனது சஞ்சலப்பட்டாலும் சமாதியால் மனது ஜயிக்கப்படும். ஞானி சமாதியில் மனதின் ஸ்திரதையை யடைகிறன். ஆகையால் ஞானிக்கும் பிரவிர்த்தியுண்டாகிறதில்லை.

613. சமாதியின் அஷ்டாங்கங்கள் (613—637):— சமாதி எட்டு அங்கங்களுடன் கூடியிருக்கின்றது. அவைகளாவன:—(1) இயமம். (2) நியமம். (3) ஆசனம். (4) பிராணயாமம். (5) பிரத்தியாகாரம். (6) தாரணை. (7) தியானம். (8) லவிகல்பசமாதி.

614. இயமம்:— (1) அஹிம்சை. (2) சத்தியம். (3) திருடாமை. (4) பிர்ம்மசரியம். (5) அபரிக்கிரகம். இவ்வைந்தும் இயமமென்று சொல்லப்படும்.

615. நியமம்:— (1) சௌசம். (2) சந்தோஷம். (3) தவம். (4) ஸ்வாத்தியாயம். (5) ஈஸ்வரப்பிரணிதானம். இவ்வைந்தும் நியமமாம்.

---

8. இவ்விடத்தில் யமாதிகளின் லக்ஷணம் ஹடயோகானுசாரமாய் சொல்லப்பட்டிருக்கிறது. இராஜயோகானுசாரமாய் அவைகளின் அர்த்தம் ஸ்ரீசங்காசாரியருடைய அத்வைதானுபூதி கிரந்தத்திலிருந்து இவ்விடத்தில் எழுதப்படுகிறது. எல்லாம் பிர்ம்மமென்று அறிவதினல் இந்திரியங்களை விஷயங்களில் போகாமல் செய்தல் யமம். கேவலம் அஹிம்சைக்கு யமமென்று பெயரில்லை.

9. அந்தக்கரணவிர்த்தியை விஜாதியமான பிரபஞ்சத்தில் போகாமல்ச் செய்து சஜாதியமான பிர்ம்மத்தில் செல்லும்படிச்செய்தல் நியமமேதவிர, கேவலம் சௌசாதிகள் நியமமன்று.

616. ஞானசமுத்திரக்கிரந்தத்தில் பத்துவித இயமும் பத்துவித நியமங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இது புராணரீதியாம். வேதாந்தச்சாஸ்திரப்படி இயமநியமங்களில் ஐந்துபேதங்களேயுள.

10

617. ஆசனம்:— ஆசனங்களின் பேதம் அநேகம். அவைகளில் (1) ஸ்வஸ்திகம். (2) கோமுகம். (3) வீரம். (4) கூர்மம். (5) பத்மம். (6) குக்குடம். (7) உத்தானம். (8) கூர்மகம். (9) தனுராசனம். (10) மத்ஸ்யம். (11) பசிமதானம். (12) மயூரம். (13) சலபம். (14) சிம்மம். (15) பத்ரம். (16) சித்தம் முதலிய 84 ஆசனங்கள் யோகக்கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளின் லக்ஷணங்களும் அவைகளில் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இக்கிரந்தம் விரியுமென்னும் பயத்தினாலும வேதாந்தத்தில் அவைகளினுபயோகம் அதிகமாயில்லாததினாலும் அவைகளின் லக்ஷணங்களை இவ்விடத்தில் விவரிக்கவில்லை. மேற்சொல்லிய ஆசனங்களிலும் சிம்மம், பத்ரம், பத்மம், சித்தம், இந்நான்கும் முக்கியமானவை.

618. சித்தாஸனம்:— மேற்சொல்லிய நான்கு ஆசனங்களிலும் சித்தாசனம் மிகவும சிரேஷ்டமானது. அதின்லக்ஷணமாவது:— இடது குதிகாலை குதைமாணிகளின் சந்தியில் அழுத்திக்கொண்டு வலது குதிகாலை மாணியின்பேரிலழுத்திக்கொண்டு புருவங்களின் மத்தியில் தர்ஷ்டியைச்செலுத்திக்கட்டைபோல் நிமிர்ந்து சலனமன்றியில் சரீரமிருப்பது சித்தாசனமாம். சிலர் இதின் லக்ஷணத்தை வேறுவிதமாகவும் சொல்லுகிறார்கள். இடது குதிகாலைக்குதை மாணிகளின் மத்தியில் வைக்கமல் மாணியின்பேரில் வைக்கவேண்டியது. அதின்பேரில் வலது குதிகாலை வைக்கவேண்டியது. மற்ற லக்ஷணங்கள் முன் போன்றனவே. இந்தச்சித்தாசனமும் முக்கியதுபோல் அதிக சிரேஷ்டமானதுதான். எனெனில் சில ஆசனங்கள் ரோகங்களை நாசஞ்செய்கின்றன. சில ஆசனங்கள் பிராணயாமாதி சமாதி அங்கங்களுக்குச்சாதகங்களாயிருக்கின்றன. சித்தாசனம் சமாதியின் ஆசனமாயிருக்கிறது. ஆகையால் இது அதிகச் சிரேஷ்டமானது. இதற்கே **வஜ்ரோலாஸன**மென்றும் **முக்தாஸன**மென்றும் **குப்தாஸன**மென்றும் பெயர்களாம்.

11

619. பிராணயாமம்:— ஆசனசித்தியின் பிறகு பிராணயா

---

10. எந்த ஸ்திதியில் பிரம்மசிந்தனை சுகமாய் எப்போதும் ஆகுமோ, அதுவே ஆசனம். கேவலம் கம்பளாதிகள் ஆசனமன்று.

11. சித்தாதி சகலபாவங்களையும் பிரம்மமாகபாவித்து எல்லாவிருத்திகளையும் தகைப்பது பிராணயாமம்.

மம் செய்யவேண்டியது. இந்தப்பிராணயாமம் அனேகவிதம்.[12] ஆயினும் அதின் லக்ஷணம் சுருக்கமாய்ச்சொல்லப்படும். மூக்கின் இடதுபுவாரத்தின் மூலமாக இடையென்னும் நாடியால் வாயுவைப்பூரிக்கவேண்டியது.[13] இது பூரகமென்னப்படும். மூக்கின் வலதுபுவாரத்தால் காற்றைவிடவேண்டியது. இது ரேசகமென்னப்படும்.[14] சுஷும்னையால் காற்றைபடக்கவேண்டியது. இது கும்பகமென்னப்படும்.[15] பூரகரேசகுகும்பகங்களுக்குப்பிராணயாமமென்று பெயர். இந்தப்பிராணயாமம் இருவகைத்து. ஒன்று அகர்ப்பும் மற்றொன்று ஸகர்ப்பம். பிரணவோச்சாரணையன்றியில் செய்யும் பிராணயாமம் அகர்ப்பமென்னப்படும். பிரணவோச்சாரணசுகிதமான பிராணயாமம் ஸகர்ப்பமென்னப்படும்.

620. பிரத்தியாகாரம்:—விஷயங்களினின்றும் சகல இந்திரியங்களையுந்தகைப்பது பிரத்தியாகாரமென்னப்படும்.[16]

621. தாரணை:— இடைவிடாது அந்தக்கரணம் ஒரேதியாயிருத்தல் தாரணையென்னப்படும்.[17]

622. தியானம்:— அத்துவிதீயவஸ்துவினிடத்தில் விட்டுவிட்டுச்செல்லும் அந்தக்கரணத்தின் பிரவாகத்துக்குத்தியானமென்றுபெயர்[18]

---

12. சிலர் பிராணயாமத்தை (1) பாஹ்ய (2) ஆப்பியந்தர (3) ஸ்தம்பவிர்த்தியெனச்சொல்லுகிறார்கள். சுவாசம் உள்ளிழுக்கப்பட்டு அதின் கதிநின்றபோதுதல் ஆப்பியந்தரம். சுவாசம் வெளியேவிடப்பட்டு கதி நின்றுபோதுதல் பாஹ்யம். உள்ளிலும் வெளியிலும் கதி ஒரேகாலத்தில் நின்றுபோதுதல் ஸ்தம்பவிர்த்தியாம்.

13. "நான் பிர்ம்மம்" என்னும் விர்த்திபூரகம்.

14. அனுத்மாவான பிரபஞ்சத்தை நிஷேதிப்பது ரேசகம்.

15. அண்டாகாரவிர்த்தியில் சலனமில்லாததுதான் கும்பகம்.

16. சப்தாதி விஷயங்களிலும் ஆத்மஸ்வரூபத்தைப்பார்த்தல் பிரத்தியாகாரம்.

17. மனம்போகிற விஷயங்களில் எல்லாம் பிர்ம்மத்தைப்பார்த்து அதையே அனுசந்தானம் செய்வது தாரணை.

18. "நான் பிர்ம்மம்" என்கிற அண்டாகாரவிர்த்தியில் சலிக்காமல் இருப்பது தியானம்.

623. சமாதி:— உண்டாயிருக்கும் சம்ஸ்காரங்களின் நிரஸ்காரமும் அடங்கியிருக்கும் ஸம்ஸ்காரங்களின் பிரகடமுமுண்டாகி அந்தக்கரணம் ஏகாக்கிரமாய்ப்பரிணமித்தல் சமாதியென்னப்படும்.[19]

624. சமாதிபேதங்கள்,— இச்சமாதி இருவகையாம். ஒன்று ஸவிகல்பசமாதி. மற்றொன்று நிர்விகல்பசமாதி. ஞானதிரு, ஞான ஜ்ஞேயரூபமான திரிபுடி விளக்கத்துடன் அந்துவீந்தியப் பிர்ம்மத்தினிடத்திலிருக்கிற அந்தக்கரண விர்த்தியின் நிலைமைக்கு ஸவிகல்ப சமாதி யென்று பெயர். இந்த ஸவிகல்பம் இருவகை. ஒன்று சப்தாநுவித்தம். மற்றொன்று சப்தானநுவித்தம். "அகம்பிர்ம்மாஸ்மி" என்னும் சப்தத்துடன் கூடியது சப்தாநுவித்த சமாதியாம். சப்தரஹிதமானது சப்தானநுவித்தசமாதியாம். திரிபுடித்தோற்றமன்றியில் அகண்டப் பிர்ம்மாகாரமான அந்தக்கரணவிர்த்தியின் நிலைமைக்கு நிர்விகல்ப சமாதியென்ற பெயர். இவ்விதமாக ஸவிகல்ப நிர்விகல்பரூபத்தால் சமாதி இருவகையாகிறது.

625. ஸவிகல்பத்துக்கும் நிர்விகல்பத்துக்கும் பேதம்:— இவைகளில் ஸவிகல்ப சமாதி சாதனமாயிருக்கிறது. நிர்விகல்ப சமாதி பலனாயிருக்கிறது. சாதனரூப ஸவிகல்பசமாதியில் திரிபுடிரூபத்துவைதம் பிரதிதியாகிறது. ஆயினும் இந்தத்துவைதம் அடியில் கண்டபடிப் பிர்ம்மரூபமாகப் பிரதிதியாகிறது. பண்விகாரத்தை பண்ணாமாக அறிவதால் விவேகிக்கு மண்விகாரமாக கடாதிகள் பிரதிதியாகின்றன. ஆனல் மண்ரூபமே பிரதிதியாகிறது. இதுபோல் ஸவிகல்ப சமாதியில் திரிபுடித்துவைதம் பிர்ம்மரூபமாகவே பிரதிதியாகிறது. நிர்விகல்ப சமாதியிலும் ஸவிகல்ப சமாதியிற்போல் திரிபுடித்துவைதமிருந்தாலும் அது பிரதிதியாகிறதில்லை. திர்ஷ்டாந்தம்;— ஜலத்தில் உப்பைக்கரைத்தால் உப்பு இருந்தும் நேத்திரத்துக்கு அது பிரதிதியாகிறதில்லை. இவ்விதமாக ஸவிகல்ப நிர்விகல்பசமாதிகளுக்கு என்ன பேதந் சிந்திக்குமெனில் ஸவிகல்பசமாதியில் பிர்ம்மரூபமாகத்துவைதம் பிரதிதியாகிறது. நிர்விகல்பசமாதியில் திரிபுடிரூபத்துவைதம் பிரதிதியாகிறதில்லை.

626. சுஷுப்திக்கும்நிர்விகல்பசமாதிக்கும்பேதம்— சுஷுப்தியில் அந்தக்கரணத்தின் விர்த்தி பிர்ம்மாகாரமாகிறதில்லை. நிர்

---

19. அந்தக்கரணவிர்த்தி விஷயத்தில் செல்லாமலும் அகண்டபிர்ம்மாகாரமாகி, நியாதிருத்தியையுமாகாமவிர்த்தியன் அன்றியில் இருப்பது சமாதி.

விகல்பசமாதியில் பிர்ம்மாகாரமான அந்தக்கரணத்தின் விர்த்தி இருக்கிறது. அந்தக்கரணம் இல்லாமலில்லை. இவ்விதமாகச் சுஷுப்தியில் விர்த்திசகித அந்தக்கரணத்தின் அபாவமுண்டு. நிர்விகல்பசமாதியில் விர்த்திசகித அந்தக்கரணமிருந்தும் பிரதீதியாகிறதில்லை. நிர்விகல்பசமாதியில் அந்தக்கரணத்தின் பிர்ம்மாகாரவிர்த்திக்கு ஸவிகல்ப ஸமாதியின் அப்பியாஸம் ஹேதுவாம். ஆகையால் சாதனரூபமான எட்டங்கங்களில் ஸவிகல்பசமாதி சோக்கப்பட்டிருக்கிறது. நிர்விகல்பஸமாதி பலனுயிருக்கிறது.

627. நிர்விகல்பசமாதி இருவகை:— நிர்விகல்பசமாதியும் இருவகைத்து. ஒன்று அத்துவைதபாவனரூபம். மற்றொன்று அத்துவைதாவஸ்தானரூபம். அத்துவைதப் பிர்ம்மாகாரபான அந்தக்கரணத்தின் அஞ்ஞானவிர்த்திசகித நிர்விகல்பசமாதி அத்துவைதபாவனரூப நிர்விகல்ப சமாதியென்று சொல்லப்படும். இந்தச்சமாதியில் அப்பியாஸம் அதிகமாகிறதினால் பிர்ம்மாகாரவிர்த்தியும் சாந்தமாய்விடுகிறது. ஆனதால விர்த்திரகிதமான நிர்விகல்பசமாதிக்கு அத்துவைதாவஸ்தானரூபநிர்விகல்ப சமாதியென்று சொல்லப்படும். எப்படிக் காய்ச்சின இரும்பின்பேரில் விடப்பட்ட ஜலத்திவலை அவ்விருப்பிலேயே பிரவேசிக்கிறதோ அப்படி அத்துவைதபாவனரூபசமாதியின் திடமான அப்பியாஸத்தால் அத்தியந்தபிரகாசமான பிர்ம்மத்தினிடத்தில் விர்த்தி லயமாய்விடுகிறது. இந்த அத்துவைத அவஸ்தானரூப நிர்விகல்பசமாதிக்கு அத்துவைதபாவனரூபநிர்விகல்பசமாதி சாதகமாயிருக்கிறது. அத்வைதாவஸ்தான ரூப நிர்விகல்பம் பலம்.

558. அத்துவைத அவஸ்தானரூபசமாதிக்கும்சுஷுப்திக்கும்பேதம்:— சுஷுப்தியில் விர்த்தி அஞ்ஞானத்தில் லயமாகிறது.

---

20. அக்கினியின் உபாதானகாரணம் வாயு. அக்கினியின் உற்பத்திஸ்திதி நாசங்கள் வாயுவுக்கு ஆதீனமாயிருக்கின்றன. ஆகையால் வாயு சுத்தமாய் இல்லாதபக்ஷத்தில் விளக்கு அணைந்துபோம். ஆகையால் காற்று அதிசமாயில்லாதவிடத்திலும் சொற்பமாயிருக்கிறவிடத்திலும் தீபம் சலிக்காமலெரிகிறது. இதுபோல் சமாதியிலும் அந்தக்கரணம் சுத்தமாயில்லாதபக்ஷத்தில் சரீரமில்லாமற்போய் விழுந்துபோகும். ஆகையால் மனம் புத்தி சித்த அகங்காராதிகளின் விர்த்திகளில்லாமல் அந்தக்கரணம் சூக்ஷுமமாய்ச்சமாதியிலிருக்கிறது. மேலும் சமாதியிலிருந்து எழுந்திருந்த காலத்தில் சமாதியின் ஸ்மரணை இருப்பதாலும் அனுபவிக்கப்படாததின் ஸ்மரணை உண்டாகாதாட்டாதபடியாலும் சமாதிகாலத்தில் விர்த்தி இருந்ததாகவே அனுமானிக்கப்படுகிறது.

அத்துவைத அவஸ்தானரூபசமாதியில் விர்த்திபிர்மமப்பிரகாசத்தில் லயமாகிறது. மேலும் சுஷுப்தியின் ஆனந்தம் அஞ்ஞானவிருதமாயிருக்கிறது. சமாதியில் பிர்ம்மானந்தம் ஆவரணமன்றியில் விளங்குகிறது.

629. நிர்விகல்பசமாதியின்விக்கினங்கள்.(629—637)

(1)லயம்:—ஆனல் நிர்விகல்பசமாதியில் நான்கு விக்கினங்களிருக்கின்றன. அவைகளைப் போக்கும்பொருட்டு அவைகளின் சொரூபத்தைச் சொல்லுகிறேன். **லயம் விக்ஷேபம் கஷாயம் ரஸாஸ்வாதம்** என விக்கினங்கள் நான்காம். ஆலஸ்யத்தினுலாவது நித்திரையினுலாவது விர்த்தி யில்லாமலிருப்பதற்கு லயமென்றுபெயர். இந்த லயத்தால் சுஷுப்திக்குச் சமானமான நிலைமையுண்டாகின்றது. பிர்ம்மானந்தம் விளங்குகிறதில்லை. ஆகையால் நித்திரை ஆலஸ்யம் முதலிய காரணங்களால் எப்போது விர்த்தி அதினுபாதானமான அந்தக்காரணத்தில் லயமாகிறதோ அப்போது யோகி சாவதானப்பட்டு நித்திரைமுதலியவைகளைத் தகைத்து விர்த்தியை எழுப்பவேண்டியது. இந்த லயரூபவிக்கினத்துக்கு விரோதமான நித்திரை ஆலஸ்யமுதலியவைகளை நிரோத்துசெய்து விர்த்தியை எழுப்பிவிடுவதற்குக் **கவுடபாதாசாரியர்** சித்தசம்போதனமென்று பெயரிட்டிருக்கிறார்.

630. **விக்ஷேபம்**:—இப்போது விக்ஷேபத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறேன். பூனை முதலியவைகளின் பயத்தால் சிட்டுக்குருவிகள் வீட்டுக்குள் பிரவேசிக்கின்றன. அப்போது பயத்தால் துக்கமுற்று அக்குருவிகள் அக்கிரகத்திற்குள் இன்னஇடத்தில் இருக்கலாமென்று அறிகிறதில்லை. ஆகையால் மறுபடியும் வெளியேவந்து பயத்தை அல்லது மரணரூபதுக்கத்தை யடைகின்றன. இதுபோல் அனர்த்தபதார்த்தங்களை

---

21. இவ்விடத்தில் ஓராக்ஷேபம்:— விர்த்தி நிர்விகாரமான பிர்ம்மத்தில் லயமாகுவதாக எப்படிச்சொல்லலாம். சமாதானம்:— மேற்சொல்லியதிருஷ்டாந்தத்தில் ஜலத்திலுல்ல அதின் உபாதானகாரணமாகிய அக்கினியில் லயமாகிறதேதவிர இரும்பில் லயமாகிறதில்லை. ஆயினும் காய்ச்சின இரும்பில் லயமாயிவிட்டதாக உபசாரத்தால் சொல்லப்படுகிறது. இதுபோல பிர்ம்மப்பிரகாசம் விளங்குகிற நிமத்தியத்தினுல் விர்த்திலயமாகிறதினுல் பிரம்மப்பிரகாசத்திலேயே லயமாகிறதாகச்சொல்லுவது உபசாரமாத்திரமே.

22. கவுடபாதாசாரியருடைய மாண்டூக்கிய உபநிஷத்தின் காரிகையில் இது சொல்லப்பட்டிருக்கிறது.

த்துக்கவேறதுக்களாக அறிந்து அத்துவைதானந்தத்தை விஷயமாக்குவ தர்க்காக விர்த்தி அந்தர்முகமாயாகிறது. அப்போது விர்த்திக்கு விஷய மான சேதனம் அதிசூக்ஷுமமாயிருக்கிறது. ஆகையால் கொஞ்சகாலமாவ து விர்த்தி அந்தர்முகமாயில்லாவிடில் சேதனஸ்வரூபானந்தத்தை யடை யாமல் விர்த்தி அக்கணமே பஹிர்முகமாய்விடுகிறது. இந்தப் பஹிர்முக விர்த்திக்கு விக்ஷேபமென்றுபெயர். இந்தவிர்த்தி ஸ்திரப்படாதவரை யில் சொரூபானந்தம் அடையப்படமாட்டாது. ஆகையால் அந்தர்மு கவிர்த்தி யுண்டானாலும் எவ்வளவுகாலம்விர்த்தி பிரம்மாகாரமாகவில்லை யோ அவ்வளவுகாலம் பாஹ்யபதார்த்தங்களில் தோஷபாவத்தால் விர்த் தியைப் பஹிர்முகமாகும்படி யோகீவிடக்கூடாது. ஆதலால் விர்த்தியை அந்தர்முகமாகவே நிறுத்தவேண்டியது. விக்ஷேபரூபவிக்கினத்துக்கு விரோதமான யோகியின் பிரயத்தனத்துக்குக் கவுடபாதாசாரியார் சமமென்று பெயரிட்டிருக்கிறார்.

631. **கஷ்காயம்**:—ராகாதிதோஷத்துக்குக் கஷாயமென்றுபெ யர். ராகாதிதோஷங்கள் இருவகை. ஒன்று பாஹ்யமாம். மற்றொன் று அந்தரமாம். வர்த்தமானகாலத்திலிருக்கிற புத்திரன் ஸ்திரீ தனதி விஷயங்கள் பாஹ்யமாம். சென்றகாலத்தையல்லது வருங்காலத்தைச் சிந்தனைசெய்கிறதாடமான மனோரூச்சியம் அந்தரமாம். இவ்விருவகை ராகாதிகளும் சமாதியில் பிரவர்த்திக்கயோகிக்கு உண்டாகமாட்டா.

632. **அந்தகரணத்தின் 5 பூமிகைகள்**:— எனினில் சித்த த்துக்கு ஐந்துபூமிகைகளுண்டு. அவைகளில் (1)**கூடபூமிகை** (2)மூ டதாபூமிகை(3)**விக்ஷேபபூமிகை** (4)**ஏகாக்கிரபூமிகை** (5)**நிரோதபூ** மிகை என்பனவாம். உலகவாசனை[23], தேகவாசனை[24] சாஸ்திரவாசனை[25] மு

---

23. என்னை உலகம் நிந்திக்கக்கூடாது. எல்லாரும் என்னை துதிக்க வேண்டும். இந்த ஆசைக்கு உலகவாசனை யென்றுபெயர்.

24. **ஸ்தூலசூட்சுமதேகங்களின்** ரோகாதிரூபமலங்களை ஔஷதாதி னால் நிவர்த்திசெய்து தேகங்களுக்கு புஷ்டி அழகு முதலியவைகளைச்சம்பா தித்தவேண்டியது. தீர்த்தயாத்திரை ஜபதபாதியவைகளால் பாபங்களை நிவர்த்தி செய்து புண்ணியபாபங்களைச்சம்பாதிக்கவேண்டியது. இப்படிப்பட்ட ஆசை க்கு தேகவாசனை யென்று பெயர்.

25. சகலசாஸ்திரங்களையும் தெரிந்துக்கொள்ளவேண்டும் என்கிற ஆ சைக்குச் சாஸ்திரவாசனையென்று பெயர்.

தனியாலோகுணப்பரிணமங்களாகிற நிடமான அனுத்தம வாசனையேகூ பமென்பார்கள். சித்தினர ஆலஸ்யம் முதலிய தமோகுணப்பரிணமங்க ளை மூடனை எனபார்கள். தியானத்திற் பிரவர்த்திக்க சித்தம் ஒருகாலத் தில் வெளியே செல்வது விக்ஷேபமென்னப்படும். அந்தக்காரணத்தின் அதி தபரிணமமும் வர்த்தமான பரிணமமும் சமாநுகாரமாகிறனை ஏகாக்கிர பூமிலகையென்பார்கள்.

ஏகாக்கிரனதையின் லக்ஷணம் யோகசூத்திரத்தில் **பதஞ்சலி**பக வானல் சொல்லப்பட்டிருப்பதற்குப்பாலவிமென்னவெனில் சமாதிகாலத்தி ல்யோகியின் அந்தக்காரணத்தில் ஏகாக்கிரமத யுண்டாகிறது. இந்த ஏகாக்கிரனதை வித்தியின் அபாவரூபமன்று. ஆனல் சமாதிகாலத்தில் அந்தக்காரணத்தின் பரிணமமெல்லாம் பிரம்மதனதையே விஷயமாக்குகிற தது. ஆனதால் அந்தக்காரணத்தின் அதீதபரிணமமும் வர்த்தமானபரிண மமும் கேவலம் பிரம்மகாரமாகிறதினல் சமாநுகாரமாகிறது. இந்த ஏகா க்கிரனதையின் பெருக்கத்துக்கு நிரோதமென்றுபெயர். இவ்வைகது பூமி னைகளும் அந்தக்காரணத்துக்குண்டு. பூமிலகையென்றல் அவஸ்தையாம்.

இவ்வைவத்து பூமினைகளும் கூடினல அந்தக்காரணத்துக்கு முறையே க்ஷிப்தம் மூடம் விக்ஷிப்தம், ஏகாக்கிரம் நிருத்தம் என்றும்பெயர். இ வைகளில் க்ஷிப்த மூட அந்தக்காரணங்களுக்குச் சமாதியில் அதிகாரமி ல்லை. விக்ஷிப்த அந்தக்காரணத்துக்கு அதிகாரமுண்டு. ஏகாக்கிரநிருத்த அந்தக்காரனங்கள் சமாதியில் சித்தமாகவே யிருக்கின்றன. இவ்விதமாக யோகசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

633. **ஆக்ஷேபம்**:—ராகாதிதோஷரகித அந்தக்காரணம் க்ஷிப்தமாகவே இருக்கிறது. இந்த க்ஷிப்தம அந்தக்காரணத்துக்கு யோகத்தில் அதிகாரமில்லை. ஆனகையால் ராகாதிதோஷரூபகஷாயம் சமாதிக்குவிக் கினமென்று சொல்வது சரியன்று.

---

26. ஒரிடத்திற்போக ஒருவனுக்குஅதிகாரமிருந்தால் யாதானுமோர் கா ணத்தினல் அவனுக்குத்தடையுண்டாகக்கூடும். அதிகாரமேயில்லாதவனுக்குந் தடையுண்டாவதாக எப்படிச்சொல்லக்கூடும். இதுபோல் க்ஷிப்தாந்தக்கரணத துக்குச்சமாதியில் அதிகாரமிருக்கும்பக்ஷத்தில் ராகாதிதோஷங்களாகிற கஷா யத்தால் சமாதிக்கு விக்கினமுண்டாகும். ஆனல் க்ஷிப்தாந்தக்கரணத்துக்கு ச்சமாதியில் அதிகாரமேயில்லை. ஆகையால் அதற்கு ராகாதிரூபகஷாயம் விக் கினமாக எப்படியாகும்.

634. சமாதானம்:—ஆயினும் இதற்குச் சமாதானமென்னவெனில், பாஹ்யமாகவாவது ஆந்தரமாகவாவதிருக்கும் ராகாதிகள் கூவிப் தஅந்தக்காரணத்திலேயே யுண்டாகின்றன. இந்த அந்தக்காரணத்துக்கு அதிகாரமில்லை. ஆயினும் அனேகஜன்மங்களில் முன் அனுபவிக்கப்பட்டிருந்த பாஹ்ய ஆந்தராகத்துவேஷங்களின் சூக்ஷ்மசம்ஸ்காரம் விகூவிப்தாதி அந்தக்காரணத்திலும் இருக்கக்கூடும், ஆகையால் ராகத்துவேஷங்களுக்குக் கஷாய மென்றுபெயரில்லை. ஆனல் ராகத்துவேஷாதிகளின் சம்ஸ்காரத்துக்குக் கஷாயமென்று பெயர். இந்தச் சமுஸ்காரம் அந்தகக்காரணமிருக்கும் வரையில் நீங்குகிறதில்லை. ஆகையால் சமாதிகாலத்திலும் அந்தக்காரணத்திலிருக்கிறது. ஆனல் ராகத்துவேஷாதிகளின் உத்பூதசமுஸ்காரம் சமாதிக்கு விரோதம். அனுத்பூதம் விரோதமன்று. உத்பூதமென்றால் வெளிப்படை, அனுத்பூதம் என்றால் அடக்கம். சமாதியில் பிரவர்த்தித்த யோகிக்கு ராகத்துவேஷங்களின் சமுஸ்காரம் வெளிப்பட்டால் விஷயத்தில் தோஷதிர்ஷ்டியால் அதை யவஸ்யமழுத்திவிடவேண்டியது.

635. விகேஷபத்துக்கும் கஷாயத்துக்கும் பேதமென்னவெனில், பாஹ்யவிஷயாகாரவிர்த்திக்கு விகேஷபமென்று பெயர். யோகியின் பிரயத்தனத்தினல் விர்த்தி அந்தர்முகமாகியும் ராகாதிகளின் உத்பூதசமுஸ்காரத்தால் அந்தர்முகமான விர்த்தியும் தகையப்பட்டுப் பிரம்மத்தை விஷயமாக்காதபொழுது அவ்விர்த்திக்குக் கஷாயமென்றுபெயர். விஷயத்தில தோஷத்தைப் பார்த்து யோகி பிரயத்தனம பண்ணுகிறதினல் கஷாயவிக்ஷேபம் நிவிர்த்தியாய்விடும.

636. ரஸாஸ்வாதம்(636—637):—யோகிக்குப் பிரம்மானந்தத்தின் அனுபவமுண்டாகிறது. விகேஷபரூபதுக்கத்தின் நிவிர்த்தியின் அனுபவமுமுண்டாகிறது. சிலருக்குத்துக்கநிவிர்த்தியிலேயும் ஆனந்தமுண்டாகிறது. தர்ஷ்டாந்தம்:— சுமையைத்தாக்கிக்கொண்டிருக்கிறவனுக்குச் சுமையை இறக்குவதனல் ஆனந்தமுண்டாகிறது. அப்போது

---

27. ராகாதிகள் பாஹ்யம் ஆந்தரம் வாசனரூபமென மூவகையாம் பாஹ்யப்பிரவிர்த்திக்கு ஹேதுவானது பாஹ்யம், அல்லது உத்யுக்தம். மனோரூபமானது ஆந்தரம், அல்லது ஊசாரூபம். ஜன்மாந்தரத்தில் அனுபவித்தராகாதிகளின் ஸம்ஸ்காரம் வாஸனரூபம். இது பாஹ்யாந்தரபேதத்தால் இருவகையாம். இவைகளின் விவரம் ஜீவன்முக்திவிவேகமென்னுங்கிரந்தத்தில் வித்யாரண்யஸ்வாமிகளால் சொல்லப்பட்டிருக்கிறது.

ண்டானை ஆனந்தத்துக்கு சுமையாலுண்டானை துக்கத்தின் நிவிர்த்திதவிர வேறு காரணமிலலை. இந்தத்துக்கநிவிர்த்தியால் 'எனக்கு ஆனந்தமுண்டாயிற்றென்று அவன் சொல்லுகிறான். ஆகையால் துக்கநிவிர்த்தியும் ஆனந்தத்துக்கு ஏதுவாகிறது. இது போல் யோகிக்குச் சமாதியில் விக்ஷேபத்தாலுண்டானை துக்கநிவிர்த்தியினின்றும் ஆனந்தமுண்டாகிறது. இதின் அனுபவத்துக்கு ரஸாஸ்வாதமென்று பெயர். இவ்வனுபவத்தினாலேயே யோகி திருப்தியடைந்துவிட்டால் சகலமான உபாதிகளுமற்றப் பிர்ம்மானந்தாகாரவிர்த்தி அவனுக்குண்டாகமாட்டாது. ஆனதால் அதின் அனுபவம் சமாதியில் உண்டாகமாட்டாது. ஆனதால் துக்கநிவிர்த்தியாலுண்டாகும் ஆனந்தத்தின் அனுபவரூபரஸாஸ்வாதமும் சமாதியில் விக்ஷேபமாகும். இச்சித்தபதார்த்தம் கிடைக்காவிட்டாலும் விரோதநிவிர்த்தியால் ஆனந்தமுண்டாகிறதென்பதற்கு வேறு திருஷ்டாந்தம். பூமியிற புதையலிருக்கிறது. அதுபோல்லாத விஷசர்ப்பத்தால் காக்கப்பட்டிருக்கிறது. புதையலை எடுப்பதற்குமுன்னும் அதையடைவதற்குத் தடையாயிருந்த சர்ப்பத்தை யொழிப்பதினாலானந்தமுண்டாகிறது. அப்போது சர்ப்பநிவிர்த்தியாலுண்டானை ஆனந்தத்தில் ஒருவன் திருப்தியடைந்து, புதையலெடுக்கும் முயற்சியை விட்டு விட்டால் புதையல் கிடைத்தாலுண்டாகு மானந்தமுண்டாகாது. இதுபோல், அத்துவைதப் பிர்ம்மரூபமாகிறது புதையல். தேகாதியனாத்ம பதார்த்தங்களின் பிரதிரூப விக்ஷேபம் சர்ப்பம். விக்ஷேபரூபசர்ப்பத்தின் நிவிர்த்தியால் உண்டாகும் அவாந்தரானந்தரூபரஸத்தின அனுபவம ஆஸ்வாதனம். இது புதையல் ரூபமான அத்துவைதப் பிர்ம்மத்தை யடைவதாலுண்டாகும் மகானந்தத்தையடைவதற்குப் பிரதிபந்தகமாயிருப்பதால் விக்கினமென்று சொல்லப்படுகிறது.

637. ரஸாஸ்வாதத்தின் வேறொரு அர்த்தம்:—ஸவிகல்பசமாதிக்குப் பிறகு நிர்விகல்பசமாதியுண்டாகிறது. ஸவிகல்பசமாதியில் திரிபுடி பிரதீதியாகிறது. ஆனதால் ஸவிகல்பசமாதியின் ஆனந்தம் திரிபுடிரூப உபாதிசகிதமாயிருப்பதால் ஸோபாதிகமென்று சொல்லப்படுகிறது. நிர்விகல்பசமாதியில் திரிபுடி பிரதீதியாகிறதில்லை. ஆகையால் நிர்விகல்பசமாதியில் நிருபாதிகானந்த முண்டாகிறது. இவ்விதமாக ஸவிகல்பசமாதிக்குப் பிறகும் நிர்விகல்பசமாதிக்கு முன்னும் ஸவிகல்பசமாதியின் ஸோபாதிகானந்தம் நியாகப்பண்ணப்படாமல் அனுபவிக்கப்படுகிறது. இது ரஸாஸ்வாதமென்னப்படும். ஆனதால் விக்ஷேபநிவிர்த்தியாலுண்டாகும் ஆனந்தத்தின் அனுபவம், அல்லது ஸவிகல்பசமாதியின் ஆனந்தானுபவம் ரஸாஸ்வாத மென்னப்படும். இவ்விருவித ரஸாஸ்வாதங்களும் நிர்விகல்பசமாதியின் பரமானந்தானுபவத்துக்கு விரோ

களாவதால் விக்ஷேபங்களாகின்றன: ஆகையால் ரஸாஸ்வாதத்தையுந் தள்ளவேண்டும். இவ்விதமாக நிர்விகல்பசமாதியில் நான்கு விக்ஷேபங்களிருக்கின்றன. இந்நான்கு விக்ஷேபங்களும் சமாதியின் ஆரம்பத்திலுண்டாகின்றன. ஆனதால் சாவதானமாய் இவைகளைத் தகைத்துச் சமாதியில் பரமானந்தத்தை வித்துவான் அடைகிறான். இவனையே ஜீவன்முக்தனென்று சொல்லுகிறார்கள்.

27(a)

638. இவ்விதமாக ஞானியின் சித்தம் நிராலம்பமாயிருக்கிறதில்லை. பிராரப்தபலத்தால் சமாதியினின்றும் எழுந்திருந்தாலும் சமாதியில் அனுபவித்தபரமானந்தத்தின் ஸ்மரணை இருக்கிறது. ஆனதால் எழுந்திருந்த காலத்திலும் ஞானியின்சித்தம் நிராலம்பமாயில்லை. பொதுவு நிகளிலிருக்கும் ஞானியின் பிரவிர்த்தி கேவலம் பிராரப்தத்தாலுண்டாகிறது. ஆனால் போஜனநிமித்தவகாரங்களில் ஞானி துக்கமிருக்கிறதாக நினைத்துப் பிரவர்த்திக்கிறான். வனனில் போஜனாதிகளிற் பிரவிர்த்தியும் சமாதிசுகோற்பத்திகளுக்கு விரோதியாயிருக்கிறது. சரீரஸம்ரக்ஷணையின் பொருட்டுப் போஜனாதிகளிற் பிரவிர்த்தியும் எவனுக்குத் துக்கரூபமாய்ப் பிரதீதியாகிறதோ அவனுக்கு அதிகப் பிரவிர்த்தியுண்டாகிறதில்லை., இவ்விதமாக அனேகஆசாரியர்கள் இத்தபக்ஷத்தை யங்கரித்திருக்கிறார்கள். ஜீவன்முக்தியின் ஆனந்தமும் பாதிக்கப் பிரவிர்த்தியிலுண்டாகிறதில்லை. ஆனால் நிவிர்த்தியிலுண்டாகிறது. ஆனதால் ஜீவன்முக்தியின் சுகத்தை யிச்சிக்கிறஞானிக்குப் பாதியப்பிரவிர்த்தியுண்டாகிறதில்லை. (603–638)

க்குச்சமாதானம்(639—647)

639. ஆயினும் ஞானிக்கு நிவிர்த்தியிலும்மியமமிருப்பதாகச் சொல்வதுசரியல்லை. ஏனெனில் நிவிர்த்தியில் அல்லது பிரவிர்த்தியில் வேதத்தின் ஆஞ்ஞாரூபவிதி ஞானிக்கு ஏர்ப்படவில்லை. ஆகையால்

---

27 (a). (1) அகண்டவஸ்துவை அவலம்பிக்காத சித்தவிருத்தியின் நிராலம்பலயம். (2) அகண்டவஸ்துவை அவலம்பிக்காமல் வேறு வஸ்துவை அவலம்பிக்கும் சித்தவிருத்தியின் விக்ஷேபம். (3) லயவிக்ஷேபங்களிராவிடினும் ராகாதிவாசனையால் சித்தவிருத்தி அகண்டவஸ்துவை அவலம்பிக்காமலும் ஸ்தம்பமாயிருப்பதுமான கஷாயம். (4) அகண்டவஸ்துவை அவலம்பிக்காமல் சவிகல்பசமாதியின் ஆனந்தத்துடன் திருப்திஅடைந்த சித்தவிருத்தியின் ரஸாஸ்வாதம.

ஞானி நிரங்குசன்.[28] ஞானிக்கு வியவகாரம்[29] பிராரப்தத்தாலுண்டாகிறது. எந்த ஞானியின் பிராரப்தம் பிக்ஷாபோஜனமாத்திரபலத்துக்கு ஹேதுவாகிறதோ அவனுக்குப் பிக்ஷாபோஜனமாத்திரத்திற் பிரவிர்த்தியுண்டாகிறது. எவன் பிராரப்தம் அதிக போகத்துக்கு ஏதுவாகிறதோ அவனுக்கு அதிகத்திலும் பிர்விர்த்தியுண்டாகிறது.

640. **ஆக்ஷேபம்**:—எவன் பிராரப்தம் பிக்ஷாபோஜனமாத்திரத்துக்கு ஹேதுவாகிறதோ அவனுக்குத்தான் ஞானமுண்டாகும். எவன் பிராரப்தம் அதிக வியவகாரத்துக்கு ஹேதுவாகிறதோ அவனுக்கு ஞான முண்டாகமாட்டாது. ஆகையால் பிக்ஷாபோஜனவியவகாரம் ஜனகருக்கும் சொல்லப்பட்டிருக்கிறன்றன. மேலும் வாசிஷ்டகிரந்தத்தில் அனேக ஞானிகளின் வியவகாரம் அனேகவிதமாயச் சொல்லப்பட்டிருக்கிறது.

641. **சமாதானம்**:—இப்படி ஒருவன் சங்கிப்பது சரியன்று. ஏனெனில் **யாஞ்ஞவல்கியர் ஜனகாதிகள்** ஞானிகளாகச் சொல்லப்படுகிறார்கள். சுமையில் ஐயமடைந்து தனத்தைச் சேர்க்கும் வியவகாரம் யாஞ்ஞவல்கியருக்கும் சாஞ்யபரிபாலனவியவகாரம் ஜனகருக்கும் சொல்லப்பட்டிருக்கிறன்றன. மேலும் வாசிஷ்டகிரந்தத்தில் அனேக ஞானிகளின் வியவகாரம் அனேகவிதமாயச் சொல்லப்பட்டிருக்கிறது.

---

28. விஷயானந்தம் தனக்கதிகமான ஆனந்தத்தை அபேக்ஷிக்கிறபடியால் **ஸாங்குசமாயிருக்கிறது.** ஞானியின் ஆனந்தம் பிரம்மானந்தத்துக்கு வேறுகாதபடியால் நிரங்குசமாயிருக்கிறது.

29. ரஜ்ஜுஞானத்தால் சர்ப்பப்பிராந்தி பாதிக்கப்படுகிறதுபோல் அதிஷ்டானபிரம்மஞானத்தால் அகங்காராதி ஜகத்பிராந்தி பாதிக்கப்பட்டாலும் சர்ப்பஞானத்திலுண்டான பயகம்பாதிகள் காலதாமசத்தில் நிவிர்த்தியாகிறதுபோல் பிராப்தசர்மத்தின் போகம் பிராப்தம் முடிந்தபிறகு நிவிர்த்தியாகிறது. மந்தாந்தகாரத்தில் மறுபடியும் ரஜ்ஜுவானது சர்ப்பரூபமாய்ப்பிரதிதியாகிறதுபோல் போககாலத்தில் நான் மனுஷ்யன் முதலிய பிரதிதி எப்போதாவது ஞானிக்குண்டாகிறது. உபாதானமான அஞ்ஞானம் நிவிர்த்தியானபின்பு பிரபஞ்சம் ஞானிக்குக்காணப்படுவது அயுக்தமாயிருந்தாலும், எப்படி மாட்டைப்புலியென்று நினைத்து அதன்பேரில் பாணம் விட்டபிறகு மாடென்று அறிவதினால் வேறுபாணங்கள் போடப்படாமலிருந்தாலும் போட்டபாணத்தின் வேகம் சாந்தமாகாதோ வேகமுள்ளவரையில் போய்த்திருமோ அப்படி வேகத்துக்குக்காரணமான தனுஸ்தானத்திலிருக்கிற அஞ்ஞானமும் இதரபாணங்களின் ஸ்தானத்திலிருக்கிற சஞ்சிதக்கிரியமாண கர்மங்கள் நாசமடைந்தாலும் கையிட்டுப்போன பாணஸ்தானத்திலிருக்கிற பிராரப்தத்தின் வேகஸ்தானத்திலிருக்கிற காரியம் இருந்துக்கொண்டேயிருக்கும்.

ஆகையால் ஞானிக்குப் பிரவிர்த்தியிலாவது நிவிர்த்தியிலாவது நியாயமில்லை. யாஞ்ஞவல்கியர் சபையில் ஜயமடைந்தபிறகு வித்வத்சந்நியாஸரூப நிவிர்த்தியைத் தரித்தார். அன்றியும் பிரவிர்த்தியில் துக்கத்துக்கு ஹேதுவான அனேக தோஷங்களையுஞ் சொல்லியிருக்கிறார். ஆயினும் யாஞ்ஞவல்கியருக்கு வித்வத்சந்நியாஸத்துக்குமுன் ஞானமில்லையென்று சொல்லக்கூடாது. ஆனால் ஞானம் முன்னேயே இருந்தது. ஆனால் வித்வத்சந்நியாசத்துக்கு முன் ஜீவன்முக்தியின் ஆனந்தம் அடையப்படவில்லை. ஆகையால் ஜீவன்முக்தியின் ஆனந்தத்தை யடைவதற்காகச் சேர்த்துவைத்ததையெல்லாம் தியாகம்பண்ணிவிட்டார். யாஞ்ஞவல்கியருடைய பிராரப்தம் முதலில் அதிகபோகத்துக்கு ஏதுவாயும் பின்னல் சொற்ப போகத்துக்கு ஏதுவாயுமிருந்தது. ஆகையால் முதலில் யாஞ்ஞவல்கியருக்குத் துக்கமில்லாத அதிகபோகமும் பின்னல் துக்கத்தால் சர்வபோகத்தியாகமும் சம்பவித்தன. ஜனகருடைய பிராரப்தம் மரணபரியந்தம் ராஜ்யபரிபாலனுதி விசேஷபோகத்துக்கு ஹேதுவாயிருந்தது. ஆகையால் எப்போதும் தியாகமே சம்பவிக்கவில்லை. போகத்தில் துக்கமும் அவருக்குண்டாகவில்லை. வாமதேவாதிகளுடைய பிராரப்தம் சொல்பபோகத்துக்கு ஹேதுவாயிருந்தது. போகத்தில் துக்கம் அவர்களுக்கு எப்போதும் இருந்தபடியால் பிரவிர்த்தியின் அபாவமே சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் சிகரத்துவஜனுக்கு ஞானத்துக்குப் பிறகு அதிகப்பிரவிர்த்தியுண்டானதாக வாசிஷ்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக ஞானிகளுக்கு அனேகவிதமான விலக்ஷணவியவ

---

30. எல்லாவற்றையுமொழித்தவன் சந்நியாசி. இவர்கள் ஹம்ஸன் பரமஹம்ஸனென இருவகையினர். தீவிரவைராக்கியத்துடன்கூடிய ஹம்ஸசந்நியாஸம் குடீசக பஹூதக பேதத்தால் இருவகைத்து. தீர்த்தாடனஞ்செய்யமுடியாதவன் குடீசகன். தீர்த்தாடனஞ்செய்கிறவன் பஹூதகன். பரமஹம்ஸசந்நியாஸம் விவிதிஷா, வித்வத்சந்நியாஸமென இருவகைத்து. ஞானத்துக்குமுன் தோஷதிர்ஷ்டியாலுண்டாகும் தீவிரதரவைராக்கியத்தினால் ஜிஞ்ஞாசவாற் செய்யப்படும் சந்நியாஸம் தீவிரதரமெனப்படும். ஞானத்துக்குப்பிறகு தோஷதிர்ஷ்டி பித்தியாதிர்ஷ்டிகளாலுண்டாகும் தீவிரவைராக்கியத்தினால் வித்வான் செய்யுஞ்சந்நியாஸம் வித்துவத்சந்நியாஸமென்னப்படும்.

காரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஞானிகளுக்கெல்லாம்ஞானமொ[31]
ன்றே. அதின்பலனுகிற மோக்ஷமும் ஒன்றுதான். பிராரப்தபேதத்தால்[32]
வியவகாரம் பேதப்படுகிறது. வியவகாரம் குறைவதால் ஜீவன்முக்தியி
ன் சுகம் அதிகப்படுகிறது. வியவகாரம் அதிகரித்தால் ஜீவன்முக்தியின்
சுகங்குறையும்.

642. **ஆக்ஷேபம்:** இவ்விஷயத்தில் சிலர் சங்கிக்கிறதாவது ஜீவன்முக்தியின் சுகத்தை விட்டுத் துச்சமான போகத்தில் பிறவித்தங்கி றவன் விதேகமோக்ஷத்தையும் விட்டு வைகுண்டாதி லோகங்களை யிச்சி க்து அந்தலோகங்களுக்குப் போகக்கூடும்.

---

31. ஞானம் எல்லாருக்கும் சமம் என்பதில் அடியில்குண்டச்லோகத்தை ச்சொல்லுவார்கள். "கிருஷ்ணேபோகே, சுகஸ்தியாகே, ராஜானௌ, ஜனகராக வௌ, வசிஷ்டக்கர்மகர்த்தாசத ஏதே ஞானின: சமா:" இதின் அர்த்தம்:— கிருஷ்ணன் போகே, சுகர்தியாகே, ஜனகரும் ராமரும் இராஜக்களா, வசிஷ்டர்கர்ம கர்த்தா, இவ்விதமாக இவர்களுடைய பிராப்தபேதத்தால் வியவஹாரம் வெவ் வேறுக இருந்தாலும், ஞானவிஷயத்தில் எல்லாரும் சமானமாயிருக்கிறார்கள்.

32. "அஹம்பிர்ம்மாஸ்மி" என்று ஞானமுண்டாகும் காலத்திலேயே, அவித்தையாகிற உபாதானகாரணம் நாசமடைந்து, அதின்காரியமான ஜகத்து சிதாபாசன் இவைகள் பாதிக்கப்படுகின்றன. ஆயினும், பிராரப்தமாகிற நிமித் தியம் இருக்கிறவரையில் ஞானத்தால் பாதிக்கப்படும் தேகம், ஜகத்து, சிதா பாசன் முதலியவைகளும் அநுவர்த்தித்துக்கொண்டே அதாவது பிரதிதி னுயிக் கொண்டே இருந்தின்றன. பிராரப்தம் முடிந்தபோது தானாளின் பிரதிதியு ம் முடிவு பெறுகின்றது. இதுவே விதேஹ மோக்ஷம்.

பிராப்தம் உத்தர, மத்தியம, கனிஷ்ட, அதமதர, அதமதமவென ஐந்து வகையாம். எப்போதும் அதாவது ஜனனமுதல் மரணம்வரையில் நிவிர்த்திக் கேதுவான பிராரப்தம் உத்தமம். சுகதேவர் வாமதேவர் ஜனகாதிகளின் பி ராப்தம்போலும். முதலிற் பிரவிர்த்திக்கும் பிறகு நிவிர்த்திக்கும் ஹேதுவாயி ருக்கும் பிராப்தம் மத்தியமம். யாஞ்ஞவல்கியர் முதலியவர்களின் பிராரப்த ம்போலும். எப்போதும் பிரவிர்த்திக்கு ஹேதுவானது கனிஷ்டப்பிராரப்தம். ஜனகாதிகளின் பிராரப்தம்போலும். முதலில் நிவிர்த்திக்கும் பிறகு பிரவிர்த்தி க்கும் ஹேதுவானது அதமதரம். சிதரத்துவஜ, அலர்க்க, ராஹுகண, பிரியவி ரத, முதலியவர்களின் பிராரப்தம் போலும். இடப்படி கடத்தல், பேசு தல், புசித்தல் முதலிய பிரமாதங்களுக்கு ஹேதுவானது அதமபிராரப்தம்.

643. இந்தச் சங்கை சரியன்று எனெனில் ஜீவன்முக்திசுகத்தின் நியாகமும் போகத்திற் பிரவிர்த்தியும் ஞானிக்குப் பிராரப்தபலத்தால் சம்பவிக்கின்றன. விதேகமோக்ஷநியாகமும் பரலோககமனமும் சம்பவிக்கிறதில்லை. எனெனில் ஞானியின் பிராணன் வெளியிற் போகிறதில்லை. ஆகையால் பரலோககமனம் சம்பவிக்கிறதில்லை. மேலும் விதேதமோக்ஷநியாகமும் சம்பவிக்கிறதில்லை. எனெனில் ஞானத்தால் அஞ்ஞானம் நிவிர்த்தியாகிப் பிராரப்தபோகத்துக்குப் பிறகு ஸ்தூலசூக்ஷம சரீராகாரமான அஞ்ஞானம் சேதனத்தில் லயப்படுவதற்கு விதேகமோக்ஷமென்பு பெயர். மூலஅஞ்ஞானம் பாக்கியினிருந்தாலாவது நிவிர்த்தியான அஞ்ஞானம் மறுபடியும் உண்டானுலாவது விதேகமோக்ஷஞ் சித்திக்கமாட்டாது. இந்த மூலஅஞ்ஞானத்துக்கு ஞானம் விரோதமாலையால் அஞ்ஞானம் பாக்கியில் தங்கமாட்டாது. பிரமாணத்தால் நாசமடைந்த அஞ்ஞானம் மறுபடியும் உண்டாகமாட்டாது. ஆகையால் விதேகமோக்ஷம் சித்திக்காமற் போகமாட்டாது. விதேகமோக்ஷநியாகத்திலும் பரலோககமனத்திலும் ஞானிக்கிச்சையு முண்டாகமாட்டாது. எனெனில்ஞானிக்கு இச்சை கேவலம் பிராரப்பத்தாலுண்டாகின்றது. எந்தச் சாமக்கிரிகளன்றியில் பிராரப்தபோக முண்டாகமாட்டாதோ அந்தச் சாமக்கிரிகளைப் பிராரப்தங் கொடுக்கிறது. இச்சையன்றியில் போகமுண்டாகிறதில்லை. ஆகையால் ஞானியினிச்சையும் பிராரப்தபலன். அன்னியலோக சம்பந்தம் அல்லது இந்த லோகத்தில் அன்னிய சரீரங்களுடன் சம்பந்தம் ஞானிக்குப் பிராரப்பத்தாலும் உண்டாகிறதில்லை யென்பது இந்தத்தரங்கத்தில் முன் 610 பிரதிபாதிக்கப்பட்டிரு க்கிறது. ஆகையால் ஞானிக்குப் பிராரப்பத்தால் விதேகமோக்ஷநியாகத்திலும் அல்லது பரலோககமனத்திலும் இச்சையுண்டாகிறதில்லை.

644. ஜீவன்முக்தி சுகத்துக்கு விரோதியான வர்த்தமான சரீரத்திலுள்ள அதிகபோக இச்சை பிசாசாபோஜனாதிகளில் இச்சைபோல் ஞானாதிகளுக்கு இருந்ததாகச் சொன்னவிடத்தில் ஓரசகியமிருக்கிறது. ஞானியின் பாஹ்மியப்பிரவிர்த்தி ஜீவன்முக்திக்கு விரோதமன்று. ஆனால் ஜீவன்முக்தியின் விலக்ஷணசுகத்துக்கு விரோதியாயிருக்கிறது. எனெனில் ஆத்மா நித்தியமுக்தமாயிருக்கிறது. அவித்தையினால் பந்தம் பிரதீதியாகிறது. எந்தக்காலத்தில் ஞானமுண்டாகிறதோ அந்தக்காலத்தில் அவித்தையாலுண்டான பந்தப்பிரமை நிவிர்த்தியாகிறது. ஞானமுண்டானால் மறுபடியும் பந்தப்பிராந்தி யுண்டாகிறதில்லை. பந்தப்பிராந்தி இல்லாமல் சரீராசகிதமாயிருப்பதற்கு ஜீவன்முக்தியென்று பெயர். தேகாதிகளின் பிரவிர்த்தியிலும் நிவிர்த்தியிலும் ஞானிக்கு ஆத்மா

விஷயிடத்தில் பக்தப்பிராந்தியுண்டாகிறதில்லை. ஆகையால் பாஹ்யப்பி ரவிர்த்தியாலும் ஜீவன்முக்தி விபரீத்தியாகிறதில்லை. ஆனால் பாஹ்யப் பிரவிர்த்தியில் ஜீவன்முக்தனுக்கு விலக்ஷணமாக முண்டாகிறதில்லை. ஏ காக்ரமான அந்தக்கரணபரிணமத்தில் சுகமுண்டாகிறது. இந்த ஏகா க்ரபரிணமம் பாஹ்யவிர்த்தியிலில்லை. இவ்விதமாகப் பிராரப்தத் தால் ஞானிக்கு வியவகாரம் அனேகவிதமாயிருக்கிறது. ஆனால் எவனு டைய பிராரப்தம் அதிகப்பிரவிர்த்திக்கு ஹேதுவாயிருக்கிறதோ அது 33
மந்தப்பிராரப்தமென்று சொல்லப்படுகின்றது. எனெனில் அதிகப்பிர விர்த்தி ஏகாக்ரதைக்கு விரோதியாயிருக்கிறது. ஏகாக்ரமான மன மில் நிருபாதிகானந்தம் பிரதிபலிக்கிறதில்லை. இது சமாதிநிரூபணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

645. ஞானிக்குச் சில அநுபவதார்த்தங்களிலும் மிக்கியபா க்தியுண்டாகிறது. அவனுக்கு ராகமுண்டாகிறதில்லை. ஆகையால் பி ரவிர்த்தியுண்டாக மாட்டாதென்று முன் 5-11 செய்த சங்கை சரியன்று. எனெனில் எப்படித் தேகத்தில் மிக்கியபாடுத்தியோ ஞானிக்குண்டா கிறதோ அப்பொழுதும் தேகத்துக்கு அனுகூலமான விஷயாதிகளில் தே வல்ம பிராரப்தத்தால் எப்படிப் பிரவிர்த்தியுண்டாகிறதோ அப்படி எந் தஞானிக்கு அதிக போகத்தின் பொருட்டுப் பிராரப்தமிருக்கிறதோ அந்த ஞானிக்கு அதிகப்பிரவிர்த்தியோ புண்டாகிறது. எப்படி விருஷ பாடியின் வேடிக்கையை மிருகதியன்றறிந்து அநுபவிக்க வல்லவ ஞானங்களும் பிரவிர்த்திக்கிறார்களோ அப்படி ஸ்வாபதார்த்தங்களிலும் ஞானிக்கு மிக்கியாபுத்தியிருந்தும் பிரவிர்த்தி யுண்டாகிறது.

646. ஆக்ஷேபம்:— எவனுக்கு மந்தப்பதார்த்தத்தில் தோஷ நிர்ஷ்டியிருக்கிறதோ அந்தப்பதார்த்தத்தில் அவனுக்குப் பிரவிர்த்தியுண் டாகமாட்டாது. ஞானிக்கு அநுபமபதார்த்தத்தில் தோஷநிர்ஷ்டியிரு க்கிறது. அவனுக்கு ராகமில்லை ஆகையால் பிரவிர்த்தி யுண்டாகமாட் டாது.

647. சமாதானம்:—இந்த ஆக்ஷேபமும் சரியன்று. எந்த அ பத்தியஞ்செய்வதில்தோஷியால் அன்வயவியதிரேகங்களால் தோஷமிருப் பதாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறதோ அந்த அபத்தியத்தில் பிராரப்தத்தா

---

33. நிகிர்ஷ்டம்.

ல் ரோகிக்குப் பிரவிர்த்தி யுண்டாகிறதுபோல், பிராரப்தத்தால் ஞானிக்குச் சர்வவியவகாரங்களிலும் தோஷதிர்ஷ்டியிருந்தும் பிரவிர்த்தி யுண்டாகிறது. இவ்விதமாக ஞானியின் வியவகாரத்துக்கு நியமமில்லை. இத்தப்பகுதும் விஸ்தாரமாய் திருப்திதீபிகையில்[34] வித்தியாரண்யஸ்வாமிகளாற் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் தத்துவதிர்ஷ்டியின் வியவகாரம் நியமமில்லாமலிருக்கிறது. சமாதிரூப நியமவிதியைகேட்டுத்தத்துவர்ஷ்டிஹாஸ்யம்பண்ணினான்.

648. தேசகாலாதிஅபேக்ஷையுபன்றியில் தத்துவதிர்ஷ்டியின் மரணம்:—தொன்சகாலம்சஞ்சாரஞ்செய்துகல்ல ஞானமடைந்ததத்துவதிருஷ்டியானவன் பிராரப்தபோகங்களை யனுபவிதகான். பிறகு அவன் பிராணன்லீனமாய்விட்டது. பிராரப்தபோகத்துக்குப் பிறகு ஞானியிற் பிராணலுக்குக் சமனமில்லாதகினால் தத்துவதிர்ஷ்டியின் பிராணன் மீனமானதாகச்சொல்லப்பட்டிருக்கிறது. ஞானி சரீரத்தை விடுவதில் காலவிதேசஷங்களின் அபேக்ஷையில்லை. உத்தராயணத்திலாவது தக்ஷிணாயத்திலாவது சரீரத்தை விடக்கூடும். எவ்விதத்திலும் அவன் முக்தனே. அப்படியே தேசவிதேசஷத்தின் அபேக்ஷையுமில்லை. காசிமுதலிய புண்ணிய தேசங்களிலாவது அந்தியபந்தம் பாவதேஷத்திரங்களிலாவது ஞானி தேகத்தை விடக்கூடும். எவ்விதத்திலும் அவன் முக்தனே. அப்படி

---

34. திருப்தி தீபிகையில் (136—173) சுலோகங்களில் பிரதிபாதிக்கப்பட்ட அர்த்தம் அடியில் சுருக்கமாய் எழுதப்படுகிறது. ஜகத்மித்தை யென்ற புத்தியால் விஷயமும் போக்தாவும் இல்லாமற்போகின்றன. எண்ணையில்லா தீபம்போல் சந்தாபம் நிவிர்த்தியாய்விடுகிறது. தனம் ஸ்திரீ முதலியவைகளில் தோஷதர்சனப்பார்க்கும் ஞானி அவ்வகளில் இச்சை எப்படி வைக்கக்கூடும். பசியால் வருந்தும் புருஷன்கூட விஷ்டத்தைச்சாப்பிடுகிறதில்லை. மிருஷ்டான்னபோஜனம் பண்ணினவனு விஷ்டத்தையுண்பான்? பிராப்தம இச்சா, அனிச்சா, பரேச்சாபேதத்தால் மூவகையாம். 'அபத்தியம் திருட்டு இவைகளிற் பிரவேசித்தல் இச்சாபிராரப்தம். பிரகிருதிபலத்தால் பிரவேசித்தல் அனிச்சாபிராரப்தம். பிறருடைய இச்சையால் பிரவிர்த்தத்தல் பரேச்சாபிராரப்தம். இராசாக்களால் கட்டளையிடப்பட்டவன் பிரியமன்றியிலும் காரியத்தில் பிரவிர்த்திக்கிறதுபோல இச்சையில்லாவிட்டாலும் ஞானிக்கு பிராரப்தத்தால் பிரவிர்த்தியுண்டாகும். வறுக்கப்பட்ட விதைசாப்பிட யோக்கியமானாலும் முளைக்கயோக்கியமில்லாததுபோல இச்சை அல்பபோகத்துக்குக்காரணமானாலும் விஷயமான பதார்த்தம் மித்தை யென்று அறியப்பட்டிருக்கிறபடியால் அது வியஸனத்துக்குக்காரணமாகிறதில்லை.

யே ஆனவிசேஷங்களின் அபேக்ஷையு மில்லை. பூமியில் ஸபாஸனத் திலிருந்து கொண்டாவது சிதகாசனத்திலிருந்துகொண்டாவது சரீரத் தை விடக்கூடும். அப்படியே சாவதானமாய்ப் பிரம்மஞ்தனை செய்து கொண்டாவது அல்லது வியாதியால் வியாகூலனாய் ஹாஹாசப்தஞ்செ ய்துகொண்டாவது தேகத்தை விடக்கூடும். எவ்விதத்திலும முக்தனே ஏனெனில் எந்தக்காலத்தில் ஞானத்தால் அஞ்ஞானம நிவிர்த்தியாய்விட் டதோ அந்தக்காலத்திலேயே ஞானி முக்தனாய்விட்டான். ஆனதால் ஞானிக்கு விதேகமோக்ஷத்தில் தேசகாலஆஸனதிகளின் அபேக்ஷை யி ல்லை. எப்படி ஞானிக்குத் தேகவியோகத்தில் தேசகாலாதிகளின் அ பேக்ஷை யில்லையோ அப்படிச் சரவணத்திலும் தேசகாலஆஸனதிகளின் அபேக்ஷை யில்லை.

649. உபாஸகனுக்குத் தேசகாலாதிகளின் அபேக்ஷை யுண்டு. பீஷ்மாதிகள் ஞானிகளாகச் சொல்லப்படுகிறார்கள். **பீஷ்மர்** உத்தரா யணம் வருகிறவரையில் பிராணத்தியாகம் செய்யவில்லை. ஆயினும் பீ ஷ்மாதிகள் அதிகாரிபுருஷர்களாம். ஆனதால் உபாஸகர்களுடைய உப தேசத்தின்பொருட்டு அவர்கள் காலவிசேஷத்தை யபேக்ஷித்தார்கள். **வசிஷ்டர் பீஷ்மர்** முதலியயோர் அதிகாரிகளாயிருந்தபடியால் அ வர்களுக்கு அநேக ஜன்மங்கள் உண்டாயின, ஏனெனில் அதிகாரிபுரு ஷனுக்கு ஒரு கலப பரியந்தம் பிராரப்த மிருக்கின்றது. கல்பம் முடி யாதவரையில் விதேகமோக்ஷ முண்டாகிறதில்லை. கல்பத்துக்குள்ளே யே அவர்களுக்கு இச்சாபலத்தால் அனேகசரீரங்க ளுண்டாகின்றன. ஆயினும் ஆத்மஸ்வரூபவிஷயத்தில் அவர்களுக்கு ஜனனமரணப் பிராந்தி யுண்டாகிறதில்லை. ஆகையால் அவர்கள் ஜீவன்முக்தர்கள். இந்த அதி காரிபுருஷர்களின் வியவகாரம் எல்லாம் பிறருடைய உபதேசநிமித்திய மேயாம். ஞானிகளின் வியவகாரத்தில் வேறு யாதொரு நியமமுமில்லை. இந்த அபிப்பிராயத்தால் கத்துவதிருஷ்டியின் தேகவியோகத்தில் தேச காலாதிகள் யாதொன்றுஞ்சொல்லப்படவில்லை.

650. தேசகாலஅபேக்ஷையுடன் **அதிருஷ்டியின்** மரணம்:—எ ப்படி ஞானிக்குத் தேசகாலங்களின் அபேக்ஷையில்லையோ அப்படி உபா ஸகனுக்கு விபரீதமாயிருக்கிறதென்று அறியவேண்டியது. உத்தமமான தேசங்களிலும் உத்தமமான உத்தராயணாதி காலங்களிலும் உபாஸகன் சரீரத்தை விட்டால் உபாஸனை பலிக்கிறது. ஞானிக்கு மரணசமயத் தில் சாவதான மிருப்பதால் ஞேயத்தின் ஞாபக மிருக்கவேண்டுமென்கிற அபேக்ஷையில்லை. உபாஸகனுக்கு மரணசமயத்தில் தியானிக்க வேண்டி யஸ்வரூபத்தின் ஸ்மரணையின் அபேக்ஷை யிருக்கிறது. எந்தத்தியேய த்தை முன்தியானஞ் செய்திருக்கிறானோ அந்தத் தியேயத்தின் ஞாபகமே

மானசமயத்திலுண்டாகுல் உபாசனை பலிக்கிறது. எப்படித் தியேயத்தி
னை ஸ்மரணை யுபேக்ஷிக்கப்படுகிறதோ அப்படித் தியேயப்பிர்ம்மத்தை
டையை 5 வதுதாங்கத்திற் சொல்லப்பட்ட மார்க்கத்தின் ஸ்மரணையும் வேண்
டியதாயிருக்கிறது. ஏனெனில் மார்க்கசிந்தனையும் உபாஸனைக்கு அங்கமா
ம். ஞானத்தின்பொருட்டுங் சிரவணத்தில் தேசகாலஆஸனங்களின் அ
பேக்ஷையில்லை. தியானத்தில் உத்தமமான தேசம் நிரந்தரமான கால
ம் சித்தாதி ஆஸனங்கள் இவைகள்வேண்டியவைகளாயிருக்கின்றன. இ
ரண்டாவது சிஷ்யனை அதிர்ஷ்டியானவன் கங்காதீரத்தை மிகவும் உத்
தமமான இடமாகக்கண்டு அவ்விடத்தில் ஏகாந்தத்தில் பிர்ம்மத்தியான
ஞ்செய்து சரஸ்திராதிப்படித் தேகத்தை விட்டான். முன் சொன்ன
மார்க்கத்தின்படிப் பிர்ம்மத்துடன்கூடிய அதிகஆனந்தத்தை யடைந்தா
ன். தியானத்தில் உத்தமதேசாதிகளின் அபேக்ஷையிருப்பதால் அதிர்
ஷ்டிக்குக் கங்காதீரவாசமும் மரணசமயத்தில் யோகசாஸ்திரப்படித் தே
கவியோகமும் சொல்லப்பட்டன.

651. தர்க்கதிர்ஷ்டியின்நிச்சியம்:— (651—678) மூன்
றுவது சிஷ்ணுகிய தர்க்க திர்ஷ்டியானவன் குருமூலமாகவுபதேசம் பெற்
று, கேட்டவிஷயத்தில் இதர சாஸ்திரங்களின் விரோதத்தைத் தள்ளுவ
தற்காக சகல சாஸ்திரங்களின் அபிப்பிராயத்தையும் விசாரித்து அடியி
ல்வருமாறு நிச்சயஞ்செய்தான். சகல சாஸ்திரங்களின்பிரயோஜனம்
மோக்ஷம். மோக்ஷத்துக்குச்சாதனம்ஞானம். இந்த ஞானம் அத்வை நி
ச்சய ரூபம். பேத நிச்சயம் யதார்த்த ஞானமன்று. சாஸ்திரங்களெல்
லாம் சாக்ஷாத்தாகவாவது பரம்பரையாகவாவது பிர்ம்மஞானத்துக்கு
ஹேதுக்களாயிருக்கின்றன.

ஸமஸ்திருதத்தில் பதினெட்டுப் பிரஸ்தானங்களிருக்கின்றன.
அவைகளில் சிலகர்மத்தைப் பிரதிபாதிக்கின்றன. சில விஷயசுகத்தை
யடையுமுபாயத்தைச் சொல்லுகின்றன. சில பிர்ம்மத்துக்கு அன்னிய
மானதேவதைகளையுபாஸிக்கும்படிப் போதிக்கின்றன. ஞானத்தின் பொ
ருட்டேற்பட்டிருக்கிற சியாய சாங்கியாதி சாஸ்திரங்களும் பேதஞான
த்தையே யதார்த்தஞானமாகச் சொல்லுகின்றன. ஆகையால எல்லாம்

---

35. வித்வானுக்குத்தேகத்தியாக விஷயத்தில் தேசகாலாதிகளின் அபே
க்ஷையில்லாமலிருந்தாலும் யோகாப்பியாஸபலத்தால் வித்துவான் சுபரீதியா
ய்த்தேகத்தைவிட இச்சிக்கிறான். இவைகளையடையுமென்கருதி அவன் தே
கத்தைவிடுகிறில்லை.

அத்வைதப் பிர்ம்மத்தையே போதிக்கிறதாகச் சொல்வது சரியன்று. ஆயினும் சகலசாஸ்திரங்களையுஞ் செய்தவர்கள் சர்வஜ்ஞர்களாயும் கிருபாநிதிகளாயுமிருக்கிறார்கள். ஆனதால் அவர்களாற்செய்யப்பட்ட மூலசூத்திரங்களின் அர்த்தம் வேதானுசாரமாகவேயிருக்கிறது. ஆயல் இவைகளின் வியாக்கியானக்காரர்கள் பிராந்தர்களாயிருந்தபடியால் மூலசூத்திரக்காரருடைய அபிப்பிராயங்களுக்கு விலக்ஷணமாய் அர்த்தம் பணணியிருக்கிறார்கள். ஆயல் மூலசூத்திரங்களின் அர்த்தம் வேதத்துக்கு விருத்தமாயில்லை. சகல சாஸ்திரங்களின் அர்த்தமும் வேதானுசாரமாகவே யிருக்கிறது. இதைத் தர்க்கஞ்செய்யுடியானவன் உத்தம சாஸ்காரத்தால் நிச்சயம் பண்ணிணன்.

36

652. **வித்தையின் 18 பிரஸ்தானங்கள்**:-வேதங்கள் 4, உபவேதங்கள் 4, வேதாங்கங்கள் 6, புராணம், நியாயம், மீமாம்சை, தர்மசாஸ்திரம், என ஸம்ஸ்கிருதபாஷாநுபவித்யையில் 18 பேதங்களுள. இவைகளுக்குப் பிரஸ்தானங்களென்று பெயர்.

653. **நான்குவேதங்களுக்கும் பிர்மஞ்ஞானத்தில் தாற்பரியம்**:— இருக்கு, யசுர், சாம, அதாவணம், யென்[37] வேதங்கள் நான்காம். இவைகளில் சிலவசனங்கள் நேயப்பிர்ம்மத்தைப் போதிக்கின்றன. சில நியோகத்தைப் போதிக்கின்றன. சில கர்மத்தைப்போதிக்கின்றன. கர்மத்தைப் போதிக்கிற வேதவசனத்துக்கும் அந்தகரணசுத்திமூலமாகஞானமே பிரயோஜனமாம். பிரவிர்த்தியில் எந்தவேதவசனத்துக்கும் அபிப்பிராயமில்லை; ஆனால் நிவிர்த்தத்தில் ஸ்வாபாவிகமாய்ப்பிரவிர்த்திப்பதினின்றும் நகைப்பதில் அபிப்பிராயமாம். ஆகையால்

---

36. வித்தையின் அங்கங்களுக்குப் பிரஸ்தானங்களென்றுபெயர். இவை அக்னிபுராணத்தில் ஆம்பத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன்.

37. இருக்வேதத்தில் 21 சாகைகளும், யசுர்வேதத்தில் 109 சாகைகளும், சாமவேதத்தில் 1000 சாகைகளும், அதர்வணவேதத்தில் 50 சாகைகளுமுள. ஒருமரத்தையுடையவன் தன்பிள்ளைகளுக்கு அதன் கிளைகளைப்பிரித்துக் கொடுப்பதுபோல் வியாஸபகவான் வேதத்தை நான்கு பாகங்களாக்கி அவைகளில் பலசாகைகளைத்தல்பிதனு ஒவ்வொருசாகைக்குரிய விதிகளையும் ஏற்படுத்தினர். எத்தனை சாகைகளுண்டோ அத்தனையுபநிஷத்துகளுண்டென முக்திகோபநிஷத்திலும் மகாவாக்கியரத்நாவளியிலுஞ்சொல்லப்பட்டிருக்கிறது. சாகை

அபிசாரார்த்திகர்மத்தைப் பிரதிபாதிக்கிற அதர்வண வேதத்துக்கும் நிவிர்த்தியில் தாற்பரியமாம். துவேஷத்தால் சத்துருவைக் கொல்லவேண்டுமென்று ஒருவன் பிரவிர்த்திக்கால் அவனைக் கீலனை வெட்டுவதினாலாவது சுடுவதினாலாவது கொல்லாமலிருப்பதற்காக அபிசார கர்மங்களாகிற ஸ்யெனயாகாதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. சத்துருவைக் கொல்லும்பொருட்டேற்பட்ட கர்மம் அபிசாரமெனப்படும். ஸ்யென மென்னும் யஞ்ஞம் இப்போர்ப்பட்டது. ஸ்யேனயாகத்தைப்போதிக்கிற வேதவசனத்துக்குச் சத்துருவைக் கொல்ல இச்சிக்கிறவன் ஸ்யேனயாகத்தில் பிரவிர்த்திக்கலாமென்று அர்த்தமன்று. ஆனால் சத்துருவைக்கொல்ல இச்சிக்கிறவன் ஸ்யேனயாகத்துக்குப்பின்னமான சிரச்சேதனம் முதலிய கொல்லு முபாயங்களில் பிரவிர்த்திக்கக் கூடாதென்பதாம் இவ்விதமாக ஸ்யேனயாகத்தைப் போதிக்க வேதத்துக்கு த்துவேஷத்தாற்கொல்லவேண்டுமென்றுண்டான இச்சையினின்று திருப்பவேண்டுமென்கிற அபிப்பிராயமே தவிரப் பிரவிர்த்திக்கவேண்டுமென்கிற அபிப்பிராயமன்று. ஏனெனில் பிரவிர்த்தி துவேஷத்தாலுண்டாயிருக்கிறது வேறு விதமாக பிரவிர்த்தி உண்டாகவேண்டுமென்பது வேதவாக்கியத்துக்கு கருத்தன்று.[38] இவ்விதமாக அதர்வண வேதத்துக்கெல்லாம் நிவிர்த்தியில் தாற்பரியமாம். மற்றமூன்று வேதங்களில் கர்மத்தைப் போதிக்கும் வாக்கியங்களுக்கு அந்தக்கரணசுத்தி மூலமாக ஞானத்திலுபயோகமுண்டென்பது ஸ்பஷ்டமாயிருக்கிறது.

கள் 1180 ஆகையால் உபநிஷத்துகளும் 1180 உண்டு. இவைகளில் 840 உபநிஷத்துக்கள் கர்மத்தைப்போதித்துக்கர்மகாண்டமெனச்சொல்லப்படுகின்றன. 232 உபநிஷத்துகள் நியேயப்பிர்ம்மத்தைப்போதித்து உபாஸனாகாண்டமெனச்சொல்லப்படுகின்றன. 108 உபநிஷத்துகள் ஞேயப்பிர்ம்மத்தைப்போதிக்கின்றன. இவைகள் வேதத்தின் அந்தியபாகமானதினாலும் வேதத்தின்சாரமான அர்த்தத்தைச்சொல்லுகிறபடியினாலும் வேதாந்தமென்றும் ஞானகாண்டமென்றுஞ்சொல்லபடுகின்றன. இந்த 108 உபநிஷத்துகளில் (1) ஈச (2) கேன (3) கட (4) பிரச்ன (5) முண்டக (6) மாண்டேக்கிய (7) தைத்திரீய (8) ஐதரேய (9) சாந்தோக்கிய (10) பிரகதாரண்யக உபநிஷத்துக்கள் முக்கியமானவை. இவைகளில் ஐதரேயம் இருக்குவேதத்தினது. ஈசாவாசியமும் பிரகதாரனியகமும் சுக்லயஜுர்வேதத்தின.கடவல்லியும் தைத்திரீயமும் கிருஷ்ணயஜுர்வேதத்தின. கேனமும் சாந்தோக்கியமும் சாமவேதத்தின. முண்டகமும் மாண்டேக்கியமும் அதர்வணவேதத்தின.

38. பிரவிர்த்தியில் வேதத்துக்கு அபிப்பிராயமிருக்கும்பக்ஷத்தில் சிரச்சேதனம் முதலியவை எப்படி சத்துருவைக்கொல்ல உபாயங்களோ அப்படி நியேனயாகமும் உபாயமாகமுடியும். அப்போது வேதவசனத்தில் விசேஷமில்லை. ஆகையால் பிரவிர்த்தியில் வேதத்துக்கு அபிப்பிராயமில்லை.

654. நான்குபவேதங்கள்:— ஆயுள்வேதம்:— ஆயுள வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்தவேதம், என்று உபவேதங்கள் நான்காம். இவைகளில் ஆயுள்வேதத்தின் கர்த்தாக்கள் பிர்ம்மா, பிரஜாபதி, அச்வினீ குமாரர்கள், தன்வந்திரி முதலியவர்களாம். சரகம் வாக்பட்டம் முதலிய சிகிச்சாசாஸ்திரங்களும் ஆயுள் வேதமே. வாத்ஸ்யாயனரால் செய்யப்பட்ட காம சாஸ்திரமும் ஆயுள்வேதத்தில் அந்தர்ப்பூதமாயிருக்கிறது. ஏனெனில் காமசாஸ்திரத்துக்கு விஷயமான விந்தையாடியின் ஸ்தம்பஸ்தம்பனாதிகளும் சரகாதிகளால் ஆயுள்வேதமென்று சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஆயுள் வேதத்துக்கு வைராக்கியத்திலேயே அபிப்பிராயம். ஏனெனில், ஆயுள்வேதத்தின் நியாய் ரோகாதிகள் நிவர்த்தியானதும் மறுபடியும் ரோகாதிகளுண்டாகுபடியால் லௌகிக வுபாயங்களெல்லாம் துச்சமாயிருக்கின்றன. இந்த அர்த்தத்தில் தான் ஆயுள்வேதத்தின் நோக்கம். ஔஷததானம முதலியவைகளால் புண்ணிய முண்டாதி அந்தக்காரணசுத்தியூலமாக ஞானத்திற்கு ஆயுள்வேதமுபயோகப்படுகிறது.

655. தனுர்வேதம்— விசுவாமித்திரரால் செய்யப்பட்ட தனுர்வேதத்தில் ஆயுதம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. (1) முக்தம். (2) அமுக்தம். (3) முக்தாமுக்தம். (4) யந்திராமுக்தம். என ஆயுதங்கள் நாலுவகையாம். சக்கராதிகள் கையால் விடப்படுவதால் முக்தமென்றும், கத்தி முதலியவை அமுக்தமென்றும், சட்டி முதலியவைகள் முக்தாமுக்தமென்றும், வை முதலியவைகள் யந்திராமுக்தமென்றும் சொல்லப்படும். இவ்வகையான ஆயுதங்களில் முக்தத்துக்கு அஸ்திரமென்றும், அமுக்தத்துக்குச் சஸ்திரமென்றும் பெயர். இந்த நான்குவித ஆயுதங்களுக்கும் பிர்ம்மா, விஷ்ணு, ருத்ரன், பிரஜாபதி, அக்கினி, யமன், முதலிய தேவதைகளும் மந்திரங்களுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. கூத்திரிய குமாரர்களும் அவைகளை யநுசரித்த பிராமணர்களும் அதிகாரிகளென்று சொல்லப்படுகிறார்கள். இவைகள் (1) ரதிகள். (2) ரதாரூடர்கள். (3) அசுவாரூடர்கள். (4) கஜாரூடர்களென நாலுவகையினர். யுத்தத்தில் மங்கள சகுனங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. மேற் சொல்லிய விஷயங்களெல்லாம் தனுர் வேதத்தின முதற் பாகத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆசாரியருடைய லக்ஷணமும அவரிடத்திலிருந்து சஸ்திரத்தைக் கிரகிக்கிற ரீதியும் இரண்டாம் பாகத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன. குரு சம்பிரதாயமாயடையப்பட்ட சஸ்திரத்தின் அர்ச்சியாஸமும் மந்திர சித்தி தேவதாசித்தி பிரகாரங்களும் மூன்றும் பாகத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன. சித்தியான மந்திரத்தின் பிரயோகம நான்காம் பாகத்திற சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வளவு விஷயங்கள் தனுர்வேதத்தில் அடங்கியிருக்கின்றன. இந்தத்தனுர் வேதம் பிர்ம்மா பி

ரஜாபதி முதலியவர்களிடமிருந்து விசுவாமித்திரருக்குக் கிடைத்தது. இவர் இதைப் பிரசித்தஞ் செய்தாரே யொழியப் புதிதாயுண்டுபண்ணவில்லை. துஷ்டர்கள் திருடர்கள் முதலியவர்களினின்று ஜனங்களை யிரக்ஷிக்கவேண்டியதர்மத்தை தனுர்வேதம் க்ஷத்திரியர்களுக்குப் போதிக்கிறது. ஆகையால் இதின் கருத்தும் அந்தக்கரணசுத்திசெய்து ஞானமூலமாகமோக்ஷத்தை தருவதேயாம்.

656. காந்தர்வவேதம்:—இது பாதராற் பிரசித்தப்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் ஸ்வரம் தாளம் மூர்ச்சனை இவைகள் சங்கீதம் கடனம் வாத்தியம் இவைகள் விஸ்தாரமாய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. தேவதைகளின் ஆராதனை மூலமாக நிர்விகல்பசமாதி சித்திப்பதே காந்தர்வவேதத்தின் பிரயோஜனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இதுவும் அந்தக்கரணத்தையேகாக்கிரஞ்செய்து ஞான மூலமாக மோக்ஷத்தைக் கொடுக்கின்றது.

657. அர்த்தவேதம்:— இது அநேகவிதமாம். நீதிசாஸ்திரம் அசுவசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், பாகசாஸ்திரம் முதலிய தனசம்பாதனத்துக்கு உபயோகமான உபாயங்களைப் போதிக்கும் சாஸ்திரங்களெல்லாம் அர்த்தவேதமென்னப்படும்.[39] தனம் சம்பாதிப்பதில் சகலவுபாயங்களையு மறிந்தவனுக்கும் பாக்கியமன்றியில் தனங்கிடைக்கிறதில்லை. ஆகையால் அர்த்தவேதத்துக்கும் வைராக்கியத்திலேயே கருத்தாம்.

658. வேதாங்கங்கள் (658—664):— (1) சிக்ஷை (2) கல்பம் (3) வியாகரணம் (4) நிருக்தம் (5) சோதிடம் (6) பிங்களம் இவ்வாறும் வேதத்துக் குபயோகமாயிருப்பதால் வேதாங்கங்களாகச் சொல்லப்படுகின்றன.

659. சிக்ஷை:—இதைச் செய்தவர் பாணினீ, வேதசப்தங்களில் அக்ஷரங்களின்ஸ்தானங்களின் ஞானம், உதாத்தானுதாத்தஸ்வரித ஸ்வரங்களின் ஞானம் இவைகள் சிக்ஷையாலுண்டாகின்றன. வேதத்தின் வியாக்கியானரூப அனேகப் பிரதிசாகையென்னுங் கிரந்தங்களும் சிக்ஷைக்குக் கந்தர்பூதமாயிருக்கின்றன.

---

39. இதற்கு ஸ்தாபத்திய வேதமென்னும் பெயர்.

40. உச்ச நீச சமான ஸ்வரங்கள்.

660. **கல்பசூத்திரம்:**— கல்பசூத்திரங்களினின்றும் வேதத்தில் போதிக்கப்படுகிற கர்மங்களை யநுஷ்டிக்கும் ரீதி யறியப்படுகிறது. யஞ்ஞத்தைச் செய்துவைக்கும் பிராமணன் ரித்விக்கென்று சொல்லப்படுகிறான். அவ்வறச் செய்யப்படவேண்டிய அநேக கர்மங்களைக் கல்பசூத்திரம் போதிக்கிறது. இந்தக் கல்பசூத்திரத்தைச் செய்தவர்கள் **காத்தியாயனர் ஆஷ்வலாயனர்**[41] முதலியமுனிகளாம். கல்பசூத்திரமும் வேதத்துக் சுபயோகமாயிருக்கிறபடியால் வேதாங்கமாயிருக்கிறது.

661. **வியாகரணம்:**—வியாகரணத்தால் வேதசப்தங்களின் சுத்தஞான முண்டாகிறது. இந்த வியாகரணம் சூத்திரரூபமாய் எட்டுஅத்தியாயங்களில் **பாணினீ** யென்னும் முனியாற் செய்யப்பட்டிருக்கிறது. **காத்தியாயனரும் பதஞ்சலியும்** வார்த்திகம் பாஷ்யமென்கிறவியாக்கியானங்களை மேற்படிச் சூத்திரங்களுக்குச் செய்திருக்கிறார்கள். வேறு வியாகரணங்களில் வேதசப்தங்கள் விசாரிக்கப்படவில்லை. அதையால் புராணேதிகளுக்கு அவைகளுபயோகப்பட்டாலும் வேதத்துக் சுபயோகப்படவில்லை. பாணினியாற் செய்யப்பட்ட வியாகரணம் வேதாங்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

662. **நிருக்தம்:**—**யாஸ்கர்** என்னும் முனி 18 அத்தியாயங்களில் நிருக்தத்தைச் செய்திருக்கிறார். அதில் வேதமந்திரங்களில் பிரசித்தங்களாயில்லாத பதங்களின் அர்த்தங்கள் போதிக்கப்பட்டிருக்கின்றன. அதையால் வைதீக அப்பிரசித்தபதங்களின் அர்த்தஞானத்திலுபயோகப்படுகிறதில்லை நிருக்தமும் வேதாங்கமாயிருக்கிறது. ஸம்ஹிதையைப் போதிக்கிற ஐந்து அத்தியாயங்களிலுள்ள நிகண்டு என்றுங் நிருக்தத்தையாஸ்கர் செய்திருக்கிறார். இதுவும் நிருக்தத்துக்கு அந்தர்ப்பூதமாயிருக்கிறது. **அமரசிம்மர் ஹேமர்** முதலியவர்களாற் செய்யப்பட்ட ஸம்ஞாபோதககோசங்களெல்லாம் நிருக்தத்துக்கு அந்தர்ப்பூதமாயிருக்கின்றன

663. **சோதிடம்:**—**ஆதித்தியர் கார்க்கியர்** முதலியவர்களாற் செய்யப்பட்ட சோதிடமும் வேதாங்கமாயிருக்கிறது. ஏனெனில் வைதீக கர்மத்தையாரம்பிப்பதிற் காலத்தின் ஞானம் வேண்டியதாயிருக்கிறது. இந்தக் காலஞானம் சோதிடத்தாலுண்டாகிறது. அதையால் வேதாங்கமாயிருக்கிறது.

---

41. கல்பசூத்திரங்கள் ஆறுவகை. (1) ஜைமினியாற் செய்யப்பட்டது ஜைமினீயம். (2) ஆச்வலாயனராற் செய்யப்பட்டது ஆச்வலாயனம். (3) ஆபஸ்தம்பராற் செய்யப்பட்டது ஆபஸ்தம்பம். (4) போதாயனராற் செய்யப்பட்டது பௌதாயனம். (5) காத்தியாயனராற் செய்யப்பட்டது காத்தியாயனீயம். (6) வைகானஸராற் செய்யப்பட்டது வைகானஸீயம்.

664. பிங்களம்:—பிங்கள முனியாற் செய்யப்பட்ட எட்டு அத்தியாயங்கள் அடங்கிய சூத்திரத்தில் சந்தஸ் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதிலுற் வேதத்திற் சொல்லிய காயத்திரீ முதலிய சந்தங்களின் ஞான முண்டாகிறது. ஆகையால் பிங்களர் சூத்திறமும் வேதாங்கமாகவேயிருக்கிறது. இவ்விதமாக வேதாங்கங்கள் ஆறும விவரிக்கப்பட்டன. வேதத்துக்குபயோகப்படாத சிலவிஷயங்களுமபிரசங்கத்தில நிரூபிக்கப்பட்டன. அவைகள் பிரதானமாயெடுத்துச் சொல்லப்படவில்லை. வேதத்தின் பிரயோஜனமே இவ்வாறங்கங்களின்பிரயோஜனமாம்.

665. புராணங்கள் உபபுராணங்கள்:—புராணங்கள் 18. இவைகள் வியாஸரென்னும் முனியாற் செய்யப்பட்டன. அவையாவன:—(1) பிர்ம்ம (2) பத்ம (3) வைஷ்ணவ (4) சைவ (5) பாகவத (6) நாரதீய (7) மார்க்கண்டேய (8) ஆக்னேய (9) பவிஷ்ய (10) பிர்ம்மவைவர்த்த (11) லைங்க (12) வாராஹ (13) வ்ஷகந்த (14) வாமன (15) கூர்ம (16) மத்ஸ்ய (17) கருட (18) பிர்ம்மாண்டபுராணங்களாம். இப்பதினெண்டுபுராணங்களும் வியாஸரால் செய்யப்பட்டன. காளீபுராணமுதலிய வேறு அனேகபுராணங்களுமுண்டு. இவைகள் உபபுராணங்களாம். சிலர் உபபுராணங்களும் 18எனச் சொல்லுகிறார்கள். அது சரியன்று. உப்புராணங்கள் அநேகமுள. பாகவதங்கள் 2. ஒன்று வைஷ்ணவம், மற்றொன்று பகவதீபாகவதம். ஒவ்வொன்றிலும் பதினெண்ணாயிரங் கிரந்தங்களுள. ஒவ்வொன்றிலும் 12 ஸ்கந்தங்களுள. ஆகையால் இவைகளில் ஒன்று புராணம் மற்றொன்று உபபுராணம். இவ்விரண்டும் வியாஸராலேயே செய்யப்பட்டன. ஆகையால இரண்டும் பிரமாணங்களே. வியாஸர் புராணங்களைச் செய்ததுபோல் சில உபபுராணங்களையும் செய்திருக்கிறார். சில்உபபுராணங்கள் பராசரர் முதலிய வேறுசர்வஞ்ஞமுனிகளாற் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால் உபபுராணங்களும் பிரமாணங்களே. உபநிஷத்தின் கருத்தே புராண உபபுராணங்களின் தாற்பரியமாம். இது இனி (694—703)பிரதிபாதிக்கப்படும்.

666. நியாயவைசேஷிக சூத்திரங்கள்:— கௌதம முனியால் நியாயசூத்திரம்ஐந்து அத்தியாயமாகச செய்யப்பட்டிருக்கிறது. இதில் யுக்திதான் பிரதானம். யுக்திசிந்தனைகளால்எவனுக்குத் தீவிரபுத்தியுண்டாயிருக்கிறதோ அவனே மனனம்பண்ணுவதிற் சமர்த்தனாகிறான். ஆகையால் யுக்திப்பிரதானமான நியாயசூத்திரத்துக்கும் மனனம்மூலமா

கவேதாந்தஜன்யஜ்ஞானமே பலனாகிறது. கணாதனென்னும்முனி பத்து அத்தியாயங்களில் வைசேஷிகசூத்திரங்களைச் செய்திருக்கிறார் இவை மந்ரு தியாயத்தில அந்தர்ப்பூதமாயிருக்கின்றன.

667. கர்மமீமாம்ஸை:— மீமாம்ஸை இருவகையாம். ஒன்று கர்மமீமாம்ஸை[42], மற்றொன்று பிர்மமீமாம்ஸை[43]. கர்மமீமாம்ஸையைப்பூர்வமீமாம்ஸையென்றும பிர்ம்மமீமாம்ஸையை உத்தரமீமாம்ஸையென்றும சொல்வார்கள். கர்மமீமாம்ஸை 12 அத்தியாயத்தில் ஜைமினி என்னும் முனிவரால் செய்யப்பட்டிருக்கின்றது. கர்மத்தையனுஷ்டிக்கும்விதம் இதில் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் விதியுடன் கர்மத்தை நிர்த்திப்பது கர்மமீமாம்ஸையின் பலன். கர்மத்தைப் பிரயோகத்திலிருந்து அந்தக்கரணசுத்தியும் அதினின்று ஞானமும் ஞானத்தால் மோக்ஷமுமுண்டாகின்றன. இவ்விதமாகத் கர்மமீமாம்ஸைகரு மோக்ஷமே பலனாகிறது. கர்மமீமாம்ஸையின் 12 அத்தியாயங்களில் அர்த்தபேதமிருக்கிறது. அது கடினமாயிருப்பதால் இவ்விடத்தில் எழுதப்படவில்லை. ஜைமினியால் ஓர்ந்த அத்தியாயங்களில் சங்கர்ஷணகாண்டத்தில் செய்யப்பட்டிருக்கிறது. இதில் உபாஸனை சொல்லப்பட்டிருக்கிறது. சங்கர்ஷணகாண்டமும் கர்மமீமாம்ஸையில் அந்தர்ப்பூதமாயிருக்கிறது.

668. பிர்ம்மமீமாம்ஸை:—இது நான்கு அத்தியாயங்களாகச் செய்யப்பட்டிருக்கிறது. இதின் கர்த்தா வியாஸர். ஒவ்வொரு அத்தியாயத்திலும் நாலு பாதங்களுள. முதல் அத்தியாயத்தின் கருத்தென்னவெனில் உபநிஷத்துகளெல்லாம் பிர்ம்மத்தைத்தவிர வேறொன்றையும் பிரதிபாதிக்கிறதில்லை. உபநிஷத்துவாக்கியங்களில் மந்தபுத்திபுருஷர்களுக்கு விரோதங்கள் தோன்றுகின்றன. இவைகளுக்குப் பரிகாரம் இரண்டாவது அத்தியாயத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. மூன்றாவது அத்தியாயத்தில் ஞானம் உபாஸனை இவைகளின் சாதனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நான்காவது அத்தியாயத்தில் ஞானஉபாஸனைகளின் பலன். சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பிர்ம்மமீமாம்ஸாரூப சாரீரகசாஸ்திரமே சர்வசாஸ்திரங்களிலும் பிரதானமானது. முமுக்ஷுக்கள் இதையே அங்கீகரிக்கத்தக்கது. இதற்கு வியாக்கியானரூபக் கிரந்தங்கள் அ

---

42. எதில் தர்மம் விசாரிக்கப்படுகிறதோ அது தர்மமீமாம்ஸை.

43. எதில் பிர்ம்மம் விசாரிக்கப்படுகிறதோ அது பிர்ம்மமீமாம்ஸை.

சனகங்களா[44]ல்கின்றன. அயிஷ்டீஸ்ரீசங்கராசாரியராற் செய்யப்பட்ட பாஷியரூப வியாக்கியானமே முமுக்ஷுக்களாற் கேட்கத்தக்கது. அதினாலேயே மூலமாக மோக்ஷலபன் சித்தமாய்க்கிடைக்கும்

669. ஸ்மிருதிகள்:—மநு, யாஜ்ஞவல்கிய, விஷ்ணு, யம, அங்கிரா, வஸிஷ்ட, தக்ஷ, ஸம்வர்த்த, சாதாதப, பராசர, கௌதம, சங்க, லிகித, ஹாரீத, ஆபஸ்தம்ப, சுக்கிர, பிரஹஸ்பதி, வியாஸ, காத்தியாயன, தேவல, நாரத, முதலிய, ஸர்வஜ்ஞரிஷிகளால் வேதானுசாரமாக ஸ்மிருதிகளென்னும் கிரந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்மிருதியே தர்மசாஸ்திரமாம். இதில் வர்ணாசிரமங்களின் காயிக வாசிக மானஸிக தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கும் அந்தக்கரணசுத்தி மூலமாக ஞானமுண்டாகி மோக்ஷம்சித்திப்பதே பிரயோஜனமாயிருக்கிறது. வியாஸரால் மகாபாரதமும் வால்மீகரால் ராமாயணமும் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளும் தர்மசாஸ்திரத்தில் அந்தர்ப்பூதமாயிருக்கின்றன. தேவதைகளை யாராதிக்கும் பொருட்டு ஏற்பட்டிருக்கிற மந்திரசாஸ்திரமும் தர்மசஸ்திரத்தில் அந்தர்ப்பூதமாயிருக்கிறது. தேவதைகளின் ஆராதனைக்கு அந்தக்கரணசுத்தி பிரயோஜனமாயிருக்கிறது. இப்படியே சாங்கியசாஸ்திரம், யோகசாஸ்திரம், வைஷ்ணவ தந்திரம், சைவ தந்திரம், முதலியவைகளும் தர்மசாஸ்திரத்தில் அந்தர்ப்பூதமாயிருக்கின்றன. ஏனெனில் மானஸீகதர்மம் இவைகளில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

---

44. சாரீரகசூத்திரமென்பது பிர்ம்மசூத்திரமாம். இதில் 555 சூத்திரங்களுண்டு. இதைப்பற்றின வியாக்கியானங்கள் அடியிற்கண்ட பதகத்தால் விளங்கும்.

ந.	கர்த்தா.	இன்னதின் பேரில் வியாக்கியானம்.	கிரந்தத்தின் பெயர்.	கிரந்தசங்கியை.
1	ஸ்ரீசங்கரர்	பிர்ம்மசூத்திரம்	சாரீரகபாஷியம்	10,000
2	பத்மபாதாசாரியர்	சாரீரகபாஷியம்	விஜயாபிதண்டினீ	அக்கினிபாதையில்அழிந்தது.
3	ஸ்ரீசங்கரர்	ஷை	பஞ்சபாதிகா	5500

4	ஸ்ரீபிரகாசாத்ம சரணர்	பஞ்சபாதிகா	விவரணம்	14000
5	சந்தியாஸி	விவரணம்	சந்தீபனம்	25000
6	வாசஸ்பதிமிச்ரர்	சாரீரகபாஷியம்	பாமதீபந்தம்	12000
7	கங்காதரஸ்வாமி	பாமதிநிபந்தம்	கல்பதரு	14000
8	நாராயணஸ்தூரி	கல்பதரு	பரிமளம்	9000
9	சந்தியாஸி	சாரீரகபாஷ்யம்	பிரம்மசித்தியா பரணம்	26000
10	ஆனந்தகிரி	ஷை	ஆனந்தகிரீயம	1800
11	ராமாசிரமர்	ஷை	பத்னப்பிரபா	11000
12	சர்வஞ்ஞாத்மர்	ஷை	சம்க்ஷேபசாரீரகம்	2500
13	மதுசூதனஸ்வாமி	சம்க்ஷேபசாரீரகம்	ஷை	15000
14	ராமாசிரமர்	ஷை	ஷை	12000
15	மதுசூதனஸ்வாமி	சூத்திரபாஷியம்	கல்பலதா	4500
16	ராமாசிரமர்	பிரம்மசூத்திரம்	ராமாசிரமீ	6000
17	நாராயணபட்டர்	ஷை	சூத்திரவிர்த்தி	4000
18	அப்பையதீக்ஷிதர்	ஷை	ஷை	2000
19	சங்காரானந்தர	ஷை	ஷை	1500 ம் 192 அதிகரணசூத்திரமும்
20	வித்தியாரண்யர்	அதிகரணசூத்திரம்	அதிகரணரத்னமாலா	400
			ஷை டீகை	4000
21	ரகுநாதசாஸ்திரி	பிரம்மசூத்திரம்	சங்கரபாதபூஷணம்	7000

✍ வியாக்கியானங்களின் மொத்தம் 203400.

சங்கராசாரியருடைய பாஷியமன்றியில் ராமானுஜபாஷியம் மத்வபாஷியம் பாஸ்கராசாரியபாஷியம் விஷ்ணுஸ்வாமீ பாஷியம் விஞ்ஞானேந்திர பிக்ஷு பாஷியம் நீலகண்ட பாஷியம் முதலிய வைதிகளுமுண்டு. நந்நாக்கிரந்தங்களில் உபாஸனை விதிக்கப்பட்டிருக்கிறது.

670. **சாங்கியசாஸ்திரம்:—** கபிலர் சாங்கியசாஸ்திரத்தை ஆறு அத்தியாயத்தில் எழுதியிருக்கிறார். இதின் முதல் அத்தியாயத்தில் விஷயம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது அத்தியாயத்தில் மஹத்தத்துவம் அகங்காரம் முதலியவைகள் பிரதானத்தின் காரியங்களாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. மூன்றுவது அத்தியாயத்தில் விஷயத்தினின்றும் வைராக்கியமுண்டாவது சொல்லப்பட்டிருக்கிறது. நான்காவது அத்தியாயத்தில் விரக்தர்களுடைய சரித்திரஞ்சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்தாவது அத்தியாயத்தில் ஆக்ஷேபங்கள் கண்டிக்கப்பட்டிருக்கின்றன. ஆறுவது அத்தியாயத்தில் முதலிரண்டு அத்தியாயங்களின் சுருக்கஞ் சொல்லப்பட்டிருக்கிறது. பிரகிருதி புருஷர்களின் விவேகத்தால் புருஷன் அஸங்கன் என்னும் ஞானம் சாங்கியசாஸ்திரத்தின் பிரயோஜனமாம் இந்தச் சாஸ்திரமும் த்வம்பதத்தின் லக்ஷியார்த்தசோதனை மூலமாக மகாவாக்கியஜன்ய ஞானத்திலுபயோகப்படுவதால் மோக்ஷமே பலனாயிருக்கிறது.

671. **யோகசாஸ்திரம்** பதஞ்சலிமுனியால் நாலு அத்தியாயங்களாக எழுதப்பட்டிருக்கிறது. இவர் சேஷாவதாரம். ஒருநிஷி சந்தியோபாஸனை செய்துகொண்டிருக்கும்போது அவருடைய அஞ்சலியில் தோன்றிக் கீழேவிழுந்தபடியால் பதஞ்சலியெனப்பெயரிடலாயிற்று. அவர் சரீரத்தின் ரோகரூப மலத்தை நிவர்த்திக்கும் பொருட்டுச் சித்த ஸாகிரந்தத்தைச் செய்திருக்கிறார். அசுத்தபதங்களின் உச்சாரணரூபமான வாக்கின் மலத்தைப் போக்கப் பாணினீயின் வியாகரணத்துக்குப் பாஷியஞ் செய்திருக்கிறார். விக்ஷேபரூப அந்தக்கரணமலத்தைப் போக்க யோகசூத்திரங்களைச் செய்திருக்கிறார். இதின் முதல்பாகத்தில் சித்தவிர்த்தியின் நிரோதரூப சமாதியும் அதின் சாதனமான அப்பியாஸம் வைராக்கிய முதலியவைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. இரண்டாவது அத்தியாயத்தில் விக்ஷேபசித்தமுள்ளவர்களுக்கு இயம, நியம' ஆஸன, பிராணயாம, பிரத்தியாகார, 'தாரணை, தியானம், ஸவிகல்பசமாதியாகிய எட்டுசாதனங்களாகிற சமாதியின் அங்கங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மூன்றுவது பாகத்தில் யோகியின் விபூதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. நான்காவது பாகத்தில் யோகத்தின் பலனாகிற மோக்ஷஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக யோகசாஸ்திரமும் ஞானசாதனமான நிதித்தியாஸனைமூலமாக மோக்ஷத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. சாரீரக சூத்திரத்தில் செய்யப்பட்டிருக்கிற சாங்கியயோககண்டனமானது உபநிஷத்துக்கு விருத்தமான சாங்கியசூத்திரங்களின் வியாக்கியானத்தை யுத்தேசித்தே செய்யப்பட்டிருக்கிறதேதவிர மூலசூத்திரத்தை யுத்தேசித்துக் கண்டனஞ்செய்யப்படவில்லை. அப்படியே நியாய வைசேஷிக சூத்திரங்களின் கண்டனையும் விருத்தவியாக்கியானத்தை யுத்தேசித்தே யேற்பட்டிருக்கிறது.

672. பஞ்சராத்திரம்:—நாரதால் பஞ்சராத்திரமென்னுக்தந்திர மெழுதப்பட்டிருக்கிறது. அதில் வாசுதேவனிடத்தில் அந்தக் கரணம் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. இதற்கும் அந்தக்கரணம் ஸ்திரப்பட்டு ஞானமூலமாக மோக்ஷமுண்டாவதே பலனுயிருக்கிறது. வைஷ்ணவத்திரந்தங்களெல்லாம் பஞ்சராத்திரத்தில் அந்தர்ப்பூதமாயிருக்கின்றன. இந்தப் பஞ்சராத்திரம் தர்மசாஸ்திரத்தில் அந்தர்ப்பூதமாம்.

673. பாசுபததந்திரம்:—பாசுபததந்திரத்தில் பசுபதியினுடைய ஆராதனை சொல்லப்பட்டிருக்கிறது. இதின் கர்த்தா **பசுபதி**. இதற்கும் அந்தக்கரணத்தின் நிச்சலனதூலமாக மோக்ஷசாதனமான ஞானம் பலனுயிருக்கிறது.

674. **சைவத்திரந்தங்கள்**:—சைவத்திரந்தங்களெல்லாம் பசுபதி தந்திரத்தில் அந்தர்ப்பூதமாயிருக்கின்றன. **கணேச, சூரிய, தேவீ** இவர்களிடுபாஸனையைப் போதிக்கும் திரந்தங்களுஞ் சித்தனகாக்கிரனைதூலமாக ஞானத்தைத தருகின்றன. இவைகளெல்லாம் தர்மசாஸ்திரத்தில் அந்தர்ப்பூதமாயிருக்கின்றன.

675. தேவீயுபாஸனை:— தேவீயுபாஸனையைப் போதிக்கும திரந்தங்களில் இரண்டுசம்பிரதாயங்களுண்டு. இவைகளி லொன்று **தகூஷிண** சம்பிரதாயம். மற்றொன்று **உத்தர** சம்பிரதாயம். உத்தரசம்பிரதாயத்துக்கு **வாமமார்க்க** மென்று பெயர். இவைகளில் தகூஷிணசம்பிரதாயமாய்ப் போதிக்கப்பட்டவுபாஸனை தர்மசாஸ்திரத்துக்கு அந்தர்பூதமாயிருக்கின்றது. வாமமார்க்க வுபதேசம் தர்மசாஸ்திரத்துக்கு விரோதமாயிருக்கின்றது. ஆகையால் அது அப்பிரமாணமாம். வாமதந்திரம் பரமசிவனுற் செய்யப்பட்டிருந்தாலும் சகலசாஸ்திரங்களுக்கும் வேதத்துக்கும் விரோதமாயிருக்கிறது. ஆகையால் அது பிரமாணமன்று. விஷ்ணுவாற் பஞ்சராத்திரத்திற் செய்யப்பட்ட நாஸ்திகக்திரந்தம் வேதத்துக்கு விருத்தமாயிருப்பதால் அப்பிரமாணமாயிருப்பதுபோல் சிவனுற் செய்யப்பட்டவாமதந்திரமும் வேதத்துக்கு அத்தியந்தவிருத்தமாயிருக்கிறது. மத்தியம் முதலிய அசுத்தமான பதார்த்தங்களைக் கிரகிக்கலாமென்று இதிற் சொல்லியிருக்கிறது. உலகத்தை வஞ்சிக்கும்பொருட்டு உத்தமபதார்த்தங்களின் பெயரை மனிதபதார்த்தங்களுக்குக் கொடுத்திருக்கிறுகள். மத்தியத்துக்குப் பெயர் தீர்த்தம். மாமிசத்துக்குப் பெயர் சுத்தம். மத்தியபானபாத்திரத்துக்குப் பெயர் பத்மம். வெங்காயத்துக்குப் பெயர் வியாஸர். வெள்ளைப்பூண்டுக்குச் சுகதேவரென்று பெயர். மத்தி

யம் செய்கிறவனுக்குப்பெயர் தீக்ஷிதர். வைசியாதி சண்டாளஸ்ரீகளைப் பி ரயாணைவாசிகாசிவாசியென்றும்பெயரிட்டிருக்கிறார்கள். பைரவிசக்கிரம் மத்தியில் இருக்கிற சாண்டாளாதிகளை பிராமணர் என்கிறார்கள். அத்திய ந்தம் வியபசாரஸ்திரீக்கு யோகினீ யென்றும் வியபசாரிக்கு யோகி யென் றும் பெயர். இப்படிப்பலவிதமாய் வாமமார்க்கத்தின் வியவகாரம் நிஷி த்தமாயிருக்கிறது. பூஜாகாலத்தில் பலதோஷங்களுடன் கூடிய ஸ்திரீயை உத்தமசக்தியென்று சொல்லுகிறார்கள். பரஜாதியாயும் பகிஷ்டையாயும் இருக்கிற ஸ்திரீயைத்தேவியாகப்பாவித்துப் பூஜிக்கிறார்கள். அவளாற் குடிக்கப்பட்டு மிச்சமான மத்தியத்தைக் குடிக்கிறார்கள். அதிகமா ய்க் குடித்து அவள் வாந்திசெய்தால் அதைப்பூமியில் விடாமல் சிர த் தையுடன் ஸ்வீகாரியர்சகிதமாய்க் குடிக்கிறார்கள். இவ்வாந்தியைப் பை ரவீ என்கிறார்கள். நாக்கை யோனியில் வைத்துக்கொண்டு மந்திரம் ஜபிக்கிறார்கள். மத்தியம்மாமிசம் மத்ஸியம் முதலிரை மந்திரம் இவ் வைந்து மகாரங்களையும் போகமோக்ஷத்தின் பொருட்டுச் சேவிக்கி றார்கள். முதலாவது இரண்டாவது மூன்றுவது மகாரங்களை யப்பிரசித் தப்பெயர்களால் வியவகரிக்கிறார்கள். இவைமுதலிய வாமதந்திரத்தின் சகலவியவுகாரங்களும் இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் ஒருவனைப் பிருஷ்டனுக்கி விடுகின்றன. இவ்விதமாகக் காதுகுத்திக் கொண்டிருக் கிற யோகிகள், அவதூதகோசாயிகள், அனேக சன்னியாசிகள், பிரா மணர்கள் முதலியோர்கள் வாமமார்க்கத்தை யனுஷ்டித்தாலும் உலகத்தா லும் வேதத்தாலும் நிந்திக்கப்பட்டதாக அறிந்து, இம்மார்க்கத்தை இரக சியமாய் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வாமமார்க்கத்தைக் கேட்ட மிலேச்சனுக்கும் மயிர்கூச்சலுண்டாகிறது. இப்படி நிந்திக்கப்பட்டதா யிருக்கிறது வாமமார்க்கம். சாப்பிடக்கூடாததெல்லாம் இதிற் சொல் லப்பட்டிருக்கிறது. நிறம்பவும் நிந்திக்கத்தக்க விஷயங்கள் எழுதத்தா ைமயால் அவைகளைப்பற்றி இங்கே விவரமாய்ச்சொல்லவில்லை. வாமத ந்திரம் சர்வவிதத்திலும் தள்ளத்தக்கது.

676. நாஸ்திகமதம்:—இதுவுந்தள்ளத்தக்கது. இதில்(1) மாத்தியமிக[45](2)யோகாசார[46](3)சௌத்திராந்திக[47](4)வைபாஷிக[48]

---

45. சூனியவாதி. 317-வது பிரிவைப்பார்க்க.

46. க்ஷணிகவிஞ்ஞானவாதி. 315-வது பிரிவைப்பார்க்க.

47. பாஹ்யபதார்த்தத்தை அனுமானத்துக்கு விஷயமாகச்சொல்லுகி றவன்.

48. பாஹ்யபதார்த்தத்தை பிரத்தியக்ஷப்பிரமாணத்துக்கு விஷயமா கச்சொல்லுகிறவன்.

(5)சார்வாக[49](6)திகம்பர[50] வென ஆறுபேதங்களுள. இவ்வறும் வேதத்தைப் பிரமாணமாயொப்புக்கொள்ளுகிறதில்லை. இவ்வறுவருடைய சித்தாந்தமும் ஒன்றுக்கொன்று விக்கியாஸப்படுகின்றது. எப்படியெனில் மாக்கியமிகன் சூன்யவாதி. யோகாசாரனுடைய மதத்தில் விஞ்ஞானத்துக்கு வேறுன பதார்த்தம் யாதொன்றுமில்லை. விஞ்ஞானமே தத்துவம். இந்த விஞ்ஞானம் க்ஷணிகமாயிருக்கிறது. ஸௌத்திராந்திகமதத்தில் விஞ்ஞானத்தினுகாரம் பாஹ்யபதார்த்தமாகிற விஷயமன்றியி லுண்டாகிறதில்லை. ஆனதால் விஞ்ஞானத்தால் பாஹ்யபதார்த்தங்கள் அனுமானிக்கப்படுகின்றன. இவ்விதமாக ஸௌத்திராந்திக மதத்தில் பாஹ்யபதார்த்தம் அனுமானப்பிரமாணத்துக்கு விஷயமாயிருக்கிறதேதவிரப் பிரத்தியக்ஷமாயில்லை. மேலும் ஸ்திரமாயுமில்லை. ஆனல் எல்லாபதார்த்தங்களும் க்ஷணிகமாயிருக்கின்றன. வைபாஷிகமதத்தில் பாஹ்யபதார்த்தம் க்ஷணிகமாயிருந்தாலும பிரத்தியக்ஷப் பிரமாணத்துக்கு விஷயமாயிருக்கிறது. இதுவே ஸௌத்திராந்திகத்துக்கும் வைபாஷிகதுக்கு முள்ளபேதம். இந்நான்கும் அசுகத[51] முடையது. சார்வாகமதத்தில் பதார்த்தம் க்ஷணிகமன்று. ஆனல் இம்மதத்தில் தேகமே ஆத்மா. திகம்பர்மதத்தில் தேகமாத்மாவன்று. ஆத்மா தேகத்தைக்காட்டிலும் வேறுனது. ஆனல் தேகத்தின் பரிமாணம் எவ்வளவுண்டோ அவ்வளவு ஆத்மாவின் பரிமாணமாம். இவ்விதமாக இம்மதங்களில் பேதமிருக்கிறது. இன்னும் அநேக பேதங்களுண்டு. எல்லாம் வேதவிருத்தமாயிருக்கின்றன. ஆகையால் இம்மதங்களை விசேஷமாய்ச் சொல்லவுமில்லை, கண்டிக்கவுமில்லை. இவ்விதமாகவாமமார்க்க நாஸ்திகமதக்கிரந்தங்கள் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருந்தாலும் வேதத்துக்குப் பாஹ்யமாயிருக்கின்றன. ஆகையால் வேதானுசாரியாயிருக்கிற விக்ஞதயின் பிரஸ்தானங்கள் பதினெட்டேயாம்.

677. சாகித்தியாதிகள்:—மம்மடர்[52] முதலியவர்களாற் செய்யப்பட்ட சாகித்தியக்கிரந்தமும் காமசாஸ்திரத்தில்[53] அந்தர்ப்பூதமாயிரு

---

49. தேகாத்மவாதி. 311-வது பிரிவைப்பார்க்க.

50. மத்தியபரிமாணவாதி. 462-வது பிரிவைப்பார்க்க.

51. பௌத்தர் (211).

52. அலங்காரசிருந்தம்.

53. 654-வது பிரிவைப்பார்க்க.

க்கிறது. அப்படியே சகல காவியங்களும் சிலகாமசாஸ்திரத்திலும் சில[54] சாமசாஸ்திரத்திலும் அந்தர்ப்பூதமாயிருக்கின்றன.

678. தீர்மானம்:—இவ்விதமாக அஷ்டாதசப்பிரஸ்தானங்களும் பிரம்மஞானமூலமாக மோக்ஷத்துக்கு ஹேதுக்களாயிருக்கின்றன. சில சாக்ஷாத்ஞானத்துக்கு[55] ஹேதுக்களாயும் சிலபரம்பரையாக ஞானத்துக்கு ஹேதுக்களாயும் இருக்கின்றன. இதுவே சகலசாஸ்திரங்களின் அபிப்பிராயமென்று தர்க்கதிருஷ்டி நிச்சயித்தான். உத்தரமீமாம்சை தவிர மற்ற சாஸ்திரங்களெல்லாம் ஜிஞ்ஞாசுவால் தள்ளத்தக்கவையென்று சாரீரகத்திற் சூத்திரக்காரராலும் பாஷியக்காரராலும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் வேறுசாஸ்திரங்களும் மோக்ஷத்துக்குபயோகமென்றுசொன்னது சரியன்று. ஆயினும் சாரதரைக் கரகிக்கும் திருஷ்டியால் தர்க்கதிஷ்டியானவன்மேற்சொல்லிய சாரமான நிச்சயஞ்செய்தான்.

679. தர்க்கதிருஷ்டி வித்துவானுடன்சேர்தல்;—குருமுகமாகக் கேட்கப்பட்ட அர்த்தத்தில் புத்திஸ்திரப்படுவதற்காகச் சகலசாஸ்திரங்களின் அபிப்பிராயத்தையும் விசாரித்தும் தர்க்கதிருஷ்டிக்கு மறுபடியுஞ் சந்தேக முண்டாயிற்று. அதாவது சாஸ்திரத்துக்குத் தான் நிச்சயித்த அபிப்பிராயந்தானே வேறே வெனச்சங்கித்தான். ஏனெனில் தர்க்கதிருஷ்டி கனிஷ்டாதிகாரி யென்று சொல்லப்பட்டதினால் அடிக்கடிக் குதர்க்கத்தாற் சந்தேகமுண்டாகிறது. இதை நிவர்த்திக்கும்பொருட்டுத் தன்னிச்சயத்தை வேறு வித்வான்களுடைய நிச்சயத்துடன் ஒத்துப்பார்க்கும்படிப் புறப்பட்டுப் போனான். தர்க்கதிருஷ்டியின் வசனத்தைக் கேட்டு நீ சொன்னதெல்லாம் முக்கியசித்தாந்தமென்று வித்வான்கள் சொன்னார்கள். இவ்விதமாகதர்க்கதிருஷ்டி சகலசமுசயங்களுமற்று அபரோக்ஷ பிரம்மத்தை யறிந்து ஜீவந்முக்த பந்தமோக்ஷங்களெல்லாம் மித்

---

54. பகவத் சரித்திரத்தை பிரதிபாதிக்கும் காவியகிரந்தங்கள்.

55. பசித்தவர்களுடைய பசியைப்போக்கித் திருப்தியாக்குவதற்குப் பக்குவமாகிய அன்னமே சாக்ஷாத்சாதனமாயும் உழவு முதலிய பயிர்களே பரம்பரா சாதனமாயுமிருப்பதுபோல அக்ஞானத்தைப்போக்கி ஆத்மானுபவதிருப்தியை கொடுப்பதற்கு சில கிரந்தங்கள் நிஷ்காமகர்மத்தை போதிக்கிறமூலமாக பரம்பரா சாதனமாயும், சில ஞானத்தை போதிக்கிறமூலமாக சாக்ஷாத் சாதனமாயுமிருக்கின்றன.

தையெனக் தெரிந்துகொண்டான் பிராரப்தம் கொஞ்சஞ் சேஷமிரு ந்தபடியால் தாய்தந்தையரையும் தன்வீட்டையும் சிகரத்தில் பார்க் கவேண்டுமென்கிற இச்சையுண்டாயிற்று.

680. ஞானியின் இச்சை, இச்சையின்மை:— ஞானிக்கு ச்சகலவியவகாரங்களும் அஞ்ஞானிக்குண்டாவதுபோல் பிராரப்தத் தாலுண்டாகின்றனவென முன் (639) சொல்லப்பட்டது. ஆகையால் இச்சைசம்பவிக்கிறது. மேலும் ஞானிக்கு இச்சையுண்டாகிறதில்லை யென்று சில சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஞானியின் அ ந்தக்காரணம் பதார்த்தத்தினை இச்சாரூபப்பரிணமத்தையடைகிறதில்லை யென்பது இதற்குபிப்பிராயமன்று. ஏனெனில் அந்தக்காரணத்துக்கு இச்சாதிகள் சகஜதர்மங்களாம். அந்தக்காரணம் பூதங்களின் (300)·சத் துவகுணகாரியமென்று சொல்லப்பட்டிருந்தாலும் ரஜோகுணதமோ குணசகித சத்துவகுணத்தின் காரியமாயிருக்கிறதே தவிரக்கேவலம் சத் துவகுணத்தின் காரியமாகவில்லை. அப்படியிருந்தால் அந்தக்காரணதது க்குச் சஞ்சலிக்கும் சுபாவமிருக்கக்கூடாது. அப்படியே கர்மக்குரோ தாதி ராஜஸவிர்த்தியும் நித்திரைமுதலிய தாமஸவிர்த்தியும் எந்த அந்தக் காரணத்துக்கு முண்டாகக்கூடாது. அப்படியுண்டாவதால் அந்தக்கா ரணம் கேவலம் சத்துவகுணத்தின் காரியமன்று. ஆனல் அப்பிரதானமா ன ரஜோகுணதமோகுணசகிதப்பிரதானமான சத்துவகுணத்தையுடைய பூதங்களினின்றும் அந்தக்காரணமுண்டாயிருக்கிறது. ஆகையால் அந்த க்காரணத்தில் முக்குணங்களுமிருக்கின்றன. இம்முக்குணங்களும் அந்த க்காரணமிருக்குமிடமெல்லாம் சமமாகவில்லை. ஆனலேற்றக்குறைச்ச லாயிருக்கின்றன. ஆகையால் குணங்களின் ஏற்றக்குறைவால் ஒவ்வொரு வனுடைய சுபாவமும் ஒவ்வொருவிதமாயிருக்கிறது. இவ்விதமாக அந்தக்காரணம் முக்குணங்களின் காரியமாயிருக்கிறது.

எது பரியந்தம் அந்தக்காரணமிருக்கிறதோ அது வரையில் ரஜோ குணத்தின் பரிணமரூபமான இச்சையில்லாமலிருக்கமாட்டாது. ஆகை யால் ஞானிக்கு இச்சையுண்டாகிறதில்லை யென்பதற்கு அபிப்பிராயமெ ன்னவெனில் ஞானி அஞ்ஞானி இருவருக்கும் இச்சை சமானமாகவேயி ருக்கிறது. ஆனல் அஞ்ஞானி இச்சாதிகளை ஆத்மதர்மமாக அறிகிறான். ஞானிக்கு இச்சை யுண்டாகுங்காலத்திலும் இச்சையை ஆத்மதர்மமாக அவன் அறிகிறதில்லை; ஆனல் காமம், சங்கல்பம், சக்திதகம், ராகம், து

வேஷம், சிரத்தை, பயம், லஜ்ஜை, இச்சை முதலியவைகள் அந்தக்கரணத்தின் பரிணமங்களாயிருப்பதால் அந்தக்கரணதர்மங்களென்று அறிஞர்ன். இவ்விதமாக இச்சைகளிருந்தும் ஆத்மாவின் தர்மமாக இச்சாதிகள் ஞானிக்குப்பிரதிதியாகிறதில்லை. ஆகையால் ஞானிக்கு இச்சையில்லையென்று சொல்லப்பட்டது. அப்படியே மனதினுலும வாக்கினுலும் சரீரத்தினுலும் செய்யப்படும் வியவகாரங்களெல்லாம் ஞானிக்கு ஆத்மாவினிடத்திற் பிரதிதியாகிறதில்லை. ஆனல் கிரியைகளெல்லாம் மனேவாக்குச்சரீரங்களுக்குரியன; ஆத்மா அசங்கனென்பது ஞானியின் நிச்சயம். ஆகையால் ஞானி சகலவியவகாரங்களின் கர்த்தாவாயிருந்தும் அகர்த்தாவே. இக்காரணத்தால் சுருதியிற் சொல்லியிருக்கிறதாவது, ஞானத்துக்குப்பிறகு இச்சரீரத்திற் செய்யப்படும் சுபாசுபகர்மங்களுக்கு இலைகளின் பலனுகிற புண்ணியபாவங்கள் சம்பந்தப்படுகிறதில்லை என்பதாம். பிராரப்தபலத்தால் அஞ்ஞானிக்குண்டாவதுபோல் ஞானிக்கும் சகலவியவகாரங்களும் அவைகளின் இச்சையும் சம்பவிக்கின்றன.

681. **சுபசந்ததிராஜாவின்கதை:— (681—89)** சுபசந்ததிராஜாவின் பிள்ளைகள் வீட்டை விட்டுப்புறப்பட்டுப்போனதும் அவர்களுடைய பின் சரித்திரமுஞ்சொல்லப்பட்டன. இப்போது அவர்கள் தகப்பன் சரித்திரத்தைச்சொல்லுகிறேன். பிள்ளைகள் வீட்டைவிட்டுப் போனபிறகு ராஜாவுக்குத்தீவிர வைராக்கியமில்லாததினுல் வியோகதுக்கமுண்டாயிற்று. மந்தவைராக்கிய மிருந்தபடியால் விஷயபோகத்திற் சுகமுண்டாகவில்லை. பிள்ளைகள் டோய்விட்டபடியால் ராஜ்யத்தை விட்டுப்போகவும் முடியவில்லை. ஆகையாலும் துக்கமுண்டாயிற்று. தீவிரவைராக்கிய மிருந்தால ராஜ்யத்தையநாதையாய் விட்டுப்போவான். வைராக்கியம்தீவிரமின்றி மந்தமாயிருந்தபடியால் ராஜ்யத்தை விட மனம்வரவில்லை. போகத்தில் ஆசைக்தியுமிருக்கவில்லை. ஆகையால் இருவிதத்திலுந்துக்கமே யுண்டாயிற்று. மந்தவைராக்கியத்தின் பலனுகிற உபாஸ்யத்தை யறிந்துகொள்ள்வேண்டுமென்கிற இச்சையுண்டாயிற்று.

682. **சுபசந்ததியின்கேள்வி:—** மந்தவைராக்கியம் சுபசந்ததிக்குண்டானதே அவனுக்குப்பெரும்பாக்கியம். இதனல் அவனுக்கு எத்தன்மைதெய்வம் உபாஸிக்கத்தக்கதென்று அறிந்துகொள்ள இச்சையுண்டாயிற்று. பிறகு சிரேஷ்டவித்வான்களை வரவழைத்து அவர்களை த்தகுந்த ஆஸனங்களில் உட்காரவைத்து அவர்களைப்பார்த்து, புருஷார்

த்தத்தையுடைவதற்காக எல்லாஜனங்களாலும் ஆராதிச்சத்தக்கதாயும் தாக்கம் விழிப்பற்றதாயும் பக்தர்களை யெப்போதும் பரிபாலனம் பண்ணுகிறதாயுமிருக்கிற தெய்வமெது என்றுகேட்டான்.

683. விஷ்ணு உபாஸகனுடைய உத்தரம்:— அரசன் வார்த்தையைக்கேட்டுப் பண்டிதரில் ஒருவன் அரசனை நோக்கிச்சொல்லத்தொடங்கினன். கேளும் அரசனே, சகலவேதாந்த சிரோமணியான வாசுதேவனைச்சிவன், பிரமன், நித்தியம் சேவிக்கிறார்கள். வாசுதேவன் பரோபகாரி, பக்தருக்கு ஹிதஞ்செய்பவர். சங்கு, சக்கர, கதா, பத்ம தாரீ, மங்களஸ்வரூபி, தயாநிதி. இப்பேர்ப்பட்ட மஹாவிஷ்ணுவானவர் நிஜபக்தர்களை யறிந்து அவர்களுக்கு மோக்ஷமத்தை யுண்டுபண்ணுகிறார். சக்தி, கணேசர், சூரியன், சிவன் இவர்களெல்லாம் அவராஞ் ஞைப்படி நடக்கிறார்கள் என பாரதம், பத்மபுராணம், நரசிம்மதாபனீ, ராமதாபனீ, கோபாலதாபனீ என்னுமுபநிஷத்துகளும் சொல்லுகின்றன. விஷ்ணு சொரூபத்தினின்றும் ஜகத்துமுழுமையுமுண்டாகிறது. பீடாதிதேவதைகளை அவர் பரிகரிக்கப்பட்டவர். இவரை எல்லாரும் ஆராதிக்கிறார்கள். பல அவதாரங்களை தரித்து தேவர்களுக்குச் சகாயஞ் செய்திருக்கிறார். ஆகையால் விஷ்ணுவே உபாஸிக்கத்தக்கவர். விஷ்ணுவுக்குச்சமானமாய் உபாஸிக்கத்தக்கவேறொரு தெய்வமில்லை. விஷ்ணுவுக்குச் சிவன் உத்தமபக்தனாயிருந்தாலும அவன் உபாஸிக்கத்தக்கச் சொரூபத்தைத் தரிக்கவில்லை. சிவன் சவம்போல் அமங்களஸ்வரூபி. ஆகையால் அவனை நாம் தியானிக்கிறதில்லை. சாம்பல், டமரு, யானைத்தோல், மண்டையோடு, இவைகளைத்தரிக்கப்பட்டவனவன், யாருக்குத்தான் க்ஷேமத்தையுண்டுபண்ணப்போகிறான். அவனுடைய பிள்ளையும் அப்படித்தானென்றறி. கணங்களுக்கெல்லாஞ் சிரேஷ்டனாயிருக்கிற கணபதி மனுஷ்யமிருகரூபங்களைத்தரிக்கிறான். ஹடமாய்த்தேவியைத்தியானிக்கிறவர்கள் அந்த ரூபத்தைத்தரிக்கிறார்கள். தேவி நிந்திக்கத்தக்கவளாயும் அசுசியாயும் கபடஸ்வரூபியாயும் தோஷமூர்த்தியாயும் பராதீனமாயுமிருக்கிறாள். இப்பேர்ப்பட்ட மூர்த்தியை விரும்புகிறவன் மிருகவத்தாய் இவள்ளச்சேவிக்கட்டும். இச் சூரியனே இராப்பகலாய் ஓய்வில்லாமல் அலைகிறான். இவனை யுபாஸிக்கப்பட்டவனும் இவனைப்போல்

---

56. பிணம்.

தான் அலைவான். ஆகையால் மற்ற எல்லாதேவதைகளையு மொழித்து எப்போதும் விழிப்புள்ளவராயிருக்கிற மகாவிஷ்ணுவே சேவிக்கத்தக்கவ ரென்று அறியத்தக்கது. நாரதபஞ்சராத்திரத்தில் விஷ்ணு பூஜாத்தி யானவிதிகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. விஷ்ணு உபாஸனைதவிர வேறு நான்குபாஸனைகள் உலகத்தில் விளங்குகின்றன. இவைகளில் ஒவ்வொன்றையும் நிஷேதித்ததினால் ஸ்மார்த்த உபாஸனையும் நிஷேதிக்க ப்பட்டதாக ஆய்விட்டது. ஏனெனில் ஐந்துதேவதைகளையும் சமபுத்தி யுடன் உபாஸிப்பதற்கு ஸ்மார்த்த உபாஸனையென்று பெயர். சிவன் மு தலிய நாலு தேவதைகளும் விஷ்ணுவுக்குச்சமானமல்லவென்று நிஷே திக்கப்பட்டிருக்கிறபடியால் ஸ்மார்த்தவுபாஸனையும் நிஷேதிக்கப்பட்ட தாயிற்று.

684. **சிவஉபாஸகன்:**— சைவஉபாஸகன் மேற்சொன்ன தைக்கேட்டுக்கோபங்கொண்டு கண் சிவந்து சொல்லுகிறதாவது:— அ ரசனே, என் வார்த்தையைகேளும். நான் சொல்வதற்கு அனேகப்பிர மாணங்களுண்டு. கேட்கப்பட்டவையெல்லாம் கொடுத்தருளும் பரமசி வனுக்குச்சமானம் யார். மகாவிஷ்ணுவால் யாசிக்கப்பட்டுத்தன்னுடை ய சகல ஐசுவரியங்களையுங்கொடுத்துத்தான் பஸ்மத்தைத்தரித்தார். இக் காரணத்தினாலேயே தோலையும் மண்டையோட்டையும் தரித்தார். அ வருக்கு நல்லது பொல்லாதது கிடையாது. அவருக்கெல்லாஞ்சமந்தா ன். அவதூதசந்நியாசிகளுக்கு மோக்ஷமார்க்கத்தையுபதேசிக்கிறார். வை ராக்கியத்துக்குச்சமானமான சுகங்கிடையாது. வைராக்கியமுள்ளவர் கள் காசியில் வசித்து மரணமடைந்தால் சிக்கிரத்தில் சாயுஜ்யமோக்ஷத் தையடைகிறார்கள். கஷ்டமானதானகர்ப்பவாசத்திற் மறுபடியுஞ்செல் லுகிறதில்லை. அவர்கள் சிவனுக்குச்சமானமாகிச் சர்வபோகங்களையும் னுபவிக்கிறார்கள். லிங்கசரீரத்தை விட்டுப்பிர்ம்மத்தையடையும்படியா ன அத்வைதபோதத்தைப்பரமசிவன் செய்கிறார். உயர்வு தாழ்வு பார் க்காமல் அவர் முக்தியளிக்கிறார். அவருக்குச்சமானமான தாதா ஒருவ ருமில்லை. பக்தியுள்ளவர்களையும் இல்லாதவர்களையுஞ்சமமாயிரக்ஷிக்கி றார். விஷ்ணுவின் சுபாவத்தை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவ ர் பக்தர்களை மாத்திரமிரக்ஷிக்கிறரென்பது உலகப்பிரசித்தமாயிருக்கிற து. ஹரிசேவகன் அரன்சேவியனென்று வியாஸர் கந்தபுராணத்திற் சொல்லியிருக்கிறார். இராமேச்சுரத்தில் இராமச்சந்திரன் பரமசிவனை ப்பூஜித்திருக்கிறார். பத்மபுராணத்திற் சகலதேவர்களையும்விட ஹரி சி

ரேஷ்[redacted]ன்று சொன்னதற்குத்தாற்பரியம் அப்படியன்று. ஏனெனில் பாரததாற்பரியத்தைப்பாராக்குமளவில் சிவனுக்கும் ஈசுவரத்துவம் பிரதீதியாகிறது. அப்பையதீக்ஷிதரென்னும் வித்துவான் சகலபுராணங்களுக்கும் இதிஹாஸங்களுக்குந்தாற்பரியம் எழுதியிருக்கிறார். பாரதத்தில் அவர் சொல்லியிருக்கிறதாவது:— அகவுத்தாமாவால் நாராயணாஸ்திரம் ஆக்நேயசாஸ்திரமும் பிரயோகப்படுத்தப்பட்டபோது வெகு சேனைகள் மரித்தும் பஞ்சபாண்டவர்களில் ஒருவரும் மரிக்கவில்லை. அப்போது ரதத்தைவிட்டிறங்கியுள்ளதுணையும் ஆயுதங்களையும் நிராகரித்து வணக்கஞ்செய்தார். அப்போது வியாஸர் அவரைநோக்கிச்சொல்லுகிறார்:— ஒப்பிராயமுனி நீர் ஆயுதங்களையும் வெறுத்தையும் நிந்திக்கலாகாது. இந்த அஸ்திரமும் நிருஷ்ணனும் நாராயணரூபங்கள். இவர்கள் சிவனைப்பூஜித்திருக்கிறபடியால் இவரிருவருடைய ருத்துக்குமுன்னின்று, இவர்களிடமில் பிரயோகிக்கப்படும் சஸ்திராஸ்திரங்களின் சாமர்த்தியத்தை நாசஞ்செய்கிறார். இவ்விதமாக பகாபாரதத்தில் மகாதேவருடைய கிருபையால் நாராயணரூபநிருஷ்ணருக்கு விபூதியுண்டானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் விஷ்ணுசரித்திரத்தைப்பிரதிபாதிக்கும் நிரந்தம சிவனுடைய ஆதிக்கியத்தைப்பிரதிபாதிக்கிறது. ஏனெனில் அக்நிரகதத்தில் விஷ்ணு சிவபரூபமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. பாரதத்தைக்கொண்டு விஷ்ணு சிவபக்தன் என்று தெரியவருகிறது. ஆகையால் எந்தச்சிவனைப்பூஜித்ததால் விஷ்ணு சேவிய ரூபரே அந்தச்சியம் பரமசேவியரூபரென்றார். இவ்விதமாக அப்பையதீக்ஷிதரால் சகலவைஷ்ணவக்ரந்தங்களைக்கொண்டும் சிவனே பிரதிபாத்தியனென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஹரியானவர் பக்தர்களுக்குள் உத்தமமானவர். சிவனுக்கே மகாதேவனென்றும பகேசனென்றும் பெயர். இதரதேவர்களுக்குத்தேவரென்றும ஈசரென்றும்பெயர். சிவமென்றால் மங்கலமென்று பொருள். சிவத்துக்கு அன்னியமானதெல்லாம் அசிவம். சிவனுக்கு அன்னியமானதெய்வங்களெல்லாம் அசிவங்கள் அமங்களஸ்வரூபிகள். இந்த அமங்களரூப தெய்வங்களைவிட்டு மற்களஸ்வரூப சிவனை யுபாஸிக்கவேண்டியது. விஷத்தைப்பார்த்து மற்றெல்லாதேவர்களுக்கும் பயமுண்டாயிற்று. அப்போது அவ்விஷத்தைக்கண்டத்திற் கொண்டு பயத்தைப்போக்கினர். இவருடைய குமாரரான கணேசர் சகல விக்கினங்களையும் போக்குகிறார். காரியத்தின் சூனியல்லாம் காரணத்திலிருப்பதால் விக்கினங்களையெல்லாம் நாசம் பண்ணுவ

றவர் சிவனென்றறியவேண்டியது. ஜனனமரணங்களாகிற [redacted]ரூப வி
க்கினங்களும் சிவத்தியானத்தால் நாசமாமென்று அறியத்தக்கது. இவ்
விதமாகச்சதாசிவனே சிரேஷ்டனுகிறபடியால் சேவிக்கத்தக்கவன். பா
சுபதகந்திரத்தில் சிவபூஜாவிதிகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வி
திப்படித் தியானித்தால் சிவனடியை தரிசிக்கக்கூடும். காரதபஞ்சராத்
திரமதம் சூத்திரபாஷியத்திற் கண்டிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே இ
ராமானுஜாதிகளின் நவீனவைஷ்ணவமதமும் கலபதருவின் டீகாவாகி
ற பரிமளத்திற் கண்டிக்கப்பட்டிருக்கிறது. [57]

685. கணேசபூஜகனுடையஉத்தரம்:— கணேசன் சிவ
ன் புத்திரனென்று சொன்னதையும் காரணத்தின் குணம் காரியத்தி
ருப்பதாகச்சொன்னதையுங்கேட்டுகணேசபூஜகன் கோபத்துடன் சொ
ல்லுகிறதாவது:— "அரசனே, நான் சொல்லும் பதார்த்தத்தைக்கேட்
க. இவ்விருவரும் பொய்யை நிஜமெனச்சாதிக்கிறார்கள். கணேசன்
சிவபுத்திரனென்றும் பராதீனனென்றுஞ்சொல்லியிருக்கிறார்கள். இவ்
விஷயமாய் வியாஸர் புராணத்திற்சொல்லியிருக்கிற ஒரு கதையைச்சொ
ல்லுகிறேன் கேட்க:— திரிபுரசங்காரஞ்செய்ய அரியராதி எல்லாதேவர்
களும் போனார்கள். கணேசனைப்பூஜிக்காதவரையில் திரிபுரர்கள் நோ
ற்கடிக்கப்படவில்லை. பிறகு மனவருத்தமுற்று எல்லாரும் கணேசனை
யாராதித்துத்திரிபுரர்களை ஜயித்தார்கள். எவனைபூஜித்ததினல் இவர்க
ள் ஜயமடைந்தார்களோ அவனே சேவிக்கத்தக்கவனென்று அறியவே
ண்டியது. நசரதனுக்கு ராமன் புத்திரனுயிருந்ததுபோல் பரமசிவனு
க்குக்கணபதி புத்திரராயிருந்து விக்கினங்களைப்போக்கினர். கணேசபு
ராணத்தில் வியாஸர் சொல்லியிருக்கிறதாவது:— எல்லாவற்றிற்குங்க
ணேசனே காரணம். அவருடைய துதிக்கையினிருந்து அரி அரன் வி
ரவி சக்தி முதலானவர்களெல்லாம் ஜனித்தார்கள். எவர்கள் கூஷ்மாண
த்திரம் இவரைத்தியானிக்கிறார்களோ அவர்களுடைய விக்கினங்களெல்
லாம் உடனே ஒழிகின்றன. இப்படி இரவும்பகலும் விழிப்புள்ளவரா
யிருக்கிற விநாயகக்கடவுளைப்பக்தியுடன் நிஷ்காமகர்மமாய் பூஜிக்கவே
ண்டியது.

686. தேவீபக்தனுடையஉத்தரம்:— கணேசன் சக்திக்கு
க்காரணமென்று சொன்னதைக்கேட்டுப்பகவதீபக்தன் கர்ச்சித்து அர
சனைப்பார்த்துச்சொல்லத்தொடங்குகிறன். அரசனே என் சத்தியமா

---

57. இந்த தரங்கத்தின் 44-வது குறிப்பைப்பார்க்க.

ன வசனத்தைக்கேட்க:— இம்மூவருஞ்சொன்னதெல்லாம் அப்பிரமாணம். சக்தியன்றியில் தேவர்களெல்லாம் பிணத்துக்குச்சமானமாவாரென்று அறியத்தக்கது. சக்தியில்லாத அசமர்த்தனும் எந்தக்காரியமும் முடியும். சக்தியையுபாஸித்தவர்கள்தான் அதிகாரியாகிறார்கள். ஹரன் சூரியன் கணபதி இவர்களிடத்தில் இவ்விதமாகச்சக்தி காணப்படுகிறது. பிரபஞ்சத்தில் எதைசசக்தியென்று சொல்லுகிறார்களோ அதுவே பகவதியின் ரூபமென்று அறியத்தக்கது. பகவதிக்கு இரண்டு ரூபங்களுண்டு. ஒன்று சாமானியம், மற்றொன்று விசேஷம. எல்லாப்பதார்த்தங்களிலுமுள்ள அவ்வவற்றிற்குரிய காரியத்தைச்செய்யுஞ் சாமர்த்தியரூபசக்தி பகவதியின் சாமானியரூபமாம். அஷ்டபுஜாதி விசேஷணங்களுடன் கூடிய மூர்த்தியிலுள்ள சக்தி விசேஷசக்தியாம். சாமானியரூபசக்தியின் அம்சங்கள் எண்ணிறந்தவை. எவனிடத்தில் சக்தியின் அம்சம் குறைவாயிருக்கிறதோ அவன் அற்பசக்திமான் அசமர்த்தன் என்னப்படுகிறான். எவனிடத்தில் சக்தியின் அம்சம் அதிகமாயிருக்கிறதோ அவன் சமர்த்தன் என்னப்படுகிறான். விஷ்ணு சிவன் முதலியவர்களிடத்தில் சக்தியின் அம்சம் அதிகமாயிருக்கிறபடியால் அவர்கள் சமர்த்தரென்று சொல்லப்படுகிறார்கள். இவ்விதமாயப்பகவதியின் சாமானியரூபசக்தியம்சத்தின் மிகுதியால் விஷ்ணு, சிவன், கணேசன், சூரியன், இவர்களுடைய மகிமை பிரசித்தமாயிருக்கிறது. பிராணனன்றியில் சரீரம் அமங்களமாயிருப்பதுபோல் சக்தியன்றியில் சகலதேவர்களும் அமங்களஸ்வரூபிகளாவார்கள். ஆனதால் எந்தச்சக்தியின் மிகுதியால் தேவர்களுடைய மகிமை பிரசித்தமாயிருக்கிறதோ அம்மகிமை சக்திக்குரியதேதவிர தேவர்களுக்குரியதன்று. விஷ்ணு சிவன் முதலியோர் பகவதியின் சாமானியரூபசக்தியை விசேஷமாயுபாஸித்தபடியால் அவர்களிடத்தில் சக்தியின் விசேஷமான அம்சங்காணப்படுகிறது.

பகவதியினுடைய நிராகாரரூப சக்திக்கு அனேக அம்சங்களிருப்பதுபோல ஸாகாரரூபசக்திக்கும் அனேக அம்சங்களுண்டு. இவைகளில் காளீரூபம் பிரதானம். மாகேச்வரீ, வைஷ்ணவீ, ஸௌரீ, கணேசீ முதலியவைகளும் பிரதானஅம்சங்களே. பகவதியுபாஸனையால் விஷ்ணுவுக்கு வைஷ்ணவீ யென்னும் பகவதியின் அம்சங்கிடைத்தது. இப்படியே மற்றதேவதைகளுக்கும் பகவதியின் உபாஸனையால் மாகேஸ்வரீ முதலிய அம்சங்கள் கிடைத்தன. விஷ்ணுவும் சிவனும் பகவதியின் முக்கிய பக்தர்களாயிருக்கிறார்கள். ஏனெனில் தியானஞ்செய்வோர் தியேயரூபத்தையடைவதே தியானத்தின் பரம அவதியாகும். விஷ்ணுவுக்கும் சிவனுக்குமுபாஸனையால் தியேயரூபங்கிடைத்தபடியால் இவர்கள் முக்கிய உபாஸகர்கள்.

மதனத்தால் அமிர்தமுண்டானபோது, சுராசுரர்களுடைய விவாதத்தைத்தீர்க்க விஷ்ணுவுக்குச்சாமர்த்திய மில்லாமற் போயிற்று. அப்போது கன்னுபாஸியரூபமான பகவதீயின் அமசத்தைத்தியானஞ்செய்து தானே யந்த ரூபத்தை யடைந்தார். அந்த ரூபத்தின் மகாத்மியத்தால் அசுரர்களும் விஷ்ணுவுக்கு அநுகூலமாஞர்கள். சிவனுஞ் சமாதியிற் பகவதியைத்தியானஞ்செய்து தன் பாதி சரீரம் ஸ்திரீரூபமடையப்பெற்றார். விசேஷபத்தால் சமாதி முடிவுபெற்றபடியால் முழுசரீரமும் ஸ்திரீரூபமாகவில்லை. பகவதீயின் பக்தர்களான ஹரிஹரர்களைப்போல் பகவதீயை யார்தானுபாஸிக்கப்போகிறார்கள். ஆயினும் மகாமாயையைத்தியானிக்கிறவன் பூர்ணபுருஷார்த்தத்தைச்சிக்கிரத் திலடைவான். ஒரேயிடத்தில் போகமோக்ஷங்களை யடையும்படியான வேறு சாதனம் ஜகத்திலில்லை. பகவதீபக்தன் சகலபோகங்களையும் அனுபவித்துங்கர்ப்பவாசத்தையடைகிறதில்லை. சிவதந்திரத்தில சுகத்தைத்தரும் சக்தியாராதனை விவரிக்கப்பட்டிருக்கிறது. முன்னோர்கள் பஞ்சமகாரங்களையும் அநுஷ்டித்திருக்கிறார்கள். பலராமனும் கிருஷ்ணனும முதல்மகாரத்தை எப்போதும் பானம்பண்ணினார்கள். மகாரங்களைச்சேவிக்கும் விதிகள் பரமசிவனால் பரோபகாரத்தின் பொருட்டுசொல்லப்பட்டிருக்கின்றன. சிவவசனத்தை மனதில் தரிக்கிறவன் இச்சரீரத்திலேயே போகமோக்ஷங்களையடைகிறான். வியாஸர் பாகவதத்தைச்செய்திருக்கிறார். உபபுராணத்திற் காளியை வர்ணித்திருக்கிறார். பகவதீயின் பக்திதான் மேலாகக்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஹரி ஹரன் சூரியன் கணேசன் முதலியோர் பகவதியைத்தான் தியானஞ்செய்கிறவர்கள். முதல் மகாரத்தைச்சேவித்து உன்மத்தர்களாகிச்சக்தியைப்பூஜிக்கிறார்கள். ஜகத்ஜனனியாகியதேவியே விழிப்புள்ளவளாயிருக்கிறாள். இவளைச்சேவிப்பதால் பரமானந்தம் அடையப்படுகிறது.

687. **சூரியபக்தனுடையஉத்தரம்:—** பகவதியின் மகாத்மியத்தைக்கேட்டு கோபங்கொண்டு சூரிய பக்தன சொல்லுகிறான். அரசனே என்னுண்மையான வசனத்தைக்கேட்க.— நான் கோடிப்பிரமாணங்கள்செய்து உண்மையுரைக்கிறேன். இவர்களுடைய மதங்களெல்லாம் மிகவும் பாபகரங்களாயும் இழிவானவைகளாயும் இருக்கின்றன. ஜகத்திற் கெட்டவையெல்லாம் தேவீமார்க்கத்தில் உத்தமமாகச்சொல்லப்பட்டிருக்கின்றன. மலின மத்தியம் தீர்த்தமென்றும், மாமிசம் சுத்தமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. விபரீதத்தைச்சொல்லும் சிவதந்திரம் அனுஷ்டிக்கத்தக்கதன்று. தக்ஷிண சம்பிரதாயம் சிரேஷ்டமாகையால் எல்லாராலும் அனுஷ்டிக்கதக்கதாயிருந்தாலும் சூரியனன்றியில் எல்லாம் அந்தகமாம். எல்லாவற்றையும் பிரகாசிப்பிக்கிறவன் சூரியன். அவன் இல்லாவிட்டால்எங்கும் இருள் கவிந்துகொள்ளும். ஜ

கத்திலுள்ள மற்றப்பிரகாசங்கொடுக்கும் வஸ்துக்களெல்லாம் சூரியனுடைய அம்சங்களே. சூரியனைப்போல் ஒருவனும் ஒத்தசெய்கிறதில்லை. பிறருடைய ஹிதத்தின்பொருட்டுத்தான் ஆகாசத்தில் ஓயாமல் அலைகிறான. சகல காரியங்களும் காலாதீனமாயிருக்கின்றன. என்றகாலம், நிகழ்காலம், வருங்காலமென்றுகாலம் மூவகையென அறிவினர் சொல்லுகிறார்கள். சூரியகதியால் சகல காரியங்களும் பூர்த்தியாகின்றன. எல்லாம் சூரியனிடத்திலிருந்தேயுண்டாகின்றன. அவர் கோடத்தால எலலாம பஸ்மபடாகின்றன. இவருக்கு ஸாகாரம் நிராகாரமென இரண்டு ரூபங்களுண்டு. நிராகாரப்பிரகாசம் சகல ரூபங்களிலும் வியாபித்திருக்கிறது. எதை வேதாந்திகள் சப்தத்தால் வியவகரிக்கிறாரோ அது நிராகாரப பிரகாசரூபமான சூரியனுடைய சாமானியரூபம. இது ஜகத்துக்கெல்லாம அதிஷ்டானம். இதின் அஞ்ஞானத்தினல் ஜகத ரூப விவர்த்தமுண்டாகிறது. இந்த நிராகாரப்பிரகாசமும் அந்தக்காரண விர்த்தியில் அதின் பிரதிபிம்பமுபசேர்ந்தது ஞானமென்று சொல்லப்படுகிறது. அகமபாலுவென்று அந்தக்காரண விர்த்தி பிரகாசிக்கும்போது அஞ்ஞானம் நிவிர்த்தியாகி ஜகத்தும்நிவிர்த்தியாகிறது.

சூரியனுடைய ஸாகார ரூபத்தைச்சொல்லுகிறேன் கேட்க:— பிராதக்காலத்தில் அவருடைய ரிதஸ்ஸ பிரகாசிக்கிறது. சந்திரன் நக்ஷத்திராதிகளும் அவருடைய அம்சங்களே. சூரியனுடைய இரண்டு ரூபங்களின் நிராகாரம் நேயம் ஸாகாரம் திவ்யமயம். இவைகளுக்கே வேதாந்தத்தில் நிர்க்குண ஸகுணப் பிரமமங்களென்றும் பெயர். சூரியனிடத்தில் ஒருக்காலத்திலும் அந்தகாரமென்கிற லேசமுமில்லை. அவரைப் பார்த்தே எல்லாரும் தங்கள் கர்மத்தைச் செயகிறார்கள். இவ்விதமாக விழிப்புள்ள சூரியனையுபாஸிக்கிறதினல் அந்தகாரம ஒழிந்துபோம். மற்ற தேவதைகள் விழிப்புள்ளவர்களென்று சொன்னது மித்தையென்று அறியவேண்டியது.

688. ஸ்மார்த்தமதம்:— ஐந்து உபாஸகர்கள் பரஸ்பர விருத்த வசனங்களைச் சொன்னதுபோல் அநேக பண்டிதர்களும் தங்கள்

---

58. பா

தங்கள் புத்திக்கெட்டியபடி விருத்த[59] அபிப்பிராயங்களையே கொண்டிருக்கின்றார்கள். ஸ்மார்த்த பண்டிதன் மேற்கண்ட ஐந்து தேவதைகளிடத்திலும் பேதபுத்தி கொள்ளாவிட்டாலும் அவனுடைய மதமும் இவர்களின் மதங்களுக்கெல்லாம் விசேதமாயிருக்கிறது. எனெனில், வைஷ்ணவனுடைய மதமென்னவெனில், விஷ்ணுவுக்குச் சமானமான வேறு தெய்வமில்லை. எல்லாரும் விஷ்ணு பக்தர்களே. விஷ்ணுவின் ராம கிருஷ்ண நாராயணன் முதலிய நாமங்களுக்குச் சமானமாய இதர தெய்வங்களின் நாமங்களை எவன் நினைக்கிறானோ அவன் நாமாபராதி. அவனுக்கு ராமாதி நாமோச்சாரணங்களின் யதார்த்தபலனுண்டாகிறதில்லை. இப்படியே சைவ மதத்திலும் சிவனுக்குச்சமானமான வேறு தெய்வமில்லை. சிவனுடைய நாம உச்சாரணத்தின் பலன் விஷ்ணு நாம உச்சாரணத்தாலுண்டாகிறதில்லை. இவ்விதமாக எல்லாருடைய மதங்களிலும் அவரவர்களின் உபாஸிய தெய்வத்துக்குச் சாதனமாய வேறு தெவமில்லை. ஸ்மார்த்த மதத்திலோ எல்லா தேவர்களுஞ்சமமே. ஆகையால் ஸ்மார்த்தமதமும் மேற்சொல்லிய ஐந்து மதங்களுக்கும் விருத்தமாயிருக்கின்றது.

689. ஆறு சாஸ்திரங்களின் பரஸ்பரவிருத்தம்:— இப்படியே, சாங்கியம், பாதஞ்சலம், நியாயம், வைசேஷிகம, பூர்வ மீமாம்சை உத்தர மீமாம்சை எனஇவ்வாறு சாஸ்திரங்களின் மதங்களும் பரஸ்பரம் விருத்தங்களாயிருக்கின்றன.[61] எனெனில் சாங்கிய சாஸ்திரத்தில் ஈஸ்

---

59. யோகமதம், நையாயிகமதம், ஹிரண்யகர்ப உபாசகமதம், விராட் உபாசகமதம், பிரஜாபதியை இச்சிக்கிறவர்களின்மதம், இம்மதங்களின்படி உபாசிக்கத்தக்க ஈசுவரஸ்வரூபத்தைப் பற்றி 2-வது தரங்கம் 38-வது குறிப்பைப்பார்க்க.

60. (1) சத்புருஷர்களின் நிந்தை. (2) அசத் புருஷர்களிருக்குமிடத்தில் நாமத்தின் மகிமையைச்சொல்லுதல். (3)விஷ்ணுவைச்சிவனுக்கு வெருக அறிதல். (4) சிவனை விஷ்ணுவுக்கு வேருக அறிதல். (5) சுருதிவாக்கியத்தில் அசிரத்தை. (6) சாஸ்திரவாக்கியத்தில் அசிரத்தை. (7) குருவாக்கியத்தில் அசிரத்தை. (8) நாமமகிமையிற் பிரமை. (9) அநேகபாபங்களைநாசம்பண்ணுகிறநாமம் தன்னுடையதாக இருக்கிறதென்கிற விசுவாசத்தினால் நிஷித்தகர்மங்களைச் செய்தல் விதிதகர்மங்களை விடுதல். (10) இதர, தேவதைகளின் நாமங்களையும் பகவானுடைய நாமத்துக்குச் சமானமாயறிதல் இப்பத்தும் நாமாபராதங்கள்.

61. இதனால் நிரீசுவர சாங்கியம் அறியத்தக்கது, 443-வது பிரிவைப்பார்க்க.

வரன் அங்கீகரிக்கப்படவில்லை. பிரகிருதி புருஷர்களின் விவேக ஞானத்தால் சமாதிநுபயோகமன்றியிலேயே மோக்ஷமுண்டாவதாக நினைக்கப்பட்டிருக்கிறது. பாதஞ்சல சாஸ்திரத்தில் ஈசுவரனும் சமாதியால் மோக்ஷமும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் சாங்கியமும் பாதஞ்சலமும் விருத்தங்களாயிருக்கின்றன. கியாய மதத்தில்[62] நான்கு பிரமாணங்களும் வைசேஷிக மதத்தில் இரண்டு[63] பிரமாணங்களுமிருப்பதால் இரண்டும் விருத்தங்களாயிருக்கின்றன. கியாய வைசேஷிகங்களுக்குள் வேறு விரோதங்களுமுண்டு. ஜீவந்முக்தனுக்கு அவைகள் அவசியமில்லாமையால் அவைகளையிங்கெழுதவில்லை. பூர்வ மீமாம்சையில் ஈஸ்வரனும் மோக்ஷமுமு நித்திய கருமமும் அங்கீகரிக்கப்பட வில்லை. ஆனல் கர்மத்தானுண்டாகும் விஷய சுகமே புருஷார்த்தமாயிருக்கின்றது. உத்தாமீமாம்சையில் மோக்ஷமும் ஈஸ்வரனும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்கள். விஷயசுகம் புருஷார்த்தமன்று. உத்தரமீமாம்சையின்மதம் இத்திரண்டத்தில் வியக்தமாகச்சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் சர்வசாஸ்திரங்களின் மதங்களும் பரஸ்பரம் விருத்தங்களாயிருக்கின்றன. வேறு சாஸ்திரங்களில் பேதமொதமட்டுஞ்சொல்லப்பட்டிருக்கிறது. இதிலோ பேதம் கண்டிக்கப்பட்டும் அபேதம் பிரதிபாதிக்கப்பட்டுமிருக்கிறது. இவ்விதமாகச் சகல சாஸ்திரங்களின் சித்தாந்தங்களும் பரஸ்பரம் விருத்தங்களாகின்றன.

690. தர்க்கதிருஷ்டிதகப்பனையடைதல்:— இவ்விருத்தவசனங்களைக்கேட்டு சாகலுக்கு நானான சமுசயங்களுண்டாயின. இவர்களுள் யார்சொல்லுவதுண்மம. எல்லாரும் யுக்திப் பிரமாணங்களுடனே பேசுகிறார்கள. இவ்விதசமுசயமாகிற சோகத்தினல் துக்கமுற்ற அரசன் மனதில் உபாஸிக்கத்தக்க தெய்வம் இன்னதென்று தோன்றுமற்போயிற்று. இச்சந்தேகத்தை யெவனிடத்தில் சொல்லுகிறது. ஜகத்திலுள்ள சாஸ்திரநிபுண பண்டிதர்கள சொல்லும் விருத்தவசனங்களைக்கேட்டு வெகுகாலம் யோசனையில் முழ்கியிருந்தான். இப்படியிருக்கையில தர்க்கதிருஷ்டிதகப்பனிடம் வந்தான். இருவரும் பரஸ்பரமாவினங்கனஞ்செய்துகொண்டனர். புத்திரன் தகப்பனை விதிப்படி நமஸ்கரித்தான். தகப்பன் பிரியத்துடன் ஆசீர்வதித்து ஆசனங்கொடுத்தான்.

---

62. பிரத்தியகூம், அனுமானம், சாப்தம், உபமானம் (213).

63. பிரத்தியகூம், அனுமானம் (211).

691. தர்க்கதிருஷ்டியின் கேள்வி:— தகப்பன் சிந்தையில்மூழ்கி யிருப்பதைக் கண்டு ஐயா, என்னயோசனை, முகம் பிரசன்னமாயில்லையே என்று தர்க்கதிருஷ்டி வினவினன்.

692. சுபசந்ததி உத்தரம்:— புத்திரன் வசனத்தைக்கேட்டு தன் யோசனைக்குக் காரணமான சகல விர்த்தாந்தங்களையும் அவனுக்குச்சொன்னன். எந்தவிதவம்உபாஸிக்கத்தக்கதென்று தெரியவில்லை. பொன்றான்.

693. தர்க்கதிர்ஷ்டியின்உபதேசம் (693—707).— தர்க்கதிருஷ்டி தகப்பன் வார்த்தையைக்கேட்டு அவனுக்குச் சுபமுண்டாகக்கருதிச் சொல்லுகிறான். காரணரூபம் உபாஸ்யமென்றும் காரிய ரூபம் துச்சமென்றும் அறியத்தக்கவை. காரண ரூபத்தின் நாமங்கள் பல. இது வேதத்தின் முக்கிய சித்தாந்தம். இதிஹாஸபுராணங்களில் வியாஸர் சொல்லியசித்தாந்தமும் இதுவே சுவிர வேறில்லை. இந்தமர்மத்தைப்பண்டிதர்களறியாமல் பிரம்மதத்தைக்கணடிக்கிறார்கள். பாரதத்துக்கு வியாக்கியானமெழுதின நீலகண்டபண்டிதர் அவ்வியாக்கியானத்தின் ஆரம்பத்தில் இப்பிரசங்கத்தைச் செய்திருக்கிறார். அவ்விடத்திலேயே உத்தமமான சுருதி சித்தாந்தங்களையு முள்ளபடிச்சொல்லி யிருக்கிறார்.

694. புராணத்திற் சொல்லிய வஸ்துநிந்தைக்கு அபிப்பிராயம்:—சகல புராணங்களின் கர்த்தாவான வியாஸர் ஸ்கந்தபுராணத்திற் சிவனுக்கு ஸ்வதந்திராதி ஈஸ்வரதர்மங்களுண்டெனச் சொல்லியிருக்கிறார். இதர தேவதைகளுக்குச் சிவகிருபையால் எல்லாவிதகளுங்கிடைக்கிறதாகவுஞ் சொல்லியிருக்கிறார். ஆகையால் இவர்களுக்கு ஜீவதர்மம் சொல்லப்பட்டது. இப்படியே வைஷ்ணவமான பத்மபுராணத்தில் விஷ்ணுவுக்கு ஈஸ்வரத்துவஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னுஞ் சில புராணங்களிலும் உபபுராணங்களிலும் கணேசாதி தேவதைகளுக்கு ஈஸ்வரத்துவஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக வியாஸர் வாக்கியத்தில் விரோதம் பிரதீதியாகிறது.

695. ஆயினும் இதற்குச் சமாதானமென்ன வெனில், எல்லாரும் ஈஸ்வரர்கள்தான். எந்தப்பிரகாணத்தில் இதரதெய்வம் நிந்திக்கப்பட்டிருக்கிறதோ அதின் நிந்தையால் அதை யுபாஸிக்கத்தகாதென வியாஸர் அபிப்பிராயமன்று. ஆனல் வைஷ்ணவ புராணத்திற் சிவாதி

தேவதைகளின் நிர்ணயவிஷயத்தின் ஸ்துதி இவைகள் விஷ்ணுபாஸனையிற் பிரவிர்த்தியுண்டாக வேதுக்களாயிருக்கின்றன. இவ்வாறே, சிவபுராணத்திற் செய்த விஷ்ணுவாதிகளின் நிர்ணைக்கும் இவ்வைகளினுபாஸனைகளை விட்டுவிடவேண்டுமென்கிற கருத்தன்று. ஆனால் அநிர்ணைச் சிவஉபாஸனையிற் பிரவிர்த்தியுண்டாகும் பொருட்டேயாம். ஒரு பிரகரணத்தில் இதரதேவதையின் நிர்ணை அதிஉபாஸனையைத் தள்ளுவதற்காக ஏற்பட்டிருக்கும்பக்ஷத்தில் எல்லாதேவதைகளினுபாஸனைகளையுந் தள்ளும்படிசேரிடும். ஆகையால் அன்னியதேவதையின் நிர்ணையுமதிஉபாஸனையை விட்டு விடுவதற்காக ஏற்படவில்லை; ஆனால் ஒருதேவதையைச் சிறப்பிக்க ஏற்பட்டிருக்கிறது.

696. **கிரமவிஷயம்**:—வேதத்தில் அக்னிஹோத்ரத்துக்கு இரண்டு காலங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒன்று சூரியோதயத்துக்கு முன்னும் மற்றொன்று சூரியோதயத்துக்குப் பின்னுமே. முறைகாலப்பிரகரணத்தில் பிற்காலம் நிந்திக்கப்பட்டிருக்கிறது. பிற்காலப்பிரகரணத்தில் முற்காலம் நிந்திக்கப்பட்டிருக்கிறது. அக்னிஹோத்ரத்தை விட்டுவிடவேண்டுமென்கிற அபிப்பிராயம் நிர்ணைக்கிருக்குமேயானால் இவ்விரண்டு காலங்களிலும் ஹோமத்தை விட்டு விடும்படி சேரிடும். ஆனால் நிந்தியகர்மத்தை விடலாகாது. ஆகையால் முற்காலத்தின் ஸ்துதியின் பொருட்டுப் பிற்காலநிர்ணையும் பிற்காலஸ்துதியின் பொருட்டு முற்காலநிர்ணையுஞ் செய்யப்பட்டிருக்கின்றன. இதுபோல், ஒருதெய்வத்தினுபாஸனைப்பிரகரணத்தில் இதரதேவதையின் நிர்ணைக்குஞ் தாற்பரியம் அத்தெய்வத்தின் சிறப்பே தவிர இதரதெய்வத்தின் நிர்ணையன்று.

697. **ஐந்துதேவதைகளினுபாஸனைக்கும் ஒரேபலன்** சாகாபேதத்தால் சிலர் உதயத்துக்குமுன் ஹோமஞ் செய்கிறார்கள், சிலர் உதயத்துக்குப் பின் செய்கிறார்கள். இருவருக்கும் பலன் ஒன்றே. இதுபோல் இச்சாபேதத்தால் ஐந்து தேவதைகளுக்குள் எதை யுபாஸிக்காலும் ஐந்துபாஸனைகளாலும் பிரம்மலோகமேயடையப்படும். அவ்விடத்தில் போகங்கள் அனுபவிக்கப்பட்டு விதேகமோக்ஷம் சித்திக்கிறது. விஷ்ணுமுதலிய தேவதைகளினுபாஸனைவால் வைகுண்டாதி லோகங்கள் அடையப்படுமென்று புராணங்களிற் சொல்லியிருக்கிறதேதவிர பிரம்மலோகம் அடையப்படுவதாய்ச் சொல்லப்படவில்லை. ஆயினும் உத்தமஉபாஸகர்கள் விதேகமுக்திக்கு அதிகாரிகளாயிருப்பதால் தேவயான மார்க்கத்தின் மூலமாய்ப் பிரம்மலோகத்துக்கே போகிறார்கள். ஆனால் ஒரேபிரம்மலோகம் விஷ்ணுஉபாஸகனுக்கு வைகுண்டரூபமாயும் அங்குள்ளவர்கள் சதுர்ப்புஜங்களோடுகூடினவர்களாகவும் பிரதிதியாகிறார்

கள். தானுஞ் சதுர்ப்புஜனாகவே யாகிறான். அப்படியே சிவோபாஸக னுக்குச் சிவலோகமும் அங்குள்ளோர் நிரிவேத்திரர்ஸ்வரூபிகளாகவும் பிரதிநியாகிறார்கள். தானும் அப்படியே பிரதிநியாகிறான். இவ்விதமாக எல்லாவுபாஸகர்களுக்கும் பிர்ம்மலோகமே அவரவர்களின் உபாஸ்யஸ்வரூபத்துக்குத் தகுந்தபடியே பிரதிநியாகிறது. ஏனெனில் தேவயானமார்க்கமன்றியில் மற்றமார்க்கங்களிற் போகிறவன் மறுபடியும் சமுசாரத்திற்கு வருகிறனென்பதும் தேவயானமார்க்கமொன்றே பிர்ம்மலோகத்துக்குப் போவதென்பதும் நியமம். ஆகையால் விதேகமோக்ஷத்துக்கு யோக்கியர் களானவுபாஸகர்களெல்லாம் பிர்ம்ம லோகத்துக்குப் போகிறார்கள். இந்தப் பிர்ம்மலோகத்தில் உபாஸகனுடைய இச்சானுசாரமாகச் சகலசாமக்கிரிகளுடன் அப்பிர்ம்மலோகமே உபாஸகனுக்குப் பிரதிநியாகும்படியான அற்புதமகிமையிருக்கிறது. இவ்விதமாக ஐந்துதேவதைகளின் உபாஸனைகளுக்கும் பலனென்றே.

698. பரமாத்மா வினிடத்தில் நாமரூபங்கள்:—முன் சொன்ன" விஷயத்திலோராக்ஷேபம். ஐந்து தேவதைகளுக்கும் நாமரூபங்கள் வெவ்வேறுய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. 'ஈஸ்வரனே ஒருவன். ஒரு ஈஸ்வரனுக்கு அனேக" ரூபங்களிருக்கமாட்டா. இதற்குச் சமாதானம்:—பாரமார்த்திகத்தில் நாமரூபங்கள் யாதொன்றும் பரமாத்மாவினிடத்திலில்லை. மந்தபுத்தியுள்ளவர்களின் உபாஸனையின் பொருட்டு நாமரூபரஹித பரமாத்மாவுக்குக் கல்பிதநாமரூபங்களேற்பட்டிருக்கின்றன. ஆகையால் ஓரேபரமாத்மாவினிடத்தில் மாயையாற் கல்பிக்கப்

---

64. தேவயானம்," பிதிர்யானம்," ஜாயஸ்வ மிரியஸ்வ இப்பேதங்களால் சமுசாரமார்க்கங்கள் மூன்று. சூரியமண்டலத்தைப் பேதித்துக்கொண்டு ப்பிர்ம்மலோகத்துக்குப்போகுதல் தேவயானம். இதற்கே அர்ச்சிமார்க்கமென்றும் பெயர். சந்திரமண்டலத்தைப் பேதித்துக்கொண்டு இந்திரலோகரூபமான பிர்ம்மலோகத்துக்குப் போகும்மார்க்கம் பிதிர்யானம் அல்லது தூமமார்க்கமென்று சொல்லப்படும். அடிக்கடி ஜனனமரணங்களுக்குக் காரணமான மிருத்தியுலோகத்துக்குப் போவது ஜாயஸ்வ மிரியஸ்வமார்க்கம். இம்மூன்றும் சமுசாரமார்க்கங்களாம். நான்காவதாகிய பிர்ம்மஞானரூபமார்க்கம் மோக்ஷமார்க்கமாம்.

விசாரசாகரத்தின்

நிறைப்பு முற்றிற்று.

ஹரீ: ஓம்.

பட்ட நாமரூபங்கள் அநேகமுண்டாகின்றன. இவ்விதமாய்ச் சர்வபுரா ணவாக்கியங்களின் விரோதமும் நிவிர்த்தியாய் விடுகிறது

699. புராணதாற்பரியம் (699—700):—புராணவாக்கியங்க ளில் விரோதசங்கைக்கு முக்கியகாரணம் அடியில் வருமாறு.—விஷ்ணு சிவன் கணேசன் தேவி சூரியன் முதலிய ஒவ்வொருநாமமும் காரணநிர் ம்மத்தினதாம். காரியப்பிரம்மத்துக்கும் இந்நாமங்களுண்டு. மாயாவி ஷ்டகாரணத்தைப் பிரம்மமென்கிறார்கள். காரியமான ஹிரண்யகர்ப்ப த்தையும் பிரம்மமென்கிறார்கள். இவ்விதமாகக் காரணப்பிரம்மத்தை யும் காரியபிரம்மத்தையும் விஷ்ணு சிவன் முதலிய பதங்கள் குறிப்பிடு கின்றன. இப்படியே இப்பதங்களுக்கு நாராயணன் நீலகண்டன் விக்ந னேசன் சக்தி பானு முதலிய அநேகப்பிரதிபதங்களுண்டு. இவைகளெ ல்லாம் காரணகாரியப்பிரம்மங்களிரண்டையும் போதிக்கின்றனை. சில காரணப்பிரம்மத்தையும் சிலகாரியப்பிரம்மத்தையும் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி க்போதிக்கின்றன. திர்த்டாந்தம் :— ளைக்கவபதம் குதிரை யையும் உப்பையும் குறிப்பிடுகிறது. போஜனசந்தர்ப்பத்தில் அது உ ப்பையும் நடைசந்தர்ப்பத்தில் குதிரையையும் குறிப்பிடுகிறது. இவ போல்வைஷ்ணவபுராணத்தில் விஷ்ணு நாராயணன் முதலிய பதங்கள் காரணப்பிரம்மத்தையும் சிவன் கணேசன் முதலிய பதங்கள் காரிய பிர ம்மத்தையுப் போதிக்கின்றனை.

700. ஆகையால் வைஷ்ணவசைவாதிகளில் விஷ்ணுஸ்துதிக்கும் சிவாதிகளின் நிந்தைக்கும் அபிப்பிராயமென்னவெனில், காரணப்பிரம் மம்உபாஸிக்கத்தக்கது. காரியப்பிரம்மம் உபாஸிக்கத்தக்கதன்று. ஸகந்த புராணத்தில் சைவக்ஷேத்திரங்களில் சிவன் மகேசன் முதலிய பதங்கள் காரண ப்பிரம்மத்தையும் விஷ்ணுகணேசன் தேவி சூரியன் முதலிய பதங்கள்கா ரியப்பிரம்மத்தையும் போதிக்கின்றன. ஆகையால் இந்தப்புராணங்களி லும் காரணப்பிரம்மத்தின் ஸ்துதியும் காரியப்பிரம்மத்தின் நிந்தையும் இருக்கின்றன. இப்படியே கணேசபுராணத்தில் கணேசபதம் காரணப் பிரம்மத்துக்கும் விஷ்ணுசிவன்முதலியபதங்கள் காரியப்பிரம்மத்துக்கும் வாசகங்களாயிருக்கின்றன. ஆகையால்காரணத்தின் ஸ்துதியும் காரிய த்தின் நிந்தையும் இருக்கின்றன. இப்படியே காளீபுராணத்தில் காளீ தேவீமுதலிய பதங்கள் காரணப்பிரம்மத்தையும்விஷ்ணு சிவன் முதலிய பதங்கள் காரியப்பிரம்மத்தையும் போதிக்கின்றன. ஆகையால் காரண த்தின் ஸ்துதியும் காரியத்தின் நிந்தையு மிருக்கின்றன. இப்படியே ஸௌ ரபுராணத்தில் சூரியன் பானு முதலிய பதங்களால் காரணப்பிரம்மமு ம் விஷ்ணு சிவன்முதலியபதங்களால் காரியப்பிரம்மமும் போதிக்கப்படுகி

ன்றன. ஆகையால் காரணப்பிர்ம்மத்தின் ஸ்துதியும் காரியப்பிர்ம்மத்தின் நிந்தையுமிருக்கின்றன. இவ்விதமாகச் சகலபுராணங்களிலும் காரியகாரணங்களின் ஸம்ஞாரூபச் சங்கேதபேத மிருக்கிறது. எடுத்துக்கொள்ளும் படியாயும் தள்ளும்படியாயுமிருக்கிற அர்த்தத்தில் பேதமில்லை. சகலபுராணங்களிலும் காரணப்பிர்ம்மத்திலுபாஸனை யெடுத்துக்கொள்ளத்தக்கது. காரியப்பிர்ம்மத்திலுபாஸனைதள்ளத்தக்கது. ஆகையால் சகலபுராணங்களும் ஒரேகாரணப்பிரம்மத்திலுபாஸனையைப் போதிக்கின்றன. இவைகளுக்குள் விரோதமில்லை

701 மூர்த்திபூஜையின் கருத்து(701–702):—சதுர்ப்புஜமூர்த்தி, திரிகேத்திரமூர்த்தி, ஸதாண்டமூர்த்தி அஷ்டபுஜமூர்த்தி முதலியவை மாயையின் பரிணாமமாயும் சேதனத்தின் விர்த்தமாயும் இருப்பதால் காரியங்களாயிருக்கின்றன. இவைகளிலுபாஸனையுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும் இந்தச் சதுர்ப்புஜாதிமூர்த்திகளின் மாயாவிசிஷ்டகாரணத்தை விசாரித்துப்பார்க்குமளவில் யாதொரு பேதமுமில்லை ஆகையால் இவைகளிலுகாரத்தைப் பாதித்துக் காரணரூபத்தால் இவைகளை யுபாசிப்பது கருத்தாம். ஏனெனில் ஆகாரம காரியம். ஆகையால் அது துச்சம். காரணம் சத்தியம். எவனுடைய மந்தப்பிரஞ்ஞை ஆகாரத்திலேயே ஸ்திரமாயிருக்கிறதோ அவன் சாஸ்திரத்திற் சொல்லிய் ஆகாரத்தையே உபாஸிக்கவேண்டியது. அதிலுல் பிரஞ்ஞை நிச்சலமாகிக் காரண்ப்பிர்ம்மத்தி லுபாஸனையில் ஸ்திரப்படுகிறது.

702 காரணப்பிர்ம்மஉபாஸனை:—பிர்ம்மம் ஜகத்தின்காரணம். சத்தியகாமம், சத்தியசங்கலபம், சர்வஞ்ஞம், சுதந்திரம், சர்வப்பிரேரகம், கிருபாளு, இப்படி ஈசுவராதர்மங்களைத் தியானிக்கவேண்டியது. மூர்த்தியைத்தியானிக்க வேண்டுமென்பது சாஸ்திரத்தின் கருத்தன்று. சாஸ்திரத்தில் அனேகமூர்த்திகளைப் பற்றிச் சொல்லியது உபாஸனையின் பொருட்டன்று. ஆனல் எல்லாமூர்த்திகளுங் காரணப்பிர்ம்மத்தி லுபலக்ஷணங்களே. எந்தவஸ்து எதின் ஏகதேசத்திலும் ஏககாலத்திலும் வியாவர்த்தகமாயுமிருக்கிறதோ அது உபலக்ஷண மென்னப்படும். 'காக முட்காந்திருப்பது தேவதத்தன் வீடு' என்னும் வாக்கியத்தில் தேவதத்தன் வீட்டுக்குக்காகம் உபலக்ஷணமாயிருக்கிறது.ஏனெனில் வீட்டின் ஒரு பக்கத்திலும் எப்போதாவதொருகாலத்திலும் காகம் உட்காருகிறது. எப்போதும் உட்காருகிறதில்லை. இதரக் கிரகங்களினின்றும் தேவதத்தன் கிரகம் வியாவர்த்தகமாயிருக்கிறது. இதுபோல் ஜகத்தின் காரணம் பிர்ம்மம். இதின் ஏகதேசத்தில் எப்போதாவது மூர்த்தியிருக்கிறது. சது

ர்ப்புஜாதி மூர்த்திகள் காரணப்பிர்ம்மத்திலேயே இருக்கின்றனவேதவிர வேறிடத்தில் இல்லை. ஆகையால் வியாவர்த்தகங்களாயிருக்கின்றன. ஆனபடியால் உபலக்ஷணங்களாயிருக்கின்றன. உபலக்ஷணத்தின் பிரயோஜனம் விசேஷிய வஸ்துவின் ஸ்வரூபஜ்ஞானம் உண்டாவதாம். எப்படிக் காகத்தால் தேவதத்தன் வீடு குறிப்பிடப்படுகிறதுதவிரவேறு பிரயோசனமில்லையோ அப்படியே மூர்த்திகளின் சதுர்ப்புஜாதி ஆகாரங்களால் நிராகாரமான காரணப்பிர்ம்மங் குறிப்பிடப்படுகிறதேதவிர அவைகளுக்கு வேறுபிரயோஜனமில்லை.

703. மந்தப்பிரஜ்ஞையுள்ளவர்கள் சாஸ்திரத்தின் கருத்தையறியாமல் ஆகாரங்களில் சந்தியபுத்தி வைக்கிறார்கள்; மேலும் சியாலவாராமேய நியாயத்தால் பரஸ்பரம் கலகஞ்செய்கிறார்கள். ஸ்நிஃபியின் சகோதரனுக்கு ஸ்பாலனென்று பெயர். நாயக்கு ஸாரமேயமென்று பெயர். நியசயமென்றால் திருஷ்டாந்தம். ஒருஸ்யாலனுடைய பெயர் உத்பாலகன். அவன் விரோதியின் பெயர் தாவகன், ஒருவன் வீட்டிலிருந்த நாய்க்கும் பெயர் தாவகன். மற்றொரு வீட்டிலிருந்த நாய்க்குப் பெயர் உத்பாலகன் இப்படியிருக்க முதல்வீட்டுக்காரனுடைய ஸ்நிஃபி முதல்புருஷன்வீட்டுக்கு வந்தவுடன் மேற்கண்ட இரண்டுநாய்களும் சண்டையிட்டுக் கொண்டன. அப்போது தாவகனை விட்டு உத்பாலகனத்துரத்தும்படிச் சொன்னான். இதையந்தப்புதிய ஸ்நிஃபி கேட்டுத்தன் சகோதரனிய உத்பாலகனைத் தான் தன் புருஷன் துரத்தச்சொன்னதென நினைத்து நாயகன் பேரில் வருத்தப்பட்டாள். எப்படிப்புருஷனுடைய அபிப்பிராயத்தையறியாமல் சாமானனம்மனுஷ்யாற் பிரமித்து ஸ்நிஃபி துக்கித்தாளோ அப்படி லவஷ்ணவக் கிரந்தத்தில் சிவன் முதலிய பெயர்களால் காரியப்பிர்ம்மம் நிந்திக்கப்பட்டிருக்கிறதென்கிற அபிப்பிராயத்தையறியாமல் சைவர்கள் துக்கிக்கிறார்கள். அப்படியே விஷ்ணுநாமத்தால் காரியப்பிர்ம்மம் நிந்திகப்பட்டிருக்கிறதென்பதையுணியாமல் வைஷ்ணவர்கள் துக்கிக்கிறார்கள். சகல புராணங்களுக்கும் அபிப்பிராயமென்னவெனில் காரணப்பிர்ம்மம் உபாஸிக்கத்தக்கது. காரியப்பிர்ம்மம் தள்ளத்தக்கது. மாயாவிசிஷ்டசேதனம் காரணப்பிர்ம்மமாம். மாயையாலுண்டான காரிய விசிஷ்டசேதனம் காரியப்பிர்ம்மமாம். இக்கருத்து பாரத வியாக்கியான ஆரம்பத்திலெழுதப்பட்டிருக்கிறது. சகலவேதாந்தங்களின் சித்தாந்தமும் இதுவே.

704. சுபசந்ததிபின்கேள்வி;— சுபசந்ததி தன் குமாரன் வார்த்தையைக் கேட்டுப் புராணங்களின் விரோத சங்கைக்குச் சமாதானமடைந்து மனதிற் சுகமடைந்தான். ஆறு சாஸ்திரங்களின் பரஸ்பர

விரோதசங்கை நீங்காமையால் விசேஷ சுகமடையவில்லை. எந்த சாஸ்திரார்த்தத்தை யங்கீகரிக்கலாமோ அச்சத்தியமான சாஸ்திரம் யாதென மைந்தனே விளுவினன்.

705. **தர்க்கதிருஷ்டிஉத்தரம்** (705—707):— தகப்பளு ருடைய வார்த்தையைக்கேட்டுப் பரமப்பிரமாணமான வார்த்தையைச் சொன்னேன். உத்தர மீமாம்சையினுபதேசம் கொஞ்சங்கூட வேதவிரு த்த மல்லவென்றான். மற்ற ஐந்து சாஸ்திரங்களும் வேத விருத்தங்க ளாயிருப்பதால் அவைகளை யசுத்தங்களாயறியவேண்டியது. அவைகளி ல் சில அம்சங்கள் வேதானுசாரிகளாயிருப்பதால் மந்தாதிகாரிகள் அ வைகளை யனுஷ்டிக்கிறார்கள். ஆறு சாஸ்திரங்களின் கர்த்தாக்களும் சர்வஞ்ஞரென்று சொல்லப்படுகிறார்கள். சாங்கியத்தின் கர்த்தா கபில ர். பாதஞ்சலத்தின் கர்த்தாபதஞ்சலி. இவர் சேஷாவதாரம். நியாய சா ஸ்திரத்தின் கர்த்தா கௌதமர். வைசேஷிகத்தின் கர்த்தா கணாதர் பூர்வ மீமாம்சையின் கர்த்தா ஜைமினி. உத்தர மீமாம்சையின் கர்த்தா வியாஸபகவான். இவைகளின் மகாத்மியங்களெல்லாம் பிரசித்தமாயிரு க்கின்றன. ஆனதால் இவர்களுடைய வசனசாஸ்திரங்களும சமானப்பிர மாணங்களாகவே இருக்கவேண்டியது. ஆயினும் சகலவாக்கியங்களிலு ம் வேதவாக்கியம் பிரபலப் பிரமாணமானது. ஏனெனில் வேதத்தின் கர்த்தா சர்வஞ்ஞனன ஈசுவரன். அவரிடத்தில் பிரமை சந்தேகம் முத லிய தோஷங்கள் கிடையா. இச்சாஸ்திரங்களின் கர்த்தாக்கள் ஜீவர்கள். இவர்களிடத்திற் பிரமைமுதலியதோஷங்கள் உண்டாகக்கூடும். சாஸ் திரக்காரர்களும் சர்வஞ்ஞர்களாகச் சொல்லப்பட்டிருந்தாலும் அவர்க ளுடையசர்வஞ்ஞதை யோகமாகாத்தியபத்தாலுண்டாயிருக்கிறது. ஆகை யால் இவர்கள் யுஞ்சானயோகிகள். ஈசுவரனுடைய சர்வஞ்ஞதை ஸ்வபாவ சித்தமாயிருக்கிறது. ஆகையால் ஈசுவரன் யுக்தயோகி. சித்த னை செய்வதால் பதார்த்தஞானமுண்டாகிறவனுக்கு யுஞ்சானயோகியெ ன்று பெயர். எப்போதும் எல்லாப்பதார்த்தங்களும் அபரோக்ஷமாய்ப் பிரதீதியாகிறவனுக்கு யுக்தயோகியென்று பெயர். ஈஸ்வரன் இப்பெய ர்ப்பட்டவர். யுக்தயோகியால் செய்யப்பட்ட வேதந்தான் பிரபலம். யுஞ்சானயோகிகளாற் செய்யப்பட்ட சாஸ்திரங்களெல்லாம் துர்ப்பலம். ஆகையால் வேதானுசாரமானசாஸ்திரமேபிரமாணம். வேதவிருத்தம் அப் பிரமாணம், ஐந்துசாஸ்திரங்கள் எப்படிவேதவிருத்தமென்பதுசாரீரகாதி

கிரந்தங்களில்விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. உத்தரமீமாம்சை எவ்விதத்திலும் வேதவிருத்தமன்று. ஆகையால் அது பிரமாணமானது. மற்றசாஸ்திரங்களும் சில அம்சங்களில் பேதத்தை யனுசரித்திருக்கிறதைப் பார்த்து மந்தபுத்தியுள்ளவர்கள் இவைகளில் விசுவாசம் வைக்கிறார்கள். ஆனல் அனேக அம்சங்களில் அவை வேதவிருத்தங்களாயிருப்பதால் தள்ளத்தக்கன. சில அமசங்களில் வேதானுசாரிகளாயிருப்பதால் முழுமையும் அங்கீகரிக்கத்தக்கவையென்று சொல்லும் பக்ஷத்தில் ஜயினசாஸ்திரமும் அஹிம்சாம்சத்தில் வேதானுசாரியாயிருப்பதினல் அதுவும் அங்கீகரிக்கத்தக்கதாகும். ஆனல் ஜயினசாஸ்திரமோ தள்ளத்தக்கதேதவிர அங்கீகரிக்கத்தக்கதல்ல. சுகதர் சஸ்வரனுடைய அவதாரம். அவரைப் புத்தரென்றுஞ் சொல்வார்கள். அவருடைய வசனமும் வேதத்துக்குச் சமானமாய்ப் பிரமாணமாயிருக்கவேண்டியது. ஆயினும் வஞ்சிக்கும் இச்சை அவருக்கிருந்தபடியால் அவருடைய வசனம் எவ்விதத்திலும் அப்பிரமாணமே. ஆகையால் எல்லா அம்சங்களிலும் வேதத்தையனுசரித்திருக்கிற உத்தரமீமாம்சையே எவ்விதத்திலும் முழுமூலவால் அங்கிகரிக்கத்தக்கது. உத்தரமீமாம்சை வியாசரால் சூத்திரரூபமாய்ச் செய்யப்பட்டு (668) அதின் வியாக்கியானமும் அதிகரால் அதிகவிதமாய்ச் செய்யப்பட்டிருந்தாலும் பூஜ்யபாதரான சங்கராசார்யரால் செய்யப்பட்ட வியாக்கியானமே வேதானுசாரியாயிருக்கின்றது. மற்ற வியாக்கியானங்கள் அப்படி யில்லை. இது 5 வதுதரங்கத்தில் (252—54) பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் மற்ற ஐந்துசாஸ்திரங்களும் அப்பிரமாணங்களே.

706. இதரசாஸ்திரங்கள் அப்பிரமாணம்:—இந்தத்தரங்கத்தில் முன்சகலசாஸ்திரங்களும் மோக்ஷத்துக் குபயோகங்களென்று சொன்னது தர்க்கநிர்ஷ்டியின் சாரத்தைக் கிரகிக்கும் விவேகத்தாஸ்தான் ஒருவன்சத்துரு கத்தியால் அவனைவிசிணன். அப்போது இரத்தம் வெளியே வந்து ரோகம் நிவிர்த்தியாகிவிட்டது. அப்போது சாரத்தைக் கிரகிக்கும் புருஷன் கத்தியைவீசினவன் தனக்கு உபகாரஞ் செய்ததாக நினைக்கிறான். இதுபோல் இதரசாஸ்திரங்களாலும் எவ்விதத்திலாவது அந்தக்காரணத்தின் சுத்தியும் நிச்சலதையும் உண்டாகி புருஷன் நிவிர்த்தியடைந்து வேதானுசாரமாய்நிச்சயம்செயதால் மோக்ஷமுண்டாகும். எவ்விதத்திலும் இதரசாஸ்திரங்களில் விசுவாசம் வைத்தால் அந்தகோலாங்கூல நியாயப்படி அவன் அனர்த்தத்தை யடைவான். ஆகையால்சகலசாஸ்திரங்களையுந் தள்ளி அத்வைதவியாக்கியானரீதிப்படி உத்தரமீமாம்சையே அங்கிகரிக்கத்தக்கது.

707 அந்தகோலாங்கூலநியாயம்:—ஒருபணக்காரனுடைய ஆபரணம் பூண்டபுத்திரனைத் திருடர்கள் காட்டுக்குக் கொண்டுபோய் ஆ

பரணங்களைப் பிடுங்கிக்கொண்டு அவன்கண்ணையுங் கெடுத்துவிட்டுபோய் விட்டார்கள். அப்போது அழுதுகொண்டிருந்த அப்பையனைத் தையற்றவனும்வஞ்சனையுற்றவனையுமுள்ள ஒருவன் சந்தித்து ஒருகொழுத்த காளையின் வாலையவன்கையிற் கொடுத்து இதை விடாமற் பிடித்துக்கொண்டு போனால் ஊர்போய்ச்சேரலாமென்றான். எற்கனவே துயருற்ற அந்தப்பையன் இவ்வார்த்தையை நம்பிப் பெருந்துக்கமடைந்து நஷ்டமாய்ப்போனான். இதுபோல் விஷவருப சோரன் ஒருவன் விவேகவருப நேத்திரத்தைக் கெடுத்துச் சமுசாரவருபவனத்தில் கொண்டுபோய் விடுகிறான். அப்போது தையற்றவனையும் வஞ்சகனையுமிருக்கிற பேதவாதி அன்னிய சாஸ்திரஞ்சனின் சித்தாந்தத்தில் அவனுக்கு விசுவாசம் வரும்படிச் செய்து தன்னுடைய உபதேசமே அவனுக்குப் பரமசுகத்துக்குக் காரணமாகுமென்றும் அதைவிடக்கூடாதென்றுஞ் சொல்லுகிறேன். இதை நம்பிப் புருஷார்த்தசுகத்தை யிழந்து ஜனனமரணவருப மகத்தான துக்கத்தை யனுபவிக்கிறான். அகையால் இதர சாஸ்திரங்கள் தள்ளத்தக்கன.

708. இவ்விதமாகச் சுபசந்ததி யென்னும் அரசன் தர்க்கதிருஷ்டியின் வசனத்தைக் கேட்டுச் சகல சந்தேகங்களும் துக்கங்களுமற்றவனாய்ப் பூர்ணானந்தத்தை யடைந்தான். காரணப்பிரம்ம உபாஸனையின் சித்தத்தை ஸ்திரப்படுத்தினான். தர்க்கதிருஷ்டியைத் தன்னுண்மையான குருவாகப் பாவித்து ராஜ்யமுழுமையையும் அவனுக்குங் கொடுத்தான். தர்க்கதிருஷ்டி புத்திரனையிருந்தாலும் உத்தமமான உபதேசத்தைச் செய்தபடியால் அவன்குருஸ்தானத்தை யடைந்தான். அது பிரம்மவித்தையின் மகாத்மியம்.

709. **சுபசந்ததியின் மரணம்:**—கொஞ்சகாலங்கழித்தபின் அரசன் பிராணனை விட்டு முனிகளுடையும் பிரம்மலோகத்தை யடைந்தான். அரசனுடைய மரணத்துக்குத் தேசகாலங்கள் சொல்லப்படவில்லை. இதற்கு அபிப்பிராய மென்னவெனில் உபாஸகனுடையமரணத்தில் தேசகாலங்களின் அபேக்ஷையில்லை. பகலில் மரித்தாலும் இரவில் மரித்தாலும் தக்ஷிணையனத்தில் இறந்தாலும் உத்தராயணத்திலிறந்தாலும் சுத்த இடத்திற் செத்தாலும் எவ்விதத்திலும் உபாஸனையின் பலத்தால் தேவயானமார்க்கமூலமாகப் பிரம்மலோகத்துக்குப் போகிறான். மேலும் அதிர்ஷ்டியின் விஷயத்தில் முன்(650)தேசகாலங்களின் அபேக்ஷையுண்டென்று சொன்னது யோகசகிதஉபாஸகனை யுத்தேசித்தேயாம். கேவலம் ஈஸ்வரனைச் சரணமடைந்த உபாஸகனுக்குத் தேசகாலங்களின் அபேக்ஷையில்லை. இந்த அர்த்தத்தைச் சூத்திரக்காரரும் பாஷியக்காரரும் பிரதிபாதித்திருக்கிறார்கள்.

710. தர்க்கதிருவ்டியின் அந்தம்:—அதிரூனகிடனனன தர்க்கதிர்வ்டி ஊரிதாரு பற்றின்றியிலும முறைப்படி இராஜ்யபாரம பண்ணிவந்துபிர்ம்மலிவ்டையிலிருதுகாணடு பிராரப்தம் முடிந்தவுடன் உண்மையான பரமபதத்தையடைந்தான். ஆத்மா பரமாத்மாவுடன் ஐக்கியமாய்விட்டது. தேகம் ஆனைந்தெய்யப்பட்டுச் சாம்பலாய்விட்டது

கூடன்தயுக்குப் பரமாத்மாவுடன் எப்போதும் அபேதமிருந்தாலும் உபாதியாலுண்டான பேதமுண்டு. உபாதியைக்கால் இந்தப் பேதமுமில்லாமற் போகிறது. பரமாத்மாவுடன் அபேதஞ் சொன்னதற்கு அபிப்பிராய மென்னவெனில் விதேகமுக்தியில சஸ்வரனுடன அபேதஞ் சிந்திக்கிறதேதுவிரச சுத்தசைதன்யமாகிய பிர்ம்மத்துடன் அபேதஞ்சிந்திக்கிறதில்லை. இது சாரீரகபாஷ்யத்தில் 4-வது அத்தியாயத்தில் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்திற் சொல்லியிருக்கிறதாவது விதேகமுக்தியில் சத்தியசங்கல்பாதிகள அடையப்படுமென்று ஜைமினி மதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. ஔடுலோமி மதத்தில் சத்தியசங்கல்பாதிகளின் அபாவஞ்சொல்லப்பட்டிருக்கிறது. சித்தாந்த மதத்தில் சத்தியசங்கல்பாதிகளின் பாவாபாவங்களிரண்டுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கு அபிப்பிராயமென்னவெனில், விதேகமுக்தியில் ஈஸ்வரனுடன் அபேதமுண்டாகிறது. ஈஸ்வரனுடைய சத்தியசங்கல்பாதிகள் விதேகமுக்தியில் உண்டென்று இதர ஜீவன்களால் வியவகரிக்கப்படுகின்றது. இந்த ஈஸ்வரன் பாரமார்த்திகத்தில் சுத்தன். அவரிடத்தில் யாதொரு குணமுமில்லை. ஆனால் அவர் நிர்க்குணரல்ல. ஆகையால் சத்தியசங்கல்பாதிகளில்லை. சமூசாரதசையில் ஜீவனும் பாரமார்த்திகத்தில் நிர்க்குணமாயும் சுத்தமாயுமிருந்தாலும ஜீவலுக்குச சமூசாரதசையில் அவித்தையால் கர்த்திருத்வபோக்திருத்வங்கள் பிரதியாகின்றன. ஈஸ்வரனுக்கு எக்காலத்திலும் தன்னிடத்திலாவது வேறிடத்திலாவது சமூசாரம பிரதியாகிறதில்லை. ஆகையால் ஈஸ்வரன் எப்போதும் அசங்கன், நிர்க்குணன், சுத்தன், ஆகையால் ஈஸ்வரனுடன் எந்த அபேதமுண்டோ அந்த அபேதம் சுத்தப்பிர்ம்மத்துடனுமுண்டு. ஈஸ்வரனுடன் அபேதமுண்டென்றும் சுத்தப்பிர்ம்மத்துடனில்லையென்றும் நினைத்தும்பகூடாது. ஈஸ்வரனுக்குச் சுத்தப்பிர்ம்மத்துடன் ஐக்கியம் ஒருக்காலத்திலுமுண்டாகுமாட்டாது. ஏனெனில் ஜீவனைப்போல் ஈஸ்வரனுக்கு உபதேசத்தாலுண்டாகும் ஞானமும் விதேகமோக்ஷமும் ஒருக்காலுமுண்டாகுமாட்டா.

அவருடைய ஸ்வாபாவிகரூபஞ் சுத்தமன்று. ஆனதால் ஜீவனைக்காட்டிலும் கொஞ்சங்குறைவாக ஈஸ்வரனும் சதாபத்தனென்று சித்தியாகும். ஆகையால் அடியில்வருமாறு நினைக்கத்தக்கது. ஈஸ்வரனுக்கு ஆவரண மில்லை. ஆகையால் உபதேசஞானத்தின் அபேக்ஷையில்லை. ஆவரண மில்லாமையாற் பிராந்தியில்லை. ஆகையால் ஈஸ்வரன் நித்தியஸர்வஞ்ஞன். நித்தியமுக்தன். மாயையும் அதின் காரியமும் ஆத்மாவினிடத்திற் பிரதிஷ்டையாகிறதில்லை. ஆகையால சதா அசங்கன், சுத்தன், இவ்விதமாக ஈஸ்வரனுடன் அபேதமே சுத்தசேதனத்துடன் அபேதமாம். திருஷ்டாந்தத்தாலும் இது விளங்கும். மடத்திற் கடமில்லாமற் போகும் போது மடாகாசத்தில் கடாகாசம் லயமாகிறது. மகாகாசத்தில் லயமாகிறதில்லை. இதுபோல் வித்துவானுடைய சரீரம் ஈஸ்வரனுற் செய்யப்பட்ட பிர்ம்மாண்டத்தில் நஷ்டமாகிறது. பிர்ம்மாண்டமெல்லாம் ஈஸ்வரசரீரமாகிய மாயையில் அந்தர்ப்பூதமாயிருக்கிறது. வித்துவானுடைய ஆத்மா விதேகமோக்ஷத்தில் பிர்ம்மாண்டத்துக்கு வெளியேபோகிறதில்லை. இவ்விதமாய் ஈஸ்வரனுடன் அபேதஞ் சித்திக்கிறது. ஆனல் எப்படி மடாகாசத்துடன் கடாகாசத்துக்கு அபேதஞ் சித்திக்கிறதோ இந்த மடாகாசம மகாகாசரூபமாகவே இருக்கிறதோ அப்படி. ஈஸ்வரனுடன் அபேதஞ் சித்திக்கிறது. இந்த ஈஸ்வரன் சுத்தப்பிர்ம்மமே. ஆகையால் சுத்தப்பிர்ம்மம் அடையப்படுகிறது.

711. இவ்விதமாக அனேக இரகஸ்யங்கள் அடங்கியதும் வேதாந்த சித்தாந்தங்கள் அடங்கியதுமான விசாரசாகர மெழுதப்பட்டு விவேகத்துடன் பிரகடஞ் செய்யப்பட்டது. வியாகரணசாஸ்திரம் முழுமையும் பார்த்தேன். சாங்கிய நியாயசாஸ்திரங்களையும் வெகு சிரமப்பட்டுப் பார்த்தேன். அத்துவைதக் கிரந்தங்கள் முழுமையும் பார்த்தேன். பார்க்காத கிரந்தமொன்றுமில்லை, இதர மதஸ்தர்களுடைய சித்தாந்தங்களையும் ஆராய்ந்துபார்த்தேன். வேதங்களையும் முழுதுப் பார்த்தேன். இந்தப் பாஷாக்கிரந்தம் என்னுற் செய்யப்பட்டது. இதை யெழுதுவதில் நான் வெட்கப்படவில்லை. பரோபகாரசிந்தையே இதை எழுதியதற்குக் காரணம். வியாகரணமன்றியில் ஸம்ஸ்கிருதகிரந்தங்களை மந்தபுத்தியுள்ளவர்கள் படிக்க முடியாது. இந்தக் கிரந்தத்தை வருத்தமின்றியில் படித்துப் பரமானந்தத்தை யடையக்கூடும்.

712. கிரந்தமுடிவு:—தில்லிமாநகரத்துக்கு மேற்கில் 18 கோசத்தில் ஜஹடௌளி என்னுங்கிராமத்தில் இந்தக்கிரந்தகர்த்தா இருந்தார். ஞானிகள் விதேகமுக்தியில் பரமாத்மாவுடன் ஐக்கியமாகிறார்கள். இப்போது குருவைநமஸ்கரித்து ஓய்வடைகிறேன்.

713. மங்களம்:—அகண்டமாயும் சச்சிதானந்தமாயும் வாக்குக்கும் மனதுக்கும் எட்டாததாயும் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயும் இருக்கிற பரப்பிரம்மத்தை நமஸ்கரிக்கிறேன்.

714. கானே பரப்பிரம்மம். என்னிடத்தில் எல்லாம் கல்பிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி எந்த குருவின் கிருபையால் அறியப்பட்டதோ அந்த குருவை நமஸ்கரிக்கிறேன்.

ஹரி: ஓம் தத் சத்

லேலமயிலுக்தகீனா.

ஓம்.

பிரம்மஞானச் சுருக்கம்.

முகவுரை

"தியாஸபி" அல்லது "பிர்ம்மஞான சங்கம்" என்ற பெயருடன் முக்கியமாய் இந்தியாவிலும் இதரதேசங்களிலும் அநேகசபைகள் ஏற்பட்டும், அறம் பொருள் இன்பம் வீடு என நான்குவித புருஷார்த்தங்களை கோறினவர்களாய் இச்சங்கத்திலுள்ளவர்களில் அனேகர் நமது தேசத்தி ய வேதசாஸ்திர புராணாதிகளான கிரந்தங்களில் மிகுதியான சிரத்தை யை உண்டுபண்ணிவருகிறதை எல்லோரும் கவனித்திருக்கலாம். நமது முன்னோர்களாகிய மகாரிஷிகள் வெகுநீண்டகாலமாய் கண்டறிந்து அனுஷ்டித்து மகாசித்திகளையும் முக்தியையும்பெற்ற மாக்ஷமைதங்கிய இப்பரதகண்டத்தின் தற்காலநிலைமை மிகவும் பரிதாபிக்கத்தக்கதென்பதற்கு சற்றேனும் ஐயமில்லை. பலகாரணங்களால் இத்தேசத்தில் "தத்வஞானஸ்வரூபம்" முற்றிலுமில்லாமல் ஒளித்து நாஸ்திகபுத்தியும் விபரீதபாவமும் விருத்தியடைந்து வருகிறதை தேசாபிமானிகள் ஒப்புக்கொள்ளவேண்டும். புண்யபூமியான நமது தேசத்தின் கதியானது இவ்விதமாகும்பக்ஷத்தில் இதரதேசங்களைப்பற்றி சொல்லவேண்டியதில்லை. ஆர்யசித்தாந்தம் வேதாந்தம் யோகம் முதலியவைகளின் தத்வங்களையும் ரகஸ்யங்களையும் உண்மையில் குருசிஷ்ய பாரம்பர்யமாய் உபதேசம் செய்யப்பட்டு, கண்ணிலே குலையாமல் காப்பாற்றிவருகிற மகாத்மாக்களுடைய சங்கம் இப்பொழுதும் பரம இரகஸ்யமாயிருந்துவருகிறது. அனேக ஜன்மங்களில் அடைந்த மனோபரிபக்வத்தினால் மகாஞானத்தையும் அஷ்டசித்திகளையும் அம்மகாத்மாக்கள் அடைந்திருந்திறார்கள். முன்போல் அம்மகான்கள் ஜனங்களுடன் கலந்து வசிக்கக்கூடாமையால் வனவாசத்தையடைந்தும், அவர்கள் இருக்கிறார்கள் என்பதை சந்தேகிக்கும்படி சேர்ந்த கலிகாலத்தின் தன்மையை நினைத்த ஒவ்வொரு ஆர்யவம்சஸ்தனும் துக்கமடையாமலிரான். இந்திரியங்களுக்கு புலப்படுகிற சரீரத்தைக்காட்டிலும் அழிவற்ற சரீரி இருக்கவேண்டுமென்கிற நம்பிக்கையும் ஞானமுமில்லாமல் நாஸ்திகபுத்தி விருத்தியடைந்துவருகிறபடியால் இம்மை மறுமையிலும் புண்யபாபங்களிலும் ஜனங்களுக்கு பொருள்படாமல் அர்த்தவாதமாக எண்ணப்படுகின்றது. மனோவாக்கு காயாதிகளால் ஒவ்வொரு க்ஷணத்திலும் கோடானுகோடியாய் செய்துவருகிற கர்மங்களின் பலனை நாமே அனுபவித்து தீர்க்கவேணுமென்கிற சிந்தை சற்றேனுமில்லை. வெளிவேஷமே முக்கியமாகக்கொண்ட எண்ணிறந்தமதமும் அததற்குவயிற்றுப்பிழைப்பு நிமித்தியம் மதாசாரியர்களென்ற வேஷதாரிகளும் நாள்தோறும் விருத்தியடைந்தும் என்தெய்வம் உன்தெய்வமென்றும் என்மதம் சிரேஷ்டம் உன்மதம் பிசகு என்றும் மூட ஆவேசத்தினால் த்வேஷம் பாராட்டிவருகிறார்கள். இப்பொழுது நடக்கிறது கலியுகமானாலும் முதல் 5000 வருஷம் வரையில் சென்ற த்வாபரயுகத்தின் சந்தியாகாலமா

கவினைக்கப்பட்டு ஸ்ரீமத்பாகவதமும், முதலியவிரத்துஷ்கமீல் இதற்கப்பால் விஷ்ணுகலைகுறைந்து கலியின்சோலம் முற்றிலும் வியாபிக்கப்படுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. வரப்போகிற அந்தகாரத்திலிருந்து ஜனங்களை காத்துக்கிவிடும்பொருட்டு, இதுவரையில் பரமரகஸ்யமாகக் காப்பாற்றி தம்மதுபிவிர்த்திலையும், லோகோபகாரத்தையும் சர்வகாலமும் கோரிக்கொண்டிருக்கிறமகாத்மாக்களும் இந்தமஹாயாகாலத்தை நல்லசமயமென்றுணர்ந்து அவர்களுடைய குருக்களினாலும் யோகத்தையும் பற்றின உண்மையான கருத்துக்களை இப்பிரபஞ்சசங்கத்தின் வழியாய் பரமபிருதையுடன் லெளகியிட்டிவருகிறார்கள். ஏனென்றால் சிலகியாதிகருக்கு ஞானமும் கோரிக்கொண்டிருக்கிறபடியால் இவ்வுலகை காலஞ்சென்றுவிடுமென்றும் இவ்விடம் ஞானம்நிறைந்து இவ்வுலகமுழுவதும் பரமபதமென்றும் வயிந்தியசாஸ்திரத்தில் ஏற்பட்டிருக்கிறபடியால் ஒன்று தோன்றும் கண்டவிடத்தில். அதிதீவிரமான அதிகஷ்டங்களை உடனேகொடுத்து சோகத்தை கிளர்ந்திவிடுவதாகிற வியாதியை கொஞ்சம் கொஞ்சமாய் சாந்தப்படுத்த ஆரம்பிக்கும். அதுபோல் இவ்வுபாயமும் சாந்தியாகிற புருஷனுக்கு பூர்ணவயதும் 4-5 வருஷத்திற்குள் முடியப்போகிற மரணத்தையும் கண்டிருப்பவன் தன்னுடைய ஸ்வரூபத்துடன் பிறக்கப்போகிற காலமும் ஒன்றுகூடின நிகர்ஷத்தில் அதர்மம், நாஸ்திகபுத்தி என்னுமிதாழ்ந்தகுணங்கள் தலைமட்டுக்கொண்டிருக்கையால் சுஸ்திரியான தந்துவைபரிதாபகரமான நிலையில் மதத்தாக்குவிட்டு வருகிறார்கள். இதைப்போல சமயம், 4-5 வருஷமும் சென்றபின்பு மடைபடுவது மகாஅரிது. மிருந்தயைபுடன் அம்மகாத்மாக்களிடத்தும் ஒன்றை வந்தனை உட்கொண்டு தேசஷேமவிர்த்திசெய்துகொள்ளாமல், புத்திசாமையால் பிரமமதாசங்கல்பத்தையும், உலகத்தில் தர்மநிலைபெறவும், ஆஸ்திக புத்தியும் விருத்தியடையவேண்டுமென்றபரோபகாரபுத்தியுடன் அதுசெய்தலும் ருஷிப்பிரார்த்தனைகளையும் பலனும்மதனமன்று சிலரும், அந்தமதித்தமன்றுசிலரும் நிரம்பதயாளதத்துவ விருத்திசெய்யாது இதுசாதாரணவழி என்றுமே சிலர்களும் வீணாதர்மசிந்தையாயிருக்கிறார்கள். இதுபோலும் காலத்தினை கோலமேயன்றி வேறில்லை. மேலும் இவ்விதவிபரீதபுத்திக்கு இன்னும் முக்கியகாரணங்கள் (1) பிராம்மணசாஸ்திரத்தின் வழியாய் இக்காலத்தில் வெளியிடப்பட்டிருக்கிறவரும் நிரூபணங்கள் விசேஷமாய் தேசாபாஷைகளில் இல்லாமல் சகலதேசங்களுக்கும் பொதுவாய் வினங்கிவருகிறவாக்கியமாயிருப்பதும் (2) மதாபிமானமுடையவர்களில் இந்தேசத்தில் நூல்விசாரணைபண்ணி வேறுகாலமாய் வெளிவ்வழக்கை முக்கியமாக எண்ணிவரும அபிப்பிராயமும் (3) மகாத்மாக்கள் நூல்களின் சிஷ்யர்களில் "மாடம்பிளாவட்ஸ்கி" என்றும் பூணலியவஸ்துவாய் இக்காலத்தில் அனுப்பி உலகமெங்கும் தியாஸபிகல்சங்கத்தை ஸ்தாபித்துவரும் உன்னதகருத்தை உள்ளபடி அறியாமை, என ஏற்பலகப்படும். அம்மகாத்மாக்

கள் இச்சங்கத்தின் வழியாய் வெளியிட்டிருக்கும் அனேக அபூர்வகிரந்த
ங்களையும் இச்சங்கத்தின் கொள்கைகளையும் அநுஷ்டானங்களையும் நேரி
ல் தெரிந்து கொள்ளும்படி பாக்யத்தை பெற்ற இந்த கிரந்தகர்த்தாவான
வர் அலைவகள் சகலமதங்களுக்கும் ஸர்வசாஸ்திரங்களுக்கும் சம்மதமாய்
இருப்பதாக தான் எண்ணங்கொண்ட அபிப்பிராயத்தை இத்தென்னாட்
டிலுள்ளவர்கள் யாவரும அநுமதித்து அநுஷ்டிக்கும்பொருட்டு அவை
களை சுருக்கமாய் தமிழில் மொழிபெயர்த்து எழுதியிருக்கிறார். மேலும்
"பிர்ம்மஞானச்சுருக்கமென்ற" இந்தக்கிரந்தத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டி
ருக்கிற சிலதத்துவங்களை உண்மையாய் அறிந்து கொண்டால் உபநிஷ
த்துகளிலும் புராணுதிகளிலும் சொல்லியிருக்கும் இரகஸ்யபாகங்களும்
அலைகளில் போதமாகாதவிடத்தில் அர்த்தவாதமென்று சிலரும், அ
ஸம்பாவிதமான கட்டுக்கதைகளென்று அனேகரும் பிரஸ்தாபித்துவருகி
ற விஷயங்களும், அர்த்தபுஷ்டியுள்ள மகாதத்துவங்களாக போதமாகு
ம் என்பது இந்த கிரந்தகர்த்தாவின் துணிவு- இந்த புஸ்தகத்தில் சொல்
லப்பட்டிருக்கும் சில இரகஸ்யமான தத்துவங்களுக்கு வெளிப்படையாய்
ஏற்பட்டிருக்கிற மதக்கிரந்தங்களுக்கும் கொஞ்சம் விதியாஸமிருப்பதா
ய் பார்வைக்குத்தோன்றினாலும் ஒரு மதத்தின் உள்கருத்திற்கும் வித்தி
யாஸப்படமாட்டாது என்பது நிச்சயம். ஆகையால் இந்த கிரந்தத்தைப்
படிக்கும் புண்ணியவான்கள் இது முதலாவது பதிப்பானபடியால் சொ
ல்பிழை வாசகப்பிழை முதலியவைகளை மன்னித்து இதிலடங்கிய கருத்
தையும் தங்கள் தங்கள் மதசாஸ்திரங்களின் தத்துவார்த்தத்தையும் நிஷ்ப
ட்சபாதமான மனதுடன் விசாரித்து ஒப்பிட்டுப்பார்த்து தங்கள் தங்கள்
அபிப்பிராயத்தை வெளிப்படுத்தவேணுமென்றும் இந்த கிரந்தகர்த்தா
வினல்பிரார்த்திக்கப்படுகிறது. இந்தகிரந்தத்தை இத்தென்னாட்டார
ஆங்கீகரிக்கும்பட்சத்தில் இதில் சுருக்கமாய் பிரஸ்தாபித்திருக்கிற ஒவ்
வொரு பாகத்தையும் விஸ்தரித்திருக்கும் அனேக கிரந்தங்களிலிருந்து ச
விஸ்தாரமாக எழுதசசித்தனுக இருக்கும்.

விதேயன்

ஏ. சிவராவ்.

உ

பிர்ம்மஞானச்சுருக்கம்

விஷயசூசக அனுக்கிரமணீகை

முதல்அத்தியாயம்

		பிரிவு
1.	பிர்ம்யஞானம்	1
2.	பிர்ம்மஞானிகள்	2
3.	பிர்ம்மஞானகிரந்தங்கள்	3
4.	வேதஉபநிஷத்துகளின் இரண்டு அர்த்தங்கள்	4—5
5.	பிர்ம்மஞானசபை	6
6.	இச்சபையின் உத்தேசங்கள்	7—14
	(1) முதலாவது உத்தேசம்	8—11
	(2) இரண்டாவது ஷை	12
	(3) மூன்றுவது ஷை	13
7.	இச்சபையின் வருப்புகள்	15
8.	ஷை பிரயோசனம்	16
9.	பிர்ம்மஞான விசாரத்தில் தற்காலபிரவிர்த்திக்கும் காரணம்	17

இரண்டாவதுஅத்தியாயம்.

1.	பராபிர்ம்மம்	18
2.	இதின் வியக்த அவ்வியக்த ஸ்வரூபங்கள்	19
3.	மன்வந்திர பிரளயங்கள்	20
4.	அவ்வியக்த நாராயணன	21
5.	வியக்த ஈசுவரன்	22—23
6.	மூலப்பிரகிருதி	24
7.	மஹத்தத்துவம்—சக்தி	25
8.	பிர்ம்மாண்டம்	26

9. ஜடவழுணிகாரங்கள் 27—29
10. சூரியமண்டலம் 30
11. கிரகமாலிகை 31
12. பூமியின் அவஸ்தாபேதங்கள் 32
13. சிருஷ்டியில் சைதன்னியபிரவிர்த்தி 33—34
14. மானிடவர்க்கங்கள் 35—6
15. வர்க்கங்களின் காலம் 37
16. மானிடஉற்பத்தி அக்னிஷ்வத்த பர்ஹிஷ்வத்த பிதிருக்கள் 38
17. ஸ்திரீபுருஷவிபாகம் 39
18. மனிதனுடைய முதல் ஜன்மம் 40
19. பிரளயம் 41—2

மூன்றுவது அத்தியாயம்—மனிதன்

---

1. மனிதன்—7 தத்துவங்கள் 43.
2. ஸ்தூலசரீரம்:—(44—46)
1. வஸ்தூலசரீர உற்பத்தி 44
2. வஸ்தூல அணுக்களின் பிரஞ்ஞை 45
3. வஸ்தூலசரீரத்தின் மரணம் 46
3. லிங்கசரீரம்:—(47—53)
1. லிங்கசரீரம் யாது 47—8
2. லிங்கவஸ்தூல சரீரங்களின் சம்பந்தம் 49
3 ஷை உயிர் வியாபாரம் 50
4. லிங்கசரீரத்தின் பிரஞ்ஞை 51
5. பாஹிய பத்தார்த்தஞானம் 52
6. லிங்கசரீரதின் மரணம் 53
4. பிராணன்:—(54—57)
1. பிராணனுக்கும் ஜீவனுக்கும் பேதம் 54
2. பிராணனுடைய செயல் 55—6
3. மரணத்திற்குப்பின் பிராணனுடைய ஸ்திதி 57
5. காமம்:—(58—60)

1. காமலக்ஷணம் 58,
2. காமத்தின் செயல் 59
3. காமரூபம் 60
6. நசித்துப்போகும் ஸ்வரூபத்தின் உபசங்காரம் 61
7. மனது:—(62—81)
1. மனதின் பிரிவுகள் 62
2. மனிதன் என்னும் பதத்தின் அர்த்தம் 63
3. சுத்தமனதின் லக்ஷணம் 64
4. ஜீவனுடைய முதல் ஜன்மம் 65
5. அசுத்தமனது:—(66—77)
1. அசுத்தமனதின் லக்ஷணம் 66
2. ஷை இருவித கிரியைகள் 67
3. ஷை இருவகை நிபந்தனைகள் 68
4. அசுத்தமனதிலால் உண்டாகும் பிரமை 69
5. அசுத்தமனதின் பிரவிர்த்தி 70
6. ஷை சுவேச்சா சக்தி 71
7. சுவேச்சாசக்தியின் மூன்றுவிதபரிணமங்கள் 72
1. முதல்விதம் 73
2. இரண்டாவதுவிதம் 74
3. மூன்றுவது விதம் 75
6. 4-5 வது அம்சங்களின் ரூபங்கள் 76—7
7. சுத்தமனது:—(78—81)
1. சுத்தமனதின் சக்திகள் 78—9
2. சுத்தாசுத்தமனதுகளின் வித்தியாசம் 80
3. பிராத்தனையின் கருத்து 81
8. டீக்ஷி-ஆத்மா 82—3
9. ஏழு அம்சங்களின் சம்பந்தம் 83 (ஏ)
10. பிர்ம்மாண்ட பிண்டாண்டசம்பந்தம் 84

நான்காவது அத்தியாயம்.

மரணம் பிந்தினவஸ்திதி.

1. பிரளயமரணசாதிருசியம் 85

2. மரணத்துக்குப்பின்னும் காமமனதின் பிராதானியதை 86

3. ஸ்தூலசரீரத்தின் மரணம் 87

4. லிங்கசரீரத்தின்கதி:— (88—93)

1. லிங்க சரீரத்தின் அடுத்தஸ்திதி 88—9

2. சாகும் சமயத்தில் பிரஞ்ஞை 90

3. செத்தபின் பிரஞ்ஞை 91

4. லிங்கசரீரத்தின் மாணம் 92—3

5. காமலோகம்:— (94—111)

1. காமலோகம் 94

2. இரண்டாவது மரணம் 95

3. பிராணனுடைய ஸ்திதி 96

4. காம்ரூபநிலைமை 97—98

5. சுத்தாந்தக்கரணமுள்ளவனுடைய ஸ்திதி 99—101

6. சாதாரணமனிதனுடையஸ்திதி 102—3

7. வெகுகெட்டவர்களின் கதி 104—7

8. சுவர்க்காரோஹணம் 108

9. காமரூபத்தின் கதி 109

10. காமரூபகாலம் 110

11. காமரூபம் மருபடியுஞ் ஜீவனைச்சேருதல்

6. சுவர்க்கலோகம்:—(112—122)

1. சுவர்க்கலோகம் 112

2. சுவர்க்காணுபவம் 113–5

3. சுவர்க்கலோகபிரிவுகள் 116–7

4. சுவர்க்காணுபவம் சத்தியம் 118—9

5. சுவர்க்கத்தில் பிரஞ்ஞை 120

6. சுவர்க்காணுபவம் சிலருக்குமட்டுமே 121

7. சுவர்க்கத்தில் ஞானவிருத்தி 122

7. மாணம்முதல்பிரஞ்ஞையின் ஸ்திதி 123

8. பூலோகத்துக்குத்திரும்புதல் : 124

9, நிர்வாணம் 125

10.பூலோகத்துக்கும் மற்றலோகங்களுக்கும் சம்பந்தம் 126

ஐந்தாவது அத்தியாயம் புனர்ஜன்மம்

1. புனர்ஜன்மம் 127
2. பதத்தின் அர்த்தம 128
3. புனர்ஜன்மமெடுக்கிறது எது 129—30
4. புனர்ஜன்மம் எடுக்காதது எது 131
5. மனிதன் மிருகமாகக்கூடுமா 132
6. புனர்ஜன்மமுண்டாகும விதம் 133—4
7. புனர்ஜன்மத்தின் பிரயோஜனம் 135—6
8. புனர்ஜன்மகாரணம் 137—8
9. ஜனனபூமிஜாதிகுலநிர்ணயம் 139
10. ஸ்திரீபுருஷநிர்ணயம் 140
11. புனர்ஜன்மம் அவசியமென்பதற்குக் காரணம் 141—2
12. புனர்ஜன்மருசுகள் 143
13. ஆக்ஷேபசமாதானங்கள் 144

ஆறவது அத்தியாயம் கர்மம்

1. கர்மம் 145
2. கர்மத்தின் செயல் 146
3. கர்மம் பாரபக்ஷமற்றது 147
4. கர்மம் பலத்தைக் கொடுத்தே தீரும் 148
5. பிரார்த்தனையின் இரகசிய அர்த்தம் 149
6. மனிதனுடைய செய்கை கர்மாதீனமா அல்லது இச்சாதீனமா 150-2
7. கர்மதத்துவத்தில் நம்பிக்கை 153
8. சமஷ்டி கர்மம் 154
9. கர்ம இரகசியம் 155

ஏழாவது அத்தியாயம்

தர்மம்

---

1. கர்ம விதிகள் 156-7
2. சுருக்கம்:—பக்கம் 77 முதல் 82 வரையில்

பிர்ம்மஞானச்சுருக்கத்தின் பிழைதிருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தல்
5	24	காரி	காரிய
7	36	சேர்ந்திருக்க	சேர்ந்திருந்தா
9	18	சகலரூபம	சகலரூபம்
10	2	பாயபாவனை	பயபாவனை
13	14	காரணரூபமாயும்	காரணரூபமாயும்
15	13	சூட்சும்	சூட்சும
16	27	வர்ந்	வர்க்க
18	19	பிரமமாண்டபதத்துக்குழு [ன்	42 லகமும் சேர்க்கவேண்டி. [யது
20	22	மனிதனுடை	மனிதனுடைய
23	19	கோளகங்களில்	கோளகங்கள்
24	22	பரிச்சே	பரிச
26	30	பொருட்டொன்றத	பொருட்டுத்தான்.
27	30	மனைதயு	மனைதாயும
29	10	சேரூடல்	சேராமல்
30	16	செய்வதும	செய்தும
35	25	எர்த	ஏர்த
38	19	பிரிந்ர	பிரிந்த
44	28–9	சமரூபத்தல்	காமரூபத்தில்
49	9	பூலோகத்துகரு	பூலோகத்துக்கு
50	1	26	126
	32	சமுபதம	சப்தம்
	32	பதார்	பதார்த்
52	2	யர்ய	யாய்
56	30	பென்லால	பென்லலால்
58	18	பேர்	போ
60	20	வருவதற்கு என்னும் பதத் [திற்கூப்பின்	முன் என்னும் பதகதைச் [சேர்க்கவும
65	18	விடுகிறது	விடுகிறது
66	3	சங்ரை	சங்கை
71	25	மனிதனுடை	மனிதனுடைய
73	8	கடவிட்டு	தவிட்டு
	9	தகிலும்	டத்திலும்
75	11	வேண்டியகர்	வேண்டியகா
78	18	கோள	கோளா
81	3	பரிய்சயை	பரிச்செய்ய
	15	மேலேச	மேலேஸ்

[பிர்ம்மஞானமுக்கியதத்துவங்களை என் புத்திக்கு எட்டினமட்டில் நான் கிரகித்தபடி அன்வகள் அடியில் வருமாறு விவரிக்கப்பட்டிருக்கின்றன.]

ஓம்.

பிர்ம்மஞானச்சுருக்கம்.

முதலாவது அத்தியாயம்.

1. பிர்ம்மஞானமென்பது பிர்ம்மத்திலுடைய ஞானமென்று அர்த்தமன்று, நிவ்வியஞானம் அல்லது கேவலஞானம் எனபது பொருள். இது பெறக்கூடிய அறிவின் முடிவு. இதற்குமேல் அறியக்கூடியதாய் யாதொன்றுமில்லை. இது அனுதியாயுள்ள சகலபாஷ்யமதங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் மூலாதாரமான சுப்தவித்தை அல்லது இரகஸ்ய நூல் சகலமதங்களின் லக்ஷியார்த்தங்களையும் ஒத்துப்பார்க்கின், சகலத்துக்கும் ஒரே ஆதாரமாகவிளங்குவது இதுவே. பற்பலமதஸ்தாபகர்களிலும் அனுஷ்டானங்களிலும் காணப்படுகிற விஷயங்களெல்லாம் இந்த சுப்தவித்தையின் தத்துவங்களையே விளக்குகின்றன. சகலமதஸ்தாபகர்களும் ஸர்வவியாபகமான மூலகாரணத்தால் ஜகத்து விளங்குவதாய் வியவகரிப்பதால், அதைப்பிரதிபாதிக்கும் ஞானமும் ஒன்றுகவே இருக்கவேண்டுமென ஊகிக்கக்கூடியது.

2. இந்த சுப்தவித்தை பெரும்பான்மை இந்தியாவிலிருந்த பூர்வீக இருஷிகளாலும், சிறுபான்மை திராதேசமகான்களாலும், அனுபவிக்கப்பட்ட அனுபவங்களை ஆதாரமாய்க்கொண்டு அறியப்பட்ட உண்மையே. ஒரு பதார்த்தத்தின் ஞானம் அதைத்தரிசிக்கும் இந்திரியத்தைப்பொருத்திருக்கவில்லையா? சூட்சுமமான கர்ணேந்திரியம் அதி சூட்சுமமான சங்கீதசாரத்தைக்கிரகிக்கிறதுபோல் சாதாரணமான கர்ணேந்திரியம் கிரகிக்கிறதில்லை. பிறப்புமுதல் கண் இல்லாதவனுக்கு வர்ணஞானமே இருக்கமாட்டாது. ஆகையால் ஞானசாதனங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாயும் தீக்ஷணமாயும் இருக்கிறதுகளோ அவ்வளவுக்கு அவ்வளவு ஞானவிஷயம் அதிகப்படுகிறது. பூர்வீக இருஷிகள் எல்லாரிடத்திலும் பீஜரூபமாயிருக்கிற அனேகசாதகங்களை ஒருவித சிட்சையால் பக்குவப்படுத்தி அவைகள் மூலமாக பிர்ம்மாண்டத்தின் தத்துவங்களை அதாவது சமஸ்தத்துக்கும் மூலகாரணம், ஜகத்து, ஜீவன், ஜனனம், மரணம், மோக்ஷம் முதலியவைகளின் இரகஸியங்களை அறிந்திருந்தார்கள். இருஷிகளும் நம்மைப்போலவே மாதுர்க்கர்ப்பத்திலிருந்து பிறந்த மனிதர்களாயினும் ஸ்வப்பிரயத்தனத்தால் ஞானிகளானவர்கள். இந்த ஞா

னமானது வேறு கற்பனையாயாவது அனுமானமாயாவது இராமல் அ'த னை அடையவேண்டிய சாதனங்களைச்சாதிக்க விரும்பினோரால் பிரத்தியக்ஷமாய அனுபவித்து அடையப்படுகிறதென்று இவர்கள் சொல்லுகிறார் கள்.

3. இவ்விதமாய் அறியப்பட்ட தத்துவங்களின் இரகசியங்கள் எக் காலத்திலும் ஜனங்களுக்கு உபயோசப்படவேண்டும் என்கிற கருத்துட ன் இவைகளை வேதத்திலும், உபநிஷத்துகளிலும் சொல்லியிருக்கிறார்க ள். அவர்களுக்குப்பின்னிருந்த யோகிகளும் மகான்களும் தங்களுடைய ஸ்வானுபவங்களால் மேற்சொல்லிய இரகசியங்களின் உண்மையை ஸ்தா பித்துவந்தார்கள். இப்போது இருக்கும் ராஜயோகிகளும் அப்படியே செ ய்கிறார்கள். ராஜயோகம் ஒருவித சிட்சையை அபேக்ஷிக்கிறதினாலும் காலவிசேஷத்தை அபேக்ஷிக்காததினாலும், இந்த சிட்சைக்கு உட்படுகி றவர்கள் எக்காலத்தில் ஜனித்திருந்தாலும் அவர்களுக்கு அது சுவாதீ னமாய்விடுகிறது. ஆகையால் இப்போதும் ராஜயோகிகள் இருக்கக்கூ டும். மேலும் இவர்களின் பரம்பரை இருப்பதாகவே இந்துக்களின் அபிப்பிராயம். இந்துதேசத்தில் எந்தவிடத்தில் இவர்களைப்பற்றிப்பே சினாலும் ஜனங்கள் இவர்களைப்பார்க்காவிடினும் இல்லையென்று சொல் லமாட்டார்கள்.

4. வேதங்களுக்கும் உபநிஷத்துகளுக்கும் இரண்டு அர்த்தங்களுள. ஒன்று வாச்சியார்த்தம் அதாவது பதத்தின் அர்த்தத்தால் தொனிப்ப து. மற்றொன்று லக்ஷியார்த்தம் அதாவது ஊகிக்கத்தக்க இரகசியமா ன கருத்து. இவைகளில் வாச்சியார்த்தம் எல்லாருக்கும் தெரியும்படி யாயிருந்தாலும் லக்ஷியார்த்தம் சிலருக்குமட்டும் விளங்குவதால் சாதார ணஜனங்களுக்கு இரகசியமாகவே இருக்கிறது. இதற்கு முக்கியமான காரணமென்னவெனில் (1) விஷயத்தைக்கிரகிக்கச்சக்தி இல்லாதவனுக் கு அதைசசொல்லியும் பிரயோஜனமில்லை. (2) அசத்ஜனங்களுக்கு சி லதத்துவங்களின் ஞானம் கிடைக்குமேயாயின், அந்த ஞானத்தை அவ ர்கள் துர்வினியோகப்படுத்தி பிரபஞ்சத்தில் துக்கத்தையே அபிவிர்த்தி செய்வார்கள். ஒரு இடத்தில் உள்ள பொருளை வேறு இடத்துக்குக் கொண்டுபோவது ஆகர்ஷணசக்தி. பணத்தில் வெகு ஆசையுள்ள அ யோக்கியனுக்கு இச்சக்தி இருக்குமேயாயின் ஊரில் அவன் பணத்தை வைப்பான். எல்லாப்பணங்களையும் தன்னிடத்தில் ஆகர்ஷிப்பதால் அவன் லோகவஞ்சனைக்குக்காரணமாவானேதவிர வேறில்லை. மேலும் குழந்தைகளிடத்தில் தீப்டொட்டியைக்கொடுத்தால் தீபம் ஏற்றமட்டும் தீக்குச்சியை உபயோகப்படுத்தவேண்டுமென்கிற ஞானமில்லாததினால் விளையாட்டில் வீட்டை எரித்துவிடக்கூடும். ஆகையால் எந்தவிஷயமு ம் சத்துபயோகஞ் செய்பவனுக்கே சொல்லவேண்டியதேயொழிய மற்ற வனிடத்தில் அது துக்கத்துக்கு ஹேதுவாகும். இக்காரணங்களால் வேதாந்த விஷயங்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றன.

5. வேதங்களின் லக்ஷிபார்த்தங்களையும் இரகசியங்களையும் உபநிஷத்துக்கள் சொல்லுகின்றன. வேதங்களைக்காட்டிலும் இவைகள் மூன்று மடங்கு அதிகமாயிருந்தன. ஆகியில் வேதங்கள் தேவாலயங்களில் பிராமணர்களின் சுவாதீனத்தில் இருந்தன. அக்காலத்தில் சகல பிராமணர்களுக்கும் எல்லாஉபநிஷத்துகளும் கிடைக்கும்படி இருந்தன. காளாவிர்த்தியில் இவர்களுடைய யோக்கியதையும் குறைய ஆரம்பித்தது. சுமார் 2500 வரு-த்துகருமுன் கபிலவஸ்துவின் அரசனான கௌதமர் சமாதியில் அந்த இரகசியங்களைத்தெரிந்துகொண்டு தத்துவங்கள் எல்லாருக்கும் பொதுவானவை என்று நினைத்து சில தத்துவங்களை எல்லாருக்கும் சிலதுகளை தகுந்த யோக்கியமான சிஷ்யர்களுக்கும் சொல்லத் தொடங்கினர். பிறகுதான் பிராமணர்கள் தங்களுடைய அருமையான தனம் வெளியாய்விடுவதைக்கண்டு உபநிஷத்துக்களைச்சுருக்கி அவைகளிலுள்ள முக்கியமானபாகங்களை அப்புறப்படுத்திவிட்டார்கள். இப்போது விளங்கும் உபநிஷத்துகள் அந்த பாகங்கள் தவிர மட்டுமே. இவைகளைத்தவிர அநேக இரகசியசாஸ்திரங்களையும் வியாக்கியானங்களையும் அப்புறப்படுத்திவிட்டார்கள். இதில் அவர்களுக்கு யாதொரு கெட்ட எண்ணமுமில்லை. சுப்பாதிரமனை சிஷ்யனுக்கு இந்த இரகசிய சாஸ்திரத்தைச்சொல்லிகொடுத்து வருவது பரம்பரையாய் இதைப்பாலனம்பண்ணி வருகிறார்கள். இந்த இரகசியத்தைத்திரிக்கவும் அதைச்சந்துபோகம் செய்யவும் ஜனங்களிடத்தில் சாடர்த்தியம் காணப்படுவதற்குத்தகுந்தபடி இந்த சூத்திரத்தை மகான்கள் வெளியிடுகிறார்கள்.

6. கல்கிபுராணம் ஸ்ரீபத்மாகவதம் முதலிய கிரந்தங்களில் கலியுகத்தோன்றி ஐயாயிரமாண்டுக்கப்பால் விஷ்ணுயசோ குறைந்து விடுகிறதென்றும் ஜனங்களுக்குத்தர்மசிரத்தையும், புண்ணியபாபமென்கிற அறிவும் முற்றிலுமில்லாமல், ஜடவஸ்துக்களில் சுவல்வதடுத்தியுண்டாகி விபரீத மனடவாக்களென்றும் நம்முடைய முன்னோர்களாகிய ஞானிகள் தங்களுடைய திவ்விய ஞானத்தினல் அறிந்து குறிப்பிட்டிருந்ததற்கு அனுகூலமாய்க்காலஸ்திதியுமிருந்துக்கொண்டுவருகிறது. விதியை மதியால் முற்றிலும் வெல்லக்கூடாதாயினும் அதின் வலிமையை ஓருவிதமாக மாற்றலாமென்பது ஞாயமானதாலும், இந்த ஜன்மத்தில் ஒருவன் செய்யும் முயற்சியானது வீணுகாமல் மறுஜன்மத்தில் பலனைக்கொடுக்கிறதென்று "விட்டகுறை தொட்டகுறை" என்னும் பழமொழியால் சுலபமாய் நாம் அறியக்கூடியதாலும், அணைந்துபோகிற தீபம் ஒங்குகிற நியாயப்படி குறையப்போகிற விஷ்ணுயசோ ஒங்கும் இச்சமயத்தில், பிரகிக்கும் புத்தி நிஷ்டூரமாயிருப்பதால் ஜனங்களுக்கு தத்துவமார்க்கத்தைக்காட்டிவரப்போகிற அந்தகாரத்திலிருந்து கரையேற்றலாம் என்று நினைத்து

மாடேம் ப்ளாவாடஸ்கி என்னும் புண்ணியவதி மூலமாக 1875-வது நவம்பர்-மீ 17-உ பிர்ம்மஞான சபையை ஜீவகாருண்யம் பொருந்தியமகான்கள் ஸ்தாபித்தார்கள். தத்துவவிவேசகத்துக்காக ஏற்பட்டிருக்கிற பிரதானமானசங்கம் சென்னப்பட்டணத்திலும் அதின்கிளைகள் இந்தியாவில் 143-ம் வாக்கியான ஆசியாகண்டத்தில் 25-ம் யூரோப்தேசத்தில் 30-ம் அமேரிகாதேசத்தில் 67-ம் சில்லரை 14 மாக பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருக்கின்றன. கிளைகள் நூதனமாயும் ஸ்தாபிக்கப்பட்டுவருகின்றன.

7. இச்சங்கத்தின் உத்தேசங்கள் மூன்று:—

(1) யாதொருபேதமன்றியில் ஜனங்களுக்குள் பிராதருபாவத்தை ஸ்தாபித்து அதை அபிவிர்த்திசெய்வது.

(2) ஆசியாகண்டத்தில் விளங்கிவரும் ஸம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளில் ஜனங்களுக்கு ஆஸக்தியை உண்டுபண்ணி, அப்பாஷைகளில் எழுதியிருக்கப்பட்ட மதக்கிரந்தங்கள் சாஸ்திரங்கள் முதலியவைகளில் ஜனங்களின் ஞானத்தை அபிவிர்த்திசெய்வது.

(3) பிர்ம்மாண்டத்திலும் பிர்ம்மாண்டமாகிய மனிதனிடத்திலும் அடங்கிய சகலரகசியசக்திகளையும் கண்டுபிடிப்பது.

8. சகோதரபாவத்தை ஸ்தாபிப்பதே ஒவ்வொருமதத்தின் கருத்து. ஆனல் இந்தக்கருத்து அனுஷ்டானத்தில் நிறைவேரவில்லை. ஒவ்வொரு மதஸ்தர்களும் மோக்ஷத்தை அடையத்தங்கள் மதத்தில் சொல்லிய மார்க்கமே சரியானதென்றும் மற்ற மார்க்கங்கள் பிசகு என்றும் நினைத்து இதரமதஸ்தர்களைத் துவேஷிக்கிறார்கள். இத்துவேஷத்தால் பட்டப்பகலில் வெகு கொலைகள் நடந்ததையும் நாம் சரித்திரங்களில் பார்த்திருக்கிறோம். ஒருமதஸ்தர்க்குள்ளாகவே ஒருவர்க்கொருவர் பாராட்டிவரும் சத்துருபாவமும் ஒருஜாதியாருக்கும் மற்றஜாதியார்களுக்கும் நேரிடும் உபிர்ச்சேதமுள்ளகலகங்களும் காள்தோறும் விர்த்தியாய்வருகின்றன. இக்காரணங்களால் சகோதரபாவம் அதாவது சகல பிராணிகளிடத்திலும் அன்பு விசேஷமாய் நிறைவேறுமல்போய்விட்டது. உலகத்திலுள்ள மானிடப்பிரஜைகள் எல்லாம் எங்கும் நிறைந்த பரமாத்மாவின் முக்கியாம்சமானதால் நாமெல்லோரும் பெரியகுடும்பிகளென்ற ஒரே அபிவிணல் ஐக்கியமுற்று ஒருவரையொருவர் சகோதரராக அபிமானித்துப் பொதுவான சேஷமம் நம்மதென்று ஒவ்வொருவரும் நினைத்து நடந்தால் உலகத்தில் எவ்வளவு சேஷமமும் தர்மமும் ஓங்கிச்செழிக்கும். ஆனல் இவ்விதஅபிவு உலகமெங்கும் பரவிப் பலனை அடைய முயற்சிப்பது அசாத்தியமென்றும், வட்டில் எழுதி ஆனந்தமடைந்து சொப்பனங் காணமட்டி

ல் யோக்கியமென்றும் சிலர் கினைப்பார்கள். இச்சிறந்த அறிவை நீலோற்பட்ட ஜகத்தண்டானகாலம் முதல் பிரயத்தினப்பட்டும் இந்தச் சிறந்த ஔஷதத்தைக் கருத்தில் கொண்டும் பற்பலகாலங்களில் பரமாத்மா அவதாரஞ்செய்தும் அக்காலநிலைமைக்குத்தக்கபடி பல மதங்களோ யேற்படுத்தியும் இன்னும் சித்தியாகவில்லையென்று சிலர் அதைரியமடையலாம். ஆனல் இச்சிறந்த ஔஷதத்தில் வீரியமில்லையென்று சொல்லக்காரணமில்லை. ஏனென்றல் பலதேசத்திலும் அதர்மம மேலிட்டகாலத்தில் தோன்றிய அவதாரபுருஷர்கள் மனுஷ்யாதிகொண்ட ஜனங்களுடைய அம்மனகோணையப்போக்கி தர்மத்தையும் கல்லொழுக்கத்தையும் நிலைநாட்டக் கருதி காலதேசவர்த்தமானங்களுக்குத்தக்கபடி சகோதரபாவமென்னும் தத்வமாகிற ஓரேதாய்ச்சரக்கைக்கொண்டு சூர்ணம், பஸ்மம், லேகியம், கஷாயம்போல பலவிதமாக அவரவர்களுக்கு மாதுரியமுண்டாகும்படிச் செய்து புராணம் இதிஹாஸாதிகளான பத்தியங்களுடனும் அனுபானங்களும் உபயோகித்துவந்தார்கள். காளாவிர்த்தியில் இத்தாய்ச்சரக்கு மறந்துபோய்விட்டது. இக்காலத்தில் மறுபடி இந்த சகோதரபாவத்தை அங்கீகரிப்பதால் ஒருவருக்கு ஒருவருடன் உள்ள துவேஷந் நீங்கி மற்படியும் ஜகத்தில் சுகமே மேலிடுமென்பதில் சந்தேகமில்லை.

9. சகோதரபாவத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்பதினல் எல்லாமதங்களும் ஒன்றுகப்போகவேண்டுமென்பதும் அல்லது பந்திபோஜனம் முதலியவைகளில் ஜனங்களுக்கு ஒத்துமை உண்டாகவேண்டுமென்பதும் கருத்தன்று. உண்பது உடுப்பது முதலியவை பிரகிருதிஸ்வபாவத்தால் வேறுபட்ட ஸ்தூலதேகத்தின் காரியங்கள். சகோதரபாவமோ வேற்றுமையற்ற காரணசரீரலக்ஷணம். ஆதலால் நல்லறிவு, தத்துவஞானம் இவைகளினடியாகப்பிறக்குஞ் சகோதரபாவம், ஸ்தூலதேகத்தின் காரியங்களில் ஒருமைப்பாடன்றியே நிலைபெறக்கூடும். பிரகிருதி ஸ்வபாவத்தாலேயே வேறுபட்டிருக்கிற ஸ்தூலதேகக்காரியங்களில் ஜனங்களுக்கு ஒத்துமை உண்டாவது அவசியமில்லை. ஒரு இந்துகுடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் அவரவர்களுக்குரிய தொழில்களைப் பலவாறுகச்செய்துவந்தாலும், உணவு உடுப்பு முதலியவைகளில் ஒவ்வொருவருடைய ஸ்வபாவம் வேறுபட்டாலும், குடும்பத்தில் தாயார் பாட்டியார் முதலிய பெரியோர்கள் தொட்டு மோரக்கூடாத புராதனம் முதலிய அசாஸ்திரீயமான ஆகாரங்களை அக்குடும்பத்திலுள்ள சிறுவர்கள் புசித்து வந்தாலும், குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் மற்றவர்களைத் தம் குடும்பத்தின் அ

ங்கமாகபாவித்து அபிமானித்து வருவதுபோல இச்சபையில் சேர்ந்தோர் நடையுடை பாவனைகளிலும ஜாதி ஆசாரங்களிலும் பலவாறுக ஏற்பட்டிருந்தாலும் காமெல்லோரும் ஒரே ஆதிகாரணத்திலிருந்துண்டான ஒரே வம்சஸ்தர்கள் என்கிற நிச்சய அறிவினல் சகோதரபாவம் சித்திக்கு மென்று அந்த அறிவை உலகத்தில் நிலைநாட்ட முயல்றுவருகிறார்கள்.

10. உலகத்தில் பலவாறுக ஏற்பட்டிருக்கிற சங்கங்களில் பிரவேசிக்க ஒருவனுக்குத் தந்தியுண்டாக்குவது மதம், குலம், தொழில், கல்வி, சமபந்து, இனமுகளை. இச்சங்கத்திலோ ஜனங்களிடத்தில் சகோதராபிமானமும் சத்தியசங்கல்பமுமே போதுமானவை. இதரசங்கங்களில் ஒருவன் மற்றவர்களுடைய வகாள்ளைக்கு வேறுகச் சொப்பனத்திலும் எண்ணக்கூடாது. இச்சங்கத்திலோ வென்றால் அவர்அவர்களுடைய மதங்களும கொள்ளைகளும் அவரவர்களுக்கு உரித்தானவை யென்றும் ஒருவருடைய கொள்ளைகளாவது அல்லது ஆசாரத்தினுலாவது ஜனங்களுடைய கூடும்பத்திற்கும் பொதுநன்மைக்கும் தூறை நேரிடக்கூடியதாலுலாழிய அவைகளில் மற்றவர்கள் தலையிட்டுக்கொள்ள நியாயமில்லை யென்பதும் இச்சங்கத்தின் முக்கியமான கொள்கையாய் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

11. இக்காரத்தின்படி பிரகிருதத்தில் இச்சபையில் சேர்ந்திருக்கும் ஹிந்துக்கள், மகம்மதியர்கள், கிருஸ்துவர்கள், பார்சிகள் முதலிய மதஸ்தர்கள் அவரவர்களின் கொள்கைகளின்படி நடந்து வந்தபோதிலும் தத்துவவிசாரணவிஷயத்திலும் பிறருடைய சுகதுக்கவிஷயங்கள் விஷயத்திலும் ஒன்றுகச்சேர்ந்து அனுகூலமான காரியத்தையே செய்து வருகிறதினல் சகோதரபாவத்தை அனுஷ்டானத்தில் காண்பிக்கிறார்கள். இந்த விசேஷதமான காட்சியை இச்சங்கத்தில் தவிர வேறு சங்கத்தில் பார்ப்பது அரிது. இதில் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு வருஷத்திலும் ஒரு இடத்தில் (முக்கியமாய்ச் சென்னபட்டணம் லந்தன், நியூயார்க்கு) கூடிவருவதே இதற்குப் பிரத்தியகூப் பிரமாணம்.

12. (2) பரப்பிர்ம்மத்தினின்றும் சகலமும் உண்டானபடியால் சகோதரபாவம் இருக்கவேண்டுமென்று முன் சொல்லப்பட்டது. இந்த விஷயமாய்த தத்துவங்கள் முன்னோர்களால் சம்ஸ்கிருதம் முதலிய பிராசீன கிரந்தங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் சமஸ்கிருத பாஷைதான் ஆதியான தெய்வபாஷை. இதில்தான் பூர்வீக மகான்கள் ஆதிகாலமுதல் தங்களுடைய, அனுபவங்களால் தெரிந்துகொண்ட சகலதத்துவங்களையும் சொல்லியிருக்கிறார்கள். இந்த சம்ஸ்கிருத பாஷையிலிருக்கப்பட்ட கிரந்தங்கள் மற்றப்பாஷாக்கிரந்தங்களைவிட வெகு அதிகம்.

இக்கிரந்தங்களைப்பார்த்து உண்மையை அறியாமலிருப்பதே சகோதரபாவத்தின் குறைவுக்குக் காரணம். ஆகையால் அக்கிரந்தங்களில் ஜனங்களுடைய புத்தி திரும்பும்படிச் செய்வது இரண்டாவது உத்தேசம். இந்த உத்தேசத்தின்படி வெகு கிரந்தங்கள் சம்ஸ்கிருதம் தெரியாதவர்களுடைய உபயோகத்திற்காக மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. விசாரசாகர மொழிபெயர்ப்பும் இக்கருத்தை அனுசரித்தேயானது. வேதாந்தசாரத்தினுடைய பாவத்தீபத்தை அனேக பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. யூரோப் தேசத்தில் மட்டும் பலபாஷைகளில் அது விளங்குகிறது. இதினால் அவ்விடத்திலுள்ள ஜனங்களின் நோக்கத்தை ஊகிக்கலாம்.

13. (3) சரீரமே ஆத்மாவென்பதும் மரணத்துக்குப்பின் யாதொன்றுமில்லை என்பதும் அனேகருடைய கருத்து. இது பிசகு. சரீரத்தைத்தவிர ஆத்மா வேறுண்டு. அந்த ஆத்மாவுக்கு அணிமாதி அனேக சக்திகளுள. அச்சக்திகளால் ஆத்மா வெகு காரியங்களை முடிக்கலாம். ஜனனமரணாதி சம்சாரத்தை நீக்கிக் காண்டடலாம். இதற்கு மார்க்கங்கள் எற்பட்டிருக்கின்றன. இவ்விஷயங்களில் புத்தியை செலுத்த வேண்டுமென்பது மூன்றாவது கருத்து.

14. இம்மூன்று கருத்துகளைக் கொண்ட இச்சங்கமானது சகோதரபாவத்தையும் நமது தேசத்தின் பிராணதாரமான கல்விவளர்ச்சியையும் நியாயமான காரியங்களை நிச்சயத்துடன் விடாமுயற்சியுடனும் அஞ்சாமலும் செய்யவேண்டியதையும் எதிர்நோக்கி வருவதுடன் மேற்கணக்கியிலுள்ள நிரூபவர வாதிகளால் இதுவரையில் கண்டனியப்பட்டிருக்கிற சாஸ்திரங்களுக்கெட்டாமல் நமது வேதாந்த முதலான சாஸ்திரங்களையும் யோகமார்க்கங்களையும் சித்திகளையும் கூடியமட்டில் தெளிவாய் எடுத்துக் காட்டுகிறது. சர்வமதசம்மதமாயும் சர்வ சாஸ்திரங்களால் ஒப்புக்கொள்ளத் தக்கதாயும் ஜனங்கள் அறிந்து கரையேற அவசியமான தர்மான பொதுவான தத்துவங்களைமட்டும் உபதேசித்து இப்படி பொதுவாயுள்ள பிரமாணங்களால் துவேஷபுத்தியையும் தற்பெருமையையும் நீக்கி இவ்விதத் தத்துவங்களை கொஞ்சங்கொஞ்சமாய் அடக்கிக்கொண்டிருக்கிற பற்பல மதங்களில் அவரவர்கள் மதங்களில் அவரவர்களுக்கு சிரத்தையை உண்டாக்கி மற்றமதங்களில் ஜனங்களுக்கு சமபுத்தியை யேற்படுத்தி சகோதரபாவத்தை நிலைநாட்ட முயற்சி செய்து கொண்டு வரும் இச்சங்கத்தால் நமக்கு நன்மையே தவிர வேறில்லை.

15. மேற்சொல்லியபிர்ம ஞானசபையில் இரண்டு வகுப்புகளுள. (1) ஆந்தரம் (2) பாஹ்யம். பாஹ்யவகுப்பில் சேரப்பட்டவன்தான் ஆந்தரவகுப்புக்குத் தகுந்தவனாகிறான். இவன் எந்தமதத்தில் சேர்ந்திருந்த

லும் அலலது காவ்கிகளுயிருந்தாலும் மேற்சொல்லிய 3 உத்தேசங்களில் முதலி மட்டுமாவது அபிமானிக்க வேண்டியது. சகோதரபாவத்தை ஒப்புக் கொள்ளாதவனுக்கு இச்சபையில் இடமில்லை. ஆந்தரவகுப்பில் சேரப்பட்டவன் அவ்வகுப்பின் நிபந்தனைகளை அவசியம் அனுசரிப்பதுடன் ஸ்வப்பிரியவிஷயத்தில் தன்னுடையசகலஅபிமானத்தையும் விட்டு மற்றவர்களின் நன்மைக்காகவே சகலபிரயத்தனமும் செய்யவேண்டியது.

16. பிர்ம்மஞானமென்பது ஒன்று உண்டென்பதையும் அதின்தத்துவங்களை அறிந்து அவைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருகிறபடியிர்ம்மஞானமார்க்கத்தில் செல்லக்கூடுமென்பதையும் காண்பிப்பதற்குத்தான் இந்தசபைஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதில்ஒருவன் சேர்ந்தமாத்திரத்தில் ஞானியாவான் என்று நினைப்பது வீணாசை.

17. பிர்ம்மஞானவிசாரத்தில் இச்சபைமூலமாக ஆங்கிலேயதேசத்தில் அதிகப் பிரவிர்த்தியுண்டானதற்குக் காரணமென்னவெனில் அடியில் கண்டவிஷயங்கள் எல்லாம் இதின் தத்துவங்களால் நன்றாய் விளங்குகின்றன. அவையாவன:—இந்த பூலோகம் தவிரமற்றலோகங்களின் பிரயோஜனம் அவைகளில் ஜீவனம் முதலியவை பூகம்பங்கள் முதலியவைகளாலுண்டாகும் பிரளயங்கள். நமக்குவேறானஜன வர்க்கங்கள் முன்காலங்களிலிருந்ததற்கு சாட்சியமான கட்டிடங்கள் முதலியவை, மனிதர்களுக்குள் உள்ளவித்தியாசங்கள். சகலமதங்களிலுமுள்ள வித்தியாசங்கள், துக்கம், துக்ககாரணம். அதைநிவிர்த்தி செய்யும் பிரயத்தனம் எப்போதும் சாத்தியப்படாமை,பாக்கியம் தாரித்திரியம் புத்திமூடத்தனம் மூடவம்சத்தில் அதிமேதாவிகளின் ஜனனம், அகாலமரணம், சூக்ஷ்மதிருஷ்டி சாதாரணமானமதங்களெல்லாம் எல்லாரையும் திருப்திசெய்யாமை மேற்சொலலிய விஷயங்களைப்போல விஷயங்களைத் திருப்தியாய் விளக்கிவைப்பதினல் இவ்விடத்தில்விட யூரோப் அமேரிகாதேசங்களில் ஜனங்களின் பிர்விர்த்தி அதிகமாயிருக்கிறது. இப்படிப்பட்ட பிர்ம்மவித்தியாசாஸ்திரத்தின் முக்கியதத்துவங்களை அடியில்வரும் அத்தியாயங்களில் விவரிப்போம்.

முதலாவதுஅத்தியாயம்

முற்றிற்று

பிரம்மஞானச்சுருக்கம்

இரண்டாவது அத்தியாயம்

பரப்பிரம்மம்முதல்மனிதன்வரையில்

18. எங்கும் எக்காலங்களிலும் வியாபித்துக்கொண்டும் சேதனசே தனங்களுக்கு ஆதாரமாயும், ஸ்வயம் அநாதாரமாயும், நிர்விசேஷணமா யும், ஒரு தத்துவம இருக்கிறது. இது பரப்பிரம்மம் என்னப்படும். மாண்டுக்கிய உபநிஷத்தில் சொல்லியபடி இது மனதிற்கும் வாக்குக்கும் எட்டாதது. மனதும் வாக்கும் வியக்தாவஸ்தைகள். வியக்தத்தால் அவ்வியக்தம் இருக்கவேண்டுமென்று சித்திக்கிறது. வியக்தம் அஸ்திரமாயிருப்பதால் ஸ்திரமானது ஒன்று இருக்கவேண்டும். இது சமஸ்தத்தை யும் அடக்கிக்கொண்டிருக்கவேண்டும். இதின் வாஸ்தவஸ்திதியை அறிய மனதினால் முடியாவிட்டாலும் இதில் நின்றும் விளங்கிய விவர்க்க பதார்த்தகுணங்களால் இதின் ஸ்வரூபம் இன்னவிதமாயிருக்கக்கூடுமென் பதை ஊகிக்கலாம். பிரகிருதி புருஷர்கள் இதின் பலதோற்றங்களே இவைகள் வெவ்வேறு அல்ல. சகல வியக்தாவஸ்தைகளிலும் விளங் கும் சின்மாத்திரம் இதுவே. விளங்கும் ஸ்தானமாகிய சித்தாகாசமும் இதுவே. ஸ்ரீசங்கராசாரியர், பிரம்மசூத்திரத்தின் 23-வது சூத்திரத்தின் விபாக்கியானத்தின் கடைசியில் சொல்லியபடி வேறு அநிஷ்டாதா இல்லாதபடியால் பரப்பிரம்மமே கர்த்தா அதாவது புருஷன். மேலும் வேறு உபாதானமில்லாதபடியால் பரப்பிரம்மமே பிரகிருதி. இது சுத்த சதரூபம். இது ஞாதாவன்று. ஞானமுமன்று, ஞேயமுமன்று. ஆனால் சகலஞாத்ருஞானஞேயங்களுக்கும் மூலகாரணமானது. அசங்கமாயும் அபாரமாயுமிருக்கிற இந்த சத்தைதத்தவிர வேறு யாதொன்றும் சத்தியமன்று.

19. இதின் வியக்தாவியக்தஸ்வரூபங்கள் விஷ்ணுபுராணத்தில் அடியிற்கண்டபடி விளரிக்கப்பட்டிருக்கின்றன. பிரம்மம், மூர்த்தம், அமூர்த்தமென்று சுபாவத்தில் இருவகைப்படும்; மூர்த்தமாவது சரீரத்தோடுகூடியது. அது ஹிரணியகர்ப்பன் முதலான பத்தஸ்வரூபம். அமூர்த்தமாவது சரீரமில்லாதது; அது முக்தஸ்வரூபம்; இந்த ஸ்வரூபம் பரமென்று சொல்லப்படும். முந்தினது அபரமென்று சொல்லப்படும். இப்படி மூர்த்தாமூர்த்தமயமான பிரபஞ்சமெல்லாம் பிரமபாவனை கருமபாவனை உபயபாவனை எனமூன்றுவகைப்பட்டபாவனைகளாயிருக்கின்றன. பாவனையாவது பொருள்களை. இடைவிடாது நினைத்தல். பிரமபாவனையா

வது பிர்ம்மத்தைப்பாவித்தல். கருமபாவனை கருமத்தைப்பாவித்தல். உபாயபாவனைபாவனை இரண்டையும் பாவித்தல். சநகாதியோகிகள் பிரமபாவனையோடுகூடினவர்கள். தேவர்களாதியாய்த் தாவராந்தமாகநின்றவெல்லாம் கருமபாவனையோடுகூடினவர்கள். ஹிரணியகர்ப்பன் முதலானவர்கள் போதமும் அதிகாரமும் உடையவர்களாகையால் உபயபாவனைகளோடுகூடினவர்கள். விசேஷமான ஞானகர்மங்கள் யாவும் கூடியிருக்காமலிருக்குமளவில் முன் சொல்லப்பட்ட விசுவரூபமான பிர்ம்மம் இருக்கின்றது. தேவமனுஷியாதிபேதஞானத்தினாலே ஞானம் வேறுபட்டிருக்கிற முன் சொல்லப்பட்ட ஜீவர்களைக் காட்டிலும் பரமென்று சொல்லப்பட்ட ரூபம் வேறாயிருக்கிறது. அது ஜாதி முதலான சகல பேதங்களும் இல்லாததாய் வாக்குக்கு எட்டாததாய் குறைவு முதலான விகாரங்களன்றி ஒருபடிபட்டதாய்ச் சுயம்பிரகாசமாயுள்ள ஞானஸ்வரூபமான வஸ்து. அது பிர்ம்மமென்கிற பேருள்ளது. அதுதான் பரமாத்மாவான ஸ்ரீ விஷ்ணுவினுடைய அமூர்த்தமான ஸ்வரூபம்; முன் சொல்லப்பட்ட விசுவரூபத்தைக்காட்டிலும் விலக்ஷணமாய்ச் சர்வோத்தமமாயிருப்பது இதுவே. இதைச் சிக்கிக்க சாத்தியப்படமாட்டாது. ஸ்ரீவாசுதேவாம்சமாய் பிரஜாபதியாயிருக்கிற ஹிரணியகர்ப்பனும் மருத்துக்களும் வசுக்களும் ருத்திரரும் சூரியனும் நக்ஷத்திரங்களும் கிரகங்களும் கந்தர்வரும் யக்ஷரும் தைத்தியர் முதலான பேர்களும் சகலமான தேவயோனி விசேஷங்களும் மனுஷிபரும் பசுக்களும் பருவதங்களும் சமுத்திரங்களும் நதிகளும் விருக்ஷங்களும் மற்றுமுள்ள சகலபூதங்களும் பூதங்களின் காரணங்களும் இப்படிப் பிரதானமுதலாக விசேஷமீருகிற்பதும் சேதநாசேதநஸ்வரூபமாய் ஏகபாதமுள்ளதும் இரண்டுபாதமுள்ளதும் அநேகபாதமுள்ளதும பாதமில்லாததுமான சகலமும் ஸ்ரீஹரிபகவானுடைய மூர்த்தஸ்வரூபம். இது சிந்திக்கக்கூடியதானாலும் மூன்று பாவனைகளுள்ளதாகையால் சுத்தமன்று. பிர்ம்மாதி ஜீவசாதங்கள் மூர்த்தமென்று சொல்லப்படும்., அது அழிவற்றதாகையால் கூடஸ்தமென்று பெயர் பெறும். முக்தஸ்வரூபமானது அமூர்த்தமென்று சொல்லப்பட்டு அழியாதாகையால் அக்ஷரமென்று பேர் பெறும்.

20. இந்த சத்ரூப பிர்ம்மத்தில் ஒரு நியாயப்படி ஒருகாலத்தில் சலனமுண்டாகி ஒருகாலத்தில் ஸ்திரத்தன்மையுண்டாகிறது. இப்படி உண்டாகவேண்டிய காரணத்தைமட்டும் நாம் அறியோம். சலனமுண்டாகுங்காலம் பிரவிர்த்திகாலமென்றும், மன்வந்திரம் என்றும், பிர்ம்மத்தின் பகல்காலமென்றும், ஸ்திரத்தன்மையுள்ளகாலம் நிவிர்த்திகாலமென்றும், பிரளயகாலமென்றும், பிர்ம்மத்தின் இராக்காலமென்றும், சொல்லப்படும். நம்முடைய அனுபவத்தில் பகலும் இரவும் சுறுசுறுப்பும் ஓய்வும் ஜனனமும்மரணமும் நாம் பார்ப்பதுபோல, பிர்ம்மாண்ட

த்திலும் மன்வந்திரப்பிரளயகாலங்கள் மாறி மாறி வருகின்றன. மன்வந்திரகாலத்தில் எல்லாம் அனேக நாமரூபங்களோடு கூடின விசக்தாவஸ்தையை அடைந்து பிரளயகாலத்தில் மறுபடியும் ஏகாசமாகி பிர்ம்மத்திலேயே லயமடைகிறது. இப்படி அனாதிகாலமாய் நடந்துவருகிறது.

21. பிரளயத்திற்கு முடிவிலும் மன்வந்திரத்துக்கு முன்னும் பரப்பிர்ம்மத்தின் ஒரு அம்சத்துக்குச்சலனமுண்டாகிறது. இந்த அம்சத்துக்குப்பெயர் நாராயணன். இதுவும் அபூர்த்தஸ்வரூபம். இதுவும் அசங்கமாயிருக்கிறது. அசங்கமாயும் அபாரமாயுமிருப்பதற்குச்சிருஷ்டிக்கும் கன்மம் சொல்லக்கூடாது. ஏனெனில், அகண்டபதார்த்தத்தில் கண்டத்துவஞ்சம்பவிக்கமாட்டாது. சிருஷ்டியால் சங்கம் ஏற்படுகிறது. ஏனெனில் சிருஷ்டி செய்பவர் சிருஷ்டிக்குரான் ஒரு கல்பனைசெய்து பிறகுதான் தனக்கு அன்னியமான ஒன்றைச்சிருஷ்டிக்கக்கூடும். அசங்கமானதற்கு சங்கம் எப்படி ஒவ்வும். ஆகையால் அசங்கமான நாராயணனும் சிருஷ்டி கர்த்தாவன்று.

22. இந்த அவ்வியக்த நாராயணனிடத்தில் நின்றும் விசக்தஸ்திதியை அடையும்பொருட்டுச்சிலர் ஈசுவரன் என்றும், சிலர் பிரத்தியகாத்மாவென்றும், சிலர் சதுர்முகப்பிர்ம்மாவென்றும் சொல்லுகிறார்கள். இது பிரகிருதியும புருஷனும் கூடிய அவஸ்தையாம். பிர்ம்மாண்டத்தின் உபாதானகாரணமான பிரகிருதியும நிமித்தகாரணமான சைதன்னியமாகிற புருஷனும இரண்டும் சேர்ந்திருகுமஸ்திதி இதுவே. சிருஷ்டிக்கு மூலகாரணம் இதுவே. புருஷனும் பிரகிருதியும புருஷப்பிரகிருதியின் இரண்டுவித விசக்தீகாற்றங்களே.

23. மன்வந்தாரம்பத்தில்தான் ஈசுவரன் தன்னுடைய முந்திய லயஸ்திதியை விடுகிறான். ஈசுவரனே முதலாவது ஞாதா. மற்ற ஞாதாக்கள் எல்லாம் ஈசுவரனுடைய பிரதிபிம்பங்கள். பரப்பிர்ம்மம் போல் இவர் அறியப்படக்கூடாதவரன்று. இவரை அறியவேண்டியதற்காகவே சகல மதங்களிலும் சகல அனுஷ்டானங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவர் இந்திரியங்களுக்கு விஷயமன்று; பரப்பிர்ம்மசத்துவத்துக்கு வேறன்று. ஆயினும் பிரத்தியக்ஸ்வரூபத்தால் பரபிர்ம்மத்துக்கு வேறுகவே இருக்கிறார். இவரே சச்சிதானந்த ஸ்வரூபம். சகல சிருஷ்டியும் இவரிடத்தில் ஆரம்பித்து இவரிடத்தில் லயமடைகிறது. பிரகிருதி புருஷர்களில் புருஷரூபமாக அதாவது சைதன்னிய ரூபமாகச்சொல்லவேண்டியது இந்த ஈசுவரனையே.

24. முதல் ஞாதாவான ஈசுவரனுடைய சிருஷ்டிக்குக்கூட பரப்பிர்ம்மம் ஸ்வயமாக அதாவது தான் உள்ளபடி தெரியாமல் ஒரு பதார்

தன்னால் மூடப்பட்டதுபோலக்காணப்படுகிறது. இந்த மூட்டத்திற்கு மூலப்பிரகிருதி என்று பெயர். ஒரு பதார்த்தத்தின் குணமே அந்த பதார்த்தமாகாததுபோல் மூலப்பிரகிருதியே பரப்பிரம்மமன்று. நாம றியும் குணங்களைத்தவிர வேறு குணங்களை நாம் அறிய முடியாதபடியால் மூலப்பிரகிருதியின் ஸ்வரூபத்தை நாம் உள்ளபடி அறியோம். சக ல பதார்த்தங்களுக்கும் உபாதான காரணமானது இந்த மூலப்பிரகிருதி. இதில் நின்றும் வியக்தஸ்திதியை அடையும் பிரகிருதிகுணங்கள் நாம் நமக்குத்தெரியும்.

25. ஈசுவரனிடத்தில் நின்றும் 7 தேவதைகள் ஜனிக்கிறார்கள். அவர்களுக்குப்பெயர் அணுபாதகர்கள். அவர்களுடைய சமஷ்டிக்குப் பெயர் மஹத்தத்துவம். மன்வந்திராரம்பத்தில் பரப்பிரம்மம் ஞாதாவான ஈசுவரனையும், மூலப்பிரகிருதியாயும் விளங்கினபிறகு ஈசுவரன் மூலமாகத்தன்சக்தியை வெளிப்படுத்துகிறது. சூரியனுடைய தேஜஸ் சூரியனில்லாதகாலத்திலும் இருந்துங்கூட, சூரியோதயமானபிறகுதான் சூரியன் மூலமாக வெளியாவதுபோல பரப்பிரம்மத்தின் சக்தியும் ஈசுவரன் மூலமாக வெளிப்படுகிறது. இந்தச் சக்தி பகவத்கீதையில் தைவீப்பிரகிருதி என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவே சகலசக்திகளுக்கும் மூலகாரணம். பராசக்தி, ஞானசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, குண்டலினிசக்தி, மந்திரசக்தி, இவைகள் இதில் அடங்கியிருக்கின்றன. இந்தச் சக்தியே மஹாசைதன்னியம் என்னப்படும். மூலப்பிரகிருதியில் சகல நாமரூபபேதங்கள் உண்டாவதற்குக் காரணம் இதுவே மூலகாரணம். விஷ்ணுபுராணத்தில் அடியில் வருமாறுசொல்லப்பட்டிருக்கிறது. "உலகமெல்லாம் பரப்பிரம்மஸ்வரூபியான ஸ்ரீவிஷ்ணுவின் சக்தியால் வியாபிக்கப்பட்டிருக்கிறது. முன்பு சுத்த ஞானஸ்வரூபமென்று சொல்லப்பட்டது பரமான விஷ்ணுசக்தி. இரணியகர்ப்பன் முதலாகச் சொல்லப்பட்டது க்ஷேத்திரஞ்ஞன் என்னும் பெயருள்ள அபரமான சக்தி. இவ்விரண்டுமல்லாமல் அவித்தை யென்றும் கருமமென்றும் சொல்லப்பட்ட மூன்றும் சக்தியுமுண்டு. இதனுலே சூழப்பட்டுத்தான் க்ஷேத்திரஞ்ஞன் என்னும் சக்தி பரவிநிற்கிற சகல சம்சாரதாபங்களையும் பெறுகின்றது. மேலும் இதனுலே மறைக்கப்பட்டுத்தான் சம்சாரம் தாரதம்மியமுள்ளதாய்க் காணப்படுகின்றது. எப்படியெனில் அசேதனங்களில் அந்தச் சக்தி மிகவும் அற்பமாயிருக்கிறது. தாவரங்களிலே அதற்குக் கொஞ்சம் அதிகமாயும் ஊருஞ்சந்துக்களில் அதற்கு மேற்பட்டதாயும் இவ்வாறே பக்ஷிகள் மிருகங்கள் பசுக்கள் மனிதர் நாக கந்தர்வ யக்ஷாதிகள் தேவதைகள் ஆகிய இவர்களிலே மேன் மேல் அந்தச் சக்தி அதிகமாயிருகின்றது.

26. பிரளயகாலத்தில் ஈசுவரன் மூலப்பிரகிருதி தைவீப்பிரகிருதியாகிய சக்தி இம்மூன்றும் ஏகாசமாய்ப் பராபிரம்மத்தினிடத்தில் லயம

டைந்திருந்தன. சிருஷ்டிகாலத்தில் இவைகள் வெளிப்பட்டு இவைகள் மூலமாக பிர்ம்மாண்டமும் வெளியாகிறது. இது எவ்விதமாய் ஆகிறதெனில் ஈசுவராலுடைய மனதில் இனி உண்டாகப்போகிற பிர்ம்மாண்டத்தின் பாவனை உதிக்கிறது. இந்த பாவனையை தைவீப்பிரகிருதி கிரகித்து மூலப்பிரகிருதியுடன் சேர்ப்பிவிக்கிறது. தைவீப்பிரகிருதி மூலப்பிரகிருதியுடன் கலந்துதான் இந்தப் பிர்ம்மாண்டத்தை வெளிப்படுத்துகிறது. மண்ணினின்றும் உண்டாகுங் கடவிஷயத்தில் சக்காதண்டாதிகள் முயவனுக்குச் சாதகமாயிருப்பதுபோல் பிர்ம்மாண்டத்தைப் பிரகிருதியினின்று உண்டுபண்ணுவதில் தைவீப்பிரகிருதி ஈசுவரனுக்குச் சாதகமாயிருக்கிறது. இது அன்றியில் யாதொன்றும் கடக்கமாட்டாது. மேலும் ஈசுவரனுடைய மனதிலிருந்த காரணரூபமான பாவனை பிர்ம்மாண்டமாகிற காரியரூபமாகவிளங்கினபடியால் பிர்ம்மாண்டம் மூலப்பிரகிருதியினிடத்தில் ஸ்தூலரூபமாயும் தைவீப்பிரகிருதியினிடத்தில் சூட்சுமரூபமாயும் ஈசுவரனிடத்தில் காரணரூபமாயும் இருப்பதாகச் சொல்லலாம். மூலபாவனையைக் கள்ளிப் பார்க்குமளவில் பிர்ம்மாண்டம் காணப்படாதகினால் சமஸ்தமும் பாவனைகாரியமே. பரப்பிர்ம்மம் ஈசுவரன் மூலப்பிரகிருதிதைவீப்பிரகிருதி இவ்வான்குமில்லாதவிடம் யாதொன்றுமில்லை.

27. இந்தப்பிர்ம்மாண்டம் 7 விதவிகாரங்களை அடைகிறது. இவைகளை சப்தப்பிரகிருதிகளாக நம்முடைய சாஸ்திரங்களில் விளங்குகின்றன. முதல் மூன்றும் அரூபமாயும் மற்ற நான்கும் ரூபமாயுமிருக்கின்றன. பிர்ம்மாண்டத்தின் 7-வது விகாரமானதுதான் இப்போது நமக்குக் கோசரமாயிருப்பது. ஒவ்வொரு விகார அவஸ்தையின் குணமும் வெவ்வேறு. முதல் அவஸ்தையிலிருந்து 7-வது அவஸ்தைவரையில் ஒவ்வொன்றிலும் அதிக ஸ்தூலதை கொஞ்சங்கொஞ்மாக விருத்தியாகி 7-வது அவஸ்தையில் நமக்குக் கோசரமான ஸ்தூலதை விளங்குகிறது. ஓரேபதார்த்தம் ஆவிரூபமாயும் ஜலரூபமாயும் மனிக்கட்டிரூபமாயுமிருப்பதுபோல பிர்ம்மாண்டத்தின் பற்பல விகாரமான அவஸ்தைகளை அறியவேண்டியது.

28. இந்த அவஸ்தைகளுக்கு லோகங்கள் என்றும் அல்லது பூமிகைகள் என்றும் பெயர். முதல் பூமிகை சைதன்னிய ஸ்வரூபம். அதின் உபாதியான 2-வது பூமிகையாகிற புத்தியன்றியில் அதையறிய மகாத்மாக்களாலும் முடியாது. 3-வது பூமிகை மானஸிகம். இதில்தான் ரூபம் வியக்தமாக முதல் முதல் காணப்படுகிறது. மேலும் பிரத்தியக்ஷ்வரூபனாதா வெளிப்படுகிறான். பிரகிருதி அதிசூட்சுமமாயிருந்தாலும் இந்த பூமிகையில் உருவத்தோடுகூடியிருக்கிறது. இதில் ஞாதாரூபத்தை அபேக்ஷிக்கிறான். 4-வது பூமிகை சரீரசம்பந்தமான இச்சைகள். இவைகள் இப்பூமிகையில் ரூபங்களோடுகூடியிருக்கின்றன. 5-வது

பூமிகை பிராண்ன். 6-வது பூமிகை கம்முடைய ஸ்தூலத்தைவிடசெல்பம் சூட்சுமமாயிருக்கிறது. ஒவ்வொரு பூமிகைகளின் விசேஷணங்களும் வெவ்வேறு. ஒரு தோலின் பேரில் ஒருதோலிருக்கிறதுபோல் இந்த பூமிகைகள் இருப்பதாக நினைக்கக்கூடாது. இலைகள் பிரஞ்ஞாபேதங்களே. இந்த பிரஞ்ஞையும் 7 விதமாய் விளங்குகிறது.

29. இந்தப் பூமிகைகளே விஷ்ணு புராணத்தில் பூலோகாதி லோகங்களாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன். காலாலேகடந்துபோகத்தக்க தாய்ப் பூமி சம்பந்தமாள வஸ்து எதுவுண்டோ அதுவெல்லாம் பூலோகமென்னப்படும். பூமிக்கும் சூரியனுக்கும் நடுவில் சித்காதி முனிவர்கள் வாசம்செய்யும் இடம் எவ்வளவுண்டோ அதுதான் புவர்லோகம். துருவனுக்கும் சூரியனுக்கும் நடுவாய் உள்ள இடம் சுவர்க்கலோகம். இம்மூன்றும் கல்பந்தோறும் உண்டாக்கப்படுவதால் கிருதகம் என்றும், ஜனலோகம், தபோலோகம், சத்தியலோகம் இம்மூன்றும் கல்பந்தோறும் உண்டாக்கப்படாமையால் அகிருதகம் என்றும் சொல்லப்படும். இந்த கிருதகம் அகிருதகம் என்கிற இரண்டின் நடுவில். மஹர்லோகம் இருக்கின்றது அது கல்பத்தின் முடிவில் ஜனசூன்னியமாகிறதே தவிர சொரூபம் நசிப்பதில்லை. ஆகையால் கிருதாகிருதம் என்று சொல்லப்படும். ஒவ்வொன்றுக்கும் இரண்டு தோற்றமிருப்பதால் லோகங்கள் மொத்தத்தில் 14 ஆகின்றன. இந்த மேலேழு லோகங்களும் பாதாளங்களாகிய கீழ் ஏழு லோகங்களும் பிரம்மாண்டத்தின் பரப்பு என்னப்படும். இவைகளுக்கே ஞானஞ்ஞான கலைகள் என்றும் பெயர். வேதாந்த சாஸ்திரப்படி எல்லாம் ஞானஸ்வரூபமாயிருப்பதால் பல தோற்றங்களும் ஞானத்தையே பொறுத்திருக்கின்றன.

30. இந்தப் பிர்ம்மாண்டத்தில் அநேக சூரியமண்டலங்களுள. நம்முடைய சூரியமண்டலத்தைப்பற்றி மட்டும் நாம் கவனிப்போம். பிர்ம்மாண்டத்தில் முக்கியமான நான்கு தத்துவங்கள் சொல்லப்பட்டதுபோல சூரியமண்டலதத்திலும், முக்கியமாய் 4 தத்துவங்களுள. (1) வைசுவாநரம். இது ஸ்தூலப்பிரபஞ்சமட்டும் அன்று. எந்த ஸ்தூல பீஜத்தினின்றும் ஸ்தூலபிரபஞ்ச முண்டாகிறதோ அதுவே இது. (2) ஹிரண்யகர்ப்பம். வைசுவாநரம்போல் இதுவும் சூட்சுமப்பிரபஞ்சத்துக்கு ஆதாரமான சூட்சுமபீஜம். (3) சூத்திராத்மா. ஸ்தூல சூட்சும பீஜங்களுக்குக் காரணமான மூலாதாரமான காரணபீஜம். (4) மூலப்பிரகிருதியே.

31. நம்முடைய சூரியமண்டலத்தில் செவ்வாய் புதன் முதலிய கிரகங்கள் அநேகமுள. ஒவ்வொன்றுக்கும் 7 அவஸ்தைகளிருப்பது

போல நம்முடைய பூலோகத்துக்கும் 7 அவஸ்தைகளுண்டு. இந்த அவஸ்தைகளுக்கு விஷ்ணு புராணத்தில் துவீபங்கள் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. தக்காலஸ்திதியில் பூமிக்கு ஜம்புதுவீபம் என்று பெயர். மற்ற ஸ்திதிகள் பிலக்ஷத்துவீபம சால்மலத்துவீபம் குசத்துவீபம் கிரௌஞ்சத்துவீபம் சாகத்துவீபம புஷ்கரத்துவீபம் எனப்பெயரிடப்பட்டிருக்கின்றன. இவ்வேழும் சேர்ந்து கிரகமாலிகை என்னப்படும்.

32 இந்தப் பூமியின் கிரகமாலிகையில் பூமியின் தக்காலஸ்திதி நான்காவது. இதற்கு முன்னிருக்கும் 3 ஸ்திதிகளையும் பின் வரப்போகிற 3 ஸ்திதிகளையும் நாம் அறியமாட்டோம். ஸ்திதிகள் எல்லாம் பிரஞ்ஞா பேதங்களே. இந்த ஸ்திதிகளை அறியும் பொருட்டுத் தேவையான இந்திரியங்கள் பக்குவமாகாதவரையில் அவைகள் தெரியமாட்டா. ஸ்வப்நப்பிரபஞ்சத்தை விஷயமாக்குவதற்கு நம்முடைய ஜாக்ரதாவஸ்தையிலுள்ள இந்திரியங்கள் உபயோகப்படாமல் வேறு சூட்சும இந்திரியங்களால் ஸ்வப்னப் பிரபஞ்சதத்தை அறியவேண்டியதா யிருப்பதுபோல, பூமியின் மற்ற அவஸ்தைகளையும் அவைகளிலுள்ள ஜீவ நிலைமைகளையும் அறிய வேறு சாதனங்கள் தாம் வேண்டியவை. இவைகளைப் பக்குவப்படுத்தினவர்களே இந்த விவரங்களை அறிவார்கள்.

33. இவ்வேழு ஸ்திதிகளில் மூதல் ஸ்திதியுண்டாகி ஸ்வல்பகாலத்துக்குப்பிறகு இரண்டாவது ஸ்திதியுண்டாகிறது. இப்படியே 7 ஸ்திதிகள் உண்டாகின்றன. இவைகளில் சைதன்னியம் வரிசையாய் ஒருசாரம் சுற்றிவருவதற்கு ஒரு சுற்று என்று பெயர். இவ்விதமாக 7 சாரம் சுற்றினபிறகு இதரகிரகமாலிகைகளுக்குச்சைதன்னியம் போகிறது. அப்போது கிரகத்துக்கே பிரளயம் நேரிடுகிறது. முதல் 3 சுற்றுகளில் இந்தபூமி உண்டாகி ரூபத்தை அடைகிறது. நான்காவது சுற்றில் இது கட்டியாகி ஸ்திரப்படுகிறது. பாக்கியான மூன்று சுற்றுகளில் மறுபடியும் முன்போலவே சூட்சுமரூபத்தை அடைகிறது. மகாசைதன்னியம் நம்முடைய பூமியில் முதலில் 3 வித அவ்வியக்தமான பௌதிகரூபங்களிலும், பிறகு பாஷாணங்களிலும், பிற்கு கந்தமூலங்களிலும் பிறகு மிருகங்களிலும், கடைசியில் மனிதர்களிலும் பிரவேசித்து விளங்குகிறது. இதுவே ஜீவசிருஷ்டிக்கிரமம். விஷ்ணுபுராணத்தில் பாஷாணசிருஷ்டி ஸ்தாவரசிருஷ்டியென்றும் கந்தமூலசிருஷ்டி மூக்கியசிருஷ்டியென்றும், மிருகசிருஷ்டி திரியக்சிருஷ்டியென்றும், மானிடசிருஷ்டிக்கு முன்னிருக்கும் மானிடரூபசிருஷ்டி ஊர்த்வசுரோதஸ்சிருஷ்டி யென்றும், மானிடசிருஷ்டி அர்வக்சுரோதஸ் சிருஷ்டி யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. வாஸ்தவ்வியத்தில் பரப்பிரம்மமாகிய சுத்தசைதன்னியத்தைத்தவிர வேறு யாதொன்றும் சக்தியமாயில்லை. இந்த சின் மாத்திரமே சிருஷ்டிக

தையும் அறிவார்கள். பிரஞ்ஞை வெவ்வேறுவிதமாய் இருக்குமென்ப தற்கு உதாரணம்:—பசிதாகங்களை உணர்ந்து அடி, கர்யம், முதலியவை களை உணரும்போது ஸ்தூலசரீரமாகிற ஸ்தூலதத்துவத்தில் மனிதனு டைய பிரஞ்ஞை விளங்குகிறது. யுத்தகளத்தில் அவனிருக்கும்போது சரீரத்தைமறந்து தன் பிரஞ்ஞையை மனோவிகாரபூமிகையில் அவன் நி றுத்துகிறான். ஆகையால் காயத்தால் ஸ்தூலசரீரத்துக்குண்டாகும் வ ருத்தத்தை அவன் அறிகிறதில்லை. யுத்தம் முடிந்தபின் அவனுடைய பிரஞ்ஞை ஸ்தூலசரீரத்துக்குத்திரும்பி வந்து வலியை அறிகிறது. ஒ ருவன் தத்துவவிசாரம் ஏகாக்கிரசித்தத்துடன் செய்துகொண்டிருக்கை யில் பசிதாகம் முதலியவைகளையும், விருப்பு வெருப்பு முதலிய மனோ விகாரங்களையும் பூர்ணமாக மறந்து விடுகிறான். அவன் மனது அக்கால த்தில் ஆலோசனையாகிற பூமிகையில் பற்றுதலை அடைந்து விளங்குகிற து. இவ்விதமாக மனிதன் வெவ்வேறு ஸ்திதியில் இருந்துகொண்டு மற்றவைகளை மறந்துவிடக்கூடும். காமம், குரோதம், விக்ஷிப்தியோ சம், தத்துவவிசாரம் முதலியவைகள் பலமாயிருக்கும்போது, அவை களில் தத்பரனை ஒருமனிதன் வெவ்வேறுகக்காணப்படுகிறான். நம் முடைய பிரஞ்ஞையிலுண்டாகும் ஒவ்வொரு விதகியாசமும் நம்மை வெவ்வேறுகக்காண்பிப்பதால் ஒவ்வொரு பேதத்துக்கும் தனித்தனியே பெயர் கொடுக்கும்படி நேரிடுகிறது. மனிதனுடைய தத்துவங்களை வி சாரிப்பதினல் அவன் இப்படிப்பட்டவன், அவனுடைய சக்திகள், அ வைகளால் சாத்தியமானவை, இவைகளெல்லாம் நன்றாய் விளங்கும். அ வனைப்பிரித்தறியாவிட்டால் இவைகள் நன்றாய் விளங்கா. மனிதனுட ய 7 தத்துவங்கள் அல்லது அம்சங்களாவன:— (1) ஸ்தூலசரீரம். (2) லிங்கசரீரம். (3) பிராணன். (4) காமம். (5) மனது. (6) புத்தி. (7) ஆத்மா. தாரகராஜயோகத்தின்படி இவ்வேழு அம்சங்களை (1) ஸ்தூல உபாதி. (2) சூட்சுமஉபாதி. (3) காரணஉபாதி. (4) ஆத்மாவென 4 விதமாய்ப்பிரிக்கலாம். இவைகளையே 5 கோசங்களாகவும் பிரிக்கலா ம். அடியில்கண்ட படகம் இந்த பல விபாகங்களை விளக்குவிக்கும்.

குப்தவித்தையின்படி தத்துவங்கள்.	வேதாந்தத்தின்படி கோசங்கள்.	காரகாராஜயோகத்தின்படி உபாதிகள்.
1. ஸ்தூலசரீரம்.	அன்னமயகோசம்.	ஸ்தூலஉபாதி.
2. லிங்கசரீரம்.	பிராணமயகோசம்.	
3. பிராணன்.		
4. காமம்.	மனோமயகோசம்.	சூட்சுமஉபாதி.
5. மனது. அசுத்தம் சுத்தம்	விஞ்ஞானமயகோசம்.	
6. புத்தி.	ஆனந்தமயகோசம்.	காரணஉபாதி.
7. ஆத்மா.	ஆத்மா.	ஆத்மா.

மேல்கண்ட 7 அம்சங்களில் முதல் நான்கு நசிக்கப்போவதாலும் பாக்கி மூன்றும் நாசமடையாமலிருப்பதாலும் இவைகள் கூட அகூட வென இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கப்படுகின்றன. ஒருமாலையின் பல மணிகளில் நூழையும் நூல் ஒன்றுகவிருப்பதுபோல அநேகஜன்மங்களில் சம்பந்தப்படுவது ஆத்மா புத்தி மனதே. இதுவே கூடத்திரஞ்ஞன் பாரமார்த்திகஜீவன் கூடஸ்தன். மற்ற நான்கும் ஸ்தூலசரீரத்தின் மரணமுதல் காலாவிர்த்தியில் நசித்துப்போய் வேறு சரீரங்களின் உற்பத்திக்கு உபயோகப்படுகின்றன. இந்த 7 தத்துவங்களின் விஷயம் அடியில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

1-வது அம்சம் ஸ்தூலசரீரம்.

44. பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகிற மனிதனுடைய ஸ்தூலசரீரம் முதலாவது அம்சமாகச் சொல்லப்படுகிறது. இது வேதாந்தத்தின் அன்னமயகோசம். ஞானேந்திரியகோளகங்கள், கர்மேந்திரியகருவிகள், மூளை, நரம்பு, எலும்பு முதலியவைகளுடன் கூடிய ஸ்தூலசரீரம் அநேகஸ்தூலஅணுக்களால் உண்டாயிருக்கிறது. மலை, செடி, மிருகம், மனிதன் இவர்களுடைய ஸ்தூலரூபத்திலுள்ள அணுக்கள் ஒரேவிதமாயிருப்பதுடன் ஜீவரூபம்போலுமிருக்கின்றன. எல்லாம் பிரம்மமயமாயிருக்கிற பிர்

ம்மாண்டத்தில் நிர்ஜீவமான அணு யாதொன்றுமில்லை. இனி மேற்சொ
லப்போகிற 3-வது அம்சமான பிராணனுமேஸ்திரியின் உத்தரவின்
படி கொத்தர்களாகிற அணுக்கள் சரீரமாகிற வீட்டைக் கட்டுகின்றன.
இதற்கு வேண்டிய செங்கல் முதலியசாமான்களும் ஜீவரூபஅணுக்களே.

45. ஜடசரீரத்தின் இயல்பான பிரஞ்ஞை இந்த அணுக்களுடை
யது. இரத்தத்தினின்றும் தங்களுக்கு வேண்டியதை எடுத்துக்கொண்
டு தேவையில்லாததை தள்ளிவிடுதல் இவ்வணுக்களின் அறிவைக் காண்
பிக்கிறது. இந்த அறிவு நம்முடைய அறிவன்று. ஒரு காயத்தின் வ
லியை நம்முடைய மூளை அறிகிறது. ஆனல் அணுக்கள் நம்முடைய
அறிவன்றியிலேயே சதையை வளரசெய்வதில் தங்கள் பிரஞ்ஞையைக்
காண்பிக்கின்றன.

46. ஸ்தூலசரீரத்தின் மரணமும் பின் ஸ்திதியும் 87-வது பிரிவில்
விவரிக்கப்படும்.

2- லிங்கசரீரம்.

47. இண்டாவது அம்சம் லிங்கசரீரம். வேதாந்தத்தின் இரண்டா
வது கோசமாகிய பிராணமயகோசம் லிங்கசரீரத்தையும் 3-வது அம்சமா
கிய பிராணனையும் அடக்கிக்கொண்டிருக்கிறது. சூட்சுமசரீரமென்பதி
ல் ஒரு அம்சத்துக்குமேல் சேர்ந்திருப்பதால இரண்டாவதைக்குறிப்பிட
லிங்கசரீரமென்னும் பதமே உசிதமாகும்.

48. நம்முடைய 5 இந்திரியங்களுக்குக் கோசரமாயிருக்கும் பொ
ருளைக்காட்டிலும் சூட்சுமமாயிருக்கிற பொருளால் இந்த லிங்கசரீரம் உ
ண்டாயிருக்கிறது. இதை லிங்கப்பிபொருளென்று சொல்லலாம். இது
ஸ்தூலபூமிகையை அடுத்த லிங்கபூமிக்கு உரியது. இது கட்டிரூபமா
யும் ஜலரூபமாயும் வாயுரூபமாயுமிருக்கிற பொருளைவிட சூட்சுமமாம்.
இந்த லிங்கபூமிகையில்தான் அதி சூட்சுமமான பதார்த்தங்கள் சப்தங்க
ள் விளங்குகின்றன.

49. இந்த லிங்கசரீரம் எந்த ஸ்தூலசரீத்தைச் சேர்ந்திருக்கிறதோ
அதின் சரியான பிரதியாம். இதில் நின்றும் அது பிரிபடக்கூடும். ஆனல்
ஸ்தூலத்தை விட்டு அதிதூரம் அது போகமாட்டாது. அப்படி பிரிபட்
டகாலத்தில் ஒரு வெண்மையான தந்துவால் ஸ்தூலஞ்சேர்ந்திருப்பதாக

சூட்சுமதிருஷ்டியுள்ளவர்களுக்குத் தெரியவருகிறது. ஸ்தூலத்துக்கும் லிங்கத்துக்கும் சம்பந்தம் வெகு நெருக்கமாயிருப்பதால் லிங்கத்தில் உண்டாகும் காயம முதலியவை ஸ்தூலத்தில் காணப்படுகின்றன.

50. ஸ்தூலத்தின் உயிர்வியாபாரங்கள் லிங்கத்தைப்பொருத்திருக்கின்றன. லிங்கம் பிராணனுக்கு உபாதி அதாவது வாஹனமாயிருக்கிறது. லிங்கம் பிரிபடுவதற்குத்தகுந்தபடி ஸ்தூலத்தில் ஜீவவியாபாரங் குறைகிறது. ஆகையால் உயிர்வியாபாரம் அதாவது சரீரசேஷ்டைகளுக்கு முக்கியஸ்தானம் லிங்கசரீரமே. இதனால் பிராணமயகோசத்தில் லிங்கசரீரத்தையும் பிராணனையும் சேர்த்த காரணம் தெளிவாகும்.

51. யூரோப்பு அமெரிகா தேசங்களில் இந்த லிங்கதேகத்தின் வியாபாரம் இப்போது நன்றாய்த் தெரியவருகிறது. மனிதனுடைய ஆகாரம்போல் ஒரு ஆகாரம் தொன்றுங்காலத்தில் இந்த லிங்கசரீரம்தான் பிரத்தியக்ஷமாகிறது. யாதொரு சம்பந்தமன்றியில் ஒரிடத்திலுள்ள பதார்த்தம் மற்றொரு இடத்தில் வைக்கப் படுதல் இதின் செய்கையே. இந்த ஸ்தூலபூமிகையில் இந்த லிங்கசரீரத்துக்கு அறிவு இல்லாதபடியால் இதின் செய்கைகள் யாதொரு பிரயோசனத்தையும் உத்தேசித்திரா. இந்த லிங்கத்தை இஷ்டப்படி உபயோகப்படுத்த சாதாரண ஜனங்களுக்கு முடியாது.

52. இந்திரியங்களின் ஸ்தூல கோளகங்களில் ஸ்தூல சரீரத்திலும் சூட்சும கோளகங்கள் லிங்கசரீரத்திலுமிருக்கின்றன. இந்திரியங்கள் சூட்சுமகோளகங்கள் மூலமாக வியவஹரிக்கின்றன. லிங்கசரீரம் ஸ்தூல பதார்த்தத்தையும் பிரஞ்ஞையையும் இணைக்கும் பாலம்போலிருக்கிறது. வெளியிலுள்ள பொருள் ஸ்தூல சரீரத்துடன் சம்பந்தப்பட்டு அவ்விடத்திலுள்ள அணுக்களில் அசைவை உண்டாக்குகிறது. இந்த அசைவு லிங்கசரீரத்திலுள்ள இந்திரியங்களின் சூட்சும அணுகளில் அசைவை உண்டாக்குகிறது. இவ்வசைவின் அலைகள் மனதின் அதிசூட்சுமமான அணுக்களில் மோதி அவைகளில் சலனமுண்டாக்குகின்றன. மறுபடியும் இந்த கடைசியான அசைவு ஸ்தூலமூளையின் அணுக்களில் மோதி நம்முடைய மூளைபிரஞ்ஞை உண்டாகிறது. பிறகுதான் நாம் வெளிப்பதார்த்தத்தை அறிந்ததாக நினைக்கிறோம். தூக்கத்தில் ஸ்தூலபதார்த்தத்தினின்றும் அசைவு புறப்படாமல் லிங்கபூமிகையில் உண்டாகிமறுபடியு

61 இது வ்ரையில் மனிதனுடைய நசுவரமான 4 அம்சங்களை அடக்கிக்கொண்டிருக்கிற ரூபம் அறியப்பட்டது. இந்த அம்சங்கள் மிருகத்துக்கு மிருக்கின்றன. இந்த அம்சங்களுடன் மட்டும் கூடியிருப்பதெல்லாம் மிருகஸ்வரூபம். ஒவ்வொரு அம்சமும் வெகுகாலமாக விருத்தி அடைந்துவந்து கடைசியில் மிருகரூபம் ஜனித்தது. ஸ்வாபாவிக மானசைதன்னியபலத்தால் இவ்வளவு விருத்தியாயிருந்தபோதிலும் அந்தச்சைதன்னியத்தின் சாக்ஷாத்தான சம்பந்தமன்றியில் இந்த மிருகரூபம் திவ்வியரூபமாக ஏது வில்லாமலிருந்தது. விதை ரூபமாக இருந்த மற்ற மூன்று அம்சங்கள் வெளியாகும்பொருட்டு இந்த மிருகரூபம் தேவாம்சத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. ஜீவனுடைய ஸ்தூலசரீரத்தைப் பூமியும் லிங்கசரீரத்தைச் சில பிதிர்க்களும் பிராணனைச் சூரியனும் கொடுத்தார்கள். மனது கூடுவதற்குமுன் இந்நான்குஅம்சங்களின் சேர்க்கையாலுண்டான சரீரத்தில் உணர்ச்சி இருந்தாலும் ஸ்வயமாய் யாதொருவீர்யாபாரத்தையுஞ்செய்ய ஏது வில்லாமலிருந்தது. ஆகையால் மனதர்கிற மனிதனுடைய வரவை இவைகள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

5- மனது

62. இந்த 5-ம் அம்சமான மனது வெகு முக்கியமானதால் அதைச் செவ்வையாய்க் கவனிக்கத்தக்கது. இந்த மனது இரண்டு தன்மையுள்ளது. அல்ப புத்தியுள்ளவன் பெரும்புத்தியுள்ளவனென்று உலகத்தில் விளங்குவதால் உயர்ந்தமனது தாழ்ந்தமனது அல்லது அசுத்தமனது சுத்தமனதுளன இது இரண்டு விதமாகிறது. இந்த அசுத்தமனதுடன் காமம் சேர்ந்து வேதாந்தத்தில் மனோமயகோசமாகிறது. சுத்தமனது வேதாந்தத்தின் விஞ்ஞானமய கோசமாம்.

63. மனது என்னும் பதம் "மன்" என்னும் சமஸ்கிருத பதுயினின்றும் வருகிறது. "மன்" என்றால் நினைத்தல், பாவித்தல். மன்னதையுடையவனுனதால் மனிதன் என்கிற பெயர் விளங்குகிறது. இந்த மனதையுடையவனை இப்பிரசங்கத்தில் மனதாகவே வியவஹரிப்போம்.

64. பரப்பிர்ம்மத்தின் அம்சம்போல அம்சத்தை உடைத்தானதாயும், ஆனல் அதனுடன் ஐக்கியமாகும்படியான சுத்தாம்சமில்லாததாயும், இந்த ஐக்கியத்தை அடையும்பொருட்டான தத்ஸ்வபாவத்தைச் சுத்

தப்பமித்துவதாயும், 'இதற்காக ஒவ்வொரு அனுபவத்தையும் சம்பாதிக்குமபொருட்டு ஒவ்வொரு பூமிகையிலும் அனேக ஜன்மங்களை எடுக்கிறதாயும் ஒரு தெய்வம் இருக்குமேயாயின் அதுவே மனதாகும். மானசபுத்திரன் என்பது இதற்குப் பெயர். க்ஷேத்திரஞ்ஞன் பாரமார்த்திக ஜீவன், கூடஸ்தன் என இதற்கு வேறு பெயர்களாம். இது பிரகிருதி ரூபமன்று. புருஷரூபம். அநேக ஜன்மங்களில் அநேக ரூபங்களைத் தரித்துதான்மட்டும் ஒன்றுகவே இருப்பது இந்த மனதே.

65. முதல் 4 அம்சங்களால் கட்டப்பட்ட சரீரமாகிற வீடு தயாராயிருக்கும்போது மானசபுத்திரர்களாகிற அக்கினிஷ்வாத் பிதிருதேவதைகள் வீடுகள் காலியாயிருப்பதைக்கண்டு தங்களுடைய அபிவிர்த்தியின் பொருட்டு அவைகளில் பிரவேசித்தார்கள். இதுதான் ஜீவனுக்கு சரீரத்தில் முதல் ஜன்மம். ஆத்மாவைப்போல் அநிசுத்தமாயில்லாதபடியால் மறுபடியும் ஆத்மாவுடன் சேரும்பொருட்டு அநேக ஜன்மங்களை இந்த மானசபுத்திரர்கள் எடுக்கிறார்கள். இந்த மானஸ புத்திரனே 5-வது அம்சம். நான் என்னும் பதம் இதற்கே உபயோகப்படுகிறது.

66. தனக்காகஏற்பட்டிருக்கிற வீட்டைக்கண்டவுடன் தன்னுடைய அதிசூட்சுமமான அம்சம் ஸ்தூல அணுக்களுடன் சேராதெனக்கண்டு மனது தன்னுடைய ஒரு பாகத்தைப் பிரித்து வெளிப்படுகிறது. இதுசூட்சும அணுக்களால் தன்னை மூடிக்கொண்டு கர்ப்பத்திலுள்ள சிசுவின் லிங்கசரீரத்துடன் கலந்து அதினுடைய மனதாகப் பரிணமிக்கிறது. இப்படிப் பிரிக்கப்பட்டபாகம் மனதின் பிரதிபிம்பம் அல்லது சாயை அல்லது கிரணம் அல்லது அசுத்தாம்சம் அல்லது சிதாபாசன் எனச் சொல்லப்படும். இதுவே வியாவஹாரிகஜீவாத்மா. மூலமனது சுத்தமானது. ஒவ்வொரு ஜன்மத்திலும் மனதுஇரண்டு பாகங்களாகப் பிரிந்து சுத்தமானது ஆத்ம விஷயத்திலும் அசுத்த மானது பிராபஞ்சிகவிஷயத்திலும் செல்லுகிறது. அசுத்தமனது காமத்துடன் கலந்து காமமனதாகிறது. மரணத்துக்குபின் இரண்டுபாகங்களும்சேர்ந்து மனதுமறுபடியும் ஒன்றுபடுகிறது.

6-அசுத்தமனது

67. வியாவஹாரிகஜீவன் மேற்சொல்லிய முதல் 4 அம்சங்களில் முழுகிஒருபக்கத்தில் காமத்தையும் மற்றொரு பக்கத்தில் சுத்தமனதையு

பிரித்துக் கொண்டிருக்கிறான். காமத்துக்குப் பூராவாகச் சுவாதினப்பட்டுப்போவதும் அல்லது தன்னுடைய ஸ்தானத்துக்குச் சாத்வீகாணுபவங்களுடன் போய்ச்சேருவதும் ஒவ்வொரு ஜன்மத்திலும் தீர்மானிக்கவேண்டியதாக இருக்கிறது. ஜீவித்திருக்கையில் காமமும் அசுத்தமனதும் சேர்ந்திருக்கின்றன. காமம் உணர்ச்சிகளையும் மனோபாகம் அவைகளை அறியும்சக்தியையும் கொடுக்கின்றன. இதினல்தான் நமக்குச் சாதாரணமானமூளைப்பிரஞ்ஞை ஜனிக்கிறது. அந்தக்காரணத்தின் விர்த்திபாகம் விஷயத்தின் ஆவரணத்தைநீக்கி சிதாபாசபாகம் விஷயத்தை பிரகாசிப்பிக்கிறதாக விசாரசாகரத்தில் சொல்லியது இந்தகாம-மனதின் வியாபாரமே. அக்கிரந்தத்தைப்பார்க்கவும்.

68. தீபத்தினுடைய பிரகாசம் வர்த்தியையும் எண்ணெயையும் பொறுத்திருப்பதுபோல மனதின் பிரகாசமும் மூளையையும் காமத்தையும் பொறுத்திருக்கிறது. காமமானது வெகு பலமுள்ளதாக இருந்தால் மனதின் பிரகாசத்தைமறைத்து விடும். அப்படியே மூளை பக்குவமாகாமலிருந்தால் மனதின் பிரகாசம் ஸ்வல்பமாயிருக்கும். நல்லசங்கீதம் பாடகனுடைய சாமர்த்தியத்தையும் வாத்தியத்தையும பொறுத்திருக்கிறது. இவைகளில் ஒன்று குறைவாக இருந்தாலும் நல்ல நாதம் ஜனிக்கமாட்டாது. ஒரு ஜீவ ஜகும் மற்றொரு ஜீவனுக்கும் ஸ்வரூபத்தில் பேதமில்லை. ஒருவனைப் பெரியமனுஷியனாக்குவதும் ஒருவனை அல்பனாக்குவதும் மனதின் தேஜஸைப் பிரதிபிம்பிக்கும் மூளையின் ஸ்திதியும் தர்க்கர்லகாமாதிகளுமே.

69. ஜனங்கள் தர்க்காலத்தில் அடைந்திருக்கும் ஸ்திதியில் பெரும் பான்மையாய்ச்சுத்தமனது விளங்குகிறதில்லை. எப்போதாவது ஒருகாலத்தில் அது விளங்குவது அதிமேதாவிகளுடைய செய்கைகளால் தெரியவருகிறது. மனதின் பிரகாசம் நமக்கு தாராளமாய் எட்டாமற் செய்யும் பிரதிபந்தங்களை நிவிர்த்திக்க அந்தக்காரணசுத்தி முக்கியமான சாதகம். சரீரம் ஒவ்வொரு ஜீவனுக்கும் இருப்பிடம். அதில் நான் என்னும் அபிமானத்தை அசுத்தமனது உண்டுபண்ணுகிறது. இதினல் மற்ற ஜனங்களைக் காட்டிலும் தான் வேறு என்கிற பிராந்திஞானம் ஜீவனுக்கு ஜனிக்கிறது. பிராபஞ்சிகபதார்த்தங்களின் பொய்த்தோற்றங்களால் பிரமையை அடைந்து, தான் பிறந்த இடத்தை அசுத்தமனது மறந்துவிடுகிறது. சுகதுக்காதிகளை மிருகஸ்வபாவத்திற்கும் இந்திரியங்களுக்கும்

கொடுப்பது இதுவே. இது அன்றியில் உணர்ச்சி உணர்ச்சியாகவே இருக்கும். மூன்றுகாலங்களிலும் உணர்ச்சி சுகதுக்காதிகளை அறிவது மனதிற்கே சாத்தியம்.

7 அசுத்தமனதின் பிரவிர்த்தி.

70. அசுத்தமனது காமத்துடன் கலந்து பிராபஞ்சிக சுகதுக்காதிகளை அடைகிறதென்று முன் (67) பொதுவாய்ச் சொல்லப்பட்டது. மனது பிரவிர்த்திக்கும் விதத்தை இனி செவ்வையாய் விசாரிப்போம். மனதின் பிரகாசம் விளங்குதல் மூலனையையும் காமத்தையும் பொருத்திருக்கிறதென்று முன் (68) சொல்லப்பட்டது. பரமாணுக்கள் சிறியதான சூம்பல்களாகி இவைகளால் மூலை உண்டாகிறது. இந்த அணுக்கள் ஒன்றோடொன்று சேருமலும் ஆனல் ஜீவஸ்வபாவத்தால் சும்பல்களாக சேர்க்கப்பட்டுமிருக்கின்றன. ஆனதால் அவைகளில் அசைவு உண்டாக ஆஸ்பதமிருக்கிறது. காமமனது மூலையின் அணுக்களில் சலனத்தை உண்டாக்கி நம்முடைய மூலை பிரஞ்னைக்கு ஹேதுவாகிறது. காமக்குரோதாதி மனோவிகாரங்கள் எல்லாம் இந்த காமமனதின் பிரவிர்த்திகளாம். மூலையின் அணுக்கள் சுத்தமாயும் காமத்தின் முக்கிய கோளகங்களான ஈரல், மண்ணீரல் முதலிய அவயவங்களும் சுத்தமாயிருந்தால் மூலை மூலமாக வெளியாகும் காமமனதும் சுத்தமாயிருக்கும். ஆனல் அணுக்கள் பக்குவப்படாமலும், மயக்கத்தை உண்டுபண்ணும்படியான மத்தியபானுதிகள் விடவியவஹாரங்கள் இவைகளால் இரத்தம் அசுத்தப்பட்டும் போயிருந்தால் அப்போது விளங்கும் மனோவியாபாரம் அதிதுச்சமாயிருக்கும். முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது என்னவெனில் காமமனது தேகத்தை அடித்திருக்கிறது என்பதும் அது மூலைமூலமாக வியவஹரிக்கிறதென்பதும் மூலையின் பக்குவத்துக்குத் தகுந்தபடி மனதின் பிரகாசம் தெரியும் என்பதுமே. இந்த ஞானம் இனிச்சொல்லப்போகிற புனர்ஜன்மவிஷயத்தைத் தெளிவாய் அறியச் சாதகமாயிருக்கும்.

71. விலங்கிலிருந்து விடுபடுவதற்குத்தகுந்தபடி ஒருவன் ஸ்வேச்சாவியவஹாரத்தை அடைவதுபோல், இந்த அசுத்தமனது காமத்தில் நின்றும் விலகவிலக இச்சரீரத்துக்கு அரசனுகி அதன் மேன்மையான அம்சத்தை வெளிப்படுத்துகிறது. சரீரத்துக்கு வேண்டியவைகளை இச்சிப்பது காமத்தின்குணம். இந்த காமத்தால் மனது பந்தத்தை அடைகிறது. இந்த பந்தத்தில் நின்றும் விடுபடுவதற்குத்தகுந்தபடி அது சுவா

தினத்தை அடைகிறது. காமமாகிற அசுரனை ஜயித்துக்காலால் அவனை மிதிக்காதவரையில் மனதிற்கு மோக்ஷம் கிடைக்கமாட்டாது. அசுத்த மனது எவ்வளவுக்கு எவ்வளவு காமாணுக்களால் கெளவ்வப்படாமலும் தடைபடாமலுமிருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அதின்மூலமாக அதிசூட்சுமமான சுத்தமனதின் பிரகாசம் சரீரத்தில் சம்பந்தப்பட்டு மூளைமூலமாகப்பிரபஞ்சத்தில் விளங்கும். அப்போதுதான் அந்த மனிதன் மற்றவர்களைவிட சிரேஷ்டனாகிறான். சுத்தமனது மேலான நிலைமையில்தான் வியவஹரிக்கக்கூடுமானதால், மிருகரூபத்துடன் கலந்து நாசமடைவதும், அல்லது தான் பிறந்த இடத்துக்குப்போய்ச்சேருவதும் அசுத்தமனதின் ஸ்வேச்சையில் இருக்கிறது. அந்தக்காரணவிர்த்தியை ஆத்மபரமாக நோக்குமபடிச்செய்து கதாகாரமானவர்கள்தான் ஞானிகள்.

72. இந்த அசுத்த மனது அடியில்கண்ட மூன்று செய்கைகளில் ஒன்றைச்செய்யக்கூடும். (1) விடாதமுயற்சியால் தன் மூலஸ்தானத்தை அடையக்கூடும். (2) அந்த ஸ்தானத்தை அடையப்பிரயத்தனம் செய்வதும் பிரகிருதியுடன்சம்பந்தப்பட்டுப்பிராபஞ்சிக வியவஹாரங்களிலும் பிரவேசிக்கக்கூடும். இதுதான் சாமான்னிய ஜனங்களின் ஸ்திதி. (3) காமத்தினால் நன்றாய் கெளவ்வப்பட்டு காமத்துடன் ஒன்றுகித்தன் மூலஸ்தானத்தைச்சுத்தமாய் மறந்து விட்டு அதிலின்றும் நன்றாய்ப்பிரிபடக்கூடும.

73. முதல்பக்ஷம்:— மூலஸ்தானத்தை அடைவது வெகு ஜன்மங்களுக்குப்பிறகுதான் சாத்தியம். ஒவ்வொரு ஜன்மத்திலும் கொஞ்சம் கொஞ்சமாகப்பிரகிருதி சம்பந்தத்தில் நின்றும் விடுபட்டுப்பிராபஞ்சிகப்பிரமை முற்றிலும் நீங்கினபிறகு அசுத்தமனது தன் தாயுடன் சேர்ந்து விடுகிறது. சரீரசமபந்தமான அனுபவங்கள். யாவற்றையும் சம்பாதித்துவிட்டபடியால் மறுபடியும் சரீரத்துடன் சம்பந்தப்படவேண்டிய ஆவசியம் யாதொன்றுமில்லை. ஜீவகாருணியத்தால் பரோபகாரநிமித்தம் இப்படிப்பட்ட ஞானி இஷ்டப்படி அவதரிக்கக்கூடும்.

74. இரண்டாவது பக்ஷம்:— இச்சரீரமே யுத்தபூமி. ஆத்ம இச்சையும் பிராபஞ்சிக இச்சையும் யுத்தவீரர்கள். இந்த யுத்தத்தில் சுத்தமனதின் தேஜோபலத்தால் அசுத்தமனது காமத்தைச்சில சமயங்களில் ஜயித்தாலும், மறுபடியும் மாயாபலத்தால் காமத்துடன் கலந்துவிடுகிற

து. இப்படி அடிக்கடி ஜீவித்திருக்குங்காலத்தில் நடக்கிறது. பகவத் கீதையில் சொல்லிய குருக்ஷேத்திரமாகிற யுத்தபூமி இந்தச்சரீரமே. பஞ்சபாண்டவர்களும், துரியோதனாதிகளும் இருபக்கத்து யுத்தவீரர்கள். கிருஷ்ணபகவானே பரமாத்மா. கிருஷ்ணனுடைய தேஜோபலத்தினால் ஜீவனாகிற அர்ச்சுனன் காமாதிகளாகிற துரியோதனாதிகளை ஜயித்துவிட்டு மோக்ஷமடைகிறான். ஆத்மபரமாயும் அனாத்மபரமாயும் பிரவிர்த்திக்கும் புத்தியையுடையவனுக்கு மரணத்திற்குப்பின்வரும் ஸ்திதி 108-வது பிரிவுமுதல் விவரிக்கப்படும்.

75. மூன்றாவதுபக்ஷம்:— சுத்தமனதுடன் ஐக்கியமாவது வெகு அபூர்வம்போல் காமத்துடன் ஒன்றாய்விடுவதும் வெகு துர்லபம். ஆயினும் இப்போர்ப்பட்ட ஸ்திதி சாத்தியமே. காமத்தில் அசுத்தமனது முழுகிப்போனவுடன் கொஞ்சங்கொஞ்சமாக அதின் மூலஸ்தானமாகிய சுத்தமனதின் சம்பந்தம் குறைந்து கடைசியில் சுத்தமாய்விட்டுப்போகிறது. அப்போது தேவாம்சம் சுத்தமாய் விலகி மிருகாம்சம்தான் மிச்சப்படுகிறது. மற்ற சாதாரணமிருகங்களைக்காட்டிலும்இந்த மிருகரூபம் வெகுபயங்கரமானது. ஏனெனில் சாதாரணமிருகங்களில் மனதின் தேஜஸு சுத்தமாய் வெளியாகாமலிருக்க, இந்த மிருக-மனிதரூபத்தில் மனதின் பிரதிபிம்பம் இருந்துகொண்டிருக்கிறது. இந்தபலத்தால் மிருகங்களால் செய்யப்படக்கூடாத பயங்கரமான செய்கைகள் எல்லாம் இந்த மிருக—மனிதனால் செய்யப்படக்கூடும். அன்பு, இரக்கம், பூததயை முதலிய குணங்களின் லேசங்கூட இராத மிருகம்போல் திரிகிறஜனங்கள் இந்த பயங்கரமான ஸ்திதிக்கு வரும் பாதையில் இருப்பதாக நிச்சயித்துக்கொள்ளலாம். இப்போர்ப்பட்டவருடைய காமமானது ஒவ்வொரு ஜன்மத்திலும் அதிக தீவ்ரமான ஸ்திதியில் விருத்தியடைந்து கடைசியில் ஓய்வடைந்து நசித்துப்போகும். இதின் அணுக்கள் வேறு ஜீவனுக்கு உபயோகப்பட்டுப்போகின்றன. மானசபுத்திரன் ஆதியில் சுவீகரித்த சரீரத்தால் யாதொரு பிரயோசனமுள்ள அனுபவமும் கிடைக்கவில்லை. ஜன்மம் வியர்த்தமாய்விட்டது. மரணத்துக்குப்பின் இதின் ஸ்திதி (105—6) வது பிரிவில் விவரிக்கப்படும்.

76. சுத்தமனதின் பிரவிர்த்தியை விவரிப்பதற்குமுன் 4-5-வது அம்சங்களின் ரூபங்களைப்பார்ப்போம். (1) சூட்சும அணுக்களால் செய்யப்பட்ட ஒருவித சரீரத்துடன் ஜீவித்திருக்கையிலேயே ஸ்தூலசரீரத்தை விட்டுச்சித்பிரகாசத்துடன் ஜீவன் படுவேகத்துடன் வெகுதூரம்

போய் அவ்விடத்திய பதார்த்தங்களை அறிந்து அந்த அறிவைஸ்தூலமூ
னக்குங்கொடுத்து அதின் மூலமாக இதரஜனங்களுக்கும் அதைத்தெரி
விக்கக்கூடும். இப்படி அறியப்பட்ட பதார்த்தத்தின் ஸ்மரணை சாதார
ணமாய்ஜீவனுக்குத்தங்கம்மாட்டாது. ஏகதேசத்தில் இந்தஞாபகம் ஸ்
தூலமூளையில் இருக்கக்கூடும். இப்படிச் சஞ்சரிக்கும் சரீரத்துக்கு காம
மனதுரூபம் என்று பெயரிடலாம். இது இரண்டாவது அம்சமான லிங்
கசரீரமன்று என்பதை நன்றாய் அறியவேண்டியது. லிங்கசரீரம் மரண
த்துக்கு முன் ஸ்தூலத்தை விட்டுப் பிரியமாட்டாது. அதில் அறிவுமில்
லை. இந்தக்காம-மனை-ரூபம் ஸ்தூலத்தை விட்டு வெகுதூரம் போகக்
கூடும். குழந்தையிடத்தில் அதிபிரீதி வைத்த தாய் குழந்தையைவிட்டு
பிரிந்து வெகுதூரத்தில் மரணமடையும்போது குழந்தைக்குப் பிரத்தியக்
ஷமாகி சங்கதிகளைச்சொல்லுவதாய் வாஸ்தவத்தில் நேரிட்டிருக்கிறது.
குழந்தைக்குத் தோன்றின ரூபம் தாயின் ஸ்தூலசரீரமன்று தாயின் காம
மனது ரூபமே. அநேக ரோகங்களிலும் தூக்கத்திலும் இந்த ரூபம் ஸ்தூ
லத்தை விட்டுப் பிரிகிறது. மரணத்திற்குப் பிறகு தோன்றும் காமரூபம்
இந்தக்காமமனது ரூபமன்று என்பதைக்கவனிக்கவேண்டியது.

77. (2)மாயாவிரூபம் என்பது வேறு ஒரு சூட்சுமசரீரம இது ம
ஹான்களுடைய சுவேச்சையால் உண்டாகிறது. இச்சரீரத்துக்கு அவர்
களுக்குத் தோன்றும் ரூபத்தை அவர்கள் கொடுக்கிறார்கள். இச்சரீரத்
தில் தங்களுடைய பூர்ணப் பிரஞ்ஞையையும் மேலானதத்துவங்களையும்
செலுத்தி அக்காலத்தில் அச்சரீரமே ஸ்தூலம்போல விளங்கும்படிச்செய்
கிறார்கள். ஸ்தூலத்தின் பாரமன்றியில் வேண்டிய இடத்துக்குப் போகவு
ம் இஷ்டப்படிப்பிறருக்குத் தெரியும்படி அல்லது தெரியாமலிருக்கும்படி
ச் செய்யவும் அவர்களுக்குச் சகஜம். தங்களுடைய ஸ்தூலசரீரம் இருக்
கும் இடம்தவிர வேறுஇடங்களில் செய்யவேண்டிய வேலையை இந்த மா
யாவிரூபசரீரத்தினால் தான் அவர்கள் செய்கிறார்கள். எந்தக் காரியத்து
க்காக அவர்கள் அதை உண்டாக்கினார்களோ அந்தக் காரியம் முடியும்வ
ரையில்மட்டும் அந்தச் சரீரம் இருப்பதால் அது மாயாவிரூபமென்றுசொ
ல்லப்படுகிறது. சுத்தமனதினால் உண்டாவதால் இதற்கு பாவனசரீர
மென்றும் பெயர்.

8-சுத்தமனது

78. இப்போதுமனிதன் அடைந்திருக்கும் நிலைமையில் ராசமற்ற
சிரஞ்சீவியான மனது இந்த ஸ்தூல பூமிகையில் வினாங்கமாட்டாதென்ப

தை இதுவரையில் சொல்லியவைகின்றும் ஊகிக்கலாம். ஆயினும் அ சுத்தமனதில் அதின் தேஜஸால் விளங்கும் அதின்சிலசக்திகளை நாம் அறி யலாம். ஸ்வேச்சாசக்தி அசுத்தமனது மூலமாக விளங்குவதாக முன் (71)சொல்லப்பட்டது. மஹத்தத்துவத்தில் நின்றும் உண்டான மனதி ல்தான் சுவேச்சாசக்தி இருக்கிறது. நம்முடைய காமக்குரோதாதிக ளாகிற கீழ்பாகத்தை நம்முடைய மனதாகிற மேல்பாகத்தால் நாம் அட க்கி ஆளலாம் என்றும் ஞானம் நமக்கு இருக்கிறதல்லவா? இந்தஞான ம் மனதின் சக்தியன்றே. நாம் காமமன்று, மனதே என்றுமட்டும் ஒரு தாம் நிச்சந்தேகமாய் ஒருவன் அறிந்தானேயாகில் காமம் அவனுடைய லகாமுக்குள் அடங்கியிருப்பதில் தடையென்ன.

79. கிரியாசக்தியால் இச்சித்த பாவங்களுக்கு உருவம் கொடுத் தல் சுத்தமனதின் சக்தியே. மஹத்தத்துவத்தின் அம்சமான மன்து நித்தி யமுக்தமாய்ப்பூதபவிஷியத்வர்த்தமானங்களின் ஞானத்தை அடக்கிக்கொ ண்டிருக்கிறது. அசுத்தமனது சுத்தமனதுடன் சேர்ந்தவுடன் பூர்ண ஞானசக்தியை அடையவேண்டியதில் சந்தேகமில்லை.

80. சுத்தாசுத்தமனஸ்சங்களின் வித்தியாசம் இப்போது செவ்வை யாய்த்தெரியவரும். யுக்திசாதகமன்றியில் தத்துவத்தை அறியும் சக்தி சுத்தமனதினது. இது சாக்ஷாத்காரஞானம், சுயஅறிவு. பலவிஷயங் களைப்பார்த்து யுக்தியால் பகுத்தறிவது அசுத்தமனதின் காரியம். இ து மூளையின் ஸ்திதியைப்பொருத்தது. தெரிந்தவைகளினின்றும் தெரி யாததையும், தெரியாதவைகளினின்றும் தெரிந்ததையும் ஊகித்தல் அசு த்தமனதின் சக்தி. சுயவறிவானது அந்தர்முகவிர்த்தியாலுண்டாகும் சாக்ஷாத்காரஞானம். காமவிகாரபலத்தினால் இந்த சாக்ஷாத்காரஞான ம் வெளிப்படாமல் மூடப்பட்டுப்போகிறது. காமத்தால் சஞ்சலிக்கிற அந்தக்கரணத்தில் மனதின் தேஜஸ் பார்க்கப்படமாட்டாது. அதின் வார்த்தைகள் எச்சரிக்கைகள் இவைகள் கேழ்க்கப்படமாட்டா. மனச் சாட்சி என்பது இருக்கிறதாகவே தெரியமாட்டாது. சஞ்சலிக்கும ஜல த்தில் சூரியப்பிரதிபிம்பம் தெரியாததுபோலும், அலைகளின் இரைச்ச லில் வேறுசப்தம் கேழ்க்கப்படாததுபோலும் காமஅலைகள் ஓய்வடைந் து அந்தக்கரணம் ஸ்திரப்பட்டால்தான் தேவாம்சமாகிய ஆத்மஸ்வரூப ம் விளங்கும்.

வஸ்தையே பிரம்மாண்டத்தின் மேலான3பூமிகைகள் அரூபமாயும் பிரளய காலத்திலும் இருக்கிறதுபோல மனிதனுடைய ஆத்மா புத்தி மனது இவைகளும் அரூபமாயும் மற்ற 4 தத்துவங்கள் நசித்துப்போன பிறகும் இருக்கின்றன. பரமாத்மாவும் பிரத்தியகாத்மாவும் இருப்பதுபோல மனதும், மஹறத்தத்துவமும் சம்பந்தப்பட்டிருகின்றன. க்ஷூரமாகிய காமம் பிராணன் லிங்கசரீரம் ஸ்துலசரீரம் இவைகள் பிர்ம்மாண்டத்தின் கீழான 4 பூமிகைகளுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றன. காமபூமிகையைப்பற்றி அதிகவிவரம் தெரியவில்லை. அரூபம் ரூபமாவதற்கு இதுவே முக்கியசாதகம். பிராணபூமிகையே பிர்ம்மாண்டத்தில் 4 பூமிகைளுக்கும் அதிஷ்டானம். சமஷ்டி ஜீவாம்சமே மனிதனிடத்தில் பிராணைக விளங்குகிறது. மனிதனுடைய லிங்கசரீரம் பிர்ம்மாண்டத்தின் லிங்கபூமிகையுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. அப்படியே ஸ்தூல சரீரமும் ஸ்தூல பிர்ம்மாண்டமும் சம்பந்தபட்டிருக்கின்றன. இந்தச்சம்பந்தத்தால் அறியவேண்டியது என்னவெனில் ஒன்றுசமஷ்டியென்பதும் மற்றொன்று வியஷ்டியென்பதும் ஆகையால் ஒன்றின்தர்மங்கள் எல்லாம் மற்றொன்றிலும் இருக்கின்றனவென்பதுமே.

மூன்றுவது அத்தியாயம்

முற்றிற்று

பிர்ம்மஞானச்சுருக்கம்

நான்காவது அத்தியாயம்.

மரணம் பிந்தினஸ்திதி.

85. பிர்ம்மாண்டத்தின் பிரஸிர்த்தி ஸிஸிர்த்திகாலங்களாகிய மந்வந்திரமும் பிரளயமும் மனிதனுடைய பிரஸிர்த்திகாலமும் இதுவரையில் சொல்லப்பட்டன. இனி மனிதனுடைய மரணமும் பிந்தினஸ்திதியும் விவரிக்கப்படும். இது பிர்ம்மாண்டத்தின் பிரளயத்துக்கு ஒத்திருக்கிறது.

86. மனிதனுடைய 7 தத்துவங்களில் முதல் மூன்று அதாவது ஆத்மா, புத்தி, மனது இவைகள் காசரகிதமாயும், மற்றநான்கும் அதாவது காமம், பிராணன், லிங்கசரீரம், ஸ்தூலசரீரம் இவைகள் காசசகிதமாயுமிருக்கின்றன. முதல்பாகம் அகூரம், இரண்டாவது கூரம். இந்த இரண்டு பாகங்களையும் சேர்ப்பது மனது. இது ஒவ்வொரு ஜன்மத்திலும் சுத்தம அசுத்தமென இரண்டாகப்பிரிந்து அசுத்தபாகம் சரீரத்துடன் சம்பந்தப்பட்டு காம-மனதாக விளங்குகிறது. இந்தகாம-மனது ஒருபக்கத்தில் சுத்தமனதுடனும் ஒருபக்கத்தில் காமத்துடனும் சம்பந்தப்பட்டு மனிதனுடைய பந்தமோகூஷங்களுக்குக்காரணமாவதால் முக்கியமாயிருப்பதுபோல் மரணத்துக்குப்பிறகும் இந்த காம-மனதை முக்கியமாய்க்கவனிக்கவேண்டியது.

வ்ஸ்தூலத்தின்கதி.

87. தாயாருடைய கர்ப்பத்தில் பிறக்கப்போகிற சிசுவின் சூட்சுமரூபம் ஸ்தூலாணுக்களால் ஸ்தூலரூபத்தை அடைகிறது. இதுமுதல் பிரதிகூஷணமும் இந்த ஸ்தூல அணுக்கள் சரீரத்துக்கு வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருக்கின்றன. வெளியேபோன அணுக்கள் கந்தமூலை, மிருக, மனுஷியசரீரங்களை உண்டுபண்ண உபயோகப்படுகின்றன. இந்த அணுக்களெல்லாம் ஜீவரூபங்கள். இவைகள் வெவ்வேறுயினும் சிறிய கூட்டங்களாகிச்சரீரத்தை உண்டுபண்ணி உள்ளும் புறமும் வந்து போய்க்கொண்டு மனிதனையும் அவனைச்சுற்றிலுமுள்ள பிரபஞ்சத்தையும் சேர்க்கும் பாலம்போலிருக்கின்றன. பிராணனுடைய ஆஞ்ஞையின்படி இவைகள் ஒரு சரீரமாகப்பரிணமிக்கின்றன. மேஸ்திரியான பிராணன் பின்வாங்கிச்சரீரத்தை விட்டுப்பிரியும்போது கொத்தர்களான அணுக்களாகிற ஜீவர்கள் ஒருவனுடைய அதிகாரத்துக்கும் உட்படாமல் வில

(ரிப்போய்விட்டபடியால் தங்கள் தங்கள் இஷ்டப்படி பிரவிர்த்திக்கத் தொடங்குகின்றன. இவ்விதஅதிகப்பிரவிர்த்தியால் அணுக்களின் சேர்க்கையால் உண்டான சரீரமாகிற கட்டடம் இலைகளின் பிரிவால் சிதரிப் போகிறது. இதுவே ஸ்தூலசரீரத்தின் மரணம். பிணம் அழுகிப் போலவே இலைகளின் அதிகப்பிரவிர்த்திக்கு அடையாளம். லிங்கசரீரத்தை உபாதியாக உடைத்தாயிருக்கிற பிராணன் லிங்கசரீரமூலமாக ஸ்தூலத்துடன் சம்பந்தப்பட்டிருக்கிறான். என்று முன் (55) சொல்லப்பட்டிருக்கிறது. இந்த லிங்கசரீரத்துடன் பிராணன் பிரிந்தவுடன் அதாவது ஸ்தூலத்தையும் லிங்கசரீரத்தையும் இணைக்கும் நாடி அறுபட்டவுடன் மரணம் சம்பவித்து மனிதனுடைய ஞானேந்திரியங்கள் மட்டும் மிச்சப்படுகின்றன. ஸ்தூலசரீரத்தின் அணுக்கள் வெவ்வேறுகப்பிரிந்து வேறு சரீரங்களில் சேர்ந்துபோகின்றன. ஒருசரீரத்தின் மரணமே வேறு சரீரத்தின் உற்பத்தியாக முடிகிறது. நாம மறுபடியும் இந்தக்கர்மபூமிக்கு வரும்போது இந்த அணுக்களில் சிலதையே சந்திக்கலாம். ஆனால் அதைப்பற்றி இப்போது விசாரமில்லை. அணுக்கள் பிரிந்துபோவதே ஸ்தூலசரீரத்தின் மரணமென்பதை மட்டும் கவனிக்கவேண்டியது

லிங்கசரீரத்தின்கதி.

88. ஸ்தூலசரீரத்துக்குச்சரியான பிரதி இந்த லிங்கசரீரம். ஸ்தூலத்துக்கு மரணம் வருவதுபோல், லிங்கசரீரத்துக்கும் ஒன்றுசேர்க்கூடியிருந்த சூட்சுமாணுக்கள் பிரிகிறதினால் மரணம் சம்பவிக்கிறது. உயிர் உபாதியாகும் லிங்கசரீரம் மரணசமயத்தில் ஸ்தூலசரீரத்தைவிட்டு வெளியாகி முன்சொல்லிய வெண்மையான நாடி அறுபட்டு கடைசியான சுவாசம் வெளியேபோய் மனிதன் இறந்தான் என்று சொல்லப்படுகிறான். சரீரம் கனக்கிறதினால் லிங்கம் வெளியே போய்விட்டதாக ஊகிக்கலாம் இதின் மூலமாய்ச்சரீரத்தில் சலனங்களை உண்டுபண்ணின பிராணன் வெளியே போய்விட்டபடியால் இச்சலனங்களும் இல்லாமல்போகின்றன. இது அனுபவசித்தம். நாடி அறுபடாத காலத்திலும் லிங்கசரீரம் வெளிப்பட்டிருந்தால் சலனங்கள் மட்டாகவே இருக்கின்றன.

89. லிங்கசரீரம் ஸ்தூலத்தைச் சுத்தமாய் விட்டுப் பிரிந்தபிறகு, அதை விட்டு அது வெகுதூரத்துக்குப் போகிறதில்லை. சாதாரணமாய் அது பிணத்துக்கு மேல்மிதந்துகொண்டிருக்கிறது. சில சூட்சுமதிருஷ்டியுள்ளவர்களின் கண்ணுக்கு லிங்கசரீரம் ஒருவித ஊதா ஆகாரமாய் காணப்படுகிறது. பிணம் புதைத்தவிடத்தில் சிலருக்குக் காணப்படும் ஊதா ஆகாரமும்லிங்கசரீரமே. மரணசமயத்திலும் மரணத்துக்குப்பிறகும் சிலருக்குத் தோன்றும் ரூபம் இதுவே.

90. மரணம் சம்பவித்தவிடத்தில் அதிகதுக்கம் வெளிப்படாதவரையில் ஜீவனுடைய பிரஞ்ஞை சாந்தமாயும் ஸ்வபனத்தில்போலுமிருக்கிறது. இவ்விடத்தில் கவனிக்கவேண்டியது யாதெனின் லிங்கசரீரம் பிரியும்போதும, பிரிந்தவுடனும் அவ்விடத்தில் அதிக சப்தமிருக்கக்கூடாது. ஏனெனில், அக்காலத்தில், அதாவது, சுவாசம் இழுக்க ஆரம்பமானதுமுதல் பிராணன் போகுமவரையில் இந்த ஜன்மத்தில் நடந்த விஷயங்களெல்லாம் ஜீவனுடைய திருஷ்டிமுன்பாக ஏககாலத்தில் வருகின்றன. பிறகு இவைகளின் சேர்க்கை ஆகாசத்தில் பதிந்து விடுகின்றன. சித்திரகுப்தனுடைய ரிகார்டுகள் என்பது இவையே. இச்சமயத்தில்தான் சென்ற ஜன்மத்தின் புண்ணியபாபவங்களின் கணக்குவழக்குகள் பார்க்கப்பட்டு இனி வரவேண்டிய ஜன்மத்தை ஜீவன் தீர்மானிக்கிறான் அதிபலமான குணவிசேஷங்களெல்லாம மறுஜன்மத்தில் பிறவிக்குணங்களாக வருகின்றன. தன்னுடைய முழுச்சரித்திரத்தையும் ஏககாலத்தில் பார்த்து ஒரு தீர்மானத்துக்கு வருங்காலத்தில் ஜீவனைத்தொந்தரவு செய்யக்கூடாதபடியால் அவ்விடத்தில் பிரலாபங்கள் இருக்கக்கூடாது. ஆகையால்தான் சாதாரசமயத்தில் சப்தமிருக்கக்கூடாதென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். இப்படிப்பின் சங்கதிகளைப்பார்த்தபிறகு ஜீவனுடைய பிரஞ்ஞை தூக்கத்தில் போல் விளங்குகிறது.

91. சாதாரணமனிதன் சாகுங்காலத்தில் அதிதீவிரமான இச்சையை தரித்திருந்து அது நிறைவேறுமல் போயிருந்தால் சிலசமயங்களில் வீட்டிலாவது சமீபத்திலாவது லிங்கசரீரம் காணப்படும். அப்படிக் காணப்பட்ட காலத்தில் அதின் பிரஞ்ஞை முன் சொன்னபடி தெளிவாயிருக்கமாட்டாது. கேட்டகேள்விக்கு உத்தரம் வரமாட்டாது.

92. நாளாகநாளாகமேலான 5 தத்துவங்களும் லிங்கசரீரத்தினின்றும்பிரிபடுகின்றன. முன் ஸ்தூலசரீரம் பிரேதமானதுபோல் இப்போது லிங்கசரீரமும் பிரேதமாகிறது. ஸ்தூலப்பிரேதத்துக்குச் சமீபத்திலேயே லிங்கப்பிரேதமும் இருந்துகொண்டு அத்துடன் இதுவும் நாசமடைகிறது. பிணத்தைப்புதைக்கிறவிஷயத்தில் எலும்புகளின் அணுக்கள் பிரிபட ஆரம்பிக்கிறவரையில் லிங்கசரீரத்தின் அணுக்கள் பிரிபட்டுகொண்டு வருகின்றன. தகனம் செய்யும்விஷயத்தில் ஸ்தூலலிங்கங்கள் அதிசீக்கிரமாய்ப் பிரிபடுகின்றன. இப்படிப் பிரிந்த அணுக்கள் இதரதூதன ஸ்தூலலிங்க சரீரங்களின் உற்பத்திக்கு உபயோகப்படுகின்றன.

93. பிணத்தைப் புதைப்பதினால் சில்ஜீவர்கள் தீவிரமான் பிராபஞ்சிக வாசனையால் தாம்விட்ட கூடாகிறசரீரத்துக்குத்திரும்பி வரபிரயத்தனம் செய்யக்கூடும் அதின் மூலமாக ஜனங்களுக்குத் துக்கமே ஜனிக்

கும். அணுக்கள் வேறு சரீரத்துக்கு உபயோகப்படுவதும் தவக்கப்படும். ஆகையால் தகனம் செய்யும் விஷயத்தில் ஸ்தூலலிங்க அணுக்கள் சீக்கிரமாய்ப் பிரிபட்டு இதர சரீரத்துக்குச் சீக்கிரத்தில் உபயோகப்படுவதுமன்றியில் தாமஸமாய்ப்பிரிவதினல் உண்டாகும் தீங்குகளுமில்லாமல் போகின்றன. ஆகையால் புதைப்பதற்குத்தகனம் செய்வதே எல்லாருக்கும் குணம். இந்த தத்துவத்தை அறிந்தபடியால்தான் இந்துக்கள் சாதாரணமாய்ப்புதைக்கிறதில்லை. இதின் நன்மையை அறிந்துதான் இப்போது யூரோப்பு அமேரிகாதேசங்களிலும் தகனம் செய்யத்துவக்கம் செய்திருக்கிறார்கள்.

பிராணன்-காமம்-காமலோகம்.

94. ஸ்தூலலிங்கசரீரங்களினின்றும் பிரிந்தபின் மற்ற 5 தத்துவங்களும் காமலோகத்துக்கு வருகின்றன. லோகம் என்றால் இடம், ஸ்தானம். காமமென்பது சரீரத்திலுள்ள இச்சைமுதலிய மனுஷிகாரங்களின் அம்சம். ஆகையால் காமலோகமென்பது இவைகள் இருக்கக்கூடியஸ்தானம். இது புவர்லோகம் என்னப்படும். இது பிர்ம்மாண்டத்தின் ஒருபாகம். 'இந்த காமலோகத்தில் ஸ்தூலலிங்கதேகங்களை விட்டுவிட்ட பூலோகத்தில் ஜீவித்திருந்த சகல மிருக மானிட ஜீவன்களும் இன்னும் அனேக தேவவர்க்கங்களும் வசிக்கின்றன. இப்பூலோகத்தில், அநேகவர்க்கங்கள் வசிப்பதுபோல் காமலோகத்திலும் அநேகவர்க்கங்கள் உண்டு. இதில் வசிப்பவர்களுக்குப் பிரஞ்ஞையுண்டு. ஆகாசமும் வாயுவும் கலந்திருப்பதுபோல் இந்தலோகமும் பூலோகமும் கலந்திருக்கின்றன. ஆனல் இரண்டு லோகங்களின் பிரகிருதிஸ்திதி வேறுபடுவதால் ஒருலோகத்திலுள்ளவர்கள் மற்றொருலோகத்திலுள்ளவர்களை அறிகிறதில்லை. சிலசக்திகளைப்பக்குவப்படுத்துவதினல் பூலோகத்திலுள்ளவர்கள் புவர்லோகதிய விஷயங்களை அறியலாம்.

95. இந்தப் புவர் லோகத்தில் இரண்டாவது மரணம் சம்பவிக்கும்வரையில் மிருகங்களும் மனிதர்களும் தங்குகிறார்கள். மிருகங்களுக்கு சூட்சும அணுக்கள் பிரிந்தவுடனும் மனிதனுக்கு ஆத்ம—புத்தி—மனது பிரிய ஆரம்பித்த உடனும் இரண்டாவது மரணம் சம்பவிக்கிறது.

96. இந்தக்காமலோகத்தில் ஜீவன் முதலில் 5 தத்துவங்களோடும் கூடியிருக்கிறான். ஜலம் நிறைந்தகுடம் குளத்தில் அமுழ்க்கப்பட்டு உடைபட்டால் குடத்துக்குள் இருந்தஜலம் குளத்து ஜலத்துடன் கலந்துபோவதுபோல சமுஷ்டிப் பிராணனின்றும் கிரகிக்கப்பட்ட வியஷ்டிப்பிராணன் தன் உபாதியாகிய லிங்கசரீரம் பிரிபட்டவுடன் சமுஷ்டியுடன் கலந்துபோகிறது.

97. இந்தப் பிராணன் விலகினவுடன் ஆத்ம—புத்தி-மனதின் சீர்க்கையாகிற ஜீவன் கனடசியான உடுப்பாகிய காமம்ரூபத்துடன் கூடி இருக்கிறான். ஜீவித்திருக்கும் காலத்தில் பூலோகத்தில் காமம் ரூபமற்றியில் இருந்தது. புவர்லோகத்திற்குரிய பிரகிருதியுடன் கலந்து காமம் ஒரு ரூபத்தைத்தரிக்கிறது. அவ்விடத்திலுள்ள சில தேவதைகளையும் இழுத்துக்கொண்டு தன் ஸ்வபாவத்துக்குத் தகுந்த ரூபத்தைக் காமம் புவர்லோகத்தில் தரிக்கிறது. இதுவே ஜீவனுடைய 3-வது உடுப்பாகச் சொல்லப்படுகிறது. இது ஜீவனை மூடிக்கொண்டிருக்கிறது. இந்த லோகத்திலிருக்கும் வரையில் சாதாரணமாய் எல்லாருடைய பிரஞ்ஞையும் முன் சொன்னதுபோல ஸ்வல்பமாயும் தூக்கத்திலிருப்பதுபோலும் இருக்கிறது. இந்தப் பிரஞ்ஞாவஸ்தையிலிருந்து ஜீவன் சுவர்க்கத்துக்குப் போகும் முன் கொஞ்ச காலம் ஜீவன் பிரஞ்ஞையை யிழந்து விடுகிறது. சுவர்க்கத்துக்குப் போனபின் பூலோகத்திலிருந்த பிரஞ்ஞையை மறுபடியும் அடைகிறது.

98. சுவர்க்கலோகத்துக்குப் போகும்முன் புவர் லோகத்தில் காமரூபத்தின் நிலைமையைப் பார்ப்போம். காமரூபம் காமத்தால் நிலை பெறுகிறது. காமம்பலமாயிருந்தால் காமரூபமும் பலப்படும். காமம் ஸ்வல்பமாயிருந்தால் காமரூபமும் உபாயமாயிருக்கும். காமரூபம் சீக்கிரத்தில் நாசமடைவதும் அல்லது வெகுகாலம் நிலைத்திருப்பதும் அதின் பலத்தைத்தான் பொறுத்திருக்கிறது.

99. மூன்றின அத்தியாயத்தில்(72) வது பிரியில் மனது பிராபஞ்சிகவாசனையை விட்டு ஆத்மாவுடன் சேரப் பிரயத்தனம் செய்யக்கூடும் என்றும், அல்லது சிலசமயங்களில் ஆத்மபரமாகவும் சில காலங்களில் பிரபஞ்சத்திலும் முழுகியிருக்கலாம் என்றும், அல்லது ஆத்ம ஞாடகமில்லாமலேயே சுத்தப்பிரகிருதியுடன் மட்டும் சம்பந்தப்படக்கூடுமென்றும் சொல்லப்பட்டது. காமலோகத்தில் இம்மூவித மனைதயுடைய ஜீவனுடைய ஸ்திதியும் அடியில் வருமாறு.

100. (1) சுத்த அந்தக்கரணத்துடன் ஒருவன் ஜீவித்திருந்தால் அவனுடைய காமம் அதிக பலமுள்ளதாக இராதபடியால் காமலோகத்தில் அதற்கு அதிகப் பிரயித்தி இருக்கமாட்டாது. ஜீவித்திருக்கையில் காமமும் அசுத்தமனதும் சேர்ந்திருந்தன. காமம்பலமாயில்லாதபடியால் அது மனதினால் சுத்தப்படுத்தப்படுகிறது. காமத்தின் சுத்தாம்சத்தை மனது கிரகித்து விடுவதால் அசுத்தாம்சத்தைத் தன்னில் அதை விட்டுவிலக மனதிற்கு வெகுவருத்தமிருக்கமாட்டாது. ஜீவன் மெள்ள மெள்ளத் தன்னுடைய சாத்வீகாணுபவங்களைக் கிரகித்துக் காமலோகத்தில் மிச்சமும் சுவர்க்கலோகம் போகப் பிரயத்தனம் செய்கிறான். இதுதான் இரண்

டாவது மரணம். ஜீவனுக்கு யாதொரு தொந்திரவும் கொடுக்காதவரையில் சாவதான்மாய் இந்த இரண்டாவது மரணமடைந்து சுவர்க்கத்துக்குவந்தவுடன் ஜீவன்விழித்துக்கொள்ளுவான்.

101. தொந்திரவு வரக்காரணமென்ன? எப்படிவரக்கூடும். பந்து ஜனங்களுடையவும் சினேகிதர்களுடையவும் பிரலாபங்கள் தங்கள் சரீரங்களிலுள்ள காமத்தைச் சலனம் பண்ணுவது மூலமாக மரணமடைந்த ஜீவனுடையகாமத்தில் சலனம் உண்டுபண்ணி, தன்மூலஸ்தானமாகிற சுத்த மனதுடன் அசுத்தமனது சேருவதற்கு முன், தூங்கிக்கொண்டிருக்கிற அந்த அசுத்தமனதை எழுப்பக்கூடும். அப்படி விழித்துக்கொண்ட அசுத்தமனது ஜீவித்திருந்த காலத்தில் நடந்த சங்கதிகளை எல்லாம் ஞாபகத்துக்குக் கொண்டுவரக்கூடும். அநேகசமயங்களில் இந்த ஜீவனுக்கு இந்த விழிப்பால் வெகு வருத்தமும் உண்டாகும். இந்தக்காமலோகத்தை விட்டுப் போவதும் தவக்கப்படுவதால் ஜீவனுடைய சுவேச்சாவிவகாரத்துக்கும் தடங்கல் நேரிடுகிறது. சுவர்க்கத்துக்குப் போகும்முன் சுவல்பகாலத்துக்குள்தான் இந்தப் பூலோகசம்பந்தம் உண்டாகக்கூடும். ஏகதேசத்தில் காமரூபத்துடன் கலந்திருக்கும் ஜீவன் பூலோகத்திலுள்ளவர்களுக்குச்சங்கதிகளைச் சொல்லக்கூடும். ஆனல் இதனல் ஜனங்களுக்கு உபகாரமானது மட்டும் வெகு துர்லபம். சாதாரணமாய்ச்சுவர்க்கத்துக்குப்போகுமுன் பிரஞ்ஞை பங்கமாய்விடுகிறது. அதிகதீவிரமான ஆசை சில சமயங்களில் ஜீவனைப்பூலோகத்துக்கு இழுக்கக்கூடும். ஆனல் சுத்த அந்தக்கரணமுள்ள ஜீவனுக்கு ஆசை அதிகபலமாயிராதபடியால் கர்முடைய பிரலாபங்களால் யாதொரு தொந்திரவும் கொடுக்காதவரையில் அவர்கள் ஸ்வஸ்தமாகத்தூங்கி இரண்டாவது மரணவிஷயத்தில் யாதொரு வருத்தத்தையும் அடையாமல் சுவர்க்கலோகத்துக்குப் போகக்கூடும். ஜீவன் அப்படிப்போனபிறகு காமலோகத்தில் காமரூபம் மட்டும் தங்கி நாளாவிர்த்தியில் அதின் அணுக்களும் பிரிந்துபோகின்றன. இப்படிப்பிரிந்துபோகும் அணுக்கள் மறுபடியும் கூடுவதை (124) வது பிரிவில் பார்க்க.

இ-சாதாரணஜனங்களின்காமலோகவஸ்திதி.

102. ஜீவன் காமலோகத்துக்கு வந்தவுடன் இவனுடைய இச்சைகள் முன் (97) சொன்னபடி ரூபத்தைத்தரித்து இந்த ஜீவனை மறைத்துக்கொள்ளுகின்றன. இந்த ரூபம் அதிசூட்சுமஅணுக்களால் உண்டாகிறது. விஷயபோகங்களில் ஆசக்தி அடைந்திருந்த "அசுத்தமனது தன்னல் உண்டுபண்ணப்பட்ட வலையிலிருந்து சீக்கிரத்தில் விடுபட்டுத்தன் மூலஸ்தானத்துக்குப்போகமாட்டாது, இந்தக்காமரூபம் க்ஷீணகதியை

அடையாதவரையில் அசுத்தமனது அதைவிட்டுப்பிரிபடாததுமுல எனு தமனதுடன் ஒன்றுகத்தாமஸமாகிறது.

103. காமலோகத்தில் ஜீவனும் காமமும் சேர்ந்திருக்கும்வரையி ல் அந்த ஜீவன் பூலோகத்துக்குத்திரும்பிவரக்கூடும். இப்படித்திரும் பிப்போவதையும் ஜீவன் அபேக்ஷிக்கக்கூடும். ஏனெனில் பூலோக வி ஷயங்களில்தான் அந்த ஜீவனுடைய மனது பற்றுதலை அடைந்திருகிற து. தன்னுடைய சுத்தமான ஸ்தானத்திலிருந்துகொண்டு திருப்தியை யும் ஆனந்தத்தையும் அடைய மனது கொடுத்துவைக்கவில்லை. ஆகை யால் இதுவரையில் தீராத ஆசைகளைத்தீர்த்துக்கொள்ளும் பொருட்டு ஜீவன் மறுபடியும் பூலோகத்துக்கு இழுக்கப்படக்கூடும். இப்படி இ ழுக்கப்பட்டால் காமலோகத்தில் ஜீவனுடைய வாசம் நீடிக்கிறது. கா மஸுபம் பலப்படுகிறது. அதற்கும் ஜீவனுக்கும் உள்ள சம்பந்தம் விடு படுகிறதில்லை. ஆகையால் ஜீவனுடைய சுவேச்சாகமனதுக்கு விரோத ம் வருகிறது.

104. (3) கெட்டகுடத்தையுள்ளவர்களும் வெகு காமக்குரோதாதி களை உடையவர்களும் காமலோகத்தில் வெகுகாலம் தங்குகிறார்கள். ம றுபடியும் பூலோகசுகங்களைப்பெறவேண்டுமென்கிற ஆசை அவர்களுக் கு வெகு பலமாகவே இருக்கிறது. இந்த ஆசைகளை நேரில் பூர்த்தி செய்துகொள்ள அவர்களுக்கு முடியாதபடியால் பூலோகவாசிகள் மூல மாகத்திருப்தி அடைகிறார்கள். இவர்களுக்கு வசப்பட்டுப்போனவர்களி ன் கதி அதோ கதியே. பிசாசுபிடித்தவனுடைய இரத்தத்தை பிசாசு பானம்பண்ணி அவனைக்கிருசமாக்கிவிடுவது சாதாரணமாய்த்தெரிந்தவி ஷயமே.

105. தற்கொலையாலாவது, பிறராலாவது, தற்செயலாலாவது ம ரணமடைந்தவர்கள் காமலோகத்திலுள்ள ஒரு வகுப்பு வாசிகள். பூ லோகத்தில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற இயற்கையான காலம் முடி யும்வரையில் அவர்கள் காமலோகத்தில் 6-7-வது தத்துவங்கள் (புத்தி-ஆத்மா) அன்றியில் பிரிந்திருக்கிறார்கள். மரணத்தைக்கொடுத்தகாரண ம் காமலோகத்தில் இவர்களின் ஸ்திதியைத்நிர்மானிக்கிறது. மரணத்தி னால் சம்சாரதுக்கத்தினின்றும் விலகலாமென்று நினைத்துத்தற்கொலை செய்துகொண்டவர்கள் பூலோகவாசிகள் மூலமாகத்தங்கள் ஆசைகளை த்தீர்த்துக்கொள்ளுகிறார்கள். தங்களுக்கு பூலோகத்தில் ஏற்பட்ட கா லமுழுடியும் வரையில் இப்படிச்செய்துகொண்டு பிறகு 6-7 அம்சங்கள் முழுமையும் இழந்துவிடுவார்கள்.

106. தற்செயலாய் மரணம் சம்பவித்த விஷயங்களில் நாசரகிதத தானவங்களும் நாசசகிதத்துவங்களும் ஒன்றோடொன்று சேரமுயலுகின்றன. நல்லவர்களாயின் இயற்கையானகாலம் முடியும் வரையில் சமாதியில் இருந்ததுபோல இருந்து பிறகு சுவர்க்கத்துக்குப்போகிறார்கள். கெட்டவர்களாயின் அக்காலம் வரையில் அங்குமிங்கும் திரிந்துகொண்டு ஜனங்களைக்கெட்ட செய்கைகளில்ப்பிரவிர்த்திக்கும்படிச்செய்து அவைகள் மூலமாகத்திருப்தி அடைந்து பிறகு வேறு ஸ்தானத்துக்குக் கொண்டுப்போகப்பட்டு அவ்விடத்தில் வெகுவருத்தமடைந்து நாசமாகிவிடுகிறார்கள். கொலைகாரன் பூலோகத்தில் பயப்படத்தக்கவன். இவனுக்கு மரணதண்டனை கொடுப்பதினால் இவன் புவர்லோகத்திலிருந்தாலும் அதிகமாய்ப்பயப்படதக்கவனாகிறான்.

107. தன்மார்க்கத்தாலும், அதிகப்படிப்பினாலும், பெரியசங்கதிக்காக தன்னைத்தானே பலிகொடுப்பதினாலும் உண்டாகும் அகாலமரணம் காமலோகத்தில் ஜீவனை வெகுகாலம் நிறுத்திவைக்கும். மரணக்கடின கருத்தே காலத்தையும் கதியையும் நிர்ணயிக்கும். சித்தப்பிரமையால் தற்கொலை செய்பவன் காமலோகத்தில் தூங்கிவிடுகிறான்.

108. காமரூபமாகிற மெல்லுடி கூடியித்தவுடன் ஜீவன் காமலோகத்திலிருந்து சுவர்க்கலோகத்துக்குப்போகிறான். சுத்தமனது அசுத்தமனதைத் தனக்குள் இழுத்துவிடுகிறது. புனர்ஜன்மம் கிடைக்கும் வரையில் மனது ஒன்றாகவே இருக்கிறது. அசுத்தமனதுடன் தனக்கு அனுகூலமாயிருக்கிற சாத்வீகானுபவங்களையும் சுத்தமனது நிரகித்துவிடுகிறது. வயலிலிருந்து குடியானவன் வரவழைக்கப்படுகிறான். அதிக அறுப்பு அறுத்திருந்தாலும் சரி, ஸ்வல்பமாக அறுத்திருந்தாலும் சரி, அறுத்த பலனுடன் குடியானவன் வந்துவிடுகிறான். காமலோகத்திலிருந்து ஜீவன் போனபிறகு பூலோகவாசிகளுடன் சேரமுடியாது. ஆனால்சிலவிலக்குகளுண்டு. இவைகளைப்பின் பார்ப்போம்.

காமரூபம்.

109. ஜீவன் பிரிந்தபிறகு மிச்சப்படுவது காமரூபம். இது ஜீவனுடைய கடைசியான உறை. பூர்வஜன்மம் சுத்தமாயிருந்தால் இந்த கமரூபத்தில் அதிக பலமில்லாமல் சீக்கிரத்தில் அதின் அனுக்கள் சிதறிப்போகின்றன. பிரபஞ்ச இச்சை முதலியவைகள் அதிக பலமாயிருந்தால் பூவுடன் சேர்ந்த நாருக்குப் பூபோனபிறகும் சிலகாலம் வாசனை இருப்பதுபோல் ஜீவன் போய்விட்டும் சிலகாலம் இந்த ரூபத்துக்கு உணர்ச்சி முதலியவைகள் இருப்பதாகவும் பிரஞ்ஞாபாசமும் தோன்றும். ஜன்

மம் கெட்டதாக இருப்பதால் அனுகூணமான பூலோகவாசிகளிருக்குமி டத்துக்கு இழுக்கப்பட்டு கொஞ்சகாலம் பலத்தைத்தேடி ஜீவிக்கலாமீ. கடைசியில் காமரூபத்தின் அலுக்கள் சிதறிப்போகவேண்டியதே தவிர வேறில்லை. சில சமயங்களில் இந்த ரூபத்தைச் சில பிசாசுகள் கைப்ப ற்றிக்கொள்ளக்கூடும். இதனல் ஜனங்களுக்கு உபத்திரவம் அதிகமே.

110. இந்த காமலோகவாசம் சில பணி நேரம் முதல் சுமார் 25—30 வரு வரையில் இருக்கக்கூடும்.

111. இந்த காம ரூப அணுக்கள் புதிதாய் யாதொரு காரியத்தை யும் செய்யச் சக்தமாகிறதில்லை. ஆகாசத்தில் விதைகள் தொங்கிக்கொ ண்டிருப்பதுபோல இவைகள் இருக்கின்றன. ஜீவன் புலனுண்மம் ம டுக்கும் காலத்தில் இந்த அலுக்கள் வந்துசேர்ந்துவிடுகின்றன.

சுவர்க்கலோகம்

112. ஒவ்வொரு கல்பத்திலும் ஜீவன் புதிய ஜனனமரண ரூப சம்சாரயாத்திரையை ஆரம்பிப்பதற்குமுன் ஒருதவைகைபோலிருக்கிறா ன். (இவ்விதயாத்திரைகள் அநேகமாய்விட்டன). அவன் சுத்தமாயு ம் கிரியாரகிதமாயுமிருக்கிற சைதன்னியமன்று. சென்ற கல்பங்களில் பிரகிருதி சம்பந்தத்தால் அவன் புத்தியை அடைந்திருக்கிறான். அதல் பிரகிருதியைப் பூர்த்தியாகச் சுவாதீனப்படுத்திகொள்ளுப்படியான புத் தியை அவன் அடைந்திருக்கவில்லை. ஆகையால் அவனுடைய அஞ் ஞானம் பிரகிருதி மாயைக்கு அவனை உட்படுத்துகிறது. ஊதாக்கண்ணு டி மூலமாகப் பதார்த்தங்களைப் பார்க்கிற திசுவுக்கு அலைகள் ஊதாவா கத் தெரியவருவதுபோல், மனிதனுக்கும் மாயை தோன்றுகிறது. சரீர த்தைத் தரிப்பதின் பிரயோசனம் என்னவெனில் பிரகிருதி சம்பந்தப் பட்டாலும் அதின் மாயையால் மயக்கத்தை யடையாமல் பிரகிருதியை உள்ளபடி பார்த்து அறிவதே. இந்த சம்சாரசாகரத்தில் இரண்டு நிலை மைகள் மாறிமாறிவருகின்றன. பிரகிருதியால் சுத்தமாய்ச் சூழப்பட்டு இப்பூமியில் ஸ்வல்பகாலம் இருத்தல் ஒன்று. இந்த காலத்தை உத்தேசி த்துச் சுவர்க்கத்தில் வெகுகாலம் இருத்தல் மற்றொன்று. இந்தச் சுவர் க்கலோகத்திலும் பிரகிருதியால் சூழப்பட்டாலும் அது சூட்சுமமாயிரு ப்பதுமன்றிப் பூலோகத்தில் போல் அவ்வளவு மயக்கத்தையும் உண்டுப ண்ணுகிறதில்லை. இந்த இரண்டாவது நிலைமைதான் ஜீவனுடைய சா தாரண நிலைமையாகச் சொல்லலாம். ஏனெனில் சுவர்க்கத்தில் வாசஞ் செய்யும் காலமும் நீடித்திருக்கிறது; தன்னுடைய சுயவாம்சத்துக்கு அதிகமாய் விலகிப்போகவில்லை; சூட்சுமப் பிரகிருதி சம்பந்தப்பட்டா லும் அதின் மாயையால் மயக்கம் அதிகமாகவில்லை. மெள்ளமெள்ளப்படிப்

படியாக அனுபவங்கள் திரும்பிவரச்சுத்தப் பிரகிருதி ஜீவனை மயக்கடிக் கமுடியாமல் அவனுக்குச் சுவாதீனப்பட்டுப்போகிறது. இந்தச் சுவர்க்கலோக வாசமே ஜீவனுக்குச் சந்தியமானது. தேன் ஈயானது பல புஷ்பங்களினின்றும் தேனைக் கிரகித்து ஒன்றுசேர்த்து சக்கையான புஷ்பத்தை எறிந்துவிடுவதுபோல் பல ஜன்மங்களிலும் பிரவேசம்பண்ணுகிற ஜீவன் ஒவ்வொரு ஜன்மத்தின் சாரத்தைக் கிரகித்துச்சேர்த்துக்கடைசியில் சுத்தத் தெய்வமாக ஆய்விடுகிறான்.

113. காமரூபத்தில் நின்றும் பிரிபட்டு சாத்வீகானுபவங்களுடன் ஜீவன் சுவர்க்கத்துககு வந்து சேருகிறான். அதுவரையில் பிரஞ்ஞை பங்கமாகவே இருக்கிறது. சேர்ந்தபின் பழையபிரஞ்ஞையை அடைகிறான். இவ்விடத்தில் புது அனுபவங்கள் யாதொன்றுமில்லை. பூலோகத்தின் பழைய அனுபவங்களின் பலன்கள்தான் இவ்விடத்தில் அனுபவிக்கப்படுகின்றன. பூலோகத்தைக்காரணபூமியாகச் சொன்னால் சுவர்க்கலோகத்தைக் காரியபூமியாகச் சொல்லலாம். உழுதவிடத்தில் விதையை ஒருக்ஷணத்தில் போடுகிறோம். அநேக மாதங்கள் சென்றபின்தான் அவைகள் கதிராகின்றன. விதைக்கு அநேகமடங்கு அதிகமாகவே கதிர் இருக்கிறது. விதை எந்தச்சாதியோ அச்சாதியே பலனும் கிடைக்கிறது. இதுபோல பூலோகத்தின் ஸ்வல்பகாலத்திலுள்ள அனுபவங்களாகிற காரணத்துக்குத்தக்கபடி ஸ்வர்க்கலோகத்தில் வெகுகாலபலன் கிடைக்கிறது. காரணங்கள் அநேகமாயிருந்தால் பலன்களும் அப்படியே நீடித்தவைகளாயிருக்கும். நிறைவேறுத ஆசைகளெல்லாம் இவ்விடத்தில் திருப்தி அடைகின்றன.

114. பிரகிருதிசம்பந்தமானவை யெல்லாம் பூலோகத்திலும் புவர்லோகத்திலும் விடப்பட்டிருக்கின்றன. சுவர்க்கலோகத்தில் பலன்கொகுக்கும்படியான விதை பூலோகத்தில் ஸ்வல்பமாய் விதைக்கப்பட்டிருந்தால் பலனும் ஸ்வல்பமாய்க்கண்டு ஜீவனுடைய அபிவிர்த்திக்கு வேண்டிய ஆகாரம் போராமலிருப்பதால் அந்த அபிவிர்த்தியும் தாராளமாயிருக்கமாட்டாது. ஆனகயால் தான் சுவர்க்கலோகத்துக்கு உபயோகப்படும்படியான விதைகளை விசேஷமாய் விதைத்திருக்கவேண்டியது. சாத்வீகஅனுபங்களையே தாராளமாய்ச் சம்பாதித்திருக்கவேண்டும். பூலோகமே ஜீவனுடைய அபிவிர்த்தியை நிர்ணயம் செய்கிறது. சுவர்க்கத்தில் ஜீவன் இவைகளைப் பரிசிலனைசெய்து அவைகளின் சாரத்தை மறுஜன்மத்தின் உபயோகத்துக்காகச் சேர்த்துவைக்கிறான். ஒருவன் சம்சாரபந்தத்தைச் சேதிக்கப் பெரியகத்தியுடன் வருவானேயாகில் சுவல்ப அனுபவமுள்ளவன் சிறியகத்தியுடன்வருகிறான். எவ்விடத்திலும் கொண்டுவரப்பட்டதை அவனவன் செய்துக்கொண்டதே யொழிய வேறில்லை. ஒரு

வன் ஒருபெரிய பரோபகாரவிஷயத்தைச் செய்ய உத்தேசித்து மரண மடைந்தால் சுவர்க்கத்தில் அந்த உத்தேசத்தால் உண்டாகும் ஆநந்தத்தை அடைந்து பாவனையையும் பலப்படுத்தி மறுஜன்மத்தில் தகுந்த தேசகாலசாமக்கிரிகள்கிடைத்த உடன் அந்த உத்தேசத்தை நிறைவேற்றுவான். மனதில் கொண்ட பாவனைக்கு ஸ்தூலரூபம் கொடுப்பது மனதின் சிர்ஷ்டியே. ஆகையால் சுவர்க்கலோகத்தில் காலஹரணமாகாமல் அதில் செலவழியும காலமெல்லாம் ஜீவனுடைய நன்மைக்கே ஏற்படுகிறது.

115. எப்போதும் பிரவிர்த்தி இருக்கமுடியாதபடியால் சுவர்க்கத்தில் ஜீவன் ஸ்வஸ்தமாக இருக்கிறான். இவ்விடத்தில் துக்கத்துக்கு ஆஸ்பதமில்லை. சுவர்க்கலோகப்பிரவேசம் அந்த லோகத்தில், ஜனனமாகச் சொல்லலாம். ஜீவனுக்குப் பூலோகத்தில் ஜனனம் வளருதல் க்ஷயித்தல் மரித்தல் முதலிய 6 விகாரங்கள் இருப்பது போல சுவர்க்க லோகத்திலும் அவைகள் உண்டு. சுவர்க்க லோகத்தில் மரணமே பூலோகத்தில் ஜனனம்.

116. சுவர்க்கலோகமென்பது ஒரு இடமன்று: இது ஒருஸ்திதி. இதுஒவ்வொருவனும்செய்துகொள்ளப்பட்டது. ஆகையால் ஒவ்வொருவனுடைய சுவர்க்காநுபவமும் ஒவ்வொருவிதமாயிருக்கும். சுவர்க்கத்தை ஒரு இடமாய் நினைக்கும் பக்ஷத்தில் அதில் வசிப்பவர்களுக்கு தாரதம்மியமில்லாமல் போகும். சுவர்க்காநுபவம அவரவர்களின் புண்ணியத்தையே பொறுத்திருக்கிறபடியால் சுவர்க்கத்தை ஸ்திதியாகவே நினைக்கவேண்டியது.

117. இந்தஸ்திதியிலும் அநேக உட்பிரிவுகளுண்டு. மொத்தமாய் இவைகளை ரூப அரூப லோகங்களாகப்பிரிக்கலாம். அரூப லோகமே திருபவனம் என்று சொல்லப்படுகிறது.

118. பூலோகத்தில் ஜனித்த பின் மறுபடியும் தாயார்வயிற்றில் நுழையமுடியாததுபோல சுவர்க்கலோகத்தில் ஜனித்தபின் மறுபடியும் புனர் ஜன்மம் வரும் வரையில் பூலோகத்துக்கு வரமுடியாது. சென்ற ஜன்மத்தின் ஞாபகம்பூர்த்தியாக இருந்தாலும் புனர்ஜன்மகாலத்தில் தான் ஜீவன் பூலோகத்துக்கு வரமுடியும்.

119. அசுத்தமனதின் அனுபவங்கள் பூலோகத்துடன் போய்விட்டாலும், சுவர்க்கலோகத்திலிருக்கும் ஜீவன் தான் மரணமடைந்ததாகவாவது தன்னுடைய பிரீதிக்கு விஷயமானவர்களினின்றும் பிரிந்திருப்பதாகவாவது நினைக்கிறதில்லை. அவர்களுடன் கூடவே இருப்பதாகவும் தன்னுடைய அன்பைக்காண்பித்துக்கொண்டே இருப்பதாகவும் நினைக்

கிறான். இதைப்பிரமையாக நினைக்கக்கூடாது. ஜீவன் இக்காலத்தில் மானசிக நிலைமையில் இருப்பதால் மானசிக தர்மமான அன்பு முதலிய லவுகளைக் காண்பிக்க வன்முடியாது. இந்த அன்பு ஸ்வப்னத்திலும் வேறுவிதங்களாலும் தெரியும். சிசுக்களுக்குவரும் ஆபத்துகளை இறந்து போன தாயின் அன்பு அல்லாமல் எதுதான் நீக்குகிறது. மேலும் இந்த அன்பு மறுஜன்மத்தில் இருவர்களையும் ஒரே இடத்தில் சேர்த்துவிடுகிறது. சுவர்க்கசுகம் எவ்விதமானதாக இருந்தபோதிலும், பிராபஞ்சிக துக்கம் சுவர்க்கவாசியான ஜீவனுக்குத் தெரியமாட்டாதென்பது நிச்சயம். ஏனெனில் சுவர்க்கத்தில் ஜீவன் மானசிக பூமிகையில் இருக்கிறான். ஆகையால் ஸ்தூல்பூமிகையில் நடக்கும் சங்கதிகளை ஜீவன் அறியமாட்டான். மானசிக பூமிகை பூலோகத்திலிருப்பவர்களுக்கும் சுவர்க்கத்துக்குப்போன ஜீவனுக்கும் ஒன்றுகவே இருப்பதால் சுவர்க்கவாசியான ஜீவன் தான்நேசித்தவர்களுடைய துக்கத்தைமட்டும் அறியாமல் அவர்களால் சூழப்பட்டிருக்கிறது. அவர்கள் மரணமடைந்ததன் முன் சுவர்க்கத்துக்குப்போயிருந்தஜீவனைக்காணவேலுமென்பது இல்லை. இதுதுப்தவித்தையின் நிச்சயம்.

120. ஜீவன் சுவர்க்கத்தில் சுதந்திரத்தை அடைந்திருக்கிறபடியாலும் தான் ஆத்மஸ்வரூபமாயிருக்கிறபடியால் சர்வஞ்ஞதை அடையக்கூடுமே என்று கேட்கும்பட்சத்தில் இது முடியாது. ஏனெனில் சுவர்க்கலோகம் ராஜஸதாமஸ அம்சங்கள் நிங்கலான சாத்வீகபூலோகத்தொடர்ச்சியே. எப்படி இந்தஜன்மத்தில் பிரதிருதிபந்தத்தால் காம் சர்வஞ்ஞர்களாக இருக்கவில்லையோ அப்படியே சுவர்க்கத்திலும் இருக்கமுடியாது.

121. சுவர்க்காநுபவம் எல்லாருக்கும் உண்டாவெனில் மரணதுகுகுப் பிறகு யாதொன்றுமில்லை என்று நிச்சயமாய் நம்புகிறவனுக்கு இந்த அனுபவம் இல்லாமல் போய்விடும். ஒருஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப்போகிறவன் தூக்கத்தில் மத்தியிலுள்ள கிராமங்களை அறியாமல் போகக்கூடியது போல் மரணந்துக்குப்பின் யாதொன்றுமில்லைன்று நம்பினவன் புனர்ஜன்மகாலம்வரையில் தூங்குகிறவன்போலிருந்துவிடுகிறான். சுவர்க்காநுபவமஷ்டமே இவனுடைய அவநம்பிக்கையின் பலனாகிறது.

122. சுவர்க்கத்தில் நூதனமான செய்கை யாதொன்றுமில்லாவிட்டாலும் ஒருவிதத்தில் ஞானம் அபிவிர்த்தியாகக்கூடும். ஒருவன் ஜீவிக்கையில் சரீரசம்பந்தமில்லாதவிஷயங்களில் வெகு ஆசக்திகொண்டவனாக இருந்தால் உதாரணம் சங்கீதம், சித்திரம்எழுதுவது, கவனம் செய்தல் இவைபோல்வன விஷயங்களில் தீவிரமான புத்தியை உடையவ

ளை இருந்தால் இந்தப்புத்தியை அவன் அடிக்கடி ப்பிரயோகப்படுத்தக்கூடும். பூலோகத்திலிருக்கும்போது விளங்காததான ஞானஞானத்தைமட்டும் சுவர்க்கலோகத்தில்சம்பாதிக்க முடியாது. சுவர்க்கலோகத்தில் இப்படிப்பட்ட ஞானம் அடைந்ததற்கு அடையாளம சிலர் பிறந்தவுடனே அதிமேதாவித்தனத்தைக் காண்பிவிப்பதேயாம்.

123. சுருக்கமாய்ச் சொல்லின் மரணத்துக்கு பிறகு பிரஞ்ஞை மூ தலில் பங்கப்பட்டும் பிறகு முன்போலவுமிருக்கக்கூடும். சிலர்விஷயத்தில் சுத்தமாய் இல்லாமலிருக்கக்கூடும்.

பூலோகத்துக்கு திரும்புதல்

124. சுவர்க்க லோக வாசகாலம அவரவர்களுடைய புண்ணியத்தை பொறுத்ததென்று முன்சொல்லப்பட்டது.. ஒருமானுஷத்துக்கும் மறுஜன்மத்துக்கும் மத்தியில் சுமார் 1500 வரு) செல்லுகின்றன. இந்த வாஸகாலம் முடிந்தவுடன் மறுபடியும ஜீவன் பூலோகத்திற்கு திருமபுகிறான். அப்படித் திரும்பிவருங்கையில்தான் சுவர்க்கத்தில் சம்பாதித்த அனுபவங்களையும் முன் 122) பிரஸ்தாபித்தபடி பூதிதாய்ச் சம்பாதித்தஞானத்தையும்ஜீவன் கொண்டுவருகிறான். சுவர்க்கத்தின் வாசலைத்தாண்டிவருகையில்தான் முந்தியஜன்மத்தில் விஷதத்திருந்தபாப்பீஜங்களைச்சந்திக்கிறான். சுவர்க்கத்திலிருக்கையில் துக்கரஹிதமாயிருந்தாலும் செய்தபாபம் நசித்துப்போகாமல்பலன் கொடுக்கக காத்துக் கொண்டிருக்கிறது. பூமியில் விதைத்த விதைகள் சுவல்ப்காலம் பூமியில் இருந்து பிறகு முளைக்கிறதுபோல பாபங்களும் ஜீவன் சுவர்க்கத்திலிருக்குமபோது ஒன்றும் செய்யாமலிருந்து சூட்சுமசரீரம் உண்டாகும்காலத்தில் இத்துடன் கலந்துகொள்ளுகின்றன. அந்தகுணங்களுடன் ஜீவன் பூமியிலஜனிக்கிறான். ஜீவன் சுத்தமாகிறவரையில் இந்த ஜனனமரணரூப சம்சாரம் நடந்துகொண்டுவருகிறது.

நிர்வாணம்.

125. பூலோகவாசத்துக்கு சுவர்க்கம் எப்படியோ அப்படியே புனர்ஜன்மசமுகத்துக்கு நிர்வாணம் என்பது இருக்கிறது.. இந்தமேன்மையான ஸ்திதியைப்பற்றிப்பிரஸ்தாபிக்க இவ்விடத்தில் முடியாது. இது கடைசியான பூர்ணப்பிரஞ்ஞையுள்ள ஸ்திதியென்றுமட்டும் இவ்விடத்தில் சொல்லப்படுகிறது. மோக்ஷம் அல்லது நிர்வாணத்திற் சென்றவன் மறுபடியும் வேறு மகாமன்வந்திரத்தில் அந்த ஸ்திதியை விட்டுப்பிரிந்து மார்க்கத்தில் செல்லுகிறான்.

23. பூலோகத்துக்கும் மற்றலோகங்களுக்கும் சம்பந்தம்.

I. ஸ்தூலத்தைமட்டும் விட்டுப்பிரிந்தபிறகு:— லிங்கசரீரத்தில் ஜீவன் சுவல்பகாலமிருக்கக்கூடும். மரணசமயத்தில் தீவிரமாய்த்தரித் திருந்த எண்ணத்தை இச்சரீரத்திலிருந்து வெளியிடக்கூடும். ஆனல் இது வெகு அபூர்வம். லிங்கசரீரத்தைவிட்டு ஜீவன் போனபிறகு லிங்கசரீரம் பிணமாய் விடுவதால் அது யாதொன்றும் செய்யமாட்டாது. ஆனல் அதை அப்படிச்செய்யும்படிச்செய்யக்கூடும். இந்த மார்க்கம் அறிந்தவர்கள் வெகு ஸ்வல்பம்.

II. ஜீவன் காமலோகத்திலிருக்கும்போது:— இந்தலோகவாசகாலத்தை நிஷ்கரிக்கமுடியாது. காமரூபத்தால் ஜீவன் தன்னை மூடிக்கொண்டு சிலருடைய ஸ்தூலசூட்சுமாம்சங்களையும் உபயோகித்துக்கொண்டு ஜீவித்துக்கொண்டிருப்பவருடன் கலந்து தனக்குமட்டும் தெரிந்த விஷயத்தையும் அல்லது தனக்கும் வேறு ஒருவருனுக்கும் தெரிந்த விஷயத்தையும் சொல்லக்கூடும். இச்சம்பந்தத்தால் வரும் தீங்கு முன்னமேயே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

III. சுவர்க்கத்தில் ஜீவனிருக்கையில்:—இந்த ஜீவன் பூலோகவாசிகளுடன் சம்பந்தப்படக்கூடிய விஷயம் முன்சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் பூலோகவாசி சுவர்க்கலோகவாசியுடன் சேரக்கூடுமாவென்பதைப்பற்றி அதிக விவரம் தெரியவில்லை. மான்சிகதர்மமானதால் அப்படிசிலசமயங்களில் கூட்டைவிட்டு ஜீவன்சேரக்கூடும் என்று தோன்றுகிறது. எவ்விதத்திலும் சரீரசுகிதஜீவன்தான் சரீரரகிதஜீவனிடம் இழுத்துப்படுகிறுனேயழிய சரீரரகிதன்கீழ்வருகிறதில்லை. காமலோகத்தில் அல்லது சுவர்க்கலோகத்தில் சரீரரகிதஜீவன் இருக்குமுவரையில் இப்படிச்சரீரசம்பந்தத்தை இழுக்கக்கூடும். இதுகாலங்களில்ஒருஜீவனுடையஸ்திதியை மட்டும் அறியலாமேதவிர எல்லா ஜீவர்களுடையஸ்திதியையும் அறியமுடியாது.

IV இதரசம்பந்தங்கள்:—

(1) சுத்தகாமரூபத்துடன்:—கொஞ்சகாலம் இதுமனதுடன்கூடியதுபோல காணப்பட்டுச்சங்கதிகளைச்சொல்லும்.

(2) அசுத்தமனேகாமங்கள:— இவைகளின் சம்பந்தம் வெகு அபூர்வம்.

(3) பஞ்சபூதகணங்களுடன்:—சம்பாஷணம் செய்கிறதும் பதார்

தங்களை ஒரு இடத்திலிருந்து ஒரு இடத்தில் வைப்பதும் இப்படிப்பட்ட செய்கைகள் எல்லாம் இவைகளுடையது.

(4) நிர்மாணகாயர்களுடன்:— அதிசுத்த அந்தக்கரணமுள்ளவனுடன்தான் நிர்மாணகாயன் சம்பந்தப்படக்கூடும். ஸ்தூலசரீரம் தவிரமற்ற சகல அம்சங்களையும் உடைத்தாயிருந்து பூலோகவாசிகளின் நன்மைக்காகவே பூலோகத்திலிருப்பவர்கள் நிர்மாணகாயர்கள்.

(5) ஜீவித்திருக்கும் ஞானிகளுடன்:— அதிசுத்தாந்தக்கரணம் அவசியம்.

(6) தன ஆத்மாவுடன்:—சுத்த அந்தக்கரணமுள்ள ஜீவன் மனப்பூர்வமாய்தன் ஆத்மாவுடன், சோபிரயத்தனப் படுங்கையில் ஆத்மாதன் தேஜஸால் அவன் பிரஞ்ஞையைப் பிரகாசிப்பிக்கக்கூடும்.

கர்ம்காவது அத்தியாயம்

முற்றிற்று.

பிரம்மஞானச்சுருக்கம்

ஐந்தாவது அத்தியாயம்.

புனர்ஜன்மம்

127. புனர்ஜன்மமெனபது அனதிகாலமாய் பெரும்பான்மையர்ப் அநேகமதங்களில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. 538 வது வரு முதல் கிருஸ்துமதக்கொள்கையில் ஒன்றாக இல்லாமல் சுத்தமாய் எடுப்பட்டுப் போய்விட்டது. யூரோப்பு தேசத்து ஜனங்களுக்கு மறுபடியும் இதில் இப்போது நம்பிக்கை ஜனித்திருக்கிறது.

புனர்ஜன்மத்தின் அர்த்தம்.

128. இந்தப்பதம் புன:—மறுபடியும் ஜன்மம எனு இரண்டு பதங்களினின்றும் வருகிறது. மறுபடியும் ஜனித்தல் என்பதால் ஜனிக்கும் பதார்த்தம் ஒன்று இருக்கவேண்டுமென்றும் ஜனனபூமிமட்டும் வெவ்வேறாக இருக்கவேண்டுமென்றும். பதத்தினல் விளங்குகிறது. வேறுபடும் ஜனன்ஸ்தானம் அடிக்கடி மாறுவதால் ஜனிக்கும் பதார்த்தத்தை உத்தேசித்து அது நசுவர மென்றும் ஜனிக்கிற பதார்த்தம் ஒரு ஜன்மத்துக்கு மேல்இருப்பதால் ஜனனஸ்தானத்தை உத்தேசித்து ஸ்திரமென்றும் விளங்குன்றன. பகவத்கீதையில் இரண்டாவது அத்தியாயத்தில் அர்ச்சுனனைப்பார்த்து ஸ்ரீப்கவான் சொல்லுகிறார்:—நித்தியனையும், நாசமற்றவனையும் அறியப்படாதவனையும் தேகத்தை உடையவனுமாயிருக்கிற ஆத்மாவினுடைய இந்த தேகங்கள் முடிவை உடைத்தானவைகளாகச் சொல்லப்படுகின்றன. எவன்ஒருவனைத்தான் கொல்லுகிறதாக நினைக்கிறானே அல்லது எவன் ஒருவனல் கொல்லப்பட்டவனாக அறிகிறானே அவ்விருவர்களும் அறிந்தவர்களன்று இவன் கொல்லுகிறவனல்ல கொல்லப்படுகிறவனுமல்ல. ஆத்மா பிறப்பற்றவன் நாசமற்றவன் ஒரேவிதமாயிருக்கிறவன்முன்னேன்னுகையால் தேகமானது கொல்லப்பட்டபோதிலும் ஆத்மாகொல்லப்படுகிறதில்லை. பிறக்கிறதுமில்லை. இறக்கிறதுமில்லை. உண்டாய் மறுபடியும் இருக்கப்போகிறதுமில்லை உண்டாய்மறுபடியும் உண்டாகப்போகிறதில்லை.மனிதன் எப்படிப் பழைய துணிகளை எறிந்து விட்டுப் புதியதுணிகளைக் கரிக்கிறானே அப்படி ஆத்மாவும் பழையஉடலுகளை விட்டு வேறு புதிய உடல்களைத் தரிக்கிறன். இதினல் தேகம் நாசமுள்ளதென்று

ம் தேகத்தை யுடையவன் நாசமற்றவன் என்றும் வெளியாகிறது. மானி டதேகத்திலிருந்து மிருகதேகத்திலும் பிறக்கக்கூடுமென்று சிலசாத்திர ங்களில் சொல்லியிருந்தாலும் மனுஷிய சரீரத்தில் ஒருதரம் பிரவேசித்த ஆத்மா மற்றபடியும் மிருகசரீரத்தில் பிரவேசிக்கமாட்டாதென்பதை இனி (132) விவரிப்போம். குப்தவித்தியாசாஸ்திரத்தின்படி சைதன்னியமும் மனு ஷிய சரீரத்தில் பிரவேசித்த பிறகு அது நாசமடைந்தபின் ஸ்வல்பகால த்துக்குபிறகாவது, வெகுகாலத்துக்குப்பிறகாவது, வேறுமானிடசரீர த்தில் பிரவேசிக்கிறது என்பதேபுனர்ஜன்மமாம். ஒருதந்துவில் அநே கமணிகள் கோர்க்கப்பட்டதுபோல் ஒரே சைதன்னியவிஷயமாய் அநேக சரீரங்கள் ஒன்றோடொன்று சேர்க்கப்பட்டிருக்கின்றன.

புனர்ஜன்மம்எதுவரைக்கிறது-

129. அநேக மானிடஜன்மங்களில் ஜீவஸ்வபாவமுள்ள ஒரு பதார் த்தம்வசிப்பதே புனர்ஜன்மமென்று தெரிந்துகொண்டபிறகு அப்படி ஜ னிக்குமப் பதார்த்தமெது வென்று அறியத்தக்கது. இதற்கு மூதல் முதல் சரீரத்துடன் சம்பந்தம் எப்படி வந்ததென்பதை முக்கியமாய்த் தெரிந் துகொள்ளவேண்டியது. சப்தாம்சப் பிரகரணத்தில் (82-3) சச்சிதானந் தரூபமான ஆத்மபுந்தியே சகலசிருஷ்டிக்கும் மூல ஆதாரமென்று சொல்ல ப்பட்டது. இந்தச் சரீரம் அநேககோடிவருஷமாய்ப் பக்குவமாய்க் கொ ண்டிவந்ததென்று முன்சொல்லப்பட்டது. இரண்டரைமன்வந்தரம் வரை யிலும் மனுஷியசரீரம் மிருகரூபமாகவே இருந்து ஸ்தூலசரீரம் லிங்கசரீ ரம் பிராணன் காமம் இந்நான்கும் மிருகங்களுக்கும் மிருகரூபமனிதனுக் கும்இருந்தன. சைதன்னியமில்லாதவிடம் யாதொன்று மில்லாவிட்டா லும் அசனைசதன்னியம் மேன்மேல் விளங்க மிருகசரீரத்தில் தகுந்த பாதிஇல்லாமலிருந்தது. மஹத்தத்துவத்தினின்றும் அபிவிர்த்தியாய்க் கொண்டுவரும்மானசிகபுத்திராள் இந்த மிருகரூபமானிட சரீரத்தைக் கண்டு இவைகள் தங்களுக்குத் தகுந்தவாசஸ்தானமென்று நினைத்து இர ண்டரை மன்வந்திரமுதல் மூன்றரை மன்வந்திரம் வரையில் இவைக ளில் குடிவந்துகொண்டிருந்தார்கள். இப்போதுதான் மனதின் பிரவே சத்தால் மிருகமானிடரூபம் சுத்தமனுஷிய ரூபமாயிற்று. மனதாகிற மானஸபுத்திரன் முதல் சரீரத்தில் சம்பந்தப்பட்டதுபோல ஒவ்வொரு சரீரத்திலும் அவதரிக்கிறான். மனிதன் என்கிறபதமே மனதின் சம்ப ந்தத்தை வியக்தமாய்த்தெரிவிக்கிறது.

130. இந்தமனிதனே தேவாம்சத்தையும் மிருகாம்சத்தையும் இ ணைக்குமிடம். தான் ஸ்வயம் ஞானஸ்வரூபமாயிருந்தாலும் தன் சம்பந்த ம்பெற்ற சரீரமாகிற உபாதியைச்சுத்தப்படுத்தி அதின் மூலமாக ஸ்வா

பிர்ம்மஞானச்சுருக்கம்

ஜீவனுனானத்தைத் சம்பாதிக்கும்பொருட்டே மனேக ஜன்மங்களை இ
ந்தமானஸபுத்திரன் எடுக்கிறான். ஆகையால் ஜன்மங்கள் மனுதுக்கே
ஏற்பட்டிருக்கின்றன. ஆத்ம-புத்தி-மனதாகிற சேர்க்கைதான் ஜன்மம்
எடுப்பதாகச்சிலர் சொல்லுவார்கள். இதில் பிசகு யாதொன்றுமில்லா
விட்டாலும், ஆத்ம-புத்தி அகண்டமாயும் எல்லாருக்கும் பொதுவாயு
மிருப்பதால் விவேசனைசெய்து பார்க்கின் மனதுக்கே ஜனனமும் உண்
டாவதாகச்சம்மையாகவிளங்கும். ஒரே ஜன்மத்தில் அநேக விஷயங்
களினின்றும் ஒரு சாரத்தைத் காம நிரகிப்பது போல அனேக ஜன்மங்க
ளின் சாரத்தினின்றும் மனதானது தீர்மானமான. ஞானத்தைச்சம்பாதி
க்கிறது. இப்படிசசம்பாதித்து மறுபடியும் தன் ஸ்தானமாகிய பரமப
தத்தை அடைவதற்கே புனர்ஜன்மம் ஏற்பட்டிருக்கிறது.

புனர்ஜன்மம் எடுக்காதது எது.

131. மானசபுத்திரன் குடிவருமுன் மிருஷி சரீரம் ஆகாரத்தைத்
தரித்துக்கொண்டுவந்தது என்று முன் கண்டோம். மனதின் தோஷனை
ப்பெற்றிராது ஜன்மம் முதல் பைத்தியக்காரனாக இருக்கிறவன் அவய
வையுடைய ரூபம் மானிட்மாயிருந்தாலும் அவன் மிருகத்துக்குச்சமானமாயி
ருக்கிறான். ஆகையால் இரண்டுவாக்கியங்களையும் பேதப்படுத்தி காண்பி
ப்பது மனதே. இது மூலாமூலமாகத்தான் சக்திகளை வெளியிடுகிறதென்
பது முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. மிருக-மானிடரூபம் மா.
திரு கர்ப்பத்தினிருந்து ஜனிக்கிறது. மனது அத்துடன் கலந்து கொள்
ளுகிறது. ஒரேமனது ஒரு ஜன்மத்தில் ராமனுடைய மூலாமூலமாகவு
ம், ஒரு ஜன்மத்தில் கிருஷ்ணனுடைய மூலாமூலமாகவும் இப்படியே ஒ
வ்வொரு ஜன்மத்திலும் அதின் மிருக மானிட மூலாமூலமாகவும் வியா
பரிக்கிறது. ஒவ்வொரு ஜன்மத்திலும் ஜனிக்கும் மூளை வெவ்வேறு
க இருக்க அத்துடன் கலந்துவரும மனம் ஒன்றுகவே இருக்கிறது. அ
நேக உடுப்புகளைத்தரிக்கிற ஒருவன் தானே அந்த உடுப்புகள் ஆகாது
போல அநேக தோல் உடுப்புகளாகிற ஸ்தூலசரீரம், லிங்கசரீரம், கா
மரூபம் இவைகளைத்தரிக்கிற மனது அவைகளாகாது. ஸ்தூலசரீரம் மு
தலியவுவகளின் அணுக்கள் பிரிந்துபோவதையும் வேறு சரீரஉற்பத்திக்கு
உபயோகப்பட்டுப்போவதையும் முன் பார்த்திருக்கிறோம். ஆகையால்
இவைகளுக்குப் புனர்ஜன்மம் சொல்லக்கூடாது. நாசமடையாத மன
துக்கே சொல்லவேண்டும்.

மனித்ன்மிருகமாகக்கூடுமா?

132. ஒருவன் ஒரு ஜன்மத்தில் மனிதனாக இருந்து மறு ஜன்மத்தி
ல் மிருகமாக ஜனிக்கக்கூடுமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு
ஜன்மத்திலும் பிரவேசித்துவருவது மனதேதவிர வேறில்லையென்றும்,
மிருகசரீரம் தங்களுடைய காரியத்துக்கு உபயோகப்படாதகினால் இ

ண்டான்ரை முன்வைத்திரத்துக்குப்பின் மிருகமானிடசரீரத்திலை மானசபுத்திரர்கள் பிரவேசித்து மனிதர்களாக ஆக்கினார்களென்றும் முன் சொல்லப்பட்டிருக்க, அப்போதே உபயோகப்படாத மிருகசரீரத்தில் இப்போது அவர்கள் எப்படிப்பிரவேசிக்கக்கூடும். ஆனால் ஆபிரகாம் மான்ரூப மாகப்பிறந்தபடியால் மனிதன் மிருகமாகவும் ஜனிக்கக்கூடுமே யென்று ஆக்ஷேபித்தால் இதற்கு மஞ்சரியிலில் (12 அத்தியாயம் 40 சுலோகம்) என்ன சமாதானம் சொல்லியிருக்கிறதெனில், 'சத்துவரஜஸ்தமோகுணங்களில் சத்துவகுணம் தேவாம்சத்தையும், ரஜோகுணம் மானிட அம்சத்தையும், தமோகுணம் மிருகாம்சத்தையும் அடைகின்றனவெனவும் முக்குணங்களுடன் கூடினவன் மறுபடியும் மிருகமாகவே பிறக்கிறான் என்பது அல்ல. ஒருவனை நரியென்று சொல்லுவதில் அவன் நரிவயற்றில் நரிரூபமாகப்பிறந்திருக்கிறான் என்பது எப்படி நம்முடைய கருத்தல்லவோ ஆனால் அவனுடைய குயட்டம் நரியின் குயட்டத்துக்குச் சமானமாக இருப்பதால் அவனை நரியாகச்சொல்லுகிறோமோ அப்படி மனிதன் மிருகமாகப்பிறக்கிறான். என்பதையும் அறியவேண்டியது. பிரம்மவித்தையின்படி மனது மிருகரூபசரீரத்தில் பிரவேசிக்குமாட்டாது. ஒரு மானிட்சரீரத்திலிருந்து வேறு மானிடசரீரத்தில் பிரவேசிப்பதே புனர்ஜன்மமாதலால் இது மனதிற்கு ஏற்பட்டிருக்கிறதேதவிர மிருகத்துக்கு ஏற்படவில்லை.

புனர்ஜன்மம் உண்டாகும்விதம்

• 133. பிரம்மாண்டத்தின் தத்துவங்களும் அதாவது பூமிக்களும் மனிதனுடைய தத்துவங்களும் சம்பந்தப்பட்டிருப்பதாக முன் சொல்லப்பட்டது.மனது மஹத்துவத்தத்தின் அம்சமானதால் அதின் சக்திகளும், மனதிற்கு உண்டு. மஹத்தத்துவம் ரூபத்துக்கு ஆதாரம். ஆகையால் மனதும் தன் சக்தியால் பாவனைக்கு ரூபம் கொடுக்கக்கூடும். மனதில் உதிக்கும் பாவத்துக்குக் கல்தச்சன், தச்சன், சித்திரக்காரன், கல்லிலும் கட்டையிலும் படத்திலும் உருவத்தை கொடுக்கிறார்களல்லவா? ஒருவன், மனோபாவத்தை அவன் சரீர லக்ஷணத்திலிருந்து நாம் அறியவில்லையா? ஸ்தூலாணுக்களுக்கு மனோபாவம் தன் ரூபத்தை கொடுக்காதவரையில் இது எப்படி சாத்தியம். ஸ்தூலாணுக்களை மனோபாவத்தால் ரூபதைத்தரிக்கும்படி இருந்தால், சூட்சுமாணுக்களுக்கு வேண்டிய ரூப

க்ஞத மனோபாவம் தருவதில் சந்தேகமென்ன. ஆகையால் உருவத்தை க்கொடுக்கும் சக்தி மனதிற்கே இருக்கிறது. பிரம்மாண்டத்தில் 7 பூமி க்ஞதளங்கள். இதில் மனம் 5-வ்து. இவ்வேழிலும் முன் வருவ்தை பி ன் வருவதைப்பார்க்கிலும் ஸ்தூலம். பாவம் மனோதர்மம். ஆனதால் ஜனிக்கப்பட்ட ஒவ்வொருபாவம் மானசிக பூமிகையில் ரூபத்தத்தரிக் கிறது. அதினின்றும் காமமானசிக நிலைமைக்கு வந்து அவ்விடத்தில் ஸ்வல்பஸ்தூலமாகிறது. அதினின்றும் லிங்கநிலைமைக்கு வந்து இன் னும் கொஞ்சம் ஸ்தூலமாகிறது. சமயம் வரும் வரையில் இந்தப் பூமி கையில் தான் அந்த பாவம் இருந்து சமயம் வந்தவுட்ன் ஸ்தூலாணுக்களு டன் கலந்து சாதாரண ஜனங்களுக்கு பிரத்தியக்ஷமாக ஒரு ரூபத்துட ன் அது விளங்குகிறது. கண்ணுக்குகோசரமாகாத அதி சூட்சுமமான பதார்த்தமும் ஸ்தூலமாகி பிரத்தியக்ஷமாவதற்கு ஜல உதாரணத்தைப் பார்க்க. கண்ணுக்குத்தெரியாத சில ஆவிகள் கண்ணுக்குத்தெரியும்படி யான சில ஆவிகளாகி பிறகு ஜலரூபமாகி ஜலம் பனிக்கட்டியாவதைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கிறோம். ஆகையால் சூட்சுமரூபம் ஸ்தூலத் தை தரிக்குமென்பதில் சந்தேகமென்ன. இதுபோல், மனோபாவம் ஜ னித்தவுடன் எங்கும் நிறைந்த பிரகிருதியுடன் கலந்து அதிசூட்சுமமான் ரூபத்தைத்தரிக்கிறது. ஆவியாவது போல காமமன நிலைமையில் ரூப ம் தரித்து ஜலமாவதுபோல லிங்கபூமிகையில் சூட்சும ரூபத்தையும் ஜலக்கட்டிபோல் ஸ்தூலபூமிகையில் ஸ்தூலரூபத்தையும் தரிக்கிறது. அப்பிரத்தியக்ஷம் பிரத்தியக்ஷமாகும் என்பதும் கந்தமூலாதிகளைப் பார் க்கிறதினாலும் தெரியும். அப்பிரத்தியக்ஷமான சில வாயுக்களைக் கிரகி க்காமல் எப்படி இலைகள் வளர்கின்றன. ஆகையால் அதிசூட்சுமமான ரூபங்கள் அதிஸ்தூல ரூபத்தைத் தரிப்பது சகஜம். ஆகையால் ஸ்தூல வியவஹாரங்களெல்லாம் சூட்சும காரணங்களின் காரியங்களே தவிர வேறில்லை. குப்தவித்தையின்படி இந்த ஸ்தூல தேகமும் சூட்சும கா ரணத்தின் காரியமே. பாத்திரத்தை வார்க்கிற வார்ப்புக்காரனுடைய மண்குகைபோலிருக்கும் லிங்கசரீரமாகிற குகையில் ஸ்தூல சரீரம் வார் க்கப்படுகிறது. சித்திரத்தின் பாவத்தை மனசில் தரிக்கிறவன் அந்தப் பாவத்துக்குக் காகிதத்தில் முதலில் பென்சால் சூட்சுமரூபத்தைக்கொ டுத்துப் பிறகு வர்ணம் முதலியவைகளால் ஸ்தூலரூபத்தைக்கொடுப்ப து போல், சூட்சுமபாவம லிங்கசரீரமாகி ஸ்தூலசரீரமாகிறது.

134. நம்முடைய வியவகாரத்தில் பிரதிக்ஷணமும் நாம் மனோபாவங்களை உண்டுபண்ணிக் கொண்டே இருந்திருக்கிறோம். இந்தப் பாவங்கள் நம்மைச் சுற்றியிருக்கும் ஆகாசத்தில் பதிந்து க்ஷணத்திற்கு க்ஷணம் விர்த்தியடைந்துக்கொண்டே வருகின்றன. இவைகளின் சேர்க்கைப்பலன் தான் மனிதனுடைய குணமாக விளங்குகிறது. மரண சமயத்தில் அதிக சூட்சுமமான சரீரங்கள் ஸ்தூலத்தைவிட்டுப் பிரிகின்றன. இங்க சரீரம் மட்டும் ஸ்தூலத்தைப்போல நாசமடைகிறது. பழைய அனுபவங்களின் காரியமான பாவனை சரீரத்தின் ஸ்திதியைப்பற்றி அதிக விவரம் சாதாரண ஜனங்களுக்கு சரிசொல்லப்படவில்லை. ஆயினும் நிச்சயமாய் எல்லாருக்கும் தெரியவருவது யாதெனின் புனர் ஜன்மகாலம் வருவதற்குமுன் இந்தப்பாவனை சரீரம். இங்க நிலைமைக்கு வந்து அந்நிலைமையின் அனுபங்களைத் தரித்து இனி ஜனிக்கப் போகிற ஸ்தூலசரீரத்துக்கு இங்க சரீரமாகத்தயாராயிருக்கிறது. ஸ்தூல மூலையும் ஸ்தூல சரீரம்போல் இந்த இங்க சரீரத்தால் உண்டாவதால் இந்த மூலையின் ஆகாரமும் முந்தின மனோபாவங்களைப் பொறுத்திருக்கிறது. நல்ல மனிதன் அன்பு முதலிய பரோபகார பாவங்களையே உண்டு பண்ணுகிறான். இவைகள் புனர் ஜன்மகாலத்தில் இங்கரூபத்தைத்தரித்து அனுகூணமான இடங்களில் ஸ்தூல ரூபமாய் வெளியாகி விர்த்தியாகின்றன. கெட்டமனிதன் ஸ்வப்பிரயோஜனத்தையே உத்தேசித்து ஸ்வப்பிரயோஜன சம்பந்தமான பாவங்களையே உண்டுபண்ணுகிறான். புனர் ஜன்ம காலத்துக்கு முன் இந்தப் பாவங்கள் இங்கரூபத்தைத்தரித்து அவைகளுக்கு அனுகூணமான இடங்களில் ஸ்தூலரூபத்தை யெடுத்துமனிதனுக்குக் காணப்படுகின்றன. ஆகையால் இப்போது காணப்படுகிறமனுஷ்ய ஆகாரம் முன் உண்டுபண்ணின பாவங்களின் காரியமே தவிரவேறில்லை. பிறவிமுதல் காணப்படும் மனோகுணங்கள் முந்தின கர்ணங்களின் காரியங்களே. இப்படியே இந்த ஜன்மம் மறுஜன்மத்தையும் இப்படியே மேன்மேலும் ஜன்மங்கள் உண்டாகின்றன. ஒவ்வொரு ஜன்மத்திலும் மனதின் ஆவிர்ப்பாவம் அபிவிர்த்தியாகிக்கொண்டே வருவதில் மனது தான் நிரந்தரமானதென்றும் நசித்துப்போகும் சரீரம் நாமல்லவென்றும் மனிதனுக்குத் தெரியவந்து இந்தப்பாவனை பலப்படபலப்பட மிருகஸ்வபாவம் குறையக்குறைய கடைசியாக சுத்ததெய்வரூபத்தை மனிதன் அடைகிறான்.

135. புனர்ஜன்மத்தின் பிரயோஜனம்முன் சொல்லியபடி இது யாதெனின் மிருக—மனுஷ்யரூபத்தைத் தெய்வரூபத்துக்கு உபயோக

மர்கும்படியான கருவியாக ஒழுங்குபடுத்தித் திருத்துவதேயாம். மன் தே. இந்தச் சிட்சையில் சம்பந்தப்பட்டிருக்கிறது. இப்படித்தெய்வா ம்சம் அடையும் மார்க்கமெப்படியெனில்:—மிருக-மானிடரூபத்தில் மா னஸ்புத்திரன் குடிவந்தகாலத்தில் அந்த வீடு நாம் அறியும் ஸ்தூலாணு க்களால் கட்டப்படவில்லை. இப்படிப்பட்ட சரீரத்திலுள்ள மூளை மூல மாகவியவகரிக்கும் மனது தன்னுடைய சர்வதிருஷ்டி சர்வஞ்ஞதை முதலான குணங்களை விளங்கும்படிச் செய்கிறது. நம்முடைய தற்கால மூளை மூலமர்க விளங்குகிற மானசிக குணங்கள் அக்காலத்தில் விளங்கவி ல்லை. ஸ்தூலாணுக்களுடன் சேர்ந்தபிறகுதான் இந்தமானசிககுணங்கள் தோன்றுகின்றன. அக்காலத்தில் சரீரங்கள் வெகு சூட்சுமமான அணு க்களால் செய்யப்பட்டிருந்தபடியால் வெகுஇலேசான மறைவிலுள்ள ப்தார்த்தங்கள் வருத்தமன்றியில் தெரியவருவதுபோல் ஒருசரீரத்தின் மனதில் விளங்கும் பாவங்களை வேறுசரீரத்திலுள்ள மனது தானுக்வே அறியும்படி இருந்தது. இப்படிப்பட்ட சரீரத்தில் சாக்ஷாத்ஞானமே ஜனித்துக்கொண்டிருந்தது. காலம் செல்லச்செல்ல மனோபாவங்கள் ஸ்தூல அணுக்கள்மூலமாக விளங்கும்படி நேரிட்டபோது ஸ்தூலாணுக் களில் மனோபாவங்கள் முன்போல சீக்கிரத்தில் பதிய முடியாமல் புத்தி யாலும் பாஷையாலும் ஒருசரீரத்தினின்று மற்றொருசரீரத்துக்குப் போ கும்படி நேரிட்டது. சூட்சுமத்தைப்பார்த்தல் கேட்குதல் முதலியவை சூட்சுமசரீரமூளையின் தர்மங்கள். ஸ்தூலத்தைமட்டும் அறிவது நம்மு டைய ஸ்தூலமூளையின் தர்மம். இதுவரையில்மனதின் சக்திகள் சூட்சு மத்துவாரா ஸ்தூலமூளைமூலமாக வெளிப்பாய்க்கொண்டு வந்தன. இந்த மூளை பக்குவமானவுடன் வருத்தமன்றியில் சூட்சுமபாவங்களை உடலு க்குடனே முன்போல் அறிவது மூளையின் மேல்விர்த்தி லக்ஷணம். இ ப்போது சூட்சுமபாவத்தை அறியாமல் மத்தியில் இழந்திருந்த சக்தி யும், மூளைமூலமாக விளங்கும் சக்தியும் இரண்டும் விளங்குகின்றன. இச்சக்திகள் விருத்தியாகமனதின் சாட்சாத்ஞானசக்திகளெல்லாம் நே ரில் விளங்குகின்றன. இப்படிச்சாட்சாத்தாக விளங்கும் சக்தியையுடை யவர்களில் சிலர் இக்காலத்திலும் காணப்படுகிறார்கள். இவர்களை ம ஹான்கள் எனப்படுகிறார்கள். இவர்களுடைய சரீரம் இவர்களை எவ்வி தத்திலும் பந்தத்துக்கு உட்படுத்துகிறதில்லை. இவர்களுடைய ஆத் மஞானயை நிறைவேற்றத்தான் இந்தச்சரீரம் இருக்கிறது. மனது கன்னி லைமையில் சாதாரணமாய்ப் வியவஹரிக்கக்கூடும், மற்றநிலைமைகளில் விய

வஹரிக்கமாட்டாது. ஆகையால் எல்லாநிலைமைகளிலும் வியவஹரிப்பதற்கு எல்லாநிலைமைக்களிலுமிருந்து அனுபவங்களைச் சம்பாதிக்கவேண்டியது. அப்போதுதான் எல்லாநிலைமைகளிலுமிருந்து வியவஹரிக்கும் சாமர்த்தியம் ஜனிக்கும். இதின்பொருட்டுத்தான் அதிசூட்சுமமான மான்ஸபுத்திரர்கள் சரீரத்துடன் சேர்ந்து அதின்மூலமாய் அனுபவத்தைச்சம்பாதிக்கிறார்கள். இதுதான் புனர்ஜன்மங்களின் முக்கியப்பிரயோஜனம்.

136. பிரகிருதியை சுத்தமாய் ஜயித்து எல்லாநிலைமைகளிலும் இருக்கக்கூடிய மஹாபுருஷன் அடியில்கண்ட இரண்டுகாரியங்களில் ஒன்றைச்செய்யக்கூடும். இந்த லோகத்தில் தெரிந்துகொள்ளவேண்டியதெல்லாம தெரிந்துகொண்டுவிட்டபடியால் மேல் அபிவிர்த்திக்கும் மோக்ஷத்தைசக்கும் இதர நிலைமைகளைத்தேடலாம். அல்லது, தன் சொந்த மோக்ஷத்தைதவிட்டு ஜனோபகாரார்த்தமாய் மறுபடியும் தன் சுவேச்சையால் வேண்டிய சரீரத்தைத்தரித்து ஜனங்களையும் மோக்ஷமார்க்கத்தில் சேர்ப்பிக்கப்பிரயத்தனிக்கலாம். இவர்களுக்கு நிர்மாணகாயர்கள் என்று பெயர். இப்படிப்பட்டவர்கள் இப்போதுமிருக்கிறார்கள். ஜனனமரணசம்சாரசக்கரத்தினின்றும் விடுபட்டதுபோல மற்றஜனங்களும் விடுபடவேண்டுமென்று புத்திகாள்ளும் மஹாபுருஷர்களை உண்டாக்குவதே புனர்ஜன்மத்தின் பிரயோஜனம்.

புனர்ஜன்மகாரணம்

137. பிர்ம்மாண்டமுதல் சகலவஸ்துக்களும் வியக்தாவ்யக்தஸ்திகளை அண்டஜன்றன; அதாவது சிலகாலங்களில் பிரத்தியக்ஷமாயும், சிலகாலங்களில் அப்பிரத்தியக்ஷமாயுமிருக்கின்றன. இவைகளுக்குப்பிர்ம்மத்தின் பகல்காலமென்றும் இரவுகாலமென்றும் பெயர். இப்படி நிலைமைகள் மாறி மாறி வரவேண்டியகாரணம்மட்டும் நாம் அறியோம். இருக்குவேதத்தில் (X-129) காமமே காரணமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. காமத்தால்தான் வியக்தநிலைம அடையப்படுகிறது. தேவதைகள் இக்காமத்துடன் சேர்ந்தவுடன், அது பலப்படுகிறது. "இச்சாமாத்திரம் பிரபுசிருஷ்டி" என்று சொல்லியபடி இக்காமமே பிர்ம்மாண்டமுதல் எதுவும் விஜரிம்பிப்பதற்குக்காரணமாகிறது. இக்காமமே புனர்ஜன்மத்துக்கும் காரணமென்பது பகவத்கீதையில் (4-வது அத்தியாயம்) சொல்லப்பட்டிருக்கிறது. "எவனுடைய கர்மங்கள் ஆசையும் சங்கல்பமும் அற்றிருக்கின்றனவோ அவனை விவேகியாக ஞானிகள் சொல்லுவார்கள். காமத்தில் ஆசையைவிட்டுச்சரீரச் செய்கைகளைச் சரீரத்தால் செய்துக்கொண்டு மோக்ஷத்துக்கு அவன் பாத்திரனாகிறான். அதாவது, புனர்ஜன்மத்திற்குப்பாத்திரனாகிறதில்லை."

138. புனர்ஜன்மத்துக்கு இச்சையே காரணமானதால் இதைக் கொல்லவேண்டுமென்பது இப்போது நன்றாயத் தெரியும். ஆயினும் சகல அனுபவஞானத்தோதயமும் அடையும்பொருட்டே பிரகிருதி புருஷசம்பந்தம் ஆதிமுதல் உண்டாயிருக்கிறபடியால் இச்சையை விடுவென்பதில் எல்லா இச்சையையும் விட்டு விடவேண்டுமென்பது கருத்தன்று. தன் சரீரசம்பந்தமான இச்சைகளையும் அபிமானத்தையும் விட்டுத்தன் அபிமானத்திற்குச் சகலபிராணிகளும் பாத்திரர்களாகவேண்டியதென்பதே கருத்து. தன்னிடத்திலும் தன்னைச் சேர்ந்தவைகளிடத்திலும் அபிமானத்தை விடவேண்டியதென்பதினால் அவைகளைத் தேவஸ்திக்கவேண்டியதென்பதுகருத்தன்று. நான் உள்பட சகலபிராணிகளிடத்திலும் அபிமானம் ஒரேவிதமாய் இருக்கவேண்டுமென்பதேயாம். கர்மம்செய்யாவிட்டால் சரீரம்கூட நசித்துப்போகுமானதால் கர்மபலாபேக்ஷையை விட்டுவிடவேண்டுமென்பதே கருத்து. மோக்ஷத்துக்குக் காரணம் ஆத்மஞானம், இது நிஷ்காமகர்மமன்றியில் ஜனிக்கமாட்டாது. ஆகையால் கர்மத்தைச் செய்யவேண்டியது. அதின் பலத்தில் ஆசையைமட்டும் விட்டுவிடவேண்டியது. காரணம் காரியத்தைக் கொடுக்காமல் போகமாட்டாது. ஆசையை உண்டுபண்ணினால் அது தோமல் நிவர்த்தியாகமாட்டாது: ஸ்தூலப் பிராபஞ்சிக ஆசை சாகும்முன் நிறைவேறுமல் இருந்தால், அது ஸ்தூலபூமியில் நிறைவேறவேண்டுமாகையால் அதின் பொருட்டு ஸ்தூலபூமிக்கு அவசியம் வரவேண்டும். இப்படி வருவதற்கு ஸ்வர்க்கலோகத்தில் வசிப்பதாக முன்னமெயே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி எப்பொழுதும் வேலை செய்ய முடியாமாட்டாதோ அல்லது எப்போதும் போஜனம் செய்துகொண்டே இருப்பது முடியாமாட்டாதோ அப்படி எப்போதும் பிரபஞ்சத்திலேயே இருப்பதுமுடியாது. ஜீவனுக்கு ஸ்வல்ப சாந்தி வேண்டியது: இதற்காகவே சுவர்க்க லோகவாசம் ஏற்பட்டிருக்கிறது. சிரமபரிஹாரம் ஆனபின்தான் மறுபடியும் வேலையை ஆரம்பிக்கமுடிவதுபோல் சுவர்க்கத்தில் சிரமபரிஹாரம் செய்துகொண்ட ஜீவன் மறுபடியூலோகத்தில் ஜனிக்கத்தயாராவான். ஜனன்மரணரூப சம்சாரச்சக்ரத்தின் முடிவில் கடைசியான 7 ஜன்மங்களில்தான் ஜீவன் இந்தச்சுவர்க்கலோகசிரமபரிஹாரத்தை அபேக்ஷிக்கிறதில்லை. அது அனுபவிக்கும் பலம் சிரமத்தை ஜெயித்துவிடுகிறது

139. ஜனனபூமி, சாதி, குலம் முதலியவை எதினால் தீர்மானிக்

கப்படுகின்றன. மனது இவைகளை சுவேச்சையால் தெரிந்திறதா? அல்லது நிர்ப்பந்தத்தாலா? அல்லது வாசனைபலத்தாலா? கர்மபலத்தால் முன் ஜன்மத்தில் இது அடைந்திருந்த குணங்களுக்கு அனுகூலமாயும், முன் விளைத்தவினையின் பலத்தை அனுபவிக்கத்தகுந்ததாயுமிருக்கிற இடத்தில் தான் ஜனனம் சம்பவிக்கிறது.

140. ஸ்திரீபுருஷருடைய பேதங்களைக்கொடுப்பது யாதெனில், எல்லாகுணங்களும் ஆவிர்ப்பாவத்தை அடைந்து அபிவிர்த்தியாகுவதே புனர்ஜன்மத்தின் பிரயோஜனமானதிலும்; ஸ்திரீபுருஷர்களிடத்தில் வெவ்வேறு குணங்கள் காணப்படுவதாலும், இப்போது காணப்படாத குணங்களை அபிவிர்த்திசெய்யும்பொருட்டு இப்போது ஸ்திரீரூபமானால் மறு ஜன்மத்தில் புருஷரூபமும், அப்படி இப்போது புருஷரூபமானால் மறு ஜன்மத்தில் ஸ்திரீரூபமும் சாதாரணமாய் விளங்குமென்று தோன்றுகிறது. இந்த விஷயத்தில் நிச்சயஞானம் சாதாரணஜனங்களுக்குக்கொடுக்கப்படவில்லை.

புனர்ஜன்மாவசியம்.

141. மனிதன் ஒரு கடவைதான் ஜனிக்கிறான் என்றும், அந்த ஒரு ஜன்மமேமானத்துக்குப்பிந்தினஸ்திதியை நிர்ணயஞ்செய்கிறதென்றும் சிலர் நினைக்கிறார்கள். சம்சாரத்தின் பாதத்தை வகிக்கும் சாமர்த்தியம் பாஷியத்தின் ஒருகால் அனுபவத்தால் கிடைக்குமா? இதுபோலப்பூர்ணஞானத்தைச்சம்பாதிக்கவும் சகல அனுபவங்களைப்பெறவும் ஒரு ஜன்மத்தின் 70 வரு போதா. திருவ்டியில் மனிதன் அடையவேண்டியபிரயோசனத்தையும் அதற்காக அவன் எடுத்துக்கொள்ளும் பிரயத்தனத்தையும் ஆலோசித்துப்பார்த்தால் மேற்சொல்லியது நன்றாய் விளங்கும். எங்கும் வித்தி அம்சமே பிரத்தியக்ஷமாய்த்தெரிவதால், மனிதனும் தன் ஸ்திதியிலிருந்து தெய்வத்தின் ஸ்திதியை அடைவதும் பிரம்மாண்டதத்துவங்களை அறிவதுமே அவன் அடையவேண்டிய முக்கியப்பிரயோசனமாக இருக்கிறது. இதற்குத்தற்காலத்தில் அவனுக்கு இருக்கும் சிட்சை யென்னவெனில் ஒருவித நிலைமையில் ஸ்வல்ப அனுபவமும் ஸ்தூல இந்திரியங்களால் அடையப்படும் ஞானமுமே. இந்த சிட்சையுடன் இறந்தமாத்திரத்தில் பூர்ணஞானிகளை அடையயோக்கியனா?

142. இந்த அயோக்கியத்தன்மை அடியில்கண்ட மூன்று காரணங்களில் ஒன்றால் நிவிர்த்தியாகக்கூடும்.

(1) மரணமே அனைகளிலிர்த்திக்கக்கூடும்.

(2) மரணத்துக்குப்பிறகு ஒருவிதசிட்சை.

(3) அடிக்கடி பூமிலோகத்தில் ஜன்மமெடுப்பது. மரித்தமாத்திறத்தில் ஞானஜ்சுவரியாதிகள் கிடைக்குமாயின் எல்லாருடைய பிந்தினஸ்திதியும் ஒரே விதமாய் இருக்கவேண்டும். இது யுக்திக்குவிரோதம். நூதனசிட்சையும் அடியில் கண்ட 9 விஷயங்களால் ஒவ்வாது. ஆகையால் புனர்ஜன்மத்தையே அங்கீகரிக்கவேண்டும். இந்தவிஷயங்களைப் புனர்ஜன்மம் திருப்தியாக விளக்கிவைத்தால் இந்த மதமே சரியானதாகும். அவைகளாவன:—

(1) இந்தலோகத்தில் இத்தனை விதமாய் ஜீவன் ஜீவிக்கக்கூடுமென்னும் ஞானம் குறைவாகஇருக்கும். ஒவ்வொருவிதமான அனுபவத்தையும் அடையாதவரையில் பூர்ணானுபவி என்று ஒருவனைச் சொல்லக்கூடாது. ஒருஜன்மம் சகலமான அனுபவங்களையும் கொடுக்கமாட்டாதென்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே.

(2) ஜீவஜிரக்கம் பரோபகாரம் மநுஷ்யதரியம் பொறுமை கன்றி அறிவு முதலிய உத்தமகுணங்கள் பூர்ணமாய் விளங்க ஜனங்களுடன் சம்பந்தத்தைப் பூர்ணமாய் அபேக்ஷிக்கிறது. மரணத்துக்குமுன் இவைகள் பக்குவமாய் விளங்காமல் போய்விட்டால் இக்குறைவை புனர்ஜன்மமே நிவிர்த்திக்கும்.

(3) ஒருஜன்மத்தில் தன்னுடைய ஸ்திதியால் தான்கொண்ட ஆசைகளைத் திருப்திசெய்து கொள்ள முடியவில்லை யென்றுமட்டும் ஒருவன் அறியக்கூடும். எந்தஸ்திதியிலும் துக்கநிவர்த்தியும் சுகப்பிராப்தியும் உண்டாகமாட்டாதென்பற்கு எல்லாஸ்திதிகளிலும் மிருந்து பரிக்ஷை பார்க்கவேண்டியது. காலாந்தரத்தில் பிரகிருதிசம்பந்தத்தால் ஆசை தீராமாட்டாதென்பதை ஜீவன் அறிந்து ஆத்மாவுடன் சேரப் பிரயத்தனம் செய்கிறான்.

(4) நாம் சரீரம் அன்று என்று அறிந்தவர்கள் வெகுஸ்வல்பம். அநாத்யப் பிராந்தி நீங்காமல் ஆத்மஞானம் சித்திக்கமாட்டாது. பிராந்தி ஒருநாளில் அல்லது ஒருஜன்மத்தில் நீங்கமாட்டாது. ஆகையால் அநேகஜன்மம் வேண்டியது.

(5) சகோதரபாவம் ஒரு ஜன்மத்தில் கன்றுப்பிடிபடமாட்டாது. எல்லாம் பரப்பிர்ம்மத்தின் அம்சங்கள். ஒன்றும் மற்றதிலின்றும் பிரிந்திருக்கவில்லை. இந்த ஞானம் பேதஞானமிருக்கும்வரையில் நிலைக்கமாட்டாது. இதற்கு ஒருஜன்மம் போதாது.

(6) ஏழையானவன் பணக்காரனுடைய அனுபவங்களை இச்சித்திருந்தால் பணக்காரனுடைய நிலைமையிலிருந்துதான் இந்த ஆசை தீர வேண்டும். ஆகையால் இது அடிக்கடிப்பூலோகத்துக்கு இழுக்கும். இதினால் மரணத்துக்குப்பிந்திய சிட்சை தடைபடும்.

(7) ஜன்மம் ஒன்றினால் சுத்த நியாயம் கிடைக்கமாட்டாது. எந்த எந்த நிலைமையில் எந்த எந்த காரியங்கள் செய்யப்படுகின்றனவோ அந்தந்த நிலைகளில்தான் அவைகளின் பலனகள் அனுபவிக்கப்பட வேண்டுமென்பது நியாயம். அடித்தவனுக்கு மறுவருத்தம் சரியானபலன் அன்று. அடிக்குப்பிறகு அடியே சரியானபலன். அப்படியே நன்மையும். ஒரு ஜன்மத்தில் இந்தப்பலன்களுக்கு ஆஸ்பதமில்லாவிடில் அநேக ஜன்மங்கள் வேண்டியது அவசியம்.

(8) பூர்ணத்தன்மை அடைவதற்கு அநேக சிட்சைகள் வேண்டியது. மரணத்துக்குப்பிறகு சிட்சை ஒருவிதமாய் மட்டுமிருக்கக்கூடுமானதால், புனர் ஜன்மம் அவசியம் வேண்டியது.

(9) ஒவ்வொரு சிசுவும் ஒவ்வொரு சரீரத்துடனும் நூதனமாக சிருஷ்டிக்கப்படுமேயானால், தாய் தந்தைகளிடமிருந்து கர்ப்பத்தில் கிரகித்த அம்சங்களையே அது அபிவிர்த்தி செய்யக்கூடும். அநேகஜன்மங்களிலிருந்து அது வருவதாக இருந்தால் அவைகளில் சம்பாதித்திருந்தவைகளையும் கூடவேகொண்டுவந்து அவைகளை மேன்மேல் அபிவிர்த்தி செய்யக்கூடும். இப்படி அபிவிர்த்தியாவதால் கடைசியில் தெய்வாம்சம் கிடைக்கும். புனர்ஜன்மம் இல்லாவிடின் இதற்கு இடமில்லை.

மேற்சொல்லிய 9 விஷயங்களையும் யோசித்துப்பாக்குமளவில் ஒரு ஜன்மம் ஜீவனுக்குப்போதாதென்பது நன்றாய் விளங்கும்.

புனர்ஜன்மருசு

143. புனர்ஜன்மமுண்டு யென்பதற்கு அநேக ருஜுக்கள் உண்டு. சில மற்றும் அடியில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

(1) தங்களுடைய முந்திய ஜன்மங்களை சிலர் அறிகிறார்கள். 10-வது தடவைக்கு முன் நாம் இருக்கவில்லை என்று நாம் நம்பும்படி நம்மை ஒருவரும் செய்யமுடியாததுபோல முந்தின ஜன்மங்கள் அவர்களுக்கு இருந்திருக்கவில்லை யென்று அவர்கள் நம்பும்படி செய்ய ஒருவராலும் முடியாது.

(2) தாய்தந்தைகளிடத்தில் காணப்படாத குணங்கள் சிசுக்களிடத்தில் காணப்படுவதால் அவைகள் முந்தியஜன்மங்களினின்றும் தொடர்ந்து வந்திருக்கவேண்டும்.

(3) யோக்கியன் வம்சத்தில் அயோக்கியனுடைய ஜன்மம், அப்படியே அயோக்கியன் வம்சத்தில் யோக்கியனுடைய ஜன்மம், ஒரு தாயின் வயற்றில் பிறந்தவர்களில் குணங்கள் வெவ்வேறாய்க்காண்றல். இவையெல்லாம் பூனர்ஜனமத்தையே அபேக்ஷிக்கின்றன.

(4) இரட்டைப்பிள்ளைகள் பார்வைக்கு ஒன்றாய் இருந்தாலும், கர்ப்பத்திலும் சேர்ந்திருந்தாலும், அவர்களுடைய புத்திபேதத்துக்குக் காரணம் முந்தியஜன்மத்தில் விட்டகுறையேதவிர வேறில்லை. பாலியத்தில் தாய்க்குக்கூட பேதம் தெரியாமல் அவர்களுடைய உருவம் இருக்கக்கூடும். வயது சென்றபின் மனதின் பிரவிர்த்தி பலப்பட பலப்பட உருவமும் ஸ்வபாவம் விந்தியாசத்தைக்காண்பிக்கிறது. இந்தவிந்தியாசத்துக்கு பூர்வஜன்மத்தின் பரிசுத்தியின் சாரம்தவிர வேறு என்ன காரணமிருக்கக்கூடும்.

(5). ஒரு தாயின் வயற்றில் பிறந்த அநேகர்களில் ஒருசிலர் அதிமேதாவியாயிருப்பதற்கு இதைத்தவிரக்காரணமில்லை.

(6) ஒரு விஷயம் இரண்டு பிள்ளைகளுக்குச் சொல்லப்பட்டால் ஒருவன் சீக்கிரத்தில் கிரகிப்பான் மற்றொருவன் தாமஸமாய் கிரகிப்பான். முந்திய ஜன்மத்தில் சிட்சை யடையப்பட்டதும் அடையப்படாததுமே இந்த விந்தியாசத்துக்குக் காரணமாகும்.

(7) யுக்திசாதனமன்றியில் தத்துவத்தைச் சொன்னமாத்திரத்தில் சாக்ஷாத்தாய் அறிவது யுக்திசாதனங்கள் முன்னமேயே அடையப்பட்டிருக்கவேண்டும் என்பதைக் காண்பிக்கிறது.

(8) பிறவிமுதல் காணப்படும் தாரித்திரியம் பாக்கியம் ரோகம்முதலியவைகாரணமன்றியில் நேரிடுமா?

(9) ஜனன மிருப்பதற்கு மரணமுமுண்டு. ஜீவன் மரணமில்லாதமோக்ஷத்தை அடையலாமாதலால் அவன் முந்திய ஜனனமில்லாமலுமிருக்கவேண்டும்.

(10) பூலோகத்தில் சிலவிடங்களில் ஜனங்கள் புத்திஹீனர்களாயும் சிலவிடங்களில் புத்திமான்களாயும் ஜனித்து மரிக்கிறார்கள். முன் சொன்னவர்களின் புத்தி பக்குவமாவதற்கு அடிக்கடி ஜனனம் வேண்டியது.

(11) சரித்திரத்திலும் 1500 வருஷங்களுக்கு முன் இருந்தவர்களே மறுபடியும் வருவதாய்த்தோன்றுகிறது.

(12) சில மானிடவர்க்கங்கள் நாசமடைந்து வருகின்றன. அவ்வர்க்கத்திலுள்ள ஸ்திரீகள் மலடிகளாகிக் குழந்தைகள் பிறப்பதே துர்லபமாய்க் கடைசியில் அந்தவர்க்கமே இல்லாமல் போய் விடுகிறது. இதற்குக் காரணமென்ன, புனர்ஜன்மமவாதி சொல்லுவதாவது:—அந்தவர்க்கத்தில் அடையக்கூடிய அனுபவஞானத்தை ஜீவன் அடைந்து விட்டபடியால் மற்படியும் அதில் ஜனனம் எடுக்கப்பிரயோஜனமில்லை. ஆகையால் நூதன வர்க்கத்தில் ஜீவன் பிறக்கிறான். இந்த புதுவர்க்கத்தின் ஜனனமும் பழையவர்க்கத்தின் நாசமும் புனர்ஜன்மத்தால் தான்விளங்கும்.

இன்னும் அநேக ருஜூகளைக் காட்டக்கூடும். இதந்தம்விரியும் என்னும் பயத்தால் மேற்சொல்லியவை போதுமானவை.

ஆக்ஷேபசமாதானங்கள்.

144. (1) பூலோகத்தில் நாம் இதற்கு முன் வசித்திருந்தால் அதை நாம் அறியாததற்குக் காரணமென்ன. அப்படி இருந்திருந்தால் ஸ்மரணை இருக்கக்கூடும்.

சமாதானம்:—ஸ்மரணை என்பது மூளையின் சக்தி. மூளையில் பதிந்திருக்கும் விஷயத்தினை ஸ்மரணை வரக்கூடும். மூளையில் பதியப்படாதது எப்படி ஞாபகத்துக்கு வரக்கூடும். நம்முடைய மூளை நம்முடைய ஸ்தூலசரீரத்தில் ஒருபாகம். ஸ்தூலசரீரம் நாசமடைவதால் ஸ்தூலமூளையும் நாசமாகிவிடுகிறது. ஆகையால் இப்போதிருக்கும் மூளை நாம்முந்தினஜன்மத்தில் பெற்றிருந்த மூளையன்று. ஆகையால் இந்த மூளைமூலமாக முந்தியஜன்மத்திய விஷயம் ஞாபகத்துக்கு எப்படி வரக்கூடும். முந்திய ஜன்மத்தின் ஞாபகம் பெறவேண்டுமானால் இரண்டு ஜன்மங்களையும் எது சேர்க்கிறதோ அதாவது எது இரண்டிலும் சம்பந்தப்படுகிறதோ அதின் சாதகம் வேண்டியது. ஒவ்வொருசரீரத்துடனும் மனது கலந்து கொள்ளுகிறதென்றும் அதற்கே புனர்ஜன்மம் இருக்கிறதென்றும் முன் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் முந்தியஜன்மத்தின் ஞாபகம் சுத்தமனதின் பலத்தால் தான் கிடைக்கக்கூடும். அது அமுங்கிஇருக்கும் வரையில் அசுத்தமனது முந்தினசங்கதிகளை அறியமாட்டாது.

(2) ஜனகணிதிப்படி ஒரு காலத்தில்விட வேறு ஒருகாலத்தில் அதிக ஜனங்கள் காணப்படவேண்டிய காரணமென்ன?

சமாதானம்:—ஜகத்தின் ஜனகணிதி எப்போதும் எடுக்கப்படவில்லை. ஆகையால் அதிகம் என்று எப்படி நிச்சயமாய்ச் சொல்லலாம். ஜன்மம் எடுத்தவர்களை காட்டிலும் ஜன்மம் எடுக்கவேண்டியவர்கள் அதிகமாயிருப்பதால் பிரபஞ்சத்தில் ஒருகாலத்தில் அதிகஜனங்கள் இருக்கக்கூ

மும் இந்த லோகம் பிர்ம்மாண்டத்தில் ஒருபாகம் ஒருபட்டணத்தில் ஒரு வீடுபோலும். வீட்டுக்கு வரும் ஜனங்கள் அதிகமானாலும் குறைவானாலும் பட்டணத்திலுள்ள ஜனசங்யையில் வித்தியாசம் வருகிறதில்லை.

(3) நல்ல குலத்தில் அயோக்கியன் ஜனிப்பானேன்? முன் செய்த கர்மபலன்தான் இதற்குக்காரணம். இப்படிஅநேக ஆக்ஷேபங்களும் சமாதானங்களும் உள—கிரந்தம் விரியுமென்னும்பயத்தால் எழுதப்படவில்லை.

ஐந்காவது அத்தியாயம்

முற்றிற்று.

பிரம்மஞானச்சுருக்கம்

ஆறுவது அத்தியாயம்.

கர்மம்

145. முந்தின தாங்கத்தில் மனிதன் தன்னுடைய அசுத்தாம்சங்க ளைப் போக்கி தெய்வபாவத்தை அடையும் பொருட்டு மறு-க்கடி பூமியில் ஜனிக்கிறான் என்று சொல்லப்பட்டது. இந்தப் புனர்ஜன்மத்தை நிர் ணயம் செய்வது கர்மம். காரணத்துக்குத் தக்கபடி காரியம் தவறாமல் ஜனிக்கும என்பதே கர்மத்தின் ஸ்வரூபம். இந்தக் காரியகாரணநியமத் தை ஸ்தாபிப்பது யாதெனில் காரணமன்றியில் காரியமில்லை என்பதும் காரணத்தை அனுசரித்துக் காரியம் இருக்கிறதென்பதும், ஒன்று இருந் தால் மற்றொன்று இராமல் போகமாட்டாது என்பதுமே. கர்மம் என்று ல் கிரியை. ஆயினும் கிரியையையும் அதின் காரியமான்பலனையும் இணை க்கும் நியமம் கர்மம் என்றும் சொல்லப்படுகிறது. ஒவ்வொருவனுடைய நடத்தையின்படி பலன் கொடுப்பதே நியாயம். இதுவேகர்மம். ஜனங்க ளுடைய கிரியைகளை ஒழுங்குபடுத்தும் யமனை இந்தக் கர்ம்ம (யமயதீ தியம:) பக்ஷபாதமன்றியில் பலனைக் கொடுப்பதால் சமவர்த்தியென்றும் தர்மராஜன் என்றும் யமன் சொல்லப்படுகிறான். ஆகையால் இது அறி வுள்ள நிதிபோலிருக்கிறது.

146. இது இன்னதென்று நாம் அறியக்கூடாவிட்டாலும் இதின் செயல் கமக்கு நன்றாய்த் தெரியுமென்றும். காரணத்தை அனுசரித்துக் காரி யம் ஜனிக்கிறது என்றும் நியமம் பிரம்மாதி பிபீலிகாவரையில் ஒவ்வொரு பூமிகையிலும் காணப்படுகிறது. ஒரு குறிப்பான விதமாய் இது வி ளங்கும் என நியமமில்லை. ஆனால் பிரம்மாண்டத்தில் ஸ்வபாவநிலைமையி ல் எப்போது வேறுபாடுகள் தோன்றினவோ அப்போது அவைகளை க் கர்மம் திருத்தி சமத்துவத்துக்குக் கொண்டு வருகிறது. உதாரணம்:- ஒரு குளத்தில் ஜலம் ஸ்தம்பமாயிருக்கும்போது ஒருகல்லை அதில் எறிந் தால் அலைகள் உண்டாகிக் கல்விழுந்தவிடம் முதல் சக்கராகாரமாகப் ப ரவுகின்றன. குளத்தின் கரையில் மோதுவதால் அந்த அலைகள் தடை பட்டுத் திரும்பி மறுபடியும் மூலஸ்தானத்துக்கு வந்துவிடுகின்றன. பி றகுதான் குளம் முன்போல ஸ்தம்பமாகிறது. இதுபோல பிரம்மாண்ட த்தில் எந்தச் செயலும் ஸ்வபாவநிலைமையில் வேறுபாடு உண்டுபண்ணு கிறது. மறுபடியும் ஸ்வபாவம் தன்நிலைமைக்குத் திரும்புகிறது இதுவே கர்மம். பிரம்மாண்டங்கள் சூரியமண்டலங்கள் லோகங்கள் முதலியவை உண்டாகிறதும் லயமடைவதும். கர்மத்தின் வியாபாரமே.

147. ஒருவன் ஒரு கிளையை அதின்ஸ்தானத்திலிருந்து வளைக்கிறோம். அதிகபலமாய் அதை வளைப்பதில் இவன் கைவிட்டு அதுபோகிறது. அப்படிபோகையில் இவனுக்குக் காயம் நேரிடுகிறது. இப்போது கிளை காயம் உண்டுபண்ணினதாகச் சொல்லலாமா. அதுதன் ஸ்தானதத்துக்குத் தான்திரும்பிற்று. இவனுடைய பலம் இவனுக்குக்காயத்தை உண்டுபண்ணினதேதவிரக் கிளைக்கு இவனிடத்தில் யாதொரு கோபமுமில்லை. இதுபோல நம்முடைய சுகதுக்க அனுபவங்களுக்கு காமே காரணமேதவிர வேறு ஒன்றுமில்லை. விதைக்கு வேறுகப் பலன் உண்டாகமாட்டாது. எந்த இடத்தில் எந்தச் செயல் கலக்கமுண்டுபண்ணுகிறதோ அந்த இடத்தில் அந்தக் கலக்கம் திருப்பி லயமடையாதவரையில் ஸ்வபாவநிலைமை சித்திக்காதுபோல ஒருவன் செய்யும் கர்மபலன் அவனுக்கே முக்கியமாய்த் திரும்பிவருமேதவிர வேறுஒருவனுக்குப் போகமாட்டாது. சத்கர்மத்தைச் செய்கிறவன் சுகத்தையும் துஷ்கர்மத்தைச் செய்கிறவன் துகத்தையும் அனுபவிக்கவேண்டியது. கர்மம் மானசிக, வாசிக, காயிகமாக இருக்கக்கூடுமானதால் பலனும் மூவகைபாகும். மேலும் கர்மம் (1) சஞ்சிதம் (2) பிராரப்தம் (3) ஆகாமியென மூவகைத்து. இந்த ஜன்மத்தில் பலனுக்கு வந்திருப்பது பிராரப்தம். பலனுக்குவராத முந்தியஜன்மங்களின் கர்மம் சஞ்சிதம். இப்போது செய்யப்பட்டு இனி மேல் வருவது ஆகாமி. கர்மம் மொட்சபலத்தைக் கொடுக்கமாட்டாது என்பது விசாரசாகரத்தில் விவரமாய் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

148. நாம் செய்யும் கர்மத்தின் பலத்தை அனுபவித்தே தீரவேண்டும். இந்தப்பலன் சம்பவிக்காமலிருக்கும்படி செய்ய ஒருவனாலும் முடியாது. கைவிட்டுப்போனபாணம் அடித்தேதீரும். ஈசுவரனாலும் பிரார்த்தனையாலும் தெய்வத்தின் அனுக்கிரகத்தைப்பெற்று செய்தகுற்றங்களின் மன்னிப்பு அடையலாம் என்று சிலர் வீணைசெகொள்ளுகிறார்கள். பிர்ம்மாண்டத்தில் மன்னிப்பு என்பது கிடையாது. அசங்கபரமாத்மாவைத்தவிர சத்தியமானது வேறு யாதொன்றுமில்லாதபடியால் மன்னிப்பு யாரால் கிடைக்கக்கூடும். ஒருவனுடைய கெட்டசெயல் மன்னிக்கப்பட்டு அதின் துக்கரூபபலன் அவனுக்கு உண்டாகாமல் போவதும் அச்செயலால் தீங்கடைந்தவனுக்குச்சமாதானம் கிடைக்காமல் போவதும் வெகு அயுக்தம். மன்னிக்கும்படி தெய்வத்துக்குச்சக்தியிருந்தால் தீங்கு அடைந்தவனுடைய தீங்கையும் நிவர்த்திக்கக்கூடுமே. தீங்கு நீங்காமலிருக்க மன்னிப்புமட்டும் சாதகியமென்று நினைப்பதற்குக் காரணமென்ன. காரணத்துக்குத்தக்கபடி காரியம் சம்பவிப்பது நியாயமாயிருக்க தீங்கு செய்தவன் விஷயத்தில் மட்டும் இந்த நியமத்துக்குவிலக்கு இருப்பானேன். வெங்கலப்பாத்திரத்தைத்தட்டுவதால் உண்டாகும் சப்தம் பாத்திரம் எடுபடுவதால் போய்விடுமா? புலியென்று விடப்பட்டபாணம் பசுமாடு என்று அறிந்தமாத்திரத்தில் அடிக்காமல் போகு

மா? இதுபோல் செய்கசெயலின் பலன் விசனப்படுவதிலை ப்போய்விடு மா? கர்மமானது வேண்டுமென்று ஒன்றையும் செய்கிறதில்லை. காரணத்துக்குத்தக்கபடி பலனைக்கொடுக்கிறது. இதிலை அதினிடத்தில் தோபதாபங்கள் இருப்பதாக நினைக்கக்கூடாது. காரணங்களுக்கு ஆகாரம் மனிதன். இவனுடைய செயலால் உண்டான அஸ்திவாரத்தையை நீக்குவதே கர்மத்தின் செய்கை.

149. பிரபஞ்சத்தில் பிரார்த்தனை என்னும் ஒரு வியவஹாரம் ஏற்பட்டிருக்கிறது. தாங்கள் செய்த குற்றங்களின் மன்னிப்பைத்தெய்வத்தினிடத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் வேண்டிய பொருளைத்தெய்வானுக்கிரகத்தினால் பெறலாம் என்பதும் சாதாரணஜனங்களுடைய அபிப்பிராயம். நம்முடைய குற்றங்களை ஒருவன் மன்னித்துவிட்டால் அவைகளை அழிக்கடிச்செய்ய நம்முடைய தைரியம் பலப்படுவதேயன்றியில் நாம் நல்வழியில் செல்லமாட்டோம். இதனால் ஜனங்களுக்கு நற்கமதிகமார்குமேதவிர வேறில்லை. நாம் சேட்கும் பொருளை கொடுப்பதே உபாசனையின் பலனதில், அப்பொருளை சம்பாதிக்க நம்மிடத்திலுள்ள சக்தியில் நமக்கு நம்பிக்கைபோய்விடும், நாம் யாதொரு பிரயாசையும் எடுத்துக்கொள்ளமாட்டோம். நம்மிடத்தில் அகம்பாவமும் ஸ்வப்பிரயோசனதிருஷ்டியும் விருத்தியாகும். இதனால் பிறருக்கு ஹிம்சையும் அதிகப்படும். ஒரு வேலைக்காரன் வேலைசெய்யாமல் எஜமானை கூலிகொடுக்கப் பிரார்த்தித்தால், எஜமான் கூலி கொடுப்பானா? அப்படியே யாதொரு பிரயர்சையன்றியில் பொருள் எப்படி நாம் சம்பாதிக்கக்கூடும். நாம் இச்சிக்கும் பலன் நம்மையே பொறுத்திருக்கிறபடியால் காதார்ணமாய் ஜனங்கள் நினைக்கிறபடி பிரார்த்தனையிலும் உபாசனையிலும் ஞானிகளுக்கு நம்பிக்கை இல்லை. உபாசனை சித்திக்க, உபாசகன், உபாசிக்கத்தக்கவஸ்து, உபாசனையாகிற கர்மம் இம்மூன்றும் சித்திக்கவேண்டும். எங்கும் வியாபகமான பரமாத்மாவைத்தவிர வேறு ஒன்றுமில்லாத விடத்தில் யார் யாரை உபாசிக்கிறது. மேலும் அசங்கமானது உபாசனையை எப்படி அங்கீகரிக்கும். இதினால் ஞானிகள் நாஸ்திகர்கள் என்றும் அவர்களுக்கு யாதொரு பிரார்த்தனையுமில்லை என்றும் நினைக்கக்கூடாது. பிர்ம்மத்துக்கு வேறுகாத தங்கள் தங்களுடைய பிரத்தியகாத்மாவை அவர்கள் பிரார்த்திக்கிறார்கள். பொருள் சம்பாதிக்கவேண்டுமென்பது அல்லது பிரபஞ்சிக இஷ்டகாரியம சித்திக்கவேண்டுமென்பது இந்தப்பிரார்த்தனையின் கருத்தன்று. பிரகிருதி சம்பந்தத்தால் மூடப்பட்டுப்போன தாங்கள் பந்தத்தில் நின்றும் விடுபட்டு தங்களுடைய மூலஸ்தானம்மாகிய பரமாத்மாவுடன் சேரவேண்டுமென்கிற தீவிரமான இச்சையே உபாசனை என்னப்படும். இது ஹிருதயத்திலுள்ள பரமாத்மாவை நோக்கியதே ஒழிய வேறு தெய்வத்தை நோக்கவில்லை. இப்படிப்பட்ட பிரார்த்தனையைப் பிரதினமும் ஒவ்வொருவனும் அப்பியசிக்கவேண்டியது.

150. மனிதனுடைய செய்கை கர்மாதீனமா? அல்லது ஸ்வேச்சாதீனமா? விஷ்ணுபுராணம 6-வது அம்சம் 7-வது அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறதாவது:— மனிதர்களுக்கு மனம் விடயங்களிலிருப்பற்றி நின்றால், பந்தத்துக்குக்காரணமாகும், அவற்றிலிருப்பற்றுமல் நின்றால் மோக்ஷத்துக்குக்காரணமாகும். ஆகையால், பந்தத்துக்கும் மோக்ஷத்துக்குங் காரணம் மனதேயாகின்றது. ஆகையால் பிரகிருதி புருஷசுவர ஞானமுள்ளவன் அம்மனதை விஷயங்களினின்றும் திருப்பி அதைக்கொண்டு பரப்பிர்ம்மமான சர்வேசுவரனை மோக்ஷத்திற்காகத்தியானிக்கவேண்டும்.' சாந்தோக்கிய உபநிஷத்தில் (III—XIV—I) சொல்லியிருக்கிறதாவது:— மனிதன். இச்சையின் காரியம். இந்த ஜன்மத்தில் அவன் இச்சை இருக்கிறபடி மறுஜன்மத்திலிருப்பான். ஆகையால அவன் சுத்தமான இச்சையைக்கொள்ளவேண்டும்" இருக்குவேதத்தில் (VIII—XIX 20) ஒரு இருஷி காமாதிகளை ஜயிக்க மந்திரத்தை அபேக்ஷித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி இருக்க எல்லாம் ஈசுவர ஆஞ்ஞையால்நடக்கிறதென்றும், மனிதனுக்கு ஸ்வதந்திரமில்லை என்றும் சர்வஜனங்களுமசாதாரணமாய்ச சொல்லுவதற்குக் காரணம் என்ன. அடியில்கண்டனைக்களில் ஒன்று இருக்கக்கூடும்.

(1) சில ஜனங்கள் தங்களுக்கு யாதொரு ஸ்வதந்திரமுமில்லை என்றும் எந்தச்செயலும் ஈசுவர ஆஞ்ஞையால்தான் நடக்கிறதென்றும் நினைக்கிறார்கள். இப்படி நினைப்பதால் உண்டாகும கெடுதியை அவர்கள் கவனிக்கிறதில்லை. இந்த மதத்தால் தெய்வம இஷ்டப்படி செய்யக்கூடுமென்றும், யுக்தி புத்தியுடன் கூடின மனிதன் கேவலயந்திரம்போலவென்றும் நினைக்கவேண்டியது. இஷ்டப்படிச்செய்கிறதில்லை புண்ணியபாபங்கள் வியர்த்தமாய்விடுமேயெனில் இந்த மதஸ்தர்கள் புண்ணியபாபத்தை அனுசரித்துத்தான் செயல்களைச் செய்யும்படி தெய்வம் செயவதாகச்சொல்லுகிறார்கள். அப்போது புண்ணியபாபத்தை முதலில் செய்யும்படிச்செய்தது யாது. இதையெல்லாம் ஆலோசித்துப்பார்க்குமளவில் தெய்வத்துக்குச்சுத்த ஸ்வதந்திரமும மனிதனுக்குப்பரதந்திரமும் யுக்திக்கு ஒவ்வவில்லை.

151. (2) பகவத்கீதை 18-வது அத்தியாயம், மஹாபாரதம் அனுசாஸனபர்வம் 6-வது அதியாயம் முதலிய இடங்களில் செய்த கர்மத்தின் பலனைக்குறிப்பிட "தெய்வம்" என்னும் சம்ஸ்கிருதபதம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்பதத்தினால் தேவதையின் சம்பந்தமிருப்பதாகத்தோன்றுகிறது. தெய்வம் என்னும் பதத்திற்குச்சாதாரணமான அர்த்தம் தேவதையின் சம்பந்தமாக இருந்தாலும், இதற்கு ஒரு விசேஷ அர்த்தமுண்டு. அமரகோசத்தில் தெய்வம் என்னும் பதத்திற்கும் இ

ன்னும் வேறு ஐந்து பதங்களுக்கும் அர்த்தம் கர்மத்தின் பலன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மத்சியபுராணம் 219-வது அத்தியாயத்திலும் வாயுபுராணம் 8-வது அத்தியாயத்திலும் தெய்வம் என்பதற்குக்கர்மபலன் என்று வியுக்தமாய் சொல்லப்பட்டிருக்கிறது. மஹாபாரதம் அனுசாசனபர்வம் 6-வது அத்தியாயத்திலும் இன்னும் அநேக சமுஸ்கிருதக்கிரந்தங்களிலிருந்தும் இந்த அர்த்தம் ஊகிக்கப்படும்படியிருக்கிறது. பகவத்கீதை (II 71 XIV 20) சொல்லுகிறதாவது "எவன் சமஸ்த விஷயங்களையும் விட்டு ஆசை, மமதை அகங்காரங்களற்று இருக்கிறானே அவன் சகல துக்கங்களிலிருந்தும் விடுபட்டு மோக்ஷத்தை அடைகிறான்." "தெய்வத்தை உண்டாக்கப்பட்ட முக்குணங்களை அதிக்கிரமித்துப்பிறப்பிறப்பு மூப்பு துக்கங்களினால் விடப்பட்டவனாய், ஜீவன் பிரம்மானந்தத்தை அடைகிறான்." தெய்வமே வேண்டுமென்று பக்தனை உண்டுபண்ணியிருந்தால் அதில் நின்றும் மனிதன் தப்பித்துக்கொள்ளமுடியுமா? பக்தனை மனிதனே உண்டுபண்ணிக்கொண்டதாக நினைத்தால், அதிலிருந்தும் அவனே தப்பித்துக்கொள்ளக்கூடும். கர்மபலனைக்குறிப்பிடுவதற்கு தெய்வம் என்னும்பதத்தை உபயோகித்ததின் கருத்து, அது மிகவும் ஆச்சரியமானது, அதை அலக்ஷியம் பண்ணத்தகாது என்பதைக்காட்டுவதற்காம.

152. (3) பகவத்கீதையில் 9-வது அத்தியாயம் 4-வது சுலோகத்தில் "சகல பூதங்களும் என்னிடத்தில் இருக்கின்றன." என்று பகவான் சொல்லியிருப்பதால் மனிதனுக்கு ஸ்வதந்திரம் இல்லை என்று சொல்லுகிறார்கள். மேற்சொல்லிய வசனத்தினால் சுவாமியின் மஹிமை விளங்குகிறதேதவிர ஈசுவர ஆஜ்ஞையன்றியில் ஒரு விரலை அசைக்க மனிதனுக்கு ஸ்வதந்திரமில்லை என்பது அர்த்தமன்று. பகவத்கீதையில் கண்ட பகவத்கீதை வசனங்களாலும் மனிதனுடைய சுதந்தரம் நன்றாக விளங்கும்:— (III. 5) "தன்னிடத்திலுள்ள பிரகிருதியால் ஒவ்வொருவனும் காரியம் செய்யும்படி செய்யப்படுகிறான்." ஈசுவரன் ஜனங்களுக்காக கர்த்திருத்துவத்தையாவது, கருமங்களையாவது, கர்மபலன்களில் பற்றுதலையாவது உண்டாக்குகிறதில்லை. ஸ்வபாவமே அதாவது மாயையானது பிரவர்த்திக்கிறது." (V 15-16):— "அஞ்ஞானத்தினாலே விவேகமானது மூடப்பட்டிருப்பதினால் மனிதர்கள் மோகிக்கிறார்கள். பிரம்மஞானத்தினாலே யாருடைய அஞ்ஞானமானது நசிப்பிக்கப்பட்டிருக்கிறதோ, அவர்களுக்கு ஞானமானது சூரியனைப்போல் பரப்பிரம்மஸ்வரூபத்தைப் பிரகாசிப்பிக்கிறது. ஆகையால் (VI-5) விவேகமுள்ள தன் மனசினாலே தன்னை சமுசாரசமுத்திரத்திலிருந்து மனிதன் கரையேற்றிக்கொள்ளவேண்டியது." (XVII-63):— "பூர்த்தியா யாராய்ந்து எப்படி இச்சிக்கிறாயோ

னே அப்படி மனிதன் செய்யவேண்டியது." மேற்சொல்லிய வசனங்கள் (இன்னும் அநேகமுள) மனிதனுடைய சுவதந்திரத்தை ஸ்தாபிக்காவிட்டால், அவைகளுக்கு வேறு அர்த்தம் என்ன இருக்கக்கூடும்? ஆகையால் மனிதன் செய்யும் செயல் கர்மாதீனமா அல்லது இச்சாதீனமாவென்று கேட்டகேள்விக்கு, இரண்டும் உண்டெனவே சொல்லவேண்டும். இது எப்படி ஒவ்வுமெனில் செய்தகர்மங்களின் பலன் மட்டும் இவனுடைய இச்சையைப்பொறுத்திருக்காமல், இனி செய்யப்போகிற கர்மம் இவனுடைய் இச்சையைப்பொறுத்திருக்கும். நூதனமாய்ச்செய்யப்போகிற கிரியைகளில் இவனுடைய் ஸ்வதந்திரத்தை உபயோகிக்கலாமேயொழிய செய்தகர்மம் இவன் இச்சையன்றியில் பலனைக்கொடுத்தே தீரும்.

153. ஒருவன் துக்கத்தைச் சகிக்க கர்மநியாயத்திலுள்ள நம்பிக்கையே முக்கியமான சாதகமாகும். சிலர் அரோகியாயும், சிலர் ரோகியாயும், சிலர் தனக்காரராயும், சிலர் தரித்திரர்களாயும், இருப்பதைகாம் பார்க்கிறோம். ஒருவன் சுகியாயும் ஒருவன் துக்கியாயும் இருப்பதற்குக் காரணமென்ன? ஈஸ்வரன் அப்படிச் சிருஷ்டித்திருப்பதாகச் சொன்னால் அவரிடத்தில் பக்ஷபாதம் சம்பவிக்கும்; அன்றியும் மனதிற்கும் திருப்தியுண்டாகமாட்டாது. காரணமில்லாமல் ஒவ்வொருவனுடைய ஸ்திதியும் வெவ்வேறு விதமாய் இருக்குமா. இவைகளின் காரணம் தெரிந்தால் இவைகளை ஒருவன் பொறுத்துக்கொள்ளுவதுமல்லாமல் மறுபடியும் துக்கம் சம்பவிக்காத மார்க்கத்தையும் தேடக்கூடும். தன் சுக துக்கத்தைத்தானே தேடிக்கொள்ளுகிறான் என்றும் அவைகள் தற்செயலாக கிடைக்கவில்லை என்றும், தன்னுடைய முந்திய ஜன்மங்களின் கர்மங்களே தன் சுக துக்க பலன்களுக்குக் காரணமென்றும் அறிந்த மாத்திரத்தில் அவைகளிடத்தில் ஒரு வெறுப்புப் போய் மனிதன் சாவதானப்பட்டு மறுபடியும் துக்கம் நேரிடாமலிருக்கும்படி தன் நடத்தையைத் திருத்திக்கொள்ளுகிறான். இந்த நியாயத்தை அறிந்தவன் பிறருடைய சுகத்தால் தான் தனக்குச் சுகம் கிடைக்குமென்பதைக் கண்டு பிறருடைய சுகத்தையே முக்கியமாய்த் தேடுவான். ஆகையால் கர்மத்தில் நம்பிக்கை ஜனங்களுக்கு அவசியம் வேண்டியது.

154. ஒவ்வொருவனுடைய கர்மமும் சேர்ந்து ஒருவர்க்கத்தின் கர்மமாக முடிகிறது. எல்லா வர்க்கங்களின் கர்ம சமுஷ்டி பிரபஞ்சத்தின் கர்மமாகிறது. அடிக்கப்படும் ஒரு வர்க்கம் சுகத்தைப் பெறவேண்டியதேயாகில் அதில் அடங்கிய ஒவ்வொருவனும் தன்னுடைய சத்கர்மத்தைச்செய்யவேண்டியது. இந்த சமஷ்டி சத்கர்மத்தால் தான் சமஷ்டி துக்கம் நாசமடையும்.

155. இந்தக் கர்ம நியாயத்தின் விஷயங்களை நாம் பொதுவாய் அறியக்கூடுமேயொழிய அதின் இரகசிய விவரங்கள் ஞானிகளே அறிவார்கள். இவர்களைப்பற்றிமுன் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இவர்களுடைய சக்திகளை அடையவேண்டுமென்கிற இச்சை எல்லாருக்கும் இருக்கக்கூடும். ஆனல் அவைகளைப்பெற ஏற்பட்டிருக்கும் விதிகளைத் தவருமல் அனுஷ்டிக்கவேண்டியது. இவைகளைக்கண்டு மயங்காத தைரிய சாலிகள் வெகுஸ்வல்பம். தான், தன்னுடையது என்னும் அபிமானத்தைவிட்டு எல்லாரும் பரப்பிரம்மத்தின் அம்சங்களானதால் எல்லாரிடத்திலும் சமபுத்திவைக்க வேண்டியது முக்கியம்.

-ஆறுவது அத்தியாயம்.

முற்றிற்று.

பிரம்மஞானச்சுருக்கம்

ஏழாவது அத்தியாயம்

சாரம்

156. முந்தின அத்தியாயங்களினின்றும் பரமாத்மாவைத்தவிர வேறு ஒன்றும் சத்தியமில்லை என்பதும், எந்த ஜீவனும் எந்த ஜீவனிடத்திலிருந்தும் பிரிந்திருக்கவில்லையென்பதும், ஆனதால் ஒவ்வொரு ஜீவனுடைய சுகமும் மற்ற ஜீவர்களின் சுகத்தைப்பொறுத்திருக்கிறதென்பதும், நன்றாய் விளங்கிவரும். நம்முடைய சரீரத்தில் அநேகக்கிருமிகள் இருப்பதுபோல் ஹிரண்ணியகர்ப்பசரீரத்தில் அநந்தகோடிஜீவர்கள் இருக்கிறார்கள். நம்முடையசரீரத்தில் யாதானுமொரு அவயவத்தில் வியாதிமுதலியவை பீடிக்குமேயாயின், மற்ற அவயவங்களுக்கும் அதினால் முழுசரீரத்துக்குமே எப்படிச்சுகம் கிடைக்கவில்லையோ, வியாதிமுதலியனவாகளை நிவர்த்திக்கும் பொருட்டு அவயவங்களெல்லாம் பிரவர்த்திப்பதுபோல், ஹிரண்ணியகர்ப்பசரீரத்திலுள்ள அநேக ஜீவர்களில் எந்த ஜீவனுக்காவது துக்கமிருக்கும்பக்ஷத்தில், அது மற்றவர்களுக்கொஞ்சங்கூடப் பாதிக்காமல் எப்படிச்சுகத்தைக்கொடுக்கும். பெரிய குளத்தில் எறியப்பட்ட சிறு கல்லால் உண்டாகும் வர்த்துலமான அலைகள் குளமுழுமையும் பரவாம்விருக்கிறதில்லை. ஆகையால் ஒருவன் செய்கை எவ்வளவு சுவல்பமாகிலும் எல்லாரையும் பாதிக்காமல் விடாது. ஒருபாகத்தில் துக்கமிருக்க முழுவதில் சுகம் உண்டாகமாட்டாது. ஆகையால் சுகப்பிராப்தியின் பொருட்டு ஒவ்வொருவனும் பிறருடைய துக்கத்தை நீக்கத்தன்னலானபட்டில் பிரயத்தனம் செய்வது அதிக அவசியம். இந்த அத்தியாயத்தில் மனிதன் நடந்துகொள்ளவேண்டிய விதம் சுருக்கமாய்ச்சொல்லப்படும்.

157. ஆத்மஞானவிர்த்தியடையும் கிரமத்தைப்பற்றி குப்தவித்தை சொல்வதாது.

i. ஞானமடையவேண்டிய வழியின் சாராம்சமானது மனிதசுபாவத்தில் மிகவும் உத்கிருஷ்டமானதாயும் ஆத்மசம்பந்தமானதாயுமுள்ள விஷயங்களில், கருத்தைச்செலுத்தவேண்டுமதை யெல்லாத்தொழிலுக்கும் மேலாகப்பாவிக்கவேண்டியது.

2. இப்படிச்செய்வது நான்கு விதத்தால் சாத்தியமர்கும். அவை ஏலவையெனின்:—

(1) எல்லாவிதமான சுயப்பிரியத்தையும் நீக்கி மற்றவர்கள் நண்மைக்காகவே கைம்மாறு கருதாமற் பாடுபட்டு, எல்லாரிடத்திலும் கருணையோடிருக்குங்குணத்தை விர்த்திசெய்யவேண்டியது.

(2) பரமாத்மாவைத்தியானம் செய்தல் முதலிய கிரியைகளால் ஞானக்கண்ணைப்பெற முயலுவது.

(3) விஷயசம்பந்தமான எல்லாவித அபிமானத்தையும் ஆத்மாவின் கட்டளையைவிட மேற்செல்லாதபடி உருதியுடன்புத்திபூர்வமாய் அடக்குதல்..

(4) தானிருக்கும் நிலைமைக்குத்தகுந்தபடி செய்யவேண்டியகர்நிபம் ஒன்றையும் விடாமல் அதனால் விளையும் பயனைத்தியாகம்பிரமாணங்களுக்கு விட்டு விட்டு நிஷ்காமியமாய்ச்செய்வது.

3. எந்த ஜீவனுடனும் வியவகரிக்கும்போது தன் விஷயத்தில் மற்றவர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று தோன்றுகிறதோ அப்படியே அவர்கள் விஷயத்தில் நடக்கவேண்டியது.

4. தன்னைச்சேர்ந்தவர்களிடத்தில் இப்படியே நடந்துகொள்வதுடன் விவாகாதி சம்பந்தத்தில் ஏற்றுக்கொண்டிருக்கும் பொறுப்பையும் சரியாய் நிறைவேற்றவேண்டியது.

5. அந்தக்காணத்தை சுத்திசெய்யது மனசாட்சியைத்தவிர யாதொன்றுக்கும் பயப்படாமலும் பிறருடைய தூஷணையைக்கவனிக்காமல் தன் மனசாட்சிக்குச்சரியாய்த்தோன்றியதை அவசரமுறையாக இல்லாமலும் செவ்வையாயச்செய்யவேண்டியது.

6. தன்னல் கூடியமட்டில் தர்மத்தைச்செய்யவேண்டியது. பிறர்படும்துக்கத்தை நிவர்த்திக்கசசாமர்த்தியமில்லை என்று நினைத்துச்சும்மாவிருக்கக்கூடாது. அக்கினிபாதையில் அகப்பட்ட வீட்டிலிருந்து எதையெப்பட்டது பதார்த்தங்களை மிச்சப்பட்டு உபயோகப்படுவதுபோல, தர்மத்தில் செலவு செய்வதினால் கைவிட்டுப்போவதே ஒருவனுக்கு உபயோகமாகுமேதவிர வேறு ஒன்றுமாகமாட்டாது.

7. அபராதத்தை க்ஷமிக்கவேண்டியது. ஒருவன் செய்தகுற்றத்தை அவனுடைய கர்மம் திருத்திவிடும். நாம் அதில் அனாவசியமாகப் பிரவேசிக்கவேண்டியதில்லை.

8. வீண்காலதேஹபம் செய்யாமல் பிறருடைய உபயோகத்திற் காகவே காலத்தை உபயோகிக்கவேண்டியது.

9. தன் அபிவிர்த்தியே மேலானதாக கினைக்கக்கூடாது.

10. தனக்குத்தெரிந்தமட்டில் பிறருக்கு உபதேசம் செய்யவேண் டியது.

11. தன் குறைவுகளை எப்போதும் அங்கீகாரம் செய்துகொண்டு அவைகளை நீக்கவேண்டியது.

12. பிறரை நிந்திக்கலாகாது. நம்மைச்சேராதவர்கள் விஷயத் தில் தூஷணைவார்த்தையை எப்போதும் உபயோகிக்கச்கூடாது. நம் மைச்சேர்ந்தவர்கள் விஷயத்திலும் ஏகாந்தத்தில் பிறருடைய நன்மையை யுத்தேசித்து நல்லபுத்திசொல்லவேண்டியது.

13. நித்தியாநித்திய வஸ்து விவேகம், விஷயபோகங்களில் வை ராக்கியம், விஷய்ங்களில் மனதையும் இந்திரியங்களையும் போகாமல் த கைத்தல், மோக்ஷமடையவேண்டுமென்கிற இச்சை இந்நான்கு சாதனங் களையும் அப்பியசிக்கவேண்டியது.

14. முக்கியமாய்த்தான், தனது என்னும் அபிமானத்தை மனைப் படுத்திக்கொண்டுவரவேண்டியது. முதல் அத்தியாயத்தில் சொல்லிய சகோதரபாவத்தை ஒருக்ஷணமும் மறக்காமல் சகல வியவஹாரங்களி லும் கவனிப்பதே ஒருவனுடைய அபிவிர்த்திக்குச்சாதகமாயிருக்கும்.

மேற்சொல்லியவ்வகளின் மனப்பூர்ண அப்பியாசத்தால் மஹான்க ளுடைய ஞாபகத்தில் வந்து ஞானமார்க்க விஷயத்துக்கு வேண்டிய உப தேசங்களை நம்முடைய யோக்கியதைக்குத்தக்கபடி அவர்களிடமிருந்து பெற்று மேன்மேல் அபிவிர்த்தி பெறலாமென்பதில் யாதொரு சந்தேக முமில்லை.

ஹரி: ஓம்.

தத் சத்.

சுருக்கம்

———*———

பிரம்மஞானமானது அநாதியாயுள்ளது. அது பெரும்பான்மையும் இந்தியாவிலிருந்து பூர்வீக இருஷிகளாலும், சிரேஷ்டமான மகான்களாலும், அநுபவித்த அநுபவங்களை ஆதாரமாகக்கொண்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சுபாவத்தைப்பற்றியும் ஜீவத்துவத்தைப்பற்றியும் உள்ள உண்மைகளைக்காட்டுகிறது. அதை அப்பியசித்துக்கொண்டிருக்கும் மாணாக்கருள் சிறந்தோர், இந்த ஞானமானது வெறுங்கற்பனையாயாவது அநுமானமாயாவதிராமல், அதனை அடையவேண்டியதற்கான சாதனைகளை சாதிக்க விருப்புறுவோரால் பிரத்தியக்ஷமாய் அநுபவித்து அறியப்படுகிறதென்று வற்புறுத்துகிறார்கள். அதன் முக்கியமான கோட்பாடுகளுள் சில என்னவென்றால:—

I. மனிதனில் சத்தியமானதாயும் சாசுவதமானதாயுமிருப்பது அவனது ஆத்மா ஒன்று மாத்திரந்தான். மற்றவை, பிரகிருதியிலிருந்துண்டான தத்துவங்களின் வெவ்வேறுவிதமான சேர்க்கையாலானபடியாலும் சேர்க்கை வஸ்துவாயிருக்கிற ஒவ்வொன்றிற்கும் நாசத்துவம் சுபாவசித்தமாயிருப்பதாலும், அழியத்தக்கவையேயாம்.

மேலும் பிரபஞ்சமென்பது சமஷ்டியாயிருப்பது. அதிலுள்ள ஒவ்வொன்றுந் தனித்தனியாயிராமற் சமஷ்டியோடும் மற்ற ஒவ்வொன்றோடும் சம்பந்தப்பட்டிருப்பதால் எல்லாம் சகோதர பாவமாய் பிரிக்கக்கூடாதவண்ணம் பிணைக்கப்பட்டிருக்கின்றன. அதன் தீர்ந்தநிலையோ பரிபூரணஞானம். இப்படி இருப்பதால் சமஷ்டியின் ஒவ்வொரு பாகத்திலும் பதியப்படாமலும் ஒவ்வொரு பாகத்தாலும் பார்க்கப்படாமலுமிருக்கக்கூடிய யாதொரு நினைப்புஞ்செயலுமுண்டாகிறதில்லை.

2. ஆத்மத்திற்குக்கீழாயும் அந்தக்காரணத்திற்கு மேலாயுமுள்ள நிலையில், சாதாரணமாய் ஞான உடம்பென்றழைக்கப்படுகிற ஒரு சரீரமிருக்கிறது. இதில் மனிதனுடைய சகல அநுபவமும் பதிந்திருக்கின்றன. தேகம், புத்தி, என்னுமிவைகளை எவ்வாறு வளரச்செய்யக்கூடுமோ, அவ்வாறே இதையும் வளரச்செய்யக்கூடும்.

3. இந்தஅறிவு வளர்ச்சியானது தேகசம்பந்தமான அபிமானம் ஆசாபாசம் முதலியவற்றை அடக்கி ஆத்மசம்பந்தமான விஷயங்களில் அபிமானம், ஆசை முதலியவற்றை உண்டாக்கிக்கொண்டால் மட்டும் சாத்திய

மாகும். இப்படியாகவேண்டியது சுபாவத்திற் கிணைந்ததாயிருப்பது மல்லாமல் அதைஉண்டாக்கிக்கொள்ள கிரமமான மார்க்கங்களுமுண்டு.

4. இம்மார்க்கத்திலொழுங்காய்ப்பழக்கப்பட்ட மனிதர்கள் ஸ்தூலமல்லாத சூக்ஷுமமாயுள்ள பிரபஞ்சங்களை தெளிவாய்ப்பார்க்கும் சக்தி பெறுகிறார்கள். புலனுக்கு புலப்படக்கூடியவேற்றைபாகியோந்திரியங்களும் மனம் புத்தி இவைகளுக்குப் புலப்படக்கூடியதை அந்தக்கரணமும் எவ்வளவு சுலுவாயும் சீக்கிரமாயும் கிரகிக்குமோ அவ்வாறே அவர்களது உட்கண்ணும் சூக்ஷுமபிரபஞ்சங்களின் உண்மைகளைக் கிரகிக்கும். இது காரணம்பற்றி இவ்வுண்மைகளைக்குறித்து அவர்கள் சொல்லுவது பூகவாராய்ச்சி செய்யும் சாஸ்திரிகளும் தத்துவஞானிகளும் தங்களுக்கு சம்பந்தப்பட்ட விஷயங்களில சொல்வது எவ்வளவு உண்மையாயிருக்குமோ அப்படியே இருக்கும்.

5. இம்மாதிரியான ஞானவித்தை பழகும்போர்து மற்றவர்களுக்கு அதிசியமாயிருக்கும் அநேகம் சக்திகள் அவர்களுக்குப் புலப்படுகிறது மல்லாமல் அவைகளை யாளும் திறமையுமுண்டாகிறது. இதைக்கொண்டு உலகத்தோர்கள் சாதாரணமாய் அற்புதங்களென்றழைக்கப்படும் காரியத்தைச்செய்ய வல்லவராகிறார்கள். ஆனல் வாஸ்தவ்வியத்தி லிக்காரியங்களோவென்றால் சுபாவமாயுள்ள பிரமாணங்களோ மற்றவர்களைப்பார்க்கிலும் அவர்கள் அதிகமாய் தெரிந்துக்கொண்டிருப்பதால் சாத்தியமாகின்றன.

6. இவ்விதசக்திகளைக்கொண்டு தாங்கள் பரிசைசூபார்த்து உண்மையென்று தெளிந்துகொண்டிருக்கும் ஞானக்கண்ணால் அறியப்படக்கூடிய உண்மைகளைக் குறித்து அவர்கள் சொல்வதெல்லாம் ஒவ்வொரு மதாபிமானியும் நிஷ்பக்ஷபாதத்தோடு பரிசோதித்து பார்க்கும்பொருட்டு பின்னடையாமல் முன்னுக்குவந்து நிற்கின்றன.

இந்தமகான்களால் சொல்லப்படும் மார்க்கங்களைக்குறித்து விசாரிக்கப்புகின் அவைகளின் முக்கிய அம்சங்களாவன:—

1. பிரபஞ்சோற்பத்திக்கிரமம்; இப்பூமி முதலிய மண்டலங்களினுடைய பூகபவிஷ்கிருஷ்டி; உலோகம், ஸ்தாபரம், பிராணி மனிதரூபங்களின்மூலமாய் படிப்படியாய் ஜீவன் விர்த்தியடைதல்; இவைகளின் சரித்திரம்.

2. இவ்வுலகமும் அதிலுள்ள மன்னுயிரும் காலக்கிரமங்களின் பிரமாணத்துக்கு கட்டுப்பட்டிருக்கின்றனவென்றும், அதன்ஸ் யாதொருகா

லத்தில் இன்னொரு காலத்திலாகவேண்டிய வளர்ச்சியும் அவ்வளர்ச்சியின் கதியும் கூடா என்பது.

3. சித்திரகுப்தரின் புஸ்தகமென்று சொல்லக்கூடிய எங்கும் நிறைந்ததும் மிக சூக்ஷ்மமானதாயுமுள்ள ஆகாசமென்ப தொன்றுண்டு. அதில் முக்காலத்திலும் நடக்குங்காரியங்களுமடங்கியிருக்கின்றன. அதிநுட்பமான காரணங்களாலுண்டாகும் காரியங்களையும் ஆத்மா அநாத்மா இவை ஒவ்வொன்றிலிருந்துமுண்டாகும் நினைப்புகளையும அது பதிந்துக் கொண்டிருக்கிறது.

4. மனுஷ்யரின் உற்பத்தி சரித்திரம் வளர்ச்சி முடிவு இவை முதலியனவாம்.

மனிதர்களைக்குறித்து அது என்ன சொல்லுகிறதென்றால்:—

1. ஒவ்வொரு பிரத்தியேக ஆத்மாவும் ஒரே பரமாத்மாவின் வெளிப்படையான தோற்றம். ஆகையால் ஒவ்வொன்றும் சமஷ்டியின் ஒரு பாகமாயிருக்கிறது. அது அநேக ஜென்மங்களெடுத்து அநுபவம்பெற்றுக் கடைசியில் பரம்பொருளோடு மறுபடியும் சேருகிறது.

2. இந்தஜனனமானது ஒருதடவையில் மாத்திரமல்ல, பலதடவைகளில் திரும்பித்திரும்பி யெடுக்கப்படுகிறது. ஒவ்வொரு சிவ ஆன்மாவும் அநேக மண்டலங்களிலுள்ள மனுசத்தியில், ஒவ்வொரு சத்தியிலும் அநேக ஜென்மங்களெடுத்து, கடைசியில், ஞானமுண்டாகும்பொருட்டெல்லா அனுபவங்களையும் பெறுகிறது.

3. ஒரு ஜென்மத்திற்கும் அதற்கடுத்த மற்ற ஜென்மத்திற்கும் மத்தியில் ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்கள் நீக்கப்பட்ட பிறகு, சொர்க்கமென்றழைக்கப்படும் நிலையில் காரண உற்பவானது ஓய்வையும் சுகத்தையும் பெற்று, மறுபடி ஸ்தூல உடம்புடன் ஜனிக்க அங்கே தயாராக்கப்படுகிறது.

4. ஒவ்வொரு நூதன ஜென்மமும் அதற்கு முந்தின ஜென்மம் அல்லது ஜென்மங்களில செய்த பாவ புண்ணியங்களுக்கு தக்கதாயும், அவன் எவ்விதநினைப்புகளுடனிருந்தானோ எவ்வித கருமஞ்செய்து சீவித்தானோ; அதை அநுசரித்ததாயுமிருக்கிறது. இப்பிரமாணமானது யாராலும் மாற்றப்படக் கூடாததாயும் முழுதும் நியாயமானதாயுமிருக்கிறது.

5. காணத்தைப்பற்றியே கர்ரியமும்மிருக்கும், அதாவது, மனிதன் எதை விதைக்கிறானோ அதுவே விளையுமென்னும் பிரமாணமாயும், ஜீவ

னில் பிரபஞ்ஜாஸ்திபோ புண்ணியம் ஜாஸ்திபோ என்று தீர்மானிப்பதா யுமுள்ள, "கர்மம்" "கர்மம்" என்று சொல்லப்படுவதான து, ஒவ்வொரு ஜென்மத்திலும் துக்கமெவ்வளவு சுகமெவ்வளவு அனுபவிக்கவேண்டுமென்பதையும் தீர்மானிக்கிறது. ஆகையால் "அதிர்ஷ்டம்" என்று ஜனங்கள் சொல்வதெல்லாம் வாஸ்தவ்வியத்தில் முன் செய்தவைகளுக்குக் கூலியேயாம்.

6. சமஷ்டியோடு ஐக்கியமாகும் வரையிலும் என்னும் வளர்சிக்கிரமத்தில் வல்லமையிலும் மற்றவருக்குப் பயன்படுதலிலும் படிப்படியாய் உயரவேண்டுமென்பதட்டங்கியிருக்கிறது. இம்மாதிரி சரீரத்தோடுகூட, மதா ஒன்னத ஸ்திதியிலிருப்பவர்கள் ரிஷிகளென்றும், குருவென்றும், மகான்களென்றும், அழைக்கப்படுகிறார்கள். இவர்களின் கடமை, ஞானத்தையெக்காலத்திலும் பரிபாலித்து வைத்துக்கொண்டிருந்து காலத்திற்கு தக்கபடி மனிதரின நடக்கையை சீர்படுத்தலும், அந்த ஞானத்தை யெவ்வளவு வெளியிடவேண்டுமோ அவ்வளவு வெளியிடுதலுமாம்.

7. சமஷ்டியில் ஐக்கியமானபோது தானெடுத்த வெல்லா ஜென்மங்களிலும் கடந்த விஷயங்களும் அனுபவமும் தெரிகிறது.

ஆத்மஞானவிர்த்தியடையும் கிரமத்தைப்பற்றி அது சொல்வதாவது:—

I. ஞானமடையவேண்டிய வழியின் ஸாராம்சமானது, மனித சுபாவத்தில் மிகவும் உத்கிருஷ்டமானதாயும் ஆத்ம சம்பந்தமானதாயுமுள்ள விஷயங்களில் கருத்தை செலுத்த வேண்டியதை யெல்லாக் காரியத்திலுக்கும் மேலாக பாவிக்கவேண்டியது.

2. இப்படி செய்வது நான்குவிதத்தால் சாத்தியமாகும். அவை யெவையெனின்:—

(a) எல்லாவிதமான சுயப்பிரியத்தையும் நீக்கி மற்றவர்கள் நன்மைக்காகவே கைம்மாறு கருதாமற்பாடுபட்டு, எல்லாரிடத்தும் கருணையோடிருக்கும் குணத்தை விர்த்திசெய்வது.

(b) பரமாத்மாவை தியானம்செய்தல், முதலிய கிரியைகளால் ஞானக்கண்ணை பெற முயலுவது.

(c) விஷய சம்பந்தமான வெல்லாவித அபிமானத்தையும் ஆத்மா

வின் கட்டளையைவிட மேற்செல்லாதபடி வைராக்கியமாய் அடக்குதல்.

(7) தானிருக்கும் நிலைமைக்குத் தகும்படி செய்ய வேண்டிய காரியம் ஒன்றையும் விடாமல், அதனால் விளையும்பயனைத் தெய்வப்பிரமாணங்களுக்கு விட்டுவிட்டு நிஷ்காமியமாய்ச் செய்வது.

3. மேற்கூறியவற்றை ஒவ்வொரு மதாநுசாரியும் செய்யக்கடமைப்பட்டிருக்கிறான். இவர்களாலே அவைகளைச் செய்யவும சாத்தியமாகும். ஆனால் தேகமே, புத்தியென்னும் மனைவிகளை நிஷ்காரணமாயேற்பட்டிருக்கும் ஒருவழியாயப் பழக்குவதால் இதைப்பார்க்கிலும் மின்னம் உயர்ந்த நிலை பெறப்பட்டு, அந்தரிந்திரியங்கள் முதலில் உதயமாய்ப் பின்பு விர்த்தியாக்கப்படுகின்றன.

4. இவைகள் மகாத்மாவான நிலையில இன்னம் அதிகமாய் வளருகின்றன. இந்நிலையானது அநேக ஜென்மங்களில் மிக்க வருத்தப்பட்டு, சுய உழைப்பினால் பெறப்படுகிறது. இதில் வெவ்வேறுபடிக்கிரமமான ரகசியோபதேசங்களும் நிலைப்போதனைகளுமுண்டு. இதற்கும் மேலே, சாதாரணத்வைதநிற்கு நேருங்கிக்கொண்டே யிருக்கும்படிகளு மநேகமுண்டு.

ஆத்மஞானவிருத்தியடையும் விதத்தைக்குறித்து அது சொல்வதாவது:—

